TB-658-2-

விவேகபோதினி

1.208VB
25.1-12
622

658
3.12

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
மாதம் வருடம் 1985

செப்பனிட்டு முடித்த
மாதம் வருடம் 1985

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

செப்பனிடுவதற்க்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
மே மாதம் வருடம் 1985
செப்பனிட்டு முடிந்த
மே மாதம் வருடம் 1985
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி V } பரீதாபி௵ ஆனிமீ : 1912-௵ ஜுலைமீ { பகுதி 1

ஜீவன் முக்தன்
THE LIVING DEADMAN

ஜீவன்முக்தன் ஒருவனையே விஷய ஸந்தர்ப்பங்களுக்கேற்ப பகவத்கீதையில் பலவாறு வர்ணிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரியவந்திருக்கும். இனி ஜீவன் முக்தர்கள் லக்ஷணத்தை நேரிட வர்ணிக்கும் சாஸ்திரங்களிலிருந்து எடுத்து வெளிப்படுத்துவோம்.

ஜீவன்முக்தி என்பது ஒருவித அனுபவம். ஜீவன் முக்தர் லக்ஷணம் என்பது இவ்வனுபவ முடையோர் நடத்தை என்பதாகும். ஆகவே இம்முடிவான அனுபவமுடையவர்கள் நடத்தை இவ்வாறிருக்கும் என்பது தெரியவரும். ஆனால் இங்குக் கூறப்படும் நடத்தை உடையவர்கள் ஜீவன்முக்தர்களாக விருக்கவேண்டும் என்று உறுதியாகக் கூறமுடியாது. புகையுள்ள விடத்தில் நெருப்புண்டாயினும் நெருப்புள்ளவிடத்தில் புகையுண்டு என்னலாமா? ஒருவனுக்கு ஜீவன் முக்தி நிலை வந்துவிட்டதா என்று பிறர் அறிய இந்த லக்ஷணங்களைக் கண்ட உடன் நெருங்கிக் கொஞ்சகாலம் பழகிப் பார்த்தால்தான் தெரியவரும். ஆகையால் இவைகள் வெளிக்குறிகள். இவைகளில் சிற்சில உட்குறிகளாகவும் இருக்கும். ஆனால் இவைகள் பிறர் அறிந்து உபயோகிக்கக்கூடியவைகள் அல்ல; ஒவ்வொருவனும் தானே ஆராய்ந்து திடப்படுத்திக் கொள்ள உபயோகப்படுத்தலாம்.

ஜீவன்முக்தர்கள் தாம் தெளியும் முன்னம் வழக்கமாயிருந்த தங்கள் வர்ணாச்ரம கர்மாதிகள் எவ்வளவு கடினமாயினும் பலருக்கு உபகாரமாகச் செய்தே வருவர். இவர்களுக்குக் காமமாதிகள் வந்தாலும் கணத்தில் போம்: மனதில் பற்றா: தாமரை இலைத் தண்ணீர் போல ஜகத்தொடுங்கூடி வாழ்வார்: சாதாரண ஜனங்களைப்போலவும், பித்தர் போலவும் காணப்படுவர். இவர்கள் வியவஹாரங்கள் இவர்கள் கர்மங்களுக்கு ஏற்ப அநேகவிதமாக விருக்கும். இவ்வாறு இருக்கையில் சென்றதும் கருதார், நாளை வருவதும் நினையார், கிடைத்ததைக்கொண்டு தேறியிருப்பர். எந்த அத்புதத்தைக் கண்டும் ஆச்சர்யம் என்ற நிலைக்கு ஈடுபடார். எல்லாவற்றிற்கும் மாறா ஸாக்ஷியாகவே எப்பொழுதும் நிரதிசய ஆனந்த நிலையிலிருப்பர். இம்மாதிரி கைவல்ய நவநீதம் என்ற நூலில் ஜீவன் முக்தர் வர்ணிக்கப் பட்டிருக்கிறார். ஜீவன்முக்தர் நடையுடை பாவனைகளைப் பட்டணத்துப் பிள்ளையார் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

> பேய்போல் திரிந்து, பிணம்போல் கிடந்து,
> பிச்சையெல்லாம்
> நாய்போல் அருந்தி, நரிபோ லுழன்று, நன்
> மங்கையரைத்
> தாய்போல் கருதி, தமர்போலனைவர்க்கும்,
> தாழ்மைசொல்லிச்
> சேய்போ லிருப்பர் கண்டீர் உண்மைஞானம்
> தெளிந்தவரே.

ஜீவன்முக்தர்கள் பாலர், உன்மத்தர், பிசாசுகள் போல விருப்பார்கள் என்று உபநிஷத்துக்களில்,கூறப் பட்டிருக்கிறது. மனப்பரிசுத்தம், ஆச்சர்யாதி ப்ரமாத நிலைகளுக்கு இடங்கொடுக்கா திருத்தல் ஆகிய இவைகளில் பாலர்கள் போலவும்,தேஹ விஷயங்களில் ஒருவித அச்சரத்தை வெளி விஷயங்கள் மத்தியில் இருக்குபோது வேறு எங்கேயோ மனப்போக்குடையவர்கள் போன்ற பார்வை இவைகளில் பித்தர்போலவும், விஷய ப்ரக்ஞையின்றி இடும் சப்தங்கள், கவனமில்லாததால் பயங்கரமான தோற்றம் ஆகிய இவைகளில் பிசாசுகள் போலவும் இருப்பர். ஆகவே இங்கு ஒருவன் ஜீவபாவம் நீங்கி நின்றால் எவ்வாறிருப்பன் என்பது விளங்கும். மேலும் இவர்களைத் தவத்திலும், குணத்திலும், அருளிலும், அன்பிலும், இருளறு சொல்லிலும் காணமுடியும். அதை (பரம நிலையை)நினைத்தும் அதை உரைப்பதுமே ஞானிகளுக்கான நீதி. ஆனால் இக்குணங்களை மேற்கொண்டொழுகுபவரை ஜீவன்முக்தர்கள் என்று மேல் முகாந்திரங்களின்றி மதிக்க விடமில்லை. அநேக முகாந்திரத்தால் ஜீவன்முக்தர்கள் குணம் சில தாமஸ ஆத்மாக்களிடமும் காணப்படலாம். நெருங்கிப் பழகினால்தான் இது விளங்கும். பின்னர் ஜீவன்முக்தர் பாகுபாட்டை எடுத்து விளக்குவோம்.

விவேகபோதினி

தொ 5.] பரீதாபி ஆனிமீ [பகுதி 1

விக்கிரஹ ரஹஸ்யம்

THE INNER MEANING OF IMAGES

8. அனந்த கிருஷ்ணன்

கிருஷ்ணன் பால்ய ரூபமாக ஆராதிக்கப்படுவதோடுகூட யௌவன புருஷனாகவும் ஆராதிக்கப்படுகிறார். இந்த அவஸரத்தின் சிறப்புத் தோன்ற இந்த விக்கிரஹத்திற்கு அனந்த கிருஷ்ணன் என்று பெயரிட்டிருக்கிறோம். இந்த விக்கிரஹத்தை ஆராதிக்குங்கால் தேர்ந்த மனத்தில் ஊறும் ரஹஸ்யார்த்தங்களை ஒருவாறு வெளியிடுவோம்.

அனந்த கிருஷ்ணன் லீலைகளைக் கவனிக்குங்கால் அவைகள் வேதரஹஸ்யங்களையும் முடிவுகளையும் பூர்ணமாக அடக்கியுள்ளனவாக விருக்கும். இவைகள் ஐந்துவிதமாகக் காணப்படும். அவையாவன பரோபகார லீலைகள், கிருஹஸ்த லீலைகள், ஆசார்ய லீலைகள், ஈசுவர லீலைகள், அந்தர்யாமி லீலைகள் ஆகிய இவைகளே. இவைகளுக்கு முறையே துஷ்டநிக்கிரஹ சிஷ்ட பரிபாலன விஷயங்கள், 16108-ஸ்திரீகளை விவாஹம் செய்துகொண்டு நித்ய ப்ரஹ்மசாரியாக விருத்தல், கீதாசார்யன் உத்தவர் குரு ஆகிய நிலைமைகள், விச்வரூபம் காட்டுதல், திரௌபதீ மான ஸம்ரக்ஷணம், பாரதயுத்தம் நடத்திய விதம் முதலியவைகளே. இவைகள் சிறப்பையும் உட்கருத்தையும் விசாரிக்கப் புகுவோம்.

பரோபகார லீலைகளிலிருந்து பொதுவாகத் துஷ்டர்களும் நிர்கதியாக விடப்படவில்லை என்பது வெளிவரும். சிசுபாலன் கம்ஸன் முதலியோர் இறக்க வேண்டியது அவசியமாயினும் முடிவில் அவர்களும் மேலான பதவி பெற்றனர். ஆகவே பயம், த்வேஷம் முதலிய எக்குணங்களாலாயினும் பரம்பொருள் ஞாபகம் ஒருவனுக்கு நிலைத்திருக்குமாயின் அவன் நிக்கிரஹத்தாலோ அனுக்கிரஹத்தாலோ பகவத் கிருபைக்கு ஆளாவான் என்பதாயிற்று. துஷ்ட நிக்கிரஹமும் ஒருவிதமான அனுக்கிரஹம் என்பதாகும். இதனால் சிஷ்டர்கள் நேரே பலனையும், துஷ்டர் நாளடைவில் சீர்திருத்தமாகிய பலனையும் அடைவார்கள். இந்த லீலைகள் விஷயம் பொதுவாகப் பால்ய லீலைகளில் உள்ள பரோபகார விஷயம் போன்றதே. அங்கு விளையாட்டாக இது நடந்துவிடும். இங்கோ தகுந்த ஆலோசனையோடு அவை ஸாவதானமாக நடைபெறும். இதில்தான் சற்று வேற்றுமை காணப்படுவது.

கிருஹஸ்தலீலைகள் சற்றேறக்குறைய பகவான் நிலையிலிருந்து பார்க்கையில் கோபிகைகளுடன் நடந்த ஜாரலீலை போலவிருக்கும். கோபிகைகளைப்போலவே இங்கும் 16108 ஸ்திரீகளும் பகவத் பக்தர்களே. இவர்கள் பகவானைப் புருஷனாகவே கொண்டு பத்தினிகளாகித் திருப்தி பெற்றனர். கோபிகைகளோ முதலில் பகவான் தமக்குப் புருஷனாக வேண்டுமென்று மதித்தபோதிலும் முடிவில் இந்த சிற்றின்ப ஆசை மோக்ஷ ஆசையாக மாறி பிரிவால் திடப்பட்டு நேரே பரமபத ஸாதனமாகி விட்டது. அவர்கள் சற்றேறக்குறைய ஸந்யாஸிகளையும், இவர்கள் கிருஹஸ்த பக்தர்களையும் உணர்த்துகின்றனர். இவர்களுள் 8 பெயர்கள் பட்டமஹிஷிகள் : பகவானது அஷ்ட ஐசுவர்யங்களை உணர்த்துகின்றனர். மிகுந்த 16100 ஸ்திரீகளும் நரகாஸுரன் சிறையிலடைபட்டு வருந்தியவர்கள். பூமிக்கும் தமக்கும் பிறந்து கொடியவனாகி வளர்ந்த நரகாஸுரனைக் கொன்று, இந்த ஸ்திரீகளை அவர்கள் கருத்துக்கிணங்கி விவாஹம் செய்துகொண்டார் பகவான். பிரபஞ்ச விஷயமாக ஏற்படும் ஆசையால் கட்டுண்டு பகவத் பக்தியைக் கடைப்பிடித்தும் கஷ்ட நிலையிலிருந்து பின்னர் ஆசைக்கட்டு விட்டு பகவத் பராதீனர்களாகி சாந்தி யடையும் பெரியோர்களை இங்கு ஸ்திரீகளாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. நாரதர் சென்று ஒவ்வொரு ஸ்திரீ வீட்டிலும் பார்க்கையில், அந்தந்த ஸமயங்களில் கிரஹஸ்தன் நடத்த வேண்டியவைகளை ஒருவிதப் பற்றுமின்றிப் பகவான் செய்துகொண்டிருந்ததாகப் பாகவதம் கூறும். இதனாலேயே பரமஞானிகளிடம் ஒருவித ஏற்றத் தாழ்வு

மின்றிப் பரமாத்மா எல்லோரோடும் கலந்துநின்று அங்கங்கு அவரவர்கள் நன்மைக்கு வேண்டியவைகளைச் செய்து தாம் தாக்கற்று நிற்கிறார் என்று விளங்கும். இம்மாதிரி பகவான் இருக்கிறார் என்பது தேர்ந்த ஞானிகளுக்குத்தான் விளங்கும் என்பதை நாரதர் பார்வைக்கு இது வெளிப்பட்டது என்பது விளக்கும். குசேலருக்கு இவர் செய்த மரியாதையே இதற்கு உதாரணம். இந்த லீலையிலும் கோபி லீலையிலும் பகவான் ஸ்திரீகள் மத்தியில் தாக்கற்று நின்று செய்ய வேண்டியவைகளை எவ்வாறு தயங்காது செய்து முடித்தாரோ அவ்வாறு ஒவ்வொரு கிருஹஸ்தனும் தன் பெண்சாதி விஷயத்தில் இருந்துவிட்டால், அதுவே 'நான் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷி' என்ற விருத்தியை வளர்த்து மேலான பதவி வரும்படி செய்யும். இவ்வாறின்றிப்பகவான் அநேக ஸ்திரீகளோடு இருந்தாரே என்று எண்ணி, 'அவருடைய நித்திய பிரஹ்மசரியமாகிய பற்றற்ற நிலையில் தன் பெண்சாதியோடுகூட இருக்கமுடியாத இக்காலத்திய மேதாவிகள் வெறும் சிற்றின்ப ஆசையால் ஸம்ஸார பாரம் உறைக்காமல் ஸுகம் மாத்திரம் கிடைக்கப் பிறர் ஸ்திரீகள், வேசையர்கள் முதலியவர்கள் மேல் துர்ஆசைகொண்டு கெட்டலைகின்றனர். இவர் தமது நிலையை வேதாந்த பரமாகவும், கிருஷ்ணன் நடத்தை மூலமாகவும், தகுந்த நடை என்று வற்புறுத்தி மதிமோசம் போகின்றனர். முற்கூறியவைகளிலிருந்து இவர்களுக்குத் துர் நடத்தையால் ஏற்படக்கூடிய பாபமும், தெய்வமிகழ்வதால் உண்டாகும் பெரும் பாவமும் ஒன்று சேர்ந்துவந்து இவர்களை அதோகதியை அடையும்படி செய்துவிடும் என்பது நன்கு வெளியாகும். ஆதலால் இந்தக் கிருஹஸ்த லீலையிலிருந்து ஒருவித ஆசையோடு தம்மிடம் வரும் பக்தர்களுக்குப் பகவான் தம் நிலைவழுவாது அந்த ஆசையைப் பூர்த்திசெய்து மேன்மை அடையும்படி செய்வர் என்பது தெரியவரும்.

இனி ஆசார்ய லீலைகளை எடுத்துக்கொள்வோம் மூன்று அவஸரத்தில் பகவான் இம்மாதிரி லீலைகளை நடத்தியிருக்கிறார். அவையாவன: பகவத்கீதை உபதேசம், அநுகீதை உபதேசம், உத்தவர் உபதேசம் ஆகிய இவைகளே. இம்மாதிரி அவஸரங்களின் உட்கருத்தைப் பகவானே அர்ச்சுனனுக்கு உத்தர கீதையில் நன்கு வெளியிடுகிறார். இந்த உத்தர கீதையில் மூன்று பாகம் உண்டு. அவையாவன: ப்ராஹ்மணர் உபதேசம், ப்ராஹ்மண ஸ்திரீ புருஷ ஸம்வாதம், குருசிஷ்ய ஸம்வாதம் ஆகிய இவைகளே. இவைகளுள் தாம் துவாரகையிலிருக்குங்கால் முன்பாகம் நடந்தது என்ன, அர்ச்சுனன் ப்ராஹ்மண ஸ்திரீபுருஷர்கள், குருசிஷ்யர்கள் எங்குள்ளவர்கள் என்று கேட்டான். இதற்கு விடையாகப் பகவான், 'புருஷன், குரு ஆகிய இவர்கள் நானே, ஸ்திரீசிஷ்யன் ஆகிய இவர்கள் என் மனதே' என்று கூறி தமது ஆசார்ய நிலையின் ரஹஸ்யத்தை வெளியிடுகிறார். ஆகவே ஒவ்வொரு மனிதனுள்ளும் புத்தியில் பிரகாசிக்கும் பரம்பொருளையே ஆசார்ய லீலை செய்யும் கிருஷ்ணனாகவும், ஒவ்வொருவரது வைராக்கியம் நிறைந்த மனமே அர்ச்சுனன் உத்தவராகிய சிஷ்யர்கள் என்றும் இதிலிருந்து வெளிவருகின்றது. ஆகவே தமது ஆசார்ய லீலைகள் மூலமாக ஒவ்வொருவனுள்ளும் புத்தி மனத்திற்கு உபதேசம் செய்ய அவனவன் ஜீவன்முக்தி நிலையை அடையும் அருமையான வழி குறிக்கப்படுகின்றது. இந்த ரஹஸ்யத்தை விஸ்தாரமாக வெளிப்படுத்தும் கடஉபநிஷத் வாக்கியம் ஒன்று உண்டு. 'ஜீவனே (மனமே) ரதிகன், தேஹமே ரதம், புத்தியே ஸாரதி, விருத்திகளே கடிவாளங்கள், இந்திரியங்களே குதிரைகள், விஷயங்களே பாதைகள், என்பதுதான் இந்த வாக்கியம். இதன்படி நோக்கில் மற்றைய ஆசார்யலீலைகள் எல்லாவற்றின் உட்பொருள் விளங்கியபோதிலும், கீதாசார்ய லீலையின் உட்பொருளுக்கு இது மிகப் பொருத்தமாக உள்ளது. இங்குதான் ஆசாரியன் ஸாரதியாகவும் சிஷ்யன் ரதிகனாகவும் அமைந்திருப்பது. உபதேசம் செய்யும் இடம் குருக்ஷேத்திரபூமி, அதாவது உண்டாகப்படும் இடம், அதாவது மனத்தின் காரியமான பிரபஞ்சம். இது முதலில் ஸுககரமாகத் தோன்றியபோதிலும் விசாரணையால் துக்ககரமாகத் தோன்றும். குருக்ஷேத்திரம் யுத்தபூமியாகுங்கால் அதில் உபதேசம் தொடங்குகின்றது என்பதுவிசாரணையால் பிரபஞ்சம் துக்கபூர்ணம் என்று காணுங்கால்தான் புத்தி தெளிந்து மனதிற்கு உபதேசம் செய்யத் தொடங்குவது என்ற கருத்தை அடக்கியுள்ளது. இப்பொருத்தங்களை உற்றுநோக்கில் முன் எடுத்துக் காட்டிய கட உபநிஷத் வாக்கியத்தை உருவகப்படுத்தி நன்கு விளக்கவே பகவான் கீதாசார்ய லீலையை விளையாடிக் காட்டி

னரோ என்று எண்ணவேண்டி வருகிறது. ஆகவே இந்த ஆசார்ய லீலைகளை நன்கு உணர்ந்து ஒவ்வொருவனும் தன்னுள் ஆசார்யன் உதிக்க வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டுவதுதான் பகவானைப் பார்த்தஸாரதிரூபமாக ஆராதிப்பதன் நோக்கம் என்பது வெளியாகும். இந்த ஆசார்ய உதயமாகிவிட்டால் பின்னர் :—

எத்தொழிலைச் செய்தாலும் எதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே!

என்று கூறப்படும் பரமநிலை தானே கைகூடிவிட யுத்தபூமிக்கு நிகரான பிரபஞ்சத்தில் தாக்கற்று நிற்றலாகிய ஜயம் வந்து தானே நம்மைச் சேரும்.

ஈச்வர லீலைகளில் தான் ஸ்ரீக்ருஷ்ணன் தாமே ஸர்வசக்திமானான ஈச்வரன் என்று நேரிட பக்தர்களுக்குக் காட்டுவது. இவைகள் மூன்று அவஸரத்தில் காட்டப்பட்டன. முதலாவது துர்யோதனனிடம் தூது நடந்த காலத்தில் பகவானை அவன் கட்டிப்பிடித்துச் சிறையிலிட சதியாலோசனை செய்து ஸபையில் கட்டிவிடத் தொடங்க அங்கு விச்வரூபத்தைக் காட்டினார். இரண்டாவது பகவத்கீதோபதேசத்தின் அங்கமாக அர்ச்சுனனுக்குத் திவ்யப்பார்வைகொடுத்து (11-ம் அத்யாயத்தில்) தமது விச்வரூபம் காட்டி வேதரஹஸ்யம் வெளியிட்டார். மூன்றுவது பாரத யுத்தம்முடிந்தபின் தர்மபுத்திரர் அச்வமேதயாகத்திற்கு முன்னர் பகவான் அனுகீதை உபதேசம் செய்து துவாரகை நோக்கித் திரும்புகையில் எதிர்ப்பட்ட உத்தங்கர் கோபத்தை மாற்ற விச்வரூபம் காட்டினார். இவைகளால் தம்மிடமே பிரபஞ்சம் எல்லாம் அடங்கியிருக்கிறது, தாமே ஸர்வேச்வரன் என்பதை பகவான் வெளியிட்டார். இப்படிச் செய்தும் பீஷ்மார்ச்சுனாதிகள் தெளிந்தனரே ஒழிய துர்யோதனாதிகளுக்கு இது பெரும் ஜாலமாகத் தோன்றிவிட சிர்திருந்த இடமில்லாமல் போய்விட்டது. ஆகவே மூர்க்கனைப் பகவானே நேரிட வந்தாலும் திருத்த முடியாது அவன் பகவத்தண்டனை மூலமாகவே தெளிய வேண்டும் என்பதை இல்லீலைகள் குறிக்கும். மேலும் பகவான் வாய்திறந்து ஸகல அண்டங்களையும் உள்ளே காட்டி யசோதையைப் பிரமிக்கும்படி செய்த இரண்டு பால்ய லீலைகளையும் இந்தப் பாகத்தோடு சேர்க்கலாம்

இனி கடைசியான அந்தர்யாமி லீலைகளை எடுத்துக் கொள்ளுவோம். பிரபஞ்சத்துள் எங்கும் மறைந்து நின்று பகவான் தம் ஸந்நிதான விசேஷத்தால் எல்லாவற்றையும் சேஷ்டிக்கும்படி செய்கிறார் என்ற ரஹஸ்யம் இவைகளிலிருந்து நன்கு வெளியாகும். துச்சாஸன் ஸபைநடுவில் புடவையைப் பிடித்திழுக்கத் தன்னால் கூடியவரையில் தடுத்து முடியாமல் இருகைகளையும் சிரமேல் தூக்கி 'ஹா கிருஷ்ண! த்வாரகாவாஸா!! எல்லாம் உன்செயல்! என்னால் ஆவதொன்றுமில்லை! நீயே கதி'! ! என்று கதறிய துரௌபதிக்கு மறைந்து நின்று எண்ணரும் புடவைகள் அளித்து மான ஸம்ரக்ஷணம் செய்த பகவான் லீலையும்; அகாலத்தில் விருந்தாக வந்த துர்வாஸர் அவர் சிஷ்யர்கள் எல்லோருக்கும் பூரண திருப்திவரும்படி ஒரு கீரையையும் பருக்கையையும் தீர்த்தத்துடன் உட்கொண்ட லீலையும்; தம் ஸந்நிதான மாத்திரத்தில் பாரத யுத்தம் நடக்கும்படி செய்து வைத்த லீலையும் நேரிட அரசனாக விராது ராஜ்யம் நடத்திய லீலையுமே, இந்தமாதிரி லீலைகளுக்கு உதாரணம். இங்கெல்லாம் பகவான் தோன்றுமலாவது அல்லது வெறும் ஸந்நிதான மாத்திரமாகவாவது இருப்பார். இவைகளை உற்று நோக்குங்கால் பிரபஞ்சம் முழுவதும் பிறந்து நடைபெற்று அழிவதும், இடையில் ஜீவர்கள் மொத்துண்டு திருந்தி விருத்தியடைவதும் ஆகிய இவைகள் கடவுள் முன்னிலையில் காந்தச்சிலைமுன் சேஷ்டிக்கும் ஊசிகள் ஆட்டம்போல நடைபெறுகின்றன என்ற விரிந்த எண்ணம் யாருக்குத்தான் வாராது?

ஆகவே அனந்த கிருஷ்ண ஆராதனத்தில் இவ்வைந்துவித லீலைகள் மனத்தினூறிக்கொண்டே இருத்தல் வேண்டும். வேதாகமங்களில் காட்டியபடி கடவுள் லக்ஷணங்கள் முற்றிலும் அமைந்து கிடக்கும் வஸ்துவைப் புருஷனாக ஆராதிக்க வேண்டுமாகில் கிருஷ்ணன் ஒருவனையே பின்பற்றல் வேண்டும். மணியுள் கயிறுபோலத் துவந்துவங்களும் மாறுபாடுகளும் நிறைந்த பிரபஞ்சத்துள் ஊடுருவிச் செல்லும் பரம்பொருளை ஒருவாறு தியானத்திற்குக் கொண்டுவந்து ஆராதிக்கவேண்டுமாகில் கிருஷ்ண ஆராதனத்தால்தான் செய்ய முடியும். இதுபற்றியே ஒரு மஹான் கிருஷ்ண பரமாத்மாவிடம் பின்வருமாறு ஈடுபடுகிறார். 'பிரபஞ்சமாகிய நாடகத்திலிருக்கும் வெளிப்படையான விரோதாம்சங்கள், தோஷங்கள், முதலியவற்றையும் விடாது

நடித்து யாரும் மறவாத வண்ணம் காட்டி, அவைகளின் உள்ளே தாமே கபட நாடக ஸூத்ரதாரியாக விருப்பதை வெளிப்படுத்தியவராயும், தாமே தஸ்கராணும்பதி (கள்வர் தலைவன்) ஆக இருப்பவராயும், பிரேமை கருணை முதலியவைகளுக்கு நிலையமாக விருந்தபோதிலும் தாமே ஸகல விரோதம் சண்டை முதலியவைகளுக்கு இவ்வாறு காரணமாக இருப்பது என்பதை வெளியிடுபவராயும், ஸகல வேதார்த்தங்களையும் வெளிப்படுத்தும் திறனுடையவராயும், ஸகல ஸ்திரீகளும் மிகுந்த ஆனந்தத்துடன் கூறத் தக்கதாக உள்ள பால்ய லீலைகளை உடைய அற்புதக் குழந்தையாயும், உபநிஷத்துக்கள் வெளியிடும் அற்புத விஷயங்களைத் தெரிவிக்கும் சேஷ்டைகளைக் கோபிகள், ராதை முதலியவர்களோடு செய்த அத்புத புருஷனாயும், உலகத்தையே நிலை நிறுத்தும்படியான சட்டங்களை வெளிப்படுத்திய அமைச்சராயும், ஸந்நிதான மாத்திரத்தில் எல்லா விஷயங்களையும் நியாயப்படி நடக்கும்படி செய்யும் அத்புத வீரராயும், உலகத்தில் உள்ள ஸகல வேதங்களது ஸாரத்தையும் சுருக்கமாகக் கொஞ்ச நாழிகையில் எடுத்துரைத்த பரம குருவாகியும், 16008 ஸ்திரீகளோடு கூடியிருக்கும் நித்ய ப்ருஹ்மசாரியாயும், நாரதரை ஒரு நொடியில் மாயையில் கட்டுப்படுத் தவிக்கும்படி செய்த சூதான ஸ்நேஹிதராயும், ஸதா வேணுகானம், நடனம், விளையாட்டு ஆகிய இவைகளையே நிச்சிந்தையாகச் செய்துகொண்டிருக்கும் கோபாலனுயும், கற்பனாரஸம் ஸம்பவ விசித்திரம், ஆழ்ந்த உட்கருத்து ஆகிய இவைகள் விஷயத்தில் தனக்குத் தானே நிகர் என்று சொல்லும்படியான திவ்யசரித்திரத்தை உடையவராயும், பூர்ணாவதாரமாயும் உள்ள கிருஷ்ண பரமாத்மாவைக் கடவுளெனக் கருதித் துதிக்காதிருப்பவரும் உண்டோ?' என்று வியந்து கூறியிருக்கிறார் அம்மஹான். இக்கருத்தை உள்ளடக்கியே வாஸுதேவ சப்தத்திற்கு அமிருதபிந்து உபநிஷத்தில் பின்வரும் பொருள் குறிப்பாகக் கூறப்படுகின்றது.

सर्वभूताधिवासंयद् भूतेषु च वसत्यपि ।
सर्वानुग्रहकत्वेन तदस्म्यहं वासुदेवः ॥

அதாவது 'எல்லா பூதங்களுக்கும் வாஸஸ்தானமாகி அவைகளில் வஸித்துக்கொண்டு எல்லாவற்றையும் காக்கும் வாஸுதேவன் எவனே அவனே நான்' என்பதாயிற்று. ஆகலால்தான் 'பல பிறவியின் முடிவில், ஞானி 'எல்லாம் வாஸுதேவனென்று என்னை அடைகிறான் அவன் கிடைப்பது மிக அருமை' என்று பகவான் கீதையில் கூறுகிறார். இவ்வளவு சிறப்பான அனந்த கிருஷ்ண விக்கிரஹத்தை முற்கூறிய உட்கருத்துகளுடன் பொருத்தி சுத்த மனதுடன் ஆராதித்தால் நம்முள் கிருஷ்ண பரமாத்மா உதிக்க, அவரோடு இரண்டறக் கலக்கும் நிலையாகிய பரமபதம் கைகூடிவிடும் என்பது கூறாமலே விளங்க இடமுண்டு.

~~~~~~~~~~~~~~~~~~~~

ஒரு ஸமயம் ப்ராஹ்மண ஸமாஜச் சிறுவர்கள் சிலர் என்னிடம் வந்து, "நாங்கள் ஜநக மஹாராஜாவைப் போல் பற்றின்றி நரி உலக வாழ்க்கையில் இருக்கின்றோம்" என்றார்கள். அதற்கு நான், அப்படிச் சொல்வது சுலபமே. செய்வதுதான் கஷ்டம், என்றேன். ஜனக மஹாராஜனைப்போல் இல்லறத்திலேயே இருந்து கொண்டு களங்கமுறாதிருத்தல் வெகு கடினமே. அத்தகைய ஜனகனும் ஆதியில் என்னென்ன கடுந்தவங்கள் புரியவில்லை! ஆகையால் நீங்களும் அத்தனைக் கஷ்டங்களைப் படவேண்டுமென்று நான் சொல்லவரவில்லை ஆனால் நீங்கள் சொற்ப ஸாதனத்தினாலாவது பழகி, சிலகாலமாவது சாந்தமான பிரதேசத்திலே, ஏகாந்தமாயிருக்கவேண்டும், ஞானம் பக்தி எனும் செல்வங்களைப் பெற்ற பிறகு ஜெகத்திற் பிரவேசியுங்கள். பாலை யசைவற்றமைதியாயிருக்கும்படி விட்டு விட்டால் நல்ல தயிர் உண்டாகின்றது. பாண்டத்தை அசைக்கவாவது மாற்றவாவது செய்தால் தயிர் கெட்டுப்போகின்றது. ஜனங்கள் பற்றற்றிருந்தமையால் விதேஹன் (தேஹமற்றவன்) என்று பேர் பெற்ற இத்தேகத்தை வைத்துக்கொண்டே வீடு பெற்றதினால் ஜீவன் முக்தனாய் வாழ்ந்தான். தேக புத்தியை யொழிப்பது மஹா கஷ்டம். உண்மையாகவே அவன் ஒரு மஹா வீரன் அவன் ஞானம், கர்மமென்னும் இருவகைச் சக்திகளையும் வெகு லாகவமாய்க் கையாடினன்.

ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர்
~~~~~~~~~~~~~~~~~~~~

றன்று சிறந்த தமிழ்நூல்களினின்றும் தெரிந்தெடுக்கப்பட்ட 1647 செய்யுட்களை யுடையது. மஹாமஹோபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ, உ. வே. சாமிநாதையர் அவர்கள் இந்நூற்கு நீண்டதோர் சிறப்புப்பாயிரம் பாடியிருப்பதனாலும், இதிலிருந்து சில பாகங்கள் மெட்ரிகுலேஷன், பி. ஏ. இப் பரீட்சைகளுக்குப் பாடமாய் ஏற்பட்டிருக்கிறதனாலும் இந்நூலின் சிறப்பு இனிது விளங்கும். இதுபற்றியே

"இன்னூற் றிரட்டிதனுக் கேதுகிணின்றெனவே
பன்னூற்றிரட்டொன்று பாவித்தான்—கன்னூல்கட்கு
ஈண்டித் துரையே இடமென்பா வந்தேர்ந்த
பாண்டித் துரையாம் பதி."

என இந்நூலையும், நூலாசிரியரையும் குறித்துச் சிறப்பாகப் பிரஹ்மஸ்ரீ உ. வே. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர் அவர்கள் பாடியிருக்கிறார்கள்.

இவர், இவ்வளவு சிறப்பான 'பன்னூற்றிரட்டை' வெளியிட்டதுமன்றித் தாமே, தாம் சைவ சமயத்தின் மாட்டு வைத்துள்ள பற்றுக்கறிகுறியாக, "சிவஞானமுனிவர் இரட்டை மணிமாலை" என்னும் அரிய செய்யுள் நூலை யியற்றி யிருக்கிறார். மதுரை வித்வான் இராமசாமிப்பிள்ளையவர்களைக்கொண்டு சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டையும் வெளியிட்டுள்ளார். மற்றும் மஹாமஹோபாத்யாயர் பிரம்ஹஸ்ரீ உ. வே. சாமிநாதைய்யாவர்கள் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய தமிழ்மகள் அணிமேகலைபோலும் மணிமேகலை என்னும் அரிய நூலையும், புறப்பொருள் வெண்பா மாலையையும் பதிப்பித்தற்கு இவரே பொருளுதவி செய்தனர்.

இவ்வளவு அரிய, பெரிய காரியங்களெல்லாம் பெரும்பாலும் 1902-ம் வருஷத்தில் மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபனம் ஆவதற்கு முன்னேயே, அதாவது, அவரது முப்பத்தைந்தாம் வயதுக்கு முன்னரே நிகழ்ந்தவைகளாகும். இனி அச்சங்க ஸ்தாபன விஷயமாகச் சிறிது கூறுவோம்.

காலஞ்சென்ற இராமநாதபுரம் அரசாகிய ஸ்ரீமான் பாஸ்கரசேதுபதியவர்கள் நம் தேவரவர்கட்கு ஒருமுறையில் தம்பியாதல்வேண்டும். இவ்விரு சகோதரரும் ஒருவர்மீதொருவர் மிக்க பெருமதிப்பு வைத்திருந்தனர். பாஸ்கர சேதுபதியவர்களது தமிழபிமானமும் நாடறிந்த விஷயம். இவ்விருவரும், இக்காலத்திய தமிழின் நிலைமையைக் குறித்துச் சிந்தித்து,

* "பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
போட்டிலே தவழ்ந்த"

தமிழ்க் குழந்தையானது சிறப்புடன் வளரவேண்டுமானால், முற்காலத்தில் தென்னவர்களாகிய பாண்டியர்களுடைய ஆதரவில் மூன்று தமிழ்ச்சங்கங்கள் நின்று நிலவியவாறு, இப்போது ஒரு சங்கம் இருக்கவேண்டுமென்று உணர்ந்துகொண்டனர். "† தண்டமிழ் இருந்திடிற் சங்கஞ் சேர்ந்திடும்" என்பது உண்மையன்றோ? அவ்வாறே இப்போதுள்ள சங்கத்தினை இருவரும் சேர்ந்து 1902 ஆம் வருஷம் மதுரையில் ஸ்தாபித்தனர். சங்கத்தின் ஸ்தாபன விஷயமாக இவ்விருவரும் காட்டிய ஊக்கத்திற்கும் பட்ட சிரமத்துக்கும் அளவேயில்லை.

இப்படி சங்கம் ஏற்பட்ட கொஞ்சகாலத்துக்குள், திடீரென்று சேதுபதியார் இளம் வயதில் (சுமார் 33 இருக்கலாம்) தேகவியோக மடைந்ததனால், தேவரவர்கட்கு வருத்தத்தை உண்டாக்கியது. தம் தம்பியார் பிரிவாற்றாது, நம் தேவரவர்கள் மனங்கலங்கி யிருந்த நிலையில் பாடிய இரங்கற்பாக்களிலிருந்து ஒரு செய்யுளைக் கீழே வரைகின்றோம். அது ஒன்றே அவர்களது சகோதர வாஞ்சையையும், சாகித்ய சக்தியை நிலைநாட்டற்குப் போதும். அச்செய்யுள் வருமாறு:—

என்னுவி யுளங்குளிர அண்ணு! என்
றன்பொடினி யெனையார் செல்வர்?
மன்னு! மன்னு! ! மன்னு!!! எனயாரை
யானினிமேல் மதித்துச் சொல்வேன்?
பொன்னுடர் தொழுஞ்சேது நன்னுடு
புரந்தளிக்கப் போந்தநீ வேறு
எந்நாடு சென்றனையோ? எங்கள்குல
மணிவிளக்கே! இயம்பிடியே.

சேதுபதியார் காலமானதுமுதல் தமிழ்ச் சங்கப் பொறுப்பு முழுதும், தேவரவர்களே பார்க்கவேண்டியதாயிற்று. சங்கத் தலைவராய்த் தாம் இருந்துகொண்டு சங்கத்துக்கு நிதி தேடுவதிலும், பழைய ஏட்டுப்பிரதிகளைச் சேர்ப்பதிலும், அவற்றைப் பரிசோதிப்பதிலும், மாணுக்கர்கட்கு வேறுவேறு பரீட்சை வைத்துப் பரிசு அளிப்பதிலும், அச்சு எந்திரம் முதலிய சம்பாதித்து,

*வில்லிபாரதத்திற்கு வரந்துவார் இயற்றிய சிறப்புப்பாயிரம்; பொருப்பு பொதியமலை.

† விவேக சிந்தாமணியிலுள்ள தனிப்பாடல்.

அரிய நூல்களைச் சங்கப்பிரசுரங்களாக வெளியிடுவதிலும், இவைபோன்ற பிற செயல்களிலும் மிக்க ஊக்கத்துடன் உழைத்து வந்தார்.

"மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணுயி னூர்."

என்னும் நீதிநெறி விளக்கச் செய்யுளுக்கு இவரனையோர் உதாரணமாகக் காட்டுவது பொருத்தமுடையதேயாகும்.

இத்துணை வேலைகளையும், தமது ஜமீன் சம்பந்தமான வேலைகளையும் இடையறாது மேற்பார்த்து வந்த நமது தேவரவர்கட்கு ஓய்வுநேரம் எப்படிக் கிடைக்குமோ, நமக்குத் தெரியாது. அடிக்கடி 'செந்தமிழ்' என்னும் தமது தமிழ்ச்சங்கப் பத்திரிகையின்கண்ணே, நூலாராய்ச்சி விஷயமாகவும், சரித்திர விஷயமாகவும் பல அரிய விஷயங்களைக் குறித்து, மிகநுட்பமான கருத்து நயம் வாய்க்க வியாசங்கள் வரைந்து வந்தார். இவர் இங்ஙனம் கம்பராமாயணச்செய்யுள் சிலவற்றிற்கு எழுதி விடுத்த விளக்கவுரையும், தமிழ்ப்பழஞ் சரிதம் என்னும் விஷயமும், கற்றோரனைவரும் காழுறற் பாலவாய்ச் சிறந்து விளங்குகின்றன.

அன்றியும் சங்கம் நிறுவுவதற்கு முன்னரே இவரால் வெளியிடப்பட்ட பன்னூற்றிரட்டு என்னும் நூலை, இவர் நூற்றுக்கணக்கான புதிய செய்யுட்களைச் சேர்த்துத் திருத்தமாக இரண்டாம் பதிப்புச் செய்து, சங்கப்பிரசுரமாக அதனை வெளியேற்றினர். சைவர்களுக்குப் பெரிதும் பயன்படுமாறு, சைவசித்தாந்த நூல்கள் பலவற்றிலிருந்து, சிறந்த செய்யுட்களைத் தேர்ந்தெடுத்து 'சைவமஞ்சரி' யென்னும் பேரால் ஒரு தொகைநூல் வெளியிட்டனர். இங்ஙனமே, பல தோத்திரச் செய்யுட்களைத் திரட்டி, 'தோத்திரத் திரட்டு' என்பதொன்றும் பதிப்பித்திருக்கிறார். இவரால் பதிப்பிக்கப்பட்ட இத்தொகைநூல்கள் மூன்றும் தமிழ் கற்போர்களுக்குப் பேருதவியாயிருக்கின்றன.

இன்னும் இவர், வியாசம், செய்யுள் ஆகிய இவற்றை வரைவதில் மாத்திரம் வல்லமையுள்ள சிலர் போலாகாது, வித்வான்கள் பலர் கூடிய பெரிய சபையில், திருத்தமாக இனிய குரலுடன் நெடுநேரம், கேட்போர் மகிழும்படி பிரசங்கம் புரியும் ஆற்றல் வாய்ந்தவர். இவரது பிரசங்கங்கள், கற்பனை நயமும், சொற்பொருள் நயமும் கலந்து கேட்கக் கேட்கத் தெவிட்டாதிருக்கும். இவர் சைவசமய விஷயமாகவும், தமிழ்ப்பெருமை விஷயமாகவும், சென்னை, சேலம், தஞ்சை, நாகபட்டினம், சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களிற் பிரசங்கம் செய்திருக்கிறார். இவர்களது தமிழ்ப் பாஷாபிமானம், இவ்வளவு சிறப்புடையதாகலின், அதை இதுவரையில் சற்று விரிவாகக் கூறினோம். மற்றைச் சிறப்புகளைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

இவர்கள், இக்காலத்தினியல்புக்கேற்ப ஆங்கிலமும் தெரிந்தவர். ஆங்கில பாஷையினிடத்தும், ஆங்கில அரசாங்கத்தாரிடத்தும் மிக்க அபிமானமுடையவர். ஆங்கில ஆராய்ச்சி நூல்களின் போக்கைத் தழுவி காலஞ்சென்ற பிர்ஹ்மஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ. அவர்கள் இயற்றிய "தமிழ் மொழியின் வரலாறு" (The History of Tamil Literature) என்னும் அரிய நூலை, அரங்கேற்றுதற்குக் கூடிய சபையில், இவர்களே சபாநாயகராக விருந்து, அந்நூலைச் சிறப்பித்துக் கூறியதனால், "புதியன புகுதல்" பாஷை வளர்ச்சி யுறுவதற்கு ஒரு காரணமாகும் என்பது இவர்க்கு உடன்பாடு எனல் வெளிப்படை.

இவர், சிறப்புப்பற்றித் தமிழ்க்கல்வியைப் பெரிதும் ஆதரித்து வந்தனரென்றாலும், பொதுக் கல்வியிடத்தில் இவர்க்கு அபிமானங் குறையவில்லை. ஆங்கிலம் படிக்கும் பல ஏழைமாணுக்கர்கட்கிவர் பொருளுதவி செய்து வந்தது முன்னரே கூறப்பட்டது. இராமநாதபுரத்தில், பாண்டியன் ஸெகண்டரி வித்தியாசாலை (The Pandian Secondary School) ஒன்றேற்படுத்தி, அதற்கு வேண்டிய பொருளுதவி முழுதும் தாமே புரிந்து வந்தனர். அது இரண்டொரு வருஷங்களில் ஒரு சிறந்த ஹைஸ்கூலாய்விடும் நிலைமையில் இருக்கிறது. இதுவன்றியும், மதுரைக் காலேஜிக்குப் பணம் கொடுத்திருப்பதனாலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்திருக்கும் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையில், மாணுக்கர்கட்குத் தமிழுடன், ஆங்கிலம், வடமொழி முதலிய பயிற்றி வரவேண்டுமென்னுங் கொள்கை கொண்டிருந்ததனாலும், இவர் பொதுவாகக் கல்வியிடத்து வைத்திருந்த அபிமானம் யாவராலும் எளிதில் இனிதுணரப்படும்,

ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்கள் சரித்திரம்

PANDITHURAI THEVER (A LIFE SKETCH)

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியானது ஆதரிப்போரின்றித் தளர்ச்சி யடைந்திருக்கும் இக்காலத்தில், அதன் வளர்ச்சியையே பெருநோக்கமாகக் கொண்டு, அவ்வளர்ச்சிக் கேற்ற முயற்சி செய்வதில் கண்ணுங் கருத்துமாய் இருந்துவரும் தமிழ்ப் பாஷாபிமானிகள் மிகச் சிலரேயாகும். அவர்களுக்கெல்லாம் முதல்வராவார் சென்ற பத்து வருஷங்களாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாய் விளங்கி இப்போது காலஞ்சென்ற ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்கள் என்பது தமிழுலகம் முழுதும் அறிந்த விஷயம். அவரது பிரிவாற்றாது நூற்றுக்கணக்கான தமிழ்ப்புலவர்கள் உள்ளமுடைந்து, மிக உருக்கமுறப் பாடியுள்ள ஆயிரக்கணக்கான இரங்கற் பாக்களே (சரமகவிகள்) அவரது புலமைக்கும் பெருமைக்கும் போதிய அறிகுறியாகும். இப்பெரியாரைப்பற்றிய விவரங்களை 'நம் போதினி' நேசர்கள் படித்தறிந்து தமிழபிமான முள்ளவர்கள் ஆதல் வேண்டி, சற்று விரிவாக அவரது வாழ்க்கைச் சரிதத்தைக் கீழே தருகின்றோம்.

நம் தேவரவர்கள் செந்தமிழ்ப் பாண்டி நாட்டிலே, இராமநாதபுரம் என்னும் "பொன்னுடைத் தொழுஞ் சேது நன்னாடு புரந்தளிக்கப் போந்த"* சேதுபதிகளது மரபிலே தோன்றியவர். சேதுபதிகள் பரம்பரையாகவே தமிழ்ப்புலவர்களுக்குப் பெரும் பொருளுதவி, அவர்களை யாதரித்து வந்த பெருந்தகை யாளர்கள்.

இச்சேதுபதிகள் வம்சத்திலே, இப்போது அரசாண்டு வரும் ஸ்ரீமான் இராஜேச சேதுபதியவர்களுக்குப் பாட்டனாருடைய ஆட்சியில், அவரது சகோதரரும், அறிவு, ஆற்றல் முதலியவற்றிற் சிறந்தவரும் ஆகிய பொன்னுசாமித்தேவர் என்பவர் இராமநாதபுரம் ஜமீன் மானேஜராயிருந்து வந்தார். இவர்கள்தாம், நம் பாண்டித்துரைத் தேவரவர்களது தந்தையார். இவர்களது மேற்பார்வையில் இராமநாதபுரம் ஜமீன் மிகச் சிறப்புற்றுச் செழித்தோங்கியது. இவர்கள் இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் செய்த நன்மைகளுக்குக் கைம்மாறாகப் பாலவனத்தம் என்னும் பட்டணம் இவர்களுக்குப் பரிசாக அளிக்கப்பெற்றது. அதுமுதல் இவர்கள் பாலவனத்தம் ஜமீன்தார் ஆயினர். இன்னும், இவர் உலகியலை நன்கு அறிந்திருந்ததுடன் எடுத்த கருமத்திற்கு எவ்வளவு இடையூறு வரினும், மனந்தளராது முயன்று, அதனை இனிது முடிக்கும் ஆற்றல் வாய்ந்திருந்தனர். அதுபற்றியன்றோ இவர் அக்காலத்து மதுரை ஜில்லா போர்டுக்கு உப அக்கிராசனாதிபதியாய் இருந்து மதுரை ஜில்லா முழுவதற்கும் பல நன்மைகளைச் செய்தனர்.

பொன்னுசாமித்தேவர் அவர்களது, காரிய நிருவாக சக்தி இவ்வளவு சிறப்புடையதெனினும், அவர்களுடைய தமிழ்ப்புலமையும், தமிழபிமானமும், இதனினும் பலமடங்கு ஏற்றம் வாய்ந்தன. இவர் திருக்குறள் (பரிமேலழகருரையுடன்), திருக்கோவையார், (பேராசிரியருரையுடன்) தர்க்கசங்கிரகம், அன்னம்பட்டீயம், சேதுபுராணம் முதலிய நூல்களை, யாழ்ப்பாணத்து நல்லூர் மஹாவித்வான் ஆறுமுக நாவலர் அவர்களைக் கொண்டு, முதல் முதல் அச்சிற் பதிப்பித்தனர். அன்றியும், பற்பல சந்தர்ப்பங்களிற் பற்பல புலவர்கள் பாடிய தனிப்பாடல்களை ஒருங்கு திரட்டிச் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் அவர்கள் உதவியால் 'தனிப்பாடற்றிரட்டு' என்னும் அரிய நூலை வெளியிட்டனர். மற்றும் இலக்கியம், இலக்கணம், சங்கீதம் முதலியவற்றில் தேர்ச்சியுள்ள பண்டிதர்களுக்கு மிக்க பொருளுதவி செய்தும் தமிழ் மொழியை ஆதரித்து வந்த அருங்குணமுள்ளவர்; திருவாவடுதுறை யாதீனத்து மஹாவித்வான் திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள், இவர்களது வள்ளன்மை (பெருங்கொடை) யைக் குறித்து வியந்து,

> " இலவென்னு மெவ்வ மெனுந்திருக் குறட்குப்
> பலர்பல விதமாப் பகர்ந்தபே ருரையுள்
> இரப்பவன் இரக்கப் படுவோ னாகச்
> சுரக்குங் கொடையே சொல்லின் முதற்றல்;
> அக்கொடை யிவன்பால் அமைந்த தியல்பென்
> றெக்கொடை வள்ளலும் இயம்பப் பொலிவோன்"

எனப் பாடியிருப்பதனால், இவரது உதார குணம் எத்தன்மையது என்பது எல்லார்க்கும் எளிதில் இனிது விளங்கும்.

* இம்மேற்கோள் ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள், ஸ்ரீமான் பாஸ்கர சேதுபதியவர்கள்மீது பாடிய சரமகவியொன்றனில் கண்டது.

இத்தகைய செல்வச்சிறப்பும், கல்விச்சிறப்பும் வாய்ந்த பொன்னுசாமித்தேவர்கட்குச், சற்றேறக் குறைய நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன், தமிழுலகம் மேனாளிற் செய்தவத்தின் விளைவாய், நம் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் மூன்றாம் புதல்வராகப் பிறந்தனர். குழந்தைப் பருவந்தொட்டே, நம் தேவரவர்கள் தமது (மறவர்) குலத்துக்குரிய, வன்மை முதலிய 'மற'க் குணங்கள் அமையப்பெறாது, அன்பு, அமைதி, பொறுமை முதலிய 'சாத்விக' குணங்களே உடையவராய் விளங்கி வந்தனர். தந்தையாரது வீரம், காரிய நிருவாக சக்தி இவற்றைப் பெரும்பாலும், முறையே இவர் அண்ணன்மா ரிருவரும் கொள்ள, அவரது சாத்விக குணங்களை நம் தேவரவர்கள் கொண்டனர் என இம்மூன்று சகோதரர்களுடனும் நன்கு பழகியுள்ளவர்கள் கூறுவது வழக்கம்.

நம் தேவரது இளம் பிராயத்திலேயே, தந்தை பொன்னுசாமித்தேவர் சிவலோகம் சேர்ந்தனரேனும், இளமைந்தர்தம் கல்விக்குரிய ஏற்பாடு ஒன்றும் குறைவு பெறாது நடந்து வந்தது. தேவரவர்களும் இயற்கையிலேயே நுண்ணுணர் உடையராதலோடு * "செவி வாயாக நெஞ்சு களனாக, கேட்டவை விடாதுளத் தமைத்து" வந்ததனால் விரைவில்சிறந்த கல்விமானாய் விளங்கினார். இவர்க்குத் தமிழ் பயிற்றிய ஆசிரியர் அஷ்டாவதானம் முத்துசாமி ஐயங்கார் ஆவர். நம் தேவரவர்கள் சைவசித்தாந்த சாஸ்திரத்திலுள்ள நுணுக்கங்கள் பலவற்றையும், சைவசமய நூற் புலமையிற் கைவந்தவரும், மிக்க நுண்ணறிவாளரும் ஆகிய திருவாவடுதுறை யாதீனத்துப் பழநி குமாரசாமித் தம்பிரானவர்களிடம கற்றுத் தேர்ந்தனர்.

இளம் பிராயத்திலேயே இவரது தமிழ்ப் படிப்பு மிகச் சிறந்திருந்தது என்பது இவர் பதினான்காம் வயதிலேயே, கம்ப ராமாயணத்திலுள்ள கருத்துவிசேஷங்களை நயம்பட விரித்துரைத்துப் பிரசங்கஞ் செய்யும் ஆற்றல் அமைந்திருந்தனர் என்பதனால் எல்லாரும் எளிதில் அறிந்து கொள்ளலாம். இவ்விஷயத்தைக் குறித்தே, மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும், மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களுள் ஒருவரும், ஸ்ரீ பாண்டித்துரைத் தேவருடன் நீண்ட காலம் பழகியவரும் ஆகிய பிரம்மஸ்ரீ ம. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் தாம் தேவரவர்கள்மீதியற்றிய சரமகவி யொன்றில்,

> " இளமையிற்செந் தமிழ்சைவ சித்தாந்த
> மாதியெலா மினிது தேர்ந்து
> வளமைமிகு கம்பரா மாயண நுட்
> பங்களெல்லாம் வயதீ ரேழில்
> தெளிவுபெறப் பலர்மகிழப் பிரசங்கஞ்
> செய்திடுநற் றிறமை வாய்ந்து
> 'விளைபயிரி னியல்முளையில் விளங்கு' மெனு
> முதுமொழியை மெய்ப்பித் தாயே."

என்று பாடியிருக்கிறார்.

பாண்டித்துரைத்தேவர் அவர்கள், பொன்னுசாமித்தேவர்க்கு மூன்றாவது புதல்வரென முன்னர்க் கூறினோம். தமையன்மாரிருவரும் அகால மரணத்துக்குள்ளாகவே, ஜமீன் பட்டத்துக்குப் பாத்யதையும் நம் தேவரவர்கட்கே கிடைத்தது.

இவ்வாறு கல்விப்பொருளோடு செல்வப்பொருளும் சேரப்பெற்ற நம் தேவரவர்கள், பற்பல வழிகளில் தமிழ் மொழியை ஆதரிப்பாராயினர். தாமே ஆசிரியராய் இருந்து, தமதாசிரியரின் குமாராகிய, பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார்க்கும், பிறர்க்கும் தமிழ் பயிற்றினர். இந்த இராகவையங்கார் அவர்கள் மதுரைச் 'செந்தமிழ்'ப் பத்திராசிரியரா யிருந்து வந்ததுடன், இக்காலத்துப் பிரபல தமிழ் வித்வான்களுள் ஒருவராவர். தேவரது மற்றை மாணாக்கர்களிற் சிலர், எட்டையபுரம் சமஸ்தான வித்வானும், பாலவனத்தம் அரண்மனை வித்வானும், மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் காரியதரிசியும் ஆக இக்காலத்து விளங்குகின்றனர்.

இப்படித் தாமே தமிழ் பயிற்றி வந்ததுடன், தமிழ்ப்புலவர்களையும், சங்கீத வித்வான்களையும், சம்ஸ்கிருத பண்டிதர்களையும், பொருளுதவி செய்து ஆதரித்து வந்தனர். இங்கிலீஷ் படிக்கும் மாணாக்கரில், மதுரையிலுள்ள ஏழைப்பிள்ளைகள் பலர்க்குப் பள்ளிக்கூடச் சம்பளத்திற்காகவும், பரீக்ஷைக்குப் பணங்கட்டுவதற்காகவும் இவர் பொருளுதவி செய்துள்ளதை நாம் நேரில் பார்த்தறிந்திருக்கிறோம்.

இன்னும் இவர் பல நூல்களில் உள்ள சிறந்த பொருள் விஷயங்களை யாவரும் எளிதில் உணரும் பொருட்டு, 'பன்னூற்றிரட்டு,' என்னும் அரிய தொகை நூலை வெளியிட்டுத் தமிழுலகுக்கும் பேருதவி புரிந்தனர். இந்நூல், இதிகாசம், புராணம், காவியம், நீதி நூல் முதலிய வாகிய ஐம்பத்து

* நன்னூல், பொதுப்பாயிரம்.

நம் தமிழ் நாட்டில் பெரும்பாலும் செல்வ மிக்கவர்கள் கல்வி யில்லாதவர்களாய் இருக்கிறார்கள். கல்வி மிக்கவர்கள் செல்வ மில்லாம லிருக்கிறார்கள். தொன்றுதொட்டுத் தமிழ் நாட்டில் இப்படிக் கல்வியும், செல்வமும் ஒன்றோடொன்று முரண்பட்டு இருந்ததென்பது

"இருவேறு உலகத் தியற்கை; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்னுந் திருக்குறளாலும், மற்றும் சில தமிழ்ப் பாக்களாலும் அறியப்படும். இவ் "வுலகத்தியற்கை"க்கு மாறாக மட்டற்ற கல்விப்பொருளும், செல்வப்பொருளும், கலந்துறைவதற் கிடனா யிருந்தமையால், திருத்தக்க தேவர், சீவகசிந்தாமணியிற் சச்சந்தனென்னும் அரசனைக் குறித்து

"நாவீற் றிருந்தபுல மாமக ளோடு நன்பொற்
பூவீற் றிருந்ததிரு மாமகள் புல்ல நாளும்
பாவீற் றிருந்தகலை பாராச் சென்ற கேள்விக்
கோ"

எனக் கூறியது, நம் பாண்டித் துரைத்தேவர் அவர்கட்கும் பெரிதும் பொருத்த முடைத்து என்பது சொல்லாமலே அமையும்.

இவ்வளவு சிறப்புடைய ஒருவரைத் தமிழ்நாடு இழக்க நேர்ந்தது, தமிழர்தந் துர்ப்பாக்கியமே யன்றி வேறன்று. இவர் தலைமை பூண்டிருந்த தமிழ்ச் சங்கமும் இவரது சுவீகார புத்திரனது ஆக்ஞையும் இவர்க்குப் பின்னும், இனிதோங்குமாறு, இறைவன் திருவருள் சுரப்பதாக.

வே. முத்துஸாமி ஐயன், பி. ஏ. எல். டி.

நமது சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத்தொகை அனுப்பும்போதும் தமது விலாஸத்துக் கெதிரேயிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக் கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும்.

மானேஜர்

தெய்வப்புலமை நக்கீரனார்

NAKKIRA THE DIVINE BARD

பாவிற்சிறந்த பாவலர்களையும் நாவிற்சிறந்த நாவலர்களையும் நம் செந்தமிழ் நாடு பண்டைக் காலத்தில் பெற்றிருந்ததாயினும் கவின்பெறக் கவிகள் கட்டும் கவிவாணர்களையும் இலக்கிய இலக்கண ஆராய்ச்சி அமைந்த அறிவாளர்களையும் அது அக்காலத்தில் அடைந்திருந்ததாயினும், அவர்களுடைய சரித்திரங்களை விவரமாயும் விளக்கமாயும், பின்னோரான நாம் அறிந்துகொள்ளும்படி, முன்னோர்களால் ஏதும் எழுதி வைக்கப்படாமையால் முற்காலத்து மூதறிவாளர்களைப்பற்றிப் பிற்காலத்துப் பேரறிவாளர்களுங் கூட ஏதும் நிச்சயித்துரைக்க முடியாமல் தயங்கும் தற்காலத்தில் கடைச்சங்கப் புலவர்களுள் முதல்வரான நக்கீரரைப்பற்றி நாம் எழுத முற்படுவதானது, கருங்கல்லிலிருந்து நார் உரிக்க முயல்வோன் ஒருவனுடைய முயற்சியினை ஒக்குமேயன்றி வேறில்லை. ஆனாலும், காலம் என்னும் காரிருளில், மறைந்துபோன அப்பெரியாரின் சரித்திரம் அவருடைய நூல்களாகிய விளக்கத்தைக்கொண்டு சிறிது விளக்கப்படுதல் கூடுமாதலால், ஒன்றுமே அறிய முடியாமலிருப்பதினும் சிறிதாவது அறிந்துகொள்ளுதல் நலமென்பதைக் கருதி சில விஷயங்கள் அவரைப்பற்றி எழுதுவதற்குத் துணிந்தோம்.

மதுரைக் கடைச்சங்கத்திலிருந்து தமிழாராய்ந்த நாற்பத்தொன்பது புலவன்மார்களுள் நக்கீரர் என்பவர் ஒருவராவர். இவர் பிறந்த ஊர் மதுரை யென்பதும், இவருடைய தந்தையார் கணித சாஸ்திரத்தில் மிக வல்லவர் என்பதும் அதனால் அவருக்குக் கணக்காயனார் எனனுங் காரணப்பெயர் வாய்ந்ததென்பதும், அவருடைய புதல்வரான நக்கீரனார் "இறையனார் அகப்பொருள்" என்னும் அகப்பொருள் நூலுக்கு உரைக் கண்டார் என்பதும் இறையனார் அகப்பொருளுக்குப் பாயிர உரை செய்த முசிறியாசிரியர் நீலகண்டனார் கூறுவது கொண்டு இனிதறியப் படுகின்றன.

இவர் இயற்றிய நூல்களுள், பத்துப்பாட்டுள் ஒன்றான "திருமுருகாற்றுப்படை" என்பது இக்காலத்தில் பிரபலமாய் எல்லோராலும் பயிலப் பட்டும் போற்றப்பட்டும் வருகின்றது. இவரால்

உரை காணப்பட்ட "இறையனார் அகப்பொருள்" சங்கத்தமிழ் நூலாராய்ச்சி விழைவுடைய பண்டிதர்கள் சிலரால் மாத்திரம் பயிலப்பட்டுப் பெரும்பாலரால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. "இறையனார் அகப்பொருள்" என்னும் பெயர், கூட கேள்விப்படாத தமிழ் வித்துவான்களும் இக்காலத்தில் உளர்! ஆ! நம் தமிழ் மக்கள் பண்டைத் தமிழ் நூல்களை ஆதரிக்கின்ற திறம் என்னே, என்னே! இவ்விரண்டு பெருநூல்களைத் தவிரத் தனிப்பாடல்களாகவும் நக்கீரனார் சில இயற்றி யிருக்கின்றார். அவற்றுள் தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரின் தெய்வத்திருக்குறள் நூலை மிகப் பாராட்டி,

"தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண் [குறளால்
ஆனஅற முதலா வந்நான்கும் - ஏனோர்க்கு
ஊழி னுரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று"

என்று பாடிய செய்யுளும் ஒன்றாகும். இது திருவள்ளுவ மாலையில் ஏழாவது பாடலாகச்சேர்க்கப் பட்டிருக்கின்றது. கடைச்சங்கத்தி லிருந்து தமிழாராய்ந்த புலவர்களுள் "கீரர்" என்னும் பெயருடையார் பலர் இருந்தார்களென்று திருவள்ளுவ மாலையினால் புலப்படுகின்றமையின், ஏனையோருக்கும் இவருக்கும் வித்தியாசம் தெரியும்பொருட்டு இவர் நக்கீரர் என்று அழைக்கப் பட்டனர் என்று தெரிகிறது. வேறு இருவர் "மோசி கீரனார்" "தேனீக்குடிக் கீரனார்" என்னும் பெயருடையார் ஆவர். மேல் குறிப்பிட்ட ஒரு செய்யுளைத் தவிரக் "கண்ணப்ப தேவர் திருமறம்" என்னும் அகவற்பா ஒன்றும் இவர் அருளிச்செய்திருக்கின்றார். அது சொல்லழகும் பொருளழகும் நிரம்ப வாய்ந்ததாய், கண்ணப்ப நாயனாருடைய பக்தியை விளக்குவதாய் மிளிர்கின்றது. இதனைத்தவிர "விநாயகர் அகவல்" ஒன்றும் இவர் இயற்றி யிருக்கின்றார் என்று சொல்லப்படுகின்றது.

"சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா"

என்று ஆரம்பித்து,

"விக்கின விநாயகா தேவே ஓம்
அரகர சண்முக பவனே ஓம்
சிவசிவ மகாதேவ சம்போ ஓம்"

என்று முடிகின்ற இந்த அகவற்பா நக்கீரனாரால் இயற்றப்பட்டதென்று சொல்லப்படுகின்றது. ஆனால் சிற்சில காரணங்களால் அந்த அகவல் ஆசிரியர் நக்கீரனாரால் இயற்றப்பட்ட தன்றென்றும், பிற்காலத்தார் யாரோ அப்பாவினை இயற்றி அவர் பெயரால் கட்டிவிட்டார்களென்றும் முடிவு செய்ய வேண்டியிருக்கின்றது. ஏனெனில், அந்த அகவலின் இடையில்,

"அருண கிரியா ரௌவை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை யளித்து
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்க்கை இடையூ றகற்றி"

என்று சில அடிகள் வருகின்றன.

இந்த அடிகளில் திருப்புகழ் பாடிப் பெரும் புகழ் பெற்ற அருணகிரி நாதரைப்பற்றிய பிரஸ்தாபம் வருகிறதென்பது இவ்வடிகளின் முதல் அடியை நோக்குவார்க்கு இனிது விளங்கும். அருணகிரிநாதர் பிற்காலத்துப் புலவர் என்பதும், அவருடைய காலம் இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முன்னராய்த்தான் இருத்தல் வேண்டுமென்பதும் தமிழ் நூற்சரித்திர ஆராய்ச்சிக்காரர்களின் கொள்கை. தவிர, திருப்புகழ் பாடல்போன்ற பாடல்கள் பண்டைக்காலப் புல[illegible] என்பதற்குப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, ஐங்குறுநூறு முதலிய சங்க இலக்கியங்களிலும், சிந்தாமணி மணிமேகலை முதலிய பஞ்ச காவியங்களிலும் அம்மாதிரியான பாடல்கள் காணப்படாமையே போதிய சான்றாகும். ஆனால் நக்கீரர் காலமோ மிகப் பழமையானது. மதுரைக் கடைச்சங்கம் கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டிற்குப் பிறகு இருந்ததில்லை என்பது பிரபல பண்டிதர்களின் ஆராய்ச்சியால் முடிவு கட்டப்பட்ட முடிவாதலாலும், ஆசிரியர் நக்கீரனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராதலாலும், அவ்வருடைய காலம் இன்றைக்குப் பதினெட்டு அல்லது பத்தொன்பது நூற்றாண்டுக்கு மேற்பட்டதாகும். ஆகவே இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த அருணகிரியாரைப்பற்றி ஆயிரத்தெண்ணூறு

வருடங்களுக்கு முன்னிருந்த நக்கீரனார் பிரஸ்தாபித்தார் என்று கூறுவது, சுத்த அசம்பாவிதமான கூற்றாகும். இதுவேயுமின்றி நக்கீரனார் பாடியதாகச் சொல்லப்படும் விநாயகர் அகவலையும், அவரால் இயற்றப்பட்ட ஏனைய பாக்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது அதற்கும் மற்றவைகளுக்கும் சொற்போக்கிலும் பாக்களின் அமைப்பிலும் வித்தியாசம் பெரிதும் காணப்படுகிறது. ஆகவே, "விநாயகர் அகவல்" நக்கீரனாரால் இயற்றப்பட்டதன்றென்றும், பிற்காலத்தார் யாரோ அதனை இயற்றி அவர் பெயரால் அதனை அமைத்தார்கள் என்றும் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும்.

இனி, இவருடைய பெரும் புலமையைப் பற்றியும், யாராயிருப்பினும் குற்றம் கண்டவிடத்துக் கண்டிக்கும் தைரியம் இவருக்குண்டென்பதைப் பற்றியும் சொல்லப்படும் ஒரு வரலாறு உண்டு. அதனைக் கூறுகின்றோம் :—

பாண்டிய மன்னனுடைய மனைவி ஒருநாள் ஸ்நானம் செய்துவிட்டு அரண்மனை மேன்மாடியில் தன் கூந்தலை உலர்த்திக்கொண்டு நின்றாள். அச்சமயம் பாண்டிய மன்னன் அங்கே சென்றான். ஒருபோதும் முகர்ந்தறியாத நறுமணம் அவ்விடத்தில் வீசிற்று. சுற்றுப்புறங்களில் வாசனை வீசக்கூடிய பதார்த்தங்கள் எவையும் இல்லாமையாலும், தன் மனைவியின் கூந்தலிலும் மலர்கள் சூட்டப்படாமையாலும் அவ்வாசனை எங்கிருந்து வந்ததென்பதை அறிந்துகொள்ள அவனால் முடியவில்லை. தன் மனைவியின் கூந்தல்வாசனைதானோவென்றும், அப்படியானால் அவ்வாசனை இயற்கையோ செயற்கையோவென்றும், ஒரு ஐயம் அவனுக்கு நிகழ்ந்தது. ஆனாலும், அதனை ஒருவருக்கும் தெரிவிக்காமல், தன் மனத்திலுள்ளதை அறிந்து வெளியிடும் புலவர்க்குப் பொன்னளிப்பதாய் உரைத்து ஒரு பொன்முடிப்பை அரண்மனை வாயிலிற் கட்டித் தொங்கவிட்டு, யார் தன் உள்ளக்கருத்தை உள்ளபடியே உரைக்கின்றார்களோ அவர்கள் அப்பொன் முடிப்பை அவிழ்த்துக்கொண்டு போகலாமென்று உத்தரவு செய்திருந்தான். மதுரை ஆலவாயில் அவிர் சடைக் கடவுளான ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானின் அர்ச்சகரான தருமி என்னும் பெயருடைய அந்தணோத்தமர் வறுமையால் வாடி வருந்தியபடியால், தாம் மன்னன் கருத்தை வெளியிட்டால் பொன்முடிப்பு தனக்குக் கிடைக்குமென்றும், கிடைக்கவே தமது வறுமை வறுமையாகும் என்றும் கருதி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானிடத்துத் தம் எண்ணத்தைத் தெரிவித்து வேண்டினார். வெண்ணீருஞ் செஞ்சடையும் கருங்கண்டமுமுடைய அண்ணலார், தருமியின் வேண்டுகோளுக்கு இரங்கிப் பின்வரும் திருப்பாசுரத்தை அருளிச்செய்து, அதனை மன்னனிடம் காண்பிவிக்கும்படி பணித்தார். அப்பாசுரம் வருமாறு:—

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியல் செறியையிற் றெரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே"

இத்திருமுகப் பாசுரத்தினை தருமி மன்னனிடம் கொண்டுபோய்க் காட்டினார். மன்னவன் சங்கப்புலவரிடம் அதனைக் காட்டும்படி ஆக்கியாபித்தான். தருமி என்னும் அந்தணர் அவ்விதமே கொண்டுபோய்க் காட்டலும், சங்கத்திலிருந்த மற்றப் புலவர்கள் எல்லோரும் அப்பாவில் குற்றமில்லை என்று கூறினார்கள். ஆனால் நக்கீரரோ செய்யுளில் சொற்குற்றம் இல்லாவிடினும் பொருட்குற்றம் இருக்கின்றது என்று வாதித்தார். கடவுள் அருளிய திருப்பாசுரத்தில் குற்றம் இருக்கிறதென்று அவர் கூறவே அந்தணனுக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. உடனே அவர் ஆலவாய் அமர்ந்த அவிர்சடைக் கடவுளிடம் சென்று முறையிட்டார். சிவபெருமான் ஒரு புலவரைப்போல் திருவுருக்கொண்டு சங்கத்திற்குச் சென்று "நீர் இப்பாவினில் யாது குற்றங் கண்டீர் ?" என்று நக்கீரரை வினவினார்.

"உம்முடைய செய்யுளில் சொற்குற்றம் இல்லை ; ஆனால் பொருட்குற்றம் உளது. அதாவது மன்னன் மனைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையது என்று அப்பாவில் கூறுகின்றீர். ஸ்திரீகளின் கூந்தலுக்குச் செயற்கை மணமே ஒழிய இயற்கை வாசனை இல்லை. இல்லாததொன்றை உண்டுபோல் கூறியதுதான் குற்றம்" என்று நக்கீரர் பதில் கூறினார்.

"அப்படியானல நீர் வழிபடும் ஞானப்பூங்கோதையாகிய உமாமகேச்வரியின் கூந்தலும் செயற்கை மணமுடையது தானோ ?" என்று புலவன் வேடம் பூண்ட சிவபிரான் கேட்டார்.

"ஆம் ; அதிற் சந்தேகமில்லை !" என்று மீண்டும் தமது கொள்கையையே வற்புறுத்தி உரைத்தார் ஆசிரியர் நக்கீரனார்.

இறைவன் தமது நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்து காட்டினார்.

அப்போதும் நக்கீரர் "முக்கண் படைத்தவனாலும் குற்றம் குற்றமே" என்று தைரியத்தோடு நக்கீரர் வாதித்தார்.

ஆனாலும் இறைவனுடைய நெற்றிக்கண்ணிலிருந்து எழுந்த அக்கினிச்சுவாலை நக்கீரனைப் பற்றி வருத்தவும் அவர் வெப்பம் தாங்கமுடியாமல் பொய்கையில் வீழ்ந்திட்டார்.

புலவர் வேடம் கொண்டு வந்தவர் சிவபெருமான் என்றும், "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் திருப்பாசுரம் அவரால் அருளிச்செய்யப்பட்டதென்றும், அதில் குற்றம் காணப்புகுந்தது தம்முடைய அறியாமையாலும் அகம்பாவத்தினாலும் நேர்ந்ததென்றும் நக்கீரர் பிறகு தெளிந்து, தம்முடைய குற்றத்தை மன்னிக்கும்படி இறைவனைப் பணிந்து "திருவெழுகூற்றிருக்கை"* என்பதை இயற்றினார்.

"சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்
வெ[illegible]கமழ் கொன்றையொடுவெண்ணிலவணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதஞ் சென்னியுட் பரவுவன் பணிந்தே"

என்று "திருவெழுகூற்றிருக்கை"யில் வருவது கொண்டும்,

"பத்தியு நீயே முத்தியு நீயே
சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயேதனற்
கூட லாலவாய்க் குழக னாவது
அறியா தருந்தமிழ் படித்தன னடியே
னீண்டிய சிறப்பி னிணையடிக் கீழ்நின்று
வேண்டு மதுவினி வேண்டுவன் விரைந்தே"

என்று பெருந்தேவபாணியில் வருவது கொண்டும் இவ்வுண்மை அறியப்படும்.

இதிலிருந்து நாம் அறியக்கூடியது என்னவென்றால், பண்டைக்காலத்தில் தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்த புலவர்களுள் நக்கீரர் அஞ்சா நெஞ்சும், உண்மையை வெளியிடப் பின்வாங்காத தைரியமும் படைத்திருந்தார் என்பது தான்.

இனி, இவரால் பாடப்பெற்ற திருமுருகாற்றுப்படையைப் பற்றியும், இவரால் உரைசெய்யப்பட்ட இறையனார் அகப்பொருளைப்பற்றியும் இரண்டொரு விஷயங்களைக் கூறிவிட்டு, இவ்விஷயத்தை முடித்து விடுகின்றோம்.

ஆசிரியர் நக்கீரனார் இத்திருமுருகாற்றுப் படை பாடியதற்குக் காரணம் ஒன்று சொல்லப்படுகிறது. அது பின்வருமாறு:—

நக்கீரர் *ஒருசமயம் இந்தியாவின் வடதிசை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது, இமயமலைச்சாரலில் ஒரு பெருங் காட்டினுள் செல்லும்படியான சந்தர்ப்பம் அவருக்கு நேர்ந்தது. அங்கே ஒரு தடாகத்தைக் கண்டு நீராடி சிவபூசை செய்துகொண்டிருக்கையில் தெய்வத்தன்மை பொருந்திய ஒரு ஆலமரத்திலிருந்து ஒரு பழுப்பு அவருக்கு முன்னிலையில் பாதி நீரிலும் மறுபாதி நீர்க்கரையிலுமாக விழுந்தது. நீரிலே விழுந்த பாதி மீன் வடிவமும், கரையிலே விழுந்த பாதி பறவை வடிவமும் அடைந்து இருபக்கத்திலும் இழுக்க, அதனை நக்கீரர் கவனித்தார். இதனால் அவருடைய சிவபூசைக்குப் பங்கம் விளைந்தது. உடனே ஒரு பெரிய பூதம் தோன்றி அவரைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு பெரிய மலைக்குகையில் அடைத்துவிட்டு நீராடச் சென்றது. இதற்கு முன்னும் இப்படியே சிவபூசையில் வழுவினார் 999 பேர்களை அப்பூதம் எடுத்துக்கொண்டு போய் அக்குகையினுள் அடைத்து வைத்திருந்தது. ஆனால் ஆயிரம் பேர் சேர்ந்த பின்பே அவர்களை உண்பது என்பது அப்பூதத்தின் கொள்கை யாதலால் இதுவரையில் 999 பேர்களுக்கும் அது நல்லுணவு முதலியன அளித்துக் காப்பாற்றி வந்தது. ஆனால் நக்கீரரோடு ஆயிரம் பேர் ஆனபடியால் இனி அது எல்லோரையும் தின்றுவிடும் என்னும் அச்சம் அக்குகையில் அடைபட்டிருந்தவர்களுக்கு உண்டாயிற்று. அவர்கள் எல்லோரும் நக்கீரரிடத்தில் இவ்விஷயத்தை முறையிடவே, அவர் முருகக்கடவுளை நினைந்து இத்திருமுருகாற்றுப் படையைப் பாடினார். அதன்மேல் முருகக்கடவுள் அப்பூதத்தின் கையினின்றும் இவ்வாயிரம்பேரையும் விடுவித்தார். இதுதான் திருமுருகாற்றுப் படையை நக்கீரர் பாடியதற்குக் காரணமாகக் கூறப்படும் வரலாறு. இத்திருமுருகாற்றுப் படையின் மாட்சியைப்பற்றி இங்கே கூறப்புகுந்தால் விஷயம் விரியுமாதலால், சமயம் நேரும்போது அதனைப் பற்றித் தனியாக எழுதுவாம்.

இனி, இறையனாரகப் பொருள் என்பது அன்பு, குணம், முதலிய எல்லாவற்றாலுஞ் சிறந்த ஓர் ஆண்மகனும் மடமகளும் தம்மிற் றாமே தனியாய்ச் சந்தித்து ஒன்று படும்போது அவர்களுடைய மனத்திலே நிகழும் பலவகையான நிகழ்ச்சியையும் படிப்படியாகக் கூறிக் கொண்டு போகும் ஒரு இலக்கண நூலாகும். அகத்தில் தோன்றும் நிகழ்ச்சிகளைக் கூறுவதால் 'அகப்பொருள்' என்றும், மதுரை சோமசுந்தரக் கடவுளின் அருளால் இந்நூல் அகப்பட்டமையால் 'இறையனார் அகப்பொருள்' என்றும் இது பெயர் பெறுவதாயிற்று.

"பன்னீ ராண்டு பாண்டிநன் னாடு
மழைவளங் கரப்ப மன்னுயிர் மடிந்தது"

என்று சீத்தலைச் சாத்தனார் ஐம்பெருங் காப்பியத்துள் ஒன்றான மணிமேகலையுள் குறிப்பிட்டபடி பாண்டிநாடு பன்னிரண்டு வருஷம் பஞ்சத்தால் பீடிக்கப் பட்டபோது, சங்கமிருந்து தமிழாராய்ந்த புலவரெல்லாம் தத்தம் நாடு நோக்கிச் சென்று அது கழிந்தபின் மீண்டும் மதுரையை வந்தடைந்தார்கள். அப்படி வந்தவர்களுள் ஒருவரேனும் பொருள் அதிகார ஆராய்ச்சி யுடையவர்களா யில்லாமற்போனது பாண்டிய மன்னனை உக்கிரப்பெருவழுதிக்கு மிகுந்த கவலையை உண்டாக்கிற்று. அவன் இறைவனை நோக்கிக் குறையிரந்து நின்றான். மதுரை சோமசுந்தரக் கடவுளின் பீடத்திற்குக்கீழ் செப்புத் தகட்டிலே பொறிக்கப்பட்ட அறுபது சூத்திரங்கள் காணப் பட்டன. அவைகளைக் கோவில் பூசகர் மன்னனிடம் காட்டலும் அவை பொருளதிகாரமா யிருப்பதை மன்னன் கண்டு மகிழ்ந்து புலவர்களை அதற்கு உரை செய்யும்படி ஆக்கியாபித்தான். அப்படியே அவர்கள் உரையியற்ற, நக்கீரருடைய உரையே மற்றவர்களுடைய உரையைவிடச் சிறந்ததா யிருந்தது. இதனைப்பற்றி இன்னுங் கூறப்புகின் விஷயம் வளர்ந்துபோம்.

ஆதலால் ஆசிரியர் நக்கீரரைப்பற்றி இதுகாறுங் கூறிய இரண்டொரு குறிப்புகளுடன் இந்த விஷயத்தை முடிக்கின்றோம்.

நாகை - ஸி. கோபால கிருஷ்ணன்.

ஆத்திசூடி விளக்கம்

MORAL SAYINGS EXPLAINED

18. இடம்பட வீடிடேல்

வேண்டிய அளவுக்கு மிஞ்சி அதிக இடம் இருக்கும்படி நீ வீட்டைக் கட்டாதே, என்பது இதன் பொருள். இக்கருத்தையே 'சிறுகக் கட்டிப் பெருக வாழு' என்ற பழமொழி விவரித்துக் கூறும். அதாவது வீட்டை அவசியமான விடங்களிருக்கும்படி கட்டிப் பின்னர் அது போதாது என்று தோன்றும்படியான சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்துவா என்பதாகும். இவ்வாறின்றிப் பெரிதாக வீட்டைக் கட்டிவிட்டு அதை வைத்து ஆளக்கூடாத நிலையை அடைந்து தவிக்கலாகாது என்பது இதன் கருத்து.

ஸாதாரணமாக ஒரு வீட்டைக் கட்டினால் அதைப் பெருக்கி மெழுகி இரவில் நன்றாக விளக்கிட்டு வைத்துக்கொண்டிருப்பதே நலம். இவ்வாறு செய்யமுடியாத நிலையில் ஒருவனிருக்க அவன் இத்தகைய பெரிய வீட்டைக்கட்டலாகாது. அவ்வாறு கட்டும்படி நேர்ந்து விட்டால் தகுந்த விலைக்கு அதை விற்றுவிட்டு சிறுகக் கட்ட முயலவேண்டும். அவ்வாறு செய்யாதிருந்துவிட்டால் பிறருக்குக் குடிக்கூலிக்கு விட்டு வியாபாரம் செய்யத் தொடங்கிவிட வேண்டும். வருபவன் வீட்டின்மேல் அக்கரையாக விருப்பான் என்பது என்ன ? மேலும் அவன் மாதவாடகை சரியாகக்கொடுத்து வருவான் என்பது என்ன நிச்சயம் ? வீட்டின் விலை வரவர குன்றயாது என்பது என்ன நிச்சயம் ? ஆகவே இவைகள் எல்லாம் சேர்ந்து நம்மை வீண் கவலைக்கு ஆளாக்கிவிடும். வியவஹாரம் முற்றினால் அதிலேயே மனம் ஊறிக்கொண்டிருக்குமே ஒழிய வாழ்க்கை நோக்கத்தைக் கவனிக்கக் காலமில்லாமலே போய்விடும்.

நல்ல உந்நத பதவியில் இருப்பவர்கள் விஸ்தாரமாக வீடு கட்டினால் என்ன குற்றம் என்ற சங்கைபிறக்கும். அவர்களுக்குக்கூட இந்நீதி வாக்கியம் பொருந்துமோ? இவர்களுக்கும் ஒருவாறு பொருந்தும். இவர்கள் பதவிக்கு ஏற்ப பெரிய வீடு வேண்டியது அவசியமாக விருக்கலாம். அதற்கு எவ்வளவு பெரிய வீடுவேண்டுமோ அவ்வளவுதான் கட்டவேண்டும். மேலும் கூடிய வரையில் குறைந்த பணச்செலவில், எளிதில்

தகுந்தபடி விலைப்போகும்படி வீட்டைக் கட்டிவிட வேண்டும். இப்படியின்றி நமக்குத்தான் பதவிவந்துவிட்டது பணம் வந்துவிட்டது என்று பெரும் பொருள் செலவிட்டு மனம் போனபடியே பெரிய வீட்டைக் கட்டி ஒரு கனவான் பெருஞ் செலவுக்காரனாக இருந்துவிட்டால், அவன் தலை சாய்ந்ததும் அவன் பிள்ளைகள் பாடு கஷ்டம்தான். கனவான் பிள்ளை நற்குணங்கள் வாய்ந்தவனாக விருந்தாலும் இருக்கலாம், ஆனால் அவனைப்போலக் கனவானாக இருக்கவேண்டியது அவசியமில்லை. பெரிய வீட்டில் இருந்து நிர்வஹிக்க அவனால் முடியாமல் போகும். அவன் வேறு சிறு வீடுபார்க்க வேண்டி வரும். முன்னர் ஸாதாரண ஜனங்களுக்கு வரும் என்று எடுத்துக்காட்டிய மனச்சஞ்சலம் எல்லாம் வந்து சேர்ந்து இவனை வீண்கவலைக்கு உள்ளாக்கும். ஆகவே கனவான்களும் பெரிய வீடுகட்டுவதில் தகுந்த ஆலோசனை செய்து கட்டி வேறு இடத்தில் சிறுவீடு ஒன்றும் கட்டி தயாராக வைத்திருக்கவேண்டும். ஒரு பெரிய தோட்டத்தில் இவர்கள் வீடுகட்டும்படி நேர்ந்தால் கூடிய வரையில் சிறிய வீடாகவே தகுந்தபடி கட்டி மற்றைய பாகங்களில் பயிரிடுதல் முதலிவைகளுக்கு இடங்கொடுத்து விடவேண்டும். அவ்வாறின்றி இடங்கொண்டமட்டும் வீடு கட்டிவிட்டால் அவனுக்கும் அவன் ஸந்ததிகளுக்கும் வீண் கஷ்டம் வியவஹாராதிகள் உண்டாகிப் பெருந் துக்கத்திற்குக் காரணமாகும். ஆகவே கனவான்களும் கண்டபடி வீட்டைக் கட்டிவிடக்கூடாது.

வீடு கட்டுவது மிகக் கஷ்டமான தொழில். அதில் ஒரு உத்தேசத்துடன் தொடங்கினால் முடியும் முன் எண்ணிய தொகைக்குமேல் அதிகத்தொகை இழுத்துவிடும் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அதனால்தான் 'வீட்டைக்கட்டிப்பார், கல்யாணத்தை செய்துபார்' என்ற பழமொழி ஒன்று நம்முள் வழங்கி வருகிறது. ஒருவனுக்குப் பொருள் வந்துவிட்டால் அதை வீடுகட்டும் விதத்தில்தான் அவன் காட்டுவது வழக்கம். ஒரு கோடி ரூபாய்க்கு ஒரு பொன் கலசம் வீட்டில் வைப்பது என்று பட்டணத்துப் பிள்ளை காலம் முதல் வழக்கமாக விருக்கிறது. வீட்டின் ஒழுங்கைக்கண்டு அதன் சொந்தக்காரன் திரவியம் குணம் முதலியவைகளை ஒருவாறு அளவிடலாம். ஆகவே பொருளைச் செலவழித்து பிறர் மெச்ச ஸுகமனுபவிக்கும் விஷயங்களில் வீடுகட்டி வாழ்வது ஒரு முக்கியமாக விதம். ஆதலால் இந்த விஷயத்தை ஒரு நீதிவாக்கியத்துள் ஔவை சேர்த்தாள்.

இந்நீதிவாக்கியத்துள் இதுவரையில்கூறியதை விட ஆழ்ந்த கருத்து ஒன்று அடங்கியிருக்கிறது. பொருள் செலவிட்டு ஸுகிப்பதில் வீடு கட்டி வாழ்வது ஒன்றாதலால் வீடு என்ற பதம் இங்கு பொருளால் வரக்கூடிய உலக இன்பங்களுக்கு உபலக்ஷணமாக வுள்ளது. ஆகவே இந்நீதிவாக்கியத்திற்கு, வீண்சஞ்சலத்திற்கு இடனாகும்படி பொருளைச் செலவிட்டு உலக இன்பங்களில் அழுந்தாதே. பெரும் வீடு கட்டல், நாடகம் பார்த்தல், கூத்தடித்தல், பெரும்விருந்திடல் முதலிய உலகஸுகம், கீர்த்தி முதலிய நிலையாதவைகளுக்கிடனாக இருப்பவைகளில், உனக்குக் கிடைத்த பணத்தை அதிகமாகச் செலவிடாதே என்பது இதில் புதைந்த பொருள். பின்னைப் பொருளை எவ்வாறு செலவிடவேண்டும்? பிறர் துயரம் நீக்கல், பொதுநன்மைக்குழைத்தல், தானம், தர்மம், கடவுள் வழிபாடு முதலிய மாறாப் பலனைக் கொடுக்கக்கூடிய வழிகளில்பணத்தைப்பெரும்பாலும் செலவிட்டு, வாழ்க்கை ஸுகத்திற்கு அவசியமாக வேண்டிய வீடு முதலியவைகளில் சிறுபான்மை சுருக்கிச் செலவிடவேண்டும். இதுதான் அறிவுடையோர் நெறி. இக்கருத்தையே,

நித்தியமாம் வீட்டுநெறியிலிடம் பாடல்லாற்
பொய்த்த வின்ப வீட்டில் பொருளடையா—தத்தம்
நடையறியும் புன்னைவன நாதனே பூமி
யிடையிடம் படவீடிடேல்.

என்ற ஆத்திசூடி வெண்பா அடக்கியுள்ளது.

அனாவசியமாகப் புதிய ஸபை ஒன்று கட்டி துர்யோதனாதியர் பாண்டவர்களை வந்து பார்த்துப்போகும்படி அழைத்தனர். அங்கு வந்ததும் மாயச்சூதைத் தொடங்கி வீண் விரோதம் உண்டாக்கி முடிவில் மஹாபாரத யுத்தம் விளையும்படி செய்து எல்லோரும் மாண்டனர். பொருளை உலக இன்பங்களை ஸம்பாதிப்பதிலேயே செலவிட்டு ஓயா வியவஹாரம் கவலை முதலியவைகளுக்கு ஆளாகித் தத்தளிப்பவர் இக்காலத்தில் கோடானுகோடிப் பெயர்கள் உண்டு. இவைகள் எல்லாம் இந்நீதி வாக்கியப்படி நடக்காததனால் வரும் கேடு இன்னது என்பதை நன்கு விளக்குகின்றன.

9. இணக்கமறிந்திணங்கு

சிநேஹத்திற்குரிய நற்குண நற்செய்கைகள் ஒருவனிடம் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பின்னர் அவனோடு சிநேஹம் செய் என்பது இதன் பொருள். இதன் பொருள் ஒருவாறு 'சேரிடமறிந்துசேர்' என்ற ஆத்திசூடி வாக்கியத்தில் அடங்கி இருக்கிறது. முன்னதில் சிநேஹிதனது குணத்தையும், பின்னதில் அவன் நிலை குணம் முதலிய அவனோடு ஸம்பந்தப்பட்டவைகளை எல்லாவற்றையும் ஆராயவேண்டும் என்பதாயிற்று. இவ்வாறிணங்காவிடில் வருங்கேடு 'நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும்' என்ற கொன்றைவேந்தன் வாக்கியத்தில் அமைந்து கிடக்கிறது.

இதனால் ஸத்ஸங்கமே செய்யவேண்டும் என்பதாயிற்று. [இந்த விடத்தில் விவேக போதினி 3-ம் தொகுதி பக்கம் 105-இல் இருக்கும் ஸத்ஸங்க விஷயமான குறிப்பை வாசிக்கவும்.]

நல்லோரிணக்க மல்லது வேறுவித இணக்கம் ஏற்பட்டால் பெருங்கேடு உண்டாகும். நல்லோரிணக்கம் இல்லாமல் கெட்டவர்களோடு சேர்ந்திருந்த நல்லவர்கள் பட்ட பாடுகளை ராமாயண மஹாபாரதத்தில் காணலாம். அவர்கள் பெயர்களை கூறிய உடன் எல்லாம் நன்கு விளங்கிவிடும். அவையாவன, விபீஷணர், கர்ணன், பீஷ்மர், விதுரர் என்பவைகளே. இதில் விதுரர் தவிர மற்றவர்கள் மிக வருத்தத்திற்கும் பழிச்சொற்களுக்கும் ஆளாயினர். விபீஷணர் எவ்வளவு நல்லவராயினும் ராவணனோடு சேர்ந்திருந்துவிட்டு ராமர்பக்கம் வந்து ராவணன் ரஹஸ்யங்களை வெளியிட்டு அவனுக்குக் கேடு விளைத்தார். இதைவிட அவர் உயிரை மாய்த்துக் கொண்டிருந்தால் மேன்மையாக விருக்கும். நம்பிக்கை துரோகிக்கு இக்காலத்தில் விபீஷணன் என்ற பெயர் வந்துவிட்டது. தகுந்த ஸமயத்தில் தீயோரிணக்கம் விட்டு மேல் எதிரிக்கு அனுகூலம் செய்ததனால்தான் விபீஷணருக்கு இப்பழி வந்தது. கர்ணன் விபீஷணரைப்பார்க்கினும் மேன்மையாக நடந்துகொண்டபோதிலும் தீயோரிணக்கத்தால் கொடியவனாகிவிட்டான். துஷ்ட சதுஷ்டயர் (துர்யோதனன், துச்சாஸன், சகுனி, கர்ணன்) என்று மஹாபாரதத்தில் கூறப்படும் கூட்டத்தாருள் சேர்ந்தவனாகிவிட்டான் கர்ணன். அவன் கொடை உண்டவீட்டிற்கு இரண்டகமின்மை ஆகிய நற்குணங்கள் யாவும் அவன் கொடுங்குணங்களுக்கு முன் ஒளி யிழந்துவிடுகின்றன. பீஷ்மர் இவர்களை எல்லாம்விட மேன்மையாக நடந்தவர். விபீஷணரைப்போல துரோகியாகாமலும், கர்ணனைப்போலக் கெட்டுவிடாமலும், பாண்டவர் இணக்கம் மாறாமலும் இருந்தார். ஆனால் துர்யோதனனிடமே வெகுகாலம் இணங்கியிருந்துவிட்டபடியால் தர்ம ஸங்கட ஸமயங்களில் புத்திக்கலக்கமும், மனம் ஓரிடமிருக்க தேஹத்தை எதிரிகளுக்கு உபயோகப்படும்படியான கஷ்ட நிலைக்கு அவர் வரவேண்டியதாயிற்று. விதுரர் நடத்தையே இக்கூட்டத்தார் நடத்தையுள் மிகச் சிறந்தது. முற்கூறிய மூவருக்கும் உள்ள குற்றம் குறை ஒன்றும் இவர் நடத்தையில் இல்லை. கொடியவர் மத்தியில் இருக்கவேண்டி யிருந்தபோதிலும் இவருக்கு நல்லோரிணக்கம் வெளிப்படையாக விருந்தபடியால் கொடியவர்கள் தம்முள் ஒருவராக இவரை மதிக்கவில்லை. வாழ்நாள் முழுவதும் அவர்களை விட்டு ஒதுங்கியே இருந்து முடிவில் பிரிந்துபோய், சோற்றுக்கடனை உத்தேசித்து பாண்டவர்கள் பக்கமும் சேராமலிருந்துவிட்டார். ஆகவே நல்லோர்களுக்குக் கெட்டவர் இணக்கம் ஏற்பட்டுவிட்டால் என்ன பாடுபட வேண்டியதாகிறது. நேர்மையாக நடக்க முடியாமல் போய்விடும். கூடியவரை இருபுறத்தையும் ஸரிக்கட்டிக்கொண்டுதான் போகவேண்டி வரும். இதில் பெரும் தர்ம ஸங்கடங்கள் வந்து மனதைச் சின்னபின்னப் படுத்திவிடும். இதனால்தான் 'அற்ப ஸஹவாஸம் ப்ராண ஸங்கடம்' என்று பெரியோர் கூறுவர்.

நல்லோரிணக்கத்திலோ இம்மாதிரியான கஷ்டங்கள் ஒன்றுமில்லை. அவர்களிடம் ஸத்யமும் நேர்மையும் குடிகொண்டிருப்பதால் தர்மஸங்கட நிலைகள் வரமாட்டா. கெட்ட குணத்தில் ஒருவித வெறுப்பு இருப்பதால் நாம் வழிதப்பும்பொழுது நம்மைக் கூசாது கண்டித்து நேர்வழி திருப்புவர். மஹாபாரதத்தில் பாண்டவர்களுடன் சிநேஹம் செய்தவர்கள் ஸுகமாக விருந்ததை நோக்கினால் இந்நிலை நன்கு விளங்கும். நல்லோர் தொழிலும் அவர் வாக்கும் சேர்ந்து நம்மைச் சீர்திருத்தி மேன்மைப்படுத்தும். நல்லோரிடம் சிநேஹித்து ஆபத்து நீங்கி ஸுகித்ததற்கும் கெட்டவர்களோடு சேர்ந்து கஷ்டப்பட்டதற்கும் வேண்டிய கதைகள் பஞ்சதந்திரத்தில் உள. அவைகளுள்

இராஜாங்க முறை

பிரதமக் கொள்கைகள்

MORALS AND CIVICS : ELEMENTARY PRINCIPLES

போர்த்துக்கேசிய ஸகோதரர்கள்

PORTUGUESE BROTHERS

பதினாறாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துகேசிய கப்பல்கள் இந்தியாவில் உள்ள செழிப்பான ஸ்தானமாகிய கோவா என்ற ஊருக்கு வரத்தலைப்பட்டன. அவ்விதம் கோவாவுக்குச் சென்ற கப்பல்களுள் ஒன்றில் ஏறக்குறைய பன்னீராயிரம் ஜனங்கள் இருந்தார்கள். அவர்கள் கப்பல் யாத்திரை செய்ய ஆரம்பித்த காலத்தில் அவர்களுக்கு இடையூறு ஒன்றுமில்லை. ஆனால் ஆப்பிரிக்கா கண்டத்தின் தெற்கேயுள்ள முனையாகிய "நன்னம்பிக்கை முனை" என்றுவழங்கும்(Cape of Good Hope) முனையைக் கடந்து வடகிழக்காக இந்தியாவை நோக்கிச் செல்லும்போது அவர்களுடைய கப்பல் ஓர் பாறையில் மோதி உடைந்தது. தண்ணீர் கப்பலுக்குள் வர ஆரம்பித்தது. வெகு சீக்கிரத்தில் கப்பல் அமிழ்ந்து விடுமென்றே அனைவரும் யோசித்தார்கள். அச்சமயத்தில் பெரிய கப்பலின் ஓரத்தில் கட்டி தொங்கவிட்டிருக்கும் சிறு படகு ஒன்றைக் கப்பலோட்டும் தலைவன் ஸமுத்திரத்தில் எறிந்து அதில் கொஞ்சம் உணவு பதார்த்தங்களையும் போட்டு தானும் தன்னோடு இன்னும் பத்தொன்பது பேரும் அதில் இறங்கி நின்று வேறு யாராவது அதில் வந்து அதனையும் அமிழச் செய்வார்களென்று எண்ணி தங்கள் கையில் கத்தியை எடுத்துக் கொண்டொருவரும் அந்தப்படகுக்குள் வராதபடி தடுத்தார்கள். இவ்விதமாக அவர்கள் இந்திய மஹா ஸமுத்திரத்தில் பிரயாணம் செல்லும் போது அவர்களுக்கு நல்ல தண்ணீர்கூட கிடையாது. சில நாளைக்கெல்லாம் அந்தக் கப்பல் மூழ்கிப் போயிற்று.

ஆனால் சிறு படகிற் சென்றவர்களோ நான்கு நாள் இப்படியும் அப்படியும் சென்றார்கள். கப்பல் தலைவன் நோயால் பீடிக்கப்பட்டு இறந்தான். தலைவன் இறந்ததால், அந்தப் படகில் குழப்பம் உண்டாயிற்று. ஒவ்வொருவனும் மற்றவரை அதிகாரம் செய்ய தலைப்பட்டான். எல்லாரும் அதிகாரம் செலுத்த முயன்றார்களே ஒழிய ஒருவராவது பின் சொல்வதைக்கேட்டு கீழ்ப்படிந்து நடக்கவில்லை. கடைசியில் அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவனைத் தலைவனாக நியமித்து அவன் சொல்லியபடியே கேட்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இவ்விதமாகத் தலைவனாக நியமிக்கப்பெற்றவன் ஓர் உபாயம் செய்தான். படகில் இருந்த ஆகாரம் சில நாளைக்குத்தான் காணுமென்று அவன் படகிலுள்ளவர்கள் பெயரை எழுதிய சீட்டுகளைக் குலுக்கி நான்காவதாக வரும் ஒவ்வொருவனையும் ஸமுத்திரத்தில் தள்ளிவிட வேண்டுமென்று சொன்னான். இப்போது படகில் இருந்தவர்கள் மொத்தம் பத்தொன்பது பேர்தான். அவர்களுள் ஒருவன் ஸந்யாசி. இன்னொருவன் தச்சன். அந்தியகாலத்தில் நன்மார்க்க வார்த்தைகளைச் சொல்லித் தேற்றுவதற்கு ஸந்யாசி வேண்டியிருந்தது. படகை அப்போதைக்கப்போது பழுது பார்த்து வேலைசெய்ய தச்சன் அவசியமாக வேண்டியவனாதலால், அவ்விருவரையும் நீக்கிவிட்டார்கள். புதிதாக நியமனமான படகுத்தலைவன் வயது முதிர்ந்தவனாகவும் உபயோக முள்ளவனாகவும் இருந்தமையால் அவனையும் நீக்கிவிட்டு மற்ற பதினாறு மனிதர்களுள் நான்கு பேரை ஸமுத்திரத்தில் தள்ளிவிடுவதாக யோசித்தார்கள்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களுள் முதல் மூன்றுபேரும் தங்கள் மதாசாரத்துக்குத் தக்கவாறு சில சடங்குகளை முடித்துவிட்டு ஸமுத்திரத்தில் குதித்தார்கள். ஆனால் நான்காவதாகிய போர்த்துகேசியனுடைய தம்பியும் அந்த படகிலேயே இருந்தான். மூத்தவனைப் படகிலுள்ளவர்கள் ஸமுத்திரத்தில் தள்ள எத்தனித்த போது, இளையவன் கண்ணில் நீர் ஆறாய்ப் பெருக தமையனைத் தழுவி அவனுக்காகத் தான் உயிர் விடுவதாகக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். தமையனுக்கு மனைவியும் மக்களு மிருந்தன. அன்றியும் குடும்பத்தில் மூன்று ஸகோதரிகள் அவனால் போஷிக்கப்பெற்று வந்தார்கள். இளையவனுக்கு விவாஹமே ஆகவில்லை, ஆதலால் இளையோன் தான் இறப்பதே தகுதியென்றும் அதனால் வேறொருவருக்கும் கஷ்டமில்லையென்றும் சொல்லி இறக்கத் துணிந்தான். ஆனால் மூத்தவனோ தன்தம்பியின் அன்புக்கு மனமுருகி தனக்காக அவன் இறக்கக்கூடாதென்று வாதாடினான். இளையவன் பிடிவாதமாகத் தானே இறப்பதாகச் சொல்லி மூத்தவன் பாதத்தில் வீழ்ந்து

அவன் காலைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டான். ஆதலால் அவர்களிருவரையும் விலக்க முடியவில்லை. அவர்கள் இவ்வாறு சிறிது நேரம் மன்ருடினார்கள். மூத்தவன், தம்பியை நோக்கி "நீயே என் ஸொத்து முழுமையும் அடைந்து என் ஸகோதரிகளையும், மனைவி, மக்களையும் காப்பாற்று" என்று வற்புறுத்தினன். ஆனால் அவன் என்ன சொல்லியும் இளையவன் கேட்கவில்லை. கடைசியில் இளையவன் பிடிவாதம் செய்து தானே இறப்பதாகச் சொன்னமையால் படகிலுள்ளவர்கள் அவனை சமுத்திரத்தில் தள்ளிவிட்டார்கள்.

அவனுக்கு நன்ருக நீந்தத் தெரியும் ஆதலால். அவன் சிக்கிரத்தில் நீந்தி வந்து படகின் ஓரத்தை ஒரு கையாற் பிடித்தான். அப்போது ஒரு மாலுமி அந்தக் கையை ஓர் கத்தியால் வெட்டினன்: பிறகு ஒருவாறு ஸமாளித்துக்கொண்டு அவன் மற்றொரு கையாற் படகைப் பிடித்தான். அந்தக் கையையும் மாலுமி கத்தியால் வெட்டி வீழ்த்தினன். இரத்தம் பெருகிக்கொண்டிருந்த இரண்டு முட்டிக்கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு அவன் மறுபடியும் காலால் உதைத்து நீந்திக்கொண்டு தண்ணீரில் முழ்கிவிடாமல் ஸமாளித்துக்கொண்டு வந்தான். அவன் இவ்வாறு பரிதாபமான நிலையி லிருந்ததையும், அவன் ஸகோதரனிடத்தில் வைத்திருந்த வாஞ்சையையுங் கண்டு, படகி லிருந்தவர்கள் பச்சாத்தாபப்பட்டு "அவன் ஒருவன்தானே, அவனைக் காப்பாற்றிவிடுவோம்" என்று ஒரே மனதோடு கூவினார்கள். பிறகுஅவனைத் தண்ணீரிலிருந்து படகின் மேலேற்றிக்கொண்டு அவன் கைப்புண்ணுக்கு அந்த ஸமயத்தில் எவ்வளவு சிகிச்சை செய்யக்கூடுமோ அவ்வளவு சிகிச்சை செய்தார்கள். அன்றிரவு முழுமையும் படகைச் செலுத்திக்கொண்டே போய், மறுநாள் உதயத்தில் ஓர் நிலத்தைக் கண்டார்கள். அது ஆபிரிக்கா தேசத்தில் போர்த்துகேசியர் குடியேறிய வேறொரு நாட்டுக்குச் சமீபத்தில் உள்ள மோஜாம்பீக் மலையெனத் தெரிந்துகொண்டார்கள். அங்கேயே அவர்கள் சில தினங்கள் தங்கியிருந்து லிஸ்பன் நகரத்திலிருந்து வந்ததொரு கப்பலில்ஏறி கோவா என்ற ஊருக்கு க்ஷேமமாய் வந்து சேர்ந்தார்கள்.

அவ்வூரில் லின்ஸ்காடன் என்ற புலவர் ஒருவர், இருகையும் இழந்த அந்தப் போர்த்துகேசியனையும் அவன் தமையனையும் தான் நேராகவே கண்டதாகவும், அன்றிரவே அவர்களோடு சேர்ந்து உண்டதாகவும், அந்த ஸகோதரர் மூலமாகவும், மற்ற மாலுமிகள் மூலமாகவும், மேற்கூறியபடி நடந்த விருத்தாந்தங்களைத் தான் நேரே கேட்டதாகவும் எழுதி யிருக்கிறார்.

கிழவனும்,'ஒருகட்டு கழிகளும்.

ஒரு கிழவனுக்கு அநேக குழந்தைகள் இருந்தார்கள். அவர்கள் ஒருவரோ டொருவர் அடிக்கடி சண்டை போட்டுக்கொண் டிருந்தார்கள். கிழவன் அவர்களைச் சமாதானம் செய்ய எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. ஆதலால் அவன் ஒரு யுக்தி செய்தான். தன் பிள்ளைகளைத் தன் முன்னே அழைத்து ஒரு கட்டு கழிகளைக் கொண்டுவரச் சொன்னன். பிறகு ஒவ்வொருவரையும் தனித்தனியே அழைத்து அந்தக் கட்டைப்பிரயாசைப்பட்டாகிலும் உடைக்க முடியுமா என்று பார்க்கச் சொன்னன். எவ்வளவு முயன்றும் அவர்களால் அது முடியவில்லை.

பிறகு அந்தக்கட்டு கழிகளையும் அவிழ்த்து ஒவ்வொரு பிள்ளையிடத்திலும் ஒவ்வொரு கழியைக் கொடுத்து அதை உடைக்கச் சொன்னன். அவர்கள் வெகு சுலபமாய் உடைத்தார்கள். தகப்பன் அந்த மூடப்பிள்ளைகளைப் பார்த்து "சேர்ந்து வாழ்தல் வலிமை என்பதை நீங்கள் கவனியுங்கள். சேர்ந்திருக்கும்பொழுது கழிகளை உடைக்க முடியவில்லை. ஆனல் அவற்றைத் தனித்தனியே பிறித்தபோது உடைத்துவிட்டீர்கள். இதைக்கொண்டு நீங்கள் சண்டை போடக்கூடாதென்பதும், ஒருவரோடொருவர், சிநேகமாக இருக்கவேண்டுமென்பதும் அப்படி யிருந்தால், உங்களுக்கு ஒருவராலும் தீங்கு ஒன்றும் செய்யமுடியாது என்பதையும் கவனியுங்கள்" என்ருன். பிள்ளைகள் தமது தகப்பன் சொன்ன சிறந்த புத்தியை மறவாமலிருந்தார்கள்.

குடும்பத்தில் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகள்:—

சகோதரர்களும், சகோதரிகளும் தம்மாலியன்றவரையில் குடும்பத்தின் க்ஷேமத்தை உத்தேசித்தே ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டும். தகப்பன் தாய், செய்யவேண்டி இருக்கிற கடினமான தொழில்களில் சகோதரர்கள் அவர்களுக்கு உதவிசெய்ய சகோதரிகள் குடும்ப விஷயங்களைக் கவனித்து பிறகு தாம் இல்லறதருமத்தை நடத்த சக்தியுள்ளவர்களாகிறார்கள்.

சில துக்க சமயங்களில், குடும்பத்தில் மூத்த பிள்ளையும், மூத்த பெண்ணும் தமக்கென்று ஏற்பட்ட சில முக்கிய காரியங்களைச் செய்ய நேரும். நமது வாழ்நாளில் நல்ல விஷயங்களும் கெட்ட விஷயங்களும் நடக்கும். ஆனல் கெட்டவை நடக்கும்போது நாம் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை நாம் நன்ருக அறிந்திருக்கவேண்டும். ஏனென்றல், அப்போது செய்யும் காரியங்கள்தான் முக்கிய கடமைகளாகும். தகப்பன் இறந்துபோனலும் அல்லது மிகக் காயலாகவாக இருந்தாலும், மூத்த குமாரன் தன் தாயார் சொற்படிகேட்டுக் குடும்பபாரத்தை வகிக்கவேண்டும். அம்மாதிரியே தாயாருக்கு ஓர் ஆபத்து நேர்ந்தால், மூத்த குமாரி குடும்ப விஷயங்களைக் கவனிக்கவேண்டும். எந்தக் குடும்பத்திலும் அதிலுள்ளஜனங்கள் தமக்குள் விசுவாசமாக இருந்தாலன்றிக் குடும்பம் சந்தோஷமாக இராது. இதை நாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இனி எத்தனை முறை சொன்னலும் சொல்லலாம். ஏனெனில்,• இவ்விஷயம் மிகவும் முக்கியமானது. சில வீடுகளில் தமயனும் தம்பியும் சொத்துக்காக ஆசைப்பட்டு அக்கிரமமாகச் சண்டை செய்கிறார்கள். அதாவது அவர்களுக்குள், அற்ப குணமும் சுயநலமும், பொறாமையும், அச்சமயம் குடிகொள்ளுகிறது. குழந்தைகளே! உங்களுக்கு இப்படிப்பட்ட விஷயங்கள் இதுவரையில் தெரியாமலிருந்தாலும், இப்போது அவற்றைப்பற்றி யோசித்துப் பாருங்கள். கொஞ்சம் ரூபாய் அதிகமாய் இருப்பதால் உண்டாகும் ஆனந்தம் மேலா, அல்லது, சிறு பிராயம் முதல் நீ நேசித்து வந்த சகோதரன் சகோதரி மனதைச் சந்தோஷமாக வைப்பதில் உண்டாகும் ஆனந்தம் மேலா ?

இப்பொழுதே இதைப்பற்றி யோசித்து இன்னும் நீங்கள் வாசிக்கப் போகும் புஸ்தகங்களில் சொல்லப்படும் அரிய விஷயங்களையும் மனதிற்கொண்டு, தக்க குணசிரேஷ்டர்கள் எவ்வெக்காலங்களில் எவ்விதம் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து, அவர்கள் போன வழியே உறுதியெனநினைத்து ஒவ்வொருகாரியத்தையும் செய்யுங்கள். முடிவாக இப்போது நீங்கள் எப்படி நன்றியுள்ள குழந்தைகளாக இருக்கிறீர்களோ, அப்படியே ஆயுள் உள்ள அளவும், பிரிய சகோதரர்களாக உமது வாழ்நாட்களைச் செலுத்துங்கள்.

C. S. சுந்தரம் அய்யர் பி.ஏ., எல்.டி.

சக்திதத்வ போதினி

PHYSICS PRIMER

ஒளியின் போக்குமாற்றம்

Refraction of Light

ஒளி ஊடுருவிச் செல்லா ? இருண்ட வஸ்துகளில் விழுங்கால் இவ்வாறு பிரதிபலித்து அற்புதத் தோற்றங்களை உண்டாக்குகிறது என்பதை முன்னரே விஸ்தரித்தாகிவிட்டது. இனி ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய வஸ்துக்களுள் எவ்வாறு செல்லும் என்பதைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.



பரிசோதனைக்கு எளிதில் ஸஹாயமாயும், ஸாதாரணமாக அகப்படக்கூடியதாயும் உள்ள ஒளியை ஊடுருவவிடும் வஸ்துக்கள், கண்ணாடியும் தண்ணீருமே. ஒரு பாத்திரத்தை எடுத்து அடியில் கல் முதலியன வைத்துச் சரித்து நிறுத்தி ஸூர்யன் ஒளி ஸரியாக எதிர் அடிப் பாகத்தில் விழ, அடித்தட்டு முழுமையும் நிழலுள் மறையும்படி வைத்துவிடுவோம். பின்னர்உள்ளே தண்ணீரை விடுவோம். உடனே நிழலுள் மறைந்திருந்த அடிபாகத்தில் கொஞ்சதூரம் ஒளி

சென்று தாக்கும். இதனாலே பாத்திர நுனியில் தட்டி நேராகப் பாத்திரத்தின் எதிர் அடிபக்கத்திற்குப் போகும் ஒளி தண்ணீர் விட்டதும் **போக்குமாறி** அடிபாகத்தில் கொஞ்சதூரம்வரையில் பிரகாசத்துள்ளாக்கியது என்பது விளங்கும்.ஒளிபடும் பாத்திர நுனியிலிருந்து தண்ணீர் மட்டத்திற்கு ஒரு நேர்கோணக்கோடு இழுத்து. அதைத் தண்ணீருள் நீட்டிவிட்டால் ; ஒளி, தண்ணீருள் போகுங்கால் இந்த நேர்கோட்டிற்கு அருகாமையில் நகர்ந்துவிட்டது என்று தெரியவரும்.



இதுபோலவே தண்ணீருள்ளிருந்து வெளியே வரும் ஒளியின் போக்கைப்பற்றி விசாரிப்போம். ஒரு பாத்திரத்துள் ஒரு ரூபாயை வைத்து, அதை அப்பாத்திரத்தின் நுனி சரியாக மறைக்கும்படியாகவும் சற்று உயர்ந்து நோக்கில் ரூபாய் தெரியும்படியாகவும் உள்ள இடத்தில் நின்று தரையில் அங்கு கோடிழுத்து விடுவோம். பின்னர் ரூபாய் அசையாதவண்ணம் ஜாக்கிரதையுடன் மெதுவாகத் தண்ணீரைப் பாத்திரத்துள் விடுவோம். பாத்திரம் நிறைந்ததும் முன்னின்ற விடத்தில் நின்று நோக்குவோம். ரூபாய் நன்றாகத் தெரியும்.கொஞ்ச தூரம் பாத்திரத்தை விட்டு விலகிப்போகும் வரையிலும் ரூபாய் தெரிந்துகொண்டே யிருக்கும். மேலும் ரூபாய் உயர்ந்தும் காணப்படும். இதிலிருந்து முன்னர்



பாத்திர நுனியில் தட்டிக்கொண்டு ரூபாயிலிருந்து வந்த ஒளியும் அதன் அருகிலுள்ள ஒளியும் சற்று தாழ்ந்தப்பட்டு நமது கண்ணுள் விழவேண்டும் என்று அறிந்துகொள்ளலாம். இவ்வொளி படும் தண்ணீர்மட்டத்தில் ஒரு நேர்கோணக்கோடு கிழித்துத் தண்ணீருள் நீட்டினல் தண்ணீருள்ளிருந்த ஒளியின் வழியைவிட வெளியே உள்ள வழி நேர்கோணக்கோட்டைவிட்டு விலகியிருக்கிறது என்பது தெரியவரும்.



ஆகவே (1) ஊடுருவிப்போகவிடும் வஸ்துக்கள் வழியாக ஒளி போகுங்கால் போக்குமாற்றம் ஏற்படுகிறது.(2,ஒளிவஸ்துவிலிருந்து அடர்த்தி அதிகமான வஸ்துவுள் போகுங்கால் அதனுடன் ஸம்பந்தப்பட இடைமட்டத்தின் நேர்கோணகோட்டைநோக்கி நெருங்கியும் அடர்த்தி குறைந்த வஸ்துவுள்ளே போகுங்கால் இடைமட்ட நேர்கோணகோட்டைவிட்டு விலகியும் ஒளிவழி ஏற்படுகின்றது (3) வரும் ஒளியும் போகும் ஒளியும்

இடைமட்ட நேர்கோடும் ஒரே மட்டத்திலிருக்கின்றன என்றும் வெளியாகும்.

ஆனல் வஸ்துக்கள் உயர்ந்து காணப்படுவதற்குக்காரணம் யாது என்ற சங்கை நிற்கும்.போக்குமாறிய ஒளி நமது கண்ணில் பட்டதும், அது எங்கிருந்து வந்தபோதிலும், மாறிய்வழிக்கு நேரே வஸ்து விருப்பதாகக் காட்டும் (கண்ணடியுள் தெரியும் ப்ரதிபிம்பத்திற்கும் காரணம் இம்மாதிரிதான்.) வஸ்துவை நேரே மேலே இருந்து நோக்கில் அதேஇடத்தில்தான் உயர்ந்துதெரியும். ஆகவே ஒதுங்கி நோக்கில் நேர் மேலே கிளம்பும். கோடும், மாறிய ஒளிவழியின் ஒழுங்கும் சேரும் பாகததில வஸது தெரிவதால வஸது உயாநது காணப்படும். இக்காரணம் பற்றித்தான், தெளிவான நீரமைந்த ஓடை முதலியவைகளில் அடிபாகம் உயர்ந்து காண, ஆழமே இல்லாதது போன்ற மயக்கத்தை உண்டாக்கும். அங்கு இறங்கிவிட்டால் நமக்கு நிலைக்காமலும் போய் விடலாம்.

ஒரு தடியை தண்ணீருள் தோய்த்தால், தோய்ந்த பாகம் தண்ணீருள் ஒடிந்துவிட்டதாகத் தோற்றும். இதற்கும் இந்தப் போக்குமாற்றம் தான் காரணம். தோய்ந்த பாகத்திலிருக்கும் ஒவ்வொருவிடமும் அங்கங்கிருந்து எழும் ஒளியின் போக்கு மாற்றத்தால் உயர்ந்து காணப்படும். மேலேவரவர, ஏற்றம் தகுந்தபடி குறையத் தோய்ந்த பாகம் முழுவதும் மேலே உயர்ந்துவிட்டதுபோலக் காணப்பட அது ஒடிந்துவிட்டது போலக் காணப்படும். தடியை நேராகத் தண்ணீரில் தோய்த்துவிட்டால், தடி ஒடிந்தது போலக் காணப்படாது குறுகிவிட்டதுபோலக் காணப்படும். தோய்ந்த ஒவ்வொரு பாகமும் நேரே மேலே உயர்த்தப்பட, வளையாது குறுகி மாத்திரம் தோற்றுகிறது. ஒளியின் போக்கு மாற்றத்தால் ஏற்படும் விரிவின் பேதத்தினல் தான் வானம் உச்சியில் தணிந்தும் பக்கங்களில் போகப்போக அகன்றும் காணப்படுகின்றது. உச்சியிலிருந்து வாயுவாலும், தூசிகளாலும் பிரதிபலித்து வரும் ஒளி, நேர வருவதால் தூரக் குறுக்கமும், பக்கங்களிலிருந்து வருவன அதிகச் சாய்ந்துவர விரிவும் காணப்படும்.

அடர்த்திஅதிகமான வஸ்துவுள்ளிருக்கும்ஒளிவிடும் பொருள்களிலிருந்து வெளிப்படும் ஒளி எல்லாம் ஊடுருவி அடர்த்தி குறைந்த வஸ்துவுள் போவதில்லை. ஒரு மிக அகன்ற கண்ணடிப் பாத்திரத்தில் ஒரு காசையிட்டு மேலே தண்ணீரை அதிகமாயில்லாது விட்டு நமது கண்ணிடமிருந்து மெதுவாகப் பாத்திரத்தை ஒதுக்கிக்கொண்டே போவோம். நமது பக்கம் இருக்கும் பாத்திர பாகத்தைத் தண்ணீர்மட்டம் வரையில் ஏதாவது இருண்ட வஸ்துவால் மூடிவிடுவோம். கொஞ்ச தூரம் போகிறவரை காசு தெரியும். பின்னர் மறைந்துவிடும். பாத்திரம் கண்ணடியாதலால் நுனி மறைப்பது என்று கூறவிடமில்லை, மேல்மட்டம் கண்ணுக்குத் தெரிவதால் அதில் காசினிடமிருந்து வந்து தாக்கும் ஒளிபோக்கு மாறித் திரும்பிநமது கண்ணுருபுகவில்லை என்று தான் கொள்ளவேண்டும். அடர்த்தியான வஸ்துவிலிருந்து வரும் ஒளி ஒரு சரிவுக்கு மேல்பட்டால் அது ஊடுருவிப் போக்கு மாறி மேலே போவதில்லை என்பது தெரிய வருகிறது.



ஆனல் இவ்வொளிகளின் கதி என்ன என்ற சங்கை பிறக்கும். இதை அறிய காசு மறைந்ததும் இடை மறைப்பை சற்று இறக்கிவிட்டு முழுவதையும் மேலே உயர்த்துவோம். அல்லது நமது கண்ணைக் கீழே தாழ்த்துவோம். ஒரு மட்டத்திற்கு மேல் போனதும், காசு கண்ணடியில் பிரதிபிம்பமாகத் தெரிவதுபோலத் தண்ணீர்மட்டத்திற்கு மேலே தெரியும் ஆகவே முற்கூறிய வரம்பு கடந்து சாய்ந்த ஒளிகள் தண்ணீர் மட்டத்தில் ப்ரதிபலிக்கின்றனவே ஒழிய ஊடுருவிப் போவதில்லை. இதற்கே **பூரண அந்தர்ப்ரதிபலனம்** என்று பெயர். ஒவ்வொரு அடர்ந்த வஸ்துவுக்கும் இம்மாதிரி வெவ்வேறன ஒருசரிவு வரம்பு ஒன்று உண்டு.

இதற்கு வரம்புச்சரிவு என்று பெயர். இம்மாதிரியான வரம்புச்சரிவுகள் ஸாதாரண வாயுமண்டலத்தில் ஸூர்யவெப்பம், சுற்றுமுள்ள குளிர்ச்சி முதலியவைகளால் ஏற்படுவதால்தான், கானல் நீரும், அதன் ரூபாந்திரங்களும் ஏற்படுகின்றன. கானல் நீரும் அதன் ரூபாந்தரங்களும் என்ற வியாஸத்தைப் பார்க்க விவேக போதினி தொகுதி I, பகுதி 9 பக்கம். 271)

இம்மாதிரியே கண்ணாடியுள்ளும் ஒளிபோக்கு மாறிப்போவதை எளிதில் சோதனை செய்து உணரலாம். சிறுபெட்டி போன்ற உருவுடைய கண்ணாடிக்கட்டியை எடுத்து அச்சுவரிகளிருக்கும் புஸ்தகத்தின் மேல் வைத்தால் கண்ணாடியுள்ளிருக்கும் ஒருவரியின்பாகம்உயர்ந்தும் இடம் மாறியும் காணப்படும். அந்தவரி நடுவில் பெயர்ந்து ஒருபுறம் நீங்கிவிட்டதாகத் தோன்றும். முதலில் ஒருபுறமிருந்து கண்ணாடிக் கட்டியில் புகும் ஒளிபாகம் அந்தவிடத்தின் நேர்கோணக் கோட்டை நோக்கி வளைகிறது, எதிர்புறமும் அந்தச் சரிவு மாறாது வந்து தாக்க, அங்கு மறுபடி எதிர்ப்புறமாக நேர்கோணக்கோட்டைவிட்டு விலகிச் சரிந்து, முன்வந்த ஒழுங்குபோலவே வேறிடத்திலிருந்துகிளம்பும்.முன்போன வழியே போகாவிடினும், அதே சரிவுடன் இது வெளி வரும்.

மூன்றுபட்டைக் கண்ணாடிகளின் வழியாகப் போகும் ஒளியைப்பற்றி விசாரிப்போம். போக்கு மாற்றம் ஒழுங்குப்படி ஒளி ஒரு பட்டையில் விழுந்து மறுப்பட்டைகளில் ஒன்றின் வழியாக வெளி ஏறுங்கால் எப்பொழுதும் பருமன் அதிகமான பாகத்தை நோக்கியும், பட்டை சேர்க்கைப் புறம் விட்டுவிலகியும் போகும். இதனால் ஒளி



விடும் வஸ்துவின் போலி ப்ரதிபிம்பம் பட்டை சேரும் பாகத்தை நோக்கி நகர்ந்து காணப்படும். இதனுள்போகும் ஒளியில் வர்ணமாறுபாடுகளும் காணப்படும். இதைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

முப்பட்டைக் கண்ணாடிகளுள் இரண்டுபட்டை நேர்கோணமாகியும் ஸமமாகியும் அமைந்திருந்தால் பூர்ண அந்தர்ப்ரதிபலனம் ஏற்படும். இதனால் இம்மாதிரியான மூன்றுபட்டைக் கண்ணாடியைச் சில யந்திரங்களில் முகம் பார்க்கும் கண்ணாடிக்குப் பதிலாக உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஸமப்பட்டைகளுள் ஒன்றில் ஒளி நேராக விழும்படிப் பிடித்தால் போக்குமாற்றம் ஒழுங்குப்படி மாறாமல் நேராக இவ்வொளி போய்



மூன்றாவது சரிவுப்பட்டையின் உட்புறம் தாக்கிவிடும். அங்குப்போகுங்கால் அந்தப்பட்டை நேர்கோணக்கோட்டுக்கும் ஒளிக்கும் உள்ளசரிவு கண்ணாடிக்கு உள்ள வரம்புச் சரிவுக்கு மேற்பட்டிருக்கும். ஆதலால் இவ்வொளி அப்பட்டை வழி ஊடுருவிப்போகாது அங்குபூர்ண அந்தர்ப்ரதிபலனமாகி இரண்டாம் ஸமப்பட்டையில் நேராகத்தாக்கி நேராக வெளி ஏறிவிடும். ஆகவே முதல் பட்டையைநேர் கீழ்மேலாகப் பிடித்து முற்கூறிய சோதனையைச் செய்தால், வெளிவரும் ஒளி தரையில் வந்துவிழும். இனிப் போக்கு மாற்றம் ஸம்பந்தமான விசித்திரக் கண்ணாடிகளைப் பற்றிப் பின்னர் விரிப்போம்.

---

9. இணைக்கமறிந்திணங்கு

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸூஹிர்லாபமும் மித்ரபேதமுமே இவைகளுக்கு முறையே உதாரணங்கள்.

விக்ரமாதித்யன் தட்டானுடன் சேர்ந்து பட்டபாட்டை ஆத்திசூடி வெண்பாவில் குறிக்கப்பட்டிருக்கிறது.

செய்யபுகம் விக்ரமா தித்தன் ஒரு தட்டாரப்
பைய லுறவுபற்றிப் பட்டதனால்—வையம்
மணக்குஞ் சீர்புன்னை வனநாதா நீயும்
இணக்க மறிந்திணங்கு.

நியாயமஞ்சரி

POPULAR MAXIMS EXPLAINED

45. कूपमण्डूकन्यायः

కూపమణ్డూక న్యాయః

கூபமண்டூக நியாயம்

கிணற்றுத் தவளை நியாயம் இதுதான் 'கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன் ?' என்ற பழமொழி ஒன்று உண்டு. கிணற்றுத் தவளை என்னும், தொடருக்கு தான் ஸம்பந்தப்பட்ட சிறு விஷயங்களைத் தவிர மற்றைய வெளி விஷய ஞானம் கொஞ்சமேனும் இல்லா நாட்டுப்புறத்தான் என்று பொருள். இவனுக்கு நாட்டு வளப்பம் ஏன் என்றால் இவனுக்கு வெளிநாட்டின் செழிப்பு முதலியவைகளை விசாரிக்க காரணம் என்ன, அதாவது இவன் அவைகளைக் கவனிக்கவேமாட்டான்: தன்னதே தனக்குப் பெரிதாகவிருக்கும் என்பதாயிற்று. இதிலிருந்து இந்த நியாயம் உபயோகப்படும்விதம் விளங்கும்.

இந்நியாய சம்பந்தமான கதைகூட ஒன்று உண்டு. ஒரு நாள் சமுத்திரத்தில் வசித்து வந்த தவளை ஒன்று, ஒரு கிணற்றிற்கு வந்து அங்கிருந்த தன் தோழனான தவளையைக் கண்டது. 'நீ எங்கிருந்து வருகிறாய்?' என்று அது கேட்க 'நான் கடலிலிருந்து வருகிறேன்' என்றது கடற்றவளை. 'கடல் எப்படி இருக்கும்?' என்ற கேள்வி பிறக்க, கடற்றவளை 'கடல் மிகப் பெரிய நீர்நிலை. அதற்கு எதிர்க்கரையே தெரியாது. அது பரப்பில் ஒப்புயர்வற்றது' என்று வர்ணித்தது. 'என் கிணற்றைவிடப் பெரிய நீர்நிலை ஏது? நீ கூறுவது வெறும்புரட்டு' என்று கண்டித்தது கிணற்றுத் தவளை. கடற்றவளை எவ்வளவுதான் நயமாகப் பேசி 'பாராத விஷயங்களைப்பற்றி அவஸரமாகத் தமது அபிப்பிராயங்களை வெளியிடவேகூடாது. வெளியிட்டாலும் பார்க்கிறவரையில் அதைக் கடைப்பிடிக்காது தள்ளி வைத்திருக்க வேண்டும். அவ்வாறின்றிக் குரங்குப் பிடியாகத் தன் முதல் அபிப்பிராயமே ஸரி என்று பிடிவாதம் பிடிப்பது மூர்க்கத்தனம்'' என்று கூறியபோதிலும், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதித்தது கிணற்றுத்தவளை. அதன் அறியாமையையும் முரட்டுத்தனத்தையும் கண்டு நகைத்துப் பரிஹாஸம் செய்துவிட்டு ஒதுங்கிவிட்டது கடற்றவளை.

இக்கதையிலிருந்து இந்நியாயத்தின் மதவிஷயப் பொருத்தம் நன்கு வெளியாகும். மதவாதிகள் பொதுவாகத் தமது மதமே உண்மை மதம் என்று மூர்க்க எண்ணங்கொண்டு, பிறமதம் எல்லாம் பொய்ம்மதங்கள் என்று அவதூறு பேசி மற்றைய மதஸ்தர்களை வெறுத்து மதத்துவேஷம் என்ற பேய் பிடித்து ஆட்டிவைக்க, பிறமதஸ்தர்களுக்கு அவர்கள் மதக்குற்றங்களையும் தன் மத சிறப்புக்களையும் மாத்திரம் சூதாக எடுத்துக் காட்டி, 'மூக்கறுத்துக்கொண்டால் ஸ்வாமி தெரியும்' என்று எல்லோரையும் மூக்கறையனாக்கிய மூக்கரையன் கதையாக, தன் மதத்தில் சேர்ந்தால்தான் பிறருக்குக் கதியுண்டு என்று இடித்துக்கூறி ஏமாந்தவர்களைத் தன் மதம் சேர்த்துத் தலையைத் தடவும் மதாபிமானிகள் நிறைந்த இக்காலத்தில், இந்நியாயத்தின் மதவிஷயப் பொருத்தத்திற்கு அதிகக் கஷ்டப்பட்டுத் தேடிப் பார்க்கவும் வேண்டுமா ? மதத்துவேஷமும், ஸ்வமதத்திற்கு ஆள்சேர்த்தல் என்றதுர்ஆக்ரஹமும் பிடித்தலைபவர்களே மத விஷயத்தில் காணப்படும் முதல்தரமான கிணற்றுத்தவளைகள்.

46. कूपयन्त्रघटिका न्यायः

కూపయన్త్రఘటీకా న్యాయః

கூபயந்த்ரகடிகா நியாயம்

கிணற்று ராட்டணப் பானைகள் நியாயம் என்பது இதன் பொருள். கிணற்றில் ஸாதாரணமாக ஒரு ராட்டிணம் போட்டு அதில் நீளக் கயிறு மாட்டி இருநுனிகளிலும் பானைகள் கட்டி, இருபுறத்தில் ஆள்கள் நின்றுகொண்டு தோட்டத்திற்குத் தண்ணீர் இறைப்பது வழக்கம். இதோடு ஸம்பந்தப்பட்டது இந்த நியாயம். கிணறு எவ்வளவு ஆழமாக இருந்தாலும், தண்ணீர் எவ்வளவு ஆழத்திலிருந்தாலும், அதன் ஸ்வரூபம் இன்னது என்பதைப் பானையில் வரும் தண்ணீரிலிருந்து ஸாதாரண ஜனங்களும் கிரஹித்துக் கொள்ளலாம். இதுபோலச் சாஸ்திரங்கள் எவ்வளவு ஆழ்ந்த பொருள்களை மறைத்து வைத்திருந்தபோதிலும் குரு உபதேச மூலமாக அவைகளின் ஸ்வரூபத்தை ஸாதாரண சிஷ்யனுங்கூட எளிதில் உணருவான். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்க உதவும் அகப்பைவிஷயமும், இதுபோல விரிந்த விஷய ஸ்வரூபத்தை ஒன்றன் ஸஹாயத்தால் உணரும் திறன் நமக்கு உண்டாகும் இடங்களும் ஆகிய

இவைகள் எல்லாம் இந்நியாயம் உபயோகப்படும் இடங்கள்.

இந்நியாயத்திற்கு வேறு ஒரு உபயோகமும் உண்டு. தண்ணீர் இறைக்குங்கால் முற்கூறிய ராட்டணத்தில் ஒருபானை நீர் மொண்டு நிறைந்து ஏறுவதும் மறு பானை நீர் ஊற்றப்பட்டு காலியாகி இறங்குவதுமாக மாறிமாறி நடந்து கொண்டுவரும். இதுபோல உலகில் ஒருவன் பணக்காரனாயும் மற்றொருவன் ஏழையாயும், ஒருவனே ஒரு ஸமயம் ஏழையாயும் வேறொரு ஸமயம் பணக்காரனாயும் நிற்கச் செய்யும் விதிவிஷயத்தில் இந்நியாயம் நன்கு பொருந்தும். ஆகவே இது உலக விஷய ஸுகதுக்க மாறுபாடுகளைக் குறிக்கும்.

47. कूर्माङ्गन्यायः

கூர்மாங்க நியாயம்

ஆமை அங்கநியாயம்என்பது இதன்பொருள். அபாயம் வருங்காலங்களில் ஆமை தனது ஐந்து அங்கங்களாகிய தலையையும் நான்கு கால்களையும் உள்ளே இழுத்துக்கொள்ளும். இதுபோல அறிவுடையோரும் விஷய ஸம்பந்தப்படுங்கால் தமது ஐந்துஇந்திரியங்களை உள்முகப்படுத்தித் தாக்கற்றுநிற்பார்கள். இந்திரிய நிக்கரவிஷயமாகஇந்நியாயம் உபயோகப்படும். இக்கருத்தை பகவத்கீதையில் 'ஆமை தன் அங்கங்களை உள்ளே இழுத்துக் கொள்ளுவது போல, ஒருவன் இந்திரியங்களை விஷயங்களிலிருந்து உள்ளிழுத்துக் கொள்ளும் போதுதான் அவன் அறிவு திடப்பட்டது என்று கூறலாம்,' என்று பகவான் கூறுகிறார்.

இந்நியாயத்திற்கு வேறுவித உபயோகமும் உண்டு. ஆமை அங்கங்களைஉள்ளிழுத்துக் கொள்ளுங்கால் அவை மறைந்தும், வெளியில் நீட்டுங்கால் அவை வெளிப்பட்டும் நிற்கும். அதுபோலக் காரியங்களாகிய பானை, துணி முதலியவைகள் காரணங்களாகிய மண் பஞ்சுகளிலிருந்து வெளியேறுங்கால் வெளிப்படையாகத் தோன்றி, காரணங்களே யாகுங்கால் மறைந்தும் போகும். ஆகவே இல்லாதது உண்டாவதும் இல்லை. உள்ளது அழிவதும் இல்லை. ஒரு வஸ்துவின் வெறுந்தோற்ற மறைவே, ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் என்பது. ஆகவே ஸ்ருஷ்டி ஸம்ஹார விஷயமாக இந்நியாயம் உபயோகப்படும்.

உல்லாஸன் சரித்திரம்

ADVENTURES OF ULYSSES

(தொடர்ச்சி)

எட்டாமத்தியாயம்

என்னை யொன்று மறியாத விளம்பருவந்தனிலே
என்னுளத் தேயமர்ந்தருளியான் மயங்குந்தோறும்
அன்னை யெனப்பரிந்தருளியப் போதைக்கப்போ
தப்பனெனத் தெளிவித்தே யறிவுறுத்தி நின்றாய்,
நின்னையெனக் கென்னென்பே னென்னுயிரென்பே [னோ
நீடிய வென்னுயிர்த்துணையா நேயமதென்பேனோ,
இன்னலறுத் தருளுகின்றவென் குருவென்பேனோ
என்னென்பேனென்னுடைய வின்பமதென்பேனே
அருளாரமுதே யென்னுடையவன்
பேயென்ற னறிவேயென்
பொருளா யகத்தும் புறத்துமென்னைப்
புணர்ந்த கருணைப்பொருப்பே மெய்த்
தெருளாமொளியே வெளியாகச்
சிற்றறிவின்கணே நடிக்கின்றோய்
இருளாயின வெலாந்தவிர்த்
தென்னெண்ண முடிப்பாயிப்போதே

என, உல்லாஸன் மினெர்வாவைத் தோத்தரித்துக் களித்திருக்கையில், அந்தத் தேவதை "உல்லாஸா, மனை மாட்சியும் அரசாட்சியும் உனக்கு எளிதில் லபிக்கின்றனவாயில்லை; இன்னும் அனேக இடையூறுகளைக் கடந்துதான் நீ அவற்றைப்பெறலாகும். நீ நாடு துறந்துபோய் நாளானமையால் நமனுக்கிரையானா யென்றெண்ணி உன்னாட்டுப் பிரபுக்களும் அயல்நாட்டாரும் உன்மனைவியை மணம்புரியக்கருதி, உன்னரண்மனையிற் புகுந்து உன்பொருளை யெல்லாமுண்டு களித்தழித்து வருகின்றார்கள். உன் பத்தினிமட்டில் உன்னிடத்தில் பக்தி குன்றாதவளாயிருக்கின்றனள். உன்புத்திரன் தலைமகன் இங்கே வசிப்பானாயின், காமாதுரரான பாவிகளால் கொலையுண்டான் என்றெண்ணி நான் மெண்டார் என்னும் தேவன் வடிவம்பூண்டு அவ்விளங் குமாரனோடு பற்பல தேசங்களிலும் உன்னைத் தேடலானேன். இவ்வாறு தேசாடனஞ் செய்ததால், தலைமகன் புத்தி விசாலத்தையும் பொறுமையையும் லோகானுபவத்தையும் அடைந்திருக்கிறான். நீ இங்கு வருங்காலமும் தலைமகன் வருங்காலமும் ஸமகாலமாயிருக்கவும் விதித்தேன். உன்குமாரன் கண்ட காக்ஷிகளையும் செய்த அற்புத காரியங்களையும் அவன் வாக்கினாற்கேட்டே நீ களிக்கலாகும். நான் அவற்றை இங்கு விரித்துரைத்தல் அனுவசியம்," என்று சொன்னாள்.

மினெர்வாவும் உல்லாஸனும் ஒரு மரத்தடியிலுட்கார்ந்து கொண்டிருக்கையில், உல்லாஸனுக்கு மனக்கவலை மிகுந்து, "கருணைக் கடலே, நானோ ஒருவனாயிருக்கிறேன்; என் பகைவரோ பலராயிருக்கின்றார்கள். அகமெம்னான் தன் மனைவியினுடைய சோர புருஷர்களால் தன் வீட்டிலேயே கொல்லப்பட்டது போல, என் கதியு மாகும்போலத் தோற்றுகின்றது. த்ரோஜா நகரத்தில் எனக்கு நற்றுணையாயிருந்தவாறே நீ மனம் வைப்பாயாயின், என் பகைவர் முந்நூற்றுவரையும் தவிடுபொடி செய்யும் திறத்தினனாவேன். உன்பாதமே எனக்குத் துணை," என்று வருந்தினான்.

தேவியும் உல்லாஸனிடத்தில் கிருபைகூர்ந்து, "பிள்ளாய், கவலை யொன்றையும் வைத்தல் வேண்டாம். உனக்கிட்ட வேலையை நீ ஒழுங்காகச் செய்தால், நான் உனக்கு உதவிசெய்வதில் தடையொன்று மில்லை. ஆயினும், உன் பகைவர் உன்னை உல்லாஸனென்றறியாதிருத்தற்பொருட்டு உன் ரூபத்தை நான் முற்றிலும் மாற்றுவேன். அதி லுனக்கு சம்மதந்தானே," என்றனள்.

தன்னை ஆக்கலையும் அழித்தலையும் தேவியினிடத்தி லொப்புவித்த உல்லாஸன், அவளாணைக்கிணங்க, அவன் உடல் தளர்ந்த கிழவனுடலாயிற்று. அலஸீன னளித்த விலைபெற்ற ஆடைகளுக்குப் பதிலாகக் கிழிந்த ஆடைகளுண்டாயின. இரப்போர் வைத்திருக்கும் பிக்ஷாபாத்திரம் ஒன்றும் அவன்கையில் வந்து சேர்ந்தது. திருசிரஸ் சொன்னவாறு அரசிழந்து பிக்ஷுவாகியும் சம்பீர்யத் தோற்ற மாத்திரம் உல்லாஸனிடத்தில் குறையவில்லை. இதுவும் அத்தேவதையின் அருளேயாம்.

பிக்ஷாடனம் பூண்ட உல்லாஸனுக்கு இதினுங் கீழ்மை ஒன்று விதிக்கப்பட்டது. பிக்ஷுவினுடைய வஸ்திரத்தோடு அரண்மனை இடையன் யூமையன் என்பவன் வீட்டிற்குப் போய் யாசிக்கும்படி மினெர்வா உல்லாஸனுக்குக் கட்டளையிட்டனள். யூமையன் எக்காலத்தும் உல்லாஸனிடத்தில் ராஜபக்தி பூரணமாய் வைத்தவன். தேவதை யூமையன் வீட்டிற்கு ஸமயம் பார்த்து உல்லாஸன்குமாரன் தலைமகனை அனுப்புகிறதாகவுஞ் சொல்லிவிட்டு மறைந்தனள். உல்லாஸன் தன் மகனுக்கு மாத்திரம் தன் வாஸ்தவ ரூபத்தை யறிவித்தலாகுமென்றும் மினெர்வாவின் ஆக்ஞை பிறந்திருந்தது.

தேவதையின் ஆணைப்படி உல்லாஸன் யூமையன் வீட்டுக்குக் கையிற் கோலைப் பிடித்துக் கொண்டு போகையில் இடையன் வீட்டு வேட்டை நாய்கள் உல்லாஸன் மேற்பாய்ந்து கிழித்துவிடும் போலக் குரைக்க, உல்லாஸன் ஊன்றுகோலைக் கீழேவைத்து விட்டுச் சும்மா தரையிலுட்கார்ந்தான். நாய்களுக்கும் பிக்ஷுகளுக்கும் இயற்கைப் பகைமையாம். நாய்கள் குரைத்ததைக் கேட்டவுடன் யூமையன் அவற்றை வந்து அடக்காவிடின் அவை உல்லாஸனுக்குப் பெருங்கேடு செய்திருக்கும்.

யூமையன் உல்லாஸனை நோக்கி, "பெரியவரே! என் நாய்கள் உம்மைச்சின்னாபின்னமாக்க இருந்தனவே. என்னுடைய அஜாக்கிரதையால் தமக்கு ஏதாவது தீங்குண்டாயிருப்பின் நான் பெரும் பாவி யாவேன். ஆயினும் என் கவலைகள் கணக்கிலகப்படா. என்னரசன் நாட்டைவிட்டுப் போய் வெகு நாளாயிற்று. அவர் உயிரோடிருக்கிறாரோ இறந்தாரோ அறியேன். அவர் திரும்பி வரக் கூடாதென்று விரும்பியிருக்கும் பாதகர்களுக்கு ஆடுகளையும் மாடுகளையும் கொழுக்கச் செய்துவருகிறேன். எங்களுக்குப் பிதாவாயிருந்த அரசனை யிழந்து அவருடைய சத்துருக்களுக்கு ஊழியஞ் செய்வதினும் ராஜபக்தியுள்ளபிரஜைகளுக்குப் பெரியதுக்கம் வேறேது?" என்றான்.

யூமையனுக்குத் தன் முன்னிருந்தவனே உல்லாஸனென்பது எள்ளளவேனுந் தோற்றவில்லை. இதுவும் தேவியினுடைய மாயையாம்.

யூமையன் பிக்ஷுவை வீட்டிற்கழைத்துப் போய் அன்னபானாதிகளைக் கொடுக்க உல்லாஸன் "என்னைப்போன்ற அகதிகளுக்கு உபகாரஞ் செய்யும் உன்னைக் கடவுள் க்ஷேமமாய் வைப்பாராக" என்று ஆசீர்வதித்துப் பிறகு பசிதீர்த்துக் கொண்டான்.

" அய்யா பெரியவரே, உம்மிலுங்கேடானவர்
என் வீட்டிற்கு விருந்தாக வருவாராயினும் அவரை
யுபசரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.
" ஆற்றுவாராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற்பின்" என்றும்
"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று" என்றும்

பெரியோர் கூறியுள்ளதை நான் என்றும் மறந்திலன். சேவகனாயிருக்கிற என் போலியர்கள் செய்யுமளவு உதவிபுரிய என்றும் ஸித்தமாயிருக்கின்றேன். என் மனத்தை வருத்துவது ஒன்றுளது. இந்த நாட்டிற்கதிபதியான மஹான் போன விடந்தெரியவில்லை. அவர் இங்கிருப்பின் எனக்கு ஒரு குறையுமிராது. பாவி ஹெலென் செய்த குற்றத்திற்காக அவள் குலம் நிர்மூலமாய்ப் போகத்தக்கது. அவள் பொருட்டு உண்டான யுத்தத்தினாலல்லவோ எங்களரசன் நாட்டைத் துறந்துபோம்படி நேரிட்டது. என்னைப் போன்ற ஏழைகள் செய்யும் விருந்தை முழுமனத்தோடு அங்கீகரித்தல் வேண்டும். எங்களரசனரண்மனையில் கூடியிருக்கும் பாதகர்கள் நல்ல பொருள்களையெல்லாம் உண்டழித்துக் கொழுக்கின்றனரென்பதே, என்று யூமையன் பின்னுஞ் சொன்னான்.

இடையன் பேசினவற்றைக் கேட்டு மனம் புண்ணான உல்லாஸன் "நீர் மிகவும் மேன்மையாகப் பேசுகிற அரசன் யார்? த்ரோஜா நகரத்தில் இறந்துபோனானென்றுஞ் சொல்லுகிறீர். நான் இந்த நாட்டிற் பழக்கமில்லாதவன். பலதேசங்கள் போய்ப் பார்த்தவனானபடியால் நீர் பேசிய அரசனைப்பற்றி நானும் ஏதாவது தெரிந்தவனாயிருத்தல்கூடும்" என்று கபடமாய்ச் சொன்னான்.

இதைக்கேட்ட யூமையன், "விருத்தரே, உல்லாஸ ராஜனைப்பற்றி சமாசாரந் தெரிந்தவராக நடித்தவர் அனேகர். ஒருவயிற்றுச் சோற்றிற்கும் முழத்துணிக்கும் பொய்யையே அனேகர் சொல்லி வந்திருக்கின்றனர். மஹாராணியை இவ்வாறு பொய்யர் பலமுறை ஏமாற்றியிருக்கின்றனர். ஒருவேளைச் சோறும் முழத்துணியும் வேண்டுமாயின் நீரும் ராணியிடத்திற் போய் உமக்குத் தெரிந்தவற்றைச் சொல்லும். என்னைப் பற்றின மட்டில் கேட்டாலோ, எங்களரசன் எங்கு செத்துக்கிடக்கிறாரோ அறியேன்; கடலிலுள்ள மீன்கள் அவரை விழுங்கியிருக்கலாம்; அவருடைய அஸ்திகள் கடற்கரை மணலில் புதைப்பட்டிருக்கலாம். பிழைத்திருக்கிறாரென்று எண்ணுவதற்கு கிஞ்சித்தேனும் ஹேதுவில்லை. என்னைப்போன்ற ஏழையிடத்தில் அவர் அதிக அன்பு பாராட்டினமைபற்றி நன்றிமறக்காமலிருப்பது என்கடமை. மறுமையில் அவர் தெய்வமாய்த் தானிருப்பார். அவரை வழிபட்டால் அவர் கிருபை எனக்குண்டாகும்," என்றான்.

யூமையன் வசனங்களைச் செவியுற்ற உல்லாஸன் கண்ணீர்விட்டு, "நண்பரே, உல்லாஸராஜன் ஜீவந்தராகவில்லை என்பதுஞ்சரியன்று. அவர் திரும்பிவருவாரென்று பிரமாணமாய்ச் சொல்லுகின்றேன். அவர் வந்தபின் நீர் எனக்கு வஸ்திரப் பரிசளிக்கலாகும். அதுவரையில் ஒரு நூல் கூட உம்மிடத்தில் நான் வாங்கமாட்டேன். நிர்வாணமாக நின்றாலும் நிற்பேனேயல்லாமல் அற்பப் பிரயோஜனத்தை யடையும் பொருட்டுப் பொய்யை நான் சொல்வதில்லை. இன்று முதல் ஒரு மாதத்திற்குள் உல்லாஸ ராஜன் திரும்பிவந்து அவருடைய சத்துருக்களைத் தக்கபடி தண்டிப்பார். இது உறுதி," என்றான்.

யூமையனுக்குத் தன் பேச்சில் விசுவாஸம் பிறத்தலுக்கு உல்லாஸன் அனேக சிறுகதைகளைச் சொன்னான். உல்லாஸனுடைய குணாதிசயங்களையறிந்தவர் பிக்ஷு வேஷம் பூண்ட உல்லாஸன் சொன்னவற்றை அவசியம் நம்ப வேண்டியதாயிருந்தது. உல்லாஸனுக்கும் தனக்கும் விசேஷ பரிச்சய முண்டென்றுஞ் சொன்னான். பேஷிபா தேசத்திற்குத் தான் வந்திருந்த போது கோயிலிற்போய்க் குறிகேட்ட காலத்தில் அந்தக் கோயில் தேவனும் உல்லாஸன் இதாகாவுக்கு ஒருமாதகாலத்திற்குள் திரும்பிவருவானென்றும் வாக்குக் கொடுத்திருந்ததாம், நான் சொன்னது வாஸ்தவமாயில்லாவிட்டால் என்னுடலை நாய் நரிகளுக்கு இரை யாக்கவும் அன்றேல், மலையுச்சியிலிருந்து கடலிலெறியவும் சம்மதமென்றும் உல்லாஸன் சொன்னான்.

இராத்திரி போஜனமானபிறகு குளிர் மிகுதியாயிருந்தமையால் கம்பள வஸ்திரம் ஒன்று யூமையனிடத்திற் பெறுவதற்கு உல்லாஸன் த்ரோஜாயுத்தத்தில் செய்த தந்திரமொன்றை யூமையனுக்குச் சொல்லவே, யூமையன் களிகூர்ந்து உல்லாஸனுக்கு ஓர் கம்பளங் கொடுத்தான். அதைப் போர்த்துக்கொண்டு குளிராடக்கமாக இரவுமுழுதிலும் உல்லாஸன் நித்திரை போனான்.

மறுநாளுதயமானவுடன் உல்லாஸன் படுக்கைவிட்டெழுந்து யூமையனை நோக்கி "அன்னதாதா, தாம் எனக்கு வேண்டிய சகாயஞ் செய்தீர்; தங்களுக்கே பாரமாக எப்போதுமிருக்க எனக்கிஷ்டமில்லை; இவ்வூரில் அனேகங் கனவான்களிருக்கின்றமையால், அவர்களுடைய ஜீவகாருண்யத்தையும் பார்க்கின்றேன். அரண்மனையில் இருக்கும் பிரபுக்களுக்கு ஊழியஞ் செய்து அவர்களாலளிக்கப்படும் பிக்ஷையைப் பெற்று காலம் போக்குவேன். சமையலிலும் பரிசாரகத்திலும் வெகு சுருசுருப்பாய் வேலை செய்வேன். இன்னும் பிரபுக்களாயிருப்பவர்கள் திருப்திப்படும்படியான பல வேலைகளையும் நான் அறிவேன் எனக்குவிடை கொடுத்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

யூமையன் "இந்த வூர்ப்பிரபுக்கள் சமாசாரந் தெரியாமற் பேசுகின்றீர். இராணியை மணம்புரிவதற்கு அரண்மனையிற் கூடியிருக்கிற கனவான்களுக்கு உம்மைப்போன்ற வயோதிகர் செய்யக்கூடிய சிச்ருஷை எவ்வகைத்தென வறியேன், உம்மைப்போல் நரைதிரை படர்ந்தவரை அவர் விரும்பார். பட்டாடை யுடுத்துப் பளீர் பளீர் என்று மின்னும் முகமுடைய யௌவன சேவகர்களாயிருந்தால் அவர் நிமிர்ந்து பார்த்துப் பேசுவார். பிறர்பொருளை யுண்டு திமிர்பிடித்த கனவான்கள் உம்மை வெறுத்து நகைப்பார்கள். நீர் இங்கேயே இருத்தல் வேண்டும். ஒருகால் தலைமகனாவது இராணியாவது உமது வருகையை யறிந்து உம்மைத் தருவித்துக் கொள்வார்கள். நீர்போதல் சரியன்று" என்று மறுத்துவிட்டான்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் காலடிச் சத்தம்கேட்டது. அங்கிருந்த நாய்கள் குரைக்காமல் உறவுபாராட்டி ஓடின. இதையறிந்த யூமையன் உல்லாஸனைப்பார்த்து "ராஜகுமாரனா தலைமகன் வருகிறார்" என்றான். தலைமகனும் அந்தக்ஷணமே அவ்விடம் வர உல்லாஸன் எழுந்து தலைமகனுக்கு உபசாரஞ் சொல்ல, தலைமகன் வயோதிகர் தனக்கு மரியாதை செய்தல் தகுதியன்றென்று கிழவனுக்குத் தானே தலைவணங்கி கைலாகுகொடுத்து உட்காரச்சொல்லிவிட்டு யூமையனைப் பார்த்து "என் பிதாவைப் பற்றி சமாசாரந் தெரிந்தவர் இந்தப் பெரியவர் தானோ?" என்று வினவினன். உல்லாஸன் கண்களில் நீர்பெருக, அதைத் தன் கைகளால் மறைத்துக்கொண்டான்.

யூமையன் ராஜகுமாரனை வணங்கி, "கிரீட தேசத்திலிருந்து வந்தவராகச் சொல்லுகின்றார்; தேசாடனஞ் செய்த போர்வீரனாம். அவர் பேசுவது வாஸ்தவமோ இல்லையோ யானறியேன். இவருடைய பூர்வ நிலைமை எதாயிருப்பினுமிருக்கலாம். தற்காலத்தில் யாசகராய் வந்திருக்கின்றனர். தாமே அவரிடம் பேசி மருமங்களை யறியலாம்," என்றான்.

தலைமகன், "இந்தப் பெரியவருடைய பூர்வ சரித்திரம் நம்மாற் பரிசிலனை செய்யப்படவேண்டுவதில்லை. இவரை எங்கு வைத்துப் பரிபாலிக்கிறதென்று எனக்குத் தோன்றவில்லை. என் தாயை மணம்புரிவதற்கு அரண்மனையிற் கூடியிருக்கும் சண்டாளர் இப்முதியவரைக் கண்டு பரிகசிப்பார்களே; அவரிடத்தில் அடிபடாமல் இவர் தப்புவதே துர்லபம் என்று அஞ்சுகின்றேன்" என்று மனவருத்தத்தோடு சொன்னான்.

தலைமகனும் யூமையனும் தர்க்கித்துக்கொண்டிருந்ததைக் கேட்ட உல்லாஸன் சுளித்த முகத்துடன் "ராஜனே, தாம் சொல்லிய சொற்களைக் கேட்கையிலேயே எனக்கு ஆத்திரம் பொங்கி வருகின்றது. உமது அரண்மனையிற் பிரவேசித்து அக்கிரமஞ் செய்து வருபவர்களை இப்பொழுதே சின்னபின்னமாய்க் கிழித்தெறிவேன். இவ்வாறு நீதி தவறினதற்குக் காரணம் யாது? தாமே இஷ்டப்பட்டு அநீதிக்கு இடங்கொடுத்தீரோ? தமது செங்கோல் தவறினமையால் தமக்குப் பிரஜைகள் உதவி செய்ய விரும்பவில்லையோ? தமது உற்றார் நண்பரிடத்தில் விசுவாசங் குறைந்துவிட்டபடியால், அவருமக்கு உதவி புரியோமென்று விட்டாரோ? உற்றவிடத்தினுயிர் வழங்குந் தன்மையோரையன்றோ உற்றாரெனல் வேண்டும்?" என்று கேட்டான்.

தலைமகன், "உல்லாஸனுறவினர் சிலரே, எனக்குதவி புரிய உடன்பிறந்தாரில்லை. என் தாயைப் பாணிக்கிரஹணஞ் செய்வதற்கு அரண்மனையிற் கூடியிருப்பவர்களுக்கு நண்பர்களும் உறவினர்களும் அனேகர். ஆர்ஷகுலத்தரசருக்கெல்லாம் ஏகபுத்திரர்தாம் விதிக்கப்பெற்றது போலும். ஆர்ஷருக்கு லேரதீயரும், லேரதீயருக்குல்லாஸனும், உல்லாஸனுக்கு நானும், முறையே ஏகபுத்திரர்களாய் வந்தோம். என் பிதாவான உல்லாஸன் நான் சிசுவாயிருக்கையிலேயே ஊரைவிட்டுப் போனவர். என்றால் அவருக்கு ஒரு சங்

தோஷமுங் கிடையாது, எல்லாங் கடவுள் செயல் என்று மறுமொழி பகர்ந்தான்.

பூமையன் ஆடு மாடுகளைக்காவல் செய்யும்பொருட்டு வேலையாய் வெளியிற்சென்றான். மினெர்வா பெண்ணுருவெடுத்து வாசற்படியில் நின்று உல்லாஸன் கண்களுக்கு மட்டிற் புலப்பட்டாள். தேவதைகள் தாம் விரும்பியவர்களுக்கு மாத்திரங் கண்ணிற் படுவார்கள். அங்குள்ள சுவானங்கள்தெய்வஸான்னித்தியத்தை யறிந்து குரைக்காமல் சும்மா கிடந்தன. உல்லாஸனுடைய நிஜரூபத்தை அவன் மகன் அறிதல் வேண்டிய காலம் வந்ததையுணர்ந்து மினெர்வா முதிய பிக்ஷூவேஷந்தரித்திருந்த உல்லாஸனை முன்போல வாஸ்தவ ரூபத்தோடு விளங்கும்படிச் செய்தாள். தளர்ந்த வயதும், நரை திரைகளும் நிறைந்த கிழப் பிச்சைக்காரனாயிருந்தவன் திடமுள்ள அரசவடிவம் பெற்றுத் தம் முன் நிற்பதைப் பார்த்த தலைமகன் திகிலடைந்து "இது தெய்விகமேயொழிய வேறில்லை" என்று சொல்லிக்கொண்டு உல்லாஸனை வணங்கப்போனான். வணங்கவந்த தன் மகனைத் தடுத்து உல்லாஸன், "என்னை நன்றாயுற்றுப்பார். தெய்வமல்லாத எனக்குத் தெய்வத் தன்மையை என் தருகின்றாய்? என்னை உன் அப்பனென்றறி; எந்த உல்லாஸன் ஊரிலில்லாமை இனைமைதுன் புற்றதோ அவனே யானென்றறி" என்று சொல்லித் தன்மகனைக் கட்டித் தழுவி உச்சிமோந்து முத்தமிட்டான். தடங்கரை பேர்த்து விட்ட வெள்ளம்போல் உல்லாஸன் கண்களினின்றும் நீர்பெருகிற்று. தலைமகன் மட்டில் தன்பிதாத்தான் தன்னுடன் பேசினவன் என்று நம்பினானில்லை. தன் மனத்தை வருத்துவதற்குத் தெய்வஞ் செய்த மாயை என்றெண்ணுவானாயினான். "சற்று முன்னரைத்த கிழவராயிருந்த நீர் இப்போது ரூபமாறி யௌவனபுருஷனாய் விட்டீர். மனிதருணவையுண்டு வளர்பவர்கள் காமரூபிகளா யிருத்தல் சாத்தியமாகத் தோற்றவில்லை," என்று உல்லாஸனை நோக்கித் தலைமகன் கூறலாயினான்.

உல்லாஸன் மகனை நோக்கி "அகத்தில் நான் உன் பிதாவாயிருத்தல் போலவே, புறத்தினுமுள்ளேனென்றறி. உல்லாஸன் பெயரைவைத்துக்கொண்டு என்னையன்றி வேறொருவரும்இங்கு இனி வரமாட்டார். இருபதுவருஷ காலம் அயல் நாடுகளிலலைந்து படாத பாடுகளெல்லாம் பட்டு ஜன்மபூமிதரிசனங் கண்டேன். என்னுரு மாற்றம் மினெர்வாவின் காரியம். தன்பக்தர்களை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவள் செயல். எல்லாஞ் செய்யவல்லவள் மினெர்வா என்று அறிதல் வேண்டும்," என்றான்.

முதலில் கொஞ்சம் ஐய முற்றிருந்த தலைமகன் சந்தேகந் தெளிந்தவுடன் முன்னின்றவன் தன் பிதாவென்று முழுநம்பிக்கை பிறந்து அவனைக் களிப்புடன் கட்டித்தழுவி ஆனந்தித்தான்.

உல்லாஸன் "அருங்குமரா, உன் தாயை மணம் புரிய கூடியிருப்பவர்கள் எவர்? அவர் சங்கியை என்ன? உன் தாயின் மனம் எவ்வாறிருக்கின்றது?" என்று கேட்டனன்.

"மனம் புரிதலில்லையென்று முதலிலேயே மறுத்துவிட்டால் அவர் கோபத்துக்குள்ளாதலாகுமென்றஞ்சி "ஆகட்டும், ஆகட்டும்" என்று சொல்லிக் காலஹரணஞ் செய்து வருகின்றாள். அவர்களும், இனமாகச் சோறு அரண்மனையிற் கிடைக்கின்றபடியால், உண்டு களித்து அவள் பேச்சை நம்பியிருக்கிறார்கள்" என்று தலைமகன் சொன்னான்.

"அவர்கள் தொகையை எண்ணிச் சொல். நம்மினினும் எண்ணிக்கையில் மிகுதியானவர்களாயிருக்கின்றமையால் நாமிருவரே அவர்களை வெல்ல முயல வேண்டும்," என்று உல்லாஸன் கூறினான்.

தலைமகன் உல்லாஸன் பேச்சைக்கேட்டுப் பிரமித்தவனாய், "பிதாவே, உமது புஜபல பராக்கிரமங்களைப் பற்றியும், நுண்ணறிவைப்பற்றியும் விசேஷமாகக் கேள்வியுற்றிருக்கின்றேன். இப்பொழுது உமது துணிவான சொற்கள் என் புத்தியைக் கலக்கிவிடுகின்றன. தங்கள் மனைவியைக் கலியாணஞ் செய்துகொள்ள விரும்பி நமது அரண்மனையிற் குடிகொண்டிருக்கின்றவர்கள் ஐந்துபேர், பத்துப்பேரென்றா எண்ணுகின்றீர்? அவர்களே ஒரு பெருஞ்சேனையெனலாம். அப்பெருங்கூட்டத்தை நாமிருவருமே வெல்ல வல்லமையுடையோமென்று நினைத்தல் மதிக்குறைவு என்று எனக்குத் தோற்றுகின்றது. ஆத்திரத்தில் அவஸரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிப்போமாயின் அக்காரியம் அவமானமாய் முடியும். துணைவரைத் தேடாமல் இக்கருமத்தை நாம் தொடங்கலாகாது" என்று மறுத்துச் சொன்னான்.

"விண்ணுலகுக் கதிபதியும் மினெர்வாவும் நம்முடைய பக்கத்தில் இருப்பின் அவர்களைவிட மேலான உதவியும் உளதோ?" என்று உல்லாஸன் கேட்கத்

தலைமகன் "தாம் சொல்லுவது சத்தியம். தேவருக்குயர்ந்தவர் எவருமிலர். அவர்முன் மனிதர் திரணந்தான்" என்றான்.

உல்லாஸன் தன் மகனைப் பார்த்துப் "பிள்ளாய், நீ அரண்மனைக்குப் போய் மாப்பிள்ளைமாரோடிரு. நம்மிருவருக்கு முள்ள ரகஸ்யத்தை உன் தாயிடத்துஞ் சொல்லக்கூடாது. ஆயுதங்களையெல்லாம் ஆயத்தஞ் செய்துவை. நான் பிக்ஷூவேஷம் பூண்டு மாப்பிள்ளைமாரிடத்தில் யாசிக்க வருவேன். அவர்கள் என்னை அவமரியாதைகள் செய்து அடித்தாலும் நீ எள்ளளவேனுங் கோபங்கொள்ளலாகாது. அவரிடத்தில் சாந்தமான சொற்களைப் பேசவேண்டுமேயன்றிச் சினந்து பேசலாகாது. மினெர்வா நம்மிருவருக்கும் ஒரு ஸம்ஞை காட்டுவாள். அதைப் பார்த்துக்கொண்டு சத்ருஹதத்திற்கு நாம் ஆரம்பிக்க வேண்டும்" என்று சொல்லத் தலைமகனும் "அப்படியே ஆகுக" வென்று வாக்களித்து அரண்மனை சென்றான். உல்லாஸனும் பிக்ஷூவுருவத்தைத் திரும்பவும் பெற்றான்.

கே. வெங்கிடராமய்யர், பி. ஏ.

மருந்துப்பக்குவமான மிளகாய்.—2 இந்துப்பு, மூங்கிலுப்பு, பெருங்காயம், வளையலுப்பு, திணிசுக்கு பலம் 1, புளித்ததயிர் படி $\frac{1}{2}$, பச்சமிளகாய் பலம் $1\frac{1}{2}$, இந்த உப்புக்களையும் பெருங்காயத்தையும் தயிரில் கலக்கி, மிளகாயையும் சேர்த்து, ஊறின மிளகாயை வெயிலில் உலர்த்தி, மறுபடியும் தயிரில் ஊறவைத்து இவ்வாறாக தயிர் முழுவதும் சுருங்கும் வரை செய்ய வேண்டியது. கடைசியில் உலர்ந்து உப்பேறின மிளகாயை ஒரு மண் கலத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும். அஜீரணம், ஆரோசிகம், உஷ்ணவாயு, பசியின்மை, அக்கினி மந்தம், அன்னத்துவேஷம், புளிச்சேப்பம், அஜீரணபேதி, வயிற்றுப்போக்கு வயிற்றுக்கடுப்பு, இவைகளால் கஷ்டப்படுகிறவர்கள் 4 மிளகாய்களைப் பொன்னிறமாய் வறுத்துப் பொடி செய்து அன்னத்துடன்சேர்த்துக் கொண்டு நெய் விட்டுச் சாப்பிட்டால் மேற்கூறிய வியாதிகள் சொஸ்தப்படுமாம்.

பெரும்புயல்

TEMPEST

(தொடர்ச்சி)

இதைப் பிராஸ்பெரோ தனது மாந்திரீக சக்தியினால் உணர்ந்துகொண்டு, இதுவே நல்ல சமயம் இது தவறினால் இனி இதுவரை செய்த முயற்சியும் வீண்போய்விடும். நம்முடைய நக்ஷத்திரம் உச்சத்திலிருக்கும்போதே, நாம் நினைத்தது அவ்வளவும் சித்தியடையக் கூடியகாலத்திலேயே நாம் செய்து முடித்துக்கொள்ளவேண்டியது. அதன் பின் போனகாரியத்தைப்பற்றி வருந்துதல் பயன்படாத காரியமென்றெண்ணி, உடனே ஏரியலைக் கூவி 'அதோ கப்பல்கள் தூரத்தில் வெகு கம்பீரமாய் பாய்விரித்து ஓடுவது தெரிகிறதா அதில் மிகவும்ஆடம்பரமானதுநேப்பிள்ஸ்அரசன்கப்பல். ஒரு பெரிய புயல் உண்டாகித் தத்தளிக்கும் அந்தக் கப்பலை யிவ்விடம் இழுத்துவந்து அதிலுள்ள மனிதரை யெல்லாம் கரைகொண்டுவந்து சேர்' என்று சொன்னார். சொன்ன மாத்திரத்தில் பூதத்திற்கு எதுதான் கடினம்.' உடனே, அண்டபகிரண்டங்களத்தனையும் வெடித்து இடி இடித்து, காற்றடித்து உலகமே ஒரு க்ஷணப்போழ்தில் முடிவுக்குவந்து விடுவதுபோல் ஒரு பெரும்புயல் பிரசண்ட மாருதம்போல் முழங்கி கர்ச்சித்தது. காற்று அகோரமாய் கப்பலின் முன்னும் பின்னும் பாய்மரத்திலும் அடிக்கட்டைகளிலும், மோதி கப்பல் மேலுங்கீழுமாய்ப் புரண்டு, தடுமாறித் தத்தளித்துக் கடலலைகள் மேகத்தோடு ஆடும் அம்மானை போல் எறியப்பட்டு மின்னல் மின்ன இடி இடிக்க கப்பலிலேயே நாலாபுறமும் வெளிச்சம் ஜொலித்தெரிய மனிதரெல்லாம் ஆ! வருணபகவான் வெகுண்டெழுந்து தன் செங்கோல் கொண்டு நம்மைக் கண்டிக்கிறானென்றும், சரி இனிப் பிழைப்பதில்லை என்றும் நினைக்கும்படி இருந்தது. ஆகவே யந்திர சக்தியால் கடுந்தூக்கங் கண்ட மாலுமிகள் கப்பலுள் தூங்கிக் கொண்டிருந்தாரே தவிர மற்றப்படி நேப்பிள்ஸ் அரசன் அவன் மகன் முதலிய எல்லோரும் உடனே உயிர் பிழைப்பது எவ்விதமாயினென்? உயிர் துறப்பதும் எவ்விதமாயினென்? என்று துணிந்து உடனே கடலில் குதித்துவிட்டார்கள். அலைகள் ஆரவாரித்தன. அலைகளை நீந்திப் போவது மகா கஷ்டம். என்றாலும் ஏரியல் அவர்

களைத் தனித்தனிக் கூட்டாய் இருவர் மூவர் சேர்ந்த ஒரு தனிக்கூட்டமாய் அத்தீவின் வெவ்வேறு இடங்களில் பிராஸ்பெரோவின் கட்டளைப்படி கொண்டுவந்து இறக்கியது. கப்பலை மற்றொரு இடத்தில் பத்திரமாய்ச் சேர்த்தது. கப்பலில் மாலுமிகள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். கரையேறினவர்கள், தாங்களும் தாம் நேரில் தமக்கு முன் கண்டவர்களுமட்டுமே பிழைத்தார்களன்றி மற்றவர்கள் இறந்து விட்டாரென்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அரசன் கப்பலுடன் வந்த கப்பல்கள், கடல் கொந்தளிப்பு நின்றவுடன் அரசன் கப்பல்மட்டும் காணாதபடியினால் அது இந்தப்புயலையுந் தப்பிப் பிழைக்கவா, அமிழ்ந்து போயிற்று என்று நிச்சயித்துக்கொண்டு, தாம் பிழைத்து வந்தது பெரிய புண்ணியமென்றெண்ணி உடனே நேப்பிள்ஸ் நகர மார்க்கமாய்த் திரும்பிப் போய்விட்டார்கள்.

இப்படிக் கடலிலிருந்து பிழைத்துவந்து தனியாகக் கரையேறினவன் நேப்பிள்ஸ் அரசனது மகனாகிய பர்டினாண்டு. இவன் ஒரு பாறையினுட்கார்ந்துகொண்டு, தன் தகப்பன் தண்ணீரில் வீழ்ந்து அமிழ்ந்திறந்து போனானே என துக்க சாகரத்தில் மூழ்கி அழுது கொண்டிருந்தான். ஏரியல், பிராஸ்பெரோவின் கட்டளைப்படி அவனிடம் போய் அவன் கண்ணுக்குக் காணா உருவெடுத்துக் காதுக்கினிமையாய்ப் பாடிக்கொண்டிருந்தது. அந்தப் பாட்டுகளில், ஏன் வருந்துகிறாய் மஞ்சள் மணல் நிறைந்தவொரு கடற்கரை யிங்குண்டு. அங்கு வந்து உல்லாசமாய் ஆடிப்பாடி பொழுதுபோக்கலாம் வாவென்றும் தகப்பன் மூழ்கி இறந்ததாய் நினைத்துக்கொண்டிருந்த விஷயத்திற்கு அந்த எண்ணம் மனதிலிருக்க வேண்டியதல்லவா என்று அதைச் சேர்த்துப் பாடி 30 அடி ஆழத்தில் கிடந்தாலும்,

எலும்போ பவளமாய்
கண்ணிரண்டும் நல்முத்தாய்
அழகழகாய் மாற்றம்பெற்று
அழியாம லிருக்கின்றான்.

என்றும் பாடியது. இது கேட்டு பர்டினாண்டு சரி இனி என்ன செய்வது. நடந்தது நடந்தாய் விட்டது. இனி மனிதரால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நடக்கவேண்டிய விஷயத்தைப் பார்ப்போமென்று நாலாபுறமும் பார்த்து, இந்த இடம் எப்படிப்பட்டது என்றெல்லாம் யோசிக்கவாரம்பித்தான். அப்பொழுது ஏரியல் பாடிக்கொண்டே நகர இதையாவது பின் தொடர்ந்து போவோமென்று நடந்தான். மஞ்சள் மணற்கரைக்குப் போவோம் என்று அதன்பின் ஓசை கேட்கும் வழியாகவே போய்க்கொண்டிருந்தான். இதற்குள் பிராஸ்பெரோ தன்மகள் மிராண்டாவைக் கூப்பிட்டு முதலில் கப்பல் அல்லாடுவதையும், பிறகு கப்பலிலுள்ள ஆட்கள் இன்னாரென்றும்; தங்களிருவருடைய வரலாற்றையும், சிறிது சிறிதாக ஞாபகப்படுத்துவது போல, அவள் மனம் கிரகிக்க கிரகிக்க சொல்லிக்கொண்டேவந்து, அவள் முற்றிலும் இந்தச் சங்கதிகளை உணர்ந்துகொண்ட பின்னர், இனி நீ ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இங்குவரக்கூடிய ஜனங்கள் பல் வேறுவகை இயற்கையமைந்தவர்கள். நீ உன் ராஜகுல மகிமைக்கும் என் புத்திரியாகிய கௌரவத்திற்கும் யாதொரு குறையும் தீங்குமில்லாமல் ஒழுங்காய் நடந்துகொள்ள வேண்டியது. நல்லது இதோ தூரத்தில் என்ன வருகிறது பார் என்று தூரத்தில் வரும் பர்டினாண்டைக் காண்பித்தான்.

மிராண்டா.—அது என்னமோ பூதம்போலிருக்கிறது. ஆனால் மிகுதியும் அழகு வாய்ந்ததாயிருக்கிறது. அங்குமிங்கும் பார்க்கிறது பாருங்கள்! நான் இதுவரை இதுபோலப் பார்த்ததில்லை. இது ஒரு புது ஜெந்துவாயிருக்கிறது.

பிராஸ்பெரோ.—இல்லை குழந்தாய், அது பூதமல்ல. நம்போல் உண்கவும், உறங்கவும், உணரவுமுள்ளதுதான். இந்த மனிதன் அந்த உடைபட்ட கப்பலிலிருந்தான். ஆகையால் முகம் வாடி வருந்தியிருக்கிறது. மற்றபடி இன்னு மதிகமாய் அழகு வாய்ந்தவன். தன்னுடன் வந்தவர்களெங்கே என்று தேடி வருகிறான்.

பர்டினாண்டு.—(இதற்குள் அவர்களைப் பார்க்குந் தூரத்துக்குள் நெருங்கி கிட்ட வந்து) ஆ இந்த இனிமையான பாட்டு ஓசை கேட்டது முதல் இந்த ரம்மியமான பாட்டும், இத்தீவிலுள்ளமற்றவெல்லாம்அழகியதோர் அரசிஆண்டு வரும் பூமி யென்று எண்ணியபடியே நீ யிருக்கிறாய் நீ இத்தீவின் அரசிதானா. இல்லாவிட்டால், நீ தெய்வப்பெண்தானோ, நான்தான் கனாக் கண்டு கொண்டிருக்கிறேனோ ஒன்றுந் தெரியவில்லையே ?

இப்படி அவன் பேசுவதைக் கேட்டு உடனே மிராண்டா நான் பெண்தான், தெய்வமில்லையென்று சொல்லிவிட்டுத் தன் பிதாவை நோக்கிப் பார்த்தாள். பர்டினாண்டுக்கு இந்த நிர்மானுஷ்யமான தீவில் தன்னூரில் வழங்கும் பாஷை பேசக்கூடிய ஆள்களுமுண்டாவென ஆச்சரிய மதிகரித்து, எப்படி நாம் திக்குத்திசை தெரியாமல் ஒரு புது ஊரில் நம்மூர் ஆளாவது நம் பாஷை தெரிந்த ஆளாவது வருவாரானால் எவ்வளவு ஆவலோடும், அன்போடும்அவர்களுடன்பேசவும் நடந்துகொள்ளவுமிருக்கிறோமோ அதேமாதிரி, இவன் பெரும் புயலில் அதிர்ஷ்ட வசமாய்த் தப்பிப்பிழைத்து, நிர்மானுஷியமான காட்டில் ஆட்களைக் கண்டு பிடித்ததேபெரும்பயன் அதில் அந்த ஆட்கள் தனக்குத்தெரிந்த பாஷையே பேசுவதானால் இன்னும் சிரேஷ்டம். அப்படிப் பேசக்கூடிய பெண் மிகவும் கட்டழகி. தெய்வப் பெண்போலிருந்தால், இவன் மனதிலிருந்தது அவா அன்புக்கு அளவில்லை யென்று சொல்லலாம். இதைப் பிராஸ்பெரோ மனித இயற்கை தெரிந்தவரால் நன்றாய்ப் பார்த்துக்கொண்டு தன் மனதுக்குள்ளேயே இவரிருவரும் ஒருவர்மீது ஒருவரிவ்வளவு அன்பு கொள்வது இவரிருவரும் தன் மனம்போலே மணம்புரிந்து இரு அரசாட்சியையு மொன்று சேர்த்து வெகுகால அன்புடனும் அதிகாரத்துடனு மிருப்பார்களென்று மிகுதியும் சந்தோஷப்பட்டு, என்றாலும் அதை அதிகமாய் வெளியிலும் காட்டக்கூடாது. உலகப்பழக்கமில்லாத தன் பிள்ளை அவன்பேரில் வெகு சீக்கிரமாய்ப் பிரியமுண்டாதல்கூடும். ஆகையால் அவன் இது எளிதில் கிடைத்த பலன் என்று சுலுவாயு மெண்ணிக்கொள்ளக்கூடாது என்று 'நல்லது நீ யார் எங்கு வந்தாய்' என்றெல்லாம் வினவவாரம்பித்தார். அவன், தான் தன் பிதா கடலில் மூழ்கி யிறந்துபோய்விட்டபடியால் நேப்பிள்ஸ் நகரத்திற்கு முதன்மையானவன்; அந்த ராஜ்ஜியத்திற்கு அரசன் என்று சொன்னான். 'இல்லை அவன் இறந்துபோனதாய்த் தெரியவில்லை. நீ வேவுகாரன் போலிருக்கிறது. என்னவாயினும் என்னோடே வா என்கவும், இராஜகுமாரனாகையால், இவ்விதமாய் ஒருவரும் பேச அதுவரையிலனுபவமுமில்லாதவனாகையாலும், நீயார்என்னை வேவுகாரனென்றும், என்னை உன் வேலைக்காரன் போல் உன்பின்னை யழைக்கிறாய் என்று கத்தியை உருவினான். ஆனால் கத்தி ஓங்கமுடியாமல் பிராஸ்பெரோவின் மந்திர சக்தியால் அப்படியே நின்றுவிட்டது. அடா இதென்ன வீரசூரப்புலி கத்தியை யெடுத்தான் ஓங்கமுடியவில்லை யென்று நகைத்துப் பரிகாசம் பண்ணிவிட்டு, நல்லது உனக்கா சொந்தபலம்இருக்காது. நான்சொல்லுகிறபடி செய் என்று கூட வழைத்துக்கொண்டு போனார். மிராண்டாவோ இது முழுவதும் நடந்த நேரமெல்லாம் பதைபதைத்து ஐயோ ! ஏன் என் பிதா இதுவரை எவ்வளவோ பிரியமாயிருக்கக் கூடியவர், இப்பொழுது இவ்வளவு குரூரமாய் நெஞ்சில் சிறிதும் பச்சாதாபமில்லாதவர்போல் பேசி, இவ்வரச குமாரனை ஒரு வேலைக்காரன் போல மிரட்டுகிறார். இவ்வளவு அழகுவாய்ந்தவன் வேவுகாரனாயிருப்பானா? என்று சொல்லிக்கொண்டே, தன் பிதாவோடு மன்றாடிக்கொண்டும், சினந்து பேசப் போகிறாரென்று பயந்துகொண்டும், மெல்ல மெல்ல அவர்களோடு தம் குடியிருப்புப் பக்கமாய் மூவருஞ் சென்றார்கள்.

ஆளிவிதை.—நமக்கு ஜுரம் அதிகரித்து விட்டால் நமது மண்டையில் பனிக்கட்டியைக் கட்டிவைத்து உஷ்ணத்தை தணிக்கவேண்டி வருகிறது. அப்படிப் பனிக்கட்டி அகப்படாவிட்டால், அதற்குப் பதிலாக ஆளிவிதைச் செடியை உபயோகிக்கலாம். இதற்கு ஓர் உதாரணம் கூறுவ தென்னவெனில் "என்னுடைய மகளுக்கு ஜுரம் அதிகமாயிருந்தபோது பனிக்கட்டிக்காக அநேக இடங்களில் தேடியும் அகப்படவில்லை. இந்த ஆளிவிதைச்செடியை வைத்துப் பார்த்ததில் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் உஷ்ணம் 104 டிகிரி யிலிருந்து 102 டிகிரிக்கு ஒரே தரியாய் இறங்கி விட்டது. குழந்தையும் சௌக்கியமாக விருக்கிறது." இத்தகையான செடியை உபயோகிக்கும் விதம் யாதெனில், "முதலில் ஆளிவிரையின் தோலை உரித்து விட்டால் உள்ளிருக்கும் தசை பனிக்கட்டி போலவே யிருக்கும். பிறகு அதை யெடுத்து காலையில் தலையில் கட்டிவிட்டு விசிறிக்கொண்டே யிருந்தால் சாயந்திரம் குளுமையாகவே யிருக்கும். பிறகு அதைவிட்டு, புதிதாக இரவில் கட்டினால் அடுத்த நாள் காலைவரையில் சீதளமாகவே யிருக்கும். இவ்விதச்செடி எங்கு மகப்படும்.

வஸந்த மாளிகை

VASANTHA MALIKAI

அத்தியாயம் 8

உபாயம்

STRATAGEMS

ஜானகி! ஆஹா! இந்தச் சித்திரங்களெல்லாம் எவ்வளவு இயற்கையாயிருக்கின்றன! இந்தத் திரைகளெல்லாம் எவ்வளவு அழகாய் இருக்கின்றன! ஆஹா! இந்த ஹம்ஸதூலிகா மன்ஸம் எவ்வளவு மிருதுவாசவும் நேர்த்தியாகவும் இருக்கின்றது! அடி இந்த நிலக்கண்ணுடி—! அடி இந்த பொன்பாத்திரங்கள்—! ஆஹா ஹா—! ஜானகி-இன்று மாலை இவ்வந்தப்புரம் முழுமையும் சிங்காரமாய் ஜோடித்திருப்பதைப் பார்த்தால்—என்ன வாஸனையடி இது!-ஏதோ தேவேந்திர பவனம்போல் விளங்குகின்றதேடி! ஆஹா! ஆஹா! ஆஹா! என் பிராணநாதா! — என் ஆசைக்காதலா—ஆஹா அவர் அன்பே அன்பு! அவர் ஆசையே ஆசை! நான் என்ன பாக்கியம் செய்தேனே முன் ஜன்மத்தில்—இப்படிப்பட்ட மஹானுபாவனைத் தேடி மாலையிட-ஜானகி! என் பதவியே பதவி! ஈசா! எல்லாம் உன் அருளே! என்று பலவாறு வியந்துகொண்டு தன் அந்தப்புரத்தில் ஓர் நிலைக்கண்ணுடி முன் நின்று, தன் பேரழகைப் பார்த்துத் தானே ஆநந்தபரவசையாய் பாநுமதி நிற்கின்றாள். தன் காதலனை ஆவலுடன் அவள் எதிர்பார்த்துக் கொண்டும், தனக்குப் புதிதாய் ஏற்பட்டிருக்கும் கௌரவத்தால் பவிஷை பாராட்டிக்கொண்டும், அவள் அங்கும் இங்கும் முன்னும் பின்னும் குதூகலத்தால் தன்னினைவற்று தேவடியைப் பூச்சிபோல, ஜிஙுஜிஙுவென்று உலாவிக்கொண் டிருக்கின்றாள்.

ஜானகி! ஆஹா என்ன சந்தோஷமாயிருக்கின்றது. என் காதலர் எப்பொழுது வரப்போகிறார். இன்னும் ஒரு நாழிகைக்குமேல் செல்லும் போலிருக்கிறதே! சரி! இருக்கட்டும்! என் பிராணநாதர் வருமுன்னமே உன் தகப்பனுரைப் பார்க்க விரும்புகிறேன். தவிரவும், என் காதலருக்கு அத்யந்த பிரியனுன, மஹாவீரனையும் பார்க்க—விரும்புகின்றேன். அவனுக்குக் கொஞ்சம் சுருக்குக் காட்டியிருக்கவேண்டும்—"

ஜானகி.—"அம்மணி! மஹாவீரன் வழிக்குப் போகாதேயுங்கள். அவனே முரடன், பழிபாவத்துக்கஞ்சான். அவன் சொல்லுகிறபடியெல்லாம் மந்திரி ஆடுகின்றார்— "பாம்போடு பழகுவதுபோல இருக்கிறது" என்று என் தகப்பனுர் அடிக்கடி சொல்லி யிருக்கிறார்.

பாநுமதி. — வாஸ்தவந்தான்! துஷ்டனைக் கண்டால் தூர நில்லு! என் ஜானகி! அது இருக்கட்டும், உன் தகப்பனுர் ஏன் இந்தச் சந்நியாசி வேஷம் தரித்திருக்கவேண்டும். அவர் வேஷத்துக்கும், ஸகவாஸத்துக்கும் எவ்வளவோ பாஸ்பரம் விரோதமாயிருக்கின்றதே! - நான் சொல்லுவதைப்பற்றி மனதில் வருத்தப்படாதே! ஏன் இந்தமாதிரி யெல்லாம்-

ஜானகி.—(கண்ணீர் ததும்ப) அம்மணி! அவரவர் வினையை அவரவரே அனுபவிக்க வேண்டும். என் தாயார் இருக்கும்வரை எவ்வளவோ நல்லவராகத்தான் என் தகப்பனுர் இருந்தார். அவள் இறந்ததும், அவள்மேலிருந்த அன்பால், எல்லாவற்றையும் வெறுத்துக் கொஞ்ச காலம் உத்தர தேசங்களில் சுற்றித் திரிந்தார். இப்பொழுது தான் கொஞ்ச காலமாய், இங்கேயிருக்கின்றார், மஹாவீரன் தாக்ஷிண்யத்துக்காகவும், மந்திரியின் தாக்ஷிண்யத்துக்காகவும்.

பாநுமதி.—கண்ணே ஜானகி? நீ மனம் வருந்தாதே. நான் பகிரங்கமாய் என் பதவியை யடைந்ததும்-உனக்கும் உன் தகப்பனுருக்கும்-ஐயோ-என் தகப்பனுர் எவ்வாறு தவிக்கின்றாரோ-ஐயோ! என் பிராணநாதர் வந்ததும் அவர் அநுமதி பெற்று-

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டு அவ்வந்தப்புரத்தின் முன்னணியின் பிராகாரத்திற் சென்று உல்லாஸமாய் உலாவிக்கொண்டிருக்கையில், தாதி வந்து, 'அம்மணீ! மஹாவீரர் தங்களைப் பார்க்கலாமாவென்று அநுமதி பெற்று வரச்சொன்னார்' என்றாள்.

'சரி! வாலாம்; என்று பாநுமதி ஆக்ஞாபிக்க, தாதி திரும்பிச்சென்ற சிறிது நேரத்துக்குள், மஹாவீரனும், அவன்பின், சாமியாரும் பிரவேசமானார்கள்.

கபடத்தால் இருண்ட தன் ஹிருதயத்தை, உபாயம், நாகரீகம், ஸமயோபசாரம் முதலானவைகளாலும், செழித்த முகத்தால் மறைத்துக்கொண்டு, மஹாவீரன் வந்தனோபசாரங்கள் செய்ய, ராணுவக்கட்டையான நமது சாமியார், சற்றுமுன் தன் ஆசனத்திலிருந்த பாநுமதி, சிறிது நேரத்துக்குள், இந்திரஜாலத்தாற்போல ராஜாங்க கோலத்துடன் விளங்குவதைப் பார்த்துக் திடுக்கிடுத்துத் தன் வலக்கையை நெற்றிக்கு நேர் உயர்த்தி 'ஸலாம்! அம்மணீ! என்று பிரக்ருத ஆச்சிரமத்தை மறந்து ராணுவ ஸலாமிட்டான்.

இளங்காற்றால் வணங்கும் பூங்கொத்துப்போல தன் முகத்தை முறையே சற்று வளைத்து, தன் புன்னகையால் அவர்களின் வந்தனோபசாரங்களை யங்கீகரித்துக்கொண்டு, அவர்கள் செய்யும் உபசாரங்களெல்லாம், மந்திரியின் மஹிஷியாய் விளங்கும் தன் உயர்பதவிக் கனுகுணமாயிருக்கின்றனவே யொழிய, கபடமானவைகளென்று அறிய முடியா அப்பேதை, 'மஹாவீர! இன்று மாலை நமக்கு நல்ல சமாசாரங் கொண்டு வரும் பாக்கியம் உனக்குக் கிடைத்ததல்லவா? நிரம்ப சந்தோஷம்" என புன்னகையுடன் சொல்ல,

மஹாவீரன்.—அம்மணீ! எல்லாம் தங்கள் தயவுதான்!—

சாமியார்.—அம்மணீ! அடியேனை மன்னித்தருளவேண்டும். ஏதோ தங்கள் விஷயத்தில் அடியேன் கண்டிப்பாய் நடந்ததாய்க் காட்டிக்கொண்டது, எனது எஜமானனை தங்கள் கணவன் ஆணையை முன்னிட்டே! கணவன் வழிப்பட்டு நடப்பதே கற்புடைய மங்கையரின் பேரணிகலன் என்ற பெரியோர் வாக்கியங்களைத் தாங்கள் அறியாதவர்களா?

பாநுமதி.—சாமியாரே! இந்தச் சந்தோஷ சமயத்தில் உங்களைப்போன்ற உரித்தானவர்களின் பிழைகளைப் பொறுப்பதைப் பார்க்கிலும் நம்முடைய பேரும் பதவிக்குத் தக்க பலன் என்ன?

சாமியார்.—"எல்லாம் தங்கள் தயவே!" என்று மறுபடி வணங்கிவிட்டு வெளியே சென்றான். இதற்குள் ஜானகியும் இன்னும் சில அலங்காரங்கள் செய்ய வேண்டுமென்று அந்தப்புரஞ்சென்றுவிட்டாள்.

இப்பொழுது பாநுமதியும் மஹாவீரனும் தனித்திருக்கின்றார்கள். மஹாவீரன் யாதொன்றும் பேசாதிருப்பதைக் கவனித்த பானுமதி ஏதோ பயத்தாலும், சங்கோசத்தாலும், அவ்வாறு பேசத்துணியவில்லை யென்று நினைத்து, "மஹாவீர! உன் முகத்தைப் பார்க்கையில், நீ ஏதோ நம்மிடம் தெரிவிக்க விரும்புவதுபோல--"

மஹாவீரன்.—தங்களுக்குத் தெரியாத தொன்றுமில்லை. நான் என்ன தெரிவிக்கப்போகிறேன்?

பாநுமதி.—மஹாவீர! கூசாமல் சொல்லு—

மஹாவீரன்.—அம்மணி—! தங்கள் அநுமதியின்பேரில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்—தாங்கள் இன்று தர்மராஜனைப் பார்க்க நேர்ந்ததல்லவா—?

பாநுமதி—ஆமாம்! அதற்கென்ன! அவன் வந்ததுமுதல்—அவன் சொன்ன சமாசாரங்களைக் கேட்டதுமுதல்—கொஞ்சம்—என் மனது—கவலை—

மஹாவீரன்.—அம்மணி! தங்கள் மனம் வருந்த யாது காரணமோ?

பாநுமதி.—என் தகப்பனுர் அதிக அபாய நிலைமையில்—

மஹாவீரன்.—ஹா! எங்கள் தகப்பனுர்! அப்பொழுது திடீரென்று சம்பவித்திருக்கவேண்டும்! எனது எஜமானர் கட்டளைப்படி யடிக்கடி அனுப்பப்படும் தூதுவன் சிறிது நேரத்துக்கு முன்தான் வந்தான்! தங்கள் தகப்பனுர் இன்று காலை சம்பக வனத்தில் வேட்டையாடிக்கொண்டிருந்ததைக் கண்டதாகச் சொன்னனே! அம்மணி! இதெல்லாம் தர்மராஜன் செய்த சூது! அவன் எதையும் செய்யத் துணிந்தவன்!—

பாநுமதி.—மஹாவீர! தர்மராஜனைப்பற்றி நீ அவ்வாறு அபவாதம் கூறுவது தகுதியல்ல. அவன் பரம யோக்கியன். கபடமே யற்றவன். கருணை வாய்ந்தவன். தர்மமே உருவெடுத்தாற்போல விளங்குபவன். பொய் சொல்லும் விதமே யறியாதவன். என் பிராணநாதனைக் கண்டவுடன்—என் பிதாவால் உபகாரமடையத் தகுதியானவர்களில் அவனே முதல்வன். அவனைப் பற்றி என் பிராணநாதரிடம்—'அம்மணி! நான் தர்மராஜனைப்பற்றி அபவாதம் கூறத் துணிந்தவனில்லை—ஆயினும்—எல்லோரும் நல்லவர்கள் தான்,—ஆயினும் நல்ல விஷயமென்று—தான் கைக்கொண்டதை ஒருவன் எண்ணுவானுகில்—அதைச் சாதிக்கும்பொருட்டு—ஒருசிறு பொய்! அம்மணி—அவ்வளவு கண்டிப்பாய்—தர்மசாஸ்திரம் பார்த்தால்—இவ்வுலகில் ஜீவிப்பதே அசாத்தியமாகும்."

"ராஜாங்க காரியங்களில் நீ அதிகமாய்ப் பழகியிருப்பதால், உனக்கு மனச்சாக்ஷி யென்பது கொஞ்சம் மலினமடைந்திருக்கின்றது. தர்ம

ராஜன் அப்படிப்பட்டவனல்ல. அவன் மாதிரியே வேறே! கேவலம் இவ்வுலக சுகத்தின் பொருட்டு நல்வழி தவறி நடக்கப்பட்டவன் அவனல்ல. இந்த உத்தம குணத்தின்பொருட்டே என் தந்தை யவனிடம் மிக்க அன்புபாராட்டி வருகிறார். இவ்வுத்தம குணத்திற்கே யவனை நான் காதலித் திருக்கவேண்டும். என்ன செய்யலாம். ஆயினும், இந்நிலைமையில் என் காந்தர்வ விவாஹத்தையும், என்னை யடைந்திருக்கும் மஹானையும் அவனறியாமையால், நான் ஏதோ உன் போன்றவர்கள் வசத்தால் அகப்பட்டுத் தவிப்பதாய் எண்ணி, என்னை மீட்டி என் தந்தையிடம் சேர்க்க, அவர் வியாதியால் வருந்துவதாய் ஒரு வேளை—சொல்லி யிருக்கலாம்.

அம்மணீ! அதில் சந்தேகமேயில்லை! அம்மணி! கலப்பில்லாச் சத்தியமே சிறந்த தர்மமென்று கூறித் திரியும்பேதையரில்நானும் ஒருவனென்று பாசாங்கு செய்யவில்லை. சமயோசிதமாய், அஃதைக் கொஞ்சம் மறைத்துப் பேசாவிடில் அதற்கு அழகுமில்லை. ஆயினும் எவ்வளவு கேவலமாய் என்னைத்தான் மதிப்பினும், அம்மஹானுக்கு மித்திரனாயிருக்கும் நான், தங்களிடமும் பொய் கூறுவேனாகில், அது எவ்வளவு காலம் வெளிப்படாது தப்பிக்க முடியும்."

"மஹாவீர! என் பிராணநாதர் உன்மேல் வைத்திருக்கும் விசுவாஸமும், அவர் கொண்டிருக்கும் ஆசையெனும் பெருங்கடலில் யாத்திரை செய்யும் ஓர் மரக்கலத்தின் மாலுமியாக உன் ஸகாயத்தை யவரடைந்திருப்பதும் நான் அறிவேன். ஏதோ தர்மனுக்குப் பரிந்து பேசியதால் உன்னைக் கேவலமாய் நினைத்ததாய் எண்ணாதே. என்ன ஆனாலும், நான் கிராமத்தில் வளர்ந்த பெண்தானே. ஆகையால் உபசார வார்த்தைகள் சொல்லத் தெரியாமல் முண்டமாய் உண்மையே பேசிவிட்டேன். வாஸ்தவந்தான்! காலத்துக்குத் தக்க கோலம்போடவேண்டியது நியாயந்தானே."

அம்மணீ! வாஸ்தவந்தான்! ஆயினும் நமது மஹாராணியாரைச் சுற்றிப் பழகி நாகரீகம் எனும் கடலில் நீந்திவரும் எந்தப் பெண்ணும், தமது காதலன்முன், இன்னொருவனைப்பற்றிப் புகழமாட்டாள்—"அது—அவ்வளவாக—"

"மஹாவீர! அதென்ன அப்படிக் கூறுகின்றாய்?என் பிராணநாதரிடம், தர்மராஜனைப்பற்றிக் கூறுவதில் என்ன கூடாத காரியம்?"

"அம்மணி! அப்படியானால் நமது எஜமானிடத்தில், எவ்வளவோ இரஹஸ்யமாய் காக்கப்படும் இவ்விடத்தைத் தர்மராஜன் கண்டுபிடித்து தம்மிடமும் சம்பாஷித்துச் சென்றார் என்று சொல்லப் போகிறீர்களாக்கும்?"

"தடையில்லாமல்! ஒன்றுகூட ஒளிக்காமல்?"

"ஏதோ தங்களிஷ்டம்! பின்னால் அதனால் ஏற்படும் துன்பத்தை யோசித்தால்"—

"என்ன துன்பம்?"

அம்மணீ சற்று யோசியுங்கள். இவ்வளவு தூரம், இவ்வரண்மனையும், நமது எஜமானருடைய போக்குவரவும் ஏன் இரகஸ்யமாய் காக்கப்படவேண்டும்? காரண மில்லாமலா? "ஏதோ என் பிராணநாதர் சித்தம்! அதில் என்ன ரகஸ்யமிருக்கிறது?"

"அம்மணீ! தங்களுக்குத் தெரியாதது ஒன்றும் புதிதாய்ச் சொல்லக்கூடியவனல்ல! நமது எஜமானருடைய மனோபாவங்களும், அவர்பொறுமை முதலான குணங்களும் என்னிலும் பன்மடங்கு தாங்கள் அறிந்திருப்பீர்கள். ஆயினும், இவ்வரண்மனைக்கு வெளியே நடக்கும் சில விஷயங்களில் அடியேனுக்கு"

"சும்மா! தைரியமாய்ச்சொல்லு!"

ஏதோ இவ்விடத்தைவிடக் கொஞ்சம் அதிகப் பரிசயமுண்டென்று எண்ணத் துணிகின்றேன்—"

"வாஸ்தவம்தான்—என்னசொல்லுகின்றாய்—"

"என்ன சொல்வது. இயற்கனவே தர்மராஜனுக்கும் நமது எஜமானருக்கும் அவ்வளவாக நல்ல எண்ணமில்லை—இவ்விஷயமும் தெரியும் விஷயத்தில்—என்ன நேரிடுமோ என்ற சங்கைதான். மேலும் இதுவரை இவ்வரண்மனை ரகஸ்யமும், ஏன்—! தங்கள் பதவியும், இவ்வரண்மனையைக் காத்துவரும் இந்த நாய்ப்பயல் சாமியாருக்குக்கூடத் தொலையாது. இனிமேல் ஒருவேளை இவையெல்லாம் வெளிப்பட காலம்வந்து நேர்ந்துவிட்டதோ என்னவோ!

பாநுமதி.—சற்று நேரம் ஆலோசித்துவிட்டு, மஹாவீர! நீ சொல்லுவதும் வாஸ்தவந்தான். ஒவ்வொருவரும் தம்தம் பரிசீலனைகளில் புத்திமான்தான். ஆகையால் நீ சொல்லுவதும் சற்று அங்கீகரிக்க வேண்டியதுதான். ஆயினும்—

ஆ! குதிரைக் காலடிச்சத்தம் கேட்கின்றது. என் பிராணநாதர் வந்துவிட்டார்." (தொடரும்.)

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

வியாஸ விதானம்.

Essay writing

IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

REFLECTIVE ESSAYS

மனதைப்பற்றிய விஷயங்கள்: மனோராஜ்யம்

Psychological Subjects : Day dream

குறிப்பு:—ஸ்வரூபம்: உதாரணங்கள் எல்லை-உண்டாகும் விதங்கள்-பயன் கதை-முடிவு.

மனோராஜ்யம் எனப்படுவது விழித்துக் கொண்டிருக்கையிலேயே மனது வேறு ஒருவிஷயத்தைத் தாரையாக விடாது நினைத்துக்கொண்டிருத்தலாகும். இந்தஎண்ணம்மனதைமுற்றிலும் கவர்ந்துவிடும். சுற்றுமுள்ளவைகள் ஒன்றும் தோற்றா. மனதிலிருக்கும் எண்ணமே ஓயாது முன் நிற்கும். அன்புள்ள காதலனைவிட்டுப் பிரிந்தபெண்ணுக்கு மனம் எவ்வளவு திருப்பினாலும் திரும்பாது; காதலன் விஷயமாகவே பாய்ந்தோடிக் கொண்டிருக்கும். இதுபோலவே புருஷனை இழந்த பூவைக்கும், பிள்ளையை இழந்த தாய்க்கும்மனோராஜ்யத்தின் கொடுமைஅதிகம். என்ன முயன்றும் துக்ககாரணத்தை விட்டு கொஞ்சம்கூட மனம் விலகாது: அதன் விஷயமான காரியங்களிலேயே சிலநாள் பாய்ந்துகொண்டிருக்கும். ஆகவே ஸுகத்தில் அதிக ஸுகத்தையும், துக்கத்தில் அதிக துக்கத்தைக் காட்டுவதும் இந்த மனோராஜ்யமே. ஒரு சிறைச்சாலையிலிருக்கும் ஒருவனுக்கு மனதில் அரண்மனை ஸுகாதிகள்ஊறிக்கொண்டிருப்பின் அவனுக்கு சிறைச்சாலையின் கஷ்டமே தோன்றாது. இக்கருத்தையே 'மனங்கொண்டது மாளிகை' என்ற பழமொழி அடக்கியுள்ளது. ஆகவே மனோராஜ்யம் வெளி விஷயத்திற்கு மாறாக விருப்பின் அதிலிருந்து வரும் ஸுகதுக்கங்களின் வலிமையைக் குறைத்துவிடும்.

மனோராஜ்யம் என்பது ஒரு எல்லை கடந்துவிட்ட மனோபாவத்திற்கே பெயர். மனதால் எண்ணும் தொடர்ந்த எண்ணங்களை அநேக விதப் பெயரிட்டழைப்பது வழக்கம். மதம் கடவுள் இவைகள் விஷயமாக இது இருக்குமாயின் இதற்குத்தியானம் என்று பெயர். வெளியில் செய்து முடிக்க வேண்டிய கார்ய விஷயமாக இது ஏற்பட்டால் இதற்கு யோசனை என்று பெயர் வெளி விஷயத்திற்கு ஒருவித ஸம்பந்தமும் இன்றி மனதை செலவிட்டு மனம்போனபோக்கே போய்க் காலத்தை வீணாகக் கழிப்பதற்குத்தான் மனோராஜ்யம் என்று பெயர். இது ஸாதாரணமாகக் கொடியவர்கள், மூடர்கள், விஷய ஆசை உள்ளவர்கள் ஆகிய இவர்களிடமே முக்கியமாகக் காணப்படும்: முற்கூறியவைகள் முறையே அப்யாஸிகளிடத்தும், வியாபாரிகளிடத்தும் காணப்படும். ஆதலால் வெளிவிஷய ஸம்பந்தம் நீங்கி ஒரு பயனும் இன்றி எண்ணப்படும் எண்ணம் மனோராஜ்யமாகி விடும்.

இம்மாதிரியான மனோராஜ்யங்கள் உண்டாகக் காரணமென்ன? என்ற விஷயத்தைப்பற்றி யாராய்வோம். ஒருவன் வாசிக்கும் புஸ்தகங்களே இதற்குக் காரணம். உலகில் இல்லா அற்புத விஷயங்கள் அடங்கிய அரபிக்கதைகளை விடாது வாசித்தால் நம்மனம் உலக ஸம்பந்தமற்ற அற்புதங்களிலேயே ஊறிக் கொண்டிருக்கும். உலகம் ஆச்சர்யமாகத் தோன்றாது, நிஸ்ஸாரமாகப்படும். சாப்பிடச் சோறு கூப்பிட வேலையாள்கள் இருக்குமட்டும் இந்த அற்புத மனோராஜ்யம் நிலைக்கும்: அவ்வளவுதான். உலகக் கடமைகளைச்செய்து மேன்மைபெற மனமெழாது தாழ்ந்தநிலை வந்துவிடும். இம்மாதிரியே தான் நாடகம் கற்பனைக் கதைகள் (நாவல்கள்) வாசிப்பவர்கள் கதியும். சாகுந்தளம் வாசித்து சகுந்தலைபோன்ற மனைவிவேண்டும் என்ற மனோராஜ்யத்தில் ஒருவன் விழுந்துவிட்டால், அவனுக்குக் கல்யாணம் எப்படி யாகும்? இல்லறத்தில் மனம் எவ்வாறு நிலைக்கும்? அழகிய பெண்டிரை எல்லாம் வெறித்து நோக்கும் மானம் கெட்ட நிலைவந்து விடாதா? ஆகவேநாம் வாசிக்கும் புத்தகங்களே மனோராஜ்யத்தைத் தூண்டி நம்மைச் சீரழியச் செய்வது. மேலும், நமது தோழர்கள் உறவினர்கள் முதலியோரும் வீண் வர்ணனைகள் பொய்கள் கலந்து பேசுவதாலும் இந்த மனோநிலை உண்டாகி ஓங்கும். ஆகவே வாய்ப்பந்தல் போடுபவர்களோடு அதிகப் பழக்கம் கூடாது.

மனோராஜ்யத்தின் பயனை முற்கூறியவைகளிலிருந்து சேர்த்து எழுதுவோம். மனோராஜ்யம் ஒருவன் முயற்சியைக்குறையும்படிசெய்துவிடும். உலகவிஷயத்தில் ஒருவித பைத்தியமான வெறுப்பையுண்டாக்கி பெருங் கஷ்டங்களுக்கு ஒரு

வனை ஆளாக்கிவிடும். ஸ—கங்களில் கால் தலை தெரியாது மூழ்கிவிடவும் துக்கத்திலிருந்து மீளாது தத்தளிக்கவும் செய்துவிடும். பார்ப்போர் நகைப்புக்கு இடன் உண்டாக்கிவிடும். மனோராஜ்யம் [illegible]கொண்ட மூடனை எவராலும் திருத்தமுடியாது. அதன் கொடிய பலன்களை அநுபவித்துத்தான் அவன் திருந்தவேண்டும். வியாதி வந்துவிட்டால் அதைப் பெரிதாக எண்ணிவளர்விட்டு வருந்துவதும் இந்த மனோராஜ்யத்தால்தான். ஆதலால் இதை எப்பொழுதும் புத்திமான் அடக்கி யாண்டுகொண்டே வரவேண்டும்.

மனோராஜ்யத்தின் கொடுமையைக் காட்டும் கதைகள் அநேகம் உண்டு. பிராஹ்மணர்த்தக்காரன் குளக்கரையில் வந்து உட்கார்ந்து, தலையிலிருந்த ஒரு எள்ளை எடுத்துப்பார்த்து மனோராஜ்யம் செய்து குளத்துள் விழுந்த கதையும், தயிர்க்காரன் மனோராஜ்யம் செய்து குதிரை ஓட்டி தயிர்க்குடத்தைத் உடைத்த கதையும் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அரபிக்கதையில் **அல்நாஸ்கர்** என்ற கண்ணாடி வியாபாரி விஷயம் மிக வேடிக்கையாக விருக்கும். அல்நாஸ்கர் தகப்பன் இறக்குங்கால் ரூ. 100-அவனுக்கு ஆஸ்தியாக வைத்துவிட்டுப் போனான். அதை அவன் கண்ணாடிஸாமான்கள் வாங்குவதில் செலவிட்டு கண்ணாடிக்கடை பரப்பிக்கொண்டு வியாபாரம் தொடங்கினான். அப்பொழுது அவன் சுவரில் சாய்ந்துகொண்டு,காலை கண்ணாடிக்கூடையின் அருகில் நீட்டிக்கொண்டு வாங்குபவர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில்மனோராஜ்யம் செய்து விஷயங்களை வாய்விட்டுக் கூறவும் தொடங்கிவிட்டான். அடுத்த கடைக்காரர் இந்த அற்புதத்தை வந்து கேட்டுக்கொண்டே நின்று விட்டார்கள்.

அல்நாஸ்கர் கூறலுற்றான்:—'நான் இவைகளை இரட்டிப்பு விலைக்கு விற்று 200 ரூ ஸம்பாதிப்பேன். இப்படி மறுபடியும் மறுபடியும் வியாபாரம் செய்து 1000, 10,000 ரூபாய்கள் வாரிவிடுவேன். உடனே இந்தத் தொழிலை விட்டு ரத்ன வியாபாரியாகி லக்ஷாதிலக்ஷமாகக் குவித்துவிடுவேன். பின்னர் இவ்வூர் மந்திரி பெண்ணை கோலாகலமாக மணம் முடிப்பேன். அவள் தனது குலக்கர்வத்தை என்னிடம் காட்டவர நான் கோபங்கொள்ளுவேன். 'துரைமகளானாலும் பாரி, உரியவனுக்கவள் ஊழியக்காரி' தானே. அப்பொழுது என் மாமி எங்கள் பிணக்கைத் தீர்க்க பெண்ணை என் உள்ளே கால் மாட்டில்கொண்டு விட்டு கெஞ்சி மன்றாடுவாள். பெண்சாதி மிகப் பணிவுடையவளாக இருப்பினும்அவளை அப்பொழுது அங்கீகரியாது இப்படி உதைப்பேன்,' என்று தன் காலால் ஒரு உதை உதைத்தான். இது கண்ணாடிக் கூடையில் பட்டு கண்ணாடி ஸாமான்கள் சுக்குத் தூளாகிவிட்டன. உண்டான சப்தத்தில் உலக பிரக்ஞை வந்தது அல்நாஸ்கருக்கும். எல்லோரும் 'என்னடா மனக்கோட்டை கட்டி அஸ்திவாரத்தைத் தகர்த்து விட்டாயே' என்று கூறி வயிறுவெடிக்க சிரித்தனர். மனோராஜ்யம் படுத்தும் பாடு இத்தன்மையாகவே இருக்கும்.

இம்மாதிரியே விவரிக்கக்கூடிய விஷயங்கள்

1. ஞாபக சக்தி
2. உருப்போடுவது
3. கற்பனாசக்தி
4. அறிவு
5. தூக்கம்
6. கனவு
7. உறக்க நடை
8. மூர்ச்சை: மரணம்
9. தண்டனையும்மனோநிலையும்
10. கவிதை

போதக் குறிப்புகள்

1, ஸ்வரூபம், உதாரணங்கள்
2. எல்லை
3. உண்டாகும் விதம்
4, பயன்
5. கதை
6. முடிவு

மொழிபெயர்ப்பு விளக்கம்
Translation Models
Imitation and Reality

A certain man had the peculiar power of grunting exactly like a pig, so much so that whenever he grunted where pigs were grazing, they would all turn round to see if any new member had come into their fold. This man's fame spread abroad and he began to tour to obtain money by means of his art. Wherever he went he erected a pandal and issued tickets, for admission, all of which got exhausted very soon—such was the eagerness of people to hear him grunt. While he was thus making money in a village, a sage happened to pass by with his disciples, and it struck him that he could teach a good lesson to them through this incident. Accordingly he ordered a small

pandal to be erected and advertised that even better grunting could be heard there than in the other pandal and that free of cost. The people were naturally very eager to hear it and they rushed in. What did the sage do? He brought a pig before them and squeezing it a little, made it grunt. Really the grunt was much better than the man's, but the people exclaimed, "Pooh, is this all? We hear this every day, but what is there in it? It is nothing wonderful" and went away. In spite of the loud tom-tom which he engaged, not one would enter his pandal, while that of the man-pig was crowded to suffocation every few minutes. After all the people had left his pandal, the sage addressed his disciples and said, here is "splendid lesson for us. Men seldom care for reality but always go in for imitation. That is why this world exists which is a mere imitation, a reflection in the distorting mirror of Maya of the great Atman. No external help is required to see the *Self* but very few want it and even if you eagerly advertise it, none will go to you except those who love Truth of Truth's sake. Reflect on this."

உண்மையும் தோற்றமும்

ஒரு மனிதனுக்கு பன்றிகள்போல் உறுமும் திறம் நன்றாக இருந்தது. பன்றிகள் மேய்ந்துகொண்டிருக்கும் இடம் போய் அவன் உறுமினால் தமது கூட்டத்தில் ஏதாவது ஒரு புதிய பன்றிதான் வந்து விட்டதோ என்று அவைகள் நாற்புறமும் சுற்றி வெருண்டு நோக்குமாம். அவன் கீர்த்தி உலகெங்கும் பரவியதும், தன் திறமையால் அவன் பணம் ஸம்பாதிக்க தேசசஞ்சாரம் செய்யத் தொடங்கினான். ஓர் ஊரில் இவன் உறுமிப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கையில், அவ்வூர் வழியாக ஒருமஹான் தமது சிஷ்யர்களுடன் போய்க்கொண்டிருந்தார். அவன் பணம் சம்பாதிக்கும் வழியைக் கண்டதும் அதன் மூலமாகத் தமது சிஷ்யர்களுக்கு நல்லவிஷயம் ஒன்றை போதிக்கலாமென்று அவருக்குப்பட, உடனே, அங்கே பந்தல் ஒன்றைத் தயார்செய்து 'இங்கு வேறிடங்களில் கேட்கக்கூடிய உறுமலைவிடச் சிறந்த உறுமலை கேட்கலாம். இதற்கோ காசு ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை. இஷ்டமானவர்கள் வரலாம்' என்று தமது சிஷ்யர்களால் தண்டோராப் போடுவித்தார். ருசிகண்ட அவ்வூர் ஜனங்கள், மிகுந்த ஆவலோடு மஹானது பந்தலில் வந்து கூடினார்கள். அவரோ நிஜமான பன்றி ஒன்றை வாங்கிவந்து அதன் காதைத் திருகிக் கத்தும்படி செய்தார். உண்மையில் இது மற்றையவன் உறுமலைவிட மிக நேர்த்தியாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஆனால் ஜனங்கள் எல்லோரும் 'சீ! இதுதானா! இதை நாம் தினம் கேட்கவில்லையா? இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது!'' என்று இகழ்ந்து பேசிவிட்டுப் போய்விட்டனர். மஹான் எவ்வளவோ தண்டோராப்போட்டு பாடுபட்டுப் பார்த்தார். அவர் பந்தலுள் ஒரு மனிதன்கூட வரவில்லை. ஆனால் போலிப்பன்றியின் பந்தலில் கூட்டம் எப்பொழுதும் விடாது கூடிக்கொண்டே இருந்தது. பந்தல் காலியானதும், மஹான் தமது சிஷ்யர்களைச்சூழ இருக்கும்படி சொல்லி 'பார்த்தீர்களா! இப்பொழுது செய்த சோதனையில் ஓர் அற்புதம் வெளியாகின்றது. மனிதர்களுக்கு உண்மை வஸ்துக்களில் இஷ்டமில்லை. போலித்தோற்றங்களில் அதிகப் பிரீதி. இதனால்தான் போலி இன்பங்களாகிய உலகஇன்பங்களைக் கட்டிக்கொண்டு அவைகளை விட்டு நீங்க மனம் வராது அவர்கள் அவைகளில் கிடந்து உழன்று வருந்துகின்றார்கள். மேன்மை அடைவது கஷ்டமல்ல. அதற்கு எந்த வெளிவஸ்துவின் ஸகாயமும் கொஞ்சமேனும் வேண்டியதில்லை. அதை அடைய வேண்டுமென்ற மனப்பூர்வ ஆவல் தான் வேண்டும். நாம் எவ்வளவுதான் பேரின்பத்தின் சிறப்பை எடுத்துரைத்த போதிலும் அதில் ருசி உள்ளவர்கள் தவிர வேறொருவரும் நம்மை அணுகார். இதைப்பற்றிச் சிந்தியுங்கள்'' என்றார்.

ஓரற்புத தபால்யந்திரம்.—லண்டனிலுள்ள ஒரு போஸ்டாபீஸில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு யந்திரம் வைக்கப்பட்டிருக்கின்றது. அது தபாற்றலைகளைக் கடிதங்களில் தானாகவே யொட்டிவிடுமாம்; ஒரு மணி நேரத்தில் 2000 முதல் 3000 வரையிற் றபாற்றலைகளை யொட்டுமாம்; 50000 ஸ்டாம்புகளைக் கொள்ளுமிடமுடையதாம்; இவ்வாறான யந்திரங்கள் பம்பாய்ப் போஸ்டாபீசுகளில் வைத்துப் பரீக்ஷிக்கப்பட்டு வருகின்றன வென்று தெரிகின்றது. அந்த யந்திரம் அன்னிய தேசத்து நாணயங்களையும் தேய்ந்துபோன நாணயங்களையும் தன்மீது வைத்தால் கீழே தள்ளிவிடுமாம்; செலாமணியாகக்கூடிய நாணயங்களை வைத்தால் ஸ்டாம்பை வெளிக்கு கொண்டுவந்து கடிதங்கள்மீது ஒட்டுமாம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்தியாயம் 13

ஸித்தர் பூர்வ சரித்திரம்

அற்பு தச்செய லாற்றலின் யாரையு மயக்கி
வற்பு றும்பொரு ளாசையின் மனமதான் றழியு
மற்ப வீழ்நெறி யடைகுறாஉஞ் சித்தரின் இதயம்
பொற்புண் ஞானியர் போற்றுமென் சடப்பொருள்
[இவற்றை?

ஐயோ பாவம்! நாராயணய்யர் பிரமித்து தூண்போல் நின்றுவிட்டார். அங்கிருந்த அலங்கோலத்தைக் கண்டும் உறக்கக் கூவ அவருக்கு நாவெழவில்லை. 'ஐயோ! ஐயோ!! திருடன்! திருடன்!!' என்று கூவ இரண்டொருதரம் கூடியவரையில் முயற்சித்துப் பார்த்தும் முடியவில்லை. இச்சொற்கள் பயத்தால் அவர் தொண்டையில் சிக்கிக்கொண்டுவிட்டன. முடிவில் குழிறிய வாக்காக இவை வெளி வந்தன். ஸாதாரணமாக இடும் கூக்குரலைவிட இதுமிக ஒலி உடையதாகவே இருந்தது. வெகுதரம் கத்த முயற்சித்து பயத்தால் தடுக்கப்பட்டு பின்னர் பயத்தாலேயே கரை புரண்டு அணைகளை இடித்து வரும் வெள்ளம்போல உண்டாக்கும்சப்தம் இவ்வாறுதானிருக்கும். இதனால் வீட்டில் மிகுந்த குழப்பம் உண்டாகி வெளியிலும் பரவியது. முதலில் வீட்டுச் சேவகர்கள் வாரிச் சுருட்டிக்கொண்டெழுந்து பசபசவென்றுவிழித்தனர்; வீட்டிலுள்ளோர் எல்லோரும் கிளம்பிவிட்டனர்; பின்னர் அயலாரும், அருகிலிருந்த நகர ரக்ஷணை கூட்டத்தாரும் கிளம்பி ஓடிவந்துவிட்டனர். இந்த அல்லோலகல்லோலத்திற் கிடையில்,பயத்தால் வெளுத்த முகமும், விரிந்து புரண்ட கூந்தலும் உடையாளாய் வெலுவெலுக்க ருக்மிணி அலறிக்கொண் டோடிவந்து, தகப்பனார்மேல் சாய்ந்துகொண்டு, 'அவர்! அவர்! உங்கள் அருமை மாப்பிள்ளை! மாப்பிள்ளை!!' என்று ஓலமிட்டாள். தூக்கி வாரிப்போட்டது நாராயணய்யருக்கு! உடல் பதற'மாப்பிள்ளையா? அவனுக்கு என்ன? என்ன சமாசாரம்? திருடன் கழுத்தறுத்துவிட்டானா? என்ன? சொல்லித் தொலையேன்!' என்று உளறிக் கொட்டினார். 'அவர் என்னை அநாதை யாக்கிவிட்டோடிவிட்டார்! போயே போய்விட்டார்!' என்று கொந்தி அழுதுகொண்டு வெளியிட்டாள். 'அப்படியா! ஐயோ! நான் தொலைந்துபோனேன்! போனேன்! என் பிராணன் போகட்டுமே!!' என்று கதறி பாவம் அந்தப் பிதா மூர்ச்சைபோட்டு அடியற்ற மரம்போல் சாய்ந்துவிட்டார். அங்கிருந்தோர் அவரைத் தூக்கி நிறுத்திவிட அவர் நாற்புறமும் 'திருடன்! திருடன்!! மாப்பிள்ளை! மாப்பிள்ளை!! பணப்பெட்டி! பணப்பெட்டி!!' என்று கதறிக்கொண்டோடி மறுபடியும் முன்போல விழுந்துவிட்டார். இந்த ஸமயம் அவருக்கு வெகு நாழிகை தேற உணர்ச்சியே வரவில்லை. ஜனங்கள் மேலும் கீழுமாக ஓடித்தேடிப் பார்த்தனர்; சித்தரையாவது, ஸ்ரீநிவாஸனையாவது, பணப்பெட்டியாவது எங்குதேடியும் அகப்படவில்லை.

இவ்வாறு கொஞ்சநாழிகை கழிந்ததும், குழப்பம் அடங்கி எல்லோருக்கும் சற்று மனம் நிதானப்பட்டது. நாராயணய்யரும் மூர்ச்சை நீங்கி சற்று தேர்ந்து எழுந்திருந்தார். காவற் சேவகர்கள் மேல் நடக்க வேண்டியவைகளைப்பற்றி ஆலோசித்த வண்ணம் இருந்தனர். அங்குக் கூடியிருந்த மற்றவர்கள் எல்லோரும், வாயில் வரத்தகாத வார்த்தைகளை வாரி வீசி ஸித்தபுருஷரை வாய்கொண்ட மட்டும் வைது தீர்த்தனர். ஸித்தபுருஷன் ஒரு ஜாலக்காரன், மோசக்காரன், பெருந்திருடன், கொடியவன் என்றஇவைபோன்ற துர்க்குண ஸம்பூர்ணன் என்றே எல்லோரும் மதிக்கத் தொடங்கிவிட்டனர். 'எனக்கு முதலிலேயே தெரியுமே இந்தப் பயல் வெறும் வேஷக்காரன் என்று' என்றான் ஒருவன். 'இவன் சோற்றுக்கில்லா சோம்பேறியடா' என்றான் மற்றொருவன். 'சாஸ்திரியைக் கண்டதும் கதிகலங்கிவிட்டது அவனுக்கு, நீ பார்க்கல்லே' என்றான் வேறு ஒருவன். 'அதாண்டா! சாஸ்திரிக்கு தெரியும்போலிருக்கு இவன் வண்டவாளம் எல்லாம்!' என்றான் ஒருவன். 'பெரியோரைப் பழிக்கலாகாது: பாபம்! அந்தப் பயல் ஸ்ரீநிவாஸன்தான் திருடியிருக்கவேண்டும்' என்றான் ஐந்தாவன். 'இரண்டுபேரும் கூட்டுடா!' என்றான் வேறொருவன். இவ்வாறு ஜனங்கள் எல்லோரும்தமக்குத் தோன்றியவாறுஇவ்விஷயமாக வார்த்தையாடி வருகையில்,அந்தத் துரோகியான ஸித்தன் வாஸுதேவ சாஸ்திரியைக் கண்டு கலங்கியதால் ஓடிவிட்டான் போலும் என்று நாராயணய்யர் மனதில் பட்டது. உடனே சாஸ்திரிக்கு ஸித்தன் சரக்குத்தெரிந்திருக்கலாம், என்ற எண்ணம் பிறக்க, 'அந்த மடப்பயல் ஏன் என்னிடம் சொல்லவில்லை? சற்று எச்சரித்தாவது இருக்கக் கூடாதா?' என்று தோன்ற அதிககோபம் வந்துவிட்டது. உடனே ஒரு வேலையாளைக் கூப்பிட்டு 'சாஸ்திரியை உடனே தலைமயிரைப் பிடித்திழுத்துவா' என்று கடுங்கட்டளை யிட்டார்.

இந்த ஸேவகன் சாஸ்திரி வீட்டிற்கு வரும்பொழுது, அன்னம்மாள் அழுக்கடைந்த தலையணையில் சாய்ந்துகொண்டு பெருங் குறட்டைவிட்டுக்கொண்டிருந்தாள்: சாஸ்திரியோ தம் வீட்டு முற்றத்தில் ஒரு பலகையின் மேல் காலைமடித்து உட்கார்ந்துகொண்டு நிஷ்டாவஸாத்திலிருந்தார். ரிஷிபோன்ற சிறப்புவாய்ந்த முகத்தில் அக்காலத்தில் அப்பொழுது அலர்ந்த தாமரைப்பூவின் காந்தியைவிட சிறந்ததான ஒரு விநோத தேஜஸ் தவழ்ந்துகொண்டிருந்தது. உலகம் இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடி விட்டது: அவர் அமிழ்ந்து கிடக்கும் திவ்ய தேஜஸில், திருடர்களாவது, மாப்பிள்ளைகளாவது, பணப்பெட்டியாவது, ஸித்தர்களாவது இல்லை. அங்கு சாந்தி சாந்தி சாந்தி என்று கூறப்படும் அமைதியே இருந்தது. அலையற்ற நிரதிசய ஆனந்த ஸாகரம், விரிகடல், அகல்விசும்பு, ஸூர்யசந்திர நக்ஷத்திராதி அளவிலகப்படா அண்டப்பரப்பு, இவைகளைவிட ஓடி விரிந்ததாயும், பெருமை சிறுமை என்று கூறொணததாயும், தேசகால நிமித்தாதீதமாயும் இருக்கும் நிலையாகவே இருந்தனர் நமதுசாஸ்திரிகள். நாராயணய்யர் ஸேவகன்வந்து கதவிடித்த தருணத்தில், அவரிடம் எண்ணம் அனுபவத்திலும், அனுபவம் ஆரூடத்திலும், ஆரூடம் ஸஹஜத்திலும் முறையே இறந்து நின்றது. அறிபவன், அனுபவிப்பவன், அல்லது அறிவு அனுபவம் ஆகிய இவைகள் அங்கு தலையெடுக்கவே இல்லை. மறுபடி இடித்தான் சேவகன்; உள்ளிருந்தோர் இருவரும் அவஸர வேலையிலிருந்தமையால் பதில் ஒன்றும் வரவில்லை.

மூன்றாம்தரம் வெகு பலமாக இடித்தான் சேவகன்; அலறிப் புடைத்துக் கொண்டெழுந்தாள் அன்னம்மாள்! பதறி விழுந்தவன் வாயிலிருந்த வேலையாள்! ஒரு மலைக் கணவாயில் வழிதப்பிவிட்டதாகவும், அங்கு ஓநாய் புலிமுதலிய காட்டுமிருகங்களிருந்தமையால், தப்பிப்பிழைக்க ஒரு செங்குத்தான பாறையின்மேலேறிப் போனதாகவும் அங்கு கால் சருக்கிவிட கீழேவிழுந்துவிட்டதாகவும், அப்பொழுது ஒருகொடியபுலி வாய்க்கு நேரேவந்ததாகவும்,ஸ்வப்னம்கண்டிருந்தாள் அன்னம்மாள். வேலையாள் இடித்ததும், அவள் மேல் புலி பாய்ந்ததும் சரியாகவிருக்கக் கதிறிக்கொண்டெழுந்தாள். கதவு தட்டும் ஓசையைவிட அலங்காரி அன்னத்தினது திவ்ய த்வனி சாஸ்திரிகள் ஸமாதியைக் கலைத்துவிட முக்கிய முகாந்திரமாயிற்று. விழித்தாள் அன்னம்மாள். புலிவாயில் அகப்பட்டிராததைக் கண்டு தேறினாள். மறுபுறம் திரும்பி முற்றத்தில் தன் கணவன் உட்கார்ந்திருப்பதைக் கண்ணுற்றாள். 'வேதாந்தம் ராவெல்லாம் ஒக்காந்து கிண்டே இருக்கு. கதவைத் தொரந்து யாரிடிக்கிறது என்றுகூட பாக்கிறதில்லை' என்று கண்டித்து வைதாள். பின்னர் கதவைத் திறக்க, வேலையாள் வாஸுதேவ சாஸ்திரி எங்கே என்றான். அப்பொழுது ஸத்ய பிரஹ்ம நிலையிலிருந்து மித்யாஜகத் நிலைக்கு வந்தும் ஜகத் வ்யவஹாரத்திற்குத் தயாராகவில்லா சாஸ்திரியிடம் ஓடோடியும் வந்தாள் அன்னம்மாள். கத்திரிக்காய்க்கூடை ஊறுகாய்ப் பானை இவைகளைக் குலுக்குவது போலச் சாஸ்திரிகள் தோளைப் பிடித்து உலுக்கினாள். 'வேதாந்தம்! ஏ வேதாந்தம்!! ஏந்திரு! பொணம்போல வெரச்சு கிடக்கரேயே!! ஏந்திருன்ன!!'என்றுகாது செவிடுபடும்படி அவர் காதிற்குள் உபதேசம் செய்தாள். ஒன்றும் சொல்லாது சாஸ்திரி எழுந்து கொஞ்சநாழிகையில் நாராயணய்யர் வீடு வந்துசேர்ந்தார்.

இவரை வெகு பரபரப்புடன் எதிர்பார்த்திருந்த நாராயணய்யருக்கு இவரைக் கண்டதும் அடங்காக் கோபம் வந்துவிட்டது,

நாராயணய்யர்.—(மிகுந்த கோபத்துடன் வாய் கொண்டமட்டும் வைதுகொண்டு) இவை எல்லாவற்றை முன்னரே ஏன் என்னிடம் கூறவில்லை. நடந்ததெல்லாம் தெரியுமா உனக்கு? பணப்பெட்டி! மாப்பிள்ளை!! படுவாப்பயல் ஸித்தன்!!! எனக்கு ரொம்ப வெட்கமா யிருக்கிறது! அவன் காலிலேயும் நான் போய் விழுந்தேனே!! மானக்கேடு!!! ஏன் என்னிடம் இவைகளை முன்னரே தெரிவிக்கவில்லை?

சாஸ்திரி.—எனக்கு ரொம்ப துக்கமாகத்தான் இருக்கிறது!

நா.—துக்கமோ சுகமோ ! ஏன் என்னிடம் கூறவில்லை ? சொல்.

சா.—எனக்குத் தெரியாதே.

நா.—உனக்குத் தெரிந்திருக்கவேண்டுமே ! ஏன் உனக்குத் தெரியவில்லை?

சா.—(மனதிற்குள்) இதென்ன கேள்வி! (மௌனம்)

நா.—இந்தப் பாவிப்பெண்ணை விட்டுவிட்டு அந்தப் பேய்ப்பயல் ஸ்ரீனிவாஸன் ஓடிவிட்டான்! இவைகளை எல்லாம் ஏன் என்னிடம் தெரியப் படுத்தவில்லை ? இப்பொழுதாவது போக்கிரியின் தன் சாயம் வெளுக்கட்டும். சொல் பார்ப்போம். ஆஹா வாஸு! நீகூட என்னை இவ்வாறு காட்டிக் கொடுத்து வேடிக்கைப் பார்ப்பாய் என்று நான் எண்ணவில்லையே ! ஐயோ ! மாப்பிள்ளை ! பணப் பெட்டி !! நேற்றிரவு நீ சொல்லியிருந்தால் போதுமே ! இந்தப் பயலை போலீஸார்வசம் ஒப்புவித்து நல்ல வேலை செய்திருப்பேனே.

வா :—உன் பணத்தைக்கொண்டு போவான் என்று எனக்குப் படவில்லை ! ஸ்ரீநிவாஸனும் ருக்மணியை விட்டுப் பிரிவான் என்பதும் எனக்குத் தோற்றவில்லை. வீட்டில் பெண்டுகள் ஸௌக்யம் தானே! என் தோழன் இந்த ஸித்தனுக்குப் புருஷர்களைவிட ஸ்திரீகள்மேல் அதிக ஆசை. இப்பொழுது வேறுவிதமாக வல்லவோ இருக்கிறது.

இத்தருணத்தில் போலீஸ் ஸேவகர்களை நாற்புறமும் அனுப்பியிருப்பதாக, வந்து ஸங்கதி சொன்னான் ஓர் தலைமை ஸேவகன்.

நா.—ஸரிதான் ! நாளைக்குள் என் முன்னே அந்தப்பயலை கொண்டுவரவேணும் ! போங்கள். (வாஸுதேவ சாஸ்திரியை நோக்கி), உனக்கு இந்த ஸித்தரைத் தெரியுமா? என்ன தெரியும் ? நேற்றிரவு ஸித்தன் உன்னைக்கண்டு ஏன் பதறினான்?

வாஸுதேவ சாஸ்திரி.—நான் காசிக்குப் போனகாலத்தில் கேஸிபூரில் தங்க, அங்கிருந்த ஒரு பணம்பெருத்த வியாபாரியுடன் எனக்குப் பழக்கம் உண்டாயிற்று. அவன் என்னிடம் மிக அன்பாகவிருந்தான். அவன் எனக்கு வேண்டியவைகளை கொடுத்து, என்னை அன்பு பாராட்டி வந்ததால் அவ்விடத்திலேயே கொஞ்சநாளிருந்தேன். நான் வந்து இரண்டு மூன்று நாளைக்கெல்லாம் அங்கு காஷாயம், ஜடை, பாம்பு முதலியவைகளுடன் ஒரு யோகி வந்தான். அநேக யோகிகள் அவனைப் பின்தொடர்ந்து வந்தனர். அவர்கள் அவனை மனம் போனபடி துதிப்பது. ஆகாய கமனம் ஜலஸ்தம்பனம்,முதலிய அற்புத ஸித்திகளிருப்பதாக வெளியிடுவது ஆகிய இத்தொழிலையே மேற்கொண்டிருந்தனர். என் நேசன் தோழனான ஒரு வியாபாரி இந்த யோகியை எதிர்கொண்டழைத்துக் கூட்டத்துடன் ஆதரித்தான். நான் எவ்வளவோ அவனுக்குச் சொல்லிப் பார்த்தேன், அவன் கேட்காது தன் வீட்டிற்குள்ளேயே யோகிக்கு ஜாகைவிட்டான். நானும் என் தோழனுமாக ஒருநாள் அவனைப் பார்க்கச் சென்று, உன் பூர்வ விருத்தாந்தம் என்ன என்றுகேட்டோம். தன் பூர்வாச்ரமத்தில் தான் மதுரை கலாசாலை ஸம்ஸ்கிருத வாத்யார் என்பதாகவும், ஒருகால் தான் திருநெல்வேலி ஜில்லா சதுரகிரி மலைக்குப் போனதாகவும், ஒரு ஸித்தரைக் கண்டு வணங்க, மகிழ்ந்து அவர் தன்னை உள்ளிருந்த ஸித்தாச்ரமம் அழைத்துச் சென்றதாகவும், அங்கு தனக்குப் பார்வதீ பரமேச்வரர்கள் தர்சனம் கிடைக்கும்படி செய்து தன்னை ஒரு பெரிய ஸித்தனாக்கி விட்டதாகவும், அதற்கு அடையாளமாகத்தனக்கு இந்தப் பாம்பு கொடுக்கப்பட்டது என்பதாகவும், ஆதலால்தான் அகஸ்தியருக்கு நிகர் என்பதாகவும், தன் துணிபட்டவர்களுக்குக்கூட அற்புத ஸித்து,வித்தைகள் தெரிந்துவிடும் என்பதாகவும் கூறி முடித்தான். நாள்தோறும், தன் யஜமானன், சுற்றுமுள்ள மற்றவர்கள் எல்லோரையும், விதம்விதமான செப்பிடி வித்தை, கண்கட்டி வித்தை, மனஸ்தம்பனம் முதலியவைகளால் ஆச்சர்ய பரவசர்களாக்கி வந்தான். இவைகளை ஸாதாரண தெருவித்தைக்காரர்கள் செய்தால் தந்திரங்கள் என்று மதிக்கும் ஜனங்கள் இவன்செய்ததால் பெரிய ஸித்து வித்தைகள் என்று கொண்டாடினர். என் தோழர், ஸித்தர் பூர்வ கதையைப்பற்றி என்னிடம் தனியாக விசாரித்தார். ‘இவன் ஸம்ஸ்கிருத பண்டிதன் என்றானே அது முழுப்பொய். ஆதிமுதல் மதுரை கலாசாலை பண்டிதர்களை எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்,’ என்றேன். அவ்வூரில் அவன் பெயர் பரவியது, அநேகர் இவன் பரிவாரங்களுடன் இவனுக்கு விருந்தளித்தனர். ஒவ்வொரு நாளும் தான்பறந்து ஓடிவிடுவதாக அவன் பயமுறுத்தினான் : அவ்வூர் வியாபாரிகள் மடத்தனமாக அவனைப் போகவொட்டாது தடுத்தனர். முடிவில் அவன் ஓடியேதான் போனான் ; ஆகாயத்திலாவது, அல்லது தன் பரிவாரங்களோடாவது அவ்வாறு செய்யவில்லை. அவ்வூர் பெருங்குடும்பத்தைச் சேர்ந்து ஒரு பதினாறு வயது ரூபவதியுடன் பறந்தோடிப் போய்விட்டான். அவன் ஓடினதுதான் தாமதம், அவன் சென்னபட்டணத்தில் பொய்க்கையெழுத்துப் போட்டதாகவும் அதற்காகஅடைக்கப்பட்டிருந்த சிறையிலிருந்து தப்பிஓடிவிட்டதாகவும், ஆகையால்அவனை உடனே பிடித்துவிடவேண்டும் என்பதாகவும் கண்டிருந்த உத்தரவுடன் ஸேவகர்கள் அங்கு வந்து விட்டனர். அவ்வூரார் ஸேவகர்கள் எல்லோரும் இவனைக் கண்டுபிடிக்கச் செய்த முயற்சிகள் பலவாயினும் இவன் பிடிபடவில்லை : எங்கும் அகப்படவில்லை. சிலர் அவன் இறந்தான் என்றும் வேறுசிலர் அவன் ஹிமாலயம் சென்றான் என்றும் கூறினர். அவனுக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் மதுரை ஆள் என்று மாத்திரம் தெரியாது : தெரிந்திருந்தால் அவன் இங்குவந்திருக்கவேமாட்டான்.

கேஸிபூரிலிருக்கையிலேயே என்னிடமிருந்து ஒரு வாக்குறுதி அவன் வாங்கிவிட்டான். அவன் விஷயங்களை நான் ஸந்தேஹிப்பதாக அவன் உணர்ந்து, கேஸிபூர் மஹாஜனங்களுக்குத் தன்னைப்பற்றி ஒன்றும் கூறிவிடலாகாது என்று கேட்டுக்கொண்டு என்னிடம் வாக்கும் வாங்கிவிட்டான். அவன் என்னிடம் கூறிய சில கெட்ட வழிகளை விட்டுவிடும்படி நான் வெகுவாக அவனுக்குப் புத்திமதி கூறினேன் : அது பயன்படவில்லை. இந்த ஸம்பாஷணை முடிவில் ‘நான் எந்த ஊரிலிருந்தபோதிலும் நானிருக்கும் வரையில் அங்கு என்னைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளக்கூடாது. என்னைப்பற்றி அவதூறு பேசக்கூடாது’ என்று கெஞ்சிக்கேட்டு வாக்குக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான். இது ஒரு விசித்ர ஸத்தியமாயினும், நான் தயங்காது செய்துவிட்டேன். எவ்வளவு கொடியவனாயினும், அவனைப் பழிப்பது காட்டிக்கொடுப்பது முதலியவைகள் என் குணத்திற்கு விரோதமானவை, ஆதலால் அவன் சீர்திருந்துவான் என்னைக் காணப் பெற்றால், என்ற நம்பிக்கையுடன் வாக்கும் கொடுத்துவிட்டேன். கடவுளேயாகி நிற்கும் இப்பிரபஞ்சத்துள் கொலைக்காரனைக்கூட வெறுப்பதற்கிடமில்லையே !

“உன் வீட்டில் அவனைக் கண்ட உடன் எனக்கு உண்டான ஆச்சர்யத்திற்கு அளவேயில்லை. நான் ஸத்தியத்தால் கட்டுண்டிருந்ததால் வாயைத்திறக்கமுடியாமல் போய்விட்டது. அதிகம்இருந்தால் எங்கே ஸத்தியத்தை மீறும்படிநேரிடுமோ என்று எண்ணியே நான்நேற்றிரவு திடீரென்றுமறைந்துவிட்டேன். உன் வீடு தகுந்த காவலுடனிருப்பதால் ஸித்தன் ஆட்டம் இங்குப் பலிக்காது என்ற தைர்யத்துடனே நான் வீடு சென்றேன் : என் மனமும் ஸமாதானமாக விருந்தது. உன் பணப் பெட்டி போனதையும், ஸ்ரீநிவாஸன் ஓடிவிட்டதையும் கேட்டதும் எனக்கு ஒருவிதத்தில் ஸந்தோஷம்தான்.

நா:—(கோபமும் துக்கமும் கலந்த சிரிப்புடன்) உன் வேதாந்தம் உன்னைப் பெரும் மடையனாக்கி விட்டதப்பா ! ஆய்ந்து ஓய்ந்து நோக்கில் முடிவில் அன்னம்மாள் சொல்வது ஸரி ! நிரம்ப ஸரி ! ! வேதாந்தம் மனிதரை மூழுமூடராக்கிவிடும். என்னடாது ! திருடனுக்கு ஸத்தியம் பண்ணிக் கொடுத்துவிட்டு, சும்மாவிருப்பதா ? அடே ஸத்யம் பண்ணமாட்டேன் என்றல்லவா நீ சொல்லியிருக்கவேண்டும் !

வா.—அவன் என்னைரொம்ப கெஞ்சிக்கேட்டுக் கொண்டான். மேலும் ஸத்யம் கொடுப்பதால் கேடொன்றும் வாராதென்று எனக்குத் தோற்றியது. பெண்ணை அடித்துக்கொண்டு போனபின்பு என்னைக் கேட்டிருந்தால் நான் இந்த வாக்கு கொடுத்திருக்கமாட்டேன். ஸத்தியத்தால் கட்டுப்படாவிடினும் நாம் ஒருவரையும் பொல்லாங்கு சொல்லலாகாது. அவனைப்பற்றி எனக்குத் தெரிந்ததில் நூறிலொருபாகம்கூட நான் உனக்கு இன்னம் சொல்லவில்லை. உனக்கு வந்திருக்கும் கஷ்டம் அவ்வளவு பெரிதல்ல என்பதைக் காட்ட எவ்வளவு சொல்ல வேண்டுமோ அவ்வளவுதான் சொன்னேன். ஒருவேளை ஸித்தன் இப்பொழுது சற்று திருந்தி விட்டாற்போலிருக்கிறது.

நா.—ஆமாமடா மடையா! அவன் மாத்திரமா திருந்தி விட்டான் : நீகூட மடயனாகத் திருந்தி விடவில்லையா? மடப்பயலே. பார் இந்தக் கன்னாவியை; (ருக்மணியைக் காட்டிக்கொண்டு) இப் பெண் கண்ணிலிருந்து ரத்தத்தைச் சொட்ட விட்டுக்கொண்டு நிற்கிறாள், மூழுமூடா! நான் கஷ்டப் படவில்லை என்றா சொல்லுகிறாய் ?

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ருக்மணி அல்லது பக்தி நிலை

பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

ஹிமயமலைச் சாரல். பல மாக்கூட்டத்திடைப் பொதிந்து விளங்கும் தவவனம். வேதகோஷத்தின் ஸாமகோஷ மயங்கி மனதை மயக்கி ஆநந்த மூட்டுமிடம். இதனிடை எம்பெருமான் சக்கிரவர்த்தித் திருமகனார்ப் புகழைப்பாடி பரவசமடையு மஹா புருஷரது காதில் “ராமா ராமா ராமா” வென்னும் நாமம் காற்றில் மயங்கி கலந்தது. ஹநுமாரும் கண்ணைத் திறந்து நாரதரை க்ஷேமம் விசாரித்தனர். மற்றும் “ஏது தாங்கள் இவ்வளவு தூரம் தயவு செய்தது? எல்லாம் ஸுகமோ? இங்கு விஜயம் செய்ததென்பொருட்டோ? இந்த எளியன்பால் வந்து தர்சனம் கொடுத்து நாயினும் கடையாய என்னைத் தன்யனாக்கினீர்” என்றார்.

“அதுவொன்றுமில்லை. உம்முடைய பகவன் நாமாவின் இசையாலிங்கிழுக்கப்பட்டேன். தங்களைத் தர்சனஞ்செய்து பெறும்பேறு பெற்றேன். ஸாது ஸங்கத்தாலாகாததென்ன? நான் இங்கு யாத்திரை செய்யப் புறப்பட்டேன்—”

“தகுந்த துணையில்லை என்றிங்கு வந்தீரோ!”

“அதற்காகவில்லை. ஆனாலும் தங்களைப்போலத் துணைக்கிடைத்தால் வேண்டாமென்று சொல்லவும் நாவெழுமோ?”

“நீர் கூறும் முன்னமே என்னன்பனுடன் செல்ல, இக்கால்கள் எழா நிற்குமோ? வாரும்; யானும் உடன் வருகிறேன்.”

“அப்படியானால் ஸரி. அவந்தி முதலிய புண்ணிய ஸ்தலங்கள் ஏழுங் கண்டு செல்வோம். யானிப்பொழுது வரிசையாக எம்பெருமானது திருக்கோயில்களைக் கண்டு வருவதே காலாலாய பயன் என்றுணர்ந்தேன். அதற்குத் தங்களைப் போன்ற ஸாது துணையே மோக்ஷ ஸாதனத்திற்கு மூல வழியாகும். புறப்படும்.”

“அப்படியே”

புறப்பட்டனர். பல தீர்த்தங்களாடி யமுனையைத் தாண்டி விந்திய மலைச்சாரலைக் கடந்து அங்குப் பச்சைப்பசேல் என்று சோலை வீசுமிடமெங்கும் பரந்தாமனது உருவத்தையே கண்டானந்தித்தனர். கருங்கொண்டலைக் கண்டதும் எம்பெருமானது திருமேனியின்வைபவத்தையே அனுபவிப்பர். துளபக்காடைக் காணின் அம்மங்கள விக்கிரஹத்தின் அமைப்பையே நினைந்து நினைந்து உருகுவர். மலையைக் காணுந்தோறும் எம்மிறைவனது கருணையையே நினைந்து உள்ளம் அழிவர். அது பார்ப்பார்க்கு இன்பமளித்து தன்னயம் பாராததை எண்ணி எண்ணித் தாமும் அவ்வாறே ஒழுகவேண்டுமென்று எண்ணுவர்! பரந்தாமனது பக்தியிலீடுபட்டு மெய்ம்மறந்து, நடப்பதும் தெரியாது நடப்பர். தம்மொடு தலைவன் கலந்தன்ன நடிப்பர். உள்ளம் தேக்கி கூத்தாடிக் கூத்தாடிக் கூவுவர். வழி நடந்து வந்தது நெடுந்தூரமென அவர்க்குப் படவேயில்லை. உள்ளங்கலந்து அன்பிலீடுபடில் எம்பெருமானது திருநாமமென்னும் திவ்யசக்தியின் பரப்பால் உண்டாகும் உத்ஸாகத்தின் பெருமையால் எதுதான் அமையாது?

ஸூர்யனுடைய ஒளி மறையும் ஸமயத்து ஓர் சோலையுளிருவரும் தங்கினர். கிளிகள் கொஞ்சிக் குலுக்கிய பழங்களிலிருந்து விழுந்த தேனின் பெருக்கைக் கண்டு எம்பெருமானது நாமவினிப்பைப் பெற அவாவுற்றனர். மலைவீழ்ந்து மிருவேகத்தோடு பாய்ந்து கணவாய் உச்சியிலிருந்து வீழ்ந்தெரிக்கும் அருவி நீர்த்துளியைக் காணுந்தோறும் தன்னுன்னத நிலையிலிருந்து யாவர்பாலும் எம்பெருமான் எரிக்கும் கருணைத் திரளே மனதில் பதியும். பச்சைப் பசேலென்று பண்ணை முழுதும் படர்ந்து விளங்கும் பசுமைத் தொடர்செழித்து இனிது ஓங்கும் பரந்தாமனது அழகையே மனத்திலூட்டும். நிர்மலமாக நிற்கும் ஓடைநீர் முழுதும் “ஞானப் பெருந்தீபம் கொளுத்திய” பெரியாரது வைபவத்தையே எடுத்துரைக்கும். சிவந்து படர்ந்து விளங்கிய செவ்வானத்தில் பொன்னென எதிர் தோன்றிய நகரம் இருளில் பதிந்து மதியவன் தோன்ற கண்ணிற்கு எதிர்படல், மாயை யொழிந்ததும் மனவமைதியையே குறிப்பிடும். கீழ்க்கொண்டலைக் கிழித்து இனிது ஓடி வெளிவரும் சந்திரனுடைய வேகம் ஐம்புலப்போக்கை அறிய வழி காட்டும். அம்மதியவன்பால் அருகு விளங்கும் நக்ஷத்திர பரிவாரம் மானிடரின் சிறுமையையும் எம்பெருமானது பெருமையையும் சாக்

தம், தயை, பொறை முதலிய அனந்த குணங்களை உருவகப்படுத்தும்.

இத்தகைய இளங்கொழுந்தன்ன செழுமை வாய்ந்து எவர்க்கு மினிமை யூட்டும் இடத்தில் அன்பென்னும் வெள்ளப்பெருக்கில் மூழ்கி விளங்கு மிவ்விருவரும் தங்கி காலங்கழித்து வரும்பொழுது “ஹே! நாரத! இப்புரத்தையும் இதன் புறச்செழுமையையும் பார்க்கப் பார்க்கப் பரமானந்த மடைகிறேன். ‘பழந்தன மிழந்தவர் படைத்த தெனலா’ னேன். ஸரயூ நதி தீரத்து இனிது விளங்கிய என் தலைவனது நகரேபோல் இந்நகரம் தோன்றுகிறது. இக்கோபுரத்தை நோக்க நோக்க அவ்வயோத்தியைக் கண்டாற்போல் காணுகிறேன். இது அயோத்தியோ? இவ்வூராசன் ராமன்தானோ? ராமனை இனி யெங்குக் காணலாகும்?” என்றார் ஹனுமார்.

“நண்ப! இது அயோத்தி யல்ல; துவாரகை. இந்நகர்க்கு மன்னன் ராமன்தான்.”

“ராமனா? யார் அவர்? சக்கரவர்த்தி திருமகனாரா? என்னிரு தோள்மேல் தாள்பதித்து என் பவத்தை யொழித்த எனது தலைவனாரா?”

“சக்கிரவர்த்தித் திருமகனா? அவர் யார்?”

“தசரத சக்கிரவர்த்தியின் மூத்த குமாரன்; ரகுராமன்”

“அவரல்ல இவர்—அவரல்லவே அல்ல.”

“மற்று யாரிவர்?”

“உமது ராமருக்கு முன் என்ன இருக்கும்?”

“அவர் முன் இருந்தது ஒன்றும் இல்லை.”

“அவ்வளவு தானோ? அவர் வெறும் ராமன் தான்; அவ்வளவே.”

“வெறும் ராமன் என்று அவரைப் பரிகசிக்கிறாய்?”

“யான் பரிகசிக்க வில்லையே.”

“மற்றெவன் பரிகசித்தது?”

“உமது ராமன் வெறும் ராமன்தானே? அதை முன் சொல்லும்.”

“மூலபலங்களையும் முடியாத அரக்கரை கையொன்றால் அம்பு வாங்கி எங்கும் புகழ்பெற்று ஜயவீர கோதண்டந் தாங்கி, ‘சொல்லொக்கும் கடிய வேக சுடுசரங்” கொண்ட என் தலைவன், ராமன் வெறும் ராமனாய் விட்டாரோ?”

“அப்படி யான் ஒன்றுஞ் சொல்லவில்லை. இவ்விடத்திருக்கும் ராமன் வெறும் ராமனல்ல. உமது கைவண்ணம் பெற்ற ராமன், என்னதான் நீர் சொல்லிய போதிலும், வெறும் ராமன்தான். அவரெப்படி பலராமராவர்?”

“பலராமனா? யாரவன்? ராமனைக் காட்டிலும் மிகு பலசாலியோ? வீரனோ? சூரப் பிரதாபப் பெருமையிற் சிறந்தவனோ?”

“அப்படி இருந்தாலொழிய அப்படி பெயர் செல்லுமோ? அந்த ஹஸ்தினபுரம் பட்டபாடு அதற்கன்றோ தெரியும்? அவர் கலப்பையொன்றே உங்களிராமன் குலத்தைக் கலக்கும். அவரைப் பார்த்தால் உமக்குத்தெரியும். பேசுவதில் என்ன பிரயோஜனம்?”

“நெடிய வில் வலிய வாங்கும் என் நாதனைக் காட்டிலும் சிறந்தவன் ஒருவனிருக்கிறான்! அவன் பலராமனாம்! நாம் இதுவரை ராமனுடைய பெயரை வஹிக்கத்தக்க ஆட்களை காண முடியவில்லை. இன்றிங்கு அவர் பெயரை மாத்திரம் வஹித்தாலும் பொறுப்பேன். ராமனோடு நிற்காமல் பலராமனென்று பெயர்கொண்டு என் தலைவனுடைய பெயரை எளனம் செய்ததன்றி அவர் வலியின் திறமையையும் பரிகஸிக்கும் நாமங்கொண்டுளான்! அவன் யார்? அவ்வற்பக் குணங்கொண்டவனைக் கண்டால் யான் என்ன செய்வேன் தெரியுமா?”

“தெரியும்! முதுகைக் காட்டிக்கொண்டோடுவீர். நான் சொல்வது பொய்க்குமா? அவரிடம் உமது இருமாப்பு செல்லுமா?”

“பார்த்தால் அப்பொழுது தெரியும்.”

“நான் அவரிடம் போய் தங்களிடம் வரும்படிச் சொல்லுகிறேன்.”

“அப்படியே செய். சீக்கிரத்தில் அவனை அச்சுவேறு ஆணி வேறாக்கி விடுகிறேன்.”

“இதோ வந்துவிட்டேன்” என்று ஓடினார் நாரதர்.

* * *

துவாரகையின் ராஜவீதி. வரிசை வரிசையாக அமைந்த வீட்டின் உப்பரிகைகளில் பதித்த

கலசங்களின்மேற் பதிந்த ஸூர்யனுடைய ஒளி
தவறி தெருவெங்கும் தங்கத்தொடு தவழ்ந்தது.
இருபுறங்களில் வரிசையாய் வளரும் கமுக மரத்
தின் மணத்தில், உடன் படர்ந்த மாதவிக்கொடி
யில் மலர்ந்த வாஸனை மயங்க, அவ்வீதியின்
நடப்பார் மன முழுதும் அத்தெருவின் அழகி
லேயே மயங்கும். தென்றற்காற்றும் தேரும்
திருநாளும் அத்தெரு வழியே எப்பொழுதும்
நடப்பதாயினும் அன்று அங்கு உடன்வந்த
கூட்டத்தின் முகத்தில் கொஞ்சமேனும் அமைதி
என்பதில்லை. எல்லாரும் பிரமையுள்ளேயே பதி
ந்தனர். காற்றும் அசைய பயந்தது. கூட்டத்
திடையிருந்த ஒரு கிழவனர் பட்டபாடு யாவர்
மனத்தையுங் கலக்கும். "ஹே பலராமா! ஹே
பலராமா!" என்றிவரிட்ட கூச்சல் அம்மன்
னன் அந்தப்புரத்திருந்த ஸ்திரீகளையும் வெருட்டி
விட்டது. கிழவனர் மெல்ல மெல்ல தத்தளித்து
பலராமரது மந்திரத்தை அடைந்தார். எவரு
மசையாத அரசாட்சி மணியை "டங் டங் டங்
டங்" என்று மனம் படக்க கண்டாரது உள்ளம்
துடிக்க அடித்தார். பெருங்கூட்டம் வந்துவிட்
டது. அந்தப்புரத்துத் தன் மனைவியுடன்
கேளிக்கையில் விளங்கிய பலராமர் துடுக்கிட்டு
"ஹா" வென்றலறிக்கொண்டோடி வந்தார். வந்
ததும் கிழவர் அழுதார்; விழுந்தார்; எழ முடி
யாது திகைத்தார். பேச முடியாது தயங்கினர்:
மெதுவாகத் தள்ளித் தடுமாறி கூறுவர்:—

"என்னையனே அபயம்! அபயம்! இந்நாட்டி
லினியிருத்தல் முடியாது. ஹே பலராமா! நீங்
களிருந்தும் நாங்களிப்படியா பாடுபடுவது. இனி
இந்த நாளே எங்கள் பிராஹ்மணக் கூட்டத்தை
இவ்வூரை விட்டோடும்படி செய்தால்தான் நலம்.
இங்கவரிருந்தால் உயிர்ச்சேதம்தான்—"

"படபடப்பு வேண்டாம். உமக்கென்ன குறை
சொல்லும்; தீர்ப்போம். கவலைபடாதியும்."

"கவலையேன்? ஊர்க்கு வெளியிருக்கும் ஒரு
சிறு குரங்குசெய்யும் பாட்டைத் தவிர்க்க உமக்கு
வலியில்லையா? அது என்ன பாடுபடும்? அதைத்
தடுக்க உமக்குப் பலமில்லையா? உமக்குப் பலராம
ரென்று யார் பெயர் வைத்தார்கள்? அந்தக் குரங்
குக்குப் பதில்சொல்ல யாரால் முடியும்? என்னுல்
கேட்டுப் பொறுக்க முடியவில்லையே? எல்லாவற்
றையுமொழித்த என்னையே அம்மொழிவெருட்டு
கிறது. உமக்கென்ன காதில் படவில்லை
போலல்லவோ இருக்கிறது."

"ஒரு குரங்கா?"

"ஒரு சிறு குரங்கு—கோபுரவஸ்து—அல்ப
சாகாமிருகம். அதுதான். ஒன்றேஒன்று. அப்பா!
அதை நினைக்கும் பொழுதே என் உடம்பு நடுங்கு
கிறது."

"அது என்ன செய்தது?"

"எப்படி என்று சொல்வேன். ஒன்றும் எனக்
குத்தோன்றவில்லை. என் நினைப்பே மறந்துவிட்
டது. என்னமோ சொல்லிச் சொல்லி பின் 'இவ்
வூர் அரசன் யார்?' என்றது. 'பலராமர்' என்
றேன். 'யார் பலராமர்?' யாரது? ராமனைக் காட்டி
லும் இவன் சிரேஷ்டனே? அம்மடையனைப் பல
என்கிற அடைமொழியை எடுத்துவிடச் சொல்.
இல்லாவிட்டால் என்னோடு வந்து சண்டை செய்
யும்படிச் செய்' என்றது. இன்னம் என்னென்ன
மோ கூறியது. ஐயா என் மூளையே கலங்கிவிட்
டது. ஐயா உம்மிடம் சொல்லிவிட்டேன். நீங்கள்
தயவு செய்து அக்குரங்கைத் துலைத்தால் ஊரார்
பிழைத்தார். இல்லாவிடில் அவர் நமனுலகிற்கு
வேறு வழி தேடவேண்டியதில்லை. வாலொன்று
தான். அதுவே போதும்."

"நீர் யார்? ஏன் இப்படிப் பயப்படுகிறீர்? யானி
ருப்பது உமக்குத் தைர்யமூட்டவில்லையா?"

"தைர்ய மூட்டும். ஆனால் என்கண்முன்
அப்பொல்லாச் சிறு குரங்கே குடிகொண்டிருக்
கிறது. யான் என்ன செய்வேன். யான் நாரதன்

அவர் கேட்டவிதத்திலேயே நடுங்கிவிட்டேன்.
தயவு செய்து அச்சிறு குரங்கைச் சும்மா விடாதி
யும்; உமக்குப் புண்யமாய்ப் போகும். அதை
முன் பிடித்து சிறையிடும்."

"என்ன நாரதா நீயா இப்படி வந்தாய்? இது
என்ன வேஷம்?"

"உங்களுக் கென்னபரிஹாஸம். வீடெரிந்தால்
பார்ப்பவர்க்குக் கொண்டாட்டம். எருதின்வலி
காக்கைக்குத்தெரியுமோ? நான் பட்டபாடு எனக்
குத் தெரியும், அக்குரங்கின்வார்த்தையைநினைத்
தால் வயிறு கலங்குறது.வந்தவழியில் என்தம்
புரு விழுந்ததே தெரியவில்லை.தலைதப்பினது தம்
பிரான் புண்ணியம் என்று உம்மிடம் வந்தேன்.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும். அக்
குரங்கு தனித்திருக்கும் போதே பிடித்துவிடும்.
பின் எதிர்ப்பது எப்படியோத்தான் என்றெனக்
குத் தோன்றுகிறது."

"என்ன நாரதா? ஒரு குரங்கிற்கா இவ்வளவு
பயந்து விட்டாய்! பலே! கோலாடக் குரங்கா
டாதோ?"

"உங்களுக்குச் சொல்வதற்கென்ன? இக்
கரைக்கு அக்கரை பச்சை. போய்ப் பார்த்தால்
தெரியும். நீங்கள் போய்த்தான் பாருமே, அது
படுத்தும்பாட்டை. உம்மை முன் பலராமன் என்
கிறபெயரைமாற்றி ராமன் எனக்கொள்ளவேண்டு
மென்று வற்புறுத்துகிறது. நான் சொன்னால்
தகுமா? ஆண்டிச்சொல் அம்பலமேறுமோ?"

"ஸரி நான் எனது படைத்தலைவனுடன்
சொல்லி அதை யோட்டச் செய்கிறேன். நீ பயப்
பட வேண்டாம். ஒரு க்ஷணத்திற்குள் அது
இருக்குமிடமெங்கென்று தெரியாமல் ஓட்டி விடு
கிறேன."

"மஹாப்ரபூ! உமக்கு ஸமான பலமுடைய
வர் யார்? அதனால்தானே பலராமரெனப் பெயர்
பூண்டீர். உங்களால் ஆகாததெது? இனி எனக்
கென்ன குறை."

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

மதுரைத் தமிழ்ச் சங்கம்.— இச்சங்கத்துப் பதி
னேரும் வருடத்து அறிக்கைப் பத்திரத்தைப் பெற்று
நோக்குமிடத்து எமக்கு இன்பமும் துன்பமும் ஒருங்
குண்டாகின்றன. சங்கத்தலையாய் கொடையாளியாய்
தமிழ்க்காய் உழைத்த பாண்டித்துரையாரின் மரிப்பால்
உண்டாகிய தௌர்ப்பாக்கியத்தைத் தோற்றுவிதம்
உழைக்கும் மதுரை வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, P. S. சுப்பிர
மணிய ஐயரவர்கள் சங்கத்தலைவராயும், தமிழின் உயர்
விற்கு வேண்டிய உதவி புரிய தயாரா யிருக்கும்
கானுடுகாத்தான் ம-ா-ா-ஸ்ரீ, சா. ராம மு. சித.
பெத்தாச்சி செட்டியாரவர்கள் உப அக்கிராஸனதிபதி
யாயிருப்பதும், எல்லோருக்கும் இன்பம் தரும்.
காரிய தரிசிகள், மதுரை வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, T. C.
ஸ்ரீநிவாச ஐயங்கார், T. N. சுந்தரராஜ ஐயங்கார்
இவர்கள் ஆர்வமும் புகழத்தக்கதே. ஊக்கத்தோடு
உழைத்திவர் செய்யும் செயல்களை ஜனங்கள் கவனி
யாதது நமக்குப் பெருந்துன்பம் உண்டாக்குகிறது. இச்
சங்கத்தார் வெளியிடும் "செந்தமிழ்" ப் பத்திரிகைக்கு
இந்தத் தமிழ் நாட்டிற்குள் பெறத்தக்கவர் 256 பேர்
களே என்பதை நோக்குமிடத்து மிகுந்த வருத்தத்தை
உண்டாக்குகிறது. மற்ற இராஜதானிகளில் தமது
தாய்ப்பாஷையைப் போற்றுவதுபோல். இந்நாட்
டிற்கு இன்னம் ஞானோதயம் ஆவதென்றே! தமிழ்ப்
புத்தகங்களைப் பரிசோதித்து, தக்கவித மளிக்கும்
பேருதவியைக் கவனியாது விளங்கும் நமது தமிழகத்
தினற்கு யாம் மிக்க வணக்கமாக ஷை பத்திரிகையைப்
போஷித்துத் தாமும் பேறடைய வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறோம்.

* * *

லார்ட் பெண்ட்லண்ட்.—சென்னைக் கவர்னராய்
வரப்போகிற லார்ட் பெண்ட்லண்ட் ஸ்காட்லண்ட்
மந்திரியா யிருந்தவரென்று சொன்னோம். அவர் ராச்
சிய நிருவாகத்திறமைமட்டுந்தானுடையவரென்று நாம்
நினைப்பதற்கில்லை. அவர் புஸ்தகங்கள் எழுதும் யோக்
கியதையுடைய கிரந்த கர்த்தா என்று காண்கிறது.
1901 முதல் 1911 வரை இறந்துபோன பிரபலஸ்தர்
களாயுள்ள 1600கனவான்களின் ஜீவிய சரித்திரங்களை
யெழுதிய 300 கிரந்த கர்த்தாக்களில் அவர் ஒருவ
ரென்று தெரிகிறது. அவர் மிஸ்டர் ஆஸ்க்வித்துக்கு
முன்னே லிபரல் கவர்ன்மெண்ட் தலைவராயிருந்த ஸர்

ஹென்ரி காம்பல் பானர்மானின் ஜீவிய சரித்திரம் எழுதியிருக்கிறார்.

*
* *

உலகத்திலுள்ள உன்னத சிகரம்.—இதுவரையிலும் ஹிமயமலையில் உன்னதசிகரமாகிய எவரெஸ்டு தான் உலகத்திலுள்ள மலைச்சிகரங்களில் உன்னதமானது என்று படித்தும் கேட்டும் இருந்தோமல்லவா? கிஞ்சிஞ்சுகங்காதான், எவரெஸ்டைவிட சில நூறு அடி உயரம் என்று கண்டுபிடித்திருக்கிறதாகத் தெரிய வருகிறது.

*
* *

ஒரு புதுவகைப் பெட்டி.— புதுவகை நகைப் பெட்டி யொன்று கண்டுபிடிக்கபட்டிருக்கிறது. யாராவது வந்து நகைப்பெட்டியைத் தூக்கினால் அது நாய் போல ஓயாமற் குலைத்துக்கொண்டிருக்குமாம். எட்டு மணி ஓயாமற் குலைக்குமாம். அதை நிறுத்தவேண்டுமானால் பெட்டியின் சொந்தக்காரன் வந்து அதைத் திறந்து குலைக்கும்படி உள்ளே வைத்த யந்திரத்தை அமர்த்திவிடவேண்டுமாம். இப்பெட்டி உபயோகத்துக்கு வந்தபின் களவுபோகமாட்டாது. எங்கே வேணுமென்றாலும் அச்சமின்றி நகைப்பெட்டியை வைத்துப் போகலாம்.

*
* *

நான்கு பிள்ளை ஒரே முறையில் பெற்றவள்.—விசாகப்பட்டணத்திலிருந்து பெங்களூருக்குச் செல்ல ரயிலில் பிரயாணஞ்செய்து கொண்டிருந்த ஒரு ஸ்திரீ சென்றமாதம் 4-ந்தேதி காலை 2-30 மணிக்கு ஹிந்தூபூரில் ரயில்வேயை விட்டிறங்கினள். நான்கு மணிக்கு ஒருபெண் குழந்தையைப்பெற்றனள்.பின்னர் அவ்வூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டனள்; அங்கு 7 மணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது; பின்னரும் 7-15 மணிக்கு வேறிரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. முதல் பிறந்த குழந்தை யுயிரோடிருக்கின்றது. ஏனைய மூன்று பிள்ளைகளு மிறந்துபோயின. எல்லாக் குழந்தைகளும் பூரண ரூபம் பெற்றிருந்தன. தாய் சுகமா யிருக்கின்றனளாம்.

*
* *

கானடா ரயில் பாதையின் நீளம்.—கானடா தேசத்திலுள்ள ரயில்பாதை மொத்தத்தில் 26000-மைல் நீளமுடையதாம். இவ்வாறு வேறு தேசங்களிகலில்லையாம்.

காப்பியின் குணாகுணங்கள்.—அமேரிக்காவிலுள்ள வைத்திய சாஸ்திரிகளுட் சிலர் காப்பி குடிப்பது பற்றி யாராய்ச்சிச் செய்து, காப்பியை யளவிற்கு மிஞ்சி யுண்டால் கெடுதி யுண்டாகுமென்றும், மிதமாகவுண்டால் மூளைக்குப் பலமும், தேகத்திற்குச் சுறுசுறுப்பு முண்டாகுமென்றும், தினமொன்றிற்கு 2-சேர் காப்பிக்குமேல் குடித்தல் கூடாதென்றும் தெரிவித்திருக்கின்றனர்.

*
* *

W. T. ஸ்டெட் என்பவரது ஆஸ்தி.—டிடானிக் கப்பல் முழுகியபோது இறந்துபோன W. T. ஸ்டெட் என்பவருடைய ஆஸ்தி 13000 பவுண்டாம்.

*
* *

சென்னை மாகாணத்தில் இறக்குமதியாகும் சைகிலும் மோடார்காரும்.-சென்ற 1911-12-ம் வருஷத்து ரிபோர்ட்டின்படி, அயல் நாட்டிலிருந்து இந்த மாகாணத்தில் இறக்குமதியான சைகில்களின் மதிப்பு 6,57,000 ரூபாய். இதற்கு முன் வருஷத்திலோ 5,19,000 ரூபாய். மோடார்கார்களோ 1911-12-ல் 10,46000 ரூபாய்க்கு இறக்குமதியா யிருக்கின்றன. அதற்கு முன் வருஷத்தில் 6,24000 ரூபாய்க்குத்தான் வந்திருக்கின்றன. சைகில்களும் மோட்டார் கார்களும் இப்படி அதிகமாய் இறக்குமதியாக, குதிரைகள் இறக்குமதியாவது குறைந்துவிட்டது. 1910-11-ல் 1006 குதிரைகள் வந்து இறங்கி இருக்க, இந்த 1911-12-ம் வருஷம் 780 குதிரைகளே வந்திறங்கியிருக்கின்றன. ரஸாயன எருவில் 1910-11-ல் 153000 ரூபாய்க்கு இறக்குமதியாயிருக்க, 1911-12-ல் 294000 ரூபாய்க்கு இறக்குமதியா யிருக்கிறது.

*
* *

பர்மா அரிசி.—ஸ்வீடன் தேசத்தார் இப்போது பர்மா தேசத்தரிசியை வாங்கவாரம்பித்திருக்கின்றனர். இனி இந்தியாவிற்குப் பர்மா தேசத்திருந்து அரிசி வருதல் குறைவுபடும்.

புத்தக வரவு
BOOKS RECEIVED

கோமதி கோகிலமானது * ஓர் இனிய செந்தமிழ் நாவல் ம-ா-ா-ஸ்ரீ N. R. ஸுப்ரமண்ணிய சர்மா இயற்றியது. விலை அணா பத்து.

மதன காந்தி * ஓர் இனிய தமிழ் நாவல் ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றியது. விலை ரூபா ஒன்று.

* இப்புத்தகங்கள் 'விவேக போதினி' ஆபீஸில் கிடைக்கும்.

Supplement to the "Viveka Bodhini"



ராமபஞ்சாயதனம்



ஸீதை. ராமர். லக்ஷ்மணர். ஹநுமார்.

"விவேக போதினி" அனுபந்தம்

MADRAS

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி V } பரீதாபி௵ ஆடிமீ: 1912-௵ ஆகஸ்டுமீ { பகுதி 2

ஜீவன்முக்தர் பாகுபாடு

VARIETIES OF LIVING DEADMEN

ஜீவன்முக்தர்கள் வெளி வ்யவஹாரங்கள் உள் அனுபவங்களால் மாறுபடும் விதங்களை உத்தேசிக்கில் மூன்று விதமாக விருப்பர். அவர்களுக்கு முறையே பிரஹ்ம வித், பிரஹ்மவரன், பிரஹ்மவரியான் என்று பெயர். இதில் முன்னர் எடுத்துக்கூறியுள்ள லக்ஷணங்கள் பிரஹ்மவித்தினதே. இவர் மூவர்களுக்கும் பொதுவாக இவைஇருப்பினும்,பின்னவர் இருவருக்கும் சிற்சிலசிறப்பு லக்ஷணங்கள்வெளிவ்யவஹாரங்களில் காணப்படும். பிரஹ்மவித் எல்லா வ்யவஹாரங்களுக்கு இடையிலும் இருந்து மோஹமடையாது ஒதுங்கியே நிற்பன். இதனால் அவனுக்கு உலகில் த்ரஷ்டதக்கம் அதாவது துக்கத் தோற்றம் மாறவே மாறாது. இவனுக்கு உலகங்களும் அதனால் ஏற்படும் ஸுகதுக்கங்களும் ஸ்வப்னம் போலவாவது தோற்றிக்கொண்டே இருக்கும். உள்ளனுபவ விஷயத்தில் இவனைப்போலவே மற்றைய இருவரும் இருந்தபோதிலும், அனுபவத்தில் அழுந்தி நிற்கும் அப்யாஸ பலத்தால் இவர்களிடம் வ்யவஹாரம் அணுகவே மாட்டாது. இரண்டாமவன் தன் தேஹதாரணத்திற்கு வேண்டிய வ்யவஹாரம் மாத்திரமாக நின்று ஸமாதி ஸாதிப்பன். மூன்றாமவன் இவ்விஷயமாகப் பிறர் கூறத் தொழிற்படுவன். ஆகவே இவர்களுக்கு ஸமாதியில் மனம் அழுந்தியே நிற்கும். இந்த அவசிய வ்யவஹாரங்கள் நீங்கியதும் மனம் தானே ஸமாதியில் சென்றுவிடும். மற்றைய விரிவிற்கு இடமே இராது. முதலவனிடம் வ்யவஹாரங்கள் மேன் மேலும் தொடரும், ஆனால் அவைகளிலிருக்கும் பொழுதே தன் அனுபவச் சிறப்பு அவன் மனதில் ஊறிக்கொண்டும், ஓய்ந்தவேளையில் மற்றையவர்கள் போல ஸமாதியில் மனம் அழுந்திக்கொண்டும் இருக்கும்.

பிரஹ்மவித் மூன்று விதமாக உலகில் காணப்படுவன். இவர்களுக்கு முறையே மஹாகர்த்தன், மஹாபோகி, மஹாத்யாகி என்று பெயர். அவசியமான வ்யவஹாரங்களுள் இருந்து நிர்வஹிக்குங்கால் காந்தச் சிலைமுன் இரும்புத்துண்டுகள் அசைவதுபோல எல்லாம் தன்முன்சேஷ்டிக்கத் தனக்குயாதொருவிகாரமும் இல்லை என்ற மன உறுதி மாறாது நின்று ஸமாதியில் இருக்கும் ஸாக்ஷிவிருத்தியே மனதில் ஊறிக்கொண்டிருக்கப் பெற்றவனே மஹாகர்த்தன். ஜனகர் இம்மாதிரியான மஹாகர்த்தர். உணவு, அனுபவவஸ்துக்கள் இவைகளின் ஏற்றத்தாழ்வுகளைப்பாராது நியாயப்படித் தன்னிடம் வந்துசேருபவைகளை பொறுமையுடன் காட்டுத்தீப்போல அனுபவித்து விகாரமற்றிருப்பவனே மஹாபோகி. கிருஷ்ணன் இத்தகைய மஹாபோகி. உலகவிசித்ரம், நன்மை தீமை முதலிய த்வந்த்வங்கள் எது எதிர்ப்படினும் ஸ்படிகத்தில் வர்ணம் தோன்றியும் அது உண்மையில் நிர்வர்ணமாகவே இருப்பதுபோல மனம் எப்பொழுதும் ஆச்சர்யம் முதலியவைகளால் கலங்காது தெளிந்திருப்பவனே மஹாத்யாகி. சுகர் தத்தாத்ரேயர் ஆகிய இவர்கள் மஹாத்யாகிகள்.

இவ்விஷயங்களைக் கூறிவிட்டு கைவல்லிய நவநீதம், 'விரத மூன்றுடையவரே வீடுளாரே' என்று சொல்லி இந்த ஜீவன்முக்தர் பாகுபாட்டை முடிக்கின்றது. அதாவது ஜீவன்முக்தர்கள் இம்மூன்று விதமாக விருந்தபோதிலும் இதை அடைய முயலும் அப்யாஸி இம்மூன்று விரதத்தையும் கைக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் அவன் முக்தி பெறுவது நிச்சயம் என்பதாயிற்று. அப்யாஸிக்கு வ்யவஹாரம் வந்து தாக்கிக்கொண்டிருக்கும். அவன் மனம் கலங்குவதும் தெளிவதுமாகவிருக்கும். அவன் தனக்குவரும் வ்யவஹாரங்களுக்கு ஏற்ப இம்மூவர் லக்ஷணங்களிலும் பழகி வரவேண்டும். பின்னர் ஜீவன்முக்த நிலை வருங்கால் ஏதாவது ஒரு லக்ஷணம் தானே ஓங்கிநிற்கும். முன்னரே இவைகளைப் பிரித்து அப்யாசம் செய்யலாகாது என்பது சாஸ்திரங்களின் துணிபு.

விவேக போதினி

தொ 5.] பரிதாபி௵ ஆடிமீ [பகுதி 2

விக்கிரஹ ரஹஸ்யம்

THE INNER MEANING OF IMAGES

9. ஸ்ரீராமர்

இந்த விக்கிரஹம் பொதுவாக ஒரு வில்லைக் கையிலேந்திய புருஷன் ஸீதா லக்ஷ்மண ஹனுமாரோடு நிற்பதாக அமைந்துள்ளது. இதைத் தியானபரமாக வழிபடும்பொழுது, ஒரு ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை வலது முழந்தாளின்மேல் போட்டுக்கொண்ட ஸ்ரீராமர்மடியில் தன்னைநோக்கி இருக்கும் ஸீதையை உட்காரவைத்துக்கொண்டு, கையில் உபதேசமுத்திரை தாங்கி லக்ஷ்மணர் பரதர் சத்ருக்னர் ராஜோபசாரங்கள் செய்ய எதிரில் ஹனுமார் கூப்பிய கையுடன் மஹா விநயத்துடன் நிற்க கற்பகவிருக்ஷ நிழலில் அமைந்திருப்பதாக ஆராதிக்கப்பட்டு வருகிறது. இவ்விருவித விஷயங்களையும் சித்திரங்களில் காணலாம். உட்கார்ந்திருக்கும் மாதிரி, கையில் பிடித்திருக்கும் உபதேசக்குறி ஆகிய இவைகளைப் பின்னர் தக்ஷிணாமூர்த்தி விக்கிரஹ விஷயமாக எடுத்து விவரிப்போம். கற்பக விருக்ஷத்திற்கு அடியில் இருப்பதாக எண்ணுவது இந்த மூர்த்தி ஆராதிப்பவன் விரும்பியதை எல்லாம் கற்பக விருக்ஷம்போலக் கொடுக்க வல்லது என்பதைக் குறிக்கும்.

ராமகதையை வால்மீகி மஹரிஷி வெகு விஸ்தாரமாக எழுதியிருக்கிறார். இதை அறியாதார் ஒருவருமில்லை. ஆதலால் அதை இங்கு எடுத்து விஸ்தரிக்காமல் விடுவோம். இந்தக் கதையின் ரஹஸ்யப்பொருள் இருவிதமாகக் காணப்படும். முதலாவது பக்திபரமானது. இதில் ராமரை வழிபடு கடவுளாகவும், இவரை பக்தி செய்து நல்லகதி யடைந்த ஸுக்ரீவன், லக்ஷ்மணர், ஜடாயு, விபீஷணர், ஹநுமார், குஹன், ஸீதை, மஹரிஷிகள், சரபங்கர், சபரி, காகாஸுரன், பரதர் முதலியவர்களை விதம் விதமாய்க் கடவுளைப் பக்தி செய்தவர்களாகவும் கொள்ளலாம். இக்கருத்தை உள்ளடக்கியே பக்தி ஸூத்ரத்தில் நாரதர், 'மஹிமாஞானத்தால் வருவது, தர்மஞானத்தால் வருவது, உபாஸனக்கிரமத்தால் வருவது, தாஸ்யபாவத்தால் வருவது, ஸஹ்யபாவத்தால் வருவது, ஸ்நேக (நாயகாநாயக) பாவத்தால் வருவது, தான் பகவானுடைய குழந்தை என்ற பாவத்தால் வருவது, ஆத்மநிவேதனத்தால் வருவது, தாதாத்மிய பாவத்தால் வருவது, துக்கத்தால் வருவது, பிரிவாற்றாமையால் வருவது, ஆகிய இப்பதினொரு விதங்களால் ஒரே பக்தி பதினொரு விதமாகக் காணப்படும்' என்று எடுத்துக்காட்டி இருக்கிறார். ஆகவே ராமாயணமானது இப்படி அநேக விதமாய் ஒரே பரம்பொருளைப் பக்தி செய்து பரமபதமடைந்த மஹான்களது சரித்திரமூலமாய் நமக்குத் தகுந்த வழிபாட்டைப் பின்பற்றி நற்கதியடைய நம்மைத் தூண்டுகிறது.

இரண்டாவது விதம் ஞானபரமானது. இது அத்யாத்ம ராமாயணத்தில் காணப்படுகிறது. சிற்சில மாறுபாடுடன் ஆனந்த ராமாயணத்திலும் காணப்படுகிறது. பின்வருவது அத்யாத்ம ராமாயணத்தில் பாலகாண்டம் முதல் ஸர்க்கத்தில் காணப்படுவது.

மோக்ஷமென்ற அயோத்திமாநகரில் பிரம்மமென்ற தசரதர், ஞானசக்தி இச்சாசக்தி கிரியாசக்தியாகிய கௌஸல்யை ஸுமித்ரை கைகேயி என்ற மனைவிகளோடு அரசாண்டு வந்தார். அப்பொழுது ஞானசக்தியிடம் ஆத்மாவாகிய இராமர் தோன்றினார். அவ்யக்தமாகி குழந்தைப்பருவத்தில் தன் நிஜஸ்வரூபத்தை மறந்து சிரவணமென்னும் வஸிஷ்டரது உதவியால், வைராக்கியமாகிய லக்ஷ்மணரோடு மனனமென்ற விசுவாமித்திரரை அடுத்து, பின்பு அவரை முன்னிட்டுக்கொண்டு ஆத்மாவாகிய இராமர் பாபங்கள் என்னும் கொடிய அரண்யங்கள் முதலியவைகளைத் தாண்டிச்சென்று, ஞானமாகிய அம்பால் ஆவரணமாகிய தாடகையைக் கொன்று, இச்சையாகிய மாரீசனைத் தன்னை அணுகாதபடி வெருட்டி ஓட்டிவிட்டார். அதன் பின்பு ஏகாந்தமென்னும் மிதிலா நகரத்துட்சென்று, சாந்தமென்னும் ஜனகராஜனது ஆனந்தமென்னும் ஸீதையாகிய பெண்ணை விவாஹம் செய்துகொண்டு ஆத்மாவாகிய இராமர் மதமாகிய பரசுராமரைத் தலை எடுக்க ஒட்டாது பங்கப்படுத்திவிட்டு 'நான் பிரும்மபின்னனான ஜீவனல்ல' என்று தெளிய மோக்ஷமென்னும் அயோத்தியை அடைந்தார்.

ஜீவப்ரம்ம ஐக்கியமாகிய பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடப்பதை, கிரியாசக்தியாகிய கைகேயி சஞ்சலமென்னும் கூனியால் அறிந்து, பிரம்மமாகிய தசரதருக்கும் ஆத்மாவாகிய இராமருக்கும் பேதம் உண்டாக்கினாள். உடனே ஆத்மாவாகிய இராமர், ஆனந்தமாகிய ஸீதை, வைராக்கியமாகிய லக்ஷ்மணர், ஆகிய இவர்களோடு சித்தமென்னும்ஸரயூவைத் தாண்டி புத்தி என்ற குஹனோடு நேசித்தார். பின்பு விக்ஷேபம் என்ற காட்டின் வழியாகத் தபஸ் என்ற சித்திரக்கூடத்தை அடைந்து, மனஸ் என்ற காகாஸுரனுடைய ஸங்கல்பம் என்ற கண்ணைக் கெடுத்து, நிர்விகல்பம் என்ற கண்ணை இருந்தபடி விட்டு, அங்கு ஆத்மாவாகிய இராமர் ஸுகமாய் இருந்தார்.

இதன் பின்பு விக்ஷேப வனத்தின் வழியாய்ப் போகையில், எதிர்ப்பட்ட அகங்காரம் என்னும் விராதனைக் கொன்று, வீர்யம் என்ற அகஸ்தியரைத் தரிசித்து, தைரியம் என்ற அஸ்திரத்தை வாங்கிக்கொண்டு, காமம் என்ற சூர்ப்பனகையை அடக்கினார். அப்பொழுது அதனால் எழுந்த ஆகாமி கர்மமென்ற கரதூஷணாதிகளை வென்றார். இப்படி இருக்கையில் முன்னமேயே ஒழிக்காது விட்டிருந்த இச்சை என்ற மாரீசன் மறுபடியும் வர, அதனால் ஆனந்தமென்ற ஸீதையைப் பிரிந்து ஆத்மா என்னும் இராமர் போக, இரஜோகுணம் என்ற இராவணன் வந்து, ஆனந்தமாகிய ஸீதையைக் கொள்ளைகொண்டுபோய், துக்கம் என்ற லங்கையில் விசாரம் என்ற அசோக வனத்தில் வைத்து, அசுத்த வாசனைகளாகிய இராக்ஷஸிகளைக் காவலாக ஏற்படுத்தினான். இப்படி இருக்க, இச்சை என்ற மாரீசனைத் துரத்திச் சென்று ஆத்மாவாகிய இராமர் கொன்று, நிராசை என்ற பூமியில் அவனைப் புதைத்தார். அப்பொழுது ஆனந்தம் நஷ்டமாய்ப் போனதை ஆத்மாவாகிய இராமர் கண்டு, துக்கித்துக்கொண்டு வைராக்கியமாகிய லக்ஷ்மணரோடு விக்ஷேபம் என்ற காட்டில் மறுபடியும் திரிந்து, சிந்தை என்ற கபந்தனைக் கொன்று, ஸந்தோஷம் என்ற சபரியினிடம் வந்தார்.

ஸந்தோஷம் என்ற சபரியால் ஏவப்பட்டு, ஆத்மாவாகிய இராமர் நிதித்யாஸனமாகிய ஹனுமாரைத் தூதனாக அடைந்து, ஆனந்தமாகிய ஸீதையை ஸதா தியானம் செய்து; ஜனனமென்ற ஸப்தஸால விருக்ஷங்களை அழித்து, பயம் என்ற வாலியைக்கொன்று நிர்பயம் என்னும் ஸுக்ரீவனைக் காத்தார்.

அதன்மேல் நிதித்யாஸனமென்ற ஹனுமார் மோஹமென்ற ஸமுத்திரத்தைத் தாண்டி, லோபம் என்ற லங்கிணியைக் கொன்று, அசுத்த வாஸனையாகிய இராக்ஷஸ வீரர்களைச் சிதற அடித்து, ஆனந்தமென்ற ஸீதையைக் கண்டு, இராஜஸமென்ற இராவணனை எதிர்த்து, மௌனமென்ற நெருப்பால் துக்கமாகிய இலங்கையை எரித்து, ஆத்மாவாகிய இராமருக்கு ஸ்வானுபூதி என்ற ஸந்தோஷம் வரும்படி செய்தார்.

இதன் பின்பு மோஹம் என்ற ஸமுத்திரத்தின் கரையில் ஆத்மா என்ற இராமர் வந்து சேர, ஸத்வகுணம் என்ற விபீஷணர் வந்து இவரிடம் குடிகொண்டார். உடனே மோஹம் என்ற ஸமுத்திரத்தைத்தடுத்து, தமோகுணமென்றகும்பகர்ணனைக் கொன்று, இரஜோகுணமாகிய இராவணனை வெருட்டுங்கால், வைராக்கியம் என்ற லக்ஷ்மணர் தோஷம்என்ற இந்திரஜித்தின்பிரமை என்ற பாசக்கயிற்றால் கட்டுப்பட்டு, மோஹம் என்ற மூர்ச்சையில் விழுந்தார். அப்பொழுது நிதித்யாஸனம் என்ற ஹனுமார் நிஷ்டை என்ற ஸஞ்ஜீவி பர்வதத்தை எடுத்து வந்து, வைராக்கியம் என்ற லக்ஷ்மணருக்குப் பலம் என்ற தெளிவை உண்டாக்க, அவர் உடனே தோஷம் என்ற இந்திரஜித்தைச் சீக்கிரத்தில் கொன்றார். இப்படி இருக்கையில், ஸஞ்சித கர்மம் என்ற மூலபலப் படைகள் கோடிக்கணக்காக வர, ஆத்மா என்ற இராமர் தைரியம் என்ற மோஹனாஸ்திரத்தைப் பிரயோகம் செய்து, அவைகளை வேரோடு நாசமாக்கினார். உடனே சுத்தவாஸனைகள் என்ற வானரர்கள் தலைதூக்கினார்கள். இதன் பின்பு ஆத்மாவாகிய இராமர், இரஜோகுணமாகிய இராவணனை எதிர்த்து, அகங்காரமென்ற அவன் மார்பைப்பிளந்து, பத்து இந்திரியங்கள் ஆகிய அவன் சிரங்களைக்கொய்து, ஆனந்தமென்ற ஸீதை

யை மௌனம் என்ற அக்கினியில் பரிசுத்தமாக்கி, அவளோடு சேர்ந்து மோக்ஷமாகிய அயோத்தி வந்தார். அங்கு ஜீவப்பிரம்ம ஐக்கியம் என்ற பட்டாபிஷேகம் செய்துகொண்டு, தாமே பிரம்மமாகிய தசரதராகி ஆத்மாவாகிய இராமர் பிரகாசித்தனர்.

இனி ஆனந்தராமாயணம் விலாஸகாண்டத்தில் 4-வது ஸர்க்கத்தில் காணப்படும் ரஹஸ்யப் பொருளை எடுத்தெழுதுவோம்.

ஸச்சிதானந்தமாகிய விஷ்ணு என்ற ஸாகரத்தில், பூபார ஹரணமென்ற இச்சையாகிய அலை தோன்ற, அதின் திவலை ஆத்மாவாகப் பரிணமித்தது. அப்பொழுது ஹிருதயாகாசமாகிய அயோத்திமா நகரத்திலிருக்கும் சுத்த ஸத்வாந்தஃகரணம் என்ற தசரதருக்கு, இந்த ஆத்மா நான்கு பிள்ளைகளாகத் தோன்றினன். சுத்தஸத்வாந்தஃகரணமாகிய தசரதருக்கு, ஸுபுத்தியாகிய கௌஸல்யை இடம், துரீயாத்மாவாகிய இராமரும், குபுத்தியாகிய கைகேயி இடம் ஸ்வப்நாத்மாவாகிய பரதரும், மத்யம புத்தியாகிய ஸுமித்திரையிடம் ஜாக்ரதாத்மாவாகிய இலக்ஷ்மணரும், ஸுஷுப்தி ஆத்மாவாகிய சத்துருக்கினரும், உண்டானார்கள். இவ்வாறு தோன்றிய துரீயாத்மாவாகிய இராமர், விசுவாமித்திரயாக ஸம்ரக்ஷணம் என்ற மனோவேகத்தால் இழுக்கப்பட்டு, ஜாக்ரதாத்மாவாகிய லக்ஷ்மணரோடு ஸம்ஸாரமாகிய அரண்யத்தின்வழியாகப் போகையில், கெட்ட மனோவிருத்திகளாகிய தாடகையை வதம் செய்து, அதன்மேல் மனோவேகபங்கம் என்ற தனுர்பங்கத்தைச் செய்து பின்பு சுத்தமாயையாகிய ஸீதையை விவாஹம் செய்துகொண்டார். அதன் பின்பு அம்மாயையின் பூர்வ ஸம்ஸ்காரங்களாகிய பரசுராமரை நிக்கிரஹம் செய்தார்.

இவ்வாறு ஆன்தும், ஹிருதயாகாசமாகிய அயோத்தி அடைந்து, துரீயாத்மாவாகிய இராமர், ஸ்வப்ன ஸுஷுப்தி ஆத்மாக்களாகிய பாதசத்துருக்கினனைப் பிரிந்து, ஜாக்ரதாத்மாவால் ஆதரிக்கப்பட்டு, சுத்தமாயையின் ஸம்பந்தத்தால் வரும் ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்தார். இப்படி இருக்கையில், சுத்தாந்தஃகரணம் என்ற தசரதருக்குத் துரீயாத்மாவை அடுத்து ஸந்தோஷம் அடையவேண்டும் என்று தோன்ற, அவர் அதற்கு வேண்டிய ஸாதனமாகிய தியானம் என்ற பட்டாபிஷேகத்தை நடத்த முயற்சி செய்தார். இந்த சங்கதியை சஞ்சலமென்ற கூனியால் அறிந்த குபுத்தி என்ற கைகேயி, ஸ்வப்னாத்மாவாகிய பரதனை சுத்தாந்தஃகரணத்தில் குடிகொள்ள வேண்டும் என்றும், துரீயாத்மாவாகிய இராமர் ஸம்ஸாரமாகிய அரண்யத்தில் திரிந்து வெளிவரவேண்டும் என்றும் தூண்ட, அதன்படியே துரீயாத்மாவாகிய இராமர் நடப்பதாக ஒப்புக்கொண்டு, சுத்தமாயை ஜாக்ரதாத்மா ஆகிய இவைகளோடு, ஸம்ஸாரமாகிய அரண்யம் சென்றார். அப்பொழுது துரீயாத்மா ஸம்பந்தமற்ற சுத்தாந்தஃகரணமாகிய தசரதர் தமது உருவம் நீங்கினார்.

ஸம்ஸாரமாகிய அரண்யம் சென்று, துரீயாத்மாவாகிய இராமர் டம்பமாகிய விராதனைக் கொன்று, தேகமாகிய பஞ்சவடியை அடைந்து, பஞ்சபூதமாகிய பர்ணசாலையைக் கட்டிக்கொண்டு அதில் ஒருவாறு விச்ராந்தி அடைந்தார். அக்காலத்தில் அவருக்கு எதிராய் எழுந்த ஆசையாகிய சூர்ப்பனகையை அவர் அடக்க முயல, அப்பொழுது புற்றீசல்போல் கிளம்பி வந்த காமக்குரோத லோபாதிகளாகிய கரதூஷண திரிசிரஸ் முதலிய இராக்ஷஸர்களை வேரறுத்தார். அக்காலத்தில் மோஹமாகிய மாரீசனால் இழுக்கப்பட்டு, இராமர் சுத்தமாயையாகிய ஸீதையைப் பிரிய, அவளை அஹங்காரம் என்ற இராவணன் கவர்ந்துகொண்டான். அவள் உடனே தாமஸ நிலையை அடைந்தாள். மோஹமாகிய மாரீசனைக் கொன்றபின்பு, துரீயாத்மாவாகிய இராமர் சுத்தமாயை என்ற ஸீதையினுடைய நிஜஸ்வரூபத்தைக் காணாமல்,மிகுந்த துக்கப்படுகையில், ஜாக்ரதாத்மாவாகிய லக்ஷ்மணரது ஸஹாயத்தால் துக்கம் என்ற கபந்தனை அழித்து ஸந்தோஷமாகிய சபரியை அடைந்தார்.

ஸந்தோஷம் என்ற சபரியால் ஏவப்பட்டு, துரீயாத்மாவாகிய இராமர் விவேகமாகிய ஸுக்ரீவனையும், பக்தியாகிய ஹனுமாரையும் அடைந்து, அவைகளை நிலையாய் இருக்கும்படி செய்வதற்காக அவிவேகமாகிய வாலியைக் கொன்றார். பின்பு விவேகம் என்ற ஸுக்ரீவன் பக்தி என்ற ஹனுமாரை, சுத்தமாயை இருக்கும் நிலையைத் தெரிந்துவரும்படி அனுப்பினான்.

அப்பொழுது பக்தி என்ற ஹனுமார், தமது சிறப்பால் ஸ்தூல தேகம் முதலிய இடையூறுகளால் நிறைந்த அஜ்ஞானம் என்ற ஸமுத்திரத்தை எளிதில் தாண்டி, லிங்கதேகம் என்ற இலங்கையை அடைந்து, அகங்காரமாகிய இராவணனால் தாக்கப்பட்டு அசுத்தமாகிய துக்கத்தில் மூழ்கி, தாமஸ நிலையை அடைந்து துக்கப்படும் ஸீதையைக் கண்டு துரீயாத்மாவிடம் சங்கதியைத் தெரிவித்தார்.

அப்பொழுது விவேகம் என்ற ஸுக்ரீவனோடும், அவன் பரிவாரங்களாகிய நல்ல வாஸனைகள் என்ற வானர ஸேனையோடும், துரீயாத்மாவாகிய இராமர் அஜ்ஞானம் என்ற ஸமுத்திரத்தின் கரை வந்தார். அங்கு உத்ஸாஹம் என்ற விபீஷணர் வந்துசேர, அவரது தூண்டுதலால் அஜ்ஞானத்தைத் தாண்டும் உபாயமாகிய ஸேதுபந்தத்தை நன்றாகச் செய்து, லிங்கதேகம் என்ற இலங்கையை அடைந்து, மதம் என்ற கும்பகர்ணனையும், மத்ஸரம் என்ற இந்திரஜித்தையும் கொன்று, முடிவில் அகங்காரம் என்ற இராவணனைத் துரீயாத்மாவாகிய இராமர் வெட்டிச் சாய்த்தார். இதன் பின்பு, அசுத்தமாயிருந்த மாயையாகிய ஸீதையை, சித்தசுத்தி என்ற அக்கினியால் பரிசுத்தமாக்கி அவளை ஸாத்விக நிலையை அடையும்படி செய்து, அவளை இராமர் அங்கீகரித்துக்கொண்டார். எல்லாம் முடிந்தவுடன், துரீயாத்மாவாகிய இராமர் தனது நல்ல ஸ்நேகிதர்கள் முதலியவர்களோடு லிங்கதேகமாகிய இலங்கையை விட்டு, ஹ்ருதயாகாசமாகிய அயோத்தியை வந்து, ப்ரஹ்மானந்தம் என்ற ராஜ்யபோகத்தை அடைந்தார்.

முடிவில் ஸாயூவில் பிரவேசித்தலாவது, ஹிருதயாகாசத்தை மஹாகாசத்தில் லயிக்கும்படி செய்து ஸச்சிதானந்த ரூபமான விஷ்ணு ரூபத்தைத் துரீயாத்மாவாகிய இராமர் அறிந்து ஸாயுஜ்யமாகிய முக்தியை அடைவதே.

ராமவிக்கிரஹ ரஹஸ்ய விஷயமாக இரண்டு உபநிஷத்துகள் இருக்கின்றன. அவையாவன : ராமரஹஸ்யம், ராமதாபினி என்பவைகளே. இவைகளில் ராம ஆராதனாக்ரமங்கள் மந்திரங்கள் சக்ரங்கள் முதலியவைகள் எல்லாம் விஸ்தாரமாகக் காணப்படுகின்றன. இவைகளில் ராமனைப் பரம்பொருளாகி நிற்கும் ஆசார்யன் என்றும், ஹனுமாரை பரமானந்த சிஷ்யன் என்றும், ஸீதையை மாயை என்றும்,லக்ஷ்மண பரத சத்ருக்னர்களைப் பரம்பொருளது ஸகுண ரூபங்கள் என்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இதற்கேற்பவே முக்திகோபநிஷத்தில் ராமர் ஆசார்யனாகவிருந்து பரமவேத ரகஸ்யங்களை சிஷ்யனாகவிருக்கும் ஹனுமாருக்கு உபதேசிக்கிறார். மேலும் ராமவிக்கிரஹத்தை ப்ரணவமாகவும் பொருத்திக் காட்டி இருக்கிறது. இதில் லக்ஷ்மணர் அ, சத்ருக்னர் உ, பரதர் ம், ராமர் அர்த்தமாத்ரை. ஸீதை மூலப்ரகிருதி என்று விளக்கப்பட்டிருக்கிறது இந்த விக்கிரஹத்துள், ஸகலவேத ரஹஸ்யங்களும், ஓம் என்பதனுள் அடங்கி இருப்பது போல அடங்கிவிட்டது. இம்மாதிரி ரஹஸ்யம் இதனுள் அடங்கியிருப்பதால்தான் ராமநாமம் ஸகல பயங்களையும் நீக்கி கைதூக்கிவிடும் தாரக மந்திரமாக மதிக்கப்படுகிறது.

ராம என்னும் நாம விசேஷத்தைப்பற்றி விசாரித்தால் இது தாரக மந்திரமாகக் கருதத்தக்கது தான் என்பது நன்றாக வெளியாகும். 'நித்யானந்தம்,சித்ரூபம்,அனந்தம் ஆகிய இந்த ஸ்வரூபமாக இருக்கும் இவரிடத்தில் யோகிகள் ரமிப்பதால் (ஆனந்தபரவசராவதால்) இவருக்கு ராமர் என்று பெயர் வந்தது' என்று ராமதாபனியில் கூறப்பட்டுள்ளது. ர என்பதற்கு ப்ரகாசம் என்றும், ம என்பதற்கு மங்களம் என்றும் பொருள். ர என்பது பரம்பொருளையும், ம என்பது ஜீவாத்ம ஆதாரமான பொருளையும் உணர்த்தி ; ராமா என்பது, இரண்டும் ஒன்றே என்ற வேத ரஹஸ்யத்

தைக் குறிக்கும் என்று ராமரஹஸ்ய உபநிஷத்து கூறுகிறது. மேலும் விஷ்ணு அஷ்டாக்ஷரம், சிவபஞ்சாக்ஷரம் ஆகிய முக்கிய மந்திரங்கள் இரண்டின் உயிர் அக்ஷரங்களாலாகிய இந்த ராம நாமம் என்றும் அதிலேயே கூறப்பட்டுள்ளது. இதற்கேற்ப,

நிருந்தும் நமசிவாய நாராயணா என்று
ஜெபிக்கு மந்திரம் இரண்டும் மெய்தானே,
உரைக்கு மந்திர மிரண்டில் இரண்டாம் எழுத்தி
ஒரு ராமனாகி வந்த பெருமானே. [ரண்டும்

என்று ராமநாமச் சிறப்பை எடுத்து வெளியிடுகிறார் சீர்காழி அருணாசல கவிராயர்.

நமசிவாய, நாராயணாய என்று கூறப்படும் பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மஹா மந்திரங்களுக்கு ரா, ம என்னும் எழுத்துக்களே உயிர் அக்ஷரங்கள் என்று கூறுவர் பெரியோர். இம்மந்திரங்களின் சிறப்பை வெகு விஸ்தாரமாகக் கூறி இவைகளை ஜெபிப்பதால் அடையக்கூடிய நிலையையும் வெகுவாக விஸ்தரித்திருக்கின்றனர் நம் முன்னோர். இத்தகைய சிறப்பு வாய்ந்த இம்மந்திரங்களில் முற்கூறிய உயிரக்ஷரங்களை நீக்கிவிட்டால் இவைகள் உயிரற்ற உடம்புபோல நிஸ்ஸாரமாகி விடுகின்றன. நமசிவாய என்பதில் மவை எடுத்துவிட்டால் அது நசிவாய என்றாகும். இதற்குப் பொருள் மங்களம் இல்லை என்று ஆகி நமசிவாய மந்திரத்தின் சிறப்பு நீங்க, இது ஒரு கொடிய வாக்காகிவிட்டது. இம்மாதிரியே நாராயணாய என்பதன் கதியும். ரா என்ற எழுத்து நீங்கிய காலத்தில் அது நாயணாய அதாவது மோக்ஷம் இல்லை என்று பொருள்படும். (இங்கு அயனம் என்ற பதத்திற்கு மோக்ஷம் அல்லது கதி என்பது பொருள். 'நான்யபந்தா அயநாயவித்யதே' என்ற வேதவாக்கியத்தோடு ஒப்பிடுக). ஆகவே, ரா, ம என்ற எழுத்துக்கள் உள்ளபொழுது ஸகல சாஸ்திர ரஹஸ்யங்களையும் அடக்கியுள்ள மஹா மந்திரங்கள் அவை நீங்கிய காலத்தில் பொருளிழந்து சாஸ்திர எதிர்மறைப்பதங்களாக மாறிவிடுவதால் இவைகள் இம்மந்திரங்களுக்கு உயிர் அக்ஷரங்கள் என்று மதிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான சைவ வைஷ்ணவ மஹா மந்த்ர உயிர் அக்ஷரங்களாலாகிய நாமமாதலால் ராம என்ற நாமம் பெரியோர்களால் ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவித்து கரை ஏற்றுவிக்கத் தகுந்த தாரக மந்திரம், தாரகப்ருஹ்ம நாமம் என்று நன்கு மதிக்கப்படுகின்றது. இதுபற்றியே

श्रीराम राम रामेति रमे रामे मनोरमे ।
सहस्रनामतत्तुल्यं रामनाम वरानने ॥

என்ற உபதேச ச்லோகம் ஒன்று வழங்கி வருகிறது.

முன்னர் எடுத்துக்கூறியுள்ள கவிராயர் கீர்த்தனையில், இந்த ரகஸ்யம் அடங்கியிருப்பதோடுங்கூட, அங்குக் காணப்படும் மஹா மந்திரங்களின் அமைப்பை நோக்கில் மரா என்ற நாமம் ஒன்று ஏற்படுகின்றது. இதற்கும் மிகுந்த சிறப்பு உண்டு. இதை உச்சரித்துக்கொண்டே வந்தால் கொஞ்ச நாழிகையில் ராம நாமத்தில் கொண்டுசேர்க்கும். இந்த ராம நாமத்தின் சிறப்பிற்கு ஸ்ரீமத் ராமாயணமெழுதிய வால்மீகி ரிஷியே ஸாக்ஷி.

நாம உச்சாரண மந்திரத்திலேயே இவ்வளவு மனத்தை முற்றிலும் கவரும் த்யானத்தைக் கொடுக்கவல்லதாயும் கதை சிறப்பால் ஸகல வேதாந்த ரஹஸ்யத்தையும் வெளிப்படுத்துவதாயும் உள்ள ஸ்ரீராமவிக்ரஹத்தை உள்ளபடி ஆராதித்துவந்தால் மோக்ஷம் கைகூடும் என்பதற்கு ஸந்தேஹமில்லை.

நமது சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத் தொகை அனுப்பும்போதும் தமது விலாஸத்துக் கெதிரேயிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக் கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும். மானேஜர்

ஸ்தலசரித்திரக் கதைகள்
STORIES FROM LOCAL HISTORY

(தொடர்ச்சி)

விக்ரம சோழன்.

முன்னொரு சஞ்சிகையில் குலோத்துங்கச் சோழனைப்பற்றிசொன்னோம். குலோத்துங்கனுக்குப் பிந்தி பட்டத்திற்கு வந்த சோழன் விக்ரமன். இவன் குலோத்துங்கனது குமாரன். ஆனால் மூத்தவனல்ல. அப்படி யிருந்தும் தன் தகப்பன் இறந்துபோன வருஷம் வரையில் வெங்கி நாட்டுக்கு ராஜப்பிரதிநிதியாக விருந்து, குலோத்துங்கனிறந்தவுடன் சோழன் ஸிம்மாசனமேறினான். விக்ரமன் வெங்கிநாட்டை விட்டவுடன் மேல சளுக்கிய அரசன் அதைப்பிடித்துக்கொண்டான். மறுபடியும் விக்ரமன் அதை ஜெயித்ததுடன் கலிங்க தேசத்தையும் ஜெயித்தான். இவன் ஆளுகையின் ஏழாவது வருஷத்தில் கிராமங்களும், மகசூல்களும் ஒரு பெரிய வெள்ளத்தால் சேதப்பட்டன. கும்பகோணத்திற்குச் சமீபத்திலுள்ள திருவிசநல்லூரிலிருக்கும் சிவயோகநாத ஸ்வாமி கோவிலின் மூலஸ்தான மண்டபமும், உட்கோபுரமும் இவன் கட்டினதாகத் தெரியவருகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் குற்றாலத்திற்குச் சமீபத்தில் காவிரியினின்றும் பிரிந்து ஓடுகிற 'விக்ரமன்' என்ற ஆறு இவன் காலத்தில்தான் வெட்டப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

முனியதறியார்.

இந்த விக்ரம சோழன் காலத்தில் சௌரி ராஜப்பெருமாள்வீற்றிருக்கப்பெற்ற திருக்கண்ணபுரம் என்று விளங்கும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண்ணே முனியதறியா ரென்பவர் ஒரு பக்தி சிரோன்மணியாக விளங்கி, அக்காலத்தில் இருபது சிற்றரசர்களிடமிருந்து சோழராஜனுக்குச் சேரவேண்டிய கப்பத்தொகையைச் சரிவர வசூல் செய்து, ராஜஸமுகத்திற்கு, குறித்த தினத்திற்குள் தவறாமல் அனுப்பிக்கொண்டு வந்தார். இவரது மனம் சௌரி ராஜப்பெருமாள் திருவடியில் ஈடுபட்டிருந்தது. கோவில்சுவர்களில் ஆல், அரசங்கன்றுகள் முளையாமலும், கோவிலுக்கு யாதொரு பழுது வுண்டாகாமல் பாதுகாத்து வந்தார். பூஜைகள் காலாகாலத்தில் செய்யப்பட்டு, உற்சவங்கள் நிரம்பவும் விமர்சையாக நடத்தப்பட்டன.

இவ்விதம் கண்ணபுரத்தில் வசிக்கும்போது, ஒரு அழகான பெண்ணை காந்தர்வ விவாகம் செய்துகொண்டார். இவருடைய பக்தி எவ்வளவு பரிபூரணமடைந்திருந்ததோ அதேவிதம் இந்த அம்மாளுடைய அழகும் பரிபூரணமடைந்திருந்தது. "குஞ்சி அழகும், கொடுந்தானைகோட்டழகும், மஞ்சளழகு மழகல்ல." மனது, வாக்கு, காயம் என்ற திரிகரணத்தின் அழகே இம்மாது சிரோன்மணியிடத்தில் பரிபக்குவமடைந்திருந்தது. சாஸ்திர யுக்தமாகக் கலியாணமாகாவிடினும், ஒரு மனைவி தன் கணவனிடம் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமோ அவ்விதம் இந்த அம்மாள் முனியதறியாரிடத்தில் நடந்துகொண்டாள்.

இவ்விதம் சுகமாக முனியதறியார் காலங்கழிக்கும் நாளில், அவ்வூரில் ஒரு வருஷத்தில் பெரும் பஞ்சமுண்டாயிற்று. ஜனங்கள் ஆயிரக்கணக்காக மாண்டார்கள். கோவில் காரியங்கள் சரிவர நடைபெறவில்லை.

கஷ்டப்படும் ஜனங்களையும், பூஜை நிவேத்தியமில்லாத கோவிலையும் பார்க்கப்பார்க்க முனியதறியாருடைய மனதில் துக்கம் மேன்மேலும் பெருகிக்கொண்டே வந்தது. இந்த இரண்டு விஷயங்களைப்பற்றி அடிக்கடி யோசிப்பார். ஐயோ! ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களே, பசி நோயால் பீடிக்கப்பட்டு தினந்தோறும் ஆயிரக்கணக்காக இறந்துபோகிறார்களே, எம்பெருமானுக்குப் பூஜை நிவேத்தியங்கள் நடைபெறவில்லையே, கோவில் பாழடைந்து போய்விடுகிறதே, என்ன செய்கிறது, ஒன்றும் தோன்றவில்லையே, சௌரி ராஜப்பெருமானே நான் என் செய்வேன் என்று தனக்குத்தானே பல தடவைகளில் சொல்லிக்கொள்வார்.

கடைசியில் ஒரு யுக்தி தோன்றிற்று. கையில் ஏராளமான பணமிருந்தது. ஆனால் அது சோழ ராஜனுக்குச் சொந்தமேதவிர, தனக்கு ஒரு பைசாவாவது சொந்தமில்லை. எல்லாம் சிற்றரசர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு, ராஜாவிற்குச் சேர்ப்பிக்கப் படவேண்டிய கப்பம். ஆனால் என்ன? ஜனங்கள் பஞ்சத்தினால் கஷ்டப்படுகிறதும், கோவில் பூஜை நிவேத்தியங்களில்லாமல் பாழடைந்து போகிறதும், ராஜா உடனே கவனிக்கவேண்டிய விஷயங்களல்லவா? இந்த விஷயங்கள் ராஜாவிற்கெட்டி, ராஜா பரி

காரம் செய்யுமுன் ஊர் முழுமையும் பாழாகப் போய்விடும் போலிருக்கிறதே. நான் என் இந்தப் பணத்தை இப்போது பரோபகார நிமித்தம் செலவிட்டு க்ஷாமகாலம் நீங்கின பிறகு இத்தொகையைச் சேகரித்து ராஜாவிற்கு அனுப்பக்கூடாதென்று நினைத்துக் கையிலிருந்த பொருளை ராஜா உத்திரவின்றியில் செலவிட்டு ஜனங்களைக் காப்பாற்றின தன்னியில், கோவிலில் பூஜை நிவேத்தியங்களும் காலாகாலத்தில் சரிவரநடைபெறும்படி செய்தார்.

இவரிடத்தில் ஜனங்கள் வைத்த பிரீதியும், ராஜா வைத்திருந்த நம்பிக்கையும், இவருடைய உத்தமமான குணமும், ராஜாவைச் சுற்றிலுமுள்ள மந்திரிகளினுடைய மனதில் அசூயையை யுண்டாக்கின. வெகுகாலமாக இவரைக் கெடுக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்த இம்மந்திரிகள், இவர் செய்த காரியத்தைக் கேட்டவுடன், "இவனைத்தொலைக்கிறதற்கு இதுதான் தருந்தசமயம்" என்று நினைத்து இவர்மேல் இல்லாததும் பொல்லாததும் ராஜாவினிடத்தில் சொல்லி அவன் கோபத்தை மூட்டினார்கள். ராஜாவோ இவரிடத்தில் அளவில்லாத நம்பிக்கை வைத்திருந்தான். ஆனால் இவர் செய்தது நிஜமென்று நன்றாய் தெரிந்தபோது, ராஜா மனதில் தாங்கமுடியாத கோபம் பிறந்தது. தான் செய்ய வேண்டிய காரியத்தை அவர்செய்து ஜனங்களைக் காபாற்றினாரே என்று சற்றும் நினைத்தானில்லை. இத்தனை தினங்களுக்குள் கப்பத்தொகையைச் செலுத்தவேண்டுமென்று கொஞ்சங்கூட கெடு கொடுத்தானில்லை. அசூயை அடைந்திருந்த மந்திரிகளின் தூண்டுதலால் முனியதறியாரை உடனே பிடித்துக் கொண்டுவந்து ஜெயிலில் அடைத்துவிட வேண்டுமென்று உத்திரவு செய்தான்.

ராஜாவின் ஆக்கினைப்படியே போலீஸார் முனியதறியாரைப்பிடித்து ஜெயிலில் அடைத்துவிட்டார்கள். இச்செய்தியைக் கேட்டவுடன் இவருடைய மனைவி மிகவும் துக்கித்து, கோவிலுட் சென்று இந்த ஆபத்துக்காலத்தில் தன் கணவனைக் காப்பாற்ற வேண்டுமென்று பெருமாளிடத்தில் மிகவும் மன உருக்கத்துடன் பாடினாள். முனியதறியாருக்கு இச்சமயத்தில் சகாயஞ்செய்ய பெருமாளைத் தவிர வேறொருவருமில்லை. இராப்பகலாகப் பெருமாளை இடைவிடாது பிரார்த்தித்தார். இப்படி இவர் ஜெயிலிலிருந்தும், ஜனங்களுக்கு இவரிடத்திலிருந்த பிரியம் கொஞ்சங்கூட குறையவில்லை. இவர் 'சற்குணர்' என்ற பெயர் தேசமெங்கும் பாவியது. பதிவிரத சிரோன்மணியாகிய இவருடைய மனைவி, "இன்று தினம் வந்தால் என்னைத் தாங்கள் உயிரோடு பார்க்கலாம், இல்லாவிட்டால் என்னைப்பற்றி கேழ்விப்படலாமென்று" ஒரு கவிரூபமாக ஒரு கடிதம் எழுதினாள். ஏனென்றால் தன் கணவனைக் கூடிய சீக்கிரத்தில் பார்க்காவிட்டால் தன் உயிரைவிட்டு விடுகிறது என்று தீர்மானித்து விட்டாள் போலும்.

தன்னுடைய பக்தனிருந்த நிலைமையைப் பார்க்க பெருமாளுக்கு மிகவும் மனமிரங்கியது. ஆபத்துக்காலத்தில் திருமால் தன்பக்தர்களுக்கு உதவி புரிந்து ஆபத்து சகாயனென்று பேரெடுக்கவில்லையா ? ராஜன் நித்திரை செய்யும்போது ஜோதிஸ் ரூபமாக ஒரு பக்தன் வந்து "நானிருக்கிறது கண்ணபுரம், ஜெயிலிலிருக்கிறவன் என்னுடைய பக்தன அவன் படும்பாடு என்னால் சகிக்க முடியவில்லை அவனை நீ உடனே விடுதலை—" என்று சொன்னதாக அரசன் சொற்பனங் கண்டான். உடனே விழித்துக்கொண்டு, மந்திரிகளைக் கூப்பிட்டு முனியதறியாரை அந்த க்ஷணமே விடுதலை செய்யும்படிக்கு உத்திரவு கொடுத்தான்.

முனியதறியார் கண்ணபுரம் நோக்கிச் சென்றனர். இச்செய்தி அவன் மனைவிக்குத் தெரிந்தவுடன் அவளுக்குண்டான சந்தோஷத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமோ ? ஆனந்தக்கண்ணீர் உதிர்த்தனள். திருமாலைப் புகழ்ந்து பாடினள்.

முன்பு பெறப்பெற்ற பேறோ முடிவில்லை
பின்பு பெறும்பேறு முண்டோ பெருகுவனேல்
என்பு பெறுதவிழி பிறவி வெய்திடினும்
அன்பு பெறுகை யரும்பே றெனக்கென்றாள்.

தன் கணவனை எதிர்கொண்டழைக்க ஓடினள். கணவன் வீட்டிற்கு வந்தவுடன் பிராணநாதா ! நான் இன்றைக்குச் சர்க்கரைப்பொங்கல் பண்ண உத்திரவு கொடுக்கவேண்டும் என்று கேட்டாள். முனியதறியார் அதற்கிணங்க திவ்யமான சர்க்கரைப்பொங்கல் செய்தாள். அதைச் சாப்பிடும் போது முனியதறியார் அது நிரம்பவும் ருசியாயிருக்கக் கண்டு தன்னுடைய மனைவியின் சமயலைப்பற்றிபுகழ்ந்துபேசி,"இப்பொங்கல் ஸாக்ஷாத் சௌரிராஜப்பெருமாளுக்கே அர்ப்பணம்" என்று சொன்னார்.

மறுநாள் காலையில் கோவிலின் கதவுகள் திறக்கப்பட்டபோது, பெருமாளின் விக்கிரகம் நெய்யினால் தடவப்பட்டு, பொங்கல் வாசனை வீசிற்று. இந்த அற்புதமான விஷயத்தின் காரணம் முனியதறியார் சொல்லுகிறவரையில் ஒருவருக்கும் தெரியவில்லை.

முனியதறியாரின் பரோபகாரத்தையும்,தெய்வ பக்தியையும் பற்றித் தோட்டிமுதல் தொண்டைமான்வரையில் புகழாதவர்களில்லை. தான் அர்ப்பணஞ் செய்த சர்க்கரைப்பொங்கலைப் பெருமாள் ஏற்றுக்கொண்டதற்காகத் தினந்தோறும் சர்க்கரைப் பொங்கல்செய்து பெருமாளுக்கு நிவேதனஞ் செய்யும்பொருட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்தார். இன்றைக்கும் திருக்கண்ணபுரத்தில் பெருமாளுக்குச் சர்க்கரைப் பொங்கல் நிவேதனஞ் செய்யப்படுகிறதைப் பார்க்கலாம். முனியதறியாரால் அர்ப்பணஞ் செய்யப்பட்டு, சௌரிராஜப் பெருமாளால் அங்கீகரிக்கப்பட்டமையால், இந்தப் பொங்கலுக்கு முனியோதனம் என்று பெயர் வந்தது. இது மிகவும் ருசியாகவிருக்கிறபடியால் ஜனங்கள் இதை விசேஷமாக வாங்கிச் சாப்பிடுகிறதுண்டு.

G. ரத்தினம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.

ஆத்திசூடி விளக்கம்

MORAL SAYINGS EXPLAINED

20. தந்தைதாய்ப் பேண்.

உன் தாய் தந்தையர்களை நன்கு மதித்து நட என்பது இதன் பொருள். அவர்கள் உயிருடன் வாழுங்கால் அதாவது இம்மையில் அவர்களைக் கடவுளுக்கு நிகராகப்பாவித்து நடத்தலும், காலம் சென்ற பின்பு அவர்கள் பாபங்கள் தீரச் செய்யவேண்டிய தானதர்மாதிகளை மிகுந்த சிரத்தையுடன் செய்துவருவதுமே அவர்களை நன்கு மதித்து நடத்துதல் என்பதன் கருத்து. இவ்வாறு ஏன் செய்யவேண்டும் என்று கேட்டால், அதற்கு ஔவையே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று காரணம் கூறியுள்ளாள். ஒருவன் உலகில் பகுத்தறிவு முதலியன பெற்று மேதாவியாகிக் கடவுளின் சிறப்பு முதலியவைகளை உணரும் முன்னர் முதலில் உணரும் கருணை மூர்த்தியாகி இருப்பவர் தாய்தந்தையர்களே. இவர்கள் மூலமாகத்தான் ஒருவனுக்கு ஆசாரியன் கிடைத்து கல்வி முதலியன வளருவது. ஆகவே இவர்களே முதற்றெய்வங்கள். இது பற்றியே வேதமும், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ஆசார்யனும் அதிதியும் தெய்வங்கள் தான்' என்று கூறியுள்ளது மேலும் தாய் தந்தையர்களே ஸகல போகங்களை அனுபவித்து அடிபட்டுத் திருந்தி மேன்மை பெறுவதற்கு வேண்டிய தேஹத்தை நமக்கு உதவி நாமாக புத்திவந்து உலகில் ஸ்வதந்த்ரமாக வாழக்கூடிய நிலைவரும்வரையில் நாம் கொடுக்கும் கஷ்டங்களை ஒருபொருட்டாக வெண்ணாது நம்மை வளர்த்து, அவர்கள் வாழ்நாள் முழுவதும் நம்மேல் மாறுப்பக்ஷமுடையவர்களாக இருக்கின்றனர். தாயின் மேலான நிலையைப் பட்டினத்துப்பிள்ளை தம்தாயிக்கு தஹனக்கிரியை செய்யுங்கால் நன்றாக எடுத்துக் கூறியுள்ளார். இவர்களுக்கு நாம் 'நன்றி மறவேல்' என்னும் வாக்கியத்தைப் பின்பற்றியாவது தகுந்த மரியாதைசெய்து காப்பாற்ற நாம் கடமைப்பட்டவர்களாக விருக்கிறோம். நேரிட நமக்கு எல்லா வித நன்மையும் செய்த தாய் தந்தையரை நன்கு மதித்து வாழ இயலாத ஒருவனுக்கா தோன்றாது நிற்கும் கடவுளிடம் சிறந்த மதிப்பு வந்துவிடும்? ஆகவே இந்தக் குணமில்லாதவனிடம் வேறு

ஆத்மகுணங்கள் வந்து அணுகா. இதுபற்றியும் ஒருவன் தன் பெற்றோரைப் பேணல் வேண்டும்.

பெற்றோரைப் பேணிச் சிறப்புடன் வாழ்ந்தவர்கள் அநேகர். தர்மவ்யாதன் தன் பெற்றோரைப் பேணி நின்றதால் அவனுக்கு ஸகல தர்மஞானங்களும் உண்டாய் தான் வேடஜாதியாக விருந்தாலும் ஒரு பிராஹ்மணனுக்கு எடுத்துக்கூறும் நிலை அவனுக்கு வந்தது, மஹாபாரதம் ஆரண்ய பர்வத்தில் விஸ்தாரமாகக் காணப்படும். தந்தை தாய்களைப் பேணியவர்களின் விஷயத்தை ஆர்யமத உபாக்யானம், முதல்பாகம், புத்திரர் கடமை என்ற கதைகளில் ராமர், பரசுராமர், பீஷ்மர், தர்மவ்யாதன் இவர்கள் கதைகளால் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. தந்தை தாய்களுக்கு வழிபாடு செய்து கொண்டிருந்த பண்டராபுரம் புண்டரீக பக்தனுக்குத் தர்சனம் கொடுக்கவந்த ஸ்வாமீ, அவ்வூர் நதிக்கரையில் அவன் இட்ட செங்கல்லின் மேல் நின்றுகொண்டு அவன் வழிபாடு முடியும் வரை காத்திருந்து அவனைப் பின்னர் அனுக்ரஹித்து மறைந்தார் என்று பக்தவிஜயத்திலிருக்கிறது. பெற்றோர் வார்த்தையை மீறி நடந்ததால்தான் துர்யோதனன், ருக்மி, கம்ஸன் முதலிய கொடியவர்கள் வேரோடழிந்தனர். தாய்தந்தையர்களைப் பேணிச் சிறப்புற்றவர்களைக் காட்ட தாயின் அடிமைத்தனத்தை நீக்கிய கருடன் கதையையும், ஒரு அந்தணன் கதையையும்,

அனையிடர்தீர்த் தான்கருட னந்தணன்செங் கந்தை
தனையெடுத்துச் சாவு தவிர்த்தான் - இனைவர்போய்
சீராடும் புன்னை வனதீரனே நாடோறும்
போருந்தந் தாய்ப்பேண்.

என்ற ஆத்திசூடி வெண்பா அடக்கி உள்ளது.

தாய்தந்தையர் நல்லவர்களாக விருந்துவிட்டால்தான் இவைகளைப் பின்பற்றவேண்டும்: இல்லாவிடில் அவர்களைக் கவனிக்கவேண்டியதில்லை என்று சிலர் அபிப்பிராயப்படலாம். அதற்கு அவர்கள் ப்ரஹ்லாதனையும், சண்டேசுர நாயனார் முதலியவர்களைத் திருஷ்டாந்தமாகக் கொடுப்பது வழக்கம். இவர்கள் விஷயங்கள் ஸாதாரணமாக உலகில் நடப்பவைகள் அல்ல ; மிக அபூர்வம். இதைக் கொண்டே கொடிய தாய்தந்தையர்களை அவமதிக்கவேண்டும் கொல்லவேண்டும் என்ற விதியை ஏற்படுத்திவிடலாமா? மேலும் இவர்கள்தான் எவ்வாறு நடந்துகொண்டிருக்கிறார்கள்? ப்ரஹ்லாதர் தந்தைவாக்கைக் கவனியாது பகவத்பக்தி செய்தாரே ஒழிய அவனை ஒருவிதத்திலும் அவமதிப்பாகப் பேசவில்லை. அவன் கொடுத்த தண்டனைக்கு மாறாக அவனை எதிர்த்து அடித்துவிடவும் இல்லை. அவன் துர்போதனைப்படி நடக்காமலிருந்ததைத் தவிர வேறு ஒருவிதமான ஒழுங்கு தவறின நடத்தையும் ப்ரஹ்லாதனிடம் காணப்படவில்லை. பகவான் தகப்பனைக் கொன்றதும், அவனுக்கு நற்கதி வரும்படி செய்யவேண்டும் என்று ப்ரஹ்லாதர் கேட்டுக்கொண்டார். சண்டேச்வர நாயனாரும் தகப்பன் அடிகளை லக்ஷ்யம் செய்யாதிருந்து, முடிவில் சிவபூஜைக்குத் தடையாகத் தகப்பன் வந்தபொழுது அதையும் கவனியாது தமது காரியத்திலேயே கண்ணாக விருக்கமுடியாது, படபடப்புடன் தகப்பன் காலைத் தான் வெட்டினார். இதைச் செய்யாதிருந்தால் அவருக்கு ப்ரஹ்லாதன் சிறப்பு வந்திருக்கும். இந்த விஷயத்தில் ப்ரஹ்லாதருக்கு இவர் சற்றுக் குறைவுதான். பக்தி விசேஷத்தில் இருவருக்கும் யாதொரு பேதமும் இல்லை. ஆகவே இவைகளிலிருந்து என்ன கொடியவராயினும் பெற்றோர் பெற்றோரே ; அவர்களை மதிப்புடன் நடத்துதல் புத்திரர்கடன். அவர்கள் கொடியவர்களாகில் அந்தப் பாபம் அவர்களுக்கு. அதற்காகப் புத்திரன் அவர்களை அவமதித்து வெறுத்தானாகில் இந்தப்பாபம் புத்திரனுக்கு. இப்படிச் செய்வதால் தாய்தந்தையர்கள்கொடுமையும் நீங்காது புத்திரனுக்குப் புண்ணியமும் வாராது. கொடிய தாய்தந்தையர்களிடம் அகப்பட்டுத் தத்தளிக்கும் பிள்ளை அவர்கள் துர்போதனைகள்படி நடக்காது நல்வழியிலேயே பிடிவாதமாக நடப்பதால் மாத்திரம் அவர்களுக்குக் குறிப்பாகத் தனது அப்ரியத்தைத் தெரிவிக்கவேண்டுமே ஒழிய, அவர்களை எதிர்த்துப் பேசுதல் அவமதித்தல் மூலமாக எப்பொழுதும் தெரிவிக்கவே கூடாது. அவர்கள் பெருந்தடைகளாக ஏற்பட்டுவிட்டால் அவர்களை விட்டுவிலகி நின்று அவர்களைப் பேணியே தீரவேண்டுமே ஒழிய ஒருகாலும் த்வேஷம் பாராட்டவே கூடாது. அதர்மத்தில் ப்ரவேசித்துத் தாய்தந்தையரைப் பேணவும் கூடாது, தர்மவழி நடக்கவேண்டுமென்று அவர்களை அவமதித்து த்வேஷிக்கவும் கூடாது. அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மாத்திரம் சாந்தமனதுடன் எப்பொழுதும் செய்தே தீரவேண்டும்.

21. நன்றி மறவேல்

ஒருவன் செய்த நன்மையை ஒருநாளும் மறக்காதே : என்பது இதன் பொருள். ஆகவே ஒருவன் செய்யும் கெடுதியை உடனே மறந்துவிட வேண்டும் என்பது இதில் த்வனிக்கிறது. உலகில் நாம் பலரோடு பழகுங்கால், சிலர் செய்வது நமக்கு நன்மையாயும் சிலர் செய்வது கெடுதியாயும் இருக்கும். இவைகள் இரண்டும் நமது மனதில் பதிந்து நிற்கும். நன்மை பதிந்திருந்தால் அது செய்தவனுக்குத் தருந்தசமயத்தில் நாமும் உதவவேண்டும் என்றும், கெடுதல் பதிந்தால் அது செய்தவனுக்குப் பதில் கெடுதி செய்துவிட வேண்டும் என்றும் ஸாதாரணமாக எல்லோருக்கும் படும். மேலும் முன் எண்ணம் அவ்வளவு பலமாக மனதில் நில்லாது சீக்கிரத்தில் மங்கிக் கொண்டே வரும்: பின்னதோ மங்க வெகு நாளாகும். நன்மை செய்வதால் நமக்கு சித்தஸமாதானமும், தீமை செய்வதால் மனச்சஞ்சலமும் உண்டாவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாதலால் எளிதில் மங்கக்கூடிய நன்றி விஷயமான எண்ணத்தை எளிதில் மங்கவொட்டாமலும், தீமை விஷயமான எண்ணத்தை உடனேமங்கிப்போகும் படியாகவும் செய்துவிடவேண்டும், மேன்மையை அடைய விரும்பும் புத்திமான், என்று இந்நீதி வாக்கியம் கூறும். மேலும் ஒருவனோடு நாம் வெகு நாள் பழகிவந்தால் அவன் சிற்சில ஸமயத்தில் நமக்கு நன்மையையும் வேறு சில ஸமயத்தில் நமக்குத் தீமையையும் செய்யும்படி நேரிடலாம். இங்கும் நன்றியை மறவாது தீமையை வெட்டென மறந்துவிடவேண்டும்.

இந்நீதி வாக்கியம் ஒருவனிடமிருந்து உபகாரம் பெறுபவனை நோக்கியே கூறியுள்ளது. இதை நாம் மறந்துவிடும் காலத்தில்தான், நமக்கு விசித்திரமான மனோநிலைகள் எல்லாம் வந்துவிடும். முக்கியமாக உபகாரம் செய்பவன் இதை எடுத்து ஆளத்தொடங்கி விட்டால்தான் இந்நிலையின் மூடத்தனம் நன்கு வெளியாகும். ஒருவனுக்கு நாம் ஏதாவது நன்மையைச் செய்துவிட்டு, அவன் அதை மறவாது பதில் உபகாரம் செய்யவேண்டிய சமயத்தில் செய்யாது விட்டுவிட்டான் என்று வைத்துக்கொள்ளுவோம். உடனே நாம், 'நாம் செய்த உபகாரத்தை அவன் நினைக்கவில்லை பார்த்தாயா! அநியாயமாக நன்றி மறந்து அவன் அதோகதியை அடைந்து கெட்டுப்போகிறானே,' என்று எண்ணி அவன்மேல் கோபித்து த்வேஷம் பாராட்டுவது நமக்கு வழக்கமாகிவிட்டது. இவ்வாறு உண்டாகும் எண்ணத்தை ஆராய்ந்து நோக்கில் 'ஆடு நனைகிறதே என்று கோநாய் அழுத' கதையாக முடியும். ஆடு நனையாது தான் மழைக்கு ஒதுங்கியிருக்கும் இடத்திலேயே இருக்குமாயின் அதை தான் நனையாது பிடித்துத் தின்று ஸுகிக்கலாமே என்பதுதான் இந்தக் கோநாயின் நோக்கம். இதுபோலப் பிறன் நன்றி கொன்று கெட்டுப்போகிறானே என்று உபகாரம் செய்தவன் எண்ணுவது தனக்கு ஸமயத்தில் உபகாரம்செய்து அவன் ஸுகப்படுத்த வில்லையே என்ற வெறும் தன்னயம்கருதுவதால்தான் உண்டாவது. இம்மாதிரி நன்றி மறவேல் என்ற வாக்கியத்தை உபயோகப்படுத்தி நாம் தட்டழியாதிருக்கத்தான் கீதையில் பகவான் 'நன்மை செய்யத்தான் உனக்கு அதிகாரம், அதன் பலன் உன்னால் வருவதல்ல. ஆதலால் பலத்திலிச்சை விட்டு ஸத்கருமங்களைச் செய்து விடுபடு' என்று அர்ச்சுனனுக்குக் கூறியிருக்கிறார். இம்மாதிரியான எண்ணம் வந்து அப்பாஸிகளை வருத்தாதிருப்பதற்கு ஒரு மஹான் பின்வரும் உபாயம் கூறுகிறார். 'நாம் ஒருவன் ஆபத்காலத்தில் அவனுக்கு உபகாரம் செய்துவிட்டோம் என்று வைத்துக்கொள்ளுவோம். உடனே அவன் நம்மிடத்தில் நன்றியறிவோடு இருக்கவேண்டும்

என்பது நமக்குத் தோன்றலாம். அவன் அவ்வாறில்லாவிட்டால் பாபம் அவனது, அதைப்பற்றி நினைந்து வருந்த நாமா ஆள்? அவ்வாறு வருந்தினால் நமக்கு ஸ்வயநயம் கருதும் தன்மை வருகிறது. மேலும் அவன் நன்றியறிவுடனிருக்க வேண்டும் என்று எண்ணுவதன் நோக்கம் என்ன? நமக்கும் அவனுக்கு வந்தது போன்ற ஆபத்துவர அப்பொழுது அவனும் நாம் செய்ததுபோல நமக்குச் செய்ய வேண்டும் என்பது தானே! அப்படியானால் அவன் நன்றியறிவை நாமறியக்காட்ட, அவன் முதலில் நமக்கு ஒரு ஆபத்து வரவேண்டும், என்று கோரவேண்டும். இவ்வாறு கோருவது நன்றியறிவாகுமா?' என்று மனனம் செய்தால் உடனே சிரிப்பு வந்து முற்கூறிய எண்ணத்தை மாற்றிவிடும்' என்பர் பெரியோர். ஆகவே இதிலிருந்து உபகாரம் பெறுவோர்கூடச் செய்தவருக்கு அதை எப்படியாவது திருப்பிவிடவேண்டும் என்று எண்ணுவது நன்றியறிவே அல்லவென்றும்; செய்த நன்றியை மறவாதிருந்து தருணம் வாய்க்குங்கால் அதற்குப் பதில் செய்து இந்த அறிவைக்காட்டி மற்றஸமயம்காட்டவேண்டும் என்ற எண்ணம் தோன்றாதிருப்பதே நன்றியறிதல் என்பதும் வெளியாகும். மேலும் வாய்விட்டுக் கூறுவது இன்றித் தகுந்த தருணத்தையும் எதிர்பார்த்திராது ஸமயம் வாய்த்தால் கூடியவரையில் பதில் நன்மைசெய்து காட்டுவதே நன்றிமறவாததற்கு முக்கிய லக்ஷணம்.

ஒருவன் செய்த நன்றியை மறப்பதால் உண்டாகும் கேடு யாது? ஒருவன் நமக்கு நன்மை செய்தால், அவனுக்கு ஒருவிதமாகக் கடைப்பட்டவனாகிறோம். அதுபற்றியே மிகுந்த மானிகளாக விருப்பவர்கள் என்ன கஷ்டம் வந்தபோதிலும், பிறர் தயவை எதிர்பாராது வருந்துவதே மேல் என்று மதிப்பார்கள். இம்மாதிரி கடமைப்பட்டுவிட்டுப் பின்னர் அதைத் தீர்த்துக்கொள்ளும் ஸமயம் வருங்கால் அதைப் பதில் செய்து தன்னை விடுவித்துக்கொள்ளாது எந்தப் புத்திமான்தான் இருப்பன்? அவ்வாறிருப்பவன் ஸ்வதர்மத்தைக் கவனியாத மூடன். இதுவே அவனை மேலும் உபகாரம் செய்தவனிடம் நன்றாகப்பந்தப்படுத்திவிடும். இவன் மிருகங்களைவிடக் கேடுகெட்டவனாவான். இதோடு நின்றுவிடுவானா இவன். ஒரு ஆபத்ஸமயம் தன் உபகாரிக்கு வந்துவிட, அப்பொழுது அவனுக்கு ஸஹாயம் செய்தால் தனக்கு வரும்படி குறைவதாகவும், செய்யாது அவனைக் கொன்றுவிட்டால் தனக்கு அதிகவரும்படி வருவதாகவும் இருந்தால் இவன் உடனே உபகாரியைக்கொன்று தன் விஷயத்தை அதிகப்படுத்தி விடுவான். இதனால் இவனுக்கு நன்றிகொன்ற பாபமும் வந்து விடும். நன்மைக்குப் பதில் தீமை செய்வதாகிய இந்நன்றி கொன்றவர்களுக்குப் பரிஹாரமே இல்லை. ஆதலால் நன்றி மறத்தல் நன்றி கொல்லும் நிலைக்கு நம்மைக் கொண்டுவந்து விட்டு அனுபவித்தே தீர்க்கவேண்டிய முற்றிய பாபத்திற்கு நம்மை ஆளாக்கிவிடும். ஆதலால் நாம் பிறர் நமக்கு செய்த நன்றியை மறந்து ஒருபொழுதும் அவர்களுக்குத் தீங்கு செய்யும் நிலைக்கு வந்துவிடக்கூடாது.

நன்றிமறந்து அதோகதியை அடைந்ததற்கு மஹாபாரதம், **சாந்திபர்வத்தில்** நாடிஜங்க உபாக்யானம் என்ற ஒரு கதை யுண்டு. அதை மஹா பாரத வினாவிடை 3-ம் பாகம், வினா 80, பக்கம் 55-56-களைப் பார்க்க.

இந்த விஷயத்தில்

உன்னாட்டாரெல்லா முயிர்காத்துக் கோத்திரத்தில்
எந்நாளும் வாழ்ந்தே யிருப்பதனால்—பன்னாளும்
பூதலத்தின் மேன்மைபெறு புன்னைவன நாதனே
எந்திகழ்ந்து நன்றி மறவேல்.

என்பது ஆத்திசூடி வெண்பா.

இராஜாங்க முறை

பிரதமக் கொள்கைகள்

MORALS AND CIVICS : ELEMENTARY PRINCIPLES

(தொடர்ச்சி)

பிற உறவினரிடத்துச் செலுத்தவேண்டிய கடமைகள்

தகப்பன், தாய், பாட்டனார், பாட்டியார், முதலியவர்களும், குழந்தைகளும், குடும்பமெனப்படுவார். எல்லாரும் ஒரே வீட்டில் வசிப்பார்கள். அன்றியும் நாம் முன்னமேயே சொன்னபடி குடும்பம் என்பது சிற்றப்பன், அத்தை, அத்தான், பங்காளிகள் யாவரையும் குறிக்கும்.

உங்கள் தாயார், தகப்பனார், பாட்டனார், பாட்டியார் இவர்களுடைய பெயரே அவர்களுக்கும் இட்டு அழைப்பார்கள்.

ஒருவன் பிள்ளையில்லாமல் இறந்துபோனால் அவனுடைய ஸொத்துக்கள் யாவும் சட்டப்பிரகாரம் அவனுடைய ஸகோதரர் பிள்ளைக்காவது வேறு பங்காளிக்காவதுதான் போய்ச் சேரும். இந்தச் சட்டம் நியாயமானதுதான். ஏனென்றால் ஓர் குடும்பத்துக்கு மூலபுருஷன் ஒருவனேயாதலால், ஸொத்துக்குப் பாத்தியம்குடும்பத்தார் எல்லாருக்கும் உண்டு. இவ்விதமாக ஸொத்துப் பாத்தியத்தினாலன்றிப் பிரியத்தாலும், குடும்பத்தார் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

குடும்பத்தில் ஏதாவதொரு விசேஷம் நடக்கும்போது உன் சிற்றப்பன், சிறுதாயார், அவர்கள் குழந்தைகள்முதலியவர்கள் வந்தால் உனக்கு ஸந்தோஷம் உண்டாகாதா? அவர்களைப் பார்க்க நீ போகும்போது உனக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. வருஷப் பிறப்பன்று நீ முதன்முதல் உன் பெற்றோரை வணங்குகிறாய்; பிறகு, உன் பந்துக்கள் ஸமீபத்தில் இருந்தால் அவர்களையும் வணங்குவாய். அவர்கள் ஸமீபத்தில் இல்லாவிட்டால் நீ அவர்களுக்குக் கடிதம் எழுதுகிறாய். பொங்கல் பண்டிகை யன்றும், தீபாவளியன்றும், இவ்விதமே செய்வாய். ஒருவனுக்கு விவாஹம் ஆய்விட்டால் அவன் மனைவியின் உறவினரெல்லாம் அவனுக்கு உறவினராகிறார்கள். அவ்விதமே அவன் மனைவியும் தன் புருஷன் குடும்பத்தைத் தன் குடும்பம் எனவே மதிக்கிறாள். இதுதான் விவாஹ உறவு என்று சொல்லப்படும்.

ஒரே குடும்பத்திற் பிறந்தவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டும். அவர்கள் எல்லாரும் குடும்பத்தின் நல்ல பெயரைக் காப்பாற்ற வேண்டும். ஒவ்வொருவனும்தன்முன்னோர்களின் பெருமையையும் கௌரவத்தையும் மிக்க கௌரவமாகப் பாராட்டுகிறான். ஆனால் யாராவது ஒருவன் ஏதாவது தவறுசெய்து குடும்பத்தின் நல்ல பெயரைக் கெடுத்துவிட்டால் குடும்பத்தா ரெல்லாரும் வருந்துவார்கள். மேல் நாட்டுதேசங்களில் அதிலும் பிராஞ்சு தேசத்தில் ஒருவன் தன் பெயரை மாற்றிக்கொண்டாலும் மாற்றிக்கொள்வானே யன்றி, தான் திருடன், கொலை செய்தவன் என்ற கெட்டப் பெயரை அடைய அஞ்சுவான்.

ஆதலால் உங்கள் குடும்பத்தின் நல்ல பெயரை மாற்றத்தக்க செய்கை ஒன்றையும் செய்யாதேயுங்கள். நீங்கள் ஸமீபத்தில் இருந்தாலும், வெகு தூரத்தில் இருந்தாலும், உங்கள் குடும்பத்தைப்பற்றி நினைத்துக்கொண்டு, குடும்பத்துக்கு ஓர் கெட்ட பெயரைக் கொண்டுவாராமல் பாருங்கள். உங்கள் உறவினரிடம் நீங்கள் பிரியமாக இருப்பது ஸாதாரணமே. ஆனால் உங்கள் அயலாரிடத்தும் அன்பு பூண்டொழுக வேண்டும்; ஏனென்றால் அவர்கள் நம்முடைய தேசத்தைச் சேர்ந்தவர்கள். இம்மாதிரியே நீங்கள் பொதுவாக எல்லா ஜனங்களிடத்தும் அன்பு மேற்கொண்டு நடந்துகொள்ள வேண்டும். இவ்விதமாகக் குடும்பத்தினிடம் பிறக்கும் விஸ்வாஸமானது தேசத்தாரிடத்தில் பிரியத்தை உண்டுபண்ணி, மேன்மேலும் பரோபகார சிந்தையையும், தான் வருந்தியும் பிறருக்கு உதவி செய்யும் குணத்தையும் விருத்திசெய்கிறது. குடும்பத்தாருக்குள் பிரியமில்லாவிடில் ஜனங்களும் அன்னியோன்யமாக வாழமாட்டார்கள்.

வேலைக்காரனிடம் நடந்துகொள்ள வேண்டிய விதம்

ஓர் குடும்பத்தில் அந்தக் குடும்பத்தைச்சேர்ந்தவரேயன்றி வேறு சிலரும் இருக்கக்கூடும். அவர்கள் யாரென்றால் குடும்பத்தில் நெடுநாளாக

வேலைக்காரர்களாக இருந்தவர்கள். சிறு குழந்தைகளை அவர்கள் எடுத்து வைத்துக்கொள்வதாலும், எஜமானர் அவர்களிடம் பிரியமாக இருப்பதாலும், அவர்களும் தங்கள் எஜமானரிடத்தும், அவர் குழந்தைகளிடத்தும் மிக்க அன்புபாராட்டி வருவார்கள். சில வீடுகளில் குழந்தைகளை வளர்த்த செவிலித்தாயார் இருப்பாள். அவர்களும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். குழந்தைகள் அவர்களிடம் பிரியமாகவும் மரியாதையாகவும் இருப்பார்கள். குழந்தைகளின் பெற்றோர்கள் அப்படிப்பட்டவர்களைப் பக்ஷமாகக் கவனித்து அவர்களை ஸுகமாக இருக்கச் செய்வார்கள். எஜமானன் தேகவலிமை குன்றி, கைப்பணமும் இழந்து வருந்துங்காலத்தில் கூட அவனை அதிக பிரியத்தோடும் மரியாதையோடும் கவனித்துவரும் ஊழியர்களைக் கண்டிருக்கிறோம்.

ஏழையாகவும் உதவியை எதிர்பார்த்தவராகவும் இருக்கும் ஊழியர்களிடத்து நாம் கருணையுடையவராக இருக்கவேண்டும். கடவுள் நமக்குச் செல்வம் கொடுத்திருப்பதால் நாம் அதனை வேண்டுபவர்களுக்குக் கொடுப்போம். ஆனால் அப்படிக் கொடுக்கும்போது தயையோடும் இன்சொல்லோடும் கொடுக்க வேண்டுமேயல்லாது கொடுக்கிறோமென்ற கர்வத்துடன் கொடுக்கக்கூடாது. இனிய பார்வையும் பிரியமான சொல்லும் பணத்தைவிட மேலானவை.

ஆல்பான்ஸோ வென்னும் ஸிஸிலி அரசன்

ஸிஸிலிக்கும் நேபிள்ஸுக்கும் அரசனாக இருந்த ஆல்பான்ஸோ வென்பவன் பிரஜைகளிடத்தில் தண்ணளி நிரம்பியிருந்தான்.

ஸிஸிலித் தீவிலே சண்டையொன்று நடந்தது. அக்காலத்தில் அவன் ஒரு ஆற்றைக் கடக்க முடியாதபடி அவனுடைய பகைவன் அவனைத் தடுத்தான். அதனால் அவன் அந்த ஆற்றின் கரையிலேயே தங்கும்படி நேர்ந்தது. ஒருநாள் முழுவதும் அங்கேநின்ற சேனைக்கு ஆகாரமில்லை. அன்று ஸாயந்திரம் ஒரு போர்வீரன் அரசன் ஆகாரத்துக்காகக் கொஞ்சம் ரொட்டியும், பாற்கட்டியும் கொண்டுவந்து கொடுத்தான். அந்த நிலைமையிலுள்ளவன் எவனுக்கும் அந்த ஆகாரம் அச்சமயத்துக்கு எவ்வளவோ ருசியாக இருக்கும். ஆனால் ஆல்பான்ஸோ அது தனக்கு வேண்டியதில்லை யென்றும், தன்னைப்போலவே தைரியமும் வீரமும் பொருந்திய போர்வீரர்கள் அநேகர் அன்னம் அருந்தாமலிருக்கத்தான் மாத்திரம் உண்டுகளிப்பது தகுதியல்லவெனச் சொன்னான்.

இன்னொரு சமயம் ஆல்பான்ஸோ கம்பானியா மூலமாக யாத்திரை செய்துகொண்டு போனான். அப்போது ஒருவன் ஒரு குதிரையை ஓட்டிக்கொண்டு போனதையும் அந்தக் குதிரையின்கால் சேற்றில் அமிழ்ந்து அது தளர்ந்து நின்றதையும் கண்டான். குதிரையை ஓட்டிக்கொண்டு வந்தவன் அதனைச் சேற்றினின்றும் வெளியேற்ற, எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. வழியே போகும் ஒவ்வொருவரையும் உதவிசெய்யும்படி கேட்டும் பயன்படாமற் போயிற்று. கடைசியில் அவன் ஆல்பான்ஸோ வென்னும் மனிதனை அரசன் என்று உணராமல் தனக்கு உதவி செய்யும்படி வேண்டிக்கொள்ள, அரசன் தன் குதிரையினின்றும் இறங்கி, சேற்றில் கால் அமிழ்ந்தி கிடந்த குதிரையைத் தன் முழுபலத்தால் இழுத்துக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தான். பிறகு அவன் அரசன் என்பதை உணர்ந்த அந்தக் குதிரைக்காரன் தான் தெரியாமற் செய்த பெரும் பிழைக்காகத் தன்னை மன்னிக்கும்படி அவன் பாதங்களில் வீழ்ந்து வேண்டிக்கொண்டான். ஆனால் குதிரைக்காரன் ஒரு தவறும் செய்யவில்லையென்று ஆல்பான்ஸோ அவனுக்கு உறுதிகூறி அவனைத் தைரியப்படுத்தினான். இவ்வளவு நல்ல குணத்துடன் இருந்தமையாலேயே அரசனுடைய பகைவரெல்லாரும் அவனுக்கு நண்பராக ஆய்விட்டார்கள்.

பிளாஸ்கஸும் அவன் அடிமைகளும்

ஆக்டேவியஸ், லெபிடஸ், அன்டோனியஸ் முதலியோர் ரோம் நகரத்தில் முக்கிய அதிகாரிகளான ஸமயத்தில், முன்னே கான்ஸல் என்ற உத்தியோகத்தைப் பார்த்துவந்த ப்ளாஸ்கஸ் என்பவர் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வெளியே ஓடினார். அதிகாரிகள் அவனுடைய அடிமைகளைப் பிடித்து அவர்களை எவ்வளவோ சித்திரவதை செய்து அவன் எங்கேயிருக்கிறானென்பதைத் தெரிவிக்கச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அவனைக் காட்டிக்

கொடுக்கவில்லை. வேறுவிதமாக அவர்களைத் தொந்திரவு செய்ய எத்தனித்தார்களென்பதை ப்ளாஸ்கஸ் கேள்வியுற்றார். தான் இன்னும் ஒளிந்திருக்க, தனக்கு முக்கிய பிராண சிநேகிதர்கள் போன்ற அடிமைகள் தொந்திரவு பொறுக்கமாட்டாமல் இறந்துபோவார்களென்று அஞ்சி, பிளாஸ்கஸ் தான் எங்கேயிருக்கிறாரென்பதைத் தெரிவித்துத் தன்னைக் கொல்லும்பொருட்டு அனுப்பப்படும் கொலையாளிகள் கையால் தான் மாள நிச்சயித்துவிட்டதாகத் தெரிவித்தார். அடிமைகளைக் காப்பாற்றும் பொருட்டு பிளாஸ்கஸ் தன்னுயிரைக் கொடுக்க நினைத்ததும், அவன் உயிரைக் காப்பாற்றுவதற்காக அடிமைகள் தங்கள் உயிரை லக்ஷியம் செய்யாமல் இருந்ததும், எல்லாருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று. இதை உத்தேசித்து, பிளாஸ்கஸுக்கு உகந்த அடிமைகளும், அடிமைகளுக்கு உகந்த எஜமானனும் உயிரோடு இருக்கட்டுமென்று, அதிகாரிகள் பிளாஸ்கஸையும் அவன் அடிமைகளையும் விடுதலை செய்துவிட்டார்கள்.

ஓர் வேலைக்காரனுடைய உண்மையான அபிமானம்

1776-ம் வருஷத்தில் குளிர் மிகுதியாக இருந்த காலத்தில் பொடோட்ஸ்கி பிரபுவும் அவர் மனைவியும் வியன்னா நகரத்திலிருந்து க்ராகோ நகரத்துக்குப் பிரயாணப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் போகும் வழியில் கார்பேதியன் மலையைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. அம்மலையில் ஓநாய்கள் அதிகமாய் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும். அவை ஸுபாவத்திலேயே துஷ்ட மிருகங்கள். அதிலும் குளிர் அதிகமான காலங்களில் அவை வெகு கொடுமையாக இருக்கும். ஆதலால் பொடோட்ஸ்கி பிரபு ஏறிச்சென்ற வண்டியைக் கண்டவுடன் அவை பல சேர்ந்து வண்டியைச் சுற்றி ஓடிவந்து துரத்த ஆரம்பித்தன. ஆஸ்லிக் என்ற ஊருக்கும் ஜேடார் என்ற ஊருக்கும் மத்தியில் இது நடந்தது. ஜேடார் என்ற ஊருக்கு அப்பால் க்ராகோ நகரம் சில காதம் தூரம்தான். பொடோட்ஸ்கி பிரபுவோடு கூடச்சென்ற வேலைக்காரர்கள் இருவர். அவர்களுள் ஒருவனை அவர் தமக்கு முன்னேயனுப்பி வாடகைக்குக் குதிரைகள் பேசி வைக்கும்படி சொன்னார். மற்றொருவனிடம் அவருக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அவனைத் தம்மோடு நிறுத்திக்கொண்டார்.

அவன் எஜமானனிடத்தில பேரன்பு பூண்ட வேலைக்காரனாதலால், ஓநாய்கள் வண்டிக்கருகில் வந்து மிக்க தொந்தரை செய்ததைப் பார்த்து அவற்றின் கோபம் கொஞ்சம் அடங்க அவற்றிற்கு இரையாகத் தனது குதிரையை அவிழ்த்துவிட்டு விடுவதாக எஜமானரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். பிரபு அதற்கு ஸம்மதிக்கவே அவன் தன் குதிரையை விட்டுவிட்டு வண்டியின் பின்னே ஏறிக்கொண்டான். ஓநாய்கள் குதிரையை ஆயிரந்துண்டுகளாகக் கடித்து சின்னாபின்னப் படுத்தின.

ஜேடார் நகரத்துக்குச் சீக்கிரம் போய்ச்சேர்ந்துவிடலாமென்ற ஆவல் அவர்களைத் தூண்ட வண்டியை வெகுவேகமாக ஓட்டிக்கொண்டு போனார்கள். ஆனால் குதிரைகள் களைத்துப்போயின. ஓநாய்களோ மாமிஸத்தை யுண்டு இரத்தவெறிகொண்டு முன்னினும் பதின்மடங்கு அதிவேகமாக ஓடி வந்து வண்டியைச் சூழ்ந்துகொண்டன. இத்தருவாயில் வேலைக்காரன் எஜமானனைப் பார்த்து “இப்போது உயிர்தப்பிப் போக ஒரே மார்க்கம்தான் உள்ளது. என்னுடைய மனைவி மக்களுக்குத் தகப்பன் போல இருந்து தாங்கள் காப்பாற்றுவதாக வாக்களித்தால் நான் ஓநாய்களுக்கு இரையாகி விடுகிறேன். அப்போது நீங்கள் தப்பிப் போகலாம்” என்று சொன்னான். பொடோட்ஸ்கி பிரபு கொஞ்சம் தயங்கினார். ஆனால் ஓநாய்களினின்றும் தப்ப வேறுவழி யில்லாமையாலும், அவை இன்னும் கொஞ்சம் நெருங்கினால் எல்லாரையுமே கொன்று விடுமாகையாலும், அவர் தமது வேலைக்காரனுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதாகப் பிரமாணம் செய்துகொடுத்தார். தக்ஷணமே வேலைக்காரன் வண்டியினின்றும் குதித்து, ஓநாய்களை ஸமீபித்து அவற்றிற்கு இரையானான்!

பிரபு ஜேடார் நகரத்துக்கு க்ஷேமமாய்ப் போய்ச் சேர்ந்தார். அவர் சொன்ன வாக்கை மனச்சாட்சிக்கு விரோதமின்றிக் காப்பாற்றி வந்தார்.

C. S. சுந்தரம் ஐயர், பி. ஏ., எல். டி.

வஸ்து தத்துவம்

CHEMISTRY

தண்ணீர் அல்லது ஜலம்

WATER

நமக்கு ஸ்வபாவத்தில் ஏராளமாய்க் கிடைக்கிற வஸ்துக்களுள் தண்ணீர் ஒன்று. இது மழையாகப் பெய்து கடல்களிலும், ஆறுகளிலும், ஏரிகளிலும், குளங்களிலும் தங்கியிருக்கின்றது. சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு தண்ணீரை ஒரு மூல வஸ்து என்று எண்ணியிருந்தார்கள். பிறகு அநேக பரிசோதனைகளால் இது ஒரு சேர்க்கைப் பொருளென்றும், மூலவஸ்து இல்லையென்றும் தெரியவந்தது. இது பிராண வாயுவும், ஜல வாயுவும் சேர்ந்த ஒரு சேர்க்கைப்பொருள். இத்தண்ணீர், திட திரவ வாயுவாகிய மூன்று ஸ்திதிகள் அல்லது நிலைமைகளில் காணப்படுகிறது. திடபதார்த்தமாகிய பனிக்கட்டி, திரவ பதார்த்தமாகிய ஜலம், வாயுபதார்த்தமாகிய நீராவி, ஆகிய இம்மூன்றும் தண்ணீரின் வெவ்வேறு நிலைமைகளே யொழிய வேறில்லை.

இவைகளுள் திரவபதார்த்தமாகிய ஜலம் சுத்தமாயிருந்தால் அதற்குச் சுவையுமில்லை, வாசனையுமில்லை. இந்த ஜலத்தைக் கொஞ்சமாக எடுத்துப் பார்த்தால் இதற்கு நிறமுமில்லை. ஆனால் இந்த ஜலம் ஏராளமாய் ஓரிடத்தில் தங்கியிருக்கப் பார்த்தால் ஒருவிதநேர்த்தியான பச்சையமைந்த நீலநிறமாகக் காணப்படும். நீரில் தூசி அதிகமாகத் தங்கியிருந்தாலும் அது நீலநிறமாகக் காணப்படும். சுத்தஜலம் காற்று அல்லது ஸஹஜ வாயுவைக் காட்டிலும் சுமார் 800 மடங்கு கனமுள்ளது. இதை பாரத்தினால் அமுக்க முடியாது. அதாவது, பாரத்தினால், ஸஹஜ வாயுபோல், இது அளவில் சுருங்காது. ஆனால் வாயுபதார்த்தங்களைப்போல் அவ்வளவு சுருங்காவிட்டாலும், மிகுந்த பாரத்தினால் மிகச்சிறிது சுருங்கும். தண்ணீர், தன் மூலமாய் உஷ்ணத்தை அழைத்துப் பரவச்செய்வதில் மிக மெதுவான வஸ்து. அதாவது தண்ணீர் தன் மூலமாய் உஷ்ணத்தை நடத்திச் செலுத்த வெகு நேரம் எடுத்துக்கொள்ளும்.

உதாரணமாக ஒரு கண்ணாடிக்குழல் பாத்திரத்தில் கொஞ்சம் ஜலத்தை யெடுத்துக்கொண்டு; ஒரு சாராய விளக்கினால் பாத்திரத்தின் வாய்ப் பக்கத்திலுள்ள ஜலத்தைச் சுடவைக்கவும். சற்று நேரத்திற்கெல்லாம் பாத்திரத்தின் வாய்ப் பக்கத்திலுள்ள ஜலம் கொதிக்க ஆரம்பிக்கும். இப்பொழுது பாத்திரத்தின் அடியைத் தொட்டுப்பார்த்தால், அங்கு உஷ்ணம் அதிகமிருக்காது. கொஞ்சம் சூடாயிருக்கும். பாத்திரத்தின் வாய்ப்பக்கத்திலுள்ள ஜலத்தைத் தொடவே முடியாது. அதாவது, இப்பொழுது பாத்திரத்தின் அடிப்பக்கத்திலுள்ள ஜலத்திற்குச் சூடு மேலிருந்து தண்ணீரின் வழியாய்ப் பரவ வேண்டுமல்லவா ? இப்படித் தன்வழியாய் உஷ்ணத்தை நடத்திவர தண்ணீர் நேரம் எடுத்துக்கொள்ளுகிறது. இப்பாத்திரத்தின் அடிபாகத்தின் நீரில் ஒரு சிறு பனிக்கட்டி தங்கும்படி இக்குழல் பாத்திரத்தைச் சற்று சாய்த்துப் பிடித்து, அதில் ஒரு பனிக்கட்டியைப் போட்டு, வாய்ப்பக்கத்திலுள்ள நீரைச் சுடவைத்தால், அந்தப்பாகத்தின் நீர்மாத்திரம் கொதிக்க அடிப்பாகத்திலுள்ள பனிக்கட்டிக் கரையாமல் கூடவிருக்கும். ஆனால் தண்ணீர் தன்மூலமாய்மின்சாரத்தைச் சீக்கிரம் நடத்திச் செலுத்துகின்றது.

நீராவி:—சாதாரணமாய், தண்ணீரைக்காய்ச்சினால், அது உஷ்ணத்தினால் ஆவியாக மாறுகின்றது. உண்மையில் நீராவிக்கு நிறமில்லை. ஸஹஜ வாயுவை எப்படி நாம் கண்ணால் பார்க்க முடியாதோ அதுபோலவே, நீராவியும் நமது கண்ணுக்குப் புலப்படாத வஸ்து. ஆனால் ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் ஜலத்தை வைத்துக் காய்ச்சினால், பாத்திரத்தின் வாயினின்று ஒருவித புகைபோன்ற வஸ்து வெளிப்படுகிறதைப் பார்க்கிறோம். அதுதான் நீராவியென்று சொல்லுவது வழக்கம். அது நீராவியல்ல. பாத்திரத்தில் நீர்மட்டத்திற்குமேல் நீராவியிருக்கிறது. அது நமதுகண்ணுக்குத்தெரியாது. அதற்குநிறமில்லை. நீராவி, பாத்திரத்திற்கு வெளியே வந்தவுடன் ஆகாயத்தின் குளிர்ச்சியால் குளிர்ந்து சிறு நீர்த்துளிகளாலாகிய மேகம்போன்ற வஸ்துவாகின்றது. அதுதான் நமது கண்ணுக்குப் புலப்படும் வெண்மையான புகைபோன்ற வஸ்து. நீராவிக்கு மற்ற வாயுக்களின் குணங்கள் உண்டு. பாரத்தினால் இதன் அளவு சுருங்கும். உஷ்ணத்தினால் அளவு அதிகரிக்கும், தண்ணீரை 100-டிகிரிக்கு (100°c)ச் சுட வைத்தால் அது ஆவியாக மாறும். அதிகச் சூடு இல்லாவிட்டாலும் நீர்

மெதுவாகக் கொஞ்சம் கொஞ்சமாக ஆவியாக மாறுகின்றது. இதனால்தான் பாத்திரங்களில் வைத்த ஜலமும், குளங்கள் ஏரிகள் முதலியவைகளிலுள்ள ஜலமும் வரவரக் குறைவுபடுகின்றது. சூரிய வெப்பத்தினால் கடல்கள், ஏரிகள், ஆறுகள், குளங்கள், முதலியவைகளிலுள்ள ஜலம் மெதுவாக நீராவியாக மாறி ஆகாயத்தில் பரவ, இந்நீராவி குளிர்ந்து சிறு நீர்த்துளிகளாலாகிய மேகங்களாகத் தங்குகின்றது. இம்மேகங்களின் மேல் குளிர்ந்த காற்று வீசினால், இவை மழையாகப் பூமியில் பெய்து மறுபடி கடல்கள், குளங்கள், ஆறுகள் முதலியவைகளை நீரால் நிரப்புகின்றன.

பனிக்கட்டி.—இக்காலத்தில் பனிக்கட்டியைப் பார்த்திராதவர்கள் மிகச் சிலர். குளிர் தேசங்களில் பனிக்கட்டி ஏராளமாய் சுபாவத்தில் கிடைக்கும். அதாவது அத்தேசங்களில் கொடுங் குளிர்காலத்தில் ஆறுகள், ஏரிகள், முதலியவைகளிலுள்ள நீர் இறுகிக் கடின பதார்த்தமாகிய பனிக்கட்டி யாகிறது. ஆனால் நமது தேசத்தில் நீரைப் பனிக்கட்டி யாக்குவதற்கு வேண்டிய குளிர் ஒருபொழுதுமில்லை. ஆகையால் நமக்குப்பனிக்கட்டி சுபாவத்தில் கிடைப்பதில்லை. நாமே செய்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. இத்தேசத்தின் பெரிய பட்டணங்களில் பனிக்கட்டி. செய்யப்படும் யந்திரசாலைகளிருக்கின்றன. சாதாரணமாக 0 டிகிரியில் (0°c) நீர் பனிக்கட்டியாக மாறுகிறது. அதாவது தண்ணீரை மிகக் குளிரான பதார்த்தங்களால் 0 டிகிரிக்குக் குளிரவைத்தால், அது மிக பளபளப்பான ஸ்படிகம்போன்ற கடின பனிக்கட்டியாக மாறுகிறது. மறுபடி இப்பனிக்கட்டி உஷ்ணத்தினால் உருகி நீராக மாறுகின்றது. ஆனால் நீரின் மேலுள்ள பாரத்தை வித்தியாசப்படுத்திக்கொண்டு, நீரை 0 டிகிரிக்கு மேலேயாவது கீழேயாவது பனிக்கட்டியாகும்படி செய்யக்கூடும். இப்பனிக்கட்டி நீரைக்காட்டிலும் கடின பதார்த்தமேயானாலும், அதைவிட கனபதார்த்தமன்று. ஒரு பனிக்கட்டித் துண்டைத் தண்ணீரில் போட்டால், அது நீரின்மேல் மிதக்கும்.

அதாவது நீர் பனிக்கட்டியாகும்போது அளவில் அதிகரிக்கின்றது. 10 கன அங்குலம் அளவுள்ள நீர் பனிக்கட்டி யாகும்போது சுமார் 11 கன அங்குலம் (10·909 C. in.) அளவுள்ளதாகிறது. ஆகையால் பனிக்கட்டி நீரைவிட இலேசாயிருக்கிறது. இப்பனிக்கட்டியைச் சிற்சில வியாதிகளின் சிகிச்சைக்கும், இன்னும் அநேக காரியங்களுக்கும் மனிதர்கள்உபயோகிக்கிறார்கள்.

ஆனால் தண்ணீரை மனிதர்கள் குடிப்பதற்கும், சமையல் செய்வதற்கும், ஸ்நானம் முதலிய செய்வதற்கும், இன்னும் மற்ற வஸ்துக்களைச் சுத்தம் செய்வதற்கும் உபயோகப் படுத்துகிறார்கள். பட்டணங்களில் தெருவுகளில் தெளிப்பதற்கும், சாக்கடை முதலியவைகளைச் சுத்தம் செய்வதற்கும் ஜலம் வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மனிதன்தேகத்தின் நிறையில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு நீராயிருக்கின்றது. அதில் ஒவ்வொரு தினமும் கொஞ்சம் வியர்வையாகவும், மூத்திரமாகவும், வெளிமூச்சு விடும்போது நீராவியாகவும் வெளியே போகின்றது. இந்நீருக்கு ஈடு செய்ய நாம் தண்ணீர் சாப்பிடுவது அவசியமே. தினம் ஒன்றுக்கு ஒரு மனிதனுக்குச் சமையலுக்கும், குடிப்பதற்கும், ஸ்நானம் முதலியவைகளுக்கும் சுமார் 25 காலன் ஜலம் வேண்டும். இந்தக் கணக்கு அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் வித்தியாசப்படும். இப்படி நமக்கு உபயோகப்படும் நீரின் வகைகளைப் பற்றிப் பிறகு பார்ப்போம்.

எம். ஆர் சுப்பிரமணிய அய்யர், பி. ஏ., எல். டி

தேவாரம்—சிற்றாராய்ச்சி

SAIVITE HYMNS—A CRITICAL NOTE

தேவாரம் பாடிய திருவாளர் மூவருள் ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் என்னும் இருவர் தேவாரத்தினின்றும் அறியக்கூடிய அரிய விஷயங்களை முன்னரே எழுதியுள்ளேன். இப்போது ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளது திப்பியப் பாடல்களினின்றும் தெளியக்கிடக்கின்ற விஷயங்களை ஈண்டெழுதுகின்றேன்:—

I. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சரித்திர சம்பந்தமான விஷயங்கள் :

(1) திருவெண்ணை நல்லூர் என்னுந் தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் மண்ணுலகத்தவர் யாருங் காணப் பிராமண வேடம் பூண்டு அற்புதமான ஓலை ஒன்றைக் காட்டி "இவன் எனது அடிமை" யெனச் சொல்லி வலிய யாட்கொண்டு வாதில் வென்றப் பின்னர் அத்தலத்துத் திருக்கோயிலில் மறைந்தன ரென்பது—

"வெண்ணைநல்லூரில், அற்புதப்பழ ஆவணங்காட்டி
அடியனு வென்னை யாளதுகொண்ட நற்பதத்தை"

"அன்று வந்தெனை யகலிடத்தவர்முன் ஆளதாக
வென்றுவணங் காட்டி.
நின்று வெண்ணைநல் லூர்மிசையொளித்த
நித்தில திரட் டொத்தினை."

"ஒட்டியாட் கொண்டுபோ யொளித்திட்ட வுச்சிப் போதனை"

"வாயாடி மாமறை யோதியோர் வேதிய னாகிவந்து
** வெண்ணைநல்லூரில் வைத்தென்னை யாளுங்கொ
[ண்ட."

"நம்பனே யன்று வெண்ணைநல்லூரில் நாயினேன்
[றன்னையாட் கொண்ட சம்புவே."

"மண்ணின்மேன் மயங்கிக் கிடப்பேனை வலியவந்
தெனையாண்டு கொண்டானே."

(2) அங்ஙனம் சிவபிரான் தம்மையாட்கொள்ள வந்த போது சபையில் தாம் வன்மைகள் பேசிய காரணத்தால் 'வன்றொண்டன்' என்னும் பெயர் தமக்குப் போந்த தென்பது.—

"தன்மையினு லடியேனைத் தாமாட்கொண்ட நாட்
[சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்ட னென்பதோர்
[வாழ்வு தந்தார்."

(3) குண்டையூர் என்னும் ஊரில் தாம் பெற்ற நெல்லை அவ்வூரினின்றும் எடுப்பிக்க ஆள்வேண்டித் திருக்கோளிலி நாதர்மீது பதிகம் பாடினரென்பது.—

'குண்டையூர்ச் சில நெல்லுப்பெற்றேன்.'

'திருக்கோளிலி மேயானை ** நெல்விட
ஆட்கள்வேண்டி நினைந்தேத்தியபத்து'

(4) விருத்தாசலத்துக்குப் போகும்போது சுவாமி பிராமண வடிவமாய் இவர்முன் தோன்றி "இந்தக் கூடலை யாற்றூர் வழியாகத்தான் விருத்தாசலத்துக்குப் போகவேண்டியது" என்று சொல்லி அழைத்துச் சென்று மறைந்தன ரென்பது—

'கூடலையாற்றூரில்
அந்தணன் வழிபோந்த அதிசயமறியேனே.'

(5) விருத்தாசலத்திற் சிவபெருமான் அருளிய செம்பொன்னை (மணிமுத்த நதியிலிட்டுப்) பின்னர்த் திருவாரூரில் (கமலாலயம் என்னும் திருக்குளத்தில்) 'பரவை வாடுகின்றாள்' எனப் பாடித் தேடி அப்பொன்னை எடுத்தன ரென்பது—

'எனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திகழும்முது குன்றமர்ந்தீர்,
வம்பமருங் குழலாள் பரவையிவள் வாடுகின்றாள்,
எம்பெருமா னருளீர் அடியே னிட்டளங் கெடவே'

(6) குருகாவூர் என்னுந் தலத்தில் கட்டமுதுந் தண்ணீருந் தந்து சுவாமி இவர் பசியைத் தீர்த்தன ரென்பது.

"பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்'

(7) சங்கிலிநாச்சியாரை இறைவனருளால் திருமணஞ்செய்தன ரென்பது—

"சங்கிலியோ டெனைப் புணர்த்த தத்துவனை"

(8) திருவொற்றியூரில், மகிழமரத்தின்கீழ்ச் சங்கிலி நாச்சியாருக்குப் பிரமாணஞ்செய்து தவறிய காரணத்தால் இருகண்ணுங் குருடாய், உடற்பிணியும் கொண்டவராய், "என்கண்ணுக்கு ஒரு மருந்து சொல்லாயோ" என இரந்து சுவாமியை வேண்டின ரென்பது.—

"போய் மகிழ்க்கீ ழிருவென்று
சொன்ன வெனைக் காணுமே சூளறவு மகிழ்க்கீழே
யென்ன வல்ல பெருமானே."

"பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன்
பிழைத்தக்காற்
பழியதனைப் பாராதே படலமென்கண்
மறைப்பித்தாய்."

"அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்
அழையேற் போகுருடா எனத்தரியேன்

முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்
முக்கணா முறையோ மறையோதீ
உகைக்குந் தண்கட லோதம்வந் துலவும்
ஒற்றி யூரெனும் ஊருறைவானே."

"ஒழுக்க வென் கணுக் கொரு மருந்துரையாய்
ஒற்றியூரெனும் ஊருறைவானே."

(9) கண்ணிழந்ததும் இவர் கோலைப் பிடித்துக் கொள்ள அக்கோலை ஒருவன் பிடித்துக்கொண்டு வழி காட்டிச் செல்ல அவன்பின் வழியெலாஞ் சென்று இளைத்தன ரென்பது.—

கழித்தலைப் பட்ட நாயதுபோல
ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்துநீ யருளாயின செய்யாய்
ஒற்றியூரெனும் ஊருறைவானே."

(10) இங்ஙனம் திருவொற்றியூரினின்றும் நீங்கிதிருமுல்லைவாயில் முதலிய தலங்களிற் றங்குதலையைச் செப்பித் திருவெண்பாக்கம் என்னும் தலத்தை யடைந்து "இறைவனே! இங்கிருக்கின்றீரோ!" என வினவ சுவாமி "உளோம். போகீர்" என விடையருளி ஊன்றுகோ லொன்று உதவின ரென்பது.—

"கண்மணியை மறைப்பித்தா யிங்கிருந்தா யோவென்
[ன
ஒண்ணுதலி பெருமானுர் உளோம் போகீர் என்று
[னே."

"ஊன்றுவதோர் கோலருளி உளோம் போகீர் என்
[றானே."

(11) ஊன்றுகோலை உதவியாக்கொண்டு சென்ற நாயனார் காஞ்சிமாநகரத்தில் ஒரு கண்ணின் பார்வையைப்பெற்றன ரென்பது.—

"கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடியேன் பெற்ற வாறே."

(12) காஞ்சீபுரத்தினின்றும் நீங்கி ஒருகண் பார்வையோடும் உடற்பிணியோடும் திருநெல்வாயில், திருவாவடுதுறை என்னுந் தலங்கள் வழியாய்ச் சென்றன ரென்பது.—

"எற்றே யொருகண்ணிலன் நின்னை யல்லால்
நெல்வாயி லரத்துறை நின்மலனே."

"மற்றே லொரு பற்றில னெம்பெருமான்."

"கண்ணிலேனுடம் பில்லடு நோயாற்
கருத்தழிந் துனக்கே பொறையானேன்.
தெண்ணிலா வெறிக்குஞ் சடையானே
தேவனே திருவாவடு துறையுள்

அண்ணலே யெனையஞ்ச லென்றருளா
யாரெனக்குற வமரர்களேறே."

(13) பின்னர் அவ்வுடற்பிணி திருத்துருத்தி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் வேதேசுரர் திருவருளால் நீங்கிற் றென்பது—

"துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச்
செடியனேன் நாயேன்
என்னை நான் மறக்குமா றெம்பெருமானை
என்னுடம்படும் பிணியிடர் கெடுத்தானை."

(14) ஏனைய கண்ணின் பார்வையையும் பெற வேண்டி திருவாரூர் வன்மீகநாதர் சந்நிதானத்தில் நின்று "இறைவனே! ஏனை எனது கண்ணைக் கொண்டீர். அதனால் நீரேபழிபட்டீர் இவ்வொரு கண்ணையுந்தாராதொழிந்தால் நீரேசுகமாய் வாழ்வீராகவும்! உம்மை மறவாது பாடிப்பணியும் உமதடியவனாகிய யான் குன்றின்முட்டிக்குழியில் விழுந்தால் நீரே வாழ்வீராகவும்" என முறையிட்டு ஏனைய கண்ணின் பார்வையும் பெற்றன ரென்பது—

"எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே."

"என்று முட்டாப் பாடு மடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போ
தீரே.'

(15) சுவாமி தம்பொருட்டுத் தூது சென்றன ரென்பது—

"அடியேற் கெளிவந்த தூதனை."

(16) சுவாமி தமக்குத் தோழராயிருந்தன ரென்பது—

"என்னுடைய தோழனுமாய்"

"தூதனை யென்றனையாள் தோழனை."

(17) அவிநாசி என்னுந் தலத்துக்குச் சமீபத்திலுள்ள திருப்புக்கொளியூர் ஏரியில் இறங்கிக் குளித்த பாலனை முதலையுண்ண அப்பாலனை வரவழைக்க வேண்டி "முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே" எனச் சிவபெருமானைத் துதித்துப் பணிந்தன ரென்பது.—

"பொழிலாருஞ் சோலைப் புக்கொளியூரிற் குளத்திடை
யிழியாக் குளித்த மாணி யெனைக்கிறி செய்ததே."

"புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு கால
னையே."

(18) ஈற்றில் மனைவாழ்க்கையை வெறுத்தனரென் பது—

“ வெறுத்தேன் மனைவாழ்க்கையை
விட்டொழிந்தேன்.”

(19) பிறவா வரம் பெற்றனரென்பது—

“பிழைத்தொருநாலினிப் போய்ப் பிறவாமைப்
பெருமைபெற்றேன் பெற்றதார் பெறுகிற்பார்? ”

(20) சிவபிரான்மீது அசைதலில்லாப் பத்தி பூண் டவரென்பதும், வேறொரு தெய்வத்தை மறந்தும் நினையாதவரென்பதும்.

“ நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.”

“ வழுக்கிவீழினுந் திருப்பெயரல்லால்
மற்றுநானறியேன் மறு மாற்றம்.”

“ விரும்பேனுன்னையல்லா லொரு
தெய்வமென் மனத்தால்.”

(21) இவ்வுலகை விட்டுப் பிரிந்தபோது வெள்ளை யானையின்மீது தமது தேகத்தைச் சுவாமி காட்டுவித் தன ரென்பதும் தாம் கைலைக்குச் செல்லும் விஷயத் தை திருவஞ்சைக்களத்திலிருந்த சேரமான் பெருமா ளுயனர் அறிய வேண்டியது எனப்பாடினரென்பதும்.

“ விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை யுத்த மனே ”

“ ஏழிசை யின்றமிழா லிசைந்தேத்திய பத்தினையும்
ஆழிகட லரையர் வஞ்சையப்பர்க் கறிவிப்பதே.”

II. சுவாமிகள் தேவாரத்தினின்றும் அறியக் கூடிய வேறு விஷயங்கள்

(1) சீகாழியில் திருஞான சம்பந்தருக்குச் சிவபெரு மான் ஞானம் அருளினரென்பது—

“ ஊனமில் காழிதன்னு ளுயர் ஞானசம்பந்தர்க்கன்று
ஞானமருள் புரிந்தானண்ணுமூர் நனி பள்ளியதே. ”

(2) திருவீழிமிழலையில் (அப்பர் சம்பந்தர் இவர்க ளுடைய) தமிழ் கேட்கும் இச்சையால் காசு தினந் தோறும் அருளினது—

“ இருந்துநீர் தமிழோடிசை கேட்கு மிச்சையாற
காசு நித்த நல்கினீர்
அருந்தண் வீழி கொண்டீர் அடியேற்கு மருளுதிரே.”

(3) திருக்கோலக்கா என்னும் தலத்தில் திரு ஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் தாளம் தந்தன ரென்பது.

“நாளு மின்னிசையாற் றமிழ் பரப்பு
ஞான சம்பந்தனுக் குலகவர் முன்
தாள மீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மையாளனை யென்மனக் கருத்தை.“

(4) திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய பதிகத் தொகை இவ்வள வென்பது.—

“ இணைகொ ளேழெழு நூறிரும் பனுவல்
ஈன்றவன் திருநாவினுக் கரையன். ”

III. சுவாமிகள் தேவாரத்திற் சொல்லப்பட்டுள்ள நாயன்மார், அரசர், முனிவர் முதலியோர்.

புகழ்த்துணை நாயனர், வனப்பகை, சிங்கடி, தண்டி, சடைய நாயனர், இசைஞானியார், நரசிங்க முனையரை யன், பரவையார், சங்கிலியார், வயர்கோன் கலிக்காம நாயனர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மூர்க்க நாயனர், சாக்கிய நாயனர், கண்ணப்பர், கணம்புல்லர், கோச்செங்கணன், பரசுராமன், பகீரதன், மார்க்கண் டன், வீமன், விசயன், பாரி :

“ தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்” எனத்துவக்கும் பதிகத்தில் எல்லா நாயன்மார்களு டைய திருநாமங்களும் ஒருங்கே சொல்லப்பட்டுள்ளன.

IV. சுவாமிகள் தேவாரத்திற் சொல்லப்பட்டுள்ள பழமொழி போன்ற வாக்கியங்களும் ஞாபகத்தில் வைக்கவேண்டிய வாக்கியங்களும்,

நல்வாயில் செய்தார் நடந்தாருடுத்தார் (1)
நரைத்தா ரிறந்தா ரென்று நானிலத்திற்
சொல்லாய்க் கழிகின்ற தறிந்தடியேன்
உய்யப் போவதோர் சூழல் சொல்லே.

ஓடு புனற்கரையாம் இளமை. (2)

உறங்கி விழித்தா லொக்குமிப் பிறவி. (3)

நெவ் வாலூன்ற வருந்தும் உடம்பு. (4)

மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி யிது தான். (5)

அகரமுதலி னெழுத்தாகி நின்றாய். (6)

பலவின்கனியீ. (7)

இன்ப முண்டேற் றுன்பமுண்டு ஏழைமனை வாழ்க்கை. (8)

கொடுக்கிலாதானைப் பாரியே யென்று
கூறினுங் கொடுப்பாரிலை. (9)

பஞ்சதுட்டனைச் சாதுவே யென்று
பாடினுங் கொடுப்பாரிலை. (10)

குலமிலாதானைக் குலவனே யென்று
கூறினுங் கொடுப்பாரிலை. (11)

தாயன்றே புலவோர்க் கெலாமென்று
சுற்றினுங் கொடுப்பாரிலை. (12)

முற்றிலாதானை முற்றனே யென்று
மொழியினுங் கொடுப்பாரிலை. (13)

கையுலாவிய வேலனே யென்று
கழறினுங் கொடுப்பாரிலை. (14)

எள் விழுந்திடம். (15)

முன்னைச் செய்வினை யிம்மையில் வந்துமூடும். (16)

காலையெழுந்து தொழுவார் தங்கள் (17)
கவலை களைவாய் கறைக்கண்டா (18)

பஞ்சியிடப் புட்டில் கீறுமோ ? (19)

நஞ்சணி கண்ட நான் மறைக்கிலும், சொல்லு நா நமச்சிவாயவே. (20)

பொற்குன்றஞ் சேர்ந்ததோர் காக்கை பொன் னாம். (21)

மகத்திற் புக்கதோர் சனி. (22)

இரும்புண்ட நீர். (23)

கழுதை குங்குமந்தான் சுமந்தெய்த்தால். (24)

அரைத்த மஞ்சள தாவகை யறிந்தேன் (25)

புனினுனைப்பனி வெங்கதிர் கண்டாற் போலும் வாழ்க்கை. (26)

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம் (27)

கன்று முட்டி யுண்ணச் சுறந்த காலியவை போல. (28)

குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால். (29)

பேயோ டேனும் பிறிவொன்றின்னா தென்பர். (30)

வ. சு. செங்கல்வராயன், எம். ஏ.

வைரக்கல் செய்யு முறை.—பெர்லின் நகரத்திலிருக் கும் ஒரு தத்துவ சாஸ்திரி நிலக்கரி வாயுவினின்றும் வைரஞ் செய்திருக்கின்றாராம். இது ஷை வாயுவி னுடன் பாதரசங் கலந்து செய்யப்படுகின்றது. பாத ரசக்கலப்பினால் ஷை வாயு கெட்டிப்பட்டு வைரமாகின் றதாம். இவ்வாறு கெட்டிப்பட்ட கரியமில வாயு வெகு நேர்த்தியாயிருக்கின்றதாம். இதனுடன் ஒரு துண்டு வைரத்தைச் சேர்க்க அதனைச் சுற்றிலும் வைரக் கற்களுண்டாகின்றனவாம்.

உபநிஷத் ரத்தினமாலை

THE SUMMARY OF THE MINOR UPANISHADS

28. பைங்கலோபநிஷத் (59)

பைங்கலர் யாக்ஞவல்க்யரை அடுத்து 12-வருஷம் சிச்ருஷை செய்து பரமரஹஸ்யமான மோக்ஷத்தைச் சொல்லும் என்று கேட்க, முதலில் ஸ்ருஷ்டிக்கிரமம் சொல்லி எல்லாம் பிரஹ்மத்தைத் தவிர அணுவேனு மில்லை என்று ஸ்தாபிக்கிறார்.

பிரபஞ்சமெல்லாம் முதலில் ஸத்தாகவே இருந்தது. இந்த ஸத்திற்கு ஸத்ய ஞானனந்த அத்வய ப்ரஹ் மம் என்று பெயர். இதில் கானல்நீர், கிளிஞ்சில் வெள்ளி, கட்டையில் புருஷன், ஸ்படிகத்தில் வர்ணம் முதலியவைபோல ஸத்வ ரஜ தமோ குண ஏற்றத் தாழ்வின்றிக் கலந்த அனிர்வாச்யமான மூலப்ரகிருதி யிருந்தது. இதில் ப்ரதிபிம்பித்ததற்கு ஸாக்ஷி என்று பெயர். மூலப்ரகிருதிமாறி ஸத்வ அதிகமான அவ்யக் தம் அதாவது ஆவரணசக்தி யாயிற்று. இதில் காணப்படுவதற்கு ஈச்வரன் என்று பெயர். இந்த ஈசன்தான் மாயையை அடக்கியாளும் ஸர்வக்ஞன் ஸ்ரு ஷ்டியாதிகளுக்கு ஆதிகர்த்தா : ப்ரபஞ்சத்திற்கு விரை போன்றவன்.

சுருட்டியிருக்கும் படத்தை விரிப்பதுபோல ஜீவர் கள் கர்மங்களுக்கு ஏற்ப தம்மிடம் அடங்கியிருக்கும் ப்ர பஞ்சத்தை இவர் தோற்றும்படி செய்கிறார். மறுபடி சுருட்டுவதுபோல அவர்கள் கர்மக்ஷயத்திற்கேற்ப இதை மறைத்தும் விடுகிறார். இவருக்கு அடங்கி யிருக்கும் ஆவரண சக்தியிலிருந்து ரஜோகுண அதிக மான மகத் என்ற பெயருடைய விக்ஷேப சக்தி பிறந் தது. இதில்தோற்றுவதே ஹிரண்ய கர்ப்பர் என்ற சை தன்யம். இவருக்கு ஸ்தூலஸூக்ஷ்ம தேகங்கள் உண்டு. இந்தச் சக்தியிலிருந்து தாமஸ அதிகமான அஹங்காரம் உண்டாயிற்று. இதில் தோற்றுவதே விராட்சைதந் யம். இது ஸ்தூல தேஹமுடையவராய் எல்லா ஸ்தூ லத்தை ரக்ஷிக்கும் விஷ்ணுவாகிறது. இதிலிருந்து முறையே முன்னதிலிருந்து பின்னதாக உண்டான

ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, ப்ருதிவி, இவைகள்தான் பூத ஸூக்ஷ்மங்கள். இவைகளை ஈசுவரன் ஸ்தூலமாக்க எண்ணி பஞ்சீகரணம் செய்து கலந்தார். [ஒவ்வொரு பூதத்தையும்முதலில் இவ்விரண்டு ஸமபாகமாகப்பிரிப்பது, ஒவ்வொன்றின் ஒருபாதியை நான்குஸமபாகமாகப் பிரித்து விடுவது. ஆக இப்பொழுது ஒவ்வொரு பூத தன்மாத்திரையையும் ஒரு பாதியும் நான்கு அரைக் கால்பாகமும் ஆக ஐந்துபாகயாகப் பிரித்தாகிவிட்டது! ஒரு பூதத்தின்(ஆகாயத்தின்) பாதியை வேறாக எடுத்து மற்றை நான்கு பூதங்கள் ஒவ்வொன்றிலிருந்து ஒவ்வொரு அரைக்கால் பாகத்தை எடுத்து இந்தப் பாதியுடன் சேர்த்து ஐந்துபாகமுடைய பஞ்ச பூதக்கலப்பை உண்டாக்கி பாதிபாகத்தின் பெயரை இந்தக் கலப்பிற்குக் கொடுப்பது (ஸ்தூல ஆகாயமாகும்) இம்மாதிரி ஐந்தாகப்பிரித்து ஐந்துபாகமாக வரும்படி கலப்பதற்குப் பஞ்சீகரணம் என்று பெயர்.] இந்தக் கலப்பு பூதங்களால் ஸ்தூல ப்ரபஞ்ச முழுவதும் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. பஞ்சபூதங்களுடைய ராஜஸபாகத்தை நான்காகப் பிரித்து மூன்று பாகத்தால் பஞ்சவாயுக்களையும், நான்காவதால் கர்மேந்திரியங்களையும் உண்டாக்கினார் ஈசன். அதன் ஸத்வாம்சத்தை நான்காகப் பிரித்து மூன்றால் ஸம்சயம், நிச்சயம், விகல்பம், நித்திரை, நினைப்பு என்ற விருத்திகளை உடைய அந்தஃகரணத்தையும், நான்காவதால் ஞானேந்திரியங்களையும் உண்டாக்கினார். ஸத்வாம்சகூட்டத்தினாலே இந்திரிய அபிமானி தேவதைகளையும் ஸ்ருஷ்டித்தார். ஈசன் ஆக்ஞையாலே விராட் ஸகல ஸ்தூலத்தையும் ஸ்ருஷ்டித்தார், ஹிரண்யகர்ப்பர் ஸூக்ஷ்மத்தை ரக்ஷித்தார். இவ்வாறு எல்லாவற்றிலும் உள்ள ஸ்ருஷ்டி விசித்திரங்கள் எல்லாம் ஈசனையன்றித் தொழிற்படா. அவனன்றி ஓரணுவும் அசையாது. இந்தப் பொருள்களுக்கு அறிவைஉண்டாக்கஎண்ணி ஈசன் ஒவ்வொன்றின்தலையைப்பிளந்து உள்ளே புகுந்துவிட எல்லாம் அறிவுள்ளதுபோலத் தொழிற்படத் தொடங்கிவிட்டன. இவ்வாறு செய்ததும் மாயாலேசத்தால் மோஹத்திற்குள்ளாகி ஜீவத்வத்தை அடைந்தான். உடனே, 'சரீரம் நான், நான் செய்பவன் அனுபவிப்பவன்'என்ற நிலையோடு மூன்று அவஸ்தை மூர்ச்சை மரணம் முதலியவைகளுக்கு ஆளாகி ஜன்ன மரண சக்கரத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டான்.

'ஸகலப்ரபஞ்சங்களுக்கும் ஸ்ருஷ்டியாதி கர்த்தாவாகிய ஈசன் ஜீவனாவது எப்படி?' என்று பைங்கலர் கேட்கயாக்ஞவல்க்யர் சொல்லுகிறார். முன்கூறியபஞ்சீகிருத பூதங்களால் ஈசன் வியஷ்டி ஸமஷ்டி ஸ்தூல சரீரங்களை ஸ்ருஷ்டித்தார். (இங்கு தேஹத்தின் இன்ன பாகங்கள் இன்ன பூதாம்சம் என்றுசாரீக உபநிஷத்தில் கூறுவது போலக் காணப்படுகிறது) ஸ்தூலசரீரம் கர்மத்தால் ஏற்படுவது பால்யாதி அவஸ்தாபிமானத்திற்கு இடம், தோஷபூர்ணம். (பின்னர் முன் கூறிய இந்திரியாதி ஸ்ருஷ்டிகள் கூறப்படுகின்றன) கோசங்கள் ஐந்து. அவற்றுள், அன்னத்தால் உண்டாகி, செழித்து, அதன் ரூபமான ப்ருதிவியில் ஒடுங்குவது எதுவோ அதுதான் அன்னமயகோசம். இதுதான் ஸ்தூலதேஹம். ப்ராணன்களும் கர்மேந்திரியங்களும் சேர்ந்ததே ப்ராணமய கோசம். மனதும் ஞானேந்திரியங்களும் மனோமய கோசம் புத்தியும் ஞானேந்திரியங்களும் விக்ஞானமய கோசம். இம்மூன்றும் லிங்கதேஹம். மூல அக்ஞானமே ஆனந்தமயகோசம். இதுவே காரணசரீரம். இந்திரியங்கள், ப்ராணன்கள், பூதங்கள், அந்தஃகரணம், அவித்தை, காமம், கர்மம், தபஸ் ஆகிய இவைகள் அடங்கிய பட்டணமே இந்த தேஹம். ஈசன் ஆக்ஞைப்படி விராட்டு ஒவ்வொரு தேஹத்துள்ளும் புகுந்து புத்தியைத் தழுவி விச்வனாகிறான். இவனுக்கு விக்ஞானாத்மா சிதாபாஸன், விசுவன், வ்யாவஹாரிகன், ஜாக்ரத், ஸ்தூலதேஹாபிமானி, கர்மத்தின் கார்யம் என்ற பெயர்கள் ஏற்படுகின்றன. ஸூத்ராத்மா ஸூக்ஷ்ம தேஹத்தில் புகுந்து மனதைப் பற்றி நின்று, தைஜஸன், ப்ராதிபாஸிகன், ஸ்வப்நகற்பிதன் என்ற பெயர்களைப் பெறுகிறான். அவ்யக்தத்துடன் சேர்ந்தவன் காரணதேஹத்தில் புகுந்து, பிராக்ஞன், அவிச்சின்னன், பாரமார்த்திகன், ஸுஷுப்தி, அபிமானி, என்ற பெயர்களை அடைகிறான். வெறும் அக்ஞானமாத்திரத்தால் மறைபட்டிருக்கும் பாரமாத்திகனே ப்ரஹ்மத்துடன் ஐக்கியம் என்று தத்வமஸியாதி மஹாவாக்யம் கூறும். மற்றைய ஜீவர்களுக்கு இது பொருந்தாது. அந்தக்கரண பிரதிபிம்ப சைதந்யமே மூன்று அவஸ்தைகளுக்கும் ஆளாகிறது. இவைகளில் அகப்பட்டுப் பிறப்பிறப்பில் ஜீவன் சுழல்கிறான். இந்திரியாதிகளால் தேவதைகள் ஸகாயமூலமாகவிஷயங்களைக் கிரஹிக்கும் அவஸ்தையே ஜாக்ரதை என்பது. புருவமத்தியில் நிலைத்து தேஹம் எல்லாம் பரவி ஜீவன் கர்த்தாவாகிறான்; போக்தாவும் ஆகிறான். அனுபவித்து அலுத்து ஒழிவடைய யத்தனிக்கையில் முதலில் தான் கண்டவைகளின் ஞாபகத்தால் தானே கர்த்தாவாகவும் வஸ்துவாகவும் இருப்பதே ஸ்வப்நாவஸ்தை. இதில் ஜீவன் நாடிமத்தியில் உலாவி வாஸனா ரூபமான ஜகத்வி

சித்ரத்தை தானே தோற்றுவித்துக்கொண்டு தன் கர்மத்திற்கு ஏற்றபடி அனுபவிக்கிறான். சித்தம் என்ற ஒரே கரணத்துடன் இரை எடுத்த ஜந்துகூட்டுள் அடங்குவதுபோல அக்ஞானத்தில் புகுந்து ஸுகிப்பதே ஸுஷுப்தி எனப்படும். திடீரென்று இந்திரியாதிகளிலிருந்து பிரிந்து அறிவிழந்து நிற்கும் அவஸ்தையே மூர்ச்சை. பிரஹ்மா முதல் சிறுபூச்சிவரையில் ஒருவித பயத்தை உண்டாக்கும் ஸ்தூலதேஹப் பிரிவே மரணம். இந்திரியங்கள், விஷயங்கள், ப்ராணன்கள், காமகர்மம், அவித்தை, ஸூக்ஷ்ம பூதங்கள், இவைகளால் சூழப்பட்டு ஜீவன் வேறு தேஹத்தை அடைந்து லோகாந்தரம்போகிறான். பூர்வ ப்ராரப்தத்தினால் பிறப்பிறப்பாகிற சுழலில் அகப்பட்டு ஒய்வு அடைவதில்லை. வெகுகாலஸத்கர்மபுண்ய பரிபாகத்தால் மனிதருக்கு மோக்ஷ இச்சை உண்டாகின்றது. அப்பொழுது குரு சிச்ரூஷையால் எவனோ அநேகரில் ஒருவன் விடுபடுகிறான். விசாரணையால் மோக்ஷம் கைகூடும். இதை விடாது செய்யவேண்டும். ஜகத்ஜீவன் பரம் இவைகளை விசாரித்து அறியவேண்டும். முதலிரண்டையும் உள்ளபடி உணர்ந்தால் மூன்றாவதே சேஷித்து நிற்கும்.

பைங்கலர் மஹா வாக்யத்தை விஸ்தரித்துக் கூற வேண்டும் என்று கேட்டார். அதற்கு யாக்ஞவல்க்யர் கூறுகிறார். தத்வமஸி என்பதுஉபதேசவாக்யம். இதைக் கேட்டு அஹம் பிரஹ்மாஸ்மி என்று அனுஸந்தானம் செய்யவேண்டும். வெளிப்படையாக வில்லாததாயும், ஸர்வக்ஞாதி லக்ஷணம், மாயோபாதி ஜகத்காரணத்வாதி லக்ஷணங்களை உடையவனே தத்பதத்திற்கு வாச்யார்த்தம். இவனே, 'நான்' என்ற உணர்ச்சிக்கு ஆதாரம். இந்த வேறு போலக் காணப்படும் நானான ஜீவனேத்வம் பதவாச்யார்த்தம். பரமாத்மா, ஜீவாத்மா இவைகளின் உபாதியான மாயை அவித்தை, இவைகளைத் தள்ளி, இவைகளின் லக்ஷ்யமான கூடஸ்தனே ப்ரஹ்மம். இவ்வாக்கியங்களின் அர்த்த விசாரமே ச்ரவணம்; இதை ஏகாந்தமாக அனுஸந்தானம் செய்வதே மனனம். இவை இரண்டன் முடிவான வஸ்துவில் நிலைப்பதே நிதித்யாஸனம். த்யானம் த்யானிப்பவன் என்ற எண்ணம் நழுவி, காற்றில்லாவிடத்திலுள்ள தீபம் போல த்யான வஸ்துவாக நிற்பதே ஸமாதி. இங்கு ஆத்ம விருத்திகள் உண்டாகி ஸூக்ஷ்மமாக விருந்து கர்மகோடிகளை லயம் அடையும்படி செய்யும். அப்யாஸ விசேஷத்தால் அமிருததாரை தொடங்கிவிடும். இதனால் வாஸனைக் கூட்டங்கள் அடங்கிவிடும். புண்ய பாபாதிகள் ஒழிந்ததும் மஹாவாக்கியப் பொருள் நன்கு விளங்கும். அப்போது இவன் விடுபடுவன். உடனே ஸ்ருஷ்டி வந்தபடி பின் க்ரமமாக ஒடுங்கிவிடும். ஆகவே ப்ராஹ்மணன் எப்பொழுதும் தத்வம் பதங்களின் ஐக்யத்தை த்யானம் செய்யவேண்டும். பின்னர் மேகத்திலிருந்து வெளிப்பட்ட ஸூர்யனைப்போல ஆத்மா ப்ரகாசிக்கும். இதைத் தேஹமத்தியில் சிறு ஜ்யோதியாகிய கூடஸ்தனாக த்யானம் செய்யவேண்டியது. எவன் தூக்கம், மரணம் ஆகிய இவைகள் வரும்வரையில் இவ்வாறே த்யானிக்கிறானோ, அவன் தேஹம் நீங்கியதும் விதேஹ முக்தி பெற்று அப்பொழுது மிஞ்சி நிற்கும் பிரஹ்மமே யாகிறான்.

பைங்கலர் 'ஞானிகளும் செய்யவேண்டிய கர்மம் என்ன? அவர்கள் ஸ்திதி என்ன?" என்று கேட்க யாக்ஞவல்க்யர் கூறுவார். அமானித்வாதி தெய்வஸம்பத்து உள்ள முமுக்ஷு 21 குலத்தை மேன்மைப்படுத்துவான். ப்ரஹ்மவித் 101 குலத்தைக் கரையேற்றுவான். (இங்கு கடவல்லியிலுள்ள ரதாதிகதிருஷ்டாந்தம் கூறப்படுகிறது) இதனால் இந்திரிய மனதுடன் கூடிய ஆத்மா ஜீவனாகிறான். ஆதலால் நாராயணன்தான் மனிதன் ஹிருதயத்திலிருப்பது: ப்ராரப்த கர்மம் முடியும்வரையில் கழற்றிய சட்டையில் பாம்புக்கு உள்ளபற்றைப்போன்ற தேஹப் பற்றுடனிருப்பன் ஞானி. இவன் சந்திரனைப்போலப் பிறருக்கு ஸுகத்தை உண்டாக்கிக்கொண்டு ஒருவிடத்தில் நிலைக்காது உலாவிவருவான். இவன் எங்குவேண்டுமானாலும் சரீரம் நீக்குவன். இதைக் கண்டவன் இவனைப் புதைக்கவேண்டும் அல்லது திக்பலி கொடுக்கவேண்டும். இவன் எங்கும் பரவிய ஆகாசம்போல அங்கேயே லயமடைந்து பற்றற்ற ஞானப் ப்ரகாசமாகி விடுவன். புருஷனுக்கும் ஞானிக்குந்தான் ஸந்யாஸம். இவனுக்குமேல் அபரக்ரியைகள் முதலியன செய்யவேண்டியதேயில்லை. ஞானாக்னியில் எரிந்த சரீரத்தை மறுபடி எரிப்பானேன்? உபாதி எதுவரையில் உண்டோ அதுவரை குருமரியாதை ஒழுங்குகளை விடலாகாது. சுத்தமனது, சித்ரூபம், பொறுமை, முதலியவைகளால் வரும் 'அவனே நான்' என்ற அறிவால் பரமாத்மத்யானம் ஏற்பட்டு இந்திரிய வ்யாபாரங்கள் ஒடுங்கினால்தான் மனம்புத்தி இவைகள் சூன்யமாகி ஜ்யோதி நிலையை ஒருவன் அடைவன். இப்படிப்பட்டவனுக்கு வேதம் எதற்கு? செய்யும் கார்யம் ஏதுண்டு?

கர்மங்கள் ஒருவனுக்கு அவசியமாயின் அவன் அறிந்தவனல்ல. முன்னர் கூறியபடி ஞானம் பெறுவதே ஸுகம். ஜலத்துடன் சேர்ந்த ஜலம், பாலுடன் சேர்ந்த பால், நெய்யுடன்சேர்ந்த நெய், ஆகிய இவைகள்போல ஜீவாத்மா பரமாத்மா சேர்ந்து ஒன்றுபடும். தேஹம் ஞானதேஜஸ் பெற புத்தி அகண்டாகாரமானதும் கர்ம பந்தம் நீங்கிவிடும்! எங்கும் நிறைந்த பரம்பொருளேயாகிவிடுவன். எவ்வளவு தவம், சாஸ்திராப்யாஸம் முதலியவைகள் செய்த போதிலும் இந்நிலை வருவது கஷ்டம். இவைகள் மூலமாக அனுவசிய பாகங்களைவிட்டு ஸ்தயவஸ்துவை நெருங்கவேண்டும். இதை அறிந்து நிலைக்கும்வரை ஸத்கர்மாதிகளைச் செய்தே தீரவேண்டும். 'நானே ப்ரஹ்மம்' என்ற த்யானம் பெரியோர்களுக்கு மோக்ஷகாரணமாகும். என்னுடையது என்ற எண்ணம் பந்தஹேது: எனதல்ல என்பது மோக்ஷஹேது. மனம் உன்மனீபாவம் (அசைவற்றநிலை) சேருங்கால் துவைதமே இல்லை. அது தான் பரமபதம். இந்நிலையில் மனம் போகுமிடமெல்லாம் பரமபதமே: அங்கெல்லாம் ப்ரஹ்மமே. ஆகாயத்தைக் குத்தினாலும் குத்தலாம்; உமியைத் தின்று பசி ஆறினாலும் ஆறலாம்; 'நானே ப்ரஹ்மம்' என்றறியாமல் முக்தி பெறுவது அரிது.

இந்த உபநிஷத்தைப் படிப்பவனுக்குப் பாபங்களும் நீங்கிவிடும். ஸகல ஸத்கர்ம பலனும் கைகூடும். (இங்கு ஸ்கந்தோபநிஷத் முடிவிலுள்ள தத்விஷ்ணோ: பரமபதம் என்று தொடங்கும் ச்லோகம் காணப்படுகிறது.)

29 பிக்ஷுகோபநிஷத் (60)

எந்த வஸ்துவினிடத்தில் பிக்ஷுக்கள் கூட்டம் எப்போதும் ஒழிவு அடைகிறதோ அந்த பிரும்மதத்துவமானது என்னை பிரம்மமே ஆக்கட்டும்.

மோக்ஷத்தை விரும்புகிற பிக்ஷுக்களுள் குடீசக, பஹூதக, ஹம்ஸ, பரமஹம்ஸரென்று நான்கு பேதங்களுண்டு. குடீசகர் என்பவர் கௌதமர், பாரத்வாஜர், யாஜ்ஞவல்க்யர், வஸிஷ்டர் முதலானவர்கள். இவர்கள் பிக்ஷையெடுத்து எட்டு கவளங்களைச் சாப்பிட்டு யோகமார்க்கத்தி லிருந்துகொண்டு மோக்ஷத்தையே விரும்புகிறவர்கள்.

பஹூதகன் என்பவன் த்ரிதண்டம், கமண்டலு, சிகை, யஞ்ஞோபவீதம், காவிவஸ்திரம் இவைகளைத் தரித்துக்கொண்டு பிரும்மர்ஷிகளது வீட்டில், மதுமாம்ஸம் இவைகளைத் தவிர பிச்சையெடுத்து எட்டு கவளங்களைச் சாப்பிட்டுவிட்டு யோகமார்க்கத்தி லிருந்துகொண்டு மோக்ஷத்தையே விரும்புகிறவர்கள். ஹம்ஸர் என்பவர் கிராமத்தில் ஒரு ராத்திரியும் நகரத்தில் ஐந்து ராத்திரியும், க்ஷேத்திரத்தில் ஏழு ராத்திரியுமே வஸிக்கவேண்டும். அதற்குமேல் வஸிக்கக்கூடாது. கோமூத்ரம், பசுவின் சாணம் இவைகளை ஆகாரமாகக் கொண்டு நித்ய சாந்த்ராயண வ்ரதம் செய்து யோக மார்க்கத்திலிருந்து, மோக்ஷத்தையே விரும்புகிறவர்கள்.

பரமஹம்ஸர் என்பவர், ஸம்வர்த்தர், ஆருணி, ச்வேதகேது, ஜடபாதர், தத்தாத்ரேயர், சுகர், வாமதேவர், ஹாரீதகர் முதலியவர்கள்போல், எட்டு கவளங்களைச் சாப்பிட்டு யோகமார்க்கத்தில் மோக்ஷத்தையே விரும்புவார்கள். மரத்தினடியிலாவது பாழும் வீட்டிலாவது ச்மசானத்திலாவது வஸிப்பவர்கள் வஸ்திரமுள்ளவர்களாயும், வஸ்திரமற்றவர்களாயும் இருப்பார்கள். அவர்களுக்கு லாபம் நஷ்டம், தர்மம் அதர்மம், சுத்தம் அசுத்தம் இவை ஒன்றுமில்லை. த்வைதமற்றவர்களாக ஓடு, கல், ஸ்வர்ணம் இவைகளில் ஸமபுத்தியுள்ளவர்களாக எல்லா ஜாதிகளிலும் பிச்சை எடுத்து சாப்பிட்டுக் கொண்டு எங்கும் ஆத்மாவொன்றையே பார்ப்பார்கள்

பிறந்த மேனியாய் இருக்கிறவர்களாயும், த்வந்த்வமற்றவர்களாயும் வாங்குதலற்றவர்களாயும், விஷ்ணு த்யானத்தை முக்கியமாய் உடையவர்களாயும், ஆத்ம நிஷ்டர்களாயும் பிராண தாரணத்திற்குத் தகுந்த காலத்தில், பிச்சையெடுத்துக்கொண்டு, பாழும் வீடு, தேவாலயம், புல்நிறைந்தவிடம், புற்று, மரத்தடி, குயவன் வீடு, அக்னி ஹோத்ரசாலை, ஆற்றின் மணல் மேடு, பர்வதங்களின் குஹை, மலையருவி, கட்டாந்தரை இவைகளில் இருந்துகொண்டு சுத்தமனம் உள்ளவர்களாய் பிரும்ம மார்க்கத்திலேயே திருஷ்டியுள்ளவர்களாக ஸந்யாஸத்தோடு தேஹத்யாகம் செய்கிறவர்கள் தான் பரமஹம்ஸர்கள்.

30 கிருஷ்ணோபநிஷத் (96)

ஸச்சிதானந்த ஸ்வரூபமான மஹா விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமர் அங்க அமைப்பின் சிறப்பைக் கண்டு அவர் அமானுஷ ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு வனங்களிலிருந்த முனிவர்கள் எல்லோரும், 'எங்கள் பிறவி மிக அசுத்தமானது என்று கூறப்பட்டுள்ளது. உம்மை ஆலிங்கனம் செய்து பரிசுத்தமாவோம்.

உத்திரவு தரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு ஸ்ரீராமர் 'அடுத்த யுகத்தில் நான் கிருஷ்ணனாக அவதரிப்பேன், நீங்கள் கோபிகைகளாகப் பிறந்து என்னை ஆலிங்கனம் செய்து கொள்ளலாம்' என்றனர். அப்பொழுது மஹரிஷிகள், 'அடுத்த அவதாரத்தில் எங்களைக் கோபிகைகளாக்குவது இருக்கட்டும். இப்பொழுது உமது அங்கங்களைத் தொட்டுவிட்டுப் பின்னர் வேறு எந்த ஜன்மம் வேண்டுமானாலும் எடுக்கத் தயாராகிறோம். எங்கள் ஜன்மங்களில் எல்லாம் உமது தேஹஸ்பர்ஸம் கிடைப்பது நிச்சயமாகில் நாங்கள் எவ்வளவு ஜென்மம் வேண்டுமானாலும் எடுக்கத் தயார்தான்' என்று கூறிவிட்டனர். இவைகளைக் கேட்டு அவ்வாறே செய்துகொள்ள ஸ்ரீராமர் அனுமதி கொடுக்க, அவரைத் தொட்டு எல்லோரும் திருப்தியடைந்தனர்.

கிருஷ்ணன் வளர்ப்புத் தகப்பனான நந்தகோபர் பரமானந்தம், யசோதை, முக்தி காந்தை; அவள் தான் ஸத்வ ரஜஸ் தமோ ரூபமான மாயை, ஸத்வ மாயை ருத்ரனிலும், பக்தனாகிய ப்ரஹ்மாவிடம் ராஜஸ மாயையும், தாமஸம் தைத்யரிலும் உள்ளது. விஷ்ணு மாயையிலிருந்து அஸுரர்கள் வெளிப்பட்டனர். தேவகீ வேதத்திலுள்ள ப்ரஹ்மவித்யை, வஸுதேவர் வேதம், கிருஷ்ணராமாள் வேதரஹஸ்யம், கோபிகளும் பசுக்களும் ருக்குகள், மாடுமேய்க்குங்கோல் ப்ரஹ்மா, புல்லாங்குழல் ருத்ரன், கொம்பு இந்திரன், கோகுலவனம் வைகுண்டம், மரங்களே தபஸிகள், தைத்யர்கள் • லோபக்ரோதாதிகள், திரஸ்காரம் கலிகாலம், விஷ்ணுவே தன் மாயையால் கோபால கிருஷ்ண ரூபம் எடுக்கிறார். இந்த மாயையை உணருவது தேவதைகளுக்கும் அஸாத்யம். த்விஜர்களே திருஷ்டி. இப்படிப்பட்டவரை மாயை எப்படி மயக்கும். பலராமர் சேஷன். கிருஷ்ணன் சாச்வத ப்ரஹ்மம். 16108 பெண்சாதிகள் ருக்குக்களும் உபநிஷத்துகளும். பட்டமஹிஷிகள் ருக்குக்கள். சாணூரன் த்வேஷம், முஷ்டிகன் மத்ஸரம், குவலயாபீடம் தர்ப்பம், பகாஸுரன் கர்வம், ரோஹிணீ தயை, ஸத்யபாமை பூமி, அகாஸுரன் மஹாவ்யாதா கம்ஸன் கலி, குசேலர் சமம், அக்ரூரர் ஸத்யம், உத்தவர் தமம், சங்கம் விஷ்ணு ரூபமான லக்ஷ்மி. அது பாற்கடலில் உண்டாய் இடி போல முழங்கும் தயிர் இருக்கும் உள்ளே புகுந்து பானைகளை உடைத்துத் தான் முன்னர் பாற்கடலில் வடபத்ரசாயியாக விளையாடியதுபோல விளையாடுகிறார். துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்து தர்மத்தை நிலைநிறுத்த ஸர்வரக்ஷகரான பரம்பொருள் கருணையால் கிருஷ்ணனாகிறார். சிவனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட சக்கரம் ப்ரஹ்மாவினின்றும், சாமரம் தர்மம், அதன் காற்று ஜயந்திபுத்ரன், நெருப்புப்போல ஒளிவிடும் கத்தி மஹேச்வரன், உரல் காச்யபர், கயிறு தாயாகிய திதி, தேவதைகள் எல்லோரும் 'பகவானுக்கு ஆயுதமாக ஞானிகளே ஏற்படுகின்றனர்; அவர்களைத் தேவதைகளாகவே கருதவேண்டும்' என்று கூறுகின்றனர். ஸர்வ சத்ருக்களையும் அழிக்கும் கதையே காளி, சாரங்கதனுஸ் மாயை ஸுபோஜனம் என்னும் ஆயுதம் சாத்காலம், கையில் வைத்திருக்கும் தாமரைக் கொத்து ப்ரபஞ்சகாரணமான அவ்யக்தம், கருடன் பந்தீர ஆலமரம், ஸுதாமா தான் நாரதர். இம்மாதிரி ஸகல தேவதைகளும் உலகில் பகவானுக்கு அங்கங்களாக உதித்தனர். பகவான் இவர்களைவிட வேறாகத் தோன்றியபோதிலும் உண்மையில் எல்லாம் அவரே.

கடவுளின் பிரகாரம் பல.—ஈசன் ஒருவரேயாயினும் அவரது பிரகாரங்கள் பல. வீட்டின் ஒரே யஜமானன் ஒருவனுக்குப் பிதாவாயும், இன்னொருவனுக்குச் சகோதரனாயும், ஒருத்திக்குக் கணவனாயும் இவ்வாறு பல பிரகாரங்களிற் காணப்படுவதுபோல், ஒரே ஈசனார் எந்த எந்தப் பக்தனுக்கு எந்த எந்தப் பிரகாரமாய்க் காட்சி அளித்தாரோ, அந்த அந்தப் பிரகாரங்களாக வர்ணிக்கப்படுகிறார். வீட்டின் கூரையின்மேல் ஏறுவதற்கு ஏணி, மூங்கில், படிக்கட்டு, கயிறு முதலிய ஸாதனங்கள் பயன் படுவதுபோல், ஈசனைக் காண்பதற்கும் பலவகை மார்க்கங்களும் ஸாதனங்களும் ஏற்பட்டிருக்கின்றன. உலகத்திலுள்ள பிரதி சமயமும் இவ்வழிகளில் ஒன்றைக் காட்டுகின்றது.

உல்லாஸன் சரிதம்

ADVENTURES OF ULYSSES

ஒன்பதாம் அத்தியாயம்

(தொடர்ச்சி)

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றுவா விவரென் செய்வார்.

பிக்ஷுவேஷம் பூண்டு, கையிற் கோலூன்றி, நடை தளர்ந்தவனாய் உல்லாஸன் இடையன் வீட்டிலிருந்து புறப்பட்டு அரண்மனைக்குச் சென்றபோது, அங்குள்ள பிரபுக்கள் உண்டு களித்திருந்தார்கள். பிறந்த நாள் முதல் பிக்ஷுவாயிருந்தவன் எவ்வாறு தலைவணங்கித் தாழ்ந்து குறையிரப்பானோ அவ்வாறே உல்லாஸன் ஒவ்வொரு பிரபுவினிடத்தும் யாசித்தான். ஆழ்ந்து நோக்கினவர்களுக்கு மட்டில் உல்லாஸன் நடையில் கவுரவமிருந்ததென்று நன்றாய்ப் புலப்பட்டது. அவரிற் சிலர் "இந்த பிக்ஷு அரசனாய்ப் பிறந்திருப்பின், ஸிம்மாஸனத்திலும் பெருமையுடையனா யிருப்பான்" என்றார். சிலர் அனுதாபப்பட்டு பிக்ஷை தந்தார்; வேறு சிலர் தமது களியாட்டைக் கெடுக்கவந்த கழுதையென்று உல்லாஸனைத் திட்டி வெருட்டினர். கன்மனமுடையவர் களித்திருக்குங்காலத்தில் துக்கச் சின்னங்களைக் காண்டல் அவர்கள் களிப்பைத் தாழ்த்து மியல்புடையது. உல்லாஸனுடைய சொந்த கிருஹத்திலே அவனுக்கு நடந்த உபசாரத்தைப் பார்ப்போமாயின் கஷ்டகாலஞ் செய்யுங் கொடுமையை நன்றா யறிதலாகும்.

பந்தியிலிருந்த ஒவ்வொருவரையும் பிக்ஷை கேட்டு வருகையில் உல்லாஸன் தன் மகனிடத்திலும் வந்திரக்க, குமாரன் இரப்பவன் தன் பிதாவென்றறிந்து தனக்குப் பரிமாறியிருக்கும் உயர்ந்த பொருள்களை உல்லாஸனுக்குதவித் தன் பாத்திரத்தையும் அவனுக்குத் தந்தான். யாசிப்பவன் ஸாமான்ய பிக்ஷுவென்று மாத்திர மெண்ணின அகந்தை பிடித்த பிரபுக்கள் தலைமகன் காரியத்தைக் கண்டித்தார்கள். வாஸ்தவமறியாதவர் செய்யும் பிழைகளுக்கு அளவுமுளதோ?

அங்குக் கூடியிருந்த பிரபுக்களிற் அந்தீனன் என்னுமொருவன் கோபாக்கிராந்தனாய் "ராஜகுமாரா, காலாடியாய்த் திரியும் பொய்யர்களை அரண்மனைக்குள் வரவிட்டு அவர்களை யுபசரித்துப் பெருமை செய்கின்றது உனக்குத் தாழ்வை யுண்டாக்கும். இங்கு வந்திருக்கும் பிக்ஷு ஒரு காலாடி யென்றே நானெண்ணுகின்றேன்" என்றான்.

இந்தக் கடுஞ்சொற்களைக் கேட்ட உல்லாஸன் அந்தீனனை நோக்கி "மஹா பிரபுவே, தம்மிடத்தில் யாசகர்க்கு எதுவுங் கிடைக்காது போலும். வெறுங் கஞ்சி வைத்துக்கொண்டிருப்பவனுக்கு நீர் உப்புந்தரமாட்டீர்" என்று இடித்துச் சொன்னான்.

பிக்ஷு தன்னை உதாஸீனமாய்ப் பேசினதைக்கண்டு கோபமூண்ட அந்தீனன், தன் கையண்டையிலிருந்த பலகை ஒன்றையெடுத்து உல்லாஸன் தலைமேல் எறிந்தான். "அச்சமயத்தில் கொக்கைப்போ லுறங்கியிருந்து ஸமயத்தில் அதன் குத்தைப்போலிருத்தல் வேண்டும்" என்னும் பழமொழியை அனுஸரித்த உல்லாஸன் சிறிதேனுங் கோபங்கொள்ளாமல் வாசற்படியண்டை போய்த் தனக்குக்கிடைத்த பிக்ஷையைத் தின்றுகொண்டிருக்கையில் "பிராணனும் பொருளும் நஷ்டம் வருமாயின் ஒருவன் சண்டைபோடுவது ஸஹஜம்; அந்தீனன் சாண்வயிற்றிற்குச்சண்டைபோடுகிறான். அகதிக்குத் தெய்வமே துணையென்பது வாஸ்தவமானால், அந்தீனன் உயிரோடிருக்குங்கால் அரசியை மணக்கும் பாக்கியத்தைப் பெறான்" என்று கண்டிப்பாய்ச் சொன்னான்.

இந்த வார்த்தைகள் அந்தீனனுக்கு எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்ததுபோ லிருந்தது. அந்தீனன் உல்லாஸனை நோக்கி "இனி வாயைத் திறப்பாயானால் உன்னைக் காலைவாரி யிழுத்தெறிந்துவிடுவேன்" என்று பயமுறுத்தினான்.

பிரபுக்களில் சிலர் அந்தீனன் சொன்னவற்றை அங்கீகரித்தாரில்லை. அவர்களில் ஒருவன் "தேவர்கள் மனிதருடைய பக்தியையும் ஜீவகாருண்யத்தையும் சோதனை செய்வதற்கு பிக்ஷுவேஷம் பூண்டு வருதலுண்டு. நம்மெதிரிலிருக்கும் பிக்ஷு ஒரு தேவனாக இருந்தாலுமிருக்கலாம்.நாம் எதைக்கண்டோம்?பிச்சைக்காரரைக் கடுந்து சொல்லலாகாது" என்று ஹிதோபதேசஞ் செய்தான். தலைமகன் தன் பிதா சொன்னவற்றை நினைந்தும் மினெர்வாவினுடைய ஸம்ஞையை எதிர்பார்த்தும் ஒன்றும் பேசாமலே யிருந்தான்.

உல்லாஸன் அரண்மனைக்கு வந்த தினத்திலேயே பிரபுக்களிடத்தில் வழக்கமாய்ப் பிக்ஷை வாங்கிக்கொண்டும் அவர்களுடைய நகைப்புக்கு இலக்காயுமிருந்த ஐரஸனென்பவன் வந்தான். ஐரஸன் ஆறு ஆட்கள் சோற்றை ஒருவனாய்த் தின்பவன்; உடல் பெருத்தவன்; சிறிதேனும் மனத்தைரியமில்லாதவன். தனக்குப் போட்டியாக உல்லாஸன் பிக்ஷுவாய் வந்த பொறாமையாலும் பிரபுக்களுடைய தயவு தனக்கு மிகுதியாகக் கிடைக்குமென்கிற நம்பிக்கையாலும் ஐரஸன் உல்லாஸனை இகழ்ந்து பேசிச் சண்டைக்கிழுத்தான். பிக்ஷுக்கள் ஸ்வஜாதி வைரிகளாம். உல்லாஸனோ கொஞ்சமேனும் ஐரஸன் சொற்களால் சினக்காமல் "பிரபுக்கள் வயிறு நிரம்பச் சோறு போடுகிறார்கள். தின்று களித்துச் சும்மா போவோமே" என்று அலக்ஷியமாய்ப் பேசினான். தாழ்ந்து பேசின உல்லாஸனைக் கோழையென்றெண்ணி ஐரஸன் ஆரவாரித்தான். பிக்ஷுக்களிருவருஞ் சண்டை செய்யும் வேடிக்கையைப் பார்க்க விரும்பின வீணர்கள் இருவரையும் மல்யுத்தஞ் செய்யச் சொன்னார்கள். உத்தம வீரனான உல்லாஸன் ஸாமான்யப் பிச்சைக்காரனிடத்தில் யுத்தஞ் செய்ய மனமுவக்காவிடினும் தன் வலிமையை அங்குள்ளார் அறிதற்பொருட்டு ஐரஸனை முதலடியிலேயே காலைவாரித் தூரத்தில் எறியவே ஐரஸன் பல்லுடைந்து சவம்போலக் கிடந்தான். உல்லாஸன் அவனுடைய கோலைக் கையிற் கொடுத்து, "இனி சுவானங்களிடத்திற் போய் உன் அதிகாரத்தைச் செலுத்து; பிரபுக்கள் ஸபையில் இனி வராதே; பிக்ஷுக்களிலும் நீதான் பெரியவனென்றெண்ணாதே" என்று எச்சரித்தான்.

பிக்ஷு யுத்தத்தைக்கண்டு களித்த பிரபுக்கள்
ஒருவர்வாய்க் கொள்ளுந் தேனை
யொருவருண் டெளிதிற் போவார்
ஒருவர்கைக் கொள்ளுந் தேனை
யொருவர்கொண் டோடிப் போவார்
ஒருவரோ டொருவ ரொன்றத்
தழுவுவர் விழுவ ரோடி
ஒருவர்மே லொருவ ரேறி
யோகையென் றுவகை கூர்வார்.

பகற்காலம் இவ்வாறு செல்ல இரவு வந்தவுடன் அரசியை மணம்புரியக் கூடியிருந்தவரெல்லோரும் உணவு முடிந்தபின் ஆடல் பாடலுக்கு ஆரம்பித்துக் குதாகலஞ் செய்தனர். யூரிமாகஸ் என்றொருவன் உல்லாஸனைப் பலவாறு பழிக்கையில் "இந்தத் தடியனுக்கு வேலிகட்டத் தெரியாது; மண்வெட்டியாற் குழிவெட்டவுமறியான்; இவன் பிறர் பொருளை அபகரித்துச் சோம்பேறியாய்க் காலம் போக்குகின்றவன். இவனைக் கூலியாளாகவும் ஒருவரும் வைத்துக்கொள்ளமாட்டார். இவனிடத்தில் தெய்வத்தன்மை யுண்டெனலுமொருவாறு சரிதான். தெய்வம் வேலை செய்தவில்லை" என்றான்.

உல்லாஸனுக்குப் பௌருஷம் பிறந்து "யூரிமாகஸ் பிரபுவே, என்னை இகழ்ந்து பேசுதலுமக்குச் சளுவாயிருந்ததே, நானும் காலையில் ஒரு அரிவாளை எடுத்துக் கொள்கிறேன். நீரும் ஒன்றை எடுத்துக்கொள்ளும், நம்மிருவரில் மாலைக்குள் யார் அதிக வேலை செய்வார், பார்ப்போம். ஒரே நாளில் நான் நாலுகாணி நிலத்தையுழுந் திறமுடையவன். உம்மாலதாகுமா? கட்டி யுத்தஞ் செய்வோம். அதில் எவர் ஜயிப்பார் என்று நினைக்கின்றீர்? நீர் என்னைப் பரிகஸிக்கும்படியாய் ஒரு அம்சத்திலும் நான் குறைந்தவனாக மாட்டேனென்றறியும். இந்த வீட்டிற்குடையவனான உல்லாஸன் திரும்பி வருகின்றவரையில் உமது உடல்வலியைப் பரிபாலித்து வாரும். அதன்பின் நீர் படும்பாட்டை நான் சொல்வேன்" என்று துணிவாய் எதிர்பேசினான்.

பிச்சைக்காரன் பேசின பேச்சினால் கோபாவேசனாய் யூரிமாகஸ் ஒரு பாத்திரத்தை எடுத்து உல்லாஸன் தலைமேல் வீச அது மயிர்க்கிடை தவறினதால் அவன் மேற்படவில்லை. மற்ற கனவான்களும் கோபவசத்தர்களாய்உல்லாஸனை நெட்டிவெளியிற்றள்ளப்போன போது தலைமகன், "என்னுடைய ரக்ஷணையிலிருக்கும் பிச்சைக்காரன் மேல் உங்கள் கைபடவேண்டாம். உங்களுக்கு வெறி பிடித்திருக்கிறது போலும்; விருந்தினர்களாய் வந்தவர்கள் இவ்வாறு ஆரவாரிப்பதேன்? அன்ன பானாதிகளை யுண்டு இங்கே இருந்தாலுஞ்சரி, படுக்கப்போகிறதென்றாலுஞ்சரி, எனக்காக்ஷேபமில்லை. பிச்சைக்காரனுடன் கோபித்தல் எதற்கோ?" என்று கோபத்தோடு சொல்ல, பிரபுக்கள் சிறு பிள்ளையின் தீரத்தனத்தால் அச்சமுற்று அச்சமயம் சும்மாவிருந்து விட்டனர். மினெர்வா அவர்கள் மனத்தில் பயத்தை யுண்டாக்கியுமிருக்கலாம்.

விருந்தினர் தத்தம் விடுதிகளுக்குச் சென்றபிறகு உல்லாஸனும் தலைமகனுந் தனியேயிருந்தார்கள். ஆயுத சாலையிலிருந்து ஆயுதங்களையெல்லாம் எடுத்து வரும்படி தலைமகனுக்கு உத்தரவளித்து உல்லாஸன் "மகனே, நாளைக்கு இவ்வாயுதங்களெல்லாம் உபயோகமாகும். எவராவது இவற்றை வெளியிலெடுத்ததற்குக் காரணங் கேட்கின் துருப்பிடித்ததைச் சுத்தஞ்செய்ய வென்று சொல்" என்றான். விளக்குகளெல்லாம் அணைந்து போய் நள்ளிருளாயிருக்கையில் ஆயுதங்கள் பகல்போல ஒளி வீசின. ஸ்தம்பங்கள் ஜோதிர்மயமாயிருந்தன. இவற்றையெல்லாங் கண்ட உல்லாஸன், மகனைப் பார்த்து "குழந்தாய், தேவர் பெருமையை நம்மாலறிதலாமா? இரவைப் பகலாக்க வல்லவர் அவரே. இவ்வொளி வீசுதலே நமக்குச் சுபசகுனம்" என்று சொன்னான். பிறகு இருவரும் ஆயுதங்களையெல்லாம் துருப்போகத் துடைத்தார்கள்.

இருபது வருஷம் கண்ணுற்பாராத தன் மனைவி பனிலோபி என்பவளைப் பார்க்கவேண்டுமென்ற அவா உல்லாஸனுக்கு மேலிட்டிருந்தது. தன் அரண்மனை ரஹஸ்ய வழிகளெல்லாஞ் செவ்வையாயறிந்தவனானதால் அந்தப்புரத்திற்குச் சென்றான். அந்த ஸமயந்தான் பனிலோபியின் சேடிமார் அவளைப் படுக்கைக்கு அழைத்துப்போகுந் தருணம். பனிலோபி, புருஷர் ஸபையில் விசேஷ தினங்கள் தவிர மற்றைக் காலங்களில் வருகிறதேயில்லை. அந்தப்புரத்தில் தானுஞ் சேடிமாரும் வீட்டிற்குரிய வேலைகளைச் செய்துகொண்டு பொழுது போக்கினார்கள். சேடிமார் உல்லாஸன் வந்ததைக் கண்டு "இன்று பகலில் ஒரு பிக்ஷுவைப் பற்றிப் பிரபுக்கள் ஆரவாரித்தாரே, அவன்தான் இங்கு வந்திருக்கிறான். அவனுக்கு இங்கு என்ன காரியம்?" என்றதைக் கேட்ட நிமிஷமே பனிலோபி "பிக்ஷுவாயினும் நம்முன் அவன் வரட்டும். பலதேச யாத்திரை செய்திருத்தலால், எமது பிராண நாயகன் உல்லாஸனைப்பற்றி ஸமாசாரம் தெரிந்தவனாயிருத்தல் கூடும்," என்றாள்.

நாளாகியும் தன்னையும் தன் பெயரையும் மறக்காமல் ஸதா தன்னையே தியானம் பண்ணிக்கொண்டிருந்த பனிலோபியின் தேன்மொழிகள் காதிற்படவே, உல்லாஸனுக்கு மிகுந்த ஸந்தோஷம் பிறந்தது. அரசியின் ஸந்நிதானத்தில் உல்லாஸன் நின்றபோது அவனைப் பிக்ஷுவாக எண்ணினாளேயன்றித் தன் பர்த்தாவாகிய உல்லாஸன் எதிரில் நிற்கின்றானென்பதைப் பனிலோபி அறிந்தாளில்லை. உரு மாற்றம் தடுமாற்றஞ் செய்தது.

பனிலோபி பிக்ஷுவுக்கு உபசார வார்த்தைகள் சொல்லி உட்காருவித்துத் தன் பர்த்தாவைப்பற்றி விசாரித்தாள்.

உல்லாஸன் வாஸ்தவத்தை மறைத்தே பேசினதாவது:—

"நான் பிறந்தது கிரீடதேசம். மைனஸன் என்னும் அரசனுடைய பௌத்ரன். உல்லாஸன் த்ரோஜா நகரத்திற்குப் போகும் வழியில் எங்கள் துறையில் இறங்கிப் பன்னிரண்டு நாட்களிருந்தான். அவனுக்கு நான் பலவிதமாக விருந்துகள் செய்தேன். அவன் அங்க அடையாளங்கள், தரித்திருந்த ஆடையாபரணங்கள் எல்லாவற்றையும் நன்றாயறிவேன். காலத்தின் கொடுமையால் ஏழையாகிப் பிச்சை வாங்கிப் பிழைக்கின்றவனாய் விட்டேனேயல்லாமல், பிச்சைக்காரனாய்ப் பிறந்தவனல்லன். உல்லாஸனை யுத்தகளத்திலும் பார்த்திருக்கின்றேன். அவனுடைய பராக்கிரமங்கள் ஸாமான்ய மனிதனொருவனுக்குங் கிடையாது. அவனுடைய புத்திக் கூர்மையை வருணிப்பது என்னாலாகாத காரியம். புருஷ லக்ஷணங்கள் அவனிடத்திலமைந்தனபோல மன்மதனுக்கும் இல்லையெனலாம். உல்லாஸனுக்கு வாழ்க்கைப்பட்டவளைப் பார்க்கிலும். உத்தமிகள் உலகிலில்லையென்றே சொல்லத்துணிவேன்."

இந்த மதுரமொழிகள் காதிற்பட்டவுடன் பனிலோபி கண்களினின்று தாரைதாரையாய் நீர் பெருகிற்று. தன் பர்த்தா உயிருடன் எதிரில் நிற்கையிலே பனிலோபி அவனிறந்தானென்றெண்ணியிருந்தாள். உல்லாஸனுக்கும் கண்ணீர்வர ஆரம்பித்தது. மனவுறுதியால் கண்ணீரைத் தடுத்து அன்னியன்போல் அவன் நடித்தான்.

பிக்ஷு தான் பேஷியா தேசத்திற்கு வந்திருந்தாயும் அங்கு உல்லாஸனைப்பற்றி ஸமாசாரந் தெரிந்தாயுஞ் சொன்னான். பனிலோபிக்கு நம்பிக்கை பிறந்து தான் கண்ட சொற்பனமொன்றைப் பிக்ஷுவினிடத்தில் சொன்னாள். அதாவது:—

"என்னரண்மனையில் இருபது கோழிகளுண்டு. அவைகளுக்கு நானே தீனிபோடுவது வழக்கம். கோதுமை மணிகளை அவற்றிற்கு நான் இறைத்துக் கொண்டிருந்தபோது ஒரு ராஜாளிப்பக்ஷி பறந்தோடி வந்து அந்த இருபது கோழிகளையுங் கொன்றுவிட்டு ஓடிப்போயிற்று. வளர்த்த பறவைகள் கொல்லப்பட்டதை நினைந்து நான் துக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். ராஜாளி என்னைப் பார்த்து "இதனினும் மங்களகரமான விஷயம் ஒன்றுமில்லை. ராஜாளிப் பக்ஷி உன் புருஷன் உல்லாஸன். கோழிகளெல்லாம் உன் அரண்மனைத் திரவியத்தைத் தின்றழித்து உன்னை மணம்புரிய வந்திருக்கும் சண்டாளப்பிரபுக்கள் இந்தப் பாவிகளுக்குக் காலன் கிட்டினானென்பதுதான் இதனால் நீ அறியவேண்டியது" என்று சொல்லிற்று. நானும் விழித்துக்கொண்டேன். கோழிகள் உயிரோடிருக்கின்றனவாவென்று போய்ப்பார்த்தேன். அவை ஒன்றுஞ் சாகாமலிருந்தன. இந்தச் சொற்பனம் ஸூசிப்பிப்பது என்ன?

பிக்ஷுவான உல்லாஸனும் ராஜாளிப்பக்ஷி சொன்னவையே சொர்ப்பனத்தின் கருத்தென்று தெரிவித்தான். பனிலோபியும் மனமகிழ்ந்து "உத்தமரே, உமது மதுரவாக்கைக் கேட்டுக்கொண்டிருந்தாலே நித்திரை வாராது. மனிதஜென்ம மெடுத்தவர்களுக்குத் தேவர் நித்திரை யென்னும் க்ஷணமரணத்தைக் கற்பித்திருக்கிறார். அதுவும் மனிதருடைய அநித்தியத்தை உணர்த்தற்பொருட்டே. நான் படுக்கப் போகின்றேன். இருபது வருஷகாலமாய் என் கண்ணீரால் நனைந்திருக்கின்ற படுக்கையை இன்றும் நனைக்கின்றேன். இதற்குத்தான் நான் பெண்ணாய்ப் பிறந்தேன்போலும். தமது வரவு நல்வரவாகுக. எனக்கு விடைதரல் வேண்டும்" என்று பிரார்த்திக்க உல்லாஸனும் அந்தப்புரத்தை விட்டுத் தன் மகனிருந்த விடத்திற்கு வந்தான்.

கே. வேங்கடராமையர், பி. ஏ.

ராகங்களின் உற்பத்தி
ORIGIN OF TUNES

ஸங்கீத புஸ்தகங்களில் ஏற்பட்டிருக்கிற இவ்வளவு ராகங்களும் ஆதிகாலந்தொட்டு வழக்கத்திலிருந்தன வல்லவென்று ஸங்கீதப் பழக்கமுள்ளவர் யாரும் கண்டறிந்துகொள்ளலாம். எப்படி காஹரப்பிரியா என்றும் ஹரிகாம்போதி என்றும் உள்ள கர்த்தா ராகங்களும் ஸரஸ்வதி என்றும், ஸரஸ்வதி மனோஹரி என்றும் பலவிதமான ஜந்நிய ராகங்களும் ஸ்ரீ தியாகராஜய்யர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ளனவோ, அதுபோலவே வேறு கர்நாடக வித்துவான்களும் அபூர்வ ராகங்கள் பாடியிருக்கிறார்கள். ஆக, தியாகய்யர் அவர்கள் பாடியதும், மற்ற வித்வான்கள் பாடியதும் எல்லாம் சேர்ந்து சுமார் முன்னூறு ராகங்களில்தான் ஸாஹித்தியங்கள் இருப்பதாகத் தெரியவருகிறது. அந்த 300 ராகங்களில் சுமார் 50 ராகங்கள்தான் ராகங்களாய்ப் பாடும் வழக்கத்தில் உள்ளவை.

[வித்துவான்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு சபைகளில் பாடுவோர், அபூர்வ ராகத்தை ராகமாகப் பாடும் சக்தி பொருந்தியவராயும், அபூர்வ ராகத்தின் ஸாஹித்தியங்களைப் பாடும்போது, அவைகளுக்கு ஏற்ப மனோரத ஸ்வரங்கள் பாடும் வழக்கமுள்ளவராயும் இருக்கவேண்டும். ஆனால் இப்போதைய வித்துவான்களுக்கு அந்த வழக்கம் குறைபட்டுக்கொண்டு வருவது மிகவும் விசனிக்கத்தக்கதே.]

அதுவுமன்றி, புஸ்தகங்களிலோ, சுமார் ஆயிர ராகங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த ஆயிர ராகங்களும் 72 ஸம்பூர்ண ராகங்களாகிற ஜநக ராகங்களும், அவற்றிலிருந்து பிரஸ்தரித்துக் கிடைத்த ஜந்நிய ராகங்களுமாகும்.

பிரஸ்தரிக்கும் விதிகள் ஷாடவம் (6 ஸ்வரச் சேர்க்கை) ஔடவம் (5 ஸ்வரச் சேர்க்கை) என்னும் விதிகளாம். ஆரோஹணத்திலோ, அவரோஹணத்திலோ குறைந்த பக்ஷம் 5 ஸ்வரங்கள் வைத்து பிரஸ்தரித்து வர்ஜ்ஜிய ராகங்கள் உண்டாயின. இப்படி வர்ஜ்ஜிய ராகங்களில் மேலடி உண்டாக வேண்டுமென்றால், ம, ப என்னும் இரண்டு ஸ்வரங்களில் ஏதாவது ஒன்றைத்தான் வர்ஜ்ஜியம் செய்வதேயொழிய இரண்டையும் வர்ஜ்ஜியம் செய்கிறதில்லை. அப்படி இரண்டையும் வர்ஜ்ஜியம் செய்த ராகம் பாட முடியாததாம்.

இதைத் தவிர வக்ரம் என்னும் ஒரு விதி இருக்கிறது. அதாவது ஸ்வரங்களைப் பிடிக்கும்போது நேரில் வரிசைக்கிரமமாய் உச்சரிக்காமல் மடக்கி உச்சரிப்பதாம். உதாரணம், ஸகரி கமப என்பதில் க வக்ரமாம். இதேமாதிரி எல்லா ஸ்வரங்களையும் வக்ரமாக வைத்துக்கொண்டாவது சில ஸ்வரங்களைமட்டும் வக்ரமாய் வைத்துக்கொண்டாவது, அல்லது ஆரோஹணத்தில் மட்டுமோ அவரோஹணத்தில் மட்டுமோ வக்ரம் வைத்

துக்கொண்டாவது அநேக ராகங்களை ஜந்ய ராகங்களாக ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இப்படிப் பிரஸ்தரித்து ஆயிரம் ஆயிரமாகக் கணக்குக்கு ராகங்கள் ஏற்பட இடமிருந்தாலும் புஸ்தகங்களில் சுமார் ஆயிரம் ராகங்களுக்குத்தான் ஆரோஹண அவரோஹணம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆயிரம் ராகங்களுக்கும் ஆதாரம் என்னவென்று விசாரிப்போமாகில் வேங்கடமகி என்பவரால் ஏற்படுத்தியுள்ள லக்ஷண கீதமன்றி, இன்னார் இயற்றியவர் என்று தெரியாத வேறொரு லக்ஷணகீத புஸ்தகம் ஒன்றில் ஏற்படுத்தியிருக்கிற ராகவரிசைகளை யநுசரித்திருக்கிற ஒரு அட்டவணை போலிருக்கிறது. மற்றும் ஒரு லக்ஷண கீதபுஸ்தகம் ஒன்றும் இருக்கிறது. ஆகவே லக்ஷணகீத புஸ்தகம் மூன்றுவகையாய் இருக்கிறது. வெங்கடமகி இயற்றிய தொன்றும் மற்றும் இரண்டின் இயற்றியவர் பெயர் தெரியாமலும், இருக்கிறது.

அவைகளில் மேளகர்த்தாக்களை வரிசைக்கிரமமாக எடுத்துக்கொண்டு, ஜநகராகத்திலும் பிறகு அதன் ஜந்நிய ராகங்களிலும் ஒவ்வொரு கீதம் ஸாஹித்தியம் செய்து ஸ்வரத்துடன் எழுதப்பட்டிருக்கிறது.

[கீதம் என்பது ஒருவகை ஸாஹித்தியம். அதன் லக்ஷணம் ஸாஹித்தியம் என்னும் அதிகாரத்தில் விஸ்தரித்து எழுதப்படும்.]

முதல் முதல் பாட்டை ஸ்வரமாக எழுதி ஸாஹித்யத்தையும் ஸ்வரத்தையும் எழுதி வைத்திருக்கும் வழக்கம், இந்த லக்ஷண கீதத்தில்தான் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. முதல்முதல் ஏற்படுத்திய நோடேஷன் (Notation) அந்தப் புஸ்தகத்தில் கண்டுள்ளதுதான்.

இந்த லக்ஷண கீதங்களில்கூட ஏற்பட்டிருக்கும்ராகங்கள் முன்னூறு ராகங்களே.

ஸம்ஸ்கிருதத்தில் எழுதும் புஸ்தகங்களில் சாஸ்திரங்களில் சில லக்ஷண லக்ஷியம் சேர்த்தே எழுதியிருப்பதுபோல், ராகங்களின் ஸஞ்சாரக்கிரமத்தையும் ராகத்தின் பெயரையும் காட்டி எழுதியிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

ஆகவே இந்த ஆயிர ராகங்களுக்கு ஆரோஹண அவரோஹணங்களை மட்டும் காட்டும் புஸ்தகத்தின் கிரந்தகாரரும் தெரியவில்லை. அதில் ராகங்களின் லக்ஷணமும் விரித்துத் தெளிவாய் எழுதியிருக்கவில்லை. இந்த அட்டவணையையே இக்காலத்து ஸங்கீதப் புஸ்தகங்களை அச்சிடுவோர் எழுதிப் பிரசுரிக்கிறார்கள். அதன் அபிப்பிராயம் இன்னதென்று யாருக்கும் தெரியவில்லை. அவைகள் விற்பனை யாவதற்கும் குறைவில்லை.

கீதங்களை ஸ்வரப்படுத்தி எழுதியிருக்கும் லக்ஷண கீத புஸ்தகம் மூன்றுவகை என்று சொன்னேமல்லவா? அதில் வெங்கடமகி இயற்றிய கீதங்களைக் காலம் சென்ற (முத்துசாமி தீக்ஷிதர் அவர்கள் வம்சத்திற் பிறந்த அவரது பேரப்பிள்ளையான) சுப்பராமதீக்ஷிதர் அவர்கள் "ஸங்கீத ஸம்பிரதாயப் பிரதர்சினீ" என்னும் நூலில் அச்சிட்டுப் பிரசுரித்திருக்கிறார்கள்.

மற்றும் உள்ள இரண்டும் அச்சிடப்படவில்லை. ஆனால் ராகங்களின் ஆரோஹ அவரோஹ அட்டவணை மட்டும் அச்சிட்ட ஸங்கீத புஸ்தகங்களில் அநுபந்தமாகக் காணலாம். ஆனால் லக்ஷண கீத புஸ்தகத்திலிருந்து ஸ்வரஞான பலமிருந்தால் ஏதோ ஒருவகையாய் நாம் ராகத்தின் ஸஞ்சாரத்தை நிர்ணயித்துக் கண்டறியலாம். ஆனால் கேவலம் ஆரோஹணம் அவரோஹணம் மட்டும் எழுதியுள்ள புஸ்தகத்திலிருந்து ராக ஸஞ்சாரத்தைக் கண்டுபிடிக்க இடமில்லை. இப்படி புஸ்தகமில்லாததாலும் ஸ்வரஞான மில்லாததாலும் இருவிதத்திலும் ஸங்கீத சூனியராயிருந்தபோதிலும் ஸங்கீத ஞானஸ்தராய் வேஷம் போட்டுக்கொண்டிருப்பவர் இந்த இரண்டாவது தினுசு அச்சிட்ட புஸ்தகத்தை வாங்கித் தங்கள் அலமாரிகளில் வைத்துக்கொண்டு ஸங்கீதத்தைச் சிரமப்பட்டு அப்பியஸிக்காமலும் ஸங்கீதத்தில் முக்கிய பாகமான ராகத்தின் லக்ஷணத்தை அறியும் திறமை யில்லாமலும் இருந்தபோதிலும், ஸங்கீத ஸம்பந்தமான சில பரிபாஷை வார்த்தைகளை (Technical Terms) பேசிக்கொண்டு ஸங்கீதத்தைப்பற்றி வாய்மொழியாய்ப் பேசித் தள்ளிக்கொண்டு இருப்பவரே யின்றித் தாங்கள் பேசும் விஷயங்களை அனுபவ விதமாய்ப் பாடிக்காட்டி திருஷ்டாந்தப்படுத்தும் வல்லமை யின்றிப் பிதற்றுவோராம். இந்த வகையரா மனிதரிடத்தில் இன்னொரு கெட்ட சுபாவம் ஒன்றுண்டு. அதென்னவெனில், "குறை குடம் கூத்தாடும்" என்னும் பழமொழிக்கிணங்க நல்ல பாடகர்கள் பாடும் பாட்டுக்களை லக்ஷண பூர்வமாய்க் கேட்க முடியாதிருந்தும், "இவருடைய பாட்டுக் காதில் ஏறவில்லை" என்றும் "அவருடைய பாட்டுச் சுகப்படுகிறதில்லை" என்றும் அதிகப் பிரஸங்கமான குணதோஷத்தைச் சொல்லுவதால், நமது ஸம்பிரதாய வித்வத்து முறையான ஸங்கீதம் குறைபட்டு வருகிறதென்று யாரும் அறியலாம். தாம் குறை கூறும்போது; "பாட்டு இன்ன விதமாய் இருக்கவேண்டும். அது இன்னாருடைய பிராசீன ஸாஹித்தியத்தில் இப்படித்தானிருக்கிறது. இது இவ்விதமா யிருக்கக்கூடாது" என்று சுட்டிக்காட்டினால் எவ்வளவோ சௌகரியமாயும் வித்தை அபிவிருத்திக்கு வரும்படியாயும் இருக்கும். அப்படிக்குக் காட்ட வேண்டிய திறமையோ இல்லை. நமது ஸங்கீதத்தில் அபிமானமுள்ளவர்களே! மேற்படி போலி ஞானஸ்தர்கள் அதிகப் பிரஸங்கமாய்ப் பேசுவதையும், அவர்கள் ஸங்கீதத்தை நடத்துவதற்காகத் தலையிட்டுக் கொள்வதையும் நிறுத்தி, ஸங்கீத ஸபைகளில் அவரது அபிப்பிராயங்கள் தலையெடுக்காமல் அடிக்கவேண்டுமென்பது நீங்கள் இவ்வித்தைக்குச் செலுத்தவேண்டிய உங்கள் முதற்கடமை யென்று எண்ணவேண்டும்.

பி. எஸ். சுந்தரம் ஐயர், பீ.ஏ., எல்.டி.

கல்யாணி

KALYANI*

3-ம் அதிகாரத் தொடர்ச்சி

"பிரபுவே! இல்லை. இவ்விதத் துறைகளில் இழிபவர், கிழம், குருடு, அசக்தர் இவர்களைத் தங்கள் ஆலோசனையில் சேர்க்கிறதில்லை. நான் உம்மை எச்சரிப்பது வேறு விஷயத்தில். புனபதிகளுக்கு நீர் மிகுந்த கஷ்டமான காரியங்களைச் செய்திருக்கின்றீர். உண்மையைச் சொல்லுகிறேன். நம்பும். அவர்கள் உக்ரமானவர்கள். மனத்தடுமாற்றமாகித் துணிவு பிறந்தவருடன் காரியங்கள் நடத்துவதில் எப்பொழுதும் அபாயமுண்டு" என்று முனியம்மாள் சொன்னாள்.

"சீ! எங்களுக்குள் நடந்தது சட்டப்படி நடந்ததே ஒழிய, நானாகச் செய்ததல்ல. வழக்கின் முடிவை எதிர்க்க அவர்கள் சட்டத்தின் உதவியைத்தான் தேட வேண்டும்" என்றான் வீரசேனன்.

"சரிதான், அவர்கள் வேறுவிதம் நினைக்கலாம். மற்றைய நிவர்த்திகட்கிடமில்லாவிட்டால், கையாலானதைப் பார்க்கலாம்" என்றாள்.

"நீ சொல்லுகிறதென்ன? மாதவன் தேகக் கெடுதி செய்யமாட்டானல்லவா?" என்றான்.

"அந்த வாலிபன் கவுரவமுடையவன், கபடமற்றவன்; இரமட்டோ, உதாரன், தயாளு, கம்பீர சுபாவமுடையவன். ஆனாலும் அவன் புனபதி வமிசத்தன். சமயம் பார்த்திருப்பான். தனக்கு நேர்ந்த துன்பங்களால் மனம் துணிந்திருப்பவனைச் சட்டத்தைத்துணைக்கொண்டு நிர்ப்பந்திப்பதா லுண்டாவதைப்பற்றி எச்சரிக்கையா யிருக்கவேண்டும். ஆகையால் அவன் விஷயத்தில் நீர் கவனமாயிருக்கவேண்டும்" என்றாள்.

தெரிந்தோ தெரியாமலோ முனியம்மாள் சொன்னது வீரசேனனுடைய பயத்தை உறுதிப்படுத்துவதாயிற்று. முற்காலங்களில் நடந்துவந்த சதிக்கொலைகள், அபூர்வமான காரணங்களால் தற்காலத்திலும் நடத்தப்படுகின்றன என்பதை அவன் அறிந்தவன். புனபதிகள் விஷயத்தில் நடத்தப்பட்ட வியாச்சியங்களால் மாதவனுக்குக் கெடுதிகளுண்டா யிருக்கின்றன. அவற்றால் அவன் பழிவாங்க நினைக்கக்கூடும். நியாயஸ்தல முடிவுகள் சிலவற்றால் அடிக்கடி பயங்கரமான செய்கைகள் நடத்தப்பட்டிருக்கின்றன என்று அவன் அறிவான். தனக்குண்டாகிய பயத்தை முனியம்மாள் அறியாமலிருக்க அவன் முயன்றாலும் அவனால் முடியவில்லை. அவளிலும் குறைந்த புத்தியுடையவர்களுக்கே அவன் மனத்தில் அது நன்றாய்ப் பதிந்துவிட்டதென்று தெரியக்கூடியதா யிருக்கும்பொழுது அவளுக்கு அது தெரியாமலிருக்குமா? அவன் குரல் மாறிப்போய் "மாதவன் கவுரவமுடையவன். ஒருவேளை அப்படி யில்லாவிட்டாலும், தங்கள் கையாலானதைப் பார்ப்பவர் படுகிறபாடு அவன் தெரியாதவனா?" என்று சொல்லிவிட்டு அவள் மறுமொழிக்குக் காத்திராமல் சடக்கென எழுந்து அவ்விடம்விட்டுச் சென்றான்.

4-ம் அதிகாரம்

மிகுந்த மௌனத்துடன் வீரசேனன் தன் மாளிகையைநோக்கி நடந்தான். சுபாவத்தில் கோழைத்தனமுள்ளவளும், அக்காலத்துக் கன்னிகைகளுக்கு வழக்கமாய்க் கற்பிக்கப்பட்டு ஆசாரத்தில் நடந்து வந்த பெற்றோரிடத்தில் பயபக்தி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலாகிய குணங்களுடன் வளர்ந்த அவன் பெண் அவனுடைய ஆலோசனையைக் கலைக்கத் துணியவில்லை. இப்படிக் கால் "மைல்" தூரம் சென்றபின் அவன் சடக்கெனத் திரும்பித் தன் மகளைப் பார்த்து "கல்யாணி! நீ என் முகம் இவ்வளவு வெளுத்துத் தோன்றுகிறாய்" என்றான்.

எவ்வித முக்கியமான சங்கதிகளிலும் தன்னைக் கேட்டால் ஒழியத் தான் தனக்குத் தோற்றுவதைப் பேச ஒரு யுவதிக்கு அதிகார மில்லாததாகக் கருதப்பட்ட அக்காலத்தில், முனியம்மாளுக்கும் தன் பிதாவுக்கும் நடந்த சம்பாஷணையின் அருத்தம் தெரியாதவளாகப் பாவிக்க வேண்டியவளாகிய கல்யாணி அப்படிச் செய்து, அவர்கள் அப்பொழுது நடந்துபோகும் பரந்த காட்டில் மேயும் மிருகபயத்தால் தன் முக வெளுப்பு உண்டானதாகச் சொன்னாள்.

அக்காலத்தில் சில பிரபுக்கள் காட்டு மிருகங்களை வளர்த்து வந்தார்கள். காளைகள் முற்காலத்திலிருந்த பலமும், பரிமாணமும், மிகக் குறைந்தும், பிடரிமயிர் நிறைந்தில்லாமலும், உருவம் சிறுத்தும், நிறம் குன்றி மங்கலாயும், பலமற்றும், கறுப்புக்கொம்பும் குளம்பு

* An adaptation of Bride of Lammermoore.

முடையவைகளாக இருந்தாலும், அவைகளுடைய மூர்க்கம் மட்டும் குறையவில்லை. மனிதர்களிடத்தினுள்ள பகையால் பழக்கப்படக்கூடாதவைகளாயும், தெரியாமல் ஒருவன் சமீபத்தில் போய்விட்டாலும் அல்லது வேண்டுமென்று அவற்றின் மந்தையைக் கலைத்தாலும் அடிக்கடி அபாயகரமானவைகளாயும் அவைகளிருந்தன.

இக்காளைகளில் சில கும்பலாய்ச் சமீபத்தில் நிற்கக் கண்டதைத் தனக்கு வேறு வகையாலுண்டான பயத்திற்குக் காரணமாக வியாஜமாக்கினள். அவள் அடிக்கடி இந்த வேட்டைக்காட்டில் திரிந்து, காட்டு மிருகங்களைக் கண்டு பழகியவள். இக்காலத்திற்போல அக்காலத்தில் ஸ்திரீகள் பயமிருப்பதாக வீணாக நடிக்கிற வழக்கமில்லை. ஆனாலும் அப்பொழுது மெய்யாகப் பயப்படவேண்டிய காரியம் நேரிட்டது.

அவன் அப்படிச் சொல்லவும் அவளுடைய கோழைத்தனத்திற்காக அவள் பிதா அவளை அதட்டிக் கண்டிக்க ஆரம்பிக்கும்பொழுது, அவளுடைய சிவந்த மேலாடையைக் கண்டோ, அல்லது மிருகங்களுக்கு ஒவ்வொரு காலத்திலுண்டாகிற காரணமில்லாத வீராவேசத்தாலோ ஏவப்பட்டுத் தூரத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்த மாட்டு மந்தையிலிருந்த காளை ஒன்று கூட்டத்திலிருந்து திடீரென்று பிரிந்து "உம்" காரம் செய்து, பூமியைத் தன் முன்கால் குளம்பால் கீறிக்கொண்டும், தனக்குக் கோபமும் மூர்க்கமும் உண்டாக்கிக்கொள்வதற்குப்போல் தன் கொம்புகளால் மண்ணைக் கிளைத்துக்கொண்டும், தான் புல்மேயும் இடத்தில் தூரகிருதமாய்ப் பிரவேசித்தவர்களைச் சமீபித்தது.

அவ்வெருதின் செய்கையைக் கண்ட வீரசேனன், அது கெடுதி செய்யப்போகிறதென்று அறிந்து, தன் கக்கத்தில் தன் மகள் கையை வைத்துப் பிடித்துக்கொண்டு, அந்த மாட்டிற்கு அகப்படாமல் அதன் கண்பார்வைக்குத் தப்பிப்போக நினைத்துத் தீவிரமாக நடந்தான். இது மிகவும் அவிவேகமான செய்கை. அவன் ஓடுகிறதைக்கண்டு தைரியங்கொண்டு அந்தக் காளை அவர்களைத் தொடர்ந்து அதிக வேகமாய்த் தூரத்திற்று. வந்திருக்கிற ஆபத்தைக் கண்டால், வீரசேனனிலும் அதிக மனத்தைரிய முள்ளவர்களும், அதைரியப்பட்டிருப்பார்கள். ஆனால் மரணத்திற்கும் அஞ்சாமல் செய்யும் புத்திரவாஞ்சையானது அவனுக்குத் துணையாயிருக்க அவன் தன் புதல்வியைத் தாங்கி இழுத்துக்கொண்டு சென்றான். கடைசியில் பயம் மிஞ்சி ஓடமுடியாமல் அவள் விழுந்துவிடவே, தப்பி ஓடமுடியாமல் அவன் திரும்பி அவளுக்கும், அதிக வேகமாய் ஓடித் தூரத்துவதால் மிகுந்த கோபத்துடன் சமீபத்தில் வந்துவிட்ட அந்த காளைக்கும் மத்தியில் தான் நின்றுகொண்டான். அவனிடத்தில் ஆயுதம் ஒன்றுமில்லை. கைத்தடிகூடவில்லை. அதிருந்தாலும்தான் என்ன பிரயோசனப்பட்டிருக்கும். பிதாவோ, புத்திரியோ, அல்லது இருவருமோ அம்மிருகத்தால் இறக்கவேண்டியதாயிருந்த அந்த ஆபத்துவேளையில், பக்கத்திலுள்ள ஒரு புதரிலிருந்து பிரயோகிக்கப்பட்ட ஒரு துப்பாக்கிக் குண்டால் அக்காளையின் ஓட்டம் தடைப்படுத்தப்பட்டது. அதன் முதுகெலும்பு, தலை மண்டை யோட்டுடன் சேர்கிற கழுத்தின் பாகத்தில் குண்டு பட்டதால், அதன் உடம்பின் வேறெந்தப் பாகத்தில் பட்டாலும் அதற்குச் சிறிதும் தீங்கு விளைத்திருக்க முடியாத அந்தக் குண்டு அதற்கு உடனே மரணத்திற்கேதுவாயிற்று. கோரமான கூச்சலுடன் அது முன்னே இடறி, அதன் கால்நடையாலல்லாமல் முன்வந்தவேகத்தின் தொடர்ச்சியாக, வீரசேனனுக்கு 10 அடிதூரத்தில்வந்து விழுந்தது, மரண வியர்வையால் அதன் அவயவங்கள் கறுத்து, நரம்புத்துடிப்பால் இழுத்துப் பதைத்துத் தரையில் புரண்டது.

இவ்விதம் அதிக ஆச்சரியமாக உண்டாகிய ஆபத்து நிவிர்த்தியை அறியாதவர்களாய்க் கல்யாணி மூர்ச்சையற்றுத் தரையில் கிடந்தாள். விலக்க ஒண்ணாத கோரமான மரணத்திலிருந்து எதிர்பாராமல் திடீரென்று நீங்கிப் பத்திரமாய்க் காப்பாற்றப் பட்டதால், அவள் தகப்பன் ஸ்தம்பித்துப்போனான். நடந்ததின்னதென்று தெரிய ஒட்டாமல் செய்த அவனுக்குண்டாகிய பேசமுடியாத குழப்பமான ஆச்சரியத்தோடு இறந்தும் பயங்கரமாயிருந்த அந்த மிருகத்தை அவன் உற்றுப்பார்த்தான். தன் கையில் ஒரு சிறு துப்பாக்கியுடன் ஒரு மனித உருவம் சோலையின் மரக்கிளைகளின் மத்தியில் வருவதை அவன் பார்க்காவிட்டால், இடிவிழுந்து அந்த மிருகத்தின் ஓட்டம் தடைப்பட்டதென்று அவன் நினைத்திருப்பான். நடந்ததைப் பற்றிய ஞானம் அவனுக்கு அவ்வளவு தெளிவற்றதாயிருந்தது.

இது உடனே வீரசேனனுக்குத் தங்களுடைய நிலைமையைத் தெரிவித்தது. தன் பெண்ணைத் திரும்பிப் பார்க்கவே அவளுக்கு உதவி செய்யவேண்டிய அவசியம் அவன் மனத்திலுண்டாயிற்று. தன்னுடைய வனவேடர்களில் ஒருவனாக அவன் நினைத்த அந்த மனிதனை அழைத்துத் தன் பெண்ணுக்கு உடனே வேண்டியவைகளைச் செய்யச் சொல்லிவிட்டு உதவிக்காக ஆள் தேட ஓடினான். அவ்வேட்டைக்காரன் அவர்கள் சமீபம் சென்றான். அவன் ஒரு அன்னியனென்று வீரசேனன் கண்டும் தன்னுடைய அவசரத்தில் அதிகம் ஒன்றும் பேச முடியாதவனாய், தன்னிலும் அதிகத் திடகாத்திரமும் ஜாக்ரதையுமுடையவனாயிருந்த அவனிடத்தில் அடுத்துள்ள ஒரு ஊற்றிற்கு அவளைக் கொண்டுபோகச் சொல்லிவிட்டு, அதிகமாக உதவி தேட முனியம்மாள் குடிசைக்குத் திரும்பினான்.

காலத்தில் செய்த உதவியால் அவர்களைத் தனக்கு அதிகக் கடமைப்பட்டவர்களாகச் செய்த அந்த மனிதன் * தன்னுடைய நற்செய்கையை அரைகுறையாக விட்டுவிட மனமற்றவனாக இருந்தான். தரையிலிருந்து கல்யாணியைத் தன் கைகளிலெடுத்து, அவனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்ததாகத் தோன்றிய பாதைகளிலும் அக்காட்டின் ஊடுவழிகளிலும் அவளைத் தூக்கிச் சென்று, ஒரு காலத்தில் மிக்க அழகான ஒரு கட்டடத்தால் மூடப்பட்டிருந்து ஸ்படிகம்போல் தெளிந்த நிறைந்த நீரையுடையதான ஒரு ஊற்றின் பக்கத்தில் அவளைச் சாவதானமாய் இறக்கி வைக்கிறவரை ஓரிடத்திலும் அவன் நிற்கவில்லை. அந்தக் கட்டடம் உடைந்து தகர்ந்து கிடந்ததால் தரையிலிருந்து கொப்புளித்து வருகிற தண்ணீர் அதன்மேல் வெயிலும் காற்றும் பட அதன் பக்கத்தில் உடைந்து கலந்து கிடக்கும் வெண்சுதை உருவங்கள் மேலும் பாசி படர்ந்த கற்களின்மேலும் ஓடிக்கொண்டிருந்தது.

S. V. கள்ளபிரான் பிள்ளை, பீ. ஏ.

ஜகந்மாதாவின் ஸ்மரணம். --பெண்ணும் பொன்னுமே உலக முழுவதையும் பாவத்தில் முழுக்கடித்துவிட்டன. பெண்ணை ஜகந்மாதாவின் ஸ்வரூபமென்று நீ எண்ணுங்கால் அவளுடைய வன்மை அடங்கிப் போய் விடுகின்றது.

நாகாநந்தம்

NAGANANDAM: A CLASSICAL DRAMA

(தொடர்ச்சி)

சங்க சூடன்—

என்று மின்மை யின்றி விளங்குறூஉம்
அணிபணி தன்மேல் அடைதாக் கபாலத்
தொடரின் வெண்மதித் தொகைகொடு சங்கரன்
உடலென விளங்குமிம் மாயனம்
விநாய கர்க்கின்பம் விழைத்து பொலிந்தென.

நீ போ! அமைதி பெறும்படிப் பேசுவதில் பிரயோஜனம் என்ன? கருடன் வரும்வேளை யாகிவிட்டது. (தாயின் காலில்வீழ்ந்து பணிந்தெழுந்து கைகுவித்து)

மானிட ராவ தரிதென்பர் மானவர்;
ஞான முணர்ந்து நயம்பட வளர்ந்து
மோன மூழ்கி முதல்வனை யடைவதே
வழியென்ப ராரியர்; வானென் றுண்டென்பர்—
தகுதண் டனைதனை தந்து தக்க
புகுமுடற் றந்து புகுத்துமென்றும் முரைப்பர்;
அம்ம விவற்றுள் ளுண்மை யறிவது
எம்மனோர்க் கில்லை; இவ்வுட லழிந்து
ஆருயிர் தானும் நீரொடு நீரும்
காற்றொடு காற்றும் ககனத் தநுவும்
கலந்திடு மென்பதும் கண்டிலன்; அன்றி,
இவ்வுல கிதுவே இருமையு மென்றும்
புண்ணியக் கின்பமும் புன்மைக் கல்லதும்
நண்ணுவ ததுவே நாடு நயமதனால்
விண்ணென் றொன்றிலையால் புண்டரு நரகின்று
லென்றெண் ணுவதோ; அன்றியிவ் வுலகில்
இன்ப மடைவதே இம்மையென் றெண்ணி
விழைவதோ, யெதுவோ, குழைமனத் தறிந்திலேன்.
புழைவள ரிரவுபோல் ஒழியா விளங்கும்
சன்மக் காட்டில் தவழ்ந்து
கன்மத் தொகையின் கணக்கிற் கேற்ப
எப்பிறப் படையினு மப்பிறவி தன்னில்
தப்பா துனையே தாயென வடைதர
ஈதோர் வரந்தா கோதிலென் றாயே!

(தாயின் காலில் வீழ்ந்து நமஸ்கரிக்கின்றான்.)

கிழவி.—(கண்ணீர் வடித்து) அந்தோ! என்ன இனிய மொழிகள்! என்னப்பனே! உன்னைவிட்டு என் கால் என்னைகொண்டு செல்ல எழவில்லை. இவ்விடமே உன்னோடு உயிர்மாய்ப்பனடா! என் குழந்

தலையிலடித்துக் கொன்றுவிடலாம். பிறகு அந்தப் புஸ்தகங்களை யெரித்துவிட்டு மற்றச் சாமான்களையும், அவனே ஒப்பிலாச்சிறப்பு வாய்ந்தவனென்று சொல்லுகிற அவன் மகளைக் கல்யாணம் செய்துகொள்ளலாம். நான் அதிகமாகப் பெண்களையே பார்த்ததில்லை. ஆனால் ஸைகோராக்ஸ் எவ்வளவு கிழவியாயும் அசங்கியமாயு மிருந்தாளோ அவ்வளவுபோல் முற்றிலும் மாறாய் இவள் யௌவனமாயும் அழகாயுமிருக்கிறாள். அவளுக்குநேர் எதிரிடை என்று வைத்துக்கொள்ள வேண்டியதுதான். மற்றப்படி அவளைப்பற்றி அதிகம் சொல்லவும் வேண்டுமோ என்றான். நல்லது அப்படியே செய்கிறோம். கிழவனைக் கொன்று அவன் பெண்ணைக் கவர்ந்து கொள்ளுகிறது நல்லதுதான் என்று சொல்லிக்கொண்டே அவ்வழி நடக்கையில் ஏரியல் ஓகோ இது மோசம்போலிருக்கிறது என்றாலும் இல்லாவிட்டாலும் எஜமானுருக்குத் தெரிவிக்க வேண்டியது கடமை என்று மனதில் ஞாபகமாக வைத்துக்கொண்டு, எப்போதும்போல இசைபாட வாரம்பித்து. உடனே இது என்ன ஆச்சரியம் என்று இருவரும் திடுக்கிட்டு நின்றார்கள். காலிபன் பின்னும் பயப்படாதேயுங்கள். இதுமாதிரி இன்னிசை இத்தீவிலெங்கு முள்ளதுதான். ஆயிரம் வாத்தியங்கள் ஒருங்கே தொனித்தாற்போல அனேகந் தடவை சப்தங் கேட்பதுண்டு. அதைக்கேட்டு விழித்தும், விழித்தபின் அதின் இனிமையினால் தூங்கியுமிருக்கிறேன். ஆகையால் பயப்படாதேயுங்கள். என்னுடன் வாருங்களென்று கூப்பிட்டுக்கொண்டு வழிகாண்பித்து முன்சென்றான்.

இனி, கப்பலினின்று மற்றொரு கூட்டத்தார் புயல் தப்பி கரையிலேறி யிருந்தார்கள். அவர்கள் நேப்பிள்ஸ் அரசனாய அலான்ஸோ, அவன் தம்பி ஸெபாஸ்டியன் மிலானில் பிரபுவாயிருந்த அன்டோனியோ இவர் மூவரும் தம்மைச்சேர்ந்த மற்ற சிப்பந்திகளுடன் வேறொரு புறத்திலிருந்தார்கள். எப்படி அரசன்மகன் பர்டினண்டு தன் தகப்பனிறந்துபோனானென்று வருந்திக்கொண்டிருந்தானோ, அவ்விதமே அரசன் தான்மட்டும்பிழைத்ததாயும், தன்மகன் பர்டினண்டு இறந்துவிட்டதாயும் நினைந்து, யாவருந் தேற்ற சிறிதும் தேறுதல் அடையமாட்டாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான்.

பிரபுக்கள் ஐயா நமக்கின்று ஒருநாள் வந்த கஷ்டம், வியாபாரிகளுக்கு என்றைக்குமுள்ளது. எத்தனை கப்பற்காரன் மனைவி, தன் மங்கிலியத்தைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கிறாள். இதுபோலவும் மற்றப்படி எவ்வெவ்வளவு கஷ்டம் ஜனங்கள் அனுபவிக்கிறார்கள். நாமட்டுமாவது தப்பிப் பிழைத்து இவ்வளவு சவுகரியத்தோடிருக்கிறோமேயென்று நாம் சந்தோஷப்பட்டுக்கொள்வதைத் தவிர செய்யக்கூடியது வேறொன்றுமில்லை யென்று தேறுதல் சொல்லிக்கொண்டிருந்தான். அரசன் அப்படிச் சொல்லியும், ஐயோ! இப்படிக் கஷ்டம் வருமாயின் ஆப்பிரிக்கா அவ்வளவு தூரத்தில் பிள்ளையைக் கொண்டுபோய் கல்யாணஞ் செய்து வைத்திருக்கவும் மாட்டேன். அப்படிச் செய்வித்த விடத்திலிருந்து வரும் வழியில் என் புத்திரனையும் இப்படிக் கடலுக்கிரையாகக் கொடுத்திருக்க மாட்டேனென்று பலவாறாகப் புலம்பிக்கொண்டிருந்தான். சிலர் ஐயனே, அஞ்சாதேயுங்கள். நாங்கள் பார்த்தவரை அவன் அலைகளோடு எதிர்த்து எதுந் தளர்ச்சியில்லாமல் நீந்திக்கொண்டிருந்தபடியால் உங்கள் புத்திரனுக்கு ஒரு கெடுதியும் வரவில்லை. இத்தீவிலேயே வேறு இடத்தில் வந்து கரையேறி யிருக்கக் கூடுமென்று தேறுதல் சொன்னார்கள். அப்படிச் சொல்லியுமின்றுந் தேறுதலடையாமல், பெற்ற மனம் பித்து என்பார்களல்லவா, பின்னுமவன் ஐயோ நேப்பிள்ஸ்க்கும் மிலானுக்குமரசனாகவேண்டுமென்று அருமையாய் வளர்த்த குழந்தையை இப்பொழுது எந்த மீன் விழுங்கித் தின்றுவிட்டதோ, என்று உலக வழக்கமெங்குமொன்றாதலால், அரசனும் பிள்ளையைப் பறிகொடுத்துவிட்டு ஒரு பெண்பிள்ளைபோல் கதறிக்கொண்டிருந்தான். அவன் தம்பி ஸிபாஸ்டியன் நான் அந்தப் பெண்ணை ஆப்பிரிக்காவில் கொடுக்க வேண்டாமென்றெத்தனையோ சொல்லியும் அங்கே கொடுக்கப்போய் இந்த பையனுந் தவறி, நாமிவ்வளவு தடுமாற்றத்தில் வரவேண்டியதாயிற்று என்று ஆறுதல் சொல்லவேண்டிய இடத்தில்நம்முள்ளும் அனேகர் தமக்குப் பிடிக்காத விஷயங்களையெல்லாம் இதுமாதிரி சமயங்களில் தம் பெருமை விளங்குவதற்காகச் சொல்வதுபோல் மிகவும் துக்கிப்பவன்போலப் பேசினான். பின்னர் அழுகிறவர்கள் தாமே அழுது ஓய்வதுண்டு. அப்படி, அலான்ஸோ வருத்தமெல்லாம் அழுது தொலைத்துவிட்டு, அழுதுதான் என்ன, இனி ஆகவேண்டிய விஷயங்களைப் பார்ப்போம், என்று எல்லோரும் சிறிதுதூரம் வந்து நாலாபுறமும் பார்த்தார்கள். என்ன இந்தத் தீவு மனித சஞ்சாரத்தைத் தவிர மற்றெல்லா விதமாயும் உதவும்போலிருக்கிறதே. உயிர் வாழவேண்டியன தவிர்த்து மற்ற எல்லாப்- பொருளுமிவ்விடம் கிடைக்குமென்று நம்புகிறேன் என்று சொல்லிச்சடாய்த்தமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில்

ஏரியல் இவர்கள் கண்ணுக்குக் காணாமல் ஆகாயத்தில் இன்னிசையுடன் பாடிக்கொண்டு இவர்கள் பக்கமாய் வந்தது. சாதாரணமாகச் செவிக்கினிய பாடல்களைக் கேட்டால் அனேகருக்கு நித்திரை வந்துவிடுவதுண்டு. ஆகவே பஜனைக்காரர் சிலர் இருந்தாற்போல் தூங்கிவிடுவது நாம் பார்த்திருக்கிறோம். இவர்கள் உடைந்த கப்பலிலிருந்து கஷ்டப்பட்டு நீந்திவந்து கரையேறின அலுப்பையும், சரீர சிரமத்தையும் உத்தேசித்து, பாடலினினிமையையும், அந்த நிர்மானுஷியமான காட்டில் வேறு சப்தமில்லாத விடத்திலுண்டான இனிமையினை இவ்வளவு என்று சொல்லவும்வேண்டுமோ. அவர்கள் அயர்ந்து தூங்கிவிட்டார்களென்று அதிசயிக்கவும் வேண்டுமோ? ஆகவே எல்லோரும் தூங்கிவிட்டார்கள். ஆனால் இருவர்மட்டும் தூக்கம்பிடிக்காமலிருந்தார்கள். அவர்களில் அன்டோனியோ ஒருவன். அவன்போலிருந்த ஸிபாஸ்டிய னென்ற நேப்பிள்ஸ் அரசன் தம்பி, மற்றொருவன். அன்டோனியோவைப்பற்றி முன்னமே நமக்குக் கொஞ்சம் தெரியுமல்லவா? தான் பட்டங்கட்டி ஆளவேண்டுமென்று தன்னண்ணனாகிய பிராஸ்பேரோவையும் அவன்குமாரத்தியையும், கடலிலனுப்பிவிட்டு, தன் தேசத்தை மற்றொருவனுக்குக் கீழ்ப்படுத்தி வைத்தவன். இப்பொழுது சிறிது சிறிதாகத் தான் கெட்டுப்போனது மட்டும்போதாது என்று மற்றவனையுங் கெட்டுப்போகத் தூண்டுதல் செய்ய வாரம்பித்தான். ஆகவே அவன் ஸிபாஸ்டியனை நோக்கிச் சொன்னான்.

உன் தலையில் ஒரு கிரீடமிருப்பதாக எனக்கு வெகு திண்ணமாய்ப் புலப்படுகிறது.

ஸிபாஸ்டியன் : என்ன நீயும் விழித்துக்கொண்டுதானிருக்கிறாயா? இல்லாவிட்டால் கனாக்கண்டு புலம்பிக்கொண்டிருக்கிறாயா?

அன்டோனியோ : ஆ! ஸிபாஸ்டியன் நீயல்லவா கண்கள் கொட்டைப்பிராந்துபோல் விழித்துக்கொண்டிருக்கையிலேயே தூங்கிவிடுகிறாய். பர்டினண்டு இறந்துவிட்டபடியினால் நேப்பிள்ஸுக்கு அரசன் இவருக்குப் பின் யார் என்று நினைக்கிறாய்?

ஸிபாஸ்டியன் : ஏன்! பர்டினண்டு போனால் கிளாரிபெல் என்கிற அவன் சகோதரி எங்கேபோனாள், அவள் பட்டத்துக்கு வருவாள்.

அன்டோனியோ : அடா பேதை கேள். கிளாரிபெல் டியூனிஸில் வாழ்க்கைப்பட் டிருக்கிறாளே. அவ்விடமிருந்து நாம் ஊர் போவதுக்குள்தான் இவ்வளவு தடுமாட்டமாய் விட்டதே. அவளாவது வந்து அரசாளவாவது, நீதான் அடுத்த படியிலிருக்கிறாய். இப்போ தூங்குகிறவர்கள் பெருந்தூக்கமாய் தூங்கிவிட்டால் நீ அந்த விடத்திற்கு வருவதற்கும் சந்தேகமோ? அலான்ஸோ இல்லாவிட்டால் வேறு அந்தவிடம் ஆளமுடியாது போய்விடுமோ. உலகமே முடிவுக்கு வந்துவிடுமோ என்று இன்னும் பலவாறாய் தன் மனதில் முன்னமே எண்ணங்கள் ஓடி எப்படித் துரோகஞ்செய்ய நேர்ந்ததோ அதேமாதிரி இவனுக்கும் தூண்டிக் கொடுத்தான். இதுமாதிரி தூண்டுதல் அனேகருக்கு வருவதுண்டு. ஆனால் உடனே தூண்டுதலுக்கு உட்பட்டு போபவர்கள் தக்க மனோதைரிய மில்லாதவர்களாயும், பிரயோஜனமற்றவர்களாயுங் கெட்டுப்போகிறார்கள். மற்றவர்கள், என்ன தூண்டுதலாயினும் அதற்குட்படாம லிருப்பதால் தடவைக்குத் தடவை நற்குண மிகுந்து ஒருவிதத் தூண்டுதலுக்கும் உட்படாமல் நல்லோராய் நன்மை யடைந்திருக்கிறார்கள். அலான்ஸோ முதலில் அவ்வளவு கெட்டவனல்ல ஆனாலும், சமயம் வாய்த்து தூண்டுதலும் வந்தபின்னர், அவனால் அதை ஜெயிக்க முடியவில்லை. அது மட்டுமல்ல. ஒரு தடவை கெட்டுப்போனவன் நாளுக்குநாள் அதிகமாகக் கெட்டுப்போய் பிறனையுங் கெடுக்குங் கெட்ட புத்தியுமுண்டாயிற்று. ஸிபாஸ்டியன் அன்டோனியோவினும் நல்லவன் என்பதற்குச்சந்தேகமேயில்லை. ஏனென்றால் அவன் மனதில் கிளாரிபெல் பட்டத்துக்கு வருவாள் என்று பட்டதே ஒழிய, எவ்விதத்திலும் எல்லாரையு மொழித்துவிட்டுத் தான் ஆண்டுவர வேண்டுமென்று ஆசை கிடையாது. என்றாலும், எல்லாரும் தூங்கும் சமயம், நிர்மானுஷியமான தீவு, உதவிக்கும் தூண்டுவதற்கும் ஒரு கெட்ட மனிதனுண்டானால் எவனும் கெட்டுப்போவதற்குத் துணிவதுண்டு. ஸிபாஸ்டியன் நற்குணத்திற்கு வேண்டிய வைராக்கியஞ் செலுத்தக் கூடியவனில்லை. ஆகவே அவன் தூண்டுதலுக்குட்பட்டு இருவரும் கத்தியை யுருவ வாரம்பித்தார்கள். அந்தச்சமயத்தில் ஏரியல் கோன்ஸாலோவின் காதில் நீங்களெல்லாம் தூங்கும்பொழுது துன்மார்க்கர் துர்நினைவு நினைக்கிறார்களே. உயிர்மேலாசையுண்டானால் உறக்கமெல்லாமுதறிவிட்டு, உடனே எழுந்திரு; மற்றவர்களையுமெழுப்பிவிடு என்று சொன்னது உடனே எல்லோரும் விழித்து எழுந்து பார்த்தார்கள். அலான்ஸோ இதுவென்று கேட்க நெஞ்சுத்துணிவுடன்.

ஸிபாஸ்டியன் —ஐயா தாங்கள் சவுகரியமாய்த் தூங்கும்படி நாங்கள் காத்திருக்கும்போது, கரடிகளும், புலிகளும், சிங்கங்களும் வருவதுபோல் பெரியகர்ச்சனை ஒன்று கேட்டது. உடனே உருவின கத்தியோடு நிற்கிறோம்.

மாணவர் பக்கங்கள்
STUDENTS' PAGES
வியாஸ விதானம்
Essay writing
IV. ஆராய்ச்சி வியாஸங்கள்
REFLECTIVE ESSAYS
இலக்கிய விஷயங்கள்—கம்பர்
Literary Subjects—Kambar

குறிப்பு:—முகவுரை : காலம் முதலியன—அலங்காராதிகள் முதலியன—விஷய ஒழுங்கு—வாக்சாதுர்யம் முதலியன—முடிவு: சிறப்பு.

கம்பர் என்ற பெயர் இந்தக் கவிசக்கிரவர்த்திக்குத் தாம் பிறந்த நாட்டினளவாக வந்ததென்று தோற்றுகிறது. இதற்கேற்பவே 'கம்பநாட்டாழ்வார்' என்றும் 'கம்பநாடுடைய வள்ளல்' என்றும் இவர் புகழப்பட்டிருக்கிறார். இப்பெயர் ஏகாம்பர புறமாகிய காஞ்சீபுரத்தின் சிதைவு என்று மதிக்கப்படுகிறது. ஆகவே காஞ்சிபுரத்தில் பிறந்தவர் இவர் என்பது பெறப்படும். இவர் பின்னர் தெற்கே சென்று கல்வி பயின்று மேன்மை அடைந்தவர். இவர் ஸுமார் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே செழித்தவர் என்று அநேகவித முகாந்திரங்களால் வெளியாகின்றது. நம் நாட்டவர் பொதுவாகத் தமது நூல் முதலியன உலகிற்கு உபயோகப்பட்டால் போதும், தமது விஷயங்கள் நீடித்து நிற்கவேண்டியதில்லை என்ற அமைதியான எண்ணங்கொண்டவராதலால் தமது காலம், சரித்திரம், சிறப்பு முதலியவைகளை நூலைவிட்டு வேறாகக் கண்டறியக்கூடிய சரித்திராதிகளுக்கு இடங்கொடுக்காமல் போய்விட்டனர். ஆதலால் நம் பெரியோரது சரித்ரவிஷயங்கள் அநுமானாதிகள் மூலமாக ஒருவாறு நிச்சயிக்கப்பட்ட பொதுவாக அவர்களைப்பற்றி வழங்கிவரும் அத்புதக் கதைகள் பொருத்தமுடையனவா, அல்லவா என்று மதிக்கலாம். இதைத்தவிர வேறு உறுதியாக ஒருவிஷயத்தையும் கூற முடியாது. ஆதலால் இப்போது விஷயத்தை இச்சருக்கத்தோடு விட்டு கம்பர் செய்துள்ள நூலில் வெளியாகும் சிறப்பை ஆராயப் புகுவோம்.

கம்பர் சொற்சுவை பொருட்சுவை ஆகிய இவ்விரண்டும் நிறைந்த கவி. இதனாலேயே 'கல்வியிற் பெரியர் கம்பர்' என்பது இலக்கணத்தில் ஐந்தாம் வேற்றுமை எதுப்பொருளுக்கு உதாரணமாகி ஒரு பழமொழிபோல வழங்கத் தொடங்கிவிட்டது. இவர் அலங்காரங்களை வெகு நேர்த்தியாக உபயோகப்படுத்தி வாசிப்பவர் மனதை எளிதில் கவருவார். தன்மை என்ற ஒரு அணி உள்ளது. அதன் லக்ஷணம் உள்ளதை உள்ளவாறு வாசிப்பவருக்கு விளங்கும்படி இயற்கைப்பொருள்களை வர்ணிப்பதே. இவ்வணியின் சிறப்பு:—

மிதித்தது மெல்ல மெல்ல, வெறித்தது, வெறும்மீதில்
குதித்தது செவியை நீட்டிக் குரபதம் உரத்திற் கூட்டி
உதித்தெழுவமுதை உள்ளம் என்றிவைஉருவச்செல்லு
கதிக்கொரு கல்விவேறே காட்டிய தொத்ததன்றே. [ம்

என்று மாரீச மான் செயலைக்கூறி மான்கள் இயற்கையை உள்ளபடி வர்ணித்ததில் நன்கு வெளிப்படும். தற்குறிப்பேற்றம் என்ற அணியின் அழகை.—

மய்யறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தாள் என்று செழுமணிக்கொடிகளென்
கய்களை நீட்டி அந்த கடிநகர் கமலச் செங்கண் [ணும்
அய்யனை ஒல்லைவாவென் றழைப்பது போன்றமாதோ.

என்று மிதிலைக்காட்சிப்படலம் முதற்செய்யுளில் ராமர் வரும்பொழுது அடிக்கும் அநுகூல காற்றால் எற்படும் கொடி அசைவைப் பொருட் படுத்திவிளக்குகிறார். எதிர்காற்றின் பொருளை இம்மாதிரியே வில்லிபுத்தூராழ்வார் வெளிப்படுத்துவதை உத்யோக பர்வம் வாஸுதேவனைப் படைத்துணை அழைத்த சருக்கசெய்யுளில் காணலாம்.

ஈண்டுநீ வரினும் எங்கள்
        எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லாற்
        படைத்துணை யாக மாட்டான்
மீண்டுநீ போகென் றென்று
        அவ்வியன் மதிற்குடுமிதோறும்
காண்டகு பதாகை யாடை
        கைகளால் தடுப்ப போன்ற.

இங்கு துர்யோதனன் பகவானைச்சண்டையில் ஸஹாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ள த்வாரகை நோக்கி வருகையில் எதிர்காற்றில் ஆடும் கொடிகள் கருத்து எடுத்துக் காட்டப்பட்டது. இதுபோன்ற பொருள் நிறைந்த தற்குறிப்பேற்றம் வேறெங்கும் அதிகமாகக் காணப்படுவதில்லை.

உவமையில் காளிதாஸன் சிறந்தவன் என்பது வடநூலோர் துணிபு. கம்பர் அத்தகையவர் தமிழில். இவர் உவமை மிகப்பொருத்தமாகவும், ஸாதாரண தர்

மங்கள் அநேக விஷயங்களில் பொருந்தி யிருப்பனவாகவும் காணப்படும்.

* * * *

விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்.

என்று விச்வாமித்ர யாகஸம்ரக்ஷணம் வர்ணிக்கப்பட்டுள்ளது. இதை வெகு விஸ்தாரப்படுத்தி வ்யாக்யாதாக்கள் கூறுவர். யாகசாலை கண் வெள்ளை விழி, அதிலிருக்கும் ஹோமகுண்டம் கருவிழி, ராமலக்ஷ்மணர்கள் மேலிமைகீழிமைகள், அவர்கள் அம்புகள் இமைமயிர்கள், மேலிமை கண்ணைக் காப்பதுபோல் ராமர் யாகசாலையைச் சுற்றிக்கொண்டும், கீழிமைபோல லக்ஷ்மணர் ஓரிடத்தில் நின்றுகொண்டும் காத்தனர் என்ற இம்மாதிரியான பூர்ணப் பொருத்தம் இவ்வுவமையில் உள்ளது. இதுவுமன்றிக்கண்ணைப்போல எண்ணியாகத்தை ராமலக்ஷ்மணர்கள் காத்தனர் என்ற பொதுப்பொருளையும் இது கொடுக்கும். இம்மாதிரியே அநேக உவமைச் செய்யுள்கள் கம்பரிடம் காணப்படும். இல்பொருளுவமையைத் தகுந்தவிடத்தில் இவர் உபயோகிக்கிறார்.

கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தியே டவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன்.

என்றபாட்டு பகவான் கஜேந்த்ராப்தியில் தேவர்கள் முன் தோன்றுவதை வர்ணிக்கையில் அமைந்துள்ளது.

உவமையில் உபமானம் தெரிந்த பொருளாயும் உபமேயம் தெரியாத பொருளாயும் இருந்து ஸாதாரண தர்மத்தால் விளங்குவதாக விருக்கவேண்டும். கம்பர் சிற்சில விடங்களில் இதை மாற்றி உபமானத்தை நேரிடத் தெரியாத அரிய விஷயமாயும், உபமேயத்தை அறியக்கூடிய விஷயமாயும் அமைத்து உபமானத்தின் விஷயமான ரஹஸ்யத்தை நன்கு வெளிப்படுத்துகிறார். இதிலிருந்து கம்பர்அந்தரங்க அபிப்பிராயங்களும்மனோநிலையும் வெளியாகும். தாடகை வதத்தை வர்ணிக்குங்கால்

சொல்லொக்கும் கடிய வேகச்சுடுசரம் கரியசெம்மல் [றக்
அல்லொக்கும் நிறத்தி னாள்மேல் விடுதலும் வயிரக் குன்
கல்லொக்கும் நெஞ்சிற் றங்கா தப்புறங்கழன் றுகல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்னபொருளெனப் போயிற்
[றன்றே.

'இதில் இழிவானவர்களுக்குச் செய்யும் உபதேசத்தின் கதி நன்கு விளங்குகிறது. அதன் மூலமாக ராமபாணச் சிறப்பு வெளிப்படும்.

வரைக்காட்சிப் படலத்தில் தசரதர் தேர் சந்திர சைல மலைச்சாரலில் வந்தபொழுது சக்கிரத்தின் சுற்றுகட்டு பொன்னாக விருந்ததால் அடியிலிருந்தபாறைகள் பொன்மயமாகி ப்ரகாசித்ததை வர்ணிக்கையில்,

தெருண்ட மேலோர் சிறியவர் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும்பொன்னுரு ளுரைத்துரைத்
திருண்ட கல்லையும் தன்னிறமாக்கிய விரதம் [தோடி

என்று கூறிப் பெரியோர்கள் சிறப்பை நன்கு விளக்குகிறார்.

பொதுவாக ஜனங்களுக்கு இருக்கும் மதத்வேஷத்தை நீக்கி மற்ற மதங்களை நன்கு மதித்து தம் மதத்தையும் விடாது விருத்தியடைவதற்கு வேண்டிய ரஹஸ்ய ஞானத்தை, கம்பர் உலாவியற் படலத்தில் ஸ்ரீராமர் ஆனந்தபவனி வருகையில் காட்சி வைபவத்தை வர்ணிக்குங்கால் தமது விசேஷ உபமானம் ஒன்றால் வெளிப்படுத்துகிறார்.

தோள்கண்டார் தோளே கண்டார்
        தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
        தடக்கைகண் டாரு மஃதே
வாள்கண்ட கண்ணார் யாரே
        வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னான்
        உருவு கண்டாரை யொத்தார்.

இதை வாசிக்கும்பொழுது 'ஸமயகோடிகள் எல்லாம் தன்தெய்வ மென்தெய்வ மென்றெங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றதெது' என்ற அருள்வாக்கு ஞாபகம் வாராமல் போய்விடுமா? சிறப்பாகச் சைவ வைஷ்ணவ ஸம்பந்தமாக ஜனங்களுக்கு ஏற்படும் பேதபுத்தி த்வேஷபுத்தி மஹாபாபம் என்பதைக் கிஷ்கிந்தாகாண்டம் நாடவிட்ட படலத்தில்,

அரனதிகன் உலகளந்த அரிஅதிகன்
        எனஉரைக்கும் அறிவலார்க்குப்
பரகதிசென் றடையவரிய பரிசேபோல்
        புகலரிய பண்பிற்றாமால்
சுரநதியின் அயலதுவான் தொடுகுடுமிச்
        சுடர்த்தொகையை தொழுவோர்க்கெல்லாம்

வானதிகம் தரும்தகைய தருந்ததியா
நெடுமலையை வணங்கியப்பால்.

என்ற உபமானத்தால் நன்கு விளக்குகிறார். இம் மாதிரி உவமை யலங்காரத்தை அரிய ரஹஸ்யத்தை வெளிப்படுத்த கம்பர் அடிக்கடி உபயோகப்படுத்துகிறார்.

இனிக் கதை எடுத்து நடத்தும் அத்புதம் கம்பரிடத்தில் மிக ஏராளமாக உண்டு. ஆதி கவியாகிய வால்மீகி எழுதிய ராமாயணத்தில் ஸாதாரணமாக நேர் கதையாக ஒழுங்காகக் கூறப்பட்டவைகளை எல்லாம் நாடக ஒழுங்குக்கேற்ப சற்று மாற்றி யமைத்து வாசிக்கும்போதே மேல் என்ன வரப்போகிறது என்ற நீங்கா ஆவலைப் படிப்போர் மனதில் உண்டாக்குகிறார் கம்பர். புத்ர காமேஷ்டியைப்பற்றி வஸிஷ்டரிடமிருந்து தசரதர் தெரிந்துகொள்ளுங்கால், அவர் மனத்தில் தோன்றிய தேவரஹஸ்யம், ஜனகஸபை போனதும் விச்வாமித்ரர் ராமர் குலமுறையை வெளியிட்டதும் சிவதனுஸை எடுக்க வேலையாட்கள் போனபொழுது ஸீதையின் குலமுறை வெளியிடப்பட்டதையும், ராமர் விவாஹத்திற்கு முன்னர் நடந்த விஷயங்களை விரிவாக வர்ணிக்கும் 7 படலங்கள் விஷயங்களையும் பரதர் அயோத்திக்குத் திரும்ப தேவர்கள் இடைநின்றதையும், சாபங்கர் பிறப்பு நீங்கும் முன் இந்திரன் ஸ்ரீராமரைத் துதித்ததையும், ராவணன் பூமியோடு பெயர்த்து ஸீதையை எடுத்துச் சென்றதையும், வாலி கேள்விகளின் வீர்யத்தையும், ஸம்பாதிக்கு இறகு முளைத்த விதத்தையும், ஸுந்தர யுத்த காண்டங்களிலுள்ள சிறு கதை மாறுபாடுகளையும், விபீஷணர் ராவணனைவிட்டுப் பிரியும் முன் அவனுக்கு இரணியன் கதையைக் கூறியதையும் வாசிப்போருக்குக், கம்பர், கவிகளுக்கு ஏற்பட்டுள்ள கற்பனுசக்தியை உபயோகித்து, மற்றைய ராமாயணங்களுக்கு ஏற்ப ராம கதையை மாற்றி வாசிப்பவர்களுக்கு வியப்பையும் ராமபக்தியையும் அதிகப்படுத்துகிறார் என்பது வெளியாகும்.

இவர் வாக்சாதுர்யம் ராமாயணத்தில் அநேகவிடங்களில் அநேக விதங்களில் வெளியாகிறது. முக்கியமாக இரட்டுற மொழிதல், சமத்காரம், த்வனி முதலியவைகள் மூலமாக இவை நன்கு வெளிவரும். இவ்விஷயங்கள் அமைந்துள்ள பாகத்தைப் பின்வரும் பாக்களில் தடித்த எழுத்திலிடப்பட்டிருக்கின்றன.

இருபொருள் படும்படியாகக் கூறுவது மாரீசன் வதைப்படலத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள பாடல்களில் காணலாம்.

இந்திரன் சசியைப்பெற்றான் :
இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்;
தாமரைச் செங்க ணானும்
செந்திரு மகளைப் பெற்றான் :
ஸீதையை பெற்றாய் நீயும்,
அந்தரம் பார்க்கில் நன்மை
அவர்க் கிலை உனக்கே ஐயா !

பாகத்தில் ஒருவன் வைத்தான் :
பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான் :
அந்தணன் நாவில் வைத்தான் :
மேகத்தின் மின்னை முன்னே
வென்றநுண் ணிடையை நீயம்
மாகத்தோள் வீர பெற்றால்
எங்ஙனம் வைத்து வாழ்வாய் ?

பிள்ளைபோல் பேச்சி னாளைப்
பெற்றபின் பிழைக்க லாற்றாய்
கொள்ளைபோ கின்ற செல்வம்
அவளுக்கே கொடுத்தி ஐய !
வள்ளலே உனக்கு நல்லேன்,
மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க்கெல்லாம்
கேடுசூழ் கின்றே னன்றே.

தூய தவங்க டொடங்கிய தொல்லோன்
யயவன் வல்விலி ருப்பதன் முன்னம்
சேயிழை மங்கையர் சிந்தைதொ றெய்யா
ஆயிரம் வில்லை அனங்கனிறுத்தான்.

வாச்சமத்காரம் பின்வரும்பாட்டுகளில் விளங்கு

தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்ததும் நாணுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினின் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்.

விழிக்கும் கண்வே றில்லாவெங்கான்
என்கான் முளையைச்
சுழிக்கும் வினையால் ஏகச்சூழ்வாய்
என்னைப் போழ்வாய்
பழிக்கும் நாணாய் மாணுப்பாவி
இனியென் பலவுன்
கழுத்தின் நாணுன் மகற்காப்
பின்நான் என்றான்.

ஒருவன் கஷ்டப்பட்டபோதிலும் அதனால் அநேகருக்கு நன்மை உண்டாகுமானால் அதை அவன் ஸுகமாகவே ஏற்கவேண்டும் என்ற ரஹஸ்ய தர்மத்தைத் துக்கப்படும் ஸீதைக்கு ஹனுமார் எடுத்துக் கூறித் தேற்றுவதாக,

சின்னாள் நீயிடர் தீராதாய்
இன்னா வைகலி னெல்லோரும்
நன்னாள் காணுதல் நன்றன்றோ
உன்னால் நல்லறமுண்டானால்

என்ற பாட்டால் வெளியிட்டிருக்கிறார். இந்த எண்ணம் எக்காலத்திலும் மேன்மையுடையதாக ஓங்கி நிற்பது. இதைக் கம்பர் நன்கு அனுபவித்தறிந்து நல்ல ஸந்தர்ப்பத்தில் தமது நூலில் புகுத்துத் தமது கவித்திரத்தை நன்றாக வெளிக்காட்டி யிருக்கிறார்.

கம்பர் தமது காலத்தில் தாம்கற்ற நூல்களின் கருத்தை தழுவி அநேக விடங்களில் ராமாயணத்தில் பாடல்கள் அமைத்துள்ளதால், அதை வாசிப்போருக்கு அவை பழமொழிபோல் உள்ள பெரியோர் வாக்குக்குத்தகுந்தபடி விவரித்து பொருள் தோன்றச் செய்து சந்தோஷப் படுத்தும். கவி சக்ரவர்த்தியாகிய கம்பர் வேறு சில நூல்கள் எழுதியிருந்தபோதிலும் ராமாயணம்போல அவைகள் ப்ரஸித்தி பெற்றவைகளல்ல. இந்த ராமாயணமொன்றிலேயே அவர் தம் திறனைப்பூர்ணமாகக் காட்டி தமது மதத்வேஷமில்லாத விஷ்ணுவாராதனத்தை விளக்கி தாம் இக்காலத்திய ஸ்மார்த்தர்கள் மதத்தைச் சேர்ந்தவர் என்பதை நன்றாகக் காட்டி விட்டார். இவர் பிறந்தது சைவத்தில் என்றும் அதனால்தான் இவருக்குக் கம்பர் என்றும் இவர் பிள்ளைக்கு அம்பிகாபதி என்றும் உள்ள பெயர்கள் அமைந்தனவென்றும், பின்னர் விஷ்ணு பக்தி பரவசராகிய இவர் பரம அத்வைத மதத்தவராது நடுநிலைக்கு வந்தனர் என்றும் இவர் சரித்திரங்களிலிருந்தும், இவர் செய்யுள்களிலிருந்தும் நன்றாக வெளியாகும்.

இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்:—

1. ஒட்டக்கூத்தர்	6. காளிதாஸன்
2. புகழேந்தி	7. பவபூதி
3. திருவள்ளுவர்	8. அப்பையதீக்ஷிதர்
4. ஔவை	9. வால்மீகி
5. வில்லிபுத்தூரார்	10. வ்யாஸர்

1. முகவுரை காலம் பெயர் முதலியன.
2. அலங்கார அமைப்பு முதலியன.
3. பொருட்சுவையாகிய வாக் சாதுரியம் முதலியன
4. முடிவுரை சிறப்பு.

மொழிபெயர்ப்பு விளக்கம்
Translation Models

Destroying enemies.

A Chinese Emperor was told that his enemies had raised a rebellion against him in one of his distant provinces. 'Come, then, my friends', said he, 'follow me, and I promise you that I will quickly destroy them.' He marched against them, but they submitted on his approach. All now expected that he would take the most signal vengeance upon them. Instead of doing so, however, the captives were treated with kindness and calmness, 'How!' exclaimed his chief minister, 'Is this the way you fulfil your promise? You gave your royal word that your enemies should be destroyed; and behold, you have pardoned them all and even bestowed favours upon some of them.' 'I promised,' replied the Emperor, with a generous air, 'to destroy my enemies, and I have kept my word, for see, they are enemies no longer; I have made friends of them." Like this Emperor, let us learn 'to overcome evil with good', and destroy our enemies by changing them into friends by kindness.

எதிரிகளை அழித்தல்

தூரத்திலிருந்த தன்னைச்சேர்ந்த மாகாணங்கள் ஒன்றில் தன் எதிரிகள் கலகம் தொடங்கிவிட்டனர் என்று ஒரு சீனசக்கிரவர்த்தி கேள்விப்பட்டான். 'ஆனால் ஸரி, தோழர்களே! புறப்படுங்கள். என்கூடவே வாருங்கள். நான் அவர்களை அழித்துவிட்டே மறுவேலை பார்ப்பேன்' என்று அவன் உறுதிமொழி கூறினான். அவன் எதிரிகள்மேல் படையெடுத்துச் செல்ல, அவர்கள் அவன் நெருங்கியதும் அடங்கிவிட்டார்கள். அவர்களை அவன் நன்றாகப் பழிவாங்கிவிடுவான் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவ்வாறு செய்வதை விட்டு பிடிபட்டவர்களை அன்பாகவும், அமைதியாகவும், நடத்தினான் சக்கிரவர்த்தி. இதைக் கண்ட முதல் அமைச்சன், 'என்ன இது? இது தானா உமது வாக்குறுதிப்படி நடப்பது? உமது ராஜ வாக்கால் எதிரிகளை அழித்துவிடவேண்டும் என்று கூறிவிட்டீரே! இதோ பாரும், அவர்களை மன்னித்துவிட்டீர், போதாதென்று அவர்களுள் சிலருக்கு வெகுமதியும் அளித்துவிட்டீரே!' என்று வியப்புடன் கேட்டான். அதற்குச் சக்கிரவர்த்தி, 'ஆம், நான் எதிரிகளை அழித்துவிடுவதாகத்தான் வாக்களித்தேன்! அதன்படியும் செய்துவிட்டேனே! நீயேதான் பார், இங்கு விரோதிகள் ஒருவருமில்லையே! இங்கு எல்லோரும் எனக்குத் தோழர்களாகிவிட்டனர்' என்று பெருந்தன்மையோடு மறுமொழி சொன்னான். கெடுதியை நன்மையால் அடக்கவும், எதிரிகளை அன்பால் அழித்துத் தோழர்களாக்கவும் இந்தச் சக்கிரவர்த்தியைப்போல முயலுவோமாக.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்தியாயம் 14

சாஸ்திரி வேலையில் புகுதல்

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும் அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை.

சாஸ்திரிகளுக்கும் நாராயணய்யருக்கும் நடந்த ஸம்பாஷணையை அதிகமாக விஸ்தரிக்கவேண்டியதில்லை. சுருக்கிச் சொல்லுமிடத்தில் முடிவில் ஸ்ரீனிவாஸனைக் கண்டுபிடித்து நல்வழிக்குக் கொண்டுவந்து அவனைப் பெண்சாதியுடன் சேர்த்துவைக்கும் வேலை சாஸ்திரிகள் தலையில் விழுந்தது. இந்த சாந்த புருஷனைத் தவிர இவ்வேலையை முடிக்க வல்லார் ஒருவருமில்லை, என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். அன்றைக்கே இந்த யாத்திரையில் புறப்பட்டு விடுவதாகச்சாஸ்திரி தீர்மானித்துவிட்டார். உடனே ருக்மிணியைத் தனிமையில் அழைத்து முன்னாள் இரவு அவளுக்கும் அவள் கணவனுக்கும் நடந்தவைகளை எல்லாம் விடாது சொல்லும்படி கேட்டார், வாஸுதேவ சாஸ்திரி.

ருக்மிணி கூறலுற்றாள். "வீட்டிலுள்ளோர் எல்லோரும் படுக்கச்சென்று சப்தம் எல்லாம் அடங்கி வெகு நாழிகைவரையில் அவர் என்னிடம் வரவில்லை. அந்தத் திருட்டு வித்தன் வாயிற்படியிலேயே பழியாகக் காத்துக் கிடந்தார். அவரிடம் இரண்டு மூன்று தரம் அணுகிக் கண்ணும் கண்ணீருமாக படுக்க வரவேண்டும் என்று நான் மன்றாடினேன். அதற்குக் கைம்மாறாக எனக்கு வசவுதான் கிடைத்தது. நான் விடாது கெஞ்சத் தொடங்கிவிட என்னை அவர் காலால் உதைத்துத் துரத்தினார். நான் அழுது கொண்டே என் அறை வந்து சேர்ந்தேன். உடனே வித்தர் உள் கதவு திறந்த சப்தம் கேட்டது. கொஞ்ச நாழிகைக்கெல்லாம் கையில் ஒரு வீஸாவை மறைத்துக்கொண்டு என் கணவன் வந்து சேர்ந்தார். நான் கீழேபோய் எங்கே வீட்டைக்கலக்கி விடுவேனோ என்று பயந்தே அவர் என்னிடம் வந்து விட்டார் போலிருந்தது. என்னருகில் வந்து உட்கார்ந்து என்னைக் கண்கொட்டாது வெறித்துக் கொஞ்சநாழிகை பார்த்துவிட்டு என்னை வாயில் வந்தபடி எல்லாம் வைது கொட்டிவிட்டார்.

"இதற்கு 'உமக்கு நான் பெரும் தடையாக விருக்கிறாற்போலிருக்கிறது. என்னைக் கண்டால் ப்ராண வைரியைக் காணுவது போலத் தோற்றுகிறதோ? ஆ தெய்வமே! என்றைக்கு என்னை உமது பாதாரவிந்தங்களில் சேர்த்துக்கொள்ள உமக்குத் திருவுளமிரங்குமோ!' என்று வெறுப்புடன் கூறினேன். 'ஆம், ஆம்! நீ தான் எனக்கு உண்மையான விரோதி. நீ இல்லாவிட்டால்—' என்று கூறித்தயங்கினார். 'இந்தக் கொடிய தான்தோன்றி வித்தனுடன் நீங்கள் ஓடிப்போயிருப்பீர்கள்' என்று நான் பூர்த்திசெய்து விட்டேன். 'என் குருவை யேன் வைகிறாய்? பாபீ! திருடி!!' என்று கோபத்துடன் கூறி என்னை மறுபடியும் உதைத்தார். 'நான் உண்மையாக ஓடத்தான்போகிறேன்? யார் என்னைத் தடுப்பார்கள் பார்ப்போம். துக்கம் நிறைந்த இவ்வுலகில் உன்னைப்போன்ற கெட்ட கழுதைகளைக் கட்டிக்கொண்டழுவதைவிட காட்டிற்கு ஓடிப்போய் எங்கேயாவது ஒருவர் கண்ணிலும் படாது இறப்பதே மேல்; என்று மிகுந்த பரபரப்புடன் அவர் பொழிந்து விட்டார். துக்கமும் பயமும் என் வாயை அடைத்துவிட்டன. நான் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. 'நான் சொன்னபடி நடத்திவிடுவேனா என்ன? எனக்கு அவ்வளவு தெரியாதா? நீ அழாதே' என்று என்னை அவர் பின்னர் தட்டிக்கொடுத்து ஸமாதானப்படுத்தினார். நாங்கள் கடிந்து பேசியதன் காரணவிஷயங்களைப்பற்றிப் பேசி ஸமாதனப்பட ஸுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. ஒருவாறு இருவருக்கும் மனம் ஒப்பிவந்ததும், கையிலிருந்த கண்ணாடி வீஸாவைத் திடீரென்று எடுத்து 'நல்ல தூக்கம் உண்டாக்கும் மருந்து, ராத்திரி நாழிகை அதிகமாகிவிட்டது. நல்ல தூக்கமும் வரவேண்டும். ஆதலால் தான் நான் இதைக் குடிக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டே அதைக் கொஞ்சம் குடித்து, எனக்கும் கொஞ்சம் கொடுத்தார். நானும் குடித்தேன். கொஞ்ச நாழிகை யானதும் ஒருவிதமான மயக்கம் வந்து என்னைத் தூக்கத்தில் மூழ்த்திவிட்டது. எனக்குப் பின்னர் ஒன்றும் தெரியாது. வீட்டில் உண்டான குழப்பத்தில் விழித்துப் பார்ப்பேனோ! அவர் போய்விட்டது உடனே தெரியவந்தது. இனிமேல் நான் கதியற்றவளாகிவிட்டேன். இனிமேல் சாவைத்தவிர வேறென்ன எனக்கு வேண்டியிருக்கிறது. நாலைந்து நாளைக்குள் அவர் வந்து சேராவிட்டால் என் உயிரை மாய்த்துக் கொள்ளுவேன். அவ்வளவுதான்' என்று கூறி முடித்தாள் ருக்மிணி.

'ஒரு பக்ஷத்திற்குள் எப்படியாவது அவனை அழைத்து வந்துவிடுகிறேன். நீ தேறியிரு' என்று ஸமாதானம் கூறிவிட்டு, அன்றைக்கே தன் வேலைமேல் கிளம்பிவிட்டார் சாஸ்திரி. இரவு 12-மணிக்கும், 3-மணிக்கும் இடையில் மதுரையை விட்டுப் போகும் வண்டி வடக்கு நோக்கியே போய்க்கொண்டிருந்ததால், ஸ்ரீநிவாஸன் அதிலேதான் போயிருக்க வேண்டும் என்று ஆராய்ந்து உணர்ந்து சாஸ்திரி அடுத்த வடக்குநோக்கிப் போகும் வண்டியில் புறப்பட்டு விட்டார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ருக்மிணி அல்லது பக்திநிலை

பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

"இப்பொழுது பார்த்தால்தான் தாங்கள் நாரதர் போலிருக்கிறீர்கள். மறுபடியும் சொல்லுகிறேன்: அந்தக் குரங்கை என்னசெய்கிறேன் பாரும்."

"இப்பொழுதுதான் எனக்கென்னுயிர் வந்தது. இனி எனக்கென்ன குறை. தாங்கள் மஹாபலவானாகி யாவரையுங் காத்து ரட்சிக்கும் பெருமை வாய்ந்தவரிருக்க எனக்கென்ன குறை."

* * * *

பவழந்தவழத் தனது கதிர் விளக்கி வரும் இளஞ் சூரியனது கிரணங்கள் தெருவெங்கும் பதிந்து விளங்கியது. யாதவர்தலைவன், எம்பெருமான் அன்று ஆயர்பாடியில் வெண்ணைத்தயிருண்டு அடியுண்டு பாலலீலையில் விளங்கியவாறு, இன்று தன் மனைவியரது இல்லந்தோறும் சாரலீலையிற் பதிந்து தன்னுசை நாயகிகளின் கள்வாய் அமுதம் தன் கனிவாயிற்பதிந்து கருத்தொருமித்து விளங்கிய கோலங் களைந்து, தன் ஆஸ்தான மண்டபத்து வந்து எறினர். யாவரும் அங்கு வருவதன் முன்னமே காத்திருந்த நாரதர் தம்பிரான்முன் தன் தலையை நீட்டினார். அமலனும் தனது செந்தாமரை முகத்தில் சிறு நகையைக் காட்டினார். மேலும் திருவாய்மலர்ந்தனர்:—

"வாரும் வாரும்! தாங்கள் நெடுநாழிகை காத்திருந்தீர். யான் வருவதற்குத் தாமஸமாய்விட்டது. என் அன்பரது மனந்துடிக்க அவர் காத்திருக்க எனக்கு மனம் ஒப்புவதில்லை. அதிலும் தம்போன்ற பெரியார் ஆப்த நேசர்களாகியவரிடத்தில் யான் முன்னமே வராது செய்த அபசாரத்தை மன்னிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"தமது உருவம் ஓர் சடமாகிய சரீரத்திற்குள் புகுந்து விளையாடுவதுபோல் செய்யும் தமது மாயைக்கென்ன குறை? தங்களைக் காண இங்கும் வரவேண்டுமோ? தாங்களிங்கு செய்யும் பலவற்றி லொன்றியும் ஒன்றிற் பலவாயுங் காணும் லீலையைக் காணவே இங்கு வந்தேன். தன்யனானேன். ஒன்றுமறியாத இப்பேதையிடம் தாங்களிவ்விதங்கூறல் தகுமோ? தயவுசெய்து என்னிடம் அன்புகொண்டு இவ்வாறு கூறாது அருள்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

"அது கிடக்கட்டும். நான் கூறியது என்னவாயிற்று?"

"என்னவாயிற்று? அது தானே தெரியும்."

"என்ன தெரியும்?"

"தாங்கள் எண்ணிய விதமே."

"நான் எண்ணிய விதமா?"

"ஆம் அப்படியே."

"என்ன அது?"

"இன்னம் கொஞ்ச நேரத்திற்குள் தெரியும்."

"நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே. என் அன்பன் அவ்வனுமானை அழைத்து வந்தீரா?"

"தாங்கள் கூறியதொன்றாவது நான் தவறியதுண்டோ?"

"ஆனால் ஹனுமாரிங்குவந்து விட்டாகியது."

"இன்னமிங்கு வரவில்லை.—இனி வருவார்."

இவ்வாறிவர் பேசிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் கால் நடுங்க கை நடுங்க ஒன்றும் தெரியாது மயங்கி கிடுகிடுவென்றோடிவரும் சப்தம் கேட்டது. "அது யார்? ஹனுமாரா?" என்றார் கிருஷ்ணர்.

"என் அவ்வளவு கவலை? தங்களுக்குத் தெரியாதது போல் என் இந்த வேஷம்?" என்றார் நாரதர்.

"யாரோ தங்களைக் காண வந்திருக்கிறார்" என்று வந்துரைத்தனன் வாயிற்காப்போன்.

"உள்ளே விடு" என்றார் எம்பெருமான்.

அவரும் வந்தார்.

"யார் அது? நன்றாகத் தெரியவில்லை—அண்ணா! என்ன இந்த கோலம்? யாரோ வருவதாக வல்லவோ சொன்னான் வாயிற்காப்போன். உமது அடையாளமே தெரியவில்லை. நேற்றைக்குள் என்ன விபரீதம் வந்துவிட்டது. என்ன அண்ணா ஸமாசாரம்? என் இப்படி மயங்கி ஓடிவந்தீர்? எனக்கு மிகவும் ஸங்கடமாக இருக்கிறது. தயவுசெய்து சொல்லும். இங்கு உட்காரும்—" என்று தான் எழுந்து தனது ஆஸனத்தைப் பலராமனுக்களித்து தான் நின்றுகொண்டு அவர்க்கு உபசாரம் செய்துகொண்டிருந்தனர்.

"யாரிவர்? இவர்க்கென்ன உடம்பு? என்ன கஷ்டம் வந்துவிட்டது இவர்க்கு?" என்றார் நாரதர்.

"இவர் உமக்குத் தெரியவில்லையா? என் முன்னோன் ஸ்ரீபலராமன். வலியிற் சிறந்தோன். இங்கு என்ன ஸங்கடமோ அடைந்துவிட்டார். எனக்கு இன்னது என்று தெரியவில்லை. அடையாளங்கூட தெரியாமல் மாறிவிட்டார்."

"பலராமா! நேற்று சாயுங்காலம் அவரைக் கண்டு வந்தேன். எனக்குத் தேற்றறிவு கூறினார். இவர்க்கென்ன உடம்பு? வைத்தியர் யாருமிங்கில்லையோ?"

"கிருஷ்ணா! என்னவென்றடா சொல்லட்டும்! நேற்றிந்த நாரதர் என்னிடம் வந்து ஒரு சிறு குரங்கைப்பற்றிப் பேசினார். அவரைத் தொந்தரை செய்ததாம். அதைத் தொலைத்து விடுகிறேன் என்று சொன்னேன். உடனே சேனைத்தலைவனை நமது யாதவ சேனையுடன் அனுப்பினேன். ஒருவன்தான் திரும்பிவந்தான். என்னவென்றவன் சொல்லுகிறான். ஒரு கயிறுபோல் ஒன்று அச்சேனை முழுதையும் சுற்றிக்கொண்டு ஆகார வீதியில் எழும்பி எல்லாரையும் உதிர்த்துவிட்டதாம். மானிட மழைப் பெய்தாப்போல் எல்லாரும் பக்கத்து ஸமுத்திரத்தில் வீழ்ந்திறந்தார்களாம்.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

மிஸ்டர் S. வெங்கோபாச் சாரியார் காலமாயினர்.—மதுரைக் காலேஜியில் 23 - வருஷகாலமாகப் பிரின்சிபலாகவிருந்த மிஸ்டர் S. வெங்கோபாச் சாரியார் ஜூலை 17ல் காலை காலஞ்சென்றார் என்பதைக் கேட்டு நமக்கு ஆச்சரியம் உண்டாயது. இவர் ஷை காலேஜின் அபிவிருத்தியின் பொருட்டு அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு உழைத்தமை யாவரும் மிகவும் பாராட்டத்தக்கது. இவர் மரணத்தினால் ஷை காலேஜுக்கு பெரும் நஷ்டமே.

*
* *

நரிகளின் விசேஷகுணம்.—அமெரிக்காவின் அலாஸ்கா என்னும் பிரதேசத்தில் வசிக்கும் நரிகள் கற்பிற் சிறந்தனவாம். ஆண் நரி யிறந்துபோனால் பெண் நரி மற்றோ ராண்நரியை விரும்புவதில்லையாம்; ஆண் நரியும் பெண் நரி இறந்து போனால் மற்றொரு பெண் நரியை விரும்புவதில்லையாம். எவ்விடத்தும் நரிகளது சுபாவ மிவ்வாறேயாம். ஸ்திரீ புருஷர்களுள் பெரும்பான்மையார் மறுமணமுடையவராக விருப்பது நரிகளின் குண விசேஷத்தை நோக்கும்போது நியாயமாகத் தோன்றுவதாமோ?

*
* *

ஒரு வெண்கல வீடு.—சுவிட்சர்லாந்தைச் சார்ந்த நியூசாற்ற லென்னும் நகரில் ஆஸ்பத்திரி கட்டடக்கடைக்கால் தோண்டுகையில், வெண்கலத்தால் கட்டிய ஒரு வீடு காணப்பட்டது. அதில் ஒருஸ்திரீயின் முழுவெலும்பு அழிவின்றியிருந்தது. அதன் கைகளில் ஆறு வளையல்க ளிருந்தன; அவற்றுள் நான்கு வெண்கலத்தாற் செய்யப்பட்டவை. இந்த வீடு 600 வருஷங்கட்கு முன்னரமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அங்குள்ள பூதசத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றார்கள்.

*
* *

புதுவகையான ஒரு தொட்டில்.—பிரான்சு தேசத்துள்ள பாரிஸ் நகரத்தில் புதுவகையாய்க் குழந்தையை வளர்த்தியாட்டுந் தொட்டில் மின்சார சக்தியினுதவியால் செய்யப்பட்டிருக்கின்றது. அது குழந்தை யழவாரம்பித்தால், அக்குழந்தை தூங்கும்வரை யாடுமாம். அதிலமைக்கப் பட்டுள்ள கிராமபோன் தாயார்பாடுவது போல் பாடுமாம், குழந்தை தூங்கிவிட்டால் தொட்டிலாடுவதும் கிராமபோன் பாடுவதும் நின்று விடுமாம்.

*
* *

பிள்ளைபெறும் ஸ்திரீகளுக்குக் கிராண்டு.—ஆஸ்டிரேலியாவில் ஜனனவிகிதம் குறைவுபட்டு வருவதை யுத்தேசித்து அந்தத் தேசத்துக் கவர்ன்மெண்டார் பிள்ளைபெறும் ஸ்திரீகளுக்குக் கிராண்டு கொடுப்பதாக உத்தரவு செய்திருக்கின்றன ரென்று ஆஸ்டிரேலியா பார்லிமெண்டைத் திறக்கும்போது லார்டு டென்மென் கூறினாராம்.

ஒரு செம்புலியுடன் யுத்தம்.—காசிப்பூர் மகாராஜாவுடைய சகோதரராகிய குன்வார் ஆனந்தசிங் என்பவர் நெயினிடாலில் வேட்டையாடப் போயிருக்கும்போது திடீரென்று தானிருந்த இடத்திலிருந்து 100 கஜதூரத்துக்குள் ஒரு செம்புலியைக் கண்டாராம். கண்டமாத்திரத்திலே தன்கையில் வைத்திருந்த துப்பாக்கியினால் அம்மிருகத்தை ஒருதரம் சுட்டாராம். அப்படிச்சுட்டதினால் அம்மிருகத்திற்கு சொல்ப காயங்கள் ஏற்பட்டதே யொழிய மரணத்தையுண்டு பண்ணக்கூடிய இடத்தில் குண்டுபடவில்லையாம். அப்புலியானது நெருங்கி வந்துவிட்டது. மறுபடியும் சுட்டும் அதனாலும் அம்மிருகம் விழவில்லையாம். அச்செம்புலியானது அவர் மீது தாவிவிழுந்து புருவத்திலும் கன்னத்திலும் காயங்களை உண்டாக்கி விட்டதாம். குன்வார் தன் இருகைகளையும் அம்மிருகத்தின் வாயிற்கொடுத்து அதை வாயை மூடவிடாமற் தடுத்துக்கொண்டாராம். இப்படி செய்யவும், அம்மிருகத்திற்கும் அவருக்கும் மல்யுத்தம்போன்ற யுத்தம் யேற்பட்டு கடைசியாய் அவர் அப்புலியை கீழேதள்ளி தன் கூடவந்திருந்த ஒருவனிடமிருந்து ஒரு வேட்டைக் கத்தியை வாங்கி அம்மிருகத்தைக் கொன்றுவிட்டனராம். அவ்வாறு அம்மிருகத்தோடு அவர் மல்யுத்தம் செய்ததில் அவருக்கு புருவத்திலும் கன்னத்திலும் அநேக பெருங் காயங்கள் உண்டாயிற்றாம்

*
* *

மிருகங்களின் வயது.—மிஸ்டர் எம்மெட் காம்பல் ஹால் (Mr.Emmett Campbell Hall)என்பவர் மிருகங்களின் வயதைப்பற்றி அடியிற் கண்டவாறு எழுதியிருக்கிறாராம். உலகத்திலுள்ள ஜந்துக்களிலெல்லாம் அதிக நாள் உயிரோடு இருப்பது திமிங்கிலம், அம்மீன் 1000-வருஷம் வரை உயிரோடிருந்ததாகவும், கூவியர் (Cwier) என்பவர் கண்டுபிடித்திருப்பதாக சொல்லியிருக்கிறார். அதற்கடுத்தது யானை. யானையானது 400-வருஷம்வரை உயிரோடிருந்ததாயும், ரிக்கார்டு இருக்கிறதாம். சிங்கமானது 70-வருஷம் வரை ஜீவித்திருக்கிறதாம். ஒட்டகமும் நெடுநாள் ஜீவித்திருக்கும் மிருகங்களுள் ஒன்று. அது 100-வருஷம் வரையிலும்கூட உயிரோடிருந்திருக்கிறதாம். சில குதிரைகள் 60-வருஷம் வரை உயிரோடிருந்திருக்கிறதாம். ஆனால் சராசரியாய்ப்பார்த்தால் குதிரையின் வயது 25-ல் இருந்து 30 வரையில். மற்ற மிருகங்களில் பன்றி 20-வருஷமும், காடி 20-வருஷத்திற்கு அதிகப்படாமலும், ஒநாய் 20-வருஷமும், நரி 14-முதல் 16-வருஷம் வரையிலும் இருந்திருக்கிறதாம். அணில் 7-அல்லது 8-வருஷமும், முயல் 7-வருஷமும், இருக்கிறதாம். கழுகுகளில் சிலதும், அண்டங்காக்கைகளும், 100-வருஷம் வரையிலும்கூட உயிரோடிருந்திருக்கின்றனவாம். ஆமையானது 107-வருஷம் உயிரோடிருந்ததாயும் கூறுகிறார்.

[Supplement to the "Viveka Bodhini"]



தக்ஷிணாமூர்த்தி உபதேசம்

தக்ஷிணாமூர்த்தி வைபவம்

"விவேக போதினி" அனுபந்தம்]

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி V } பரீதாபி௵ ஆவணிமீ : 1912-௵ செப்டம்பர்மீ { பகுதி ௩

முடிவான நிலை

THE FINAL STATE

முன்னர் எடுத்து விளக்கிய ஜீவன் முக்திக்கும் மேலாக ஒரு நிலை இருக்கின்றது என்று சாஸ்திரங்களால் வெளியாகின்றது. இதுவே மனிதன் உயிருடனிருக்கையில் அடையக்கூடிய முடிவான நிலை. ஜீவன்முக்திநிலை உள்ளபடி ஒருவனுக்குக் கைகூடிவிட்டால் அவன் இந்த முடிவான நிலையில் சேர்க்கப்படுவான். இந்த முடிவான நிலைக்கு விதேஹமுக்தி என்று பெயர். இந்நிலையை அடைந்தவனுக்கு பிரஹ்மவரிஷ்டன் என்று பெயர். இம்மாதிரியான நிலை மனிதனுக்கு உயிருடனிருக்கும்பொழுதே வரக்கூடியது என்பதைக் குறிக்கவே ஆலயங்களில் விக்ரஹங்கள் ஏற்பட்டுள்ளன. அவைகள் எவ்வாறு ஒருவித அசைவு முதலியன இன்றிப் பார்ப்பவர்கள் மனதில் நல்லெண்ணங்களை உண்டாக்கி அவரவர்கள் பக்குவத்திற்கேற்ப, த்யானம் உத்ஸவாதிகள் செயயும்படி தூண்டி அவர்களை மேன்மை அடையும்படி செய்தும் தாம் அவைகளால் ஒரு மாறுதலும் அடையாமலிருக்கின்றனவோ அவ்வாறே இருப்பன் பிரஹ்மவரிஷ்டனும்.

ஸ்ரீமத் சங்கராசார்யர் முதலியவர்கள் இந்த விதேஹ முக்தியைப்பற்றிக் குறிப்பாகக் கூறிவிட்டனர். பொதுவாக ஜீவன் முக்தர்கள் ப்ராரப்தவசமாய்த் தமக்கு வந்த தேஹம் நழுவியதும் பரலோக யாத்திரைகளில் செல்லாது அங்கேயே விதேஹமுக்தி பதவியைப் பெற்று எங்குமுள்ள ப்ரஹ்மமே ஆகிவிடுகின்றனர் என்று மாத்திரம் கூறிவிட்டார்கள். இந்நிலை ஒருவன் உயிருடனிருக்கும்பொழுதே வரக்கூடியது என்பதை வெளிப்படையாக எடுத்துச் சொல்லாவிடினும் பிரஹ்மவரிஷ்டனை வர்ணிப்பதில் இந்நிலையையே வர்ணித்துமிருக்கிறார்கள். இம்மாதிரியேதான் கைவல்ய நவநீதத்திலும், 'அன்னியர் தம்மால் தன்னால் அறியாதோன் வரிஷ்டனுமே' என்று அவனை ஜீவன் முக்தருள் ஒருவராக வர்ணித்துவிட்டுப் பின்னர் 'மேவரும் ஜீவன் முக்தர் விதேஹ முக்தியும் நீ கேளாய்' என்று கூறுவதாலும், இதை விவரிக்கும் விதத்தாலும், வாசிப்போருக்கு விதேஹ முக்தி மரணத்தின் பின்னர்தான் வருவது என்ற எண்ணம் உண்டாகும். இப்படியிருந்தும் வாஸுதேவ மனனத்தில் உள்ள 'எங்கு தேஹஸம்பந்த மிருக்கிறதோ அங்கெல்லாம் துக்கமுண்டு. ஆதலால் விதேஹ முக்தியின் பொருட்டே ப்ரயத்தனம் செய்யவேண்டியது' என்ற வாக்கியத்தையும், வித்யாரண்யர் எழுதியுள்ள பஞ்சதச ப்ரகரணம் திருப்தி தீபத்தில் 'முக்தனை ப்ராரப்தம்கூட அணுகாது' என்று விஸ்தாரமாக வர்ணித்துள்ளதையும் நோக்கில் இந்த விதேஹ முக்தநிலை உயிருள்ளபோதே வரக்கூடியது என்பது தோன்றும். இந்நிலை சில ஜீவன் முக்தருக்கு உயிருள்ளபோது வருவதாயினும் பெரும்பாலார்க்கும் மரணத்தின் பின் வருவதாலும், விதேஹ முக்திநிலையை வர்ணித்தாலும் ஸாதாரண ஜனங்களுக்கு அது நிஸ்ஸாரமாகத் தோற்றிவிடலாம் என்ற எண்ணத்தாலும், ஜீவன் முக்திநிலையை ஒருவன் அடையுங்கால் அவனுக்கு விதேஹ முக்தி பின் தானே விளங்கிவிடும் என்ற எண்ணத்தாலும் ஆசார்யர் முதலிய பெரியோர்கள் இந்நிலையைப்பற்றி அதிகமாக விஸ்தரிக்காது விட்டார்போலும். அவர்களுக்குப் பின்னர் வந்தவர்கள் விதேஹ முக்தர் சிலரைக் கண்டு அதை விளக்கமாகக் கூறாதுவிட்டால் உண்மை கூறியதாக முடியாது என்று வெளிப்படையாகக் கூறிவிட்டனர்.

ஆகவே முடிவான நிலையாகி விதேஹ முக்தியிலிருப்பவர்கள் இக்காலத்தில் சிலர் இருப்பதனால் இதுவே முடிவான நிலை என்று கூறவேண்டி வந்தது. கும்பகோணம் மௌன ஸ்வாமிகளும், இப்பொழுது நாகப்பட்டணத்திலிருக்கும் மௌன ஸ்வாமிகளுமே இந்நிலைக்கு சாக்ஷி. இம்மாதிரியுள்ளவர்களைத் தர்சிக்கக் கிடைக்காத பலருக்காகத்தான் இந்நிலையை உணர்த்தும் விக்ரஹங்கள் கோயில்கள் அமைந்துள்ளன. நம் முன்னோர்கள் முடிவான நிலையை, ஊஹிப்போர் எளிதில் உணரும்படி அமைத்துள்ள ஆலயங்களின் சிறப்பை என்னென்று கூறுவது இதனால்தான் ஔவையும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றனன்.

50

விவேக போதினி

தொ. 5.] பரீதாபி ஞூ ஆவணிமீ [பகுதி 3

விக்கிரஹ ரஹஸ்யம்

THE INNER MEANING OF IMAGES

10. தக்ஷிணாமூர்த்தி

ஒரு ஆலமரத்தடியில் உயர்ந்த ஜடாமகுடந் தரித்துப் புலித்தோலை உடுத்த ஒரு புருஷன் உயர்ந்த பீடத்தின்மேல் வீராஸனமிட்டு உட்கார்ந்திருப்பதாக அமைந்துள்ளது இவ்விக்கிரஹம். ஜடையில் பிறைச்சந்திரன் கங்கை முதலியவைகள் காணப்படுகின்றன. வீராஸன அவஸரத்தில் கீழே தொங்கவிட்டிருக்கும் வலதுகால் ஒரு அஸுரனை நசுக்கிக்கொண்டிருக்கிறது. இடதுகால் மேலே உயர்த்தப்பட்டு வலது முழங்காலின் மேல் வைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு வலது கையில் உடுக்கும் ஒரு இடது கையில் அக்னியும் காணப்படுகின்றது. மற்ற வலது கையில் சின்முத்ரையும், மற்ற இடதுகையில் ஏடும் அமைந்திருக்கின்றது. இவரைச்சூழ்ந்து நான்கு சிஷ்யர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஸநகாதி யோகிகள் என்று பெயர்; முறையே ஸநகர், ஸநந்தனர், ஸனந்தனர், ஸநத்குமாரர் என்பதே இந்நால்வர்கள் பெயர். சிஷ்யர்கள் பெரியவர்களாகவும், குரு சிறு வயதுடையவராகவும் காணப்படுகின்றார்கள். இங்கு மௌனத்தையே உபதேசமாகக் காட்டப்பட்டிருக்கிறது. தக்ஷிணாமூர்த்திவிக்ரஹ அமைப்பைத் தாயுமானவர்:—

துங்கமிகு பக்குவ ஸநகன்முதல் முனிவோர்கள்
தொழுது அருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய சொல்லை ஒருசொல்லால் உணர்த்தியே
ஸ்வரூபானு பூதி காட்டிச்
செங்கமல பீடமிசைக் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்தி முதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே!
சின்மயானந்த குருவே!

என்று வர்ணித்திருக்கிறார்.

தக்ஷிணாமூர்த்தி விக்கிரஹங்கள் பலவிதமாகக் காணப்படும். சில தக்ஷிணாமூர்த்தி விக்கிரஹங்களில் வீராஸனத்திற்குப் பதிலாக யோகாஸனமும், சிலவற்றில் உடுக்கு அக்னிக்குப் பதிலாக, மான், மழு, பாசாங்குசம், வீணை, ஜபமாலை, முதலியவைகளும் காணப்படலாம். இவைகளின் பொருளை முன்னரே சிவலிங்கம், கணேசர் முதலிய விக்கிரஹங்களைப்பற்றிக் கூறிய இடத்தில் வெளியிட்டாகி விட்டது.

இங்குக் கூறப்பட்டிருக்கும் வர்ணனையில் வீராஸன அமைப்பில் கீழே தொங்கி ராக்ஷஸனை நசுக்கும் வலது கால், மேலே உயர்த்தி வலது முழந்தாளின்மேல் வைத்திருக்கும் இடதுகால், உடுக்கு, அக்னி, சிரத்திலுள்ள கங்கை, பிறைச் சந்திரன், புலித்தோலாடை ஆகிய இவைகளின் உட்பொருள்களை நடராஜ விக்ரஹத்தைப்பற்றி எழுதிய காலத்தில் எடுத்துக் கூறப்பட்டது. இங்கு ஆராயவேண்டியவை குரு சிஷ்ய நிலை, மௌனம், சின்முத்திரை, கையில் பிடித்திருக்கும் ஏடு. இவைகளின் உட்கருத்தை எண்ணி ஈடுபட்டே ஸ்ரீமத் சங்கராசாரியர்:—

चित्रं वटतरोर्मूले वृद्धाशिष्या गुरुर्युवा ।
गुरोस्तु मौनं व्याख्यानं शिष्यास्तुच्छिन्नसंशयाः ॥

அதாவது 'ஆலமரத்தடியில் அமைந்துள்ள அதிசயத்தை என்னென்று சொல்வேன்! வயது முதிர்ந்த சிஷ்யர்களால் சூழப்பட்ட சிறுவயதுள்ள குரு ஒருவர் இருக்கிறார். அவர் மௌனத்தால் உபதேசிக்கச் சிஷ்யர் ஸந்தேஹங்கள் பறந்தோடிப் போகின்றன' என்று ஆனந்த பரவசராகி,

मौनं वाक्या प्रकटित परब्रह्मतत्वं युवानं ।
वर्षिष्ठान्तेव सदृषिगणैरावृतं ब्रह्मनिष्टं ॥
आचार्येन्द्रं करकलित चिन्मुद्रमानन्दमूर्तिं ।
स्वात्मारामं मुदितवदनं दक्षिणामूर्तिमीडे ॥

அதாவது,

சீர்பூத்த மௌனமதாய் அருமறை மாமுடிகள்
திகழ்த்து பரப்பிரம தத்துவனை அணியவவனை
நேர்பூத்த உயர்சீட விருடிகணப் பிரம
நிட்டர்கள் சூழ்தர நிறைமா மதியினைச்செங்கழுநீர்
தார்பூத்த குருபரனை சின்முத்திரைக்கை
தரித்தவனை ஆனந்த மூர்த்தியைத் தன்மயனை
யேர்பூத்த முதிதவதனனை யெந்த ஞான்று
மெழிலுறும் சீர்தக்ஷிணாமூர்த்தியை யேத்தெடுப்பாம்.

என்று மனதாரத் துதித்திருக்கிறார்.

இம்மாதிரியே ஈடுபட்டுத் திருவிளையாடற் புராண ஆசிரியராகிய பரஞ்சோதி முனிவரும்:—

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி
யிருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவனை நினையாம னினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்.

என்று தக்ஷிணாமூர்த்தியின் உட்பொருளை வெளியிட்டிருக்கிறார்.

இந்த விக்கிரஹம் குருசிஷ்ய பாவ ரஹஸ்யத்தை உணர்த்துகிறபடியால் இதற்கு ஞானபரமான ஆசார்ய பாவனைப்பொருளே மிகப் பொருத்தமாகும். பக்திபரமான பொருள் இல்லவே இல்லை என்றும் கூறிவிடலாம். முன் எடுத்துக்காட்டிய ஈடுபாடுகளை ஆதாரமாகக் கொண்டு இவ்விக்கிரஹத்தின் ரஹஸ்யத்தை ஆராயப் புகுவோம்.

தக்ஷிணாமூர்த்தி யௌவன புருஷனாகவும் சிஷ்யர்கள் 'நான்மறை யாறங்கமுதற் கற்றகேள்வி வல்லாரான' வயது முதிர்ந்தவர்களாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸாதாரணமாக அஜ்ஞானம் அநாதி, இப்படி இருந்தும் ஞானம் உதயமானதும் அது ஒளியைக் கண்ட இருளைப் போலவும், தீப்பொறியால் தாக்கப்பட்ட பஞ்சுப் பொதிகளைப்போலவும், இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப் போய்விடும் என்பது சாஸ்திர ரஹஸ்யங்களில் ஒன்று. உதயமான ஞானத்தையே உருவமாகக்கொண்டு 'வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய் எல்லாமா யல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டும்' திறன் வாய்ந்த குரு சிறுவயதுடையவராகவும்; அஜ்ஞானத்திற்கு உட்பட்டதாயும் உள்ளதை உள்ளபடி எடுத்துரைக்க முடியாது மயங்கும் வேதாதிகளில் தேர்ச்சியடைய ஆயுளை எல்லாம் போக்கிய சிஷ்யர்களைப் பெரியவர்களாகவும் இவ்விக்கிரஹத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இக்கருத்தை உள்ளடக்கியேதான் ஸ்காந்தத்தில் ஸுப்ரஹ்மண்யர் சிறுபிள்ளையாக விருக்கையிலேயே நீண்ட ஆயுள் பெற்று வயது முதிர்ந்து ஸகல ஸேனைகளாலும் சூழப்பட்ட சூரபத்மாதிகளை இருந்தவிடம் தெரியாமல் பறக்கடித்துவிட்டதாகக் கூறியிருக்கிறது.

இந்தச் சிஷ்யர்களுக்கு மௌனமூலமாக உபதேசம் நடக்கிறது. மௌனமென்றால் என்ன? அதனால் என்ன உபதேசம் செய்யமுடியும்? மௌனம் அநேகவிதம். அவைகளுள் வாக் மௌனம், க்ரியா மௌனம், உண்மை மௌனம் என்பவைகளே முக்கியமானவை. வாக் மௌனம் என்பது வாயால்மாத்திரம் பேசாதிருத்தல்: மனம் கிடந்து பதைத்துக்கொண் டிருக்கலாம். க்ரியாமௌனம், வாக்கு பதைத்து வெளியிட்டபோதிலும், மனம் பதைத்துக்கொண்டிருந்த போதிலும் அவஸரமாக ஒன்றையும் செய்துவிடாமை. மனத்தைப் பதைக்கவொட்டாது தடுத்துக் கடமைகளைச் செய்துவிட்டு அமைதியுடனிருப்பதே உண்மையான மௌனம். ஒரு பாம்பை நம்முன் கருடன் கொத்தி எடுத்துப் போவதாக வைத்துக்கொள்வோம். அநியாயமாகக் கருடன் பாம்பை வதைக்கிறதே என்று பாம்பினிடம் விருப்பும், கருடனிடம் வெறுப்பும்

கொடிய பாம்பிற்கு இக்கதி வந்தது தகும் என்று மாறான மனோநிலையும் நம் மனதில் ஏற்படாது, 'எந்த ப்ராணிக்கும் உயிர் வெல்லம், ஆதலால் நாம் பாம்பைக் கருடன் வாயிலிருந்து தப்புவிக்க வேண்டியது முக்கியம். அதைச் செய்ததன்மேல் சிபியைப்போல அதிக ஜீவகாருண்யத்துடன் இருக்க முடியுமானால் இருக்கவேண்டும்'என்று எண்ணிய பாம்பை விடுவித்துவிட்டுப் பின்னர் இதைக் கவனியாதுஎப்பொழுதும்போலஅமைதி யுடனிருப்பதே உண்மையான மௌனத்திற் சேர்க்கும் முதல்படி. உலகில் ஏற்படும் ஸுகதுக்கங்கள் நியாயாந்யாயங்கள் இவைகளைக் காணும்பொழுது மனம் பதைத்து விருப்பு வெறுப்புக்கு இடங்கொடாது, அந்த ஸமயத்தில் நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துவிட்டு ஓய்ந்திருப்பதாகிய மௌனமே ஒருவன் மனதில் குடிகொண்டிருக்கும் ஞானத்தின் வரம்பு, வெளி அடையாளம், முற்கூறிய இரண்டுவித மௌனமும் காரணத்தைக் கவனியாது காரியத்தை மாத்திரம் அழிப்பது. பாம்புப்புற்றை மேலே அடித்துடைத்து விட்டு உள்ளே இருக்கும் பாம்பைக் கொன்றுவிட்டதாக மதிப்பது போன்றது இம்மௌனங்களை மௌனமாக மதிப்பது. உண்மையான மௌனமோ விறகு ஒய்ந்து நெருப்பு அடங்குவது போன்றது: மனம் தன் வெளிவ்யாபாரங்களைப் பயனற்றவை என்று கண்டு தன் ஸ்வரூபம் உணர்ந்துஅடங்கிநிற்பது. இம்மாதிரியான சாந்தநிலையில் உள்ளதைப்பற்றி நின்று ஒன்றும் பேசாது இருந்து விடுதலே மௌனமூலமாக உபதேசம் செய்தல். இந்த மௌனத்தின் ஸ்வரூபத்தை ஸ்ரீமத் சங்கராசாரியர் தமது அபரோக்ஷானுபூதி என்னும் நூலில் 'எது மனவாக்குக் கெட்டாததோ, எந்த மௌனம் யோகிகளால் அடையத்தக்கதோ அந்நிலையையே அடைய வேண்டும் என்று அறிந்தோர் மதிப்பதும், வாக்கால் சொல்ல முடியாதபடி அநிர்வாச்சியமாக உள்ளது பிரபஞ்சம் என்று மனஞ்சலியாது நிற்பதாகிய அறிஞரிடம் காணப்படும் நிலையும் உண்மை மௌனமாம். வாக்மௌனம் சிறுவர்களுக்கே தகுந்தது' என்று வெளியிட்டிருக்கிறார்.

இங்கு தக்ஷிணாமூர்த்தி மௌனமாக நிலைத்த போதிலும் 'இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி'ச் சொல்லாமல் சொல்லுகிறார்' என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால்தான் இம்மௌனத்தால் சிஷ்யர்கள் ஐயம் நீங்குகின்றனர். உலக வழக்கிலேயே 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகுமா?' என்பது போன்ற பழமொழிகளால் ஒருவன் வாக்கு ஒருமாதிரி, செயல் வேறுமாதிரி இருந்தால் அவன் வாக்கு நன்கு மதிக்கப்படாது என்பது தெரியவரும். ஆகவே ஒருவர் உபதேசம் செய்தால் அதன்படி அவர் நடந்து காட்டவேண்டும். ஒருவன் வாய்திறந்து கூறிப் போதியாமல் தன் நடத்தையால் போதிக்கவேண்டியவைகளை நடத்திக் காட்டிவிட்டால் அதுவே சிறந்த உபதேசமாகும். ஆகவே இவ்விக்கிரஹத்தில் வாய்ப்பேச்சின்றி உள்ளதை உள்ளபடி பற்றி நிற்றலாகிய ஆனந்த பாவசநிலையில் குருவே இருந்து சிஷ்யர்களுக்குக் காட்டி, அவர்கள் மனதில் 'நாம் இந்நிலையை அடைந்து இவர்போலிருக்கவேண்டும்' என்ற அடங்கா ஆவலை உண்டாக்குகிறார். நடந்து காட்டுவதே மேலானதாயும், நன்றாகச் சீர்திருத்துவதாயும் உள்ள மௌன போதனை என்பதை வேதாதீதமாயுள்ள பொருளாக இருந்துகாட்டும் இம்மௌன நிலை குறிக்கின்றது. இம்மௌன ப்ரசங்கத்தைத்தான் சொல்லாமல் சொல்லுவது என்று கூறுவது. சொல்லாமல் சொல்லுவதன் லக்ஷணத்தைக் கைவல்ய நூலாசிரியர் :—

தன்பதி யல்லாப் பேர்கள் தம்மையல்ல னல்லனென்றன், அன்பனைக் காட்ட நேரே அவள்வெட்கி மௌனமானள், என்பது போல நீக்கி இதன்றிதன் றெனச்சேஷித்த, பின்பரப் பிரமந் தன்னைப் பேசாமல் பேசும்வேதம்.

என்ற பாட்டில் திருஷ்டாந்த பூர்வகமாக விளக்கியிருக்கிறார். அதாவது உண்மை வஸ்து இதல்ல இதல்ல என்று தோன்றுபவைகளை எல்லாம் நேதிகளைந்து நீக்கி இவைகளைக் காணும் வஸ்துவாகவிருந்து இதுதான் உண்மை வஸ்துவென்று வாய்விட்டுக் கூறாது(கூறமுடியாததலால்)நின்று விடுவதே சொல்லாமல் சொல்லுதல். இந்தப் பொருளை வேதாதீதமாய் 'இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி' என்ற தொடரே நன்கு விளக்கும். ஆகவே இவ்வளவு சிறந்த மௌனத்தால் உண்மைப்பொருளைச் சொல்லாமல் சொல்லி உபதேசிக்கலாம் என்பதாயிற்று.

இவ்வாறு இவ்விக்கிரஹம் மௌனத்தாலேயே இப்பொருளை அடக்கியுள்ளதாயினும், இந்த ரஹஸ்யங்களைக் காட்டும் குறிப்புக்களும் இதில் அமைந்து கிடக்கின்றன. இவைகள்தான் சின்முத்திரையும் கையில் பிடித்திருக்கும் ஏடும். வேதாந்த சாஸ்திர ஆராய்ச்சிப் பயிற்சிகளின் பரிபாகத்தால் வருவது இந்த மௌனநிலை என்பதைக் கையிலுள்ள ஏடு விளக்கும்.மேலும்

ग्रन्तमभ्यस्यमेधावी ज्ञानविज्ञानतत्परः ।
पलालमिवधान्यार्थी त्यजेत् ग्रन्तमशेषतः ॥

என்பது அமிருதபிந்து உபநிஷத் வாக்கியம். சாஸ்திரங்களில் அடங்கியிருக்கும் ஞானப்யாஸ விஷயங்களைக் கிரஹித்துப் பின்னர் அவைகளை விட்டு அப்பாற்பட்டிருக்கும் பிரஹ்மத்தைப் பற்றி,தான்யத்தைக்கைக்கொண்டு வைக்கோலைத் தள்ளி விடுவதுபோலத் தள்ளிவிட வேண்டும் என்பதே இதன் கருத்து. சாஸ்திரத் தேர்ச்சியடைந்த ஸனகாதி யோகிகளைப்போன்ற சிஷ்யர்களுக்கு இந்த உபதேசம் மிக அவசியம். அவர் சாஸ்திர வாஸனையும் நீங்கி மேல் போக வேண்டியவர்கள்.

இனி சின்முத்திரை விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். இதனுள்தான் முற்கூறிய மௌனத்தின் ரஹஸ்யம் முற்றிலும் அடங்கியுள்ளது. இப்பதத்திற்கு ஞான அடையாளம் என்று பொருள். இதைக் கண்டதுமே ஞானத்தின் ஸ்வரூபம் இன்னது என்பது வெளியாகும். இந்த அடையாளத்தின் சிறப்பு விளங்க சாஸ்திரங்களில் ஒரு திருஷ்டாந்தம் கூறுவதுண்டு. நாம் ஒரு சிறு ரத்னத்தைக் கையில் வைத்துக் கொண்டு போகுங்கால் வழியில் குப்பைகள் சேர்ந்திருந்த விடத்தில் அது கைதவறி விழுந்துவிட்டதாக வைத்துக்கொள்ளுவோம்: உடனே அங்கேயே நாம் உட்கார்ந்து நமது கை முதல் மூன்று விரல்களை முக்கியமாக உபயோகப்படுத்தி அக்குப்பைகளைத் தள்ளிப்பார்த்து ரத்னத்தைக் கண்ட உடன் அதைக் கட்டைவிரல் ஆட்காட்டி விரல் நுனிகளுக்கிடையில் பொறுக்கி எடுப்போம்.இத்தருணத்தில் உண்டாகும் கையடையாளமே சின்முத்திரை என்னப்படுவது.இது அமைதிக்குறியைப்போலக் கையமைத்து முதல் மூன்று விரல்களை நேரே நிற்கவிட்டு ஆட்காட்டி விரலும் கட்டைவிரலும் நுனியில் ஒன்று சேருங்கால் உண்டாகும் கையமைப்பு. ஆகவே இம்முத்திரையில் பிரிந்து நேராக நிற்கும் விரல்கள் நாம் ஆராயும் விஷயத்திற்குப் பொருத்தமில்லாதவைகளை நீக்குவதையும், மற்ற இரு விரல்கள் சேர்ந்திருப்பது விஷயஸம்பந்தமான ஸூக்ஷ்ம விஷயங்களை இவைகளுக்கிடையிலிருந்து தேர்ந்து எடுப்பதையும் குறிப்பாகக் காட்டி, உலகில் ஆய்ந்து ஓய்ந்து அறிதல் என்பதன் ஸ்வரூபம் இன்னது என்பதை விளக்கும். ஸாதாரணமாகப் பெரியோர்களும் கற்றோர்களும் அரிய ஸூக்ஷ்ம விஷயங்களை எடுத்துப் பேசுங்கால் இம்முத்திரையைக் கைக்கொள்வது வழக்கமாகவும் இருக்கிறது. ஆகவே தக்ஷிணாமூர்த்தி ப்ரபஞ்ச விஷயத்தில் கலந்து கிடக்கும் பரம்பொருளைத், தோன்றும் வஸ்துக்கள் எல்லாம் அல்ல அல்ல என்று நீக்கிப் பின் சேஷிக்கும்,ஸூக்ஷ்ம வஸ்துவாக உணர்ந்து நிலைபெறுவதே பரமநிலை என்று, தமது சின்முத்திரைமூலமாக மௌனத்தின் சிறப்பை உணர்த்துகிறார். மேலும் இம்முத்திரையில் வேறொரு சாஸ்திர ரஹஸ்யமும் அடங்கியுள்ளது. அமைதியாகவிருந்து ப்ரபஞ்ச ஸஞ்சாரத்தால் ஜீவனுக்கு ஏற்படும் மலம், விக்ஷேபம், ஆவரணம் (ஆணவம்)

காம்யம், மாயை) என்ற மூன்று தோஷங்கள் அப்யாஸத்தால் நீங்கும்காலையில் சேஷிக்கும் ஆத்மாவே, அவன் அதுவரையில் உபாஸித்து வந்த கடவுளது நிஜரூபமான பிரஹ்மம் என்று இம்முத்திரை உண்டாகி நிற்கும் வழி போதிக்கும். ஆகவே இதன் மூலமாகத் தேறிவரும் சிஷ்யர்களுக்கு "பரஜ்ஞானம்பிரஹ்மம்," "தத்வமஸி," "அஹம் பிரஹ்மாஸ்மி" ஆகிய மஹா வாக்கியப் பொருள் ஸதா மனதில் ஊறிக்கொண்டிருக்கும் நிலைவரும். இதனால் அவர்களுக்கு ஞானநிஷ்டை எளிதில் கைகூடும்.

இந்த விக்கிரஹம் குறிக்கும் ரஹஸ்யத்தைச் சுருக்கிக் கூறுவோம். நல்ல முமுக்ஷுவான சிஷ்யர்களுக்குப் பரமாசார்யர்கள் உபதேசிக்கும் விதமும் செய்யும் உபதேசத்தின் ரஹஸ்யத்தையும் அடக்கியுள்ளது இந்த விக்கிரஹம். ஆசார்யன் நேராக வாய்மொழியால் பரம ரஹஸ்யத்தை முதலில் உபதேசித்தபோதிலும் பின்னர் அவர் கூறியபடி இருந்து காட்டி மௌனத்தால் பரமநிலையைக் காட்டும்பொழுதுதான் அந்த உபதேசம் நன்றாகச் சிஷ்யன் மனதில் வேரூன்றி அவரைப்போல் நிஷ்டை செய்து குரு சிஷ்யன் என்ற பேதம் நீங்கி இருவரும் ஏகமாகி நிற்கும் நிலையை அடையவேண்டும் என்ற ஆவல் அவனுக்குண்டாகும்படி செய்து அவ்வாறு நடக்கும்படி செய்யும். ஆகவே இதில் குரு சிஷ்யன் என்ற ஸம்பந்தத்தின் முடிவான நிலை நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. ஆதலால்தான் இந்த விக்கிரஹத்திற்கு உத்ஸவாதிகள் கூடக் கோயிலில் இல்லை. இதன் சிறப்பை உணர்ந்தவர்கள் சிலரே இதன் முன்பு நின்று சற்றுத் துதித்துப் போவார்கள். இதுதான் இந்த விக்கிரஹத்தின் வெளிப்பொருள்.

இதுவரையில் கூறியவைகளிலிருந்து சிவன் கோயிலில் வழிபட்டு வரும் முக்கிய மூர்த்திகளாகிய சிவலிங்கம், நடராஜமூர்த்தி, தக்ஷிணாமூர்த்திகளின் சிறப்பு ஒருவாறு விளங்கியிருக்கும். சிவலிங்கம் ஸத்மூர்த்தி : தக்ஷிணாமூர்த்தி சித்மூர்த்தி, நடராஜர் ஆனந்தமூர்த்தி. இம்மூன்றும் வழிபடுவோர்க்குத் தமது முக்கிய ஸ்வரூப மூலமாக ஆத்மா ஸச்சிதானந்த மூர்த்தி என்பதை உணர்த்தும் குருக்களாகின்றன. இவைகளுக்கு அப்பாற்பட்டதாகிய சிதம்பர ரஹஸ்யமே சின்மயானந்த மூர்த்தியால் மௌனப்ரஸங்கம் செய்யப்பட்ட 'மறைக்கப்பாலாயுள்ள வாக்கிறந்த பூரணம்'தான். இவைகள் எல்லாம், மூலமூர்த்தியும் எல்லோரும் முதலில் அநுபவித்து அறிந்து பழகக்கூடியதுமாகிய ஸத்நிலையை உணர்த்தும் சிவலிங்கத்தின் விளக்கங்களாதலால், இதை மூல லிங்கமாகவும் மற்றவைகளை இதற்கு ஸமமான முக்கிய மூர்த்திகளாகவும் சிவன் கோயில்களில் நம்முன்னோர் வழிபடும்படி ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இனித் தக்ஷிணாமூர்த்தி குறிக்கும் ரஹஸ்யமான பரமார்த்தப்பொருளை எடுத்தெழுதுவோம். சாஸ்திரங்களிலே இரண்டு குரு ஒவ்வொருவருக்கும் உண்டென்று உற்று நோக்குவோருக்கு விளங்கும். 'ஸாதன சதுஷ்டய ஸம்பன்னனே முமுக்ஷு: இவனே வேதாந்த சிரவணாதிகளுக்கு அதிகாரி : இவன் குருவை அடுத்து மஹாவாக்கிய உபதேசம் பெற்று நிஷ்டைகூடி முக்தியைப் பெறவேண்டும்' என்பது சாஸ்திரங்களின் துணிபு. ஆனால் ஸாதன சதுஷ்டயத்தில் சமாதிஷட்க ஸம்பத்தி என்னும் மூன்றும் ஸாதனத்தில் ஸமாதானம், சிரத்தை என்ற இரண்டு ஸாதனங்கள் இருக்கின்றன. இவைகளின் ஸ்வரூபத்தை:—

சிரவணப் பொருளைத் தானே சித்தம்சிந் திக்கு மாறு
ஸாஸமா வைக்குமித்தை ஸமாதானம் என்பார்மேலோர்
பரமஸத் குருநூல் அன்பு பற்றலே சிரத்தை யாகும்

* * * * *

என்று கைவல்ய நூலாசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். இதனால் ஸத்குருவை அடையும் முன்னரே ஒருவனுக்கு ஒரு குரு இருத்தல் வேண்டும், அதனால் அவனுக்கு ஸமாதானமும் சிரத்தையும் உண்டாகி ஸத்குரு உபதேசத்திற்குத் தகுந்த அதிகாரியாகவேண்டும். இவ்விக்கிர

ஹத்திற்கு வெளிப்படையான பொருள் கூறிய விடத்தில் இப்பாட்டுள் புதைந்துகிடக்கும் வெளிகுருநாதனைத்தான் எடுத்துப் பேசியது. இதற்கு மேலிருக்கும் உட்குருநாதனையும் இந்தத் தக்ஷிணாமூர்த்தி விக்கிரஹம் குறிக்கும். இதுதான் இந்த விக்கிரஹத்தின் பரம ரஹஸ்யமான பொருள். வெளிக்குருநாதர் என்ன நிஷ்டை செய்து காட்டியும் வாய்விட்டும் கூறவேண்டி வந்துவிடும். அவர் தான் தக்ஷிணாமூர்த்தியின் பரமரஹஸ்யப் பொருளை நன்கு விளக்கி, அதனால் சிஷ்யன் உள்ளத்தில் உண்டாகும் இடைவிடாப் பழக்க விசேஷத்தாலும், பலஜன்ம புண்ய பரிபாகத்தாலும் தக்ஷிணாமூர்த்தி உதயமாகி, வெளி ஆசார்யர் உபதேசத்தால் பக்குவமான இவனை உள்ளபடியுள்ள மௌன ப்ரஸங்கத்தால் சொல்லாமல் சொல்லி அந்த உபதேச நிலையை 'நினையாமல் நினைந்து' (நினைப்புமறப்பாக மாறிமாறி வாராது மாறா அநுபவமூலமாக அந்நிலையிலேயே) நிற்கும்படிசெய்து அவன் பவத்தொடக்காகிய மூல அஞ்ஞானமற வேரறுத்துவிடுவார். இந்த அந்தராசார்ய உதயம், இவர் செய்யும் மஹா வாக்கிய உபதேசம், உண்டாகும் அஞ்ஞான நீக்கம் எல்லாம் ஒவ்வொரு முமுக்ஷு உள்ளத்திலும் வெளி ஆசார்யர் செய்யும் 'ஸத் சிதானந்தம்' என்னும் அவாந்தர வாக்கிய உபதேசம், சிரத்தையோடு கூடிய சிஷ்யனது இடைவிடாப் பழக்கம் ஆகிய இவைகள் உதவியால் ஏற்படுபவைகள். இம்மாதிரி பொருந்தும் அநுபவ விசேஷத்தையே இவ்விக்கிரஹம் நம்போன்ற மனிதர்களுக்கு உணர்த்திக்கொண்டே இருக்கிறது.

வெளி ஆசார்யன் செய்யும் உபதேச விஷயம், உள்ளாசார்யன் உதயமாகும் காலம், உபதேசிக்கும் விஷயம் முதலியவைகளை நேரிடக் குருமுகமாக அறிந்து அப்யஸித்துத் தெளியவேண்டும். இப்படி இருப்பினும் வெளிக்குரு உபதேசிப்பவைகள், இன்னவைகள் அவைகளை அப்யஸிக்கும் முறை, பலன் இவைகளைக் கைவல்ய நவநீத ஆசிரியர் :—

ஞானங் காரணம் அறிபொருள் காரிய
நாமரூபப்பேய்கள்
ஆனதெப்படி அழிந்த தெப்படியென
வாய்குதல் பலனன்றே
மான மைந்தனே தீர்க்க ஸொப்பன
ஜகம்வந்ததும் பாராமல்
போனதும் நினையாமல் உன்போதமாய்ப்
பூரணமா யிருப்பாயே !

அஸத்தி லெம்மட்டுண்டு அம்மட்டும்
பாராமுகமாகினை யம்மட்டும்
நிஜத்தில் உள்விழிப்பார்வை யாலிப்படி
நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தில் உன்மனம் நின்று சின்மாத்திர
வடிவமாயிடில் மைந்தா
கசத்த தேஹத்தி லிருக்கினும்
ஆனந்தக் கடல்வடிவாயே !

என்ற பாட்டுக்களில் நன்கு காட்டி, வெளியாசார்யர் இவ்வாறு உள்ளாசார்யர் விஷயத்திற்குச் சிஷ்யனைத் தயார் செய்கிறார் என்பதைக் கூறியிருக்கிறார். இதன் ரஹஸ்யத்தைக் குருமுகத்தாலும் அப்யாஸ முகத்தாலும்தான் நன்கு உணரவேண்டும்.

தக்ஷிணாமூர்த்தி விஷயமாகத் தாயுமானவர் அநேக பாடல்களைப் பாடியிருக்கிறார். அவைகளுள், சின்மயானந்தகுரு, கல்லாலின் என்றுள்ள பாகங்கள் முக்யமானவைகள். ஆகாரபுவனம் சிதம்பரரஹஸ்யத்தையும் எடுத்துக்கொள்ளலாம். ஸ்ரீமத் சங்கராசாரியர் தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் ஒன்று செய்து இவ்விக்கிரஹத்தின் விஷயத்தை நன்கு விளக்கியிருக்கிறார். இவைகளின் கருத்தை ஒட்டி தக்ஷிணாமூர்த்தியை அந்தராசார்யராகக்கொண்டு உள்ளவாறு வழிபட்டு வந்தால் வெளிகுருவும் கிடைத்து நமக்கு உள்குருவும் உதயமாகும் பாக்கியம் சீக்கிரம் வரும் என்பதற்கு ஸந்தேஹமே இல்லை.

ஈகை

MUNIFICENCE

அமிழ்தினுமினிய தமிழ்மொழியில் தழைத்து வரும் நீதிநூல்கள் பலவற்றுள்ளும் பெருமை பொருந்தியது திருக்குறள் என்பதை, பாவலர் பலரும் நன்கறிவார். மேலும் இந்நூல் ஆங்கிலம், இலத்தீன் முதலிய மேனாட்டுப்பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட் டிருப்பதனால், மேலைத் தேசத்தாரும் இதை உச்சிமேற் கொள்கின்றனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரக் கிடக்கின்றது. இவ்வரிய பெரிய நூலினது சொற்செறிவு, பொருட் பொலிவு முதலிய பெருமைகளை இத்தன்மையவென எடுத்துரைக்க இயலாது இடைக்காடர்

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று வியந்து கூறியுள்ளார். இவ்விதம் இடைக்காடனார் இயம்பியதற்கு ஆதாரமாக

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள"

என்னும் அருமைத் திருக்குறளை யாராயப் புகுவோம். இக்குறள் வெண்பாவிற்கு எழுவகையாய்ப் பொருள் காணலாம்.

1. பரிமேலழகர் கருத்து- இலன் என்னும்-யான் வறியன் என்று இரப்பான் சொல்லும், எவ்வம்-இளிவரவை, உரையாமை-தான்பிறர்கண் சொல்லாமையும், ஈதல்—அதனைத் தன்கண் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும், உள-உளவாவன, குலனுடையான் கண்ணே-குடிப்பிறந்தான் கண்ணே.

அதாவது தரித்திரனொருவன் ஓர் கனவானிடம்சென்று தன் குறைகளைக்கூறி யாசித்தால், தன்னிடம் இன்னான் வந்து இன்ன துயர்மொழிகளைப் புகன்றான் என்று பிறரிடம் சொல்லிக் கொள்ளாது தன்னை வந்தடைந்தவனுக்குப் பொருள் வழங்கிப் போக விடுத்தலே உத்தமம். இத்தன்மை உயர்குடியிற் பிறந்தவனிடத்தே காணப்படும். இக்கருத்தை நனியமைத்து விநாயக புராணமுடையார்,

"இரப்பவன் இலனென் றூர
இயம்பிய எவ்வஞ்சொல் லென்று
இரப்பினும் பிறர்பாற் கூறாது
இரக்கமோ டீதன் மைந்தா!"

என்று திருவாய்மலர்ந்தருளினர்.

2. இப்பாவில் பல பொருள்படும் பாகம் "இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்" என்பதே. காய்த்த மரம் கல்லெறி படுமே யொழியக் காயாத மரம் கல்லெறி படாது. அதுவேபோல் நிரம்பவும் நிதியைப் படைத்த சீமான்களை யடுத்தே இரவலர்பலரும் யாசிப்பர். ஏராளமான செல்வச்சம்பத்தை யடைந்திருந்த போதிலும் சிலர் தங்களுக்கு இயற்கையாயுள்ள உலோப குணத்தால் ஏற்பவர்களைக் கண்டதும் "ஐயா! நான் என் செய்வேன்! என்னிடம் இது பொழுது பணமில்லை. நீர் ஏதாவது கொடுக்க இசைவீரேல் நான் ஏற்றுக்கொள்ளத் தடையில்லை."என்று பொய் வார்த்தைகள் பலவும் பேசி வறியோர்களை வறிதே போகச்செய்கின்றனர். "இயல்வது கரவேல்" என்னும் அமுத மொழியை யவர்கள் அறியார்போலும். நான் இச்சமயம் இல்லாதவனா யிருக்கின்றேன் என்று உலோபிகளைப்போல் உரையாமல் 'ஏற்ற கைமாற்றாமை என்னானும் தாம் வரையாது ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண்கடன்' என்பது இரண்டாவது பொருள். இதற்கேற்ப முற்கூறிய புராணமுடையார்,

"இரப்பவன் வாளாதேக இலனெனும் எவ்வம்கூறாது
இரப்பினை நிரப்பல் நன்றாம்."

3. இலனென்னு மெவ்வமுரையாமை யீதல்—யான் இல்லேன் என்னும் இரக்க வார்த்தையை யாசகன் தனக்குச்சொல்வதற்கு முன்பே அவன் குறிப்பறிந்து கொடுத்தல். "தண்டாமல் ஈவது தாளாண்மை" என்ற ஒளவை தனிப்பாடலும், "குறிப்பறிந்து ஈதலே கொடை" என்ற புலவர்க் கௌடதமாம் நைடதப் பாடலும், "தொல்லை இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயும் கரவாமலீகை கடன்" என்ற புறப்பொருள் வெண்பாவும் புகட்டு

வது உய்த்துணரத்தக்கது. குறிப்பறிந்தீயுங் குணமுடைய வள்ளலை இக்காலத்தில் காணக் கிடைப்பது அருமையினு மருமையே!

4. நான்காமுரை. இலனென்னும் இழிமொழியை இரப்பவன் தன்னிடம் தானம் வாங்கின பின்பும், வேறொருவனிடம் போய்ப் புகலா வண்ணம்அவனதுவறுமை நீங்கவும், அவனுக்குச் செல்வம் நிரம்பவுந் திருப்தியுண்டாகவும்கொடுத்தல். 2, 3, 4 ஆகிய மூவுரைகளும், குறளினுரைகண்ட மற்றை யாசிரியர்களின் கருத்து என்பது பரிமேலழகரது குறிப்புரையால் வெளியாகிறது. சிலவிடங்களில் பிறவாசிரியர்களின் கருத்தை இப்பரிமேலழகர் மறுப்பதுபோல இக்குறளில் மறுத்திலர். ஆதலின் இவ்வுரைகளும் பொருத்தமுடையன வென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

5. யான் மிகவும் ஏழை என்ற இளிவரவை யாசகன் கூறியதும், அவனது வறுமை நீங்கி அவனையும் ஒரு கொடையாளி யாகும்படியான மிகுந்த பொருளை ஈதல்.

"அருத்தியின் இலனென் றொருவன் அளித்தலும்,இலன் என் றப்பால்
உரைத்தில னாகச் சால உதவலும், ஏற்கின் றானும்
வருத்துற இலனென் றன்மை வழங்கிட வளவில் செல்வம்
பொருத்தலும் ஒன்றி றென்று புகழ்மிக விளங்கி நிற்கும்"

எனக் கச்சியப்ப முனிவர் தமது புராணத்தில், மேற்கண்ட, 3,4,5-ஆகிய மூவுரைகளின் கருத்தை மிக அழகாய்ப் பொருத்தி யிருப்பதும் பெருமையுடைத்தே!

6. சில செல்வவந்தர்கள் "நாம் பிறர்க்குக் கிஞ்சித்தேனும் ஈயாதபட்சத்தில் பலரும் தூற்றுவரே! அந்தோ! இவர்களுக்கஞ்சியல்லோ பாடுபட்டுத் தேடிய பணத்தை வழங்கும்படி நேரிடுகின்றது. ஐயோ! தனமே! கைவிட்டுப்போகின்றாயோ" என்று மனம்வாடி ஈய இசைகின்றனர். "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி." "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது, ஊதிய மில்லை யுயிர்க்கு" என்ற ஆன்றோர் முதுமொழிகளை உணராதவரா யிருக்கின்றனரே! பெரிதும் பாவம்! எட்டிமரம் காயாதிருந்தென்ன, காய்த்துப் பலனென்ன? அங்ஙனமே ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன? பிறர்க்குதவிசெய்யாது பெருஞ்செல்வம் படைத்திருப்பதைக் காட்டிலும், பரம ஏழையாயிருப்பது மேலாகும் என்பதற்கு ஐயமில்லை.

ஆகவே பலருடைய அலர்மொழிக்கஞ்சியேனும் தியாகம் என்று வந்தவனை நாஸ்தி என்று சொல்லியனுப்பாமல் கொடுத்தல் என்ற ஓர் பொருளாயு முணர்த்தும்.

7. சிலர் இரப்பவர்களைக் கண்டதும் "இவன் நமதுவீட்டின்கண் வந்துள்ளான்" என்றெண்ணித் தங்களுக்கு வாயில்வந்தபடி அவர்களை ஏசிப் பேசுவது வழக்கமாயிருக்கின்றது. அவ்விதம் யாசகனை இலனென்று எளனஞ்செய்யாது ஈதல் என்றும் பொருள் கொள்ளலாம்.

மேற்கண்ட 6, 7 உரைகளின் கருத்தைப் பின் வரும்பாடலால் பெரிதும் அறியலாகும்.

"நலமிகு செல்வம் பெற்றும்
நல்குர வினரைக் காத்தல்
இலன்அற மாதி சீர்த்தி
யிலன்எனப் பிறர்சொல் எவ்வ
வலனுரைக் கஞ்சி யேனும்
வறியனை இலனென் றெள்ளாது.
அலர்புகழ் பயனும் வேண்டின்
ஆக்கையும் அளிக்க மைந்தா."

இம்மாதிரியான விசேஷார்த்தங்கள் பலவற்றையும் ஒருங்கே தருகின்ற சிறப்புப்பற்றியும், குறளின் சுருக்கத்தையும் பொருளின் பெருக்கத்தையும் பாராட்டி, இடைக்காடர் உரைத்த "கடுகு" என்பதை மாற்றி,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்."

என்று சொல்லாலும் சிறப்புச் செய்தனர் ஒளவையாரும்.

சிறு புன்னுனியில் தங்கியிருக்கும் நீரில் அருகிலிருக்கும் பெரிய பனைமரத்தின் நிழல் எவ்விதம் காணப்படுகின்றதோ அதுபோல் பரந்த பொருளைச் சிறிய குறளில் அமைத்தனர் என்னுங் கருத்துத் தோன்ற,

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி."

என்று கபிலரும் பெருமைப்படுத்தினது கருதத்தக்கதே!

இவ்விதமே பரந்த பொருளைத் தரும் குறள் வெண்பாக்களை யடுத்த சஞ்சிகையில் எடுத்தாளப்படும்.

எஸ். சுப்பிரமணியன்.

ஆத்திசூடி விளக்கம்

MORAL SAYINGS EXPLAINED

22 பருவத்தே பயிர்செய்.

தருந்த காலத்தில் பயிர்த்தொழிலைச் செய் என்பது இதன்பொருள். அதாவது உழுது பயிரிட்டு அறுப்பறுத்து முடித்தலாகிய பயிர்த்தொழில்களை எல்லாம் தகுந்த காலங்களில் தவறாமல் செய் என்பதாயிற்று. எந்தக்கருமத்தையும் காலமறிந்து செய்தால்தான், பயன் படும். அவ்வாறின்றித் தகாத காலத்தில் எவ்வளவு முயற்சிசெய்தாலும், முயற்சி வீணாகுமேயன்றிக்காரியம் நடந்தேறாது. ஆதலால் மற்றைய தொழிலைப்போலப் பயிர்த்தொழிலையும் செய்யவேண்டும் என்று இந்நீதி வாக்கியத்தில் ஒளவை வெளிப்படையாகக் காட்டுகிறாள்.

இதில் த்வனிக்கும் பொருளே மிகச் சிறந்தது. பயிர்செய்தல் என்பதை,

> இன்சொல் விளைநிலனா, வீதலே வித்தாக,
> வன்சொல் களைகட்டு, வாய்மை எருவட்டி
> அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
> பைங்கூழ் சிறுகாலைச் செய்.

என்ற பாட்டில் கூறப்பட்டிருக்கும் உருவகப்பயிர்த் தொழிலாகக் கொண்டால், சிறந்த பொருள் இந்நீதி வாக்யத்திலிருந்து வெளிப்படும். தர்மம் நடத்துவதாகிய சிறந்த பயிர்த்தொழிலை இளமைப்பருவமாகிய தகுந்த பருவம் முதல் செய்து வரவேண்டும். அதற்குத் தகுந்த காலம் இளமையாதலாலும், முதுமையில் அதன் பழக்கத்தடிப்பால் மனோபலம் ஏற்பட வேண்டுமாதலால் இவ்வாறு கூறும்படியாயிற்று. இதற்கேற்பவே :—

> காலைச் செய்வோம் என்றறத்தைக்கடைப்பிடித்துச்
> சாலச் செய்வாரே தலைப்படுவர்—மாலை
> கிடந்தா னெழுத லரிதான்மற் றென்சொல்
> அரங்காலைச் செய்யாத வாறு.

என்ற அறநெறிச் சாரப்பாட்டும் உள்ளது.

மதவழியில் ப்ரயத்தனப்பட்டு வாழ்க்கைநோக்கத்தை உணர்ந்து தாக்கற்று நிற்றலாகிய சிறந்த தொழிலையும் பயிர்செய்தல் அலங்கார முறைமையில் குறிப்பதாகக் கொள்ளலாம். தாயுமானவ ஸ்வாமிகள் திருப்பாடல்களில்:—

> காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
> கண்டகங் காரமென்னும்
> கல்லைப் பிளந்து, நெஞ்சகமான பூமிவெளி
> காணத்திருத்தி, மேன்மேல்
> பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
> பதித்தன்பு நீராகவே
> பாய்ச்சியது பயிராரு மட்டோ மாயைவன்
> பறவையணு காதவண்ணை
> நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
> நின்னன்பர் கூட்டமெய்த
> நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
> நின்னருட் பாரமென்று
> மாராரு மறியாத சூதான வெளியில்வெளி
> யாகின்ற துரியமயமே!
> அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
> யானந்த மானபரமே!

என்ற பாட்டில் ஞானப்பயிரிடும் விஷயம் நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இம்மாதிரியாகஞானப் பயிர்த் தொழிலையும் பருவத்தே செய்யவேண்டும் என்பதாயிற்று. செய்யவேண்டிய பருவம் யாது என்பதை ஆழ்வார், "கிளரொளி யிளமை"

என்ற பாட்டில் நன்றாகக் கூறிவிட்டார். ஆகவே ஒவ்வொரு காரியத்துக்கும் தகுந்தகாலம் உண்டு. கல்விக்கு இளமையே தகுந்த பருவம். இதைப்பற்றிப் பின்னர் எடுத்து விவரிப்போம். ஆதலால் எந்தக் காரியத்தையும் தகுந்த ஸமயத்தில் செய்து முடிக்கவேண்டும். அப்பொழுதுதான் காரியம் ஸரிவர முடிவுபெறும்.

பருவத்தே பயிர் செய்யாது தகுந்த ஸமயங்களைத் தவறவிட்டதனால் தீராத்துயரத்திற்கு ஆளாகி முடிவில் தானும் இறக்கும்படி நேர்ந்ததற்கு ஷேக்ஸ்பியர் மஹாகவி எழுதிய "ஹாம்லத்" நாடகமே தகுந்த திருஷ்டாந்தம். ஹாம்லட்டின் சிற்றப்பன் அவன் தகப்பனைக்கொன்று ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டான். ரஹஸ்யமாக நடந்த இந்தக் காரியம் ஹாம்லட்டிற்கு அவன் தகப்பன் பிசாசால் தெரியவந்ததும் அதன் கட்டளைப்படியே அவன் தன் சிற்றப்பனைக் கொன்றுவிடுவதாகத் தீர்மானித்தான். ஊராருக்கெல்லாம் இந்தச் சிற்றப்பன்பேரில் ஸந்தேஹம்தான். இந்த ஸமயத்தில் பலர் அறிய ஹாம்லட் அவனைக் கொன்றிருந்தாலும் ஒரு கெடுதியும் வந்திராது. அவன் தாய் சிற்றப்பனைக் கல்யாணம் செய்துகொண்டிருந்தாலும், ஒருவேளை பிசாசம் கூறியது உண்மையாக விராமலிருந்துவிட்டால் என்ன பண்ணுவது என்ற ஸந்தேஹத்

14562

தாலும், தன் காரியத்தைத் தள்ளிவைத்து ஸுமார் இரண்டு மாதம் பைத்தியம்போல் வேஷம் போட்டுக்கொண்டு வீண்போக்கிவிட்டான். ஆனால் சிற்றப்பன் உளவை இதன் மூலமாக உணரவேண்டும் என்ற ஒரு நோக்கம்மாத்திரம் இவனுக்கு இருந்தது. சிற்றப்பனுக்குமாத்திரம் ஹாம்லட்டின்பேரில் ஸந்தேஹம்தான். அவன் உட்கருத்தை அநேகரை விட்டு அறிய முயன்றான். ஹாம்லெட் அவ்வூர் மந்திரி பெண்ணாகிய "ஓபீலியா"விடம் காதல் கொண்டிருந்தான். அவள் மூலமாகவும் ஹாம்லெட்டின் வேஷரஹஸ்யத்தை உணரப் பார்த்தான் சிற்றப்பன். இப்படி இருக்கையில் சில நாடகக்காரர்கள் வர, அவர்களைக்கொண்டு தன் தகப்பன் இறந்த கதையை நாடகமாக நடிக்கும்படி ஹாம்லெட் ஏற்பாடு செய்து அதற்குச் சிற்றப்பன் தாயார் முதலியவர்களை அழைத்திருந்தான். நாடகம் நடக்கையில் அதில் அரசனைக் கொலைசெய்யும் காட்சி நடைபெறுங்கால் சிற்றப்பன் நடுநடுங்கி எழுந்தோடிவிட்டான், எல்லோரும் திடீரென்று போய்விட்டனர். இதனால் ஹாம்லெட்டிற்குச் சிற்றப்பன் குற்றம் தெரிந்ததுமல்லாமல், சிற்றப்பனுக்கு ஹாம்லெட் விஷயத்தில் உள்ள ஸந்தேஹம் திடப்பட்டுவிட்டது. எப்படியாவது ஹாம்லெட்டைத் தொலைத்துவிடவேண்டும் என்று தீர்மானித்துவிட்டான். அன்றிரவே ஹாம்லெட்டிற்கு அவன் தாயைக்கொண்டு புத்திமதி கூறச்சொல்லி அப்பொழுது வரும் ஹாம்லெட்டின் வாய்மொழியால் அவன் ரஹஸ்ய எண்ணங்களை உணர மந்திரியைத் தாயார் உள்ளில் ஒளிந்திருக்கும்படி செய்தான் சிற்றப்பன். பின்னர் தன் குற்றங்கள் ஞாபகம்வரத் தன்னை மன்னிக்கும்படி கண்ணை மூடிக்கொண்டு கடவுளை வேண்டிக்கொள்ளத் தொடங்கினான். அப்பொழுது தாயார் உள்ளுக்குப் போய்க்கொண்டிருந்த ஹாம்லெட் அங்குவர, சிற்றப்பன் தனிமையாக விருப்பதைக் கண்டு அவனைக் கொன்றுவிட யோசித்தான். 'இவன் பகவானை நினைத்து இருக்கிறான். இவனை இப்பொழுது கொன்றுவிட்டால் இவனுக்கு ஸ்வர்க்கமல்லவா வரும்? இவனுக்கு நரகம் வரும்படியல்லவோ கொல்லவேண்டும்' என்று எண்ணி நல்ல தருணத்தைத் தவற விட்டுவிட்டு தாயாரிடம் சென்றான். இந்தத் தருணத்தைத் தவறவிட்டதால்தான் இவனுக்கு விளைந்த ஆபத்துக்கோ அளவே இல்லை. தாயாருடன் அவள் சிற்றப்பனைக் கல்யாணம் செய்துகொண்டிருப்பது தவறு என்று வெளிப்படையாகக் கூறிவருகையில், ஒளிந்து ஒருவன் கேட்டிருப்பது ஹாம்லெட்டிற்குத் தெரியவந்தது. அவன் ஒருவேளை சிற்றப்பனாகவே யிருக்கலாம் என்று ஒரு எண்ணம்அவனுக்குத் தோன்ற திடீரென்றுகத்தியையெடுத்து அந்தவிடத்தை நோக்கிக் குத்திவிட்டான். சவத்தை வெளியிலிழுத்து நோக்கவே, தன் காதலி தகப்பனாக விருந்தது. என்னசெய்வான் பாபம்! இதனால் சிற்றப்பன் இவன் பித்தம்தெளிய இவனை வெளிநாட்டுக்கு யாத்திரை யனுப்புவதாகக் கூறி இவனை வழியில் கொல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். தகப்பன் இறந்த துக்கத்தாலும் ஹாம்லெட்டிற்கு வந்த பைத்தியத்தால் ஏற்பட்ட துக்கத்தாலும் ஓபீலியா பித்துப்பிடித்து இறந்தாள். ஓபீலியாதமயன் "லீயார்டிஸ்" விரோதமும் ஹாம்லெட்டிற்கு வந்துவிட்டது. இதைச் சிற்றப்பன் அதிகப்படுத்தி விட்டான். தேசாந்தரம் அனுப்பப்பட்ட ஹாம்லெட் தப்பித் திரும்பி வர லீயார்டிஸ்ஸுக்கும் அவனுக்கு விளையாட்டாக ஒரு கத்திச் சண்டையை ஏற்பாடுசெய்து ஹாம்லெட்டைக் கொல்ல யோசித்துவிட்டான் சிற்றப்பன். கத்திச்சண்டையன்று விஷங்கலந்த பானம் ஒன்றைத் தயார் செய்து, கத்தியால் ஹாம்லெட்டு இறவாது தப்பித்துவந்தால் அதைக் குடிக்கக்கொடுத்துக் கொல்லவும் தயாராகி யிருந்தான் கொடியசிற்றப்பன். ஏற்கெனவே ஹாம்லெட் வாக்கால் புண்பட்டிருந்த தாயார் இதைக் குடித்து இறந்தாள். ஹாம்லெட்டிற்கு நல்ல கத்திக்காயமும்பட்டது. லீயார்டிஸ் ஹாம்லெட்டின் பெருந்தன்மையைக் கண்டு, தன்பேரிலும் காயம் பட்டுவிட்டதால் இறக்கும் முன் அவனுக்கு ஒரு உதவிபுரியஎண்ணி சிற்றப்பன் சதியாலோசனைகளை வெளியிட்டான். ஹாம்லெட்டிற்குத்தன் மரணம் அணுகிவிட்டது என்று கண்டு, அவசரமாகச் சென்று சிற்றப்பனைக் குத்தித் தள்ளி அவன் வாயில் மிகுதி இருந்த விஷபானத்தையும் வார்த்துவிட்டான். கொஞ்சநாழிகையில் ஹாம்லெட்டும் இறந்துபோனான். இங்கு ஹாம்லெட்டு முதலில் அகப்பட்ட தகுந்த காலத்தைச் சற்று அஜாக்ரதையாகக் குதர்க்கத்தால் விட்டுவிட்டதால் சிற்றப்பன் ஒருவன் இறக்கவேண்டியதற்குப் பதிலாக, தன் மாமனார், காதலி, மச்சினன், தாயார், ஸ்நேஹிதர்கள் முதலியவர்களை இழந்து முடிவில் தானும் இறக்கும்படி நேர்ந்தது. ஆகவே தகுந்த காலத்தில் நமது கடமைகளைச் செய்யாது விட்டால் பெருங் கேடு விளையும்.

பருவத்தில் பயிர்த் தொழில்களைப் பார்க்காத குடியானவர்களுக்கு நஷ்டம் ஏராளமாக ஏற்படும் என்று கூறவேண்டியது அவசியமில்லை. இதற்குத் திருஷ்டாந்தம் நமது முன்னரே ஏற்படுவதை எல்லோரும் காணலாம். இந்த விஷயமாகத்தான் ஆத்திசூடி வெண்பாவும் அமைந்துள்ளது.

> உன்னாட்டில் பொற்களந்தை யூர்நன்னாட் செய்த
> பொன்னே விளையப் புகழ்பெற்றார்—ஒன்னார் [பின்னர்
> பயந்திடுவேற் புன்னைவன பார்த்திபா நீயும்
> செயும்பரு வத்தே பயிர்செய்.

இந்நீதி வாக்யத்தில் எந்தக் காரியத்தையும் தகுந்த காலத்தில் செய்ய வேண்டும் என்ற பொதுப்பொருளை ஒளவை வெகு அழகாக அமைத்திருக்கிறாள்.

நமது சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத் தொகை அனுப்பும்போதும் தமது விலாஸத்துக்கெதிரே யிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக் கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும். மானேஜர்.

காலஞ்சென்ற ஜப்பான் சக்கரவர்த்தி அவர்கள்

THE LATE MIKADO-THE EMPEROR OF JAPAN

"கண்ணெனப் படுவ மூன்று, காவலர் கல்வி
* காமர், விண்ணினைச் சுழல வோடும் வெய்யவன் என்
னும் பேரார் ; எண்ணினுன் றலைக்கண் வைத்த கண்
ணஃ தில்லை யாயின், மண்ணினுக்கிருளை நீக்கும் வகை
பிறி தில்லை மன்னே."

(* காமர்—அழகிய) —சூளாமணி.

அரச நிலைமையின் சிறப்பு

உலகத்துக்கு அரசன், கல்வி, சூரியன் என்பன மூன்று கண்கள் என்றும், அம்மூன்றிலும் முதலில் சொல்லப்பட்ட அரசனென்னும் கண் இல்லாவிட்டால் உலகத்திலுள்ள உயிர்ப்பிராணிகளைப் பாதுகாப்பதற்கு வேறு வழி ஒன்றுமில்லை என்றும் மேற்கூறிய சூளாமணிச் செய்யுளால் அறியப்படும் இவ்விலக்கணம், குடியரசும் (Republic) ஜனசுதந்தரமும் நாளுக்குநாள் அதிகப்பட்டு வரும் இக்காலத்தில் பொருத்தமுடையதாகுமோ எனச் சிலர்க்குச் சந்தேகந் தோன்றலாம். அதனைக் கீழ் எழுதப்படும் ஜப்பான் சக்கரவர்த்தியின் சரித்திரத்தினால் அவர்கள் நிவிர்த்தி செய்துகொள்வார்கள் என்பதற்கு ஐயமில்லை.

ஜப்பான் நாட்டின் இயற்கை யமைப்பும், முன்னைய நிலைமையும்

ஜப்பான் தேசமானது இங்கிலாந்தைப்போல நாற்புறமும் நீர் அரணால் சூழப்பட்ட ஒரு சிறு தீவு என்பது நம் "போதினி" படிப்பவர் யாவர்க்கும் தெரிந்திருக்கலாம். சீதோஷ்ண ஸ்திதி முதலிய சில அம்சங்களிலும் இந்நாடு இங்கிலாந்தை ஒத்திருக்கிறது. இங்ஙனம் ஜப்பான் தேசமானது தனது இயற்கையமைப்பினாலேயே, ஏற்றம் அடையத்தகுந்த நிலைமையில் இருந்ததெனினும், நம் சரித்திரத் தலைவராகிய முட்ஸுஹிடோ என்பவர் பட்டத்துக்கு வரும் முன்னர் அது மட்டற்ற குழப்பமுற் றிருந்தது. ஏறக்குறைய முந்நூறு வருஷங்களாக ஜப்பானில் "ஷோகன்" என்னும் பேரையுடைய ஒரு வம்சத்தாரே உண்மையில் அரசாட்சி செய்து வந்தார்கள். அவ்வரசர்கள் பெயரால் அரசர்களேயன்றிச் செயலால் அரசர்களல்லர். "ஷோகன்" என்பவர்கள் பரம்பரையாகச் சேனாதிபதிகளாயிருந்து வந்தவர்கள். அக்காலத்தில் போர்வீரர்கள் நேரே அரசனது உத்தரவுக்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்லர். அவர்கள் படிப்படியாகத் தமக்கு மேலுள்ள அதிகாரிகளுக்கே கீழ்ப்பட்டிருந்தனர். ஆதலின் சேனைத்தலைவனான "ஷோகன்" என்னும் பட்டப்பேருடையவனது அதிகாரம் வரவர பலங்கொண்டது. சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் ஜப்பான் இந்நிலைமையில்தான் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், ஐரோப்பிய வர்த்தகர்கள் ஜப்பானில் வியாபாரம் செய்வதற்குச் சில சுதந்தரம் வேண்டுமென்று "ஷோகனை" வற்புறுத்திக் கேட்டவண்ணமா யிருந்தனர்.

இவற்றையெல்லாம் கவனித்து வந்த ஜப்பானிய உயர்குலத் தேசாபிமானிகள் 'ஷோக'னுடைய அதிகாரத்தை முழுவதும் அடக்கி, அரசனையே சர்வாதிகாரியாக்கினால்தான் நாட்டிற்கு நன்மை விளையுமென்றும், இல்லாவிடில் நாட்டில் இரண்டுகட்சி ஏற்படுவதின் பயனாக,தம் நாட்டினைப் பிறர் எளிதில் கவர்ந்துகொள்வர் என்றும் ஊகித்துணர்ந்து கொண்டனர். இங்ஙனம் உணர்ந்துகொண்ட உயர்குலத்தோர் ஒருங்கு சேர்ந்து, காலதாமதம் செய்யாது, நாட்டின் நன்மை கருதி, தங்களுள் ஒருவனாகிய "ஷோகன்"எல்லாப் பொறுப்பையும் இறைவனுக்கே கொடுத்துவிடவேண்டுமென்றும், அதுமுதல் ஜப்பான் தேசம் அரசராலும், அவர்தம் அமைச்சராலும் ஆளப்படவேண்டு மென்றும் தீர்மானித்தனர். இவர்களெல்லாம் ஒரே மனத்தினராயிருந்ததனால், 300 வருஷ காலமாக அதிகாரஞ் செலுத்தி வந்த 'ஷோகன்' ஸ்தானம் சொற்ப காலத்தில் அடியோடே இல்லாமற் போய்விட்டது. இந்த விசேஷ மாறுதல் ஏற்பட்ட வருஷம் கி. பி. 1867. அவ் வருஷமே மாட்சிமை தங்கிய "முமுட்ஸுஹிடோ" அவர்களும் பட்டத்துக்கு வந்ததும்.

சக்கரவர்த்தியின் வெளித்தோற்றம் (Personality)

நம் சக்கரவர்த்தியவர்கள் (ஜப்பானில் அரசர்க்கு மிக்கேடோ என்று பட்டப்பெயர் வழங்கும்) 1852-ஆம் வருஷம் நவம்பர் மீ 3-ஆம் தேதி பிறந்தனர். ஆதலால் அவர் பட்டத்துக்கு வந்தபோது அவர்க்கு வயது பதினைந்தே. அவர் பார்ப்பதற்குக் கம்பீரமான தோற்றமுள்ளவர். ஜப்பானியர்களெல்லாம் குறுகிய வடிவினர். அவர்களில் இவர் 5-அடி 8 அங்குலம் உயரமுடையவராதலால், அந்நாட்டில் மிக உயர்ந்தவர் எனக் கருதப்பட்டனர். அவர் முகமும் கண்ணும் எப்போதும் 'குறுகுறு' என்றிருக்கும். தம்மிடம் வந்து பேசுபவரிடத்தில் அவர் இனிய முகத்துடன் மரியாதையாய்ப்

காலஞ்சென்ற ஜப்பான் சக்கரவர்த்தி

பேசுவார். அவர் பெரும்பாலும் ஐரோப்பியர் போலவே உடை தரிப்பார். ஆனால் அருங்கோடைகாலத்தில் ஜப்பான் பட்டு வஸ்திரங்களை அணிந்துகொள்வார்.

அவர்க்குப் பிரியமான ஆட்டங்கள்.

நம் மிக்கேடோ அவர்களுக்குத் தேகப்பயிற்சி செய்வதில் விசேஷ பிரியம் உண்டு. இவர் குதிரையேறிச் சவாரி செய்வதில் மிகச் சிறந்தவர். ஜப்பான் தேச முழுவதிலும் இவர்க்குச் சரியாகக் குதிரை சவாரி செய்பவரில்லையாம். 'குஸ்தி' (Wrestling) பயில்வதிலும் இவர் மிகத் தேர்ந்தவர். பல பேர்பெற்ற பயில்வான்களைத் தாமே தோற்க அடித்திருக்கிறார். ஒருமுறை "கவுண்ட் டேட்சு" என்பவருடன் செய்த குஸ்தியில் தாம் தோற்றுப்போன பிறகு, தாமே நேரிற் குஸ்தி செய்வதை நிறுத்திவிட்டனரென்றாலும், குஸ்தி செய்பவரைப் பலவழியாலும் உற்சாகப்படுத்தினார். இவர்க்குக் குதிரைப் பந்தாட்டத்திலும் (Polo) பிரியம் அதிகம். இவர் அரசராய்ப் பிறந்திராவிடில் சேனைத்தலைவராய் வந்து போரில் மிக்க வீரங்காட்டியிருக்கக்கூடுமென்று தோன்றுகிறது.

இவர் செய்த விசேஷ மாறுதல்

இவ்வரசர் பட்டத்துக்கு வருவதற்குமுன் ஜப்பான் தேசத்தில் ஐரோப்பிய நாகரீகம், பழக்கம் வழக்கம் இவை எவையும் வந்ததில்லை. அவை இயல்பாக வர இருந்ததையும் 'ஷோகன்' முதலியவர்கள் வரவொட்டாது தங்களாலான வரையில் தடுத்து வந்தனர். புதிய அரசரோ, தமது நுண்ணுணர்வினால் அங்ஙனம் செய்வது அசாத்தியமென்பதையும், சாத்தியமாவதென்றாலும், அது சுத்தத் தப்பு என்பதையும் அறிந்துகொண்டனர். ஜப்பான் தேசம் தனது இயற்கையமைப்பின் சிறப்பினால் ஏற்றம் அடையவேண்டுமென்றால், ஐரோப்பிய ஒழுக்கங்கள் பல அப்படியே ஜப்பானிலும் அமைய வேண்டுமென்னுங்கருத்து இளம்பிராயத்திலேயே நம் மன்னர் பெருமானுக்கு மனத்திற் பட்டது. அவ்வெண்ணம் அவர் மனத்தில் உதித்ததுதான் இப்போதைய ஜப்பானின் மஹோன்னத ஸ்திதிக்குக் காரணமென்பது சரித்திரவுணர்ச்சியுள்ளார் (Historians) எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததே. இவ்வெண்ணங் கொண்டவர், தாமிளவரசராய் இருக்கும்போதே (இவர் அரசானது பதினைந்தாம் வயதில் என்பது ஞாபகத்திருக்கவேண்டும்), ஐரோப்பாவிலுள்ள ஜர்மெனி, பிரான்ஸு, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பி வந்திருந்த ஜப்பானியர்களைத் தமக்குப் பலவித பாடங்களையும் போதிப்பதற்கு ஆசிரியர்களாக அமைத்துக்கொண்டனர்; தாம் அரசரானது முதல் ஐரோப்பியக் கல்வி விஷயத்தில் மிகுந்த ஊக்கங்காட்டி வந்தார்; இன்வாதூரா என்னும் இளவரசரையும், பல மாணுக்கர்களையும் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் அனுப்பி, அங்கங்கு புதிதாகக் காணப்படும் ஒவ்வொன்றின் உண்மையினையும் உணர்ந்து ஜப்பான் தேசத்துக்கு ஏற்றதை யெல்லாம் குறித்துக்கொண்டு வரும்படி செய்தனர்; வேற்று நாடுகளுக்குச் சென்று திரும்பியவர்களுடன் நெடுநேரம் கலந்து பேசி, அவர்கள் கூறும் விஷயங்களில் தமக்குச் சரியெனத் தோன்றுவனவற்றை யெல்லாம் ஜப்பானில் அனுஷ்டித்து வரும்படி கட்டளை பிறப்பித்தனர்.

"ஊற்றுநீர்க் *கூவலுள் உறையும் † மீனனார்
வேற்றுநாட் டதன்சுவை விடுத்தல் மேவினார்"

என சீவக சிந்தாமணியில் வேற்றுநாட்டின் சுவையுணராதார் ஊற்றிலுள்ள மீனெனக் கூறியதன் உண்மையினை இவர் நன்றாக உணர்ந்து கொண்டனர்.

இங்ஙனம் பிறநாடுகளிலிருந்து ஜப்பானில் அனுஷ்டானத்துக்கு [illegible]ந்த விஷயங்களின் விவரம் வருமாறு:— கப்பல், கப்பற்படை இவற்றின் சம்பந்தப்பட்டவையெல்லாம் இங்கிலாந்திலிருந்து 'காப்பி' செய்யப்பட்டன. காலாட்படை, மருத்துவம் இவற்றைச் சார்ந்த எல்லாம் ஜர்மெனியிலிருந்து வந்தன; சங்கீதம், சித்திரவேலை முதலியன, இட்டாலி, பிரான்ஸு இந்நாடுகளிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன; சட்டம், கல்வி, கைத்தொழில் முதலிய பல நாடுகளிலிருந்து வடிக்கட்டி இறுக்கப்பட்டவை. இம்மாறுதல்களைக் குறித்து 'மார்க்குவிஸ் இட்டோ' என்னும் முதல்தரமந்திரியானவர் மிக்கேடோ அவர்கள் பாலினின்றும் வெண்ணெயெடுப்பதுபோல, பல தேசங்களிலிருந்து அங்கங்குள்ள சிறந்தவற்றிலிருந்து அவற்றின் சாராம்சங்களைப் பிழிந்தெடுத்துவிட்டார் என்று சொல்லியிருக்கிறார்.

இம்மாறுதலின் பயன்

இம்மாறுதலினால் விளைந்த பயனென்னவெனில் அதற்கு ஒரே மொழியில் நாம் மறுமொழி கூறிவிட

(* கூவல்-கிணறு; † மீன் அனார்-மீனைப்போன்றவர்.)

லாம். அதாவது இக்காலத்திய ஜப்பானின் “முதன்மை” என்பதேயாம். ஜப்பான் மிகச் சிறிய நாடெனினும், சீர்திருத்தம் வாய்ந்த தன் சேனாபலத்தினால் தன்னிலும் பன்மடங்கு பெரியதாகிய சீனதேசத்தோடு இருமுறை தான் செய்த போரிலும் (1874-ஆம் வருஷத்திலும், 1894-ஆம் வருஷத்திலும்,) இணையில்லாத வெற்றிபெற்றிலங்கிற்று. 1904-ஆம் ஆண்டில் நடந்த ருஷிய-ஜப்பானிய யுத்த விவரங்கள் நேற்று நடந்தவைபோலிருக்கின்றன. அந்த யுத்தத்தில் ஜப்பானியர்களது கப்பற்படையும் காலாட் படையும் காட்டிய ஒற்றுமை, வீரம், ஒழுங்கு இவை பல ஐரோப்பியர்களால் இன்றும் புகழப்படுதலுமன்றி, அப்போரில் ஜப்பான் நற்பேர் பெற்று, உலகிலுள்ள உயர்தர நாடுகளில் தானும் ஒரு முதல்தரமான நாடாவதற்குக் காரணமாயிருந்தன.

இங்ஙனம் முன்னர்க் கூறிய மாறுதலின் பயனாக ஜப்பான் போரில் வெற்றி பெற்றது எனக் கூறுதல் குன்றக் (சுருக்கமாய்க்) கூறுதலேயாகும். ஏனெனில் நாட்டில் உட்குழப்பமின்றி, அமைதியெங்கும் பரவி வருவதால், நாடெங்கும், கல்வி, நல்லுணர்வு, வர்த்தகம் முதலிய செழித்தோங்கி, வருகின்றன. குடிகளும் சுபிக்ஷமாக வாழ்ந்து வருகின்றனர். இப்படிப்பட்ட அமைதியினால் அமையும் இன்பமும் மேற்கூறப்பட்ட மாறுதலின் பயனேயாம்.

இவ்வரசர் செய்த ராஜாங்க மாறுபாடு

நம் “மிக்கேடோ” அவர்கள் பட்டத்துக்கு வருவதற்கு முன், ஜப்பான் அரசின் நிலைமை எப்படி யிருந்ததென முன்னர் கூறப்பட்டிருக்கிறது. அப்போது உண்மையில் ‘க்ஷோகான்’ அரசனாயிருந்தானெனினும் அரசனுடைய அதிகாரத்துக்கு அளவேயில்லை. அவன் கொடுங்கோல் செலுத்த விரும்பின், அதனைத் தடுப்பதற்குத் தக்க அதிகாரத்தை யுடையவர்கள் எவருமில்லை. இப்படி ஸ்வயாதிகாரம் முழுவதும் வாய்ந்திருந்த “முட்ஸுஹிடோ” என்னும் நமது அரசர், தம் குடிகளிடத்தில் ஐரோப்பியக் கல்வி முதலியவற்றைப் பரவச் செய்ததற்கேற்ப, அவர்களுக்குத் தாமாகவே சுதந்தரங்களும் கொடுக்க முன்வந்தனர். அவருடைய இந்தச் செய்கைதான் அவரை உலகெலாம் புகழும் அலகிலாப் பெருமைக் குரியவராகச் செய்திருக்கிறது. எப்படியென்றால் உலகத்தில் தேசசரித்திரம் ஏற்பட்ட காலமுதலாக இதுவரையில், தான் செலுத்திவந்த தன்னதிகாரத்தை (autocracy)த் தன் குடிகளின் நன்மைகருதித் தானாகவே சிறிதுசிறிதாய்க் குறைத்துக்கொண்டு, பிரஜைகளின் சுதந்தரத்தை அதற்குத் தக்கபடி படிப்படியாய் அதிகப்படுத்திய அரசர் வேறு யாருமிலர். பிரஜைகளின் பக்குவநிலை யறிந்து அவர்கட்கு நன்மை செய்பவனன்றோ நல்வேந்தனாகும். இக்கருத்துப்பற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும்,

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.”

என இறைவனுக்கு இலக்கணம் வகுத்தனர். 1869-ஆம் வருஷத்திலேயே, அதாவது தாம் பட்டத்துக்கு வந்த இரண்டாம் வருஷத்திலேயே இவ்வரசர் ராஜாங்கத்தின் அமைப்பைக் குறித்துச் சில விசேஷ மாறுதல்கள் செய்வதாக உறுதிமொழி யளித்தனர். அங்ஙனம் அளித்தவர் அப்போதே அரசர்க்குப் பல வழியிலும் உதவி செய்வதற்கு ஒரு ‘ஆலோசனை சபை’ ஒன்று உண்டாக்கினார். இவ்வாலோசனை சபையும் அரசரும் சேர்ந்தே, தேசத்தில் முன்னர்க் கூறப்பட்டபடி, கல்வி, முதலிய பல விஷயங்களில் ஐரோப்பிய முறைகளைக் கைப்பற்றினார்கள். 1883-ஆம் வருஷம், நம் அரசர் மார்க்துவிஸ் இட்டோ என்பவருடன் கலந்து ஜப்பானிய அரசு, இன்ன இன்ன சட்டதிட்டங்களுக்குட்பட்டிருக்கவேண்டியதென ஒரு பட்டயம் பிறப்பித்தனர். அதுமுதல் ஜப்பான் அரசாட்சி, ஆங்கில அரசாட்சியைப்போல ஜன ஆட்சிக்குட்பட்ட அரசாட்சி (Limited Monarchy) யாக அமைந்திருக்கிறது.

1897-ஆம் வருஷத்தில் ஒரு அமெரிக்கா பத்திரிகையானது, ஒவ்வொரு அம்சத்தில் ஒவ்வோரரசர் சிறப்புற்றிருத்தல் கூடுமெனினும், பல அம்சங்களிற் சிறப்புற்றிருக்கும் இவர்க்கு இப்போது உலகில் அரசு செலுத்தும் அரசரில் ஒருவரும் ஒப்பாகமாட்டாரென்றும், அப்படி உவமை யுரைக்க விரும்பின், பண்டைச் சரித்திரத்தை ஆராய்ந்து, ரோமாபுரிக்கு அகஸ்டஸ் போலவும், இங்கிலாந்துக்கு ஆல்பிரட் (The Great) போலவும், பிரான்சுக்கு நெப்போலியன்போலவும், ஜப்பானுக்கு இம் “மிக்கேடோ” அவர்கள் இருக்கின்றனர் என்றும், உற்றுநோக்கின் இவர் மேற்கூறிய ஒவ்வொருவரிலும் உயர்ந்தவரென்றே கூறவேண்டும், என்றும் புகழ்ந்தெழுதி யிருக்கிறது.

போர்வீரர்களிடத்து இவர்க்குள்ள பரிவு

முட்ஸுஹிடோ என்பவர் தமது சேனையினைச் சீர்திருத்தி, சீனாமீதும், ருஷியாமீதும், சிறந்த வெற்றி பெற்றார் என முன்னர்க் கூறினோம். இந்த யுத்தங்களில் இவர் சேனையினது ஊக்கமும் திறமும் உலகு முழுவதும் புகழப்பெற்றன எனவும் கூறினோம். இவர் சேனை இத்துணைச் சிறப்புடையதாதற்குக் காரணம், அது நவீன முறைப்படி பழக்கப்பட்டது மாத்திரமன்று; சக்கரவர்த்தி எப்போதும் போர்வீரர் மாட்டுக் காட்டிவந்த அன்பும் அதற்கு ஒருசிறந்த காரணமாகும். அரசர் தமது அரண்மனையில் போரில் வீரங்காட்டி மாண்டுபோன போர்வீரர்களது படங்களை மாட்டி வைத்திருக்கிறாராம். சாமானிய காலாட் படையாட்களையும் தாம் நேரில் வரவழைத்து, அவர்களுடைய அன்னவஸ்திரம், முதலியவற்றைக் குறித்தும், யுத்தத்தில் ஏற்படும் அவர்களுடைய சுகதுக்கத்தைக் குறித்தும் நெடுநேரம் பேசிக்கொண்டிருப்பது அவருடைய வழக்கமாம். அச்சமயங்களில் வீரர்களும் ராஜவிச்வாசம் பொங்கிக் கண்ணீர் சொரிவாராம். அரசருக்குத் தம் படைவீரரிடத்திருந்த அன்பு இவ்வளவு எனினும், அப்படை வீரருக்கு அரசரிடத்திருந்த அபிமானம் இதனினும் பன்மடங்கு சிறந்தது. சாகுந்தறுவாயில் ஒவ்வொரு வீரனும், ‘அரசன் நீடூழி வாழ்க’ எனத் தன் மனமார வாழ்த்திப் பின் உயிர் விடுவன். ஒருவனும் தோற்றுத் திரும்ப விரும்பான். அப்படித் தோற்க நேர்ந்திடில், தானே தன் வயிற்றினைக் கிழித்துக்கொண்டு கொலை செய்துகொள்வான். அங்ஙனம் போர்முகத்துத் தோல்விக்கஞ்சி, தற்கொலை செய்துகொள்வது சிறந்த கௌரவமென ஜப்பானில் கருதப்படுகிறது. அரசன் இறந்த சங்கதி காதிற்பட்டவுடன் ஒரு போர் வீரன், ‘மன்னன் மரித்தபின்னும் நான் வாழ்குவேனா’ என்று சொல்லிக்கொண்டு அப்போதே தற்கொலை செய்துகொண்டான். இதனால் ஜப்பானியர்களின் அரச விச்வாசம் எவ்வளவு சிறந்ததென்பது எளிதில் அறியப்படும். சேனையே அரச செல்வத்திலெல்லாம் சிறந்தது என்றும், அச்சேனைக்குத் தலைவன் சரியானவனாக இருக்கவேண்டும் என்றும் திருக்குறளில்,

“உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை”

(ஊறு - தடை ; வெறுக்கை - செல்வம்)

“நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.”

(தானை - சேனை)

கூறியிருப்பது ஜப்பான் சக்கரவர்த்திக்கும், அவர் சேனைக்கும் மிகப்பொருத்தமுடையதாகும்.

பிரதிதினம் இவர் காலங்கழிக்கும் விதம்

இப்படிச் சிறப்பு வாய்ந்த நம் முட்ஸுஹிடோ சக்கரவர்த்தி நாள்தோறும் எப்படித் தமது பொழுதைப்போக்கிவந்தனர் என்பதைப் பலர் அறிய விரும்பலாம். அவர் தம் வேலைகளில் மிக்க ஒழுங்கு வாய்ந்தவர். வெளியாடம்பரத்திற் சிறிதும் விருப்பில்லாதவர். நல்ல புஸ்தகங்களைப் படிப்பதில் அவர்க்குப்பிரியம் அதிகம். அவர் ஒவ்வொரு நாளும் நெடுநேரம் படிப்பதுண்டு. காலையில் கீழ்நாட்டுக் காவியங்களைப் பாடங்கேட்பதுடன், மேனாட்டுக் கலைகளையும் தமது ஆசிரியர்களிடம் முறையே கற்றுவந்தனர். பிறகு ராஜாங்க சம்பந்தமான வேலைகளைப் பார்ப்பார். பிற்பகலில்செய்யுள் நூல்களையும், சங்கீதம் முதலிய அருங்கலைகளையும் மிக்க ஆவலுடன் படித்துவருவார். அவர் தாமே இரண்டொரு அரிய செய்யுட் பிரபந்தங்கள் செய்திருக்கின்றனராம். அரசர், தாம் கற்று வந்த பல விஷயங்களிலும், பல தேசங்களுடனும் பரஸ்பர சம்பந்தம் வாய்ந்த சட்டங்களில் (International law) நிபுணராயிருந்தமைபற்றி, சிலசமயங்களில், மந்திரிக்கும், ஆலோசனை சபையாருக்கும் தெரியாத விஷயத்தைக்கூட இவர் எடுத்துச் சொல்லுவாராம்.

முடிபுரை

இவ்வளவு பெருமை மிக்க சக்கரவர்த்தியைப்பற்றிப் பத்திரிகையிற் படிப்பவர்க்கும் அவரிடத்தில் ஒருவித பக்தி ஏற்படும்; அப்படியென்றால், ஜப்பான் தேசத்தார்க்கு அவரிடத்திலுள்ள அன்பின் மிகுதியைப் பற்றி ஆச்சரியப்பட ஏதுவேயில்லை. அவர்கள் இவ்வரசரைத் தெய்வமெனவே கொண்டாடுகிறார்கள். “ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் குறித்த நேரத்தில் பிள்ளைகளெல்லாரும் அரசர், அரசியர் இவர்களின் படத்தை வணங்கி வருகிறார்கள்” என்று காலஞ்சென்ற

W. T. ஸ்டேட் என்பவர் தாம் ஜப்பானைப்பற்றி எழுதியுள்ள புஸ்தகத்தில் கூறுகிறார். —

ஒரு அரசனுடைய ஆட்சியில், ஒரு நாட்டிற்கும் இவ்வளவு நன்மை யுண்டாகவில்லை என, உலகோர் யாவரும் ஒருங்கு புகழும்படி ஜப்பான் தேசத்திற் செங்கோல் செலுத்திய முட்ஸுஹிடோ என்னும் சக்கரவர்த்தி சென்ற ஜூலைமாதம் 30-ஆந் தேதி காலஞ்சென்றனர் எனக் கேட்டுத் துயரம் அடையாதவர்களும் உண்டா? இவரது மரண சமாசாரத்தைக் குறித்து, இங்கிலாந்தின் பிரத மந்திரி மிஸ்டர் ஆஸ்குவித் மிக உருக்கமுறப் பேசினர்; இந்தியா கவர்ன்மெண்டாரும், மூன்றுவாரம் இராஜாங்கமெங்கும் துக்கக்குறி காட்டப்படவேண்டுமென்று விளம்பரஞ் செய்தனர்.

ஜப்பான் நாடு சீர்கெட்டிருந்த காலத்தில் பட்டத்துக்கு வந்து 45 வருஷம் அந்நாட்டில் ராம ராஜ்யம் போற் செங்கோல் செலுத்தி, அந்நாட்டினை உலகிலுள்ள பல “நன்னாட்டின் முன்னாட்டு நாடு” * எனச் செய்த இவரை ஒரு அவதார புருஷர் என்றே எண்ணவேண்டும்.

“ நெல்லு முயிரன்றே ; நீரு முயிரன்றே ;
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம் ”

(உயிர்த்து—உயிராக வுடையது)

எனப் புறநானூற்றிற் கூறியிருப்பது இவரிடத்தும், இவர் நாட்டினிடத்தும் மிகப் பொருத்தம் வாய்ந்துள்ளது.

ஜப்பான் சக்கிரவர்த்தினி

இவ்வளவு சிறப்புடைய மன்னரை, மணவாளராக அடையும் பாக்கியம் பெற்றிருந்தும், இப்போது விதிப்பயனாக வைதவ்யம் அடைந்திருக்கும் அரசியாரைப் பற்றிய விவரங்களிற் சிலவற்றைச் சுருக்கிக் கூறி இதனை முடித்து விடுவோம்.

முட்ஸுஹிடோ சக்கரவர்த்தியின் ராணியாகிய ஹேரௌ கோ என்பவர் 1850-ஆம் ஆண்டிற் பிறந்தவராதலின், அரசரினும் இவர் இரண்டு வயது அதிகப்பட்டவர். தமது 19-ஆம் ஆண்டில் இவர்க்குக் கல்யாணம் நடந்தேறிற்று.

இளம்பிராயத்தில் இவர்க்கு உலக விஷயங்களை அதிகமாகக் கவனித்தறிந்துகொள்ளச் சமயம் நேர்ந்திலது எனினும், அரசியான பிறகு தம் நாயகர் ஏற்படுத்திய ஒவ்வொரு புதிய மாறுதல்களிலும், நமது ராணியாரும் மிக்க ஊக்கம் காட்டி வந்தனர். நவீன முறைகளைக் கைப்பற்றியவர்களில் நம் ராணியாரும் முதல்வராவர். இவரது உடுப்புக்கள் பாரிஸ், லண்டன் முதலிய இடங்களில் தயாராகி வருகின்றன. எனினும், தம் நாட்டு ஐதிகங்களில் இவர்க்கு மிக்க அபிமானம் உண்டு. ஜப்பானியர்களது க்ஷேமலாபமே இவரது மனத்தில் முதலாக இருக்கும் எண்ணம். ஜனங்களும், இவரைத் தம்முயிர்போலப் பாராட்டுகின்றனர். சீனரோடும், ருஷியாவோடும் போர் நிகழ்ந்தபோது, அரண்மனையைச் சேர்ந்த ஒருவரும், ஆடம்பரத்திற்காகப் பொருட்செலவு செய்யக்கூடாதென்று இவர் ஏற்பாடு செய்தனர். தமது சொந்தப் பணத்திலிருந்து வேண்டுமளவு செலவு செய்து, போர்வீரர்களது சௌகரியத்தை அதிகப்படுத்தினர். காயம்பட்டுப்போகும் வீரர்களுக்குச் சிகிச்சை செய்யுந்தொழிலில் பல ஸ்திரீகளைப் பழக்குவித்தனர். தாமே, இவ்விஷய சம்பந்தமானவற்றையெல்லாம் மேற்பார்ப்பதற்கு “ரெட்கிராஸ் சொஸைட்டி” என்னும் தாதிகள் ஸங்கம் ஒன்றுண்டாக்கி அதற்குத் தலைவரா யிருந்து வந்தனர். இப்படி அரசியார் போர்வீரர்களிடத்துக் காட்டிய அன்புக்கும் அரசர் அவ்வீரர்கள்மீது காட்டிய அன்புக்கும், ஒன்றை ஒன்றுக்கு உவமையாகச் சொல்லலாமேயன்றி வேறு உவமை கூறுவது பொருந்தாது.

ஜப்பானிய அரசர்க்குப் பட்டமஹிஷியாகிய இவரைத் தவிர வேறு மனைவியர் பதினொருவர் உளர். அவர்களும் உயர்தர பிரபுக்களின் வம்சத்தைச்சேர்ந்தவர்கள். அவர்கள் சந்ததியாரும் பட்டத்துக் குரிமையுடையவர்கள். உதாரணமாக இப்போது இருக்கும் முதன் மனைவியாகிய ஹேரௌ கோவுக்குப் புத்திரர் இல்லை. ஆதலால் இரண்டாந்தர மனைவியின் புத்திரர் ஒருவரே இப்போது அரசராய் இருக்கிறார். ஜப்பான் அரசாங்க அந்தப்புர ரஹஸ்யம் இப்படிப்பட்டதெனினும், அரசனுக்குப் பட்டமஹிஷியிடத்திலாவது, பட்டமஹிஷிக்குச் சக்களத்தியின் பிள்ளையிடத்திலாவது அன்பு சிறிதும் குறைந்திருக்கவில்லை. உண்மையில் தன் பிள்ளையை வளர்ப்பதுபோல அரசிளங்குமரனை ஹேரௌ கோ என்னும் சக்ரவர்த்தினியே வளர்த்து வந்தனராம்.

புதிய ஜப்பான் சக்ரவர்த்தி

இப்போது பட்டத்துக்கு வந்திருக்கும் அரசர் யோஷி ஹிடோ என்பவர்க்கு 33-வயது ஆகிறது. இவர்க்கு நான்கு சகோதரிகளும், மூன்று புத்திரர்களும் இருக்கின்றார்கள். இவர்களுக்குச் சம்பத்து விருத்தியுடன் சந்தான விருத்தியும் கிடைத்திருப்பது இதனைப் படிப்போர்க்கெல்லாம் மிக்க திருப்தியையுண்டுபண்ணும். இவர் அரசாட்சியில் ஜப்பான் தேசமானது மேல்மேலும் சிறப்புற்றோங்கிச் செழித்து வர வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை நாமெல்லோரும் ஏத்துவோமாக.

“ அரசருங் குடிகளும் அம்ம ! வேறலர் ;
உரைசெயி னுயிருலாம் உடலம் ஆவரால்”-

மதிவாணன்

வே. முத்துஸாமி ஐயர், பி. ஏ., எல். டி.

* மேற்கோள் நளவெண்பாவிலுள்ளது. நல்ல நாடுகளுக்கெல்லாம் முதலாவதாக நாட்டக்கூடிய நாடு என்பது பொருள்.

பிராணிகளின் விருத்தாந்தம்
BIOLOGY—A PRIMER

I. ஜீவவஸ்து :—(i) சேர்க்கையும் தொழில்களும் அமீபா (ii) மனுஷ சரீரத்தின் ஒற்றுமை.

ஜீவவஸ்து என்பது ஜீவனுக்கு ஆதாரமாக உள்ளது. தேகமானது ஜீவவஸ்துவினால் ஆக்கப்பட்டிருக்கிறது. வஸ்துவைப் பிரித்துப் பரிசோதிக்குங்கால் முக்கால் பங்கு ஜலமும் மற்றைய வஸ்துக்களில் கரிவாயுமிருந்தும், பிராணவாயு, உப்புவாயு, கந்தகம், விஷவாயு முதலியவைகளும் சேர்ந்து காணும். இவைகள் என்ன அளவில் சேர்ந்திருக்கிற தென்பதையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் அப்படி லோகப்பொருள்களைச்சேர்த்து ஜீவவஸ்து உண்டுபண்ணினது உண்டா என்று கேட்டால் இன்னும்இல்லையென்று தான் சொல்லவேண்டும். ஜீவவஸ்துவின் தொழில்களை அமீபா என்னும் ஒரு ஜீவராசியின் சரித்திரத்தால் அறியலாம். கட்டுக்கடை ஜலத்தில் வசிக்கும் அமீபா மிகவும் சிறிய தேகமுடையது. பூதக்கண்ணாடி கொண்டு பார்த்தால்தான் தெரியும். ஜீவ்யதொழில்களாகிய சுவாசித்தல், உண்டுபெருத்தல், மக்கட்பேறு என்பவைகளை இவைகளிடம் கண்டபோதிலும் அவைகளுக்கேற்ற விவரமான குறிப்புகளை அவைகள் பெறவில்லை. அசைவுக்குக் காரணமாகிய மூளைவஸ்துவும், திரவ பதார்த்தத்தை உண்டுபண்ணும்படியான மற்றைய உறுப்புகளும் நம் தேகத்தில் இருப்பது போல அமீபாபோன்ற ஜீவன்களிடம் கிடையா.

II. பிராணிகளின் பிரிவுகள் :—(i) பிராணிகளை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். அமீபா போன்ற அற்ப ஜீவராசிகள், மலேரியாபோன்ற விஷசுரமுண்டாக்கும் மூளைக்கிருமிகளும் இவ்வினத்தைச் சேர்ந்தவை..

(ii) கடற்பஞ்சு,பவழப் பிராணி, முதலியவை இருதோல் அமைப்புடன் ஒரு துவாரமுள்ள ஒரு அறையுடன் விளங்கும்.

(iii) ஜீரணக்குழாயானது வாய், ஆசனத்துடன் ஒரு அறையின் வழியாய் ஊடுருவிச் செல்லும்படியான அமைப்பு. இவ்வித அமைப்பு வகையில் புழு, பூச்சி முதல் குரங்கு மனுஷன் வரையில் அடக்கலாம். நத்தை இனமும் இந்தப் பிரிவுக்குள் அடங்கும். மீன், ஊர்வன, பறவை, மிருகம் இவைகள் முதுகெலும்புள்ள பிராணிகளின் உட்பிரிவுகள்.

III. பிராணிகளின் ஜீவிய தொழில்களை எவ்வாறு நடத்துகின்றன வென்பதைச் சற்று கவனிப்போம்.

(i) சுவாசம்.—தரையில் வசிப்பன பிராணவாயுவை காற்றினின்றும், தண்ணீரில் வசிப்பன அதனுள் கலந்த பிராணவாயுவைத்தண்ணீரினின்றும் பெறுகின்றன. அற்ப ஜீவராசிகள் தேகத்தின் வழியாகவும், மீன் போன்ற ஜலசரங்கள் காதின்பக்கம் உள்ளே அமைந்திருக்கும் இரத்தம் நிறைந்த இரட்டைகளின் வழியாகவும் (Gills) மற்றவைகள் (மனிதன்போன்ற) தவளைக்கு மேல்பட்ட பிராணிகள் சுவாசப்பைகளினாலும் பிராண வாயுவைப் பெறுகின்றன.

(ii) உணவு.—நமக்கு உண்ண வாயும், விழுங்கத் தொண்டைக் குழாயும், ஜீரணிக்க வயிறும் குடல்களுமிருக்கின்றன. இவைகளோடு சம்பந்தப்பட்ட கோளங்களிலிருந்து உமிழ்நீர் முதலிய திரவபதார்த்தங்களின் சேர்க்கையால் உணவு ரக்தம் உறுஞ்சி எடுத்துக்கொள்ளக்கூடியமாதிரி ஜீரணிக்கப்பட்டு உறுஞ்சி மிஞ்சிய சக்கையை மலமாகக் கழிக்கிறது. வாயும் வயிறுமுள்ள மற்ற பிராணிகளும் இப்படியே உண்டு ஜீவிக்கின்றன.

(iii) மக்கட்பேறு:—அற்ப பிராணிகள் அமீபாவைப்போல் தன் தேகத்தைப் பகுத்தும், மற்றைய பிராணிகள் சுக்லசுரோணிதங்களை ஆண்பெண்ணாக வகுக்கக்கூடிய உறுப்புகளினின்றும் பெற்று அவைகளின் சேர்க்கையால் கருத்தரித்து விர்த்தியாகின்றன. ஆண் பெண் உறுப்புகள் ஒரு பிராணியினிடமே காணலாம். மண்ணுண்ணிப் புழு, அட்டை இவைகள் உதாரணம். ஆண் பெண்ணாகப் பிரிந்து மனிதன் போன்ற மற்றைய பிராணிகளில் பார்க்கிறோம். பிராணிகளில் பெரும்பான்மை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. சிறுபான்மை மிருகங்களைப்போலக் குட்டிகளை உயிருடன் பெற்றுப் போஷிக்கின்றன.

IV. பிராணிகளைக் காணுமிடங்கள்:—

(i) உஷ்ணதேசப் பிராணிகள்

(ii) குளிர்தேசப் பிராணிகள்

(iii) கண்டங்களின் அபூர்வ ஜெந்துக்கள்.

பிராணிகளை உஷ்ணதேசப் பிராணிகளென்றும் குளிர்தேசப்பிராணிகளென்றும் பிரிக்கலாம். ஜலசரங்க

ளென்றும், பூசரங்களென்றும் விவரிக்கலாம். குளிர் தேசத்து பிராணிகள் அடர்ந்த ரோமங்கள் உடையன (உ-ம்) நரி, கலைமான், கரடி முதலிய மிருகங்களை வடக்கே போகப்போகப்பார்க்கலாம்.

யானை, புலி, சிங்கம், ஒட்டகம் இவைகளை உஷ்ண பிரதேசங்களில்தான் காணலாம்.

ஸீப்ரா (Zebra) என்னும் வரிக்குதிரையையும், ஜிராப் என்கிற ஒட்டச்சிவிங்கியையும், ஆஸ்திரிச் (Ostrich) என்னும் தீப்பறவையையும் ஆப்பிரிக்கா கண்டத்தில்தான் காணலாம். கங்காரு என்ற மிருகம் ஆஸ்த்ரேலியாவுக்கும், நீர்யானை அமெரிக்கா தேசத்துக்கும் உரித்தான பிராணிகள்.

மயில்கள் இந்தியாவைத்தவிர வேறு இடங்களில் காணக்கிடையா. ஜலத்தில் வசிப்பது ஜலசரம். பூமியில் வசிக்கும் பிராணிகள் பூசரங்கள் ஆகும். திமிங்கிலம், கடற்பூனை, இவைகள் மீன்களைப்போல் ஜலத்தில் வசிப்பினும் மிருகஜாதியைச் சேர்ந்தன.

V. உற்பத்தி :—(i) வீட்டுப்பிராணிகள்.
(ii) காட்டுப்பிராணிகள்.

ஆடு, மாடு, குதிரை, நாய், பூனை, கோழி, வாத்து முதலிய பிராணிகள் மனிதனால் பிடித்து வளர்க்கப்படுமாகையால் அவைகளை வீட்டுப்பிராணிகள் என்றும் சொல்லப்படும்.

யானை காட்டுப்பிராணியாயினும் மனிதனால் பழக்கி வீட்டுப்பிராணி ஆக்கப்படுகின்றது. மற்றைய பிராணிகள் காட்டுப்பிராணிகள்.

N. S. ஐம்புநாதய்யர், B. A. L. T., F. Z. S.

வேஷம் போடுகிறவர்களை நம்பாதே.—சிலர் வயிற்றுப்பிழைப்பிற்காகப் பலவித வேஷங்கள் போடுவார்கள்; ஒருவர் தான் கீரையேசாப்பிடுகிறதென்றும், மற்றொருவர் தான் கிழங்குகளையே சாப்பிடுகிறதென்றும், அன்னத்தைவிட்டு அநேகநாளாகிவிட்டதென்றும் சொல்லிக்கொண்டு திரிவார்கள்; அவர்களை நீ நம்பவேண்டாம். அப்படி அவர்கள் இவைகளை நிஜமாகவே துறந்து இருப்பார்களேயாகில் என் தற்புகழ்ச்சி செய்துகொள்ளவேண்டும்? அப்பேர்ப்பட்ட மகான்கள் இருக்கவேமாட்டார்கள் என்றல்ல நான் சொல்வது. அப்பேர்ப்பட்டவர்களை நம்முன் காண்பது மிகவும் அரிது. அப்படி உண்மையாகக் கீரையே சாப்பிடுகிறவர்களா யிருந்தபோதிலும் அம்மாதிரி போஜனம் செய்பவர்க ளென்பதைவிட வேறு ஒருவித குணங்களையும் எடுத்துக் காட்டவில்லையே. ஆகையால் இவ்வாறு பேசுகிறவர்களெல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காக வஞ்சகங்கள் பேசும் வேஷக்காரர்களேயன்றி வேறல்ல.

நியாயமஞ்சரி

POPULAR MAXIMS EXPLAINED

48. कैमुतिक न्यायः

కైముతిక న్యాయః

கைமுதிக ந்யாயம்

தெரிந்துகொள்ள முடியாததும் ஸாதிக்க முடியாததுமான காரியங்கள் ஸித்தியாகும்படி நேர்ந்துவிட்டால் மற்றையக் காரியங்கள் கைகூடக் கேட்பானேன். இம்மாதிரியான விஷயங்களில் இந்யாயம் உபயோகப்படும். 'மலையை விழுங்குகிற மஹாதேவருக்குக் கதவு ஒரு அப்பளம்' என்று வழங்கிவரும் பழமொழி இந்யாயக் கருத்தை அடக்கியுள்ளது. எல்லாவற்றிலும் மிகக் கடினமானது தாயுமானவர் கூறுவதுபோல 'சிந்தையை அடக்கியே சும்மாவிருப்பது.' நாம் ஸாதாரணமாகச் சிந்தையை அடக்கி ஏதாவது ஒரு கார்யஸித்தி விஷயத்தில் முயலுகிறோம். சிந்தையை அடக்கிச் சும்மாவிருக்கும் திறன் நமக்கு வருமாயின் மற்றைய கார்யஸித்திகள் ஒரு லக்ஷ்யமா நமக்கு? இதுவே இந்யாயத்திற்கு மதவிஷயப்பொருத்தம். இந்யாய ஸாரத்திற்கேற்ப ஸ்ரீமத் சங்கராசார்யர் பரமநிலையை 'சிறந்த ஐச்வர்யம், மேலான தனம், பேரின்பம், இதைவிட அடையவேண்டியது ஒன்றும் இல்லை, இந்த ஆனந்தம் கடந்த ஆனந்தம் இல்லவே இல்லை. இதைக் கண்டகண்ணுக்கு வேறு ஒன்றும் ஒரு பொருட்டாகப்படாது, இதை உணர்ந்தபின் உணரவேண்டுவது ஒன்றுமில்லை' என்று வர்ணித்திருக்கிறார். ஒரு மதாந்தராசாரியரும் 'முதல் பகவந்நிலையைத் தேடிப்பிடி, மற்றைய (இஹலோகச்சிறப்பு) எல்லாம் தாமே உன்னை வந்து அணுகும்' என்று இந்யாய ரஹஸ்யத்தை மதவிஷயத்தில் பொருத்தி வெளியிட்டிருக்கிறார்.

49. कोषपान न्यायः

కోషపాన న్యాయః

கோஷபான ந்யாயம்

முன்காலத்தில் ஒருவன் பேசுவது பொய்யா மெய்யா என்று அறிய ஒரு வழக்கம் உண்டு. அவனை ஒருநாள் உபவாஸம் (பட்டினி) இருக்கச் செய்து அடுத்த நாள் மூன்றுகையளவு தண்ணீர் குடிக்கும்படி செய்வது. அப்பொழுதெல்லாம் ஸுகமாக விருந்து அடுத்த நாள் இது அவனை மிகக் கஷ்டப்படுத்தியே தீர்க்கும். இம்மாதிரி முதலில் ஸுகமாக விருந்து

பின்னர் கர்மத்திற்கேற்பப் பலன் கொடுப்பவைகள் விஷயத்தில் இந்யாயம் உபயோகப்படும். 'சிரித்துக் கொண்டு செய்யும் கர்மபலன்களை அழுதுகொண்டே அனுபவிக்கவேண்டும்' என்று கெட்ட கர்மவிஷயமான பழமொழி இந்யாய ரஹஸ்ய விஷயத்தை வெளிப்படுத்தும். 'தெய்வ மிகழேல்' என்ற ஔவையார் கனிவான மொழியின் கருத்தைக் கவனியாது தான் தொழும் மூர்த்தியிடம் உள்ள பக்தியை ஆதாரமாகக்கொண்டு மற்றவர்கள் மூர்த்திகளைப் பழித்து மதத்வேஷம் உண்டாகும்படி செய்பவர்கள் எவ்வளவுதான் தாம் உலகில் உள்ள பொய்மத ஆராதனைகளைக் கண்டித்து, உண்மை மார்க்கத்தில் ஜனங்களை நிலைநிறுத்த முயல்கிறோம் என்று எண்ணியிருந்தபோதிலும், முடிவில் அவர்கள் கொடிய நரக துக்கத்தை அனுபவிக்கும் படிதான் நேரும். இதற்கிணங்க ஒட்டக்கூத்தரும் தாம் எழுதிய உத்தரகாண்டம் திக்விஜயப் படலத்தில், ராவணன் யமனை எதிர்த்து அவன் பட்டணத்துள் புகுந்து பார்க்கையில்,

> * * பலதெய்வம் பழித்துரைக்கும் பாதகரும்
> பாரந்த தங்கள்
>
> வாய்வழியே புழுச்சொரிய மாநரகக் கும்பியிடை
> மறுகக் கண்டான்

என்று கூறி இவ்விஷயத்தை வற்புறுத்துகிறார். இம்மாதிரி விஷயங்களே இந்யாய உபயோகத்தை நன்கு விளக்கும்.

50. क्रियाविकल्प न्यायः

క్రియావికల్ప న్యాయః

க்ரியாவிகல்ப ந்யாயம்

வஸ்து மாறுபாடின்றித் தொழில் மாறுபாட்டால் மாத்திரம் வேற்றுமை ஏற்படும் இடங்களில் இந்யாயம் உபயோகப்படும். ப்ரகிருதி தத்வ சாஸ்திரப்படி கரி, எழுதுகோல்தண்டு, வயிரம் ஆகிய இவைகள் பார்வைக்கு வேறாகக் காணப்பட்டபோதிலும் வஸ்து விஷயத்தில் ஒன்று தான் என்று வெளியாகிறது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பலர் பலவித வேலைகளில் அமர்ந்திருப்பினும் எல்லோருக்கும் குடும்பத்தை யாதொரு தடையுமின்றிப் பாதுகாத்து வரவேண்டும் என்பதே பொதுநோக்கம். இம்மாதிரியே மதங்கள் ஆராதனை மார்க்கங்கள் பலவிதமாயிருப்பினும், மனிதனுக்கு மாறாதஸுகம் கொடுத்து நிலையிலிருத்தவேண்டும் என்பதே பொதுநோக்கம். இது எல்லோருக்கும் உண்டு. இம்மாதிரி வெளித்தொழில்களில் பலவிதமாகி இருந்தும் உள்நோக்கம் ஒன்றாகவே இருக்கும் இடங்களில் இந்யாயம் உபயோகப்படும்.

51. खलेकपोत न्यायः

ఖలేకపోత న్యాయః

கலேகபோத ந்யாயம்

களத்தில் கிழம், பால்ய, சிசு இந்நிலையை உடைய புறாக்கள் ஏககாலத்தில் வந்து விழுந்து மடியும். இதுபோல எல்லோருக்கும் ஒரே காலத்தில் வரும் ஆபத்து ஸம்பத்து விஷயங்களில் இந்யாயம் உபயோகப்படும். பொதுவாக மரணம், வயது வித்யாஸம், கார்ய அவஸரம், காலநிலை முதலியவைகளை மதியாது ஈவு இரக்கமின்றி வரவேண்டியபொழுது வந்தே தீரும். இதையே, 'இலையுதிர, பூவுதிர பிஞ்சுதிரக் காய் உதிரக் கனியுதிர அடித்துத் தீர்க்கும் சண்டமாருதம்போல் மரணம் இவ்வுலகில் ஈவு இரக்கமின்றி உலவுகிறது' என்று வர்ணிப்பர் பெரியோர். இம்மாதிரியே ரயில் கப்பல் முதலியவைகளில் ஏற்படும் ஆபத்தால் ப்ரயாணிகள் கூட்டங் கூட்டமாகப் பரலோகம் போகும்படி நேருவதுமுண்டு.

52. खल्वाटबिल्वीय न्यायः

ఖల్వాటబిల్వీయ న్యాయః

கல்வாடபில்வீய ந்யாயம்

மொட்டைபில்வப்பழ ந்யாயம். இது காகதாளீய ந்யாயம் போன்றது. அதில் பழம் விழுந்து தற்செயலாய் ஆஹாரமாக ஏற்பட்டதையும், பனை மரத்து அடியில் நிழலுக்கு ஒதுங்கிய மொட்டையன் மண்டையில் பனம்பழம் விழுந்து உடைந்துபோனதையும்பற்றிக் கூறியுள்ளோம். அவைகளே இந்யாயவிஷய விளக்கமாகும்.

நேரில் மல்லுக்கு நிற்காதே.—ஒரு மனிதன் உன்னைக் கெடுக்க ஆரம்பித்தால் நீ வெளியில் அவனிடத்திலே மிகவும் தாழ்ச்சியாய் இருந்து உள்ளுக்குள் அவனைத் திரும்பிக் கெடுக்க எவ்வளவு முயலவேண்டுமோ அவ்வளவும் முயலலாம்; அதிகமாய்ச் செய்ய நமக்குச் சக்தியிருந்தாலும் செய்யலாம்; இது ஒரு அவகுணமாகமாட்டாது. ஆனால் வெளியில் அவனிடம் அதிக சிநேகமாய்க் காட்டிக்கொண்டு உள்ளுக்குள் கெடுத்துக்கொண்டே வருவோமாகில் அப்பொழுது துர்க்குணமுள்ளவர்களாவோம்.

தூங்காவிளக்கு

THE UNDYING LIGHT.

ஓர் யுத்தவீரன்—அவன் தனது அரசனுக்காக நன்ருக உழைத்தான். வெகுநாள் உழைத்தான். நாட்டில், போர் எல்லாம் ஓய்ந்து அமைதி நிலைத்ததும், நாட்டிற்காக உழைத்து, உடம்பு முழுதும் யுத்தவடு நிறைந்த அந்த வீரனைக் கூவி ‘இனி உன்ஞல் எனக்காக வேண்டியதில்லை. உனக்கினிமேல் சம்பளம் கொடுக்கமுடியாது. உனக்குச் சேரவேண்டியதைப் பெற்றுக்கொண்டு, வீட்டைச் சேர். ஸம்பாதிக்க முடியாதவர்க்கிதற்குமேல் பணந்தரமுடியாது’ என்று அரசன் கூறினன்.

எளிய வீரன் தான் என்ன செய்வதென்று தெரியாது தத்தளித்தான். தன் வீட்டைநோக்கி அடிவைத்துக்கொண்டு போகையில் வழியில் ஒரு பெரும் வனம் வந்து அடைந்தான். இரவு முந்தியதால், காலை முதல் ஆஹாரம் இல்லாமல் சூற்றுயிராய் வந்தவன் அங்கு ஒரு மாடத்தில் தீபவொளி கண்டான். அவ்வீட்டிலிருப்பவள் ஒரு சூந்யகாரி. அவள் வீடுசென்று ‘அம்மா! எனக்கேதாவது உணவு தாரும். என் காதடைக்கிறது. கொஞ்சம் ஆஹாரம் கொடுத்து படுக்கவும் கொஞ்சமிடம் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் உங்கள் காலிலேயே ப்ராணனை விடவரும்’ என்று கெஞ்சினன்.

‘அஹ்ஹா! பலே! ஸேனையைவிட்டுச் சொல்லாது ஓடிவந்தவனுக்கு வெறுமை அன்னமிடுவேன்! யார் அது செய்வார்? ஆனல் உன் நிலைமைக் கனுதாபப்பட்டு அன்னமிடுவேன். நான் சொல்லியவிதம் நடந்தால்தான் அதுவும்.’

‘என்னை என்ன செய்யவேண்டும் என்று கட்டளையிடுகிறீர்?’

‘நாளை என்தோட்டம் எல்லாம் கொத்தி செம்மைப்படுத்த வேண்டும்’.

இதற்கு அவன் உட்பட்டான். மறுநாள் தன்னல் முடிந்தவரையும் உழைத்தான். ஆனல் ஸூரியன் அஸ்தமிக்கும் ஸமயம் ஆயும் அவனல் முழுதும் செய்ய முடியவில்லை.

‘ஹா! பார்த்தாயா! இன்றைக்கு? இதற்குமேல் நீ செய்யமாட்டாய்? இங்கு இன்றிரவு தங்கி அந்த மரத்தைவெட்டி எனக்குச் சுப்பலைத்தா’ என்று அவள் சொன்னள்.

வீரனும் அந்நாள் மரத்தை வெட்டினன். அன்று ஸாயங்காலம் கிழவி அன்றிரவும் இருக்கும்படிச் சொன்னள்.

‘நாளைக்கு நீ எனக்கு ஒரு அல்ப கார்யம் செய்யவேண்டியது. என் வீட்டிற்குப்பின் ஓர் பாழுங்கிணறு உண்டு. அதில் என் தூங்காவிளக்கு விழுந்துவிட்டது. அது அவியாத விளக்கு. அதை நீ எனக்கு எடுத்துத் தரவேண்டியதுதான்’ என்று மேலுங் கூறினள்.

மறுநாள் அவனைக் கிணற்றண்டை அழைத்துப் போய் ஓர் கூடையுள் உட்கார வைத்துக் கிணற்றுள் இறக்கினள். அவனும் தூங்காவிளக்கைக் கண்டு எடுத்துக்கொண்டு தன்னை மேல் எடுக்கும்படி செய்கை செய்தான். அவளும் கட்டின வழியாய் கயிற்றை மேல் இழுக்க வீரனும் விளக்குடன்மேல் கிட்டத்தட்டக் கிணற்றின் மேற்சுவர் நிலைவருமுன், தன்கையை நீட்டி அக்கிழவி வீரன்கையிலிருந்து விளக்கைவாங்கப் பார்த்தாள். அவளுடையகெட்ட எண்ணத்தைக்கண்டு அவன் ‘என்னை பூமிமேல் வரவிட்டால் அன்றி விளக்கைத் தரமாட்டேன்’ என்ருன். அந்தச் சூந்யகாரிக்குக் கோபமிஞ்சியது. அவனைக் கிணற்றில் தள்ளிவிட்டு தன் வீடு போனள். அவ்வீரன் கிணற்றின்கீழ் ஈரமாகிய சேற்றில் அமுங்கிக் கிடந்தான். தூங்காவிளக்கு எரிந்தவண்ணமாக இருந்தது. அதனல் என்னப்ரயோஜனம். வயிற்றுக் கன்னமில்லாமல் அவன் கதை யமனூர்க்கு ஓலை எழுதுவதா யிருந்தது. சற்றுநேரம் என்ன செய்வதென்று சிந்தாக்ராந்தனக விருந்தான். கடைசியாக ஒன்றுந் தோன்ருது விளக்கில் தொங்கிய தூண்டுகோலால் விளக்கைத் தூண்டினன். அதிலிருந்து சுடர்கள் கீழ் விழுந்தன. அப்பொழுது அங்கு ஒரு ஸேவகன் எதிர் வந்து,

‘ஐயா! எனக்கென்ன வேலை இடுகிறீர். தயவு செய்யும்’ என்ருன்.

‘உன்னையேன் நான் வேலைசெய்யச் செய்யவேண்டும்.’

‘நீங்கள் கூறியதெல்லாம் நான் செய்துதான் தீரவேண்டும்.’

‘ஆனல்ஸரி என்னைக் கிணற்றுக்கு வெளியில்விடு.’

அந்த ஸேவகன் வீரனைப்பாதாளமார்க்கமாய் தூங்காவிளக்கோடும் அழைத்துக்கொண்டு அந்தச்சூந்யகாரிசேமித்திருந்த பொருள்குவிய லிருக்குமிடத்தைக் காட்ட, தன்னல் எடுத்துக்கொள்ளக்கூடிய பொருளை எடுத்துக்கொண்டு பூமிமேல் வீரன் வந்தடைந்தான். உடனே ‘நீ போய் அக்கிழவி காலுங்கையுங் கட்டி ந்யாயவாதியின் முன்விட்டு ந்யாயம் நடத்து’ என்ருன்.

அக்கிழவிக்கு முள்ளம்பன்றி வாஹனமிட்டு அவளை கூக்குரலிட கழுவிற்கு ஆவாஹனம் செய்து கழுகுக்கு இரை ஆக்கினன். பின் ஓடிவந்து,

‘ஐயா எனக்கின்னம் என்ன வேலை இடுகிறீர் தயவு செய்யும்’. என்ருன்.

‘இப்பொழுது எனக்கு உன்னல் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நான் கூப்பிட்டபொழுது வா.’

‘நீங்கள் என்னைக் கூப்பிடவேண்டியதில்லை. இந்தத் தூங்காவிளக்கை சுடர்விழத் தூண்டினல் நான் வருவேன்’ என்று சொல்லி மறைந்தான்.

வீரனும் தான் எவ்வூரில் இருந்து பிரயாணப்பட்டானே அவ்வூரே அடைந்து ஒரு வீடுவாங்கி அங்கு அமர்ந்தான். வீட்டை நன்ருக அலங்கரித்துப் பார்வைக்கு மிக அழகியதாகத் தோன்றும்படிச் செய்தான். பின் தூங்காவிளக்கைச் சுடர்விழத் தூண்டினன்.

‘ஐயா! என்ன வேலை இடுகிறீர்’ என்று சேவகன் தோன்றினன்.

‘நான் இவ்வரசனை மனஃபூர்த்தியாக வழிபட்டேன். என்னை அவன் தயையின்றித் துரத்தினன். அவனுக்குப் புத்தி வரும்படிச் செய்யவேண்டும்.’

‘நான் என்ன செய்யவேண்டும்’

‘இன்று இரவு அரசன் அந்தஃபுரம் சென்று அவன் மகளை எனக்கு இன்று ஊழியஞ்செய்யக்கொண்டுவா.’

‘எனக்குச் செய்வது எளிதுதான். உமக்குத் துன்பத்தை உண்டாக்கலாம்’ என்று சொல்லிக்கொண்டு மறைந்தான்.

அன்றிரவு அரசன் மகளைக் கவர்ந்து வந்தான்.

‘அஹ்ஹா! வந்தாயா? வா. துடைப்பம் எடுத்து இவ்வறையை விளக்கு.’ பெருக்கி ஆனதும் தனது கால் செருப்பை அவள் மேல் எறிந்து ‘இதை நன்ருகத் துடை’ என்ருன். ஒன்றும் சொல்லாது அவ்வேலையும் செய்தாள். அறைக்கண் மூடிக்கொண்டே செய்தாள். காலை ஆனதும் மறுபடியும் அவளை அவள் அறையுள் ஸேவகன் ஒருவரும் அறியாது விட்டுவிட்டான்.

காலை எழுந்ததும் அந்த ராஜகன்னிகை தன் தகப்பனைப் பார்த்து ‘என்ன கெட்ட கனக்கண்டேன் நான்’ என்று இரவில் தான் வீரன் வீட்டில் செய்ததெல்லாம் சொல்லிவிட்டு ‘ஆனல் உடம்பெல்லாம் நான் வாஸ்தவமாகச் செய்தாற்போல் வலிக்கிறது’ என்றும் சொன்னள்

‘ஒருவேளை அது கனவாய் இராது. நிஸ்சயமாக நடந்திருக்கலாம். ஆகையால் நான் சொல்வதைக் கேள். உன் மடி நிறைய கடலையை வைத்துக்கொள். உன்னைக் கொண்டு செல்லும் வழி முழுதும் இறைத்துக்கொண்டே போ. அது வழியைப் பின் கண்டு பிடிக்க வழிகாட்டும்’ என்று அரசன் கூறினன்.

இதை எல்லாம் அந்த ஸேவகன் ஒளித்துக்கொண்டே கேட்டிருந்ததினல் ஊரில் உள்ள தெருவெல்லாம்கடலையை இறைத்து இருந்தான். இரவு எல்லாம் வேலை செய்து வந்த ராஜகன்னியை யார் அவ்வாறு உழைக்கும்படி செய்திருக்கலாம் என்று அறிவது அஸாத்யமாகிவிட்டது. ஊரிலுள்ள சிறுவர்கள் எல்லாம் நேற்று இரவு கடலைமழை பெய்து இருக்க வேண்டுமென்று கூவிக்கொண்டு கடலையைப் பொறுக்கித் தின்ருர்கள்.

‘இன்று வேறு யோசனை செய்யவேண்டும். உன் படுக்கைக்குப் போகுமுன் உன் காலில் இருக்கும் ஒரு சிலம்பைவீட்டில்வைத்துவிட்டுப்போ. கொண்டுபோகப்படும் இடத்தில் மற்றொன்றை வைத்துவிட்டுவா. நான் அதைக் கண்டுபிடிக்கும்படிச் செய்வேன்’ என்று அரசன் கூறினன். இதை முழுதும் ஸேவகனும் கேட்டுக்கொண்டிருந்தான்.

பொழுது போனதும் வீரன் அரசன் மகளைக் கொண்டுவரும்படி ஸேவகனேடு சொல்லினன். ‘இன்றைக்கு என் மனம் அலைகிறது. என்ன செய்வது என்று தெரியவில்லை. நான் அப்பெண்ணைக் கொண்டு வரத் தடையில்லை. சிலம்பை அவர் இங்குக் கண்டுவிட்டால் உன் கதி என்னவாகும்’ என்று ஸேவகன் மேலும் கூறினன்.

‘நான் சொல்லியதை நீ செய்’ என்று வீரன் மொழிந்தான்.

மூன்ருநாள் இரவும் அரசன் மகள் வீரன் வீட்டில் சிறு வேலைகள் எல்லாம் செய்தாள். காலைபொழுதுவிடிவதற்குமுன் அப்பெண் படுத்து உறங்கும் அறையுள் விடப்பட்டாள். அரசனவன் ஊர் முழுதும் சோதனை செய்து வீரன் வீட்டில் சிலம்பைக் கண்டு எடுத்தான்.

ஸேவகன் தூண்டியதால் ஊரைவிட்டோடப்போகும் பொழுது அரசனுடைய கொத்துவால் ஸேவகர் அவனைப்பிடித்து டாணுவிலடைத்தார்கள். ஓடிய அவஸரத்தில் தனது தூங்காவிளக்கை விட்டு மறந்து வந்த வீரன் கையில் கொஞ்சம் பணமிருப்பதைக் கண்டு அங்கு கண்ட தன்னினத்தான் ஒருவனைப் பார்த்து ‘நான் இருந்தவீட்டில் சில சாமான்களை வைத்துவிட்டு வந்துவிட்டேன். அதைக் கொண்டு வந்தால் சில வரா

ஹன்கள் தருவேன்' என்றான். அவனும் சென்றவைகளை எடுத்து வந்தான். பெட்டியுள் சேமித்து வைத்திருந்த தூங்காவிளக்கைக் கண்டதும் அவன் ஆனந்தத்திற்கு அளவில்லை. தான் தனியாயிருக்கும் பொழுது அவ்விளக்கை சுடர் விழும்படித் தூண்டினான்.

உடனே ஸேவகன் 'பயப்பட வேண்டாம். ஒன்றும் தீங்குண்டாகாது. பொறுமையாக அவர் எங்கு அழைத்துப்போனாலும் போங்கள். தூங்காவிளக்கை மாத்ரம் மறவாதிரும்' என்று மறைந்தான்.

மறுநாள்தான் விசாரணை. விசாரணை நடந்தது. அவனைக்கழுவிலேற்றும்படிஉத்தரவிட்டார்கள். அவன் ஒரு தப்பும்செய்யாதிருந்தும் அவனைத்தண்டித்தார்கள். அவனைக் கழுமரத்தின் அருகு கொண்டுபோகும் வழியில் எனக்கு ஒரு அபீஷ்டமிருக்கின்றது. என் கடைசி வரம் அது. அதைத் தாரும் என்றுஸேவகன்கேட்டான்.

'உனக்கென்ன வேண்டும்' என்று அரசன் கேட்டான். 'ஒன்றுமில்லை. நான் எப்படி இருந்தாலும் சாவடைவது நிச்சயம். எனக்கு மோக்ஷமுண்டோ இல்லையோ என்பதுமாத்ரம் ஸந்தேஹம். அதற்கோர் சகுனம் பார்க்கவேண்டும். அதுவும் ஒன்றுமில்லை. இந்த விளக்கைத் தூண்டி, சுடர்விழுந்தால் அதுபோதும். இதுதான்.'

'இதுதானா! ஆயிரம் தடவை செய்துகொள்.'

வீரனும் தனது விளக்கைத் தூண்டி சுடர்விழச்செய்தான். ஸேவகன் தோன்றி 'ஐயா நான் என்ன செய்யவேண்டும்' என்று கைபொத்தி வாய்பொத்தி வணக்கத்துடன் கேட்டான்.

'இந்த அநீதி நடத்தும் [illegible]பதிகளைக் கொல். அந்தக் கொலைபாதக அரசனை விடாதே' என்றான் வீரன்.

அந்த ஸேவகன் எல்லாரையும் நொக்கி நுறுக்கி த்வம்ஸம் செய்தான். அரசனையும் மிக வருத்தி 'என் ராஜ்யம் என் பெண் இரண்டையும் உனக்குத் தருகிறேன்; விட்டுவிடும்படிச் செய்' என்று கெஞ்சும்வரை வீரன் அவனை விடும்படி உத்தரவு கொடுக்கவில்லை.

இனிமேல் நான் கதை சொல்ல முடியாது. படிப்பவர்காள்! நான் இனி என்ன சொல்லவேண்டியிருக்கிறது. கதையின் முடிவை நீங்களே முடித்துக் கொள்ளலாம். நான் கதையை இனி வளர்க்கமாட்டேன். வந்தனம்! போய்விட்டு வருகிறேன்.

வஸ்து தத்துவம்

CHEMISTRY

தண்ணீர் வகைகள்

NATURAL WATERS

மழை ஜலம்.—சுபாவத்தில் அகப்படும் நீர்களுள் மழை நீரே மிகச் சுத்தமானது. அல்லாமலும், மற்ற நீர்களுக்கு மழைநீரே காரணமாயிருக்கிறது. பூமியின்மேல் பெய்கின்ற மழைஜலத்தின் ஒருபாகம் ஆறுகள், ஓடைகள் முதலியவை வழியாக ஓடுகிறது; ஒரு பாகம் பூமியின் வெடிப்புகள், துவாரங்கள் முதலியவைகளின் வழியாய் கீழே போய்த்தங்கி, மற்றோரிடத்தில் ஊற்றாக மறுபடி வெளியே வருகிறது; மழைஜலத்தில் சிறுபாகம் மரம் செடிகளால் குடிக்கப்படுகிறது; கொஞ்ச ஜலம் சூரிய வெப்பத்தினால் ஆவியாக மாறுகிறது. பூமியில் எல்லாவிடங்களிலும் மழை ஒரேமாதிரியாகப் பெய்வதில்லை. மலைப்பிரதேசங்களிலும், காடுகள் நிறைந்த விடங்களிலும் மழை அதிகமாகப் பெய்கிறது.

மழைஜலம் பூமியில் கிடைக்கும் நீர்களுக்குள் மிகச் சுத்தமானதா யிருந்தபோதிலும், இதிலும் அநேக அசுத்த வஸ்துக்கள் கலந்துவிடுகின்றன. மழைஜலம் ஆகாயத்தினின்று கீழே விழும்போது, நடுவிலிருக்கும் காற்றையும், அதிலுள்ள கரியமலவாயு முதலியவைகளையும், கரைத்துக்கொண்டு வருகிறது. அல்லாமலும்காற்றில் மிதந்துகொண்டிருக்கும் பொடிபோன்ற தூசிகளையும், மண்ணையும் சேர்த்துக்கொள்ளுகிறது. ஆனால் இப்படிக் காற்றிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட அசுத்தம் மிகச் சிறிதே. மழைஜலம் பூமியின் மேல் விழுந்து ஓடும்போது அத்தரையின்மேலிருக்கும் அசுத்தங்களை யெல்லாம் அடித்துக்கொண்டுபோகிறது. இந்த ஜலம் மிக அசுத்தமானது. அழுகின இலைகள் கறி, பட்சிகள், சிறு பிராணிகள் முதலியவைகளின் அசுத்தங்கள், ஆகிய இவைகள் பூமியின்மேல் விழுந்த மழைஜலத்தில் கலக்கின்றன. இந்த ஜலத்தைச் சுத்தி செய்ய, வடிகட்டுவது போதுமேயாயினும், இதைக் காய்ச்சி ஆவியாக்கி, மறுபடி ஆவியைக் குளிரச்செய்வதே நல்லது. இப்படிச்செய்தால், எவ்வளவு அசுத்தமான நீராயினும் மிகச் சுத்த நீராய்விடும். ஆனால் இம்மாதிரிச் செய்வது சாதாரணமாய் வீடுகளில் முடியாத காரியம். ஆகையால் நாம் எப்பொழுதும் தண்ணீரைக் காய்ச்சி, பிறகு வடிக்கட்டிச் சாப்பிடுவதே மிகவும் நல்லது.

ஆற்றுநீர்.—பூமியின்மேல் விழுந்த ஜலம் தரையின் வழியாய்ப் பல நீர்த்தாரைகளாய் ஓடி, ஒன்று சேர்ந்து ஒரு சிற்றாறு ஆகின்றது. ஆகையால் ஆற்றின் நீர் தரையின்மேலிருந்த அசுத்தங்களையெல்லாம் அடித்து வரும். ஆறு ஓடிவரும் தரையானது உறுதியான பாறையாயும், மணலாயுமிருந்தால் அதிக அசுத்தங்கள் அந்நீரில் இரா. சாதாரணமாய் மண்ணையும், தழைகளையும், சில உலோக வஸ்துக்களையும் ஆற்றுநீர் அடித்துவரும். இந்நீரை முன் சொன்னதுபோல் சுத்தம் செய்துவிட்டால், நமது உபயோகத்துக்கு மிகச் சிறந்த நீராகும்.

ஊற்றுநீர்.—மழைஜலம் கீழே விழுந்து மணல் தரையின் வழியாய்ப் போகும்போது, மணலால் உறிஞ்சப்பட்டு நீர் பூமியின் கீழே போகிறது. பூமியிலுள்ள வெடிப்புகளின் வழியாகவும் நீர் கீழே போவதுண்டு. இந்த நீர் பூமியின் தரைமட்டத்திற்குக் கீழே ஓடிக்கொண்டிருக்கிறது. நாம் பூமியின் கீழ் தோண்டும்போது காணப்படும் ஜலம் இதுதான். சிற்சில தாழ்வான இடங்களில் சிறு துவாரங்களிருக்க, அவைகளின் வழியாய் இந்த நீர் மறுபடி பூமியின்மேல் ஊறி வருகின்றது. இதைத்தான் நாம் ஊற்றுநீரென்று சொல்லுகிறோம். இது கொஞ்சம் சுத்தமான நீர், பூமியின் கீழேபோய், அங்கு தங்கி,பிறகு மேலேவரும்போதெல்லாம் சிறு துவாரங்களின் வழியாய்ச் செல்லவேண்டியிருப்பதால், அந்த நீரில் தங்கியிருந்த களிமண், தழைகள் முதலியவை தடுக்கப்பட, நீர் மாத்திரம் வருகின்றது. ஆகையால் ஆற்றுநீர் கலங்கியிருக்க, ஊற்றுநீர்மட்டும் வடிகட்டப்பட்ட நீர்போல் தெளிவாயிருக்கிறது. ஆனால்இந்தஊற்றுநீரைமிகச்சுத்தமான நீரென்று சொல்லமுடியாது. இந்த நீரில் மண் தூசி முதலிய அசுத்தங்கள் இல்லாவிட்டாலும், இதுபோகும் பூபாகத்திலுள்ள உப்பு முதலிய வஸ்துக்களைக் கரைத்துக் கொண்டு வருகிறது. இந்நீர் சாதாரணமாக உப்பு, சீமைச்சுண்ணாம்பு, மஹாக்நீஷச்சுண்ணாம்பு, நவாச்சாரம் முதலிய வஸ்துக்களைக் கரைத்துக்கொண்டு வருகிறது. ஆனபோதிலும் இது சற்றுச் சுத்தமான நீர்தான். இதைக் காய்ச்சி நாம் உபயோகிக்கலாம்.

கடல் நீர்.—சுபாவத்தில் கிடைக்கின்ற நீர்கள் எல்லாவற்றிலும் கடல்நீர் மிக அசுத்தமானது. கடலில் வந்து விழுகிற ஆறுகளெல்லாம் பூமியின் வழியாய் ஓடி வரும்போது, அங்கங்கு இருக்கும் வஸ்துக்களையெல்லாம் கரைத்து வந்து கடலில் தள்ளுகின்றன. இப்படிக் கடலில் தங்கும் வஸ்துக்கள் அதிகரிக்கின்றன. ஆனால் சூரிய வெப்பத்தினால் கடல் நீர் ஆவியாக மாறும்போது, நீர்மாத்திரம் குறைவதே தவிர அதிலுள்ள வஸ்துக்கள் ஆவியாக மாறி போகவில்லை. ஆகையால் கடலிலுள்ள அசுத்த வஸ்துக்கள் வரவா அதிகரிக்கின்றன.

கடல்நீரில் ஏராளமாயிருக்கும் வஸ்து கடலுப்பு. இந்த உப்பு நமக்கு ஒரு மிகவும் உபயோகமுள்ள வஸ்து. உப்பில்லாமல் ஒரு மனிதனும் வசிப்பதில்லை. இதைத் தவிர பொடாஸ் உப்பு, மஹாக்நீஷ உப்பு, சீமைச்சுண்ணம்பு முதலியவைகளும் கடல் நீரில் கரைந்திருக்கின்றன. நூறு பங்கு கடல் நீரின் எடையில், சுமார் $2\frac{3}{4}$ பங்கு சாதாரண கடலுப்பும், சுமார் $\frac{3}{4}$ பங்கு பாக்கி உப்புகளுமிருக்கின்றன. இக் கடல் நீரைக் காய்ச்சி ஆவியாக்கி, மறுபடி இந்த ஆவியை நீராகக் குளிரச்செய்தால், இது நல்ல சுத்த நீராகும். இதை நாம் குடிப்பதற்கும், சமையல் செய்வதற்கும் உபயோகிக்கலாம். கப்பல்களில் பிரயாணம் செய்யும்போது, மனிதர்கள் கடல்நீரை இம்மாதிரி சுத்தம் செய்துதான் உபயோகிக்கிறார்கள்.

M. R. சுப்பிரமணிய ஐயர் பி. ஏ., எல். டி.

பக்தியுள்ள தாயின் ஜெபம்.—நியூயோர்க்கிலுள்ள சாமர்வில்லி என்னுமிடத்தில் ஒரு துஷ்ட வாலிபனையுடைய ஒரு பக்தியுள்ள தாயிருந்தாள். ஒருநாள் அந்த அம்மாள் அன்றுமாலை தன் மகனை வெளியே எங்கும் போகாமல் தன்னோடிருக்கும்படி மிகவும் கெஞ்சிக்கேட்டாள். அதற்கு அவன், அம்மா நான் உங்கள் வார்த்தையின்படி செய்யமுடியாது; வெளியே நான்போய் என் சிநேகிதரோடு சந்தோஷமாயிருந்து விடிந்த பிறகு வருவேன் என்றான். அதற்கு அந்த அம்மாள், என்மகனே! நீ வீட்டுக்குத் திரும்பி வரும்வரையில் நான் தூங்காமல் கடவுளை உன்னைக் காப்பாற்றும்படி உனக்காகச் செபித்துக் கொண்டே இருப்பேன் என்பதை நீ நினைத்துக் கொண்டு போ என்று சொன்னாள். அப்போது மகன் தன் தாயை ஏசிப்பேசிச் சபித்து வீட்டைவிட்டுப் போய் அன்று இரவெல்லாம் தன் கெட்டதோழரோடு துர்ச்சனமா யிருந்து விடியற்காலை நாலுமணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்து சன்னல்தட்டுகள் வழியாய் வீட்டில் விளக்கு எரிவதையும் தன் தாயார் தூங்காமலிருந்து தனக்காகச் செபித்துக்கொண் டிருப்பதையும் பார்த்து அவள் செய்த ஜெபத்தை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்து பிறகு தன் அறையில்போய்ப் படுத்துக்கொண்டான். தூக்கம் வரவேயில்லை. தாயின் ஜெபத்துக்குச் செவிகொடுத்து அவன் மனதில் நல்லெண்ணமுண்டாகக் கடவுள் தூண்டினார். அவன் மனம் வாதனைக்குள்ளாகித் தன் சீர்கெட்ட ஜீவியத்தை நினைத்துத் துக்கப்பட்டுக் கண்ணீர்விட்டு நல்வழிக்குத் திரும்பினான்.

கல்யாணி

KALYANI *

4-ம் அதிகாரத் தொடர்ச்சி

மனோகரமான ஒவ்வொரு இடத்தைப்பற்றியும் ஒவ்வொரு ஐதிகம் புராண கதைகளில் சொல்வது போல், இந்த ஊற்றிற்கும் அற்புதமான கதையொன்றுண்டு. அநேக வருஷங்களுக்கு முன் இவ்விடத்திற்குச் சமீபத்தில் ஒரு புனபதி வேட்டையாடிக்கொண்டிருக்கையில் அழகிய ஒரு பெண்ணை அங்கே கண்டு மயங்கினான். பிறகு இருவரும் அடிக்கடி சூரிய அஸ்தமன சமயத்தில் அங்கே சந்திப்பார்கள். அவளுடைய தேககாந்திபோல் மன ஒளியுமிருந்ததால் அவளிடத்தில் அவனுக்கு அதிக ஆசை பிறந்தது. பிறரறியாமலிருந்ததால் இன்பச்சுவை விருத்தியாயிற்று. அவள் எப்பொழுதும் அவ்வூற்றிற்குச் சமீபத்திலேயே தோன்றி மறைவாள். அவளுக்கும் அதற்கும் பிறரால் அறியக்கூடாத சம்பந்தமொன்றிருப்பதாக அவன் தீர்மானித்தான். அவர்கள் சகவாசத்திற்கும் அவள் ஏற்படுத்திய சில நிபந்தனைகள் அதில் பரமரகசியம் ஒன்றிருப்பதாகக் குறிப்பித்தன. வாரத்தில் ஒருமுறைதான் சந்திக்கவேண்டும். அது வெள்ளிக்கிழமையாயிருக்க வேண்டும். பக்கத்துக் கிராமக்கோவிலில் சந்தியாகால பூஜை மணி அடித்தவுடன் அவள் போய்விடவேண்டும். இவ்விதம் நடந்துவந்ததை அவன் குலகுரு அறிந்து, அது ஒரு பிசாசாயிருக்க வேண்டுமென்றும், அதனுடன் சகவாசஞ்செய்வதால் இம்மை மறுமைகளுக்குத் தீங்கு நேரிடுமென்றும், சொல்லித் தன்னுடைய அபிப்பிராயத்தை வற்புறுத்தி நிலைநிறுத்தமோகினியுடன் சம்பந்தமுடையவர்கள் பட்டபாடுகளைக் காட்டப் புராணங்களிலும் கதைகளிலுமிருந்து அத்தாட்சிகள் கூறி, குறித்த நாழிகைக்குமேல் கொஞ்சம் தாழ்ந்தால் அப்பிசாசின் மெய்யுருவம் வெளிப்படுமாகையால் அவ்விதம் செய்து பரீக்ஷிக்க வேண்டுமென்று சொன்னான். தன் குரு எதிர்பார்ப்பது நடக்கமாட்டாதென்கிற நம்பிக்கை அவனுக்கிருந்தாலும், அப்படிச் செய்வதால் யாது நேரிடுமென்பதை யறியும் ஆசையால் அப்புனபதி அதற்கிணங்கினான்.

குறித்த காலத்தில் வழக்கம்போல் ஒருநாள் தலைவனும் தலைவியும் சந்தித்தார்கள். முன்செய்த ஏற்பாட்டுப்படி காலசந்தி மணியடிக்கச் சிறிது காலம் தாமதித்தது. அப்பொழுது அம்மோகினியின் வெளித்தோற்றம் மாறுதலடையாவிட்டாலும், திடீரென்று ஏங்கிச் சத்தமிட்டெழுந்து, தலைவன் தன்னைத் தழுவியிருந்ததை நீக்கிக்கொண்டு, தான் போவதாயும் திரும்பி வரப்போகிறதில்லையென்றுஞ் சொல்லி அவ்வூற்றில் முழுகிக் கண்ணுக்குத் தோற்றுமல் மறைந்தனள். அவளதில் இறங்கவே இரத்தத்தால் சிவப்பாகிய நீர்க்குமிழிகள் தோன்ற, மனந்தடுமாறி அந்தப் பிரபு தன்னுடைய ஆய்ந்தறியாத அவிவேகச் செய்கையால் அத்புதமும் இரகசியமுமான அப்பெண்மணி இறந்தனளென்று கண்டான். அவள் ஸௌந்தரியத்தைப்பற்றி ஞாபகமும் தான் செய்ததைப்பற்றிய அனுதாபமும் அவனை வருத்த, அதற்கு இரண்டொரு மாதங்களுக்குள் ஒரு யுத்தத்தில் அவன் தன்னுயிரைத் துறந்து அதற்குப் பிராயச்சித்தஞ் செய்தவனானான். ஆனால் அவனிறப்பதற்கு முன்னமேயே தன் காதலியின் ஞாபகார்த்தமாக அவள் வாசஸ்தலமாகத் தோற்றிய அப்புனித ஊற்றை மற்றவர்கள் தொட்டு அசுத்தமும் அழுக்குமாக்காதபடி அழகான ஒரு கட்டடம் கட்டி அதைப் பத்திரப்படுத்தினான். அக்கட்டடம் உடைந்த துண்டுகள்தான் இப்பொழுது பக்கத்தில் சிதறிக் கிடந்தவை. அதுவே புனபதி வமிச நாசத்திற்கு அங்குரார்ப்பணமாயிற்று.

அவ்வூற்றைப்பற்றிச் சாதாரணமாகச் சொல்லுகிற கதை இது. அவனுக்குத் தன்னிடத்தில் ஆசையில்லை என்ற சங்கையால் அவளைக் கொன்று அவன் அதில் எறிந்ததாகக் கூறுவர் சிலர். சிலர் அது அன்னிய சமயத்தவரின் கட்டுக்கதை யென்றனர். ஆனால் அது புனபதி வமிசத்தினர்க்கு ஆபத்து ஸ்தலமென்றும், அதன் சமீபத்தில் போவதும் அவ்வூற்றுச்சலத்தைக் குடிப்பதும் அவர்களுக்கு அனிஷ்ட சூசகமென்றும் சகலரும் சொன்னார்கள்.

இந்த அமங்கல இடத்தில், இறந்தவள்போல் அதிக நேரம் மூர்ச்சையற்றிருந்த கல்யாணி மயக்கம் தெளிந்தாள். சீரணமாயிருந்த சுவரின் ஒரு பக்கத்தில் அவள் முதுகைச் சாத்திவைத்திருந்தது. மயக்கம் நீங்க அவளைப் பாதுகாத்துக்கொண்டு நின்றவன் தெளித்த அபரிமிதமான தண்ணீரால் நனைந்திருந்த ஆடைநீர்சொட்டிக்கொண்டு அவளுடைய அழகிய மிருதுவான மேனியில் ஒட்டியிருந்தது.

அவளுக்கு ஸ்மரணையுண்டானதும், தன் மூர்ச்சைக்குக் காரணமாகிய அபாயம் ஞாபகத்திற்கு வந்தது.

* An adaptation of Sir Walter Scott's **Bride of Lammermore.**

வரவே தன் பிதாவைப்பற்றிய ஸ்மரணையுண்டாயிற்று. சுற்றிப்பார்த்தாள். அவனைக்காணவில்லை. "என் பிதா, என் பிதா" என்று சொல்ல மாத்திரமே அவளால் முடிந்தது. "வீரசேனன் சௌக்கியம். க்ஷேமமாயிருக்கிறான். சற்று நேரத்தில் உன்னிடம் வந்து சேருவான்" என்று ஒரு அன்னியன் பக்கத்தில் நின்று சொல்வதைக் கேட்டாள்.

"நிச்சயந்தானா! அந்தக் காளை எங்களுக்கு அதிகச் சமீபத்தில் வந்திருந்தது. என்னைத்தடுக்காதே. என் தகப்பனைத் தேட நான் போகவேண்டும்" என்று சொல்லிக் கல்யாணி எழுந்தாள். ஆனால் தான் நினைத்ததை முடிக்கப் போதுமான பலமில்லாதிருந்ததால் அவள் சாய்ந்திருந்த கற்சுவரில் விழுந்து காயப்படாமலிருக்க, அவள் பக்கத்திலிருந்த அன்னியன் அவளைத் தன் கைகளில் ஏந்திக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. ஆகிலும் அழகுள்ள ஒரு பெண்ணுக்கு அபாயம் வராமல் ஒரு வாலிபன் இடை விலக்குகையில் சாதாரணமாயுண்டாகாத க்ஷணிக அப்பிரியத்துடன் அவன் அவளை ஏந்தினான். ஏனெனில் திடகாத்திரனாகிய அவ்வாலிபன் அற்பமாகிய அவளைத் தூக்கமுடியாதவன் போல, ஒரு நிமிஷங்கூட அவளைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டிருக்க வேண்டுமென்ற மோகம் சற்றுமற்றவனாய் அவள் முன்னிருந்த கல்லின்மேல் அவளைச் சடக்கென வைத்துவிட்டுச் சில அடிதூரத்தில் நின்றுகொண்டு "வீரசேனன் க்ஷேமமாயிருக்கிறான். இப்பொழுதே இங்கே வருவான். அவனுக்காக நீ வருந்தவேண்டாம். நல்லூழினால் ஆச்சரியமாக அவன் காப்பாற்றப்பட்டான். நீ அதிகமாகக் களைத்திருக்கிறாய். என்னினும் அதிகத் தகுதியான உதவி வருகிறவரை நீ எழுந்திருக்க நினைக்கக்கூடாது" என்று மறுபடியும் பரபரப்புடன் சொன்னான்.

அப்பொழுது பூரணமான போதம் திரும்பி வந்துவிட்ட கல்யாணி திரும்பி அன்னியனைக் கவனமாகப் பார்க்க இயற்கையாய் நேரிட்டது. ஆசிரயம் அவசியமான ஒரு கன்னிகைக்குக் கைகொடுத்துதவ மனமற்றவனுக்காவது அல்லது அவனுடைய சகாயத்தை அவள் மறுதலிக்கத் தூண்டக்கூடிய தோற்றமாவது அவனிடத்திலில்லை. அவன் தரித்திருந்த வேட்டையுடுப்பால் அவன் பெரிய அந்தஸ்துள்ள வமிசத்தனென்று தெரிந்தது. தலையில் போட்டிருந்த குல்லா முகத்தை அநேகமாக மூடியிருப்பினும், சற்றுக் கடுகடுத்த முகமும், அழகும், லாவண்யமும், கம்பீரமுமுடைய தேகமும் உடையவனென்று கண்டாள். இரகசியமான மனச்சஞ்சலத்தினாலோ அல்லது எப்பொழுதும் மனவெறுப்புச் சிந்தையிலிருப்பதாலோ வாலிபத்தின் முககாந்தியும் கபடமற்ற உல்லாசமும் ஜ்வலிக்க வேண்டிய அவன் முகம் பொலிவிழந்திருந்தது. அவன் முகத்தைப் பார்த்தால் அவனிடத்தில் கருணை அல்லது பயபக்தி அல்லது சந்தேகம் அல்லது விநோதம் தோன்றாமலிராது.

விவரிக்க இவ்வளவு நேரஞ் சென்ற சாயலைக் கல்யாணி ஒரு நிமிஷம் பார்த்தவுடன் தெரிந்துகொண்டாள். அந்த அயலவனுடைய கண்களை அவள் கண்கள் சந்தித்தவுடன் நாணத்தாலும் பயத்தாலும் தரையை நோக்கித் தலைகவிழ்ந்து நின்றாள். ஆனாலும் பேசவேண்டிய அவசரமிருந்தது. அல்லது அவள் அவசரமிருப்பதாக நினைத்தாள். பதறிய பேச்சுடன் தன்னையும் தன் பிதாவையும் காப்பாற்றின மகா புருஷன் அவனாகத்தானிருக்கவேண்டுமென்ற நிச்சயத்துடன் தன்னுடைய ஆச்சரியமான இரட்சண்யத்தைப் பற்றிச்சொல்லத்தொடங்கினாள்.

நன்றியறிதலைக் காட்டும் அவள் வார்த்தைகளைக் கேட்கக் கூசியவனைப்போல் சடக்கென "அம்மா! உன்னைக் குலதேவதையாக மதிக்கக்கூடியவர்களின் ஆதரவுக்குள் உன்னை விடுகிறேன்" என்று கடுஞ்சொல்லாகாவிட்டாலும் கண்டிப்புடனும் ஆனால் அதிக இனிமையாயும் பதில் சொன்னான்.

அவன் மறுமொழியின் உபயார்த்தத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து கபடமும் நடிப்புமில்லாத க்ருதஜ்ஞதையுடன் தன்னைக் காப்பாற்றினவனுக்குப் பிழை செய்தல் என்கிற எண்ணத்தை வெறுத்தவளாய், "எங்களுக்கு நீர்செய்த நன்றிக்காக உமக்கு நான் வந்தனம் அளித்த வார்த்தைகள் உசிதமாகவில்லைபோலிருக்கின்றன. நான் சொன்னவை எனக்கு ஞாபகமில்லை. அப்படித்தானிருந்திருக்கவேண்டும். என்னுடைய பிதா, மந்திரி, வருகிறவரை இருந்து அவனுமக்கு வந்தனமளித்து உமது பெயரை அவன் தெரிந்துகொள்ள இடம்கொடுக்க விரும்புகிறேன்" என்றாள்.

"என் பெயர் அவசியமில்லை. உன் பிதா—இல்லை, வீரசேனன்—கூடிய சீக்கிரத்தில் அதைத் தெரிவதால் எவ்வளவு பிரியப்படுவானோ அவ்வளவும் பெறும்படி தெரிந்துகொள்ளுவான்" என்றான்.

"நீர் அவன் விஷயத்தில் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறீர். தனக்காகவும் எனக்காகவும் அவனும்மி

டத்தில் நன்றியறிதலுள்ளவனாக விருப்பான். உமக்கு என் பிதாவைப்பற்றித் தெரியாது. அல்லது அவன் அம்மிருகத்தின் கோபத்திற்கு ஆளாயிருக்க அவன் சுகமாயிருக்கிறானென்று கதைசொல்லி என்னை வஞ்சிக்கிறீர்" என்றாள்.

இந்த எண்ணம் முதித்தவுடன், தரையிலிருந்து குதித்தெழுந்து ஆபத்து நேர்ந்த சோலையை நோக்கிச் செல்ல முயன்றாள். அவளுக்குதவி செய்ய விருப்பம் ஒருபக்கத்திலும் அவளிஷ்டம்போல் அவளை விட்டுவிடப் பிரியம் மற்றொரு பக்கத்திலும் அவனை இழுக்க அவன் கொஞ்சம் தாமதிக்கிறதாகத் தோற்றினாலும், சாதாரண பூததயையால் அவன் அவளைப் போகக் கூடாதென்று பிரார்த்தித்துத் தடையுஞ் செய்தான்.

"அம்மா! உயர்குலப் பிறப்பையுடைய நான் ஆணை யிடுகிறேன். நான் சொல்வது உண்மையே. உன் பிதா க்ஷேமமா யிருக்கிறார். காட்டுமிருகங்கள் மேய்ந்த இடத்திற்குப் போக நீ முயன்றால் பெரிய அபாயத்திற் குள்ளாவாய்" என்றான். அவன் சொன்னதையும் கவனியாமல் அவள்போக ஆரம்பித்தபொழுது "நீ போகத்தான் போகிறாயானால், உனக்கு ஊன்றுகோலாக நானிருப்பது அதிக உசிதமில்லையானாலும் என் கையைப் பிடித்துக்கொண்டு நட" என்றான்.

அவன் சொன்ன சூசனையைக் கவனியாமல் அவனுடைய வார்த்தையைப் பிடித்துக்கொண்டு "நீர் ஒரு ஆண்பிள்ளையானால், குலீனரானால் என் பிதாவைக் கண்டுபிடிக்க எனக்கு உதவி செய்யும். நீர் என்னை விட்டுப்போகக்கூடாது. என்கூடப் போகவேண்டும். நாமிங்கே பேசிக்கொண்டிருக்கையில் அவன் ஒருவேளை அங்கே இறந்துகொண்டிருப்பான்" என்றாள்.

நியாயம் சொல்லுவதையும் மன்னிப்புக் கேட்பதையும் அங்கீகரியாமல் அன்னியன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண் டெழுந்தாள். அந்த ஆதாரமில்லாவிட்டால் அவளால் நடக்கமுடியாது. அவன் தன்னை விட்டுவிட்டுப் போகாமலிருக்க அவன் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு அவள் போகையில், முனியம்மாளுடைய வேலைக்காரியும் தான் உதவிக்காக அழைத்து வந்த இரண்டு மரம்வெட்டுகிறவர்களும் தன்னைப் பின்தொடர வீரசேனன் அங்கே வந்தான். தன் கையில் பழக்கமாகத் தொங்கிக்கொண்டு வருவதுபோல் அயலான் ஒருவன் கையில் தன் மகள் தொங்கிக்கொண்டு வருவதைக் கண்டால் அவனுக்கு மற்ற காலங்களி லுண்டாயிருக்கக்கூடிய பிரமிப்பை அப்பொழுது அவளைக் கண்டவுடன் ஜனித்த சந்தோஷம் வென்றது. ஆனந்தத்துடன் அவளைக் கட்டித் தழுவிக்கொண்டு "கல்யாணி! என் கண்ணே! தப்பிப்பிழைத்தாயா" என்று கேட்கத்தான் அவனால் முடிந்தது.

"சுவாமி கிருபை செய்தார். நான் க்ஷேமமாயிருக்கிறேன். நீரும் க்ஷேமமாயிருக்கிறதைக் கண்டு எனக்கு அதிகப் பூரிப்புண்டாகிறது. ஆனால் இந்தக் கனவான் என்னைப்பற்றி என்ன நினைப்பார்" என்று சொல்லி அவன் கையை விட்டுவிட்டு ஒதுங்கிநின்றாள். உடனே அவள் முகக்குறியால் தான் உதவியைப் பிரார்த்தித்துக் கட்டாயப்படுத்திய சுவாதீனத்தை எண்ணி நாணினாளென்பது விசதமாயிற்று.

"தன்தேகபலத்தாலும் மனத்திடத்தாலும் என் குழந்தையின் பிராணனையும் என் பிராணனையும் காப்பாற்றி, ஒரு மனிதன் மற்றொருவனுக்குச் செய்யக்கூடிய அதிக மேலான உதவிசெய்த அம்மகா புருஷனுக்கு மிக்க நன்றியறிதலுடையவனா யிருக்கிறேனென்று நான் வற்புறுத்திக் கூறுவதால் அவருக்கு நாம்கொடுத்த தொந்தரைக்காக அவர் பச்சாத்தாப்படமாட்டாரென்று நம்புகிறேன். நாம் அவரை ஒன்று பிரார்த்திப்போம்......" என்றான்.

"பிரபுவே! என்னிடத்தி லொன்றும் பிரார்த்திக்க வேண்டாம். நான் புனபதி" என்று கண்டிப்பாயும் திட்டமாயும் சொன்னான்.

ஆச்சரியத்தால் ஒருவரும் பேசவில்லை. சித்த விகாரங்களுண்டாயின. மாதவன் தன்னுடையால் தன்னை மூடிக்கொண்டு நன்றாய் வெளிக்குக் கேட்காததும் அப்பிரியமாகப் பேசப்பட்டதுமான சில உபசார வார்த்தைகளைக் கல்யாணியிருந்த பக்கந் திரும்பி முணுமுணுத்துவிட்டு அவர்களை விட்டுத் திரும்பி உடனே சோலைக்குள் சென்று மறைந்தான்.

தனக்குண்டாகிய க்ஷணிகமான ஆச்சரியம் நீங்கியவுடன் "புனபதியா! அவர் பின்னாலே ஓடுங்கள். அவரை நிறுத்துங்கள். ஒரு நிமிஷம் என்னுடன் பேசும்படி அவரைப்பிரார்த்தியுங்கள்" என்று வீரசேனன் சொன்னான்.

உடனே இரண்டு காட்டாட்களும் அவனைத் தேடி ஓடினார்கள். அவர்கள் சீக்கிரம் திரும்பவந்து குழப்பத்துடனும் அவலக்ஷணமாயும் அவன் திரும்ப வரமாட்டேனென்று சொல்லிவிட்டான் என்றார்கள்.

வீரசேனன் அவர்களிலொருவனைத்தனியே அழைத்துப் புனபதி என்ன சொன்னானென்று விபரமாய்க் கேட்டான்.

இனிமையில்லாத சங்கதியைச் சொல்லப் பிரியப்படாத அந்த மனிதன் அவன் திரும்பிவரமாட்டேனென்று சொன்னானென்று மாத்திரம் சாவதானமாகச் சொன்னான்.

"இல்லை. அவன் அதிகம் சொல்லியிருக்கிறான். அதென்னவென்று எனக்குத் தெரியவேண்டும். ஒளியாமல் சொல்" என்றான்.

"ஐயா! அவன் என்னவோ சொன்னான். அதைக் கேட்டால் தங்களுக்குப் பிரியமாயிருக்க மாட்டாது. ஆனால் அவன் ஒரு தீங்கும் கருதவில்லை என்று நான் உறுதியாகச் சொல்வேன்" என்று கீழே குனிந்துகொண்டு அந்த வேடன் சொன்னான்.

"அது உனக்கென்ன! அவன் சொன்ன அதே வார்த்தைகளையே கேட்கப் பிரியப்படுகிறேன்" என்று வீரசேனன் சொன்னான்.

"சரிதான். அவனும் நானும் இனிச் சந்திக்க நேரிடும் காலத்தில் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவதாலுண்டாகக் கூடிய அவ்வளவு சந்தோஷம் நாங்கள் சந்திப்பதால் அவன் அடைய மாட்டானென்று வீரசேனனுக்குச் சொல் என்று சொன்னான்" என்றான்.

"சரிசரி! இராஜாளிப் பந்தயத்தில் நாங்கள் வைத்திருக்கிற சபதத்தைக் குறித்துச் சொன்னானென்று நினைக்கிறேன். அதனால் ஒன்றுமில்லை" என்று வீரசேனன் சொல்லிவிட்டுத் தன் மகளைத் திரும்பிப்பார்த்தான். அதுவரை வீட்டிற்கு நடந்துபோகக் கூடிய தைரியம் அவளுக்குண்டாயிற்று. ஆனால் எல்லாச் சங்கதிகளும் அவள் மனத்தில் பதியக்கூடிய தன்மையுடையவளாகையால், அப்பொழுது கண்ட பயங்கரமான காட்சிகளெல்லாம் அவள் ஞாபகத்தில் நன்றாய்ப் பதிந்து, தேகத்தில் நரம்புத் தளர்ச்சியாலுண்டான கெடுதியிலும், அதிகக் கெடுதியை அவள் மனதிலுண்டாக்கின. கனவிலும் நனவிலும் பயத்தினாலுண்டாகும் தோற்றங்கள் அந்த உக்கிரமான மிருகத்தின் உருவத்தையும் ஓடிவரும்பொழுது அது செய்த பயங்கரமான தொனியையும் அவளுக்கு ஞாபகப்படுத்தின. தனக்கும் நிச்சயமாகத் தனக்கு நேரிடக்கூடியதாயிருந்த மரணத்திற்கும் மத்தியில் தோற்றிய அது முகத்திலும் வடிவிலும் பிறப்பின் மேன்மையும் கவுரவமும் பிரகாசித்துக்கொண்டிருந்த மாதவன் உருவமே. ஒரே மனிதனைப்பற்றி, அதிலும் அனுகூலமாகிய ஒரே மனிதனைப்பற்றி, அடிக்கடி நினைக்க நேரிடுவது ஒரு கன்னிகைக்கு அபாயகரமாவதே. ஆனால் கல்யாணி யிருந்த நிலைமையால் அந்நினைவு விலக்கவொண்ணாததாயிருந்தது. மாதவனைப்போல் ஆச்சரியமும் அசாதாரணமுமான சாயல்களும் நடையுமுடைய வேறொரு வாலிபனை அவள் பார்த்ததேயில்லை. அவைகளில் அவனுக்கு ஒப்பும் உயர்வுமுள்ள ஆயிரம் பேரை பார்த்தாலும், ஆபத்து, அதன் விமோசனம், நன்றியறிதல், ஆச்சர்யம், விநோதம் இவைகளின் ஞாபகம் அவர்களொருவரிடத்திலுமுண்டாகாது. அவனுடைய வடிவழகுக்கும் நடை அழகுக்கும் தகுதியற்ற ஆச்சரியமான அசாதாரண அடக்கமும் சமயோசித உபசாரமையின்மையும் அவள் மனதில் அவன் ஞாபகம் பதியக் காரணமானதால் "விநோதம்" என்று கூறப்பட்டது. மாதவனைப்பற்றியும் அவனுக்கும் தன் தகப்பனுக்குமுள்ள விவாதங்களைக் குறித்தும் கல்யாணிக்கு ஒன்றும் தெரியாது. அவ்விவாதங்களாலுண்டாகிய கோபமும் மனக்கசப்பும் அவள் சாந்தையாகையால் அவளுக்குத் தோற்றியே யிருக்கமாட்டா. ஆனால் அவன் மேன்மையான குலத்திற் பிறந்தவனென்றும் கவுரவமும் செல்வமுமுள்ள வமிசத்தில் ஜனித்தாலும் ஏழையாய்ப் போய்விட்டானென்றும் அவளுக்குத் தெரியும். தன் பிதாவின் அரண்மனையையும் இராச்சியத்தையும் புதிதாயடைந்தவன் காட்டப்போன நன்றியறிதலை வெறுத்து விலக்கிய பெருமை வாய்ந்த அவன் மன நிலையை மெச்சி அனுதாபங்கொண்டாள். அதைத்தான் அறிந்துகொண்டாள். முரடர்களின் கோபத்தைச் சமனஞ் செய்ய உபயோகிக்க ஸ்திரீகள் நன்றாயறிந்திருக்கிற மனோகா வியாபாரங்கள் போன்றவைகளால் மனம் கரையும்படியும் அதிகச் சாந்தமாயும், சாவதானமாயும் தன் தகப்பன் அவனைப் பிரார்த்தித்திருந்தால், ஒருவரையொருவர் நன்றாயறிந்து நண்பர்களாவதை மாதவன் விலக்கியிருப்பானா என்ற கேள்வி அவள் மனத்திலுண்டாகிய, அபாயமான கேள்வி. அந்த எண்ணமும் அபாயம், அதனால் விளையும் பயனும் அபாயம்.

தொட்டாற் சுருங்கிபோலிருக்கும் கன்னிகைகளுக்கு அபாயகரமான மனமயக்கத்தில் கல்யாணி யிருந்தாள். வேறிடங்களுக்குச் சென்று, அந்த முகத்தைத் திரும்பிப் பாராமல் புதுமுகங்களைப் பார்த்துக்கொண்டு சில காலஞ் சென்றால், சிலர் விஷயத்தில் நேர்வதுபோல இவளுக்கும் அம்மயக்கம் ஒழிந்திருக்கலாம் என்பதுண்மையே. ஆனால் அவள் அதே இடத்திலிருந்தாள். அவள் மயக்கம் மாற வேறு விஷயங்களுமில்லை. அவள் தாய் வீரசேனை இராஜதானியிலிருந்தாள். அவள் தகப்பன் ஜனங்களுடன் சாதாரணமாகக் கலந்து திரிபவனல்ல. படாடோபத்திற்காகவும் காரியாநுகூலத்திற்காகவும் சிலவேளை சிலரை வீட்டிற்கழைக்கிறதுண்டு. ஆகையால் கவுரவமுள்ள மற்றக் கனவான்களைப் பார்க்க மார்க்கமில்லாததால் கல்யாணியின் மனத்திற் குடிகொண்ட மாதவனுருவத்தை ஒத்து மற்றொன்று தோன்ற இடமில்லை.

இந்நிலையிலிருக்கையில், அவிவேகத்தால் தன் மனத்தை விட்டகலாமலிருக்கும்படி தான் விட்டுவிட்ட சங்கதியைப்பற்றிப் பேசச் செய்யலாமென்று நம்பி அடிக்கடி முனியம்மாள் வீட்டிற்குக் கல்யாணி சென்றாள். ஆனால் அவள் அபீஷ்டத்தை இவ்விஷயத்தில் அவள் பூர்த்தி செய்யவில்லை. அவளுடைய குடும்ப விஷயத்தைப்பற்றிக் கிழவி அடிக்கடி மனக்கசிவுடன் பேசுவாள். ஆனால் மாதவனைப்பற்றி அதிகம் பேசுகிறதில்லை. பேசின சில வார்த்தைகளும் கல்யாணி எதிர்பார்த்த அளவு அனுகூலமாகவுமில்லை. அவன் கடுமையும் பகை சாதிக்கிற குணமு முடையவனென்றும் தனக்குச் செய்த தீங்கை மன்னிக்காமல் சலம் சாதிக்கிறவனென்றும் குறிப்பித்தாள். இதையும், தன் தகப்பனிடத்தில் மாதவனைப்பற்றி ஜாக்ரதையாயிரு" என்று சொன்னதையும் சேர்த்து யோசித்துக் கல்யாணி அதிக பயத்துடனிருந்தாள்.

ஆனால் முனியம்மாள் அப்படி எச்சரித்த கொஞ்ச நேரத்தில் அவன் தன் பிதாவினுயிரையும் தன்னுயிரையும் தப்பவைத்ததானது அவன் களங்கமற்றவனென்று காட்டுகிறது. முனியம்மாள் சொல்லுகிறபடி அவன்பழி வாங்கவேண்டுமென்னும் எண்ணமுடையவனாயிருந்தால் அதை நிறைவேற்ற வேறொன்றும் செய்யவேண்டியதில்லையே. காலோசிதமும் நல்முடிவு முடையதாகிய அவனுதவியை ஒரு க்ஷணநேரம் செய்யாமலிருந்திருந்தால் அவனொன்றும் செய்யாமலே அவன் கோபத்திற் கிலக்கானவன் பயங்கரமான மரணத்தை நிச்சயமாக அடைந்திருப்பானே. ஆகையால் இரகசியமான தப்பெண்ணத்தினாலோ அல்லது இடுதனத்தாலும் துரதிர்ஷ்டத்தாலு முண்டாகும் சந்தேகத்தாலோ முனி இப்படிச் சொன்னாளென்றும் அது மாதவனுடைய கருணை நடைக்கும் கம்பீர சுபாவத்திற்கும் தகுதியற்றதென்றும் கல்யாணி எண்ணினாள். இந்த எண்ணத்தில் முழுநம்பிக்கை யுடையவளாய் அதிகாலையில் சூரிய ரச்மியில் முத்துப்போல் பிரகாசிக்கிற பனித்துளிகளையுடைய அழகிய ஆனால் சற்று நேரத்தில் ஒழிந்துபோகிற சிலம்பி நூல்வலைபோல் கல்யாணியும் பின் அடைய எண்ணும் சுகானுபவங்களையெல்லாம் தன் மனத்தில் வீணாய் மனோராச்சியஞ் செய்து ஆனந்த மடைந்துகொண்டிருந்தாள்.

அவள் தகப்பனும், மாதவனும், நடந்த விசித்திரமான சங்கதியைப்பற்றி அடிக்கடி ஆழ்ந்து யோசனை செய்துகொண்டிருந்தார்கள். வீட்டிற்கு வந்தவுடன் வீரசேனனுக்கு முதல்வேலை வைத்தியனை அழைத்து நேர்ந்த அபாயமும் பயங்கரமுமான நிலையினால் தன் மகளுக்குக் கெடுதி ஒன்றும் சம்பவிக்கவில்லையா, என்பதைப்பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்வதாயிருந்தது. அது நிச்சயமானவுடன், காலஞ்சென்ற புலப்பியின் கருமகைங்கரிய காலத்தில் நடந்த விஷயத்தைப் பற்றித் தான் முன்னெழுதி வைத்திருந்த "யாதாஸ்தை"த் திருத்த ஆரம்பித்தான். மெய் பொய்களை மாறுட்டும் சாமார்த்தியத்தில் வளர்ந்து, எந்தக் கக்ஷிக்காக "வக்காலத்து" வாங்குகிறானோ அந்தக் கக்ஷி ஜயிக்கவேண்டிய அகடவிடங்களில் கை பழகிய ஒரு வக்கீல் அவனாகையால் முதலில் உண்மைக்கதிகமாகப் பாராட்ட நினைத்த கலகத்தைக்குறைத்து அமுக்கியமாகக் காட்டுவது அவனுக்கொரு தொந்தரையான வேலையாகவில்லை. உலகப்பழக்கம் குறைந்த கோபிகளான வாலிபர் விஷயத்தில் சாமோபாயங்களைக் கைக்கொள்ளவேண்டிய அவசியத்தை சஹகாரிகளான மந்திரிகளுக்குப் போதித்தான். அந்த வேலைக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தன் நடத்தை அனாவசியமாகக் கோபமூட்டக்கூடியதாயிருந்த தென்பதையும் எழுதாமல் விடவில்லை. இது அவன் பகிரங்கமாக எழுதிய யாதாஸ்து. இதுவிஷயத்தில் நடவடிக்கைகள் நடத்தவேண்டிய தனது சொந்த நண்பர்களுக்கு அனுப்பிய கடிதங்களில் அதிலும் அதிக அனுகூலமாகவே எழுதியிருந்தான். கரும கைங்கரியத்தில் சாதாரணமாக ஜனங்களுக்குள்ள பயபக்தியையும் பூஜ்யதையையும் அனுசரித்து, தன் தகப்பனுடைய கைங்கர்யத்திற்கு இடையூறுண்டாகாமல் செய்ததற்காக மாதவனைக் கண்டிப்பதை ஒருவரும் பிரியப்படமாட்டார்களாகையால், அவனுக்குத் தயைசெய்வது காரியசாதகமாயும் லோகரஞ்சிதமாயுமிருக்குமென்று காட்டினான். கடைசியாக இவ்விஷயத்தில் கடினமான நடவடிக்கை நடத்தக்கூடாதென்பது தன்னுடைய முக்கிய வேண்டுகோளென்று தயாளமும் பெருந்தன்மையுமுடையவன்போல் எழுதினான். ஒரு காலத்தில் கவுரவமா யிருந்த அந்தச் சமஸ்தானம் தற்கால நிலைக்கு வரக்காரணமாகிய நீடித்த வியாச்சியங்களில் தான் ஜயித்ததால் அவர்கள் விஷயத்தில் தானிருக்கிற ஸ்திதியைச் சாதுர்யமாகச் சூசிப்பித்து, தான் நியாயமாயும் சட்டப்படிக்கும் தன் பாத்தியதையை ஸ்தாபித்தாலும் தன்னால் அக்குடும்பத்திற்குண்டான பிரதிகூலத்திற்குப் பிரதிபலன் அளிக்க மார்க்கமிருந்தால் அது தனக்கு அதிகத் திருப்தியாயிருக்குமென்றும் ஒத்துக்கொண்டான். ஆகையால் அது காரணமாக வேறொரு கெடுதியும் விளையக்கூடாதென்பது தன் சொந்தமான முக்கிய பிரார்த்தனையென்றும், தன்னுடைய அனுகூலமான எழுத்தாலும் மத்யஸ்தத்தாலும் அது நன்மையாக முடிந்ததென்னும் பெருமை தனக்குக் கிடைக்க வேணுமென்றும் குறிப்பித்தான். இந்தக் குழப்பத்தைப் பற்றித் தன் மனைவிக்கு அவனெழுதாமலிருந்தது ஆச்சரியம். ஒரு காட்டுமாட்டால் கல்யாணிக்குண்டான பயத்தைப் பற்றி எழுதினவன் விநோதமும் பயங்கரமுமான இச்சம்பவத்தைப்பற்றி விவரமாய் எழுதவேயில்லை.

தாங்க ளெதிர்பாராத விதத்தில் வந்த கடிதங்களைக் குறித்து, மற்றைய மந்திரிகளுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. ஒருவரோடொருவர் கலந்து பேசி, ஒருவர் சிரித்தார். ஒருவர் புருவத்தை நெறித்தார். ஒருவர் ஆச்சரியந்தானென்றார். மற்றொருவர் "இவ்வளவு தானா அவர் கடிதங்கள். இவ்வளவு கடிதங்களிலும் சங்கதியின் மூலம் வெளிப்படவில்லையே. என்ன ஆச்சரியம்" என்றார்.

வேறு கடிதங்களிருக்குமென்று அக்கேள்வியால் யூகிக்க வேண்டியிருந்தாலும் அவைகளுக்கு எதிராக வேறு காகிதங்கள் வரவில்லை.

தலை நரைத்த ஒரு கிழமந்திரி "சரிதான். ஆட்டுத்தோல் சந்தைக்கு வந்ததுபோல் குட்டியின் தோலும் வரும் என்பதை வீரசேனன் அறிந்திருப்பானென்றிருந்தேன்" என்றார்.

"நாம் எதிர்பாராததா யிருந்தாலும் அவனிஷ்டம் போல் விடுவோம்" என்றார் மற்றொருவர்.

"பிடிவாதக்காரனுக்குப் பிடித்ததே பிடி" என்றார் இன்னொருவர்.

"இன்னும் ஒரு வருஷத்தில் தெரியும். மாதவன் அவனை ஆட்டிவைத்து விடுவான்" என்றார் ஒருவர்.

"ஐயோ! அந்த ஏழை வாலிபனால் என்னசெய்ய முடியும். எல்லாவற்றையும் வீரசேனன் பிடுங்கிக் கொண்டானே" என்றார் மற்றொருவர்.

"ஆஸ்தியில்லையானால் ஆளில்லையோ" என்றார் இன்னுமொருவர்.

"இவ்விதம்பேசுவதில் பயனென்ன. அவன் நினைத்தபடி செய்யட்டும்" என்றார் ஒருத்தர்.

"சரி! நாம் நான்கு பேரிருக்கிறோம். சாகக்கிடக்கும் சாம்பன் பிரபுவையும் சேர்த்து நாம் 5 பேர் பஞ்சாயத்தில் அவ்விதம் தீர்மானித்தோ மென்பதை வீரசேனனுக் கெழுதியனுப்பு" என்று ஒருவர் அங்கேயிருந்த ஒரு உத்தியோகஸ்தனுக்குக் கட்டளையிட்டார்.

"கனவான்களே! அந்தத் திரிதலையான கந்தப்பிரபுவின் சொத்து யாருக்குச் சேருகிறது. பொக்கிஷதாரைச் சேரவேண்டியதுதானே" என்றார் ஒரு பிரபு.

"சரி சரி. அவர் கொண்டுபோகிறது. நான் ஏமாந்திருக்கிறதா. அது எனக்கென்று வைத்திருக்கிறேன்." என்றார் மற்றொரு மந்திரிப்பிரபு.

"கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்க்குமுன் நாய் வாயை நக்குவது போலிருக்கிறீர். இன்னும் அபாராதமே போடவில்லையே" என்றார் மற்றொரு பிரபு.

"அதற்கென்ன! "பேனா" விரலால் இரண்டிழுப்புத் தானே. சென்ற 30 வருஷங்களாக இராஜாங்கத்திற்குச் செய்யாததெல்லாம் செய்து படாதபாடெல்லாம் பட்டு நல்லது சொன்னாலும் கெட்டது சொன்னாலும் விடாமல் இரவும் பகலுமுழைத்துக் கஷ்டப்பட்டு நாக்கு உலர்பவனுக்கு அப்பொழுதைக் கப்பொழுது தொண்டையை நனைக்கக் கொஞ்சமாவது வேண்டாமா" என்றார் இன்னொரு மந்திரி.

"ஆம் ஆம்! உம்முடைய தாகத்தைத் தணிக்கப் போதுமானதென்று நாங்கள் நினைத்தாலாவது அல்லது உம்முடைய தொண்டையில் போட்டதை உள்ளே இடித்துத் தள்ளக் கொட்டைக்குச்சு வேண்டியதாக எங்களுக்குத் தெரிந்திருந்தாலாவது அது நியாயந்தான்" என்றார் மற்றொரு பிரபு.

அக்காலத்து அமைச்சரின் அழகிருந்தபடி இது!

S. V. கன்னபிரான் பிள்ளை, பி. ஏ.

உல்லாஸன் சரிதம்

ADVENTURES OF ULYSSES

பத்தாம் அத்தியாயம்

(தொடர்ச்சி)

அந்நா ரின்று நாளை யழிவதற் கைய மில்லை
உன்னா சுனக்கே தந்தே ஞுருதி யூழி காலம்
பொன்னரி சுமந்த பீடத் திமையவர் போற்றி செய்ய
மன்னவ ஞக யானே சூட்டுவன் மகுட மென்றான்.

பொழுது விடிந்தவுடன் வழக்கம்போலப் போஜனப்பிரியர்களான பிரபுக்கள் அரண்மனைக்கு வந்தார்கள் அங்கு ஆயுதங்களெல்லாம் செவ்வைப்படுத்தி வைத்திருத்தலைக் கண்டு உள்ளுக்குள்ளே பயந்த கனவான்கள் தலைமகனைக் கேட்க அவன் பிதாவின் ஆக்ஞைப்படி "துருப்பிடித்தவைகள் சுத்தஞ்செய்யப்பட்டுள்ளன" வென்றான். மூடர்களான பிரபுக்கள் அவன் சொன்னதை நம்பி வயிற்றுக் காரியத்திற் சாரம்பித்தார்கள். அன்று வழக்கத்துக்கு மாறாக உல்லாஸனுக்குப் பிரத்யேகமாய் ஒரு ஆஸனம் அளிக்கப்பட்டு அதினின்று தன் ஆகாரத்தை யுண்ணும்படி தலைமகன் ஏற்பாடு செய்திருந்தான். பிச்சைக்காரன் பந்தியினுட் சார்ந்ததைப் பார்த்த பொறாமைக்காரர்கள் மனங் கொதித்தது. அவர்களில் பிலாஷனென்றொருவன் ஜீவகாருண்யமுடையவனா யிருந்தான். இவன் உல்லாஸனிடத்திற் சென்று "முதியோரே, உமது வரவு நல்வரவாகுக. உம்மை, இங்குள்ளார் படுத்திவைத்திருக்கிற பாட்டைக் கண்டு என் மனம் புண்ணாயிற்று. ஊழ் உத்தமரையும் வருத்தாமல் விடுவதில்லை. ஒருகால் உல்லாஸனும் உம்மைப்போல் உலகிலெங்கேயோ உழல்கின்றார். விதிசெய்யும் விபரீதங்களை என்னென்று சொல்வது?" என்று அனுதாபப்பட்டுச் சொன்னான்.

பிச்சைக்காரனை உல்லாஸனுக்கு உவமித்த நிமிஷமே காமப்பேய் பிடித்த பிரபுக்கள் வெறிகொண்டவர் போலக் குலுங்கக் குலுங்க நகைத்து ஆரவாரித்தார்கள். மினேர் வாவின் ஆக்ஞையால் இவர்கள் களிப்பில் அச்சமும் கலந்து நின்றது. இச்சமயத்தில் அவர்களி லொருவன் "உங்களுக்கு வெறி பிடித்ததோ? ஏன் இப்படிச் சிரிக்கின்றீர்கள்? உங்கள் இறைச்சியில் இரத்தம் ஒடுகின்றது பார்த்தீர்களா? பகற்காலம் நள்ளிரவாயிற்றே; ஆரவாரிக்கின்றீர்களே, உங்கள் கண்களில் நீர் பெருகுகின்றதே. கூடம் முழுதிலும் பேய்க்கூட்டமாயிருக்கின்றதே. இந்த இடம் பூதப்பிரேதங்களால் நிரம்பியிருத்தலால் நரகமென்றே சொல்லலாம்," என்றும் தீர்க்கதரிசியைப்போற் பேசினான். மதிகெட்டுப் போன மற்றவர் அவனைப் பரிகஸித்து "இவனொரு பைத்தியக்காரன். இவனைக் கடைச்சந்தியில் கொண்டு நிறுத்தல் வேண்டும்" என்றார்கள்.

தீர்க்க தரிசியாய்ப் பேசினவன் **யூரிமாகஸ்** என்பவனை நோக்கி, "அடா, மூடா, எனக்குக் கண்களும் கால்களுமிருக்கின்றன. வெளியில் ஸ்வயமாகவே போவேன். தைவ ஸம்மதமானதை உங்களுக்குச் சொல்லுதல் கழுதையின் காதில் உபதேசஞ் செய்ததுபோலாயிற்று. உங்களுக்கு நாசம் ஸமீபித்திருப்பதால் மதிகெட்டுப் போனீர்கள். பிச்சைக்காரன் தைவானுக்ரஹம் பெற்றவனென்று நீங்கள் கடிதில்றிவீர்கள்" என்று சொல்லிவிட்டு வெளியிற் போனான்.

சோற்றுப்பிரபுக்கள் உணவுப்பாத்திரங்களில் தீனி பரிமாறப்பட்டவுடன் அத்தீனியில் லக்ஷியம் வைத்து வயிறார வுண்டு களித்திருக்கையில் தலைமகன் மினெர்வாவின் ஏவலினால், "பிரபுக்களே, உங்களுக்கு நான் அறிவிப்பதொன்றுண்டு. என் பிதா உல்லாஸனுடையவில் இங்குள்ள ஆயுதசாலையில் வெகு காலமாய் நாணேற்றப் படாமலிருக்கின்றது.

'அன்றுமுத லின்றளவு
மாருமிந்தச் சிலையருகு
சென்றுமிலர் போயொளித்தார்
தேர்வேந்தர் திரிந்துமிலர்;

என் தாயை மணம்புரிய நினைப்பவர் இச்சிலையை வளைத்து நாணேற்றிக் குறியில் அம்பு எய்வாராயின் அவரை அவள் அங்கீகரிப்பாள். உங்களிலிஷ்டப்பட்டவர்கள் வில்லை யெடுத்து வளைத்தலாகும்" என்றான்.

தலைமகன் இவ்வாறு பேசின தருணத்தில் **பனிலோபியும்** ஸர்வாபரண பூஷிதையாய்ச்சபையில்வந்து நின்றனள்.

கொல்லும் வேலுங் கூற்றமு
மென்னும் மிவையெல்லாம்
வெல்லும் வெல்லும் மென்ன
மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றது
குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுரு
கப்பெண் கனிகின்றாள்.

இழைகளுங் குழைகளு மின்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய வெனினு மிப்பாவை தோன்றலால்
அழகெனு மழகுமோ ரழகு பெற்றவே.

சபையிலிருந்தோரை நோக்கிப் பனிலோபி சொன்னதாவது:—"புருஷசிரேஷ்டர்களே, என் பிராண நாதன் த்ரோஜா நகரஞ் சென்றபொழுதே என்னழகும் போயிற்று. என் மகன் சொன்னபடி எனக்குச் சம்மதம்."

தலைமகன் தன் மாதாவைச் சபையினின்று அந்தப்புரத்திற்குப் போகலாமென்று சொல்ல, அவளும் அப்படியே செய்தாள். உல்லாசனுக்கும் அவன் சத்துருக்களுக்கும் பெரும்போர்விளைவது நிச்சயமாயிருந்ததால் பெண்பாலர் அங்கிருப்பது அயுக்த மென்றெண்ணித் தலைமகன் அவ்வாறு செய்தான்.

அந்தீனன், யூரிமாகஸ் முதலிய பிரபுக்கள் வில்லைத் தூக்கி வளைக்கப் பார்க்கையில் கீழேவிழுந்து அவமானப்பட்டனர். உல்லாஸன் தலைமகனைப் பார்த்து, "ராஜகுமாரரே, பிரபுக்கள் பிரயத்தனங்கள் பாழ்த்துப் போயின; பிச்சைக்காரனை எனக்கு இடங்கொடுப்பீராயின் நான் ஒருகை பார்க்கின்றேன்" என்றான்.

பிரபுக்கள் உல்லாசனைத் திட்டி "உயர்ந்தோர் தொழிலைத் தாழ்ந்தவர் விரும்பல் தகுதியன்று. வில்லைப் பிக்ஷு தொடலுமாகாது" என்று மறுத்தார்கள்.

தலைமகன் "வில் என்னுடையது: எனக்கிஷ்டமானவர் கையிற் கொடுப்பேன். அதைத் தடுக்க ஒருவருக்கும் அதிகாரமில்லை" என்று சொல்லி பிக்ஷுவாகிய உல்லாசனிடத்தில் வில்லைக் கொடுத்தான். வில்லைக் கையிலெடுக்கு முன்னரே ஸபையின் கதவுகளெல்லாம் சாத்தப்பட்டன. பொறியிலகப்பட்ட எலிகள் போலப் பிரபுக்கள் திகைத்து நிற்கையில் உல்லாஸன் வில்லை வளைத்து நாணேற்றிக் குறிவைத்த பொருசரத்தாலடித்துத் தன் மகனை நோக்கி "பிக்ஷு கையில் வில்லைக் கொடுத்ததினாலுமக்குக் குறைவொன்றும் வாராமற் பாதுகாத்துவிட்டேன். இனி நம்மிருவருக்கும் வேறு வேலைகளுள; அவற்றைச் செய்வோம்" எனவே, உல்லாஸன் கருத்தையறிந்த தலைமகன் தன்னாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டான். அப்பனும் மகனுமாய் மஹா பதிவிரதையான **பனிலோபி**யைப் பாணிக்கிரஹணஞ் செய்ய வந்திருந்த பரமசண்டாளர்களை எமனுக்கிரையாக்கிச் சவங்களை வெளிப்படுத்தி ஸ்நானஞ்செய்து உல்லாஸனும் தலைமகனும் ராஜசபைக்குத் திரும்பிவந்தனர். இதற்குள் மணமகர்களாய் வந்திருந்தோரெல்லாரும் பிக்ஷுவினாலும் தலைமகனாலுங் கொல்லப்பட்டாரென்னுஞ் செய்தி பனிலோபியின் காதிற் பட்டு, அதை அவள் நம்பாமல் நேரில் பார்க்க நினைந்து ஸபைக்கு வந்தாள். பிக்ஷு வேஷமாறி உல்லாஸன் தன் ஸ்வரூபத்தை யடைந்து அவன் பக்கலில் தலைமகன் நிற்றலையுங் கண்ட பனிலொபி,

நெஞ்ச மெலிவே னினது தடந்தோளுங்
கஞ்சமலர் முகமுங் காணமல்—எனவும்,
மன்னவனே யிப்பிறப்பிற் கண்டு மணந்திலனேல்
இன்னமொரு பிறப்பி லாயினு மேழையேன்
றன்னந் தனியே யிருந்துதவ மாற்றியுமுன்
பொன்னகல முன்னுருகப் புல்லுவேன்
எனவும், சொல்லி உல்லாஸனைத் தொழுதுநிற்கையில்,
பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர் தம்முள்ள மீர்த்தலால்.
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்;
மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினர்.

தலைமகனும் பனிலொபியும் நாட்டிலுள்ளா ரனைவரும் அரசன் வருகையாற் களிகூர்ந்தாரென்று சொல்லவும் வேண்டுமோ?

நல்வினை யடைந்த காலை நனிநலந் திளைப்பர் நன்மை
யல்வினை யடைந்த காலை யல்லலிற் றிளைவ ரெல்லாந்
தொல்வினை வழிய வாகுந் தோன்றனு பவங்க டந்தம்
புல்வினை யாலென் றெண்ணல் புலமையோ ரிடத்தின்
[ருமால்.

உல்லாஸன் சரிதம் முற்றிற்று.

ப்ராஹ்மாந்வேஷணம்:—கள்ளனொருவன் ஓர் இருட்டறையினுட் புகுந்து அங்குள்ள பலவகைப் பொருள்களையும் தொட்டுக்கொண்டே போய், மேஜையொன்றின்மேல் தன் கைபட 'ஈதல்ல' வென்று அப்புறம் சென்று, அங்கே நாற்காலி யொன்று கையிற்பட 'இதுவுமல்ல' என்றிவ்வாறு அவ்வறையிலுள்ள வஸ்துக்களையெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பரிசோதனை செய்து பார்த்து விலக்கி, கடைசியில் ஆஸ்தி நிறைந்த பெட்டியானது அவன் கையில் அகப்பட்டவுடனே 'இதோ இருக்கிறது' என்று சொல்லிக்கொண்டு மகிழ்கின்றான். இதனுடன் அக்கள்ளனது சோதனை முடிந்துவிட்டது. இதைப்போல்தான் ப்ராஹ்மாந்வேஷணமும் (ப்ராஹ்மாந்வேஷணம்—ப்ராஹ்மத்தைத் தேடுதல்,)

நாகாநந்தம்

NAGANANDAM: A CLASSICAL DRAMA

கருடன்.—மதியுருக் கண்டதும், மயங்கி நடுங்கி
கதிகுறைந் துரைதரும் கதிர்மணிச் சேடன்
என்பால் ஒடுங்கி பயமுற லேண்மையும்
மன்படு மன்பொடென் முன்னவன் விரிந்து
வானெரிக் கொழுந்து வளர்தர பராஅய்
தான்பெறு சகடுந் தயங்கி
ஊன்பெற ஒடுங்கி
கிடுகிடுத் தடிபெயர்ந்து கீழ்வீழ்ந் திடருற
படுகதிர் படரொளைப் பார்த்து நடுங்கி; அதான்றி,
வருஉம் வழிதொறும் வளர்முகிற் றொகைதாம்
விரீஇய வென்சிறை வளர்பெற மிசை செயாஅ
நெய்த லுறங்கப் பெய்பாண் அலைமுழங்கி
தைவரு மலையத் தன்னிழற் றீண்டு
தவறு அரவுன் அவாவின் நுகர்வான்
வந்தனன் சிறையிருள் வயங்கி
சந்தனத் தருப்பொழி லியாண்டு நிறைத்தே!

நாயகன்.—(ஸந்தோஷத்துடன்)

அருளி லார்க்கிலா அவ்வுடற் றன்னை
அரவைக் காத்திடு மறத்தின் மெய்ம்மையின்
வரும்பிறப் பெஃதினு பெருகவெப் பவத்தினும்
திரத்தின் பிறர்க்கருள் செம்மையி னுதவவே.

கருடன்.—(நாயகனைப் பார்த்து)
உற்றெ னைக்கண் டிற்று ரத்தி
ரத்தூ மெற்றி கக்கிடா
புற்ற ரைத்த னற்பு யிர்த்தி
டச்செய் கிற்கும் பெட்பினன்
கற்ற லத்த சர்ப்ப னைக்கொற்
செல்லின் கன்றிச் * சுச்சினன்
குற்றி யெற்றி கொத்தி பற்சு
வைத்து துய்ப்பன் ஒல்லினன்!

(நாயகனை அலகால் கவ்விக்கொள்ளல்—நேபத்யத்தில் வாத்யகோஷமும் பூமாரியும் பொழிதல்.)

கருடன்.—(ஆச்சரியத்துடன்) அஹோ! என்ன பல்லிய முழக்கமிது. என்ன வாத்திய கோஷம்! என்ன மலர்மாரி ஈது! (வானத்தைப் பார்த்து செவிசாய்த்து).

தம்மிடை நறுமணத் தார்வண்டிற் கனிதர
விம்மி மீமிசை மலர்மழை பெய்வதென்?
வானின் வயங்கு முரசொலி பரந்து
கானெங்கும் விளங்கி கவர்வதென்?—கண்டனன்
விசைபட வக்தவென் வேகத் தலண்ட
அசைதரு காற்றதே! அவ்வொலி தானும்,
ஊழிநாட் காண உருஉமிடு
ஊழிக் கொண்டல் உடற்றன தகைத்தே.

நாயகன்.—(தனக்குள்)
பாக்கியப் பெருக்கின் பல னெனக் கின்று
முடித்ததென் சிந்தையின் முடிந்த எண்ணமே.

கருடன்.—(நாயகனை அலகால் பற்றிக்கொண்டு)
நாகரைக் காக்க வாகைக் கொளுமிவ்
வியக்குரு அன்றன் பயிலென் பசிப்பிணி
முற்று மற்றிடச் செயும் மொய்ம்பினன்
பற்றினை விட்ட பாரிய னிவனே!

யான் இந்த நாகனைக் கௌவிக்கொண்டு மலையத்து உச்சியிலுட்கார்ந்து அங்கு என்னிஷ்டப்படி உண்பேன்.

(ஜீமுதவாஹனனைக் கவ்விக்கொண்டு போதல்.)

களம் 5 அங்கம் 1

கௌரி ஆலயம்—ஜீமுதகேதுவின் ஆச்ரமம்

(பிரதிஹாரன் வரல்)

பிரதிஹாரன்.—ஆசைக்குகந்தவன் உய்யான வனத்திற்குப் போயினும், அவ்வாசை, கேடுவருமோ என்றுதான் எண்ணச் செய்யும்; பெருங்காடு சென்றாலோ? அதிலும் துன்பத்திற்கிடமாகி நெருங்கி விளங்கும் பாழுமாரணியத்துள் போனாலோ? நித்தம்நித்தம் துன்பமடைதலைக் கண்டுகொண்டிருக்குமிடம் போனாலோ?—என்? மனம் கேடு வருமோ என்றெண்ணுகிருக்குமோ?—அதுதான்—அரசன் விசுவாஸு, ராஜகெம்பீரன்—தன் மருமகன் கடற்கரையிடம் சென்றவர் வாக்காணாது வருந்துகிறார். மனக்கவலை படுகிறார். ஐயோ! பாவம் என்ன செய்வர்? என்னை அவர் 'ஸுநந்தா! நான் என் மருகன் கடலோரம் சென்றதாகக் கேள்விப்பட்டேன். அவ்விடமெங்கும் கருடன் பயமே விளங்குகிறது. அந்த ஸமாசாரம் கேட்டதுமுதல் என் மனம் குமுறுகிறது. வருந்துகிறது. துரிதமாய்ப் போய் அவர் வீடு வந்து சேர்ந்தாரா, இல்லையா என்பதைக் கண்டு வா' என்று பார்த்து சொன்னார். (நடந்து முன் நோக்கி) அகோ! இதோ ஜீமுதவாஹனரது தந்தை ராஜச்ரேஷ்டன் ஜீமுதகேது தன் மனைவியுடனும் மருமகளுடனும் தன் ஆச்ரமத்தின் வெளிப்புறம் ஜபத்திலமர்ந்திருக்கின்றனர். மேலும்—மடிப்பு மடிப்பாகக்காற்றில் படர்ந்தலைக்க வெண்ணுரை அசைந்தசைந்தொதுங்குவதுபோல் விளங்கும் வெண்பட்டு முத்தரீயமும் அணிந்துவிளங்க அவர்பால் புனிதவுருவும் ஒழுங்கும் அருவிபோல் பாயும் லாவண்யப்பெருக்கில் கற்பின் பெருக்கு மயங்கி கங்கைப்பெருக்கின் இடையறாது வரும் புண்யத்தொகுதியைத் தலைவனுரிட மயங்க விளங்கும் அவர் பத்னியாகிய அரசி தன் தலைவனாகிய அந்த ஜீமுதகேதுவை முன்னீர்த் தலைவனுக்கு ஸமானம் செய்வள். அவன் பக்கிலிருக்கும் இவ்வெள்ளிய மலைய மலையும் கடற்கரையையே சிவனும்—அவனை யான் அடைவன்.

* சுச்சு = பறவைமூக்கு.

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

வியாஸ விதானம்

Essay writing

IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

REFLECTIVE ESSAYS

இலக்கிய விஷயங்கள்—வேர்ட்ஸ்வொர்த்.

Literary Subjects—Wordsworth.

குறிப்பு.—முகவுரை: காலம் முதலியன—வாழ்க்கையும் மனோநிலையும் — சிறப்பு — குறைகள்—முடிவுரை: பொது அபிப்பிராயங்கள்.

இங்கிலாந்தில் வடமேற்கு பாகத்திலிருக்கும் மலை ஏரிகள் நிறைந்த ரமணீயமானவிடத்தில் ஸாதாரண நிலையிலுள்ள குடும்பத்தில் பிறந்தவர் இம்மஹா கவி. இம்மாதிரி பிறந்து சிறந்த கற்பனா சக்தியும் அமையப் பெற்றிருந்ததனாலே இவர் மனதில் முதல் முதற்கொண்டே ஒருவிதமான உறுதி குடிகொண்டிருந்தது. இவருக்குக் குடும்பப்பற்றும், ஒருவித தெய்வபக்தியும் இருந்ததால் இந்த உறுதி வீண் அஹங்காரமாக மாறாது அளவுள் அடங்கியே கிடந்தது. இவர் கவி பாடும் நிலைக்கு வருவதற்கு முன்னரே, ஆங்கல நாட்டில் ஒருவிதமான விருத்தத்திலேயே விஷயங்களைப் பொருத்திப் பாடுவதே சிறந்ததென மதிக்கப்பட்டு எல்லோரும் அவ்வாறே பாக்களை மதித்து வந்தனர். பா ஒழுங்குமாத்திரம் மிஞ்சியதே ஒழிய கவிகள் வரவர விஷயச்சிறப்பைக்கூடக் கவனியாது நின்றுவிட்டனர். மேலும் நாகரீக ஸம்பந்தமான விஷயங்கள், நாகரீகம் மிகுந்த உயர்ந்த குடிப்பிறந்தோர் விஷயங்கள் ஆகிய இவைகளே பாக்கள் விஷயமாக எடுத்து ஆளப்பட்டு வந்தன. இந்த ஸந்தர்ப்பங்களுக் கிடையில் வேர்ட்ஸ்வொர்த் தமது பாக்களை வெளியிட்டார். இதன் முகவுரையில் பாவிஷயத்திற்காக உண்மையை மாற்றலாகாது, ஸாதாரண குடியானவர்கள் வாழ்க்கையிலும் மேலான கற்பனாரஸம் நிறைந்த விஷயங்கள் காணப்படுவதால் அவைகளும் செய்யுள் விஷயங்களாகத் தகுந்தவைகளே, நாம் ஸாதாரணமாகப் பேசுவதில் உபயோகிக்கும் நடைசிறந்த பாஷைநடை என்பதே அவரது பிரதமக்கொள்கைகள் என்றும், அதன்படியே அப்பாக்கள் வரையப்பட்டிருக்கின்றன என்றும்கண்டிருந்தது. ஆனால் காலவிஷயங்களுக்கேற்ப அப்பொழுதிருந்த செய்யுள் எழுதும் முறையைக்கண்டிக்க இவர் செய்யுள் விஷயங்களுக்கும் வசனவிஷயங்களுக்கும் யாதொரு பேதமும் இல்லை, அம்மாதிரியேதான் பாஷாநடை விஷயமும் என்றுகூறி ஸ்தாபித்திருந்தார். இவைகளைக் கண்டதும் அக்காலத்தில் இலக்கியம் சீர்தூக்குவோர் வேர்ட்ஸ்வொர்த் செய்யுள்களை முற்றிலும் பழித்துக் கூறினர். வேர்ட்ஸ்வொர்த் பிடிவாதமாகவே ஸ்ருஷ்டி விசித்திரம், ஸாதாரண ஜனங்கள் வாழ்க்கை இவைகளையே தமது செய்யுள் விஷயங்களாக வைத்து எழுதத் தொடங்கிவிட்டார். இவர் ஜனனபூமி, ஜனித்த குடும்பம், வாஸஸ்தானம் இவைகள் எல்லாம் இவ்வேலைக்குத் தகுந்தவைகளாகவே இருந்தன.

ஆங்கில கவிகளில் கற்பனாரஸம் சிறந்த கவிகளுள் இவர் ஒருவர். ஸாதாரணமாக அலைந்து திரிந்து பாடுபட்டு ஜீவிக்கும் நாட்டுப்புறத்தவர்கள் ஸ்ருஷ்டி வைசித்ரியத்தை உள்ளபடி காணும் நிலையிலிருப்பதால் அவர்கள் நடவடிக்கைகளையே இவர் தம் செய்யுள் விஷயமாகக் கொண்டார். செய்யுள் விஷயங்கள் மனஸ் ஸமாதானம், கடவுளையே ஆதாரமாகக் கொண்டிருத்தல், இந்நிலையை ஸ்ருஷ்டி விசித்திர ஆராய்ச்சியால் திடப்படுத்தல் ஆகிய இவைகளை நம்முன்னவர்க்கும் திறனுடையவைகளாக இருக்கவேண்டும் என்பதே இவர் முக்கியக்கொள்கை. இந்நிலையை அடைய ஸஹாயம் செய்ய ஸ்ருஷ்டி விசித்ரத்துள் ஊடுருவிப் பரவிநிற்கும் அந்தராத்மா ஒன்றுள்ளது. அது நமது ஆத்மாவைப்போன்ற லக்ஷணமுடையது. ஆகவே நாம் ஸ்ருஷ்டி விசித்ரத்தை ஊன்றி நோக்குங்கால் அதனோடு ஆனந்திக்கும் நிலை நமக்கு வருவதோடுங்கூட அதனுள்ளிருக்கும் ஆத்மாவுக்கும் நமது ஆத்மாவுக்கும் சேர்க்கை ஏற்பட சாந்தம் பிறக்கும், என்ற விஷய விஸ்தாரமே அவர் செய்யுள்களின் ஸூக்ஷ்ம விஷயம். இந்தக் கலப்பு ஏற்பட எப்பொழுதும் ஸ்ருஷ்டி விசித்திரத்தில் நமது கற்பனா சக்தியை ஸஹாயமாகக்கொண்டு ஈடுபட்டு மெய்ம்மறந்து பழகவேண்டும்; அதைப்பற்றிப் பாடியாடி ஓயவேண்டும் என்பதையே இவர்விஸ்தரிக்கிறார். இந்த அற்புத விஷயம் குழந்தைகளுக்கு நன்றாய் அனுபவத்திலிருக்கும் அவைகள் மேலான நிலையிலிருந்து மரணம் என்னும் உறக்கம் அல்லது மறதியைத் தாண்டி அந்நிலைக்கு மாறான இவ்வுலக வாழ்க்கையுள் வருவதால் இதில் முதலில் மனம் பற்றாது முன்னிலையின் அழிவற்ற இசைமுதலியன அடிக்கடிதோன்றிக்கொண்டிருக்கும். வரவர மனிதன் வயது முதிர இவ்வுலக அனுபவங்கள் அதிகமாக தன்னிலைமறந்து விஷயத்தில் அழுந்தி 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று மூழ்கி விடுகிறான். இதிலும் சிற்சில விஷயங்கள் இவன் பூர்வ நிலையை ஞாபகப்படுத்த வந்துசேர, ஸ்ருஷ்டி வைசித்ரிகள் மூலமாக மனங்குவிந்து இவன் மேன்மை பெறுவன் என்பதே மானிட வாழ்க்கைப்பற்றிய இவர் அபிப்பிராயம். இவைகளையே இவர் தம் அனுபவத்தை ஒட்டி வெகு அழகிய செய்யுளில் வெளியிடுகிறார். வ்யாபாரம் இவ்வுலக இன்பம் ஆகிய இவைகளே சதமென நம்பித் தொழிற்படும் ஆங்கிலர்களுக்கு இவைகள் எல்லாம் சிறந்தனவாகப் படமாட்டா. வேதாந்த சாஸ்திர ரஹஸ்யம் விளங்கக்கூடிய மனமுள்ள இப்பரதகண்ட வாலிகளுக்கு இவைகளின் சிறப்பு அதிகமாக விஸ்தரிக்காமலே விளங்கும்.

இவர் காவியங்களின் சிறப்பு அநேக விதத்தைப் பொருத்ததாக விருக்கிறது. (1) இவர் பாஷை நடை தெளிவாயும் எளிதாயும் கார்யகாரண ஸம்பந்தத்திற்கு முற்றிலும் பொருந்தியதாயும் இருக்கும். (2) வீண் கைச்சரக்கு ஆகாயபுராண் முதலியன ஒருநாளும் இவர் விடவே மாட்டார். அனுபவத்தை ஒட்டியே உள்ளதை உள்ளபடி நேராக வெளியிடுவார். (3) இவர் கவி விஷயங்கள் பொருள் நிறைந்தனவாகவே இருக்கும். இவைகள் வேறு புத்தகங்கள் அல்லது கல்விப்பயிர்ச்சி முதலியவைகளால் ஏற்பட்டவைகளல்ல, எல்லாம் தமது ஸொந்த ஆராய்ச்சி, அனுஸந்தான முதலியவைகளையே ஆதாரமாக உடையன. இவைகள் புதியவைகளாகவே காணப்படும். (4) ஸாதாரண நடைக்கு இடையே திடீரென்று அமையும்சொற்சுவை பொருட்சுவை நிறைந்த அடிகள் இவர் கவிகளில் நமது கவனத்தைப் பதித்துவிடுகின்றன. (5) யுக்தி, உருக்கம் நிறைந்த ஸாக்ஷித்வநிலை இவர் காவ்யங்களில் நன்கு வெளியாகும். (6) ப்ரபஞ்ச விசித்ரத்துள் ஒளிரும் பரஞ்ஜ்யோதி விஷயமான உணர்ச்சி, அதைப்பற்றி நன்றாக வர்ணிக்கும் சக்தி ஆகிய இவைகளே இவர் செய்யுளுக்கு உண்மையான கம்பீரம் வரும்படி செய்கின்றன. இந்த ஆறு விஷயங்களும் இக்கவியின் சிறப்பிற்கு முக்கிய காரணம்.

இவருக்குச்சிற்சில குறைகளும்இருக்கின்றனஎன்று மதிப்பர் சிலர். இவர் பாஷைநடை ஒரே மாதிரியாகவிராது சிலவிடத்தில் மழுங்கியும் சிலவிடத்தில் திடீரென்று உயர்ந்தும் காணப்படும். சிறு கவிகளில் ஒழுங்காயும், பெரிய காவியங்களில் பாஷை நடை நடுநடுவே சிதைந்தும் காணுகிறது. இதை ஒரு குற்றமாகக் கொள்வர். இதற்கு இக்கவியே தாம் எழுதிய கிரந்தங்கள் ஒன்றில், விஷய காம்பீர்யத்தைப்பொருத்தது என் பாஷை காம்பீர்யம் என்று கூறி யிருக்கிறார். சிற்சில காரியங்களில் வெகு ஸாதாரண விஷயங்களைப் பெரிதாகக்கூறி எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இது அனாவசியம் என்பர். நாடக ஒழுங்கு இவருக்குப் பிடிபடவில்லை. இருவர்கூடிப்பேசுவதாகக்கூறுமிடத்து பாஷை மாறுபாடு இன்றி ஒரேமாதிரி கூறுவதால் ஒருவர் வாக்கென்றே வாசிப்போருக்குத் தோன்றிவிடும். இந்தக் குறை அவர் கவிகள் சிலவற்றில் ஏராளமாகக் காணப்படும். ஸாதாரண விஷயங்களை வர்ணிக்கப் புகுமிடத்து இவர் எப்பொழுதும் தம் மனோநிலைப்படி அதனுடன் முற்றும் பொருந்தாத பெரிய விஷயங்கள் கற்பனைகள் முதலியனவைகளை அமைத்துக் கூறிவிடுகிறார்.

இங்குக் கூறியவைகள் உண்மையான குற்றங்களாக விருப்பினும் அவைகளுக்கு அவர் தோன்றிய காலமும், பிறர் முதலில் வரம்பு கடந்து அவர் கவிகளைப் பழித்ததும், அதனால் அவருக்கு ஏற்பட்ட பிடிவாதமுமே காரணங்கள். இவைகளைவிட முன்னர் கூறியுள்ள சிறப்பு விஷயங்கள் மிகுந்த ஆற்றலுடையவை. இவர் வெளியிட்டிருக்கும் கவிகளிலிருந்து மனிதன், ஸ்ருஷ்டி விசித்ரம், மானிட வாழ்க்கை இவைகளைப்பற்றிய அருமையான விஷயங்களை அறிவுடையோர் அறிவதுபோல மற்றைய கவிகளிலிருந்து அதிகமாகக் கிரஹிக்க முடியாது. நாகரீகம், தேசாசாரம் முதலியவைகளால் மாறுபட்டிராத மானிட வாழ்க்கை ஸ்ருஷ்டி விசித்திரம் இவைகளைப்பற்றியே இவர் பாடி இருப்பதால், உலகம் முழுவதும் உள்ள ஜனங்களது பொது வாழ்க்கை, தன்மை முதலியன நன்றாகத் தெரிய வரும். மேலும் ஸ்ருஷ்டி வைசித்ரியத்தில் இவர் ஈடுபட்டு சிற்சில ஸமயங்களில் அறிவு, அனுபவமாகி, அனுபவ உணர்ச்சியும் அழிந்து நிற்கும் நிலையானது, வேதாந்த முடிவாகிய பிரஹ்மமேயாகி நிற்றல் என்னும் நிலை சுத்த கல்பனாவிஷயத்தில் ஈடுபட்டு நிற்க வல்ல ஒவ்வொருவனுக்கும் சற்று அனுபவத்திற்கு வரக்கூடியது: அது வீண் மனோராஜ்யமல்ல என்பதை இப்பாத கண்டத்தவர்களுக்கும், ஆழ்ந்த அறிவுடைய வெளிநாட்டாருக்கும் நன்கு விளக்கும். இவர் கவிதைகளை வாசிப்பவர்கள் மனம் மாறிவிடுகின்றது என்பது படித்தவர் அனுபவமாதலால் இவரிடம் சொற்குற்றம் போன்ற சிற்சில விருந்தபோதிலும் பொருட்சிறப்பு அவைகளுக்கு மேலாக நின்று இவரைப் பெருங்கவி என்று மதிக்க இடங்கொடுக்கும்.

இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள் :—

1. ஷேக்ஸ்பீயர்	6. ஹோமர்
2. மில்டன்	7. சாஸர்
3. மெகாலே	8. காம்பெல்
4. ஷெல்லி	9. ஸ்காட்
5. பைரன்	10. லாங்பெல்லோ

பொதுக்குறிப்பு.

1. முகவுரை : காலம் முதலியன.
2. வாழ்க்கையும் மனோநிலையும்.
3. சிறப்பு.
4. குறைகள்.
5. முடிவுரை : பொது அபிப்பிராயங்கள்

மொழிபெயர்ப்பு விளக்கம்
Translation Models

Why does not the water fall out of a quickly revowing bucket ?

We must remember that every substance, whether it be a solid or a liquid, tends to remain in the same position unless some force is applied to it to move it. The force of gravity keeps the water in the bucket when the bucket is at rest, and attracts both the bucket and the water to the earth. When we swing the bucket over our heads, gravity would cause the water to fall out if we held the bucket still, but by keeping it moving, we bring other forces into action which act in other directions, and tend to make the water press against the sides of the bucket. If the water could get out, it would not fall straight down to the earth, but would go on some distance in the direction in which the bucket is moving at the moment, and would gradually come to the earth. So that the water stays in the bucket as the result of the several different forces acting upon it while it is being swung quickly round and round.

விரைவாய்ச் சுழலும் சிறு தொட்டியிலிருக்கும் தண்ணீர் கீழே விழாதிருப்பானேன் ?

திடதிரவப்பொருள் ஆகிய எல்லாம் தம்மை அசைக்கக்கூடிய ஒரு சக்தியின் சேர்க்கை இல்லாதிருக்கும் வரையில் இருந்த விடத்திலேயே நிலைத்திருக்கும் தன்மை உடையன, என்பது நமக்கு ஞாபகத்திலிருக்கவேண்டும். சிறு தொட்டி அசைவற்றிருக்குங்கால் பூமியாகர்ஷண சக்தி அதனுள்ளிருக்கும் தண்ணீரை உள்ளேயே நிற்கும்படி செய்து, அதையும் தண்ணீரையும் பூமியைநோக்கி இழுத்துக்கொண்டிருக்கும். இதைச் சுழற்றுகையில் தலைக்குமேல் வரும்பொழுது நிறுத்திவிட்டால் பூம்யாகர்ஷணசக்தி தண்ணீரைச் சிதறிவிழும்படி செய்துவிடும். ஆனால் அந்தத் தொட்டியைச் சுழற்றிக்கொண்டே இருந்தால், வெவ்வேறு புறம் நோக்குவதும் அதனால் தண்ணீரைத் தொட்டியின் பக்கங்களில் ஒட்டிக்கொள்ளும்படி செய்வதுமான சக்திகளைத் தொழிற்படும்படி செய்கிறோம். இக்காலங்களில் தண்ணீர் கொஞ்சம் வெளியேறி விட்டால், நேராக அது பூமியின்மேல் விழாது: அத்தருணத்தில் தொட்டி சுற்றும்பக்கம் கொஞ்சதூரம்போய்ப் பின்னர் மெதுவாகப் பூமியிலிறங்கும். ஆகவே தொட்டி சுற்றுங்கால் தண்ணீர் அதனுள் நிற்பது அப்பொழுது ஏற்படும் பலவிதமான அநேக சக்திகளின் காரியம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்
CHILDREN'S PAGES

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி
TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்தியாயம் 15

ஒரு விதவையைத் தேற்றியது

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர்!—வேண்டா
நமக்கும் அதுவழியே, நாம்போமளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

மதுரையில் இவ்வாறு இருக்க, திண்டுக்கல்லில் பெரிய கார்யங்கள் நடந்தேறிக்கொண்டிருந்தன. கடுகடுப்பான முகத்தை உடைய கிழவராயும், காட்டுப்பூனை என்ற பட்டப்பெயர் பெற்றவராயும் உள்ள நமது தோழர் நாயன்ன சாஸ்திரிகள் விஷயம் வாசிப்பவர்களுக்கு ஞாபகமிருக்குமே. தனது பிள்ளை கண்ணனுமூலமாக அவன் திடீரென்று பெரும் பணக்காரனாக முயல்வதாக முன்னரே கூறியுள்ளோம். 'இறந்துபோன கிருஷ்ணன் தாயார் எனக்குத் தமக்கை முறையாகவேண்டும். அவள் என்னிடம் மிகுந்த அன்புபாராட்டி வந்தாள். புதிதாக ஏற்படுத்தப்படும் அவள் கணவன் உயில்படி அவளை எப்படியாவது என் பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி முதலில் தூண்டிவிடவேண்டும். மேலும் அந்த நூதன உயிலில் குடும்பஸொத்து முழுவதும், கிருஷ்ணன் தகப்பன் ஸ்வந்தஸம்பாத்தியம் என்றும் ; ஆதலால் அவர் இஷ்டப்படி அதை விநியோகப்படுத்தலாம் என்றும் ; கிருஷ்ணன் குழந்தைமுதல் நோயாளியாக விருந்தமையால் அவன் தாயாருக்குப் பின் ஜீவித்திருந்தால்தான் ஸொத்து அவனைச் சேரவேண்டும் என்றும், அல்லது கிருஷ்ணன் தாயார் வழியாக அவன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் பிள்ளையைச் சேரவேண்டும் என்றும் வெளிப்படையாகக் கண்டுவிடவேண்டும்' என்பதே இக்காட்டுப்பூனையின் கொடிய மனோராஜ்ய விஷயம். இவ்வாறு எல்லாம் ஏற்பாடு செய்துவிட்டுத் தகுந்த ஸமயத்தில் கிருஷ்ணன் தாயாருக்கு இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. அவள் ஸம்மதத்தின்பேரில் திருட்டுக் கையெழுத்திடுவதில் தேர்ந்த ஒருவன் உதவியால் பழயதுபோலத் தோற்றும்படிசெய்த காகிதம்

ஒன்றில் இந்த விசித்திர உயில் வரையப்பட்டது. பின்னர் அநேகருக்கு லஞ்சம் தகுந்தபடி கொடுத்து இதில் ஸாக்ஷிக் கையெழுத்துகள் ஏற்படுத்தப்பட்டன. ஸ்வீகாரம்கூட நடந்தேறியிருக்கும். ஆனால் மூன்று மாதம் வரையில் இதற்கு நல்ல நாள் அகப்படாததால் இதைத் தள்ளிவைக்க வேண்டி வந்தது. லக்ஷ்மிக்கு இந்த விஷயம் ஒருவாறு தெரியவர அவளுக்கு மிகுந்த துக்கம் உண்டாகிவிட்டது ந்யாயப்படி தனக்கே வந்து சேரவேண்டிய ஸொத்து போய்விடுமே என்பதால் எழுந்ததல்ல இந்தத் துக்கம். இவ்விஷயத்தில் சேர்ந்திருக்கும் மனிதர்களின் கெட்ட எண்ணம் இழிவு முதலிய துர்க்குணங்களே இவள் மனதை ஓயாது புண்படுத்தியது. இவ்விஷயத்தை இவள் ஒருவரிடமும் ப்ரஸ்தாபிக்காது துக்கத்தை உள்ளேயே வைத்துக்கொண்டு உருகிக்கொண்டிருந்தாள்.

ஓர் இரவு அவள் தன் உள்ளில் அழுதுகொண்டிருந்தாள். புது உயில் விஷயம் அவளுக்கு ஞாபகம் வந்துவிட்டது. விக்கி அழுதுகொண்டு, “ஆ! உலகம் எவ்வளவு கொடியதாகிவிட்டது! பாழும் உலகம்!! என் அன்பே! என் கண்ணே! இவ்வுலகை விட்டு இவ்வளவு விரைவில் நீர் நீங்கியது நல்லதே! உமது சிறு வாழ்நாளைக்குள் கொடுமை துரதிர்ஷ்டம் முதலியவைகளைக் கண்டு வருந்தாது போய்விட்டதே உமக்கு மேன்மை. எப்படியிருந்தபோதிலும் நீர் மறுபடி இங்குத் திரும்பி வரவேண்டுமென்று எனக்கு விருப்பமே வாராது. என் துக்கம், தனிமை, கையற்ற நிலை ஆகிய இவைகள்கூட எனக்கு இந்த விருப்பத்தை உண்டாக்கா. ஸத்யவானை ஸாவித்ரிக்குத் திருப்பிக் கொடுத்ததுபோல யமதர்மராஜனே என் எதிரே வந்து உம்மைத் திருப்பிக் கொடுப்பதாக மன்றாடினாலும் ‘வேண்டாம்! இங்கே நாங்களிருவரும் சேரவேண்டியதில்லை! எங்களைச் சேர்த்துவைக்க உமக்கு மிகுந்த ஆவலிருக்குமாயின் என்னையும் எடுத்துப்போய்க் கணவனுடன் சேர்த்துவையும்' என்பேன். இச்சிறந்த வரத்தைத் தரமாட்டேன் என்று அவர் மறுத்தால் ‘மேல் மேலும் அதிக ஆனந்தம் கொடுக்கும் உயர்ந்த பதவிக்கு, என் நற்குணம் ஆவாது அளவிடமுடியாப் புண்யங்கள் இவைகளை முன்னிட்டு என் கணவரைக்கொண்டு சேரும். நான் படும் பாடுகள் செய்யும் விருதங்கள் என் கணவருக்கு ஸஹாயம் செய்யுமாகில் இப்பொழுது படுவதுபோல ஆயிரமடங்கு கஷ்டப்பட நான் தயார். அவர் ஆனந்தப்பட வேண்டும் என்பதே என் முக்கிய ஆவல். என் உயிரைவிட இஷ்டமாயும், என் மன்மதனாயும், என் ஆனந்தமாயும் இருந்த அவர் ஸுகமே என் ஸுகம்' என்று மன்றாடுவேன்.

“ஆ! கிருஷ்ணா, கண்மணீ! பிறர் உன் பெயரை உச்சரிக்குங்கால் எனக்கு வந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. உன் விஷயத்தில் திருப்தியுடன் உன் பெயரைக் கூறித் துதிக்குங்கால் என் மனம் ஆனந்த பரவசமாகிவிடும் என்று கூறவும் வேண்டுமோ? அதை எவ்வளவு பெருமையாகப் பாராட்டி வந்தேன். உன்னைக்காண்பதுவே ஆனந்தம், உன்னுடன் பேசுவது ஸ்வர்க்கம், இனிமையான குரல், பக்தி முதலியவைகள் நிறைந்த மொழிகளால் நீ வசனிப்பதைக் கேட்பது ஸ்வர்க்கத்திலும் சிறந்ததாக எனக்குத் தோன்றுமே! பகலில் உன் மிருதுவான பாதம் பட்ட தூளிகள் எல்லாம் வானுலகு ஏறி இரவில் நக்ஷத்திரங்களாகின்றன என்று தோன்றும். உமது மூச்சுக் காற்று மிகப் பரிசுத்தம் என்று எனக்குத் தோற்றும். மலைபோலக் கம்பீரமான உமது மார்பில் சாய்ந்தால் உண்டாகும் ஆனந்தத்தை என்னென்று சொல்லுவேன்! ஆ! ஹா! பார்வதிக்குக்கூடக் கைலாஸத்தில் இந்த ஸுகம் இருக்குமா? கிருஷ்ணன் என்ற பெயர் உமக்கே தகும்! எனக்கு நீர்தான் கிருஷ்ணன். நான் உம் விஷயத்தில் ருக்மிணி, ஸத்யபாமை, கோபிகள் முதலியவர்கள் எல்லோரையும்போலப் பற்றுடையவளாக விருந்தேன்.

“வீண் பேச்சு! நான் வேஷக்காரி, வெட்டிப்பேச்சு மாத்திரம்தான்! உமக்கு மரணம் அணுகிவிட்டது என்று உணர்ந்ததும் உமக்கு முன் நான் உயிரைவிட்டிருக்கவேண்டாமா? உம்மேலிருந்த காதலைப் பூர்ணமாக வெளியிட அந்த ஸமயம் ஒன்றுதான் ஏற்பட்டது, அதையும் தவற விட்டுவிட்டேனே! இனி ஏது! அம்மாதிரி காலம் வருவதேது!! இப்பொழுது வாய்கொண்டமட்டும் வம்பு பேசுவதால் பயன் என்ன? எனது காதலுக்கு ஆலயம் போலவும், உமது கம்பீரமான ஆத்மாவை அடக்கி இருந்ததாகவும், உள்ள உமது தேகம் சிதையில் என் கண்முன் வெந்ததே! அதன் அழகை நான் அநேகநாள் உள்ளன்புடன் அனுபவித்ததில்லையா? அது வெந்து நீராவதைக்

கண்ட உடன் அந்த நெருப்பிலேயே நான் மூழ்கியிருக்கலாகாதா? மதிமோசம் போய்விட்டேனே! மடத்தனமாக, உலகக் கொடுமைகளை எல்லாம் கண்டு கலங்கும் பாவியானேன்! என்னைத் தற்கொலை செய்துகொள்ளக்கூடாது என்று ஏன் வீணாகத் தடுக்கிறீர்? ஆ கொடிய பிதாவே!” என்று இவ்வாறு லக்ஷ்மி ஓர் இரவு உருகி அழுதுகொண்டிருந்தாள்.

இவ்வாறு சொல்லி வாய் மூடுமுன் கதவை யாரோ மெதுவாகத் தட்டியதுபோன்ற சப்தம்ஒன்று கேட்டது. திறந்து பார்ப்பாளோ அவள் அருமைத் தகப்பனாரே அங்கு நிற்கக் கண்டாள்! அவள் கண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பதை கண்ட உடன் வாஸுதேவ சாஸ்திரிக்கும் கண்ணில் கரகரவென்று நீர் ததும்பத் தொடங்கிவிட்டது. அவைகளை அடக்க அவரால் முடியவில்லை. பின்னர் அவைகளை ஒருவாறு அடக்கிக்கொண்டு மிருதுவான வாக்குக்களால் அவளைத் தேற்றத் தொடங்கினார். அவராலன்றி வேறு எவரால் இவ்வளவு பரிவுடனும் ஆழ்ந்த பொருளுடனும் கூடிய மொழிகளை எடுத்தாள முடியும்.

லக்ஷ்மி.—அப்பா! அப்பா! நான் இறக்க ஏன் இடங்கொடுக்க மாட்டேன் என்கிறாய்?

வாஸுதேவ சாஸ்திரி.—குழந்தாய்! அவஸரப்பட்டுவிடாதே! கடவுள் அருளால் நீ இங்குவந்து பிறந்துவிட்டாய், எப்பொழுது உன்னை இங்குவிட்டு நீக்கவேண்டும் என்பது அவருக்குத் தெரியும். உனக்கு இன்னும் இறக்கவேண்டிய யோக்யதை வரவில்லைஅம்மா!

லக்ஷ்மி.—அப்பா! நீ எப்பொழுதும் சிறந்த ஞானத்தை எடுத்து வெளியிடுகிறாயே! உனக்கு நிகர் இம்மூவுலகிலும் உண்டோ? எங்கள்பாடுதானே திண்டாட்டமாக விருக்கிறது! (என்று விக்கி அழத்தொடங்கினாள்).

சாஸ்திரி.—அழாதேபெண்ணே! வேண்டாம் அடக்கிக்கொள். துக்கம் எப்பொழுதும் எனது என்ற பற்றால்தான் ஏற்படுவது. இப்பற்று நீங்கியவிடத்தில் துக்கம் ஏது? ஸுகதுக்கங்கள் நமது மனத்தைப் பற்றியவைகளே ஒழிய வெளிவிஷயங்களல்ல.

லக்ஷ்மி.—எனக்குச் சாகவேண்டிய யோக்யதை இல்லை என்றால், இவ்வுலகில் சாகத்தகுந்தவர்கள் யார்தான் இருக்கிறார்கள்? சொல்லேன் பார்ப்போம்.

சாஸ்திரி.—லக்ஷ்மீ! கண்ணே!! உயிருள்ள காலத்திலேயே எவன் செத்தாரைப்போலிருக்கிறானோ அதாவது துக்கம் மமகாரம் முதலியவைகளிலிருந்து விடுபட்டிருக்கிறானோ அவனே சாகத் தகுந்தவன். நான் சொல்வதைச் சற்று நம்பி ஊன்றிப்பார். பெண்ணே! நீ பெரிய காரியங்களை ஸாதிக்க இவ்வுருவம் தாங்கியிருக்கிறாய். கூடிய சீக்கிரத்தில் உலக ரஹஸ்யங்கள் உனக்கு நன்கு வெளியாகும்.

இதைக் கேட்டதும் லக்ஷ்மிக்குப் பொய் உயில் விஷயம் ஞாபகம் வந்துவிட்டது. உடனே அவளைச்சுற்றி தலைவிரித்தாடும் சதியாலோசனைகளைத் தகப்பனாருக்குத் தனக்குத் தெரிந்தவரையில் தெரிவித்தாள்.

சாஸ்திரி.—என்ன பயம் உனக்கு! தைர்யமாயிரு. எது நடந்தாலும் நமது நன்மைக்கேதான் என்று மதித்துத் தேறியிரு. நமக்குக் கிடைக்காத வஸ்துக்களை விரும்பவும் வேண்டாம்; நமக்குக் கிடைப்பவைகளை வெறுக்கவும் வேண்டாம். கார்யங்கள் முறைப்படி நடக்கட்டும்; அவைகளை நடத்துவிப்பவர் ஈசன். எல்லாம் ஏனையாளும் ஈசன் செயல். மேலும் ஸொத்துக்களை அவர்கள் அனுபவித்தால் என்ன நாம் அனுபவித்தால் என்ன? மமகாரம் நீக்க முயல்பவர்களுக்கும் நீங்கியவர்களுக்கும் இதனால் என்ன பேதம் வந்துவிடும்? எல்லோரும் ஸுகப்படவேண்டியதுதானே! நீ வீணாக ஏன் அழுது கரைந்து போகிறாய்?

லக்ஷ்மி.—அப்பா! உமக்கு என்ன உதாரகுணம்!! இப்பாழுலகம் கொடியதல்லவா? என்ன வெகு தாராளமாகக் கூசாது கூறிவிட்டீரே!

சாஸ்திரி.—என் கண்மணீ! நான் சொல்வதில் நம்பிக்கை வை. இவ்வுலகம் கொடியதல்ல என்று நீயே உன் வாய்விட்டுக் கூறும் காலமும்வரும். நாம் உலகை நோக்கும் நிலைமாறுபாடுகளால் உலகம் விதம்விதமாகத் தோற்றும். இவ்வளவுதான். நாளாக நாளாக இவைகள் தாமே உனக்கு விளங்கிக்கொண்டே வரும்.

இதன் பின்னர் சாஸ்திரி மதுரையில் நடந்திருந்த அலங்கோலங்களை எடுத்துரைக்க, ருக்மிணிக்கு வந்த ஆபத்தை எண்ணி அவளுக்காகக் கொஞ்சம் அழுதாள் லக்ஷ்மி. பிறகு தாம் புறப்பட்டு வந்திருக்கும் வேலையையும் தெரிவித்தார். கொஞ்ச நாழிகை இவ்வாறு பேசிக்கொண்டிருந்துவிட்டு முடிவில் போய்வருவதாகச் சொல்லிக் கொண்டெழுந்தார்.

சாஸ்திரி.—நான் போய் வேலையை முடித்துக்கொண்டுவந்து சேருகிறேன். மனதைத் தேற்றிக்கொண்டு தைர்யமாகவிரு. உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றும்போதெல்லாம் என்னையும் என் வாக்குக்களையும் ஞாபகப்படுத்திக்கொள். அதெல்லாம் இருக்கட்டும். எனக்காகவாவது நீ உயிருடன் இரு. அப்பாவை அனாதையாக்கி ஆலாகப் பறக்க விட்டுவிட்டு ஓடிவிடாதேயம்மா! நான் என்ன சொல்லப்போகிறேன் இதைவிட'

என்று மிக உருக்கமாகக் கூறிவிட்டுத் திண்டுக்கல்லிலிருந்து வடக்கே போகும் அடுத்த ரயில் வண்டியில் சாஸ்திரி புறப்பட்டுவிட்டார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ருக்மிணி அல்லது பக்தி நிலை

பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

"இவன் மாத்ரம் அந்தப்பாசத்திற்குள் இருந்து தவறிப் பிழைத்து வந்தானும். அந்தக் குரங்கு என்ன பாடு படுகிறதாம். இந்த நாரதன்தான் சொன்னான். நான் என் பெயரை மாற்ற வேண்டுமாம். இல்லாவிடில் அதோடு சண்டைசெய்ய வேண்டுமாம். என்ன அழகு. நாம் ஒரு மிருகத்தோடா சண்டை செய்வது? கேவலம் ஓர் மரத்திலிருந்து மரம்பாயும் ஒரு குரங்கோடா சண்டை செய்வது? அது நமக்குப் பெருமையா? அல்லது அழகா? என்ன செய்வது. நீதான் யுக்தியிற் சிறந்தவன். யோசித்துப் பதில் கூறு."

"என்ன? ஒரு குரங்கு உன் பெயரை மாற்றச் சொன்னால் அது கேவலமாகவா இருக்கும்? அதுவும் ஒரு சேனைமுழுதையும் ஆகாசவீதியில் தெறித்துவிட்டதைப் பார்த்தால் எனக்கென்னமோ பயமாகத்தான் இருக்கிறது. அது பெயரை ஏன் மாற்றச்சொல்லுகிறது?"

"நான் பலராமன் என்கிற பெயரை ராமன் என்று மாற்ற வேண்டுமாம். அதற்குக் காரணம் நான் பலசாலியல்ல என்கிறதாம். அப்பெயரோடு இருந்தால் அதனோடு சண்டைசெய்யவேண்டுமாம்."

"அதற்கு உன் பெயரில் பல என்னும் அடைமொழியை எடுக்கவேண்டும் என்று அல்லவா எண்ணம். அதை எடுத்தால் உனது பிரதாபத்திற்குக் குறைவல்லவா? ஒரு சிறு குரங்கிற்குப் பயந்து பெயரைமாற்றினன் என்றல்லவா யாவரும் ஏளனஞ் செய்வர்."

"அதுதானே யானுங் கூறுவது. சண்டை செய்வதென்றால் அதுவும் ஆண்மைக்குக் குறைவேயல்லவா?"

"என்னமோ அப்பா? தாங்கள் கூறுவதைக்கேட்டால் நாம் தீர யோசியாது ஒன்றும் செய்யக்கூடாது. என்ன செய்யலாம். பெயரை மாற்றினால் உன்னுடைய வீரப் பிரதாபத்திற்கே குறைவு மானக்கேடு. சண்டை செய்வதென்றால் ஒரு குரங்கைக்கொல்ல என்ன ஆர்பாட்டம் என்பார். இன்னது சொல்வது என்று எனக்குத் தோன்றவில்லை. நாரதா! நீ என்ன சொல்கிறாய்?"

"நான் என்ன சொல்வது. நான் முன்னமே அதன் வால் ஒன்றே போதும் என்று சொல்லியிருக்கிறேன். கயிறு என்றிவர் கூறியது அவர் வால்தான். வால் என்றால் வாலா அது. அது எத்த[illegible] வளரும்! எனக்கிவர் பெயரை மாற்றுவதே நலம் என்று தோன்றுகிறது. அக்குரங்கோடு போய்ச் சண்டை செய்தாலும் அண்ணா பிழைப்பது அப்படி இப்படித்தான். அதன் வாலே அந்த வேலை செய்யும். பேரை மாற்றினால் என்ன குற்றம்? பலராமர் என்பதை ராமர் என்று மாற்றுவதால் தங்களுக்குப் பலமில்லை என்று ஏற்பட்டு விடுமோ? அது எப்படி முடியும். தங்கள் பலம் குறையவே குறையாது. பெயரை மாற்றாது சண்டைசெய்து தோல்வியடைந்தால் எல்லாரும் பரிகஸிப்பதைவிட நாமே பெயரை மாற்றிக் கொள்வது நன்றென்று எனக்குத் தோன்றுகிறது" என்றார் நாரதர்.

"எனக்கும் அப்படித்தான் அண்ணா தோன்றுகிறது. என்ன செய்வது. வேறு வழியில்லை," என்றார் கிருஷ்ணரும்.

சிந்தாக்கிராந்தராய் பலராமர் ஆஸனத்தில் சாய்ந்து மயங்கி இருந்தனர். அவர் உடல்முழுதும் இளைத்து சிந்தனையே மேலிட்டிருந்தனர். அப்பொழுது ஸ்ரீ பெரிய திருவடிகள் கண்ணபிரான்முன் தோன்றினார்.

"நல்ல ஸமயத்தில் வந்தாய். இந்நகர்க்குப்புறத்தில் ஒரு குரங்கு வந்திருக்கிறதாம். அதை யாரோ போய்த் துரத்தப் பார்த்தாராம். முடியவில்லையாம். நீதானப்பா அதைத் துலைக்கவேண்டும்" என்று கண்ணபிரான் திருவாய் மலர்ந்தார்.

"உங்களுக்கென்ன வேலை. குரங்கையடி, எலியைப் பிடி, என்பதைத் தவிர. ஊருக்கு வெளியில் குரங்கு வந்தால் அதைப் பிடிக்க நான் ஓர் குரங்காட்டியோ? தெரியாமல் உம்மிடம் அமர்ந்தேன். தக்கபடி எனக்கு வேலையிடாமல் என்னை ஏன் பரிகாஸம் செய்கிறீர்கள்?"

"ஏன் அப்பா இந்தக் கோபமுனக்கு? நான் தகுந்தவன் நீயென்று முன்னமே யோசித்துதான் சொன்னேன். உன்னுடைய வீரப்ரதாபம் நம்மினும் சிறந்தது என்று எண்ணிக் கூறினேன். உன்னை நான் என்றைக்காவது பரிகஸித்ததுண்டா?"

"இப்பொழுதுதான் செய்கிறீரே?"

"அதோ பார் அங்கு பலராமரை. என்னமாக மயங்கிக் கிடக்கிறார். அந்தக் குரங்கின் வேலை அது. நான் உன்னைப் பரிகாஸம் செய்யவில்லை. நீ புத்திசாலி. ஸமயோசித பலவான். என்னைக்காட்டிலும் சக்தியுள்ளவன் என்று எண்ணிச் சொன்னேன். தயவு செய்து எங்களைக் காப்பாற்றும். உன்னைவிட்டால் எங்களைக் காக்க வேறு யாரால் முடியும்."

"தாங்கள் சொல்வது நியாயம். அன்று அந்த அம்ருத கலசத்தை எடுத்துவந்ததை விடவா இது கஷ்டம். நிச்சயமாகப் பெரிய திருவடிகள் உங்களது மான ஸம்ரக்ஷணம் செய்வர்" என்றார் நாரதர்.

உள்ளம் சற்றே குளிர, கருடாழ்வார் "நான் போய் என்ன செய்ய வேண்டியது?" என்றார்.

"ஒன்றும் வேண்டியதில்லை. அவர் என்னைக் காண வந்திருக்கின்றனர், நான் கூப்பிட்டதாகச் சொன்னால் தானே வருவார். இதுதான் தாங்கள் தயவு செய்து செய்யவேண்டும்."

"முன்னம் என்னவென்னவோ சொன்னீரே. இவ்வளவுதானா?"

"இதுதான். இது செய்தால் போதுமப்பா!"

"இதற்கென்ன? இதோ அழைத்து வருகிறேன் ஒரு க்ஷணத்திற்குள்" என்று சொல்லிக்கொண்டு கருடன் சென்றான்.

"[illegible]ராமா! அங்கு வந்திருப்பது இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது. நேற்று சாயங்காலம் அவரைக் கண்டேன். உன் பயம் ஒழி. அவரை நான் பார்த்து ஏதாவது சொல்லி ஸமரஸஞ் செய்யப் பார்க்கிறேன்."

பாலஸூரியனது பொன்கதிர் விளங்கும் கோபுரவாயிலை விட்ட பெரிய திருவடிகள் மிகு லேசாக நடந்தார். பொழில்கள்தோறும் விளங்கும் கொடிப்புணர்ந்து விளங்கும் மரங்களின் செழிப்பைக் கண்டு பிரமையிலாழ்ந்திருந்தான். "ஒரு அல்பக் குரங்கை, மரம்விட்டு மரம் பாய்ந்து கொடிக்கிளையில் தலைகீழாக ஊசலாடும் ஒரு சிறு மந்தியை மஹாபலவானென்று எண்ணி என்னை அழைத்துவரச்சொன்ன அந்த கண்ணனது மொழிகள் என்ன மொழி! அவர்க்கிப்படித்தான் எப்பொழுதும் ஆழ்ந்த யோசனை என்பதே கிடையாது. நான் ஊழியஞ்செய்தால் தக்கவிடம் தகாதவிடமென்று அறியாது காலாகாலங்களில்லாமல் அனுப்புகின்றனன். வீண்வேலையன்றி வேறுவேலை கிடையாது. ஒரு குரங்கைத் தன்னிடம் அழைத்துவர வேண்டுமென்றால் நானா இதற்காள்? இவர்க்குக் குரங்கிடமும் கரடியிடமுமே வேலை. முன் ஜாம்பவான் என்னுங் கரடியை யழைத்துவா வென்று சொன்னாற்போல் ஞாபகம் எனக்கிருக்கிறது. இப்பொழுது குரங்கை அழைத்துவர வேண்டுமாம், நான் முடியாது என்று மறுத்துவிடுவேன். சொல்வதற்குள் தட்டிக் கொடுத்து என் வாயெடுக்க வொட்டாமல் செய்துவிடுகிறான். என்ன செய்வது. எனக்கிவ்வாறு வேலை செய்வது மிகவும் அவமானமாக இருக்கிறது. அவரை விட்டு விலகவும் மனம் வரவில்லை—" என்றிவ்வாறு தன் மனத்தில் தோன்றியவாறு எண்ணிக்கொண்டு ஆழ்ந்து விளங்கினர்.

பின் வயல்களில் பண்பாடும் தேரை யினத்தையும் சங்கினத்தையுங் கண்டுகொண்டு கவனியா நிற்பர். அனில் வாலென முதிர்ந்து தொண்டைக் கதிராய் விளங்கும் நெற்பயிரைப் பார்த்து குதூஹலிப்பர். இடையே [illegible]டும் சிற்றருவிகளில் துள்ளிக்குதிக்கும் வானவில்லெனச் சித்திரமமைந்த மீனினத்தைக்காணக் காணக்கூத்தாடுவர். ஓடிவரும் நீர்ப்பெருக்கில் இடையறாது அலைக்கும் ஒலியில் தன்னைவிமயங்க எக்களிப்பர். பித்து பிடித்ததுபோல் கூத்தாடுவர். மற்று, தான் எந்த வேலையாக வந்ததென்பதாவது போக வேண்டிய எண்ண மிருந்ததாகவாவது தோன்றவில்லை. அவர்க்கு அக்குரங்கின்பால் இருந்த அலக்ஷியம்தான், வந்த கார்யத்தையே மறக்கச் செய்தது.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

சென்னைப் புதுக்கவர்னர்.—இப்போது சென்னை ராஜதானிக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள லார்ட் பெண்ட்லண்ட் அவர்கள், தமது பத்தினியாருடனும் இரண்டு குழந்தைகளுடனும் செப்டம்பர் மாதம் 28-ந் தேதி லண்டனிலிருந்து ஸிம்லா என்னும் கப்பலில் புறப்பட்டு அக்டோபர் மாதம் 28-ந்தேதி சென்னை வந்து சேருவார் என்று தெரிகிறது.

*
* *

ஆகாயக்கப்பலில் விவாகப்பவனி.—மெஸி. டிறும் என்னும் ஓர் பிரான்சியன், பிரான்ஸிலிருந்து ஆகாயக் கப்பல் மார்க்கமாய் இங்கிலாந்துக்கு மணக்கோலத்தோடு சென்று விவாகம் முடித்து அப்பால் அந்த ஆகாயக்கப்பலிற்றானே மணவாளியையு மேற்றியழைத்துக்கொண்டு பிரான்சுக்குச் சென்றனன்.

*
* *

கடல்நீரில் பொன்.—நியூயார்க்கில் வசிக்கும் ஆஸ்டிரியா தேசத்து ரசாயன சாஸ்திரியான டாக்டர் ஆஸ்கார்மாகேல் என்பவர் 4,84,009 பவுண்டு செலவு செய்து யந்திரங்களமைத்தால் வருடத்திற்கு 260,000 பவுண்டு மதிப்புள்ள பொன், கடல் நீரினின்றும் எடுத்தல் கூடுமென்று கூறுகின்றனர்; இவர் தினமொன்றிற்கு 60 பவுண்டு செலவு செய்தால் 720 பவுண்டு மதிப்புள்ள பொன் எடுத்தல் கூடுமென்றும், அங்ஙனம் செய்வதால் தினமொன்றிற்கு 660 பவுண்டு லாபங் கிடைக்குமென்றுங் கூறுகின்றார்.

*
* *

மிஸ்டர் A. O. ஹியூம், ஐ. ஸி. எஸ்., காலமாயினார்.—இந்தியன் காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதான புருஷராகக் கருதப்பட்டு வந்த மிஸ்டர் A. O. ஹியூம் சில மாதங்களாக வியாதியாயிருந்து காலமாயினார். இவரது ஜீவியச் சுருக்கம் நமது போதினியில் பின் வெளிவரும்.

*
* *

கிழவனாகாதிருப்பதற்கான ஒரு புது முறை.—மெட்சினிகால் என்னும் ஒரு பிரபல டாக்டர் கிழத்தனமுண்டாவதற்குக் காரணம் தேகத்திலுள்ள சில சிறு புழுக்களின் விஷமேயாமென்றும், அப்புழுக்கள் சர்க்கரையில் பிழைத்திருப்பதில்லை யென்றும், தேகத்தில் சர்க்கரை யுண்டாகுமாயின் இப்புழுக்க[illegible]றந்து போமென்றும் டாக்டர்கள் கூ[illegible] ஒரு பெருஞ்சபையில் கூறினர். இவர் தே[illegible]ர்க்கரையை யுண்டாக்கக்கூடிய புழுக்களைக் கண்டுபிடித்திருக்கின்றார். இப்புழுக்களை அவர் ஒரு வெள்ளை எலியின்மீது விட்டுப் பரீட்சைசெய்துபார்த்தார். அதற்குக் கிழத்தனமுண்டாகவில்லையாம். இனி யப்புழுக்களை மனித சரீரத்திற் செலுத்திப் பரீட்சை செய்ய வுத்தேசித்திருக்கிறாராம்.

ஒரு தீவில் புதையுண்டுள்ள பெருந்சொத்து.—வெனிசுவிலன் கடற்கரைக்கு 400-மைல் தூரத்திலுள்ள காலப்டர்கோ என்னும் தீவிற்கு வடக்கேயுள்ள கோக்கோ என்னுந் தீவில் சுமார் 120-லட்சம் பவுண்டு மதிப்புடைய சொத்துக்கள் பூமிக்குள்ளிருக்கின்றனவாம். இவை பல வருஷங்களாகக் கடற்கொள்ளைக்காரர்களால். புதைக்கப்பட்டனவாம். இச்சொத்துக்களைக் கண்டுபிடித்தெடுக்கச் சிலர் துரைத்தனத்தாரின் அதிகாரம் பெற்று அங்குச் சென்றிருக்கின்றனர்.

* * *

ஒரு விசித்திரப் பிரதிமை.—ஜப்பானில் சில காலங்கட்குமுன் ஒரு கனவா னிறந்துபோனார். அவரது ஞாபகார்த்தமாக ஒரு சிற்பசாஸ்திரி மின்சாரக் கருவியமைத்து ஒரு பிரதிமை செய்து வைத்திருக்கின்றார். அது வாயைத் திறக்குமாம், மூடுமாம், கையைத் தூக்குமாம், முடக்குமாம், அந்தக்கனவான் செய்த பிரசங்கங்களை கிராமபோனிலமைத்து, அதனை யப்பிரதிமையின் பின்புறத்தில் வைத்திருக்கின்றனர். அது பாடும்போது அப்பிரதிமை வாயைத் திறப்பதும் மூடுவதுமாக விருப்பதையும் கையைத் தூக்குவதும் முடக்குவதுமாக விருப்பதையும் பார்த்தால் அவரே பிரத்தியட்சமாகப் பிரசங்கம் செய்வதுபோலிருக்குமாம்.

* * *

சுரங்க வெடிப்பால் நேர்ந்த விபத்து.—இங்கிலாந்து தேசத்துக் கன்னிஸ்ய ரோகாசுக்கருகேயுள்ள டெனுபி சுரங்கத்தி னிரண்டிடங்களில் வெடிப்புண்டாயது. பின்வந்த சமாச்சாரத்தால் அச்சுரங்க விபத்திலிறந்தவாது தொகை 79 என்று தெரிகின்றது. நமது சக்கரவர்த்தியவர்கள் சுரங்கத்தின் வெடிப்புண்டாகிய விடத்திற்கு நேரேசென்று சுரங்கத்தினுள் 1000 அடி பரியந்தம் பூமிமட்டத்திற் கிறங்கிப்பார்த்து, தமது அநுதாபத்தைத் தெரிவித்தார்.

* * *

பூகம்ப விபத்து.—இம்மாதம் ஐரோப்பா கண்டத்தின் கீழப்பாகத்தில் ஓர் பூகம்பமுண்டாயிற்று. நான்ஸ்டான்டிநோபிலின் அருகேயும் ஒரு நீடித்த பூகம்பமுண்டாயிற்று; சோர்லு என்னுமூரில் பூகம்பத்தால் ஒரு விளக்குக்கூண்டு விழுந்து விட்டது. 300 வீடுகள் தீப்பற்றி விழுந்தொழிந்தன. மார்மோராக் கடலில் தென்கரையிலுண்டான பூகம்பததால் அநேக கிராமங்கள் பாழ்பட்டுப்போயின; அளவிறந்தன பேர் மாண்டனர். சானக்கிலுண்டான பூகம்பத்தால் அங்கொரு கிறிஸ்தவக்கோவிலும் மகம்மதிய மசூதியுமிடிந்துபோயின. கானேவி: ஹோராவிலுமுள்ள கடற்கரை விளக்குக்கூண்டுகள் பூகம்பத்தால் இடிந்துவிழுந்து பூமிக்குள் மறைந்துபோயின, அங்கு அநேக கிராமங்கள் தீப்பற்றி யெரிந்தொழிந்தன. ஹோராவில் 80 பேரிறந்தனர். 300 பேர் காயமடைந்தனர். மிரியோபியடாவில் 300 பேரிறந்தனர். 600 பேர் காயமடைந்தனர். அங்கு இரண்டு கிராமங்கள் பூமிக்குள் மறைந்துபோயின என்று தெரியவருகிறது.

பம்பாயிக் கவர்னர் நியமனம்.—தற்போது பம்பாய்க் கவர்னராக விருக்கும் ஸர் ஜார்ஜ் கிளார்க் அவர்கட்குப் பின் லார்ட் செம்ஸ் போர்ட் அவர்கள் பம்பாய்க் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

* * *

ஸ்டாம்பு விற்பனை.—சென்னை ராஜ ரியில் சென்ற வருஷத்தில் 1-கோடியே 27-இலட்ச ரூபாய்க்கு மேற்பட ஸ்டாம்பு விற்பனையா யிருக்கின்றது.

புஸ்தக விமர்சனம்

REVIEWS OF BOOKS

கல்யாணி.—இது ம-ா-ா-ஸ்ரீ, R. S. நாராயணஸ்வாமி அய்யர் பி.ஏ., பி.எல்., அவர்கள் எழுதியது. துப்பறியும் நவீனங்களின் பகுப்பில் சேர்ந்த இக்கதை மிகு லாவண்யமாகவும் செம்பாகமாகவும் எழுதப்பெற்றுள்ளது. படிப்பவர் மனதைக்கவரும் தன்மை வாய்ந்தது. இத்தகைய கதைகளை யாவரும் விரும்பாதிருக்க முடியாது.

* * *

பிரேமகாந்தன்.—இது "தாமரைப்பெண்" எழுதியது. தனது காலத்தை நல்லதாகச் செலவிட்டுச் செய்யும் பெண்மணி யொருவள் எழுதுமிந்நூலில் பக்தியே மேலிட்டு விளங்குவது. இது அம்மாது இரண்டாவதாக எழுதும் நூல். முதலில் எழுதிய கோமளம் காஞ்சியாத்திரை என்னும் நூலினும் ஒழுங்கு படிந்து நடை சிறந்து விளங்கினும், மிகைபட மேற்கோள் கொண்டு விளங்குகிறது. மற்றும் வெளிவரும் நூல்களில் இதையும் கவனித்து எழுதுவாளாயின், தான் மனத்திற்கொண்டதைஎண்ணியவிதம் கையால்தீட்டும் தன்மை எளிதில் அடைவள். யாம் கூறும் இக்கூற்று அபிமானமே. எழுதுவோர் விருத்தியைக் குறித்தன்றி வேறன்று. இதை யுள்ளங்கொண்டொழுகல் நலமென எமக்குத் தோற்றுகிறது.

* * *

ஜனகா மோஹன சாதுரியம் அல்லது எலிபிடிக்கும் பொறி, சுகுமாரதிலகம், நாகரீக பாரிஜாதம் : ம-ா-ா-ஸ்ரீ S. G. இராமாஞ்சலுநாயுடு அவர்கள் இயற்றிய இவை நன்றாக எழுதப்பட்டுள்ளன. ஹாஸ்ய ரஸம் நிறைந்து விளங்குவன, சிறுவர்கள் யாவரும் விநோதத்துடன் படிக்கக்கூடியவை. சித்திரப்படங்கள் நன்றாக அமைந்திருப்பின் நலமாயிருக்கும்.

10



ஆலன் ஓ. ஹியூம்.

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—— திருவள்ளுவர்

தொகுதி V } பரீதாபி௵ புரட்டாசிமீ : 1912-௵ அக்டோபர்மீ { பகுதி 4

ஈஷணாத்ரயம்

THE THREE DESIRES

ஈஷணை என்னும் பதத்திற்கு ஆசை என்று பொருள். இவைகள் முக்யமாக மூன்று உண்டு. அவை யாவன: தாரேஷணை, தனேஷணை, புத்ரேஷணை என்பவைகளே. இவைகளுக்கு முறையே பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை என்று பெயர். இவைகளின் ஒழுங்கு மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று தமிழ் சாஸ்திரங்களில் வழங்கி வருகிறது. இவைகளைச் சற்று மாற்றி பட்டினத்துப் பிள்ளையார் அன்னவிசாரம், ஸ்வர்ணவிசாரம், மாதரைப்பன்ன விசாரம் என்று கூறி ஸாதாரண மனிதர்களுக்கு இவைகள் இம்முறையே மனத்தில் தோன்றுகின்றன என்று வற்புறுத்துகிறார். இம்மாதிரி மூன்று விசாரங்களை வைத்து மனிதன் வாழ்நாள் எல்லாம் வீணாகி அவன் தவித்துத் தேற இடம் ஏற்படுத்திவிட்டார் ஈசன். இக்கருத்தைத்தான் பட்டினத்தடிகளும் 'என்ன விசாரம் வைத்தாய் இறைவா கச்சி யேகம்பனே!" என்று வியந்து வெளியிட்டிருக்கிறார்.

இவ்வீஷணைகளுள் எது ஒன்றிருந்தபோதிலும் மற்றவிரண்டும் வந்து சேர்ந்துவிடும். ஸகலமும் துறந்து சுகப்பிரஹ்மம் தகப்பனார் வீடுவிட்டு வெளியேறிப் போன காலத்தில் வ்யாஸர் புத்ரேஷணையால் இழுக்கப்பட்டு 'சுகா! சுகா!!' என்று கதறிக்கொண்டு பின்தொடர்ந்தார். சுகர் பின் திரும்பி நோக்காது முன்சென்றார். இவர்கள் ஒரு குளக்கரை வழியாகப் போக வேண்டி வந்தது. நிர்வாணிகளாகச் சில தேவமாதர்கள் அங்கு ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தனர். 16 வயது யௌவன புருஷரான சுகரைக் கண்டதும் அவர்களுக்கு யாதொருவிகாரமும் உண்டாகாததால் அவர்கள் ஜலக்கிரீடையிலேயே இருந்துவிட்டனர். பின்னர் வந்த வ்யாஸ மஹரிஷியைக் கண்டதும் கரையேறி வஸ்த்ரங்களை உடுத்திக்கொண்டனர். இதற்குக்காரணம் என்ன என்று வ்யாஸர் கேட்க, 'உமது பிள்ளை எல்லாம் துறந்தவன். உமக்கோ இன்னும் புத்ரேஷணை விடவில்லை. மற்ற ஈஷணைகள் இல்லாமல் போகுமா? உம்மைக்கண்டதும் எங்களுக்குஜலக்கிரீடையிலிருக்கமனம்தாளவில்லை'என்றனர். உலகவிஷயமாகப் பார்க்கிலும் மூன்று ஈஷணைகளுள் ஒன்றிருந்தால் மற்றிரண்டும் வந்துசேர்ந்துவிடும் என்பது எளிதில் விளங்கும்.

இவ்வீஷணைகளுக்கே உட்பொருள் ஒன்றுண்டு. மண்ணாசை அதற்காதாரமாகிய ஸ்தூலதேஹப்பற்றையும், பெண்ணாசை ஸூக்ஷ்மதேஹம் அதாவது மனப்பற்றையும், பொன்னாசை ஆபரணாதி ரூபபேதங்களுக்குப் பொன் ஆதாரமாக விருப்பதுபோல முற்கூறிய இரண்டு பற்றுக்களுக்கும் காரணமாகிய காரண தேஹப்பற்றென்றும் கூறுவர் பெரியோர். ஸாதாரணமாக மண்ணாசை முதலியவைகளை விடவேண்டும் என்று கூறும் சாஸ்திரப்படி நாம் அவைகளைவிட முயன்றால் அவைகளை வரவாக் குறைத்துக் கொண்டே வரலாம், அவ்வளவுதான்: முற்றிலும் விடமுடியாது. ஆனால் குருவாக்கின்படி நிஷ்டையிற் பழகி மூன்று தேஹத்திற்கும் அப்பாற்பட்டு நின்றால் குறைந்துவரும் இவ்வீஷணைகள் ஒழுங்காகத் தாமே கழன்றுகொண்டு வர நாம் இவைகளிலிருந்து முற்றிலும் விடுபடுவோம். ஆகவே நிஷ்டைசெய்யாச் சமயங்களில் வைராக்கியத்தை மேற்கொண்டு இவைகளிலிருந்து ஒதுங்கியும், நிஷ்டையில் இவைகளை முற்றிலும் மறந்து அப்யாஸம் செய்தும் இவைகளிலிருந்து நாம் விடுபட முயலவேண்டும். 'கிருஷ்ணா! மனம் சஞ்சலமுடையது; எப்படிப்பட்டவரையும் கலக்கிவிடும்; மிகுந்த பலமும், திடமும் உடையது. அதை அடக்க முயலுவது காற்றை அடக்க முயலுவதுபோல அஸாத்யமாக முடியுமல்லவா?' என்று கேட்ட அர்ச்சுனனுக்கு, இதுவரையிலும் இங்கு கூறப்பட்டுள்ள கருத்தை உள்ளடக்கியே பகவானும் 'மனத்தை அடக்குவது மிகக் கடினம், ஸம்சயமே இல்லை. ஆயினும் அதன் சஞ்சலத்தை அப்யாஸத்தினாலும் வைராக்யத்தினாலும் ஸாவதானமாக அடக்கமுயலவேண்டும்' என்று மறுமொழி கூறியிருக்கிறார்.

விவேக போதினி

தொ. 5.] பரீதாபி௵ புரட்டாசிமீ [பகுதி 4

ஸ்ருஷ்டி விஷயம்

1. மகாப்பிரளயம்

THE PRALAYA STATE

விசித்திரமான தோற்றத்தோடு கூடிய இப்பிரபஞ்சத்தை நோக்குபவர் ஒவ்வொருவரும் 'இது எவ்வாறு, எதிலிருந்துண்டாயிற்று?' என்ற கேள்வியைக் கேட்காமலிருக்கிறதில்லை. இந்தக் கேள்விக்கு எல்லோரும் தங்களுக்கேற்றபடி விடை கொடுக்கவும் முயலுகிறார்கள். இந்தச் சேதனாசேதன ரூபமான பிரபஞ்சம் எப்படி உண்டாயிற்று? இது ஸர்வ வல்லமையுள்ள கடவுள் என்ற ஒரு வஸ்துவால் ஸிருஷ்டிக்கப்பட்டதா? அல்லது, இதிலடங்கிய அணுக்களின் ஸ்வபாவத்தால் உண்டானதா? முன் சொன்னபடி உண்டாக்கப்படுகிறதானால், கடவுள் இந்தப் பிரபஞ்சத்தைச் சூனியத்திலிருந்துண்டாக்கினாரா? அல்லது அசித்தாகிய பிரபஞ்சம் முதலில் குழப்பத்தோடு உருவில்லாமல் கிடக்க, அதை அவர் ஒழுங்குபடுத்தி உருவோடு தோன்றும்படி செய்தாரா? பின் சொல்லியபடி பிரபஞ்ச முண்டாகின்றதானால், இது உண்டாகும்படி செய்யும் அணுக்களின் ஸ்வபாவமும், ஸ்வரூபமும் என்ன? அவைகள் எப்படி உண்டாயின? அவைகள் இல்லாமலிருந்த காலமும் உண்டா? அல்லது அவைகள் எக்காலத்திலும் இருப்பவைகளா? கடவுள் ஒருவர் உண்டானால் அவர் எப்பொழுதாவது உண்டானவரா? அவருக்கு அந்தமுண்டா? தேகந்தோறும் வெவ்வேறாய்த் தோன்றும் ஜீவாத்மாவின் ஸ்வரூபம் என்ன? என இவைபோன்ற அளவிறந்த கேள்விகள் நமது மனதில் அடிக்கடி உதிக்கின்றன. இவைகளை எல்லாம் இங்கு எழுதப் புகுந்தால் விஷயம் மிகவும் விரியும். ஆகையால் யுக்திக்கும் அநுபவத்திற்கும், புதிய பிரகிருதிசாஸ்திரங்களுக்கும் ஒத்தனவாயும், நமது சாஸ்திரங்களில் தொன்றுதொட்டு உள்ளனவாயும், சரியானவையாயும் உள்ள பிரபஞ்ச உற்பத்தி, ஸிருஷ்டிக்கிரமம், இவ்விஷயங்களைப்பற்றி இங்குத் தொகுத்துக் கூறுவோம். இந்தச் சிருஷ்டி விஷயத்தைப்பற்றி நன்றாய் அறிந்துகொண்டால் நமது ஜீவதசையில் நேரிடும் கஷ்டமான நிலைகளிலும், மதவிஷயங்களில் வரும் இதுபோன்ற ஸங்கட நிலைகளிலும், உள்ளபடி அறிந்து நேர்வழியில் நடக்கவேண்டிய ஞானம் நமக்கு உண்டாகும்.

ஸிருஷ்டிக்கிரமத்தைத் தெரிந்துகொள்வதற்கு முன், மூன்று புதிய சொற்களின் பொருளை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். இது நன்றாய் விளங்குவதற்கு ஒரு செடியின் திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்ளுவோம். அந்தச் செடி நன்றாய் வளர்ந்து செழிப்பதற்கு அதன் அணுக்கள் எல்லாம் ஒற்றுமையாய் வேலை செய்தல் வேண்டும். சிறந்த குடும்பங்கள் ஒழுங்காய் நடத்தப்படும்பொழுது இதுபோலவே அதிலடங்கிய ஒவ்வொருவரும் ஒற்றுமையோடு உழைத்தல் வேண்டும். இம்மாதிரியான ஒற்றுமையாலே தான் குடும்பங்கள் எல்லாம் சீக்கிரத்தில் நல்ல நிலைக்கு வரும். இதுபோலவே செடி வளர்ந்து தழைப்பதற்கும் அதன் அணுக்கள் தம்முள் ஒற்றுமையாக இருக்கவேண்டியது அவசியம். இதுபோலவே ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் வரையில் எல்லா உயிர்களையும் உற்று நோக்குங்கால் மூன்று விஷயங்கள் வெளியாகின்றன. அவ்விஷயங்கள் பின் வருபவைகளே: (1) ஒற்றுமை (அல்லது தெளிவு) என்பது வஸ்துக்கள்

செழித்து வாழ்வதற்குச் சகாயமானதாயும், (2) பொருத்தமின்மை (அல்லது மோஹம்) என்பது வஸ்துக்களை நாசம் செய்வதற்குச் சகாயமானதாயும், (3) பிரவிருத்தி (அல்லது மாறுதல்) என்பது முன் சொன்ன நிலைகள் இரண்டும் இருப்பதற்குக் காரணமாகியும் இருக்கின்றன. உலகத்தில் காணப்படும் ஸகல விஷயங்களிலும் இம்மூன்று நிலைகளையும் எப்பொழுதும் காணலாம். ஆனால் ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொன்று மேலாகி நிற்கும். செடிகள் பட்டுப்போகும் காலத்தில் அதில் அடங்கி இருக்கும் வஸ்துக்களே முழுவதும் நாசமடைவதால் அப்பொழுது பொருத்தமின்மை அல்லது மோஹம் என்ற நிலை ஓங்கி நிற்கிறது. ஒருவனுக்குச் சுகம் உண்டாவதற்கு அவன் தேகத்தின் பாகங்கள் எல்லாம் ஒற்றுமையாய் வேலை செய்ய வேண்டும். ஒற்றுமையின்றி வேலைசெய்யுமாயின், வியாதி பலக்குறைவு முதலிய துக்கங்கள் உண்டாகும். ஆகவே ஒற்றுமைக்குச் சுகம் என்ற பெயரும், மோஹம் என்பதற்குத் துக்கம் என்ற பெயரும் பொருந்தும். இவ்விரண்டு நிலைகளும் பிரவிருத்தி அல்லது மாறுதல் என்ற நிலையின் தொழிலாலன்றி உண்டாவதற்கு இடமில்லை. முன் சொன்ன செடியின் விஷயத்தில், முளைக்குங்கால் பிரவிருத்தி என்பது ஓங்கியும், மற்றிரண்டு அடங்கியும் இருக்கின்றன. முளைவிட்டுச் செழிப்பதில் ஒற்றுமையும், நாளுக்கு நாள் சீக்கிரம் விருத்தியாவதில் பிரவிருத்தியும், பழைய விரையுடைந்து நாசமாவதில் மோஹமும் வெளிப்படும். இதுபோல நல்ல செடியாய்ச் செழித்து வளர்ந்து கொண்டிருக்கும்பொழுது ஒற்றுமை ஓங்கியும், மற்றிரண்டு ஒடுங்கியும் இருக்கின்றன. இந்தச் செடி யழியுங்காலத்தில் மோஹம் ஓங்கியும் மற்றிரண்டு ஒடுங்கியும் இருக்கின்றன. இம்மூன்றிற்கும் [illegible]து சாஸ்திரங்களில் குணங்கள் என்றும், [illegible]மை, மாறுதல், பொருத்தமின்மை என்ப[illegible]ளுக்கு முறையே ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் என்றும், பெயரிட்டு, அவைகளை முறையே வெளுப்பு, சிவப்பு, கறுப்பு என்ற வர்ணங்களாகவும் உருவகப்படுத்தி இருக்கிறார்கள். உயிர்ப்பிராணிகளை உற்று நோக்குங்கால் இக்குணங்கள் முறையே சுத்தம் அல்லது தெளிவு என்ற நிலையாகவும், சுறுசுறுப்பு என்ற நிலையாகவும், மந்தமல்லது சோம்பல் என்ற நிலையாகவும் காணப்படும். ஆகவே உலகத்தில் ஸ்தாவர ஜங்கம ரூபமாகிய ஸகல விஷயங்களிலும் இம்முக்குணங்களும் எப்பொழுதும் காணப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொன்று ஓங்கியும் மற்றிரண்டு அடங்கியும் இருக்கும். இதற்கேற்பவே கைவல்லிய நூலாசிரியரும்:—

> "உத்தமம் வெளுப்புச் செம்மை யுரைத்திடு
> கறுப்பு மாகும்
> சத்துவ குணத்தி னோடு ரஜோகுணந்
> தமோகு ணம்தான்
> சுத்தமோ டழுக்கி ருட்டாச் சொல்லுமுக்
> குணமு மூன்றாய்
> ஒத்தள வேனுந் தம்முள் ஒருகுணம்
> அதிக மாமே"

என்று எடுத்துரைத்திருக்கிறார்.

ஸிருஷ்டியைப்பற்றிச் சொல்லப் புகுங்கால், முதலில்சாதாரணமானவர்கள்கடவுள்தனதுஸர்வ வல்லமையால் எண்ணின மாத்திரத்தில் திடீரென்று சூனியத்திலிருந்து இப்பிரபஞ்சத்தைச் ஸிருஷ்டித்துவிட்டார் என்று எண்ணலாம். இதற்கும், சாஸ்திரத்தில் வெளியிட்டிருக்கும் உண்மைக்கும் வெகுதூரம். மதவேறுபாடுகளை வேறு இடத்தில் விஸ்தரிக்கப்போகிறோம். ஆகையால் தற்காலத்தில் இவ்விஷயத்தில் கடவுள் ஜீவாத்மா உலகத்திற்குக் காரணமான அசித்து ஆகிய இவைகளை அநாதியாய் இருப்பனவாக வைத்துக் கொள்வோம். இப்படி ஒத்துக்கொள்ளாவிட்டால் யுக்திக்குப் பொருந்தாத கொள்கைகளுக்கு இடமுண்டாகும். கடவுள் இல்லாமலிருந்த காலம் ஒன்றுண்டு என்று ஒப்புக்கொண்டு அவர் வேறொன்றால் ஸிருஷ்டிக்கப்பட்டார், என்றால், எல்லா மதங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்

கடவுளது ஸர்வ வல்லமைக்குத் தோஷம் உண்டாகிறது. மேலும் கடவுள் இப்படிச் சிருஷ்டிக்கப்பட்டால், அக்கடவுளைச் சிருஷ்டித்தவரை உண்டாக்கினவர் யார் என்ற கேள்வி உண்டாகும். வேறு யாரோ ஒருவர் சிருஷ்டித்தார் என்றால் பின்னும் அக்கேள்வியே வளர்ந்து அனவஸ்தா தோஷத்திற்கு (ஒரேமாதிரியான ஓயாக்கேள்விக்கு) இடமுண்டாகும். ஆதலால் கடவுளைப் போலச் சிருஷ்டிக்கப்படாமல் தானாய் இருக்கும் ஒரு முதற்காரணப் பொருள் உண்டென்பதை ஸகல யுக்திவாதிகளும் எந்நிலையிலாவது ஒப்புக்கொள்ளவேண்டியதாய் வருகிறது. பிரபஞ்ச காரணமான அசித்து ஒரு காலத்திலில்லாமலிருந்தது,புதிதாய் உண்டாயிற்றுஎன்று ஒப்புக்கொண்டால் , சூனியத்திலிருந்து " திடீரென்று ஒன்று உண்டாயிற்று என்று சொல்லும் யுக்திக்கும் புதிய பிரகிருதி சாஸ்திரத்திற்கும், பொருந்தாத கொள்கையைப் பின்பற்றவேண்டியதாய் வருகிறது. இதேமாதிரியான பிழை ஜீவாத்மா விஷயத்திலும் உண்டாகும். நமது சாஸ்திரங்களும், புதிதாய் உண்டான பௌதிக சாஸ்திரங்களும் அசித்தையும் சக்தியையும் புதிதாய்ச் சிருஷ்டிக்கவாவது, அடியோடு அழித்து விடவாவது, முடியாதென்று ஸ்தாபிக்கின்றன. ஆகையால் பிரபஞ்சத்தில் நடப்பது என்னவென்றால், முன்னிருந்த வஸ்துக்களே வெவ்வேறு விதமாய் மாறிஒழுங்குபடுத்தப்பட்டுபுதிய உருவமாகவும், மாறுபாடாகவும் தோன்றுவனவே ஒழிய வேறில்லை. எப்படி ஒரு குயவன் மண் ஒன்றை மாத்திரம் கொண்டு பானை பதுமைகள் முதலியவைகளை உண்டாக்குகிறானோ, அதுபோல் புதிது புதிதான தோற்றங்கள், உயிருள்ள வஸ்துக்களிலோ அல்லது உயிரில்லாத வஸ்துக்களிலோ, ஏற்பட்டபோதிலும், புதிதாய் முன் இல்லாதது ஒன்றும் சிருஷ்டிக்கப்படவில்லை என்பது ஸநாதன தர்மத்தின் ஸாரமான ஸித்தாந்தம்.

நம்முடைய அனுபவத்தில் எவ்வளவோ மாறுபாடுடைய வஸ்துக்கள் தோன்றுவதையும் அழிவதையும் பார்த்திருக்கிறோம். அவைகள் அழிந்த பின்பு காணாமற் போனபோதிலும் அவைகளின் பாகங்கள் பின்னும் இருக்கின்றன என்று நமக்கு நன்றாய்த் தெரியும். ஒரு செடியானது அழிந்துபோனால்,செடியாகத் தோன்றாதிருந்தபோதிலும்,சருகுகளாகவும் சிறு விறகுகளாகவும் கொஞ்சம் விதைகளாகவும் இருக்கின்றது. ஒன்றும் இல்லாமல் செடி ஒருபொழுதும் அழிவதில்லை. இப்பொழுதிருக்கும் பிரபஞ்சத்திற்கு அழிவுகாலம் அணுகும்பொழுது இது மறைந்துபோகும். அதாவது இதிலடங்கிய அணுக்கள் புதிதாய் ஒழுங்குபட்டுப் புதிய பிரபஞ்சம் வெளியாவதற்காக, இந்தப் பிரபஞ்சம் அடங்கவேண்டியது அவசியம்தான். இம்மாதிரி பிரபஞ்சம் மறைவதற்குப் பிரளயம் அல்லது ஸங்கோசநிலை என்றும், மறுபடியும் பிரபஞ்சம் தோன்றுவதற்கு விகாஸம் அல்லது சிருஷ்டிநிலை என்றும் பெயர். ஆகையால் சிருஷ்டி என்ற சொல்லிற்கு முன் தோன்றாது மறைந்து கிடப்பவைகளை ஒழுங்காய்த் தோன்றப்படி செய்வது என்பது பொருள்.

இந்தச் சிருஷ்டிக்கு முன் இப்பிரபஞ்சம் எப்படி இருந்திருக்கக்கூடும், என்ற சங்கை உண்டாகலாம். நீங்கள் யாவரும் சிலந்திப்பூச்சி வலைகளை உண்டாக்குவதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அது என்ன செய்கிறது? தன்னுள் உள்ள வஸ்துவைக்கொண்டே, வேண்டுமென்ற பொழுது வலைகளை உண்டாக்கி, தனக்கு இஷ்டமில்லாதபொழுது அவ்வலைகளைத்தன்னுள்ளேயே வாங்கிக்கொள்ளுகிறது. அவைகள் சிலந்தியின் தேகத்தில் நன்றாய் அடங்கிவிடுகின்றன. பின்பு மறுபடியும் வேண்டுமானால் புதிதாய் ஒரு வலையை உண்டாக்கும் சக்தி அதற்கு உண்டு. அதுபோலச் சேதனா சேதனாத்மக பிரபஞ்சம் முழுவதும் கடவுளிடத்து [illegible]சம மாய்ச் சிருஷ்டிக்கு முன்பு அட[illegible]ந்து பின்பு சிருஷ்டி ஆரம்பத்தில் புதி[illegible] ஒழுங்காய் முக்காலத்திலும் இருக்கும் அசித்தானது

73 4 - JAN 1913 MADRAS

புதிய தோற்றத்தோடு கடவுளின் இச்சா மாத்திரத்தில் வெளியாகின்றது.

இப்பிரளய ஸ்திதியில், பிரபஞ்சம் முழுவதும் கடவுளிடத்தில் விதையுள் மரம் போலவும், மெழுக்குண்டையில் தங்கப் பொடிகள் போலவும் அடங்கி இருக்கும். இந்நிலைக்கு வருவதற்கு முன்; இப்பிரபஞ்சம் படிப்படியாய்ச் சூட்சுமமான நிலைக்கு வந்திருக்கவேண்டும். மாறும் நிலைகளுக்கெல்லாம் ஒழுங்குகள் வரவர மாறிக்கொண்டே வரவேண்டும். இந்நிலைகள் ஐந்தென நமது சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இம்மாதிரியான நிலைகள் உண்டென்று ஒருவாறு அறிவதற்குப் புதிய பிரகிருதி சாஸ்திரத்திலிருந்து ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். ஒவ்வொரு கடின பதார்த்தத்தையும் தகுந்தபடி சுடவைத்தால் அதன் அணுக்களின் கட்டுத் தளர்ந்து, சில காலத்திற்கெல்லாம் உருகித் திரவ பதார்த்தமாகும். மேல் மேலும் சுடவைத்துக்கொண்டே இருந்தால் அணுக்களின் கட்டு மிகத் தளர்ந்து அழியுங்கால் அதே திரவபதார்த்தம் வாயுபதார்த்தமாக மாறுகின்றது. இன்னும் அதிகமாய்ச் சுடவைக்குங்கால் இந்த வாயுபதார்த்தம் விரிந்து அதன் அணுக்கள்கூட பரமாணுக்களாகப் பிரிந்து, எல்லா வஸ்துக்களுடைய பரமாணுக்களும் பேதாபேதமின்றிக் கிடக்கும் நிலையை அடைகின்றன. இவ்விதமாய் ஒவ்வொரு நிலையிலிருந்து அதைவிடச் சூட்சுமமான நிலைக்கு வருங்காலத்தில் அதற்கேற்ற வெவ்வேறு ஒழுங்குகள் உண்டாகின்றன. கடைசியிலுள்ள சில சூட்சும நிலைகளில் வஸ்துவே கண்ணுக்குப் புலப்படாமல் இருந்தபோதிலும்,அவ்வஸ்து அங்கும் நிச்சயமாக இருக்கிறது. ஆகையால் பிரபஞ்சம் அழியுங்கால், ஒன்று மில்லாமலே போய் எல்லாம் நாசமடைவது என்பதே யில்லை. பிரபஞ்சமானது சூட்சும நிலையை அடையுங்கால் அந்நிலைக்கேற்ற சிற்சில ஒழுங்குகளுக்கு உட்பட்டே இருக்கிறது. நாம் இப்பொழுது காணுகின்ற இவ்விசித்திரங்களும், இவ்வொழுங்குகளும், இம்மாதிரியே அதிசூட்சும நிலையில் இல்லாமையால் அந்நிலையை ஒரு குழப்பமான நிலையென்று சிலர் எண்ண இடமுண்டாயிருக்கலாம்.

இத்தருணத்தில், ஜடமான அசித்திற்கு இம்மாதிரி நிலைமாறுதலை ஒப்புக்கொள்ளலாம். ஆத்மா, பரமாத்மாவானாலும் சரி, ஜீவாத்மாவானாலும் சரி, ஸ்தூலமென்றாவது, சூட்சுமமென்றாவது, உருவமுடையதென்றாவது சொல்ல இடமில்லையே. ஆகையால் சேதனாத்மகமான ஆத்மாவுக்கு முன்சொன்ன மாறுதலை ஒப்புக்கொள்ள இடமில்லை, என்ற சங்கை நமது மனதில் உதிக்கலாம். ஆத்மா ஸ்வபாவத்தில் அரூபமானதாய் இருந்தபோதிலும், அதற்குக் குடியிருக்கும் வீட்டிற்குச் சமமான அசித்தாலாகிய தேகபேதத்தால், அதுவும் பேதமாய் இருப்பதுபோல் காணப்படுகிறது. தேகம் ஸ்தூலத்திலிருந்து சூட்சும ஸ்திதிக்கு மாற, ஆத்மாவும் அவ்வாறு மாறுவது போலத் தோன்றுகிறது. இப்படித் தேகத்தோடு ஸம்பந்தப்பட்ட ஆத்மாவைப்பற்றி, முன்சொன்ன நிலைகள் சொல்லப்பட்டனவே ஒழிய, ஆத்மாவை மாத்திரம் தனியாய் நோக்கின், இம்மாதிரியான வ்யவஹாரத்திற் கிடமே இல்லை.

இப்பொழுது காணப்படுகின்ற பிரபஞ்சத்திற்கு நாசகாலம் இந்த மஹா கல்பத்தின் முடிவில் வரும். இதைப்பற்றிப் பின்னர் விஸ்தரிப்போம். அக்காலத்தில் தமோகுணம் மேலிட்டு உலகம் அழியத் தலைப்படும். பிரபஞ்சத்தின் அணுக்களெல்லாம் ஒற்றுமையின்றிப் பிரிய ஆரம்பித்து, பிரபஞ்சம் திரவ ஸ்திதிக்கு வரும். பின்பு அதைவிடச் சூட்சுமமான வாயு ஸ்திதிக்கு வரும். இப்படித் தமோகுணம் ஓங்கி நிற்றலால், பிரபஞ்சம் வரவர அதி சூட்சும நிலையை அடைந்து, கடைசியில் தமோகுணம் உள்பட ஸகலமும் பேதமற்றுக் கிடக்கும் அதி சூட்சுமமான நிலைக்கு வரும். ஏனெனில் தமோகுணமும் அதிகமாக வேலை செய்யச் செய்யத்

தானும் க்ஷீணித்து மற்றைய குணங்களோடு ஸமமாய் அடங்கவேண்டியது நியாயந்தானே. இந்நிலையில் அசித்தானது ஆத்மாவால் போக ஸாதனத்தனுவாக உபயோகிக்க யோக்கியமில்லாததாய் இருக்கும். முக்குணங்களும் ஸமமான நிலையில் அசித்து அடங்கி இதோடு ஸகல ஜீவாத்மாக்களும் மெழுக்குண்டையில் தங்கப் பொடிகள்போலப் பரமாத்மாவில் லயித்திருப்பார்கள். பரமாத்மாவோ, அசித்தின் மக்கின நிலையை நோக்கித் தானும் செயலற்றுத் தனது ஸ்வபாவமான ஆனந்த நிலையில் மூழ்கி, நித்திரையில் இருப்பவர்போல், அசித்தையும், ஜீவாத்மாக்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும். இம்மாதிரியான மக்கின நிலையை ஜகத் ஜீவன் பரன் ஆகிய இவர்கள் அடையவேண்டுமென்பது நியாயமே. ஏனெனில் தொழில் செய்யும் நிலையும், தொழிலற்ற நிலையும் மாறி மாறி வந்துகொண்டிருக்கவேண்டியது நியாயந்தானே. இம்மாதிரியாய் மாறி மாறி இந்நிலைகள் வந்துகொண்டிருப்பதனால் உலகத்திலடங்கிய வஸ்துக்களும், ஆத்மாக்களும் விருத்தியடைந்து வர இடமுண்டாகிறது. இந்த ஒழிவான நிலையில் நிச்சப்தமாய் ஸுககரமாய்த் தொழிலற்று, ஏற்றத் தாழ்வுகளும் அற்று, மனோ விகாரங்கள் ஒன்றும் இன்றி, எல்லாம் ஸமமாய் இருக்கும். இந்நிலைமையே சூனியம் என்று நமது வேதம் சொல்லுகின்றது. இந்த நிலையின் உண்மை ரூபத்தை நன்றாய் நமக்குப் புலப்படுத்த வேதம், ஸ்வப்னமற்ற நல்ல தூக்க நிலையைத் திருஷ்டாந்தமாகக் காட்டுகின்றது.

இம்மாதிரியான சூக்ஷ்ம நிலையிலிருந்தே நமது பிரபஞ்சம் இவ்வளவு விசித்திரமாய் விரிந்து கிடக்கிறது. இதைச் சிலர் தமது அறியாமையால் சுத்த சூனியமென்றும், சுத்தக் குழப்பமான நிலை என்றும் எண்ணுகிறார்கள். முன் சொன்னவைகளை நன்றாய் அறிந்தோர்க்குப் பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமான மஹாப்பிரளய நிலையின் நிஜஸ்வரூபம் எளிதில் விளங்கும்.

செல்வச் சிறப்பு

THE VALUE OF WEALTH

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். — திருக்குறள்.

கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு செல்வமும் செல்வமெனப்படும். இவ்விரண்டினும் வன்மையும் மேன்மையும் பொருந்தியது இன்னதென்று ஆராயப்புகின், திருவெளச் செப்பலே தகுமென்பதற்குத் தடையில்லை. “இதென்ன விந்தையினும் விந்தை!

மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு.

என்று தமிழ் மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியார் மூதுரையில் மொழிந்திருக்கின்றனரே” என ஓர் கேள்விக்கிட முண்டாகலாம். இதற்கு மாறாக அவ்வம்மையார்,

“கல்லானே யானாலுங்
கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்
கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்
றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்”

என்றுங் கூறியுள்ளார் என்பதே சாலும். தர்மம், அர்த்தம், காமம், மோட்சமென்ற சதுர்வித புருஷார்த்தங்களை ஒருங்கே தரக்கூடியதும், புறங்கடையில் நற்கீர்த்தியை நாட்டவல்லதும், மனத்தைக் கிலேசப்படுத்துங் கவலை வந்தக்கால் அதனை விலக்க வல்லதுமாகிய கல்வியைக் கற்றற்கு நற்றுணையாயிருப்பது பொருளேயாம். எந்நூலாரும் நன்னூலார்க்கிணையில்லெனச் சிறப்பிக்கப்பட்ட பவணந்தி முனிவரும் “பொருள் நனி கொடுப்போன்” மாணாக்கனாதற்கு உரியனென உரைத்தனர். இக்காலத்திலெத்துணையோ ஏழைப் பிள்ளைகள் பணமில்லாததால் படிக்க முடியாது

பாடுபல அடைந்து பீடுபெறாமல் அல்லலுறுகின்றன ரென்பது அனைவரும் அறிந்த விஷயம். மேலும் இல்லறத்திற்கு இன்றியமையாத மனைவி மாண்புடையளல்லளேல் மணமகன் நல்லறம் எங்ஙனம் வியர்த்தமாகுமோ அங்ஙனமே எளியவர் கல்வி எத்துணை யதிகமா யிருப்பினும் தினைத்துணையும் சீர்மையும் சிறப்பு முடையதாகாது.

இராமபிரான் மந்தரையின் சூழ்ச்சிக்கிணங்கிய தன்சிற்றன்னைக் கைகேயியின் கருத்திற்கும், தந்தைசொல் மந்திர மொழிக்கும் மாறாமல், நாட்டைவிட்டு, காட்டையடையக் கருதிய காலையில், இலக்குவன் “இப்பூவுலக முழுவதும் பொருள் வழிப்பட்டதே! பொருளில்லான் உயிரில்லானுக்குச் சமானம். ஆதலின் நினக்குரிய அரசுரிமையை யிகழாது அதனைக் கைப்படுத்தலே கருதுவாயாக” என்றெடுத்தியம்பினனென்பது புராணப் பிரமாணம். இக்காரணம் பற்றியே “செய்க பொருளை” என்றனர் தெய்வப்புலவரும். கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வியென்பதைக் கருத்துட்கொண்டு சொன்ன கலையனைத்திலும் பற்பல பகல் பழகியறிந்த பண்டிதர் பலரும் பொருளை மிகப் படைத்த பிரபுக்களைச் சார்ந்து அவர்கள் “கல்லா மூடராயிருப்பினும் கற்றறிந்த கனவான்களே யென்றும், பொல்லாத மூர்க்கரேனும் நற்குணமுடைய நல்லோரே யென்றும், கொடுக்க மனமில்லாக் கருமிகளை வள்ளலே யென்றும், காடாளு மறவானாலும் நாடாளும் நராதிபதியே யென்றும்” வாய்க்கு வந்தவாறெல்லாம் வாழ்த்தி ஆக்கங்கருதி, பகைவரையும் பணிந்து நிற்பர். கரி (யானை) கவினுடைய ஓர் குட்டியை ஈனுமென்று நெடுநாள் நாடியிருக்க, கடைசியில் இலத்தி போட்டதுபோல் புலவரால் வரம்புகடந்து புகழப்பெற்ற பிரபுக்கள் அப்பாவலர்க்கு எள்ளளவேனு மீயாது இலவுகாத்த கிளிபோல் ஏமாறிப்போகும்படி யனுப்பியதும் நாவலர் “அடகெடுவாய்! பலதொழிலு மிருக்கக் கல்வி யதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்” என்று தங்களைத் தாங்களே நொந்துகொண்டு நெஞ்சம் புண்ணாகி முடிவில் “மாமியும் மருமகளும் ஸௌஜன்யமாயிருப்பது துர்லபம் பூமகளும் அவள் புதல்வன் நான்முகனது நல் இல்லாளாகிய நாமகளும் மாமி மருகியாதலின் இவ்விருவரும் ஒருவனிடம் ஏகோபித்திருப்பது அசாத்தியமான காரியம் என்ற கருத்தமைந்த,

“பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்து
அல்லலுழப் பதறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலர்ந்து” என்னும்

நாலடியார் செய்யுளை ஞாபகப்படுத்திக் கொண்டு ஒருவாறு தேறியிருக்கின்றனர்.

நெய்யோ தேனோ நிரம்பப்பெற்ற ஓர் பாத்திரத்தை ஈயும் எறும்பும் கிட்டாதாயின் வேட்டனமறு என்றிராமல் இடைவிடாது சுற்றி மொய்த்துக்கொண்டிருப்பது ஸகஜம். அதுவேபோல் இச்சிப்போர்க்கு இம்மியளவும் ஈயாது, எச்சிற்கையாலும் காகத்தையோட்ட மனம்பொறாத உலோபத்தன்மையுள்ள செல்வவான்களை யடுத்து யாவரும் தங்கள் தங்கள் குறைகளைக் கூறிக்கொண்டு, குற்றேவல் செய்து காத்திருப்பாரல்லவா?

“இன்சொல்லன் தாழ்நடைய னாயினும் ஒன்று (=பொருள்) இல்லானேல்-வன்சொல்லி னல்லது வால்திறவா-என்சொல்லினும் கைத்துடையான் காற்கீழொதுங்கும் கடல்ஞால” மென்பது குமரகுருபரசுவாமிகளது திருவாக்கு. ஆதலின் பொருளுடையானே புகழுடையான், செல்வமுள்ளவனே கல்வியும் வலியுமுள்ளவன், பணமுள்ளவனே படியா முட்டாளாயிருப்பினும் குணமுள்ளவனாகக் கருதப்படுவன், [illegible]வுள்ளானே நல் உருவுள்ளான். அவன் மொழியையே அனைவரும் வேதமொழிபோல் உச்சியிற் கொண்டு கொண்டாடுவர். புவியில் முன் கண்டறியாதவர்களும் பன்னாட் பழகினவர்போல் நேசமாவர், பகையாளியும் உறவாக விரு[illegible]வன். மட்டாருந் தென்களந்தைப்பதியி ல[illegible]தரித்த படிக்காசுப்புலவரும்,

"பணந்தானே யறிவாகும்,
பணந்தானே வித்தையுமாம், பரிந்துதேடும்
பணந்தானே குணமாகும்,
பணமில்லா தவர்பிணமாம் பான்மை, சேர்வர்
பணந்தானே பேசுவிக்கும்,
தண்டலை நீணெறியாரே! பார்மீதிற்றன்
பணந்தானே பந்தியிலே குலந்தானே
குப்பையிலே படுக்குந்தானே"

என வெகு அழகாய் விளக்கினர். பொருளில்லாதவன் எத்தகைய உயர்குடியிற் பிறந்து நற்குண நற்செய்கையையோ டிருப்பினும் அவனை எவரும் ஏளனஞ்செய்வர். இஃது உலகவியற்கையன்றோ?

இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. (திருக்குறள்)

பொருளுடையான் கண்ணதே போகம் அல்லாமலும் அறநெறியும் பிறவுமெல்லாம் பொருளிற் பிறந்துவிடும்.

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர். (நாலடியார்)

அஃதாவது ஒருவன் உலகத்தில் அவமதிப்பாகிய குற்றமில்லாது அத்தியாவசியம் அடைய வேண்டிய நிலைபெற்ற பொருள்கள் மூன்றுள. அவையாவன அறமும்பொருளும் இன்பமும். இம்மூன்றின் இடையே நின்ற பொருளை யொருவனடைய அதற்கு முன்னும் பின்னும் நின்ற அறத்தையும் இன்பத்தையும் பெறலாம். நடுவே நின்றதாகிய பொருளை யடையாதவன் கொல்லனுலையிலிட்டுக் காய்ச்சுவதனாலாகிய துன்பத்தையொத்த துன்பத்தை யடைவானென்பது திண்ணம்.

பூர்வம், காவிரிப்பூம்பட்டினத்து, கனதனத்தோடிருந்த மாசாத்துவான் மகன் கோவலன், தன் காதலி கண்ணகியுடன் வேந்தனேபோல் விருப்பியவண்ணம் உண்டுடுத்துப் பூசுவ பூசியும், அறவோர்க்களித்தலும், அந்தணரோம்பலும், துறவோர்க்கெதிர்தலும், தொல்சிறப்பின் விருந்தெதிர்கோடலுங் குறையாது நிறைவுடனே இல்லறத்தை இனிது நடத்திவருங் காலையில் ஓர்நாள் வினைவயத்தால் மாதவி யென்னும் விலைமாதை இச்சித்து, அவளுடன் கூடிச் சுகித்து, கையிலுள்ள பொருளையெல்லாம் தோற்று, ஓர்நாள் அக்காமக் கிழத்தியின் காதலில் ஐயுற்று, அவளை வெறுத்து, உடனே தன் பாரியை யடைந்து, தான் "வேண்டியபோ தின்பம் விளைக்கும் மடந்தை" மையலில் மயங்கி, செல்வத்தை யிழந்து, வறுமை யடைந்ததை யறிவுறுத்தி, அப்பூம்புகார்ப்பட்டினத்திருக்க நாணி, ஒருவருமறியாவிதம் நகரை நீங்கி, கால்நோவக் கைநோவ, காதலியுடன் காடு பல கடந்து, ஆறாத் துன்பமடைந்து, மதுரைப் பதியை யண்மி, ஆங்கோர் ஆயர்மனையிற் றங்கி, அவரது போருளால் ஒருவாறு ஆறுதலடைந்து, மட்கலத்திற் சமைத்துணவருந்தி, நல் உணவும் உடையும் உறையுளுமின்றி, வறுமைப் பிணியால் பெரிதும் பேதுற்றனென்பது சிலப்பதிகாரக் காதை. பொருளிருக்குமானால் இன்பமும், அஃதில்லாது போனால் துன்பமும் எய்துதல் நிச்சயம். "பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" யென நாயனார் கூறியதை நாளும் மனத்துட்கொண்டு, பொருளை ஈட்டுதலுந் துன்பம், காத்தலுங் கடுந்துன்பமென்றிருப்பினும், பாடுபட்டால்தான், பிறகு சுகமனுபவித்தல் கூடுமென்பதை மறக்காமல் எல்லோரும் பொய் புரட்டு மோசம் முதலியன கடிந்து நல்வழியில் பொருளை மிகத் தேடி, அதனை மேன்மேலும் விருத்தி பண்ணி, தாங்களுமனுபவித்து, தளர்ந்துபோன சுற்றத்தார்களை ஆதரித்து, உத்தம பாத்திரர்களுக்கு உவப்புடன் உதவி இன்பமும் புண்ணியமும் கீர்த்தியும் பெற்றுச் சுகித்திருப்பதே மேல்.

திரைகடலோடியுந் திரவியந்தேடு என்ற ஔவை வாக்கைக் கடைப்பிடித்து பலரும் தங்கள் நாடுநகரம், உற்றார் பெற்றார், மனைவி மக்கள், ஸகலரையும் விட்டுப்போய் அந்நிய ப்ரதேசங்களிற் சென்று எவ்வழியோ பணத்தைத் திரள் திரளாகப் பெற்று சொந்த நாடு வந்ததும், "ஜாதியாசாரம், குலாசாரம் பறந்தே போயின இவனிடத்தில்" என்று எவர் ஏசிப் பேசினும் பொருளென்னும் போர்வையால் தாழ்வையெல்லாம் உள் மறைக்கின்றன ரென்பதை உலகமறியும். இனி,

"குன்றேறிய யானைப்போர்கண்டற்றாற் றன்கைத் துண்டாகச் செய்வான் வினை"—திருக்குறள் [தொன் பயங்கரமான யானைச்சண்டையை நிலத்தினின்று ஒருவன் அச்சமும் வருத்தமுமின்றிக் காணமுடியாது. அவன் குன்றேறி நின்றால் கிஞ்சித்தேனும் வருத்தமில்லாது எளிதில் காணக்கூடும். அதுபோலக், கைப்பொருளுடையான் அருமையும் பெருமையும் வாய்ந்த ஓர் காரியத்தைச் சிறிதேனும் இடையூறில்லாமல் வல்லாரை யேவித் தான் இனிதிருந்து முடிக்கும் சிறு வயதிலேயே இல்வாழ்க்கையை வெறுத்து, துறவறத்தை மேற்கொண்ட திருத்தக்க தேவரும் ஐம்பெருங் காப்பியங்களிற் சிறந்த சீவக சிந்தாமணியில்

செய்க பொருள்யாரும், செறுவாரைச் செறுகிற்கும்
எஃகு பிறிதில்லை, இருந்தே உயிரையுண்ணும்
ஐயமிலை, இன்பமற ளுடைவயு மாக்கும்
பொய்யில்பொருளே பொருள் மற்றல்லபிறபொருளே!

என்று விரிவாய் விளக்கிக் காட்டினர்.

யாவரும் பொருளைத் தேடவேண்டும். தேடினால் பகைவரைக் கொல்லும்படை அதனையொழிய வேறில்லை. தான் இருந்தவிடத்திருந்தே பகைவரை வாட்டும். அல்லாமலும் தான் உளவாக, இன்பத்தை யனுபவித்தற்குச் சந்தேகமில்லை. மேலும் அறத்தோடே முற்கூறியவற்றையும் ஒருங்கே உண்டாக்கும் மெய்யாகிய பொருளே பொருள்! ஒழிந்த பொருள் நன்கு மதிக்கும் பொருளல்ல.

"ஈட்டி எட்டினவரையில் பாயும், பணம் பாதாளவுலகம்வரையில் பாயும்" இது தொன்றுதொட்டு வழங்கிவரும் பழமொழி. பலபல உரைத்தென்? முடிவில் அருளை யுடையானே மேலுலகத்தை யடையலாகும். அத்தகைய அருளை யடைய அநுகுணமாயிருப்பது அனைத்துயிரும் விரும்பும் பொருளேயாமென்பதை யாவர் மறுக்க வல்லார்?

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு."

எஸ். சுப்பிரமணிய ஐயர்.

ஸ்தலசரித்திரக் கதைகள்

STORIES FROM LOCAL HISTORY

டேனிஷ் தரங்கம்பாடி

THE DANISH TRANQUEBAR

தரங்கம்பாடி மாயூரத்திற்கு தென்கிழக்கில் சுமார் பதினெட்டு மயில் தூரத்திலுள்ள ஓர் துறைமுகப்பட்டினம். இது ஆங்கிலேய ஆளுகைக்குள் வந்து சுமார் 67-வருஷங்களாகின்றன. இதற்கு முன் டேன்ஸ்காரர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் காலத்தில் இது மிகவும் சிறப்புற்றோங்கி விளங்கியது. இங்கிலீஷ்காரர்களிடம் வந்து சுமார் முப்பது நாற்பது வருஷங்கள்வரையில் இதன் சிறப்பு அதிகமாகக் குன்றவில்லை. தஞ்சாவூர் ஜில்லாவின் தென் பாகத்தின் டிஸ்ட்ரிக்டு கோர்ட்டு இவ்விடத்திலிருந்தது. ஒரு சகிண்டு கிரேட் காலேஜும் பாதிரிமார்களால் இவ்விடத்தில் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

ஆனால் இப்போது இதன் பெருமை குறைந்து போயிற்று. அதற்குக் காரணங்களை இவ்விடத்தில் எடுத்துச் சொல்வது அனாவசியம். பழய காலத்துப் பெருமையை ஜனங்கள் மறவாமலிருக்கும்பொருட்டு, இவ்விடத்தில் டேன்ஸ்காரர்களால் கட்டப்பட்ட 'டேன்ஸ்பர்க்' என்ற கோட்டையையும், இன்னும் சில முக்கிய கட்டடங்களையும், அழிந்துபோகாமல் நமது சென்னை கவர்ன்மெண்டார் காப்பாற்றிக்கொண்டு வருகிறதற்காக நாம் அவர்களுக்கு எவ்வளவோ நன்றியறிவுள்ளவர்களாக விருக்கவேண்டும்.

டேன்ஸ்காரர்கள், போர்ச்சுகீஸ், டச்சு, பிரஞ்சு, இங்கிலீஷ் முதலிய ஐரோப்பியர்களைப் போலவே, வியாபாரஞ் செய்யும்பொருட்டு 1620-ஆம் கி. பி. யில் முதல் முதல் இந்தியாவிற்கு வந்தார்கள். கீழ் சமுத்ரக்கரை (அல்லது சோழமண்டலக்கரை = Coramandal Coast) யில் வந்து இறங்கினார்கள். அக்காலத்தில் தரங்கம்பாடி ஒரு குக்கிராமமாக விருந்தது.

டேன்ஸ் கப்பல் தலைவராகிய ஓவ்ஜெட்டி என்பவர் தரங்கம்பாடி கிராமத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள இன்னம் சில கிராமங்களையும் அக்காலத்தில் தஞ்சாவூர் ராஜ்யத்தை ஆண்டுவந்த நாயக்க அரசனிடமிருந்து வாங்கினார். சிறிது காலஞ் சென்றபின் இக்கிராமங்களெல்லாம் சேர்ந்து ஒரு சிறு பட்டணமாயின. வியாபாரம் பலமாய் நடந்துவந்தது. தரங்கம்பாடியில் துறைமுகம் (Harbour) இல்லாதிருந்தும், கப்பல்கள் அதிகமாக வந்து தங்கின. இதற்கு முக்கிய காரணமென்னவென்றால் சென்னை, புதுச்சேரி முதலிய பட்டணங்களைக் காட்டிலும் இவ்விடத்தில் அலை மட்டு (தரங்கம்—அலை, பாடி—பட்டணம்) கப்பல்கள் கரைக்கு சமீபத்தில் நங்கூரம் பாய்வதற்குச் சமுத்திரமும் வேண்டிய ஆழமுடையதாக விருந்தது. கப்பல் தலைவராகிய ஓவ்ஜெட்டி என்பவர், 'டேன்ஸ் பர்க்' என்ற கோட்டையும் கட்டி, கோட்டையிலுள்ள ஜனங்களைக் காப்பாற்றும்பொருட்டு அதைச் சுற்றிலும் மதில் சுவர்களும் எழுப்புவித்தார்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்



தரங்கம்பாடி டேனிஷ் நாணயங்கள்

தில் இங்கிலீஷ்காரர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் நடந்த சண்டைகளில்முதலில்டேன்ஸ்காரர்கள் ஒரு கட்சியிலும் சேராமலிருந்தபடியால் அவர்களுக்கு அச்சண்டைகளால் யாதொரு விதமான கஷ்ட நஷ்டங்களில்லை. பிறகு கொஞ்ச காலத்திற்குள் இவர்கள் இங்கிலீஷ்காரர்களுக்கு விரோதிகளானார்கள். ஆகையால் 1808ஆ கி. பி. யில் தரங்கம்பாடியும், பங்காளத்திலுள்ள மற்றொரு டேன்ஸ் பட்டணமாகிய சிராம்பூரும் இங்கிலீஷ்காரர்களால் பிடிக்கப்பட்டன. மறுபடியும் 1815ஆ கி. பி. யில் டேன்ஸ்காரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

இந்தச் சண்டைக்குப் பிந்தி டேன்ஸ்காரர்களுடைய அதிர்ஷ்டம்குறைய ஆரம்பித்தது. முன் பலமாய் நடந்த வியாபாரம் இப்போது அனேகமாய் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. இங்கிலீஷ் ராஜ்யத்திலிருந்து சிற்சில காலங்களில் நெல்லும் பதனிடாத மிருகத்தின் தோலும் கொண்டு வரப்பட்டு பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பின்பு தரங்கம்பாடியில் விளைந்த நெல் அங்குள்ள ஜனங்களுக்குச் சாப்பாட்டிற்குப் போதாமையால், தரங்கம்பாடிக்கே நெல் அதிக

மாக இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. சர்க்கார் வரும்படியும்குறைந்துபோய்விட்டது. பாதிச் செலவிற்குக்கூட கட்டவில்லை. ஒருவருஷ வரும்படி சுமார் முப்பதினாயிரம் ரூபாய்க்கு அதிகப்படவில்லை. டேனிஷ் கவர்ன்மெண்டார் வருஷா வருஷம் தஞ்சாவூர் ராஜாவிற்கு இரண்டாயிரம் வராகன் கப்பமுங் கட்டவேண்டியிருந்தது.

ஆகையால் டேன்ஸ்காரர்கள் 1845ஆத்தில் தரங்கம்பாடியும், சிராம்பூரையும் இங்கிலீஷ்காரர்களிடம் விற்றது ஒரு ஆச்சரியமான காரியமல்ல.

இத்துடன் டேன்ஸ் தரங்கம்பாடியின் சரித்திரம் முடிவுபெற்றது. தற்காலத்து ஜனங்களுக்குத் தரங்கம்பாடியில் 200 வருஷங்களுக்கு மேல நிகழ்ந்தப்பட்ட டேன்... கையை ஞாபகப் படுத்துவது. இப்போது ...ங்குள்ள 'டேன்ஸ் பர்க்' என்ற கோட்டை... வரவர இடிந்து கொண்டுவருகிற டேன்ஸ்காரர்களால் கட்டப்பட்ட வீடுகளுமே. இனிமேல், டேன்ஸ் அரசாட்சியைப்பற்றி கொஞ்சம் சொல்லுவோம்.

டேன்ஸ் அரசாட்சி

டேன்ஸ் கவர்ன்மெண்டார் தங்கள் ஹிந்து ...ரஜைகளிடத்தில் அதிக மரியாதையும் அபிமானமும் பாராட்டி வந்தார்கள். குடிகள் நடவடிக்கையைப்பற்றிய ஒவ்வொரு விஷயமும் ஒழுங்காயிருக்கும்பொருட்டுச் சட்டங்கள் ஏற்படுத்தினார்கள். ஏற்றுமதி, இறக்குமதி, கைத்தொழில் சாமான்கள் வரி போடப்பட்டன. குடும்ப உபயோகத்திற்காக நெய்யப்பட்ட வஸ்திரங்களுக்கு வரியில்லை. வண்ணான்கள் முத்திரைபோடாத நார்வஸ்திரங்களையாவது சீட்டித்துணிகளையாவது சலவை செய்தால் அவர்களுக்கு அடி முதலிய சிட்சைகளுண்டு. செக்கொன்றுக்கு வருஷா வருஷம் ஒன்பது பணம் வரி. ஒருவரும் உப்பு செய்யக்கூடாது. புகையிலை, பணம், நெல் முதலிய வியாபாரம் ராஜாங்கத்தாரின் சுதந்தரம். ஒவ்வொருவரும் பிரதேசத்துசுருட்டுகளில் ஒன்றுக்குமேல் வைத்துக்கொள்ளக் கூடாது. லைசென்ஸ் பெற்றவர்கள் உபயோகமற்ற புகையிலையை விற்கக் கூடாது. அப்படிச் செய்வதை உத்தியோகஸ்தர்கள் கண்டுபிடித்தால், மேற்படி புகையிலை ராஜாங்கத்தாருக்குச் சேர்க்கப்பட்டு கடலில் எறியப்படுவதுமன்னியில், லைசென்ஸ்காரனுக்கு அபாரதமும் போடுவதுண்டு. பணத்திற்குச் சில்லரை வேண்டியிருந்தாலும், அல்லது சில்லரைக்குப் பணம் வேண்டியிருந்தாலும் லைசென்ஸ்பெற்றவர்களிடத்தில்தான் வாங்கலாம். ஒரு பணத்தை மாற்றினால் 80 காசுதான் கிடைக்கும். ஆனால் ஒருபணம் வேண்டியிருந்தால் 84 காசுகொடுத்துதான் வாங்கவேண்டும். ...ஞ்ச காலங்களில் இதர தேசங்களுக்குத் தானியம் ஏற்றுமதி செய்யக் கூடாது. அகவிலை மிகவும் தூக்கிவிற்கிற தற்காலத்தில் நமது கவர்ன்மெண்டார் இவ்விதம் உத்திரவு செய்தால் ஏழை ஜனங்களுக்கு எவ்வளவோ உபகாரமாயிருக்கும்.

மதஸம்பந்தமான விஷயங்களில் கவர்ன்மெண்டார் தலையிடுகிறதில்லை. மகசூலில் நூற்றில் ஐந்துபாகம் ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் கோவில்களுக்குக் கொடுக்கவேண்டும். சமாதானத்தை நிலைநிறுத்தும்பொருட்டு, ஜாதிபேதங்களினாலுண்டாகிய சண்டைச்சச்சரவுகளில் கவர்ன்மெண்டார் தலையிட்டு அவைகளைத் தீர்ப்பது வழக்கம். ஊரில் கட்சியிருந்தால் இருதிறத்தாரும் ...ன்றாய்ப் போகிறவரையில் உற்சவங்கள் ஒன்றுஞ் செய்யக்கூடாது. அடங்காப் பிடாரி கூட்டங்கள் ஒன்றும் கூடாமல் கவர்ன்மெண்டார் தடுப்பதுண்டு. ஜாதியார்களுக்குள் ஏதாவது தகவலுண்டானால் ஒவ்வொரு ஜாதிக்குரிய நாட்டாமைக்காரன் மட்டும்போய் கோர்ட்டுகளில் வேண்டிய நடவடிக்கைகளை நடத்தவேண்டியது,

நியாய பரிபாலனம்

டேன்ஸ் தரங்கம்பாடியில், ஐரோப்பியர்களுக்கு ஒரு நியாய ஸ்தலமும், சுதேசிகளுக்கு ஒன்றும் ஆக இரண்டு நியாய ஸ்தலங்களிருந்தன. ஐரோப்பிய நியாய ஸ்தலத்திற்கு 'டவுன் கோர்ட்டு' என்றும், சுதேசி நியாய ஸ்தலத்திற்கு 'ப்ளாக் கோர்ட்டு' என்றும் பெயர். டவுன் கோர்ட்டு நியாயாதிபதிகள் ஐரோப்பியர்கள். ப்ளாக் கோர்ட்டு நியாயாதிபதிகள் சுதேசிகள். டவுன் கோர்ட்டில் செலவு அதிகம். ப்ளாக் கோர்ட்டில் குறைவு. ஐரோப்பியர்களுக்கும், சுதேசிகளுக்கும் தகவலுண்டானால், ஐரோப்பியர்களை ப்ளாக் கோர்ட்டில் விசாரணை செய்வது வழக்கம். இதனால் டேன்ஸ் கவர்ன்மெண்டார் சுதேசிகளின் க்ஷேமத்தையே கருதினார்களென்று நன்றாய்த் தெரிகிறது. ஹிந்து சட்டங்கள்படிக்கும், வழக்கங்கள்படிக்கும் ஹிந்துக்களால் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்கள் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு செய்யப்பட்டன. கடன் கொடுத்தவர்கள் கடன்காரர்களிடமிருந்து தங்கள் தொகையைச்சட்டப்படி வசூல் செய்யவேண்டுமே தவிர, அவர்களை யாதொருவிதமாயும் ஹிம்ஸிக்கக்கூடாது. 1816 ஆ கி. பி. யில் சுதேசிகளினிஷ்டப்படி ப்ளாக் கோர்ட்டு எடுபட்டுப் போய்விட்டது. டவுன் கோர்ட்டில் சுதேசிகளின் வியாச்சியங்களை தீர்க்கும்பொருட்டு ஆறு சுதேசி ஜூரிகள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களில் இரண்டு பேர் ஹிந்துக்கள், இரண்டு பேர் மகம்மதியர்கள், மற்ற இரண்டுபேரும் சுதேச கிறிஸ்துவர்கள். டேன்ஸ் சட்டங்கள் திருடர்களுக்குச் சரியான தண்டனைகள் விதிக்காமையால், திருடர்களை நியாயாதிபதிகள் தங்கள் இஷ்டம்போல் தண்டிக்கலாம். அப்பர்களுக்குச் சர்க்கார் தகுந்த வெகுமதி கொடுக்கிறதுண்டு.

கிராம பரிபாலனம்.

கிராமங்களுக்கு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும், மூன்று சார்ஜியண்டும், பதினான்கு சேவர்களுமுண்டு. கிராம முன்சீப்புகள் தெருக்களிலும், பப்ளிக் ரஸ்தாக்களிலும், புறம்போக்கு நிலங்களிலும் குடிகள் ஆக்ரமிக்காமலிருக்கும்படி பார்த்துக்கொள்வதுடன் பாய் வாய்க்கால்களையும் கவனித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியது.

முனிசிபல் பரிபாலனம்

டேனிஷ் தரங்கம்பாடியின் முனிசிபல் பரிபாலனம் மெச்சத்தகுந்தது. ரோட்டுக்கள் பழுது பார்க்கப்படும் சமயங்களில் வண்டி வைத்திருக்கிறவர்கள் ஒவ்வொருவரும் வாரம் ஒரு முறை ஒரு வண்டியும், ஒரு வேலைக்காரனும் முனிசிபாலிட்டியாருக்கு [illegible]ப்பவேணும். கிரிமினல் கோர்ட்டுகளில் விதிக்கப்பட்ட அபராதத்தொகை ரோட்டு ரிபேருக்காகவே செலவிடப்பட்டன. ஜனங்கள் தங்கள் வீடுகளைப் பழுதில்லாமல் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது. தெருக்களில் குப்பைகளையும், எச்சிலிலைகளையும் எறியக்கூடாது. சாக்கடைக் குட்டைகள், தெருக்கள், இளப்புகள் அதிகாரிகளால் நன்றாய்க்கவனிக்கப்பட்டு வந்தன. தெருக்களில். எஜமானில்லாத அலைந்துதிரிகிற நாய்கள் அடிக்கப்பட்டன. தெருக்களில் பாணவேடிக்கைகள் செய்யக்கூடாது. குஷ்டரோகிகள் தெருக்களில் நடமாடுவதைப் போலீஸார் கண்டால், உடனே அவர்களைப் பிடித்து டவுனுக்கு அப்புறம் கொண்டு போய்த் தள்ளிவிடுவது வழக்கம்.

G. ரத்னம் பிள்ளை, பீ. ஏ., எல். டி.

நமது சந்தாநேயர்களுக்கு:—சந்தா நேயர்கள் கடிதம் எழுதும் போதும் சந்தாத்தொகை அனுப்பும்போதும் தமது விலாசத்துக்கு எதிரேயிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண்காலதாமதமாகும்.

மானேஜர், 'விவேக போதினி'

சிற்றாறு

THE BROOK

கல்மேலும் மலைமேலும்
'கடகட'வென் றோடிச்
செல்வேன் ; என் பெருமையினைச்
சிறுவர்களே ! கேளீர். (1)

வெள்ளமாய்ப் பெருகுவேன் ;
மேலேநுரை சுமப்பேன் ;
பள்ளமாம் இடத்திற்கே
துள்ளிநான் செல்வேன். (2)

புல்லாலும் பூவாலும்
போகுமிடம் எங்கும்
எல்லாரும் அதிசயிப்ப
ரத்னகம்பளம் † விரிப்பேன். (3)

பாலத்திற் குள்ளேநான்
பாய்ந்துசெல்லு கின்ற
காலத்தில் அலை, குமிழி
காட்டிக்கண் பறிப்பேன். (4)

அரித்தரித்தே ஓடுங்கால்
ஆதவன் ‡ தன் ஒளியை
விரித்தென்மேல் வீசுவன் ; நான்
சிரித்தவற்றைப் பிடிப்பேன். (5)

கால்கள்பல வாய்ப்பிரிந்து
கழனிகட்குள் புகுந்தே
நால்விதமாம் பயிர்விளைத்து
நவதானியம் கொடுப்பேன். (6)

எத்தனையோ ஜாதிமீன்கள்
என்னுள்ளே தங்கித்
தத்திவிளை யாடுதற்குத்
தக்கவிடம் ஆவேன். (7)

குளித்திடவும் குடிக்கவும்நீர்
கொழிக்கும்போ தன்றிக்
குளத்தில்நீர் நிரப்பிப்பின்
கோடைக்கும் ஆவேன். (8)

குளங்குட்டை கிணறுபல
கூடியிருந் தாலும்
வளங்கெட்ட தன்றோநான்
மகிழ்ந்தோடா ஊர்தான். (9)

எப்போதும் என்னைப்போல்
யார்க்கும்நன்மை செய்தே
நற்போது போக்குங்கள் ;
நான்போய்வரு கின்றேன். (10)

வே. முத்துஸாமி ஐயன், பி. ஏ., எல். டி.

ஆலன் ஓ ஹியூம்

ALAN O. HUME

"சொல்லுதல் யார்க்கு மெளிய; அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்" —திருக்குறள்.

அரிய விஷயங்களை எடுத்துரைத்தல் மனவலிமை யில்லாதவர்க்கும் முடியும். ஆனால் மனத்திலாழ்ந்து உண்மைத்திறனோடு அறிந்து அதனை ஆராய்ச்சியாற் கடைந்து திரண்ட அபிப்பிராயத்தையும் பாவங்களையும் எடுத்துரைப்பதும் ஸாத்யமாகும். அது வீணே மனோராஜ்யம் செய்ததனையே ஒக்கும். பாவைக்குயிர் விளங்குமாயின் எவ்வாறோ அவ்வாறு எண்ணிய விஷயத்தைச் செய்கையிற் செய்யக்கூடிய தன்மை பொன்மலர் நாற்றமுடைத் தென்பதேயாகும். எண்ணங்களென்னும் வேரோடி தமது ஊக்கமென்னும் நீர்விட்டுவளர்க்கு மரத்தில் கருமபலம் இன்றேல் யாவும் வேரோடறும். ஆகையால் வீணே சொல்வதுடனில்லாது தமது மனத்தில் விளங்கிய எண்ணத்திற் குயிர் கொடுத்துத் தாமெடுத்த கருமத்தை முடிப்பதே பெரியோர் கருமம்.

"எண்ணித் துணிக கருமம் எண்ணியபின்-எண்ணுவ மென்பதிழுக்கு" என்னும் கோள் கொண்டு விளங்குமவாது செயல் யாவர்க்கும் ஊன்றுகோலாகி மனத்தளர்ச்சியைக் கடக்கு முதவியாய் விளங்கும். மற்றக் கருமத்தையே மதமாகக்கொண்டு தன்னுயிரை இந்தியாது உயர்

* தென்னிசன் பிரபு (Lord Tennyson) என்னும் ஆங்கிலக் கவிவாணர் இயற்றியுள்ள The Brook (சிற்றாறு) என்னும் செய்யுட்களில் ஈடுபட்டு, ஆங்காங்கு அவற்றின் கருத்துக்களை யமைத்தும், பெரும்பாலும் அவற்றின் போக்கைத் தழுவியும், இவை சிறுவர்கள் கற்றுணர்ந்து களிக்கும்படி எளிய நடையில் எழுதப்பட்டன. † ரத்னகம்பளம்-'பச்சைப் டவேல்' என்றிருக்கும் டகப்புல் தரையை இப்படிச் சொல்லியிருக்கிறது. ‡ ஆதவன்-சூரியன்.

விற்கர்ப்பணஞ்செய்த ஆலன்-ஓ-ஹியூ மென்பவரது. வாழ்க்கைச் சுருக்கங்காண விரும்பாதார் யார் ?

தனது வியோகத்தால் இந்திய நாடு முழுதும் தன்னுப்த மித்ரனை இழந்து கவலையில் ஆழ்ந்து விளங்கவும், தனதுநேசர்கள் உண்மைத்தோழனையிழந்து கடக்கமுடியாத் துன்பத்தில் மயங்கிக் கலங்கவுஞ் செய்த இந்த மஹான் 83-வருஷங்களிற்கு முன் இவ்வுலகில் உதயமானார். இவர் தந்தை இந்திய வைத்ய ஸர்வீஸில் அமர்ந்து, பின் பென்ஷன் பெற்று பொதுஜன மந்திர ஸபை (House of Commons) யின் அங்கத்தினராக வந்தனர். அவர் அடங்கா மனமும், உண்மை ஊக்கமும், ஒடுங்கா முயற்சியும், நடுங்கா இதயமும் கொண்டு பெரிய புகழோடு விளங்கினார். இவரது மகனும் தன் தந்தையின் குணங்களை, "பித்ருஸ்ச ஸதகுண: புத்ர:" என்றவாறு பதின்மடங்காயடைந்து 1849-௵ இந்திய வங்காள ஸிவில் ஸர்வீஸைச் சேர்ந்து இந்திய ஸமூகத்தொடு கலந்து வாழும் தன்மை அடைந்தனன். வடமேற்கு மாகாணங்களில் கலெக்டராக முதலில் இருந்தனர். இடாவாவில் இருந்த காலத்தில் இவரது உயர்தரமான செய்கைகளுக்காக யார்க்கும் பெறலரிய "ஸி. பி." என்னும் பட்டம் இவர்க்களிக்கப்பட்டது. சில நாள் கடந்து சுங்கத்தலைமை (Commissioner of Customs) வஹித்துப் பின் இந்தியராஜாங்கத்தின் உழவு, கிஸ்து, வியாபாரம் என்னும் இலாகாக்களின் காரியதரிசியாகக் கனம் மேயோ பிரபுவால் ஏற்படுத்தப்பட்டார். இந்த வேலையை வஹித்தகாலத்தில் இந்திய நாட்டின் நிலைமையின் உண்மையை யறிய உழைத்தனர். நல்ல ஸமயமும் அவர்க்கு வாய்த்தது. இதனால் 1879௵ இவர் வடமேற்கு மாகாணத்தின் ரெவின்யூ போர்ட் மெம்பராக ஏற்படுத்தப்பட்டு அவ்வேலையிலிருந்து 1882௵ பென்ஷன் பெற்றுக்கொண்டு தன் நாளில் சிலநாள் இந்தியாவிலேயே இருந்து இந்தியரோடு கூடி வாழ்ந்தனர்.

இவ்வாறு இருக்குநாளில் இந்தியர்களது நிலைமையை நினைத்து அவரை ஒருங்குகூட்டி நன்னிலைக்கு கொண்டுவரவேண்டுமென்னும் எண்ணம் இவர்க்கு உதிக்கலாயிற்று. பின் மனத்துணிவடைந்ததும் இந்தியரை ஒருங்குகூட்டி "இந்திய மஹாநாடு" என்னும் பெயரொடு விளங்கிய "இந்திய ஜாதிக் கூட்ட" த்தை ஸ்தாபிக்க முயன்றனர். அக்கூட்டத்திற்கு முதலில் இவரே காரியதரிசியாக இருந்து தனது அநுபவத்தையும் சக்தியையும் அதற்குதவி செய்ய இடம் கொடுத்தனர். அதைத்தினேதினே விருத்தி யடையும்படி ஸமயோசித புத்தியும் யுக்தியும் ஜனங்களுக்குப் போதித்தனர். இதை முடிவுபெறச் செய்ய அக்காலத்து (1884) வைஸிராயாக விருந்த டப்பரின் பிரபு வுடன் ஆலோசித்து, ஆள்பவர் ஆளப்படுவர் இருவரும் கலந்து மனங்கலந்தாலன்றி ராஜாங்கத்திற்கு உண்மையில் கஷ்டமில்லாமலிருக்க முடியாதென்று அவர்க்கெடுத்துரைத்து, வருஷந்தோறும் இம்மஹா நாடு, இந்திய பொதுஜனங்களின் பிரதிநிதிகளால் ஆகிய இக்கூட்டம், நடத்தப்பட வேண்டுமென்றுங் கூறி பம்பாயில் முதல் கூட்டம் கூடும்படிச் செய்வித்தனர். இவரே இந்திய ஸமூஹத்திற்கு மேனாட்டு ராஜாங்க தந்திரத்தின் வகைகளை அறிய மனம் ஊட்டியவராகும். இது விஷயங்களில் இவரை ஏளனஞ்செய்தவருமுண்டு. அவர்களைத் தனது நாவென்னு மாவெட்டியா லடக்கிக்கூட்டத்தின் விருத்தியை வளர்க்கவே உழைத்தனர். புதிதாய்க் கிளம்பிய இந்தியக் கூட்டக் கப்பல், மாலுமியின் மூடத்தனத்தால்சுற்றுக்காது ஓடத்தானே அதன் சுக்கானைக் கைக்கொண்டு சிலநாள் அக்கூட்டத்தின் உண்மை மாலுமியாக இருந்தனர்,

அவரது செயலில்லையேல் இந்திய மஹாநாடு என்னும் சப்தமே இவ்வூரிலிருந்திராது. இந்திய காங்கிரெஸ்ஸின் வளர்ச்சிக்காக வினா விடை மாதிரியாகப் பல கதைகளை எழுதி ஜனங்களை ராஜாங்கதந்திரத்தின் உண்மையறியவும் உழைத்தனர். தான் பேசும்பொழுதெல்லாம் இந்தியர்க்குப் புத்திமதி கூறி இதஞ்செய்வர். கீழ் நாளில் அவர் உதவியில்லாதிருந்திருப்பின் நமது காங்கிரஸ்ஸும் உயர்ந்தநிலைக்கு வந்திருக்க முடியாது. இரவும் பகலும் ஒழியாது இந்தியற்காக உழைத்தனர்.

இவர்இந்தியக்கூட்ட மொன்றிற்கே தகப்பனாக விளங்கவில்லை. இவர் உண்டாக்கிய ஜாக்கிரதையால் ஜனங்களின் மூடிய கண்கள் திறக்கப்பட்டு, கூட்டங்கூடி அபிப்பிராயத்தை வெளியிடும் மேனாட்டுத் தன்மையை அவர் அடைந்தனர். ஜனங்களின் சுறுசுறுப்பிற்கே காரணமாகி அவர்களது நடையை ஒழுங்குபடுத்தும் தன்மையில் விளங்கினார்.

இவர் பேசியபொழுதெல்லாம் இந்தியர்க்கு ராஜாங்கத்திடை பக்தியும் விச்வாஸமுமே விருத்திசெய்தனர். ராஜாங்கத்தார்க்கு ஜனங்களின் அபிப்பிராயத்தை காது கொடுக்கவேண்டுமென்றுணர்த்தினா. ஜனத்தையும் ஆள்பவரையும் சேர்த்து மனத்தில் கலக்க முயற்சித்தனர். தனது அநுபவ ஞானத்தால் ஜனங்களிற்கு ஊக்கக் குறைவு வந்தகாலத்து தேற்றியும் அவர் தவறிய இடத்து வழியைக் காட்டியும் வந்தனர். பேச நேர்ந்த காலமெல்லாம் இதையே உபந்நியஸிப்பர். முதலில் ஜனங்களின் இயக்கத்தை உண்டாக்கிய காலத்தில் இவர் பேசியது இன்னமும் இப்பொழுது பேசியவிதமே இருக்கின்றது : அஃது வருமாறு: —

"இவ்விஷயத்தில் யான் விளையாடவில்லை; யான் கூறுவது என் முழு நம்பிக்கையுடன்தான். இதற்காக என்மனோபாவத்திற்கியைந்த சாஸ்திரப்பயிற்சியை எல்லாம் துறந்தேன் ; இதற்காக என் உளமும் பொருளும் தத்தம் செய்திருக்கிறேன் ; இதற்காக என் பிராணனையும் கொடுக்கிறேன். ஏனென்றால், இந்த இயக்கத்தின்வெற்றியில்தான்—கொஞ்சமல்ல நெஞ்சமல்ல—கணக்கிற்கடங்காத அநேக கோடி ஜீவராசிகளின் நன்மையும், இந்நாட்டினது மாத்திரமன்றி ஆங்கில நாட்டின் வளமையும் சீரும் செம்மையும் பெருமையும் நிலைத்திருக்கின்றன."

மற்றும் தமது பிரசங்கங்களில் இந்திய ஸமூஹம் தமது தர்மத்தை யுணர்ந்து ஜனஸங்கவிதமாக மேனாட்டுப் பரிசோதனைக்குற்ற ஜன இயக்கமூட்டி வாக்சனையைப் பெற்றுத் தமது எதிரிகளை நயமாகப் பாராட்டவேண்டுமென்றும் கூறியுள்ளார். வேறோரிடத்து இந்தியர் நம்பிக்கைக்குவந்த பாத்ரமல்லவென்று வற்புறுத்தினார். இதை அவர் ஒழிக்க முயலவேண்டுமென்று கூறினார். எல்லாரைப்பற்றியும் கவனம் வைத்துக் கொண்டு அதனால் தனக்கு ஸௌகர்குறையினும் அதைப் பொறுமையுடன் பெறவேண்டுமென்று இன்னமோர் இடத்தில் புகன்றனர். பொறுமை வேண்டுமென்று போதித்தனர்.

1895-ம் வருஷத்து காங்கிரஸ்ஸிற்கு மேல்வருமாறு எழுதினார்:—

"விடாமுயற்சி, ஒற்றுமை, தைர்யம், நன்மதி என்னும் நாற்பாங்கு சவுக்கங்கொண்ட ஆய்தத்துடன் எதையும் அடைய விரும்புங்கள். நான் சொல்வதை நம்பும். இப்படையோடு நீங்கள் வெளிச்சென்றால் உம்மதே ஜயம். முதலில் இருண்ட இருளைக்கடப்பதன்றிக், கொடுங்குளிரைத்தடுப்பதன்றி, வரவர ஒளிபரந்து, அருணன் விசாலித்து, கிரணங்கிளம்பிச் சூரியன் வெளிவந்து, மனுஷன் அடைய விரும்புவதும் மூவாமுதல்வன் கொடுக்கக்கூடிய யாவும் மனோஹரமாக ஆனந்தத்துடன் பெறலாகும். "

ஹியூமவர்கள் எப்பொழுதும் உபந்நியாஸித்தது ராஜாங்க பக்தி, சாந்தம் இவை மூலமாகச் செய்யும் இயக்கமேயாம். மனோராச்சியத்தின் மிகையால் வெளிவரும் கொடுமியக்கமன்று. இந்தியர் ஆங்கிலராஜ்யத்தின் அங்கத்தி லொன்றென்றெண்ணலே அவர்க்கு ஸுகமென் றுரைத்தனர். இவர் இருவரும் ஒருவரைவிட் டொருவரகலமுடியாத பந்தமடைந்துள்ளவர்கள் என்று கூறியதன்றி பலநாள்களுக்குமுன் அவர் பொம்பாயில் செய்த உபந்நியாஸமும் கவனிக்கத்தக்கது.

“ உலக ஸுகத்திற்காக எல்லாச் சொந்த ஸுகங்களையும் வழிப்படுத்தும். உம்முடைய இயக்க முழுதையும் நிறுத்தும்; யாவரும் ஒருங்குக்கூடி—ஒரே திடமனத்தோடு—ஆங்கில நாட்டின் பலத்திற்குதவிபுரியும். சேரும்; சேர்ந்து எங்கும்சாந்தி விளங்கவுழையும். ராணுவவீரர்க்கு வேலையில்லாமலொழியச் செய்யும்—அதுவே சாந்தியின்நிலை. இந்த ராஜாங்கத்திற்குதவிசெய்ய முழுமனத்தோடும் வீரத்தோடும் உழைக்கக்கூடிய வாலிபர் உம்முள் அநேகர் உலகத்தில் உமக்கிணை இல்லாத தகைமை வாய்ந்தவர்களாக இருக்கிறீர்கள்; உமக்கும் வீரமும் தைரியமும் உம்முயிரையும் அரசர்க்களிக்க வுதவி புரியட்டும். ”

என்றிவ்வாறு பேசிய ஹியூம் — இவரது பெயரை யறியாது படித்தவனெவனுண்டு? அத்தகைய மஹான் தன் விருத்தாப்பிய தசையிலும் நம் நாட்டிற்கே உழைத்து நமது ஸுகத்திற்கே உழைத்து வந்தனர். எப்பொழுதும் உதவி செய்வதே தன் குணமாகக் கொண்டனர். உண்மையே விரதமாக அடைந்தவர். எளியவரைக் காக்கக் கங்கணங் கட்டிக்கொண்டவர். குன்றாத ஒழுக்கமுடையவர். அருளென்னுந் தீபங்கொளுத்தி அன்பென்னும் வெளியுண்டாக்கி, யாவர்க்குமானந்தமூட்டிய இம்மஹான், தனது நடையாலும், ஒழுங்காலும், மனோ தைரியத்தினாலும், வைராக்யத்தாலும், யாவர்க்குமிதஞ்செய்யவேண்டுமென்னும் கவலைக்கொண்டு, எக்காலத்திலும் உண்மையை உணர்ந்து அதன் வழியே, ஏது தடையாக வரினும் அதைக் கணிசியாது, பிறரது ஏளனத்தைக் கவனங்கொள்ளாது, தனது ஊக்க முயற்சி இவைகளால் அவர்களது மனத்தை வெட்கச்செய்து, தம்மவரைப் போலாது ஜீவஹிம்ஸையைப் பொறுக்கொணாது, கொல்லாமையைக் காத்து, மது விலக்கி, பெருமுனியென விளங்கி, இந்திய நாட்டாரது இயக்கத்திற்குக் குருவாக வந்து உபதேசஞ் செய்து, தன் தளர்ந்த வயதிலும் வழிக்கொள்ளா உடலையும் தன் வயப்படுத்தி, தன் மனச்சக்தியைத் தன்வழிச் செல்லச்செய்து, ஒரே பிடிவாதத்துடன் நன்மைக் குழைத்தலென்னும் கடமை கொண்டாடி

“தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் ”

என்னும் குறளின் கருத்தின் பிண்டவுருவீதென்று சொல்லக்கூடிய புகழ்படைத்த இம்மஹான் வானுலகு கூடினும், அவரது புகழுடம்புதானே ராச்சியத்தைச் செலுத்தி யாவர் மனத்திலும் தன்னுதன்போல் யாவரையும் விளங்கச் செய்யக்கூடிய சக்திவாய்ந்த உயிர்த்தென்று சொல்ல நாம் வேண்டுமோ? அதுதானே வெளிப்படை; எல்லாரும் அறிவர். இனிக் கூறல் மிகையாகும். விண்கலந்த பேருயிரும் வாழ்ந்து விளங்கி இந்திய ஸமூஹத்தின் மனத்தின் நன்மைக் கொண்டலாயிறங்கி யாவர்பால் ஆனந்த மழை பெய்ய, அத்தனி முதலாகிய முன்னோனது திருவருளைப் பிரார்த்திக்கின்றனம். சுபம். சுபம். சுபம்.

கடவுள் வேட்கை:—எவன் பகவானைப் பெற வேண்டுமென்று பேராவல் கொண்டிருக்கின்றானோ, அவனுக்கு அவசியம் அவர் பிரஸன்னமாகிறார் என்பது ஸத்தியம். இதன் உண்மையை நீங்கள் அனுபவத்தில் கண்டு கொள்ளலாம். உண்மையான உள்ளன்புடன் அடுத்து, மூன்றே நாள் முயன்று பாருங்கள், உங்களுக்குக் காரியசித்தியாவது திண்ணம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸ தேவர்.

பிரிட்டிஷ் துரைத்தன ரீதி

THE BRITISH CONSTITUTION

அத்தியாயம் 1

ஆங்கிலேய அரசியல்

நாகரீகமடைந்த நாடுகள் எல்லாவற்றிலும் ஜனங்களுடைய உயிருக்கும் பொருளுக்கும் அபாயம் வாராமல் பாதுகாப்பதற்காக ஆதிபத்தியம் ஏற்பட்டுள்ளது. ஜனங்கள் சட்ட திட்டங்களுக்கு அடங்கி ஒழுங்காய் நடப்பதற்கும் அவர்கள் வரவர க்ஷேமமார்க்கத்தில் அபிவிருத்தி யடைவதற்கும் ஆதிபத்தியம் வெகு முக்கியமென்பது யாவரும் ஒப்பும் விஷயமாம். அவ்வாதிபத்தியம் சட்டதிட்டங்களை நிர்மாணம் செய்வதற்கும் அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட சட்டங்களை நிறைவேற்றுவதற்குமாக இரண்டு பிரிவுகளாக்கப்பட்டுள்ளது. இவ்விரு பிரிவுகளுக்கும் அதிகாரம் என்பது அவசியமாகும். அதாவது ஜனங்கள் அனைவரும் ஒருமனப்பட்டு, ஒருவரிடத்தேனும் பலரிடத்தேனும் மேலான அதிகாரத்தை ஒப்புவித்து, அவ்வதிகாரிக்கு மற்றையோர்கள் அடங்கி நடப்பதாக ஒத்துக்கொள்வதாம். ஒத்துக்கொள்வது என்றால், எல்லோரும் ஒருங்கு சேர்ந்து கைதட்டியோ, வேறு விதமாகவோ தங்களுடைய சம்மதத்தைக் குறிப்பிடுவதல்ல, நடக்கும் காரியங்களுக்கு ஜனங்கள் ஏகோபித்துத் தடை யொன்றும் செய்யாமலிருப்பதே சம்மதக்குறி யென்னலாகும்.

நல்லரசாட்சியின் நோக்கமென்னவெனில் தேசீய மகா ஜனங்கள் அனைவரையும் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டுவர வேண்டுவதுதான். அதிலும் ஜனங்களுடைய சுவதந்திரத்தை எவ்வளவு வரையில் குறைய வொட்டாமல் விடலாமோ அவ்வளவு வரையில் விட முயல்வது வெகு விசேஷமாகும்.

மேற்கூறிய அரசாட்சி, காலதேச வர்த்தமானங்களுக்கு இயைந்தவாறு பற்பலவிதங்களாக நடைபெறும். முக்கியமாக மூன்று விதங்களே இப்போது ஐரோப்பிய நாடுகளிலும் மற்றுமுள்ள மேற்றிசை நாடுகளிலும் காணப்படுகின்றன. அவையாவன :—

I. ஏகாதிபத்தியம்.—இதில் அரசன், தான் நினைத்ததை யெல்லாம் சட்டமாக ஆக்கும் அதிகாரத்தை உடையவனாயிருத்தல்தான் விசேஷமாகும். இவ்வகையான ஆதிபத்தியம் நாகரீகம் முதிர முதிரக் குறைந்துகொண்டே வருகிறது.

II. நியம ஆதிபத்தியம்.—இதில் அரசனுடைய அதிகாரம் எவ்விஷயத்திலும் எல்லை மீறாமலிருக்கும்; அதாவது, ஜாரியிலிருக்கும் ஸ்மிருதிகளுக்கும் சட்டங்களுக்கும் உள்ளடங்கியே அதிகாரம் பாரபக்ஷமின்றி நடைபெறும்.

III. மகாஜன ஆதிபத்தியம்.—இதில் அதிகாரம் ஜனங்களுடைய சம்மதத்தின் பேரில் நடைபெறும். அதாவது, ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராலேயாவது அல்லது மகா ஜனங்களுடைய பிரதிநிதிகள் சேர்ந்த சபை அல்லது சபைகளாலாவது எல்லா அதிகாரமும் நடக்கும்.

முதலாவதானஏகாதிபத்தியத்தில்எல்லா அதிகாரமும் அரசனுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட தென்பது ஆள்வோரின் பிரதான கொள்கை. ஆதலால் அவர்கள் கடவுளைத் தவிர வேறொருவருக்கும் உத்தரவாதம் செய்கிறதில்லை. கொடுங்கோன் மன்னன் ஒருவன் தனது கோனோக்கி வாழும் குடிகளைக் கேவலம் அடிமைகளாக்கி விடுவான். ஏகாதிபத்தியத்தையுடைய செங்கோலன் ஒருவன் தனது பிரஜைகளைக் குழந்தைகளாக்கிவிடுவான். ஆதலின் இம்முறை சிறந்ததன்று. ருஷியா, பேர்ஸியா, துருக்கி முதலிய நாடுகளில் வழங்கி வந்த இம்முறை, மகாஜனங்களுக்குள் கல்வி நாகரீகம் இவை முதிருமளவிற்குக் குறைந்துகொண்டே வருகின்றது.

இரண்டாவதான நியம ஆதிபத்தியத்தில் அரசனுக்கு ஆளுந்தொழில் சிறிதுகடினமானதாகும். ஏனெனில் செல்வாக்குள்ள தனவான்களுடைய அபிப்பிராயத்தையும் மேலோங்கிவரும் சாமான்னிய ஜனங்களுடைய அபிப்பிராயத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, கொடுங்கோன்மையையும் பலவீனத்தையும் முற்றிலும் விலக்கி நடுநிலைமையில் செல்லவேண்டியதாகையால் அவனது ஆட்சி எளிதன்றாகும். ஏற்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு முரண்படும்படி நடக்காமல் ஜாக்கிரதையாகவுமிருக்கவேண்டும்.

மூன்றாவதான மகாஜன ஆதிபத்தியத்திலோ ஆள்பவன் மிகுந்த வல்லவனாக விருப்பான். பரம்பரையாக ஆட்சி செலுத்துவோரின்சாமர்த்தியத்தைக் காட்டிலும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும்பிரதிநிதியின் சாமர்த்தியம் வெகு மேலானதாக விருக்கு மென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இதில் கொடுங்கோன்மை யென்பதே இராது. என்றாலும் இதிலுள்ள ஒரே ஒரு அசௌகரியம் என்னவெனில், ஆட்சி செலுத்து

வோன் எதாகிலும் கைவலுத்திருப்பதோர் கட்சிக்குத் தலைவனாக விருப்பதாம்.

மேற்கூறிய மூவகை ஆதிபத்தியத்தில் இரண்டாவதான நியம ஆதிபத்தியத்தை அனுசரித்தே இங்கிலாந்தின் அரசாட்சி ஆரம்பமுதற்கொண்டு நடந்தேறி வருகின்றது. இப்போது நாம் "நியமம்" என்று கூறுவதில் அடங்கியுள்ள ஸ்மிருதிகளும் சட்டங்களும் எப்போது தோன்றின வென்று அறுதியிட்டுச் சொல்வது முடியாத காரியமாகும். வேண்டுமானால், இங்கிலாந்து தேச சரித்திரம் ஆரம்பமான காலத்திலேயே இவைகளும் தோன்றத் தொடங்கின என்று மட்டும் சொல்லலாம். அவைகளிற் பெரும்பாலன அந்நாட்டில் குடியேறிய ஸாக்ஸன் ஜாதியாரால் கொண்டுவரப்பட்டு, முதன் முதலில் ஆண்ட அரசர்களின் காலத்திலும் மீறவொண்ணாத தர்மங்களாக மதிக்கப்பட்டு வந்தன. அரசருக்கும் அவரது சபையார்களுக்கும் அப்போதிருந்த நியமங்களே இப்போதும் சிற்சில மாறுதல்களுடனே இருக்கின்றன. உதாரணமாக, அரசனுக்குத் தன் மனம் போனபோக்கில் வரி விதிக்கவாவது சட்டமுண்டாக்கவாவது அதிகாரமில்லை. பிறதேசத்தாருடன் சண்டை தொடுக்கவாவது, தொடுத்த சண்டையை நிறுத்திச் சமாதானம் பேசவாவது கூடாது. இருந்தாலும், அவர்தாம் நாட்டின் சருவாதிகாரி ; உத்தியோகஸ்தர்கள் அனைவரும் அவரது கட்டளைக்குள் அடங்கியவர்களாவார்கள். ஜனங்களெல்லோரும் அவரையேதான் நோக்கி வாழ்கின்றனர்.

நார்மன் ஜாதியார் இங்கிலாந்தை ஜெயித்தகாலத்தில் ஜெயங்கொண்ட உவில்லியம் (William the Conqueror) அரசர் காலத்தில் போர்ச்சேவகத்துக்காக ஜாகீர் அனுபவிக்கும் முறை செழிக்கத் தொடங்கியதும், ஜனங்கள் தங்கள் அரசரைப் பூமிக்குச் சொந்தக்காரரென்றே கருதினர். ஆயினும் பழைய சட்டதிட்டங்கள் மறக்கப்படாமல் ஞாபகத்தி லிருந்துவந்தன. ஜெயங்கொண்ட உவில்லியம் அரசர், எட்வர்டு (Edward the Confessor) அரசரின் சட்டங்களுக்கடங்கி ஆள்வதாக மொழிந்தனர். முதலாம் ஹென்றியின் மகுடாபிஷேககாலத்தில், அவர் நாட்டைத் தொன்முறைப்படியேயன்றாய் ஆள்வதாகத்திருவாக்களித்தார். அவருக்குப் பின்வந்த ஸ்டீபன் (Stephen) அரசனும், இரண்டாம் ஹென்றியும் (Henry II) அவ்வாறே செய்தனர். ஆனால், ஜான் அரசனாக விருந்த காலத்தில் தான் "மகா சாஸனம்" (Magna Carta) என்று எல்லோரும் புகழ்ந்து கொண்டாடும் பத்திரம பிறந்தது. அதிற் காணும் நிபந்தனைகள் இன்னும் இப்போதுள்ள அரசரையும் கட்டுப்படுத்துகின்றன. ஆனால் அதில் புதிதாக ஒன்றுமேயில்லை. மகாஜனங்கள் பழைய பழக்கவழக்கங்களையே எழுத்து மூலமாக ஸ்திரப்படுத்திக் கொண்டனர். இம்மகா சாஸனம், அரசன் பெரிய மனது செய்து அளித்ததுபோல எழுதப்பட்டிருந்தாலும், உண்மையில் அது அரசனுக்கும் அவரது ஜனங்களுக்கும் ஏற்பட்ட ஒருவித உடன்படிக்கையேயாகும். அதிற்கண்ட நிபந்தனைகளின்படி நடப்பதாக ஒப்புக்கொண்டால்தான் ஜனங்கள் அரசனுக்கு அடங்கி நடப்பதாகத் தெரிவித்தனர். அரசனும் இதற்குச் சம்மதிக்க வேண்டியதாயிற்று. அது முதற்கொண்டு, இங்கிலாந்தில் நடந்துவரும் நியம ஆதிபத்தியத்தின் சரித்திரப் போக்கெல்லாம் இம்மகா சாஸனத்துக்கு உரை செய்ததே தவிர வேறில்லை யென்பதாக ஒரு விற்பன்னர் கூறுகின்றார்.

பிறகு, முந்நூறு வருஷங்களுக்கப்பால், டியூடர் (Tudor) வம்சத்தரசரது ஆட்சியில், மேற்கண்ட பழைய முறை பழக்கத்திலிருந்தபோதிலும், அதிகார சமத்துவம் சற்று நிலை தளர்ந்திருந்தது. அதாவது, அரசருக்கு அதிகாரம் கூடியும், மகாஜன பிரதிநிதிகளுக்குக் குறைந்தும் இருந்தது. ஏனெனில் மகாஜனங்களுள் பிரபுக்கள் கூட்டம் உள் நாட்டுச்சண்டை காரணமாகச் செத்தும் கெட்டும்போய்விட்டது. சாமான்னிய ஜனங்களுக்குள் கல்வி வெகுவாகக் குறைந்திருந்தது. ஆகவே அரசருடைய கை வலுத்திருந்தது ஆச்சரியமன்று.

பின்னர், ஸ்டூவர்ட் வமிசத்தார் தங்களுடைய அதிகாரத்துக்கு அளவில்லை யென்றும், தாங்கள் தேவாம்சமென்றும் வெளிப்படையாய்க் கூறிக்கொண்டு மனம் போனபடி ஜனங்களை உபத்திரவிக்கலானார்கள். ஜனங்களுக்கும் அரசருக்கும் இருக்கும் அன்னியோன்னியமே அரசியலுக்கு ஏற்றதென்றுள்ள பழைய கொள்கையை மறந்து, அவ்வரசர்கள் கொடுங்கோன் மன்னர்களாயினர். ஆகவே, ஜனங்களுக்கும் அரசர்களுக்கும் சண்டை யுண்டாயிற்று. அச்சண்டையில் அவ்வமிச அரசர்கள் ராஜ்யத்தையும், அவர்களில் ஒருவர் தலையையும் இழந்தது உலகமறிந்த விஷயங்களாம். பிறகு மூன்றாம் உவில்லியம் (William III.) அரசராக வந்த பிறகுதான் இங்கிலாந்தில் மறுபடியும் நியம ஆதிபத்தியம் உறுதியாக நிலை நாட்டப்பட்டது. அப்போது, மகாஜனப்பிரதிநிதிகளுக்கு அரசனை நியமித்து எல்லை மீறாமல் பார்த்துக்கொள்ளும் சுதந்தரம்

மறுபடியும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது இதை விளக்கும் மகாசாஸனத்தில் (உரிமைப்பத்திரம்) இங்கிலாந்தில் வெகுகாலமாக நடைபெற்றுவந்த நீதிமுறைகளை மற்றுமொருமுறை உவில்லியம் அரசர் ஒப்புக்கொண்டு ஆள அதிகாரம் பெற்றார்.

இந்தமகாசாஸனங்களிரண்டுமே, பிரிட்டிஷ் துரைத்தனத்தில் மகாராஜாவின் அதிகாரத்துக்கு வரம்பு ஏற்படுத்தியுள்ளன. அவை தாம் அதற்கு முக்கிய ஸ்மிருதியாவன.

பிரிட்டிஷ் துரைத்தன ரீதியானது ஏகாதிபத்தியத்தால் மறைபட்ட மகாஜன ஆதிபத்தியமென்று கூறத்தகும். ஐக்கிய **மாகாணங்கள்** (United States) ஜெர்**மனி, பிரான்ஸ்** முதலிய நாடுகளில் ஏற்பட்டுள்ள துரைத்தன ரீதி ஸ்திரமான உருவத்தைப் பெற்றுள்ளது. அதாவது அங்கு நடைபெறும் அரசியல் காலதேச வர்த்தமானங்களை யொட்டி மாறுபாடடையுந் தன்மையதன்று. ஒரு காலத்தில் ஒருவரையோ பலரையோ நியமித்து, துரைத்தன ரீதியை ஒழுங்காக்கும்படி செய்தனர். அந்த ரீதியில் ஏதாவது மாறுபாடு செய்யவேண்டுமானால், முன்போலவே ஒருவருக்கோ, பலருக்கோ, பிரத்தியேகமாக அதிகாரம் கொடுபடவேண்டும். இங்கிலாந்தின் துரைத்தனமோ, அடிக்கடி மாறுபட்டு, இடையறாது வளர்ந்துவரும் தன்மையது. இன்றைக்குக் காணும் முறைக்கும் ஐம்பது வருஷங்களுக்கு முன்பிருந்த முறைக்கும் ஏற்றவும் வித்தியாசம் உண்டு. அதேமாதிரி, இப்போதைய முறை, இனி ஐம்பது வருஷங்களுக்குப் பின் வரும் முறைக்குப் பல் விதத்திலும் மாறுபட்டிருக்கும். இவ்வித மாறுபாடுகளே, பிரிடிஷ் துரைத்தனத்துக்கு ஜீவகளையைக் கொடுத்துக்கொண்டு வருகின்றன.

அவ்வித மாறுபாடுகளைப் பெற்றுத் தற்காலத்தில் ஜாரியிலிருக்கும் துரைத்தன ரீதியைப்பற்றி மட்டுமே இங்கு பிரஸ்தாபிப்பதாக வுள்ளோம். அம்மாறுபாடுகளைப் பற்றிய விபரங்களை விவரிக்க இடம் இதுவன்று.

இனி, அத்துரைத்தனத்துக்கு முக்கிய அங்கங்களாக வுள்ளவற்றை ஒவ்வொன்றாக பின்னர்எடுத்து விசாரிப்போம்.

இரணியகேசி கதை

THE STORY OF HIRANYAKESI

ஒரு காலத்திலே ஒரூரிலே ஒரிராசகுமாரி இருந்தாள். அவள் உலகத்திலுள்ள பெண்களுள் எல்லாம் அழகாற் சிறந்தவள். அவள் அவ்வளவு அழகுள்ளவளா யிருந்ததனாலும் அவளுடைய கூந்தல் பொன்போல அழகியதாய் நெறித்துக் கடைகுழன்று நிலத்தை முட்ட நீண்டிருந்ததனாலும் அவளுக்கு இரணியகேசி என்று பெயராயிற்று.

அவள் தலையில் ஒழுகிய மலர்க்கண்ணி சூடி, அழகிய ஆபரணங்கள் அணிந்து, முத்தும் மணியும் புனைந்து இயற்றியபட்டாடை தரித்துவிளங்கினாள். அவளைக் கண்டவர்கள் எல்லாரும் அவள்மேல் ஆசைகொண்டார்கள்.

அவள் இங்கே இவ்வாறிருக்க, அவளுடைய நாட்டிற்கு அயல் நாட்டிலே ஓரரசன் இருந்தான். அவன் அழகும் இளமையும் செல்வமும் உடையவன். அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை. அவன் இரணியகேசியின் அழகைப் பலரும் புகழக் கேட்டு அவளைக் கண்ணாற் காணாதிருந்தும் அவள்மேல் மிக்க ஆசைகொண்டான். எப்போதும் அவளின் நினைவே மிக்கமையால் அவன் ஊணும் உறக்கமும் ஒழிந்தான். கடைசியாக, வருத்தந் தாங்கமுடியாமல், அவளை மணம் பேச ஒரு தூதனுப்ப நிச்சயஞ்செய்தான்.

அவன் தனது தூதுவனை ஒரு சிறந்த தேரில் ஏற்றி, அவனுக்கு நூறு குதிரையும் நூறு ஏவலாட்களும் கொடுத்து, எப்படியாவது இரணியகேசியைச் சம்மதிக்கச்செய்து தன்னிடங் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று சொல்லி அனுப்பினான்.

தூதுபோனதன்பின் அந்த அரசனது சபையிலே வேறொரு பேச்சும் நடக்கவில்லை. இரணியகேசி தன்னை மணஞ்செய்யச் சம்மதிப்பாள் என்று அவன் முழுதும் நம்பி அவளை வரவெதிர்கொள்வதற்காக ஊரையும் வீடுவாசல்களையும் அலங்கரிக்கும்படி தனது குடிகளை ஏவினான்.

இவன் இங்கே இவ்வாறு பல முயற்சிகள் செய்ய, இரணியகேசியினிடத்துச் சென்ற தூதுவன் அவளுடைய அரண்மனையை அடைந்து தான்வந்த காரியத்தைச் சொன்னான். அவள் அப்போது கோபத்தோடிருந்தாளோ அல்லது அவன் தூது சொன்னமாதிரி அவளுக்குப் பிடிக்கவில்லையோ தெரியாது, அவள் அவன் தூதை ஏற்றுக்கொள்ளாமல் தன்மேல அவ்

வளவு நல்லெண்ணங் கொண்டதற்காகத் தான் அந்த அரசனுக்கு மிகவுங் கடமைப்பட்டிருப்பதாயும் தனக்கு மணஞ்செய்துகொள்ள விருப்பமில்லை என்றும் மறுமொழி கூறித் தூதுவனை அனுப்பிவிட்டாள்.

தூதுவன் மிக்க துக்கத்தோடு அரசன் கொடுத்தனுப்பின கையுறைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு ஊர்நோக்கித் திரும்பினான். இரணியகேசி குடிப்பிறப்பிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவளாதலால், தான் அவ்வரசனை மணஞ்செய்ய மறுத்துவிட்டபோது அவன் கொடுத்தனுப்பின கையுறைகளில் அதிக விலையில்லாத சிலவற்றைமாத்திரம் ஒப்புக்கு எடுத்துக்கொண்டு மற்றை விலையுயர்ந்த முத்துக்கள் மணிகள் முதலியவற்றை எல்லாம் திருப்பிவிட்டாள்.

தூதுவன் திரும்பி ஊர்போய்ச் சேர்ந்தபோது இரணியகேசியை அவன் அழைத்து வாராமையைக் கண்டு குடிகள் எல்லாம் அவன்மேல் கோபங்கொண்டார்கள்; ஏம்பலோடு இரணியகேசி வருவாள் வருவாள் என்று காத்துக்கொண்டிருந்த அரசன் குழந்தைபோல அழுதான். அவனை ஆற்றுவிக்க ஒருவராலும் முடியாது போயிற்று.

அந்த அரசனுடைய சபையிலே அவன் சிறியதந்தையின் புதல்வனான இளைஞன் ஒருவன் இருந்தான். அங்குள்ளவர்கள் எல்லாருள்ளும் அவன் அழகாலும் வலிமையாலும் சிறந்தவன். அவனுடைய பெயர் இராமன். அவன் அரசனால் மிகவும் நன்கு மதிக்கப்பட்டு அரிய இராஜகாரியங்களெல்லாம் அறிந்தவனாய் இருந்தமையால் அவன்மேற் பொறாமைகொண்டவர் சிலர் ஒழிய மற்றவர்களெல்லாம் அவனிடத்து அன்புள்ளவர்களாய் இருந்தார்கள்.

அவன் ஒருநாள் அரசனுடைய உழையர்கள் சிலரோடு வார்த்தையாடிக் கொண்டிருந்தான். அவர்கள் இரணியகேசியினிடத்துச் சென்ற தூதுவன் திரும்பி வந்ததைப்பற்றிப் பேசி அவனுடைய தூதால் யாதொரு பயனுமில்லாது போய்விட்டதென்று சொன்னார்கள். அவன் அப்போது தன்னையறியாமல் "அரசன் என்னை இரணியகேசியிடம் தூதனுப்பி இருந்தால், அவள் என்னுடன் வந்திருப்பாள்; அதற்குச் சந்தேகம் இல்லை" என்று சொன்னான்.

அவனிடத்துப் பொறாமைகொண்டிருந்த அவனுடைய பகைவர்கள் உடனே அரசனிடத்துச் சென்று "மகாராஜாவே, இராமனும் இப்படிச் சொல்லுவானோ என்று நீங்கள் எண்ணுவீர்கள்; ஆனாலும் சொல்லுகிறான் கேளுங்கள். தன்னை இரணியகேசியினிடத்துத் தாங்கள் அனுப்பி இருந்தால் அவள் நிச்சயமாகத் தன்னுடன் வந்திருப்பாள் என்று அவன் சொல்லுகின்றான். தங்களைப்பார்க்கிலும் தான் அழகுள்ளவன் என்றும் இரணியகேசி தன்னைக்கண்டால் தன்மேல் ஆசைகொண்டு தன்னுடன் வந்திருப்பாள் என்றும் அவன் எண்ணுகின்றான்போலிருக்கின்றது" என்றார்கள்.

இதனைக் கேட்ட உடனே அரசனுக்கு மிகவும் கோபம் உண்டாயிற்று. அவன் "ஆகா! அவன் என்னைப்பார்த்துச் சிரித்து என்னிலும் தான் அழகுள்ளவனாக நினைக்கின்றானோ? நல்லது, அவனைப்போய்ப் பிடித்துச் சிறையிலிடுங்கள்; அவன் அங்கே பட்டினி கிடந்து சாகட்டும்" என்றான்.

உடனே அரசனுடைய சேவகர்கள் சென்று இராமனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போய்ச் சிறையிலிட்டார்கள்.

அந்தச் சிறைச்சாலை வெறும் பாழான இடம். அங்கே அவனுக்குப்படுக்கைக்காகப் பரப்பப்பட்டிருந்த சில வைக்கோலன்றி வேறொன்றும் கிடையாது. அதன் முற்றத்திலே ஒரு சிறு நீர்க்கூவல் மாத்திரம் இருந்தது; அதுவும் இல்லாதிருந்தால் இராமன் தண்ணீர் விடாயால் இறந்திருப்பான்.

ஒருநாள் அவன் மிகுந்த துன்பப்பட்டு "நான் அரசனுக்கு என்ன குற்றஞ்செய்தேன்? நான் அரசனிடத்தில் உண்மையான அன்பு உடையவன் ஆயிற்றே; அரசனுக்கு மாறாக நான் ஒன்றுஞ் செய்யவில்லையே" என்று புலம்பிக்கொண்டிருந்தான். அப்போது சிறைச்சாலைக்கருகே சென்ற அரசன் அதனைக்கேட்டு இராமன் குரலென்று அறிந்து, அவன் என்ன சொல்லுகின்றான் என்று நின்று உற்றுக்கேட்டான். இராமனுடைய பகைவர்கள் "அந்தப் பாவிப்பையல் பிதற்றுவதைக் கேட்கவேண்டாம்" என்று அரசனைத் தடுத்தார்கள். அரசன் "சும்மா இருங்கள். அவன் என்ன சொல்லுகின்றான் என்றுநான் அறியவேண்டும்" என்று சொல்லிவிட்டு, சிறைச்சாலையின் கதவைத்திறந்து இராமனைக்கூப்பிட்டான். அவன் மிகுந்த துக்கத்தோடு வந்து அரசன் பாதத்தில் விழுந்து "ஐயனே, இந்தக் கொடிய தண்டனையை அடைய நான் என்ன குற்றம் செய்தேன்?" என்றான்.

அரசன் "நீ என்னையும் என் தூதுவனையும் ஏளனம் செய்து, நான் உன்னை இரணியகேசியினிடத்தில்

அனுப்பியிருந்தால், அவளை நிச்சயமாக நீ அழைத்து வந்திருப்பாய் என்று சொல்லவில்லையா" என்றான்.

இராமன் "ஐயனே, நான் அவ்வாறு சொன்னது உண்மையே. நான் போயிருந்தால் இரணியகேசி உம்மேல் காதல்கொள்ளும்படியாக உம்முடைய நற்குணங்களையெல்லாம் அவளிடத்தில் எடுத்துச்சொல்லி உம்மைப் பலவாறாக நான் புகழ்ந்திருப்பேன். அவள் அவற்றைக்கேட்டு உம்மைமணஞ்செய்துகொள்ள உடன்பட்டிருப்பாள். இதில் என்ன குற்றம் இருக்கின்றது? இதற்காக நீர் ஏன் கோபங்கொள்ளவேண்டும்?" என்று சொன்னான்.

இவ்விதமாக இராமன் சொன்னபோது அரசனுக்கு அவன் வார்த்தையில் ஒரு குற்றமும் இல்லை என்று தோன்றிற்று. முன்பு தன்னிடத்தில் இராமனைப்பற்றிக் கோள் சொன்னவர்கள்மேலே அவனுக்குக் கோபம் உண்டாயிற்று. அவன் உடனே இராமனைச் சிறை விடுவித்து, தனது மாளிகைக்கு அழைத்துக் கொண்டுபோய் அவனுக்கு நல்ல உணவு அளித்தான். பின்பு அரசன் அவனை நோக்கி,

"நான் இரணியகேசியினிடத்தில் அளவில்லாத காதல் கொண்டிருக்கிறேன் என்பது நீ நன்றாக அறிவாய். அவள் என்னை மணஞ்செய்யாது மறுத்துவிட்டதனால் எனது காதல் குறைந்துவிட வில்லை. அவளுடைய எண்ணத்தை மாற்ற என்ன செய்யவேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை. என்னை மணஞ்செய்துகொள்ளும்படி அவளை இயைவிக்க உன்னால் முடியுமாயின், நான் உன்னை மிக்க மனமகிழ்ச்சியோடு அவளிடத்தில் தூதாக அனுப்புவேன்" என்றான்.

இராமன் தனக்குத் தூதுபோவதற்கு யாதுந் தடையில்லை என்றும் தான் மறுநாளே புறப்பட்டுப் போவதாயும் சொன்னான். அரசன் தான் அவனுக்குத் தகுந்த பரிவாரம் சேர்த்தனுப்பும் வரைக்குந் தாமதிக்கும்படி சொல்ல, இராமன் "வேண்டாம்; எனக்கு ஏறிச் செல்வதற்கு நல்ல குதிரை ஒன்றுமட்டும் இருந்தாற் போதும்" என்றான். தான் சொன்ன உடனேயே இராமன் போகத்துணிந்ததற்காக அரசன்மிகவும் மகிழ்ந்து, இரணியகேசிக்கு ஓர் ஓலை எழுதிக்கொடுத்து, "நீ போகுங்காரியம் முற்றுப்பெறுவதாக" என்று இராமனை நல்ல வார்த்தை சொல்லி அனுப்பினான்.

இராமன் ஒரு திங்கட்கிழமை காலை தன்னந்தனியே புறப்பட்டுப்போனான். அவன் வழிமுழுதும் இரணியகேசியைத் தனது அரசனை மணஞ்செய்து கொள்ளும்படி மனம் இயைவிப்பது எப்படி என்று எண்ணிக் கொண்டு போனான். அவன் ஒரு கையேடு வைத்திருந்தான். அந்தக் கையேட்டிலே இரணியகேசியினிடத்தில் எடுத்துச்சொல்லலாம் என்று தனக்குத் தோன்றும் நல்ல வார்த்தைகளை எல்லாம் தான் மறந்து போகாதபடி அப்போது அப்போது குதிரையை விட்டிறங்கி மரநிழலிலிருந்து அவன் குறித்துக் கொண்டுபோனான்.

ஒருநாள் அதிகாலையில் எழுந்து ஒரு பெரிய வயல் வெளி வழியாகச் செல்லும்போது அவனுக்குத் திடீரென்று மிகவும் நல்ல சொற்பொருள்கள் சில தோன்றின. அவன் உடனே குதிரையைவிட்டிறங்கி அங்கே ஓடின ஒரு சிற்றாற்றங்கரையிலே ஒரு மருத மரநிழலிலே போய் இருந்து தனக்குத் தோன்றிய அந்த நல்ல சொற்பொருள்களைத் தனது கையேட்டில் எழுதினான். எழுதி முடிந்தவுடன் அவ்விடம் மிகவும் அழகாயிருந்தது கண்டு அதன் அழகுகளைச் சுற்றிப் பார்த்தான். அங்கே ஆற்றங்கரையிலே புல்லின்மேலே ஒரு பொன்னிறமுள்ள சேன்மீன் விழுந்து மூச்சுத் தட்டிப் பதைபதைத்துக் கொண்டு கிடந்தது. ஆற்றிலே பாய்ந்து ஈக்களைப் பிடித்துத் தின்றுகொண்டிருந்த அந்தமீன் ஒருமுறை துள்ளினபோது தவறிக்கரையின் மேலே விழுந்துவிட்டது. அங்கே சிறிதுபோது கிடந்து மூச்சுத்தட்டி அதற்கு உயிர்போகுந் தருணமாயிருந்தது. இராமன் அதனைக்கண்டு இரக்கமுற்று, அது தனக்குக் காலை உணவிற்கு நன்றாயிருக்குமென்று கருதினானாயினும் அவ்வெண்ணத்திற்கு இடங்கொடாது அதனை எடுத்து நீரில்விட்டான்.

நீரில் விடப்பட்டவுடன் சேன்மீன் உணர்வு வந்து மனமகிழ்ந்து ஆற்றில் அமிழ்ந்து ஓடிற்று. பின்பு நீரில் மிதந்து அச்சம் சிறிதுமின்றிக் கரைக்கு நீந்திக் கொண்டு வந்து இராமனை நோக்கி "ஐய, நீ இன்று எனக்குச் செய்த நன்மையை நான் மறக்கமாட்டேன். நீ என் உயிரைக் காப்பாற்றினாய்; இதற்குத் தகுந்த கைம்மாறு ஒருநாளைக்கு நான் உனக்குச் செய்யாமற் போகேன்" என்று சொல்லிவிட்டு நீருள் மறைந்து தன் இருப்பிடஞ்சென்றது.

இவ்வாறு மற்றொருநாள் இராமன் வேறொரு நற்காரியஞ் செய்தான். அவன் குதிரையிலேறி வழிக்கொண்டு போகும்போது அண்டங்காக்கை ஒன்றை ஒரு கழுகு தூக்கிக்கொண்டு வந்தது. அண்டங்காக்கை மிகவும் களைத்துக் கீச்சிட்டுக்கொண்டு இராமன் காலடி

யில் வந்து விழுந்தது. இராமன் அதனைக்கண்டு மனமிரங்கி விரைந்து தன்வில்லை எடுத்து ஓரம்பைப் பூட்டி அந்தக் கழுகை எய்து விழுத்தினான். அவன் அவ்வாறு செய்யாதிருப்பானாயின் கழுகு அண்டங்காக்கையைப் பிடித்துக் கொன்றுவிட்டிருக்கும். அம்பு பட்டுக் கழுகு கீழே விழுந்ததை அண்டங்காக்கை பார்த்து, அச்சம் நீங்கி ஒரு மரக்கிளைமேற்போய் இருந்தது. களை சிறிது தெளிந்தவுடன் அது இராமனை நோக்கி "ஐயா, ஓர் அற்பப் பறவையினுடைய உயிரைத் தப்புவித்த உனது பெருந்தன்மையை நான் என்னென்று வியப்பேன்! நான் நன்றி கெட்டவனுமன்று; பயனில்லாதவனுமன்று. ஒரு நாளைக்கு என்னாலும் ஓர் உதவி உனக்குச் செய்யமுடியும்" என்று சொல்லிற்று. இராமன் அதனைக் கேட்டு அவ்வாறு சொன்னதற்காகக் காக்கையை மெச்சிக்கொண்டு தனது வழியே சென்றான்.

அவ்வாறு அவன் செல்லும்போது வழியிற் பொழுதுபட்டு ஓர் அடர்ந்த காட்டினூடாகப் போக நேரிட்டது. அந்தக் காடு மிகவும் இருண்டு அடிப்பாடு காணுவ தரிதாயிருந்தது. அங்கே அச்சமயத்தில் ஒரு கூகை ஈனக்குரலாற் கூப்பிடுவது கேட்டது. இராமன் "இது பெரிய ஆபத்திலகப்பட்டுக்கொண்ட கூகையின் குரல்; அது வலையிற் சிக்கிக்கொண்டிருக்க வேண்டும். இது நிச்சயம்" என்று நினைத்து அதனை அவ்விடமெல்லாந் தேடினான். தேடி, அங்கே ஓரிடத்திலே புள்ளுவர்களால் விரிக்கப்பட்டிருந்த ஒரு பெரிய வலையைக் கண்டான். கண்டு, "ஆ! இதுவென்ன பாவம்! தங்களுக்கு ஒருபோதும் ஒரு தீங்கும் செய்யாத அற்பப் பிராணிகளை வருத்துவதும் வேட்டையாடுவதுமே மனிதருக்குத் தொழிலாயிருக்கின்றதே" என்று சொல்லிக்கொண்டு தன்னுடைய வாளையெடுத்து வலையின் கட்டுக்களை அறுத்துவிட்டான். உடனே கூகை எழுந்து பறந்துபோயிற்று. அது சிறிது தூரம் போய் மீண்டு திரும்பி வந்து இராமனை நோக்கி, "ஐய, நீ எனக்கு எவ்வளவு பேருதவி செய்தாயென்று நான் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. நான் வலையில் அகப்பட்டிருந்தேன். இன்னுஞ் சிறிது நேரத்தில் புள்ளுவர்கள் வந்து விடுவார்கள்; நீ என்னை இப்போது விடுவியாதிருந்தால், அவர்கள் என்னைக் கொன்று விடுவார்கள். நான் நீ செய்த உதவியை மறவேன். ஒரு காலத்தில் உனக்கும் ஒருநன்றி செய்ய என்னால் முடியும்" என்று சொல்லிவிட்டுப் போயிற்று. (தொடரும்.)

பாஷா ஞானத்தை விருத்தி செய்வதெப்படி?

HOW TO ACQUIRE LITERARY SKILL

ஒருவனுக்கு உயர்தரக்கல்வியிருக்கிறதென்பதற்கு அத்தாக்ஷி, அவனுக்குள்ள பாஷா ஞானமேயாகும். அவனுக்குபாஷாஞானம் இல்லாவிட்டால் வேறெந்தத் தொழிலில் நல்ல பயிற்சி இருந்தபோதிலும், அவன் உயர்தரக்கல்வி பெற்றிருக்கிறானென்று சொல்ல முடியாது. இவ்விதம் சொல்ல நியாயங்கள் அநேகம் உள்ளன. அவற்றை இங்கே விசாரிப்போம்.

முதலாவது, ஒரு அரியபெரிய புத்தகம், ஒரு தேசத்தின் நாகரிகம், ஜனங்கள் நடையுடை பாவனை, அவர்கள் மனக்கிளர்ச்சி, முதலியவற்றைப் பிரதிபிம்பிக்கும் கண்ணாடிபோன்றது. நீண்ட மாளிகைகள், கோபுரங்கள், முதலியன சிறிதுகாலத்துக்குப் பின்னே அழிந்துபோம். ஜனங்கள் நடையுடை பாவனைகள் மாறும். ஆனால் அரிய நூல்களோ என்றும் அழியாமல் நிற்கும். இந்தத் தேசத்தில் புஸ்தகங்களை அச்சிட்டுவைக்கும் வழக்கம் நூதனமாகவே ஏற்பட்டுள்ளது. இதற்குமுன் எல்லா நூல்களையும் ஏடுகளில்தான் எழுதிவைத்திருந்தார்கள். கம்பர், திருத்தக்கதேவர், கச்சியப்ப முனிவர் முதலிய பெரியோர்களுடைய வாக்கில் உதித்த செய்யுட்களெல்லாம் அச்சில் வருவதற்கு முன்னே ஜனங்களுடைய ஞாபகத்திலேயே சேமிக்கப்பெற்றுவந்தன. எல்லாவற்றையும் அச்சிற பார்த்து வாசிக்கும் வழக்கம் ஏற்பட்டபிறகு ஞாபகசக்தி குறைந்து ஞாபகசக்தியைப் பயிற்சி செய்யுமூக்கமும் வரவரக குறைந்துபோயிற்று. இப்பொழுது இருக்கும் பண்டிதர்களெல்லாம் பழைய முறைப்படி கற்றவர்களாதலால், அவர்கள் எங்கே போனபோதிலும் கையிற் புத்தகங்களில்லாமலேயே சென்று உபந்நியாஸம் செய்யத்தக்க வன்மையுடையவர்களாயிருக்கிறார்கள். புது முறைப்படி கற்பவர்கள் அங்ஙனமின்றி, புத்தகங்களைப் பெரிதும் நம்பினவர்களாக இருக்கிறார்கள். இன்னும் ஏட்டில் எழுதாமலும் அச்சிற் பதிப்பிக்காமலும் உள்ள அநேகம் தனிப் பாடல்கள் நாட்டில் ஜனங்கள் ஞாபகத்திலேயேயிருந்து வருகின்றன.

இரண்டாவது, பழைய நூல்களை எடுத்துப் படித்தால்தான், அக்காலத்திய தேச சரித்திரம் இனிது விளங்கும். சாஸனங்களும் சிதைந்துபோன காலங்களைப்பற்றிய சரித்திரத்தைத் தெரிந்துகொள்ள பழைய

நூல்களே நமக்கு இன்றியமையாத கருவிகளாவன. எஸ். ஆர். கார்டினர் என்ற ஆங்கில சரித்திரப் புலவர் தாம் எழுதியுள்ள பழைய இங்கிலாந்து சரித்திரத்தில், ஜனங்கள் வாக்கிலேயே வெகுகாலமாக வழங்கிவரும் தனிப்பாடல்கள், புலவர் சரித்திரங்கள், கர்ணபரம்பரையாகக் கேள்வியால் வந்த பூர்வ கதைகள், முதலியவற்றை ஆங்காங்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளுகிறார். அப்படியிருக்க இந்தத்தேசத்தில் அநேகம் நூற்றாண்டுகளுக்கு முன்னே நடந்த விஷயங்களையும், ஜனங்கள் ஊக்கம், நடை, ஞானம், வியாபாரம், முதலியவற்றிலுள்ள விசேஷங்களையும் அறிந்துகொள்ள பழைய நூல்களே மிக்க உபயோகமாக நிற்பனவாகும். ஆனால் அநேகம் புத்தகங்கள் இருப்பதாலும் ஒவ்வொரு காலத்தில் எழுதப்பெற்ற எல்லா நூல்களையும் ஆராய்ந்தறிவது கடினமாதலாலும், மிக்க பயன்படக்கூடிய சில நூல்களையே படிப்பது நலம். ஒரு மாணாக்கன் எவற்றைப் படிப்பது என்று யோசித்துக்கொண்டிருக்குங் காலத்தில், "ஆசிரியர் இவற்றைப் படி" என்று சொன்னால், ஆசிரியர் எடுத்துச்சொன்ன நூல்களையே படித்து, அவன் பயனடைவான்.

மூன்றாவது, பாஷாஞானமே எல்லா ஞானங்களிலும் சிறந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. ஒருவனுக்கு யாதாயினும் ஒரு தொழிலில் நிரம்ப பயிற்சியிருந்தாலும், அவனுடைய புத்தி அற்பமாயும், யோசனை குறைந்ததாயும், பேசுந்திறமை சூன்யமாகவும் இருந்தால், அவன் உயர்தரக் கல்வியைப் பெறவில்லையென்று சொல்வார்கள். ஆனால் நல்ல கருத்துகளைத் தமக்குள்ளே அடக்கியிருக்கும் சிறந்த நூல்களை அவன் படித்தால், அவன் புத்தி விசாலப்படும். அநேகம் அரிய விஷயங்களைப்பற்றி யோசனை செய்யத் தொடங்குவான். இவ்விஷயத்தைப்பற்றி லார்டு மார்லி துரையவர்கள் எழுதிய விஷயம் எல்லாரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடியது.

"உலகவாழ்க்கையில் பெரும்பயன் அடையவிரும்புவோர், மனத்தூய்மையும், நல்ல எண்ணமும் உடையவர்களாயிருத்தல் வேண்டும். மற்ற கல்விகளைவிட, பாஷாஞானமே நல்லெண்ணங்களையும், மனத்தூய்மையும், விசேஷமாக உண்டுபண்ணக்கூடியது. ஆதலால் பாஷா ஞானத்தை விருத்தி செய்துகொள்ள ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டியது."

நான்காவது, ஒருவன் தனது எண்ணங்களைச் செவ்வனே வெளியிட விரும்புவானாயின், அவனுக்குப் பாஷா ஞானம் அவசியம் இருக்க வேண்டும். பாஷா ஞானம் நூல்களை வாசித்தே விருத்தி செய்யக்கூடுமேயன்றி, மனம் போனபடியே பேசுவது பாஷையாக மாட்டாது. பழைய நூல்களைப் படித்து, கவியின் மனத்தில் தோற்றிய கருத்துக்களை அவர் எந்தெந்தச் சொற்களை உபயோகித்து வெளியிட்டிருக்கிறார் என்று ஆழ்ந்து யோசிக்கும்போது, நமக்கும் நமது எண்ணங்களைத் தட்டுத்தடையின்றி வெளியிடும் சக்தி தானாகவே உண்டாகும். கம்பர்போன்ற சிறந்த கவிகளின் வாக்கில் உதித்த சொற்கள் பலபொருள்பட நின்று, பொருள் நிரம்பி, திட்பநுட்ப முற்று, சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற அழகுகளைப் பெற்றிருப்பதை உணர்ந்து மகிழுந்தோறும், ஒருவனுக்குப் பாஷா ஞானம் அவன் உணராமலே விருத்தியாகும். "தண்ணீர் கொண்டுவா," "உணவு வேண்டும்" "தூக்கம்வருகிறது" என்பவை போன்ற சொற்கள், சொற்றொடர்கள், பாஷையன்று. இவை ஆங்கிலத்தில் (Patois) என்று சொல்வதுபோல மிக்க ஸாதாரணப் பேச்சேயாகும். மனிதன் மனத்திற் றோன்றுங்கருத்து, மனக்கிளர்ச்சி, உணர்வு, முதலிய எல்லாவற்றையும், அவை எவ்வளவு அற்ப விஷயமாக இருந்தாலும் ஸரி, எவ்வளவு உயர்ந்த கருத்தாயிருந்தாலும் ஸரி, அவற்றைமனதிற் றோன்றியவாறே சிரமமின்றி வெளியிட உபயோகமாகவுள்ள சிறந்த கருவியே, பாஷையாகும். ஆதிகாலத்தில் எழுதத்தொடங்கிய எந்தத் தமிழ்ப் புலவரும் "பேசுவதுபோல எழுதுந்தமிழ்" என்ற சொற்றொடரில் அமைந்துள்ள கருத்தைத் தழுவிதான் எழுதியிருக்கிறார்களேயன்றி, அப்படித் தழுவாமல் எழுதவில்லை. அவ்விதம் எழுதியிருப்பின் அவர்கள் காலத்திலேயே ஒருவரும் அந்த நூல்களைப் படித்திருக்க மாட்டார்கள். இக்காலத்தில் சாமானியருக்குப் பொருள் விளங்காத பதங்களாகிய "பணிமடங்கிற்று" "இழிந்தான்" முதலிய பதங்களை எடுத்தாண்ட நல்லிசைப் புலவர்கள், ஜனங்கள் உபயோகிக்கும் பதங்களையே எடுத்தாண்டிருக்கிறார்கள் என்ற உண்மை, இக்காலத்தில் இன்றைக்கும் கிராமத்தில் உள்ள ஸ்திரீகளும் மேற்கூறிய பதங்களை உபயோகித்து வீட்டில் பேசுகிறார்கள்என்பது கேட்போருக்கு மிக்கவியப்பைத் தரும். ஆகவே தமிழ்க்கல்வி நிரம்பப் பெறாதவர்களுக்குப் பொருள் விளங்காத பதங்கள் பொது

ஜனங்களால் ஸாதாரணமாக ஆளப்பெற்று வருகின்றனவென்பதற்கு இது ஓர் சான்றாகும். இன்னும் எண்ணிறந்த உதாரணங்களை யெடுத்துச் சொல்லலாம்.

அன்றியும் பழைய நூல்களைப் படிப்பதால் முன்னோர்கள் இவ்வளவு சிறந்த நூல்களை எழுதியிருக்கிறார்கள், தேசம் அக்காலத்தில் இவ்வாறு இருந்தது என்ற உணர்ச்சியையும், பெற்று, கல்விச்செல்வம் பொருட்செல்வம் ஆகிய இருவகைச் செல்வத்திலும், தேசத்தை இன்னும் சிறப்புற்றோங்கச் செய்யும் ஊக்கமாகிய மேன்மை வாய்ந்த தேசாபிமானத்தையும் பெறலாம்.

நூல்களைப் படிப்பதால், ஆராய்ந்தறியும் சக்தி விருத்தியாகும். அழகுள்ள பதார்த்தம் இவை, அழகில்லாத பதார்த்தம் இவை, என்று பகுத்தறியும் சக்தி வரும். சிறந்த நூல்களைப் படித்தறிவதால், சிறந்த கருத்துகள், அத்தகைய சிறந்த கருத்துகளைத் தெரிவிக்கும் சொற்றொடர்கள் முதலியவற்றில் ஆனந்தமுண்டாகி, கருத்துகளை உள்ளதை உள்ளவாறு வெளியிடும் பதங்களை உபயோகியாமல் தெளிவின்றிச் சுற்றிச் சுற்றிச் சொல்லும் இயல்புடையவர்கள் எழுதும் நூல்களில் மனம் நாடாது. எதையும் படிப்பது என்றவழக்கம் அத்துணைச் சிறந்ததன்று. "ஆராய்ந்தமைவுடைய கற்பதே" சிறந்த குணமாகுமாதலால், இவை சிறந்த நூல்கள், இவை சிறந்தவை யன்று, என்று பகுத்தறியும் சக்தி சிறந்த நூல்களைப் பபடிப்பதாலன்றி வேறு மூலமாக வரமாட்டாது. ஒரு பாஷையில் கல்விசைப் புலவர்கள் இயற்கையிலுள்ள எந்தெந்தப் பொருள்களைப் பெரிதும் பாராட்டி யெழுதுகிறார்கள், எவற்றைக்கண்டு ஆனந்தித்திருக்கிறார்கள், எந்தெந்தக் கருத்துகளைச் சிறந்ததாக எண்ணி யிருக்கிறார்கள், எந்தெந்தப் பதச்சேர்க்கையால் அரிய பெரிய விஷயங்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள், இம்மாதிரியே வேறுபாஷைகளில் எந்த புலவர்களேனும் எழுதியிருக்கிறார்களா, அவ்விதம் எழுதியிருப்பின் அவர்கள் கருத்துகளுக்கும் கருத்துகளைத் தெரிவித்த விதத்துக்கும் இவர்கள் கருத்துகளும், அவற்றைத் தெரிவிக்கும் விதத்துக்கும் உள்ள ஒப்புயர்வு எவையென விசாரிக்கத் தொடங்குங் காலத்தில் ஆராயும் சக்தி, சீர்தூக்கிப் பார்த்து உண்மையைச் சொல்லும் பழக்கம், அழகில் விருப்பு, அவலக்ஷணத்தில் வெறுப்பு, முதலிய நற்குணங்கள் மாணாக்கர்களுக்கு ஏற்படும், அழகில் விருப்பமேற்பட்டகாலத்தில், அழகுள்ள நடையிலும் விருப்பம் ஏற்பட்டு ஒழுக்கமும் மேம்படும்.

இவ்விதம் ஒருவனுடைய பாஷா ஞானத்தையும் அது மூலமாக அவன் ஒழுக்கத்தையும் நல்லாசிரியர் எவ்வாறு விருத்திசெய்யக்கூடும் என்ற விஷயத்தை இனி விசாரிப்போம்.

C. P. வேங்கடராமய்யர், எம். ஏ., எல். டி.

உபநிஷத் ரத்தினமாலை

THE SUMMARY OF THE MINOR UPANISHADS

31. பஹ்வருசோபநிஷத் (107)

இவ்வுபநிஷத் மஹார்த்தவைபவ ரூபமாகவிருக்கும் அகண்டானந்த ஸாம்ராஜ்யமான ராமசந்திர பதத்தை வணங்குகிறேன்.

முதலில் இருந்தவள் தேவி ஒருவளே. அவளே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்தாள். அவளுக்கே காமகலை என்றும் ச்ருங்கார கலை என்றும் பெயர். இவளிடமிருந்தே ப்ரஹ்மா உண்டானார். விஷ்ணு ருத்ரர், ஸகல தேவர்கள், கந்தர்வர்கள் அப்ஸரஸ்ஸுக்கள், கின்னரர் முதலியோர் உண்டானார்கள். போக்ய வஸ்துக்கள் உண்டாயின. சக்தியுள்ளவை எல்லாம் இவளிடமிருந்தே வெளிப்பட்டன. அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் ஜராயுஜம், (முட்டை, வியர்வை, பூமிப் பிளவு, கருப்பை இவைகளிலிருந்து பிறப்பவைகள்) எல்லாம் உண்டாயின. ஸ்தாவர ஜங்கமங்களும் பிறந்தன. இவள்தான் பராசக்தி.

இவளுக்குச் சாம்பவி வித்தை என்றும், காதி வித்தை என்றும், ஹாதி வித்தை என்றும், ஸாதி வித்தை என்றும் ரஹஸ்யமான பெயர்களும் உண்டு. ப்ரணவரூபியான இவள் வாக்கிலிருந்துகொண்டு முப்புரங்களாகிய மூன்று சரீரங்களிலும் பரவி உள்ளும் வெளியும் விளக்கிக்கொண்டிருக்கிறாள். தேசம் காலம் வஸ்து இவைகளுடன் ஸம்பந்தப்பட்ட மஹாத்திரிபுர ஸுந்தரியாகிய ப்ரத்யக் சித் ரூபமாகிய இவளே ஆத்மா. இவள் நீங்கலான மற்றவைகள் எல்லாம் அஸத்யம்; அனாத்மா. இந்த ப்ரஹ்மஞான ரூபமான தேவி, பாவாபாவங்களுக்கு அப்பாற்பட்டு ஸச்சிதானந்த ப்ரவாஹமாகி முற்கூறியபடி ப்ரகாசிக்கிறாள்.

எது இருக்கிறதோ அது ஸன்மாத்திரம். எது விளங்குகிறதோ அது சின்மாத்திரம். ப்ரியமான

ஆனந்த வஸ்துவே மஹா திரிபுரஸுந்தரி. நீ நான் என்று வகுத்துக்கூற இடங்கொடுக்கும் இந்த லோகமும் திரிபுரஸுந்தரியே. லலிதை என்ற பெயரை உடைய அகண்டமான ஒரே வஸ்துவே பரப்ரஹ்மம்.

பஞ்சரூபத்திற்கு அப்பாற்பட்டும் ஸ்வரூபத்திற்கு உட்பட்டும் நிற்பதால் அதிஷ்டான பாதத்வ ஸத்தே சேஷித்து நிற்கும். இதையே ப்ரஞ்ஞானம் ப்ரஹ்மம் முதலிய அபேத மஹா வாக்யங்கள் குறிக்கும். இவளுக்கே, ஷோடசீ, ஸ்ரீவித்யா, பஞ்சதசாக்ஷரீ, ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரீ, பாலாம்பிகா, களா, மாதங்கி, ஸ்வயம்வர கல்யாணீ, புவனேச்வரீ, வாராஹீ, திரஸ்கரணீ, ராஜமாதங்கீ, சுகச்யாமளா, அச்வாரூடா, ப்ரத்யங்கிரா, தூமாவதீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ, ப்ரஹ்மானந்தகலா, என்று அநேக நாமங்களும் உண்டு. அவள்தான் பரமமான ப்ரஹ்மம்.

32. கோபால தாபனீ உபநிஷத் (95) முற்பாதி

ஓம். க்ருஷ் என்பதற்கு ஸத் என்றும், ந என்பதற்கு ஆனந்தம் என்றும் பொருள். ஆகவே க்ருஷ்ணனாகிய பரப்ரஹ்மம் ஸச்சிதானந்தம். முயற்சி இன்றி எதையும் முடிக்கும் திறனுடையவராயும், வேதாந்தப் பொருளாயும், பரமகுருவாயும், புத்தி ஸாக்ஷியாயும் உள்ள க்ருஷ்ணனை வணங்குகிறேன்.

ப்ரஹ்மாவைநோக்கிமுனிவர்கள் 'யார் பரம்பொருள், மரணம் யாரைக்கண்டு நடுங்கும்? எதை உணர்ந்தால் எல்லாம் உணர்ந்ததாகும்? ப்ரபஞ்சத்தை ஆட்டிவைப்பது எது?' என்று கேட்டார்கள்.

'க்ருஷ்ணனே பரம்பொருள். கோவிந்தனைக் கண்டே மரணம் நடுங்கும். கோபீஜன வல்லபரை உணர்ந்தால் எல்லாம் உணர்ந்ததாகும். ஸ்வாஹா என்பதுதான் எல்லாவற்றையும் ஆட்டிவைப்பது' என்று மறுமொழி கூறினார் ப்ரஹ்மா.

'இவைகளை நன்றாக விளக்கவேண்டும்' என்றனர் முனிவர்கள்.

'க்ருஷ்ணன் பாபத்தைப் போக்குபவன். வேதங்களால் வெளிப்படும் அறிபவனே கோவிந்தன். அவித்யாஸம்பந்தமானவைகளை அடக்கியாள்பவர் கோபீஜனவல்லபர். மாயைதான் ஸ்வாஹா என்பது. எல்லாம் ப்ரஹ்மமே. இதை த்யானித்து உச்சரித்து ஆராதிப்பவர்கள் அழிவற்றவராவர்' என்றார். ப்ரஹ்மா. அவர் ரூபம் யாது? அவர் விஷயத்தில் உள்ள மந்திரம் யாது? ஆராதிப்பது எப்படி? விளக்கி யருளவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர் முனிவர்கள். 'நீலமேகவர்ணமுடைய யௌவன கோபரூபத்துடன் கல்பக விருக்ஷத்தடியில் உட்கார்ந்திருப்பதாக க்ருஷ்ணனை த்யானிக்கவேண்டும். செந்தாமரைக் கண்கள், நீலமேகவர்ணம், மின்னல்போல ஒளிரும் உடை, இருகை, சின்முத்திரை, துளஸிமாலை முதலியவைகள் உடையவராகி, கோபர்கள், கோபிகள் முதலியவர்களால் சூழப்பட்டு, தங்கத் தாமரைப் பூவில் யமுனைக்கரையில் உட்கார்ந்துகொண்டு விளங்கும் ஸர்வாந்தர்யாமியை த்யானிப்பவர்கள் ஸம்ஸார பந்தம் நீங்குவர்.

'அவர் விஷயமான மந்திரம் க்லீம், க்ருஷ்ணாய **கோவிந்தாய, கோபீஜன வல்லபாய ஸ்வாஹா** முற்கூறிய நான்கு விஷயங்களுடன் க்லீம் என்பதை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ளது.

'பக்தியே இவரை ஆராதிக்கும் விதம். இஹபரம் இரண்டினிலும் கிடைக்கக்கூடிய ஸுகங்களைத் துச்சமென நீக்கி இவரிடமே மனதைச் செலுத்துவதே இப்பக்தியின் ஸ்வரூபம். இதற்கே நைஷ்கர்ம்யம் என்றும் பெயர்.

'எல்லாவற்றிற்கும் ஆதாரமான இவரைப் பலவழிகளாலும் ஆராதிக்கவேண்டும். ஒரே வாயு தேஹத்துள் புகுந்து ப்ராணபானாதி ஐந்து வாயுக்களானாற்போலக் க்ருஷ்ணன் ஏகவஸ்துவாயினும் இந்த மந்திரத்தில் உள்ள ஐந்து பாகமாகவும் விளங்குகிறார்' என்று முடித்தார் ப்ரஹ்மா.

'இதோடு நிறுத்திவிடக்கூடாது. க்ருஷ்ண ஆராதன ரஹஸ்யத்தை நன்குவெளியிட வேண்டும்' என்று மன்றாடினர் முனிக்கூட்டங்கள்.

இங்கு ப்ரஹ்மா சக்ரஸ்தாபன ரஹஸ்யங்களை விரிவாக எடுத்துக் கூறுகிறார்.

'இம்மந்திரத்தை உபாஸித்து சந்திரவிஜயன் என்ற அரசன் மேலான விஷ்ணுபதம் பெற்றான். இந்த மந்திரத்தையே வாஸுதேவனாக மதிக்கவேண்டும். முதற்பதத்திலிருந்து ப்ருதிவியும்மற்றவைகளிலிருந்து முறையே மற்றைய பூதங்களும் பிறந்தன. ஆதலால் இவைகளோடு ஐந்து வ்யாஹ்ருதிகளைச் சேர்த்து உச்சரிக்கவேண்டும், என்று கூறி ப்ரஹ்மா க்ருஷ்ணனைத் துதித்தார். இது முடிந்ததும், 'க்ருஷ்ணனே பரம்பொருள், இம்மந்திரத்தை வழிபடுபவனுக்கு மாறாநிலை கைகூடும்' என்று கூறி முடித்தார்.

பிற்பாதி

முன்னொரு காலத்தில் கோபிகள் எல்லோரும் க்ருஷ்ணனோடு ஸுகித்திருந்து மறுநாட் காலையில் எழுந்ததும் 'எந்த ப்ராஹ்மணருக்கு நாம் அன்ன

தானம் செய்து க்ருதார்த்தர்களாவது?" என்று பகவானை நோக்கிக் கேட்டனர். 'தூர்வாஸ மஹரிஷிக்கே செய்து மேன்மை பெறுங்கள்,' என்றார் பகவான். 'நீர் சொல்வது உண்மைதான். அவரை அணுகி அன்னதானம் செய்தால் எங்கள் ஜன்மம் ஸபலமாகும். ஆனால் அவரை அடைய இந்த யமுனையைக் கடவாது முடியுமா? அக்கரையிலல்லவோ அவர் இருக்கிறார்! நாம் என்ன செய்வது?" என்று கோபிகள் போகும் வழி யறியாது மயங்கி நின்றனர். 'க்ருஷ்ணன் நித்ய ப்ரஹ்மசாரி என்று த்யானம் செய்து போங்கள், யமுனை வழிவிடும். இந்த தியானத்தால் ஆழம் திட்டாகியும் அசுத்தம் சுத்தமாகியும், இஷ்டங்கள் பூர்த்தியாகியும், சபதங்கள் நிறைவேறியும், அறியாதவன் அறிந்தவனாகியும் நிற்பன்' என்று யமுனையைத் தாண்ட உபாயம் சொல்லிக்கொடுத்தார். அவ்வாறே பக்தியுடன் மனனம் செய்துகொண்டு கோபிகள் யமுனையைக் கடந்து தூர்வாஸாச்ரமத்தை அணுகி, பஞ்சபக்ஷ பரமான்னத்துடன் அவரை ஆராதனை செய்தனர். இது முடிந்ததும் 'போய் வாருங்கள்' என்று தூர்வாஸர் கோபிகளுக்கு அனுமதி கொடுத்தார். 'இந்த யமுனையைக் கடந்தல்லவோ நாங்கள் அப்புறம் போகவேண்டும். இதை எவ்வாறு கடப்பது' என்று கேட்டனர் கோபிகள். 'நான் நித்ய உபவாஸி' என்று மனனம் செய்துகொண்டு போங்கள் யமுனை வழிவிடுவாள் என்றார் தூர்வாஸர். இதைக்கேட்டதும் கோபிகளுள் சிறந்தவளான காந்தர்வி முன்வந்து 'க்ருஷ்ணன் எப்படி நித்ய ப்ரஹ்மசாரியாவார், நீங்கள் எப்படி நித்ய உபவாஸியாவீர்கள்? எங்களுக்கு இதை விளக்கிவிடவேண்டும்' என்றாள். முனி கூறலுற்றார்:—

'பஞ்சபூதங்களுக்கும் தகுந்த குணங்களிருக்கின்றன, அவைகளுக்கும் குணங்களுக்கும் அப்பாற்பட்டு அவைகளுள் ஊடுருவிப் பரவி நின்று, அவைகளால் உணரப்படாமலிருப்பதாகிய ஆத்மா நான்! ஆதலால் நான் எப்படி அனுபவிப்பவனாவேன். மனத்தின் சம்பந்தத்தால் எனக்கு இந்நிலை வந்திருப்பதுபோலத் தோற்றுகிறது. ஆத்மாவாக நிற்குமிடத்து இந்நிலையே இல்லை.

'க்ருஷ்ணனை ஸாதாரணன் என்று எண்ணிவிட்டீர்கள்? ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களுக்கு ஆதாரம் அவர். ஜீவன் ஈச்வரன் என்று இரண்டு பக்ஷிகளாகி நிற்கிறார். இவைகளுள் ஒன்று ப்ரஹ்மலேசம். மற்றது ஸாக்ஷி. இவை இரண்டும் தேஹமாகிய மரத்தில் அமைந்து, ஒன்று அனுபவிப்பதாக நிற்க, மற்றொன்று அனுபவ ஸம்பந்தமில்லாத க்ருஷ்ணனே ஒழிய வேறில்லை. அவர் எப்படிவிஷயங்களை அனுபவிப்பவராவார். விஷய விருப்பமுடையவன் காமி அது நீங்கியவன் அகாமி. பிறப் பிறப்பு இல்லாது எங்கும் பரவிநிற்பவன். அழிவற்றதாய்வேதங்களால் துதிக்கப்படுவது க்ருஷ்ணனே.'

இதன்பின்னர் க்ருஷ்ணர் அவதார விஷயம், மந்திர விஷயம் ஆகிய இவைகளைப்பற்றிக் கோபிகள் கேட்க தூர்வாஸர், பரமபதம் மனிதர்களுக்கு எளிதில் அளிக்கப் பகவான் க்ருஷ்ணவதாரம் செய்தவிதம், மதுராபுரி, அதைச் சுற்றியுள்ள வன உபவனங்கள் வர்ணனம், அதனுள் உள்ள க்ருஷ்ணன் முதலியோரது ரூபம், அவைகளை வழிபட்டு மேன்மை அடைந்த தேவதைகள் விவரம், இந்த அவதார ஆராதனத்தால் விதிக்கு மோக்ஷம் இவைகளைப்பற்றி விஸ்தரித்தார். 'ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அனிருத்த ரூபங்களாகக் க்ருஷ்ணன் இந்த மதுரையில் அர்த்த மாத்திரையோடு கூடிய ஓங்கார ரூபமாக விருக்கிறார். 'நானே கோபாலன்' என்று எண்ணி த்யானிப்பவர் கோபாலனேயாகி பரமபதம் அடைவர். அதிகாரி மனத்தில் ஸதா 'நானே அவன்' (ஸோஹம்) என்பது ஊறிக்கொண்டிருக்கவேண்டும். பகவான் ஆயுதங்களும் துளஸியும் மதுரையிலேயே தங்கிவிடும். அவர் சித்ரூபமாகிய அகண்டாகார ஜ்யோதியை த்யானிப்பதால் பரமபதம் அடைவன். முற்கூறிய ஒழுங்கில் நான்கு யுகங்களிலும் வெவ்வேறாக ஆராதிப்பர். இவ்வுருவங்கள் எல்லாம் க்ருஷ்ணனே. ருக்மிணிதான் பகவத்மாயையாகிய மூலப்பிரகிருதி. வேத அவதாரங்களாகிய கோபிகளுள் சிறந்தவள். ஸங்கர்ஷணாதி ரூபங்களும் கேசிகளும் பகவானுள்ளடக்கம்.

இதன் பின்னர் பகவானை ஹ்ருதயத்தில் பக்தன் த்யானம் பண்ணும் விதம் விஸ்தரிக்கப்படுகிறது.

'பகவான் சங்கம் திரிகுணாத்மகமான ப்ரபஞ்ச காரணம், சக்ரம் சுழலும் மனம். வில் மாயை, பத்மம் ப்ரபஞ்சம். கதை வித்யை. ஆபரணங்கள் தர்மார்த்த காம மோக்ஷங்களான புருஷார்த்தங்கள். அவர் கழுத்து நிர்குணம். அவர் மாலை ஸனகாதி யோகிகள் குழைகள் ஓங்காரம். உச்சம் தலை கூடஸ்த ரூபமான பகவானே இவ்வாறு மதித்து க்ருஷ்ணத்யானம் செய்பவர்கள் மோக்ஷம் அணுகுவது திண்ணம். க்ருஷ்ணனுக்கு ஸகுணம் என்றும் நிர்க்குணம் என்றும் இரண்டு அவஸரங்கள் உண்டு. எல்லாத் தேவதா ரூபங்களும் ஸகுண ரூபமே. இவைகள் ஸாரமாகிய ஸச்சிதானந்தம் பக்தி யோகத்தால் வெளியாகும். எங்கும் பரவி ஸர்வ ஸாக்ஷியான சின்மய ரூபமே நிர்க்குண ரூபம். எந்த தேவதையைத் துதித்தாலும் அவரைத் துதிப்பதுபோலத்தான்.'

என்று இவ்வித உபதேசம் செய்து தூர்வாஸர் கோபிகளை அவர்கள் இருப்பிடம் போக்கினார்.

பர்மாவில் இந்துக்கள்

HINDUS IN BURMA

1911ஆம் மார்ச்சுமீ எடுத்த ஸென்ஸஸ் பிரகாரம் பர்மாவின் ஜனத்தொகை 10,610,256. இதில் பௌத்தர்கள் 9,273,865 பேர்களும், இந்துக்கள் 382,288 பேர்களும், மகமதியர்கள் 417,575 பேர்களும், கிறிஸ்தவர்கள் 199,680 பேர்களுமா யிருந்தார்கள். இந்தியர்களில் பெரும்பாலர் சென்னை ராஜதானியிலிருந்து வந்து குடியேறினவர்களென்று கீழ்வரும் விவரத்தால் விளங்கும்.

	ஆண்.	பெண்.	மொத்தம்.
சென்னை ராஜதானி	205,907	41,453	247,360
கீழ்வங்காளம், ஆஸாம்	72,272	4,142	76,414
வங்காளம்	55,617	12,364	67,981
பம்பாய்	10,646	2,136	12,782
பஞ்சாப்	22,572	3,023	25,595
ஆக்ரா, ஔட் ...	45,096	5,499	50,595
இந்தியாவிலுள்ள சுதேச ராஜ்யங்கள் ...	6,708	1,332	8,040

சென்னை ராஜதானியிலிருந்து குடியேறினவர்கள் பெரும்பாலும் வடசர்க்காரிலிருந்தும் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்தும் வந்தவர்களென்று ஏற்படுகிறது.

பர்மாவில் குடியமர்ந்துள்ளவர்களில் 125,496 பேர்கள் தமிழ் பாஷையும், 247,851 பேர்கள் வங்காளி பாஷையும், 122,833 பேர்கள் தெலுங்கு பாஷையும், 182,046 பேர்கள் இந்தி பாஷையும், 17,969 பேர்கள் ஒரியா பாஷையும் பேசுபவர்கள். இவர்களில் பிராமணர்கள் 20,882 (ஆண் 16,288; பெண் 4594)ம் செட்டிகள் 14,339 (ஆண் 12,636; பெண் 1,703)ம். சூத்திரர்களும் வெள்ளாளர்களும் 32,739 (ஆண் 25,395; பெண் 7344)ம், பள்ளிபடையாச்சிகள் 17,640 (ஆண் 12,589; பெண் 5051) மாக விருக்கிறார்கள். ரங்கூன் ஜனத்தொகை 293,316-இல் இந்துக்கள் மாத்திரம் 108,350 பேர்களா யிருக்கிறார்கள். மற்றைய மதத்தாரெல்லாம் இந்துக்களைவிட மிகவும் குறைந்த கணக்கினர்கள்:— பௌத்தர்களின் தொகை 97,467-ம், மகமதியர்களின் தொகை 54,634-ம், கிறிஸ்தவர்களின் தொகை 23,044-மாம்.

இந்துக்களில் ஆங்கில பாஷையை யறிந்தவர்களின் தொகை 9,092 தான். தங்கள் சுயபாஷைகளை மாத்திரம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 64,095 பேர்கள். எழுதப்படிக்கத் தெரியாமல் பர்மாவில் வந்து பிழைத்துவரும் இந்துக்களின் கணக்கு 309,101.

இந்துக்களில் 91,486 பேர்கள் பயிரிட்டும், ஆடு மாடுகளைக்கொண்டும், 2,989 பேர்கள் மீன் பிடித்தும், ஜீவனஞ்செய்து வருகிறார்கள். 3,749 பேர்கள் கனிகளிலும், மண்ணெண்ணெய்க் கிணறுகளிலும் வேலை செய்து வருகிறார்கள். 58,934 பேர்கள் கைத்தொழில் புரிந்தும், 43,175 பேர்கள் வியாபாரஞ் செய்தும் பிழைத்து வருகிறார்கள். 53,922 பேர்கள் போக்குவரவு சாதனங்களைக் கைக்கொண்டும் சரிப்படுத்தியும் வயிறு வளர்க்கிறார்கள். 12,249 பேர்கள் ராணுவத்திலும் போலீஸிலும் அமர்ந்துள்ளார். 27,438 பேர்கள் வீடுகளில் குற்றேவல் செய்தும், 7,661 பேர்கள் ராஜாங்கத்தில் சேவகஞ் செய்தும், 4,753 பேர்கள் இதர கௌரவ விருத்திகளை யனுசரித்தும் வருகிறார்கள். 81,061 இந்துக்களுடைய விருத்தி மாத்திரம் தெளிவாய்க் குறித்து விவகரிக்க வியலாததாயிருக்கிறது.

வி. சுப்பிரமணிய ஐயர், பீ. ஏ.

பகவத்பக்தர்கள்.—ஒரு யோகி நிர்விகல்ப சமாதியில் அமர்ந்து பாதை யோரமாய்ப் படுத்திருந்தார். அவ்வழியே சென்ற ஒரு திருடன் அவரைக் கண்டு இவ்வாறு யோசிக்கலாயினான். "இங்கே படுத்திருக்கும் இந்தப் பயல் திருடனாகவே யிருக்கவேண்டும். இரவில் எந்த வீட்டிலேயோ கன்னம் வைத்து விட்டு இப்பொழுது களைத்துப்போய்த் தூங்குகிறான். இவனைப் பிடித்துக்கொள்ள போலீஸ்காரர்கள் சீக்கிரத்திலேயே இவ்விடம் வருவார்கள். ஆகையால் நான் இப்பொழுதே தப்பியோடிவிடவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே அவன் 'கம்பி' நீட்டினான். சற்று நேரமானவுடனே குடியனொருவன் அவ்யோகியினிடம் வந்து, "ஓஹோ! நீ ஒரு மொந்தை ஜாஸ்தியாய் போட்டுவிட்டு இந்தக் கால்வாயில் விழுந்து புரள்றையோ? உன்னைவிட நான் பாவாயில்லேடா, நான் உன்னைப்போல இடறி விழமாட்டேண்டா" என்று உளறிச் சென்றான். கடைசியாக ஒரு யோகி அவ்விடம் வந்து, பரமயோகி யொருவர் சமாதி நிஷ்டரா யிருக்கிறாரென வுணர்ந்து, அங்கே உட்கார்ந்துகொண்டு பயபக்தியுடன் அவரைத் தொட்டு அவரது திருவடிகளை மெதுவாய்ப் பிடிக்கத் தொடங்கினார்.

கல்யாணி

KALYANI *

5-ம் அதிகாரம்

வீரசேனனும் அவன் புதல்வியும் அபாயத்தி லிருந்து தப்பிய அன்று சாயங்காலம், அவ்விடத்திற்கு 5-அல்லது 6-மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் சாராயக்கடையில் இரண்டு பேர் அன்னியர்க ளுட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு 40-வயதிருக்கும். அவன் நெட்டை, ஒல்லி, காக்காய்மூக்கன், கழுகுப் பார்வையுடையவன், கபடன் என்று காட்டுகிற முகச் சாயையுள்ளவன். மற்றையவன் 15-வயதிற் கிளையவன், குட்டை, தடி, சிவந்த முகமும் சிவந்த தலைமுடியுமுடையவன், மனநிலையின் நிச்சயத்தைக் காட்டுகிற சந்தோஷமான பெரிய கண்களை யுடையவன். அவைகள் பூனைக்கண்களா யிருந்தாலும் அலட்சியத்தையும், பயமின்மையையும், மனத்துணிவையும் காட்டின. மேசைமேல் ஒவ்வொருவன் பக்கத்திலும் சாராயம் நிறைந்த பாத்திரங்களிருந்தன. ஆனாலும் அவர்களுக்கு அதில் கொண்டாட்டமாயில்லை. ஒவ்வொருவனும் கையைக் கட்டிக்கொண்டும், மற்றொருவன் முகத்தைப் பார்த்துக்கொண்டும், மற்றையவனுடன் பேசாமலும், ஏதோ ஒன்றின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற பார்வையுடனும், இருந்துகொண்டிருந்தான். கடைசியில் இளையவன் "மாதவனை இதுவரை தாமதிக்கச் செய்யக்கூடிய எந்தப் பேய் அவனைப் பிடித்துக்கொண்டது. அவன் போன வேலைக்குத் தடை நேரிட்டதோ. அவன் கூடப் போகவொட்டாமல் என்னை நீர் கெடுத்தீர்" என்றான்.

"தனக்கு நேரிட்ட கெடுதிகளுக்குப் பதில் செய்து கொள்ள அவனே போதும். இந்த விஷயத்திற்காக இவ்வளவு தூரம் அவனுக்காக நாம் வந்தது நம்முயிருக்கு அபாயம் தேடிக்கொள்ளுவதே" என்றான் பெரியவன். "முருகா! நீர் ஒரு கோளை. இதுதான் உம்மைப்பற்றி எல்லாரும் இதுவரை நினைத்திருக்கிறது" என்று இளையவன் சொன்னான்.

"ஒருவரும் என்னிடத்தில் அப்படிச் சொல்லத் துணியவில்லை" என்று முருகன் சொல்லித் தன் கத்தியின் பிடியில் கையை வைத்துக்கொண்டு "ஆத்திரக்காரன் மடையனுக்கு மேலல்ல என்று நான் நினைக்காவிட்டால் அவனை..." என்று சொல்லி நிறுத்தித் தன் தோழன் என்ன பேசுகிறான் என்று பார்த்தான்.

"செய்வீரா? ஆனால் ஏன் செய்யவில்லை" யென்று மற்றையவன் பயப்படாமல் சொன்னான்.

முருகன் கத்தியைக் கொஞ்சம் உருவி மறுபடியும் உறையில் போட்டுவிட்டு "உம்மைப்போல் பைத்தியக்காரர்களான இருபது மடையர்களின் உயிரைக் கொல்வதிலும் அதிக முக்கியமான சங்கதி நடத்தவேண்டியதிருப்பதால்" என்றான்.

"நீர் சொல்வது சரிதான். என் ஆஸ்தியை யெல்லாம் பிடுங்கிக்கொண்டு எனக்கு அபராதமும் போட்டு இராஜாங்கத்தில்என்னை வீடும் குடித்தனமு மில்லாமல் செய்திராவிட்டால், நீர் எனக்கு இராணுவத்தில் உயர்ந்த வேலை பெற்றுக் கொடுப்பதாகச் சொன்னதை நம்ப நான் மடையன்தான். பைத்தியக்காரன்தான். எனக்கு ஏன் இராணுவத்தில் வேலை வேண்டும். என் பாட்டி என்றைக்கும் சிரஞ்சீவியா யிருப்பாளோ" என்றான் மற்றையவன்.

"சரி! கந்தப்பிரபு! ஆனால் அவளின்னும் வெகுநாள் உயிரோடிருக்கலாம். உமது தகப்பனுக்கு நிலமும் பிழைக்க வழியு மிருந்தன. கடன் கொடுக்கிறவர்களிடத்திலும் நாட்டுக்கோட்டையாரிடத்திலும் அவருக்கு வேலையில்லை. கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்துத் தமது சொந்தப் பொருளை வைத்து ஜீவித்துக்கொண்டிருந்தார்" என்றான் முருகன்.

"அவ்விதம் நான் செய்யாதது யாருடைய குற்றம்? பிசாசும் நீரும் என்னுடைய அளவிறந்த பொருளை யெல்லாம் ஒழிக்கச்செய்த உம்மைப்போன்ற மற்றவர்களும் செய்த மோசம். உம்மைப்போல் நிற்க நிழலில்லாமல் நாடோடியாகி இராணுவத்தில் சேர்ந்து படாத பாடெல்லாம் படவேணடியதாய் நேரிட்டிருக்கிறது. எல்லாம் வயிற்றுச் சோற்றுக்காகத்தான்" என்றான் கந்தன்.

"அழகாகப் பேசி என்னைப் பரிகாசம் செய்கிறதாய் நீர் நினைக்கிறீர். நான் இப்பொழுது ஜீவிக்கிறதை விடப் பட்டினி கிடக்கிறதா அல்லது தூக்குப் போட்டுக்கொள்ளுகிறதா நல்லது" என்றான் முருகன்.

"பட்டினி கிடக்கிறது யோக்யதை. அதன் முடிவு தூக்கிக்கொள்வதுதான். கிட்க்கிறது. இந்தப் புனபதியைக்கொண்டு என்ன செய்யப்போகிறீரென்று எனக்குத் தெரியவில்லை. என்னைப்போல் அவனுக்கும் பணமில்லை. அவன் நிலமெல்லாம் ஒத்தியும் அடமானமும். அதில் வருகிற வரும்படி வட்டிகொடுக்கவே காணாது. அவன் சங்கதியில் தலையிட்டு என்ன லாபமென்று நீர் எண்ணுகிறீர்" என்றான் கந்தன்.

"உம்முடைய சோலியைப்பாரும். என் வேலை எனக்குத் தெரியும். அவன் நற்குடிப்பிறப்பினன்; புத்தியும்தயையுமுடையவன். தைரியமும் சாமர்த்தியமுமுடையவன். யோக்யதையும் சாதுரியமுமுடையவன். குதிரை ஓட்டவும், குருவி சுடவும், மானைத் துரத்தவும், பருந்தைப், பிடிக்கவும் தெரிந்தவர்களை இதுவரை சேர்த்துக் காரியக்கேடாகிவிட்டது. புனபதிக்குப் படிப்பும், புத்தியும் கூர்மையுமுண்டு" என்று முருகன் சொன்னான்.

"மனிதரைத் திருடுகிறவன் வலையிலகப்படாமலிருக்கிறது நல்லதல்லவா? கோபப்படாதேயும்: கத்தியை உரையில் போடும். உம்மாலே சண்டைக்கு முடியாது. உம்மை இந்த மாதவன் நம்பும்படி என்ன செய்தீர், உண்மையைச் சொல்லும்" என்றான் கந்தன்.

"பழி தீர்த்துக்கொள்ளும் ஆசையை வளர்த்து, அவன் என்னை நம்பாமலே இருந்தான். நான் சமயம் பார்த்துக்கொண்டிருந்து, தனக்கு நேர்ந்த அவமானத்தையும் கெடுதியையும் அவன் நினைத்து மனம் புழுங்குங் காலையில் நானும் மூட்டிக்கொடுத்தேன். வீரசேனனிடத்தில் கண்டித்து நியாயம் பேசப்போவதாய் நினைத்துச் சொல்லிக்கொண்டு போயிருக்கிறான். அவன் வீரசேனனைக்கண்டு அவன் ஒத்துவரவில்லையானால் அவனைக் கொன்றுவிடுவான். அவன் எண்ணம் அவன் கண்ணில் தெளிவாக ஜ்வலிக்கிறது. இல்லையானாலும் அவன் வாயாடுவது ஒரு மந்திரியையெதிர்த்ததாகும். அதனால் அவனுக்கும் இராஜ்யத்திற்கும் விரோதமாகி அவன் ஊரைவிட்டு ஓடும்படி நேரிடும். நாமெல்லாரும் ஒன்றாய்ப் போகலாம்" என்றான் முருகன்.

"சரிதான்! இந்த நாட்டில் எனக்கு வேண்டிய தொன்றுமில்லை. மாதவனைக் கொண்டுபோவதால் நமக்கு மைசூரில் நன்மை கிடைக்குமானால் நல்லதுதான். ஆனால் எனக்கது சந்தேகம். திரும்பி வருவதற்கு முன் அவன் வீரசேனன் தலையில் ஒரு குண்டு போட்டிருப்பானென்று நம்புகிறேன். இப்படிப் பட்டவர்களுக்கெல்லாம் இதுவேண்டும். அப்பொழுது தான் மற்றவர்களுக்குப் புத்திவ்ரும்" என்றான்.

"வாஸ்தவந்தான். நம்முடைய குதிரைகள் சரியாய்த் தீனி தின்று ஆயத்தமா யிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் ஒருவேளை அப்படி நடந்து விட்டால் நாமுடனே ஓட்டம்பிடிக்கவேண்டும்" என்று சொல்லி வாசற்படிவரை போய்விட்டுத் திரும்பவந்து "இதில் என்ன வந்தாலும் அவன் செய்கிற செய்கைக்கு என் பேச்சினால் நான் அனுமதி கொடுக்கவில்லை என்று நீர் நியாயமாய் நினைப்பீரென்று நம்புகிறேன்" என்றான் முருகன்.

"நீர் சம்மதித்ததாய் நீர் ஒருசொல் கூடச்சொல்லவில்லை. அதில் சம்பந்தப்பட்டால் வரும்மோசம் உமக்கு நன்றாய்த்தெரியுமே. சரி, போய் குதிரைகளைப்பாரும்" என்றான்.

முருகன் போய்விட்டுத்திரும்பிவந்து "நாம் தொலைந்தோம். மாதவன் குதிரை அதன் கழுத்துக்கயிற்றில் மாட்டிக் கீழேவிழுந்து நொண்டியாய்ப் போயிற்று. மட்டக்குதிரை இன்று வேலையில் அலுத்துப்போயிருக்கும். அவனுக்கு வேறே குதிரை யில்லையே" என்றான்.

"உம்முடைய குதிரையைக் கொடுக்கலாமே" என்றான் கந்தன்.

"என்ன! என்னைப்பிடித்துக் கொள்ளவா? உம்முடைய நல்ல எண்ணத்திற்காக உமக்கு வந்தனம்" என்றான்.

"என்ன! ஒருவேளை வீரசேனனுக்குக் கெடுதி சம்பவித்திருந்தால்-ஆனால் நேரிட்டிருக்கு மென்றெனக்குத் தோற்றவில்லை—ஏனென்றால் நிராயுதபாணியாகிய ஒரு கிழவனை மாதவன் சுடமாட்டான். ஆனாலும் அவர்களுக்குள் ஏதாவது சண்டை நடந்திருந்தாலும் உமக்கென்ன பயம். அதிலுமக்குச் சம்பந்தமில்லையே" என்றான் கந்தன்.

"சரிதான். ஆனால் நான் அதிகாரம் பெற்று வந்திருக்கிற காரியம் எப்படிப் போகிறது."

"அந்த அதிகாரம் நீரே உமக்குக் கொடுத்துக் கொண்டதாக அநேகர் நினைக்கிறார்கள். உம்முடைய குதிரையை நீர் கொடுக்காவிட்டால், என் குதிரையை நான் கொடுக்கவேண்டும்" என்றான் கந்தன்.

* An adaptation of *Bride of Lammermoore.*

"உம்முடைய குதிரையையா?"

"ஆம். என் குதிரையைத்தான். ஒரு கவுரவமான ?ற்று விஷயத்தில் ஒரு மனிதனுக்குத் துணை செய்கிற தாகச் சொல்லி அவனுக்கு உதவியுஞ் செய்யாமல் ஆபத்திலிருந்து தப்புவிக்கவு முதவாமல் போனேன் என்கிற பெயர் எனக்கு வரக்கூடாது" என்றான்.

"குதிரையை அவனுக்குக் கொடுக்கப் போகிறீரா. அதனாலுண்டாகும் நஷ்டத்தைப்பற்றி யோசித்தீரா?" என்றான் முருகன்.

"நஷ்டமா! என் குதிரை 500 ரூபாவுக்கு வாங்கினதுதான். ஆனால் அவனுடைய மட்டக்குதிரை கொஞ்சம் பெறும். மற்றக் குதிரை அதற்கு இரட்டிப்பிருக்கும். அதற்கென்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும். கொஞ்சம் பூச்சுப் பூசினால்..."

"சரிதான். ஆனால் அது பூசிக் குணத்திற்கு வருவதற்கு முன் உம்மைப் பிடித்துத் தூக்கில் போட்டு விடுவார்கள். மாதவனை உடனே பின்தொடர்ந்து ஆள் தேடி வரும் என்று நிச்சயமாய் நம்பிக்கொள்ளும். காட்டுப் பக்கத்தில் நமக்கு விடுதி வைத்துக்கொண்டோமில்லை" என்றான் முருகன்.

"அப்படியானால் என் குதிரையை அவனுக்காக விட்டுவிட்டு இப்பொழுதே நான் போகிறேன். நில்லும், நில்லும்—இதோ வருகிறான். ஒரு குதிரைக்காலடிச் சத்தங் கேட்கிறது" என்றான்.

"நிச்சயமாய் ஒன்றே ஒன்றுதானா? அவனைத் தூரத்திக்கொண்டு வாருங்கள். மூன்று நான்கு பேர் பின்னாலே குதிரைகளில் வருவார்கள். அதிக குதிரைகள் வருகிற சப்தம் கேட்கிறது" என்றான் முருகன்.

"சீச்சீ. சாராயக்கடைக்கிழவி இரும்புகட்டிய பாதக்குறடு போட்டுக்கொண்டு காறைத் தரையில் நடக்கிற சத்தம். உம்முடைய காரியத்தையும் வேலையையும் நீர் நிச்சயமாய் விட்டொழிக்க வேண்டும். காட்டுக்கோழி பயப்படுவதுபோல் பயப்படுகிறீரே. ஆ! இதோ மாதவன் வருகிறான். முகத்தைத் தாழப்போட்டுக்கொண்டு வருகிறான்" என்றான்.

மேல் துணியால் தன்னை மூடிக்கொண்டும், கையைக் கட்டிக்கொண்டும், மனத்தளர்ச்சியோடும், கடுமையான பார்வையுடனும் மாதவன் அந்த அறையில் பிரவேசித்து மேல்போட்டிருந்த உடையை நீக்கிவிட்டு ஒரு நாற்காலியில் விழுந்து யோசனையி லாழ்ந்துகிடந்தான்.

"என்ன சம்பவித்தது? என்ன செய்தீர்?" என்று இருவரும் கேட்டார்கள்.

"ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லையா! அந்தக் கிழட்டுத் துன்மார்க்கனைச் சந்தித்து அவன் உமக்கும் உலகத்தாருக்குஞ் செய்த தீங்குகளுக்காகச் சிக்ஷிக்கத் தீர்மானித்துக்கொண்டு சென்றீரே. அவனைப் பார்த்தீரா?"

"பார்த்தேன்."

"அவனைக் கண்டும் பழைய வன்மத்தைத் தீர்க்காமல் விட்டுவிட்டு வந்தீர். புனபதி இப்படிச் செய்வாரென்று நான் எதிர்பார்க்கவில்லை" என்றான் கந்தன்.

"நீர் என்ன எதிர்பார்த்தாலுஞ் சரிதான். ஐயா! என் செய்கைக்குக் காரணம் உமக்குச் சொல்லவேண்டியதில்லை" என்றான் மாதவன்.

கோபத்தோடு பதில் சொல்லப்போன கந்தனைக் கைம்மறித்து "கந்தப்பிரபுவே! பொறுமையாயிரும். புனபதிக்குத் தடை என்னவோ நேரிட்டிருக்கிறது. ஆனால் உம்மையும் என்னையும்போல அவர் சங்கதியில் அசக்தியுடைய சிநேகிதருக்கு அதன் விபரம் அறியவுண்டாகும் ஆவலை அவர் தீர்க்கவேண்டும்" என்றான் முருகன்.

"சிநேகிதர்காள்! நீர் அப்படிச் சொல்ல நமக்குள் எவ்வளவு பழக்கமாகிவிட்டதென்று எனக்குத் தெரியவில்லை. என் முன்னோர்களின் அரண்மனையை அபகரித்து உரிமையொன்றுமில்லாமல் கைப்பற்றிக்கொண்டிருக்கிற மனிதனைக் கண்டு வந்தவுடன், இந்நாட்டை விட்டு ஒன்றாய்ப் போவதாகச் சம்மதித்திருக்கிறது தான் சிநேகம்போலிருக்கிறது" என்றான் மாதவன்.

"மெய்தான்! புனபதி! உமக்குத் தீங்கு விளைக்கக் கூடிய ஒரு ஆபத்தில் உமது கழுத்தை நீர் மாட்டிக் கொண்டதால், எங்கள் கழுத்திற்கும் கயிறு வருகிறதாயிருந்தாலும், நானும் இவரும் மரியாதைக்கு இங்கே தங்கியிருந்தோம். இவருக்கு இதனால் ஒன்றும் விசேஷமில்லை. இவர் பிறந்த க்ஷணத்திலேயே இவர் தூக்குண்டு சாகவேண்டியவரென்று இவர் முகத்தில் தெளிவா யெழுதியாகிவிட்டது. ஆனால் மற்றொருவனுக்காக எனக்கந்தக் கதி வந்து என் குலத்திற்கு அபகீர்த்தி தேடிக்கொள்ள எனக்குப் பிரியமில்லை" என்றான் கந்தன்.

"கனவான்களே! உங்களுக்கு நான் அசௌகரியமுண்டாக்கி யிருந்தால் அதற்காக விசனப்படுகிறேன். ஆனால் உங்களுக்குச் சமாதானஞ் சொல்லாமல் என் விஷயங்களில் நல்லதெதுவென்று தீர்மானிக்குமுரிமை எனக்கு வேண்டும். என் எண்ணத்தை மாற்றியிருக்கிறேன். இவ்வருஷம் இந்நாட்டைவிட்டுப் போவதாய் எனக்கு அபிப்பிராயமில்லை" என்றான் மாதவன்.

"புனபதி! நாடுவிட்டுப் போகவில்லையா. இவ்வளவு சிரமத்திற்கும் பணச்செலவுக்கும் பிறகு போகாமலிருக்கிறதா? எவ்வளவு சாமான் செலவு, எவ்வளவு நஷ்டம்" என்றான் முருகன்.

"ஐயா! அவ்வளவு சுருக்காக இந்தத் தேசத்தை விட்டுப்போக நான் எண்ணின காலத்தில் போகிறதற்கு வேண்டிய ஏற்பாடு நீர் செய்கிறதாகச் சொன்னதற்கு நானிணங்கினேன். என் எண்ணம் மாறினால்கூட உம்மோடு போகிறதாக உறுதி சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை. நீர் எனக்காக அடைந்த தொந்தரைக்காக நான் விசனப்படுகிறேன். அதற்காக வந்தனமளிக்கிறேன்" என்று சொல்லித் தன் உடையின் பையில் கைபோட்டு ஒரு பணப்பையை யெடுத்து "நீர் எனக்காகச் செய்த செலவுக்குச் சரியான கைம்மாறு செய்யவேண்டியதுதான். இந்தப் பையிலிருக்கிற பணத்தில் உம்முடைய மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நீர் செலவுசெய்த பணத்தை யெடுத்துக் கொள்ளும்' என்று நீட்டினான்.

அப்பொழுது கந்தன் தடுத்து "அந்தப் பையை வாங்க உம்முடைய விரல்களுக்குத் தினவுண்டாகிறது போலிருக்கிறது. அதைத் தொட்டால் விரல்களை வெட்டிவிடுவேன். புனபதி மனத்தை மாற்றிவிட்டபடியால், நாம் இனி ஒரு நிமிஷமும் இவ்விடத்தில் நிற்கவேண்டாம். ஆனால் முதலில் நான் அவருக்கு ஒரு சங்கதி சொல்லவேண்டும்—" அவனுக்கு முந்தி "அவர் நம்மைவிட்டுப் பிரிவதால் அவருக்குண்டாகக் கூடிய அசௌகரியங்களையும், இங்கே இருப்பதால் அவருக்குண்டாகு மிடையூறுகளையும், நம்மோடு போகாமல் தனித்து மைசூருக்குப் போவதாலுண்டாகும் கஷ்டங்களையும் பற்றி முதலில் நான் அவருக்குச் சொல்லிவிடுகிறேன். பிறகு நீர் என்ன வேண்டுமானாலுஞ் சொல்லிக்கொள்ளும்," என்று முருகன் கூறினான்.

"ஆண்மையும், கண்யமுமுள்ள ஒருவனுடைய சிநேகத்தை இழப்பதையும் தவிர" என்றான் கந்தன்.

"கனவான்களே! தாற்காலிகமான நமது சேர்க்கைக்கு நான் நினைத்திருப்பதிலும் அதிகப் பிராதான்யம் நீங்கள் கொடுக்கிறீர்கள். நான் மைசூருக்குப் போனால் தந்திரோபாயஞ் செய்கிற ஒரு நாடோடியின் அநுகூல வார்த்தையாவது அல்லது உக்கிரமுள்ள வாயாடியின் சிநேகமாவது எனக்கு வேண்டியதில்லை," என்று சொல்லிவிட்டுச் சடக்கெனவெழுந்து வெளியில் போய் மாதவன் தன் குதிரைமேலேறிச் சவாரி விட்டுவிட்டான்.

"ஐயோ! நான் சேர்த்துவைத்திருந்த ஆள் போய் விட்டதே" என்றான் முருகன்.

"ஆம்! தூண்டில் முள்ளையும் எல்லாவற்றையும் இழுத்துக்கொண்டு மீன் போய்விட்டது. நான் பொறுக்கக் கூடியதிலும் அதிகமாக என்னை அவமானப்படுத்திவிட்டான். நான் அவனைத் தொடர்ந்து செல்லுகின்றேன்," என்றான் கந்தப்பிரபு.

முருகன் கூடவருவதாய்ச் சொன்னான். "கூடாது. வேண்டாம். நான் வருகிறவரை நீர் இங்கே மூலையில் குளிர்காய்ந்துகொண்டிரும்" என்று சொல்லி கந்தன் அறையைவிட்டுப் போனான்.

S V. கள்ளபிரான் பிள்ளை பி. ஏ.

நியாயமஞ்சரி

POPULAR MAXIMS EXPLAINED

गड्डलिका प्रवाह न्यायः

గడ్డలికా ప్రవాహ న్యాయః

கட்டலிகா ப்ரவாஹ ந்யாயம்

ஆட்டுமந்தை ப்ரவாஹ ந்யாயம் என்பது இதன் பொருள். ஒரு மந்தையில் முதல்போன ஆடு ஆற்றில் சென்று விழுந்துவிடுமாயின், பின்னுள்ள ஆடுகள் என்ன தடுத்தும் அடங்காது அந்த ஆற்றிலேயே போய் விழும் ஸ்வபாவம் உடையன. இதுபோல முன்பின் யோசனை யின்றி முன்னுள்ளவர் செய்வது போல செய்துவிடும் குணமுடைய உலகில் உள்ள பாமரர்கள் விஷயத்தில் இந்நியாயம் உபயோகப்படும். ஒருவனுக்கு காஷாயவஸ்திரம் முதலிய ஸந்யாஸக்குறிகளையிட்டு பக்கத்தில் இருவர் இருந்து அவர் பெரிய மஹான் என்று கூறித் துதித்து அவர்களைச் சேர்ந்த இருவர் புதிதாக வருவதுபோல வந்து அவருக்கு தண்டனிட்டுத் துதித்து நின்றுவிட்டால் பின்னர் வருபவர் எல்லாம் முன்பின் விசாரிக்காது வேஷதாரிக்கு வந்தனை வழிபாடுகள் செய்யத்தொடங்குவர். வேஷக்காரன்பாடு மிகுந்த கொண்டாட்டமாகிவிடும். இங்கு ஜனஸமூகம் ஆடுகள் போலத்தான். கூட்டத்தில் ஒருவனை சும்மாவாகவாவது திருடன் என்று ஒருவன் கூக்குரலிட்டுக் கொண்டு அடிக்கத் தொடங்கிவிட்டால் போதும்; வந்துபோகும் மற்றவர்கள் எல்லாம் ஒன்றையும் விசாரியாது ஒவ்வொரு அடி அடியாது விடார்கள். நன்றாக அடித்துவிட்டுத் தான் என்ன ஸங்கதி என்று கேட்பார்கள். ஒரு விஷயத்தில் ஒருவனுக்குத் தேர்ச்சியிருந்துவிட்டால் அவன் மற்ற விஷயங்களிலும் தலைமை வஹிக்கத்தகுந்தவன் என்று அவனை ஆராயாது பின்பற்றும் குணமும் ஜனங்களுக்கு உண்டு. அபவாத மொழிகளை வெறும் கேள்வி மாத்ரத்தில் உண்மை என நம்பிப் பரவச்செய்து ஒன்றையும் விசாரியாமல் எல்லோரும் அது உண்மை என்று நம்பி மேல் காரியம் பார்க்கத்தொடங்குவதும் நம்முள் வழக்கம். ஆகவே ஸூக்ஷ்ம விஷயங்களில் ஜனஸமூகம் ஆடுகளைப் போலத்தான். உலக அபிப்ராயமும் இத்தகையதுதான். இதுபற்றியேதான் மோக்ஷ ஆசை உடையவன் உலக

வாஸனையாகிய நல்லவன் என்று பேரெடுக்கவேண்டும் என்ற ஆசையைநீக்கி, சாஸ்திர ஒழுங்குப்படி எது வரினும்உறுதியாக நடந்தேதீரவேண்டும் என்ற விதிபிறந்துள்ளது. இம்மாதிரியேதான் சில கூட்டத்தார்களுள் ஒருவன் பாபத் தொழில் செய்து விட்டால் கூட்டக் கட்டுக்காக எல்லோரும் அதற்கேற்ப ஒழுகி ந்யாயம் கருதாது ஆடுகள் போல நடப்பர். இலக்கிய விஷயங்களை அர்த்தப்படுத்துங்கால் தமக்கு விளங்கினும் ஸரி இல்லாவிட்டாலும் ஸரி அல்லது கேட்போர்களுக்கு விளங்கினாலும் ஸரி, இல்லாவிட்டாலும் ஸரி பெரியோர் கூறியதுபோல பொருள் கூறி, மேல் தகுந்தபடி அதைப்போதிக்க முயலாது விட்டுவிடுவது சிலவித்வான்கள் வழக்கம். இவர்களைப்பற்றி ஆடுகள்போலப் பெரியோர்களைப் பின்பற்றுபவர்கள் என்றும், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்றும் கூறுவதுண்டு. எவ்வெவ்விடங்களில் ஸ்வந்த ஆராய்ச்சி, முடிவு முதலியவைகள் இன்றி மூடத்தனமாய்ப் பின்பற்றும் விஷயம் காணப்படுகிறதோ அங்கெல்லாம் இந்யாயம் உபயோகப்படும்.

54. गुडजिह्विक न्यायः

గుడజిహ్వక న్యాయః

குடஜிஹ்விக ந்யாயம்

வ்யாதிநீங்கக் குழந்தைகளுக்குவேப்பங்கொழுந்தை அரைத்துக் கொடுக்கவேண்டிவரும். இதுவோ கசப்பு. குழந்தை இதை உட்கொள்ளாது. அப்பொழுது தாய் தந்தையர், அதைத் தின்றுவிட்டால் சர்க்கரை தருகிறேன் என்று ஆசைகாட்டிக்கூறி அதைத் தின்ன செய்வது வழக்கம். தின்றுவிட்டால் சர்க்கரை கிடைக்கும் என்ற ஆசையுடன் குழந்தைகள் அதைத்தின்று, தின்ன சர்க்கரையும் வாங்கிக்கொண்டு ஆனந்திக்கும். இதைத் தின்றதால் குழந்தைக்குச்சர்க்கரை மாத்திரம்தான்லாபமோ? இது அதைத்தின்னுவதற்காக ஏற்பட்ட ஆசைகாட்டும் வஸ்துவல்லவா? ஆதலால் இது அவாந்தர (இடையில் வந்த) பலன். முக்யபலன் வ்யாதிநீக்கம். பின்னர்மருந்து வ்யாதியை நீக்கிக் குழந்தைக்கு ஸுகத்தைத் தானேகொடுக்கும். இவ்வழியின்றி குழந்தைவ்யாதியை இவ்வளவு எளிதாக நீக்குவதுகடினம். குழந்தைக்குமுதலில் மருந்து வ்யாதியை நீக்கும் என்று தெரியாது. மருந்துகசக்கும் என்று மாத்திரம் தெரிந்திருந்ததால் இந்தத் தந்திரம் வேண்டி யிருந்தது. அதற்கு மருந்து கொடுப்பதின் நோக்கமும் விளங்கமாட்டாது. மருந்துதின்றால் சர்க்கரை கிடைக்கும் என்று எண்ணியே புத்தி தெரியும் வகையில் அது சாப்பிட்டு வரும். தெரிந்து விட்டால் பின்னர் சர்க்கரைப்பலனை உத்தேசிக்காமல் எவ்வளவு கசப்பாயினும் அது கொடுப்பதன் கருத்தை உணர்ந்து அது நேராக அதைக் குடிக்கத் தொடங்கிவிடும். பின்னர் அதற்குச் சர்க்கரை காட்டி மருந்து கொடுக்கவேண்டியதில்லை. இந்த விஷய ஸம்பந்தமானது இந்த ந்யாயம்.

இந்த விஷயத்திற்கு முக்யமாக மதவிஷயப் பொருத்தம்தான் உண்டு. நமது மனம் எப்பொழுதும் வெளிநோக்கியே சென்று ஸதா உலகலாபத்தை உத்தேசித்துத் தொழிற்படும் ஸ்வபாவத்தை உடையது. இது உள்ளடங்குங்கால் ஏற்படும், சஞ்சலம் நீங்கிய ஓய்வின் ஸுகம் இன்னது என்பது நமக்குவிளங்கவில்லை. இந்த வாழ்க்கைநோக்கமாகிய சாந்தவிஷயதிடஞான நிலையை நோக்கில் நாம் எல்லோரும் சிசுப்பிராயம்தான். நமக்கு இவ்விஷயத்தில் புத்தித்தெளிவு ஏற்படவில்லை. இந்த அறியாமை என்ற வ்யாதியைத் தீர்க்க வேதங்கள் மனிதன் வெளி வ்யாபாரத்தை ஒட்டியே கர்மங்களை விதித்து அவைகளுக்குக் கூடியவரை இஹலோகபலன் அதிகமாக இல்லாமலும் ஏற்படுத்தியிருக்கிறது. அப்படி இருந்தும் பலன் தெரியாவிட்டால் குழந்தைகள் போன்ற நமக்கு அவைகளில் ப்ரவிருத்தி ஏற்படாது என்று மதித்து வேதம் அப்பொழுது இல்லாது பின் வரப்போகிற ஸ்வர்காதி பலன்களை வெகு அழகாக வர்ணித்துக் காட்டிவிட்டது. இதைக் கண்டு வேதத்தின் உள்நோக்கத்தை உணரச் சக்தி இல்லாது இந்த மலர்ந்த வாசகமே சதமென நம்பி முதலில் கர்மங்களில் முயலுகிறோம். சிற்சில பலன்களும் உலகமுறையில் வருகின்றன. இவைகள் நமது கர்மங்களால் வந்தவை என்று சற்று நம்பி கர்மங்களை விடாதுசெய்கிறோம். இந்த நம்பிக்கையால் ஏதாவது ஆபத்துக்கள்வரும்பொழுது 'இப்பொழுது வரும் பலன் முன்செய்த கர்மபலனாகவும் இருக்கலாம்' என்ற வேதவாக்கை யுக்திபூர்வமாக விசாரித்து ஒருவாறு அமைதியுடன் இருந்து கர்மங்கள்செய்கிறோம். இவைகளுக்கு பொதுவாக உலக லாபவிஷய ஸம்பந்தம் அதிகமாக இல்லாததால் வரவர மருந்து போல இவைகள் மனதைச் சுத்தப்படுத்துகின்றன. மனச்சுத்தம் வந்ததும் அது வியவஹாரத்தில் இருந்து ஒடுங்கிவர ஒருவித ஓய்வுஸுகமும் உண்டாகும். இந்த ஸுகம் தான் முடிவு என்று நாம் எண்ணியபோதிலும் இதற்கும் மேல் ஞானகாண்ட ரஹஸ்யத்தை வெளியிட்டு வேதம் மனதின்விஷயப்ரவிருத்தி முழுவதையும் தடுத்து அதன் ஸ்வரூபமாகிய ஆனந்த வஸ்துவில் அதை ஒளியிழக்கும்படி செய்து, ஜனனமரணவ்யாதியைக் கர்மங்கள் மூலமாக நீக்க முயலுகிறது. இந்த அந்தரங்க வேதநோக்கமும், இதை வெளியிடும் ஞான

காண்டபாகம் கர்மகாண்டாதிகாரிகளாகிய நமக்கு விளங்காது. இதுமாத்திரமன்று, இவைகளுக்கு விபரீத அர்த்தம் பட நமக்குப் பயமும் வெறுப்பும் உண்டாகி விடும்.

இந்த ந்யாயத்தின் மத விஷயப் பொருத்த ரஹஸ்யத்தையும், வேதம் ஸாவதானமாக உள்ளதுறவு ரஹஸ்யத்தைக் கர்ம சம்பந்தமாகக் கர்ம காண்டத்திலேயே வெளியிடும் அழகையும் கைவல்யநூலாசிரியர் பின்வரும் பாடல்களில் நன்கு விளக்குகிறார்.

தினமு மண்ணுகர் பிள்ளை நோய்க்கிரங்கியே
 தீம்பண்ட மெதிர்காட்டி
கனமருந்துகள் ஒளித்துவைத்
 தழைக்கின்ற கருணை நற்றாய்போல
மனையறங்கள் மகங்கள் செய்நன்றென்று
 மலர்ந்த வாசகம் சொல்லும்
நினைவு வேறு காண் ஸ்வர்க்காமிகள்
 இந்த நிர்ணயம் தெரியாரே.

கள்ளு மூனும் நீ விரும்பினுல் மகங்கள் செய்
 காமத்தின் மனதானுல்
கொள்ளும் பெண்டொடு கலவி செய் எனில்
 இவன் குறை எலாம் தொடா னென்றே.
தள்ளும் வேதத்தின் ஸம்மதம் சகலமும்
 தவிர்வதே கருத்தாகும்
விள்ளும் இவ்விதியென் னெனில் பூருவ
 நியமமாம் விதியன்றே.

மதுவிரச்சிகள் உண்ணென்ற சுருதிபின்
 மணந்துபா ரொனல்பாராய்
மிதுனவிச்சையும் புத்திரோத்பத்தியால்
 விரும்பென்ற விதிபாராய்
இதையும் விட்டொழி அதிலைஷ்டிக
 வந்நிக்கிழச்சிக்கு இகழ்ச்சி யற்றதும் பாராய்
அதையறிந்து கர்மங்கள் ஆசைகள் ஒழிந்தா
 னந்தமடைவாயே.

ஸாதாரண விஷயத்திலும் இந்நியாயத்திற்குப் பொருத்தமுண்டு. படிப்பின் மேன்மையை உணராத சிறு குழந்தைகளைப் படிப்பிக்கையில் அதற்கு இனும் முதலியவைகள் கொடுத்துத் தூண்டுவது வழக்கம். படிப்பு அதிகமில்லாத பெண்களுக்காக ஏற்பட்டுள்ள பள்ளிக்கூடங்களில் எல்லாக் குழந்தைகளுக்கு பரிசு அளித்து அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு வரும்படி செய்வது வழக்கம். இவர்களுக்கு வயது முதிர படிப்பின் ஸுகம் தெரியவரும். பின்னர் இப்பரிசுகளும் மறைந்துவிடும். விஷயச்சிறப்பு உணராதவர்களை ஆசை காட்டி அதில் ப்ரவிருத்திக்கும்படி செய்து முடிவில் இந்த ஆசை காட்டுவதை நிறுத்தி விட அவர்களுக்கு அவ்விஷயங்களில் தானாகவே ப்ரவிருத்தி விடாது எங்கு ஏற்பட்டுவிடுமோ அவ்விஷய ஸம்பந்தமாக இந்யாயம் உபயோகப்படும். மதவிஷயம் இம்மாதிரி விஷயங்களில் மிகச் சிறந்ததாதலால் அந்தப் பொருத்தமே இந்யாயத்திற்கு முக்யமான பொருத்தம் என்று முன்னர் கூறப்பட்டது.

மாணவர் பக்கங்கள்

STUDENT'S PAGES

வியாஸ விதானம்

Essay writing

IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

REFLECTIVE ESSAYS

11. பொது விஷயங்கள்—சீதோஷ்ணஸ்திதியும் மனோநிலையும்

General Subjects—Influence of Climate on character

குறிப்பு.—முகவுரை ஸ்திதி பேதங்கள்-மனோநிலையைப் பொதுவாகத் தாக்கும் விதம்-உதாரணங்கள்-முடிவு-பொது அபிப்பிராயங்கள்.

சீதோஷ்ணஸ்திதி என்பது இவ்வுலகில் மூன்று விதமாகக் காணப்படும். அவையாவன: அதிக உஷ்ணம், அதிகக்குளிர்ச்சி, நடுநிலையாகிய இவைகளே. இவைகள் பூமியின் மத்தியபாகத்திலும், துருவ பாகங்களுக்கு அருகாமையிலும், இடைப்பாகங்களிலும் முறையே காணப்படும். இப்படி யிருப்பினும் ஒவ்வொரு இடத்திலும் ருதுக்களுக்குத் தகுந்தபடி சீதோஷ்ண ஸ்திதி முற்கூறிய மூன்றுவிதமாக மாறுவதுண்டு. அதாவது முற்கூறிய ஒவ்வோரிடத்திலும் கோடைகாலத்தில் அதிக உஷ்ணமாயும், மழை பனி காலங்களில் அதிகக் குளிராயும், மற்றையகாலங்களில் நடுநிலையாயும் காணப்படும். இம்மாதிரி அவ்வவ்வூரி லிருப்பவருக்குத் தோற்றுமே ஒழிய மற்றைய ஊராருக்குத் தோற்றாது. உதாரணமாகத் துருவ பாகத்தி லேற்படும் கோடையில் மத்தியபாகத்தவன் இருப்பினும் அவனுக்குக் குளிர் அதிகமாகவே தோற்றும். ஆயினும் அவ்வூரானுக்கு உஷ்ணம் அதிகமாயிருப்பதாகத் தோற்றும். அதுபோலவே மத்யபாகத்திலிருப்பவாது குளிர்காலம் துருவபாகத்திலிருப்பவனுக்கு உஷ்ணமாகவும், மத்திய பாகத்தானுக்கு குளிராகவும் காணப்படும். ஆகவே காலத்திற்கு ஏற்ற சீதோஷ்ண ஸ்திதி ஒவ்வொரு ஊரிலும் அவ்வவ்வூராருக்கு மாத்திரம் மாறுவதாகக் காணப்படும். மலைகளில் ஏற ஏற ஒரே காலத்தில் சீதோஷ்ண ஸ்திதி பேதங்கள் காணப்படும். உயரச் செல்லச் செல்ல ஸாதாரண வாயு அடர்த்தி குறைவதால் ஸூர்யனிடமிருந்து பூமி வாங்கும் உஷ்ணம் எளிதில் வாயுவூடு சிதறிப் போய் விடும். ஆதலால் இவ்வுஷ்ணக் குறைவு மலைமேல் குளிர்ச்சியாகத் தோற்றும். இன்னும் அநேக மூகாந்தி

ரங்களால் சீதோஷ்ண ஸ்திதி மாற்றம் ஏற்படுவதுண்டு. அவைகளுள் முற்கூறியவைகளே முக்கியமானவை.

இனி இந்த சீதோஷ்ண மாறுபாட்டால் ஏற்படக்கூடிய மனோநிலைகளின் மாறுபாட்டைப்பற்றி விசாரிப்போம். 'அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் நஞ்சு' என்பது பழமொழி. இதற்கேற்ப அதிக உஷ்ணமும், குளிரும் மனதில் உத்ஸாஹத்தை உண்டாக்கா. இவ்விரண்டும் ஒருவித சோம்பலையும் மந்தத்தையும் உண்டாக்கி ஸூக்ஷ்ம புத்தியை வளர்க்கா. இம்மாதிரி இடங்களில் இருப்பவர் பொதுவாக வாழ்க்கையில் உண்ணுவதும் உறங்குவதும் ஸுகித்தல் துக்கித்தல்முதலியமிருக குணங்களுடன் மாத்திரம்தான் இருப்பார்கள். ஸூக்ஷ்ம புத்தியால் வளரக்கூடிய நாகரீகம் முதலியன அதிகமாகக் காணப்படா. முற்றிலும் தம் நயத்தையே கருதிவிடாது, பிற நன்மையையும் கருதுவது என்ற ஸமூக வாழ்க்கை ஆதார மனோநிலை இவர்களிடம் அதிகமாக இராது. இதனால் ராஜாங்கமுறை முதலிய பொது நன்மை ஏற்பாடுகள் அதிகமாக இவர்களிடம் இரா. தம்மினத்தாருக்கு ஏதாவது ஆபத்து வருங்கால் ஒருவித முரட்டு வீராவேசம் வருமே ஒழிய நிலைத்து நின்று நாகரீகமுடையவரைப்போல் விரோதிகளைத் தடுக்கும் குணம் இவரிடம் இராது. இது தான் அதிகக் குளிர்ச்சி, அல்லது அதிக உஷ்ணம் இவைகளால் ஏற்படும் மன மாறுபாடுகள். இவ்விரண்டும் நடு நிலையாகக் கலந்திருப்பதே எல்லா விருத்திக்கும் காரணம். இந்தச் சீதோஷ்ணக் கலப்பு இருவிதமாகக் காணப்படுகின்றது. உஷ்ணத்தோடு கலக்கும் சீதளம் என்பதும், சீதளத்தோடு கலக்கும் உஷ்ணம் என்பதுமே இவைகளின் பேதங்கள். சீதளத்தோடு கலக்கும் உஷ்ணமுடைய பூமியின் நடுப்பாகங்களில் பொதுவாகப் பூஸாரம், ஸாதாரண வாயுவின் நிலை முதலியவைகள் அதிக அநுகூலமாக விராததால் செடி முதலியன நல்ல வர்ணங்கள் முதலியவைகளுடன் கண்ணுக்கு அழகாகத் தோன்றாமலும், உணவுப் பொருள்கள் முதலியன எளிதில் அகப்படாமலும், போக தேஹத்தைத் தகுந்த உடைகளால் எப்பொழுதும் போர்த்துக்கொண்டே இருந்து ஸதா சுறுசுறுப்புடன் இருக்கவேண்டியதால் இம்மாதிரியான நாடுகளில் இருப்பவர்களுக்கு ஒருவித சுறுசுறுப்பும், ஓய்வில்லா பரபரப்பும், நாகரீக விஷயம் முதலியனவும் குடிகொண்டிருக்கும். இவர்களிடம் ஸமூக வாழ்க்கை, தேர்ந்த ராஜாங்க முறை முதலிய பொது விஷயங்கள் காணப்படும். ஆனால் இவைகளை எல்லாம் தன்னயம் கருதுவதையே நோக்கமாகக் கொண்டு இவர்கள் வைத்திருப்பார்கள். இவர்களிடம் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று காட்டு முரண்டிகள் எண்ணம் இருப்பினும், பிறர்களை ஒருவாறு மதிப்புடன் நடத்தினால்தான் இந்நோக்கம் முற்றிலும் நிறைவேறும் என்ற எண்ணம் குடிகொண்டிருக்கும். இதனால் இவர்களிடம் முற்கூறிய திறத்தாரைவிட அதிகமாகப் பிறர் நன்மை கருதல், நல்லொழுக்கங்கள் எல்லாம் இருந்தபோதிலும்,எல்லாம் தம் நயத்தைக் கருதியே இருக்கும் உலகவாழ்க்கை இந்திரிய ஸுகம் இவைகளைவிட மேலான மனோநிலை இருப்பதாகவே இவர்களுக்குத் திடமாக ஒருநாளும் தோன்றாதாதலால், இவர்கள் நல்லொழுக்கம் முதலியவைகளுக்குத் தகுந்த ஆதாரம் இல்லாமல்போக அவைகள் செழித்து ஓங்கா. ஆனால் ஸமூகவாழ்க்கை பிறர் நன்மையைக் கருதல், தம் கடமைசெய்தல் முதலியவை வெகு தீவிரமாக இவர்களால் பின்பற்றப்படும். சீதளங்கலந்த உஷ்ணப் பிரதேசங்களில் இருப்பவர்கள் நல்லொழுக்க ஆதார விஷயத்தில் மிகத்தேர்ந்து சிறந்தவர்களாக விருப்பார்கள். இந்நாடுகளில் உள்ள கல்ப்பால் பூஸாரம் சிறந்ததாயும், சுற்றுமுள்ள காட்சிகள் வர்ண மிகுதி முதலியவைகளால் மிகக் கவரும் தன்மைவாய்ந்ததாயும், உணவுப்பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கும் தன்மை யுள்ளதாயும் இருப்பதால், இந்நாட்டில் வஸிப்பவர்களுக்கு உலக விஷயங்களில் ப்ரவ்ருத்தி அதிகம் எழாது ஒழிவால் ஏற்படும் உள் ஞானம் அதிகமாக விருக்கும். ஸமூக வாழ்க்கையிலும் பிறர் நன்மை கருதுவதிலும், கடமை செய்வதிலும், ஒழுக்கத்திலும், இந்த ஒழிவுக்கு ஸஹாயமாக விருக்கும் வரையில்தான் பற்று இருக்கும். தேஹத்திற்கு அப்பாற்பட்ட அறிவு ஒன்று உள்ளது என்ற உணர்ச்சி இவர்களிடம் குடிகொண்டிருக்கும்.உலக விஷயங்களில் ஒருவித துச்ச புத்தியும், உள் விஷயங்களில் ஒருவிதப் பற்றும் காணப்படும். இதனால் இவர்களிடமிருக்கும் நற்குணங்கள் தாமே மாறாது நிலைபெற்றிருக்கும். முற்கூறிய இரண்டாம் திறத்தாரைப்போல வாழ்க்கை நோக்கம் உணராது இவர்கள் ஒழுகவே மாட்டார்கள். ஆதலால் வாழ்க்கை நோக்கமாகிய சாந்த நிலையை அடைந்த மானிட ரத்னங்கள் இத்தகைய நாடுகளில் தான் ஏராளமாக விருப்பார்கள்.

முற்கூறியமூன்றுவிதமானமனோநிலை விஷயங்களும் உதாரணம் கூறியவுடன் நன்கு விளங்கிவிடும். துருவ பாகத்திற்கு அருகிலுள்ள எஸ்கிமோ ஜாதியார் முதலியோர் நாகரீகம் நிறைந்த ஐரோப்பா கண்டத்திலேயே இருந்தபோதிலும் அதிகக் குளிரால் மந்தர்களாகிவிடுகின்றனர். இதுபோலவேதான் அதிக உஷ்ண பாகங்களில் உள்ள நீக்ரோ ஜாதியாருடைய கதியும். குளிரோடு உஷ்ணம் கலந்த நாடுகளிலிருக்கும்ஐரோப்பியர், ஜபானியர் முதலியோர் ஸமூக வாழ்க்கை, பொது நன்மைக் கருதுவது, கடமை செய்வது, ராஜாங்க முறையைப் பின்பற்றுவது இவைகளில் ஈடுபட்டு மனச் சஞ்சலம் அதிகரிக்கும் வழிகளில்முயன்று ஒருவித உயர்ந்த நிலையிலிருக்கின்றனர். உஷ்ணத்துடன் குளிர் கலந்ததாயுள்ள நம் பரதகண்டத்திலிருப்பவர்களுக்கேதான் கூறிய புத்தி உலக விஷய வைராக்யம், மனிதன் தெய்வத்தன்மை,தேஹத்திற்குஅப்பாற்பட்டிருக்கும் வஸ்துவின் உணர்ச்சி முதலிய ஸூக்ஷ்ம குணங்கள் மிகச் சிறந்து காணப்படுகிறது. இதுபற்றியேதான் பரத கண்டம் கர்மபூமி அதாவது கடமை செய்து மேலான மோக்ஷம் அடைய ஏற்பட்ட பூமியென்றும் மற்றவைகள் எல்லாம் போகபூமி அதாவது, உள்விஷய உணர்ச்சி இல்லாமலே ஸுகத்துக்கானுபவ பூமி என்று கூறப்பட்டு வருகிறது

பொதுவாக நம் நாட்டவரை நாகரீகம் மிகுந்த மேனாட்டவர்கள் ஊக்கம், சுறுசுறுப்பு முதலியவைகள் அற்றவர்கள் என்று பழிப்பது இக்காலத்திய வழக்கமாகிவிட்டது. விருத்தி ஒடுங்கிவர ஏற்படும் உள் ஸுகத்தையே கருதும் நம் நாட்டவர்களை நோக்கில் பிறநாட்டவர்களுக்கும், ஆராய்ச்சி யற்ற நம் நாட்டவர்கள் சிலருக்கும் இது உண்மை என்று படலாம். நம் நாட்டு நோக்கமுணராது சாந்த வழியில் பயிலுபவர்களும் தகுந்த ஸமயங்களில் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாது நின்று சோம்பேறிகளாகவும், பயங்குள்ளிகளாகவும் மாறி முன்கூறிய அபிப்பிராயத்தைத் திடப்படுத்தலாம்.இப்படி இருந்தும் கடவுளால் அமைக்கப்பட்ட சீதோஷ்ணக் கலப்பால் நமக்கு உண்டாகியிருக்கும் ஸஹாயங்களைக் கொண்டு பெரியோர் நோக்கங்களை அறிந்து கடமைகளை ஸரிவரச் செய்து மேன்மை பெற்றவர்கள் இன்னும் இல்லாமல் ஓய்ந்து போய்விடவில்லை. ஆதலால் இவர்களை முன்னிட்டுக்கொண்டு நாம் தைர்யமாக வெளி நாட்டார் கூறும் குற்றம் தீர விசாரியாததால் ஏற்படுவது, ஆதலால் அது முழுத்தவறு என்று கூசாமல்கூறிவிடலாம். அவர்கள் வாக்கிற்கு இலக்காக இருப்பவர்கள் எல்லாம் உண்மையை உணர்ந்துஒழுகாதவர்களேயாதலால் அவர்கள் வாக்கு உண்மையல்ல, சிற்சில ஸமயங்களில் வீண் பொறாமையாலும் ஏற்படுவது என்று கூறுவதற்கு என்ன தடை?

இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள் :—

1. மலைகளும் மனோ நிலையும்.
2. ஆங்கிலம் உணர்வதன் பயன்.
3. அடிமைப் படுத்துவதால் ஏற்படும் குணதோஷங்கள்.
4. பணமும் மனோ நிலையும்.
5. நாகரீக விஷயங்களால் உண்டாயிருக்கும் குணதோஷங்கள்.
6. தனிமை அதன் இன்பமும் துன்பமும்
7. பாஷாஞான குணதோஷங்கள்.
8. சாஸ்திரஞான குணதோஷங்கள்.
9. மைதான வாழ்க்கையும் மனோநிலையும்.
10. கல்வியின் சிறப்பு.

மொழிபெயர்ப்பு விளக்கம்

Translation Models

GREATNESS OF MAN

Man has been called the 'roof of creation' but he can hardly be so called if we take his body alone into account. Though he is 'admirable', as Shakespeare puts it 'in form and moving' animals there are which are stronger, more beautiful, more majestic and better than he is in the qualities of the body. Huxley considers the horse the best built animal in creation. There is a majesty about the tusked Indian elephant to which the best wrestler can lay no claim. The bearing of a lion is more royal than that of a born king. The gait of a well-bred bull of Southern India would shame that of a warrior. The peacock's spreading its feathers is a splendid festival. Not even Nurjehan had the soft complexion of a parrot, the skylark is much more free than man chained down to earth. The cobra that spreads its hood at the sound of music, is almost divine, while the Garuda bird that sails majestically across the sky is certainly so. The pride of man then is not therefore his body. The dignity he has and the majesty of his heaven erect face are primarily due to the grandeur of the spirit that shines from within.

மனிதன் சிறப்பு

மனிதன் ஸ்ருஷ்டியுள் சிறந்தவன் என்று மதிக்கப்படுகிறான். ஆனால் அவன் உடலை மாத்திரம் கருதுங்கால் இவ்வாறு மதிக்க இடமே இல்லை. ஷேக்ஸ்பியர் கூறுவதுபோல அவன் வடிவிலும், நடையிலும் வியக்கத்தகுந்தவனாக விருந்தபோதிலும், பலம், அழகு, காம்பீர்யம், சிறப்பு முதலிய உடல் குணங்களில் அவனைவிட மேன்மையான ஜந்துக்களிருக்கவே இருக்கின்றன. குதிரைதான் ஸ்ருஷ்டியில் நல்ல உடற்கட்டுடையது என்று ஹக்ஸிலி மதிக்கிறார். நம் தேசத்துக் கொம்பன் யானையின் காம்பீர்யம், நல்லமல்லன் கூட தன்னிடமிருப்பதாகக் கருதமாட்டான். ஸிம்ஹத்தின் ராஜப்பார்வை நல்ல வம்சத்திற் பிறந்த அரசனுக்குக்கூட வாராது. கொழுத்த தென்னாட்டு எருதின் நடை போர்வீரன் நடையைப் பழிக்கும் திறனுடையது. மயில் தோகையை விரித்தாடுவது கண் குளிரும் திருவிழாப்போல விருக்கும். கிளியின் மினுக்கு நூர்ஜஹானுக்குக்கூட இல்லை. பூமியே கதியாகக் கிடக்கும் மனிதனைவிட வானம்பாடி மிகுந்த ஸ்வதந்திரமுடையது. பாட்டுக்கேட்டுப் படமெடுக்கும் பாம்பு தெய்வீகமாக விருக்கும். ஆகாயத்தில் அசையாது ஊடுருவிச்செல்லும் கருடனும் அந்தகையதே. ஆதலால் மனிதன் சிறப்பு அவன் உடலால் ஏற்படுவதல்ல. நிமிர்ந்த முகத்தால் அவனுக்கு ஏற்படும் கம்பீரமும், மேன்மையும் முக்யமாக அவன் உள்ளே ஒளிரும் ஆத்மாவின் சிறப்பையே பொருத்தது.

Stories about Mahamud of Ghazni.

One day a poor woman complained that her son had been killed by robbers in a distant desert of Irak. Mahamud said he was very sorry, but that it was difficult to prevent such accidents so far from the capital. The old woman rebuked him with the words 'keep no more territory than you can rightly govern;' and the Sultan forthwith rewarded her, and sent troops to guard all caravans passing that way.

Mahamud's liberality to poets drew the great Ferdousi to his court. The Sultan listened with delight to his Book of kings and promised him a gold coin for each verse on its completion. After thirty years of labour, the poet claimed his reward. But the Sultan finding that the poem had run to 60,000 verses offered him 60,000 silver coins instead of coins of gold. Ferdousi retired in disgust from the Court and wrote a bitter satire, which to this day tells the story of the supposed base birth of the monarch. Mahamud forgave the satire, but remembered the great epic, and repenting of his meanness sent 100,000 gold coins to the poet. The bounty came too late, for as the royal messengers bearing the bags of gold entered one gate of Ferdousi's city, the poet's corpse was being borne out by another.

மஹமத் கஜனியைப்பற்றிய கதைகள்

வெகு தூரத்திலுள்ள ஐராக்என்னும் பாலைவனத்தில் தன் பிள்ளையைத் திருடர்கள் கொன்றுவிட்டார்கள் என்று ஒரு எளிய பெண் மஹமத்திடம் முறையிட்டுக் கொண்டாள். மஹமத் மிகுந்த துயரப்பட்டு 'தலைமை நகரத்திலிருந்து வெகுதூரத்தில் உண்டாகும் ஆபத்துக்களைத் தடுப்பது அரிது' என்று கூறினான். 'ஒழுங்காய் ஆளக்கூடிய அளவுக்கு மிஞ்சியநாடுகளை வைத்துக் கொள்ளாதே' என்று கண்டித்தாள் அக்கிழவி. உடனே ஸுல்தான் அவளுக்கு வெகுமதி அளித்துவிட்டு, அவ்வழியே போகும் வ்யாபாரிக்கூட்டங்களைக் காக்கஸேனைகளை அனுப்பிவிட்டான்.

புலவர்களிடம் மஹம்மது காட்டிய உதாரண குணம் பெயர்பெற்ற பெர்டௌஸியை அவன் ஸபைக்கு வந்து சேரும்படி செய்தது. அவன் எழுதிய ராஜவம்ச புத்தகத்தை மிகுந்து ஸந்தோஷத்துடன் ஸுல்தான் கேட்டு அது முடிந்ததும் பாட்டொன்றுக்கு ஒரு பொன் காசு வீதம் கொடுப்பதாக வாக்களித்தான். முப்பது வருஷம் வேலைசெய்த பின்னர் புலவர் தமது வெகுமதியை கேட்க வந்தார். அந்தக் காவ்யம் அறுபதினாயிரம் பாட்டுகளில் முடிந்திருப்பதைக்கண்டு பொற்காசுக்குப் பதிலாக அறுபதினாயிரம் வெள்ளிக்காசு கொடுப்பதாகச் சொன்னான் ஸுல்தான். வெறுப்புடன் பெர்டௌஸி ஸபையைவிட்டுநீங்கி ஒரு கொடிய வசைப்பாட்டு பாடிவிட்டான். இவ்வரசன் பிறப்போடு ஒட்டியது என மதிக்கப்பட்ட இழிவான விஷயங்களை இது இன்றைக்கும் வெளியிடுகிறது. மஹமத் இந்த வசைப்பாட்டைமன்னித்தது மன்றி, அவன் பெரும் காவ்யத்தை நன்கு மதித்து, தன் இழிவை எண்ணி மனங்கலங்கி, கவிக்கு லக்ஷம் பொற்காசுகளை யனுப்பினான். இதைச் சுமந்துவந்த ராஜதூதர்கள் பெர்டௌஸீ பட்டணத்துள் ஒரு வாயில் வழியாக நுழைகையிலேயே வேறு வாயில் வழியாகக் கவியின் பிணம் வெளிப்பட்டுவிட்டது: ஆதலால் இந்த வெகுமதி அதிகத் தாமதித்து வந்து சேர்ந்ததாயிற்று.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்தியாயம் 16

ஆசார்யாந்வேஷணம்

ஓதிய பொறிகள் என்னும்
ஹோமகர்த் தர்க ளாலே
வாதனை விறகி னாலும்
வருபுலன் நெய்யி னாலும்
தீதுற வளர்க்கப் பட்டுத்
திரமுறச் சொலிக்கா நின்ற
ஓதிய மனம யத்தீ
யுலகெலாம் தஹிக்கா நிற்கும்.

திரிசிரபுரத்தில் ஸூர்யன் மிகக் கொடுமையாக ஒளி வீசிக்கொண்டிருந்த நடுப்பகலில், அங்குள்ளபாறை உச்சியிலிருக்கும் பிள்ளையார் கோயிலை நோக்கி அடங்கா ஆவலுடன் ஒரு யௌன புருஷன் ஏறிக்கொண்டிருந்தான். புற்பூண்டில்லாது பொட்டலாகக் கிடக்கும் அப்பாறை அவன் கால்களை நெருப்புப்போலச் சுட்டுக் கொண்டிருந்தது. அவனுக்கிருந்த களைப்பால் முன்னிரவு ஊண் உறக்கமின்றி இருந்தவன்போலக் காணப்பட்டான்: ஆயினும் விடாது மேல் நோக்கியே இவன் போகத் தலைப்பட்டான். அவன் முகத்தில் ஒரு ஆவலும், நம்பிக்கையும் விளங்கின. அவன் போகும்பொழுதே தாயுமானவர் பாடல்களில் குரு ஸ்தோத்ரப் பாடல்கள் சிலவற்றைப் பாடிக்கொண்டே போனான். மலை ஏறும் களைப்பு அதிகம் இதனால் தட்டாமலிருந்தபோதிலும் பக்தி குறையாம லிருப்பதற்கே அவன் அவ்வாறு செய்துகொண்டிருந்ததாகத் தோற்றும். அவன்:—

மன்னாத ஸ்ரீ ஜகந்நாதோ
மத்குரு ஸ்ரீ ஜகத்குரோ.

என்று அடிக்கடிப் பாடிக்கொண்டே உச்சி போகும் வரையில் தள்ளாடிக்கொண்டு சென்றான். அங்குப் போனதும் கணேசர் கோயிலுள் அவன் புகுந்தான்: ஈசுவரனைத் தரிசியாது அங்கு சுற்றிச்சுற்றி எதையோ தேடத் தலைபட்டான். அவன் சுற்றியதை நோக்கில் அவன் தேடிவந்தது அங்கு அகப்படவில்லை என்பதைக் காட்டும். கொஞ்ச நாழிகை இவ்வாறு சுற்றிவிட்டு 'நாதா! குருநாதா!!' என்று அலறிக்கொண்டு நான்கு புறமும் ஓடத் தலைப்பட்டான். எதிரொலி தான் கேட்டதே ஒழிய மறுமொழி யாதொன்றும் வரவில்லை. அவன் அடிக்கடி மிக உரக்கக் கூவத் தலைப்பட, "நாதா! நாதா!" என்று இவ்வாறு தொண்டையைக் கிழித்துக் கொள்ளுவது யாரடா! மடையா!! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?" என்ற கோபக்குரல் ஒன்று கேட்டது.

இந்த அகாலத்தில் இவ்வாறு அலறியவன் இன்னார் என்பது வாசிப்போருக்கு விளங்கி இருக்கும். மிகுந்த ஆவலுடன் ஸ்ரீநிவாஸன் குரல் வந்தவழியே சென்று நோக்கினான்! தான் ஆவலுடன் தேடிவந்த ஸித்தனை அங்குக் காணாது ஒரு கறுப்பு கிழப் பண்டாரத்தைக் கண்டு மனம் தளர்ந்தான். இப்பண்டாரம் காஷாய வஸ்திரம் உடுத்திக்கொண்டு கணேசர் நைவேதனத்திலிருந்து தனக்குக் கிடைக்கும் உண்டைக்கட்டியை எதிர்பார்த்துக்கொண்டுபாறை நிழலில் பதுங்கிக்கிடந்தான். போனதைவிட அதிவேகமாகத் திரும்பிவிட்டான் ஸ்ரீநிவாஸன்; பாபம் என்ன செய்வான்! உடனே மறுபடியும் கோயிலுள் புகுந்து விட்டான். இவன் இவ்வாறு வாரிச்சுருட்டிக்கொண்டு ஓடியதைக்கண்ட பண்டாரம், எழுந்து என்னவென்று கூடப் பார்க்காது சற்று உறுமிவிட்டு சும்மாவிருந்தான்.

இத்தருணத்தில் ஸ்ரீநிவாஸன் மனக்கொதிப்பை மனதில் நாம் சிந்தித்தறியமுடியுமே ஒழிய வாக்கால் கூறவொணாது. ஸித்தரைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் வீட்டைத்துறந்து வந்து விட்டான். ஸித்தன் வாக்கை வேதவாக்கென்று நம்பி, திரிசிரபுரம் வரும் ரயில் வண்டி ஏறி வந்துவிட்டான். ஸித்தர் இந்தத் தூரம் முழுவதும் எளிதில் பறந்து வந்து விடுவார் என்ற மூட நம்பிக்கை இவன் மனதில் குடிகொண்டிருந்தது. இப்பொழுது என்ன செய்வான் பாபம்? ஸித்தர் விஷயமாக வெளிவந்த அண்டப்புளுகுகளைஎல்லாம் அத்புத ரஹஸ்யம்என்று மதித்திருந்தான். தனக்குத் தகுந்த குரு வேண்டும் என்ற ஆவலால் தூண்டப்பட்டு தனக்குக் கிடைத்திருக்கும் குரு மனிதரூபமான கடவுளே என்று எண்ணிவிட்டான். ஆகாய கமனம் முதலிய ஸித்திகளில் இவனுக்கு விருப்பமே இல்லை: உண்மை ஞானத்தால் ஏற்படும் ஸம்ஸார பந்த நிவர்த்தியே வேண்டும் என்றுதான் இருந்தது இவ

னுக்கு. ஆனால் வித்தியில்லாது முக்தி கைகூடா தென்றும், வித்திகள் மூலமாகத்தான் உண்மை ஞானியைக் கண்டறிய முடியும்என்றும் வித்தன் கூறியிருந்தான். தான் புறப்பட்டதும் மாமனார் வீட்டிலிருந்து அவர் பெட்டியைத் தட்டிக்கொண்டு வெளியேறினான் வித்தன் என்பது தெரியாததால், வித்தனால் உண்டான முழு மோசம் இவனுக்கு விளங்காவிடினும், தன்வரையில் ஒருவாறு மோசம்போனது இப்பொழுதுதான் இவனுக்கு நன்றாகத் தெரியவந்தது. அவன் மனம் கிடந்து குழம்பியது. இன்னது செய்வது இன்னவிடம் போவது என்று ஒன்றும் விளங்கவில்லை. மாமனார் வீடுபோக அவனுக்கு மனம் வரவில்லை : தான் தாய்தந்தை இல்லா அனாதையாதலால் தான்போய்ச்சேர்வதற்கு உரியவீடு ஒன்றுமில்லை. அப்பொழுது 'நம் குரு நம்மை மோசம் செய்வாரா? என்ற மூட எண்ணம் உண்டாக 'அவர் வழியில் ஏதோ ஒரு காரியமாக நின்றிருக்கலாம். சீக்கிரம் வந்து விடுவார்' என்று ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டான். தகுந்த சிஷ்யன் தேடிப்பிடிக்க வேண்டும் என்று உண்மை ஆவலுடன் வித்தன் மதுரைக்கு வரவில்லை என்றும், அநேக எண்ணங்களுள் அவன் பெண்சாதி ருக்மிணியை அடித்துக்கொண்டு போக வேண்டும் என்ற முக்கிய ஆவலுடன் அந்தப் பயல் வந்தான் என்றும், நல்ல தருணத்தில் வாஸுதேவ சாஸ்திரி வந்துவிட்டதால் அது முடியாமல் போய் விட, வந்தவன் வெறுங்கையோடு போகாது பணப் பெட்டியை அமுக்கி விட்டான் என்றும் இவனுக்கு எப்படித் தெரியும்!

அன்றுமுழுவதும் அந்தப் பாறைஉச்சியிலேயே பட்டினியாக வித்தர் வரவை இவன் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். வித்தர் வரவில்லை. மாலைப் பொழுதில் கணேசரை நோக்கி 'உம்மை உள்ளபடி வழிபட்டதன் பலனா இது? உம்மைச் சரணம் என்றடைந்த நிரபராதியான பக்தர்களை இப்படியா மோசம் செய்வது? என்று முறையிட்டான். 'உள்ளன்புடன் கடவுளை ஒரு நாழிகையாவது நினை. அவர் கருணை கூர்ந்து உன் எண்ணங்களை நிறைவேற்றுவார். ஒரு தரம் அவர் நாமத்தை உச்சரித்தால் அவர் உனக்குக் கட்டுப்பட்டு விடுவார்' என்று பெரியோர் கூறுவர். 'அவர்கள் எல்லோரும் பொய்யர்களா?' என்று கணேசருடன் வாதாடினான் ஸ்ரீநிவாஸன். விக்ரஹம் என்ன பதில் கூறும்? கொஞ்சநாழிகை மௌனம். பின்னர் தன் பக்தி தீவிரமாக இல்லை. என்று அவனுக்குத் தோன்றியது. 'பகவானை முழுமனதோடு நான் ஆராதிக்கவில்லை' என்று எண்ணிப் பகவத்கிருபையை அடையத் தவம் செய்யத் தொடங்கி விட்டான். உடனே துருவ சரித்ரம் அவனுக்கு ஞாபகம் வந்து உதவியது. அறியாச் சிறுவன்கூட கடவுளைத் தவம் செய்து அடைந்திருக்க, எனக்கு அது அஸாத்யமா? உண்மையாக ஒருவரும் இங்குக்கடவுளை நினைப்பாரில்லை. சங்கர பகவத்பாதாள்கூறுவதுபோலக் குழந்தைகள் விளையாட்டிலும், யௌவன புருஷர் யௌவன ஸ்திரீ விஷயத்திலும், கிழவர் கவலையிலும் அழுந்திவிட கடவுளில் மூழ்குபவர் ஒருவரும் இல்லை என்பது உண்மைதான். ஆதலால் இது முதல் நான் கடவுளையே த்யானம் செய்வேன்! வேறு ஒன்றையும் நினைப்பதில்லை. பெரியோர்களைப்போல என் கண்ணீர் ஆறுகப் பெருகி மனம் கரையும் வரையில் விடுவதில்லை. கதறுவேன் அவரையாவது என் குருவையாவது காணும் வரையில் 'உண்ணேன் உறங்கேன் மேற்கருமம் பாரேன்' என்று உறுதி பண்ணிக்கொண்டு உட்கார்ந்துவிட்டான் ஸ்ரீநிவாஸன்.

அன்றிரவு முழுவதும் கண்கூடக் கொட்டாது அப்பாறையின் மேலேயே விழித்திருந்தான் ஸ்ரீநிவாஸன். தூக்கம் அவனை உறக்கியபொழுது கண்ணை நன்றாகத் திறந்துகொண்டு 'சிவ! சிவ!! சிவ!!!; என்று ஜபிக்கத் தொடங்கினான். இப்படியிருந்தும் சிற்சில ஸமயங்களில் தன்னை யறியாது ஆடிவிடுவான். அப்பொழுது கையில் தயாராக வைத்திருந்த கல்லால் தன் கால்மேல் கோபத்துடன் இடித்துக் கொள்வான். என்ன செய்தும் தன்னை யறியாது நடுநிசியில் ஸுமார் இரண்டு மணி நேரம் தூங்கிப்போய்விட்டான். பின்னர் திடீரென்று பதறி எழுந்து தூங்கிவிட்டதை உணர்ந்து தன்னைத்தானே வாயில்வந்தபடி எல்லாம் வைது கொட்டிக்கொண்டு, கால், கை, தலை முதலிய விடங்களில் கல்லால் நன்றாக இடித்துக்கொண்டான். பின்னர் ஜபம் செய்யத் தொடங்கினான். 'ஐயோ இன்னும் எனக்கு பக்தி நன்றாக வரவில்லையே' என்று ஏங்கி யழுதான். கடவுளையாவது அல்லது அவரைப் பிடித்துக் கொடுக்கும் குருவையாவது எப்படியாவது விடியும்முன் கண்டுவிட வேண்டும் என்பதே அவன் பேராவல். ஆதலால் முன்னிலும் இருமடங்கு தீவிரமாக த்யானம் செய்தான். 'கஜேந்திராழ்வார் முதலை வாயில் சிக்குண்டகாலத்தில் ஆதிமூலமே என்று ஒரு தரம்தான் கூவி அழைத்தார். கடவுள் உடனே காக்க வந்து தோன்றிவிட்டார். ஆனால் நான் சிவ! சிவ!! சிவ!!! ஸுமார் ஆயிரம்தரம் ஜபித்தாகி விட்டது. இன்னும் அவர் வரவில்லை ஆதலால் என் பக்தி யானையின் பக்தியில் ஆயிரத்தில் ஒருபங்குகூட இல்லைஎன்பதாயிற்று. இது போதாது' என்று எண்ணமிட்டுக் கொண்டு தன் முயற்சியை அதிகப்படுத்தினான். பொழுது புலர்ந்தது. கடவுள் உதிக்கவில்லை. ஸ்ரீநிவாஸன் தளர்ச்சி யடையவில்லை. தவத்தைக் கடுமைப்படுத்தினான். தன் துணி தெப்பமாக நனைய ஆனந்த பாஷ்பத்தைப் பெருகவிட்டான். கடவுள் நேராகவாவது அல்லது தமது தூதர்கள் மூலமாகவாவது தோன்றிவிடுவார் என்று ஒவ்வொரு விநாடியும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டே அன்று முழுவதும் பட்டினியாகவும் கிடந்தான். அவன் எண்ணியபடி ஒரு விசித்திரமும் நடந்தேறவில்லை. உடனே கடவுளை கொடியன், ஈவு இரக்கமற்றவன் என்று வையத் தொடங்கினான்! வசவையும் கவனியாதிருந்தார் ஈசன்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ருக்மிணி அல்லது பக்திநிலை

பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

வந்த கருமத்தை எப்படி எண்ண முடியும்?, கவலை சற்றேனுமிருந்தால் முடியும். அந்த விஷயம் பெரிய திருவடிகளிடம் பூஜ்யமாகத்தான் விளங்கியது. ஏதோ வோர் அற்ப பிராணியை அதட்டிக்கொண்டு வரவல்லவா அவர் செல்கிறார். தானழைத்து வருவது அசாத்தியமல்லவென்றவர்க்குத் திடநம்பிக்கை. பின் அவர்க்கேன் கவலை?

கண்ணிற்குப் பட்ட அழகிய தோற்றங்களைக் கண்டானந்திப்பதும் மனதிற்குத் தோன்றியவிதம் நடப்பதுமாக விருந்தால் காரியமேன் முடியும்?

கடைசியாக அக்குரங்கும் கண்ணிற்குப் பட்டது. கண்மூடிக்கொண்டிருந்த அவ்வனுமானைக் கண்டதும் பெரிய திருவடிகளுக்கு வந்த கோபத்திற்களவே இல்லை. "இந்த அற்ப பிராணியை நான் மரியாதை செய்தழைத்துப் போகவேண்டும். நிரம்ப ஸரி. மரியாதையா? செய்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு "ஹே! குரங்கே!" என்றரத்துக் கூவினார்.

அனுமார் காதில் பட்டாலும் அதைக் கவனியாது போலவே இருந்தார்.

"அடாக் குரங்கே! மிருகமே! உனக்குக் கூப்பிடுவது காது கேட்கவில்லையா?"

அப்பொழுதும் பதில் இல்லை.

"அடா! சாகாமிருகமே! உன்னைத்தானடா அந்தக் கிருஷ்ணன் கூப்பிடுகிறான்."

அப்பொழுதும் பதில் இல்லை.

குரங்கருகு நாம் போவதா என்றிருந்த பெரிய திருவடிகள் மெல்ல மெல்ல அவரிடம் வந்து அவர் எதிரில் கையைத் தட்டினார்.

அனுமாரும் "ஆ" என்று செய்கையாற் காட்டி என்ன வென்றார்.

"அடா செவிட்டுக் குரங்கே! உன்னை அழைத்து வரச் சொன்னாரடா."

"என்ன! கிருஷ்—என்றாலென்ன. கொஞ்சம் தயவுசெய்து கிட்ட வந்து சொல்லுமே."

என்ன அனுமாரை அவமதித்தாலும், அவரருகு செல்ல மனமிரங்காவிடினும், தனது கோபத்தை ஒரு பக்கம் மெல்ல மறைத்து கிருஷ்ணனது ஸேவையின் நிமித்தம் அவ்வனுமானது காதருகு வந்து காதில் ஸமாசாரத்தைப் புகன்றார்.

கோபத்தை எல்லா மடக்கிவைத்திருந்த அனுமார் "கிருஷ்ணனா? யார் அவன்?" என்றுகொண்டே கருடனது தவடையிலறைந்தான். அதைத் தாங்க முடியாத கருடாழ்வான் மனங்கலங்கி விழி பிதுங்கி பூமிமேல் வீழ்ந்து கிடந்தான்.

ஸூரியன் அப்பொழுது மேற்கடலில் வீழ யாவரிடமும் செலவு பெற்றுக்கொண்டிருந்தான். அந்தி வானத்தில் பதிந்த மேகக்கூட்டங்கள் விசித்திரம் விசித்திரமாக எண்ணியவாறு பாவப்போக்கிற்கிணங்க மலைபோலும் காடுபோலும் தோன்றும். சில சமயங்களில் அலைபாய்ந்த கரைபோலக் கண்ணிற்குப் புலப்படும். சில சமயங்களில் பலவர்ண மயங்கி மனத்திற் கானந்தமூட்டும்.

இந்த ஸமயத்து த்வாரகையில் பலராமன், நாரதன், கிருஷ்ணன் மூவரும் கவலையுடன்தான் இருந்தனர். அவரவ்வானந்தத்தைப் பார்த்தானந்திக்க மனங்கொள்ளவில்லையாயினும் உப்பரிகையின்மேலிருந்து கருடனது வரவை எதிர்பார்த்திருந்தனர். கீழிருந்து மெல்ல மெல்ல படிகளின் மீதேறி வந்த கருடனைக் கண்டதும்,

"பலே! நமக்கென்ன குறைச்சல். கருடன் அனுமாரை அழைத்து வந்து விட்டிருப்பான்" என்றார் கிருஷ்ணன்.

"கருடனது சாமர்த்தியத்தைப்பற்றிப்பேசவேண்டுமோ" என்றார் நாரதர்.

"என்ன கருடா! அவரெங்கே?" என்றார் பலராமர்.

"உங்களுக்கெல்லாம் என்னைக்கண்டால் பரிகாசமாயிருக்கிறது" என்றான் கருடன்.

"இது என்ன அதிசயம். நாங்களெல்லாம் உன்னைக் கொண்டாடிக்கொண்டிருக்கப் பரிகாசமா செய்கிறோம்" என்றார் கிருஷ்ணர்.

"சமாசாரம் சொல்வதற்கு முன் கொஞ்சம் வேடிக்கை செய்யவேண்டு மென்பதவரிஷ்டம்போலிருக்கிறது" என்றார் நாரதர்.

"அப்படித்தான். அந்த வழி அவன் செய்வதுமுண்டு" என்றார் கிருஷ்ணர்.

"நான்தான் முன்னமே சொன்னேனே—கருடன் காரியத்தைச் சாதித்துக்கொண்டுதான் வந்திருப்பான் என்று."

"ஆனால் நீங்கள் ஸந்தேஹப்படுகிறாற்போல வன்றோ இருக்கிறது?"

"இதில் ஸந்தேஹம் என்ன இருக்கிறது?"

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

பூமிக்குள் பஞ்சலோகங்கள் கண்டுபிடிக்கும் ஸ்திரீ.—பூமிக்குள் பொன் வெள்ளி முதலான பஞ்ச லோகங்களும், மற்றும் ரஸாயனங்களும் மறைந்து கிடப்பவைகளை குறிப்பாக இன்ன இடத்தில் இன்ன வஸ்து இருக்கிறதென்று சொல்லக்கூடிய ஆஸ்திரியேலியாவில் ஒரு ஸ்திரீ இருப்பதாகக் கண்டுகொண்டிருக்கிறார்கள். அநேக இடங்களில் பூமிக்குள் இருக்கும் உலோகங்களைக் கண்டுபிடித்திருப்பதால் பல தேசங்களிலிருந்தும் அழைப்புக் கடிதங்கள் பலமாக வந்துகொண்டிருக்கின்றனவாம். பொட்டாஷ் இருக்குமிடம் கண்டுகொள்ள வேண்டுமென்று கோடீஸ்வரனாகிய அமெரிக்கன் ஒருவன் இம்மாதை யுனைடெட் ஸ்டேட்ஸுக்குவரவழைத்து இடங்களைக் காட்டும்படி கேட்டபிரகாரம் இந்த ஸ்தானத்தைக் காட்டியிருக்கிறாள். பொட்டாஷ் நல்ல எருவெனத் தெரிகிறது. தற்போது ஜர்மனியர்கள் இந்த எருவை முக்கியமாகக் கொள்ளுகிறார்கள்.

*
* *

ஒரு பெரியகுழந்தை.—அமெரிகாவிலுள்ள கானடா தேசத்தில் ஒரு குழந்தைக்கு 26 மாசம், அதாவது இரண்டு வருஷம் இரண்டு மாதந்தானாகிறது. அதன் நிறை 127 ராத்தல்களாம். அதன் மார்பளவு 40 அங்குலமிருக்கிறதாம். ஹெறளதாரன் என்னும் கிராமத்திலுள்ள வொருகுடியானவத் தம்பதிகளுக்குப் பிறந்த இக்குழந்தையை இதன் பெற்றோர் தூக்கமுடியவில்லையாம். இருபது அல்லது முப்பது வயதுள்ள சாமான்ய ஜனங்களே 120 ராத்தலுக்கு அதிகமாக நிறையிருப்பதில்லை யென்றால் இந்த இரண்டு வருஷக் குழந்தை எவ்வளவு நிறை கொண்டிருக்க வேண்டும். ஐந்து அல்லது பத்து ராத்தலுக்கு அதிகமிருக்க நியாயமில்லை. அப்படிக்கிருக்க, இக்குழந்தை 127 ராத்தல் நிறையிருக்கிறதென்றால் இதை மனுஷப் பிறவி யென்று சொல்லலாமா!

*
* *

வைக்கோற் கடிகாரம்.—ஜெர்மன் தேசத்திலுள்ள ஸ்ட்ராஸ்பர்க் என்னும் ஊரில் ஒருவன் 15-வருடகாலமாகப் பிரயத்தனப்பட்டு வைக்கோலால் ஒருகடிகாரஞ் செய்திருக்கின்றான். அதில் பிறபொருள்களின் சேர்க்கை சிறிதுமில்லையாம். அது பார்வைக்கு மிகு விநோதமாக விருக்கின்றதாம்.

*
* *

மிக வாழமுள்ள சுரங்கம்.—பெல்ஜியத்தில் லாம்பர்ட் என்னுமிடத்திலுள்ள நிலக்கரிச்சுரங்கம் 3490 அடி யாழமுடையதாம். இவ்வள வாழமுடைய சுரங்கம் வேறிடங்களி லில்லையாம்.

மிகப்பழைய மரக்கட்டடம்.—நார்வே தேசத்திலுள்ள போர்கண்டு என்னுமூரில் ஒரு கிறிஸ்தவக் கோயில் மரத்தால் கட்டப்பட்டிருக்கின்றது. இது 11-வது நூற்றாண்டில் கட்டப்பட்டதாம். இப்பழைய மரக்கட்டடம் போன்ற கட்டடம் வேறிடங்களிலில்லையாம்.

*
* *

ஒற்றைக்கம்பி ரயிற்பாதை.—பிரான்சு தேசத்தில் நீஸ் நகரத்திலிருந்து மோனதோகார்லோ நகரத்திற்கு ஒற்றைக்கம்பி ரயிற்பாதை போடப்பட்டு வருகின்றது. இதில் மணி யொன்றிற்கு ரயில் 100 மைல் முதல் 150 மைல் பரியந்தம் ஓடக்கூடுமாம்.

*
* *

தபால் தந்தி யிலாக்காக்களில் உத்தியோகஞ் செய்யும் பெண்களின் தொகை.—ஜர்மன் தேசத்தில் 242000 பெண்களும், அமெரிக்காவில் 230900 பெண்களும், இங்கிலாந்து முதலிய தேசங்களில் 184000 பெண்களும் தபால் தந்தி யிலாக்காக்களில் உத்தியோகஞ் செய்கின்றார்கள்.

*
* *

உடன்கட்டை யேறல்.—கல்கத்தாவிலே ஓர் ஆடவன் கடினநோய்வாய்ப்பட்டு மரிக்கும் நிலைமையிலிருந்தனன். வைத்தியர்கள் அவன் பிழைக்கமாட்டானென்று அறுதியிட்டனர். சையனி டேசி என்னும் பெயருடைய அவன் மனைவி அதைக் கேட்டவுடனே தான் தன் புருஷனுக்குப்பின் ஜீவிக்கக்கூடாதென்னுந் தீர்மானத்துடன் விசேஷ ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு தன்வீட்டுக் குலதெய்வ சந்நிதி சென்று அதிவிநய பயபக்தியோடு அர்ச்சனைசெய்து, சிறிதுநேரம் தியானத்திலிருந்து, அப்பாற் தன்னை எரித்து மாண்டனள். இருபிரேதங்களும் அடுத்தநாள் ஒரு கட்டையிற் தகனிக்கப்பட்டனவாம்.

*
* *

பருத்திக்கொட்டை யெண்ணெயின் வருமானம்.—1911-வது வருஷத்தில் அமெரிக்காவில் பருத்திக் கொட்டை யெண்ணெயினால் கிடைத்த வருமானம் இரண்டுகோடியே ஐம்பதுலட்சம் பவுனும்.

*
* *

அமெரிக்காவிலுள்ள இந்துக்களின் தொகை.—இப்போது அமெரிக்காவிலுள்ள இந்துக்களின் தொகை 30,000. அத்தொகையினருள் கிறிஸ்துவராயிருப்பவரது தொகை மிகுதியாம்.

*
* *

ஒரு சிகரெட் யந்திரம்.—ஓர் அமெரிக்கக் கனவான் நிமிஷத்தில் 150 சிகரெட் செய்யக்கூடிய ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கின்றனராம்.

Supplement to the "Viveka Bodhini" — "விவேக போதினி" அனுபந்தம்



பார்லிமெண்டு மஹாஸபை, லண்டன்

விவேக போதினி

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”——திருவள்ளுவர்

தொகுதி V } பரீதாபி௵ ஐப்பசி௴ : 1912-௵ நவம்பர்௴ { பகுதி 5

புத்தியின் ஸ்வதந்திரம்

FREEDOM OF THE WILL

மனிதன் புத்தி ஸ்வதந்திரமுடையது, அதனாலேயே அது பந்தப்பட்டுத் தன் ஸ்வதந்திரத்தைக் குறைத்துக் கொள்ளுகிறதே ஒழிய முற்றிலும் அதை இழந்துவிடவில்லை, ஆதலால் அதை வைத்துக்கொண்டு மனிதன் மேன்மை அடைய வழியுண்டு என்பது வேதாந்த சாஸ்திரத்தின் ஒழுக்க விஷயமான வெளிக்கொள்கை. இந்த ஸ்வதந்திரம் மனிதரிடமிருக்கும் அகங்காரத்தை (நான் என்று எழும் எண்ணத்தைப்) பொருத்தது. இதை வேரறுத்துவிட வேண்டுமென்பதே உபநிஷத்துக்களின் நோக்கம். இந்த அகங்கார ரூபமான ஜீவாத்மா மாயா கற்பிதனே ஒழிய இவனுக்குத் தனியிருப்பே இல்லை. தன் பொய்மையை உணர்ந்து கடலுள் கலக்கும் ஆறுபோல இரண்டற்று ஒன்றேயாகி நிற்கும் பரம்பொருளில் கலந்து தற்போதம் இழந்து, மஹாவாக்ய ரஹஸ்யத்தை உள்ளபடி அனுபவித்துவிட்டால் ஜீவாத்மாவே இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோக அதனுடன் அதன் பந்தம், ஸ்வதந்திரம் முதலியன பறந்தோடிவிடும். இந்நிலையான உண்மையை இன்னதென வாக்காலாவது மனத்தாலாவது வரையறுத்துக் கூற முடியாது. பிரபஞ்சம் முழுவதும் இந்நிலையில் ஏற்பட்ட கற்பிதமாதலால் அதிலும் இந்தப் பரம்பொருளின் செயல்களைத் தவிர வேறொன்று மில்லை.

ஆகவே மனிதனது புத்தி ஸ்வதந்திரமுடையதா அல்லதுபாரதந்திரமுடையதா என்ற கேள்விக்குப்பதில் கூற வேண்டுமாகில், அது இரண்டும் உடையதல்ல என்றுதான் கூறவேண்டி வரும். வேதாந்த சாஸ்திரப்படி எல்லாவற்றுள்ளும் பரம்பொருளே அந்தர்யாமியாக விருப்பதால் ‘ அவனன்றி ஓரணுவு மசையாது. இதை உள்ளபடி உணர்ந்து வ்யவஹார தசையில் அநுபவத்திற்குக் கொண்டுவருவது மிகக் கடினம். இந்நிலையில் அகங்காரம் தலை எடுத்துத்தான் எல்லாவற்றிற்கும் அதிபதி என்று முன்னிற்பதே இதற்கு முக்கிய தடை. இதை அடக்கி ஸ்வதந்திரமுடையது போலத் தோற்றும் புத்தியைப் பகவானிடம் ஸமர்ப்பணம் செய்துவிட்டால் அத்புதவிஷயங்கள் ஸம்பவிக்கும். இந்த ரஹஸ்யத்தைத்தான் திரௌபதி மான ஸம்ரக்ஷண ஸமயமாக மஹாபாரதத்தில் நன்றாக உருவகப்படுத்தியிருக்கிறது. ஆகவே எக்காலத்திலும் ‘எல்லாமுன் அடிமை, எல்லா முன் உடைமை, எல்லா முன்னுடைய செயலே’ என்று உள்ளபடிக் கூறிவிட்டுத் தேறிநிற்றலே நாம் அடையக்கூடிய பெரும்பேறுகளில் ஒன்று. இது நம்மை மாயையிலிருந்து எளிதில் விடுவிக்கும். ‘ எங்கள் புத்தி எங்களதே எவ்வாறென யாமறியோம் ; எங்கள் புத்தி எங்களதே தங்களதாச் செய்வதற்கே ’ என்றார் ஓர் ஆங்கல கவி. இது முழுக்கூவின் முதல் இரண்டு நிலைகளைக் காட்டுகின்றது. மூன்றாம் நிலையில் நீ நான் என்ற பேதமேகிடையாது. ‘ ஓ கார்கி ! மாறுதலடையாத அந்த ஏக வஸ்துதான் பார்க்க முடியாதவனாயினும் எல்லாவற்றையும் பார்க்கிறான் ; கேட்கமுடியாதவனாயினும் எல்லாவற்றையும் கேட்கிறான் ; நினைவிற் கப்பாற் பட்டவனாயினும் எல்லா நினைவிற்கும் ஆதாரம் ; அறிய முடியாதவனாயினும் எல்லாவற்றை அறிகிறான். அவனைப் பார்க்கிறவனாகட்டும், கேட்கிறவனாகட்டும், நினைப்பவனாகட்டும், அறிபவனாகட்டும் வேறு ஒருவனும் இல்லை. இந்த உண்மைப் பொருளில்தான் ஆகாயம் அடங்கியுள்ளது’ என்று யாஞ்யவல்க்யர் மூன்றாம் நிலையை எடுத்து விளக்குகிறார். இதையே பகவான் அர்ச்சுனனை நோக்கி ‘நீ என் கைக்கருவியாகவே இரு ’ என்று கூறி வெளியிடுகிறார்.

விவேக போதினி

தொ. 5.] பரீதாபி ஹு. ஐப்பசி மீ [பகுதி 5

ஸ்ருஷ்டி விஷயம்

THE PRALAYA STATE

2. சாஸ்திர சிருஷ்டிக் கிரமம்

தமையன் தம்பியை நோக்கி, "அப்பா, நீ கடவுள் இருக்குமிடத்தைக் காட்டுவாயானால் உனக்கு ஒரு மாம்பழம் தருவேன்" என்று சொன்னதற்கு, தம்பி, "அண்ணா, நீ கடவுள் இல்லாத இடமொன்றைக் காட்டுவாயானால் உனக்கு இரண்டு மாம்பழம் தருவேன்," என்று சொன்னதாக ஒரு கதை நீங்கள் யாவரும் கேட்டிருக்கலாம். மேலும் மஹா பக்தசிரோமணியான பிரஹ்லாதாழ்வார் தமது பக்தியற்ற கொடிய தகப்பனை நோக்கி, ஹரி.

"சாணினும் உளன், ஓர் தன்மை
அணுவினைச் சதகூ றிட்ட
கோணினும் உளன்மா மேருக்
குன்றினு முளன்இந் நின்ற
தூணினு முளன்நீ சொன்ன
சொல்லினு முளன்இத் தன்மை
காணுதி விரைவின் ****"

என்று சொல்லியிருக்கிறார். இவைகள் எதைக் குறிப்பிக்கின்றன? பிரபஞ்சத்தில் கடவுள் இல்லாதவிடமே இல்லை என்றல்லவோ காட்டுகின்றன? நீங்கள், தேகத்தில் உயிர் எந்தப் பாகத்தில் இருக்கின்றதென்று உற்று நோக்கில் தேகமுழுவதும் சகலவிடங்களிலும் வியாபித்து இருக்கிறது என்றுதானே சொல்லவேண்டி வருகிறது. இது போன்றதே பிரபஞ்சத்தில் கடவுளது ஸர்வாந்தர்யாமித்வம். கடவுள் ஸ்தாவரங்களில் மாத்திரம் வியாபித்திருக்கிறார் என்று எண்ணவேண்டியதில்லை. அவர் ஸகலப் பிராணிகளிடத்தும் உயிர்க்குயிராய் அதாவது உயிரின் ஸாரபூதமாய் எப்பொழுதும் இருக்கிறாரென்று எண்ணவேண்டும். எப்படி ஒளி தீபஜ்வாலையிலிருந்து பிரிக்கமுடியாமல் அதன் ஸாரபூதமாய் இருக்கிறதோ, அதுபோலவே கடவுளும் உயிர்களுக்கெல்லாம் ஸாரபூதமாய் இருக்கிறார். இதற்கேற்பவே வில்லிபுத்தூராரும் "காயமுமுயிருமாகி பொருள்தோம் கலந்துநின்ற மாயவன்" என்று கிருஷ்ணபகவானை வருணித்திருக்கிறார். கடவுளது ஸர்வாந்தர்யாமித்வத்தை அநேக கவிகள் அநேக விதமாக வருணித்திருக்கிறார்கள். தாயுமானவர் "அரும்பொனே மணியே னென்பே எனன்பான அறிவே எனறிவிலூறும் ஆநந்த வெள்ளமே" என்றும், சிதம்பரம் இராமலிங்க ஸ்வாமிகள், 'கண்ணே அக்கண்ணின் மணியே மணியிற் கலந்தொளிசெய் விண்ணே' என்றும் சொல்லி இருக்கிறார்கள். இவ்வாறு கடவுள் பிரபஞ்சத்தினிடத்தும் ஜீவாத்மாவினிடத்தும் வியாபித்திருப்பவர் என்றால் இவ்விரண்டும் கடவுளுக்குத் தேகமாய் விடுகின்றன. ஆகையால் தான் கடவுளுக்குப் பரமாத்மா என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இப்பொழுது சிருஷ்டிக்கிரமத்தைப்பற்றிச் சொல்லப் புகுங்கால், உருவில்லாது மறைந்து கிடக்கும் அசித்து, உருவோடு வெளிவரும் கிரமத்தையும், அதனால் ஜீவாத்ம பரமாத்மாக்களுக்குண்டாகும் உபாதிகளையும்பற்றி விஸ்தரிக்க வேண்டியது அவசியம். அசித்து, கடவுளது கருணையால் உருவோடு வெளிப்பட்டுப் பரமாத்மாவை வரம்புக்குள்ளடக்குவதற்கு ஸமஷ்டி சிருஷ்டி அல்லது தொகுதி சிருஷ்டி என்றும்; ஜீவாத்மாவை அடக்குவதற்கு வியஷ்டி சிருஷ்டி அல்லது பகுதி சிருஷ்டி என்றும் பெயர். இப்படிச் சிருஷ்டிக்கிரமங்களைச் சொல்லி

வருங்கால் அசித்து உருவத்தில் விருத்தியடைவதென்றும் அதனால் ஆத்மா வாவா எல்லைக்கட்டுகள் அதிகமாய்ப் பந்தப்படுகிறதென்றும் சொல்லுவோம். ஏனெனில் அசித்தாகிய பிரபஞ்சம் விருத்தியாக ஆத்மாவுக்கு நிர்ப்பந்தம் அதிகமாக ஏற்படுகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஆகையால் நத்தை, ஆமை, முதலிய ஜெந்துக்கள் அபாய காலங்களில் தமது அங்கங்களை எவ்வாறு உள்ளடக்கிக்கொள்ளுகின்றனவோ, அவ்வாறு நாமும் இகலோக இந்திரிய சுகங்கள் நம்மை வந்து தாக்குங்கால் இந்திரியாதிகளை வெளிச் செல்லவொட்டாது அடக்கிக் கொள்ளவேண்டுமே என்பது எளிதில் விளங்கும். இதுபற்றியே சிதம்பர ஸ்வாமிகளும்,

'அறிஞனே! நல்லோர் சொன்ன
அரியநூற் பயனெல் லாமும்
பொறிவழி சென்று போகம்
புஜித்திடா திருக்கத் தானே
மறமொடு கோப மாதி
வஞ்சனை நீத்து ஞான
நெறிதவ றாமல் இந்த
நிலமிசை வாழு வாயே.'

என்று அருளிச்செய்திருக்கிறார்.

மேலும் குணங்கள் ஒன்றைவிட ஒன்று ஏற்றத்தாழ்வுடையனவாகி விசித்திரமான சிருஷ்டிக்குக் காரணமாயினவென்று சொல்லப்படும். அப்பொழுது அசேதனமாயும் ஜடமாயும் உள்ள குணங்கள் எவ்வாறு தாமே ஏற்றத்தாழ்வுள்ளனவாகுமென்று சங்கிக்கலாம். குணங்கள் அவ்வாறுவதற்கு அவைகளாலே மாத்திரம் முடியா. அவைகளை அவ்வாறு மாறும்படி செய்யும் சேதனம் ஒன்று இருத்தல் வேண்டும். அதையே கடவுள் என்று யாவரும் சொல்லுகிறார்கள். இக்கருத்தை உள்ளடக்கியே கைவல்லிய நூலாசிரியரும்,

'* * *

அனாதியாம் ஜீவ ரெல்லாம்
பொதுவான சுஷுப்தி போலப்
பொருந்தும் அவ் யக்தம் தன்னில்
இது கால தத்து வப்பே
ரீசன் உட் பார்வை யாலே
முதுமூலஸ்வ பாவம் விட்டு
முக்குணம் வ்யக்த மாமே.' என்றும்

'ஏமமா யாவி னேத வீசனா ரருளி னாலே,
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகஸா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சாத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
* * * * *

என்றும் சொல்லியிருக்கிறார். இது எளிதில் விளங்குவதற்காக ஒரு உதாரணம் எடுத்துக் கொள்வோம். அடுப்பெரிவதும், புகைவண்டி ஓடுவதும், ஜலயந்திரம் சுற்றுவதும், மழையுண்டாவதும் பார்க்குங்கால் சூரியனோடு எள்ளளவும் ஸம்பந்தம் அற்றவைபோல் தோன்றியபோதிலும், உற்றுநோக்கும் ஒருவனுக்கு அவைகளெல்லாம் சூரியனது உஷ்ணம், ஒளி ஆகிய இவைகளின் சக்தியாலேயே அவ்வன்மையை அடைந்தனவென்பது விளங்கும். செடி முதலியவைகள் வளருவதும், காற்று வீசுவதும், தண்ணீர் ஓடுவதும், ஆகிய இவைகள் சலியாது நடந்துவருவதற்குச் சூரியனது சக்தியே ஆதாரம். இது போலக் குணங்களது ஏற்றத்தாழ்வால் சிருஷ்டி உண்டாவதுபோலத் தோன்றிய போதிலும், அவைகளோடு ஒட்டாத ஈசனது அருளால், யாவையும் உண்டாகின்றன என்பது துணிபு. இதுபற்றியே தாயுமானவரும் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்றருளிச் செய்தார்.

முன் பாகத்தில், மஹாப்பிரளய நிலையில் யாவையும் செயலற்று ஒருவித ஆனந்தத்தில் உருவின்றி மூழ்கிக்கிடக்கும் என்றும், அந்நிலையில் இருந்து குண ஏற்றத்தாழ்வால் இப்பிரபஞ்சம் பலவிதத் தோற்றங்களோடு வெளியாகிறதென்றும் சொன்னோம். சிருஷ்டி ஆரம்பத்தில் இம்முக்குணங்கள் அசித்தினிடத்தில் ஸம்பந்தப்படுகின்றன. இவ்வாறு ஸம்பந்தப்படுங்கால் ஸத்வகுணமானது இருபாகமாகப்பிரிந்து ராஜஸ தாமஸ குணங்களோடு ஸம்பந்தப்படுகிறது. ஸத்வத்தின் ஒரு பாகத்தோடு மற்ற குணங்கள் கொஞ்சமாயும், ஸத்வத்தின் மற்றொரு பாகத்

தோடு மற்றக் குணங்கள் அதிகமாயும், ஸம்பந்தப்படுகின்றன. இவ்வாறு இரண்டுவித ஸத்வ குணங்கள் உண்டாகின்றன. அவைகளில் முன்னதற்குச் சுத்தஸத்வப்பிரதானம் என்றும், பின்னதற்கு அசுத்தஸத்வப் பிரதானம் என்றும் பெயர். இம்மாதிரியாகவே ராஜஸ தாமஸ குணங்களும் வெவ்வேறாய் இருபாகமாகித் தன்னை ஒழிந்த மற்றைய குணங்களிடத்தில் ஸத்வம் ஸம்பந்தித்ததுபோல் ஸம்பந்தப்படுகின்றன. ஆதலால் பிரளய காலத்திற்கடுத்த படியில், அசித்தானது சூக்ஷ்ம நிலையிலிருந்து நான்கு கூறாகித் தோன்றுகிறதென்றும், ஒவ்வொரு பாகங்களில் முறையே சுத்தஸத்வமும், அசுத்த ஸத்வமும், ராஜஸமும், தாமஸமும் ஓங்கி நிற்கின்றனவென்றும் சொல்லலாம். இவ்வாறு குணங்கள் பிரிந்து அசித்தோடு ஸம்பந்தப்பட்டவுடன் சுத்த ஸத்வம் எவ்வாறு பரமாத்மாவைச் சூழ்கிறதோ அவ்வாறே அசுத்த ஸத்வம் ஜீவாத்மாவைச் சூழ்ந்து வருகிறது. இப்படி ஸத்வம் சூழ்ந்தமாத்திரத்தில் ஆனந்தத்தோடு இரண்டறக் கலந்ததுபோல் மஹாப்பிரளயத்திலிருந்த ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ஆனந்தம் வேறென்றும், அதை அநுபவிக்கிற நாம் வேறென்றும், பேதம் தோன்றுகின்றது. ஆனால் பரமாத்மாவிற்குள்ள சுகத்திற்கும் அதன் அறிவின் வியாபகத்திற்கும், ஜீவாத்மாவுக்குள்ள ஸுகத்திற்கும் அதன் அறிவின் வியாபகத்திற்கும் அநேக பேதங்கள் உண்டு. மேலும் ஜீவாத்மாக்களுக்குள்ளே, ஒன்றின் ஸுகம் முதலியவைகளுக்கும் மற்றொன்றின் ஸுகம் முதலியவைகளுக்கும் மிகுந்த பேதங்களுண்டு. முந்திய பேதத்திற்கு ஜீவாத்மா பரமாத்மாக்களைச் சூழ்ந்த அசுத்த, சுத்த ஸத்வப்ரதானங்களே காரணம். சுத்த ஸத்வப்ரதானத்தால் பரமாத்மாவின் அனந்த சுகத்தையும் அறிவையும் அதிகமாகக் குறைக்க முடியாது. ஜீவாத்மாவைச் சூழ்ந்த அசுத்த ஸத்வப்பிரதானம் அதன் சுகம் முதலியவைகளை நன்றாகக் குறைத்துவிடும். பிந்திய பேதத்திற்குக் காரணம் அசுத்த ஸத்வஸம்பந்தமான அசித்தில் காணப்படும் அசுத்தத்தின் ஏற்றத்தாழ்வின் பரிமாணமே. ஏற்றத்தாழ்விற்குக் காரணம் பிரளய நிலைக்குமுன் அந்த அந்த ஜீவாத்மா செய்த கர்மமே ஒழிய வேறில்லை. சுத்தஸத்வத்தால் பரமாத்மாவுக்குண்டாகும் கோசத்திற்கும், அசுத்த ஸத்வத்தால் ஜீவாத்மாத்மாவுக்குண்டாகும் கோசத்திற்கும் ஆனந்தமயகோசங்கள் என்று பெயர். இவைகளுக்குக் காரணதேகங்கள் என்றும் வேறொரு பெயர் உண்டு. ஏனெனில் இத்தேகத்திலிருந்தே இன்னும் ஸ்தூலமாயுள்ள அநேக தேகங்கள் ஜீவாத்மா பரமாத்மாக்களுக்குண்டாகின்றன. ஒரே மறைப்பிற்கு இவ்விரு விதமாய்த் தேகமென்றும் கோசமென்றும் சொல்லுவானேன் என்ற சங்கை உண்டாகலாம். இச்சங்கைக்கு இந்த வியாசத்தின் இறுதியில் உத்தரம் சொல்லுவோம். இம்முதற் சரீரத்தோடு தோன்றும் பரமாத்மாவிற்கு ஈசுவரன் அல்லது அந்தர்யாமி என்று பெயர். இப்பெயர்களுக்கு முறையே ராஜாதி ராஜன் என்றும், ஸகலத்திலும் வியாபித்து ஒழுங்குபடுத்துவோன் என்றும் பொருள். இவர் அசித்திற்குள் அகப்பட்டவர்போல் காணப்படினும் அதற்கு உண்மையில் உட்பட்டவர் இல்லை. காரண சரீரத்தால் சூழப்பட்ட ஜீவனுக்குப் பிராஞ்ஞன் என்று பெயர். இப்பதத்திற்கு, (தான் அழிவற்றவனென்றும், கடவுளுக்கடுத்தபடி தனக்கு மிகுந்த அறிவும் பலமும் உண்டென்றும்) அறிபவன் என்று அர்த்தம். இந்நிலையில் ஜீவாத்மாவிற்கு மிகுந்த ஆனந்தானுபவம் உண்டு. இந்நிலையில் கோசங்கள் அதிசூட்சுமமாயும் செவ்வையான உருவற்றதாயும் இருக்கும். இதற்கே காரண சிருஷ்டி என்று பெயர்.

இனிச் சொல்லும் நிலைக்குச் சூட்சும சிருஷ்டி என்று பெயர். இந்நிலையில் அசித்தின் உருவம் ஒருவாறு தெளிந்து பஞ்சபூதகங்களுக்கும் காரணமாகிய தன்மாத்திரைகள் உண்டாகின்றன.

'ஏமமா யாவி ஞைத வீசனார் அருளினாலே பூமலி யுயிர்கட் கெல்லாம் போகஸா தனமுண்டாக,' அதன் மூலமாய் அவைகளை மோக்ஷமடையச் செய்யும்பொருட்டு தாமஸப்பிரதானமாகிய பிரகிருதியானது, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாச தன்மாத்திரைகளாய் பரிணமிக்கின்றது. இந்நிலையில் உள்ள பஞ்சபூத தன்மாத்திரைகளிலிருந்து ஸ்தூல பூதங்களும் ஸகலப் பிரபஞ்சங்களும் வெளியாகின்றன.

தாமஸம் ஓங்கியிருக்கும் பாகத்திலிருந்து பஞ்சபூத தன் மாத்திரைகள் உண்டானபோதிலும், இவைகளில் ஸாத்விக ராஜஸ பாகங்கள் இருக்கின்றன. ஸத்வ பாகத்திலிருந்து ஞானேந்திரியம் ஐந்தும் உண்டாகின்றன. இவைகளுக்கு முறையே துவக்கு, ஜிஹ்வை, சக்ஷுஸ், கிராணம், சுரோத்திரம் என்று பெயர். இவைகளாலேயே பிரபஞ்சத்தை ஸ்பர்ச, ரஸ, ரூப, கந்த, சப்தமாக ஜீவன் அறிகிறான். இவ்விந்திரியங்கள் சூட்சுமமாகவே இருக்கின்றன. இவ்விந்திரியத்தின் வழியாய்ப் பிரவேசிக்கும் விஷயங்கள் எல்லாம் அந்தக்கரணம் என்ற சூட்சும அங்கத்தில் தாக்கி அதனால் அறிவை உண்டாக்குகின்றன. அந்தக்கரணம் இரண்டு ரூபமாய்க் காணப்படும். தாழ்ந்த நிலையில் இருந்து வஸ்துவைக் கண்டு ஸம்சயிக்கும் நிலையில் மனமென்றும், மேலான நிலையில் இருந்து அறிந்து ஸ்திரமாய் இருக்கும் போது புத்தி என்றும் பெயர் பெறும். ஸத்வ பாகத்திலிருந்து ஞானேந்திரியம் ஐந்தும், அந்தக்கரணம் இரண்டும் ஜனித்தல்போல் இந்தப் பிரகிருதியின் இராஜஸபாகத்திலிருந்து ஐந்து கர்மேந்திரியங்கள் உண்டாகின்றன. அவையாவன, வாக்கு, கை, கால், மலத்துவாரம், ஜலத்துவாரம் ஆகிய இவைகளே. இந்த இராஜஸ பாகத்தினாலே இவ்விந்திரியங்கள் தொழில் செய்வதற்கு அவசியம் வேண்டிய வாயுக்களும் உண்டாகின்றன. இவ்வாயுக்கள் தாம் செய்யும் தொழிலின் விசேஷத்தால் ஐந்து விதமாகக் காணப்படும். ஜந்துக்களை மூச்சுவிடச் செய்யும் வாயு பிராணவாயு வென்றும், மலம் ஜலம் விடுவதில் ஸகாயம் செய்யும் வாயு அபானவாயு வென்றும், இரத்தத்தை ஓடச்செய்யும் வாயு வியானவாயு வென்றும், சிரோபாகத்திற்கு ஜீர்ணமாய் உணவின் ஸாரத்தைச் செல்லும்படி செய்யும் வாயு உதானவாயு வென்றும், தேகத்திலுள்ள ஸகல காரியத்தையும் ஒழுங்காய் நடத்திவரும் திறனுடைய வாயு ஸமானவாயு வென்றும் பெயர் பெறும். இவைகளே பஞ்சவாயுக்கள் எனப்படும். ஆகையால் இந்தச் சூட்சும சிருஷ்டியில் ஞானேந்திரியம் ஐந்தும் கர்மேந்திரியமைந்தும், வாயுக்கள் ஐந்தும் அந்தக்கரணம் இரண்டும் ஆகிய பதினேழு (17) தத்துவங்களும் உண்டாகின்றன. இவைகளின் தொகுதியே லிங்கசரீரம்; இதற்குச் சூட்சும சரீரம் என்றும் பெயர் உண்டு. இப்பெயர் வரக் காரணம் என்னவென்றால், இப்பொழுது நமக்குக் காணப்படும் சரீரத்தைவிட இது சூட்சுமமாய் இருக்கிறது தான். ஆனால் இது காரண சரீரத்தைவிட ஸ்தூலமாய் இருக்கிறது என்பதற்குச் சந்தேகமில்லை. இந்தத் தேகத்தில் மூன்று கோசங்கள் அடங்கி இருக்கின்றன. காரணதேகமாகிய ஆனந்தமய கோசத்திற்கு அடுத்தது விஞ்ஞானமய கோசம் என்று பெயர் பெற்று, புத்தியையும் ஞானேந்திரியங்கள் ஐந்தையும் அடக்கியுள்ளது. இதற்கு அடுத்த கோசம் மனோமயகோசம் என்று பெயர் பெற்று, மனஸ்ஸையும் ஞானேந்திரியம் ஐந்தையும் அடக்கியுள்ளது. இதற்கு அடுத்த கோசம் பிராணமயகோசம் என்று பெயர் பெற்று ஐந்து வாயுக்களையும், ஐந்து கர்மேந்திரியங்களையும் அடக்கியுள்ளது. இம்மாதிரி இக்கோசங்களடங்கிய சரீரம், வியஷ்டி சரீரமாய் ஜீவாத்மாவையும், ஸமஷ்டி சரீரமாய்ப் பரமாத்மாவையும் சூழ்கின்றது. ஸமஷ்டி சிருஷ்டியில் இக்கோசங்களால் சூழப்பட்டுத் தோன்றும் கடவுளுக்கு ஹிரண்யகர்ப்பன் என்றும் ஸூத்ராத்மா என்றும் பெயர் உண்டு. இவ்விரு பதங்களுக்கும் பொருள், முறையே (பிரபஞ்ச ஆரம்பத்தில்) பொன் சாயை உடையவன் என்பதும், (முத்து மாலையில் முத்துக்களைச் சேர்த்துவைக்கும்) நூலைப்போல் ஸகல சூட்சுமப் பிரபஞ்சங்களிலும் பரவி அவைகளைப் பொருத்தி வைப்போன் என்பதுமே. வியஷ்டி சிருஷ்டியில் இக்கோசங்களால் சூழப்பட்ட ஜீவாத்மாவுக்குத்

தைஜஸன் என்று பெயர். இப்பதத்திற்குப் பிரகாசரூபி என்பது பொருள். ஹிரண்யகர்ப்பன், தைஜஸன் என்ற பதங்கள் குறிப்பன என்னவென்றால் தங்கமும் பிரகாசமுமாகிய இவற்றுள் ஒன்று, எதில் ஸம்பந்தப்பட்டிருந்தபோதிலும் அதில் அது இருப்பதாக எளிதில் கண்டுபிடிக்க முடியும். அதுபோல இந்நிலையில் ஆத்மாவானவன் ஸூக்ஷ்மமாய்த் தோன்றியபோதிலும், ஒருவாறு அவனைக் கண்டுபிடிக்கமுடியும் என்பதே. இந்நிலையில் கடவுள் தான் அநுபவிக்கும் ஆனந்தத்திலிருந்து வேறுபட்டுப்பிரபஞ்சத்திற்கு ஸூத்திரதாரியாகத் தோன்றுவார். இந்நிலையில்தான் பிரபஞ்சத்தில் விசித்திர விஷயங்களையும் தந்தம் கருமத்திற்கேற்ப ஜீவாத்மாக்களை வெவ்வேறாய்த் தோற்றுவிப்பதையும் செய்யக் கடவுள் தொடங்குகிறார். நாடகத்தின் ஆரம்பகாலத்தில் ஸூத்திரதாரி திரைக்கு வெளியில் வந்து நிற்பதும் நடிப்பவர்கள் திரைக்குள் வேஷங்களைப் போட்டு முடித்துக்கொண்டு தத்தமக்கு ஏற்பட்டபடி வந்து நாடகமாடத் தயாராய் இருப்பதுபோலக் கடவுளும், ஜீவாத்மாக்களும் இந்தச் சூட்சும சிருஷ்டியில் தோன்றுகிறார்கள்.

நாம்புச்சிலந்தி.—கினி ஓரம் (Guinea Worm) பிரதிபதங்கள்.—நூல் சிலந்தி : நாரப்புண்.—நூலிழை போல் நீண்டு வெளுத்த ஒருவிதப்புழு, தேகத்திலிருந்து வெளிப்படுதலுக்கு, **நாம்புச்சிலந்தி** யென்று பெயர். இந்தப் புழு தேகத்தில் உற்பத்தியாகிறதென்று சிலர் சொல்லுகிறார்கள்; சன்னமாய் இருக்கிற புழு, மயிர்க்கால் வழியாய் உடம்பிலேறி வளருகிறதென்று சிலருடைய அபிப்பிராயம். புழு அறாமல் வெளிகண்டால்நல்லது, ஒரு வேளை அறுந்துவிட்டால், வேதனையும் வீக்கமும், பிரபலமாகி, ரோகி அதிக உபத்திரவம் அடைவான். முதல் நமைச்சலெடுத்து, நீர்க்கொப்புளம் போல் காணும்; அதைக் கீறிவிட்டால் புழு வெளிப்படும். சிகிச்சை.—புழுவை நாள்தோறும் கொஞ்சங்கொஞ்சமாய் மெதுவாய் இழுத்து, துணியிலாவது, துடப்பச்சுப்பலிலாவது, சுருட்டிவைத்து, களிகட்டிக்கொண்டுவரவேண்டியது. குளிர்ந்த ஜலம் விட்டு இரண்டு வேளையும் ரணத்தைச் சுத்திசெய்ய வேண்டியது. களியோடு பெருங்காயம் சேர்த்துக் கட்டுவதில், மறுபடியும் நாம்பு உற்பத்தியாகாமல் செய்கிறதென்று கேழ்வி. இந்த வியாதிக்கு வீட்டில் செய்யும் சிகிச்சை அனந்தமிருந்த போதிலும், மேற்கண்டிருப்பதே நல்லது. ரணத்தில்கொம்புவைத்து உறிஞ்சி, புழு அறாமல் எடுப்பதுமுண்டு. —இங்கிலீஷ் வைத்திய சங்கிரஹம்.

ஜயதேவர் சரித்திரம்

JAYA DEVA : (*A life skelch*)

ஸம்ஸ்கிருத கவிகளுள் ஜயதேவரென்று பெயர் கொண்டவர் ஒருவர் மாத்திரமல்ல. அவருள் "கீதகோவிந்தம்" என்னும் இனிய காவியத்தைச் செய்த மஹா கவியாகிய ஜயதேவரது சரித்திரத்தைப்பற்றி இங்கு தெரிந்தமட்டிலெழுதுவோம். ஏனைய ஸம்ஸ்கிருத கவிகளது சரித்திரம்போல் இவரது சரித்திரமும் தெளிவாகவும் விஸ்தாரமாகவும் தெரியவில்லை. ஆயினும் ஈத்தேன் கூட்டுவதுபோல் அங்கு சிறிது இங்கு சிறிதாகத் தேடித் திரட்டியதை யீண்டெடுத்துரைப்போம்.

கீதகோவிந்த காவியத்திலிருந்தே இக்கவியின் ஊர் வம்சம் முதலியன சில தெரிகின்றன. இவர் முன்னோர்கள் வாழ்ந்து வந்த கிராமம் "கிந்துபில்வம்" என்னும் பெயருடையதென்று.

किन्दुबिल्वसमुद्रसम्भवरोहिणीरमणेन ।

(கீ-ம், ஸர்க்கம் 7, சுலோகம் 10.)

என்பதால் விளங்குகிறது. கவியின் தகப்பனார் பெயர் ஸ்ரீ போஜதேவரென்றும், தாயார் பெயர் ராதாதேவி யென்றும் (ரமாதேவி யென்றும் பாடமிருக்கிறது), அவர் வாக்கிலிருந்தே தெரியவருகிறது.

श्रीभोजदेवप्रभवस्यराधादेवीसुतश्रीजयदेवकस्य।
पराशरादिप्रियवर्गकण्ठ श्रीगीतगोविन्दकवित्वमस्तु ॥

(கீ-ம் ஸர்க்கம் 12, சுலோகம் 11.)

இதிலிருந்து அவருக்குப் பாராசரனென்ற காவியரஸிகனை சிநேகிதனொருவனிருந்தானென்றும் வெளிவருகிறது. அவரது பத்தினியின் பெயர் பத்மாவதி யென்று,

जयति पद्मावतीरमणजयदेवकवि
भारती भणितमतिशातम् ॥

(கீ-ம் ஸர்க்கம் 10, சுலோகம் 8)

என்ற பாடாந்தரத்தையுடைய சுலோகத்தாலும், வேறு அநேக பக்திமான்களது சரித்திரத்துடன் ஜயதேவரது சரித்திரத்தையும் விவரித்

துச் சொல்லுகிற "பக்திமாலை" யென்ற கிரந்தத்தாலும் தெரிகிறது. இனி,

वाचः पल्लवयुमापतिधरः सन्दर्भशुद्धिंगिरां
जानीतेजयदेव एवशारणःश्लाघ्योदुरूहद्रुतेः।
शृङ्गारोत्तरसत्प्रमेयरचनैराचार्यगोवर्धन
स्पर्धीकोऽपिनविश्रुतः श्रुतिधरोधोयीकविक्ष्मापतिः॥

என்ற சுலோகத்தினால், உமாபதிதரர், சரணர், கோவர்த்தனாசாரியர், தோயீகவிராஜர், இவர்கள் ஜயதேவருடன் சமகாலத்திலிருந்தவர்களெனத் தெரிகிறது.

மஹாமஹோபாத்தியாய துர்க்காப்பிரஸாத பண்டிதர், கோவர்த்தனாசாரியர் செய்த "ஆர்யா ஸப்தசதி" யென்னும் கிரந்தத்துடன் சேர்த்துள்ள ஒரு குறிப்பில், ஜயதேவரது காலத்தைப் பின்வருமாறு நிர்ணயிக்கிறார். "வங்கதேச மன்னனான வல்லாளஸேனனது புத்திரன் லக்ஷ்மணஸேனனுடைய ஸபையில் ஜயதேவரிருந்தாரென்பது ஸநாதனகோஸ்வாமியின் மதம். "गोवर्धनश्च शरणो जयदेवउमापतिः । कविराजश्चरत्नानि समितौ लक्ष्मणस्यच ॥ என்ற இந்தச் சுலோகமானது லக்ஷ்மணஸேனனது ஸபாமண்டபத்தின் வாசற்படிக்குமேல் ஒரு கல்லில் காணப்பட்டது. ஆதலால் கோவர்த்தனர் ஜயதேவர் முதலியோர் ஒரே ஸபையிலிருந்தனரெனக் கூறுகின்றனர். லக்ஷ்மணஸேனன் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் கடைசிவரை வங்கதேசத்தை யாண்டானென்பது சரித்திரமறிந்தோர் துணிபு." ஆதலின் ஜயதேவர் ஜீவித்த காலமும் கி. பி. பதினோராம் நூற்றாண்டென்க.

கீதகோவிந்தம் செய்த ஜயதேவரால் எழுதப்பட்டு வேறேதேனும் காவியங்கள் பிரஸித்தமாயிருப்பதாகத் தெரியவில்லை. "பிரஸன்ன ராகவம்" செய்த ஜயதேவரோ, கௌண்டின்ய கோத்திரத்திலுதித்தவர்; மஹாதேவருக்கும் சுமித்திரைக்கும் புத்திரர். "சிருங்கார மாதவீய சம்பு" செய்தவரும், கிருஷ்ணதாஸரென்று பட்டப் பெயருள்ளவருமான ஜயதேவர், கீதகோவிந்தம் செய்தவரினின்றும் வேறானவர்,

கி. பி. 14-ம் நூற்றாண்டில் தோன்றியவரும் வங்கதேசத்தவருமான விசுவநாத கவிராஜர், தமது "ஸாஹித்திய தர்ப்பணம்" என்னுமலங்கார கிரந்தத்தில் 10-வது பரிச்சேதத்தில் விருத்தியனுப்பி ராஸத்துக்கு உதாரணமாகக் கீதகோவிந்தத்திலுள்ள "उन्मीलन्मधुगन्धमुग्ध *** ***......" என்னும் சுலோகத்தைக் கூறியிருப்பதிலிருந்து, அக்காலத்திலேயே கீதகோவிந்தம் அடைந்திருந்த உயர்த்தியும் பிரஸித்தியும் விளங்குகின்றன.

ஜயதேவர் கிருஷ்ணனிடத்தில் பரமபக்தியுள்ளவர். தமது பக்தி, ஞானம், வைராக்கியம் முதலிய அரிய குணங்களால் இப்பாரத வர்ஷத்தைப் பெருமைப்படுத்தியிருக்கும் மஹான்களென்று நாம் கொண்டாடுபவருள் ஜயதேவர் முதனிற்பவருளொருவர். ஜயதேவரது சரித்திரத்தில் நிகழ்ந்த சில அற்புதங்களை, சந்திரதத்தரென்பார் எழுதியிருக்கும் "பக்திமாலை' யென்னும் புத்தகத்தில் காணப்படுமாறு கீழ்ச் சுருக்கி வரைகின்றோம்.

"சிறந்த பக்தி மஹாத்மிய முடையதாயும் கேட்போர்களை வாஸுதேவனிடத்தில் பக்தியுள்ளவர்களாகச் செய்பக் கூடியதுமான ஜயதேவஸ்வாமிகளது சரித்திரத்தைக் கேண்மின். ஜகந்நாதபுரிக்குச் சமீபத்தில் பிராம்மணர்கள் நிறைந்த பிந்துபில்வம் என்ற கிராமமொன்றுண்டு. அக்கிராமத்தில் சாந்தரும் புருஷோத்தமனைப் பூஜிப்பவரும் கல்விப்பயிற்சியில் ஆசையுள்ளவருமான ஜயதேவரென்ற ஒரு பிராம்மணரிருந்தனர். அதே ஸ்தலத்தில் பிள்ளைப் பேறு பெறாத தேவசர்மாவென்ற பிராம்மணனொருவன் ஓர்நாள் ஜகந்நாதரை யடைந்து, அஞ்சலிபந்தஞ் செய்து வணங்கி, "ஜகந்நாதா! உமது திருவருளால் நான் சந்ததி யுண்டாகப்பெறின், முதற்பிறக்கும் குழந்தையையுமக்கே யர்ப்பணஞ் செய்கிறேன்," என்று உறுதி வாக்களித்துப் பிரார்த்தித்து நின்றனன். பின்பு சில காலத்துக்குள் அப்பிராமணனுக்கு முதலில் ஒரு பெண்

குழந்தையும் பிறகு அநேக புத்திரர்களுமுண்டானார்கள். தேவசர்மா தான் முதலில் வாக்களித்தபடி நிறைவேற்ற நினைத்துத், தன் மனைவி சகிதமாய்த் தன் கன்னிகையையும் கூடவழைத்துக்கொண்டு ஜகந்நாதரது சந்நிதானமடைந்து, "தேவதேவா! நினது பெருங்கருணையால் முதலில் பெண்ணொன்றும் பிறகு புத்திரர்களுமெனக்குண்டானார்கள். இந்த என் மூத்த பெண்ணை யேற்றுக்கொண்டருளல் வேண்டும்" என்று சொல்லிக் கன்னிகையின் கையைப் பிடித்து ஈசனுக்குக் காட்டிப் பிரார்த்தித்துவிட்டு, நடந்த விருத்தாந்தத்தை யங்குள்ள பூஜகர்களுக்குத் தெரிவித்து வெளியில் வந்து ஓரிடத்தில் தங்கியிருந்தார். அன்றிரவில் பிராம்மணனுக்கும் கோவிற் பூஜகனுக்கும் ஜகத்பிரபுவானவர் கனவில் தோன்றி, "பிரீதி யடைந்தேன்; உனது கன்னிகையை ஸ்வீகரித்துக்கொண்டேன். அவளை யெனது பிரியனான ஜயதேவனுக்கு அர்ப்பணம் செய்; அவனை நானென்றே அறிவாயாக" என்று அருளினார். ஸ்வப்னம் கண்ட பூஜகன் விழித்தெழுந்து பிராம்மணனிடம் வந்து சொல்ல, அவரும் அது சத்தியம்தானென்றறிந்து மனமகிழ்ந்தவராய், ஜயதேவரிடம் சொல்லப் புறப்பட்டு, அவரைக் கிராமத்துக்கு வெளியில் ஓர் பர்ணகுடியில், தரித்திராயிருந்தும் ஆசையற்றவராய், இடைவிடாது சாஸ்திரம் பார்த்துக்கொண்டு, ஜகந்நாதனை ஸதா தியானிப்பதின் இன்ப நுகர்ச்சியால் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடனிருக்கும் ஜயதேவரைக் கண்டு, நமஸ்கரித்து, "பிரம்மன்! ஜகந்நாதரது ஆக்ஞையால் பத்மாவதியென்று நாமங்கொண்ட என் பெண்ணாகிய இவளை உங்களுக்குத் தானம்செய்கிறேன்; அவளை யேற்று அனுக்ரஹிக்கவேண்டும்," என்று பிரார்த்தித்து நின்றார். அதற்கு ஜயதேவர், "கன்யாதானத்துக்கு நான் பாத்திரனன்று; நான் இடம் பொருளில்லாத தீனன்; ஆசைகளைத் துறந்தவன். ஜகந்நாதரது கட்டளையிதென்று சொல்லும் மதிக்கேட்டைவிட்டுவிட்டு, நீங்கள் வந்தவழியே போகலாம்," என்றுசொல்லி நிராகரித்துவிட்டார். அப்பிராமணன் பூஜகனைச் சாட்சியாக வரவழைத்துத், தன் பெண்ணை யேற்றுக்கொள்ளவேண்டி யெவ்வளவு மன்றாடியும் ஜயதேவர் மறுக்க, பெண்ணை யங்கேயே நிறுத்திவிட்டு, "புத்திரி! இவர்தான் உன் பதி. நீ யவரை யெக்காலத்தும் பூஜிக்கவேண்டும். தன் புருஷனது ஸேவையில் விரதம்பூண்ட பெண்ணே அழிவிலாச் சுகத்தை யடைவாள்," என்று சொல்லிவிட்டு அவளது தாய் தந்தையர் தங்களிருப்பிடஞ் சென்று விட்டனர். அவ்விருவரும் போனபின்பு, தன் முன் னின்றுகொண்டிருந்த கன்னியைப் பார்த்து ஜயதேவர், "உன்னைத் தனியே விட்டுவிட்டு உன் மாதா பிதாக்கள் சென்றுவிட்டனரே, இக்காட்டில் நீ யெவ்விதம் தனியே யிருக்கப்போகிறாய்?" என்று சொல்ல, பத்மாவதி, "என்னைக் கைப்பிடித்துக் கொடுக்க யோக்கியர்களான எனது மாதா பிதாக்கள் உங்களை யென் பதி யென்றுசொல்லிவிட்டுசென்றனர். இனி நானும்மைச் சேர்ந்தவள். நீங்களிருக்கும்வரை நானெவ்விதம் தனியளாவேன்? நீரும் என்னைத் தியாகம் செய்தால் நானென்ன செய்வேன்!" என்று சொன்ன உருக்க மொழியைக் கேட்டு, ஜயதேவர் "இவள்சொல்வது உண்மைதான் இவளைத் தியாகம்செய்தால் தோஷம் சம்பவிக்கும் ஆதலால் இவள் பிதா வீடடைந்து விதிப்படி யிவளை யேற்றுக்கொள்ளுகிறேன்," என்று தம் மனதில் சிந்தித்து, பத்மாவதியைக் கூப்பிட அவளும் "உங்களது ஆக்ஞைப்படி நடப்பதே யெனது கடமையென்று எனது பிதா சொன்னார். இவ்விதம் திருவுளங் கொண்டது தமது பெருங்கருணையே," என்று சொல்லி முன்செல்ல, ஜயதேவரும் பின்தொடர்ந்து தேவசர்மாவினது கிருஹம் போயடைந்தார். அவரிடம் இளகிய மனத்துடன் யாவற்றையும் சொல்லி, விதிப்படி பத்மாவதியைப் பாணிக்கிரஹணம் செய்து

கொண்டு, அவளுடன் தமது வீடு வந்து சேர்ந்தார்.

பின்பு அவர்களிருவரும் ஈருடல் ஒருயிருடையர்போல் இணைபிரியாதவராய், ஸர்வதா காலமும் கிருஷ்ணன் முன்னிலையில் நர்த்தன கானங்கள் செய்பவராய், பரமாத்மாவினது பக்திக் கடலில் அழுந்தி காலங்கழித்து வந்தனர். இப்படி யிருக்குங்கால், ஒருநாள் ஜயதேவர் தாமே செய்த ஒரு கீதத்தினால் ஹரியைப் பிரீதி செய்விக்கவேண்டுமென்று சிந்தித்து, "கீதகோவிந்தம்" என்னும் அற்புத காவியத்தைச் செய்யத் தொடங்கி, அது முடிந்ததும் தாமும் பத்தினியுமாக அதைப் பாடிக்கொண்டு தேவதேவனது முன்னிலையில் ஆனந்தக்கூத்தாடினார்கள். ஜயதேவர் கீதகோவிந்தமெழுதிக் கொண்டிருக்கும்பொழுது ஒருசமயம், ராதாகிருஷ்ணர்களது ராஸசரிதத்தில் கிருஷ்ணன் ராதையைப் பார்த்து,

स्मरगरलखण्डनं ममशिरसिमण्डनम्
धेहिपदपल्लवमुदारम् ।

என்று சொன்னதாகச் சேர்க்க நினைத்தவுடன், ஸ்ரீ கிருஷ்ணனுடைய சர்வேசுவரத் தன்மையை ஸ்மரித்து அவ்விதம் எழுத மனதுக்குச் சமாதானம் வராதவராய், ஆயினும் தமக்கு ருசிக்கும்படி வேறுவிதமான வாக்கியமொன்றுந் தோன்றாது, புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு ஸ்நானத்துக்குச் சென்றார். அப்பொழுது கிருஷ்ண பகவான், ஜயதேவர்போல் வேஷந்தரித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்து, "பிரியே! புஸ்தகத்தைக் கொடு," என்று பத்மாவதியிடம் கேட்டு வாங்கி ஜயதேவருக்குத் தோன்றிய சுலோகத்தை யெழுதிவிட்டுச் சீக்கிரம் போய்விட்டார். ஸ்நானத்திற்குப்போன ஜயதேவர் திரும்பிவந்து, தேவனைத் தியானம் செய்து மறுபடியும் புஸ்தகத்தை யெடுத்துக்கொண்டுட்கார்ந்ததும், அதில் தான் மனதிலியற்றிய சுலோகமெழுதி யிருக்கக் கண்டு திகைத்து, அதைத் தாமெழுதவில்லையாதலால் வேறு யாரோ எழுதியிருக்கவேண்டுமென்று நினைத்து, பத்மாவதியைக் கூப்பிட்டு, "இந்தப் பதத்தை நானெழுதவில்லையே. இதை யாவரெழுதினாரென நீ யறிவாயா?" எனக் கேட்க, "நாதா, ஈதென்ன தங்களுக்குப் பிரமம்! ஸ்நானத்துக்குப்போன தாங்கள் திரும்பிவந்து என் கையிலிருந்து புஸ்தகத்தை வாங்கி யெழுதிவிட்டு, மறுபடியும்ஸ்நானத்துக்குப்போனதுதான் எனக்குத் தெரியும். அதை யெழுதினவர் தங்களைத் தவிர வேறு யாவர்?" என்று சொன்னாள். ஜயதேவர் சிந்தையிலழுந்தினவராய் மனவமைதியில்லாது வருந்தியிற்க, அன்றிரவு ஸ்வப்னத்தில் புருஷோத்தமன் தமது லீலையை யவருக்குத் தெரிவித்ததும், மகிழ்ச்சிகொண்டு ஈசுவரனை நேரில் பார்த்த தமது பாரியை புண்யசாலியென வெண்ணி, தினந்தோறும் தமது கீத கோவிந்தத்தைப் பத்தினியுங் கூடவிருக்கக் கேசவன் முன்னிலையில் கானம் செய்து ஈசுவரப்ரீதி செய்துவந்தார்.

அத்தேசத்து அரசன் கீதகோவிந்தத்தைக் கேட்டு ஆனந்தமடைந்து, வித்வான்களால் அம்மாதிரியான வேறொரு காவியம் செய்வித்து அன்றுமுதல் தேசத்திலுள்ள யாவரும் தன்னுடைய கீத கோவிந்தத்தை மாத்திரம் படனம் கானம் முதலியவைகள் செய்யவேண்டு மெனவும், மீறினால் தண்டனை ஸம்பவிக்குமெனவும் நாடு முழுதும் பறையறைவித்தான். அவ்விதம் செய்தபின் ஒருநாள் அரசன் புருஷோத்தமனைத் தரிசனம் பண்ண வர, அங்கு தேவனெதிரில் ஜயதேவர் தனது காவியத்தைப் பாடி யாடிக்கொண்டிருப்பதைக் கண்டு கோபமுற்று, அவரைக் காரணங் கேட்க, "நான் செய்த காவியத்தினால் கேசவன் எவ்விதம் திருப்தி யடைகிறாரோ அவ்விதம் தங்களது காவியத்தால் சந்தோஷ

படவில்லையே. இதை வேண்டுமானால் பரீக்ஷை செய்து பாருங்கள்," என்று ஜயதேவர் சொன்னார். பிறகு அரசன் இரண்டு காவியங்களையும் ஜகந்நாதனது முன்னிலையில் வைத்து, "ஸ்வாமீ! இவை யிரண்டில் எது உங்களுக்கு அதிகப் பிரியமானதோ அது மேலிருக்கும்படி செய்தருள்க," என்று சொல்லிவிட்டு யாவரும் வெளியில் வந்துவிட்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் கோவிற்கதவு தானே திறந்திட, அரசனும் மற்றேரும் உட்சென்று பார்க்க ஜயதேவரால் நிருமிக்கப்பட்ட காவியம், மேலே வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். இதனால் அரசன் மனம் பொறுதவனாய், அன்னபானாதிகளில்லாமல் கிலேசப்பட்டுக்கொண்டிருக்க, புருஷோத்தமனைப் போல் ரூபந்தரித்த ஒருவர் அவனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி, "உன் காவியமும் எனக்குப் பிரீதிகரமானதுதான். நீயும் எனது பக்தனென்பதிற் சந்தேகமில்லை. ஆயினும் ஜயதேவனது கீதகோவிந்தத்திற்கு இணை அதுதான். அதையே நீயும் ஸ்வீகரிப்பாயாக," என்றருள, அரசனும் தேவனருளைப் போற்றித் தூரதேசங்களிலுங்கூட கீதகோவிந்தத்தின் பெருமை பரவும்படி செய்தான்.

கீதகோவிந்த மகாத்மியத்தைப்பற்றி யின்னொரு கதையுண்டு. ஜகந்நாதரிருக்கும் புரிக்கடுத்த பிரதேசத்தில் கறிகாய் விற்று ஜீவிப்பவளொருவளிருந்தாள். பத்துத் திக்குகளிலும் சந்திரன் தனது வெள்ளிக் கிரணங்களைப் பரப்பிப் பிரகாசிக்கும் ஒரு சரத்கால இரவில் அவள் ஒரு கத்தரித்தோட்டத்தினுட்சென்று விற்பனைக்காகக் காய்கள் சேகரித்துக்கொண்டே ஜயதேவநிர்மிதமான கிருஷ்ண சரிதத்தை வெகு ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருக்கும் பொழுது, பக்திவசனான பகவான், அந்தக் கானானந்தத்தை யனுபவிக்க ஆவல்கொண்டு அங்கு தோன்றி, கறிகாய்க்காரி போகுமிடமெல்லாம் தானு மங்குமிங்குமாகத் தொடர்ந்து அலையுங்கால், கத்தரிமுட்களால் அவர் போர்த்திருந்த அம்பரமானது கிறுண்டு கிழிந்துபோகக், கடைசியில் அவள் வீடு சென்றபின், பகவானும் கோவிலுனுழைந்து ஸ்வஸ்தானத்தில் வீற்றிருந்தார். மறுநாட் காலை பூஜைக்காக வந்த பூஜகன் பகவானது மேல்வஸ்திரம் முட்களால் கிறுண்டிருப்பதைக் கண்டு ஆச்சரிய மடைந்து, அரசனுக்குச் சொல்லியனுப்பி யவன் வந்ததும், "நான்தான் இன்று காலை கோவிற்கதவைத் திறந்தேன். இராத்திரியில் பாலனுவது பைத்தியம் பிடித்தவனுவது இப்படிச் செய்திருக்கலா மென்றெண்ண விடமில்லையே," என்று தெரிவித்து, இருவரும் சிந்தை மிகுந்தவராய் ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரார்த்தித்துக் கொண்டு, அங்கேயே தங்கி யிருந்தனர். அன்றிரவில் பகவான் அவர்களுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி, "சமீபத்திலுள்ள ஒரு கத்தரித்தோட்டத்தில் நேற்றிரவு கறி காய்க்காரி யொருவள் உள்ளம் பூரித்துக் கீதகோவிந்தத்தைப் பாடிக்கொண்டு திரியும் பொழுது, நானும் பின் தொடர்ந்தலைய வஸ்திரம் கிழியலாயிற்று," என்று தெரிவித்தருளினார். பின்பு அரசன் ஜயதேவரையும் அக்கறிகாய்க்காரியையும் புகழ்ந்து, அவ்ளைப் பகவதானந்தகரமான கீதகோவிந்தத்தை ஒவ்வொரு நாளும் தேவன் சந்நிதியில் பாடிக்கொண்டு நகரத்திலேயே வாஸஞ்செய்யும்படி நியமனம்செய்து, பக்திவசனான கிருஷ்ணனது லீலைகள் அத்புதம், அத்புதம், என்று நினைத்துப் பரமானந்தத்தை யடைந்தான்.

எஸ். மஹாலிங்கமய்யர். பீ. ஏ.

யானைத்திப்பிலி, அத்தித்திப்பிலி.—(Scindapsus) இந்தச் சரக்குக்கு உஷ்ணிக்கிற குணமும், வியர்வையைப் பிறப்பிக்கிற குணமும், கிருமியைப் போக்குகிற குணமும் உண்டென்று, செப்பியிருக்கின்றது. வாதம், காப்பான், சுரம், நீர்ப்பீநசம், இரைப்பு ஆகிய இவைகளுக்குக் கொடுக்கலாமென்று, சிந்தாமணியில் காணலாம்.

—இங்கிலீஷ் வைத்திய சங்கிரஹம்.

பிரிட்டிஷ் துரைத்தன ரீதி

THE BRITISH CONSTITUTION

அத்தியாயம் 2

அரசர்

நியமத்துக்குக்கட்டுப்பட்டு ஆளும் ஐரோப்பிய அரசருக்கெல்லாம் அநேகமாய் இருவித அதிகாரங்கள் பொதுவாக உள்ளனவென்று ஸ்மிருதி தெரிந்தவர்கள் அனைவரும் ஒப்புவார்கள். முதலாவது, சட்ட நிருபணம். இரண்டாவது அச்சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவந்து, துரைத்தனத்தை நிர்வகித்தல். இந்த நிர்வாகத்திலேயே விசேஷித்துள்ள வேறு மூன்று அம்சங்களுமுண்டு. அவையாவன :—

கடற்படை, தரைப்படை யுள்பட மிலிடெரி சருவாதிகாரம், நியாயாதிபத்தியம், மதவிஷயத்தில் நிர்ணயாதிகாரம் என்பவையாம். ஆங்கிலேய அரசருக்கும் இவையனைத்தும் இருப்பதாகத்தான் சாஸ்திரம். ஆனால் அனுபவத்தில் இவையெல்லாம் பல்வகைகளில் மாறுபட்டுள்ளன. அதைச் சுருக்கிச் சொல்லுவோம்.

பார்லிமெண்டு மகாசபையை அழைப்பதும் கலைத்து விடுவதும் அரசருக்கே உரிய பாத்தியங்களாம். அரசருக்குச் சுதாவில் சட்ட நிர்மாணம் செய்ய அதிகாரம் இல்லையாகிலும், இரண்டு பார்லிமெண்டு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்டம் மகாராஜாவினுடைய சம்மதத்தைப் பெறுவிட்டால் ஜாரிக்கு வர முடியாது. ஆயினும், இரண்டு சபையார்களும் அங்கீகரிக்கும் சட்டங்களை ஜாரிக்கு வரவொட்டாமல் நிறுத்துவது தற்கால அரசர்களுக்கு முடியாதென்று, தெரிந்தவர் ஒருவர் எழுதுகிறார். "அரசனையே மரணதண்டனைக் குட்படுத்தி ஒரு சட்டம் இரண்டு சபையாருக்கும் சம்மதமாகிவிட்டால், அவர் அதற்குக் கையெழுத்து வைத்துத்தான், தீரவேண்டும்" என்பது அவர் கொள்கை. இருநூறு வருஷங்களுக்கு முன்னால் ஆன் (Queen Anne) மகாராணி இரண்டு சபையோர்களும் சம்மதித்த சட்டமொன்றுக்குத் தமது அங்கீகாரத்தைக் கொடுக்கவில்லை. அதுமுதற்கொண்டு, அப்படிச் செய்தவர் ஒருவருமேயில்லை. ஆதலால், அவ்விஷயமாக அரசருக்கிருந்த சுயேச்சை போய்விட்டதென்றே கூறிவிடலாம்.

குற்றவாளிகளைத் தண்டனைக்கு உள்ளாக்க எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் மகாராஜாவின் பேராலேயே நடத்தப்படும். அவர்கள் செய்த குற்றம் மகாராஜாவினது அமைதிக்கும், முடிக்கும், கவுரவத்துக்கும் விரோதமான குற்றமென்று கூறப்படும். விசாரணை செய்கிற நியாயாதிபதிகளும் அரசருக்குப் பதிலாக விருந்துதான் நியாயம் செலுத்துகின்றனர். மகாராஜாவின் பேராலேயே நியாயாதிபதிகள் நியமனம் பெறுகின்றனர். ஒரு குற்றவாளியின்மீதுள்ள வழக்கை எப்போது வேண்டுமானாலும் நிறுத்திவிடுவதற்கு அதிகாரம் அரசருக்குண்டு. ஜூரிமாரால் குற்றவாளியென்று நிர்மானிக்கப்பட்டுத் தண்டனை யடைந்தவன் ஒருவனை, முற்றிலும் மன்னித்து விடுவதற்கு அதிகாரம் அரசருக்குண்டு.

கோட்பாட்டின்படி, சண்டை தொடுப்பதற்கும், சமாதானம் பேசுவதற்கும், பிறநாடுகளுடன் உடன்படிக்கை செய்வதற்கும் அரசருக்குமட்டுமே அதிகாரம். பிரஜைகளைக் கவுரவப்படுத்தி மரியாதை செய்யவும், சன்மானிக்கவும், உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவிடவும், புதிதாகப் பிரபுக்களைச் சிருஷ்டிக்கவும், பட்டங்கள் அளிக்கவும் அரசருக்கு மாத்திரமே பாத்தியமுண்டு

அன்னிய ராச்சியங்களுக்குத் தம்முடைய ஸ்தானாபதிகளைத் தேர்ந்தனுப்புவதும், அவ்விராச்சியங்களிலிருந்து அந்நிய ஸ்தானாதிபதிகளைத் தமது தலை நகரில் வரவழைத்துக் கொள்வதும் அரசருடைய காரியங்களாம்.

இவ்வதிகாரங்களைத் தவிர வேறு சில சுதந்தரங்களும் அரசர்களுக்குண்டு. அரசருடைய திருமேனி தெய்வீகம் வாய்ந்தது. அவர் சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்; அதாவது, பார்லிமெண்டு சட்டங்கள் அவரைக் கட்டுப்படுத்தா. அவ்வாறு செய்ய வேண்டுமானால், அவ்விஷயம் சட்டத்தில் சொல்லப்படவேண்டும்.

இவ்விதமான சுதந்தரங்கள் அரசருக்கு இருந்த போதிலும், அவரது ராச்சிய விஷயங்கள் எல்லாம், ஜனங்களுடையபிரதிநிதிகளுக்கு உத்தரவாதம்சொல்ல வேண்டிய மந்திரிமார்களில் ஒருவர் மூலமாகவே செய்யப்படுகின்றன. அரசருக்குச் சுதாவில் யாதொரு காரியப் பொறுப்பும் இல்லை. எல்லாக் காரியங்களும் மந்திரிமார்களின் ஆலோசனையின் பேரில் செய்யப்

படுமாதலால், பழியும் புகழும் அரசனைச் சாராமல் மந்திரிமாரையே சாருகின்றன. இதுபற்றியே "அரசர் பிழை செய்வதில்லை" என்ற சித்தாந்தம் ஏற்படலாயிற்று.

அரசருடைய நோக்கமும் மந்திரிமாரின் நோக்கமும் ஒன்றாகவே யிருக்கும். மந்திரிமாரோ, மகாஜனங்களின் பிரதிநிதிகளான சாமான்னிய சபையினரில் பெரும்பாலருடைய நோக்கப்படியே நடக்கின்றவராவார். ஆகவே, அரசருடைய நோக்கமும் மகாஜனங்களுடைய நோக்கமும் ஒன்றென்று ஏற்படும். இதனால் அரசர், மனம் போனபடி போகக்கூடாதென்றாலும் அவருடைய அந்தரங்க அபிப்பிராயத்துக்கும் தகுந்த மதிப்பு உண்டு. பெரிய உத்தியோகங்கள் கொடுக்கப்படுவதிலும், அந்நிய ராச்சியங்களுடன் செய்யும் கூட்டுறவுகளிலும் அரசருடைய அபிப்பிராயம் மேலோங்கி நிற்பதுண்டு.

பட்டத்துக்கு வரும் உரிமை பார்லிமெண்டாரின் நிர்ணயத்துக் குட்பட்டிருக்கிறது. மகாஜன சபைக்கு செல்வாக்கும் பலமும் குறைவாகவிருந்த பழைய காலங்களில், அரசுரிமை பரம்பரை பாத்தியமாகவே நிகழ்ந்தது. அச்சபைக்குப் பலம் அதிகரித்ததும், அரசுரிமை பரம்பரையாக வருவதல்லவெனவும், மகாஜன சபையின் இஷ்டப்படியே நிகழவேண்டிய தெனவும் ஏற்பட்டது. 1688-ம் வருஷத்திலும், அப்பால் 1701-ம் வருஷத்திலும் இப்புதிய கொள்கையை அனுசரித்தே பார்லிமெண்டார், பரம்பரையைப் பாராட்டாமல், அரசுரிமையைப் பிறர்க்குக் கொடுத்தனர். பின்னதாகக் கூறப்பட்ட வருஷத்தில் பிறந்த "தீர்மானச் சட்ட"த்தால், இங்கிலாந்து நாட்டின் அரசுரிமை புரோடஸ்டாண்டு கிறிஸ்தவரான ஹானோவர் நாட்டு ஸோபையா ராணியின் சந்ததியாரிடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது.

இச்சட்டத்தால், அரசாதிகாரத்தை வகிக்க வருவோர் புரோடஸ்டாண்டு கிறிஸ்தவராகத்தான் இருக்க வேண்டுமென்று ஏற்பட்டுள்ளது. அரசராவது அரசியாவது உரோமன் கதோலிக் கிறிஸ்தவராக விருந்தால், அரசாதிகாரம் அவரைவிட்டு அப்புறப்படுத்தப்படும். உரோமன் கதோலிக் வகுப்பினரைக் கல்யாணம் செய்துகொண்டவருக்கும் அரசாதிகாரம் சித்திக்காது.

இங்கிலாந்து அரசர்களுக்கு, "ஐக்கிய ராச்சியமாகிய கிரேட் பிரிடன், ஐர்லாண்டு சமுத்திரங்களுக்கு அப்பாலுள்ள நாடுகள் இவைகளுக்கு அரசர் : மதாகூர்" என்ற பட்டமே முதன் முதலிலிருந்தது. 1858-ம் வருஷத்தில் நமது இந்திய நாட்டின் துரைத்தனம் சக்கரவர்த்தினி யவர்கள் வசம் சென்றதும், "இந்திய சக்கரவர்த்தி" என்ற பட்டப்பெயரும் சேர்ந்தது.

அரசர்களுடைய குமாரர்களும் அக்குமாரர்களின் சந்ததியாரும், அவ்வரசரது குமாரத்திகளுக்கும் அவர்களுடைய சந்ததியாருக்கும் முன்னதாகப் பட்டத்துக்கு வரும் பாத்தியதையைக் கொண்டாடலாம். ஆனால் இளைய சகோதரனின் குமாரர்களுக்கு முன்னால் மூத்த சகோதரனுடைய குமாரத்தி பட்டத்துக்கு வரலாம்.

இங்கிலாந்தை ஆளும் அரசர்களுக்குச் சொந்த நிலங்களும் ஆஸ்திகளும் சில வுண்டு. அவைகளின் வருமானமே முதன் முதலில் அவ்வரசர்களுக்கு ஏற்பட்ட தொகையாக விருந்தன. பின்னர், துரைத்தனச் செலவுக்காகப் பார்லிமெண்டு மகா சபையாரின் சம்மதத்தின் பேரில் ஜனங்களிடமிருந்து வரிகள் மூலமாக வசூலிக்கப்படும் தொகையும் அரசருடைய பொக்கசத்துக்குப் போய்க்கொண்டிருந்தது. இதில் சில அசௌகரியங்கள் ஏற்பட்டபடியால், நான்காம் உவில்லியம் (William IV) அரசர் காலத்து ஒரு ஏற்பாடு உண்டாயிற்று. அதன்படி, அரசருடைய சொந்த ஆஸ்திகளின் வரும்படியும், குடிகள் செலுத்தும் வரிப்பணமும் மொத்தமாகவே பொக்கசத்துக்குப் போகின்றன. இம்மொத்தத் தொகையிலிருந்து பல்வகைப்பட்ட அரசியற் செலவும் சைன்னியத்தின் செலவும் செய்யப்படுகின்றது. இதிலிருந்தேதான் வருஷந்தோறும் அரசருக்கு "ஸிவில் லிஸ்டு" என்று கூறப்படும் தொகை கொடுக்கப்படுகின்றது. அரசருடைய சொந்தச் செலவுகளும் அவரை யடுத்திருப்போர் சம்பளமும், அவரது குழந்தைகளின் போஷணைச்செலவும் படிப்புச்செலவும் அரண்மனைச் செலவும் ஈடுசெய்யப்படுவது இந்த ஸிவில் லிஸ்டு தொகையிலிருந்துதான். ராஜ குமாரர்கள் தனிக்குடித்தனம் செய்ய அமரும்போதும், ராஜகுமாரத்திகளின் விவாகத்தின்போதும், அரசருடைய விருப்பத்தின் பேரில், பார்லிமெண்டு சபையார் வருஷவாரி வரும்படியோ, சீதனமோ கொடுப்பார்கள். அரசருடைய சொந்த

நிலங்களிலிருந்து வருகிற ஆதாயமெல்லாம் துரைத்தனப் பொக்கசத்தில் சேருகின்றபடியால், குடிகளுடைய திரைப்பணத்திலிருந்து ஒரு சிறிது தொகைதான் அரசருடைய சொந்தச் செலவுக்குக் கொடுக்கப்படுகிறது என்னலாம். இப்போது, அரசருக்குக் கொடுக்கப்படும் வருஷவாரித் தொகையான ஸிவில் லிஸ்டு இவ்வள வென்பதை அனுபந்தத்தில் காணலாம்.

பண்டைக்கால முதற்கொண்டே, இங்கிலாந்தை ஆளும் அரசனாகட்டும், அரசியாகட்டும், அவரது மகுடாபிஷேகத்தின்போது, நாட்டில் ஏற்பட்டுள்ள நியமத்தின்படி ஆள்வதாகவும், ஜாரியிலிருக்கும் சட்டங்களையும் மாமூல்களையும் கவுரவித்துப் பரிபாலிப்பதாகவும், பக்ஷபாதமின்றி நியாயம் செலுத்துவதாகவும், தேசீய தேவாலயங்களின் உரிமைகளைக் காப்பாற்றுவதாகவும் சத்தியம் செய்துகொடுக்க வேண்டும். ஜனங்களுடைய பாத்தியங்களைப் பாதுகாக்கும் "நியமம்" என்று நாம் கூறும் அரசு முறையினால்தான், இங்கிலாந்து தேசம் சுவதந்திர நாடுகளில் ஒன்றாகவும், உலகத்துள்ள நாடுகள் எல்லாவற்றையுங் காட்டிலும் கட்டுக்கடங்கி வாழும் தேசமாகவும் சிறந்து விளங்குகின்றது.

வசம்பு.—(Sweet Flag) நமது நாட்டில் சாதாரணமாய் உபயோகிக்கிற ஒருவித வேரின் தண்டாகிய இந்த திவ்விய சரக்குக்கு ஜாடராக்கினி, தேக தாருட்டியம் இவைகளை வர்த்திப்பிக்கிற குணம் இருக்கின்றது. வயிறு வீரத்து உபத்திரவம் செய்கிற மந்தாக்கினி, விஷசிரோகம்போல் காணுகிற மந்தபேதி, சூலை ஆகிய இவைகளுக்குக் கொடுத்தால் சவுக்கியம் உண்டாகும். முறைக்காச்சலுக்கு, வசம்பைக் களிச்சிப்பருப்பு, நிலவேம்பு இவைகளுடன் சேர்த்துக் கொடுத்துப் பிரயோஜனம் கண்டதுண்டு. க்ஷீணசுரங்களுக்குக் கொடுக்கிற மருந்துகளோடு இதையும் சேர்த்துக் கொடுக்கலாம். உஷ்ணித்து வியர்வையைப் பிறப்பிக்கிற குணமுமுண்டு. வாதநோய்களுக்கு, வசம்பைச் சாராயம் விட்டரைத்துப் பூச சவுக்கியம் உண்டாகும். எண்ணெயில் கலந்து சொறிசிரங்குகளுக்குப் பூசலாம். குன்மம், வாய் நாற்றம், காசம், கிருமி இவைகளுக்குக் கொடுக்க நல்ல மருந்து என்று, தமிழ் நூலில் கண்டிருக்கின்றது. வசம்பு சூரணத்தில், ஒருவேளைக்கு 20-40-கிறேன் எடையாவது, அல்லது இன்னம் அதிகமாயாவது கொடுக்கலாம். ஆனால் வெந்நீர் ஊரல் கஷாயம்செய்து கொடுப்பதே நல்ல முறை. அதற்கு 10 ஔன்ஸ் வெந்நீரில், ஒரு ஔன்ஸ் வசம்பை இடித்துப்போட்டு ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ள வேண்டியது.

—இங்கிலீஷ் வைத்திய சங்கிரஹம்.

சந்திரன்

MOON

கிழமைகளின் பெயர் :—உலகத்தில் ஜனங்கள் தமக்குப் பேருதவி புரிந்தோர், குலதெய்வங்கள், பூஜ்யர்களானபெரியோர், முதலியவரின் பெயர்களைத்தமது வீட்டுக்குழந்தைகட் கிடுவது ஸம்பிரதாயம். இவ்வழக்கம் அவர்களின் பக்தி விசுவாஸத்திற்கும் நன்றி யறிதலுக்கும் ஓர் அடையாளமாகும். மனுஷ்யவர்க்கத்திற்கே பேருதவி புரிந்து உயிர்தந்து வளர்க்கும் ஸூரியனுடைய நாமத்தை எல்லா ஜாதியருக்கும் பொதுவாய் வாரத்தின் முதல் நாளுக்கு வைத்திருக்கிறது. ஞாயிறு என்றால் சூரியன். தேஜஸ்ஸில் சூரிய னெவ்வளவு கடுமையோ, அவ்வளவு குளிர்ந்தது சந்திரன். இராக்காலத்தில் சில தினங்களில் பிரகாசித்தும், சில தினங்களில் மறைந்தும், வளர்ந்துகொண்டும் தேய்ந்துகொண்டும், பலவித மாறுதல்களை யடைந்து, மனிதன் ஆச்சரியத்துடன் கவனிப்பதற்குப் பாத்திரமாகிறது. இயற்கை யற்புதங்களை யனுபவித்து ஆனந்திப்போர்க்குத் தன் சாந்தமான கிரணப்பிரவாகத்தைப் பூதலத்தில் பெருக்கி யூற்றும் சந்திரனிடமிருக்கும் அபிமானம் வேறெந்தக் காக்ஷியிலு மிராது. அதனழகைக் குதூகலத்துடன் வர்ணிக்காத கவிகளில்லை, படத்தி லெழுதிப் பாராத சித்திரச் சிற்பிகருமில்லை. ஆகையாற் சூரியனுக் கடுத்தபடி கவுரவம் வகிக்கச் சந்திரன் யோக்கியதை யுள்ளதாகக் காண்கிறது. வாரத்தினிரண்டாவது தினத்திற்கு அதன் பேரையிட்டிருக்கிறோம். திங்கள் என்றால் சந்திரன்.

சந்திரன் முழுகாந்தியுடன் பிரகாசிக்கும் வேளைகளில், வெகு பெரிய நக்ஷத்திரங்களைத் தவிர மற்றவை கண்ணிற்குப் புலப்படா. ஆகையால்து இரவில் சில சமயங்களில் மறைந்திருப்பது நம்முடைய அதிர்ஷ்டம்தான். அவ்வேளைகளிற்றான் வானம் தெளிந்து, தாராகணங்களால் நிறைந்து, சாயாபதத்தினழகும் குறைவுபடாமல், ரம்யமாய் விளங்குகின்றது.

சந்திரகலைகள்.—சாயுங்காலமானதும் சூரியன் மேற்றிசையில் மறைகிறது. இன்னும் 12-மணி நேரத்திற்கு அதற்கு லீவு. ஊரிரைச்ச லோய்ந்து வருகிறது. பகலில் அதனதன் காரியத்தைத் தேடித் திரிந்த உயிர்ப்பிராணிக ளனைத்தும் தத்தமிருப்பிடத்தை நோக்கித் திரும்புகின்றன. அமாவாஸையன்று கதிரவன் அஸ்தமித்ததும் மஞ்சள் வெயிலும் மறைய, ஒன்றன்பின்னொன்றாய் வானத்தில் தாரகங்களுதிக்கின்றன. விண்ணுலகத்தில் தாராகணங்களையும், மண்ணுலகத்தில் தெருக்களையும் வீடுகளிலுமேற்படும் விளக்குகளையும் தவிர, வேறு வெளிச்சமொன்றுயில்லை. நிசாசரங்களான வௌவால், ஆந்தை, நரி முதலியவற்றின் கூச்சல் சிற்சில வேளைகளில் காதில் வீழ்கின்றது. மற்றப்படிச் சாதாரணமா யெங்கும் நிச்சப்தந்தான். இப்படி இரவு முழுதும் கழிந்துவிடு

கிறது. திருடர்களுக்கு இக்காலம் கொண்டாட்டம். அவர்களும் நிசாசரர்கள்தானே!

மறுநாள் சூரியனஸ்தமனமானதும் இரவிலும் வித்தியாஸங்களொன்றும் காண்பதில்லை.

மூன்றுநா ளஸ்தமனமானதுதான் தாமதம். நாகரீகமும் அபிவிருத்தியு மடைந்திருக்கிற இக்காலத்திலுங்கூட வெகுபேர் மேற்குத்திசையி னடிவானத்தைக் கவனித்துப் பார்க்கிறார்கள். எதற்காக? பிறைச்சந்திரனைக் காணவாம்! மூன்று நான்கு நாளாய் மறைந்திருந்த சந்திரனைப் பார்த்தலினாற் புண்யமுண்டாகுமென்பது பாமர ஜனங்களின் நம்பிக்கை. அதன் ரூபம் பசுவின் குறுகிய விரண்டு கொம்புகளைச் சேர்த்துப் பிடித்தாற்போ லழகுவாய்ந்து வளைந்து, நடுவிற் சிறிது அகன்று, இருநுனியிலுங் கூராய்க் காண்கிறது. காந்தியுள்ள பக்கம் சூரியனிருக்கும் திக்கை நோக்கி நிற்கிறது. மங்கிக் கம்மலாய்ச் சிவந்து தோன்றும் சந்திர மண்டலத்தின் மற்றப் பாகத்தை யது ஏந்திக்கொண்டிருப்பதுபோ லிருக்கிறது. அமாவாஸையிலிருந்து மூன்றாவது தினமாதலால், அதை மூன்றாம் பிறை யென்பர். பூமியின் தினகதி விசேஷத்தாலது சிறிது நேரத்தி லஸ்தமித்துவிடும். இப்பிறை யழகைக் கண்டு பரமசிவக்கடவுளும் அதைச் சிரோபூஷணமாய்த் தன் தலைமேல் தரித்தார்போலும்.

மறுபடி சந்திர தரிசனம் நமக்குக் கிடைக்க அன்றிரவும் மறுபகலும் கழியவேண்டும். நான்கா நாளஸ்தமன காலத்தில் அதன் பிம்பம், சென்ற தினத்தில் தோன்றிய விடத்தைவிட, அடிவானத்தை விட்டு மேலுயர்ந்து காண்கிறது. நேற்றைத் தினத்தைவிட இன்று அதிக நேரம் அத்திசையில் தங்கியிருக்கிறது. பிறையும் வளர்ந்திருக்கிறது! ஆகவே, நக்ஷத்ரங்களுக்கு நடுவே முதல்நாள் (அதாவது அமாவாஸையன்று) சூரியனிருக்கும் ஸ்தானத்திற் சம்பந்தப்பட்டிருந்து, அத்திசையை விட்டு வரவரக் கீழ்ப்புறமாய் நகர்ந்து வருவதாக ஏற்படுகிறதல்லவா?

அடுத்த இரவுவரையிற் காத்திருந்து பார்ப்போம். என்ன வித்தியாஸம்? நான்காம் பிறைதினத்தைவிட இன்று சூரியாஸ்தமன காலத்தில் மேற்றிசை யடிவானத்தை விட்டுயர்ந்திருக்கிறது. அதாவது சூரியனை விட்டு இன்னுங் கொஞ்சம் கீழ்ப்புறமாய் விலகிவிட்டது. முன்னையை விட ஒளிபெற்ற பாகம் பெருத்துமிருக்கிறது. ஆனால் வெள்ளொளியற்று கம்மலாய்த் தோன்றிக்கொண்டிருந்த பாகம் நாளுக்கு நாள் மங்கி வருகிறது.

இப்படியாகச் சந்திரப்பிறை தினந்தினம் விருத்தியடைந்துகொண்டே வருகிறது. சாயங்காலங்களிற் பகலிலேயே சந்திரபிம்பத்தை மேற்றிசையில் நாமிப்போது பார்க்கலாம். காந்தியற்றுவெண்மையான மேகத்தின் கண்டம்போலவே யிருக்கும். 7, 8-தினங்களானதும் மாலை யாறுமணி சுமாருக்கு வான மத்தியமாய் நமது தலை மேலாகப் பிரகாசிக்கும் அப்போது அதன் பிம்பத்தில் சரிபாதி காந்தியுடனிருக்கும். சந்திராஸ்தமனமாக இன்னும் ஆறுமணிகால மாகும். நடுநிசிவரையிற்கூட நிலவிருந்துகொண்டே யிருக்கும்.

இப்படியாகக் கொஞ்சங் கொஞ்சமாய் வளர்ந்து, இன்ன மொருவாரத்தில் பிம்ப முழுதும் ஒளி பரவிவிடும். நாளுக்கு நாள் கிழக்காக நகர்ந்துவந்து கடைசியாகச் சூரியனஸ்தமாவதும் சந்திரன் கீழ்த்திசையிலுதிப்பதும் சரியாக விருக்கும். முழு பிம்பமும் காந்தியுடனிருப்பதால், அன்றைய தினம் பௌர்ணமை, பாதி ராத்திரியானதும் வான மத்தியை யடைந்து, மறுநாள் பொழுது விடிவதும் சந்திர னஸ்தமிப்பதும் சரியாக விருக்கும்.

பௌர்ணமைச் சந்திரன் அழகு எத்தேசங்களிலும் கவிகளாற் சிலாகிக்கப்பெற்றிருக்கிறது. மனத்துக்கு இன்பத்தைத்தரும். அழகிய வஸ்துக்களைச் சந்திரனுக் கொப்பிடுவது சாமான்யம். சூரிய தலத்தில் களங்கங்கள் காண்பது போலச் சந்திர முகத்திலும் தோன்றுகின்றன. ஆனால் சந்திரகளங்கங்கள் ஏறக்குறைய அதன் பிம்பமுழுமையும் பரவியிருக்கும். சூரியதலத்தில் தோன்றும் பரபரப்பு இவைகளுக்கில்லை எப்போதுமொரே ரீதியாய் மாறுதல்களின்றி ஸ்திரமாயிருக்கின்றன. விசித்திர அமைப்புள்ளவை. பூர்ணசந்திர பிம்பமத்தியில் முயற்குட்டி யொன்று படுத்திருப்பதுபோலத் தோன்றுவதால், சந்திரனுக்குச் சசாங்கன் என்று பெயர். ஒரே மொத்தாகாரமாய் வெளேரென் றிருப்பதைவிட வெளுப்பும் கருப்புங் கலந்து தோன்றுவதும் ஒரு அழகுதான். வெறும் இட்டிலியைவிட எண்ணெய் மிளகாய்ப் பொடி தடவியதைப் பார்த்தால் வாயில் ஜலம் அதிகமாய்த்தான் ஊறும். ஆகையாற்றான் நமது காளிதாஸன்

मलिनमपिहिमांशोर्लक्ष्मलक्ष्मीं तनोति

என்றெழுதினார்.

இக்களங்கங்களுக்குக் காரணம் வெகு விநோதமாய் மற்றொரு கவியாற் சொல்லப்பட்டிருக்கிறது. சிலர் சந்திரக்கண்ணாடியிற் பூமியின் நிலஜல பாகங்கள் பிரதிபலிப்பதாலென்றும், சிலர் சந்திரன் சமுத்திரத்தினின்று கிளம்புவதால்தான் சேர், மண் அதன் சரீரத்தி லொட்டியிருப்பதா லென்றும், மற்றுஞ்சிலர் பூமியின் நிழல் பரவுவதாலென்றும் பலவாறு கூறுகிறார்கள்; இவையெல்லாம் வாஸ்தவமல்ல; சூரியாஸ்தமனமானதும் உலகைச்சூழ்ந்து பயங்கரமாய் மூடிக்கொள்ளவரும் அந்தகாரத்தை ஜனஹிதத்தின் பொருட்டுச் சந்திரன் வாரி விழுங்கிவிடவே, அவ்விருள் அதன் வயிற்றுக்குட் பரவி மேலுக்குக் களங்கங்கள் போலக் காண்கின்றதென்று சமத்காரமாய் வர்ணித்தார்.

அமாவாஸையன்று நிலவு பூஜ்யம். பௌர்ணமையன்றிரவு பூராவும் சந்திரன் பிரகாசிக்கிறது. இவையிடையிலுள்ள இரண்டு வாரங்களில் பிம்பம் வளர்ந்து அதிகரித்துக்கொண்டே வருவதால், அப்பதினைந்து நாட்களும் வளர்பிறைத் தினங்கள், அதாவது சுக்கில பக்ஷமாகும்.

நாளுக்குநாள் வானத்தில் தாராகணங்களுக்குக்குறுக்காகச் சந்திரன் கிழக்கு நோக்கி யோடுவதாகக் கண்டோமே. இதை யொத்து பௌர்ணமை தாண்டிய மறுநாள், சாயந்திரத்திற்குள் தினம்போலது கீழ்நோக்கி நகர்ந்திருக்குமாதலால், அன்றையதினம் சந்திரோதயம் முதனாள் போலல்லாமல், சூரியாஸ்தமனமாய்ச் சிறிது நேரம் கழித்துத்தான் ஸம்பவிக்கிறது. இவ்வாறு உதயகாலம் நாளுக்குநாள் தாமதப்படுகிறது. சந்திரமண்டலமும் பௌர்ணமையன்று போலிராமற் சிறிது குறைந்துவிடுகிறது. இக்குறைவு நாட் செல்ல அதிகரித்து, சூரியனிருக்கும் திசைக்கெதிர்ப்பக்கமாய்த் திரும்பியிருக்கிறது. வளர்பிறை நாட்களிலும் இப்படியே யிருந்ததல்லவா? சுமார் ஒருவாரமானதும் பாதி தேய்ந்துவிட்டதுபோலத் தோன்றுகிறது. சந்திரோதயமும் பின்னிடைந்து இத்தினத்தில் நடுராத்திரியில் நேரிடும். இன்னும் நாலைந்து நாளில் சந்திரோதயம் இராக்காலாந்தத்தைச் சமீபித்து சூரியனுதிக்கும் தருணத்தை நெருங்கும். அதன் பிறையும் சிறுத்துவிடும். சென்ற அமாவாஸையன்று சூரியனுட னிருந்துவிட்டுப் பிரிந்த சந்திரன் இன்னும் சுமார் மூன்று தினங்களில் மறுபடி அதனுடன் கூடி, இரண்டும் சேர்ந்து உதிக்கும். அச்சமயத்தில் சூரியதேஜஸ்ஸில் அதைச் சுற்றியுள்ள எதுவும் மறைபடவே, சந்திரனும் கண்ணுக்குப் புலப்படுகிறதில்லை. இன்றுதான் திரும்பவும் அமாவாஸை. முன் பௌர்ணமைக்கு மிதற்குநடுவில் ஏறக்குறைய 15 நாட்கள். இத்தினங்களில் சந்திரபிம்பத்தின் பிரகாசமான பாகம் க்ஷீணித்துக்கொண்டே வருவதால், இவ்விரண்டு வாரங்களுக்கும் கிருஷ்ண பக்ஷம் அல்லது தேய்பிறை நாட்கள் என்று பெயர். ஒரு அமாவாஸைக்குமுன் 15 நாட்களைப் பூர்வபக்ஷமென்றும், பின் 15 நாட்களை அமரபக்ஷமென்றும் கூறுவதுண்டு.

முன்னிலவு, பின்னிலவு:—சந்திரன் அமாவாஸை முதல் பௌர்ணமி வரையில் சூரியனிருக்கும் திக்கிலிருந்து அரைவானச் சுற்றளவு, அதாவது 180 டிக்ரீகள் கிழக்காக நகர்ந்து போகிறது. சூரியாஸ்தமனத்தை யொட்டியே நிலவுபிரகாசிக்க வாரம்பித்து விடுவதால், இவை முன்னிலவு நாட்கள். இதற்கு நேர் விரோதமாய்ப் பௌர்ணமைமுதல் அமாவாஸை வரையில் 15 நாட்களில், சந்திரன் சூரியதிசைக் கெதிர் ஸ்தானத்திலிருந்து கிளம்பி, ஆகாய முழுச்சுற்றின் மறுபகுதியை முடிக்க, சூரியனை நெருங்கி நெருங்கித் தேய்ந்துகொண்டே வருகிறது. சந்திரோதயம் இரவுக்கிரவு நாழிகை சென்று ஏற்படுவதால் பின்னிலவு நாட்களை யடைகிறோம். விடியற்காலத்து முன்னமேயே யெழுந்து வழிநடப்போர்க்கும் உழைப்போர்க்கும் இவை தகுந்த நாட்கள். வெயில் மேற்படாமலே வெகுதூரம் நடந்துவிடலாம்; சிரமமில்லாமல், கனத்த வேலையும் நடக்கும்.

சந்திரகதி விசேஷம்.—சாதாரணமா யொவ்வொரு கடியாரத்திலும் குறைந்த பக்ஷம் இரண்டு முட்களிருக்கின்றனவல்லவா? ஒன்று மணியைக் காட்டும்; மற்றொன்று மினிட்டைக் காட்டும், மணிகாட்டியை விட மினிட்காட்டிநீண்டது. இந்த க்ஷணத்தில் அவை யிரண்டும் சேர்ந்திருப்பதாக எண்ணிக்கொள்வோம். அடுத்த க்ஷணத்தில் மினிட் முள், மணிமுள்ளைவிட்டுத் தாண்டிவிடுகிறது. அது ஒரு முழுச்சுற்றுச் சுற்றி, முன் கிளம்பிய விடத்திற்கே வருவதற்குள், சின்ன முள் கொஞ்சதூரம் முன்னால் விலகிவிடுமல்லவா? ஆகையால் ஒருதரம் முள்ளிரண்டுஞ் சேர்ந்திருந்து, மறுபடி யிரண்டாந்தரம் சேரப் பெரியமுள் ஒருமுழுச் சுற்றுடன் கூட இன்னுங் கொஞ்சதூரம் ஓடவேண்டியிருக்கிறது

வான கடிகார தலத்தில் நக்ஷத்திரங்கள் மணிகுறிக்கும் நெம்பர்களை யொக்கும். ஓட்டத்தில் சந்திரனைப் பெரிய முள்ளுக்கும், சூரியனைச் சிறிய முள்ளுக்கும் ஒப்பிடலாம். சூரியனும் சந்திரனும் அமாவாஸையன்று ஏறக்குறைய ஒரேதிசையி லிருக்கின்றன. அன்றுமுதல் சந்திரன் சூரியனைவிட்டுப் பிரிந்து வேகமாயோடுகிறது. சூரியனோ மெதுவாய் அதே திசையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. ஆகையால் மறுதடவைச் சூரியனை யோடிப்பிடித்து, அமாவாஸையுண்டாகச் சந்திரன் வானத்தில் ஒரு முழுச்சுற்றுடன் கூட இன்னுங் கொஞ்சதூரமும் ஓடவேண்டி யிருக்கிறது. ஒருதரம் சுற்றி மறுபடியும் சூரியனை யடைய, அதாவது அமாவாஸைக்கமாவாஸை, சுமார் $29\frac{1}{2}$-நாட்களாகின்றன வென்று ஏற்கனவே நமக்குத் தெரியும். ஆனால் நக்ஷத்திரங்கள் மத்தியில் ஒரு ஸ்தானத்தைவிட்டுப் பெயர்ந்து மறுபடியும் அதே ஸ்தானத்தை யடைய மாத்திரம் 27-நாள் $7\frac{1}{2}$-மணி நேரந்தானாகிறது.

நாமோரிடத்தில் ஸ்திரமாய் நின்றுகொண்டிருக்க, நமக்கு நேரிலிருக்கும் மரத்தடியைவிட்டுக் கிளம்பி யொருவன் ஓரே வேகத்துடன் நம்மை யொருதரம் சுற்றி மறுபடியும் அம்மரத்தடியையே யடைய $27\frac{1}{3}$-நிமிஷமானால், அவன் நம்மை $27\frac{1}{3}$-நிமிஷத்தி லொருதரம் சுற்றுகிறான் எனலாம். இதற்குள் நாம் நின்ற ஸ்தானத்திலேயே எப்பக்கம் திரும்பினும் பாதகமில்லை. இதுபோலவே சந்திரனும் வானவெளியில் பூமியை $27\frac{1}{3}$-நாட் கொருமுறை சுற்றுவதாகிறது.

ஆனால் சூரியனை யபேக்ஷித்து ஒருதரம் சுற்றிவர $29\frac{1}{2}$-நாட்களாகின்றன. மேற்கண்ட காலத்தைவிட இரண்டுநாள் தவக்கப்படுவது இக்காலத்திற்குள் சூரியனும் சும்மாயிராமல் கிழக்குநோக்கி நகர்ந்து தோற்றுவதுதான். யதார்த்தத்தில் இச்சூரிய சலனம் பூமியின் வருஷகதியாலுண்டான தோற்றமல்லவா? இப்படியாகச் சந்திரன் தன்னை $27\frac{1}{3}$-நாளுக்கொருமுறை சுற்றிவர, பூமியும் சூரியனை $365\frac{1}{4}$-நாளுக்கொருமுறை சுற்றிக்கொண் டிருக்கிறது. இவ் விருகதியும் நக்ஷத்திர கணங்களுக்குக் குறுக்காக மேற்கிலிருந்து கிழக்காக ஏற்படுகிறது. ஒருவன் உத்திரத்துருவத்தை நோக்கி நின்று, தனக்கெதிரே ஒரு கடிகாரத்தைப் பிடித்துப்

பார்த்துவந்தால், அக்கடிகார முட்களின் நுனிகள் முறையே முன்சொன்னபடி சூரிய சந்திரர்கள் ஓடுவதாகத்தோன்றும் திசையை யனுஸரித்து நகர்கின்றன. இவ்வேகத்தைவிட பலமடங்கதிகமாய்ப் பூமி தன்னைத் தானே மேற்கு-கிழக்காகச் சுற்றி சுழல்வதால், பலமுறை சூரியசந்திரர்கள் தினம் கிழக்கிலிருந்து மேற்காக சுற்றுவதாகத் தோற்றுகின்றன.

சந்திர வீதி.—சந்திரன் ஓர் குறித்த ஸ்தானத்தை விட்டுப் பெயர்ந்து மறுபடியதற்கே திரும்ப $27\frac{1}{3}$ நாளாகிறதல்லவா? இக்காலத்தில் அது ஒரு வான முழுச் சுற்று, அதாவது 360° ஓடுகிறது. ஆகையால் தினமொன்றுக்கு 13°க்கதிகம் நகர்கிறது. யாதாவதொரு தினத்தில் சூரியனிருக்கும் ஸ்தானத்தைக் குறித்துக் காட்ட சூரியவீதி 12 ராசிகளாக எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ, அம்மாதிரியே சந்திர ஸ்தானத்தையும் குறிக்க அதன் வீதி 27 பாகங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. சூரியவோட்டம் மெதுவாகையால் 12 பாகங்களாகப் பிரித்தல் போதுமானது. சந்திரனோ வெகு "அவஸரக்குடுக்கை". ஆகையால் தன் ஸ்தான பேதங்களைக் குறிக்க, அதன்வீதி அதிக பாகங்களாக வேண்டும். மேலும் 27 ஆகப் பிரித்தலில் ஒரு ஸவுகரியம். ஒவ்வோர் பகுதியும் தினமொன்றுக்குச் சந்திரன் நகரும் தூரத்தை யேறக்குறைய காட்டும். இவ்விருபத்தேழு பகுதிகளுக்கும் அசுவதிபரணி, முதலியபெயர்களிட்டிருக்கிறார்கள். இவற்றை ஆகாயத்தில் தேடிப் பிடிப்பதற்காக அவற்றின் அமைப்பும் ஸ்தானங்களும் பின்னால் விபரமாய்ச் சொல்லப்படும். இம்மாதிரி $27\frac{1}{3}$ நாட்களுக்கொருதரமாக ஒரு வருஷத்தில் சுமார் $13\frac{1}{2}$ தரம் பூமியைச் சந்திரன் சுற்றுகிறது.

சூரியவீதி ககோள மத்தியரேகைக்கு $23\frac{1}{2}$° சாய்ந்திருக்கிறது. இச்சாய்வு மாறாமல் எப்போதும் ஸ்திரமாகவே யிருக்கிறது. சந்திரவீதி சூரியவீதிக்கு 5° சுமார் சாய்ந்திருக்கிறது. இதனால் சந்திரன் ஆகாச மத்திய கீழ்மேல் ரேகையை விட்டு $28\frac{1}{2}$° வரையில் வடக்காகவும் $28\frac{1}{2}$° வரையில் தெற்காகவும் ஒதுங்கியோடச் சமயம் நேரிடும். சூரியனோ 23° க்கு மேல் விலகுவதில்லை.

சந்திரனிருக்குந்தூரம்.—சூரியனுக்கும் நமக்குமுள்ள தூரத்தை யளக்கும் வகை நாம் முன்சொல்லியிருக்கும் பிரகாரமே, நம்மிடமிருந்து சந்திரனிருக்கும் தூரத்தையு மளக்கலாம். இப்படியாக அது 24,0000 என்று தெரிகிறது. மணிக்கு 40 மைல் வீதம் பறந்து செல்லும் ஆகாயவிமானத்திலேறி சந்திரனைப்போய்ச் சேர, சுமார் 250 தினங்களாகும். இந்த யாத்திரையளவு நீளம் ஓர் கயிறு திரித்தால் அது இப்பூகோள மத்தியமாகப் பத்து சுற்றுவரும். சப்தம் செகண்டு ஒன்றுக்கு 1120 அடி தூரம் வீதம் வியாபிக்கும். சந்திரனை யெட்டக்கூடிய வளவு பலமாய் ஓர் வேட்டுப்போட்டால், அதன் வெடிச்சத்தம் அவ்விடம் போய்ச்சேர 14 நாட்களாகும். நமது பூமியளவு பெரிய கோளங்களாக முப்பதை ஒன்றற்கொன்று தொடும்படி ஒழுங்காய்வைத்து நமக்கும் சந்திரனுக்கும் ஓர் பாலம் கட்டலாம். இம்மாதிரி சூரியனுக்கும் நமக்கும் ஒன்றேறப்பட 12,000 பூகோளங்களுக்கு மேலாகும்! ஆகையால் சந்திரனை விடச் சூரியன் நம்மிடமிருந்து எத்தனையோ மடங்கு தூரத்திலிருக்கிறது!

பிறைமாறுவதன் காரணம்.—சந்திரபிம்பம் வளர்வதற்கும் தேய்வதற்கு மென்ன காரணம்? விளக்குகளேற்றிய அறையிலிருவித வஸ்துக்களிருக்கின்றன.—சுயமாய்ப் பிரகாசமுள்ள விளக்குகள் ஒருவகை. விளக்கு வெளிச்சத்தா லல்லாமல் நாம் காணமுடியாத மனிதர்களும் சாமான்களும் மற்றொரு வகை. இம்மாதிரி ஈசுவரசிருஷ்டியில், சுயமாய்ப் பிரகாசமுள்ளவையும், தனக்கே ஒளியில்லாமல் சுயம்பிரகாசிகளி னுதவியால் தங்களைக் காட்டிக்கொள்பவையுமாக இருவிதப் பொருள்களுண்டு. இவற்றில் முதல்வகுப்பைச் சேர்ந்தவை சூரியனும் நக்ஷத்திரங்களும். சந்திரன், பூமி, மற்ற கிரகங்கள் முதலியன இரண்டாவது வகுப்பிலடங்கியவை.

இவை சூரியகிரணங்களைத் தாங்கி அதனால் நமக்குப் புலப்படுகின்றன. சூரியன் திடீரென்று அணைந்தால் சந்திரனையாவது கிரகங்களையாவது நாம் பார்க்கவே முடியாது. நக்ஷத்திரங்களுக்கோ யாதொரு குறைவுமிராது.



இதோ ஒரு வட்டம் வரைந்திருக்கிறது. அதன் ஓரமாக 1, 2,...8 என்று நம்பரிட்டிருக்கும் ஸ்தானங்களில் எட்டுப் பிள்ளைகளை நிறுத்தி, எல்லாரையும் (அம்பு முனை காட்டும்பிரகாரம்) ஒரே திசையைப் பார்க்கும்படி செய்வோம், இவ்வட்டத்தின் நடுவே நான் நின்று ஒவ்வொருவனையும் கவனித்து வந்தால், அவனவன் தலையில் பின்வரும் பாகங்கள் எனக்குப் புலப்படும்.

முதல் பையன்.—பின்தலை முழுதும். முகம் பூஜ்யம்.

2-வது பையன்.—முகம் வலதுபாதியிற் கொஞ்சம்; பின் தலை வலது பாதியும், இடது பாதியிற் கொஞ்சமும்.

3-வது பையன்.—முகம் வலதுபாதி முழுதும்; பின் தலை வலதுபாதி மாத்திரம்.

4-வது பையன்.—முகம் வலது பாதி முழுதும் இடது பாதியிற் கொஞ்சமும். பின் தலை, வலது பாதியிற் கொஞ்சம்.

5-வது பையன்.—முகம் முழுதும். பின்தலை பூஜ்யம்.

6-வது பையன்.—முகம் இடது பாதி முழுதும், வலது பாதியிற் கொஞ்சமும். பின் தலை யிடது பாதியிற் கொஞ்சமும்.

7-வது பையன்.—முகம். இடது பாதி முழுதும் பின் தலை இடது பாதி மாத்திரம்.

8-வது பையன்.—முகம் இடது பாதியிற் கொஞ்சம், பின் தலை இடது பாதி பூராவும் வலது பாதியிற் கொஞ்சமும்.

[நாநுச்சாதன்ன தலையின் பின்பாகத்தைப் பின் தலை யென்று சொன்னோம்]

வட்டமத்தியில் நான் நின்ற ஸ்தானத்திற் பூமியிருப்பதாகவும், 8-பையன்கள் நின்ற ஸ்தானங்களில் முறையே சந்திரன் தான் பூமியைச்சுற்றி யோடுகையில் வருவதாகவும் நினைத்துக்கொள்ளுங்கள். சந்திரகோளத்தில் சூரிய வெளிச்சம் படும் பாகம் எப்போதும் சூரியனையே நோக்கியே நிற்குமாதலால், இவ்வெட்டு ஸ்தானங்களிலும் அப்பாகம் பையன்களின் முகத்தை யொக்கும். சூரிய வெளிச்சம் படாத மறு (பின்) பாதி சூரியனின்று அப்புறமாகத் திரும்பியிருக்கும். இப்பாகம் பையன்களின் பின் தலையை யொக்கும்.

சந்திரனும் சூரியனும் ஒரே திசையிலிருக்கையில் (அமாவாஸையன்று) சந்திரதலத்தின் ஒளியற்ற பாகம் நம்மை நோக்கி யிருக்கிறது. அதனாற்றான் அது நமக்குத் தென்படுகிறதில்லை. சுயஒளிதான் சந்திரனுக்குக் கிடையாதே. சந்திரன் சூரியனை மறைத்து விடாதோ வென்று ஐயப்படலாம். சூரியன், சந்திரன், நாம் நிற்குமிடம், இம்மூன்றும் ஒரே நேராய் அமாவாஸைதோறு மிருப்பதில்லை. ஒன்றற்கொன்று சற்றுத் தெற்கு வடக்காக மாறியிருக்கும். ஆதலால் நாம் பெரும்பான்மையும் இத்தினங்களில் சூரியனை மறைபடாமல் பார்த்து வருகிறோம். எப்போதாயினும் மூன்றும் ஒரே நேராய் வருமாயின் சூரியனைச் சந்திரன் நம்மிடமிருந்து மறைப்பதுண்டு. அப்போதுதான் சூரியக்கிரகணம். இதைப்பற்றிப் பின் விபரமாய் விசாரிப்போம்.

அமாவாஸை கழிந்து சுமார் ஏழு தினங்களில் சந்திரன் சூரியனைவிட்டு வானவட்டத்தில் கால்பாகம் [90°) விலகிவிடும். அதன் தோற்றம் 3-பையனதை யொக்கும். சூரிய வொளி பெற்ற பாகத்திற் பாதியும் ஒளியற்ற பாகத்திற் பாதியும் நமக்குத் தெரியும். இவ்விதமேதான் பௌர்ணமை கழிந்து சுமார் ஏழு தினங்களானதும், (இடது, வலது பக்கங்கள் மாத்திரம் மாறிவிடும்.



பௌர்ணமை தினம் சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவே நாம் வருகிறோம். சந்திரனுடைய காந்தி யுள்ள பாதி முழுதும், நமது பக்கமாய்த் திரும்பியிருக்கிறது. 5-வது பையன் முகத்தைப்போலாகும். பௌர்ணமை தோறும் அமாவாஸைகளிற்போலப்பூமியும், சூரியனும், சந்திரனும் ஒரே ஒழுங்காய் வருவதில்லை. ஆதலால் பூமி நடுவில் வந்து சூரியகாந்தி சந்திரன்மேற் படாமல் தடுப்பதில்லை. ஒரே யொழுங்கில் வந்து தடுக்க நேர்ந்தால் சந்திரக் கிரகண முண்டாகும். இதைப்பற்றியும் விபரமாய்ப் பின் விசாரிப்போம்.

இரண்டாம் படத்திற் காட்டிய மற்ற நான்கு ஸ்தானங்களிற் சந்திரன் வருந்தருணங்களில், அதன் காந்தி

பெற்ற பாகத்திலும், காந்தியற்ற பாகத்திலும் கிரமப்படி தாரதம்யப்பட்டுத் தெரியவேணும். காந்தியற்ற பாகம் நமது கண்ணிற் படாதல்லவா?

ஆனால் ஒரு விசித்திரம், கவனியுங்கள். அமாவாஸையை யொட்டிப் பிறகு சில தினங்கள் வரையிலும், முன்னாற் சில தினங்களிலும் சந்திரபிம்பத்தின் சூரிய காந்தி யேந்தாத பாகங்களும் நமக்கு மங்கலாய்த் தோன்றுகின்றன வல்லவா? இதற்குக் காரணமென்ன?

எப்படிச் சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் நாம் வர நேர்ந்தால் பூரண சந்திரகாந்தியை நாமடைகிறோமோ, அப்படியே (நமது அமாவாஸை யன்று) சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் சந்திரன் வர, பூமியின் சூரியகாந்தி யேந்திய பாகம் சந்திரனுக்குச் சந்திரன் போலப் பிரகாசித்து, அதன்மேல் பூமியினின்று ஒளி பாய்ந்து பரவும். இதனால்தான் மேற்சொன்ன தோற்றம். இது வரவரக் குறைந்து மறைந்து போவதற்கும் காரணம், பூமியினின்று சந்திரன் மேலிறைக்கும் காந்தி வரவரக் குறைந்து விடுவதாலென்று தெளிவாகிறதல்லவா? நமக்குச் சந்திரன் வளர்வதும் தேய்வதுமாய்த் தோன்றுவது போலவே, சந்திரதலத்தினின்று பார்த்தாலும், இப்பூமண்டலமும் வளர்ந்தும் தேய்ந்தும் காணும். இம்மாறுதல்களும் 29½ நாட்கள்தோறும் தொடர்ச்சியா யேற்பட்டுக் கொண்டே யிருக்கும்.

எஸ். பாலகிருஷ்ணய்யர், பீ.ஏ., எல்.டி.

ஸவிசேஷ நிர்விசேஷ ப்ரஹ்மம்.—கடவுள் ஒரு சர்க்கரைக் குன்றைப் போன்றவர். ஒரு சிற்றெறும்பு அதினின்று ஒரு துளி சர்க்கரையையும், அதைவிட பெரிய எறும்பொன்று இன்னும் அதிகமான சர்க்கரையையும் எடுத்துக்கொண்டு போனபோதிலும், சர்க்கரைக்குன்று மாத்திரம் முன்போலவே பெரிதாயிருக்கிறது. பகவத் பக்தர்களும் அவ்வாறே. ஒரு பகவத் குணத்தின் லேசலேசத்தை யவர்கள் அநுபவிக்கும்பொழுதே ஆநந்த பரிதர்களாகி விடுகிறார்கள். அப்ரமேயனுடைய அநந்த கல்யாண குணங்கள் அனைத்தையும் பூர்ணமாய் அநுபவிக்க ஒருவராலும் ஆகாது.

—உபதேசரத்நமாலை.

இரணியகேசி கதை

THE STORY OF HIRANYAKESI

(முன் தொடர்ச்சி)

இவை மூன்றுந்தான் இராமனுக்கு வழியிலே நேரிட்ட முக்கியமான சம்பவங்கள். அவனது செலவைத் தடுக்க வேறொன்றும் நிகழவில்லை. அவன் எவ்வளவு விரைவாகச் செல்லமுடியுமோ அவ்வளவு விரைவாகச்சென்று இரணியகேசியின் மாளிகையை அடைந்தான். அவன் அங்கே போனபோது தன் கண்ணுக்கெதிர்ப்பட்டவைகள் எல்லாம் அழகும் மேன்மையும் உள்ளவைகளாய் இருக்கக் கண்டான். வயிரக்கற்கள் கோளாங்கற்களைப்போல அவ்வளவு மிகுதியாக இருந்தன. எங்கே பார்த்தாலும் பொன்னும் வெள்ளியும் அழகிய ஆடைகளும்,பலகாரங்களும், சிறந்த பொருள்களும் நிறைந்திருந்தன. அந்தக் காட்சி அவனுக்கு அளவில்லாத அதிசயத்தை உண்டாக்கிற்று. "இரணியகேசி இவைகளை எல்லாம் விட்டுவிட்டு என்னோடு வந்து எமது அரசனை மணஞ்செய்துகொள்ள உடன்படுவாளா? உடன்படுவாளாயின் எமதரசன் அதிர்ஷ்டசாலிதான்" என்று அவன் எண்ணினான்.

அதன் பின் இராமன் இரணியகேசியைக் காணப் போவதற்குத் தன்னை அலங்காரஞ் செய்துகொண்டான். அவன் முதலில் நீராடி, குடுமிக்கு நறும்புகை யூட்டி, நெற்றியில் திலகமிட்டு,காதிற் குழைஅணிந்து, கையிற் கடகஞ் சேர்த்தி. இடையில் வெண்பட்டு உடுத்து, அதன்மேல் ஒரு பொற்கச்சுக்கட்டி, அதனிடத்து வாளைச் சொருகி, தோளில் உத்தரீயமிட்டு, மார்பில் மணியாரமணிந்து, மலர்மாலை புனைந்து, தலையிலே சுழியஞ் சூடி, அழகிய கோலங்கொண்டு, தான் வழியில் வாங்கிவந்த பசுங்கிளியை இரணியகேசிக்குக் கையுறை கொடுப்பதற்காகக் கையிலெடுத்துக்கொண்டு, மாளிகைவாயிலிலேபோய் நின்று தன் வரவை அறிவித்தான். வாயில் காப்பாளர்கள் அவனுக்கு வந்தனஞ் செய்துவிட்டு அவன் அடுத்த நாட்டு அரசனிடத்திலிருந்து தூதாக வந்திருக்குந் தன்மையைப் போய் இரணியகேசிக்கு அறிவித்தார்கள்.

அவள் அவனுடைய பெயரைக் கேட்டவுடனே "ஆகா! பெயர் மிகவும் நன்றாயிருக்கின்றது' அவன் அழகானவன் என்பதிலும் நாங்கள் எல்லாம் அவனைக் கண்டு மகிழ்ச்சி அடைவோம் என்பதிலுஞ் சிறிதுஞ் சந்தேகமில்லை" என்று சொன்னாள். அதனைக் கேட்ட அவளுடைய தாதியர் தவ்வையர் யாவரும் "அவன்

அழகானவனே, எம்பெருமாட்டி, நாங்கள் மாடத்திலிருந்து பலகணி வழியாகப் பார்த்தோம்; அவனை நாங்கள் கண்களாற் கண்டபோது அவனை ஒழிய வேறொன்றைப் பார்க்க எங்களால் முடியவில்லை" என்றார்கள்.

இரணியகேசி அவர்களை நோக்கி "நல்லது! நல்லது! இவ்வாறுதானோ நீங்கள் எனக்குப் பணிசெய்கின்றது! மாடத்திலிருந்து பலகணி வழியாகத் தெருவில் போபவர்களைப் பார்த்துக்கொண்டா இருக்கிறீர்கள்! விரைந்து வாருங்கள்: எனது செம்பட்டாடையை எடுத்து வருவதோடு எனது கூந்தலைக் கோதி முடியுங்கள். சிலர் நல்ல நாண்மலர்மாலை கொண்டு வாருங்கள். சிலர் பிச்சமும் ஆலவட்டமும் எடுத்து வாருங்கள். சிலர் போய் நமது சமயமிருக்கு மண்டபத்தையும் நமது சிங்காசனத்தையும் பெருக்கித் துடைக்கச் சொல்லுங்கள். என்னைக் காணும் ஒவ்வொருவரும் இவள் உண்மையில் இரணியகேசியே என்று சொல்லும்படி என்னை இன்று கோலஞ்செய்ய வேண்டும்" என்றாள்.

இரணியகேசியை அலங்கரிப்பதற்காக அவளுடைய தாதிகள் அங்குமிங்கும் ஓடி விரைவின் மிகுதியினால் ஒருவரோடொருவர் முட்டி ஒருவர் செய்வதற்கு மற்றொருவர் மாறுசெய்தனர். இரணியகேசி அவைகளை நோக்கி இவர்கள் எப்போது என்னை அலங்கரித்து முடிக்கப்போகிறார்கள் என்று நினைத்தாள். அலங்காரம் செய்து முடிந்தபின் கடைசியாக அவர்கள் அவளைக் கண்ணாடி மண்டபத்திற் கொண்டுபோய் விட்டார்கள். அவள் நிலைக்கண்ணாடியில் தனது கோலத்தைப் பார்த்து, அழகாயிருக்கின்றது என்று கண்டுகொண்டபின் ஓலக்க மண்டபத்திற்குச் சென்று தந்தத்தாலும் பொன்னாலும் செய்யப்பட்ட சிங்காதனத்தின் மேல் வீற்றிருந்தாள். அவளுடைய தாதிகள் வீணையை எடுத்துப் பக்கத்திலிருந்து இனிமையாகப் பாடத் தொடங்கினார்கள்.

அதன்பின் இராமனை இரணியகேசியின் சந்நிதானத்திற்கு வாயிலோர்கள் கொண்டுவந்து விட்டார்கள். அவன் இரணியகேசியின் ஓலக்கச்சிறப்பை நோக்கிப் பெரு வியப்பும் பேராச்சரியமும் அடைந்து வாய்திறந்து ஒன்றுஞ் சொல்ல முடியாமற் சிறிதுநேரம் வாளா நின்றான். பின்பு அவன் மனந்தெளிந்து,சோர்வு நீங்கித் தான் தூதுவந்த காரியத்தை இனிய சில சொற்களால் விளக்கமாகச் சொல்லித் தன்னைத் தனியே மீண்டு போகும்படி விடப்படாதென்று இரணிய கேசியை வேண்டிக்கொண்டு தன் பேச்சை முடித்தான்.

"ஐய இராம" என்று இரணியகேசி அவனை விளித்து,"நீர் எனக்குச் சொன்ன நியாயங்கள் எல்லாம் தக்கவைகளே;உம்முடையவேண்டுகோளுக்கு இணங்குவது எனக்கு முழு விருப்பம் என்பதை நீர் நன்றாக நம்பும். ஆயினும் ஒரு மாதத்திற்கு முன் நான் நமது நகர்ப்புறத்திலுள்ள ஆற்றங்கரையில் என் தோழியர்களோடு உலாவிக்கொண்டிருக்கும்போது என்னுடைய கைவிரலில் அணிந்திருந்த மோதிரம் கழன்று கீழே விழுந்து உருண்டு ஆற்றுள் ஓடிவிட்டது. அந்த மோதிரத்தை நான் எனது நாட்டிலும் மேலாக மதித்திருந்தேன். ஆகவே அதனை இழந்ததனால் எனக்கு எவ்வளவு மனவருத்தம் உண்டாயிருக்கும் என்பதை நீர் அறிந்துகொள்ளலாம். நான் அப்போது எனக்கு மணம்பேசி வருபவர்கள் யாரேனுமாகுக; நான் அங்கே கெடுத்துவிட்ட மோதிரத்தை அவர்கள் கண்டெடுத்து வந்தாலன்றி, அவர்களுடைய பேச்சுக்கு நான் காது கொடுப்பதில்லை என்று சூளுறவு செய்துகொண்டேன். இனி நீர் என்ன செய்ய வேண்டுமென்பதை நீர் நன்றாக அறிந்துகொண்டீர். அதனைச் செய்யாது நீர் அல்லும் பகலுமாக ஆயிரம் நாள் நின்று பேசினாலும் என்னுடைய மனத்தை மாற்றமாட்டீர்" என்று சொன்னாள்.

இராமன் அவள் சொன்ன மறுமொழியைக் கேட்டு மிக்க ஆச்சரியமடைந்தான். அவன் பின்னர் இரணியகேசியைத் தலையால் வணங்கித் தான் கொண்டுபோயிருந்த பச்சைக்கிளியையும் பீதாம்பரத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டான். அவள் தனக்குக் கையுறை ஏதும் வேண்டியதில்லையென்றும் தான் சிறிது போதுக்குமுன் சொன்னவற்றை அவன் மறந்துவிடப்படாது என்றும் சொன்னாள்.

இராமன் தன் விடுதிக்குத் திரும்பிச் சென்று துக்கமேலீட்டினால் ஒன்றும் தின்னாமற் போய்ப் படுத்துக்கொண்டான். அவனுடைய கிளியும் ஒன்றும் தின்னாமல் அவனுடைய தலைமாட்டில் உறங்கிக்கொண்டிருந்தது. இராமுழுதும் இராமன் பெருமூச்சு விட்டு அழுதுகொண்டிருந்தான். ஒருதரம் அவன் "ஆற்றிலே ஒரு மாதத்திற்குமுன் விழுந்துவிட்ட மோதிரத்தை நான் கண்டெடுப்பது எப்படி? அதற்கு முயலுவது வீண். அது முடியாத காரியமென்று அறிந்துகொண்டே இரணியகேசி இந்த வேலையை எனக்கு வேண்டுமென்று சொல்லியிருக்கின்றாள்" என்று வாய்விட்டுச் சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

தலைமாட்டிலிருந்த கிளி அதனைக் கேட்டு அவனை நோக்கி "ஐயாவே, நீர் மனம் அழுங்க வேண்

டாம். தக்க முயற்சி செய்தால் எல்லாம் கைகூடும். உம்முடைய நல்ல குணத்திற்கு உமக்கு ஒரு துன்பமும் வரமாட்டாது. கிழக்கு வெளுத்த உடனே நாங்கள் ஆற்றண்டை போய் என்ன செய்யலாம் என்று பார்ப்போம்" என்று சொல்லிற்று. இராமன் கிளி சொன்னதைக் கேட்டு ஒன்றும் பேசவில்லை. அதனைக் கையில் எடுத்து அன்போடு முத்தங்கொடுத்து வீட்டுச் சிறிது நேரத்திற்குள் நித்திரையாய் விட்டான்.

பொழுது புலர் புலரென்று விடிய, கிளி எழுந்து பாடத் தொடங்கிற்று. இராமன் அந்தப் பாட்டைக் கேட்டு விழித்தெழுந்து கிளியைக் கையிலெடுத்துக் கொண்டு புழைக்கடை வழியாகச் சென்று ஆற்றங் கரையை அடைந்து அங்குமிங்குமாகத் திரிந்துகொண்டிருந்தான். தான் வந்த காரியத்தை முடியாமல் எப்படித் திரும்பிப் போவதென்று அவன் மனவருத்த முற்றுப் பலவற்றையும் எண்ணிக்கொண்டிருக்கும் போது "ஐயா ஐயா" என்று யாரோ கூப்பிடுங் குரல் கேட்டது. அவன் நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்து ஒருவரையும் காணாமையால் அது கனவுபோலும் என்று கருதிக்கொண்டு முன்போல ஆற்றங்கரை ஓரமாக நடக்கத் தொடங்கினான். அப்போது "ஐயா ஐயா" என்று மீண்டும் அந்தக் குரல் கேட்டது. அவன் திரும்பி "யார் என்னைக் கூப்பிடுகிறது" என்று கேட்டான். அவனுடைய கையிலிருந்த கிளி தலையைச் சாய்த்து ஆற்று நீருக்குள் கூர்ந்து பார்த்து "அதோ, ஒரு பொன்னிறமுள்ள சேன்மீன்" என்று சொல்லிற்று.

சேன்மீன் ஒன்று மெய்ம்மையாகவே வந்து இராமனைப் பார்த்து "நீர் அன்றைக்கு ஆற்றங்கரையிலே மருதமரத்தின் கீழே எனது உயிரைக் காப்பாற்றினீர்; அப்போது நான் நீர் செய்த உதவிக்குதவி நான் உமக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்தேன். இதோ நீர் தேடுகின்ற இராணி இரணியகேசியின் மோதிரம்; எடுத்துக்கொள்ளும்" என்று சொல்லிற்று. இராமன் அந்த மோதிரத்தைச் சேன்மீன் வாயினின்று எடுத்துக் கொண்டு அதற்கு ஓராயிரம் நன்றி சொல்லிவிட்டு மனத்தளர்வு நீங்கி மகிழ்ச்சி அடைந்து தானும் கிளியுமாக நேரே இரணியகேசியின் மாளிகைக்குச்சென்றான்.

இராமன் வரவை இரணியகேசிக்கு வாயில் காப்பவர்கள் போய் அறிவிக்க, அவள் "ஐயோ பாவம்; நான் சொன்ன காரியத்தைச் செய்துமுடிக்க முடியாது என்னிடத்தில் விடைபெற்றுக்கொள்ள வந்தான்போலும்" என்று நினைத்தாள். இராமன் அவளிடம் சென்று மோதிரத்தை அவள் கையிற் கொடுத்து "அன்னாய், நான் உம்முடைய ஏவலை முடித்துவிட்டேன். இனி நீர் எனது அரசனை மணந்துகொள்வீரா? விடையளியும்" என்று கேட்டான்.

இரணியகேசி ஆற்றில் விழுந்து கெட்டுப்போன தனது மோதிரத்தை அவன் அதிவிரைவில் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்ததைப் பார்த்து மிக்க வியப்படைந்து அது கனவோ அல்லது நனவுதானோ என்று சிறிது மயங்கினாள். பின்னர் அவள் இராமனை நோக்கி "உண்மையாகவே, ஐய, உமக்குத் தெய்வங்கள் துணை செய்கின்றன போலும், இல்லையாயின் நீர் இந்த மோதிரத்தைக் கண்டெடுத்திருக்கமாட்டீர்" என்றாள்.

"அன்னாய், உம்முடைய ஏவலைச் செய்து முடிக்க வேண்டுமென்ற எனது இச்சையே எனக்குத் துணை; வேறொருவரும் இல்லை" என்று இராமன் மறுமொழி சொன்னான்.

இரணியகேசி இராமனை நோக்கி "என்னை மணஞ்செய்வதற்கு ஏற்ற இச்சை உடையவராயிருத்தலினால் நீர் எனக்கு வேறுமோர் ஏவல் செய்வீர் என்று எண்ணுகின்றேன். அது முடியும் வரையும் நான் மணஞ்செய்து கொள்ளமாட்டேன். இந்த ஊருக்கு அணித்தாகக் காலநேமி என்றோர் இராக்ஷசன் இருக்கின்றான். அவன் ஒரு முறை தன்னை மணஞ் செய்து கொள்ளும்படி என்னைக் கேட்டான். நான் மறுத்தேன். அவன் அப்போது என்னை நோக்கி அஞ்சத்தக்க சூளுறவுகள் பல சொல்லி என்னுடைய நாட்டை அழிப்பேன் என்று ஆணையிட்டான். நான் என்ன செய்வேன்? பனைமரம்போல வளர்ந்த ஒரு பயங்கரமான அரக்கனை, நரி நண்டுகளைக் கடித்துத் தின்பது போல மனிதர்களைப் பிடித்துத் தின்பவனை, இடிமுழக்கம்போன்ற உரத்த குரலுடையவனை நான் மணஞ்செய்து கொள்ளுவேனா? இல்லை. அதுமுதல் அவன் எனக்குப் பலவகைத் தீங்குகளைச் செய்துகொண்டும் எனது குடிகளைப் பிடித்து வருத்திக்கொண்டும் வருகின்றான். ஆதலால் நீர் சொல்லுகின்ற மணப்பேச்சிற்கு நான் காதுகொடுக்குமுன் நீர் அவனைக் கொன்று அவனது தலையைக் கொண்டுவந்து எனக்குக் கொடுக்க வேண்டும்" என்றாள்.

இந்த வேலைக் கேட்டு இராமன் சிறிது முகம் வாடினானாயினும், தனது மனத்திட்பத்தை விட்டுவிடாமல் இரணியகேசியை நோக்கி, "அப்படியே, அன்னாய், நான் சென்று அந்தக் காலநேமியோடு சண்டை செய்கிறேன். அவன் என்னைக் கொன்றுவிடுவான்

என்று எண்ணுகின்றேன். ஆயினும் அதற்குப் பயந்து பின்னில்லேன்; உமக்காக என்னுயிரை மிக்க மகிழ்ச்சியோடு கொடுப்பேன்" என்றான்.

அவன் வார்த்தையை இரணியகேசி கேட்டு, அச்சமடைந்து, காலநேமியோடு அவன் சண்டைக்குப் போகாதபடி தன்னால் இயன்றவரையிலும் தடுத்தாள். அவளுடைய முயற்சி சிறிதும் பயன்படவில்லை. இராமன் அவளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் விடுதிக்குப் போய்ப் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டு, தனது சிறிய கிளியைக் கையிலெடுத்துக்கொண்டு, குதிரையேறி, காலநேமியின் இருப்பிடத்தை நோக்கிப் போயினான்.

இராமனை வழியிற்கண்டவர்கள் அனைவரும் காலநேமி மிகுந்த கொடிய அரக்கன் என்றும் அவனை எதிர்த்துச்சண்டைசெய்ய ஒருவரும் துணியமாட்டார்களென்றும் சொன்னார்கள். அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்கக் கேட்க இராமனுக்கு அச்சம் அதிகமாயிற்று. அப்போது அவனுடைய கிளி அவனுக்குத் துணை வந்து அவனைத் தேற்றி ஊக்கப்படுத்திற்று. கிளி இராமனைப் பார்த்து "ஐயாவே, நீர் அந்த இராக்ஷசனோடு போர்செய்யும்போது நான் போய் அவன் காதைக் கடிக்கின்றேன்; அவன் என் முகமாகத் திரும்புவான்; அப்போது நீர் அவனைக் கொன்றுவிடலாம்" என்று சொல்லிற்று. இராமன் கிளி சொன்ன யுக்திக்காக அதனைப் புகழ்ந்தானாயினும், அதுபோய் அரக்கன் காதைக் கடிப்பதனால் ஒரு பயனுமில்லை என்று தெரிந்துகொண்டான்.

இராமன் கடைசியாகக் காலநேமி இருந்த மலைக் குகைக்கு அணிமையாக வந்தான். அவனுக்கு அச்சந் தரத்தக்கதாக அந்தக் குகைக்கு முன்பும் அதற்குப் போகும் வழிகள் எங்கும் எலும்புகள் குவை குவையாகக் கிடந்தன. அவன் அவைகளைப் பார்த்துக் கொண்டு நிற்கும்போது காலநேமி குகைக்குள்ளிருந்து வெளிப்பட்டான். அவனுடைய தலை ஒரு பனைமரத்துக்கு மேலாக உயர்ந்திருந்தது. அவன் தனது பெரிய பாழ்த்த குரலால்,

> பத்து நாழிகை யாயிற்றுப் பாழ்வயி
> றெத்து காட்டழ லென்ன வெரியுது
> கத்தி வீட்டிற் கதறுஞ் சிறார்களை
> குத்தி ரத்தங் குடிப்பன் கொணருவீர்

என்று பாடினான்.

அதற்கு எதிராக இராமன் உடனே,

> வருக வந்தெதிர் பொருக என்னுடன்
> செருவில் நின்னுயிர் பருக வந்தனன்
> திருவில் நின்னுருக் கண்டு திரிந்திடேன்
> பொருவில் இன்றுனைப் பொன்றுவிக் கின்றனன்.

என்று உரத்த சத்தமாகப் பாடி அறை கூவினான்.

அவன் பாடின பாட்டில் சொற்சிறப்பு பொருட்சிறப்பு அதிகம் இல்லை. ஆயினும் அவன் அதனை எவ்வளவு விரைவிற் பாடினான் என்பதை நீங்கள் அறிய வேண்டும் அவன் அந்த இராக்ஷசனைக் கண்டு எவ்வளவு பயந்திருந்தான் என்பதைப் பார்க்குமிடத்து அவனுக்கு அந்நேரம் ஒரு பாட்டுப் பாடத்தக்க திண்மை இருந்தது பேரதிசயமல்லவா?

காலநேமி அந்தப் பாட்டைக்கேட்டு நான்கு பக்கமும் பார்த்து இராமன் வாளுங் கையுமாய்த் தன்முன் நிற்கின்றதைக் கண்டான். அவனைக் கண்டவுடனே இராக்ஷசன் பெருங்கோபங்கொண்டு இராமனை அடிக்கத் தன் கையிலிருந்த பெரிய இருப்புத்தண்டை ஓங்கினான். அந்த அடி இராமன்மேல் பட்டிருந்தால் இராமன் உடனே இறந்தே யிருப்பான். அத்தருணத்தில் காக்கை ஒன்று திடீரென்று பறந்து வந்து அவன் முகத்தில் விழுந்து அவன் கண்களைத் தனது பெரிய மூக்கினால் குத்திக் கெடுத்துத் தன் காலின் நகங்களினால் அவன் முகத்தைக் கிழித்து, அவனைத் தடுமாறச் செய்தது. அதனால் அவன் இருப்புத் தண்டினால் அடித்த அடிகள் எல்லாம் இலக்குத் தப்பிப் போயின. அந்தச் சமயத்தில் இராமன் விரைந்தோடித் தன் வாளினால் அவனை உயிர்நிலைகளில் வெட்டிக் கீழே விழுத்தினான். விழுந்த உடனே அவனது தலையை இராமன் அதிக விரைவாக வெட்டிக் கையிலெடுத்தான். அப்போது காக்கை பக்கத்திலிருந்த ஒரு மரத்தில் இருந்துகொண்டு "ஐய இராம, நீர் கழுகைக் கொன்று எனக்குச் செய்த உதவியை நான் மறந்துவிடவில்லை. இன்றைக்கு நான் உமக்கொரு கைம்மாறு செய்து எனது வாய்ச்சொல்லைக் காப்பாற்றிக்கொண்டேன்" என்றது. இராமன் அதனை நோக்கி "நீ சொல்வது மெய்யே; ஆயினும் நீ எனக்குக் கடமைப்பட்டிருந்ததைவிட நான் இன்று உனக்குப் பதின்மடங்கு கடமைப்பட்டவனா யிருக்கின்றேன்" என்று மறுமொழி சொன்னான்.

பின்பு அவன் காலநேமியின் தலையை எடுத்துக் கொண்டு குதிரை யேறி இரணியகேசியின் ஊருக்குத் திரும்பினான். அவன் ஊர் வந்து சேர்ந்தபோது சனங்கள் கூட்டங்கூட்டமாக அவனைப் பின்றொடர்ந்து "இராமன் வீராதி வீரன்! காலநேமியைக் கொன்றுவிட்டான்! பாருங்கள்! பாருங்கள்!" என்று சத்தமிட்டுக் கொண்டு ஓடினார்கள். அவர்கள் இட்ட பெருங்கூச்சல்

இரணியகேசியின் காதுக்கெட்டினபோதிலும் இராமனே இறந்துவிட்டான் என்று கூச்சலிடுகின்றார்களோ என்ற பயத்தினால் அவள் அதுவென்ன சத்தமென்று கேட்கவே யில்லை.

இரணியகேசி இவ்வாறு மனமஞ்சி எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போது இராமன் காலநேமியின் தலையோடு விரைவில் அவள் மாளிகையில் வந்து சேர்ந்தான். யாதொரு தீங்கும் செய்யக் கூடாத நிலைமையில் இருந்தபோதிலும் அந்தத் தலையைக் கண்டு இரணியகேசி பெரும் பயமடைந்தாள். இராமன் அவளை நோக்கி “அரசியே, நான் உன் பகைவனைக் கொன்றுவிட்டேன்; இனி நீ எனது மன்னனை மணஞ் செய்ய உடன்படுவாய் என்று நம்புகின்றேன்” என்றான்.

இரணியகேசி “இல்லை! இல்லை! இன்னுமொரு காரியம் இருக்கின்றது; எழினீர்ச்சுனையிலிருந்து நீர் எனக்குச் சிறிது நீர் கொண்டுவரவேண்டும்” என்றாள். பின்னர் அவள் “இந்த ஊருக்குச் சிறிது தூரத்தில் பேரிருட்பிலம் என்று ஒரு பெரிய முழைஞ்சு இருக்கின்றது. அதற்குப் போகும் வழியைக் கண்ணிலிருந்து நெருப்புக் காலுகின்ற திட்டிவிடமென்னும் இரண்டு பாம்புகள் காக்கின்றன. அவைகள் ஒருவரையும் உள்ளே போகவிடா. நீர் அந்த முழைஞ்சுக்குள்ளே நுழைந்தால் அங்கே ஒரு சிறு வழி தோன்றும். அது பாம்புந் தேளும் நிறைந்திருக்கும். அந்த வழியின் கடைசியில் ஒரு சிறு சுனை இருக்கின்றது அதுதான் எழினீர்ச்சுனை; அந்தச் சுனையின் நீர்தான் எனக்கு வேண்டும். அது மிகவும் வியக்கத்தக்க குணங்களுடையது. அது பட்டால் அழகிய பொருள்கள் ஒருகாலும் குன்றாத அழகுடையனவாகும்; அழகில்லாத பொருள்கள் அழகுள்ளனவாகும்; இளமை உடையவர் மூப்படையார்;மூப்புள்ளவர் இளமைஅடைவார். இவ்வித அதிசய குணங்களுள்ள அந்த நீரில் சிறிதளவு எடுத்துக்கொள்ளாது நான் இந்த காட்டை விட்டுப் புறப்படமாட்டேன்” என்றாள்.

இராமன் அவளை நோக்கி “அன்னாய்; மற்று யாருக்கு வேண்டுமாயினும் உமக்கிந்த நீர் சிறிதும் வேண்டாமென்பது உண்மை. நான் ஒரு பெரும்பாவி. எவ்விதமாவது நான் உயிரிழக்க வேண்டுமென்று நீர் விரும்புகின்றீர்.நீர் எங்கே ஏவினாலும் ஏவும்;அங்கே போபவர்கள் ஒருவரும் திரும்பி வருவதில்லை என்பது நிச்சயமாயினும் நான் அங்கே போவேன்” என்றான்.

இரணியகேசி சிறிதும் மனமிளகாதகுறிப்பை அறிந்து, இராமன் தனது கிளியை எடுத்துக்கொண்டு அந்தப் பேரிருட்பிலமென்னும் முழையை நோக்கிப் புறப்பட்டான். அவனை வழியிற் கண்டவர்கள் ஒவ்வொருவரும் “ஆ! கொடுமை! இந்த அழகிய இளைஞனுடைய உயிர் வீணாகப் போகின்றதே! இவன் பேரிருட்பிலத்துக்குத் தனியே போகின்றானே! நூறு பேர் துணையிருந்தாலும் இவனால் அந்த முழைக்குள் புக முடியாதே! என் நமது அரசி இவ்வித அருஞ்செயல்களைச் செய்ய இவனை ஏவுகின்றாள்?” என்று சொன்னார்கள்.

இராமன் ஒருவரோடும் ஒன்றும் பேசாது இரணியகேசியின் ஏவலை எவ்வாறு முடிப்பது என்று எண்ணிக்கொண்டு போனான். அவன் மனம் மிகுந்த துன்பமடைந்தது. பேரிருட்பில மிருக்கும் மலையை அடைந்தவுடன் அவன் குதிரையைவிட்டிறங்கி அதனை மேயும்படி ஒரு சாரலில் விட்டான். கிளி அவன் தோளிலிருந்து பறந்து அந்த முழை எங்கே என்று பார்க்கப் போயிற்று.

இராமன் முழை கிட்டிவிட்டதென்று அறிந்துகொண்டு அதற்குப் போகும்வழி எங்கே என்று சுற்றிப்பார்த்தான். அவனுக்குச் சிறிது தூரத்தில் ஒரு கருங்கற் பாறை தோன்றிற்று. அதிலிருந்து புகை வந்துகொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குள் அதன் புழை வழியாகக் கண்ணிலும் வாயிலுமிருந்து நெருப்புப்பொறி பறக்க ஒரு பாம்பு வெளிப்பட்டது. அதனுடைய உடல் பச்சை நிறமாய் மஞ்சள் புள்ளி நிறைந்திருந்தது; அதன் வால் நீண்டு வளைந்திருந்தது. கிளி அதனைக் கண்டு பயந்து விரைந்து பறந்து வந்து இராமன் கையைச் சேர்ந்தது.

இராமன் எப்படியாவது முழைக்குள் நுழைந்து அங்குள்ள சுனையிலிருந்து நீர்கொண்டு வருவது அல்லது உயிரை விடுவது என்று துணிந்து, தனது வாளை உறையினின்றும் கழற்றி, இரணியகேசி நீர் மொள்ளுவதற்காகக் கொடுத்த பளிக்கு வள்ளத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கிளியைப் பார்த்து “நான் இந்த முழைக்குள் நுழையப் போகின்றேன்; உள்ளே நுழைந்தால் திரும்பி உயிரோடு வருவதில்லை என்பது நிச்சயம். நான் இறந்தபின் நீ இரணியகேசியிடம் போய் அவளுடைய ஏவலைச் செய்யப் புகுந்து நான் உயிரை இழந்தேன் என்று சொல். பின்பு எனது அரசனிடம் போய் நான் அவன் விருப்பத்தை முடிப்பதற்காகச் செய்த காரியங்களை எல்லாம் சொல்லு” என்றான்.

அவன் இவ்வாறு கிளியோடு பேசும்போது “ஐய ஐய” என்று அழைத்த குரல் கேட்டது. அவன் “யார் என்னைக் கூப்பிடுகிறது” என்று கேட்டான்.

கூகை ஒன்று ஒரு மரப்பொந்திலிருந்துகொண்டு “நான் அன்று வலையில் அகப்பட்டிருந்தபோது நீர் என்னுயிரைத் தப்புவித்தீர். அதற்கொரு கைம்மாறு செய்ய இன்று எனக்குக் கிட்டியது. அந்தப் பளிக்கு வள்ளத்தை என்னிடத்தில் கொடும். நான் ஒருவராலும் கிட்டுதற்கு முடியாத எழினீர்ச் சுனையிலிருந்து அது நிறைய நீர் மொண்டுவந்து தருகிறேன். பேரிருட்பிலத்துள் உள்ள வழிகள் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்” என்றது.

இராமன் மனங் களிப்படைந்து, தன் கையிலிருந்த பளிக்கு வள்ளத்தை அதனிடத்தில் கொடுத்தான். அது திட்டிவிடப் பாம்பின் தலைக்கு மேலாகப் பறந்து போய்ச் சிறிது நேரத்திற்குள் பளிக்குவள்ளம் நிறைய நீர் முகந்துகொண்டுவந்து கொடுத்தது. இராமன் உள்ளங்களிந்து அதற்கு நன்றி சொல்லிவிட்டு மனமகிழ்ச்சியோடு ஊருக்குத் திரும்பினான். ஊரடைந்தவுடன் அவன் நேரே இராச மாளிகைக்குப் போய்ப் பளிக்குக் கிண்ணத்தோடு நீரை இரணியகேசியின் கையில் கொடுத்தான்.

தனது குறை எல்லாம் முடிந்தமையால் இரணியகேசி வேறு தடை ஒன்றும் சொல்லாமல், அவனுக்கு நன்றி கூறி, அவனோடு போக உடம்பட்டு, வழிக்கு வேண்டியவைகளெல்லாம் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். இராமன் அவளுக்கு மிகச் சிறந்த வழித்துணையாயிருந்தான்; வழியிலே அவள் அவனை இரண்டொரு முறை நோக்கி “நாங்களேன் எங்கள் ஊரோடேயே இருந்துவிடப்படாது? நான் உம்மை என் நாட்டிற்கு அரசனாக்கி வைக்கின்றேன்; பின்னர் நாங்கள் இன்பமாக வாழ்ந்திருக்கலாம்” என்று சொன்னாள்.

இராமன் அதற்கு “அதனால் அரச வாழ்வு வருவதானாலும் நான் எனது அரசனுக்கு மனவருத்தம் தரத்தக்க செயலொன்றும் செய்யமாட்டேன். உம்மை நான் அழகில் இலக்குமி என்றே எண்ணுகின்றேன்; அப்படிப்பட்ட உம்மைப் பெறலாமாயினும் நான் என் அரசனுக்கு விரோதமான செயல் ஒன்றும் செய்யமாட்டேன்” என்று மறுமொழி கூறினான்.

அவர்கள் இராமனைத் தூதனுப்பின அரசனது நகரை வந்தடைந்தபோது அந்த அரசன் இரணியகேசியைப் பல வரிசைகளோடு எதிர்கொண்டு அழைத்துச் சென்றான். தன்னை மணம் முடிக்கும்படி அவன் அவளைக் கேட்டபோது அவள் தனக்கொரு விரதமிருக்கிறதென்றும் அந்த விரதம் முடியுமுன் தான் மணஞ்செய்துகொள்வதில்லை என்றுஞ் சொன்னாள். அரசன் அதற்குடன்பட்டு அவளைத் தனது மாளிகையில் வேறாக இருக்க வைத்து அவளை அன்று முதல் எல்லாரும் அரசியாக மதிக்கவேண்டுமென்று திட்டம் பண்ணினான்.

இராசமாளிகையிலே வேறாக இருந்தாலும் இராமனைக் காணாமல் இரணியகேசி ஒரு நாளாயினும் கழிக்கவில்லை. அவள் அவனை எப்போதும் தனது அறைக்கு வரவழைத்துப் பேசிக்கொண்டிருப்பாள். அவனைக் காணாது போனால் அவள் முகம் வாடித் துன்பமடைவாள். அரசனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் இராமனுடைய குணங்களையும் வீரச்செயல்களையுமே எடுத்துப் பலமுறை பேசுவாள்.

அவள் ஒருநாள் அரசனுக்கு “இராமனில்லாது போனால் நான் இங்கே ஒருபோதும் வந்திருக்கமாட்டேன்; அதனால் நீர் அவனுக்கு மிகவும் நன்றியறிதல் உள்ளவரா யிருக்கவேண்டும். அவன் வேறொருவராலும் செய்ய முடியாத செய்கைகளைச் செய்தான்; எழினீர்ச்சுனையிலிருந்து எனக்கு நீர் கொண்டுவந்து கொடுத்தான். நான் அதனால் ஒருபோதும் முதுமை அடையமாட்டேன். ஒவ்வொரு நாளும் அழகிலும் இளமையிலும் மிகுவேன்” என்று சொன்னாள்.

இரணியகேசி இவ்வாறு நடந்துவர, இராமனுக்கு வேண்டாதவர்கள் அரசனிடத்தில் போய் அவனைப் பற்றிக் கோள் சொன்னார்கள். அவர்கள் அரசனை நோக்கி “மகாராஜாவே, தாங்கள் எல்லாக் காரியங்களையும் கண்ணால் பார்த்திருந்தும் சிறிதும் ஐயப்படாமலிருப்பது மிகவும் ஆச்சரியம்.உலகத்திலே இராமனைப் போல்பவர்கள் ஒருவருமில்லை என்று தங்கள் அரசி இரணியகேசி எண்ணுகின்றாள். தாங்கள் வேறொருவனைத் தூதனுப்பி யிருந்தால் அவன் அவள் சொன்ன காரியங்களை யெல்லாம் செய்து முடித்திருக்கமாட்டானா?” என்றார்கள். அரசன் “ஆம்! ஆம்! ஆலோசித்துப் பார்க்குமிடத்தில் நீங்கள் சொல்வது முழுதும் மெய்யே. அவனைப் பிடித்துக்கொண்டுபோய்க் கையிலும் காலிலும் விலங்கு மாட்டிச் சிறையில் இடுங்கள்” என்று கட்டளை யிட்டான்.

அரசனுடைய ஏவலாளர்கள் அவனிட்ட கட்டளைப்படி இராமனைப் பிடித்துக்கொண்டு போய் விலங்கு மாட்டிச் சிறையிலிட்டார்கள். அரசனுக்கு உண்மையாகச் சேவகஞ் செய்ததற்குக் கைம்மாறாக இராமன் சிறையிலிடப்பட்டான். அவன் அங்கே தனக்குச் சாப்பாட்டிற்கு ஒரு மொத்தை கேழ்வரகுக் கூழும் குடிப்பதற்கு ஒரு செம்பு நீரும் கொண்டுவரும் சிறைச்சாலைக்காவற்காரனை ஒழிய மற்றொருவரையும் பார்க்க முடியாது. ஆயினும் அவனுடைய கிளி ஒவ்வொரு

நாளும் சிறைச்சாலைக்குச் சென்று வெளியில் நடக்கும் காரியங்களை எல்லாம் அவனுக்குச் சொல்லிவந்தது.

இராமனைச் சிறையில் இட்டதைக் கேட்ட உடனே இரணியகேசி அரசனிடத்தில் சென்று அவனுடைய காலில் விழுந்து இராமனைச் சிறை விட்டுவிடும்படி பணிந்துகேட்டுக்கொண்டாள். அவள் அழுதழுது கேட்கக்கேட்க அரசனுக்குக் கோபம் அதிகமாயிற்றேயன்றி மனமிரங்கவில்லை. அவள் அதனை நோக்கித் தான் அவனைப் பணிந்து வேண்டிக்கொள்வதனால் ஒன்றும் பயனில்லை என்று கண்டுகொண்டு தனது அறைக்குப் போய்விட்டாள். அங்கே இராமனுக்கு நேரிட்ட தீங்கை நினைத்து நினைத்து அவள் துக்கப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் இப்படி யிருக்க, அரசன் ஒரு காரியம் செய்ய எண்ணினான். அவன் இரணியகேசி தன்மேற் காதல் கொள்ளுவதற்குத் தக்க அழகு தன்னிடத்திலில்லை என்று பயந்து, தன் அழகை விர்த்தி செய்வதற்கு எழினீர்ச் சுனையிலிருந்து இராமன் எடுத்துவந்த நீரினால் தன் முகத்தைக் கழுவ எண்ணினான். இரணியகேசி அந்த நீரைப் பளிக்கு வள்ளத்தோடு தனது அறையிலுள்ள மாடத்திலே தனது கண்ணுக்கு எப்போதும் தெரியும்படியான இடத்திலே வைத்திருந்தாள். ஒருநாள் அவளுடைய தாதி ஒருத்தி மாடத்திலிருந்த பொட்டுப்பூச்சி ஒன்றை ஓட்டும்போது அந்தப் பளிக்கு வள்ளத்தைத் தட்டிக் கீழே விழுத்தி உடைத்து விட்டாள். அதிலிருந்த எழினீர்ச்சுனை நீர் முழுதும் சிந்திவிட்டது. அவள் அதனைக் கண்டு பயந்து நடுநடுங்கி என்ன செய்வதென்று தெரியாமல் பளிக்கு வள்ளம் உடைந்த துண்டுகளை எல்லாம் பெருக்கித் தூரக் கொண்டுபோய்க் கொட்டிவிட்டு, அதனிடத்திலே அதுபோன்ற மற்றொரு வள்ளம், அரசனுடைய அறையில் அவ்வாறு நீர் நிறைத்து வைத்திருந்ததொன்றை ஒருவருக்கும் பேசாது எடுத்து வந்து வைத்துவிட்டாள்.

அரசனுடைய அறையிலிருந்த பளிக்கு வள்ளத்தில் வைத்திருந்தது நச்சுநீர் ; அது தனக்கு வேண்டாதவர்களைத் தொலைப்பதற்காக அவன் பிரயோகிப்பது. அவர்களுடைய தலைகளை வெளிவெளியாக வெட்டுவதற்கு மாறாக அந்த நீரில் சிறிதெடுத்து அவர்கள் முகத்தில் பூசிவிட்டால் அவர்கள் உடனே மயக்க முற்றுக் கண்ணைமூடி நித்திரை கொள்பவர்கள் போலாகிச் சிறிது நேரத்தில் மரணமடைந்து விடுவார்கள். அவ்விதமான கொடிய நச்சுநீர் அது.

அரசன் தனது அழகை விருத்திசெய்ய நினைத்து இரணியகேசியின் அறையில் அப்போது வைக்கப்பட்டிருந்த அந்த நீரில் சிறிதெடுத்து முகத்தில் பூசவே மெய்ம்மறந்து கீழேவிழுந்து உயிரைவிட்டான். அதனை இராமனுடைய கிளிபார்த்துக்கொண்டிருந்தது. அரசனுக்கு நேரிட்ட முடிவைக் கண்டவுடனே அது விரைந்து பறந்து சிறைச்சாலைக்குச் சென்று நடந்த காரியங்களை எல்லாம் இராமனுக்குச் சொல்லிற்று. இராமன் உடனே தன்னை மறந்துவிட வேண்டாமென்று சொல்லும்படி அதனை இரணியகேசியினிடத்தில் தூதாக அனுப்பினான்.

அரசன் இறந்ததைக் கண்டவுடனே இராச மாளிகை முழுதும் அல்லோல கல்லோலப் பட்டது. அத்தருணத்தில் இராமனுடைய சிறு கிளி இரணியகேசி இருந்த இடத்திற்குச் சென்று “ அன்னாய், எளிய இராமனை மறந்துவிட வேண்டாம்” என்று பணிவாகச் சொல்லிற்று. அதனைக் கேட்டவுடனே, அவள் இராமனுடைய நினைவு வந்து, அவன் தனக்காகச் செய்த செயற்கரிய செயல்களை எல்லாம் மனத்தில் எண்ணி, ஒருவரோடும் ஒன்றும் பேசாது நேரே சிறைச்சாலைக்குச் சென்று இராமனுடைய விலங்கைத் தன் கையினாலறுத்து அவனைச் சிறை விடுவித்தாள். பின்னர் அவள் அரசனுக்கேற்ற உடைகளை அவனுக்கு அணிவித்து, இராச முடியைக் கொணர்ந்து அவன் தலையிற் சூடி “ என் காதல, இந்த நாட்டிற்கு இனி நீரே அரசன். நான் உம்மை மணஞ்செய்து உமக்கு மனைவியாகின்றேன் ” என்று மிகுந்த அன்போடு சொன்னாள்.

இராமன் துன்பமெல்லாம் நீங்கி, இன்பமடைந்து, அவள் காலில் விழுந்து, அவள் தன்னைத் தனக்குக் கணவனாக்கினதற்கும் அரசனாக்கினதற்குமாக நன்றி கூறினான். அந்நகரத்து மாந்தர்கள் எல்லாரும் இராமன் தங்களுக் கரசனானானென்று அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார்கள். இராமனுக்கும் இரணியகேசிக்கும் விவாகம் எங்கும் எப்போதும் இவ்விதமாக நடந்ததில்லை என்று சொல்லும்படியாக அவ்வளவு சிறப்பாக நடந்தது. அவர்கள் இருவரும் நெடுங்காலம் பேரின்ப மனுபவித்து மிக்க மனமகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தார்கள்.

அயச்சிந்தூரம்.—ஹைட்ரேடட் பேர் ஆக்ஸைட் ஆவ் ஐயான் (Hydarated Peroxide of Iron) இது சிவந்த தூளாயிருக்கும். ஜலத்தில் கரையாது, காந்தம் கிரஹிக்காது இதுசெய்ய, தமிழ் முறைகள் அநேகமுண்டு, அவைகளெல்லாம் இங்கிலீஷ் சரக்குக்குத் தாழ்ச்சி, தோஷங்கள் மெத்தவுண்டு. ஆனால் தாருட்டியகாரி. குணமிருக்காமல் போகாது. பாண்டு ரோகத்துக்குக் கொடுக்க திவ்விய மருந்து. ரத்த அணுக்களை அதிகப் படுத்தி, சிவப்பாக்கும். மலம் கறுத்திறங்கும்; தூர்ப்பலம் வாதசூலைகள், நாள்பட்ட சக்கிருமல் ஆகிய இவைகளுக்கும் கொடுத்து நன்மை கண்டதுண்டு.—

—இங்கிலீஷ் வைத்திய சங்கிரஹம்,

வஸந்த மாளிகை
VASANTHA MALIKAI
அத்தியாயம் 8
உபாயம்
STRATAGEMS
(தொடர்ச்சி)

இவ்விதம் சொல்லிக்கொண்டு பானுமதி அவ்வந்தப்புரத்தின் வாசல்பக்கம் ஆவலுடன் விரைந்தோடினாள்.

மகாவீரன் அவள் வழியை மறித்து நின்றுகொண்டு “ அம்மணீ ! அம்மணீ நான் சொன்னதெல்லாம் எல்லோருடைய நன்மையின் பொருட்டு ! தமக்கிஷ்டமில்லாவிடில்—அடியேனைக் காட்டிக்கொடுத்து விடாதேயுங்கள். தங்களுக்குக் கோடிப் புண்யமுண்டு” என்றான்.—

பானுமதீ.—“ தள்ளி நில்லு. என்ன துணிவு என்னைத் தடுக்க ! எல்லாம் பார்த்துக்கொள்ளுகின்றேன்.”

இந்நிலைமையில், அவ்வறைக்கதவு திடீரென்று திறக்கப்பட்டது. கம்பீரமான வடிவுடைய ஓர் ப்ரபு, பாதாதிகேசம்வரை கறுப்பு உடையால் தன் நிஜ சரீரத்தை மறைத்துக்கொண்டு குதிரை சவாரிக்கோலத்துடன் ப்ரவேசிக்க, நமது பானுமதி ‘ ப்ராணநாதா ’ என்று இனிய குரலுடன் ஆவலாய்க் கூவிக்கொண்டு, அப் பிரபுவால் விரிக்கப்பட்ட இரண்டு புஜங்களின் மத்தியில் பாய்ந்து காடாலிங்கனம் செய்யப்பெற்று தேக பரவசையாய்த் தன்னை மறந்தாள்.

அத்தியாயம் 9
காதலர்
THE LOVERS

அரண்மனை வாசலில் திடீரென்று குதிரைக் காலடி சத்தம் நின்றுவிட்டது. சற்று நேரத்தில், நமது பானுமதியின் அறையின் கதவுகள் மெதுவாய்த் திறக்கப்பட்டன. உடனே, உயர்ந்த வடிவமும் கம்பீரமான பார்வையும், கறுத்து செழித்து வளர்ந்து முறுக்கி விடப்பட்ட மீசையும் படர்ந்த மார்பும், உருண்டு திரண்டு முழங்கால்வரை தொங்கும் புஜங்களும்வாய்ந்த ஓர் மஹாபுருஷன் பாதாதிகேசம்வரை தன் நிஜரூபம் தெரியாது மறைவு உடை யணிந்தவனாய், சிம்மம் போன்ற கம்பீரமான நடையுடன், அவ்வறைக்குட் பிரவேசித்தான். பானுமதி, ‘ப்ராணநாதா!’ என்று இனிமையா யழைத்துக்கொண்டு, மான்போலத் துள்ளி அம்மஹா புருஷனுடைய மார்பின்மேல் பாய, அவனும் தன் காதலியை யிறுகத்தழுவி முத்தமிட்டான். பானுமதியும் ப்ரதிமுத்தமிட்டாள். தேக பரவசர்களாய் இந்நிலைமையில், நமது கதா நாயகர்கள் சற்றுநேரம் தந்நினைவற் றிருந்தார்கள். மஹாவீரனும் மரியாதையா யவ்வறையினின்றும் வெளியே சென்றான்.

நமது கதாநாயகர்கள் பரஸ்பரம் காடாலிங்கனஞ் செய்துகொண்டிருக்கும் நிலைமையிலேயே மெதுவாய் நடந்து அந்தப்புரம் சென்று, அங்குள்ள ஓர் நிலக் கண்ணாடி முன் நின்று தங்கள் பேரழகைக் கண்டு பரஸ்பரம் ஆமோதித்து ஆநந்தித்தார்கள்.

அப்பொழுது பானுமதி, ப்ரபுவை நோக்கி ‘ ப்ராண நாதா! ’ இம்மாறுவேடம் எத்தனை காலம் பூணுவதாய் உத்தேசம். ஐயோ ! நமது அந்தஸ்துக்குத் தக்கவாறு பகிரங்கமாய் மணம்புரிந்து ஸ்திரீ புமான்களாய் வாழுங் காலம் எக்காலமோ ?’ என்று தீனமாய் வினவினாள்.

ப்ரபு —கண்ணே ! எல்லாவற்றிற்கும் தம் தம் காலமுளது. ‘அவஸரக்கோலம் அள்ளித் தெளிக்கு’ மென்றபடி ஆகிநப் பொறுத்தோர் ஆரப்பொறுங்காது அவஸரமாய் ஒன்றும் செய்தலாகாது. கண்மணி ! நாங்கள் ராஜாங்க ஸேவகத்திலிருக்கின்றோமல்லவா ? ராஜஸேவையானது ஓர் பெருங்கடலில் செல்லும் கப்பலை யொத்ததாகும். நல்ல காலமுள்ளவரை எல்லாம் சரியாய்க்கொண்டு செல்லும். எத்தனை பாறைகள் ! எத்தனை சுழல்கள் ! எத்தனை அலைகள் ! எத்தனை புசல்கள்! கரணம் தப்பினால் மரணம்! ஆகையால், எல்லாவற்றையும் நமது நிலைமையையும் ஸ்திரப் படுத்திக்கொண்டு, நமது மனோபீஷ்டப்படி நாம் வாழ்வதில் என்ன தடை ?

பானுமதீ.—ப்ராணநாதா ! ஏதோ பெண் சபலத்தாலும், ஆசையாலும் இவ்வாறு வினவினேன். தங்களுக்குத் தெரியாதது நான் என்ன சொல்லப் போகின்றேன். ப்ராணநாத! தங்களை இவ்வாறு எவ்வளவு காலம் பிறிந்திருப்பது. மூன்று மாதங்களுக்கு மேலாயின தங்கள் முகாரவிந்தத்தைக் கண்டு களித்து. கணவன் முகம் பாரா கற்புடைய மங்கையரின் வாழ்வு எத்தகைமையானது !

ப்ரபு.—கண்ணே! என்ன செய்யலாம். உன்னைவிட்டுப் பிரிந்து நாஞ்சநாட்டு எல்லைச்சண்டைக்குச் சென்றேன். அது இதுவரை சென்றுவிட்டது.

பானுமதீ—ப்ராணநாதா ! அது எவ்வாறு முடிந்ததோ ?

ப்ரபு.—கண்மணி! நமது மஹாராணியாரின் வங்க சைநியத்தை வஞ்சகமாய்ச் சென்ற வருஷம் கோஸ

தேசத்தரசன் அழித்துவிட்ட மனவருத்தத்தாலும், அதனால் தனக்கேற்பட்ட அவமானத்தாலும், நாஞ்ச நாட்டில் நமக்கும் கேரளராஜனுக்கும் அடிக்கடி நடந்து கொண்டிருக்கும் எல்லைத்தாவாவினாலும் மனம்நொந்த நமது மஹாராணியார் தக்க சைநியத்துடன் என்னை யனுப்பினார்கள். ஏதோ ஈசுவர க்ருபையால் எல்லாம் நமக்குச் சுகமாகவே முடிந்தது.

இவர்களிவ்வாறு ஸம்பாஷித்துக்கோண்டே ப்ரபு தன் உடைகளை யொவ்வொன்றாய்க் கழற்ற ஆரம்பித்தார். முதலாவது மறைவுடையைக் கழற்றினவுடன், தன் மார்பில் பிரகாசித்துக்கொண்டிருந்த ஓர் மரகத பதக்கம் பளிச்சென்று 'டால்' அடித்து நமது பானுமதியின் கண்களைப் பறித்தது. உடனே பானுமதி யப்பதக்கத்தைத் தன் கையிலேந்திக் கண்களில் ஒத்திக்கொண்டு முத்தமிட்டுக் குதூகலத்துடன் அதை யுற்று நோக்க, அதன் ஓர் புறத்தில் சுற்றிலும் வைரக்கற்கள் இழைக்கப்பட்டு நடுவே ஓர் விருஷபமும் அதனடியில் 'மங்கம்மாள்' மஹாராணி யென்றும் வரையப்பட்டிருந்தது. அதன் மறு புறத்தில் 'தளவாய்,' 'நரஸிம்மராஜ' என்று வரையப்பட்டிருந்தது.

பானுமதி.—(ஸந்தோஷத்துடன்) 'ப்ராணநாத அருமையான இப்பதக்கம்'

ப்ரபு.—கண்ணே! தஞ்சை மன்னனுடன் போர் புரிந்து வெற்றிபெற்று வந்ததற்கு ஞாபகச்சின்னமாகவும் அதனால் நமது மஹாராணியார் என்மீது கொண்ட அளவிலா அன்புக்கு அறிகுறியாகவும் இப்பதக்கம் பரிசளிக்கப்பட்டது.

பானுமதி.—ப்ராணநாதா! இம்முத்துமாலை! ஆஹா என்ன அழகு! என்ன காந்தி. ஆஹா! ஒவ்வொரு முத்தும் இம்மங்கம்மாள் ஸமஸ்தானம்போல் ஒருஸமஸ்தானம் பெறும்போலிருக்கின்றதே!

ப்ரபு.—கண்மணி! பாளையக்காரரின் பெருங்கலகங்களை யடக்கியதற்கு அடையாளமாய் இம்முத்துமாலை.

பானுமதி.—ப்ராணநாத! ஆஹா! என் பெருமையே பெருமை! என் பாக்யமே பாக்யம்! எவ்வளவு கோடி காலம் தவம் செய்தேனோ இப்பதவியை நானடைய!

இவ்வாறு இவர்கள் பேரானந்தத்தால் மூழ்கியிருக்கும் நிலைமையில், ஜானகி ப்ரவேசமாய், போஜனங்கள் தயாராயிருப்பதாய்த் தெரிவிக்க நமது கதாநாயகர் மற்ற உடைகளையும் களைந்துவிட்டு ஸ்நானத்தராய், தன் காதலியுடன் காடாலிங்கனம் செய்த பிரகாரமே அவ்வந்தப் புரத்தினின்றும் வெளியே சென்றார்.

நாகாநந்தம்

NAGANANDAM : A CLASSICAL DRAMA

(தொடர்ச்சி)

(ஜீமூதகேது தனது மனைவி மருமகளுடன் உட்கார்ந்திருக்குமிட மடைதல்.)

ஜீமூதகேது.—

இளமையி னின்பமுற்று மேண்புகழ் முட்டும்சொற்ற, வளமையின் கோல்கைக் கொண்டு வயங்கிமெய்த் தவத்தை நட்டேன், கிளைபடு மகனும் வல்லன் கிளை மகள் நல்லள் தக்காள், விளைவிருப்பம்பெற் றாற்பின் விரும்புவ வீழ்வ தன்றே?

பிரதிஹாரன்.—(அவஸரத்துடன் ஓடிவந்து) யார்? ஜீமூதவாஹனனோ?

ஜீமூதகேது.—(காதை மூடிக்கொண்டு) சிவ சிவா! கடவுள் தடுக்கட்டும்! கடவுள் தடுக்கட்டும்!

அரசி.—கெடுதி ஒழியட்டும்! விலகட்டும்!

நாயகி.—(தனக்குள்) இந்தச் துச்சகுனத்தால் என் ஹ்ருதயம் வெதும்புகிறது.

ஜீமூதகேது.—நண்பா! ஜீமூதவாஹனனைப்பற்றி என்ன வப்பா?

பிரதிஹாரன்.—ஜீமூதவாஹனனைப்பற்றியா? — யான் அவனைப்பற்றி ஸமாசாரங்களை அறிந்து வரும்படி ராஜாதிராஜன் விசுவாவசு மஹாராஜனால் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

ஜீமூதகேது.—என் மகன் அங்கில்லை?

பிரதிஹாரன்.—இல்லை.

அரசி.—(வியஸனத்துடன்) ராஜாதிராஜ! அவன் அங்கு இல்லாவிட்டால் வேறு எங்கு போயிருக்கக் கூடும்?

ஜீமூதகேது.—அங்குப் போகாதிருக்கும்பக்ஷத்தில் வழக்கம்போல் நமதுணவு சேகரித்துவர நெடுந்தூரம் சென்றிருக்கலாகும்.

நாயகி.—ஆனால் எனக்கு—என் நாதனைக் காணாமையால்—எனக்கென்னமோ வேறுவிதமாகப்படுகிறது!

பிரதிஹாரன்.—ராஜாதிராஜ! எம் தலைவனுக்கென்ன சொல்லவேண்டுமோ ஆணையிடுங்கள்.

ஜீமூதகேது.—(இடதுகண் துடிக்க) ஜீமூதவாஹனன் திரும்பி வாராமையால் என் மனம் வெதும்புகிறது. எனக்கென்னவென்னமோ கெட்டவிதமே தோன்றும்படியாகக் கொடிய கண்ணே ஏன் சலிக்கின்றனை? ஆ! பாழுங் கண்ணே! சற்றே அமைதி பெறுவாய்! என் மகன் ஸுகமே விளங்குகிறான். (மேல்நோக்கி) என் அப்பா! இம்மூவுலகில், ஆதிசோதியாய் விளங்கும் ஆதித்தியா என் மகன் ஸுகமே இருக்க அருள் புரிவாயாக! (ஆச்சரியத்துடன் கண்டு)—இவ்வளவு தடபுடலாக தடதடவென்று ஆகாயத்திலிருந்து என்ன இங்கு விழுந்தது? ஊழிக்காற்றால் தெரிக்கப்பட்டிழிந்த நக்ஷத்திரம் போல் ஜகஜ்யோதியாய் ரக்தகிரணங்களை யெரித்துக் கொண்டுவிழுந்த அதைக் காணக்காண என் என்வயிறு கலங்குகிறது? என் ஹ்ருதயம் ஏன் துடிக்கிறது? என் மனம் ஏன் வெதும்புகிறது? எனக்கென்னமோ தோன்றுகிறது? அது எவ்வாறு என் காலினிடமே வந்து விழுந்தது!

(எல்லாரும் ஆச்சரியத்துடன் பார்த்தல்.)

அஹோ! இது சூடாமணிதான்— சூடாமணிதான். இதில் புதிதாய்ச் சிந்தும் ரத்தம் படிந்து கிடக்கின்றது. இது யாரதாய் இருக்கும்—ஏன் என் மனம் அயர்வது?

அரசி.—(வியஸனத்துடன்) அந்தோ! என் ஐயனே! இது என் குழந்தையின் சூடாமணிப்போல் தோன்றுகிறதே!

நாயகி.—(மறைவாக) அப்படிசொல்லாதியுமே!

பிரதிஹாரன்.—ராஜாதிராஜ! உண்மை யின்னதென்றறியாது தாங்களிவ்வாறு அலட்டிக்கொள்ளலாகாது. கருடனால் உண்ணப்படும் நாகராஜங்களின் தலைமணி இங்கு அடிக்கடி அக்கழுகரசனுடைய காலாலும் மூக்காலும் தெரிக்கப்பட்டு வீழ்வதுண்டு. அது ஸகஜம்.

ஜீமூதகேது.—அரசி! ஸுநந்தன் சொல்வது காரணத்தோடு கூடியது; நம்பக்கூடியது. அப்படி இருந்தாலுமிருக்கலாம்.

அரசி.—ஸுநந்தா! இதற்குள் என் மகன் தனது மாமனகம் அடைந்திருந்தாலு மிருக்கலாம். உடனே போய் சீக்கிரம் அங்கு பார்த்து வந்து சொல்வாய்.

பிரதிஹாரன்.—அரசி ஆணையிட்ட வண்ணமே. (போதல்)

ஜீமூதகேது.—அரசி! இது ஒரு ஸர்ப்பத்தின் சிரோபூஷணமாக இருக்கலாகுமோ?

(சங்கசூடன் சிகப்புவஸ்திரம் தரித்துக்கொண்டு வரல்)

சங்கசூடன்.—(கண்ணீர்விட்டு)

அந்தோ! அந்தோ! கொடியேன் அந்தோ!
முந்துறு விதியின் மொய்வினை தன்னான்
வஞ்சனை யுற்றனன். செஞ்சடைக் கடவுட்
கோகர் ணத்து கோயிற் சென்று
வேகத்திந்த கொல்பாறை மீண்டனன்—வருமுன்
கருடன் றானும் காளைஅவ் விஞ்சையன்
அருடரு மிதயத் தலகின் கீண்டி
சேண்மிசை கவருபீஇ சென்றனன். அவனுடல்
ஊண்பெற கூர்நகத்தை யூன்றிக் கீறி
ஆண்மக னவனை அலட்டுவ னன்றே!

(அழுதுகொண்டு)

ஆ! பெரும் புகழோய்! அன்பின் பிண்டமே!
தன்னய மில்லாத் தனியே! உலக
தின்புற வின்புறு மைய! தனது
என்பும் பிறர்க்குதவு மன்பின் தலைவ!
துன்பாழி கடக்கும் புணையே! தூய
உயிர்த்தனைத் துரும்பென வொன்னலார்க்கு மீயு
முயர்வி னுயர்வே! உற்றது மியாண்டோ?
அயர்ந்தனை யென்னே? ஐய அறைதி!
பதிலிலை?

(தனக்குள்)

கோடியனேன்! பாவியோய் சங்க சூட!
பழியின் எய்தினாய்! பண்பிலி செய்ததென்?
விழும முனக்கிலை யொருநாள் வியாளந்
தம்மைக் காத்த தனிப்பெயர்? தார்மன்னன்
அம்மொழியுங் கொண்டிலை; அலைப்புண் டலைந்தனை!
யாவரு மியாண்டு மென்று பரிதபித்
தாவிமற் றொருவனால் அடைதர பெற்றனனென்
றேளனஞ் செய்ய வெண்மை யுற்றனை?
வாளா விருந்தனை மடையோய்
மீளா தவனால் லேய்க்கப் பட்டனை!—மேன்மையே!
மனனே கோடியாய் மதியா வழியால்
கொடியா னெனுமா குணங்கொள் ளுதியோ?
மடியா புகழ்வாய் மகனைக் கருடன்,
கொடியோன், கொடுபோ மிடமீக் குருதிப்
படர்வாய் நடவா, பயன்வாய் மகனை
யடைவா யடைவா யடையாப் புகழோய்!

(பூமியைப் பார்த்து நடந்துகொண்டு)

புள்ளிறைத் தன்னை புன்மை யேற்றை
கொள்ளிவாய் கொடியனைக் குறுகுவா னிந்த,
குருதிப்பாதை குறிக்கும் வழியூடு செல்வன்.
கூரிய வலகின் கூற்றினூரம் கிழிந்து
கக்கிட வழிந்த ரக்த மோடியும்
செல்லச் செல்லப் பெருந்துளிச் சிந்தியும்
பொல்லாக் கல்லின் புடைப்படத் தெளிந்தும்
வரவா வளரூஉம் பைங்கூழிடை மயங்கியும்,
வன்ன மயங்கியும் மாத்தின் தலைவாய்
உறைந்து விளங்கி கறைபட வளர்தரூஉம்

வழிதொறூஉம் சென்று காண்குவன் வாழ்மனே!

அரசி.—(நடுங்கி) தலைவ! அதோ அங்கு வாடிய மனத்தொடு வேகத்துடன் ஓடிவரும் அவன் முகம் என் வயிற்றில் ஸங்கடமுண்டாக்குகிறது. அவன் யாரென்று அறிவீராக!

ஜீமூதகேது.—அரசி சொல்லியவிதமே.

சங்கசூடன்.—மூன்றுல கதற்கு முடிமணி யன்னாய்
சான்ற நின்னுயர் தந்தனை பிறர்க்காய்
குலைந்த தென்னெனக் குலைந்தநீ தந்தோ!

(கெட்டியாக அழுகிறான்)

ஜீமூதகேது.—(ஸந்தோஷத்துடன் கேட்டு) அரசி! உன் பீதியை ஒழி. நிச்சய மிதுதான். அவனது தலையின் பதிந்த சூடாமணியை, தசை யென்றெண்ணி ஏதோபக்ஷி எடுத்து சென்றது போலும். அதைத் தான் இங்கு வீழ்த்தியது.

அரசி.—(ஆனந்தத்துடன் மலையவதியை தழுவி) மங்களமுடையாய்! தைர்யங்கொள். அமங்கள வருவினை இம்மங்கள வுருவம் என்று மடையாது.

நாயகி.—(ஸந்தோஷத்துடன்) அம்ம! தங்களுடைய ஆசீர்வாத மஹிமையாலப்படியே.

ஜீமூதகேது.—மகனே! இச்சூளாமணியைக் கவரப்பட்டதன்றோ?

சங்கசூடன்.—எனது மாத்திரமன்று. மூவுலகிற்கு முதன்மையாகிய மணியை.

ஜீமூதகேது.—எவ்விதமது?

சங்கசூடன்.—பொறுக்கமுடியாத் துயரமும் ஸங்கடமும் என் நெஞ்சை யடைக்கிறது. என்னுக்கூட எழவில்லை. என்றால் பேச முடியவில்லையே. இக் கண்ணினீர் பெருகி என் தொண்டையை அடைக்கிறது. என் செய்வேன்?

ஜீமூதகேது.—உன் ஆற்றொணாத் துயரத்தை என்னோடு கூறுவாய். சொல்லுமொழிகள் சொல்லி மனத் துயரமாறும்.

சங்கசூடன்.—ஆனால் கேளும். யான் ஓர் நாகன்; பெயரால் சங்கசூடன். கருடர்க் கிரையாவது என் முறை. முறையால் அரசன் வாசுகியா லனுப்பப்பட்டேன். விரித்துக் கூறுவதில் பயன் என்ன? ஒருவேளை இந்த ரக்தபர்தை மணலால் மூட மயங்கி கண்புலத்தையு மயக்கிவிடலாம்.—ஆகையால் சுருங்கச் சொல்வன். கருணைக்கடலாய் அருளலை எரிக்க மனம் புகைந்த மஹான்—அத்யுன்னத மஹான்—விஞ்சையன்—அவன். அவனால் என் உயிர் எஞ்சுவதாயிற்று: தானே தன்னுயிரைக் கருடர்க்கு கொடுத்ததால்!

ஜீமூதகேது.—மற்றுயிர் நலிய மனந்தளருந்தகைமை ஜீமூதவாஹனனுக்கன்றி வேறியார்க்குண்டாகும்? மகனே நன்றாய் வெளிப்படையாய் "உன் மகன் ஜீமூதவாஹனனால்" என்று சொல். அந்தோ! கொடியேன்! என் செய்கேன்!

அரசி.—அந்தோ மகனே! என் செய்தாயடா? ஏனடா இவ்வாறு செய்தனை?—

நாயகி.—சகுனம் ஸபலமாயிற்றந்தோ!—

(யாவரு மூர்ச்சித்தல்.)

சங்கசூடன்.—(கண்ணீர்விட்டு) நிஸ்சயமாக இவரிருவரும் அம்மஹானது பெற்றோர்களே! இவர்களுக்கும் இந்தத் துன்பத்தை, கொடிய துக்கத்தை யானே உண்டாக்க உடைந்தையானேன். யானே இத்துக்க ஸமாசாரத்தை அவர் மனத்திலூட்டி துன்பமுண்டாக்கக் கூடியவன். யானன்றி வேறெந்தகொடியனால் செய்ய முடியும்? விஷபல்லரிடத்தன்றி வேறெவரிடத்து விஷமுண்டாகும்? அஹோ! சங்கசூட! உனக்கு உயிரையும் அளித்து ஒரு இம்மியும் துன்பமடையாதவண்ணம் காத்த ஜீமூதவாஹனனது பேரருளிற்கு எவ்வாறு மாறளித்தாய்? கொடியாய்! நீயுமுயிரோடு வாழ்வாய்? உனக்கும் ஒரு மதியுண்டன்றோ? அது விலகி விட்டதோ? பாம்பிற்குப் பால் வார்த்தாலும் அதன் விஷம் விடுமோ? உன் இயற்கை குணத்தையன்றோ காட்டிவிட்டாய், உனக்கும் ஒருயிரிருக்கிறது. நீயும் வாழ்கிறாய். வாழ்வுமுனக்கு வேண்டுமோ? சீச்சி! இவ்வுயிர் மாய்த்தல் அழகன்றோ? கொடியாய்!—நான் இனி என் உயிர் தரிக்கேன்,:—பாவம். இந்த விருத்தர்கள் தேரும்விதம் செய்யட்டுமா? அவர் மூர்ச்சையிலிருந்து தெளிந்து விளங்கச் செய்யட்டுமா?—ஐய! ஆறும் ஆறும். அம்மணீ! எழுந்திரும். தைரியங்கொள்ளும், கொஞ்சம் ஸமாதாரித்துக் கொள்ளும்.

(இருவரும் தெளிதல்)

அரசி.—(மலையவதியை நோக்கி) குழந்தாய்! எழுந்திரு! அதைர்யப்படாதே. என் அம்ம அழாதே. ஜீமூதவாஹனனைவிட்டு நம்மிருவரும் வாழ முடியுமோ? ஆகையால் தைர்யம் அடைவாய்.

நாயகி.—(தெளிந்து) என் ஐயனே! என் காதலின் தலைவ! என் உயிரின் உயிரே. என்னைவிட்டெங்கு சென்றீர். பிரியாது பிரிந்தனையோ? என்னிடம் வெறுப்போ? யான் தக்கள் இல்லை என்றெண்ணி அகன்றீரோ? தமக்கு என்ன தவறு செய்தனனோ? என்னை இவ்வாறு விட்டுப்போதல் உம் புகழ்க்கு வரம்

பாமோ? ஹா! விதி வலிது. நீவிர் என்னை விட்டகன்றிடி ல்யானும் உம்மை விடலாகுமோ? யான் விடேன் உங்களைக்காணாது உயிர் தரிக்கேன். தாங்கள் சென்ற இடம் எளிதில் வருவேன். உங்களை இனி எப்பொழுது காணுவேன்? எப்பொழுதும்மை அடைவேன்?

ஜீமூதகேது.—குழந்தை எங்குமுன் குணம் கடந்ததுண்டா? பெரியாரை பூசித்தலை எங்கேனு தவறியதுண்டா? ஏனெனில்—

இறக்க முற்றுயெனின் எணின் பத்தியின்
மறக்கமுற் றுதநின் மாசிற் கம்மணி
துறக்கமுற் றுதவென் தாளில் தோய்த்தினித்
தறக்கமுற் றுவிய னேத்தலாகுமென்?

(கையில் சூளாமணியை எடுத்துக்கொண்டு)

ஹா! என்மகனே! இந்த விதமுன்னைக் காண வந்து விட்டது பார்த்தையா!

(அச்சூளாமணியை மார்போடணைந்து)

அந்தோ! முறைமையின் ஆனது வாழ்த்தும்
அந்தமில் பத்தியின் அமைதியின் யென்காற்படும்
மழமழத் திடுமிம் மணியும்
உழுதென் னுரத்து ருவிய தென்னே!

அரசி.—ஆ! என் மகனே! குழந்தாய்! என் செல்வமே! என் பிள்ளைக்கலி தீர்த்தபாக்கியமே! எங்கடா சென்றனை? என்னைவிட்டெங்கொழிந்தாய்? தந்தை தாய் இவர்க்கு சிச்ருஷை செய்வதன்றி வேறு ஒன்றும் எண்ணுதாய்! எங்களைவிட்டு எங்கு சென்றனை? உன் வயது முதிர்ந்த தந்தையைவிட்டெங்கெங்கொழிந்தாய்? அவரைவிட்டுச் சுவர்க்க லோகமடையச் சென்றனையோ?

ஜீமூதகேது.—(கண்ணீர்விட்டு) ஜீமூதவாஹனனை விட்டும் வாழ முடியுமோ? யாம் இவ்வாறு பேசுவதில் பயன் என்ன?

நாயகி.-(ஜீமூதகேதுவைப் போற்றிக் கைக்குவித்து) தாதா! என் தலைவனதுடலை அலங்கரித்து அதில் எஞ்சிநின்ற அந்த மணியைத் தயவுசெய்து கொடும். அத்தகையபெரும் புகழ்வாய்ந்த எம்பெருமானது சூளாமணியை என் ஹ்ருதயத்தன்போடு பூண்டு அவரை அடைய முயல்வேன். எனக்கோர் எரி மூட்டிக் கொடும். யான் இனி உயிர்ப்பொறுக்கேன். என் தலைவனிடம் செல்வன். என்னைத் தடுக்காது தயவு செய்து சீக்ரத்தில் எரிமூட்டும். அதனுள் குளித்தெம் பெருமானை யடைவேன். யான் இனி பொறுக்கேன். தரிக்கேன்.

ஜீமூதகேது.—கற்பின் பிண்டமே! ஸ்த்ரீ ரத்னமே! என் நீ வீணே வருந்துகிறாய்? நம் எல்லாருடைய அபீஷ்டமு மவ்வாறே அல்லவா?

அரசி.—அப்படியாயின் உம்மைத் தடுப்பது யாது?

ஜீமூதகேது.—காதலி! கிஞ்சித்துமில்லை. ஆனால் ஆஹிதாக்னி வளர்ப்பவர் அவ்வக்கினியிலிருந்து தீமூட்டி குளிக்கவேண்டுமல்லாது வேறொன்றுலாகாது. ஆகையால் வைதிகாக்னியை எடுத்து வருவோம். பின் எரிமூட்டி தீயுள் குளிப்போம்.

சங்கசூடன்.– என்னொருவனுக்காக இந்த விஞ்சையர் வம்சமுழுதும் நாசமடையப் போகிறது! அந்தோ! இது செய்வேன்—என் ஐய! தாங்கள் தீர விசாரியாது இத்தகைய கொடுந்தொழில் செய்வதடாது. விதியின் செயல் பஹுவிசித்ரம். ஒருவேளை பக்ஷித்தலைவன் ஜீமூதவாஹனன் நாகனல்ல வென்றறிந்து விடினும் விடலாகும். ஆகையால் நாம் இவ்விரத்த வழியே சென்று கருடனைக் காணலாம். வாரும்.

அரசி.—கடவுளருளால் உயிரோடு என் மகனையும் பார்ப்பேனா?

ஜீமூதகேது.—மகனே உன்மொழி மெய்க்கட்டும். கையில் ஆஹிதாக்னியுடன் செல்வதே நன்று. நீ அவ்வழியே போ. நாங்கள் தெய்வவெரியெடுத்து வருவோம்.

(ஜீமூதகேது மனைவி யருமகளுடன் போதல்.)

சங்கசூடன்.—யான் கருடன்பால் செல்வேன்.

(நடந்துபோதல்)

சென்னை ராஜதானியில் பிளேக் மரணம்.—1898௵ முதல், 1912௵ அக்டோபர்மீ வரையிலும் சென்னை ராஜதானி முழுவதிலும் 1,22, 144 பேர்களுக்குப் பிளேக் நோய்கண்டது. அதில் 95,006 பேர் இறந்து போனார்கள்.

	மரணம்.
பல்லாரியில்	434,59
சேலம்	175,86
கோயமுத்தூர்	14,184
வடஆற்காடு	6103
அனந்தபுரம்	4259
தென்கன்னடம்	3282

சுதேச ராஜ்யங்களில்,சாந்தூர்ராஜ்யத்தில் 138பேருக்குக் கண்டு 116 பேர் இறந்துபோனார்கள். குண்டூர், பங்கனபல்லி, புதுக்கோட்டை இவைகளில் பிளேக்கே இல்லை.

மாணவர் பக்கங்கள்
STUDENTS' PAGES
Lord Ullin's Daughter
* அல்லின் பிரபுவின் மகள்

[" அல்லின் " எனும் பிரபுவின் மகள், தன் தந்தை மனதுக்கு விரோதமாக, தான் காதலித்த " அல்வா " என்னும் தீவிற்கு இறைவனுகிய மலைநாட்டுத் தலைவன் ஒருவனுடன் ஓடிப்போய் விடுகிருள். தந்தையும் அவனது ஆட்களும் நாலு இடங்களிலும் தேடி அவர்களைக் கடைசியாகப் பின் தொடர்கின்றனர். காதலன் காதலி இருவரும் " லாக்கயில் " என்ற ஓர் ஏரியின் கரைக்கு வருகிருர்கள். பெரும் புயல் அடிக்கிறது. தலைவன் அதனையும் பொருட்படுத்தாது, தம்மைப் புனல் கடத்தி இட்டுச் செல்லுமாறு படகுகாரனை வேண்டுகின்றுன். படகுகாரன் முதலில் அபாயத்திற்கஞ்சி அவ்வாறு செய்ய மறுத்தும், பெண்ணின் கதியை நினைந்து உடன்படுகிறுன். இதற்குள் இவர்களைத் தேடிவருவோர் ஏறிவரும் குதிரைகளின் குளம்பொலி கேட்கிறது. புயலின் கொடுமைக் கஞ்சுவதினும் தந்தையின் கொடுமைக்கு அதிகமாக அஞ்சிய அப்பெண்ணின் வேண்டுகோட் கிணங்கி யாவரும் மரக்கலமேறப் படகுகாரன் தண்டு வலிக்கின்றுன். சிறிது நேரத்திற்கெல்லாம் பெருஞ் சூறைக்காற்று இப்படகைச் சூழ்ந்துகொண்டு விடுகிறது. படகு அதி அபாய நிலையிலிருக்கும்பொழுது அப்பெண் தங்கள் கதியை நினைத்துக் காதலனை அணைத்த கையும் கண்ணீருமாய் அபயமிடுகின்றுள். இது தந்தைக்குத் தெரிகிறது. " தொடர்ந்த மும்மலம் முருக்கி வெம் பவக்கடல் தொலையக் கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள்மேற் காதல் ?" உடனே அவன் புத்திரி வாஞ்சை மேலிட்டு, அவளுடைய காதலனை மன்னித்து அவனுக்கே அவளைக் கல்யாணம் செய்து தருவதாய் சத்தியம் செய்துகொடுத்து அவர்களைக் காப்பாற்றிக் கரைசேர்க்கப் படகும் அனுப்புகிறுன். ஆயினும் அப்படகும் மகளேறிய படகும் அப்புறமும் இப்புறமும் செல்ல முடியாதபடி புயல் மேன்மேலும் வீசியது. சிறிது நேரத்திற்கெல்லாம் பேரலை ஒன்று கிளம்பிப் படகிலுள்ளோரை விழுங்கவே தந்தை புத்திரி சோகத்தால் தவித்துத் தத்தளிக்கலானுன். " மெய்க்காதலின் துணிவு (2) கருத்தொருமித்த அக்காதல் கட்டுக்காவலுக் கடங்காதென்று அறிந்துகொள்ளாத தந்தையின் அறிவீனம் (3) தந்தை மனம் நோக நடத்தலால் வரும் தீங்கு (4) புண்ணிய ஜீவகாருண்ணியனுன படகுகாரனின் ஆத்மத்தியாகம் (5) 'பெற்றமனம் பித்து' என்பதன் உண்மை " யாதியவற்றை நன்கு விளக்கும் இவ் விஷயமே பின்வரும் கவிகளில் சொல்லப்பட்டிருக்கிறது:—]

A chieftain to the Highlands bound,
Cries, "Boatman do not tarry !
And I'll give thee a silver pound,
To row us o'er the ferry."

" Now who be ye, would cross Lochgyle,
This dark and stormy water ?"
" O, I'm the chief of Ulva's isle,
And this Lord Ullin's daughter.

" And fast before her father's men
Three days we've fled together,
For should he find us in the glen,
My blood would stain the heather.

" His horseman hard behind us ride ;
Should they our steps discover,
Then who will cheer my bonny bride,
When they have slain her lover ?"

Outspoke the hardy Highland wight,
" I'll go, my chief—I'm ready ;
It is not for your silver bright,
But for your winsome lady :

" And by my word! the bonny bird
In danger shall not tarry ;
So though the waves are raging white,
I'll row you o'er the ferry."

By this the storm grew loud apace,
The water-wraith was shrieking ;
And in the scowl of heaven each face
Grew dark as they were speaking.

But still as wilder blew the wind,
And as the night grew drearer,
Adown the glen rode armed men,
Their trampling sounded nearer.

" O haste thee, haste!" the lady cries,
" Though tempests round us gather ;
I'll meet the raging of the skies,
But not an angry father."

The boat has left a stormy land,
A stormy sea before her,—
When oh ! too strong for human hand,
The tempest gathered o'er her.

And still they rowed amidst the roar
Of waters fast prevailing :
Lord Ullin reached that fatal shore,
His wrath was changed to wailing.

For sore dismayed, through storm and shac
His child he did discover :

* இது தாமஸ் காம்பெல் (Thomas Campbell) என்ற ஆங்கிலப்புலவர் இயற்றிய "Lord Ullins Daughter " என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு.

One lovely hand she stretched for aid,
And one was round her lover.
" Come back ! come back !" he cried in grief,
" Across this stormy water :
And I'll forgive your Highland chief,
My daughter !—oh my daughter!"

'Twas vain : the loud waves lashed the shore,
Return or aid preventing :
The waters wild went o'er his child
And he was left lamenting.

THOMAS CAMPBELL.

" என்னளவம் தாமதியேல்
ஏ ! படகு கார !
இப் [1] புனலைக் கடத்தி எமை
இட்டுச் செல்லு வாயேல்,
வெள்ளியப வுன் தருவேன்
வெகுமதியாய் " என்ன
வேண்டி நின்றுன் மலைநாடு
மேவிடும் [2] ஓர் தலைவன்.

" நீயார்கொல் தனிப்பொடுகார்
திறமுமுடைத் தாய
நீர் உள " லாக் கயிலி " கடக்க
நினைந்தவன் ?" என்றேத,
ஏ ! யானு ? " அல்வா " என்
றிசை தீவின் தலைவன்
இவள் " அல்லின் " எனும் பிரபு
வின் புதல்வி ஆவள்.

" அதிவிரைவில் ஓடுகிறேம்
அவளுடைய ஐயன்
ஆட்களின் முன் யாம் ஒருங்கே
நாட்களொரு மூன்று.
எதிரில் எமை இம்மலைத்தாக்
கினில் அவன் காண்பானேல்,
என் [3] குருதி கறைப்படுத்தும்
புன்புல நிலம் கண்டாய்.

" அவன் குதிரை வீரர் எமை
அணுகித்தொடர் கின்றுர்
அவர்கள் எம தடிச்சுவட்டை
அறிந்துகொள்ளு வாரேல்,
எவர் எனது எழில் [1] வதுவை
இன்புறச்செய் வாரோ
இவளுடைய காதலனை
அவர்கள் கொல்லு வாரேல் ? "

அன்னதுகேட் டாண்மைமிகும்
அம்மலை நாட் டான் "என்
அதிபதி ! செல் வேன்சித்தம்
ஆகஇருக் கின்றேன்.
இன்னது நின் [2] ஏந்தெழிலா
ளின்பொருட்டே யன்றி
சுந்திடுநின் ஒள்ளியதாம்
வெள்ளியினுக் கில்லை.

" சத்தியம் [3] பூந் தத்தைஇவள்
[4] தத்தினுக்குள் ளாகித்
தத்தளிக்கச் சற்றும் இனித்
தாமதிக்கொ ணுதால்,
எத்தனைதான் இத்திரைநு
ரைத்தெழுந்த போதும்
இத்துறைநின் றத்துறை [5] சேர்ப்
பிப்பென் உமை " என்றுன்.

இன்னதற்குள் விரைந்துபுயல்
இரைந்தெழுந்த தோங்கி
[6] இசைத்ததுநீச் சனவே நீ
ரினில் வாழும் பேயும்.
தாங்கிருக்கும் போதே
அன்னவர் பாஷணை செய்.
அகல் விசும்பு [1] கறுத்துறும்
அவர்முகமும் [2] கறுத்த.
இதுகிடக்க, முன்னையினும்
இரைந்து புயல் வீசி
எழுந்தடித்தும் பயங்கரமாய்
இருள் கவிந்தும்கூட
குதிரை [3] இவர்ந் தாயுதங்கைக்
[4] கொண்டோர் மலைத்தாக்குக்
[5] குறுகினர்; [6] மாக் குளம் பொலியும்
குறுகி மிகக் [7] கேட்ட
" விடுவிரைவில், விடுவிரைவில்;
வீசு புயற் காற்று
மேவிநமைச் சூழினுமே:
விசும்புறுத்தும் பொல்லாக்

---

[1] புனல் = நீர்; [2] மேவிடும் = செல்ல இருக்கும்; [3] குருதி = இரத்தம்.

[1] வது = புதுமணப்பெண் ; [2] ஏந்தெழிலாள் = மிக்க அழகுடையவள் ; [3] பூந்தத்தை = அழகிய கிளி (போன்றவள்) ; [4] தத்து = அபாயம். [5] சேர்ப்பிப்பென் = சேர்ப்பிப்பேன். [6] இசைந்தது = சப்தித்தது.

[1] கறுத்துறும் = இருண்டு அல்லது கோபித்துக் குமுற; [2] கறுத்த = விசனத்தாலும் இருட்டாலும் கறுத்துத் தோன்றின. [3] இவர்ந்து = ஏறி; [4] கொண்டோர் = கொண்டவர்கள்; [5] குறுகினர் = சமீபித்தனர். [6] மா = குதிரை; [7] கேட்ட = கேட்டன;

கடுமையையும் துணிந்தெதிர்ப்பேன்
காண். எனது தந்தைக்
கடுஞ்சினம்பொறேன்" என அக்
காரிகை [8] கரைந்தாள்.

புயல்அடிக்கும் கரையினின்றும்
போந்து பட காங்கே
பொங்கு திரைக் கடல் கடக்கப்
புறப்படவும் என்னே!
இயில் மனிதர் எதிர்க்கவொணு
[9] இகலுடனே [10] சூறை
இப்படகைச் சுற்றிவளைந்
திட்டதுவே அந்தோ!

சலியாதன் னவர் படகைத்
தாக்கி எதிர்த் தார்த்துத்
தள்ளும்அலை யினைஎதிர்த்துத்
தண்டுவலிக் குங்கால்
அலின்பிரபு [1] படுகரையை
அடைந்தனன் அப் போதே
அவன் கோபம் மாறியதே
அழுகையதா அந்தோ.

இருளிலும்காற் றிலும்வருந்தி
இருந்து கலங்குந்தன்
எழில் மகளைக் கண்ணுற்றான்
ஏங்கிமனம் புண்ணாய்
ஒரு [2] காமர் கரமதனை
உதவிபெற விரும்பி
உயர்த்தி உயிர்க் காதலனை
ஒருகரத்தால் அணைத்தாள்.

விசனமொடு கதறினன்:
"இவ் வீசுபுயல் மேவும்
விரிதிரையின் மீளுக, நீ
மீளுக. நின் உள்ளம்
இசையும்மலை நாட்டிறைவன்
இயற்றுபிழை பொறுத்தேன்.
என்மகளே! ஐயையோ!
என்மகளே!" என்ன.

இலைஇதனாற் பயன்: இவர்கள்
வரவும் துணை பெறவும்
இயலாமல் தடுத்திரைநீர்
எற்றியதாற் கரையை
அலைஎழுந்து மூர்க்கமுடன்
அவன்மகளை விழுங்க
அழுதாற்றிச் சோகமுடன் அவன்
இருந்தான் ஆங்கே.

பண்டித. ம. கோபாலகிருஷ்ணையர்.

[8] கரைந்தாள் = அழுதாள்; [9] இகல் = வலிமை. [10] சூறை = சுழல் காற்று. [1] படு = மரணத்திற் கேதுவான; [2] காமர் = அழகிய.

மொழிபெயர்ப்பு விளக்கம்

What happens when a ripe leaf falls

When a ripe leaf falls from a plant to the ground in winter, there are waiting for it many tiny living creatures called microbes, which, as we may say, make it decay. But this really means that the stuff of the leaf is changed in such a way, that it can be taken up by the plant from the soil and built up again into the plant when the spring comes. This is one of the most wonderful and beautiful things in Nature, and there is no greater lesson we can learn than that what looks like useless death and decay and waste is really nothing of the sort, but a living process that makes for more life.

Why should not the leaves live on all the year round as they do in some plants for special reasons? But the leaf is made in order to use the sun light, and in the winter there is not enough of this and so the leaf would be wasting its time. So the plant takes what it can use from the leaf, and the rest of the leaf is changed, so that the plant can use that, too, when the summer is coming and there is a use for new leaves.

பழுப்பு இலை உதிருங்கால் நடப்பது என்ன?

மழைகாலத்தில் ஒரு செடியிலிருந்து பழுப்பு இலை, உதிர்ந்ததும், நாம் ஸாதாரணமாக மதிப்பது போல அதைச் சிதைத்துவிட அநேக சிறுபிராணிகளான அணுப்பூச்சிகள் காத்துக்கொண்டிருக்கின்றன. வஸந்தகாலம் வருங்கால் பூஸாரத்திலிருந்து செடி தன்னை வளர்த்துக்கொள்ள எடுக்கும் வஸ்துக்களாக அந்த இலையின் பண்டம் மாற்றப்படுகிறது என்பதே இந்தச் சிதைவின் ரஹஸ்யம். இயற்கையமைப்பில் மிக அழகு, அத்புதம் முதலியவைகள் வாய்ந்த விஷயங்களில் இது ஒன்று. பயனற்ற அழிவு, சிதைவு, கழிவு முதலியவைகள் போலத் தோற்றுபவைகள் உண்மையில் அம்மாதிரியானவைகள் அல்ல. அவைகள் நீடித்த வாழ்க்கையை உறுதிப்படுத்த ஏற்பட்ட சேதன முறைகள் என்று இதிலிருந்து வெளியாகும் கருத்தைவிடச் சிறந்தது எதிலிருந்தும் வெளியாகாது.

சில செடிகளில் சிறப்பான காரணங்கள்பற்றி, நீடித்திருப்பதுபோல, மற்றவைகளிலும் இலைகள் வருஷம் முழுவதும் உதிராமலிருக்கக்கூடாதா? அப்படி யல்ல, ஸூர்யன் ஒளியை உபயோகப்படுத்தவே இலைகள் ஏற்பட்டுள்ளன! மழைகாலத்தில் இதற்குப் போதுமான அளவு ஸூர்ய ஒளி இல்லை. ஆகவே இலைகள் நீடித்திருந்தால் அவைகள் காலம் வீணாகக்கழியும். ஆதலால் இலைகளிலிருந்து தனக்குவேண்டியதைச் செடி எடுத்துக்கொண்ட பின்னர், மிஞ்சியபாகம்வரும் கோடைகாலத்தில் புதிய இலைகளுக்கு உபயோகம் ஏற்படக்கூடிய வேளையில், அவைகளை உண்டாக்குவதற்கு வேண்டிய வஸ்துவாக ஏற்பட, அந்தப் பாகம் கூட செடி உபயோகிக்கக்கூடியதாகின்றது.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்தியாயம் 17

கடவுளிடம் வந்த கடுங்கோபம்

குட்டித் திரட்காடி யாரொழுகக் கோன்குதித்துக்
கட்டிப் புதைந்த கதையாகும்—துட்டமலப்
பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற்றும் பேதையர்க்குப்
புத்திபோற் காட்டும் பொருள்.

மாலை $6\frac{1}{2}$-மணிக்கு ஸ்ரீநிவாஸனுக்குப் பசி அதிகரித்துவிட்டது. அந்த வேதனையை அவனால் பொறுக்க முடியவில்லை. 'கடவுள், செவிடன், குருடன், ஊமை போலிருக்கிறது. அவன் எக்கேடேன்கெட்டு ஒழியட்டும். எனக்கு என்ன? அவனை நோக்கி உருகிக் கதறுவதைவிட நான் உட்கார்ந்திருக்கும் கல்லை நோக்கிக் கதறுவதேமேல்' என்று கடவுளை வாயாரப்பழித்துவிட்டு, தன்னை நல்வழிப்படுத்திக்கொள்ளக் கையில் பிடித்திருந்த கல்லை வீசி எறிந்துவிட்டான். பின்னர் சாப்பாட்டு விடுதியில் சென்று கொஞ்சம் உணவு உட்கொள்ளவேண்டும் என்ற ஆவலுடன் அவன் மெதுவாகக் கீழே இறங்கத்தொடங்கினான்.

இதற்குள் வாஸுதேவசாஸ்திரி திரிசிரபுரம் வந்து சேர்ந்து, அன்று பகல் முழுவதும் சாப்பாட்டுவிடுதிகள் முதலிய பொதுஸ்தலங்கள் ஒன்றுகூட விடாமல் தேடித் தீர்த்துவிட்டார். பட்டணமுழுவதும் ஒரு சந்து பொந்துகூட விடாது எப்பக்கமும் அலைந்து திரிந்து தேடிப் பார்த்து விட்டார் சாஸ்திரி. தான் தேடித் திரிபவனைப்பற்றி ஸமாசாரம் ஏதாவது சொல்லுபவர் ஒருவரையும் காணோம். சூரியாஸ்தமனமானதும் நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு திரிசிரபுரம் மலைக் கோட்டையிலாவது ஸ்ரீநிவாசன் இருக்கிறானா என்று பார்க்க மேலே ஏற ஆரம்பித்தார். இவர் ஏறும்தருணத்தில் ஸ்ரீநிவாஸனும் இறங்கிக்கொண்டிருந்தான். கொஞ்ச நாழிகையுள் இருவரும் ஸந்தித்திருப்பார்கள். அதற்குள் கறுத்த யௌவனபுருஷன் ஒருவன் விசித்ர பயங்கர பார்வையுடன் ஸ்ரீநிவாஸன்முன் தோன்றி, அவனைப் புதியமாதிரியாகக் கைகாட்டி அழைத்து வழியைவிட்டு ஒதுங்கிய மூலை ஒன்றிற்கு அழைத்துச் சென்றான்.

இவ்வாறு திடீரென்று தோன்றிய புருஷனைக் கண்டதும், அவனுக்குக் கடவுளிடமிருந்த கடுங்கோபம் சற்றுத்தணிந்தது. முன்னர் இருந்தபடி குரு கிடைப்பார் என்ற ஆவல் மனத்தில் கொதித்தெழ, நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொள்ளமிருந்த ஆவலுடன் அவன் அப்புருஷனை நாடிச்சென்றான். அப்புருஷன் ஸ்ரீநிவாஸன் முகத்தை வெருண்டு கொஞ்ச நாழிகை கண் கொட்டாது நோக்கினான். பின்னர் மேலே ஏறும் வழிவிட்டு வெகு தூரம் ஒதுக்கி அழைத்துச் சென்றான். அங்கு அவர்கள் தலைமேல் தொங்கி நின்ற பாறையைச் சுட்டிக் காட்டினான். அதில் யாதொரு விசேஷமும் காணப்படவில்லை ஸ்ரீநிவாஸன் கண்ணுக்கு. 'அப்பாறை குதிரை முகம்போலிருக்க வில்லையா? ஆனால்ஸரி, இவ்வுலகில் இனிமேல் தோன்றி அத்புத விஷயங்களைச் செய்யவிருக்கும் கல்கி அவதாரம் இதுதான், நன்றாகப்பார். கால்மணி ஸுமாருக்கு அதைக் கண்கொட்டாது பார்த்துக்கொண்டு அதன் மேலேயே கவனமாகவிரு. ஓர் அத்புத விஷயம் அங்கிருந்து வெளியாகும்!' என்று உபதேசித்தான் அந்தக் கறியன். அப்பாறைக்கும் குதிரைக்கும் ஸ்தானப்ராப்திகூடவில்லை என்று கண்டும், ஸ்ரீநிவாஸன், அதையே பார்ப்பதை நிறுத்தவில்லை. இது ஒரு மனிதனாகும், மேலும் அவதாரமாகும் என்று எந்தமடையனாவது நம்புவானா?' என்று அதை நோக்கி ஆச்சர்யப் பட்டுக் கொண்டு அசைவற்று நின்றுவிட்டான் ஸ்ரீநிவாஸன்.

இப்படி இருக்கையில் அந்தப்புதிய புருஷன் விசித்ர மந்திரங்களை முணுமுணுத்துக்கொண்டு அத்புத சைகைகளுடன் அவன்மேல் விபூதியைப் போட்டுக்கொண்டிருந்தான். ஸ்ரீநிவாஸன் பாறையில் முழு கவனத்தையும் செலுத்தி மெய்ம்மறந்து நிற்கிறான் என்று அந்தக் கறியனுக்குத்தோற்றியதும், அவன் கழுத்தைப் பலமாக நெறித்துப் பிடித்துக்கொண்டு ஸ்ரீநிவாஸன் மடியைத் தடவிச்சோதிக்கத் தொடங்கிவிட்டான். திடீரென்று தன் ஸொத்தை அவன் திருடத் தலைப்பட்டதை எண்ணி மலைத்துவிட்டான் ஸ்ரீநிவாஸன்; உடனே உண்டான வெறியில் கறியனை மூஞ்சியிலும் தலையிலும் பேய் அறைவதுபோல அறைந்து அவன் பிடி தளரும்படி அவனை வெலுவெலுக்க அடித்துவிட்டான். 'பலே! இதுதான் கல்கி அவதாரமா? அடே திருடா! மோசக்காரா!! உன் மண்டையை உடைத்து மாவிளக்கிட்டு விடுவேன், பயலே! பத்ரம்" என்று அலறி அவனைக் காலால் உதைத்துக் கீழே தள்ளினான். வெறி நீங்கி ஸ்ரீநிவாஸன் அவனைப்

பிடிக்க யத்தனிக்கும் முன் திருட யத்தனித்த கபடன் மாயமாய் மறைந்துவிட்டான். " அந்தப் பயலைத் தொடர்ந்து செல்வதனால் என்ன பயன் ? இதெல்லாம் அவன் செயலா ? அவனன்றி ஓரணுவும் அசையாது " என்றல்லவா கூறுகின்றனர் பெரியோர். ஆதலால் ஆகாயத்திற் கப்பாற்பட்டிருக்கும், அண்டப்புளுகன் மோசக்காரன், கொடிய தான்தோன்றித் தம்பிரானை கடவுள் அல்லவா இதற்கு உத்தரவாதம். அவனை வணங்குபவர் எல்லோரையும் மனமழிந்து மடியும்படி யல்லவோ அப்பயல் செய்துகொண்டு வருகிறான் ! வீடு, பெண்சாதி, ஸுகம் முதலியவைகளை எல்லாம் உதறி எறிந்து இந்த விசித்ரப்பயல் கையில் அகப் பட்டு மடையன்போல விழிப்பது என் குற்றம்தான். போதும் இந்தப் பொறுக்க முடியா அனர்த்தம். அந்தப் பயலை நினைத்து அநேகைபோல இனிமேல் உருகமாட் டேன். ஆ ! அந்தப் படுபாவி வஞ்சகன் !! அந்தத் திருட்டுப்பயல் ! ! ! அவனை இனிக்கண்டால் போதும், உடனே அவனை நரகத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பது, போதும், கடவுள், வித்தர் இவை போன்ற மடத்தன விஷயங்கள், இனி வேண்டவே வேண்டாம். விஷயஸுகம், இரவு ஸுகானுபவங்கள், தேவடியாள்கள், பழம், புஷ்பம், பணியாரம் முதலிய வைகளைப் பிடிப்போம். வெறுப்பு வர இவைகளில் கிடந்து உழலுவோம். ஆமாம், ஸரிதான் ; ஸ்ரீரங்கம் இதோதானே இருக்கிறது. அவ்வூர் தேவடியாள் கள் உலகம் முழுவதும் ப்ரஸித்தி பெற்றவர்கள். ஸரி ஒரு சாப்பாட்டு விடுதி சென்று சீக்கிரம் நல்ல உணவு உட்கொண்டு, உடனே ஸ்ரீரங்கம் போ வோம். இந்தப் பட்டுப்போல் நிலவு காயும் இவ்விரவை வீண்போக்காது நல்லவழியில் செலவிடுவோம்' என்று எண்ணமிட்டுக்கொண்டு, ஒரு சாப்பாட்டு விடுதியில் புகுந்து விட்டான் ஸ்ரீநிவாஸன். நல்லசாப்பாடு செய்து கொண்ட பின்னர் வண்டி யொன்றை அமர்த்திக் கொண்டு திரிசிரபுரத்திற்கு அருகாமையிலுள்ள ஸ்ரீரங் கம் நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

கடவுளைக் கண்டவர்கள்.—கடவுளைக் கண்டவனே உண்மையான ஞானியாவான். அவன் நிலை குழந்தை யின் நிலையைப் போன்றது. குழந்தைக்கும் ஒருவித அஹங்காரம் இருப்பதாகத் தோற்றினும், அது வெறுந் தோற்றமேயன்றி தேற்றமான அகந்தையன்று. வளர் ந்த மனிதனது அஹங்காரத்தை நோக்கப் பால்மணம் மாறாப் பசிய குழந்தையின் அஹங்காரம் சூனியமே யாகும்.

—**உபதேசரத்நமாலை.**

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ருக்மிணி அல்லது பக்தி நிலை

பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

" ஒரு ஸந்தேஹமும் இல்லை. கருடனது வேஷத் தைப் பார்த்தால் ஒருவேளை ஸந்தேஹ மிருந்திருக்க லாம் என்று எண்ணினேன் "

" இந்த வேஷமா? இது நம்மை மயக்கிக்கோபத்தை யுண்டாக்கிப் பின் நம்மைப் பரிகாஸப்படுத்தத்தானே இந்தக்கோலம். நமக்குப் பெரிய திருவடிகளின் விசே ஷந் தெரியாததா ? '

" என்ன கருடா ! அவரை எங்கு ஒளித்துவைத்து விட்டு வந்திருக்கிறாய் ? நீ போனால் காரியமாகாமலிருக் குமோ ? "

" உங்களுக்கென்ன பரிகாஸம்தானே ! நான்பட்ட பாடு எனக்குத்தெரியும்."

" என்ன எங்களை எல்லாம் பரிகாஸம் செய்கிறாயா ? நாங்கள் எல்லாம் உன் பரிகாஸத்திற்குத்தானே ஆட் கள். அது போகட்டும். அவரெங்கே ? "

அப்பொழுது கருடன் மௌனம் சாதித்தான்.

" அவர் வரவில்லையா ? வரமாட்டேன் என்றாரா ?"

" கூப்பிட்டால் வந்தால்தானே."

" என்னவென்று கூப்பிட்டாய் ? "

" கிருஷ்ணன் அழைத்துவரச் சொன்னார் என்று சொன்னேன்."

" நீ ஸமயோசித யுக்திமான் என்றல்லவா இருந் தேன். கிருஷ்ணன் அழைத்துவரச் சொன்னாரென்று அவரிடம் சொல்வது ? இது உனக்குத் தெரிந்திருக்கு மென்றலல்லவா இருந்தேன். ராமன் அழைத்துவரச் சொன்னார் என்று அல்லவா சொல்லி இருக்கவேண் டும்."

" எனக்குத் தெரியாதே ? "

" உனக்கெல்லாம் தெரிந்திருக்கும் என்றல்லவா இருந்து விட்டேன். "

" இப்பொழுதுதான் என்ன கெட்டுவிட்டது? ராமன் அழைத்து வரச்சொன்னார் என்றழைத்து வருவார். அதற்கு ஒன்றும் தடையில்லை " என்றார் நாரதர்.

கருடாழ்வார்க்கு வந்த கோபத்திற்களவில்லை.

" என் அப்பா ! போயவரை ராமன் அழைத்து வரச்சொன்னதாகச் சொல்லி அழைத்து வரலாமல் லவா ?" என்றார் கிருஷ்ணர்.

" தட்டுத்தடுமாறி பலராமன் என்று, எங்கையாவது சொல்லிவிடப் போகிறாய் " என்று பயந்து தடுத்தார் பலராமர்.

" நான் போகமாட்டேன ; போகவே மாட்டேன். நீங்கள் வேறு யாரையாவது அனுப்புங்கள். உங்களுக் குப் புண்யமாய்விடும் ; என்னை அனுப்பாதியுங்கள். நான் நமஸ்காரம் பண்ணுகிறேன் " என்றான் கருடன்.

" என்னப்பா விசேஷம்? ஏன் போகமாட்டேன் என்கிறாய் ?" என்றார் நாரதர். மேலும் சிரித்தார்.

" உங்களுக்குச் சிரிப்புதான். அந்த அறை உங்கள் தவடையில் பட்டிருந்தால் இப்படிப் பரிஹஸிப்பீரோ?"

"என்ன இது. கிணறுவெட்ட பூதம் புறப்படுகிறது. அறையாவது? அநுமானை யறைந்துவிட்டு வந்துவிட் டாரா என்ன ?"

" அநுமாரை அறைந்துவிட்டாரா ? அப்பாடி ! " என்று பெருமூச்சு விட்டார் பலராமர்.

" அநுமானை அறையாமலிருப்பானா என்ன? என்ன ஆனாலும் அவர் இளைய திருவடிகள்தானே. பெரிய திருவடிகளின்முன் இளைய திருவடிகள் விளங்க முடி யுமோ?' என்றார் நாரதர்.

"கருடா ! புறப்பட என்ன இன்னும் ஆலஸ்யம்?" என்று கேட்டார் ஸ்ரீகிருஷ்ணர்.

" உங்களை வணங்குகிறேன். எனக்குயிர்பிச்சைக் கொடும். நான் ஒரு அறையுடனிருந்தால் போதாதா? என் பிராணனும் போய்விடவேண்டும் என்று உங்க ளுக் கிஷ்டமிருந்தா லனுப்பியும். அவர் குரங்கல்ல, குரங்கு என்று சொன்னதற்கும் போதும் பிராயச்சித் தம். இனி என்னை அங்கனுப்பினால் தலையலாக்கிடு வார். உங்களை ரொம்பக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து வேறு யாரையாவது அனுப்பியும்" என்று கெஞ்சினார் கருடபகவான்.

" என்ன இவ்வளவு கிராக்கியா ? தயவுசெய்து நீதான் அப்பா போகவேண்டும். உனக்கு ஸமானமான வர்கள் யார் ? நீயல்லாவிட்டால் எங்களை யார் காப்பாற் றப் போகிறார்கள் ?"

"நான் கேட்டுக்கொள்கிறேனே ! உங்கள் காதில் விழவில்லையா? யான் இவ்வளவு சொல்லியு மிதுதானா? இப்படியா முடிந்தது ! என் பிழைப்பு பரிகாசத்திற் கல்லவா ஏற்பட்டுவிட்டது!"

"கருடபகவான் வீண் வேஷம் போடுவதற்குக் கால மில்லை. தாமஸம் செய்யாது தயவுசெய்து, சீக்ரம்போய் அநுமாரை அழைத்துவாரும், உங்களைக்காட்டிலும் வீரரிந்த உலகில் கிடையாது" என்றார் நாரதர்.

"ஏன் ஐயா உமக்கு என்மேல் இவ்வளவு கோபம். உமக்கு என்ன அபசாரம் செய்தேன். தயவுசெய்து புண்ணில் குத்தும்படியாகப் பேசாதிருந்தால் போதுமே. "

"நாரதன் ஒன்றும் கோபத்துடன் சொல்லவில்லை; தவறாயும் சொல்லவில்லை. அவன் சொல்லியதெல் லாம் வாஸ்தவமே. நீயல்லாவிட்டால் எங்களுக்கார் உதவி செய்யப்போகிறார்கள். தயவுசெய்து அழைத்து வாருமே" என்றார் கிருஷ்ண பகவானும்.

" தேவரீருக்கு நான் செய்த அபசாரத்தைப் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நான் தெரியாமல் அந்த அநுமானை வெறும் குரங் கென்று பரிகஸித்தேன். என்னை மன்னிக்கவேண்டும். தயவுசெய்து என்னை அங்கு அனுப்பாதிருங்கள். உங்க ளுக்குக் கோடி நமஸ்காரம். எனக்குயிர்பிச்சை கொடுத்தபுண்ணியம் உங்களுக்குண்டாகும். தயவுசெய் யும். எனக்கு வேறு எந்த வேலையைச் சொன்னாலும் செய்யத்தயாராக இருக்கிறேன். இதற்கு மாத்திரம் என்னை அனுப்பாதிரும். உங்களுக்குப் புண்ணியமாய் விடுகிறது. நான்தெரியாமல் சொல்லியதற்குப் பிராயச் சித்தம்போதாதா? நான் உம்மை முன்கோபத்துடனும் படபடப்புடனும் பேசேன்; கர்வம் கொள்ளேன். உங்க ளுக்கு மனம் இரங்காதா. தாங்கள் கருணாபயோநிதி யல்லவா ? அறவாழி யந்தணனன்றோ ? என்மேல் அரு ளில்லையா ? தயவு செய்யலாகாதோ " என்று ஏங்கிக் கொண்டு ஸ்ரீவாஸுதேவனது செந்தாமரை மலரை வெள்கச்செய்யும் பாதத்துணைகளில் வீழ்ந்து வணங்கி தன்னிலை யுணர்ந்த கருடபகவான் திகைத்து மதி மயங்கி நின்றான்.

இவ்வுண்மை மொழிகள் தன் காதுள் நுழைந்ததும் கண்ணபிரானது இதயம் மலர்ந்து அன்பு வடிக்கா திருக்குமோ ? அந்தக் கருடனுக் கபயாஸ்தங்காட்டிச் சொன்னார் :

"ஹே! கருடா! உனக்கென்ன நேர்ந்தது ? ஏன் இப்படி வெருண்டு விளங்குகிறாய். மஹாவீரனல்லவா? உனக்கென்ன குறை ? அந்தக் குரங்குனக் கென்ன செய்தது ? அதை ஏதேனுமதிக்காது அலக்ஷியம் செய் தாயா ? அது உனக்கென்ன செய்தது ? என்னவெ ன்றதனிடம் சொன்னாய் ?"

"சொன்னதில்தான் தவறு எப்படி இருக்கமுடியும் ? மஹா யுக்திசாலியான, வாக்சாதுயிற் சிறந்த கருடபக வான் பிறர் துன்பப் படும்படிப் பேச முடியுமா ? " என்று கூறினார் ஸ்ரீநாரதன்.

"நாரதா தாண்டிவிட்டு வேடிக்கைப் பார்ப்பது தானோ வேலை. தாடி எரியும்போது நெருப்புகேட்பதா அழகு.—என் ஐயனே தாங்கள் அதைக் குரங்கு என்று சொல்லாதியும். நான் சொல்லிப் பட்டபாடு போதாதா? தாங்களுமா படவேண்டும்? என் பகைவன்கூட பட வேண்டாம்." என்றான் கருடன்.

"அஹோ! கிருஷ்ணா இவன் அந்த அநுமானைக் குரங்கென்று சொல்லித்தான் இந்த நிலைமை யடைந்திருக்கிறான்போல விருக்கிறது." என்றான் பலராமன்.

கிருஷ்ணபகவான் மற்றும் "அவரை என்னவென்றழைத்தாய்?" என்று கேட்டார்.

"ஐயா செய்தது பிசகுதான். என்னை என் வருத்துகிறீர்கள். செய்துவிட்டேன். குரங்கென்றுதான் கூப்பிட்டேன். நான் பட்டபாடு போதாதென்று நீங்களும் வாட்டுகிறீர்களே.மத்தளம்போல இரண்டு பக்கத்திலுமா அடிபடவேண்டி வந்தது!"

"தெரிந்ததே இந்த மரியாதை செய்தால் அறையாகிருப்பரோ? இவரும் ஓர்பறவை என்பது இவர்க்கு ஞாபகமே இல்லைபோலத் தோன்றுகிறது. இருந்திருந்தால் அப்படிச் செய்வாரா?" என்றார் நாரதர்.

"போனதுபோகட்டும். அவரைஎன்னவென்றழைத்தாய்?" என்றான் ஸ்ரீவாஸுதேவன்

"தாங்கள்தான் அழைத்துவரச் சொன்னதாகச் சொன்னேன்".

"ஸ்ரீகிருஷ்ணபகவான் அழைத்துவரச் சொன்னாரென்றுதானே சொன்னாய். அப்படித்தான் கூப்பிட்டு இருக்கவேண்டும்" என்றார் நாரதர்.

"அப்படித்தான் கூப்பிட்டேன்."

"ஸரிதான். பின் அவர் சும்மா இருப்பாரோ. ராமனழைத்துவரச் சொன்னாரென்று அல்லவா சொல்லியிருக்கவேண்டும்," எனக் கண்ணன் மொழிந்தான்.

"அப்படி என்னுடன் சொல்லவில்லையே!"

"இது கூடவா சொல்லவேண்டும். இதெல்லாம் உனக்குத் தெரிந்து இருக்கும் என்றல்லவா இருந்தேன்."

"நானும் அப்படித்தான் என்று எண்ணி சும்மா இருந்தேன்" என்றான் நாரதன்.

"போனது போகட்டும். இப்போதுபோய் குரங்கே என்றுக் கூப்பிடாமல் 'ஹே அஞ்சனஸுதா' என்று கூப்பிட்டு 'ஸ்ரீராமபிரான் தங்களது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்' என்று சொல். அவர் தானே வருவார். முன் நீ அபசாரம் செய்ததால் கோபங்கொண்டாரே, அதெல்லாம் இப்பொழுது இராது. புறப்படும்; சீக்கிரம்." எனத் திருவாய்மலர்ந்தான் ஸ்ரீதுவாரகாநாதன், அச்சுதன்.

"தயவுசெய்து என்னை விட்டுவிடும். நாரதரை அனுப்புமே"

"நான் போகட்டுமோ? கருடனுக் கென்ன கெட்டிக்காரத்தனம் போராது போல் தோன்றுகிறது" என்றனன் நாரதன்.

"அப்படி ஒன்றும் சொல்லாதியும். உம்மால் என்னமுடியும்? அப்படி முடியுமானால் நான் முன்னமே அனுப்பியிருக்க மாட்டேனோ?" என்றனன் கண்ணன்.

"நாரதரையே அனுப்பும்" என்றான் கருடன்.

"உன்னைக் காட்டிலும் நாரதன் சிரேஷ்டனோ? எட்டுச் சுரைக்காய் எதுக் குபயோகம்? "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்—சொல்லிய வண்ணஞ் செயல்" என்பது தெரியாது? நீதான் இதைச் செய்ய வேண்டும். நீ யல்லால் வேறு யாருங் கிடையாது. இனி யுனக்குப் பயமில்லை. புறப்படு. வணக்கம் பிணக்கந் தராது. சீக்ரம்.சீக்ரம். புறப்படு. போய் அவரை அழைத்துவா" என்ற வாஸுதேவனது மொழிகளினால் உள்ளங் குளிர்ந்த ஸ்ரீ கருடபகவான் சொல்வான்:

"நீங்களே இப்படிச் சொன்னால் நான் போகமாட்டேன் என்பது தகுமா? போகிறேன். என்னவென்று சொல்லவேண்டும்?"

"கிருஷ்ணன் அழைத்துவரச் சொன்னார் என்று சொல்லுமே" என்று நாரதன் சிரித்தான்.

"சொன்னது போதும். என்ன கன் யிரண்டு மதன் சுகத்தை அறியும். நான் பின் என்னவென்று சொல்லவேண்டுமென்கிறீர்கள்" என்றான் கருடன்.

"வணக்கத்துடன் "ஸ்ரீராமபிரான் உனது வரவை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்" என்று சொல்லும்" என கண்ணன் மொழிந்தான்.

"நான் சொல்லவே மாட்டேன். அவரெங்கே என்றவர் கேட்டால் என்ன அநர்த்தம் விளையுமோ? போதும் போதும். நாரதரே போகட்டும். அவர்தான் போகிறேன் என்றாரே போகட்டுமே"

"இதை எல்லாம் விட்டுவிடு. பயத்தையொழி. உடனே புறப்பட்டுப்போ. சொன்னதைச் சொல். [illegible]ன் எங்கே என்றால் வாரும் அவரிடம் அழைத்துப்போகிறேன் என்று சொல்லி அழைத்துவா"

"அப்படியே செய்கிறேன்."

"என்னவென்று கூப்பிடுகிறீர்; அழைத்து வருகிறீரா" என்று மறுத்துக்கேட்டான் நாரதன்.

"எல்லாம் ஸரியாய்த்தான் சொல்வேன்" என்று சொல்லிக்கொண்டே கருடன் சென்றான்.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

லார்ட் பெண்ட்லண்ட், நமது புதுக்கவர்னர்

HIS EXCELLENCY LORD PENTLAND, G. C. I. E.

நமது புதுக்கவர்னர், தமது மனைவியாருடன், ஸிம்லா என்னும் கப்பலில் அக்டோபர்மீ 30உ காலை 7-30 மணிக்கு சென்னை வந்துசேர்ந்தார்.கவர்ன்மெண்ட் ஆக்டிங் சீப் செக்ரிடெரி முதலானவர்கள் ஸிம்லா என்னும் கப்பலுக்குச் சென்று அவரை வரவேற்றார்கள். கப்பலைவிட்டு இறங்கியதும் வழக்கம்போல் 17-குண்டுகள் மரியாதையாய்ப் போடப்பட்டன. அன்று மாலை 4-15-மணிக்கு லார்ட் பெண்ட்லண்ட் கவர்ன்மெண்டு ஹவுஸிலிருந்து ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டசபை மண்டபத்துக்குச் சென்றார். அங்கே அவரை கவர்ன்மெண்டு செக்ரிடெரிகளும், கவர்னரின் நிருவாகச்சபை மெம்பர்களும் வரவேற்றார்கள். அங்கு ஆக்டிங் சீப் சேக்ரிடரி ஆனரபில் மிஸ்டர் A. G. கார்டியூ, ஜார்ஜ் சக்கரவர்த்தியின் கையெழுத்தின்கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்ட கமிஷனை வாசித்தார். 17 மரியாதைக் குண்டுகள் போடவும் அவர் கவர்னர் ஸ்தானத்தை வகித்தார்.

நவம்பர்மீ 2உ சனிக்கிழமை 11-மணிக்கு நமது புதுக்கவர்னருக்கு, பல உபசாரப் பத்திரிகைகள் படிக்கப்பட்டன. சென்னை கார்பொரேஷனும், சென்னை நிலச்சுவான்தார்களின் சங்கமும், தென்னிந்தியா வியாபாரச் சங்கமும், ப்ராவின்ஷியல் காங்கிரஸ் கமிட்டியாரும், கஞ்சம் நிலச்சுவான்தார்களின் சங்கமும், சென்னை மகாஜன சபையாரும், உபசார வரவுப்பத்திரிகை படிக்க, எல்லாவற்றிற்கும் ஒருமிக்க பின்வருமாறு பதில் சொன்னார்.

"நான் உங்கள்மத்தியில் இருக்கிறதைப்பற்றி நிரம்ப சந்தோஷப்படுகிறேன். நகரத்தின் பொது அபிவிருத்தியைப்பற்றியும், தரைவழியாகவும் தண்ணீர் வழியாகவும் அதனுடைய வியாபாரத்தைப் பரவச்செய்வதற்கான பிரயத்தனஞ்செய்து வருவதைப்பற்றியும், நான் சந்தோஷப் படுவதுமன்றி, அவ்விஷயங்களில் என் அனுதாபத்தையுங்காட்டச் சித்தமா யிருக்கிறேன். சென்னைத் துறைமுகத்தில் விசேஷ சௌகரியம் அமைந்திருப்பதை, லேடி பெண்ட்லண்டும் நானும் பிரத்தியட்சத்தில் கண்டு கொண்டோம். உங்கள் உபசாரபத்திரிகைகள் ஒவ்வொன்றிலும் ராஜவிசுவாஸத்தையும், ராஜதம்பதிகள் இந்தியாவுக்கு விஜயஞ்செய்ததையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் புதிதாய் வந்திருக்கிறபடியால் ஜனங்களுடைய குறைகளையும், தேசத்தின் நிலைமையையும்பற்றி அறிந்துகொள்ள வேண்டியவைகள் பல உள. உங்களுடைய குறைகளைச் செவ்வையாகக் கேட்டு, என்னால் கூடியவரையில் உங்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ண வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று கவர்னர் பேசி முடித்தார்.

*
* *

துருக்கி பால்கன் யுத்தமும் இந்தியாவும்.—துருக்கிக்கும், பால்கன் நாடுகள், கிரீஸ், இவைகளுக்கும் யுத்தம் நடக்கும் வரை, பிரிட்டிஷார் எந்தக் கட்சியிலும் சேராமல் ஒதுங்கி யிருப்பார்களென்றும், பிரிட்டிஷ் துறைமுகங்களும் பிரிட்டிஷ் கரையோரங்களும் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான கடல்களும் இரு கட்சியாரில் ஒருவருக்கும் உபயோகமா யிருக்கும்படி உதவப்படமாட்டாதென்றும் மாட்சிமை பொருந்திய ஜார்ஜ் சக்கரவர்த்தியின், ஆஞ்ஞைக்குப் பிரிட்டிஷ் நாடுகளின் எல்லைக்குள்ளிருக்கும் சகல ஜனங்களும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும் கெஜட் ஆப் இந்தியா விசேஷப் பிரசுரமொன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

*
* *

புகைக் கூண்டுகள்.— ஆகாயக்கப்பல்கள் கண்டு பிடிக்கப்பட்டாலும், புகைக்கூண்டிலேறி ஆகாயத்தில் பறப்பது அதிகமாய் இன்னும் காணப்படுகிறது. இவ்வருஷ முதல் ஆறுமாதத்தில் 214-தரம் புகைக்கூண்டுகள் பறந்ததாகவும், 97 ஸ்திரீகள் ஆகாய கமனம் செய்ததாகவும் கணக்கிடப்படுகிறது.

*
* *

இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு ஆகாயமார்க்கமாய் வருதல்.—பிரஞ்சுக்காரர்கள் தங்கள் முக்கியபட்டணமாகிய **பாரீஸ்** நகரத்திலிருந்து (சைனாவிலுள்ள) **பீகிங்** நகரத்துக்கு ஆகாயக்கப்பலில் போகிறவனுக்குப் பரிசு கொடுப்பதாகப் பந்தயம் வைத்ததைப் பார்த்து, **ஆங்கிலேயர்கள் லண்டனிலிருந்து இந்தியாவுக்குவா** பந்தயம் போட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட வழியாய் லண்டனிலிருந்து இந்தியாவுக்கு வருவதா

னுல், நாலாயிரத்து எண்ணூறு மைல் தூரம் ஆகிறது. குறைந்தது மூன்று பேராவது பந்தயத்துக்கு வருவார்கள் என்று எண்ணப்படுகிறது. இந்த யோசனை அனேகமாய் இந்த வருஷக் கடைசியில் நிறைவேறி விடுமென்று நம்பப்படுகிறது. 4800 மைல் தூரம் ஒருதடவையாய்ப் பிரயாணம் செய்வது கஷ்டப்படுமாகையாலும், வழியில் சுகாதார நிலை காற்று முதலியவைகளால் அசௌகரியங்கள் ஏற்படுமாகையாலும், தினம் ஒன்றுக்கு 400 மைல் பிரயாணம் செய்வதாக நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. இப்படித் தினசரி பிரயாணம் செய்து 12-ம் நாளில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்து சேரக்கூடும். இதுவரை ஆகாய விமானத்தில் இவ்வளவு தூரம் வந்ததில்லையாகையால், அது சாத்தியமாவென்றும் அப்படி வருவதற்கு ஆகாய விமானம் சக்தியுள்ளதாவென்றும் இப்போது யோசிக்கப்பட்டிருக்கிற வழியாக வரமுடியுமாவென்றும் தெரிந்துகொள்ளும்படி இம்மாதிரி முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. இப்படி வந்து சேருகிறவர்களுக்கு நம் தேசத்துச் சிற்றரசர்கள் வெகுமதி கொடுப்பதாக முன் வந்திருக்கிறார்கள். ஜோட்பூர் மகாராஜா 4000 ரூபாயும், போபால் பேகம் 3000 ரூபாயும் வெகுமதி கொடுப்பதாக இங்கிலாந்திலுள்ள அட்வைஸரி கமிட்டிக்கு அறிவித்திருக்கிறார்கள். ராயல் ஜியாகிராபிகல் ஸொஸைடியாரும் இந்தப் பிரயாணத்துக்குச் சௌகரியமாயிருக்கும் வழியைப் பின் வருமாறு குறிப்பிட்டு, அதற்கு வேண்டிய ஒவ்வொரு ஒத்தாசையும் செய்கிறார்கள். லண்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஜர்மெனி, ஆஸ்டிரியா, பால்கன் நாடுகள், துருக்கி, பெர்ஷியா, கடற்கரையோரம், கராச்சி இந்தவழியாக வருவதாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும், ஆகாய விமானம் செய்யும் கம்பெனிக்காரர்களில் ஒவ்வொருவரும் அவரவரிடம் உண்டான இயந்திரத்தைப் பரீட்சார்த்தமாய் உபயோகித்துப் பார்க்கும்படி மேற்படி கம்பெனியாருக்கு அறிவித்திருக்கிறார்கள். இதனால் தங்கள் இயந்திரத்துக்கு நல்ல பேர் உண்டாகும் என்ற கருத்துக் கொண்டே முன் வந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் ஒரு ஏற்பாடும் நிச்சயமாக வில்லையாம்.

*
* *

மழுங்கின இரத்தினங்கள் ஒளி பெறுதல்:—ரேடியம் என்ற உலோகத்துக்குப் பலவிதமான விலைபெற்ற ரத்தினங்கள் மழுக்கமடைந்தாலும், அவைகள் நன்றாய் ஒளி வீசி வேறு நிறம் பெறும்படி செய்யும் சக்தியுண்டு. இந்த உலோகத்தின் வெளிச்சம் பட்டுக்கொண்டே இருக்கும்படி இரத்தினங்களை வைத்திருந்தால் நிறம் மாறுகின்றது. நீலக்கல்லே இதனால் நல்ல ஒளி பெறுகின்றது. ஜர்மானிய சாஸ்திர நிபுணர் ஒருவர் இரத்தினங்களில் அநேக தினுசுகளை ரேடியம் உலோகத்துடன் ஒரு பெட்டியுள் வைத்து நன்றாய்ச் சோதித்து அறிந்திருக்கிறாராம். வெள்ளை நிறமுள்ள கல், மஞ்சள் நிறமாகவும், நீலம் பச்சையாகவும், ஊதா நீலமாகவும், ஒயின் (Wine) நிறமுள்ளது அழகான செம்பாகவும் கறுப்புக்கல் ஊதா நிறமாகவும் மாறிவிட்டன. தாம் ஆரம்பத்தில் காரட்டுக்கு $1\frac{1}{4}$ ரூபாயாக வாங்கின அதே வியாபாரியிடம் இவர் இப்படிப்பரீட்சை பார்த்த இரத்தினங்களை விலைக்குக் கொடுப்பதாகப் பேசினதில் எல்லாவற்றையும் காரட்டுக்கு $18\frac{1}{2}$ ரூபாய் விகிதம் அந்த வியாபாரி கொடுக்கத் தயாராயிருந்தார். செம்பு நிறமுள்ள ஒரு கல்லுக்கு மாத்திரம் காரட் 3000 ரூபாய் விகிதம் மதிக்கப்பட்டது.

*
* *

தொழிற்படிப்பு:—சென்னை நகரத்திற்கு வடபாகத்தில் தொழிற்படிப்பை அபிவிருத்தி செய்யும் விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்யும்படி ஏற்படுத்தப்பட்ட கமிட்டியாரின் சிபார்சுக்கு, சென்னை கவர்ன்மெண்டார் சம்மதித்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டின்கீழ், சில அப்ரெண்டிஸுகளை நியமிப்பதற்கும், கமிட்டியாரால் சிபார்சு செய்யப்பட்டபடி தொழில் வித்யாசாலை ஸ்தாபிப்பதற்கும் விஸ்தாரமான பிரேரேபணைகளை அனுப்பும்படி தொழிற்கல்வி சூபரிண்டெண்டைக் கவர்ன்மெண்டார் கேட்டிருக்கிறார்கள்.

*
* *

புதிதாய் ஸ்கூல் ஸப் அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்களின் நியமனம்:—ஏற்கனவே இருந்துவரும் ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்களின் தொகையோடுகூட, இன்னும் 48 பேரை இம்மாதம் முதல் ஒரு வருஷத்திற்கு டெம்பரரியாக நியமிக்க சென்னைக் கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள். இன்னும் ஐந்து வருஷ காலத்தில் பல திருத்தங்கள் நேரிடுமாகையால், புதிதாய் உண்டாகக் கூடிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு விஸ்தாரமான பிரேரேபணை அனுப்பும்படியாய் வித்தியா டைரெக்டரைக் கேட்டிருக்கிறார்கள்.

Supplement to the "Viveka Bodhini"

"விவேக போதினி" அனுபந்தம்



லேடி பென்ட்லண்ட்
LADY PENTLAND



லார்ட் பென்ட்லண்ட்
LORD PENTLAND

PHOTO BY KING'S STUDIO, MADRAS

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி V } பரிதாபி௵ கார்த்திகைமீ : 1912-௵ டிசம்பர்மீ { பகுதி 6

வாழ்க்கை அவஸ்தை

THE STRUGGLE IN LIFE

உலக வாழ்க்கையில் எல்லோரும் அவஸ்தைப்பட்டுக்கொண்டும் விடாது முயற்சித்துக்கொண்டும் இருக்கிறோம். இந்த அவஸ்தையும் முயற்சியும் எதற்கு என்று எல்லோருக்கும் ஒவ்வொரு நல்ல தருணத்தில் தோற்றலாம். இதற்கு மதங்கள், பொதுவாகக் கெடுதல் ஆதிமுதற்கொண்டே இருந்தது: அதைத் தீர்த்து ஸுகம் பெறச்செய்யும் முயற்சியாக்கும் இது என்று புராண கதைகள் மூலமாக விளக்கிவிட்டன. நாகரீக தத்வ சாஸ்திரங்களோ இம்முயற்சிகள் எல்லாம் ஜீவனத்திற்கே என்று தீர்மானம் செய்துவிட்டன. இதற்கும் உண்மைக்கும் வெகுதூரம். மதங்கள் கொடுத்த காரணத்தைவிட, மிகுந்த ஆராய்ச்சியின்பேரில் வெளியிடப்பட்ட இந்தத் தத்வ சாஸ்திரத்தின் தீர்மானம் இந்தக் கேள்விக்குத் தற்கால சாந்தியாகுமே ஒழிய, இதை முற்றிலும் தெளியும்படி செய்ய அதனால் முடியாது. தீராமுயற்சிக்கும் அவஸ்தைக்கும் உண்மையானகாரணம் இன்னது என்பதையே இவைகள் நன்கு உணரவில்லை.

நூதன தத்வ சாஸ்திரிகள் கூறுவதுபோல வாழ்க்கை அவஸ்தையும் முயற்சியும் ஜீவனத்திற்கு மாத்திரமேயானால், பெரியோர்கள் லக்ஷணமாகியும் வெகு காலப் பழக்கத்தாலும் தேர்ந்த மனோநிலையாலும் அடையக்கூடியதாகியும் உள்ள 'சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன் நின்றது புசிப்பர் ஸாக்ஷி நடுவான ஜீவன் முத்தர்' என்று கூறப்பட்டுள்ள நிலை எல்லோருக்கும் எளிதில் கைகூடிவிடும். மேலும் வாழ்க்கையில் உள்ளது ஜீவன அவஸ்தையும் முயற்சியும் என்பதை உற்று நோக்கில் பொருளில்லாததாகவே முடியும். ஜீவனமே ஒருவித முயற்சியா லாகவேண்டியதாதலால், ஜீவனத்திற்காக முயற்சி என்ற தொடர், ஒருவன் முயலுவதற்காக ஜீவிக்கிறான் என்றும், ஜீவிக்கிறதற்காக முயலுகிறான் இவ்வாழ்க்கையில் என்றும் பொருள் தந்து பயனற்றதாகிவிடும். ஆழ்ந்து நோக்குங்கால் உண்மையில் ஜீவனத்திற்குமாத்திரம் பாடுபடுபவன் இவ்வுலகில் ஒருவனும் இல்லை. இதை மாத்திரம் ஒரு பொருட்டாக எந்த மூடனும் மதிக்கமாட்டான். இவ்வாறு மாத்திரம் எல்லோரும் எண்ணிவிட்டால் உலகில் இப்பொழுதிருப்பதுபோல அநேக மடங்கு ஜனங்களுக்கு ஸுகமாக ஜீவிக்கும் இடமில்லாம லிருக்கவில்லை.

ஸுமார் 15 வருஷங்களுக்கு முன்பாக ஒரு ரஷ்ய சக்கிரவர்த்திக்கு மகுடாபிஷேகம் நடந்தது. அதில் ஊரெல்லாம் அழைத்திருந்தனர். இவர்களுக்கு ஒரு பெரிய சாலையில் வேண்டிய அளவு உணவு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வைத்திருந்தது. எல்லோரும் பொறுத்து ஒழுங்காக உள்ளே புகுந்திருந்தால் எல்லோரும் ஸுகமாக உண்டு மீண்டிருக்கலாம். எல்லோரும் 'நான் முன்னே, நான் முன்னே' என்று விழுந்துபோய் ஒருவரை ஒருவர் மிதித்துக் கொன்றுவிட்டனர். குதூஹல காலம் வியாகூல காலமாகி விட்டது. இங்கு நடந்ததே உலகில் எப்பொழுதும் உள்ள அவஸ்தா ரஹஸ்யத்தை நன்குவெளிப்படுத்தும். ஜீவனம் மாத்திரம் உலகத்தவருக்குக் கருத்தல்ல. வெளி விஷயங்களிலிருந்து வரும் ஸுகத்தைக்குறித்தே எல்லோரும் முயற்சித்துப் போட்டி போட, ஒருவரை ஒருவர் தடுத்தும் சில ஸமயங்களில் கொன்றும் ஸாதாரணமாகத் தமக்கு வரக்கூடிய ஸுகத்தையும் கெடுத்துக் கொள்கின்றனர். ஆகவே வாழ்க்கை முயற்சி எல்லாம் ஸுகத்தின் பொருட்டே ஒழிய வெறும் ஜீவனமாத்திரத்திற்கல்ல என்பதே வேதாந்தத்தின் துணிபு. இந்த ஸுகத்தை உலக ஸுகமாகக் கருதிவிடா திருப்பதற்கு வேதாந்தம் இதற்கு ஆனந்தம் என்ற பெயரிட்டிருக்கிறது. இந்த ஆனந்தம் வெளி வஸ்துவிலிருந்து வரும் என்ற நம்பிக்கையால் ஒவ்வொருவனும் வெளி விஷயங்களைப் பற்றிப் பார்த்து, அதிலிருந்து வரும் ஸுகம் நிலை இல்லாதிருப்பதால் ஒன்றைவிட்டு ஒன்று பற்றி வாழ்க்கையில் அவஸ்தைப்படுகிறான். வெளி விஷயங்கள் இந்த ஆனந்தத்தைத் தரமாட்டா, இவ்வானந்தம் ஒவ்வொருவன் உள்ளேயும் இருப்பது; என்ற உணர்ச்சியே வாழ்க்கை அவஸ்தையைத் தீர்க்கும் மருந்து என்பது வேதாந்தத்தின் துணிபு.

விவேக போதினி

தொ. 5.] பரீதாபி௵ கார்த்திகைமீ [பகுதி 6

ஸ்ருஷ்டி விஷயம்

2. சாஸ்திர சிருஷ்டிக் கிரமம்

(தொடர்ச்சி)

CREATION IN THE SASTRAS

இனிமேல் ஸ்தூல சிருஷ்டி சொல்லப்படுகிறது. பிரபஞ்சம் இந்நிலைக்கு வந்த பின்புதான் இப்பொழுது காணப்படும் விசித்திர நிலையை அடைகிறது. சூக்ஷ்ம சிருஷ்டியில் பஞ்சபூதங்களும் வெவ்வேறாய் இருந்தபோதிலும், தன்மாத்திரா ரூபமாக அதிசூட்சுமமாய் இருக்கின்றன. அந்தச் சூட்சும சிருஷ்டியிலிருக்கும்பொழுது ஜீவர்களால் தத்தம் கருமத்திற்கேற்ப சுகதுக்கங்களை அனுபவித்தல் முடியாதாகையால் இந்நிலையிலிருந்து ஸ்தூலபூதங்கள் உண்டாக வேண்டியது அவசியம்தான். இவை உண்டாகின்ற விதம் எப்படியென்றால், ஒவ்வொரு பூததன்மாத்திரையும் இரண்டு பாதியாக முதலில் பிரிகின்றது. பிறகு அப்பாதிகளுள் ஒருபாதி பிரியாதிருக்க மற்றப் பாதி நான்கு ஸமமாகப் பிரிகின்றது. ஆதலால் ஒவ்வொரு பூததன்மாத்திரையும்ஐந்துபாகங்களாகப் பிரிகின்றது. அவற்றுள் ஒன்று பாதியாகவும், மற்ற நான்கில் ஒவ்வொன்றும் அரைக்கால் பாகமாகவும் இருக்கும். இதன் பின்பு ஒவ்வொரு பூததன்மாத்திரையின் பெரிதாகிய அரைப்பாகமானது தன்னை ஒழிந்த மற்றைய பூததன்மாத்திரைகளின் அரைக்கால் பங்கு ஒவ்வொன்றோடு மாத்திரம் சேர்ந்து ஒரு முழு ஸ்தூல பூதமாகத் தோன்றுகிறது. இதற்கு உதாரணமாக ஆகாசத்தின் அரைப்பாகமானது, வாயு, தேயு, அப்பு, பிருதிவி ஆகிய இவைகளின், ஒவ்வொன்றின் ஒவ்வொரு அரைக்கால் பாகத்தோடு மாத்திரம் சேர்ந்து ஒரு முழு ஆகாச ஸ்தூல பூதமாகின்றது. இவ்வாறே வாயு, தேயு, அப்பு, பிருதிவிகளின் ஸ்தூல பூதங்களும் உண்டாகின்றன. இவ்வாறு ஒரு ஸ்தூல பூதத்தில் மற்றைப் பூதங்களின் பாகம் கலந்திருப்பதைக் கண்ணுக்குப் புலப்படும் பிரபஞ்சத்தில் எங்கும் காணலாம். இம்மாதிரியாய் ஒவ்வொரு பூததன்மாத்திரையும் ஐந்தாய்ப் பிரிந்து தம்முள் கலந்து ஸ்தூல சிருஷ்டிக்குக் காரணமாய் இருப்பதே பஞ்சீகரணம் என்று சொல்லப்படும்.

இந்தப் பஞ்சீகிருதமான ஸ்தூல பூதங்களால் தான் நாம் பார்க்கும் பிரபஞ்ச வஸ்துக்களும் ஜந்துக்களின் தேகங்களும் நமது தேகமும் உண்டாயிருக்கின்றன. இப்பூதங்களாலாகிய பிரபஞ்சம் முழுவதுமே கடவுளது ஸ்தூலதேகம் என்னப்படும். இந்த ஸ்தூல தேகத்தால் சூழப்பட்டுத் தோன்றும் கடவுளுக்கு வைசுவானரன் என்றும் விராட் என்றும் பெயருண்டு. இப்பதங்களுக்கு முறையே பிரபஞ்சத்தில் பரவியிருப்பவன் என்பதும், சிரேஷ்டமாகப் பரவியிருக்கும் வஸ்துவென்பதும் பொருள். இந்த நிலையிலிருக்கும் கடவுளே புருஷஸூக்தத்தில் ஆயிரம் தலை, ஆயிரம் கண், ஆயிரம் கால் உடையவரென்று வருணிக்கப் பெற்றிருக்கிறார். இந்த வாக்கியம் குறிப்பிப்பது என்னவென்றால், பிரபஞ்சத்தில் ஒவ்வொரு பாகமும் கடவுளது ஒவ்வொரு அங்கமே ஒழிய வேறில்லை என்பதே. ஸ்தூல வியஷ்டி சிருஷ்டியில் ஜீவர்களுக்கு ஸ்தூல தேகம் உண்டாகின்றன. இத்தேகமே நமது கண்ணுக்குப் புலப்படும் தேகம். இந்நிலையிலிருக்கும் தைஜஸனுக்கே ஜீவன் என்று பெயர். இப்பதத்திற்கு உயிரோடிருப்பவன் என்பது பொருள்.

கடவுளுக்கும், ஜீவாத்மாவுக்கும் ஸ்தூல பூதங்களால் உண்டாகும் மறைப்பிற்கு அன்ன மயகோசம் என்றும் பெயருண்டு.

இவ்வாறே பிரபஞ்ச விருத்தியும் ஆத்மாவின் அவதாரணமும் பூர்த்தியாகின்றன. இதில் வரும் பெயர்களை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அப்படி வைத்துக்கொண்டால் சிருஷ்டி விஷயங்கள் உங்களுக்கு எளிதில் விளங்கும். இவைகளை மனதில் தெளிவாய் வைத்துக்கொள்வதற்காகப் பின்வருமாறு சுருக்கமாய்ச் சிருஷ்டி விஷயங்களை எடுத்துக் காட்டுகிறோம்.

தேகங்கள்.	கோசங்கள்.	பரமாத்ம ஜீவாத்ம பரியாய நாமங்கள்.	குணவிசேஷம்.
காரண தேகம்.	ஆனந்தமய கோசம்.	ஸமஷ்டி:—ஈசுவரன், அந்தர்யாமி. வியஷ்டி:—பிராஞ்ஞன்.	சுத்த ஸத்வம். அசுத்த ஸத்வம்.
சூட்சும தேகம் அல்லது லிங்கதேகம் ஞானேந்திரியங்கள் ... 5 கர்மேந்திரியங்கள் ... 5 வாயுக்கள் ... ... 5 மனம், புத்தி ... ... 2 ஆக தத்துவங்கள் ... 17	1. விஞ்ஞான மயகோசம் (புத்தி ஞானேந்திரியங்கள்) 2. மனோமயகோசம் (மனது ஞானேந்திரியங்கள்) 3. பிராண மயகோசம் (வாயுக்கள், கர்மேந்திரியங்கள்)	ஸமஷ்டி:—ஹிரண்ய கர்ப்பன், ஸூத்ராத்மா வியஷ்டி:—தைஜஸன்	ராஜஸ பாகங்கள்.
ஸ்தூலதேகம்.	அன்னமய கோசம்.	ஸமஷ்டி:—வைசுவானரன், விராட். வியஷ்டி:—ஜீவன்.	தாமஸ பாகங்கள்.

இப்பொழுது ஒரு கோசத்தின் பின் மற்றொரு கோசம் வந்ததாகச் சொன்னோமே. இதனால் நீங்கள் இக்கோசங்கள் ஒன்றன் உள்ளே மற்றொன்றாய் வெங்காயத்தின் தோல்போலக் காணப்படும் என்று எண்ணி விடக்கூடாது. இரண்டு வாயு பதார்த்தங்கள் எப்படி ஒன்றோடொன்று கலந்திருக்குமோ, அதுபோலவே இக்கோசங்கள் கலந்திருக்குமே ஒழிய ஒன்றன்பின் ஒன்று, ஒழுங்காய் இருப்பதன்று. அதனால் ஒன்றன்பின் ஒன்று வந்ததாகச் சொன்னதன் நோக்கம் என்னவென்றால், ஒருவாறு ஸ்தூலமாகிய கோசம் அழிந்துவிட்டால், அதைவிட சூட்சுமமான கோசங்கள் கொஞ்ச காலம் நிற்கலாம் என்பதே. அதற்கும் அழியும் காலம் வரும்பொழுது அழிந்துபோகும். ஒவ்வொரு கோசத்திலேயே உழலும் ஒருவனுக்கு அதைவிடச் சூட்சுமமான அடுத்த கோசமே தன் ஆத்மாவாகத் தோன்றும். ஸ்தூல தேகத்தில் இருக்கும் ஒருவனுக்குச் சூட்சும தேகம் ஆத்மாபோலவும், ஸ்தூலசூட்சும தேகங்களில் இருப்பவனுக்குக் காரணதேகம் ஆத்மாவாகவும் தோன்றும். இதுபற்றியே ஒரு கோசத்தின்பின் மற்றொருகோசம் வந்ததாகச் சொல்லியிருக்கிறது.

இப்பொழுது ஒரே மறைப்பைத் தேகமென்றும் கோசம் என்றும் இருவிதமாகப் பெயரிட்டு வழங்குவானேன், என்ற முன்சொன்ன சங்கையை எடுத்துக்கொள்ளுவோம். கோசமென்ற பெயரும், தேகம் என்ற பெயரும் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன. ஒருவன் நம்மைக் கிள்ளுகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். உடனே நாம் 'எம்மைக் கிள்ளுகிறான்' என்று சொல்லுவது வழக்கம். உண்மையில் அவன் நம்மைக் கிள்ளுகிறானா? இல்லை. அவன் நமது தேகத்தைக்

கிள்ளுகிறானே ஒழிய வேறில்லை. நமது அறியாமையால் நமது தேகத்திற்கு வந்ததை நமக்கு வந்ததாக எண்ணுகிறோம். சிற்சில ஸமயங்களில் நாம் உண்மையில் இருக்கிறபடியே பேசுவதும் உண்டு. 'என் தேகம் ஊதி இருக்கிறதோ?' என்று கேட்கும்போது உண்மைக்கேற்றபடியே பேசுகிறோம். பழக்கத்தில் ஸுகதுக்கானுபவ விஷயங்களில் நம்மைவிட உண்மையில் வேறாய் இருக்கும் மறைப்பின் தர்மமாக உள்ளவைகளை நமது தர்மமாகப் பேசும்படி வருகிறது. 'எனக்கு வலிபொறுக்க முடியவில்லையே' என்று நாம் சொல்லுவோமே ஒழிய, 'எனது தேகத்திற்கு வலி பொறுக்க முடியவில்லை' என்று ஒருவரும் சொல்வது வழக்கமில்லை. ஆனால் தேகத்திலடங்கிய வஸ்துக்களையும் அவைகளின் விஷயங்களையும் பற்றிப் பகுத்தறிந்து பேசும்பொழுது உள்ளதை உள்ளபடி உரைக்கிறோம். 'என் தலை கனமாய் இருக்கிறது' என்றவிடத்து, இம்மாதிரியாயே சொல்லுகிறோம். ஸ்தூலதேகவிஷயமாக இவ்வாறு இருவிதமாகப் பேசுகிறோம். இதுபோலவே நாம் சூக்ஷ்மதேக விஷயத்திலும் சொல்வதுண்டு. 'எனது இந்திரியங்களுக்குப் பாடவம் இல்லை,' என்று உள்ளபடியும் 'நான் அறிகிறேன், நான் பார்க்கிறேன், நான் மூச்சுவிடுகிறேன்,' என்று உண்மைக்கு விரோதமாய் நமதுமேலேற்றியும், சொல்லுகிறோம். காரண தேக விஷயத்திலும் இம்மாதிரி சொல்லுவதற்கு இடமுண்டு. 'எனது தேகம் பஞ்சாய்ப் பறப்பதுபோலிருக்கிறது' என்றும், 'நான் ஸுகமாய் இருக்கிறேன்,' என்றும் சொல்வதுண்டு. ஆகையால் தேகம் கோசம் என்ற பெயர்கள் ஓரே மறைப்பின் பெயர்களாய் இருந்தபோதிலும், தேகம் என்று சொல்லுங்கால் நம்மின் வேறுபடுத்தியும், கோசம் என்று சொல்லுங்கால் நம்மின் வேறுபடுத்தாமலும், சொல்வது வழக்கம்.

இப்பொழுது மஹாப்பிரளய நிலையிலிருந்து வரவர உருவபேதம் அதிகரித்து ஸ்தூலமாகி இப்பொழுதிருக்கும் நிலைக்குப் பிரபஞ்சம் வந்த வழியை ஒருவாறு காட்டினோம். இதுவே நமது இந்திரிய புத்தி சக்திகளுக்கு இயன்றமட்டும் உலக சிருஷ்டியைப்பற்றி அறியக்கூடியது. மஹாப்பிரளய நிலையில் மக்கிக்கிடந்து ஆனந்தமயமாய் இருந்த ஜீவர்கள் இப்படி ஸ்தூல தேகமென்ற சிறைச்சாலையில் அகப்பட்டு அதில் பழகிப்பழகி அனுபவ விசேஷத்தால் மலங்கள் கழலப்பெற்று விரக்தி யுண்டாகிக் கோசபாசத்திலிருந்து மோக்ஷ மடைவதற்கு வேண்டிய அனுபவ விசேஷங்களை அடைய வந்தார்கள் என்பதை விளக்கிக் காட்டினோம். இப்படிக் கோசங்கள் விருத்தியானவிடத்தும், ஜீவனுக்கு வேண்டிய ஸகாயஞ் செய்வதற்காகக் கடவுளும் கோசங்களில் அகப்படாமல் ஆங்காங்கே தயாராய் இருக்கிறார் என்பதை இங்கு நன்கு விளக்குவோம். ஸ்தூல தேகம் வரும்போது கடவுள் அங்கே விராட்ரூபமாயிருந்து நமது புண்ணிய பாபங்களை எப்பொழுதும் பார்த்து அவைகட்குத் தகுந்த ஸுகதுக்கம் முதலியவைகளைக் கொடுக்கிறார். சூட்சும தேகத்தில் கடவுள் ஸூத்திராத்மாவாக இருந்துகொண்டு நம்மை மேல் நிலையை அடையும்படி செய்வதற்காக நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார். காரண தேகத்திலோ கடவுள் அந்தர்யாமியாய் இருந்துகொண்டு நமக்கு ஆனந்த வைபவத்தைக் காட்டிக்கொண்டும் ஸகல ஜீவாத்மாக்களுக்கும் பிராணன் தரித்தற்கு வேண்டிய சக்தியை அளித்துக்கொண்டும் இருக்கிறார். ஆகையால் எந்நிலையிலும் ஜீவாத்மாக்களிலும் பிரபஞ்சத்திலும் கடவுள் இல்லாத இடமே இல்லை. அவருக்குத் தெரியாமல் நாம் எவ்வித எண்ணங்களையும் எண்ணவே முடியாது. நாம் கெட்ட காரியங்களைச் செய்தால் அவர் நம்மைக் கண்டுபிடிக்கத் தயாராய் இருக்கிறார். ஒருவருக்கும் தெரியாமல் மலைகளில் கடுந்தவம் புரியும் மஹான்களிடத்தும், ஸதா உழைத்து வேலைசெய்யும் உழைப்பாளியிடத்தும், கடவுள் இருந்துகொண்டு அவரவரது மனோதர்மத்திற்கும், மனப்பூர்வமாய்ப் பாடுபடும் வகைக்கும் தகுந்தபடி பலனைக்கொடுக்கிறார். ஆகையால் கடவுள் இல்லாத இடமே இல்லை. இதற்கேற்பவே தாயுமானவரும், 'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிருக்கும் அவ்வுயிராய், அங்கங்கே நிற்பதும் நீயன்றோ பராபரமே' என்றும், "அங்கிங்கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, யருளொடு நிறைந்தெது தன்னருள் வெளிக்குள்ளே அகிலாண்ட கோடி எல்லாம், தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த் தழைத்ததெது," என்றும் பாடி இருக்கிறார். எங்கும் அவர் வியாபித்திருக்கிறார் என்ற எண்ணம் நமது மனதில் முதிர முதிர, நாம் பரிசுத்த நிலையை அடைவோம். நமது அகத்தும் புறத்தும் இக்கடவுள் இருக்கிறார் என்று நமக்குப் பூர்ண நம்பிக்கை உண்டாய்விட்டதானால், நாம் வரவரக் கடவுளைப் போலவேயாகிக் கடைசியிலேயே மோக்ஷபதவியை அடைவோம் என்பது நிச்சயம்.

குருவானவர் அத்தியாத்ம ஸாதனவிர்த்தியை சுலபமாக்குகிறார்:—அஷ்ட காஷ்டமென்னும் சூதாட்டத்தில் காய்கள் எல்லாக் கட்டங்களின் வழியாகவும் சென்று, கடைசியில் மையத்தைச் சேரவேண்டும் (அதாவது மலையேறவேண்டும்). அப்படி மலையேறாத காய்கள் அத்தனையும் அடிக்கடி இறங்குமிடத்திற்கே திரும்பி வந்து, மீண்டும் மீண்டும் இவ்வாறே கட்டங்கள்தோறும் சென்றலையவேண்டும். ஆனால் இரண்டு காய்கள் ஒன்றாய்ச் சேர்ந்து தங்கள் பிரயாணத்தையாரம்பித்து ஜதையாய் கட்டத்துக்குக் கட்டம் அசையுமாகில் எவ்வளவு சாமர்த்தியமாய் ஆடி ஆட்டத்தைக் கெலிக்கின்றவனாலும் அவற்றைப் பின் தள்ளமுடியாது. அதுபோலவே இவ்வுலகத்தில் எவர்கள் முதலில் சற்குருவின் திருவருள் பெற்று இஷ்டதேவதோபாஸனை புரிந்து பக்தி ஞான யோகாப்யாஸங்களைச் செய்கின்றார்களோ அவர்கள் அபிவிர்த்தியடைந்து செல்லும் மார்க்கம் மிருதுவாயும் இடையூறின்றியும் மீண்டும் திரும்பி வருதலில்லாமலும் சுகநிறைவாயிருக்கும்.

—உபதேசரத்னமாலை.

பிரசித்திபெற்ற வானசாஸ்திரிகள்
THE GREAT ASTRONOMERS
1. டாலமி
1. PTOLOMY

இப்பெயர்பூண்ட வானசாஸ்திரியின் ஜீவிய சரிதை, உலக அறிவு அபிவிருத்தி என்னும் சரித்திர நூலில் மிக்க பிரசித்தி பெற்றதோர் அதிகாரமாம். நூதன சங்கதிகளைக் கண்டுபிடித்து, இச்சாஸ்திரத்தை இவரைவிட அதிகமாக முன்னுக்குக் கொண்டு வந்தவர் பலரிருக்கலாம். ஆயினும் வானத்தில் சஞ்சரிக்கும் கிரகங்களின் சஞ்சாரங்களைப்பற்றி இவர் கொண்ட கொள்கைகள் மற்ற மனிதர்களின் மனதில் 14-நூற்றாண்டு வேரூன்றி நிலைகொண்டிருந்ததனால் இவர்க்குண்டான கீர்த்தி, ஏனைய வான சாஸ்திரிகள் யாவரேனும் பெற்றிலர். தனது "ஆல்மகெஸ்ட்" என்னும் கிரந்தத்தில் வெளியிட்டுள்ள இவர் கொள்கைகள் அப்பதினான்கு நூற்றாண்டு யாவராலும் கையாடப்பட்டு வந்தன. இக்கொள்கைகள் மிகவும், பிழை என்னும் மாசு படிந்திருந்தபோதிலும் முக்கிய சீர்திருத்தமென்று சொல்லக்கூடியதொன்றும் அக்காலத்தில் அடையவில்லை. வானத்தைப்பற்றிய சங்கதிகள் யாவற்றினும் பூமியைப்பற்றிய அநேக விஷயங்களிலும், (பூகோள சாஸ்திரத்திலும் மிக்க அறிவு நிறைந்தவராதலால்) இவரது அபிப்பிராயமே கடைசித் தீர்மானமாகக் கொள்ளப்பட்டு வந்தது. இக்காலத்து, சாதாரணமாய் பள்ளிக்குச் செல்லும் வயதடைந்த பிள்ளைகள் கூட, வானசோதிகளின் சஞ்சாரங்களின் உண்மையைப்பற்றி டாலமிக்குத் தெரிந்திருந்ததைவிட அதிகமாக அறிந்திருத்தல் சாத்தியமாயினும், அவர் வெளியிட்ட நூல் சுமார் அறுபது தலைமுறைவரை மனித உணர்வின்பேரில் வியக்கத்தகும்படியாய் ஆஞ்ஞா சக்கிரஞ் செலுத்தி வந்த சங்கதி ஒன்றே அந்நூல் சாதாரணமானதன்று என்பதற்குப் போதிய சான்றும். ஒருவராலும் ஆக்ஷேபணை செய்யப்படாமல் அவ்வளவு

காலம் இவர் மானிட சந்ததியின் போதகாசிரியராய் வாய்ந்ததின் இரகசியம் என்னவென்று அறிந்துகொள்வதற்காகவாவது இவரின் ஜீவிய தசையைப்பற்றி நாம் படிக்கவேண்டிய தவசியமாம்.

ஆனால் டாலமியின் பிறப்பு வளர்ப்பு முதலியவைகளைப்பற்றி நமக்குத் தெரியக்கூடியது மிக்க சொற்பமே. அவர் எகிப்து தேயத்தாரென்றும், அவர் பெயர்பூண்ட ராஜ வம்சத்தைச் சேர்ந்தவரென்றுசிலரால் அனுமானிக்கப்பட்டபோதிலும், அந்நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்யத் தகுந்த சான்றொன்றுமில்லை யென்றுமட்டும் நமக்குத் தெரியும். இவர் முதல் முதலாய் ரிகார்டு செய்திருக்கும் குறிப்பு கி. பி. 127-லும் கடைசியாய் கி. பி. 151-லும் இருக்கின்றன வென்பதிலிருந்தே இவரிருந்த காலம் ஓர்விதமாய்க் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர் அலெக்ஸாண்ட்ரியாவிலாவது அதற்கருகேயாவது, வசித்து வந்ததாக மட்டும் தெரியவருகிறது. இவர் வாஸஸ்தலத்தைப்பற்றி நாம் சொல்லியதை முற்கூறியுள்ளவற்றுடன் சேர்த்துக்கொண்டால், இவருடைய பிறப்பு, வளர்ப்பு, ரூபம், குணம் முதலியவைகளைப்பற்றி நாம் எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவும் கூறியாய்விட்டதென்று நண்பர்கள் அறிவாராக.

சந்தேகமின்றி முற்கால வான சாஸ்திரத்தில் பயிற்சி யடைந்தவர்களில் டாலமிக்குச் சமானமாகச் சொல்லக்கூடியவரொருவருமிலர். தனக்கு முன்னிருந்த பிரகிருதி சாஸ்திரிகளின் ஞானமெல்லாம் ஒருங்குசேர்த்து ஓர் ஒழுங்குபடுத்தி, அத்துடன், தானே விஷயங்களை ஊன்றி நோக்கிச் செய்த குறிப்பின் தீர்மானங்களைச் சேர்த்துக்கொண்டு தன்னுடைய கொள்கைகளினால் அதை விளக்கிப் பிரகாசிக்கவும் செய்தனர். இவருடைய எண்ணங்கள், இப்பொழுது நமக்குத் தெரிந்தவாறு, முழுவதும் தப்பிதமாயிருந்தபோதிலும், உலகத்தில் யாவராலும் ஒப்புக்கொள்ளும்படியாக இயற்கையில் விஷயங்களுக்குத் தக்கவாறு எல்லாரும் வியக்கத்தகும்படியாய் அவ்வளவு உண்மைத்தோற்றத்தைப் பெற்றிருந்தன. இக்காலத்திற்கூட நம்மில் அநேகருக்கு டாலமியின் கொள்கைகள் உண்மைபோலத் தோன்றுவது மட்டுமேயன்றி, அன்னோர் அவை உண்மையாகவே சரியானவைகளே என்று வாதிக்கத் தயாரா யிருக்கின்றனரெனின் அக்காலத்திற் கேட்கவும் வேண்டுமோ. யந்திர சாஸ்திரத்தில் சரியான பயிற்சி யில்லாமையால் முற்காலப் பிரகிருதி சாஸ்திரிகள், இயற்கையின் சுபாவப்படி விஷயங்கள் எவ்வாறிருக்க வேண்டுமென்று நிர்ணயிப்பதற்கு, தங்கள் கற்பனா சக்தியால் சிருஷ்டிக்கப்பட்டு சரியானவை யென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த சில கொள்கைகளையே உதவியாகக் கொண்டிருந்தனர். க்ஷேத்திர கணிதத்தில் வட்டத்தை (circle)ப்போல அவ்வளவு சுலபமானதும் நாலாபக்கமும் ஒரேமாதிரி யமைந்ததுமான வுருவம் வேறொன்று மில்லாமையாலும், வானசோதிகள் செல்லும்வழி ஒரே நேர்கோடாயில்லை யென்றுமட்டுந் தெரிந்திருந்ததாலும் அவைகளின் கதி வட்டத்தை ஒத்திருக்க வேண்டுமென்று தாமாகவே அவர்கள் தீர்மானித்தார்கள்.

இக்கொள்கையை நிலைநிறுத்த, வட்ட சஞ்சாரந்தான் சம்பூர்ண சஞ்சாரம் என்றும், அதைத் தவிர்த்து வேறுவித சஞ்சாரங்கள் பூர்த்தி அடைவதில்லை யென்றும் அக்காலத்தவர் கொண்டிருந்த எண்ணம் ஒன்றைத்தவிர, வேறுவித நியாயங்களில் மற்றவானசோதிகளின் நடை சம்பூர்ணமடையாத வேறு வழிகளின் மூலமாயிருப்பது முடியவே முடியாதென்றும் நம்பியிருந்தனர். இச்சூழ்ச்சியே, வட்டவடிவமே பூர்த்தியடைந்த உருவம் என்று கொண்டிருந்த அக்கால க்ஷேத்திர கணித எண்ணங்களுக்கும் வானத்தில் நடக்கும் சங்கதிகளுக்கும் அவ்வளவு சரியாய் ஒத்திருந்ததனாலேயே டாலமியின் கொள்கைகள் யாவராலும் வியக்கத்தகும்படியாய் அவ்வளவு செல்வாக்கடைந்திருந்தன.

டாலமி நம் பூமியின் வடிவம் உருண்டையென்ற உண்மையை அஸ்திவாரமாகக் கொண்டு அதற்குமேல் தன் கொள்கைகளைக் கட்ட ஆரம்பிக்கிறார். இவ்வுண்மையை நிரூபிக்க அவர் காட்டிய திருஷ்டாந்திரங்கள் மிகவும் திருப்திகரமானவைகளே. அவர் முதலில் கொடுத்த திருஷ்டாந்திரம், சமுத்திரத்தின் மேல் வரும் ஒரு வஸ்துவைத் தூரத்திலிருந்து நாம் பார்ப்போமாயின் அவ்வஸ்துவின் அடிப்பாகம், வளைந்திருக்கும் தண்ணீரால் மறைக்கப்பட்டதென்று பூகோளசாஸ்திர புஸ்தகங்களில் தெரிவிக்கும் தத்துவமே.

அவர் எடுத்துக்கொண்ட மற்றொரு திருஷ்டாந்தரம் மேற்சொல்லியதைப்போன்று அவ்வளவு வெளிப்படையா யில்லாமற் போயினும் அதை நன்றாய்த் தெரிந்துகொள்ள மனதுள்ளோர் சிறிது சிரமம் எடுத்துக்கொண்டு கவனிப்பின் பூமியின் வளைவை, நன்றாய் விளங்கும்படி எடுத்துக்காட்டும் என்பதற்கையமில்லை. தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்தவர்களில் பலர், இராத்திரியில் ஆகாயம் சிறுகச் சிறுக மாறுதலடைந்து வந்ததென்றும் வடபாதி வானத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களுக்குள் அவர்களுக்குத் தெரிந்தவைகள் அவர்கள் தெற்கு நோக்கிச் செல்லச் செல்ல பூமியும் வானமும் சந்திக்குமிடத்திற்குள் மறைந்து விடுவதாகவும் புகன்றனர். உத்ரதுருவ நட்சத்திரத்தைச் சுற்றி வருவதில் நாம் இருக்கும் பாகத்தில் ஒருபொழுதும் மறையாத ஸப்தரிஷி மண்டலம் (great bear) என்று பெயர்பூண்ட நட்சத்திரக் கூட்டம். தெற்கில் ஒருவன் சரியான தூரம் சென்றபின் அஸ்தமனமாவதுமன்றி உதயமாவதும் கண்டதாக டாலமிக்குத் தெரிவித்தார்கள். பூமியின் வடபாகத்தி லிருப்போர் ஒருநாளும் பார்த்திராத நட்சத்திரக்கூட்டங்கள் தெற்கே உதயமாவதையும் அவர்கள் பார்த்ததாகவும் புகன்றனர். இவைகள் எல்லாம் பூமி தட்டையாயிருக்கும் பட்சத்தில் முடியாத காரியமேயாம். தெற்கு நோக்கிச் செல்லும் பிரயாணத்தால் நக்ஷத்திரங்களின் கதியில் இவ்வித மாறுதல்களுண்டாகாவென்பதும் சற்று யோசிக்கின் நன்கு விளங்கும். இந்நியாயங்களின் தத்துவத்தை டாலமி மிக்க ஆராய்ச்சியுடன் வெளியிட்டனர். தற்காலத்துக் கண்டுபிடிக்கப்பட்ட நூதன சங்கதிகளின் உதவியைக்கொண்டும் டாலமி காட்டிய நியாயங்களை மற்றும் தெளிவாக விளக்குவது இக்காலத்திற்கூட முடியாத காரியமே.

டாலமி, நூதனமாய் ஓர் உண்மை உலகத்துக்கு வெளியிடும் முற்றுமுணர்ந்த தத்துவசாஸ்திரியைப்போலவே தன் கொள்கைகள் மற்றோர் மனதிற் நன்றாகப் பதியும்படியாய் தகுந்த திருஷ்டாந்திரங்களைக் கொண்டு ரூபித்தனர். அவைகளின் ஒன்றைமட்டும் அதன் ஸாரம்சத்திற்காகமட்டுமேயன்றி அது டாலமியின் புத்திக்கூர்மையையும் தெரிவிப்பதால் இவ்விடம் வரைவாம். பூமி தட்டையாயிருக்கும் பக்ஷத்தில் சூரியாஸ்தமனம் எல்லாவிடத்திலும் ஒரே காலத்தில் தான் நேரவேண்டுமென்றும் அவ்வாறில்லாமல் அதைக் கவனிப்பவரிருக்குமிடத்திற்குத் தக்கவாறு அக்காலம், வேறுபடுகிறதென்றும் அதனால் பூமி தட்டையல்லவென்றும் காண்பித்தனர். நமக்கு இவ்விஷயம் வெளிப்படையாகத் தெரியும். சென்னையில் நமக்கு அஸ்தமனமாய் விட்டபோதினுங்கூட, லண்டனிலிருப்போருக்கு சூரியாஸ்தமனமாகவில்லை யென்று இக்காலத்தவருக்குத் தெரியும். இக்காலத்து அறிவு விருத்தியால் நமக்குக் கிடைத்திருக்கும் சௌகரியங்களொன்றும் டாலமி பெற்றிருக்கவில்லை. ஆதலால் அவர், அலெக்ஸாண்டிரியாவில், சூரியாஸ்தமனம், அதற்கப்பால் மேற்கே நூறு மைல்தூரத்திலுள்ள ஓர் விடத்திலாவதைக் காட்டிலும் முன்னமே நேர்ந்துவிடுகிறதென்று எவ்வாறு காண்பிப்பது? மேற்சொன்ன விடங்களிலுள்ள வான சாஸ்திரிகள் அவ்வவ்விடங்களில் சூரியன் அஸ்தமனமாகுங்காலத்தைக் குறித்து ஒருவரோடொரு

வர். பேசிக்கொள்வதற்கு இக்காலத்தைப்போல முற்காலத்தில் தந்திக்கம்பிகள் உண்டா? அல்லது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு போகும்படியான கடியாரங்கள் ஏதேனு முண்டோ; இல்லை. இவ்வாறிருந்தும் டாலமி, அந்த உண்மையைப் பின்வருமாறு விளக்கிக்காட்டினார். அவர் சந்திரனுக்குத் தனக்காக ஒளியில்லை யென்றும், அது பிரகாசிப்பதெல்லாம் சூரிய வெளிச்சத்தினாலேயே என்றும் அறிந்திருந்தார். அவர் ஓர் சந்திரகிரகண காலத்து வெவ்வேறு விடங்களில் அக்கிரகணம் எப்பொழுது ஆரம்பித்ததென்று அனேகரைக் கொண்டு பார்த்துக் குறிப்பிட்ட காலவரைகளைப் பூமியின் வடிவம் உருண்டையே யென்று வாதித்தனர். அலெக்ஸாண்டரியாவுக்குக் கிழக்கேயுள்ள விடங்களில் கிரகண ஆரம்பம் அலக்ஸாண்டரியாவுக்கு மேற்கேயுள்ள விடங்களில் ஆரம்பித்ததைக்காட்டிலும் முன்னாடியே யிருந்தபடியால், பூமி தட்டையாயிருத்தல் அசாத்தியமென்றும் அவ்வாறில்லாம லிருக்கும் பக்ஷத்தில் எல்லா விடத்திலும் கிரகண ஆரம்பம் ஒரே காலத்தி லிருக்கவேண்டுமென்றும் அவ்வாறில்லாததால் பூமி தட்டையாயிருத்தல் அசாத்தியமென்றும் கொண்டார்கள்.

இதிலிருந்து அக்கால வெண்ணப்படி உருண்டைவடிவமே பூரணமடைந்த உருவமாதலால், பூமி யுருண்டையாய்த்தானிருக்கவேண்டுமென்று கொள்ளப்பட்டது. இதை நிரூபித்தவுடன் டாலமி இப்பூமி வெட்டவெளியில் ஒன்றினாலும் தாங்கப்படாமல் நின்றுகொண் டிருக்கிறதென்றும் நன்றாய் விளங்கும்படியாகவும் தெரிவித்தனர். இவ்வளவுமட்டுமல்லாமல், டாலமி வானத்திலுள்ள நட்சத்திரங்களெல்லாம் பிரமாண்டமானதோர் ககோளத்தில் பதிக்கப்பட்ட பிரகாசம் பொருந்திய புள்ளிகளென்றும் அவைகளைக்கொண்ட அக்ககோளத்தின் சலனம் நம் பூமியை அச்சலன வட்டத்தின் மையப்புள்ளியாக வைத்துக்கொண்டால் மட்டுமே சாத்தியமாம் எனக் கொண்டனர். மற்றும் ஒருவன் எவ்விடத்திலிருந்து நட்சத்திரங்களைக் கவனித்துவந்த போதினும் அவைகளின் ஒளியால் மாறுபாடு கண்டுபிடிக்க முடியாததலால், அந்நட்சத்திரங்களைக் கொண்ட அக்ககோளம் நம் பூமியைவிட பன்மடங்கு பெரியதாயிருக்க வேண்டுமென்றும் பூமியை ஓர் சிறு மணலுக்கு உவப்பின் அக்ககோளத்தை அநேக கஜதூரம் குறுக்கு விட்டம்கொண்ட பெரியதோர் கோளத்துக்கு ஒப்பாயிருக்குமென்றும் காட்டினார். இவ்வளவு தூரம் வானசாஸ்திரத்தை முன்னுக்குக் கொண்டுவந்த விவேகசாலியான இவர் எவ்வாறு அப்பிரமாண்டமான ககோளம் பூமியைச் சுற்றி வருவதற்குக் கூடுமென்பதை நன்றாய் ஆராய்ந்து பார்ப்பதற்கும் தவறிவிட்டனர் என்பதை நினைக்கின் மிகவும் ஆச்சரியமாகவே யிருக்கின்றது. ஆயினும் இவர் இதைப்பற்றி ஆலோசியாமலிருக்கவில்லை. இராப்பகல், ருதுக்கள் ஏற்படுவது, பூமி சூரியனைச் சுற்றி வருவதனாலாவது அல்லது சூரியன் முதலியவை பூமியைச் சுற்றி வருவதனாலாவது ஏற்படக்கூடுமென்பது அவருக்குத் தெரியும். ஆனால் டாலமி செய்த தப்பித மென்னவெனின், பூமி சுற்றிக்கொண்டுவரின் அதன்மேலிருக்கும் வாயுமண்டலம் அச்சலனத்தை அடையாதென்றும் பூமி சுற்றுவதினால் வாயுமண்டலத்திற்கு எதிர் நோக்கிச் செல்லவேண்டும்; அவ்வாறில்லாததால் சூரியன் முதலியவைகளே பூமியைச் சுற்றி வருகின்றனவென்றுங் கொண்டார்.

இவ்வாறுள்ள கொள்கைகளைக்கொண்டு வானத்திலுள்ள எல்லாக் கிரகங்களின் சலனத்தை விஸ்தரித்து விளக்குவது டாலமிக்குக் கஷ்டமாகவே யிருந்தது. ஆயினும் அவர் தனக்கு க்ஷேத்திரக்கணிதத்தில் உள்ள ஞானத்தின் உதவியால் அக்கஷ்டத்தை விலக்கிக்கொண்டார். அவருடைய நியாயத்தை நன்றாய் அறிந்து கொள்வதற்கு வேண்டிய சங்கதிகளை, ஒருவாறு சுருக்கமாய்ச் சொல்லுவோம். சுக்கிரன், செவ்வாய் இவ்விரண்டு கிரகங்களின் கதியை எடுத்துக்கொள்ளுவோம். சுக்கிரன் சில காலங்களில் சூரியாஸ்தமனத்திற் கப்புறமும், மற்றும் சில காலங்களில் சூரிய உதயத்திற்குச் சற்று முன் பிரகாசிப்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. செவ்வாயும் சில காலங்களில் மேற்கே யிருந்து கீழ்நோக்கிச் செல்லுவதும், மற்றும், சிறிது காலங்களில் ஒரேவிடத்திலிருப்பதும் அதற்குப் பிறகு கீழ்த்திசையிலிருந்து மேற்கு நோக்கிச் செல்வதுமாகிய செவ்வாயின் வக்கிரகதியும் அநேகருக்குத் தெரிந்த விஷயமே. இவைகள், டாலமி கூறியபடி சூரியன் சந்திரன் முதலியவை

விருக்கிறதென்றும், அது சூரியனையும், பூமியையும் சேர்க்கும் நேர்க்கோட்டிலுள்ள P என்னும் புள்ளியைப் புள்ளியாகக்கொண்ட வட்டத்தின் வழியை சுற்றிவருகிறதென்றும், இவ்வாறு சுற்றும்பொழுது P என்னும் புள்ளியும் சூரியன் பூமியைச் சுற்றி ஓர் வட்டம் வரைந்துகொண்டு செல்லுவதால் சுக்கிரன் P என்னும் புள்ளியை எப்பொழுதும் சுற்றிவருவதோடு பூமியையும் கூடவே சுற்றி வருகின்றதென்றும் கொண்டனர். இவ்வாறு சுற்றி வருவதால் படத்தில் காட்டியபடி பூமியிலிருப்போருக்கு சுக்கிரன் V . & V 2 என்னுமிடங்களில் சூரியனுக்கு முன்னும் பின்





பூமியைச் சுற்றிவரின் இவ்வித மாறுபாடு, வக்கிரம் முதலியவைகள் நேரா. ஆனால் டாலமி அவைகள் பூமியைச் சுற்றிவரினும் இவ்வித மாறுதல்கள் சாத்தியமென்று நிரூபித்தது ஒன்றே, அவர் கீர்த்தியும் கொள்கைகளும் 14-வது நூற்றாண்டு வரை மாறுபாடு அடையாம லிருந்தன வென்பதற்குக் காரணமாம். சாதாரண மனிதர்கள் கொண்ட கொள்கைகளுக்கு மாறுக வில்லாமல், சாஸ்திரோக்தமாய் அவைகளை விளக்கிவந்தார் என்பதும் மற்றோர் காரணமாம். டாலமி இப்படத்தில் காட்டியவாறு சுக்கிரன், சூரியன் அருகி னும் காணப்படுகிறது. இதைத்தான் உதயமான சுக்கிரன் அஸ்தமன சுக்கிரன் என்று ஜனங்கள் கொண்டதாக டாலமி கூறினர். இவ்வாறே புதனின் கதியையும் நிரூபித்தனர். செவ்வாயின் வக்கிரகதி டாலமி சாத்தியமென்று எவ்வாறு விளக்கினாரென்பதைப் பார்ப்போம். படத்தில் காட்டியபடி சூரியன் பூமியைச் சுற்றுவதாயும் செவ்வாய் பூமிக்கு சூரியனைவிட தூரத்திலிருப்பதாயும் அதனால் அது பூமியைச் சுற்றி வருவதில் சூரியன் செல்லும் வட்டத்தைப்பார்க்கிலும் பெரிதான வட்ட வழியாய்ச் செல்ல

வேண்டுமென்றுங் கொண்டனர். அது சூரியனைப் போல பூமியைச் சுற்றுவதுமல்லாமல் முன் சுக்கிரனுக்குச் சொன்னவாறே செவ்வாய் M. M 2 என்னும் வட்டத்தைச் சுற்றி வருகிறதென்றும் கொண்டனர். M. என்னுமிடத்தில் செவ்வாய் படத்தில் காட்டியிருக்கும் திசை நோக்கிச் செல்லுகிறது. அதுவுமல்லாமல், பூமியைச் சுற்றியும் அதே திக்கில் செல்லுகிறது. ஆனால் செவ்வாய் M 2 என்னுமிடத்தில் பூமியைச் சுற்றிச் செல்லும் திக்கிற்கு எதிர்நோக்கிச் செல்லுகிறது. செவ்வாய் பூமியைச் சுற்றிச் செல்லும் வேகத்தைவிட 'M' என்னும் புள்ளியைச் சுற்றி வரும் வேகம் M 2. என்னுமிடத்தில் அதிகமாக விருப்பின் பூமியிலிருந்து பார்ப்போருக்கு செவ்வாய் முன் சென்றுகொண்டிருந்த திக்கிற்கு மாறாகச்செல்லுவதாகக் காண்கிறதென்றும் டாலமி காட்டினார். இவ்வளவு தூரம் வானசாஸ்திரத்தை முன்னுக்குக் கொண்டுவந்த டாலமி, செவ்வாய் சுக்கிரன் முதலியவை மேற்காட்டிய படங்களில், P, M, என்னும் புள்ளிகளைச் சுற்றி வருகின்றனவென்று வைத்துக் கொள்வதற்குப் பதிலாக அவருடைய கொள்கைப்படி பூமியைச் சுற்றிவரும் சூரியனைச்சுற்றி வருகின்றனவென்று கொண்டிருப்பாராயின் எவ்வளவோ சௌகரியமாயிருந்திருக்கும். அப்படியில்லாததினால், இவர் கொள்கைகளின் மாறுபாடும் சீர்திருத்தமும் இவருக்குப் பின்வந்த, டைகோ, கோபர்னிகஸ், என்பவர்களுக்கு விடப்பட்டன.

N. S. மணியம், B. A.

உலகப் பற்றுள்ளவன் மதம்:—ஈயானது ஒருஸமயம் புண்ணிலும் மற்றொரு ஸமயம் பகவானுக்கு அர்ப்பிக்கும் நிவேதநத்திலும் போய் மொய்ப்பதுபோல், உலகப்பற்றுள்ளவனது மநம் ஒருகால் புண்ய விஷயங்களிலே வ்யாபரித்தும், மற்றொருகால் அர்த்த காமங்களால் உண்டாகும் சுகங்களிலே அழுந்தியும் இருக்கின்றது.

—உபதேசரத்னமாலை

வஸ்து தத்துவம்

CHEMISTRY

காற்று அல்லது ஸஹஜவாயு அதன் குணங்கள்

AIR: ITS PROPERTIES

ஸஹஜவாயு ஒரு மூலவஸ்து இல்லையென்றும் பல வஸ்துக்கள் சேர்ந்த ஒரு மிச்ரம் என்றும் பார்த்தோம். இதன் குணங்களைப் பார்ப்போம்.

ஸஹஜவாயுவுக்கு நிறையுண்டு—படத்தில் காட்டியபடி, குழல் கண்ணாடித் தக்கையோடு கூடிய ஒருருண்டையான குவளைப் பாத்திரத்தை யெடுத்துக்கொள்ளவும். இப்பொழுது குழல் தக்கையைத் திறக்கப் பாத்திரம் நிறைய ஸஹஜவாயு விருக்கிறது. இப்பாத்திரத்தை ஒரு நுட்பமான தராசில் வைத்து நிறுக்கவும். இருக்கும் நிறையை நன்றாய் கவனிக்கவேண்டும். பிறகு அந்தப் பாத்திரத்தை யெடுத்து, ஒரு காற்றை யெடுக்கும் கருவியாலோ அல்லது நமது வாயால் உறுஞ்சியோ அப்பாத்திரத்திலுள்ள ஸஹஜவாயுவை யெடுக்கவேண்டும். அப்படி யெடுத்துக்கொண்டிருக்கும்போதே இறுகத்தக்கையைத்திருப்பி வெளியிலிருக்கும் காற்று பாத்திரத்திலுள்ளே போகாதபடி பாத்திரத்தை மூடவேண்டும்.



மறுபடி பாத்திரத்தை தராசில் வைத்து நிறுத்துப் பார்க்கவும். இப்பொழுது நிச்சயமாய் நிறையில் குறையும். முன்பு நிறுத்தபோது பாத்திரத்தையும் அதிலிருந்த ஸஹஜவாயுவையும் சேர்த்து நிறுத்தோம். இப்பொழுது பாத்திரத்திலிருந்த காற்றை அநேகமாய் நாம் எடுத்துவிட்டோம். ஆகையால் இப்பொழுது எவ்வளவு நிறை குறைந்திருக்கிறதோ அது ஏறக்குறைய பாத்திரத்தின் அளவு ஸஹஜ வாயுவின் நிறை. ஆகையால் கண்ணுக்குப் புலப்படாத காற்றிற்கும் நிறையுண்டு என்று தெரிகிறது. இந்த ஸஹஜவாயு பூமியிலிருக்கும் எல்லா வஸ்துக்களையும் தனது பளுவால் அழுத்திக்கொண்டிருக்கிறது.

இதை வேறுமாதிரியாகவும் பார்க்கலாம். ஒரு காலால் உதைக்கப்படும் பந்தை யெடுத்து, அதுநிறைய ஒருகாற்றடிக்கும்குழாயால் காற்றை அடைத்து, இறுக வாயைக் கட்டிவிட்டு, ஒருதராசில் அதை நிறுக்கவும். இருக்கும் நிறை அளவைக் கவனிக்கவும். பிறகு வாயைத் திறந்து பந்திலிருக்கும் காற்றை வெளியில் விடவேண்டும். இப்பொழுது மறுபடி இந்த சுருங்கிய பந்தைத் தராசில் நிறுத்தால் நிறையில் குறையும். எவ்வளவு நிறை குறைகிறதோ அது அப்பந்தில் முன்னிருந்த காற்றின் நிறையாகும்.

ஸஹஜவாயு பாரத்தால்அமுங்கும்.—ஒரு காற்றுநிறைந்த ரப்பர்பந்தை யெடுத்துக் கையால் அமுக்கவும் பந்து பருமனில் குறைகிறது. அதாவது உள்ளிருக்கும் காற்று நம்முடைய பலத்தின் பாரத்தால் அமுங்கி, அளவில் குறைகின்றது. இம்மாதிரியே ஒரு பந்து நிறை ஜலத்தைவிட்டு, வாயை இறுகக் கட்டிவிட்டு, பந்தை அமுக்கினால் பந்து அமுங்காது. அதாவது ஜலம் முதலிய திரவ பதார்த்தங்கள் பாரத்தால் அளவில்சுருங்கா. இப்பொழுது ஜலம் நிறைந்த இந்தப் பந்தை மிகவும் பலத்துடன் அமுக்க, பந்து கிழிந்து ஜலம் வெளியில் வருமேயல்லாமல், ஜலம் அளவில் சுருங்காது.

முன்பார்த்த காற்று நிறைந்த ரப்பர் பந்தை யெடுத்து மறுபடி அமுக்குவோம். நாம் நம்முடைய விரல்களை வைத்து அழுத்தும் வரையில் பந்து அமுங்கி, அதன் உள்ளிருக்கும் காற்று அளவில் சுருங்கியிருக்கிறது. நாம் நம்முடைய விரல்களை யெடுத்துவிட்டுக் கையில் பந்தை வைத்துக்கொண்டால், மறுபடி காற்று தன்னுடைய முன் அளவை அடைகிறது. அதாவது காற்றின் ஸ்திதியை நாம் வேறு சக்திகளால் மாற்றிவிட்டுப் பிறகு இப்படி ஸ்திதியை மாற்றுவதற்கு உபயோகப்படுத்தின சக்திகளை நாம் எடுத்துவிட்டால் காற்று தன் பழைய ஸ்திதியை அடைகிறது. அதாவது காற்று தன் ஸ்திதியை ஸ்தாபகம் செய்யும் சக்தி இருக்கிறது. இந்தச் சக்திக்கு ஸ்திதி ஸ்தாபக சக்தி என்று பெயர். இந்தச் சக்தி இன்னும் சில வஸ்துக்களுக்கும் உண்டு. இந்திய ரப்பர், எஃகு, மெலிய தகடுகள் ஆகிய முதலியவைகளுக்கு இந்தச் சக்தி விசேஷமாய்க் காணப்படும்.

காற்றும் பிராணிகளும்:—உலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும், ஜந்துக்களுக்கும் காற்று அவசியமென்பது மிகத் தெரிந்த விஷயம். அடிக்கடி அநேக ஜனங்களும் பிராணிகளும் நல்ல காற்றில்லாமல் இறக்க நாம் கேட்டிருக்கிறோம். உதாரணமாக ஞாபகார்த்தமாய் முன்நடந்த கல்கத்தா இருட்டறை விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே. எப்படி விளக்கு மெழுகு வர்த்தி, கட்டை முதலிய எரிவதற்கு காற்று எப்படி அவசியமோ அப்படியே நமது தேகத்திலுள்ள உஷ்ணத்தைப் பரிபாலிப்பதற்குக் காற்று அவசியம். நாம் காற்றை உட்கொண்டு வெளிவிடும்போது நமது தேகத்தில் உள்ள சில வஸ்துக்கள் மாறுபாடு அடைகின்றன. இம்மாறுபாட்டில் உஷ்ணமுண்டாகிறது. ஆகையால் நமது தேகத்தின் உஷ்ணம் குறையாமல் இருப்பதற்குக் காற்றை உட்கொள்ளவேண்டியது அவசியம்.

முன்னமேயே காற்றில் ஏறக்குறைய ஐந்தில் நாலு பங்கு உப்பு வாயுவும், ஐந்தில் ஒருபங்கு பிராணவாயுவும், கொஞ்சம் கரியமல வாயுவும் இருப்பதாகப் பார்த்தோமல்லவா? ஆகையால் நாம் காற்றை உட்கொள்ளும்பொழுது இம்மூன்றையும் உட்கொள்ளுகின்றோம். இவைகளுக்கு என்ன ஆகிறது என்று பார்ப்போம்.

ஒரு குளிர்ந்த கற்பலகையை எடுத்து அதன்மீது சற்று பலமாக வாயால் மூச்சுவிட்டு இரண்டு மூன்று தரம் ஊதவும். அப்பொழுது கற்பலகையைப் பார்த்தால் அது சற்று மங்கலாகக் காணப்படும். பலகையை விரல்களால் தடவ, கையில் ஈரம் காணப்படும். ஆகையால் நாம் மூச்சுவிடும்பொழுது நமது தேகத்தினின்று நீராவி வெளியே வருகிறதென்று தெரிகிறது. இதனால்தான் சிறுபிள்ளைகளும் தங்கள் கற்பலகைகளைச் சுத்தம்செய்ய பலகையின்மீது இரண்டு மூன்றுதரம் ஊதிவிட்டுத் துடைக்கிறார்கள்.

ஒரு கண்ணாடிப்பாத்திரத்தில் கொஞ்சம் தெளிவான சுண்ணாம்பு ஜலத்தை யெடுத்து, அதற்குள் ஒரு குழாய்வழியாக வாயால் மெதுவாய் மூச்சுவிடவும். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தெளிவான சுண்ணாம்புத் தண்ணீரானது பால்நிறம் அடைகின்றது. கரியமல

வாயு சுண்ணாம்பு நீரை வெண்மையாக்குகிற தென்று முன்னமேயே பார்த்தோம். ஆகையால் நாம் வெளிவிடும் காற்றில், கரியமலவாயு ஏராளமாய் இருக்கிறது. நாம் உட்கொள்ளும் காற்றிலுள்ள பிராணவாயு சுவாசப்பையிற் போய் நமது தேகத்திலுள்ள ரத்தத்தோடு கலந்து கரியமலவாயுவாக வெளியே வருகிறது. இப்படி மாறுதல் அடையும்பொழுது உஷ்ணம் உண்டாகிறது. இதனால்தான் உயிருள்ள வஸ்துக்களின் தேகம் உயிரில்லாதவைகளைக் காட்டிலும் உஷ்ணமாக இருக்கிறது.



காற்றும் மரமும் செடிகளும்.—எப்படி பிராணிகளுக்குக் காற்று அவசியமோ அப்படியே மரம் செடிகளுக்கும் காற்று அவசியமே. மரம்செடிகள் தங்கள் வேர்கள் மூலமாய்ப் பூமியிலிருந்து ஜலத்தையும், சில உப்புகளையும் எடுத்துக்கொள்வது மல்லாமல், தங்கள் இலைகளிலுள்ள சிறு துவாரங்களின் வழியாய் காற்றையும் எடுத்துக்கொள்ளுகின்றன.

ஜலத்தில் வளருகின்றன.—பாசிபோன்ற சில செடிகளை எடுத்து ஒரு தண்ணீர் நிறைந்த தொட்டியில் போடவும். பிறகு ஒரு கண்ணாடிக்குழல் பாத்திரம் நிறைய ஜலம் எடுத்து, தொட்டியில் உள்ள ஜலத்தில் இக்குழல் பாத்திரத்தைத் தலை கீழாகக் கவிழ்க்கவும். இப்பொழுது தொட்டியிலுள்ள செடிகளை இக்குழல் பாத்திரத்தில் திணிக்கவும். பிறகு இக்குழல் பாத்திரத்தோடு கூடிய தொட்டியை வெயிலில் சிறிதுநேரம் வைத்தால், செடியின் இலைகளிலிருந்து காற்றுக்கொப்பளங்கள் மேலே கிளம்பப் பார்க்கலாம். இம்மாதிரியாகக் குழல்பாத்திரத்தின் அரைபாகம் வரையில் காற்று நிரம்பியவுடன், அதிலிருக்கும்செடிகளை மெதுவாய் எடுத்துவிட்டு, அதன் வாயை மூடி, அப்பாத்திரத்தைத் திருப்பவும். இப்பொழுது இதை மிக ஜாக்கிரதையாய்த் திறந்து, உடனே ஒரு கொளுத்தின ஊதுவத்தியை அதற்குள் கொண்டுபோனால், அந்த வத்தி உடனே பற்றிக்கொண்டு எரிகிறது. இப்படிக் கொள்ளிக்கட்டையை எரியவைக்கும் குணம் பிராணவாயுவுக்கு உள்ளது. ஆகையால் செடிகளினின்று வெளிவரும் காற்று பிராணவாயு. மரம் செடிகள், கரியமிலவாயுவை யெடுத்துக்கொண்டு பிராணவாயு



வை வெளிவிடுகிறது. இது பிராணிகள் சுவாஸம் விடுவதுபோன்ற செய்கையல்ல. செடிகளுக்கு வேண்டியகரியை கரியமில வாயுவிலிருந்துஎடுத்துக்கொள்ளுகிறது. கரியமில வாயுவிலிருந்து கரி எடுத்துக்கொள்ளப்பட, அதில் மீதியிருக்கும் பிராணவாயு வெளிவருகிறது. செடிகளுக்கு பிராணவாயு வேண்டியதில்லை யென்பதல்ல. பிராணவாயு அவைகளுக்கும் அவசியம். ஆனால் அந்தப் பிராணவாயுவையும் காற்றிலிருந்துதான் எடுத்துக்கொள்ளுகிறது.

இப்படிக் கரியமிலவாயுவை யெடுத்துக்கொண்டு, பிராணவாயுவை வெளிவிடும் செய்கை எப்பொழுதும் நடக்கவில்லை. சூரிய வெளிச்சத்தில்தான் மரம் செடிகள் இம்மாதிரி செய்யக்கூடும். இரவில் பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளி விடுகின்றன. ஆகையால்தான் மனிதர்கள், மரம் செடிகள் நிறைந்த விடங்களில் இரவில் படுத்துத் தூங்கக்கூடாது. ஆனாற் பகற்காலங்களில் மரம் செடிகளிருக்கும் இடங்களில் உலாவுவது மிக நல்லது.

எம். ஆர். சுப்பிரமணியம், பீ.ஏ., எல்.டி.

மூட நம்பிக்கை
BLIND FAITH

ஆர்யர்களாகிய நாம் பிறந்ததுமுதல் இறக்கும் வரையில் தினம் அதிகாலையில் துயிலினின் றெழுவது முதல் இரவில் நித்திரை புகும்வரையில் செய்யு மொவ்வொரு கர்மாவும் சாஸ்திரப்பிரமாணங்களால்ஆமோதிக்கப்பட்டவைகளா யிருக்கவேண்டுமென்று நம்புகிறோம். சாஸ்திரங்கள் வெவ்வேறாகவும், அவற்றின் பிரமாணங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாயு மிருப்பினும் வழக்கம் என்னும் நம்மைப் பிடித்த பெரும்பேய் அவற்றை ஒருவழிப்படுத்தி நாம் அவற்றைக் கொள்ளும்படி செய்துவிட்டது. வழக்கத்தாலேற்பட்ட வெதையும் அது சாஸ்திரத்தை யொட்டியதோ அல்லது சரியானதோ, தவறானதோ, உண்மையோ, இன்மையோ வென்பதையும் விசாரியாமல் நாம்அனுஷ்டித்து வருகிறோம். ஆனால் ஒன்றைமாத்திரம் பூர்ணமாய் நாம் நம்பியுள்ளோம். அதாவது சாஸ்திரசம்மதமில்லாமல் வழக்கங்களேற்பட்டிரா; சாஸ்திரங்களின் ஸாராம்சமே வழக்கங்கள் என்பதே. கன்மமிரண்டொழிய வேறில்லை யென்று வழக்கங் கூறுகிறது. புண்ணிய கர்மம் பரலோக சாதனமாகுமென்பதும், பாபகர்மம் பெரு நரகிற் சேர்க்குமென்பதும் நமது நம்பிக்கை. தேவ ஆராதனை செய்வது முதல், திருஷ்டி தோஷத்துக்கும் சூத்திர ஸ்பரிசத்துக்கும் அஞ்சுதல் வரையிலுமுள்ள ஒவ்வொரு செயலும் புண்ணிய பாபங்களிற்சேர்ந்து விடுகின்றன. ஓர் பார்ப்பனனை பிராதஸ்நானம் ஏன் செய்கிறீரென்று கேட்டால் அது புண்ணிய கர்மாவாகலின் என்கிறான். முண்டனஞ் செய்து கொண்டவனை ஏன் நீரில் மூழ்கிறாயென்றால் அப்படிச் செய்யாவிடில் பாபம் சம்பவிக்குமென்கிறான். தீபாவளியின்போது புத்துடை தரியாவிடில் தோஷமென்கிறார்கள். புசிக்குங்கால் விளக்கணையின் பாபம், விளக்கை வாயினாலூதியணைத்தல் பாபம், சோற்றை மென்று தின்னல் பாபம், முழுகிச் சுத்தமா யிருக்கும்போது விழுப்புத் துணியைத் தீண்டினால் பாபம், உச்சிஷ்ட போஜன மருந்தினால்பாபம், நிலத்தை நகத்தாற் கீறுதல் பாபம், வழி, தீர்த்தம், தேவகுலம், நிழல் இவற்றில் எச்சிலுமிழ்தலும் மலசலாதிகளைக் கழித்தலும் பாபம். இரவில் மரத்தடியிற் றங்கியிருப்பது பாபம் என்று பாபங்களிற் பலவற்றையும், உண்ணுமுன் காக்கைக்குப்பிடி யன்னமளித்தல் புண்ணியம், ஏகாதசியன்று பட்டினி யிருத்தலும் துவாதசியன்று பாரணைசெய்து அத்துடன் அன்று போஜனத்தை நிறுத்துவதும் புண்ணியம், அநாதைப்பிரேதத்தை ஸம்ஸ்காரஞ்செய்தல் புண்ணியம், நீர்க்கிணறு, தடாகம், சத்திரம், சாவடி முதலியவைகளை யுண்டாக்கல் புண்ணியம், அரசவேப்பமரங்களை வைத்துப் பயிராக்கல் புண்ணியம் என்று புண்ணியத்திற் பலவற்றையும் நம்முன்னோர் கூறியுள்ளார். இவ்வித புண்ணிய பாப விஷயங்களைத் தமிழில் ஆசாரக்கோவை யென்னு நூலில் படித்தறியலாம்.

இப்படித் தெய்வ மார்க்கமாயுள்ள விஷயங்களாகட்டும், நன்னெறியை விளக்கும் விஷயங்களாகட்டும், சுகாதார வழியைப் போதிக்கும் விஷயங்களாகட்டும், கைத்தொழிலை யபிவிருத்திசெய்யவேற்பட்டுள்ள விஷயங்களாகட்டும் எவற்றையும் புண்ணிய பாவங்களிலடக்கி அவற்றிற்குப் பலனாக சொர்க்கத்தையும் நரகத்தையுங் காண்பிப்பது அறியாக் குழந்தைகட்குப் பூச்சாண்டி பயங்காட்டியும் வேடிக்கைக் காட்டியும் அழைத்துச் செல்வதாக வுற்சாகப் படுத்தியும் மருந்து கொடுப்பது போலிருக்கிறது. நாமும் அக்குழந்தைகளைப் போலவே உண்மையைவிசாரியாமல் அவாவினாலும் பயத்தினாலும் நமது வழக்கங்களை யனுசரித்து வருகிறோம். இப்படிக் காரணமறியக் கவலையின்றி நாம் எவற்றையும் நம்புவதால் சில தந்திர சாலிகள் சாஸ்திரங்களில்லாத பல துர்வாடிக்கைகளையும் சாஸ்திரானுமதி பெற்றிருப்பதாகப் பகர்ந்து நாமவற்றை யனுசரிக்கும்படி செய்துவிடுகிறார்கள். "சாஸ்திராயதூ ருதாயச" வென்று சாஸ்திரங்களி லேற்பட்டுள்ளவை யெல்லாம் நஞ் சௌக்கியத்தைக் கருதியவையாயும் காரணத்தாலேற்பட்டவையாயு மிருப்பினும், காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி எவ்வெக்காலத்துக்கு எதெது நமக்கு அனுகூலத்தைத் தரத்தக்கதோ, அதனை நுகர்ந்தும் ஏனையவற்றை யொதுக்கியும் நாம் அறிவினராய் வாழ்ந்து வரவேண்டும். மேலும் கற்றது கைம்மண்ணளவு கல்லாததுலகளவென்று கலைமடந்தையே யோதியிருக்கின்றனாதலாலும் நமதுசாஸ்திரங்களை நமக்குத்தந்து நமது முன்னோர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்து வந்தார்களாதலால் அவர்கள் வெளியிடாத விஷயங்களும் தற்காலத்தவற்குப் புலப்படக் கூடு மாதலாலும் நமது வழக்கங்களால் வந்தவைகளாகட்டும் தற்கால சீர்திருத்தக்காரர்கள்கூறும் புத்திமதிகளாகட்டும் எதையும் மனதிற்கொண்டு அதன் அநுகூலங்களையும்பிரதிகூலங்களையுந் தீர வாராய்ந்த பின்னரே நாம் ஏற்கவேண்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வகையினான் வழுவல வாகையினால் நாம் பழைய வழக்கங்களையே முற்றுமபிமானித்து நவீனக் கொள்கைகளை

உதாசினஞ் செய்த லறியாமையாகும். பல பூக்களிடமுஞ் சென்று நறவமாந்தும் ஈக்களைப்போலப்பலவிடங்களிலுமுள்ள உண்மைகளை யறிவதே புத்திகளினியல்பு. குணமெங்கிருப்பினு மதைக் கிரஹிக்கவேண்டுவது கற்றோர் முறைமை. அதுவின்றி எக்காரணத்தை முன்னிட்டோ எவ்வெண்ணத்தைக் கொண்டோ நம் முன்னோரில் எவரேனும் ஒரு வழக்கத்தை யுண்டு பண்ணி யிருப்பின் அது எக்காரணத்தால் ஏற்பட்டது தற்கால அபிவிருத்திக்கு அது ஆவசியமா வென்பதைச் சிறிதும் யோசிக்காமல் முன்னோர் வழியை யனுசரியாவிடின் பெருநரகுக் காளாவோ மென்று பயந்து ஒரு வழக்கத்தைக் கொள்ளுதல், ஆட்டின் தன்மையை தெரிவிக்கிறது. மானிடர்களுக்கும் மிருகங்களுக்குமுள்ள முக்கிய வித்தியாசம் முற்கூறியோர்க்குக் காரணகாரியங்களை யறிய திறனிருக்கப் பின் சொல்லியவைகட்கு அத்திறனில்லாமையே. மனிதர்க்கிருக்கு மத்திறமையைச் சரியாயுபயோகப்படுத்தாவிடின் அம் மனிதர்க்கும் மிருகங்கட்கு மதிக வித்யாசங் கிடையாதென்பதெமது துணிபு. நம்முன்னோர் கூறியதே புண்மை, நாம் செய்வதே சரியானது என்று சாதிப்பவர் அவ்வுண்மையின் காரண காரியங்களை நன்கறிந்திருக்க வேண்டும். அஃதின்றி நம்முன்னோர் தகுந்த காரணமின்றி ஒரு வழக்கத்தை யுண்டுபண்ணி யிருக்கமாட்டார். அக்காரணமவரைக் கேட்டாற்றான் றெரியும். நமது கடமை அவ்வழக்கத்தை வழுவாமல் பாதுகாக்க வேண்டியதே யன்றி, அதன் காரணங்களை யறிய வேண்டுவதன்று என்று சொல்பவர் கொக்கைப்போலுமொரே மதியுடையாராவார். ' மனிதனறிந்த விஷயமோ வெகு சொற்பம். அவனறியாத விஷயம் கங்கு கரையற்றது. அப்படியிருக்க ஒவ்வொரு விஷயத்துக்கும் காரணம் கண்டுபிடிக்கவுங் கூறவும் மனிதனுலாகுமா? அப்படிக் கண்டுபிடித்துக் கூறினுலு மக்காரணங்களைக் கிரகித்துக்கொள்ளுஞ் சக்திதான் ஒவ்வொரு மனிதனுக்குமிருக்கிறதா? ஆதலின் சிலவற்றை நாம் நம்பத்தான் வேண்டும். சிலவற்றைப் பரீட்சித்த பின்னரே நாமேற்கவேண்டு மென்று ஆட்சேபனை யுண்டாகலாம். வாஸ்தவம். யானைமுத லெறும்பீராகவுள்ள ஜீவகோடிகளனைவற்றிலும் மனிதனொருவனே கல்வி கேள்வி நிறைந்துள்ளவன். மற்றைய சிருஷ்டிப் பொருள்கள் யாவும் மனிதனுக்கிருக்குஞ் சாமர்த்தியத்தைப் பெறாதவை. கடவுளைச் சிருஷ்டி செய்ததும் மானுஷ விருதயமே. கடவுளைச் சூனியமாக்கியதும் மானிட மனமே. சகல சாஸ்திரங்களையுங் கலைஞானங்களையும், வித்தைகளையுந் தொழில்களையும் உண்டாக்கியவன் மனிதனே. இவ்வுலகில் மனிதனால் ஒரு காரியம் ஆகவில்லையென்றால், பின்னெவரா லக்காரியம் நிறைவேறும்? இயற்கையா யமைந்துள்ளவை நீங்கலாகச் செயற்கையாயுள்ள வனைத்தும் மனிதன் தன் புத்தியாலுண்டாக்கியவை. அப்படி யியற்கையா யேற்பட்டவைகளையும் பரீட்சிப்பதும் அவற்றிற்கு இலக்ஷணங் கூறுவதும் மனிதனுடைய தொழில். இப்படிப்பட்ட வரிய செயல்களைப் புரியத் திறம்பெற்றிருப்பதனாலன்றோ 'அரிது அரிது மானிடராதலரிது' என்றார் ஔவைப்பிராட்டியார். ஆதலால் அம்மனிதனுடைய கடமை அறியக்கூடாதவைகளையு மறிந்து கொள்வதே. மனிதனறியாவிடில் பின்யாவர்தாமறிந்து கொள்ளக்கூடும். கடவுள் நேரேவந்து மனிதனிடம் ஒரு விஷயமுஞ் சொன்னதில்லை. அப்படிக் கடவுள் சொன்னதாகக் கூறியுள்ள விஷயங்கள் மனிதன் சொன்னவையேயன்றி வேறல்ல. தம்மினுங் கற்றோரை நோக்கிக் கருத்தறிதல் மனிதனுக்கு அவசிய குணமாதலின் மனிதன் ஒவ்வொரு விஷயத்தையும் ஆய்ந்தோய்ந்து பார்த்து, காரணத்துக் கொவ்வாதவைகளை யேற்றுக்கொள்ளப் பின் வாங்கவேண்டும். அப்படிச் செய்யாதவன்நகைப்புக்கிடமாவான். மூடநம்பிக்கையை விளக்க ஒரு சிறு கதையுண்டு. அதாவது.—

ஒரு மடத்தில் ஒரு பூனை வளர்ந்துவந்தது. ஜீவகாருண்ணியரான அம்மடாதிபதி அப்பூனையிடமும் பட்சம் பாராட்டி வந்தாராகையால் அது அச்சமின்றி அவர்மேல் தாவிக் குதித்து விளையாடிவரும். தன் சமாதிக்குப் பங்கமுண்டுபண்ணு மென்றெண்ணி அவர் அப்பூனையை ஒரு தூணிற் பிணித்த பின்னரே தினம் யோகாப்பியாசஞ் செய்வார். அம்மடாதிபதிக்குக் காலமானபின் அப்பூனையு மம்மடத்தைவிட்டு எங்கோ ஓடிவிட்டது. புதிதாய் மடாதிபத்தியம் வகித்தவர்க்கெதிரில் சீடர்கள் ஒரு பூனையைப்பிடித்துக்கொணர்ந்து நிறுத்தவே, அச்சாது, இப்பூனை யெதற்காக வென்றுகூவினர். அதற்குச் சீடர்கள் இம்மடத்தில் பூனையை முதலில் தம்பத்தில் பிணிக்காமல் யோகஞ் செய்யப்படாது. அப்படிச் செய்யும் யோகத்துக்குப் பலனுமில்லை. அந்த யோகிக்குப் பெருமையுங் கிடையாது என்றார்கள்.

வி. சுப்பிரமணியம், பீ. ஏ.

நமது சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத்தொகை அனுப்பும்போதும் தமது விலாசத்துக்கெதிரே யிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும்.

மானேஜர்.

உபநிஷத் ரத்தினமாலை

THE SUMMARY OF THE MINOR UPANISHADS

33 அக்ஷ்யுபநிஷத் (72)

ஸப்தபூமிகா வித்தையினால் அறியத் தகுந்ததும், ஆனந்தமாயிருப்பதும், விதேஹ முக்தியைத் தரக் கூடியதுமான, ஸ்ரீராமச்சந்திர பதத்தை வணங்குகிறேன்.

பகவானான ஸாங்கிருதி என்பவர், ஸூர்யலோகம் போய் சாக்ஷுஷ்மதி என்னும் வித்யையாய் அவரை வழிபட்டார். "ஸ்ரீ ஸூர்யாய அக்ஷிதேஜஸேநம: என்னை அஸத்திலிருந்து ஸத்துக்கும், தமஸிலிருந்து ஜ்யோதிக்கும், மிருத்யுவிலிருந்து மோக்ஷத்திற்கும் மாற்றிவிடும் என்று பலவாறாகத் துதிசெய்து அவர் வேண்டிக்கொண்டார். (இங்கு சாக்ஷுஷ்மதீ வித்யை விஸ்தாரமாக வேத மந்திரங்களால் கூறப்பட்டுள்ளது).

ஸூர்யநாராயணர் இதைக்கேட்டு ஸந்தோஷித்து "இந்த வித்யைத் தினந்தோறும்சுத்தமாய் அத்யயனம் செய்யும் ப்ராஹ்மணன் ஸகலவித பாபங்களிலிருந்தும் விடுபட்டுக் கைவல்யத்தை அடைவன். அவனுக்குக் கண்நோய் வருவதில்லை. அவன் குலத்தில் குருடரே பிறக்கமாட்டார்கள். இந்த வித்யை 8 - ப்ராஹ்மணர்களுக்கு உபதேசித்த பின்புதான் ஸித்தியாகும். இவ்வாறுணர்பவன் மஹானாவான்" என்று அநுக்ரஹித்தார்.

பிறகு ஸாங்கிருதி ப்ரஹ்மவித்யை தமக்கு உபதேசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கு ஸூர்யன் பதில் கூறலுற்றார்.

'ஹே! ஸாங்கிருதே! நான் சொல்வது துர்லபமான ஞானம்; இது வந்துவிட்டால் ஜீவன்முக்தி கைகூடிவிடும். அப்பொழுது ஸர்வம், ஏகம், அஜம், அனந்தம், த்ருவம், ஆகிய ரூபத்துடனுள்ள சித்ரூபத்தைப் பார்த்துக்கொண்டே சாந்தமாய் ஸுகிக்கலாம்.

'அறியக்கூடிய தனிப்பொருள் உண்டென்றஅறிவு இல்லாமலிருப்பதாகிய நிலையையே ஸ்வபாவமாய் மனத்தை ஒடுக்கும் யோகம் என்பார்கள். இந்த யோகத்திலிருந்துகொண்டே கடமைகளைச் செய்து தீர்க்கவேண்டும். இவ்வாறின்றிக் கர்மங்களில் புகவே கூடாது. இவ்வாறு ஒழுங்குப்படி செய்துவந்தால், மனம் வாஸனைகளைவிட்டு நீங்கும். உதாரரூபமான தொழில்களில் முயன்று ஸந்தோஷம் உண்டாக்கும், அற்ப கார்யங்களை விட்டு விலகும், ரஹஸ்யங்கள் வெளிவாரா, புண்யகர்மங்களைக் கைவிடாது, பிறர் நோகும் கார்யங்களில் முயலாது, பாபத்தைக் கண்டால் நடுங்கி விலகும், போகத்தை விரும்பாது, பிரியவார்த்தைகளே பிறக்கும், ஸத்ஸங்கத்தையே நாடும், சாஸ்திரவாஸனையுடனேயே இருக்கும், மனம் இந்நிலையை அடைந்தால்தான் முதல் யோக பூமி கைவந்ததாகும். இவனுக்குப் பூமிகாவான் என்று பெயர். மற்றவனுக்கு ஆர்யன் என்று பெயர்.

'பிறகு விசாரம் என்ற இரண்டாம் பூமி கையே. ஸதாசாரம், தாரணை, த்யானம், கர்மம் முதலியவைகளில் தேர்ந்த பெரியோர்களை யடுத்து, பதார்த்த விபாகம் கார்யாகார்ய விவேகம் பெற்று, பாம்பு சட்டையுரிப்பதுபோல, மதம், அபிமானம், மாத்ஸர்யம், லோபம், மோஹம் இவைகளை விட்டுவிடுபவனே இப்பூமியை அடைந்தோன். சாஸ்திரம் குரு இவர்களை ஸேவித்து, ஸகல ரஹஸ்யத்தையும் உணர்ந்துவிடுவான் இவன்.

'மூன்றாவது பூமிக்கு அஸம்ஸர்க்கம் என்று பெயர். ஆசை நாயகன் புஷ்பசயனத்தை ஆவலுடன் அடைவதுபோல முமுக்ஷு இந்தப் பூமியை நோக்கிவருவன். சாஸ்திர விஷயங்களில் மனம் ஊன்றி, தவம், வர்ணாச்ரமத்திற்கு அப்பாற்படல், ஆத்மவிஷய ஆசை, இவைகளில் பழகி, தேஹஸுகங்களை ஒரு பொருட்டாக மதியாது காலங்கழிப்பர் இப்பூமியை அடைந்தோர். எங்கும் ஸஞ்சாரம் செய்துகொண்டு சித்த சமத்தால் விளங்கும் அஸங்கம் என்னும் ஸுகத்தில் மூழ்கி இவர் காலங்கழிப்பர். இவை மூலமாகப் பின்னர் இவர்களுக்கு உண்மை வஸ்து தர்சனமாகும். இப்பூமியை அடைந்தவர்களுக்கு உண்மை விஷயஞானம் இல்லாமலேதான் இருக்கும். இந்தப்பூமியில் ஸாமாந்யமென்றும், சிரேஷ்டமென்றும் இரண்டு பாகுபாடுகள் உண்டு. 'நான் கர்த்தா வன்று, போக்தாவன்று, ஸுக துக்கங்கள் பூர்வஜன்மபலன்கள், அல்லது ஈச்வரச் செயல்கள், போகங்கள் அபோகங்களே! ராகங்கள் ரோகங்களே! ஸம்பத்து ஆபத்தே! ஸம்யோகம் வியோகத்திற்காகவே!' என்ற மாறாக் கருத்துடன் அனுஸ்தையோடு கடமைகளைச் செய்து வருவதே, ஸாமான்ய அஸம்ஸர்க்கம். 'நான் கர்த்தாவல்ல, ஈச்வரன் கர்த்தா' அல்லது என் ப்ராரப்தம் கர்த்தா, என்று பூர்ணநம்பிக்கையுடன் கர்மங்களை விட்டு விலகி, மௌனம் சாந்தம் இவைகளைப் பின்பற்றி நிற்பதே சிரேஷ்டமான அஸம்ஸர்க்கம்.

'ஸந்தோஷம் திருப்தி இவைகளால் நிறைந்தது முதல்பூமி. இவை மனதில் அமிருததாரைபோல நிற்கும். இவைகளால் மனதில் உள்ளத்துறவு ஏற்படும்,

உடனே அடுத்த பூமிகளுக்குப் போகவேண்டி வரும். இதனால் மனிதன் ஸங்கல்பம் ஒடுங்கி துறவுபூர்ணமாகும். இம்மூன்று பூமிகைகளுக்கும் ஜாக்ரதாவஸ்தை என்று பெயர்.

"முதல் மூன்று பூமிகள் அப்யாஸ பலத்தால் அஞ்ஞானம் நாசமடைந்த உடன் நான்காம் பூமி கைகூடிவிடும். உடனே ஸமதிருஷ்டிவரும். அத்வைதம் ஸ்திரப்பட்டு, த்வைதம் நாசமடைந்த உடன் உலகம் ஸ்வப்கம் போலத் தோன்றும். ஆதலால் இந்தப் பூமிக்கு ஸ்வப்நாவஸ்தை என்று பெயர். மனம் சரத்கால மேகம்போல வரவர ஒடுங்கிக்கொண்டே வரும்.

"ஐந்தாவது பூமியை அடைபவர்களிடம் ஸத்வம் மாத்திரம் மிகுந்து நிற்கும். இதில் மனம் முற்றிலும் ஒடுங்கிவிடுவதால் ஜகத் மாறுபாடுகளே தெரியாது. ஆதலால் இந்த அவஸ்தைக்கு ஸுஷுப்தி என்று பெயர். இந்நிலையைப் பெற்றவர்கள் சாந்திபெற்று அத்வைத மாத்திரமாகவே யிருப்பர். த்வைத ஆபாஸம் நீங்கிவிடும். ஒருவித ஸந்தோஷமும் ஞானமுமே இங்கு இருக்கும். வெளி வ்யாபாரம் ஏற்பட்டாலும் அந்தர் முகனாகவே இவன் இருப்பன். சிரமம் அடைந்து இங்கு வந்திருப்பதால் தூங்குகிறவன் போலவே யிருப்பன் இவன்.

"அடுத்தது துரியம் என்னும் ஆறும் பூமி. இங்கு வந்தவன் ஸத் ரூபனு மல்ல, அஸத் ரூபனு மல்ல, எவ்வித அஹங்காரமும் அற்றவனே. கேவலம் மனனம் குறைந்து அத்வைதத்தில் நிர்ப்பயனாக நிலைபெற்றிருப்பன் இவன். ஸந்தேஹம் சாந்தியாகி, அகங்கார க்ரந்தி வேரறுபட்டு, நல்ல பாவனைகள் குடிகொண்ட ஜீவன்முக்தன், இங்கு வந்து நிர்வாண பதம் பெற்று சித்திர தீபம்போல நிலைபெற்றிருப்பன்.

'இதிலிருந்து ஏழாம் பூமியாகிய விதேஹ முக்தி வரும். இது வாக்குக்கெட்டாத பதம். இதுவே முடிவானது. லோக, தேஹ, சாஸ்திர வாஸனைகளை முற்றும் துறந்து, ஸ்வாத்யாஸத்தைப் போக்கவேண்டும்.

'விச்வன் ப்ராஞ்ஞன் முதலியவர்களும் ஓங்கார ரூபம் விச்வன், அகாரம்; தைஜஸன், உகாரம்; ப்ராஞ்ஞன் மகாரம் ஸமாதி. காலத்திற்கு முன்பாகவே எல்லாவற்றையும் ஸ்தூல ஸூக்ஷ்மக்கிரமமாகச் சிந்தனை செய்து சிதாத்மாவில் லயமாக்க வேண்டும். நித்யசுத்த புத்த முக்தஸத் அத்வயனாகவிருந்து ஆனந்தமயனாகி 'நானே ப்ரணவாகாரமான வாஸுதேவன்' என்று பாவனை செய்ய வேண்டும்.

'உலக வஸ்துக்களெல்லாம் அடி, நடு முடிவில் துக்க ரூபமேயாக விருப்பதால் எல்லாவற்றையும் விட்டு விலகி தத்வ நிஷ்டனாகி விடு. அவித்தைக் கப்பாற்பட்டதாயும், அமலமாயும், ஸர்வ ஆபாஸமற்றதாயும், ஆனந்தமாயும், அமலமாயும், சுத்தமாயும், மனோவாக்குக்களுக்கு எட்டாததாயும், பிரஞ்ஞான கனமாயும், உள்ளப்பிரஹ்மமே நான்' என்று பாவனையில் இடைவிடாது பழகவேண்டும்.

உயர்பதம்

HIGH POSITION

यथाचतुर्भिः कनकम् परीक्ष्यते
तुलार्पण च्छेदन तापताडनैः ।
तथाचतुर्भिः पुरुषः परीक्ष्यते
कुलेन शीलेनच विद्ययागुणैः ॥

உயர்பதம் முன்வினைப் பயனா லொளிரும்
ஆதிப் பரம னவன்போல் வினையும்
நித்திய மாகி நீங்கா நிலையதாம்
பிறவிக டோறும் பிரியா திருக்கும்
பரமன் முன்பே பலிக்கும் பிறவிகள்
முந்திய பிறவியில் மூதறி வுள்ளோர்
சேர்க்கையாற் சேரும் நற்குணந் தானும்
கல்வியு மவ்விதங் கலக்குந் தொடர்ந்தே
கல்வியுங் குணமுங் கலத்த லரிதாம்
கல்வி கிடைத்தும் பிழைப்புக் கடினமாம்
குணந்தான் மிகினும் வறுமை குடிகொளும்
இரண்டு மிருப்பினுஞ் சுகவாழ் விலதாம்
குணமது கூடப் பிறப்ப தொன்றும்
ஒழுக்கந் தினமு மொழுகு நன்னடை
நற்குல மதனையும் முன்வினை நல்கும்
குணமுங் குலத்தாற் கூடுதல் முறையாம்
குணமு மொழுக்கமுங் கூடிய கூட்டம்
கல்விக் கழகாங் காசினி யெங்கும்
மூன்று மமைந்தோர் முழுநிலத் தேவர்
பதவியுஞ் சேரிற் பலன்பெறும் நான்கும்
நான்காற்சிறந்தோர் நரைக் காப்போர்
இவரா லுதிக்கும் மாந்தர் சுகந்தான்
உலகிற் பொன்போ லொளிர்வார் இவர்தாம்
தரமாம் பொன்னின் தன்மையை மாந்தர்
நான்கு விதத்தா லறிந்தே நவில்வர்
ஒன்று நிறையால் இரண்டது தீயால்
அடித்துப் பார்ப்பதால் மூன்றது மாகும்
சாய்த்து வெட்டலாற் சார்ந்திடும் நான்கே
உத்தமர் தன்மையை யோதுவ ரிவ்விதம்
குலத்தாற் சீலந் தன்னாற் கோதிலா
வித்தையாற் குணத்தால் வேண்டுவர் நான்கையும்
மூர்த்தி தலங்கள் தீர்த்தம் மூன்றும்
சிறந்த நாடுஞ் சிறப்புறு மிவரால்
உலகு சுகிக்க வுழைக்கு முத்தமர்

HIS HIGHNESS THE MAHARAJAH OF PUDUKOTAH

ஹிஸ் ஹைனஸ் புதுக்கோட்டை மஹாராஜா அவர்கள்

நித்திய சீவர்கள் நெடுநீர் வைப்பில்
பஞ்சமா பூதப் பண்டமாங் காயம்
அழியினு முத்தம ரழியா ரென்றும்
இவர்தம் பெருமை யுலகி ரென்சொல்வேன்
ப்ரமன் சத்துவம் பதிந்த நற்பொருள்
இரவும் பகலு மொளிரு நன்மணி
அவரவர் குறைவை யகற்று மோர்தரு
கருணை பொழியுங் கனமாக் கொண்டல்
பிரமன் படைப்பிற் பெருமணி நாயகம்
கைத்தொழில் வர்த்தகம் கல்விவே ளாண்மை
நான்கையுங் காக்கும் நற்குண தீரர்
ஊதியம் நாட்டினி லோங்கச் செய்பவர்
தென்றமி ழாரிய மரசர் செம்மொழி
மூன்றையு மொருகணைப் பார்க்கும் முதல்வர்
மங்கையர் கல்வியை மண்மேற் காக்கச்
சாதி குலத்தின் சார்பைக் கைவிடார்
பாரிற் கிடைத்தது பரம னருளே.

மூதுரை—மேற்கோள்

நீரளவே யாகுமா நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.

தி. வெங்கடராம ஐயங்கார்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள ஸம்பந்தம்.—இரும்புக்கும் காந்தத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் போன்றது கடவுளுக்கும் மனிதனுக்கு முள்ள ஸம்பந்தம். அப்படியாயின் கடவுள் ஏன் மனிதனைக் கவர்வதில்லை? சேற்றில் அழுந்திக் கிடக்கும் இரும்பு, காந்தத்தின் கவர்ச்சியால் இழுக்கப்படாதது போல், மாயையில் அழுந்தி யுழலும் ஆத்மாவும் பகவானுடைய கவர்ச்சியை யுணர்கின்றானில்லை. ஆனால் மண்ணானது நீரால் கழுவப்பெற்றுக் கழிந்த காலையில் இரும்பு தாராளமாய் அசைவதுபோல், ஜீவாத்மாவும் தன்னை உலகத்தில் இழுத்துக் கட்டும் மாயையாகிய சேற்றை பிரார்த்தனை, பச்சாத்தாபம் முதலியவற்றால் ஸந்ததம் உண்டாகும் அன்பு நீரால் கழுவுங் காலையில், விரைவில் பகவானால் ப்ரேமபாசங்கொண்டு இழுக்கப் படுகிறான்.

—உபதேசரத்னமாலை.

ஆரிய ஸங்கீதமுறை

ARYAN MUSIC

ராகம் அப்பியஸிக்கவேண்டிய முறை

இனி நாம் ராகம் பாட எப்படிக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும், சரியான ராகஞானம் உண்டாகும் விதம் எப்படி என்பதையும் அறியவேண்டும். ஏற்கனவே நாம் பாட்டுக்கள் தான் முதலில் ஏற்பட்டன வென்றும், பிறகு வெகுகாலம் சென்றபின் ராகம் என்பது பாடப்படும் வழக்கத்தில் வந்ததென்றும் சொல்லியிருக்கிறோமல்லவா? அதிலேயே ராகம் என்னும் பாட்டுக்கு ஆதாரபூதமான விஷயம் அறியவேண்டுமென்றால், பாட்டுக்களாகிய ஆதேயத்தை முதலில் அறிந்துகொண்டு பிறகு அதிலிருந்து ராகமாகிய ஆதாரத்தை அறியவேண்டியதாகிறது. உதாரணமாக, ஒருவன் ஆநந்தபைரவி என்னும் ராகத்தின் ஸ்வரூபம் அறியவேண்டுமென்றால் ஸோபத்யம் பாடும் பெண்களிடம் காதால் கேட்டு உணர்ந்து, பிறகு வேறு தினுசுப்பாட்டுக்களையும் காதால் கேட்டு, பத்யம் பாடும்ராகத்துக்கும் வேறுபாட்டுக்களின் ராகத்துக்கும் பேதம் இருப்பதைக் கண்டறிந்து, பிறகு பத்யம் பாடும் ராகம் ஆநந்தபைரவி என்று கற்றுக்கொள்ளவேண்டும். ஒரு குழந்தைக்குக் கன்றுக்குட்டி என்கிற ஞானத்தை ஏற்படுத்தவேண்டுமென்றால் நாலைந்து கன்றுக்குட்டிகளைக் காண்பித்து, கன்று அல்லாத வேறு சில வஸ்துக்களையும் காண்பித்து அவைகளிலிருந்து கன்று என்னும் ஞானத்தை (தர்க்க சாஸ்திரப்படி உபமானத்தைக்கொண்டும் வியதிரேகத்தைக்கொண்டும்) ஏற்படுத்துவதுபோலவே ஒரு ராகத்தைக் கற்றுக்கொடுக்க அந்த ராகத்தில் முதல்தரமாக ராகபாவத்தை நன்றாய் அடக்கியுள்ள ஸாஹித்தியத்தைப் பாடிக் காண்பித்து அதிலிருந்துதான் ராக ஞானத்தை ஏற்பித்த வேண்டும். "லக்ஷியத்திலிருந்தே லக்ஷணத்தைக் காண வேண்டும்." பாட்டுக்களைக் கேட்டே ராகத்தின் ஸ்வரூபத்தைப் பார்த்தறியவேண்டும்.

சாதாரணமாய்க்கூட, ராகம் அறியவேண்டுமென்றால் தமிழ்த் தேசத்தில் உள்ளவர்கள் அவர்கள் காதில் விழும் "அருணாசலக் கவி ராம நாடகம்" என்னும் நூலிலிருந்து ஒரு பதத்தைப் பாடச்சொல்லி அதிலிருந்து அந்தப் பதம் எந்த ராகமோ அந்த ராகத்தை அறிந்துகொள்ளும் வழக்கத்தை யாரும் பார்க்கலாம்.

என்றாலும், பாட்டுக்களைமட்டும்கேட்டு அதிலிருந்து உண்டாகிற ராகபாவ ஞானம் அந்த ராகத்தைப்பற்றிய

ஸ்தூல ஞானம்தான். அதாவது, இந்த ஞானம் இதைச் சம்பாதித்துக் கொண்டவருக்குத் தானே ராகங்களைப் பாடும் சக்தியைத் தராது. அந்த ராகத்தைப்பற்றிய பூரண ஞானத்தையும் தராது. அதாவது அந்த ராகத்தைப் பாடுவதில் பிசகுகள் ஏற்படும் பக்ஷத்தில் அதைக் கண்டுபிடிக்கும் சக்தியைத் தராது. ஒரு வித்வான் சுகம் தராமலே பாடிக்கொண்டிருக்கும் பக்ஷத்தில் அதில் இன்ன விஷயம் குறைவு; அதனால் ரஸபங்கம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. எப்படி ஒரு குழந்தைக்கு ஒரு பாஷையில் பேசமட்டும் கற்றுக் கொடுத்துவிட்டால் அது வியவகாரம் முதலியவை செய்யப் போதுமானதாயிருந்தபோதிலும், பேச்சுக்கு அந்தக் குழந்தைக்கு அந்தப்பாஷை தெரியும் என்று சொல்லிக்கொண்டாலும், அந்தப் பாஷையில் பூர்ண ஞானம் வந்துவிட்டது என்று சொல்வதற் கிடமில்லையோ:— அதாவது அந்தப் பாஷையின் அக்ஷரங்களை அறிந்துகொண்டு பேசும் வார்த்தைகள் இன்னதுதான்; இவ்விதமாக ஆனவை; என்று அறிகிறவரையில், அந்தக் குழந்தைக்குத் தெளிவான பாஷாஞானம் ஏற்பட்டுவிட்டது; அந்தப் பாஷையைப் பிறருக்குத் தெளிவாகவும் எளிதாகவும் கற்பிக்கக்கூடும் என்னும்படியான சக்தி ஏற்படாதோ அதுபோலவே வார்த்தை சொல்வதாகிய (அதாவது வார்த்தை சொல்வதைக் கேட்டறிவதாகிய) ராகங்களைப்பற்றிய ஸ்தூலஞானம் ஏற்பட்டவுடன் அது பூரணஞானம் அல்லவென்றும் நாம் அந்த ராகத்தினுடைய ஸ்வரூபத்தை ஒருவாறு அறிந்துகொண்டதாகவும் நினைக்கலாமே யொழிய அந்த ராகத்தைப் பாடிக் காண்பிக்கவாவது சொல்லிக்கொடுக்கவாவது முடியாதகாரியம் என்றும் நாம் அறிந்துகொள்ளுகிறோமல்லவா? [இப்படியிருக்க நம்மவர்களில் வெகு பேர்கள் தாங்கள் நல்ல ஸ்திதியில் இருப்பதினாலோ அல்லது மற்றெந்தக் காரணத்தாலோ இங்கிலீஷ் பாஷை தப்பும் தவறுமாய்ப் பேசக்கூடிய ஒரு பட்லர் இங்கிலீஷில் நன்றாய்ப் பிரஸங்கம் செய்யப்படும் காலத்தில் அதைப்பற்றிக் குணதோஷம் சொல்ல ஆரம்பித்தாலெப்படியோ, அதுபோல, மேலே சொன்னமாதிரியான ராகத்தைப்பற்றிய ஸ்தூல ஞானத்தையே ஸங்கீத பூரண ஞானம் என்னும் பிரமைகொண்டு ஸங்கீத வித்துவான்களது பாட்டைக்குறித்து ஏற்றம் குறைவு சொல்வது வழக்கமாயிருக்கிறது என்று நாம் காணலாம்.]

மேலே சொன்னதைக்கொண்டு நாம் முக்கியமாய் அறியவேண்டியது என்னவென்றால், அந்த உபமானத்துக் கொத்தபடி, நாம் ராகத்தின் ஸ்தூலபாவம் என்னும் "பேசும் பேச்சு" என்பதை யறிந்தவுடன் அது பூரண ஞானம் அல்லவென்று அறிவதுடன், அந்தப் "பேசும் பேச்சு" எந்த வார்த்தைகளால் ஆனதென்பது நாம் அடுத்ததாய் அறிந்துகொள்ள வேண்டிய விஷயமாகும். அதாவது, அந்த ராகத்தின் அமைப்பில் உள்ள சின்ன சின்ன பாகங்கள் (Phrases) அந்த வார்த்தைகளுக்குச் சமானமாகும். நாம் அடுத்ததாய் அதை அறிந்துகொண்டு விடவேண்டும். அந்தச் சிறு பாகங்களை அகாரமாய் உச்சரித்து வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு வார்த்தைகள் லிபிகளால் ஆனவை என்பதுபோல் அச்சிறுபாகங்கள் (Phrases) சில ஸ்வரங்களால் ஆனவை. ஆகவே, அந்த ஸ்வரங்கள் அந்த ராகத்தின் லிபிகளாம். எப்படிச் சில லிபிகள்தான் சேர்ந்து ஒரு வாக்கியமாகிறதோ, அப்படியே சிலசில ஸ்வரங்கள் மட்டுமே சேர்ந்துதான் ஒரு ராகமாகிறது. ஸங்கீத சாஸ்திரத்தின் லிபிகள் பதினாறும். இந்தப் பதினாறும் ஸ்வரங்கள் என்று வழக்கத்தில் உள்ளவைகளே.

நாம் முதல் முதல் ராகத்தின் சின்னபாகங்கள்(Musical Phrases)எந்த ஸ்வரங்களானதோ அதைக் கற்றுக்கொண்டு அதிலிருந்து ஸ்வரபேத ஞானத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த ஸ்வரபேத ஞானம் உண்டாகும்போதே ஸ்வரங்களை எழுதவும் தனியாய் உச்சரிக்கவும் பழகிக்கொண்டு விடவேண்டும். இப்படி உண்டாகும் ஸ்வர ஞானம்தான் சரியான ஸ்வர ஞானம் என்று நாம் சொல்ல வேண்டும்.

ஆனால் நம்மவர்களில் ஸ்வர ஞானம் ஏற்படுத்திக் கொள்ளும் மாதிரி மேல் சொன்ன முறைப்படியல்ல. மாணாக்கர்களும் சரி, பாடகர்களும் சரி எல்லாரும் அப்படி ஸ்வரஞானம் செய்துகொள்ளாமல், ஸரளியையும், (ஒவ்வொரு ராகத்தின் ஆரோஹ அவரோஹம்) ஜண்டை வரிசைகளையும் அப்பியஸித்துக்கொண்டு அந்தந்த ராகங்களுக்குத் தகுந்தவாறு ஸ்வரஞானம் செய்துகொள்வது வழக்கத்திலிருக்கிறது. இப்படி ஏற்படுத்திக்கொள்ளுகிற ஞானம் கீர்த்தனங்களில் உள்ளடங்கிய ராகத்துக்குச் சம்பந்தமில்லாமல் இருப்பதால், நாம் இந்த ஸ்வரஞானத்தைக்கொண்டு பாடும் காலத்தில், எந்த ராகத்தைப் பாடினாலும் அந்த ராகத்தின் சரியான ஸ்வரூபம் வராமல் சுகம் தராமல் இருக்கிறது. ஒருவர் பாடும் பாட்டு காதில் ஏறி, இன்னொருவர் பாட்டுச் சுகம் தராமல் இருப்பதற்கு மூல காரணம் இந்தமாதிரி ஸ்வரம் பாடுவதேயாம். சில

பாடகர் பாடும் காலத்தில் ஏகமாகச் சத்தங்களைப் போட்டுக்கொண்டு கேட்பவர் மனதில் சண்டைபோடுகிற அவசரமாய் ஸ்வரங்களை உச்சரித்துக்கொண்டு மேலே சொல்லியவாறு ஏற்படுத்திக்கொண்ட ஸ்வர ஞானத்தின் உபயோகத்தால் பாடிக்கொண்டிருப்பதனால், அவர்கள் சுகமாய் பாடத் தெரியாதவர்கள் என்கிற அபிப்பிராயம் கேட்பவர் மனதில் ஏற்படுத்துவதுடன், இதும்மாதிரிதான் நமது முன்னோர்களாகிய ஆரியர்கள் அனுபவித்த ஸங்கீதம் இருந்திருக்கும் என்றும், அவர்கள் ஸ்வரம் பாடியதும் இப்படித்தான் முரட்டுத்தனமாய் இருக்கும் என்றும், ஸங்கீதத்தில் வித்வத்து ஏற ஏற அது சுகம் தராமல் பாடக் கற்றுக்கொள்வதுதான் என்கிற நமது ஸங்கீதத்தைப்பற்றிய ஒரு அபாண்டமான அபவாதத்தை ஏற்படுத்தி விட்டார்கள் என்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. [காலம் சென்ற ஸ்ரீ மஹா வைத்தியநாத அய்யர் அவர்கள், ஸ்வரம் பாடுவதைக் கேட்டிருப்பவரும், அவரது சிஷ்யர்கள் இப்போது ஸ்வரம் பாடுவதைக் கேட்டிருப்பவரும் ஸ்வரம் பாடுவது குருமுகமாய் அப்பியசித்து வரவேண்டுமே யொழிய தனக்குத்தானாகவே வரும் விஷயமல்லவென்று எளிதில் அறிந்துகொள்ளலாம்.]

நமது சாஸ்திர ரீதியான ஸங்கீதம் என்று சொல்வது என்னவென்றால் எந்த ஸங்கீதம் சுகம் தரவில்லையோ அது சாஸ்திரத்துக்கொத்த ஸங்கீதம் அல்ல என்பதும்; சாஸ்திர ரீதியான ஸங்கீதம் கலட்பில்லாது சுகம் தரும் ஸங்கீதம் என்பதுமாம்.

எப்படி நமது காலத்தில் எந்த வித்தையும் சரியான முறைப்படியும், மாணாக்கர் எளிதில் அந்த வித்தையின் நுட்பங்களை அறியும்படிக்கும் கற்பிக்கப்படுகிறதில்லையோ, அதுபோலவே ஸங்கீதமும் சரியான முறைப்படி பொதுவாய்க் கற்பிக்கப்படுகிறதில்லை. என்றாலும் சிலதீக்ஷ்ணமான புத்தியுள்ளவர்கள் உபாத்தியாயர் பலம் இல்லாமல்கூட அவரது பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரத்தால் ஸங்கீதத்தின் தத்துவத்தை அறிந்துவிடுகிறார்கள். அவர்களே, நாம் மஹான்களென்று சொல்லும் ஸ்ரீதியாகய்யர், மஹா வைத்தியநாத அய்யர் முதலானவர்களாம்.

மேலே சொல்லிய முறைப்படி ஸ்வரஞானம் பயிற்சி செய்து கொண்டவர்க்குப் பாடும் பழக்கம் நல்ல வழியில் செல்லுமே யொழிய கெட்ட வழியில் ஒரு போதும் போகாதென்பது நிச்சயம்.

பி. எஸ். சுந்தரம் ஐய்யர், பி. ஏ., எல்.டி.

மனிதன்—அவனது யாத்ரை

MAN AND HIS LIFE JOURNEY

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு யாத்ரை செய்யும் ஒருவன், ஏதோ ஓர் விஷயத்தைத் தன் கருத்தில் வைத்தே அந்தயாத்திரையைத் தொடங்குவானே யொழிய, ஒரு காரணமுமின்றி யாத்ரை தொடங்கவே மாட்டான். அக்காரணமும், தனக்கு நயம் பயக்குவதாக இருக்குமே யல்லது நஷ்டம் விளைவிக்கத் தக்கதாயிராது. இதுபோல், நாம் நமது வாழ்நாள் யாத்ரையை நடத்தி வருவதும் முடிவில் ஓர் பிரயோஜனத்தைக் கருதியே யல்லது, நிஷ்பிரயோஜனமாவதற்கல்ல. தேசாந்தர யாத்ரை செய்யத்தொடங்குவோன் வழியில் தனக்கு வேண்டிய ஆகாராதிகளும் ஆயுதவகைகளும் ஆடைமுதலியனவும் மற்றும் தட்டுமுட்டு சாமான்களும் குறைவின்றிச் சேகரித்துக்கொண்டு,யாத்ரை போகத்தக்க ஸுலபமான மார்க்கங்களையும் விசாரித்துத் தெளிந்து ஸகல ஸாதனங்களுடனே புறப்பட்டுப் போய்த் தான் நினைத்த காரியத்தைத் திருப்தியாய் முடித்துக்கொண்டு (தனது லக்ஷ்யத்தைப் பூர்த்திசெய்து) திரும்புகின்றான். இதுபோலவே நாமும் நம்முடைய வாழ்நாள் யாத்ரையை ஆரம்பிக்கும்போதே நமது அபேக்ஷையைஸித்திசெய்துகொள்வதற்கு அநுகூலமான சகல சாதனங்களையும் சேகரித்துக்கொண்டு ஆயத்தப்படவேண்டிய தவசியமல்லவா? நமது அந்தியத்தின் கருத்து என்னவென்றும், அதை முடிக்கப்போகும் பிரயாணத்திற்காக எவ்வகைச் சாமான்களைச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், எவ்விதமாய் நாம் பிரயாணம் செய்யவேண்டுமென்றும் கவனிப்போம்.

நாம் கண்காணாத இராஜ்யத்திலிருந்து புறப்பட்டு இப்பூலோகத்திலுதித்து மறு உலகத்திற்குப் போய் (அதாவது) ஸுகம் துக்கம் என்னும் இரண்டு ஸ்தானங்களுள் ஒன்றை யடைவதற்கு இப்பூலோகத்திலேயே வாழ்நாள் யாத்ரை செய்கின்றோம். இனி நாம் ஸதா வாஸம் செய்யக்கூடிய ஸுகம் துக்கம் என்னும் இரண்டு ஸ்தானங்களுள் ஏதேனும் ஒன்றை அடைவதற்கு ஸன்மார்க்கம் துர்மார்க்கம் என்ற இரண்டு வழிகள் முறையே கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவ்வாழ்நாள் யாத்ரையை, ஸன்மார்க்கத்தில் சென்று முடித்தவர்கள் ஸுகம் என்னும் ஸ்தலத்திற்கும் துர்மாக்கத்திற் சென்றுமுடித்தவர்கள் துக்

கம் என்னும் ஸ்தலத்திற்கும் போய்ச்சேருகின்றார்கள். இவ்விரண்டினுள் சுகம் என்னும் ஸ்தலத்தை யடைவதற்கே நாம் யாவரும் கருதுவோமாகையால், நாம் ஸன்மார்க்கத்திலேயே நடத்தல் ஆவசியகமாகின்றது. முன் கூறியுள்ளபடி, நாம் ஒரு தேசத்திலிருந்து வேறொரு தேசத்திற்குச் செல்ல வேண்டின், முதலிலேயே ஆகாராதிகளை வித்தப்படுத்திக்கொண்டு நேரான வழியைத் தேடிப் பிடித்து உற்ற துணைவனுடனும் சரீர பாதுகாப்பிற்கு இன்றியமையாத ஆயுதங்களுடனும் புறப்பட வேண்டுமெல்லவா? இவ்வளவு ஜாக்ரதையுடனே புறப்பட்டால்தான், நாம் கோரிய ஸ்தலத்திற்கு ஸுலபமாகவும் யாதோ ரிடையூறின்றியும் ஸௌக்கியமாகப் போகலாம் என்பது யாவருமறிந்த விஷயமே. அதுபோல், நமது வாணாள் யாத்ரைக்கு நாம் வித்தப்படுத்திக்கொள்ள வேண்டிய கருவிகள் எவையெனில் கல்வி, ஸன்மார்க்கம், பக்தி, ஆகிய இவைகளே. எனவே இவ்யாத்திரையில் கல்வியே ஆகாரவகைகள். கடவுளை அன்போடு வழிபடுவதே, பக்தி என்னும் துணைவன். நம்முடைய நன்னடத்தைகளே ஆயுதங்கள். பரோபகாரமே ஸன்மார்க்கம், ஆகையால் கல்வியைக் குற்றமறக்கற்று நன்மை, தீமை, இவை இவையென்றுணர்ந்து தீமையை நீக்கி, நன்மையான காரியங்களையே கையிருப்பாக (ஆகாரத்திற்குச் சமானமாய்) வைத்துக்கொள்ளவேண்டும். ஸகல மார்க்கங்களிலும் நேர்மையானதும் உண்மையானதுமான மார்க்கம் ஸன்மார்க்கமே. ஆகையால் அம்மார்க்கத்தை நோக்கிச் செல்லவேண்டும். கடவுளின்மீது அன்பை நாளுக்கு நாள் விருத்திசெய்து நிஜபக்தி, என்பதைத் துணைக் கருவியாகக் கைக்கொள்ளவேண்டும். நன்னடத்தையென்னும் ஆயுதத்தால் துர்நடத்தையென்னும் கள்ளர் வேடர் துஷ்டமிருகங்கள் இவற்றை நாசஞ்செய்யவேண்டும். அதாவது ஸத்கிருத்யங்களை ஸதா அனுஷ்டித்து வரவேண்டுமே யொழிய, துஷ்கிருத்யங்களை ஸ்வப்நத்திலுங்கூட நினைக்கக்கூடாது. இவ்விதமாக உலக யாத்ரையை நடத்திவந்தால் முக்தியென்னும் ஸ்தலத்தை அடைந்து ஸதா ஆனந்திக்கலாமென்பதிற் கிஞ்சிற்றேனும் ஐயமின்று. ஆதலால் இச்சிறிய விஷயத்தை ஒவ்வொருவரும் ஆழ்ந்த கருத்துடன் சிந்தித்து அதன்படி நடந்துவர முயலவேண்டும்.

T. K. இராமபத்ர சாஸ்திரி.

கல்யாணி

KALYANI *

6-ம் அதிகாரம்

தன் பெரிய குதிரைக்கு நேரிட்ட கெடுதியைப் பார்த்துவிட்டுப் புனபதி தான் முன்னே சவாரி செய்த மட்டக்குதிரையின் மேலேயே யேறி, அது அலுத்துப் போயிருந்ததால் அதன் சவுக்யத்திற்காக அதைச்சிறு நடையாய் நடத்திக்கொண்டு சாராயக் கடையிலிருந்து புறப்பட்டுத் தன் வீட்டிற்குப் போகையில், பின்னே ஒரு குதிரை நாற்கால் பாய்ச்சலில் வருகிற சப்தங் கேட்டுத் திரும்பின பொழுது, கந்தன் வாயுவேகம் மனோவேகமாய்த் தன்னைத் துரத்திக்கொண்டு குதிரை மேல் வருவதைக்கண்டான். நொண்டியாய்ப் போன குதிரைக்கு மருந்துபோட ஏற்பாடு செய்துவிட்டு வர வேண்டியதாயிருந்ததாலுண்டாகிய காலதாமதத்தைத் தன் விரைவினால் நீக்கிக்கொண்டு கந்தன் வந்து மாதவனை நோக்கி " ஓய்! ஐயா! தன் மானத்தைக் காப்பாற்றத் தன்னுயிரைவிட நினையாத ஆள் சேகரிக்கிற முருகன் அல்ல நான். நான் கந்தப் பிரபு. பேச்சினாலாவது, செய்கையாலாவது, சாடை கைக்கினையாலாவது என்னை எவனாவது அவமதித்தால், அவன் அதற்குப் பதில் சொல்லவேண்டும்" என்றான்.

அதைக்கேட்டு மாதவன் அதிக அமைதியுடன் உபேக்ஷையாய் " கந்தப் பிரபுவே! எல்லாம் சரிதான். உம்மோடு எனக்குச் சண்டை யொன்றுமில்லை. சண்டை போடப் பிரியமுமில்லை. நம்முடைய வீடுகளுக்குத் திரும்பிப் போகும் பாதைகளும், நம்முடைய வாணாட்களில் சஞ்சரிக்க வேண்டிய மார்க்கங்களும் வெவ்வேறு திக்குகளிலிருக்கின்றன. ஒருவரை யொருவர் குறுக்கிடவேண்டிய அவசியமே இல்லை" என்றான்.

கந்தன் உத்தண்டமாய் " இல்லைபா! ஆ தெய்வமே! ஆனாலும் இருக்கவே செய்கிறதென்று நான் சொல்லுகிறேன். எங்களைத் தந்திரோபாயஞ் செய்கிற நாட்டோடிகளென்று சொன்னீரல்லவா" என்றான்.

" கந்தப்பிரபுவே! நன்றாய் ஞாபகப்படுத்திப்பாரும். உம்முடனிருந்தவனை நான் அப்படிச் சொன்னேன். அவன் அதில் எள்ளளவும் மேற்பட்டவனில்லையென்று உமக்கும் தெரியுமே" என்றான்.

" அதனாலென்ன? அவன் என் தோழன். அவன் என்னோடிருக்கையில் சரியாயோ தப்பாயோ ஒருவனும் அவனை அவமதிக்கக் கூடாது" என்றான்.

* An adaptation of Scott's Bride of Lammermoore.

" கந்தப்பிரபுவே! சரி. அப்படியானால் உம்முடைய தோழர்களை நீர் நன்றாய்த் தெரிந்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களைக் காப்பாற்ற நீர் செய்ய வேண்டிய வேலை அதிகமிருக்கும். ஐயா! வீட்டுக்குப் போய் நன்றாய்த் தூங்கிக் கோபந்தணிந்து நல்ல புத்தியோடு நாளை வாரும்" என்று மாதவன் முன்போலவே சாந்தமாகச் சொன்னான்.

" புனபதி! அப்படியல்ல. என்னை நீர் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. கர்வமான கோலத்தாலும் புத்தியுள்ள பழமொழிகளாலும் பயனில்லை மேலும் நீர் என்னை வீண் உருட்டாக்காரன் என்றீர். நாம் பிரிவதற்குமுன், அதற்கு நீர் பரிகாரஞ் சொல்ல வேண்டும்" என்றான்.

" நான் சரியல்ல என்பதற்கு நீர் இப்பொழுது சொல்வதிலும் மேலான காரணம் காட்டினாலொழிய நான் பின் வலிக்கமாட்டேன்" என்றான் மாதவன்.

" அப்படியானால், நற்குணமுடைய உம்மை நான் அப்படிக்கேட்பதற்காக விசனப்பட்டாலும், நீர் செய்த அவமரியாதையை நியாயமென்று தெரிவிக்கவாவது அல்லது சொன்ன சொல்லைப் பின் வலிக்கவாவது அல்லது சந்திக்க வேறே இடம், சொன்னாலாவது தவிர இவ்விடத்திலேயே அதற்குப் பரிகாரம் செய்ய உடன்பட வேண்டும்" என்றான் கந்தன்.

" அதொன்றும் அவசியமில்லை. உம்முடன் சண்டை போடாமலிருக்க எனக்குப் பிரியம். உமக்கு உண்மையில் சண்டை போடப் பிரியமானால் மற்றெந்த இடத்தைப்போல இந்த இடமும் உதவும்" என்றான்.

கந்தப்பிரபு தான் குதிரையை விட்டிறங்கி " அப்படியானால் இறங்கும். சண்டைக்கு ஆயத்தஞ் செய்யும். நீர் எப்பொழுதும் சரியானவரென்பதே என்னபிப்பிராயம். அப்படி யல்லவென்று வெளியில் சொல்ல வேண்டியதாயிருந்தால் எனக்கு அதிக மனவருத்தமாயிருக்கும்" என்றான் கந்தன்.

மாதவனிறங்கித் தன்னைக் காத்துக்கொள்ளுகிற நிலையில் நின்றுகொண்டு " உமக்கப்படிப்பட்ட சமயம் நேரிடவேண்டாம்" என்றான்.

இருவரும் கத்திகளை யுருவிச் சண்டை துடங்கினார்கள். கந்தன் அதிகச் சௌகரியத்தோடு கத்திச்சண்டை போடுகிறவனாயிருந்தாலும் வீராவேஷத்துடனிருந்ததால் தடுமாறிப்போய் மிகுந்த ஆத்திரத்துடன் சண்டைக்காரம்பித்தான். அதிக அமைதியுடனிருந்த புனபதி தன்னைக் காப்பாற்றிக்கொண்டே தனது எதிரியின் ஆத்திரத்தால் தனக்குண்டாகிய இரண்டொரு அனுகூல சமயங்களை உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை. கடைசியாய் கந்தன் அதிகப் படபடப்பாய் மேலே விழுந்து பிடிக்க முயன்றதில் கீழே புல்தரையில் கால் வழுக்கி விழுந்தான். மாதவன் " ஐயா! உம்முடைய உயிரை உமக்குத் தந்தேன். கூடுமானால் அதைச் சீர்திருத்திக்கொள்ளும்" என்றான்.

" தப்பு வேலையாகப் போயிற்று" என்று சொல்லிக்கொண்டு மெல்ல எழுந்து தன் கத்தியைத் தேடி எடுத்து மற்போரிலுண்டான முடிவால் மனம் புழுங்காமல் கந்தன் " என்னுயிரைத் தந்ததற்காக வந்தனம். இதோ என் கையைக் கொடுக்கிறேன். என் அபஜெயத்திற்காவது உமது கத்திச்சண்டைச் சாமர்த்தியத்திற்காவது உம்மிடத்தில் எனக்குப் பொறாமையில்லை" என்றான்.

ஒரு நிமிஷநேரம் இமையாடாமல் அவனைப்பார்த்துவிட்டுத் தன் கையை மாதவன் நீட்டி " கந்தப்பிரபுவே! நீர் உதாரன். உம் விஷயத்தில் நான் அபராதப்பட்டேன். உமக்கு அப்பிரியமுண்டாக்கிய வார்த்தையை உபயோகித்ததற்கு என்னை மன்னிக்கும்படி உண்மையில் உம்மைப் பிரார்த்திக்கிறேன். அவசரப்பட்டு யோசியாமல் சொல்லிவிட்டேன். அதை உம் விஷயத்தில் உபயோகித்தது தப்பென்று எனக்கிப்பொழுது நன்றாய்த் தெரிந்தது" என்றான்.

" புனபதி! நிச்சயந்தானா? இது நானும்மிடத்தில் எதிர்பார்த்ததற்கதிகம். ஏனெனில், உம் அபிப்பிராயங்களையும் வார்த்தைகளையும் நீர் பின் வலிக்கிற வழக்கமில்லையென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்" என்று கந்தன் தன் சுபாவமான களிப்புடனும் செருக்குடனும் சொன்னான்.

" நன்றாக யோசித்துச் செய்துவிட்டால் அப்படித்தான்" என்றான்.

" அப்படியானால் என்னிலும் நீர் அதிக ஞானமுள்ளவர். நான் முதலில் சண்டைபோட்டு விடுகிறது, பிறகு யோசிக்கிறது. ஒருவன் தோற்றால் சங்கதி முடிந்துவிடுகிறது. இல்லாவிட்டால் சண்டைக்குப் பின்பு சமாதானந்தானே. அந்தப் பையன் ஏதோ சப்தம் போடுகிறானே. அவனுக்கென்ன வேண்டும். சற்றுமுன் வந்திருக்கக் கூடாதா. என்றாலும் எப்பொழுதாவது அது முடியத்தானே வேண்டும். இப்படி முடிந்தது ஒருவேளை நன்மைதான்" என்றான்.

அவன் பேசிக்கொண்டிருக்கையிலேயே அவன் குறித்த பையன் ஒரு கழுதைமேலேறி அதைத் தடியாலடித்து வேகமாயோட்டிக்கொண்டு "கனவான்களே! ஓடித் தப்பிக்கொள்ளுங்கள். தன் வீட்டில் ஆட்கள் வந்து முருகனைப் பிடித்துக்கொண்ட தாயும் கந்தப்பிரபுவைத் தேடுகிறதாயும் கிழவி சொல்லச் சொன்னாள். நீங்கள் குதிரைகளிலேறி ஓடுங்கள்" என்று கூச்சல் போட்டுக்கொண்டே வந்தான்.

"அது நிச்சயந்தானா. இந்தச் சங்கதி எனக்குச் சொன்னதற்காக இந்தா வெகுமதி. நான் ஓடித்தப்பக் கூடிய இடஞ்சொல்லுகிறவர்களுக்கு அதற்கு இரட்டி கொடுப்பேன்" என்றான் கந்தன்.

"கந்தப்பிரபு! அது நான் செய்வேன். என்னுடன் என் அருக்கத்திற்கு ஓடிவாரும். ஆயிரம்பேர் தேடினாலும் கண்டுபிடிக்கக்கூடா அனேக ஒழிப்பிடங்கள் அதிலிருக்கின்றன" என்றான் மாதவன்.

"ஆனால் அதனால் உமக்குக் கெடுதி சம்பவிக்கும். உமக்கு முன்னமேயே சங்கடங்களிருந்தாலொழிய நான் புதிதாய் உம்மை ஆபத்துக்குள்ளாக்க வேண்டிய அவசியமில்லை" என்று கந்தன் சொன்னான்.

இம்மி கூட இல்லை. எனக்குப் பயப்படவேண்டிய தொன்றுமில்லை" என்றான்.

"அப்படியானால் உம்மோடு சந்தோஷமாக வருகிறேன். ஏனென்றால் இன்றிரவு முருகன் நம்மை இந்த இடத்திற்குக் கூட்டிச் செல்வானென்பது எனக்கு உண்மையில் தெரியாது. அவன் வகப்பட்டுக் கொண்டால்தான் தப்பிக்கொள்ள என்னைப்பற்றிய எல்லாச் சங்கதிகளையுஞ் சொல்லி உம்மைப்பற்றி இருபது பொய்யுஞ் சொல்லுவான் என்பதற்குச் சந்தேகமில்லை" என்றான் கந்தன்.

அவ்விதமே அவ்விருவரும் சாதாரண வழியை விட்டுவிட்டு வேட்டையாடுகிற பெரிய மனிதர்களுக்கு மட்டும் நன்றாய்த் தெரிந்ததும் ஜனங்கள் நடமாடாததுமான செடியும் புதருமடர்ந்த காட்டுப்பாதையில் குதிரைமேல் சென்றனர். அஸ்தமிக்கிறவரை ஒருவரோடொருவர் பேசாமல் மாதவனுடைய குதிரை எவ்வளவு வேகமாகச் செல்லக்கூடுமோ, அவ்வளவு வேகத்துடன் இருவருஞ் சென்று அஸ்தமித்த பிறகு வழியைத் தெரிந்துகொள்ளவேண்டிய கஷ்டத்தாலும், அதன்மேல் ஒருவரும் அவர்களைத் தொடர்ந்து வந்து பிடிக்கமுடியாதென்ற நிச்சயத்தாலும் குதிரைகளின் வேகத்தை அடக்கினார்கள்.

"நாமிப்பொழுது கொஞ்சம் மெதுவாகப் போவதால், உம்மிடத்தில் ஒரு சங்கதி கேட்கப் பிரியப்படுகிறேன்" என்று கந்தன் சொன்னான்.

"உம்மிஷ்டம்போல் கேளும். ஆனால் நான் சரியென்று நினைத்தாலொழிய அதற்குப் பதில் சொல்லாவிட்டால் என்னை மன்னியும்" என்றான் மாதவன்.

"சரி! இதுதான். இவ்வளவு கம்பீர சுபாவத்தோடு கூடியிருக்கிற நீர் முருகனைப்போன்ற தூர்த்தனோடும், சபலன் என்று ஜனங்கள் சொல்லுகிற என்னுடனும், ஒரு க்ஷணங்கூட சேரும்படி என்ன நேரிட்டது" என்றான் கந்தன்.

"நான் துணிந்துவிட்டதால் துணிவுள்ள கூட்டாளிகளைத் தேடிச் சேர்ந்தேன்" என்றான்.

"சீக்கிரம் எங்களைவிட்டு நீங்க என்ன நேரிட்டது" என்று கேட்டான்.

"என் எண்ணத்தை மாற்றி, தற்காலத்திற்காவது என்னருந்தொழிலை விட்டொழித்ததால், நீர் கேட்ட கேள்விக்குத் தெளிவாயும் உண்மையாயும் பதில் சொல்லிவிட்டேன். பிறப்பிலும் சுபாவத்திலும் உமக்கெவ்வளவோ தாழ்ந்த முருகனோடு உமக்கென்ன கூட்டுறவு சொல்லும்" என்றான்.

"நான் சூதாடி நிலமெல்லாம் தோற்ற முட்டாளாகையால்தான். என் பாட்டிக்கு வாலிபம் திரும்பியிருக்கிற[illegible]ன்னும் எத்தனை வயதிற்கிருப்பாளோ தெரியாது. சூதாட்டத்தில் முருகன் என் தோழன். என்னிலைமையைத் தெரிந்துகொண்டான். பேய் எ[illegible]தும் ஒருவன் பிடரியிலிருப்பதால், தன்னதிகாரப் பத்திரத்தைப்பற்றி அவன் ஐம்பது பொய் சொல்லி எனக்குத் தளகர்த்தன் வேலை வாங்கித் தருவதாய் அவன் சொன்னதை நான் கழுதை நம்பினேன். துரைத்தனத்தாரிடத்தில் இதுவரை என்னைப்பற்றி இருபது அழகான பொய்க்கதைகள் சொல்லியிருப்பான். குடி, கூத்தி, சூதாட்டம், குதிரை, நாய், கோழி இவைகளால் இந்த ஸ்திதிக்கு வந்தேன்" என்று கந்தன் சொன்னான்.

"உம் மனத்தில் பாம்புகள் வளர்ந்துகொண்டிருக்தன. அவைகளிப்பொழுது உம்மைக் கொத்திப் பிடுங்குகின்றன" என்றான் மாதவன்.

"புனபதி! அதுண்மை. ஆனால் உமது மனத்திலும் ஒரு பெரிய பாம்பு வளருகிறது. என்னிடத்தில் வளருகிற அனேக பாம்புகளிலும் அது அதிக வலியது. அவைகளெல்லாம் என்னைத் தின்பதிலும் அதிகமாக அதும்மைச் சாப்பிட்டு விடும்" என்றான் கந்தன்.

அதைக்கேட்டு மாதவன் "நான் தடையில்லாமல்

பேசியதால் நீரும் அப்படிப் பேசுகிறீர். அதை நான் தடுக்கக்கூடாது. சொல்லணியை நீக்கித் தெளிவாக என் மனத்தில் நான் வளர்க்கிற பயங்கரமான குணமென்ன சொல்லும்" என்றான்.

"ஐயா! பழி வாங்குகை. குடியும் கூத்தியும் பாவமானால் அதுவும் பாவமே. அவைகள் கூடாவென்றால் அதுவும் கூடாது. அவைகளால் சிந்தும் இரத்தத்திலும் அதனால் சிந்துவது எவ்வளவோ அதிகம். எல்லாவற்றிலும் ஒரு கிழவனைச் சுடுவதென்றால் அது எவ்வளவு பாவம்" என்று கந்தன் சொன்னான்.

"அதென்கருத்தல்ல. சத்தியமாகச் சொல்லுகிறேன். எனக்கு அவனைக் கொல்லவேண்டுமென்பதல்ல. இவ்வளவு கெடுதி செய்த கொடியவனைச் சந்தித்து அவனால் விளைந்த தீங்குகளை நேரில் அவனிடத்தில் சொல்லிக் கடிந்து நிந்தித்து அவனுயிர் நடுங்கச் செய்யவேண்டுமென்பதுவே என் எண்ணம்" என்றான்.

"அவன் உமது சங்கைப் பிடித்து நெரித்துக் கொண்டு உதவிக்காகக் கூச்சலிடுவான். அப்பொழுது நீர் அவனுயிரை வாங்கிவிடுவீர். உம்முடைய பார்வையும் பயங்கரமான வேஷமும் அவனை நடுங்கிச் சாகச் செய்யும்" என்றான்.

"எவ்வளவு கோபமூட்டியிருக்கிறு[illegible]ன்று சற்று யோசியும். அவன் வன்னெஞ்சினாற் செ[illegible] கொடுமைகளால் உண்டான நாசத்தையும் மரணத்தையும் எண்ணிப்பாரும். பரம்பரையான ஒரு பெரிய குடும்பத்தை அழித்தான். என்னன்புள்ள பிதாவைக் கொன்றான். நமது தேசத்தவரில் இவ்வளவு கெடுதிகளையும் பொறுத்துச் சும்மாவிருப்பவன் ஒரு சிநேகிதனுக்கு உதவி செய்யவாவது ஒரு எதிரியை எதிர்க்கவாவது அருகனல்லவென்று பாவிக்கப்படுவான்" என்றான் மாதவன்.

"சரி! புனபதி! பிசாசு என்னை ஆட்டம் கொள்வது போலவே மற்றவர்களையும் தந்திரமாய் நடத்துவதைப் பற்றி எனக்குச் சந்தோஷம். ஏனென்றால் நான் யாதாமொரு மூடச்செய்கை செய்யப்போகையில் அது அவசியமும் ஆண்மையும் பெருந்தன்மையுமானதென்று நினைக்கச் செய்கிறது. தரை மிருதுவானதென்பது தெரிவதற்குமுன் சேற்றில் இடுப்பளவு குதித்து விடுகிறேன். உமது பிதாவின் ஞாபகார்த்தமான கவுரவத்திற்காக நீர் ஒரு கொலைக்காரர் அல்லது நாஹத்தி செய்தவராகலாம்" என்றான் கந்தன்.

"உமது செய்கையிலிருந்து எதிர்பார்க்கக்கூடியதிலும் அதிக விவேகம் உமது வாக்கிலிருக்கிறது. நிசமே. மூடபக்தி யுள்ளவர்கள் நம்புகிறபடி, அழகாகத்தோன்றி மனிதர்களை மயக்குகிற மோகினிகளின் உருவம்போல, நம்முடைய துன்மார்க்கங்களும் நமக்கழகாகத் தோன்றுகின்றன. அவைகளை அணைத்த பின்புதான் அவைகளின் கோரரூபம் புலப்படுகிறது" என்றான் மாதவன்.

"ஆனாலும் நாம் அவைகளை வேண்டும்பொழுது தள்ளிவிடலாம். என் பாட்டி யிறந்தவுடன் அப்படிச் செய்ய யோசிப்பேன்" என்றான் கந்தன்.

"யோசிக்கலாம். முடிக்க முடியாது" என்றான் மாதவன்.

"சரி! இப்பொழுது நல்ல நேரத்தில் ஆரம்பிக்கிறேன். உம்முடைய வீட்டில் உயர்தர மதுபானமிருந்தாலொழிய இன்று முதல் நான் அரை ஆழாக்குக்குமேல் குடிக்கிறதில்லையென்று தீர்மானித்திருக்கிறேன்" என்றான்.

"என் வீட்டில் உம்மை மயக்கக்கூடியதொன்றுமில்லையென்று நீர் தெரிந்துகொள்ளுவீர். என் கூரையின் கீழ் உமக்குத் தங்க இடங்கொடுப்பது தவிர வேறேதுவாவது என்னால் செய்யக்கூடுமென்று சொல்ல அசக்தனாயிருக்கிறேன். இருந்த மதுபானமெல்லாம் என் வீட்டில் கொஞ்ச நாளைக்குமுன் நடந்த கருமத்தில் செலவாகிவிட்டது" என்று மாதவன் சொன்னான்.

"இவ்[illegible] சங்கதிக்கு இனிச் சாமான்கள் அவ்விடத்தில் வேண்டாமலிருக்க வேண்டுமென்று சுவாமியைப் பிரார்த்திக்கிறேன். ஆனால் ஒரு துஷ்டி காலத்தில் இருந்த மதுபானத்தையெல்லாம் குடித்துவிடக் கூடாது. அது துரதிர்ஷ்டம்" என்றான் கந்தன்.

"என் விஷயமான ஒவ்வொரு சங்கதியிலும் துரதிர்ஷ்டமிருந்துகொண்டே இருக்கிறது. அதோ தெரிகிறது என் வீடு. அதிலிருக்கிறவைகளை உம்மிஷ்டப்படி உபயோகிக்கலாம்" என்றான்.

"கழுகுகள் கூடு கட்டுவதுபோல் மலையுச்சியில் கட்டியிருந்த அருக்கத்தை அவர்கள் சமீபித்தார்களென்பதைக் கடல் ஒலி காட்டிற்று. இதுவரை மேகத்தில் மறைந்து மறைந்து தோன்றிக்கொண்டிருந்த சந்திரன் இப்பொழுது கொஞ்சம் மங்கலாகப் பிரகாசித்துக் கடலில் நீண்டு தொங்கிக்கொண்டிருந்த செங்குத்தான மலையிலிருந்த அருக்கத்தின் தனிமையையும் அலங்காரமின்மையையும் காட்டிற்று. மூன்று

பக்கங்களில் செங்குத்தாயிருந்தது. தரையை நோக்கி யிருந்த நான்காவது பக்கத்தில் முற்காலத்தில் அகழி அரணாக விருந்தது. அதில் மூடித் திறக்கக்கூடிய பால மிருந்தது. இப்பொழுது பாலம் உடைந்து தகர்ந்தும் அகழி பாதி தூர்ந்துமிருந்தன. போகும் வழியில் சற்றுக் குறைய் முழுவதும் இடிந்து பாழாய்ப்போன தாழ்ந்த கூரையையுடைய குதிரைச்சாலைகளும் உத்தியோக ஸ்தலங்களும் இரண்டு பக்கங்களிலிருந்தன. மூன்றும் பக்கத்தில் ஒரு தாழ்ந்த சுவரிருந்தது. நான்காம் பக்கத்தில் ஒரு ஸ்தூபி யிருந்தது வெள்ளைக் கல்லால் சமைக்கப்பட்ட அத்தூபி நிலவுவெளிச்சத்தில் வெண்போர்வையால் மூடப்பட்ட ஒருபெரிய இராக்ஷதன் நின்றதுபோலிருந்தது. அதிலும் துக்ககரமான வேறொரு பாழிடம் நினைக்கவே முடியாது. மாறுதலில்லாதஓரேவிதத்துக்கமும்பயங்கரமும் உண்டாகக்கூடிய இடமாயிருந்தது. அந்தத் தூபிக்குப் போகிறவழி மேற்சொன்ன நாலு பக்கங்களின் மத்தியில் குனிந்துபோக வேண்டிய ஒரு ஒடுங்கிய வழியாயிருந்தது.

அஸ்தமித்து அதிக நேரமாகாவிட்டாலும் அந்த அநாதவிடத்தில் மனிதசஞ்சார மிருப்பதாகவே தெரியவில்லை. அந்தத் தூபியின் சுவர்களிலுள்ள ஒழுங்கற்ற சிறிய ஜன்னல்களில் ஒன்றின் வழியாக மங்கலான விளக்கு வெளிச்சம் கொஞ்சம் வந்தது.

“என் வீட்டிலுள்ள ஒரே வேலைக்காரன் அங்கே இருக்கிறான். அவனங்கே யிருக்கிறது நல்லது. இல்லாவிடில் அங்கே வெளிச்சமும் தீயுமிருக்கமாட்டா. என் பின்னாலே ஜாக்ரதையாய் வாரும். இவ்விடத்தில் வழி நெருக்கம். ஒவ்வொரு குதிரையாகத்தான் போகவேண்டும்” என்றான் மாதவன்.

அவன் சொன்னபடி இருவரும் அதிக எச்சரிக்கையுடன் சென்று வீட்டின் முற்றத்தில் பிரவேசித்தார்கள். அத்துருக்கத்தைக் கட்டினவர் சவுக்கியத்தைக் கருதாமல் கட்டடத்தின் பலத்தையும் காவலையு முத்தேசித்தே அவ்விடத்தையும் அந்த மாதிரியையும் தெரிந்தெடுத்திருக்கிறார். அம்முற்றத்திலிருந்து கூப்பிட்டு வேலைக்காரனைக் கதவைத் திறக்கச் செய்வதன் முன் பட்டபாடு அதிகம்.— அதிக நேரம் கூப்பிட்டும் கதவைத் தட்டியும் அதைத் திறவாததால் “கிழவன் இவ்விடம் விட்டுத் தொலைந்துபோனானோ அல்லது ஏதாவது வலிவந்து கிடக்கிறானோ தெரியவில்லை. இல்லாவிட்டால் நான் போட்ட சப்தம் கும்பகர்ணனையும் நித்திரை நீங்கச் செய்யுமே” என்றான் மாதவன்.

கடைசியாக வெளிச்சம் கீழே வருகிறது அந்தத் தூபிச் சுவர்களிலுள்ள சிறு துவாரங்கள் வழியாகத் தெரிந்தது. பயந்து தடுமாறுகிற சத்தத்துடன் “புனபதி—புனபதியா? நீர்தானா” என்று கிழவன் கேட்டான்.

“ஆம். நான்தான். கதவைச் சீக்கிரம் திற” என்றான்.

“ஐயா! நீர்தானா? அல்லது என் யஜமானனுடைய ஆவியா? ஆவியானால் ஆயிரம் பிசாசு வந்து கேட்டாலும் திறக்கமாட்டேன். என் யஜமான் மனித சரீரத்தோடு வந்திருக்கிறாரா” என்றான்.

“அடா முட்டாள் கிழவா! நான்தான். சரீரத்துடன் வந்திருக்கிறேன். ஜீவனோடு வந்திருக்கிறேன். குளிரால் பாதி செத்துப்போயிருக்கிறேன்” என்றான் மாதவன்.

அந்த ஸ்தூபியின் ஒரு பக்கத்திலிருந்த சுற்றுப் படிக்கட்டின் வழியாக அந்த வேலைக்காரன் அதிக யோசனையுடனிறங்குகிறது அவ்விளக்கின் ஒளியால் வெளியாயிற்று. தாட்பாளைத் திறப்பதற்கு முன் மறுபடியும் இவ்வளவு அகாலத்தில் வந்தது பூமியில் நடமாடும் மனிதர்தானா என்று கேட்டுச் சிறிதுநேரம் தாமதித்தான்.

“உன் சமீபத்திலிருந்தால் நான் தேகத்துடனிருக்கிறேனென்பதை நன்றாய் உனக்குக் காட்டுவேன்” என்று கந்தன் சொன்னான்.

அந்த வேலைக்காரன் உண்மையாக வெகு நாள் அந்தக் குடும்பத்தில் உழைத்தவனானதாலும், தனக்கும் அவனுக்கும் மத்தியில் ஒரு பெரிய கனமான கதவிருந்தாலும் தான் கோபிப்பது பயனில்லை என்பதையறிந்து மாதவன் சாந்தமாக “நான்தான் கதவைத் திற” என்றான்.

அவ்வேலைக்காரன் கதவை மெல்லத் திறந்து தன் யஜமானனுக்கு வந்தனஞ் செய்தான். பிறகு அவர்கள் தங்கள் குதிரைகளைச் சாவதானமாய் பாதிக்கூரைக் கீழே விழுந்துபோய் அதனால் வெளிச்சம் தெரிந்துகொண்டிருந்த குதிரைச்சாலையில் கட்டிவிட்டு, அவ்வளவு அகாலத்தில் இரவில் அவ்வேலைக்காரன் மிகுத்து வைத்திருந்த சுவல்ப உணவைப் புசித்து, மதுபானமில்லாததால் சுத்த ஜலத்தைக் குடித்தார்கள். பிறகு மற்றவர்கள் இலேசில் கண்டுபிடிக்கக்கூடாத ஒரு அந்தரங்கமான விடத்தில் கந்தனுக்கு நித்திரை செய்ய ஏற்பாடு செய்து மாதவனும் நித்திரை செய்யப் போனான்.

S. V. கள்ளபிரான் பிள்ளை, பீ. ஏ.

நாகாநந்தம்

NAGANANDAM : A CLASSICAL DRAMA

(தொடர்ச்சி)

அங்கம்-5 — களம்-2.

அதே இடம்—மலயமலையினொரு சிகரம்

(கருடனும் நாயகனும் ஒருபுறத்திருத்தல், மற்றோர் புறமாகச் சங்கசூடன் வரல்)

சங்கசூடன்.—(முன் பார்த்து)

புண்ணீர் கசியும் புரையல கதனால்
திட்டிய பாறை கறைமிடாச் சிவணவும்,
மூட்டிடுங் கனல கண்ணின் வெளிபடூஉம்
கதிர்த்திரள் காவெலாம் படர்ந்தெரித் திடவும்,
துன்றிய வயிர மொன்றி வலிவுறூஉம்
கொடுங்கூர் உகிர்த்தாம் தடங்லங் கீண்டு
விடரிடங் குருதி படருற்று கசியவும்.
ஆண்டம் மலயத் துச்சியி னமர்ந்ததவ்
வேண்டா வுருவது வியாளர்தம் பகையே!

(நடந்து எதிரில் விளங்குகின்ற ஓர் கல்லாஸநத்திலிருக்கும் கருடனையும் அவன் பக்கத்தில் குற்றுயிராய் விழுந்து கிடக்கும் நாயகனையும் காணல்)

கருடன்.—(தனக்குள்) பிறவி முதல் கணக்கில்லாத ஸர்ப்ப ராஜுங்களைத் தின்ற என்னால் இத்தகைய அதிசயம் இதுவரை காணப்படவில்லை. என்ன வாச்சரியம்! இம்மஹாசத்தன் தான் கஷ்டப்படாததுபோல் காட்டிக்கொள்வதுமல்லாமல் உத்சாகத்தோடு அவாவுற்றவன்போல் தோற்றுகிறான்!

தூடிக்கினுஞ் சாலச் சோரி குன்றில தோகை யிந்த
நடுக்கிடா வீரத் தாழி நைதரப் பீறிக கல்லிக் [பூட்டி
கடிக்கினுங் கடுந்தீங் காற்றி கலக்கிலு மலர்ந்தன்
படக்கொனைப் புளகத் தல்லற் கன்பினை யீந்த தச்சோ!

நாயகன்.—

பொங்குங் கறைகண் புனற்பீரத்
தங்குந் தசையீ திருக்கவுநு
மங்கும் பசியென் மாய்த்திலிர்நின்
றிங்குத் தயாவி னிரும்பெரியோய்.

கருடன்.—

(தனக்குள்) அதிசயம்! அதிசயம்! இந்த நிலையிலும் இவர் என்ன உறுதியுடன் பேசுகிறார்; ஊக்கத்துடன் விளங்குகிறான்:

(வெளிப்படையாக)

சிந்தச் செம்புனற் றீயவென் னுசியிற்
கொந்தி யீர்க்குமிக் கொற்றத்தன் னெஞ்சைத்தன்
முந்து மன்பின் றிரன்வலி மொய்ம்பின் என்
மந்த நெஞ்சையு மீர்த்திவன் வாட்டுமால்!

இதன் வீரச்செயலைக் காணக்காண எனக்கு விநோத முண்டாக்கப்படுகிறது. குதூஹலமடைகிறேன். இது இருக்கட்டும். நான் இதை உண்ணலை நிறுத்துவன். யாரிவன் என்று கேட்பன். தாங்கள் யார் என்பதை அறிய யான் விரும்புகிறேன்.

(தின்றலை நிறுத்தி நாயகன் எதிரில் நிற்றல்.)

நாயகன்.—தாங்கள் பசியால் தொந்தரை யடையும்போது இவ்வாறு கேட்பது தகுதியல்ல. முதலில் என் தசை இரத்தம் இவைகளைக் கொண்டு உமது பசியைத் தணியும்.

சங்கசூடன்.—(பரபரத்து ஓடிவந்து) ஹே கருடா! ஓ கருடா! உமது கொடுந்தொழிலை நிறுத்தும்; உமது கொடுந்தொழிலை நிறுத்தும்! அவரை விட்டு விடும். அவர் ஸர்ப்பமல்ல. என்னை உண்டு உமது பசியைத் தணியும். வாஸுகி மஹாராஜனால் உமக்கிரையாய் அனுப்பப்பட்டவன்—நான்;—அவரல்ல.

நாயகன்.—(சங்கசூடனை நோக்கி—தனக்குள்) சங்கசூடன் இப்பொழுது வருவதால் என் விருப்பம் தவறிவிடுகிறதா?

கருடன்.—(இருவரையும் நோக்கி) இருவருந்தான் கொலைக்குறி பூண்டிருக்கிறீர். உங்களில் யார் சர்ப்பமென்று எனக்குத் தெரியவில்லை.

சங்கசூடன்.—உம்முடைய ஸந்தேஹம் தவறான இடத்திலன்றோ பதிந்தது! போனது போகட்டும், என் மார்பின்மீதிருக்கும் ஸ்வஸ்திகக் குறி தெரியவில்லையா? என் உடம்பில் விளங்கும் தோற்சட்டை உமது கண்ணிற்படவில்லையா? நான் பேசும்பொழுது என் நா பிளவுண்டிருப்பதைக் காணவில்லையா? மூன்றாய் விளங்குமிப் பணைகளின் தலையில் விளங்கு நாகரத்னங்களின் பரந்த பிரகாசத்தை என் கொடும் பற்களிடமிருந்து கிளம்பும் காளவிஷத்தின் புகை, பொறுக்க முடியாத துன்பத்துடன் வெளிவரும் எனது நெடு மூச்சுடன் மயங்கி மேகம்போல் கவிந்து மறைப்பதும் உமது கண்ணிற்குப் புலப்படவில்லையா?

கருடன்.—(சங்கசூடனது படங்களைப் பார்த்து, நாயகனையும் நோக்கி)—அப்படியானால் யான் கொன்ற இவர் யார்?

சங்கசூடன்.—விஞ்சைய குலமணி ;—ஜீமுதவாஹனன். அந்தோ! என்ன தயை தாக்ஷண்யமில்லாமல் இந்தக் கொடுஞ்செயல் புரிந்தாய்?

கருடன்.—(தனக்குள்) அஹோ! விஞ்சைய இளவரசாகிய ஜீமுதவாஹனனா இவர்?

லோகா லோக லோகங் களினும்,
போகி விளங்கிடு புவனந் தன்னினும்
மாமே ருவினும் மந்திரப் புழையினும்
காம ரோங்குங் கைலை தன்னினும்
மலையத் துச்சியின் மாஹேந் திரத்தினும்
நிலைக்கு வடிமய நெடுமுடி தன்னினும்
தலம்வா யிடந்தொறும் அலைதரும் யாத்ரிகக்
கூட்டம் மிசைந்து குறையா உரையால்
பாட்டால் பழிச்சிட பல்கால் கேட்ட
விஞ்சைய விளவள் மஞ்சன் இவனே!

அந்தோ யான் கடைசியாக ஆழ்ந்தப் பெரும் பாபப் படுகுழியிலா வீழ்ந்துவிட்டேன்?

நாயகன்.—ஹே ஸர்பா? நீ ஏன் இவ்வாறு வருந்துகின்றனை?

சங்கசூடன்.—நான் வருந்துவதற்குக் காரணம் இல்லையா?

கருடர்க் குணவாம் காருட லிலிங்கை
அருடனு லுன்றன் ஆருடல் ஈந்து
கீழாம் உலகினும் கீழ்ப்பட வென்னை
தாழ்த்துவ தென்னை தருமமு மாமே!

கருடன்.—அந்தோ! என்ன? என் வரிசைக்கிரையாகவிருந்த இந்த ஸர்ப்பன்பால் அன்புகொண்டு, அவனது உயிரைக்காக்க, எனக்குணவாகத் தனது உடலை யளித்திருக்கிறான். நான் பெரும் கொடுஞ்செயல் செய்துவிட்டேன். ஓர் பெரும் போதிஸத்வத்தை நான் கொன்றாற்போலாகிவிட்டது. இப்பெரும் பாபத்திற்குப் பெரும் பிராயச்சித்தம் அக்னிப்பிரவேசமன்றி வேறொன்றுங் கிடையாது.எனக்கெப்படி நெருப்பு கிடைக்கும்? (முன் உற்றுப்பார்த்து) அதோ அங்கு யாரோ நெருப்பை எடுத்துக்கொண்டு வருகின்றனர் ; அவர்களைச் சற்று கவனிப்பேன்.

சங்கசூடன்.—அரச! உமது பெற்றோர் வருகின்றனர்.

நாயகன்.—(துணுக்குற்று) சங்கசூட! என் வஸ்திரத்தை என்மேல் போர்த்து என்னை உனது மடிமீது தாங்கு. இல்லாவிடில் இந்த நிலைமையில் என்னை என் பெற்றோர் கண்டால் உயிர் நீங்கினும் நீங்குவர்.

(சங்கசூடன் கீழ் வீழ்ந்திருந்த வஸ்திரத்தை எடுத்து அவ்வாறே செய்கிறான்)

(ஜீமுதகேது தனது மனைவி மருகியுடன் வரல்.)

ஜீமுதகேது.—(கண்களில் நீர் ததும்ப) ஆ! என் மகனே! ஜீமுதவாஹனா!

தனக்கோ பிறர்க்கோ எனவறிந் தன்றே
உனதருள் காட்ட உறுவதுழ காகும்?
உன்னருள் பெறுவ தொருவரோ பலரோ
மன்னகத் தெண்ணிலை மாப்பெரும் புகழோய்!
பணுவுடை யரவை பறவை மன்னிட
உணுவா காது ஒற்றனை உணுது
தாயும் தந்தையும் தாரமும் நீயும்
வீதா வாயது விதியோ மகனே.

அரசி.—(நாயகியை நோக்கி) மகளே! சற்று நேரம் வெறுமை யிரு. உன் கண்ணீர் வழிந்து நெருப்பின் தழலும் அவிந்து விடுகின்றது. அழாதே என் அம்மா!

(யாவரும் முன்வரல்.)

ஜீமுதகேது.—ஆ! என் மகனே! ஜீமுதவாஹனா!

கருடன்.—(கேட்டுக்கொண்டு) அஹோ! யார் அது "ஆ! என் மகனே! ஜீமுதவாஹனா!" என்று அழுவது? அது அவரது தந்தையாகத்தான் இருக்க வேண்டும். அவர் மகனைக்கொன்ற எனக்கு அவர்முன் தலைகாட்ட வெட்கமா. யிருக்கிறது. இல்லாவிட்டால் நெருப்பைப்பற்றி எனக்கேன் கவலையுண்டாகிறது? நான் கடல் பிராந்தியத்தின் அருகில்தான் இருக்கிறேன். ஆகையால் இப்பொழுது,

கொலைத்தொழிற் காலன் நாவென கொழுந்திட்
டுலக மூன்றையு மண்டிட வுயர்ந்து,
திரைகடற் றன்னை திரண மாமென
எரியின் புகைந்திடு படர்தருஞ் சுவாலை
படர்எனச் சிறகரின் படபுயல் வீசி
மண்டி படர்ந்திடு மாற்படு படபை
திண்டிற லூழித் தீயுட் குளித்து
எழுநா வலற்றுங் கொழுந்தான் கொளிந்திட
அழியாப் புகழனை யழித்த என்றன்
பழிக்குப் பழிவாங் கிடுகவென் னுயிரே!

நாயகன்.—ஹே பறவைமன்னா! அந்தக் கெட்ட எண்ணத்தை விட்டுவிடும்! இது நீ செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தமாகுமா? அது எப்படி ஆகும்?

கருடன்.—(கைகட்டி வணங்கிக்கொண்டு) ஹா! பெரியோய்! வேறெது? சொல்லுமே!

நாயகன்.—க்ஷணம் பொறும். என் பெற்றோர் வருகின்றனர். அவர்க்கு யான் வணங்கவேண்டும்.

கருடன்.—அப்படியே ஆகட்டும்.

ஜீமுதகேது.—(சந்தோஷத்துடன் பார்த்துக் கொண்டு) அரசி! உனக்கதிர்ஷ்டந்தான்போலிருக்கிறது. நமது மகன் ஜீமுதவாஹனன் உயிருடன் இருப்பதுமல்லாமல் அவனது சீடன்போல் கருடன் கட்டியகையுடன் அவனெதிரில் விளங்குகிறான்.

அரசி.—(ஸந்தோஷத்துடன்) ராஜாதிராஜ! நான் வாழ்ந்தேன்.என் வயிற்றில் பால்வார்த்தாற்போல் இப்பொழுதுதான் குளிர்ந்தது என் மகனுடைய முகத்தைக் காயமில்லா உடலோடு காண்பேனாக!

நாயகி.—என்மனம் என் தலைவனது முகத்தை தக்கண்டதும் ஆநந்தம் அடையினும், ஏதோ கொடுமை நடந்திருக்கக்கூடும் என்று முன்தோன்றிய எண்ணமே தான்டித் துன்பத்தில் வீழ்த்துகிறது.

ஜீமுதகேது.—(அருகுவந்து) என் குழந்தாய்! வா! என் செல்வமே! வா! எழுந்திரு. என் பாக்கியப் பெருக்கே! வா! என்னை வந்து தழுவாய்.

(நாயகன் எழுந்திருக்க முயன்று மூர்ச்சையாக விழ, மேல்போர்த்திருந்த வஸ்திரம் கீழ் வீழ்தல்)

சங்கசூடன்.—தெளிவடையும்! என் ஐயனே தெளிவடையும்.

ஜீமுதகேது.—அந்தோ! என் மகனே! என்னைப் பார்த்துமா எங்களை விட்டுவிட்டுப் போகிறாய்?

அரசி.—என் செல்வமே! உன் வாயைத் திறந்து வாவென் றழைக்கலாகாதோடா? அதுகூடவா, என் கண்மணியே! நீ செய்யலாகாது?

நாயகி.—அகோ! என் நாதா! என்னுயிருக்குயிரே! தாங்கள் உமது பெற்றோரையும் உபேக்ஷை செய்துவிட்டீர்!

(யாவரும் மூர்ச்சித்தல்.)

சங்கசூடன்.—அடா! கொலைபாதகா! சங்கசூடா! மற்றொருவனதுயிர் வாங்கி பிழைத்தவனே! பயங்காளி!—ஹா நான் கருவிலேயே அழிந்திருக்கக் கூடாதோ? என்னபிறவியுற்றேன். ஒவ்வொரு நொடியும் சாவினுங் கொடிய பொறுக்கமுடியா துன்பத்திற்குட்படுத்த ஆளாயினேன்.

கருடன்.—இவற்றிற்கெல்லாம் மூலம், கொடியேன் என் மடைமை யல்லவா?—யான் இவ்வாறு செய்வேன். (தன் சிறகால் விசிறிக்கொண்டு)பெரியோய்! எழுந்திரும்; தேறும்; தேற்றமடையும்.

நாயகன்.—சங்கசூட! எனது பெற்றோரைத் தேற்றும்.

சங்கசூடன்.—அப்பா! எழுந்திரும்! அதைரியப்படாதிரும். அம்மணீ! எழுந்திரும்! ஜீமுதவாஹனன் தேறிவிட்டான். நீங்கள் பார்க்கவில்லையா! அவர் எழுந்திருந்து தங்களது தேறுதலை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்—(இருவரும் தேறல்.)

அரசி.—என் அப்பனே! அஹோ! நாங்கள் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அவன் நாசமாய்ப்போக, அந்தப் பாவியமன் உன்னைக் கொள்ளைகொண்டு விட்டானேடா.

ஜீமுதகேது.—அரசீ! அந்தமாதிரி அசுபமான பேச்சைச் சொல்லாதிரு; குழந்தை உயிரோடிருக்கிறான். அப்பெண்ணைத் தேற்று.

அரசி.—(முகத்தை முன்தானையால் மறைத்தழுது கொண்டு) பற்றிய பாவங்கள் பறந்து போகாதோ! அப்பனே உன்னைப்பிடித்த சனி சூரியனைக்கண்ட பனிபோல மறையாதோ!—(நெடுமூச்சுவிட்டு) அழுவதால் என்ன பிரயோசனம்?—அழுகையை நிறுத்திவிடுகிறேன்—(மலையவதியை நோக்கி) என்னம்மா! எழுந்திரு, அடி குழந்தாய் ஸமாதாரித்துக்கொள், எழுந்திரு. இந்த சமயத்தில் அவன் முகத்தைப் பார்ப்பது உனக்கு நல்லதடி!

நாயகி.—(தெளிந்து) ஹா என் தலைவா! உயிர்க்குயிரே!

அரசி.—(மலையவதி முகத்தைத் தடவி) உனக்கெல்லா சௌபாக்யமும் உண்டாகட்டும். உன் கஷ்டம் துலைந்ததடி யம்மா!

ஜீமுதகேது.—(கண்ணீர்விட்டு) தங்குவதற் கிடங்காணாது, புண்ணாகிப் போழ்ந்து கிடக்கும் உடல் முழுவதில் இருக்க இடம்பெறாது, நெஞ்சுள் விக்கிக் கொண்டு வெளியே போகவிருக்கும் இந்த உயிரைக் காணாது நான் ஏன் நாசமாய்ப் போகக்கூடாது? இந்தக் கோலத்தைக் கண்டதும், ஐயோ, கொடியேன், எனது மண்டை ஏன் பத்தாயிரம் பொடியாக வெடிக்கக் கூடாது?

நாயகி.—என் நாதா! என்னிலும் பாவி ஒருவருண்டோ? உம்மை யிந்த நிலையில் பார்த்தும் என்னுயிர் இந்தச் சரீரத்தின்மேலே அபிமானம் கொண்டிருக்கிறது. உயிரை இன்னமும் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

அரசி.—(நாயகனது உடலைத் தடவி, கருடனை நோக்கி) அடா கருணையற்றவனே! ஆபரணங்களிற்கு அழகூட்டிக்கொண்டிருந்த அந்த மங்கள உருவத்தை உனது கொடுமையால், என்ன நிலைமைக்குக் கொண்டு

வந்து வைத்து விட்டாயடா? என்னவேலை செய்து விட்டாயடா?

நாயகன்.—அம்மா! அப்படிசொல்லாதீர். சொல்லாதிரும். அவர் எனக்கென்ன செய்துவிட்டார்? ஆலோசித்துப்பார். இதற்கு முன்னமும் இந்த உடம்பு அப்படித்தானே இருந்தது. கொழுவும், நிணமும், தசையும், என்பும், மூளையும், ரத்தமும், என்னும் பற்பல புன்மைப்பொருளைத் தன்னிடங்கொண்ட தோற்பை யீது. இதில் என்ன அழகிருக்கிறது? பார்க்கப் பார்க்க வெறுப்பதற்கே மூலமாகவன்றே இதிருக்கிறது? இதில் அழகென்பது எப்படிக் குடிகொள்ள முடியும்?

கருடன்.—ஹே! பெரியோய்! நான் நரகவேதனைப் பட்ட தீயில் தத்தளிப்பதுபோலத் தொந்தரை அடைகிறேன். நான்செய்த பாவத்தைப் போக்கிக்கொண்டு விளங்க எனக்குத் தேவரீர் ஞானோபதேசம் செய்யும். எனக்குப் புத்தி புகலும்.

நாயகன்.—இவருக்குத் தனது பாவத்தைப் போக்கும் வழியைச் சொல்ல என் தந்தை எனக் குத்தரவிடட்டும்.

ஜீமூதகேது—சொல்லப்பா, என் மகனே!

நாயகன்.—கருடா! கேட்பாயாக!

கருடன்.—(வணக்கத்துடன் முழந்தாளிட்டு நின்றுக்கொண்டு தலைமேல் கூப்பிய கையோடு) என் ஐயனே! எனக்காணையிடும்.

நாயகன்.

எல்லா வுயிரையும் கொல்லா திருக்கும்
உறுதி கொள்ளுதி. உற்றதும் செய்த
மறவினை தனக்காய் மனத்தின் வெகுதி.
அழியா நன்மை அவ்வுயிர் தமக்கு
வழியாற் செய்து, வழாநிலை யதனால்
துன்ப மியற்று தன்பினை யாண்டு
உலக தின்புறு நிலையுற மியற்றியுன்
பெரும்பழி தன்னை பெருநீர் பரப்பின்
இட்ட தோர்துளி உப்பென இலாது
நன்மைப் பெருக்கின் மயங்கி நலிந்திட
உன்மனங் கொள்ளுதி உவணர்த மிறையே!

கருடன்.—என் ஐயனே! தாங்களிட்ட ஆணைப்படிக்கே!

அறியாமை எனும் உறக்க மயக்கின்
அறியா திருந்தேன்! அறியா திருந்தனன்!
நெறியோய் நினது நீர்மைப் படையான்
உறுதி ஞானமுற் றெழுந்தனன்; யான்
சொல்லுமச் சிறந்த கொல்லாமை காத்து
எல்லா வுயிரையு மின்பத் தாழ்த்துவன்.
அகன்றன னினியத் தகாவுண் டனையே.
அகன்றன னினியான் ஆருயிர்க் கோறலை.
இனியந் நாக இளங்குடி யாவும்
மனவழி யெல்லாம் தினமனு சரிக்க!
சடல்வா யலைமேல் களிப்புட னுடுக!
மணியணி பணவினை வரிசையின் கூட்டி.
வணமுடை தமதுடல் வளைவையும் காட்டி
கடலிடைத் திட்டும் கலக்கும் சுழலும்
இடமயங் கியதென இலங்கவும், கடல்மேல்
அணையிட் டாலென எழும்பி அலையவும்
துணையில் சிறப்பின் துள்ளியா டுடுக!
மலைமேற் பதிந்த தடமணி எரிக்க,
தளர்ந்திருப் பினுமனந் தளரா தென்றும்,
கிளர்மனத் துவகையின் கேடிலிச் சந்தன
பொதும்பரி னுலாவி, மிகுபட காலில் தொடர்வு
ஓதிபடர்ந்தக் கொண்டலை யோதியும், [ஞாஉம்
சோதிச் சுடரோன் தொடுக்குங் கிரணங்
கதுவச் செவந்த கன்னத் தந்த
நாகர் தம்மிள நங்கையர் யாவரும்
பாடுக பாடுக பரமநின் புகழே!

நாயகன்.—நல்லது பெரியோய். வெகு நல்லது. உன்னுடைய மனத்துணிவை யாம் கொண்டாடுகிறோம். (சங்கசூடனை நோக்கி) சங்கசூட! நீ உன் வீட்டிற்குப் போவாய்.

(சங்கசூடன் குனிந்த முகத்துடன் நெடுமூச்சு விடல்)

நாயகன்.—(சங்கசூடனை நோக்கி) சங்கசூட! சீக்கிரம் போ! துன்பத்தில் விளங்கும் உனது தாயைப்பார்த்துக்கொள்வாய். நீ கருடன் வாய்க்கிரையானாய் என்று ஏக்கங்கொண்டு அவள் துக்கஸாகரத்தில் மூழ்கிக் கிடப்பள். போ! சீக்ரம்!

ஆசி.—(கண்ணீர்விட்டு) கருடன் வாயில்வீழ்ந்தாலும் உயிர் நீங்காது தனது மகனை மறறுங்காணும் தாயின் பாக்யமே பாக்யம்! அவளே வாழக்கடவள்.

சங்கசூடன்.—ஆமாம் அம்மணி,—இவ்விளவாசு முழுதும் சௌக்யமடைந்தால்.

நாயகன்.—(வலியடைந்தவன்போல் காட்டிக்கொண்டு) அந்தோ! இப் பொறுக்கமுடியா வலி இதுவரையும் எனது சோரிக்கைக் கெதிராக இருந்த தடைகளால் எனக்குத் தெரியாதிருந்தது. இப்பொழுதென்னைப் பிச்சிப் பிடுங்கித் தின்னுகிறது. (சாகப்போகும் நிலையிலிருப்பவன்போல் காட்டிக்கொள்கிறான்.)

ஜீமூதகேது.—ஹா! என் மகனே! என் குழந்தாய்! என்னடா செய்யப்போகிறாய்!

ஆசி.—அந்தோ! அது எப்படி அவர் இப்படிப் பேசுகிறார்? காப்பாற்றும், காப்பாற்றும். இதோ என் மகன் இறந்துகொண்டிருக்கிறான். காப்பாற்றும். காப்பாற்றும்.

நாயகி.—ஹா! என் நாதா! என்னைத் தனியே விட்டு தாங்கள் போதல் ஈது அடுக்குமா?

நாயகன்.—(கையைக் குவிக்க யத்தனித்தல்.) சங்கசூட! என் இரண்டு கைகளையும் ஒன்றும்படி கொண்டுவா.

சங்கசூடன்.—(அவ்வாறே செய்து) அந்தோ! இப்பாழுமுலகம் தனது நாதனைத் துறக்கும்படியாகவா விட்டது!

நாயகன்.—(தனது பெற்றோரைப் பாதிமூடிய கண்ணோடு பார்த்துக்கொண்டு) அப்பா! அம்மணீ! இது தான் உமக்கென் கடைசி வந்தனம். இவ்வுடம்பில் உணர்ச்சி என்பது போய்விட்டது. சொல்லுவது இன்னதென்று இச்செவிகளுக்குக் கேட்கவில்லை. அறியமுடியவில்லை. இந்தக் கண்கள் ஏனோ இருந்தாற் போலிருந்து மூடிக்கொண்டு விட்டன. அந்தோ! என் ஐயனே! என் பிராணன் போகிறது; இல்லாவிடில் நான் ஏன் அழவேண்டும்?

அருளி லார்க்கிலா அவ்வுடற் றன்னை
அரவைக் காத்திடு மறத்தின் மெய்ம்மையின்
வரும்பிறப் பெல்லாதினும் பெருக வெப் பவத்தினும்
திரத்தின் பிறர்க்கருள் செம்மைபி னுதவவே.

(என்று பாடிக்கொண்டு பிராணனை விடுகிறான்.)

ஆசி.—அய்யோ! என் வயிற்றில் கல்லைப்போட்டாயேடா! என் மகனே என் செல்வமே! என் சீரே! பெரியோரை யிகழாத பெருமையே! பெற்றறாத ஆனந்தமே! எங்கடா போனாய்! என்னப்பனே! ஐயையோ! எல்லாரும் உன்னை நல்லவனென்று சொன்னாரேடா! நீ எங்கடா அப்பா சென்றுவிட்டாய்? உன் செல்வ வாயைத் திறந்து பதில் சொன்னால் முத்தஞ் சிந்திவிடுமோடா! என் கண்மணியே! ஜீமூதவாஹனா! உன்னை எப்போதடா நான் மறுபடியும் பார்க்கப் போகிறேன்.

ஜீமூதகேது.—அந்தோ! என் அப்பா ஜீமூதவாஹனா! எல்லார்க்கு முறவே! குணத்தின் நிதியே! அறத்தின் தலையே! எங்கடா அப்பா இருக்கிறாய்? ஒரு பதில் எனக்குச் சொல்வாய்! (தன் கைகளைத் தூக்கிக்கொண்டு)

அந்தோ! அந்தோ! ஆர்வ மழிந்தேன்;
சிந்தனை விளங்கி சேரிடம் துலைந்தது;
பொறுமை விளங்கிட புகுமிட மியாண்டினி?
வறுமை யருறவும் வாய்மையி னிடரும்
அறத்தின் களஞ்சியம் அன்பின் பெருநிதி
சாந்தமுந் தங்கிட தலமினி யேது?
சரணமென் றடைந்தார்க்குத் திரணமென் றுயி
ஈயும் பெயரை யாயவு மாமோ? [ரையும்
கருணை யினியெங்கு கண்டிடும் உறையிடம்?
மகனே! என்னுருயிர் மதலாய்! செல்வ!
இகத்தினை துறந்தனை! துறந்தது மின்நிலம்
பாழடைந் தந்தோ பதைக்கின் றதுவே!

நாயகி.—என் நாதா என்னைத் தனியாக விட்டுவிட்டு தாங்கள் எப்படிப் புறப்பட்டுவிட்டீர்—அந்தோ! மலையவதீ! உன் நெஞ்சென்ன கல்லடி—உன் உடல் வைரம்போலும்!—உன் உயிர்த்தலைவனைப் பிரிந்தும் நீ எப்படியடீ இன்னம் உயிரோடிருக்கிறாய்?

சங்கசூடன்.—உனக்கு ஒருவழியிலும் ஸம்பந்தமில்லாதவர்க்கும் நன்மையையே செய்யும் பெரியோய்! உன்னுயிரினும் சிறந்ததாக நீ நினைத்திருந்த இவனை விட்டுவிட்டு எப்படி அகன்றாய்? உன்னை உண்மையில் சங்கசூடன் பின்பற்றுவான்!

கருடன்.—அந்தோ! இப்பேருயிர் அகன்றது! இனி யான் என்ன செய்வது?

ஆசி. — (கண்ணீர்விட்டழுதுகொண்டு வானம் நோக்கி) ஹே வனதேவதைகாள்! காற்றிலுறையும் கடவுளர்காள்! வானத்தொளிரும் சோதிகளே! மூவா முதல்வா! உங்களுக்குக் கருணையில்லையோ? என் மகன் மேல் அன்பென்பது சிறிதும் கிடையாதோ? உம்மிடமிருக்கும் அந்த அமுதத்தைச் சிறிதிவன்மேல் பெய்து உயிர் மூட்டலாகாதோ?

கருடன்.—(ஸந்தோஷத்துடன்—தனக்குள்) அகோ! இந்த அமுதத்தைப்பற்றியப் பேச்சு நல்ல ஸமயத்திலே சொல்லப்பட்டது. அது எனக்கு ஆநந்த மூட்டுகிறது. என் கொடுவினையிழிவு முடிவடைவதற்கு காலம் வந்துவிட்டாற்போல் தோன்றுகிறது. ஆகையால் யான் அந்த ஸுரநாயகனை வேண்டி அமுதம் பெய்து இந்த ஜீமூதவாஹனனன்றி மற்று என்வயிற்றுள் பெய்தெரிக்கப்பட்ட சர்ப்பராசிகளின் எஞ்சிய விந்த என்பின் குவையவின்மேல் பெய்தவையாவும் உயிருடன் விளங்கச் செய்வேன். அப்படிக் கேட்கும் பொழுதவன் அமுதந் தாரானேல்—அந்தப் பரிவாரங்களின் தலைவனை என்சிறகுகளின் விசையால் புடைத்து,

என் இறகுகள் வீசும் புயற்காற்றால் அப்பன்னிருவ ராதித்தியரையும் பதரவடித்து, அத்தழலனையும் அவித்து, கூறிய வெனது வலிய வலகினால் இந்திர னுடைய வச்சிராயுதமும் பொடிபட அவனை சாடி, குபேரனைக் குற்றுயிராக்கி, யந்த யமனையும் மடித்து, அந்த எல்லாஸுரர்களையும் யுத்தத்தில் தாக்கி யாவ ரையு மொழித்தந்த அமுதம்கவர்ந்திந்த என்பின்குவிய லில் பெய்தின்பமடைவேன்—இதோ நான் போகி றேன்—(உத்ஸாகத்துடன் போதல்.)

ஜீமூதகேது.—மகனே! சங்கசூடா! என் இன்ன மும் ஆலச்யம்? விறகு துண்டுகளை எல்லாம் சேமித்து காஷ்டம் அடுக்காய்?—அதில் நாமும் குளித்தவனைத் தொடர்வோம்.

அரசி.—அப்பா! சங்கசூட! சீக்கிரம்! சீக்கிரம்! உன் முன்னோன் நாங்கள் இல்லாது கவலைப்படுவான்.

சங்கசூடன்.-(கண்ணில் நீர்சிந்த) பெரியவர் ஆணைப் படிக்கே! இதோ நான் முன் வந்துவிட்டேன்.—(எழுந்து காஷ்டத்தை அடுக்கல்) அப்பா! அம்மணி! காஷ்டம் அமைக்கப்பட்டாய்விட்டது.

ஜீமூதகேது.—ஹா கொடியேன்! ஹா கொடியேன்!

அடையாள நெற்றியு
 மம்புரு வத்திடை கேசபந்தி
யுடையானை சிங்கத்
 தாரத்தானை பாரிக்குங் கோவினானை
நடையானை நன்மலர்
 நோக்கனை நன்மைக்கு மன்பிற்குமாங்
கொடையானை விஞ்சைத்
 தலையானை கூற்றங் கொலைகொண்டதே!
கொடியேன் முடியாக் குவைவாய் பழியான்
முடியு முடியு முடியா தறவே
அடியேன் றனைவிட் டகன்றிட் டதுதான்
மிடியே தறச்சூழ் விதியார் வினையோ?

அரசி! என் வீணாக நெடுநேரம் அழுகிறாய். வா! எழுந்திரு தீயுட் குளிப்போம்.

(எல்லாரும் எழுந்திருத்தல்)

நாயகி.—(கைகுவித்து, மேல்பார்த்து) ஹா! கௌரி! என்னம்மணி! "வித்யதரர் தலைவன் உன் கணவன் ஆவன்" என்றளித்த வரமும் பொய்த்து விட்டதன்றோ? என் துரதிருஷ்டப் பெருக்கால் உன் மொழியும் தவறிவிட்டதல்லவா?

(கௌரி பரபரத்து ஓடிவரல்)

கௌரி.—அரச! ஜீமூதகேது! ஆத்திரப்பட்டொன் றும் செய்யேல்!

ஜீமூதகேது.—அகோ! என் கண்ணிற்கழியா ஆன ந்த மூட்டும் கௌரியன்றோ யிது?

கௌரி.—(மலையவதியை நோக்கி) குழந்தாய்! என் வரம் எவ்வாறு அம்மா பொய்த்தது? (குண்டிகையி லிருந்து நீரை ஜீமூதவாஹனன் மேல் தெளித்து) ஜீமூதவாஹன! வாழி! எழுந்திரு! உன்னிடம் மகிழ்ச்சி யடைந்தேன். என் குழந்தாய்! உலகிற்கிங் கிதம் செய்யும் உயிர்க்குகந்தவிதம் மேன்மையோடு வாழ்வாய்! ஜயவிஜயீபவ!

நாயகன்.—(எழுந்திருக்கின்றனன்)

ஜீமூதகேது.—அரசி! நாம் வாழ்ந்தோம்! நமது குழந்தை பிழைப்பிக்கப்பட்டனன்.

அரசி.—எல்லாம் அம்பிகை கௌரியின் அருளால்.

நாயகன்.— கௌரியை நோக்கி—கைகுவித்து) அஹோ! கண்ணிற்கு அழியா வின்பமூட்டும் அம் பிகை கௌரியன்றோ இது. அளவிற்குமேல் அளித்து அருளும் அம்பிகே! யான் உன் அடைக்கலம். உன்னை வணங்கினோர்க்கு ஆன்மை யகற்றும் பொருளே! யான் வணங்குகிறேன். போற்றியோ விஞ்சையர் வணங்கிடு முத்தமி!

(கௌரியின் காலில் வீழ்ந்து வணங்குகிறான்.)

(யாவரும் மேல்பார்த்தல்.)

ஜீமூதகேது.—அகோ! இதென்ன? மேகமில்லாமலே வானம் பெய்கிறது? அம்மணீ! இது என்ன?

கௌரி.—அரச ஜீமூதகேது! என்புமாத்திரம் எஞ்சி விளங்கும் அந்த ஸர்பத் தலைவர்களையும், ஜீமூதவாஹ னனையும் எழுப்புமாறு-தான்செய்தவினை தன் நெஞ்சை வருத்த, அந்தக் கருடன் தேவலோகத்திலிருந்து அமுதமழை பெய்கிறான். (விரலால் சுட்டிக் காட்டி) என்ன? உனக்குத் தெரியவில்லையா? தமது அழியா உடலை அடைந்து, தமது படங்களில் பதிந்த மாணிக் கத்தின் கிரணம் ஜொலிக்க, கீழ் வீழ்ந்திருக்கும் அமு தத்துளியை நக்குமாத்திரத்தால் தமது பிளவுண்ட நா வால் பூமியைக்கீண்டும் அந்த ஸர்ப்பங்கள் கடும்வேகத் துடன் வளைந்து வளைந்து ஓடி, மலயமலையிலிருந்து ஓடிவரும் நதிகளைப்போல, கடலுள் நுழைகின்றன கண்டாய்! (நாயகனை நோக்கி) குழந்தாய்! ஜீமூதவா ஹன! உனக்கு வெற்றுயிர் அளிப்பது தகுதியல்ல! யான் இதோ உனக்குத் தக்க நன்மை செய்கிறேன். எனது இச்சாமாத்திரத்தி லுண்டாகும் தெய்விக தீர்த்

தத்தையும், மானஸ ஸரோவரத்தில் பொற்றாமரையில் வசிக்கும் அன்னம் அளைய மயங்கிய மகரந்தங் கலந்த தீர்த்தத்தையும் பொற்குடத்தில் நிறைத்து உனக்குச் சீக்ரத்தில் விஞ்சையர் நாட்டு சத்ரபதியாக மகுடாபி ஷேகம் செய்வன். அது தவிர்த்து, இந்தப் பொற் சக்கிரமும், நான்கு மருப்புகளுடன் விளங்குமிந்த ஐரா வதமும், இந்த நீலவர்ணக் குதிரையும் இவற்றை யும் இதோ இந்த மலையவதியையுமே ராஜாதிராஜ! உனக்கு நான் பூஷணமாகக் கொடுக்கின்றனன். இதற்குமேலுங் காண்பாய்! விஞ்சையர் மன்னனாக விளங்குமந்தக் கொடிய மாதங்கன் போன்றவர்கையில் பொருந்திய சரத்கால சந்திரனைப்போல் வெள்ளிய சாமரையோடும் தமது மணியிழைத்த நகைகள் கிரணமயங்கி வானவில்லென ஒளிக்க,வணக்கத்துடன் உன் காலில் வீழ்ந்து வணங்குவதும் பார்? இதற்கு மேல் உனக்கென்ன நன்மை செய்யவேண்டும் அப்பா! அதைச் சொல்வாய்.

நாயகன்.—இதைக் காட்டிலும் விரும்பக்கூடியது வேறென்ன இருக்கிறது? பக்ஷி யாசனுடைய பயத்தி லிருந்து சங்கசூடன் காக்கப்பட்டான். கருடனது கர்வ மடக்கப்பட்டது. அவன் மூலமாகவே இறந்த ஸர்ப் பங்களும் பிழைக்கப்பட்டன. யான் பிழைப்பிக்கப் பட்டதால் என் பெற்றோர் உயிர் நீங்காதிருந்தனர். எனக்கும் ராஜாங்க பாரம்பர்யம் அளிக்கப்பட்டது. இவற்றெல்லாவற்றினும் அம்மணீ! தாங்களே நேரில் வந்தெமக்குக் காட்சி யளித்தீர்கள். இதைக்காட்டிலு மானந்த வேறொன்று முண்டோ? கேட்கவு முடியுமோ? ஆயினும் ஈதோர் வரம் வேண்டுவன்:

ஆனியந் தவறாது வானம் வழங்கிட,
கலாப மயூரம் உலாவிவிளை யாடிட,
பச்சை மேனி பார்மகள் போலுத்
தெச்ச மில்லா தெங்கும் விளைந்திட,
அழுக்கா றகற்றி தருமந் தழைதர
விழையும் போகம் விதவித மடைந்து,
துன்ப மிலாது துணைவருற் றாரோடு
மன்பதை வாழிய! வாழ்க வவரெலாம்
அன்பெனு மமுதத் தார்வ மடைந்தே.

(முற்றிற்று)

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

* போர்வீரன் கனவு

THE SOLDIERS' DREAM

[பிறவிச்குருடன், செவிடன், ஊமை, மலடி,முட வன், நித்தியதரித்திரன் ஆகிய இவர்கள் முறையே, பார்வை, சங்கீத வுணர்ச்சி, பேச்சு, மகவு, கொம் புத்தேன்,புதையல் பெற்றதாகக் கனவிற் கண்டு களி த்து நித்திரை நீங்கியதும் ஏமாற்றமுற்று வருந்தியது போல, மனைவிமக்களுடன் கணப்பொழுதேனுமிருந்து சல்லாபம் செய்வதற்கும் சாவகாசமற்ற போர்வீரன் ஒருவன், தான் யுத்தகளத்திற் படுத்துறங்குங்கால் "அக்களத்தினின்றும் நீங்கிச் சுதேசம் புக்கு, வீடு, மனைவி, மக்கள், புலமாதிய கண்டதாகவும், உற்றா ருடன் உண்டுடுத்து அவர்களுக்கின்பமுண்டாகத் தான் "இனிப் படுகளத்தை எட்டிப் பார்ப்பதில்லை யென்று சத்தியம்செய்து கொடுத்ததாகவும், இன்ன பிறவும்' கனவிற்கண்டு களித்து, விடிந்ததும் ஏங்கிவருந்து கின்றான். இப்பரிதாப சம்பவத்தைக் கவி பின் வரு மாறு கூறுகிறார்:—]

காரிருள் [1] கவிய, விண்ணிற
 காவல்செய் வீரர் போன்று
தாரகைக் கணங்கள் நிற்பச்,
 [2] சமர்நிறுத் திடஎம் காளம்
[3] பேரிசை செய,மண் ணில்பல்
 போர்தளர் வினிற்சாய்ந் தார், [4] எய்த்
தோர் உறங் கிடவும் காயம்
 உற்றவர் சாகு மாறும்.

உயிரிலா உடற்கண் ஓநாய்
 உறு[5] துறுத் திடுகா வல்தீக்
கயலுள எனது வைக்கோல்
 அணையினில் [6]அவ்விரா யான்

* இது தாமஸ் காமெல் (Thomas Campbell) என்ற ஆங்கிலப்புலவர் இயற்றிய "The Soldier's Dream" என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு.

[1] கவிய = மூடிக்கொள்ள; [2] சமர் = யுத்தம்; [3] பேரிசை செய = முழங்க; [4] எய்த்தோர் = களைத் தவர். [5] உறுத்திடு = பயமுறுத்துகின்ற; [6] அவ் விரா = அந்த இராத்திரியில்;

துயில்கையில் கள்ளி ராவில்
தோன்றிய நின்க ஞஒன்
[1] றயர்வற விடியும் முன்னர்
அதனைமும் முறைகண் டேனே !

படுகளம் தன்னில் மேவு
பயங்கர அணியின் நீங்கி,
நெடுமிகு தொலை,எ காந்த
நெறி [2] சரத் காலத் திற் [3] செஞ்
சுடர்உதித் திடஎன் முன்னோர்
தொல்பதி செல்லும், இன்ப
முடன் [4] அவண் உற்றோர் என்னை
உபசரித் ததுபோற் கண்டேன்

களிதரு வாழ்நா ளுக்கோர்
காலையம் பொழுதா யுள்ள
இளமையிற் பல்கால் யான்செல்
இன்பமார் வயலை நோக்கி
மளமான வெனச்சென் றேன்யான்
மலையில்மேய் என்வெள் ளாடு
களின் [5] கனை குரலும் [6] மள்ளர்
களின்குர வையும்யான் கேட்டேன்.

பின்புயாம் உண்டு வாழ்த்துப்
பெற்றனம். அன்பினல் யான்,
தன்புறு வீடு சுற்றம்
துறக்கிலேன் எனச் [7] சூள் செய்தேன்.
இன்பொடா யிரம்முத்தம் என்
இளமகார் இட்டார் ; இல்லாள்
அன்புள மனம் பூரித்தே
[8] ஆரறினள் வடித்துக் கண்ணீர்.

"இளைத்துநீ எய்த்தாய் எம்மோ
டிருத்தி" என் றன்னோர் வேண்டக்
களத்தினிற் களைத்த யானும்
களித்தமர்ந் தேனே ! வெள்ளி
முளைத்ததும் துன்பே மீண்டும்
மூண்டது. கனவிற் காதிற்
[9] றிளைத்த சொல் யாவும் அந்தோ !
தேய்ந்துரு கினவே அம்மா !

ம. கோபால கிருஷ்ணையர்.

---

[1] அயர்வற = சோர்வின்றி; [2] சரத்காலம் = இலையுதிர்காலம். [3] செஞ்சுடர் = சூரியன். [4] அவண் = அங்கே; [5] கனை = சப்திக்கின்ற; [6] மள்ளர்கள் இன் குரவை = உழவர்களின இனிய குரவைப்பாட்டு. [7] சூள் = சபதம்; [8] ஆர்றினள் = தேம்பி அழுதாள் ; [9] திளைத்த = அனுபவித்த.

THE SOLDIER'S DREAM.

Our bugles sang truce for the night cloud had lowered,
And the sentinel stars set their watch in the sky;
And thousands had sunk on the ground overpowered,
The weary to sleep, and the wounded to die.

When reposing that night on my pallet of straw,
By the wolf-scaring faggot that guarded the slain,
At the dead of the night a sweet vision I saw,
And thrice ere the morning I dreamt it again.

Methought from the battle-field's dreadful array:
Far, far I had roamed on a desolate track;
'Twas Autumn,—and sunshine arose on the way
To the home of my fathers, that welcomed me back.

I flew to the pleasant fields traversed so oft
In life's morning march, when my bosom was young,
I heard my own mountain goats bleating aloft
And knew the sweet strain that the corn reapers sung.

Then pledged we the wine-cup, and fondly I swore,
From my home and my weeping friends never to part.
My little ones kissed me a thousand times o'er,
And my wife sobbed aloud in her fulness of heart.

Stay, stay with us—rest, thou art weary and worn;
And fain was their war-broken soldier to stay
But sorrow returned with the dawning of morn
And the voice in my dreaming ear melted away.

ABOUT DEATH.

Some men make a womanish complaint that it is a great misfortune to die before our time. I would ask what time. Is it that of Nature? But she indeed has lent us life, as we do a sum of money, only no certain day is fixed for payment. What reason then to complain if she demands it at pleasure, since it was on this condition you received it?

Men fear death, as children fear the dark; and as the natural fear in children is increased by frightful tales, so is the other. Groans, convulsions, weeping friends, and the like show death terrible; yet there is no passion so weak but conquers the fear of it, and therefore death is not such a terrible enemy. Revenge triumphs over death, love slights it, honour aspires to it, dread of shame prefers it, grief flies to it, and fear anticipates it.

No evil is honourable, but death is honourable; therefore death is not evil. Death is the quiet haven of us all.

சாவைப்பற்றியது

அகால மரணம் மிகுந்த துர்அதிர்ஷ்டம் என்று சிலர் காரணமில்லாது முறையிடுகின்றனர். சாருங்காலம் தான் யாது என்று கேட்கவேண்டும் என்று தோற்றுகிறது. அது ப்ரகிருதியில் ஏற்பட்ட காலமா? நாம் பணத்தைக் கடன் கொடுப்பதுபோல அவள் நமக்கு வாழ்க்கையை அளித்திருக்கிறாள் : ஆனால் திருப்பிக் கொடுக்க வேண்டிய காலம் மாத்திரம் குறிப்பிடவில்லை. இந்த உடன்படிக்கைப்படி நாம் அதைப் பெற்றுக்கொண் டிருப்பதால் அவள் விரும்பிய பொழுது நமது உயிரைக் கேட்கிறாள் என்று முறையிடக் காரணம் யாது உள்ளது?

குழந்தைகள் இருட்டுக்கு அஞ்சுவதுபோல மனிதர் சாவுக்கு அஞ்சுகின்றனர். அவைகளிடம் இயற்கையாயுள்ள பயம், பயங்கரமான கதைகளால் வளர்வதுபோல,சாவு விஷய பயமும் வளரும். முக்கிமுனகுதல், வலிப்புக்கள், அழும் தோழர்கள், இவைபோன்ற மற்றவைகள் சாவைப் பயங்கரமாக்கி விடுகின்றன. ஆயினும் நமது ஆவேசங்களுள் மரண பயத்தை வெல்லத் திறனில்லாத அவ்வளவு பலம் குறைந்தது ஒன்றுகூடவில்லை. ஆதலால் சாவு மிகப் பயங்கரமான எதிரியல்ல. பழிக்குப்பழி வாங்கல் மரணத்தை அடக்கி ஓங்கிநிற்கும் ; காமம் இதை அலக்ஷியம் செய்யும், மேன்மை இதை விரும்பும், வெட்கம் வருமே என்ற பயம் இதை நன்கு மதிக்கும், துக்கம் இதையே கதி என்று அடையும், பயம் இதை எதிர்பார்க்கும்.

தீமை ஒன்றுக்கும் மேன்மை இல்லை. மரணத்திற்கு மேன்மை உண்டு. ஆதலால் மரணம் தீமையல்ல. மரணம் நாமெல்லோரும் ஓய்ந்து நிற்க ஏற்பட்டுள்ள தங்குமிடம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்தியாயம் 18

சாஸ்திரியின் ஸமாதி

அனுபவா னந்த வெள்ளத் தழுந்தியே யகண்டமாகித்
தனுகர ணங்க ளாதி ஸகலமும் இறந்து சித்தாய்
மன துபூ ரணமாய் தேஹ மானஸத் குருவுங் காண [ன்.
நனவினிற் ஸுஷுப்தி யாகிநன்மகன் ஸ்வபாவ மானு

திரிசிரபுரம் மலைக்கோட்டையி லிருக்கும் கோயில் சிறியதாயினும், மிக ஒழுங்காகக் கட்டப்பட்ட கோயில்களில் அது ஒன்று. அதனுள் ஒருவன் புகுந்துவிட்டால், அவ்வூரில் ஸாதாரணமாகக் காணப்படும் சந்தை இரைச்சல் தூசி இவைகளை விட்டு முற்றிலும் நீங்கி உயரச் சென்று,கடவுளும் தானுமாகத் தனித்துச் சற்று நாழிகை நிற்க விடமுண்டு என்பதை உணரலாம். அதன் அழகிய தோற்றம்,புராணகதா ஸம்பந்தம்,ஆகிய இவைகள் ஒருபுற மிருப்பினும், அதனுடன் விசேஷ விஷயம் ஒன்று ஸம்பந்தப்பட்டுள்ளது. இதுவே மற்றவைகளைவிட வெகு சிறந்ததாகத் தோற்றுகிறது. அதாவது, இங்கெழுந்தருளி இருக்கும் கடவுள் பெயரைத்தாங்கிய தாயுமானவர் என்ற ஒருமஹான் ஸமாதி பழகிஇக்கோயிலுள்ளேயே ஸித்திபெற்றார், என்பதே. ஸந்நிதான விசேஷம் சிறப்பு முதலியவைகள் வாய்ந்த திருக்கோயிலுள் வாஸுதேவசாஸ்திரி புகுந்துவிட்டார், ஸ்ரீநிவாஸன் அங்கிருக்கலாம் என்று எண்ணி, உள்ளே புகுந்ததுதான் தாமதம். மெய்ம்மறந்து, தாயுமானவர் முதலிய மஹான்கள் அனுபவித்த ஸ்வானுபவக்கடலில் மூழ்கிவிட்டார்.நாராயணய்யர் மாப்பிள்ளையாகிய ஸ்ரீநிவாஸனைத் தேடிச் சென்றவர் அங்கு ஸ்ரீநிவாஸன், மற்றும் உள்ள எல்லா ப்ரபஞ்சத்திற்கும் மூலமாகிய நிஜஸ்ரீநிவாஸனைக் கண்டுவிட்டார். இவ்வாறு வெகு நாழிகையானதும் உலகப்ரஞ்ஞை வந்துவிட்டது. உடனே தான் தேடிவந்தவன் அங்கு இருக்கிறானா என்று பார்த்தார். அங்கு அவனைக் காணமல் போகக் கீழே இறங்கிப் பட்டணத்துள் வந்து தற்செயலாய் ஸ்ரீநிவாஸன் உண்டுபோன சாப்பாட்டு விடுதிக்

கே வந்து சேர்ந்தார். சாப்பாடானதும், அங்குள்ள ஒருவருடன் பேசிக்கொண்டு வருகையில் ஸ்ரீநிவாஸன் போன்ற ஒருவன் ஸுகானுபவ யாத்திரையாக ஸ்ரீரங்கம் நோக்கி அங்கிருந்து சற்று முன்பு புறப்பட்டுப் போனான் என்று தெரியவந்தது. ஸ்ரீனிவாஸன் இயற்கையில் இம்மாதிரி குசால் புருஷனல்லாததால் வாஸுதேவ சாஸ்திரிக்கு இதில் நம்பிக்கை வரவில்லை. ஆயினும் அவருடன் பேசியவர் கூறிய அடையாளங்கள் ஸ்ரீநிவாஸனதாகவே இருந்ததால், அப்படி ஸ்ரீரங்கம் போனவன் யார் என்று தாமே கண்டறிய வேண்டும் என்று சாஸ்திரிக்குத் தோற்றியது. உடனே ஒரு வண்டி அமர்த்திக்கொண்டு வாஸுதேவ சாஸ்திரி ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டார்.

அன்றிரவு நிலவு பட்டுப்போல் காய்ந்தது. வெகு தூரத்தில் மிகப்பெரியதும் பழமையுமான ஸ்ரீரங்கம் கோபுரம் கம்பீரமாகத் தென்பட்டது. இந்த ஸ்தலம் வைஷ்ணவர்களுக்கு வெகு விசேஷமானது: மிகச் சிறப்பு வாய்ந்தது என்று பொதுவாகக் கருதப்பட்டது. அந்த நிலவொளியில் வானுற ஓங்கி நிமிர்ந்து நின்று ‘இங்குதான் பரம்பொருளாகி ஸ்ரீரங்கநாதர் யோகநித்ரையிலிருந்தும், நக்ஷத்திரராசி, அளப்பரும் ஆத்மாக்கள் முதலியன சேர்ந்து அனந்தானந்தமாகி நிற்கும் ப்ரபஞ்சங்களை ஆண்டு வருகின்றனர்’ என்று பக்தகோடிகளை நோக்கி மௌன ப்ரஸங்கம் செய்யும் தேவதைபோலு மிருந்தது அக்கோபுரம். ஸ்ரீநிவாஸன் இவ்வழியே போனபொழுது, கோபுரத்தின் காம்பீர்யம், பரிசுத்தம் முதலியவைகளில் சற்று ஈடுபடாமலிருக்கவில்லை. ஆயினும் கடவுளிடம் கடுஞ்சினம் கொண்டிருந்தமையால் மனதைப் பறிகொடுக்க இசையாது, நிரபராதியான கடவுளுக்கு வசவு மாலைகளை வாயாரச் சாற்றினான். அவஸ்தாத்ரயாதீதமான உறக்கத்தில் இருந்ததால் ஒருவேளை இவைகளைச் செவியுற்றிராமலிருந்திருக்கலாம் அப்பிரான்.

இவ்வாறு வசவுகளை விசிறி எறிந்து ஸ்ரீநிவாஸன் போய்விட, அரைமணி நேரத்திற்குள் சாஸ்திரியும் அங்கு வந்து சேர்ந்தார். வண்டிக்காரனை நிறுத்தும்படி சொல்லிக் கீழே இறங்கி அந்த உன்நத கோபுரத்தைத் தரிசித்தார். அது பூமியில் நிலைத்து மோக்ஷம்பெற முயலும் தன்னைப்போலிருப்பதாகத் தோற்றியது. அவருக்கு சேஷசயன ரஹஸ்யத்தை மௌனப்ரஸங்கம் செய்வதுபோலத் தோன்ற அவருக்குக் கண் மூடிவிட்டது. ‘ஆ பரம்பொருளே! அஞ்ஞானிகளுக்கும் குதர்க்கிகளுக்கும் உறங்குபவர் போலவிருந்து பக்தர்களுக்கும், மஹான்களுக்கும் விழித்திருப்பவரே! உமது மூச்சுக்காற்றால் ஓடி பரந்த அண்டங்களையும் அடக்கி யாளுகிறீர்; உறக்கத்திலிருப்பினும் ப்ரபஞ்ச பாலனராக விருக்கிறீர் ஞானிகள் எவ்வளவு மூழ்கிக்குடித்தும்போதும்என்றதிருப்திதராதிருக்கும் தன்மைவாய்ந்த பாற்கடலே உமதுகோயில்,இருப்பிடம். நீர்தான் என் அந்தராத்மா, என்? என் ஆத்மா தானே நீர்’ என்று தமது வாக்கை எழவொட்டா அராமை நிறைந்த மனத்திலிருந்து நேராகக் கதித்தெழுந்த கனிவான மொழிகளை வெளியிட்டு கோபுரம் போலத் தானும் பூமியில் வேரூன்றி அசைவற்று நின்றுவிட்டார். அரைநொடியில் கோபுரம், அந்தரத்திற் சுற்றும் அண்டகோளங்கள் முதலியவைகளுக்கு அப்பாற்பட்டு பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனோடு தானும் சற்று உறங்கி ‘நீயே நான்; நானே நீ’ என்று தனக்கும் அவருக்கும் அபேதமாகக் கூறத்தக்க இரண்டற்ற நிலையில் அமர்ந்து விட்டார். இவ்வாறு கொஞ்ச நாழிகை மோனாராதனம் செய்துவிட்டு விழித்து வண்டியில் ஏறிக்கொண்டு விசாலமான அவ்வூர் வீதிகளில் சென்றார். எங்கு போவது என்று ஒன்றும் தோற்றவில்லை அவருக்கு. இப்படி இருக்கையில் எதிரே கொஞ்சதூரத்தில் ஒரு நேர்த்தியான கல்யாணப் பந்தல் தென்பட, அதிலிருந்து வெளிப்பட்டுத் தவழ்ந்து வரும் இனிமையான பாட்டும் அவர் காதில் விழுந்தது. அவர் உடனே கீழே இறங்கி வண்டியை அனுப்பிவிட்டு கால்நடையாகவே ‘ஒருவேளை ஸ்ரீநிவாஸன் இங்கு இருக்கலாம்’ என்று எண்ணமிட்டுக்கொண்டு அந்தப் பந்தலை நோக்கிச் சென்றார்.

ஞாநிக்குப் பிறந்த விடத்திற் பூஜ்யதை இல்லை.— எந்த ஞாநியை அதிகமான சிஷ்யர்கள் பயபக்தி விசுவாஸங்களுடன் கௌரவித்து அவன் சொற்படி நடக்கின்றார்களோ அவனிடத்தில் அத்தகைய மஹிமைகளில்லாதவனிடத்திற் பார்க்கிலும் அதிக தரமான திவ்யசக்தி யிருப்பதாகக் கருதவேண்டும்.

—உபதேசரத்நமாலை.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ருக்மிணி அல்லது பக்திநிலை

பக்தி மலர்ந்த காதை

காலை வெயிலில் கதிர்கள் பொன்போல் விளங்கும் பண்ணை நிலங்களைக் கடந்து சென்றார். தனதுண்மை நிலையை உணர்ந்த கருடன் மற்றும் அச்சிறு குரங்கென்றெண்ணிய அவ்வனுமாரிடம் நடுக்கம் கொண்டாராயினும் தன்னைப்பற்றிய எண்ணம் சிறிதும் குன்றாது நடந்தார். ஆனாலும் நடுக்கத்தின் வலிமையாலும் பயத்தாலும் சற்று குறைந்த எண்ணம் தனது மமதையால் விருத்தியடைந்தாலும் ஸ்ரீ கண்ணபிரானிடம் கொண்ட பக்தி வைராக்யத்தின் பலத்தினாலும் ஒடுக்கப்பட்டு திடுதிடுவென் ருத்திரத்தோடு நடந்தார். சில சமயத்தில் வேகத்தோடு போகவேண்டும் என்னும் எண்ணம் தூண்ட தடதடவென்று ஓடுவார். பின் பரந்த தன் இறகை விரித்து காற்றில் மயங்கி பறந்தோடுவார். கோடிப்பெருகி வழிந்து, வரும் வழியில் பரந்து, பார்ப்பவரது மனத்தை யிழுக்கு நிர்மலம் வாய்ந்த ஓடைகள், அவர் கண்ணிற்கு எதிரில் இருப்பினும் தெரியவில்லை. அப்பசுங்காடுபோல் பரந்த பயிர்ப்பரப்பும் அவர்கண்ணிற் படவில்லை. அச்சிறு தடாகங்களில் உலாவிவரும் மீன் கூட்டத்தாட்டம் அவர்கண்ணிற் கானந்த மூட்டவில்லை. மற்று அவ்வனுமானிடம் எவ்வாறு செல்வது என்னும் எண்ணத்தில் பாய்ந்து தன்னைப்பற்றிய எண்ணம் எவற்றையும் மறந்தார். அதை எண்ண எண்ண அவர்க்குத் தனது சிறுமையே விளங்குவதாகப் பட்டது. பின் மெய் பரவசமாகி அம்மாதவனது பெருமையும் எதிர்தோன்றி விளங்கியதாகவும் பட்டது. இவ்வாறு தன் மனமுன் பதிந்த லீலா மானுஷ விக்ரஹத்தை நினைக்குந்தோறும் வெயர்க்கும். கண்ணீர் விடும். தனக்கும் தெரியாது கூத்தாடிக் கூத்தாடி ராமா ராமா வென்று கூவி யண்டம் பிளக்க இரைச்சலிடுவார். அப்பொழுது காட்டிலிருந்த மரங்களெல்லாம் ராமா ராமா என்றே சப்தித்தன. மலையிலிருந்து விழும் நீரின் சர்சரசப்தமும் ராமாராமா வென்றே ஒலித்தது. மரங்களில் உட்கார்ந்திருந்த கிளிகளும் ராமாராமா என்றே கொஞ்சியன. காற்றெங்கும் ராமா என்னும் சப்தமே மயங்கியது. பார்த்த விடமெங்கும் கருடனுக்கு ராமனுருவன்றி வேறொன்றும் தோன்றவில்லை. மரமும் ராமனாகப்பட்டது. கல்லுமவ்வாறே தோன்றியது. அருகோடிய மிருகங்களும் ராம வுருவமாகவே பட்டன. அவர்க்கு எல்லாம் எம்பெருமானது திருவுருவாகவே விளங்கியன. அனுமாரைப்பற்றிய ஞாபகமே யவர்க்கொழிந்தது.

இவ்வாறு அத்புதமாகக் காற்றெங்கு ராம மயமாகக் கோஷிக்கக் காரண மென்னவென்று கண் திறந்து வெளிவந்த வனுமான் எதிரில் மெய்ம்மறந்து கூத்தாடும் பெரிய திருவடிகளைக் கண்டதும் “அஹோ! இம்மஹான் யாரோ? ‘எம்பெருமான் நாமம் சொல்லி உருக்கினான். உணர்வைத் தந்தான்’ என்று எண்ணி எண்ணி அப்பெரிய திருவடிகளின் பாதங்களில் வீழ்ந்து சாஷ்டாங்கமாகச் சேவித்தார். பின் அவரைத் தன் தோள்மேல் வைத்துக் கூத்தாடினார். ஆனந்தக் கண்ணீர் வடித்து மீண்டும் கருடாழ்வானை உயர்ந்த இடத்தில் உட்காரவைத்து “உமக்கெளியேன் என்ன செய்யக்கூடும். நான் ஏழை. ஒன்றும் செய்ய முடியாதவன். பெரியார்க்குத் திருத்தொண்டு செய்யவும் எனக்குக் கிடைக்குமா?” என்று சொல்லிக்கொண்டு பெரிய திருவடிகளின் ஸந்நிதானத்தில் சேவகன்போல் வாய் பொத்தி நின்றார்.

“தாங்கள் யார் என்று எனக்குத் தெரியவில்லையே. தயவுசெய்யவேண்டும்” என்றான் கருடன்.

“இந்த ஏழைக்கு அனுமான் என்று பெயர். ஸ்ரீ ராமரது சேவகன்.’

“அப்படியா. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போலாகியது.என் குருவின் வீக்ஷணம் எனக்கு நிறைந்திருக்கிறது. உம்மையேதான் தேடி வந்தேன். தங்களை அறிய முடியாமல் மயங்கினேன். என்ன மடைமை?”

“என்னைத் தேடிவரும் பாக்கியமும் எனக்குண்டோ?”

“உமக்கு இல்லாமலா?\ஸ்ரீராமர் உம்மை அழைத்து வரும்படி சொன்னார். சீக்கிரம் தயவுசெய்யும்.”

“ஸ்ரீராமரா? எனது பெருமானா? அவரெங்கே யிருக்கிறார்?”

“துவாரகையிலிருக்கிறார். உம்மை அழைத்துவரச் சொன்னார்.”

“பலராமர் அல்லவா இருக்கிறார் என்றுசொன்னார்.”

“ராமர்தான் இங்கிருப்பது. உமக்கு யாரோ தவறாகச் சொல்லியிருக்கிறார். தயவுசெய்து புறப்படும். ஆலஸ்யம் செய்யாதிப்பொழுதே புறப்படும். ஸ்ரீராமபிரான் காத்துக்கொண்டிருக்கிறார்.”

“இதோ வந்துவிட்டேன். நீர் என் தோள்மேல் உட்கார்ந்துக்கொள்ளும்; நான் எடுத்துச் செல்கிறேன். உமக்கும் சுகமாக விருக்கும். வந்து தயவுசெய்யும்.”

“நான் போய் முன் சொல்கிறேன். நீர் வந்துக்கொண்டிரும்.”

“நான் எடுத்துக்கொண்டு போவேன் வாரும்.”

“வேண்டாம். ராமர் கோபங்கொள்ளுவார். நான் முன்போய், உமது வரவைத் தெரிவிக்கிறேன். நீர் வாரும்.”

“ஸரி ஆனால் அப்படியே ஆகட்டும். நீர் போய்க் கொண்டிரும். இதோ வந்துவிடுகிறேன்.”

* * *

துவாரகாநகரத்து எம்பெருமானும் தனது ஆஸ்தான மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஈக்கள் மொய்க்கத் தேன்கசியும் துளபமாலையணிந்த எம்பெரு

மான் ஸ்ரீ வாஸுதேவன், பரமசாந்தமான இனிமை விளங்கும் இங்கிதத்துடன் நாரதனைநோக்கிக்கூறினார்:

“ நாரத ! இனியந்த பரமபக்த சிகாமணி, அஞ்சனை மகன், அநுமான் இங்கு வந்துவிடுவான். அவன் வருவதற்கு முன் தக்கவிதம் நாமும் இருக்கவேண்டும். சதுர் புஜத்துடன் ஸ்ரீராமதர்சனம் தருவதாக நான் பூர்வஜன்மத்தில் அவ்வநுமானுக்கு வரமளித்திருக்கிறேன்.யான் இப்பொழுது யாரை சீதையாக வரும்படிச் செய்வது? அச்சீதையின் உத்தம குணங்கள் பொருந்தியவள் என் மனையாட்டிகளில் யார்? எனக்கு யாரை வரச்சொல்லலாமென்று தோன்றவில்லை. உனக்கு யாரைச்சொல்லலாமென்று தோன்றுகிறது? அண்ணா உனக்கு என்ன தோன்றுகிறது.”

“ நீங்களறியா விஷயம் எனக்கு எப்படித் தெரிய முடியும் ?” என்றான் ஸ்ரீ நாரதன்.

“ ஆமடா கிருஷ்ணா! எத்தகையவள் உனக்கு வேண்டு மப்பா ?” என்றார் பலராமர்.

“ அந்த உத்தம குணம்வாய்ந்த சீதை, அழகிற்கினிமை யூட்டும் அழகு வாய்ந்தவள். அவளே அணிகளுக்கெல்லா மருங்கலம். அவளது அவதாரத்தை யடையக்கூடிய என் மனையாட்டி யாரென்று உங்களால் சொல்ல முடியுமா ?”

“ என்ன இவ்வளவு உங்களுக்குக் கஷ்டம் வந்துவிட்டது. வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கழுவாருண்டோ ? ஹா ! அச்சுதா உம்மருகில் எப்பொழுதும் அகலாது ஆவலுடன் திருத்தொண்டு செய்துவரும் சத்தியபாமையைக் காட்டிலும் உயர்ந்த மடந்தையு முண்டா ? அவளழகிற் கிணையுண்டா ? அவள் வீராப்பிற் கெதிருண்டா? அவள் வாக்கின் நயத்தின் இனிமையைக்காட்டிலும் அமுதமுயருமா ? எனக்கப்பிராட்டியாரே தக்காள் என்று தோன்றுகிறது. உங்களுக் கிணையாக இருக்கக்கூடியவர் அவ்வம்மையாரே எனத் தோன்றுகிறது ” என்றான் ஸ்ரீநாரதன்.

“ கிருஷ்ணா! அவள்தான் உனக்குச் சோடி. அவளே சீதையைக்காட்டிலும் உயர்வாக விளங்கக் கூடியவள்” என்று பின்பாட்டு பாடினார் சங்கர்ஷணபகவான்.

“ எனக்கு அவள் சரியாயிருப்பாளா என்று ஐயமுண்டாகிறது,” என்றார் கிருஷ்ணர்.

“ அந்த நரகாசுர விஜயகாலத்திலும் அப்படித்தான் சொன்னீர். அவள்தானேகடைசியாக உதவிசெய்தது” என்று நாரதர் தடுத்தார்.

“ என்னடா அப்பா ! சத்தியபாமையைக் காட்டிலுமுயர்ந்தவர்கள் யாரடா! ருக்மணி பயமுடையவள். கோழை மனத்தாள். சமயத்திற்குத் தகுந்த விதம் நடக்க அவளால் முடியாதென்று எண்ணுகிறேன். சமயோசிதமாக நடக்கக்கூடியவள் இவள்தான். உனக்குத் தெரியாதிருக்குமா? ” என்று பலதேவன் பதிலளித்தான்.

“ ‘மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்’ என்று இப்பொழுதுதான் தெரிகிறது. அண்ணா! தாங்கள் சொல்லிய விதமே,பாமையையே சீதையாக வரச்செய்வேன். நாரத ! நீர் சென்று அவளைத் தகுந்தவிதம் வரும்படியாகச் செய்யும். உமது நண்பன் வரும் காலமாயிற்று. அண்ணா ! தாங்களும் இந்தக் கோலங் களைந்து தக்கவிதம் இரும்.”

நாரதர் சத்தியபாமையிடம் போனார்.

* * *

“ அம்மணீ ! தங்களை சீதையாக வரவேண்டுமென்றார் எம்பெருமான் ” என நாரதன் மொழிந்தான்.

“ சீதையாக வரவேண்டுமா ? அப்படி என்றால் என்ன ? ”

“ சீதைபோல வரவேண்டும். ”

“ சீதை,—யாரவள் ? ”

“ ராமன் மனைவி. இது உமக்குத் தெரியாதா ? ”

“ அவள்போல் வேஷங்கொண்டா வரவேண்டும் ? அவர்க்கு என்ன வேலை ஒன்றுங் கிடையாதா ? நான் கூத்தாடியா வேஷங்கொள்வதற்கு? நன்று ! நன்று !”

“ நன்றோ, நன்றில்லையோ எனக்கு எப்படித் தெரியும். ஸ்ரீ பரந்தாமன், வாசுதேவன் ஸ்ரீராமரது வேஷங்கொண்டு விளங்குகிறார். உமக்காகக் காத்திருக்கிறார். புறப்படும்.”

“ நான் வரவேண்டுமோ என்றா? என்னுடன் விளையாடாதே. எப்பொழுதும் சிறுபிள்ளைபோல் விளையாடுகிறையே. இது உனக்கு அடாது !”

“ சரிசரி ! உங்களுடன் வாதாடுவதற்கு எனக்குப் பொழுதில்லை. நீங்கள் வருகிறீரா, இல்லையா ? நான் போய் சொல்லிவிடுகிறேன் ” என்று அடிபெயர்க்கலானார் ஸ்ரீ நாரதர்.

“ ஹா ! நாரதா ! கோபித்துக்கொள்ளாதிரும். நான் வந்துதான் ஆகவேண்டுமா ?”

“ அப்பொழுது முதல், நான் சொல்லியதெல்லாம் என்ன ? நீங்களில்லாவிட்டால் அவருக் கெப்படி முடியும் ?”

“ அப்படியா ? அது உண்மைதானா ?”

“ஆஹா! அது உண்மையில்லாம லிருக்கமுடியுமா?”

“அப்படியானால் நான் வந்துதான் தீரவேண்டும்?”

“ ஆமாம்.”

“ ஆனால் அந்த சீதை எப்படி யிருப்பாள் ?”

“ வெகு அழகியவள், ‘ மண்ணினும் நல்லள். மலர் மகள் கலைமகள் கலையூர் பெண்ணினும் நல்லள்.பெரும் புகழ்ச் சானகியோ நல்லள்’என்று அல்லவோ சொல்லுவார்கள்.”

“ என்னைக்காட்டிலு மழகியவளா ?”

“ அவளது அழகை என்னால் அறிய முடியுமா ? என்னால் எப்படி அறியமுடியும். அழகியவள் என்று தான் சொல்லுவார்கள்.”

“ ஆனால் நீ போ. இதோ நான் வந்துவிடுகிறேன். நான் இங்கு சொல்லியதெல்லாம் அங்கு சொல்லித் துலைக்கப்போகிறாய். பத்திரம். மூட்டையை அவிழ்க்காதிரும். தெரிந்ததா?”

“தெரிந்தது.நீர் வருகிறவரையும் வாயைத்திறப்பதே கிடையாது”என்று சொல்லிக்கொண்டு நாரதன் ஓடிவதுபோல் பாசாங்கு செய்துகொண்டு பாமைக் கண்டு நகைக்க வேகத்தோடு போவான்போல் ஓடினான்.

சத்தியபாமையும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை உடம்பிற்கு நகையால்கவசமிட்டு,நெற்றியில் கஸ்தூரி திலதமிட்டு, புருவங்களில் மைதீட்டி, உடல் முழுதும் மொகுமொகென வாசனை வீச பூச்சணிந்து, உயர்ந்த பீதாம்பரமணிந்து வீட்டில் ஒரு நகையாவது, வாசனைபொருளாவது வைக்காது எல்லாம் தன் உடலிலேயே சேமித்து, கொழுத்த காளைமாடு திமிலசைய மதத்துடன் வருவதுபோல் அடிமேல் அடிவைத்துக்கொண்டு, மதயானை வந்தாற்போல எதிரிலிருப்பவர் யாரையும் கணிசியாது சபை நடுவே வந்து நின்றாள். அந்தகோலத்திலவளைக் கண்டவர் யாருமவளைச் சத்தியபாமை என்று அறிய முடியவில்லை. சபையில் வந்தும் யாரும் தன்னைக் கவனியாததைக் கண்ட சத்தியபாமை ஆத்திரத்துடன் “இது என்ன விசித்ரம். சபையிலிருப்பார்யார்க்கும் தெரியவில்லையா” என்றுமொணமொணத்துக் கொண்டிருந்தாள்.

“ அங்கு யார் நின்றுகொண்டிருப்பது பாரும்” என்று கண்ணபிரான் நாரதரை வினவினார்.

“ எனக்கு யார் என்று தெரியவில்லை. அறியவும் முடியவில்லை.”

“ அண்ணா உனக்குத் தெரிகிறதா?”

“ எனக்குந் தெரியவில்லையப்பா ” என்றார் பலதேவன்.

“ என்ன! சாத்தகீ! உனக்கவள் யார் என்று தெரிகிறதா?”

“ அண்ணா எனக்கவள் யார் என்று தெரியவில்லை. போட்டுக்கொண்டிருக்கும் வேஷத்தைப் பார்த்தால் பெரியடாம்பீக பெருமாட்டியாகத்தான்தோன்றுகிறது. கூத்தாடி வேஷமாகவல்லவா இருக்கிறது” என்று விடை பகர்ந்தனன் சாத்தகியும்.

அனிருத்திரன் கிளம்பி “ இந்தக் கோலம் ஸம்ஸாரிகள் செய்துக்கொள்ளுவார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை !” என்றான்.

இதை எல்லாம் பார்த்திருந்த அர்ச்சுனன் “ கேவலம் ஒரு ஸ்திரீயைப் பரிகாசம் செய்வது நியாயமல்ல. யாராயிருந்தாலென்ன? ராஜஸபையில் வந்தவரை இன்னார்என்று அறியாது வாயில்வந்தவிதம் பேசிவிடுவதா? நன்று ! நன்று ! நாக்கிற்கு நரம்பு கிடையாதா? வெகு அழகு”என்று எல்லாரையும் எடுத்தெறிந்து பேசினான்.

இதற்குள் நாரதர் பக்கத்திருந்த சேவகனைப் போய் “ அந்தம்மாள் யார் என்றுவிசாரித்துவா” என்றனுப்பினார்.

அவனு மப்படியே கேட்டான். சத்தியபாமையின் கண்கள் கோவைப்பழம்போல் சிவந்தன. ரத்தம் தெறித்தன. அவளும் மேன்மேல் மூண்ட ஆத்திரத்தைப் பொறுக்க முடியாது அரற்றினாள்:

“ வெகு அழகு ! கேவலம் அவமானம் அடைவதற்கா நான் இங்கு வந்தேன்! இந்தக் கோமாளிப் பயல் நாரதன் விஷமமா இது. உன் விஷப்பல்லை ஒரு நிமிஷத்தில் எடுத்துவிடுகிறேன். இதுவும் உனக்கு ஒரு வேடிக்கையா”என்று நாரதனைச் சுட்டிக்கூவினாள்.

நாரதனும் “ என் விஷப்பல்லையா ? அப்படியே செய்யலாம். தாங்கள் யார் ? எனக்குத் தெரியவில்லை. நான் உங்களுக்கென்ன அபராதஞ் செய்தேன் ?” என்று மறுத்தார்.

“ நான் யாரென்று தெரியுமா ? உனக்கெப்படித் தெரியும்? சீதை தெரியுமா ? ”

“ சீதைதெரியாதா ? சீதையைத் தெரியாது நான் இருக்க முடியுமா ?”

“ எதிரிலிருக்கும் சீதையை யறியாதிருப்பதே சாட்சி சொல்லுகிறதே ! சீதை யிவனுக்குத் தெரியுமாம்!”

“ எதிரிலிருப்பது சீதையா ? என்ன தலைகீழாகவல்லவா இருக்கிறது. கல்லும் புல்லும் கண்டுருகும் படியான அந்தப் பெண்கனி என்று இந்த திவ்ய மங்கள விக்ரஹத்தை எண்ணவேண்டுமாம் ?—என்ன! சீதையா ?—” என்று எழுந்து மெதுவாக நாரதர் பாமையிடம் வந்தார்.

“ அடேயப்பா ! ஹா ! பரந்தாமா ! இது யார் உமக்குத் தெரியுமா ? தெரிந்ததா ? ”

“ யார் அப்பா அது ? ”

“ தங்கள் உத்தம மனையாட்டி, நாரீரத்னமாகிய சத்தியபாமை யம்மாள்.”

“ சத்தியபாமையா ? ”

“ ஆம். சத்தியபாமைதான். ”

“ என்ன பேசுகிறாய் ? இவளா சத்தியபாமை? எனக்கு நம்ப முடியவில்லை. அவள் சீதையாகவல்லவா வந்திருப்பாள்.”

“ சீதையாக வராமல் என்னமாக வந்திருக்கேன். உங்களுக்குத் தெரியவில்லையா ?” என்று மறுத்தாள் பாமை.

“ சீதையாகவா வந்தாய் ! இந்தப் பேதையுருவம் சீதையாகுமா ? ஏனப்பா நாரதா நீ சீதையைக் கண்டிருக்கிறாயே இப்படியா இருந்தாள் ? ”

“ சீதையா ? யார் இவரா ? தலை கீழாகவல்லவா தோன்றுகிறது. சீதைக்கிவ்வளவு டம்பம் தெரியுமா ? இந்த நகைப்பயித்தியமாகவாக அவளிருந்தாள். அவளழகிற்கு நகைகளும் வேண்டுமா என்ன ? அப்பெருமாட்டி எங்கே இந்தம்மாளெங்கே. மொட்டைத்தலைக்கு முழந்தாளுக்கு முடிபோட்டாற்போல வல்லவா இருக்கிறது ? எல்லாம் தலை கீழாக இந்தம்மாளிடம் விளங்குகிறது! இதை நான் சொல்லி யவதிப்படவேண்டுமா? அப்பொழுதே என்னை வாயைத் திறக்கக்கூடாதென்று ஆணையிட்டு இருக்கிறாள். நான் இனிப் பேச முடியாது ”

“ என்ன சத்தியபாமை! உனக்கு சீதை இப்படி இருப்பாள் என்று தெரியாதா ? மஹா புத்திசாலியாச்சே. அழகிற் சிறந்த நீ சீதைக்குகந்தவித மிருப்பாயென்றெண்ணினேன். இதென்ன அவன் சொல்லியவிதம் எல்லாம் தலைகீழாகவே இருக்கிறது.”

"இப்பொழுதென்ன கெட்டுப்போயிற்று கிருஷ்ணா! கோபித்துக்கொள்ளாதே. அநுமார் அவ்வளவு தூரம் வரச் சற்று நேரம் ஆகும். சத்தியபாமை! நீ போய் ஸரியான கோலத்துடன் வா. சீக்கிரம் போ" என்றெச்சரித்தார் பலபத்திரர்.

சற்று மௌனத்துடன் பாமை யிருந்தாள். பின்னும் அலாயுதன் தாண்ட "இது என்ன கிணறு வெட்ட பூதம் புறப்படுகிறது. நாம் ஏதோ சுகமாகத்தானிருக்கும் என்றெண்ணி யிருக்கக் கஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டுவிட்டோம். அந்த சீதைக்குச் சரியாக ஆபரணங்கள் அணியத் தெரியாது போலிருக்கிறது. ஆகையால் இப்பொழுது சென்று அந்த நாரதன் சொல்லியவிதமே நம் இஷ்டத்திற்குத் தலைகீழாகச் செய்வோம். அப்பொழுதென்னை எப்படி யவர் ஏமாற்ற முடியும். நான் அவரை ஏய்த்துவிடுகிறேன்" என்றெண்ணிக்கொண்டு உடல் குலுங்க, நூபுரங்கள் ஒலிக்க, மனத்துவேகத்தை நடைவிளக்க, கிடுகிடென தனதந்தப்புரம்வந்து,கையணியை தாளில் பூண்டு, மேகலையை மார்பிலணிந்து, கைவிரல் மோதிரங்களைக்காலில் மெட்டியாகப்பூண்டு,மெட்டியைக் கணையாழியாக விரலிலணிந்து, கழுத்திலிருந்த பொன்னாரத்தை உதிரபந்தமாக்கி, உதிரபந்தத்தைக் கைபிருது போலணிந்து,வாகுவலயத்தைக் காலிற்பூட்டி தன்னுள்ளங்குளிர தனதுருவைக் கண்ணாடியிற் பார்த்துப் பார்த்து நகைத்து "இந்த உருத்தான் அவர்க்குப் பிடிக்கும். வெறியர்க்கானந்த மூட்டும் உருவிப்படித்தான் இருக்கவேண்டும்.காட்டிலலைந்தவர்க்குக்காலணி கையணி என்றெப்படி அறியமுடியும்? அவர்க்கெல்லா மொன்றாகத் தோன்றும். இப்பொழுது கிருஷ்ணன் என்னைக் கண்டதும் லாகவம் கொடுத்து சீதா! வா! என்றுரைப்பன்" என்று எல்லாரையும் பரிபவப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் வெகுவாத்திரத்துடன் சபையில் இருந்தவர் எல்லோரும் கொல்லென்று காதாளத்துடன் சிரிக்க உள் நுழைந்தாள்.பார்த்தார் கிருஷ்ணர். பின்வருமாறு கூறினார் :

"பலே! பலே! உன் புத்தியே புத்தி! என் அண்ணா! இந்த உருவத்தைக் கண்டால் அந்த அரசமரமேறிய பேயும் ஓடிவிடாதா? அதற்கொன்றுஞ்சந்தேஹம் கிடையாது. வரவர மாமியார் கழுதை போலானாள் என்ற கதையாய் முடிந்தது. என்ன நாரதா! நீயாவது அவளுக்குச் சீதையின் உருவத்தின் ஸ்வரூபத்தைக் சொல்லக் கூடாதா?"

"நான் வாய்திறக்கவே போகிறதில்லை."

"என்ன கிராக்கியிது. நான் சொல்லுகிறேன்" என்று வர்ணிக்கலானார் பக்கத்திலிருந்த ஜாம்புவான்.

"அந்த உயர்ந்த குணம் வாய்ந்த சீதை சாதாரணமாகிய உடையே தரிப்பவர். நகைகளைப்பற்றியபயித்தியம் அவர்க்குக் கிடையாது.அவரது அழகால் அணிந்த நகையு மழகடையும். நாணத்திலவர்க்கு ஸமானமில்லை கர்வமென்பதே அறிந்தவரல்ல. அவருக்கு ஸமானம் யாருங் கிடையாது. க்ஷத்திரிய குலத்திலுதித்தவள். வெகு உத்தமி. சீலை. பெரியவள். தவறு மொழியாத வாய்மை யுடையவள் * * * * *"

"நிறுத்தும். நிறுத்தும். அம்மாள் அவர்கள் இவ்வளவுக்குள்ளே எல்லாமறிந்திருப்பர். வீண் காலதாமஸம் செய்யாதிரும். அநுமார் வரும் வேளையாயிற்று. சத்தியபாமையம்மாள் இனிச் சரியான கோலத்துடன் வந்துவிடுவாள். முதல் தப்பினால் மூன்றில் சரியாய் விடும்" என்றார் நாரதர்.

சத்தியபாமை இதை எல்லாம் கேட்டதும் மனம் நொந்து எந்தவிதமாக வரவேண்டுமோ என்றறியாது திகைத்து தனதாடை எல்லாம் களைந்து எறிந்துவிட்டு ஒரு சிறிய வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டு தாலிதவிர மற்றெல்லா நகைகளையும் உதிர்த்துவிட்டு ஓடிவந்தாள்.

"ஸரி. ஸரி. இதுவும் ஒரு வேஷமா! உங்களுடைய வார்த்தையைக் கேட்டல்லவா மோசம் போனேன். அதோ அநுமாரும் வரும் சமயமாய்விட்டது. இவருடன் மாரடிப்பது யாரால் முடியும்" என்று பலராமனையும் நாரதரையும் பார்த்து இரைச்சலிட்டான் வாஸுதேவன்.

இதைக்கண்டதும் பாமையின் உடல் முழுதும் நடுங்கிற்று. வருவதற்குள் அடிபெயர்க்கவும் முடியவில்லை. அசைந்து நின்றுவிட்டாள்.

"அநுமாராம், அவர் பெயர். ஒருவர் வந்து தெருவில் காத்துக்கொண்டிருக்கிறார்" என்றான் அங்கு வாயில் காப்போன்.

"என்ன நாரதா நான் முன்னமே சொன்னேனே, எனக்கு ஸந்தேஹம்தா[illegible] என்று. அங்கு அநுமானும் வந்துவிட்டான். பெரும் தர்மசங்கடத்தி லகப்பட்டுக் கொண்டுவிட்டேன், என் மானத்தைக் காப்பவர் யார்?" என்று விசனமுற்றார் வாஸுதேவன்.

"எங்கள் பாட்டியாரை அழைத்து வருகிறேன்" என்று ஓடினான் அனிருத்ரன்.

"எங்கவன் போனான்" என்றார் கிருஷ்ணர்.

யாரும் பதில் சொல்லுவதற்கு முன்னம் ருக்மணிப் பிராட்டியார் எதிர்த் தோன்றினார். எம்பெருமானது உரையைக் கேட்கும்பொருட்டு வந்த விசையில் தன் தலையிலணிந்திருந்த சுட்டி விழுந்ததும் தெரியாதோடி வந்து அப்பரம்பொருளின் பாதாரவிந்தங்களில் விழுந்து தொழுது எழுந்து வாய்ப்பொத்தி கைப்பொத்தி மெய்யன்போடு குனிந்த தலை நிமிர்ந்து "ஏழையை அழைப்பித்த காரணம் எதுவோ தயவு செய்ய வேண்டும்" என்று விஞ்ஞாபித்துக்கொண்டாள்.

இதற்குள் வாயிலோன் "நான் என்னவென் றவற்கு சொல்வது?" என்று கேட்டனன்.

"உள்ளே ராமபிரானிடம் போம்" என்று சொல்வாய்.

"அப்படியே."

இதற்குள் தன்னன்பிற்குரிய பெண்தகை, ஒன்றுந் தெரியாத இளந்தழை சோபித்த வளப்பமுள்ள மேனி வாய்ந்த பெரியவள், அந்த மன்மதனுடைய நிதிக்குக் காவல்தெய்வமாகித் தோன்றி "அழகு சுமந்திளைத்த"

ருக்மணியைப் பார்த்து "ஒன்றும் வேண்டுவதில்லை நீ சீதைபோல் என்னிடம் இருக்கவேண்டும். அஞ்சனை மகனுக்கு சீதாராம உருவமாக தர்சனம் கொடுப்பதாகச் சொன்னேன். அவன் வந்து விடுவான். இப்பொழுதே வரவேண்டும்" என்றார் எம்பெருமான்.

என்றதும் சற்று மறைவில் சென்று தனது முன்தானையை வலப்புறத்திலிருந்து இடப்புறம் மாற்றிக்கொண்டு ஸ்ரீவாஸுதேவனருகில் வந்துநின்றாள். அவ்வாதிநாயகனும் பேரருளுடன் அவ்வம்மையாரை தன் வலது தொடையில் ஏற்றி வைத்துக்கொண்டதும் "ராம ராம" என்னும் கோஷத்துடன் வாயுநந்தனன் உள் புகுந்து வணங்கினான்.

கண்ணைத்திறந்து பார்க்குந்தோறும் அவர்க்கு எம்பெருமானது உருவம் ஸ்ரீராம உருவமாகக் காணும். கண்ணைமூடி தியானிக்குந்தோறும் ஸ்ரீகிருஷ்ண வடிவமாகவே விளங்கியது. இது பலமுறையும் பரிசோதித்தார். கண்ணை மூடுவர் ; திறப்பர். மூடினால் கிருஷ்ணர், திறந்தால் ராமபிம்பம். என்ன செய்வார்? மனதாரத் துதித்தார். ஆயினு மறிய முடியவில்லை. பின் மயங்கினார். பேசுவதற்குச் சற்றுத்தயங்கினார். கடைசியாகப் பின்வருமாறு எம்பெருமானைக் கேட்டார்:—

"என் ஐயனே உம்மைப் பார்க்குந்தோறும் என் ஐயன்போலவே இருக்கின்றீர். நான் தியானிக்குந்தோறும் வேறுவிதமாகத் தோற்றுகிறீர். இப்பேதையால் அறிய முடியவில்லை. இவ்வகை உருமாறித் தாங்கள் விளங்குவது எனக்கின்னதென்று புலப்படவில்லை. எனக்கதைத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்."

"போன ஜன்மத்தில் ராமனாக விருந்தேன். இப்பொழுது கிருஷ்ணனாக விளங்குகிறேன். இரண்டு உருவமும் யான் ஒருவனே என்பது தோன்றவும் உன் ஐயம் நீங்கவும் அவ்வாறு வேற்றுமை யுண்டாக்கினேன். முன்னுனக்கு இந்த நாளில் நான்கு கைகளுடன் நீ விரும்பிய விதம் தர்சனம் கொடுத்தேன். இனி நீ சௌக்கியமாய் விளங்கலாம்."

"எனக்கென்ன ஏவலிடுகிறீர்கள்?"

"நீ என்றைக்கும் எம்மிடம் ஏவல் பூண்டு எங்கும் விளங்கக் கடவாய். உன்னிடம் யாம் என்றும் விளங்குவோம். நாம் இன்னம் சில நாட்களில் வைகுண்டம் செல்லவேண்டும். எந்தெந்த நாள்களில் உலகத்தில் கொடுமை அதிகமாகிறதோ அக்காலத்து மனிதருள் மனிதனாக வந்து இவ்வாறு எல்லார்க்கு நன்மையூட்டி அவரைச் சீர்திருத்துவோம். நீ யினி அந்த ஹிமயமலைச் சாரலில் விளங்கும் கௌரிசங்கர சிகரத்தருகு விளங்குமுயர்ந்த தவவனத்தில் மானஸ யஜ்னம் செய்யக் கடவாய். உனக்கென்றைக்கு மங்களமுண்டாகட்டும்."

"தாங்கள் சொல்லியவிதமே. அப்படியே செய்கிறேன். இதோ போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு பிராட்டியாரையும் பெருமானையும் வலம் வந்து தொழுது ஹிமயமலைச் சாரலடையப் புறப்பட்டார்.

ஹனுமார் போய் சில க்ஷணநேரங்களுக்கெல்லாம் பெரிய திருவடிகள் உடலெலாம் வெயர்க்க ஓடிவந்து "அநுமார் வருவதாகச் சொன்னார் ; வந்துகொண்டிருக்கிறார்" என்று நெடுமூச்சு விட்டுக்கொண்டு சொன்னார்.

"அவர் அப்பொழுதே வந்து போய்விட்டாரே" என்றார் நாரதர்.

பெரிய திருவடிகள் மூக்குமேல் கைவைத்துக்கொண்டு "அப்படியா !" என்றார்.

மற்றந்தப்புரம் மூலையில் பதுங்கிக்கிடந்த பாமை தன் மூக்கின்மேல் கைவைத்த வண்ணமாகத் தனக்கும் தெரியாது "அப்படித்தான்" என்று சொல்லிக்கொண்டு மனமகிழ்ந்தாள்.

பின் விடை பெற்றுக்கொண்டு ருக்மிணி தன் அந்தப்புரம் சென்று தன்பால் தன் தலைவன் கொண்ட அன்பை எண்ணி எண்ணி எம்பெருமானது பெருமையைப் பாராட்டிக்கொண்டிருந்தாள்.

இதே சமயத்தில் நாரதர் "பாமா ! என் இந்தக் கோலம் ? உள்ளே போமே. எல்லாந்தான் ஆகிவிட்டதே. சபைகூட கலைந்துவிட்டதே" என்றார்.

"உன் வேலையைப் போய்ப் பார்" என்றவள் கர்ச்சித்தாள். இதற்குள் கண்ணபிரான் ஓடிவந்தவளைத் தேற்றி அந்தப்புரத்திற் கழைத்துப்போனார்.

ஸம்ஸாரிகள் மஹோபதேசத்தை கவனியாதிருத்தல்.—கல்லில் ஆணியை யடிப்பது கடினமாயினும் மண்ணில் அதை வெகு சுலபமாய் அடிக்கக் கூடியது போல், ஞாநியின் உபதேசமானது ஸம்ஸாரிகளின் மநத்தில் சிறிதேனும் அழுந்தாமல் புண்ணியாத்மாக்களின் பக்தி நிறைந்த ஹிருதயத்தில் வெகு சீக்கிரத்தில் வேரூன்றி விடுகின்றது.

—உபதேசரத்னமாலை.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

டாடா இரும்புத் தொழிற்சாலை.—மத்திய மாகாணத்திலுள்ள டாடா இரும்புத் தொழிற்சாலையானது, அபிவிருத்தி யாகிக்கொண்டு வருவதாகத் தெரிந்து சந்தோஷிக்கிறோம். இந்தியாவில், சுதேசிகளால் நடத்தப்படும், இரும்புத் தொழிற்சாலைக ளெல்லாவற்றிலும் டாடா தொழிற்சாலையே பெரிதெனக் கூறப்படுகின்றது. கடந்த வருஷத்தில் மாதம் ஒன்றுக்கு சராசரி 1500 டன் வீதம் எஃகு சாமான்கள் மேற்படி தொழிற்சாலையி லுற்பத்தி செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கின்றன. அதிலுறபத்தி செய்யப்படும் சாமான்கள் மிகச்சிறந்ததா யிருப்பதால் ஐரோப்பியர்களும் அங்கிருந்து சாமான் வாங்கிக்கொள்ளுகிறார்கள். ஜப்பான் தேசத்திற்கு மாத்திரம், ஒரு லக்ஷம் டன், இரும்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாகவும், நாலா பக்கங்களிலிருந்தும் ஏராளமான ஆர்டர்கள் வந்து கொண்டிருப்பதாகவும் மிஸ்டர் ராடன் ஜெ. டாடா கூறுகிறார்.

*
* *

கள்ளிக்கோட்டை கவர்ன்மெண்ட் கமர்ஷியல் ஸ்கூல்.—கள்ளிக்கோட்டையிலுள்ள கவர்ன்மெண்ட் கமர்ஷியல் ஸ்கூலையொட்டி ஒரு ஹோஸ்டல் கட்ட சென்னைக் கவர்ன்மெண்டார் ரூபா 50,000 சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

லார்டு ரிப்பன் உருவச்சிலை.—லார்டு ரிப்பன் உருவச்சிலை சென்னை வந்து சேர்ந்துவிட்டது. மேற்படி உருவச்சிலை, விஜயநகரம் பௌண்டனுக் கெதிரில் சென்னை மௌண்ட்ரோட்டில் வைக்கப்படும். லார்டு பெண்ட்லண்டு அதைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுவார்.

*
* *

ராமநாதபுரத்தில் ஒரு புதிய முன்சீப் கோர்ட்டு—சேத்தூர், சிவகங்கை, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய விடங்களிலுள்ள டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளில் பைசலாகாமல்கிடந்துவரும் ஏராளமான கேஸ்களைப் பைசல் செய்யும்பொருட்டு, ஒரு வருஷகாலத்திற்கு இராமநாதபுரத்தில் புதிய டிஸ்டிரிக்ட் முன்ஸீப் கோர்ட் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று, ஜில்லா ஜட்ஜ் தெரிவித்திருந்ததற்கு, ஹைகோர்ட்டாரும் சம்மதித்துக் கவர்ன்மெண்டாரிடம் சிபார்சுசெய்திருக்கிறார்கள். வருகிற ஜனவரி மாதத்திலிருந்து மேற்படி அடிஷனல் கோர்ட் திறக்கப்படு மெனத் தெரிகிறது.

ஒரு புதிய தபால்வண்டி—இந்தியாவிலிருந்து அன்னிய நாடுகளுக்குப் போகிற தபால்களைச் சென்னையிலிருந்து பம்பாய்க்குக் கொண்டுபோக இம்மாதம் 6-ந் தேதிமுதல் ஒரு ஸ்பெஷல் ரயில்வண்டி ஓடும்படி இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு வெள்ளியன்றும் சென்னையிலிருந்து காலை 11 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் 12 மணிக்குப் பம்பாய் போய்ச்சேரும்.

புதுக்கோட்டை ஸ்ரீமார்த்தாண்ட பொருட்காட்சி.-ஹிஸ் ஹைனஸ் புதுக்கோட்டை மஹாராஜா அவர்களுடையதிவ்ய தர்பாரின் உத்தரவின்பேரில், ஓர் பொருட் கல்விகாட்சி இந்த டிசம்பர்மீ 21உ-முதல் மஹாராஜா காலேஜில் நடக்கப்போகிறது. அதில் கைத்தொழில், வியவசாயம், கல்வி முதலிய விஷயங்களைப்பற்றி காட்சிகள் காட்டப்படும். இக்காட்சி, ஜனங்களின் ஞானத்தை விருத்தி செய்யவே முதன்மையாக எண்ணங்கொண்டு தர்பாரால் நடத்தப்படுகிறது. எமக்குக் கிடைத்த காட்சியின் பிராஸ்பக்டஸ்ஸைப் பார்த்ததில் காட்சி வெகு விமரிசையாக நடக்குமென்பதற்கு ஸந்தேஹமில்லை. தவிர, சீமைக்குச் சென்றிருந்த மஹாராஜா அவர்களும் புதுக்கோட்டைக்குச் சமீபத்தில் தான் திரும்பி வந்தார்கள். தர்பாரே இதைத் தமது பெருந்தொழிலென மேற்பூண்டு செய்வது மிகப்பாராட்டத்தக்கது. இக்காட்சியின் நோக்கம், கைத்தொழில் முதலிய இத்தேசத்து தொழில்கள் விருத்தியடைய செய்வதே. அதற்காக பொருட்காட்சி வைத்து, கையாளிகளையும் அவாது திறமையையும் கூட்டி ஒருவருடைய தொழிலை மாற்றார் அறிந்து விருத்தியடைய வேண்டி, அவ்வாறு காட்டப்படும் பொருள்களுக்குத் தக்கவாறு பரிசும், தோடாக்கள் முதலியவையும் கொடுக்கப்படும். வியவசாயத்தை விருத்திசெய்யும் விதமும் கருவிகளையும் இக்காட்சியில் காட்டப்படுவதன்றிக் கல்வியைப்பற்றிய கவனமும் வியவஹரிக்கப்படும். எல்லாரும் இந்த ஸமயத்தில் காட்சி நன்கு விளங்க ஒத்தாசை செய்து ஓங்கச் செய்வார்கள் என்று நம்பப்படுகிறது. காட்சிக்கனுப்பப்படும் சாமான்கள், அனுப்புவதற்கும் போக்குவரவிற்கும் சிறந்த ஏற்பாடுகள் தர்பாரால் செய்யப்பட்டிருக்கிறது. அது பிராஸ்பெக்டஸிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

ஒரு வைரம்.—1649 காரட் நிறையுள்ள ஒருவைரம் சென்ற 5-ந் தேதி யன்று தென் ஆப்பிரிக்காவில் ப்ரிமியர் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டது. உச்சியை நறுக்கி விட்ட ஒரு முட்டை போன்ற உருவாயிருக்கிறது. இவ்வளவு பெரிய வைரம் இதுவரையில் உலகத்தில் இல்லை.

பல்கேரியரின் ஆயுள்விர்த்தி.—பல்கேரிய ஜாதி தீர்க்காயுசுள்ளதென்பது எல்லோரும் அறிந்த விஷயம். 100-வயதுக்கு மேற்பட்டு உலகத்தில் வாழ்கிறவர்களில் முக்கால்பங்கு பல்கேரியராக இருக்கிறார்கள். அவர்களுடைய மிதமான ஆகாரமே இதற்குக் காரணம். அநேகமாய்ச் சாக ஆகாரங்களையே அவர்கள் சாப்பிடுகிறார்கள். ரொட்டி, பாலாடை, வெங்காயம் இவைகளே ராணுவப்படைகளுக்குக் கொடுக்கப்படும். அவர்கள் மாம்சத்தை மிகுதியாய்ச் சாப்பிடுகிறதில்லை. ஆனால் பழங்களுக்குக் குறைவேயில்லை. சாராயங்களை அவர்கள் குடிப்பதேயில்லை. கிராமங்களிலிருக்கும்போது தண்ணீரையும் பாலையுமே அவர்கள் விரும்பிக் குடிக்கிறார்கள். மோரில் ஒவ்வொருவனும் ஒருநாளைக்கு ஒரு பெரியபடி குடித்துவிடுவன்.

Supplement to the "Viveka Bodhini"] ["விவேக போதினி" அனுபந்தம்

ஜான் மில்டன்

JOHN MILTON

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி V } பரீதாபி௵ மார்கழிமீ : 1913-௵ ஜனவரிமீ { பகுதி 7

தேச கால நிமித்தம் I.

SPACE, TIME CAUSATION

தேசம் என்பதற்கு இடம் என்று பொருள். ஒன்று ஒரு இடத்திலும் மற்றொன்று வேறொரு இடத்திலும் இருப்பதாகவும் தோன்றச்செய்து அவைகளுக்கு உள்ள இடைவெளி அல்லது தூர பரிணமத்திற்கு ஆதாரமாக இருப்பதுஇந்தத் தேசம் என்னும் பதத்தின் பொருள். காலம் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். நிமித்தம் என்பது ஒன்றன்பின் ஒன்றாய் வரும் விஷயங்களில் பின்னதற்கு முன்னது காரணம், பின்னது முன்னதின் காரியம் என்று காணப்படும் காரணகாரிய ஒழுங்கே. இம்மூன்றனுள்தான் நமது உலகானுபவங்கள் இருக்கின்றன. உண்மையில் உள்ளபொருள் தேசகால வஸ்து பரிச்சேதம் (பிரிவு) அற்றது என்று ச்ருதிகள் கூறும்.

இவ்விஷயத்தைச் சற்று ஆழ்ந்து விசாரிப்போம். ஸாதாரணமாக நாம் விழிப்பிலிருக்கையில் இந்தஸ்தூல தேஹம் நாம் என்றே கருதி தொழில் நடாத்துங்கால் தேசகால நிமித்தம் என்ற மூன்றும் காணப்படுகிறது. அதாவது ஒரு வஸ்து வேறு வஸ்துக்களைவிட்டு ஒதுங்கி வேறு இடத்திலும், அவைகளில் சிலவற்றிற்கு முன்னோ பின்னோ காரணமாகியோ காரியமாகியோ இருப்பதாகத் தோற்றுவது நமது அனுபவம். இதற்கு மேல் ஸூக்ஷ்மதேஹம் ஒன்றுள்ளது என்பது எல்லோருடைய அனுபவமும்தான். ஸ்வப்னம், மனோராஜ்யம் முதலிய நிலைகளில் நாம் ஸ்தூலஸம்பந்தப்பட்டிருந்தாலும் இங்கு முற்கூறிய மூன்றனுடன் ஸம்பந்தமின்றிக் கால நிமித்த ஸம்பந்தப்பட்ட அனுபவங்கள்தான் உள. காசி எத்தனை தூரத்திற்கு அப்பாலிருப்பினும் அங்கு உடனே இருப்பதாகவும், இதுபோல பெரிய விஷயங்களும் தோற்றங்களும் மனதுள் அடங்கி யிருப்பதால் தேச பரிச்சேதம் இந்தநிலையிலில்லை. ஆனால் தோற்றங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வருவதாலும், வெகுநட்பகாரண காரிய ஸம்பந்தம்பற்றி திடீரென்று ஒருதோற்றம் மற்றொருதோற்றமாக மாறிவிடுவதாலும், இங்கு காலமும், நிமித்தமும் உள என்பது வெளியாகும். ஆனால் காலம் ஒரு நிலைத்த பதார்த்தமல்ல என்பது இந்நிலையில்தான் நன்கு விளங்கும். விழிப்பில் நிலைத்ததாகப்பட்ட தேசம் இங்கு இல்லாமலே போய்விடுவதோடு ஸாதாரணமாக விழிப்பில் தோற்றும் சிறு காலஅளவுள் அநேக கோடி வருஷ ஸமாசாரங்களும், அதிக நாழிகை சிறு கால அளவுபோன்ற தோற்றங்கள் ஸ்வப்னாவஸ்தையில் உண்டாவதால் இந்தக் காலமும் நிலையில்லாதது: நமது மனச் சஞ்சலத்தைப் பொருத்தது என்று நமக்கு விளங்கும். விழிப்பிலும் இந்த உண்மை நமக்கு ஒருவாறு வெளியாகும். வேலையில் முனைந்திருப்பவர்களுக்கு வெகுநாழிகை ஒரு க்ஷணம்போலவும், அவர்களுக்கே விடுமுறை நாள்களில் அதே நாழிகை தொலையாப் பொழுதாகவும் தோற்றுவதிலிருந்து காலம் மனதைப் பொருந்தது என்று வெளியாயினும் ஸ்வப்னாவஸ்தையில் இது வெளிப்படுவதுபோல இது அவ்வளவு நமது மனதில் நன்றாகப் பதியாது. ஆகவே ஸ்வப்னாவஸ்தையில் நமக்கு தேசபரிச்சேதம் போய் காலபரிச்சேதம் நித்யமானதல்ல என்ற அனுபவம் வெளியாகிறது.

இனி ஸுஷுப்தி அவஸ்தை அனுபவமும் நமக்கு ஒவ்வொருவருக்கும் தினம் உண்டு. இதில் காலபரிச்சேதமும் போய்விடுகிறது. கண்ணை மூடினேன் பொழுது விடிந்துவிட்டது என்று நல்ல தூக்கம் தூங்கி விழித்தவுடன் நம்மெல்லோரும் தோற்றவில்லையா. இந்த அனுபவத்தாலேயே காலபரிச்சேதம் நீங்கிவிட்டது. ஆனால் வஸ்து பரிச்சேதம் அல்லது நிமித்தம் (காரியகாரண ஸம்பந்தம்) நீங்கவில்லை அது அதன் ஸூக்ஷ்மரூபமான காண்பான், காட்சி, காட்சிப் பொருள் ரூபமாக இங்கும் இருக்கிறது. தேசகால பரிச்சேத மின்மையைக் காணுதல் ஸம்பந்தமாக இது ஸுஷுப்தியி லிருப்பதால்தான், முற்கூறிய அனுபவம் விழித்தவுடன் வெளியிடப்படுகிறது. முந்திய அவஸ்தைகளில் தேசம், தேசமின்மை, காலம், காலநிலையாமை இவைகளைக் காணும் குணமுடைய நம்முள்ளிருந்த வஸ்து இந்த ஸுஷுப்தியில் காலமின்மையைக் கண்டுகொண்டிருக்கிறது. இந்த நிமித்தவிஷயத்தின் ஸ்வரூபத்தைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

விவேக போதினி

தொ. 5.] பரிதாபி௵ மார்கழி௴ [பகுதி 7

ஸ்ருஷ்டி விஷயம்

3. சாஸ்திரபுராண சிருஷ்டிகளின் பொருத்தம்

SASTRIC & PURANIC CREATION RECONCILED

புராணங்களில் ஸ்ருஷ்டி விஷயம் உருவகப்படுத்தி வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இதன் ஒழுங்கை பாகவதம் 3-ம் ஸ்கந்தத்தில் விஸ்தாரமாகக் காணலாம். இந்த ஒழுங்கிற்கும் முற்கூறியுள்ள சாஸ்திர ஒழுங்கிற்கும் உள்ள பொருத்தத்தை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

புராணங்களில் பிரளய காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் ஸமுத்திர ஜலத்தில் முழுகி இருந்தனவென்றும், ஸ்ரீமந் நாராயணர் ஸகல கருமங்களையும் விட்டு ஸர்ப்பசயனத்தில் யோகநித்திரை செய்துகொண்டிருந்தார் என்றும், அப்பொழுது ஜீவாத்மாக்களும் அசித்தும் அவருள் அதிஸூட்சுமமான நிலையை அடைந்து, அடங்கி இருந்தனவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நித்திரை தொடங்கும் காலத்தில், காலதத்துவத்திற்கு, சிருஷ்டி ஆரம்ப காலத்தில் தம்மை எழுப்பும்படி, ஸ்ரீமந் நாராயணர் உத்தரவு கொடுத்திருந்தார். அநேக யுகங்கள் யோக நித்திரையில் இருந்தபின்பு, அவரது இச்சை அவரது நாபியிலிருந்து கமலரூபமாய் வெளிவந்தது. அந்தக் கமலத்துள் தமது அம்சத்தால் அவரே பிரவேசித்தார். உடனே அந்தக் கமலத்தில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா உண்டானார். அந்தப் பிரம்மாவுக்குத் தாம் இன்னார் என்றும் இன்னவிடத்தில் இருக்கிறோம் என்றும் விளங்காமையால், தாமரைத் தண்டின் வழியாய் ஜலத்துள் புகுந்து கமலத்தின் ஆதாரத்தைக் கண்டுபிடிக்க யத்தனித்து, அம்முயற்சி வீணானது கண்டு கமலத்தின்மேல் வந்து உட்கார்ந்தார். அப்பொழுது ‘தபதப’ என்ற சப்தம் உண்டாகத் தியானத்திலிருந்து கடவுளைக் கண்டு, தமது ஸ்ருஷ்டி சக்தியுண்டாகவேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்பொழுதுகடவுளது அநுக்கிரகத்தால் அவருக்கு ஸ்ருஷ்டி சக்தி வர அநேக தரம் ஸ்ருஷ்டிகளைச் செய்து, கடைசியில் தமது அங்கங்களிலிருந்து பிரபஞ்சத்தினது விசித்திர விஷயங்களைச்சிருஷ்டித்தார் என்ற இதுவே புராண சிருஷ்டிக்கிரமம்.

சாஸ்திர சிருஷ்டிக்கிரமத்திலோ, செயலற்ற பரமாத்மா தம்முள் அசித்தையும் ஜீவாத்மாக்களையும் ஸூட்சும நிலையில் அடக்கிக்கொண்டிருந்தார். சிருஷ்டி ஆரம்பத்தில் ஸத்வத்தின் பேதத்தால் காரண சரீரங்கள் உண்டாகி ஜீவாத்மா பரமாத்மாக்களைச் சூழ்கின்றன. அப்பொழுது அவர்களுக்கு முறையே ஈசுவரன் என்பதும் பிராஞ்ஞன் என்பதும் பெயர். இதிலிருந்து ராஜஸ தாமஸ பேதத்தால் ஸூட்சும சரீரங்கள் உண்டாகியபொழுது, அவர்கள் முறையே ஸூத்திராத்மா, தைஜஸன், என்ற பெயர்களை அடைகிறார்கள். கடைசியில் தாமத குணத்தின் பிரபாவத்தால் ஸ்தூல சரீரங்கள் உண்டாகி ஜீவாத்மா, பரமாத்மாக்கள் முறையே விராட், ஜீவன் என்ற பெயர்களை அடைகிறார்கள். இதுவே சாஸ்திர சிருஷ்டிக் கிரமம்.

இவ்விரு கிரமங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அநேக பேதங்களிருப்பனபோலக் காணப்படும். சாஸ்திர சிருஷ்டியில் கடவுள் பிரளய ஸமுத்திரத்தில் யோகநித்திரையில் இருக்கிறார் என்றும், அவரது நாபியிலிருந்து கமலம் வந்ததென்றும், அதில் பிரம்மா உண்டானார் என்றும்

சொல்லப்படவில்லை. இதில் ஸூட்சும சிருஷ்டியில்தான் அப்பு தன்மாத்திரை உண்டாகிப் பின் பஞ்சீகரணத்தால்தான் ஸ்தூல சிருஷ்டியில் ஜலம் உண்டாகின்றது. பிரளயத்தில் ஜலம் இருப்பதாகச் சொல்லவில்லை. பிரபஞ்சம் விருத்தியாவதற்காக ஒவ்வொரு சிருஷ்டியிலும் கடவுளே சென்று வியாபிக்கிறார் என்று சாஸ்திர சிருஷ்டியில் சொல்லியிருக்கிறது. ஒரு சிருஷ்டி கர்த்தா உண்டாகி அவரது அங்கங்களில் இருந்து பிரபஞ்ச வஸ்துக்கள் உண்டாயினவென்று எடுத்துக் காட்டப்படவில்லை. இப்படி இந்த இரண்டு கிரமங்களும் மாறுபட்டிருக்க எப்படி இவைகளைப் பொருத்துவது? இவைகள் தம்முள் உண்மையாகவே மாறுபட்டிருக்குமாயின், நமது சாஸ்திரங்கள் இப்படி விரோதமான விஷயங்களைச் சொல்லுவானேன் என்ற சங்கை உண்டாகும். இவ்விரண்டும் ஒரே விஷயத்தைத்தான் இரண்டு விதமாகச் சொல்லுகின்றனவென்று நன்கு விளக்குவோம்.

ஸநாதனதர்மம் அதிகாரி பேதத்திற்குத் தக்கபடி உண்மைகளை ஸ்தூலமாகவாவது ஸூட்சுமமாகவாவது வெவ்வேறு விதமாய் வெளியிடுகின்றது என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அதற்கு உதாரணமாக, கணக்கில் கூட்டல் கழித்தல் முதலியவைகளைச் சிறுவர்களுக்குப் போதிக்குங்கால், அவர்கள் எளிதில் அறிவதற்காக ஸ்தூல பதார்த்தங்கள் மூலமாய்க் கற்பிக்கிறார்கள். ஆனால் அதிலே நன்றாகத் தேர்ந்தவர்களுக்குப் போதிக்குங்கால் பதார்த்தங்களில்லாமலேயே சொல்லி, மேலும் இலக்கங்களுக்குப் பதிலாக அதிஸூட்சுமமாய் அக்ஷரங்களை உபயோகப்படுத்தி, அது மூலமாகப் பீஜ கணிதத்தையும் கற்பித்து விடுகிறார்கள். டிராம் வண்டி தந்தி முதலியவைகளை வேலைசெய்யும்படி தூண்டும் மின்சார சக்தியைச் சிறுவர்களுக்கு முதலில் இரண்டு ரூபமாய் இருக்கின்றது என்று சொல்லி, தேர்ந்த பின்பு இவ்விரண்டும் ஒரே சக்தியின் வேறான ரூபங்கள் என்று அவர்களுக்கே போதிக்கின்றார்கள். இப்படிப் பிரகிருதி சாஸ்திர விஷயங்களில் காணப்படுவனபோல், மதவிஷயத்திலும் நமது ஸநாதன தர்மத்திலும் காணப்படுகின்றன.

மேலும் புராணரூபமாக வேதத்தில் சொல்லப்பட்ட விஷயங்களைச் சொல்லுங்கால் நமது மதம் ஒரு கொள்கையைப் பின்பற்றியே சொல்லுகிறது. அதாவது ‘பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு முக்கிய பாகத்திற்கும் அதிபதியாய் ஒவ்வொரு தெய்வம் இருக்கிறதென்றும், அது, எங்கும் நிறைந்திருப்பதுபோல் தானுள்ளும் வியாபித்திருக்கும் கடவுளது ஸந்நிதான விசேஷத்தால், தன் கீழுள்ளவைகளை அடக்கியாளுகிறது’ என்ற கொள்கையே. இவ்விதமான கொள்கையைக்கொண்டே நமது மதம் வேதரகஸியங்களைப் புராணகதை ரூபமாகவே சாதாரண ஜனங்களுக்குப் போதிக்கிறது. இந்த விஷயத்தை மறவாதிருப்போமேயானால், புராண கதைகள் எவ்வளவு வேடிக்கையாயும், அஸந்தர்ப்பமாயும் தோன்றியபோதிலும், அவைகளில் உள் அர்த்தமாகிய வேதரகஸியத்தை நாம் எளிதில் அறியலாம். இப்பொழுது சொன்ன பொதுவிஷயங்களை ஸ்ருஷ்டிக்கிரமங்களின் விஷயத்தில் பொருத்திப் பார்ப்போம்.

தேர்ச்சியடையாத மனதை உடையவர்களுக்கு அசித்தும் ஜீவாத்மாக்களும் சிருஷ்டிக்கு முன்பு பரமாத்மாவில் அதிஸூட்சும நிலையை அடைந்து லயித்திருக்கும் என்று சொன்னால் அர்த்தமில்லாத வீண் பேச்சு என்று தோன்றும். அசித்தெல்லாம் ஸூட்சும நிலையை அடைந்து பேதமற்றுக் கிடப்பதைப் புராணங்கள் வரம்பற்ற பிரளய ஸமுத்திரம் என்று எடுத்துரைக்கின்றன. இந்த ஜலத்தைச் ஸூட்சுமஸ்ருஷ்டியில் உதிக்கும் அப்பு தன்மாத்திரை என்று விபரீத அர்த்தம் செய்யக்கூடாது. கடவுள் பள்ளிகொண்டிருக்கும் கடலைப் பாற்கடல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் உட்பொருள் என்னவென்றால், பால் எப்படி பிராணிகளை வளரச்செய்து நல்ல நிலைக்குக் கொண்டுவருகிறதோ, அதுபோல இந்தப் பிரள

யப்பாற் கடலிலிருந்தே ஸகலப் பிரபஞ்சமும் ஒழுங்குபட்டு விசித்திரமாய்த் தோற்றவேண்டும் என்பதே. கடவுளது படுக்கையாய் இருக்கும் ஸர்ப்பத்திற்கும் உட்பொருள் உண்டு. பிராணிகளுக்குள் பாம்பானது, விஷஜந்துவாய் அதிக கோபம் முதலிய கொடிய குணங்களைப் பூர்ணமாக உடையது. பிரளயகால அசித்தானது தாமதகுணத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பதால் அது கொடியகுணங்களை உடையதாய் இருத்தல்வேண்டும். அப்படிப்பட்ட அசித்தைப் பாம்பு குறிக்கிறது. பாம்பு மண்டலம் போட்டுக்கொண்டிருப்பது,பிரபஞ்சம் அடியோடழிவதும், திடீரென்று உற்பத்தியாவதும் இல்லாமல் எக்காலத்திலும் ஏதாவது ஒரு உருவாய் அழியாமலே இருந்து, சில காலங்களில் கடவுளிடத்தில் மறைந்து, மற்றக் காலங்களில் கடவுளிடமிருந்து வெளியாய்க்கொண்டே சக்கிராகாரமாய் மாறி மாறி வந்துகொண்டிருக்கிறது என்ற உண்மையைக் குறிக்கின்றது. இந்த ஸர்ப்பம் கடவுளுக்குப் படுக்கையாய் இருப்பது தாமதம் மேலிட்ட போதிலும் அசித்து கடவுளுக்கு எப்பொழுதும் அடங்கி இருக்கும் என்பதைக் குறிக்கிறது. மேலும் இது முமுக்ஷுவாய் இருப்பவர்களுக்கு, 'போதமாமி[illegible] புந்தியைம் புலன்களெல்லாம் தாதாரா யிருக்கப்பெற்றால் ஸகலமுமடங்கும்தானே' என்றபடி காமக்குரோதாதிகளைத் தாம் அடக்கியாளவேண்டுமே ஒழிய, அவைகளுக்குத் தாம் அடிமையாய்விடக்கூடாது என்பதைக் காட்டுகிறது. பிரபஞ்ச சிருஷ்டிக்குத் தகுந்த சமயம் வருங்கால் தம்மை எழுப்பும்படியாகக் காலதத்துவத்திற்குக் கட்டளையிட்டுவிட்டுக் கடவுள் யோகநித்திரையில் இருந்தார் என்பது, ஸ்திதி காலத்தில் சிதறிப்போய் இருக்கும் பிரபஞ்சத்தின் சக்திகள் திரும்பப் பழையபடி உண்டாகும்வரையில் கடவுள் யோகநித்திரையில் செயலற்றிருக்கத் தீர்மானித்தார் என்ற உண்மையைக் குறிப்பிடுகிறது. 'காலதத்துவப் பேரீசன் என்று சொல்லியபடி காலமானது கடவுளது அம்சமானதனால் அவரது தீர்மானத்தால் நடக்கவேண்டிய விஷயத்தைக் காலத்தினிடத்தில் ஏற்றி சொல்லப்பட்டிருப்பது நியாயம்தான்.

இப்படி அநேக காலம் யோக நித்திரையில் இருந்துவிட்டுப் பின்பு சிருஷ்டி சக்தியைச் சேர்த்து தமது நாபிவழியாக வெளியிட்டதாகவும், அது உடனே ஒரு கமலத்தின் உருக்கொண்டதாகவும் சொல்லப்பட்டது. இப்படி வெளிவந்தது என்பதன் குறிப்பு என்னவென்பதையும், அது நாபியின் வழியாய் வந்ததன் குறிப்பு என்ன என்பதையும் சற்று விசாரிப்போம். சாஸ்திரக் கிரமத்தில் சூட்சும சிருஷ்டிக்கு முன்பு, கடவுள் காரண சரீரத்தில் ஈசுவரன் என்ற பெயரை அடைந்து, நிரதிசய ஆனந்தத்தை அநுபவிக்கிறவராய்ச் சிருஷ்டித்தொழிலிற்கு வேண்டிய சக்தியோடு விழித்திருப்பதாகச் சொன்னோம். அப்பொழுது அசித்து கடவுளிடம் இருந்து வெளிவந்து செவ்வையான உருவமின்றி இருந்த போதிலும், கடவுளைச் சூழ்ந்துதான் மேன்மேலும் விசித்திரமாய்ப் பிரிந்து தோன்றத் தயாராய் இருப்பதாகவும் சொன்னோம். இம்மாதிரியாய் அசித்து முதலில் உண்டாவதை நாபீகமலம் என்று புராணம் சொல்லுகிறது. குழந்தை தாயின் கர்ப்பத்தில் இருக்கும்பொழுது அது தனது நாபியிலுள்ள கொடிமூலமாய்த் தாயுண்ணும் ஆகாரத்தின் ரஸம் முதலியவைகளைத் தானும் கொஞ்சம் இழுத்துக்கொள்ளுகிறதென்றும், தாய் தேகத்தில் இருந்த ரத்தமும் அக்கொடியின் வழியாய்க் கொஞ்சம் குழந்தைக்குப் போய் அதை உயிர் தரிக்கும்படி பண்ணுகிறதென்றும், தேகதத்துவ சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது. இதனால் உற்பத்தி காலங்களில் நாபியே பிராணஸ்தானம் என்று தெரிகிறது. ஆதலால்தான்,செவ்வையான உருவின்றிக் கடவுளது சிருஷ்டி சக்தியின் பரிணமத்தோடு தோன்றும் அசித்தைக் குறிப்பிக்கும் இக்கமலமானது, கடவுளது நாபியிலிருந்து வருவதாகச் சொல்லி இருக்கிறது.

இதன் பின்பு கடவுள் அந்தத் தாமரை முதலியவைகளில் தமது அம்சத்தால் பிரவேசித்தார் என்றும், உடனே பிரம்மா உண்டானார் என்றும் புராணம் சொல்லுகிறது. இப்படிக் கடவுள் பிரவேசிக்க, பிரம்மா உண்டானார் என்றால், கடவுளே சிருஷ்டி செய்வதற்காக ராஜஸ குணத்தைத் தாங்கி பிரம்மா உருவமாய் வந்தார் என்பதற்கு என்ன ஸந்தேகம். இந்தப் பிரம்மாவையே சாஸ்திரக்கிரமத்தில் ஹிரண்யகர்ப்பர் என்று சொல்லி இருக்கிறது. முந்திய நிலையில் ஈசுவரன் எனப் பெயர்பெற்று, ஒழுங்கான அங்கங்கள் ஒன்றும் இன்றி, சக்தி உருவாய் மாத்திரம் இருந்த கடவுள், இப்பொழுது பதினேழு தத்துவங்களாகிய சூட்சும தேகத்தோடு வெளியானார். இந்நிலையில் ராஜஸம் ஓங்கி ஸத்வம் அடங்கி இருப்பதால், தாம் இன்னார் என்பதும், தாம் பிறந்தவிடம் இன்னது என்பதும் பிரம்மாவுக்கு விளங்கவில்லை. கடவுளது விசித்திர சக்தியைக் குறிப்பிக்குந் தாமரைத்தண்டின் வழியாய் இறங்கித் தமது ஆதாரத்தைப் பிரம்மாவால் கண்டுபிடிக்க முடியவில்லை. இத்தருணத்தில் கடவுள், 'தப, தப' என்று சொல்லி, பிரம்மாவை நிஷ்டை செய்யும்படி ஏவ, அவர் ஆத்மநிஷ்டையிலிருந்து கடவுளோடு ஸம்பந்தப்பட்டதினால் அவருக்கு ஞானம் உதயமாயிற்று. இந்தப் பாகத்திலிருந்து உண்மையை அறியும் விஷயத்தில், எவ்வளவுதான் வெளிப்பிரபஞ்சத்தில் தேகசிரமப்பட்டபோதிலும்,உண்மையை ஸ்தூல இந்திரியங்களால் அறிய முடியாதாகையால், அவை பயனில்லாமலே போகும் என்பதையும், நிஷ்டையில் மனம் ஏகாக்கிரப்பட்டபோதுதான் உண்மை உள்ளபடி விளங்கும் என்பதையும் முமுக்ஷுக்கள் எளிதில் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு நிஷ்டை செய்யுங்கால் பிரம்மாவுக்கு, முன் கல்பத்தில் பிரபஞ்சம் இருந்தமாதிரி தெரிந்ததென்றும், உடனே தாமரையை மூன்று பாகமாகப் பிரித்து, இப்பொழுது இருக்கும் உலகங்களது சூட்சுமபாகங்களை உண்டாக்கினார் என்றும், சொல்லியிருக்கிறது. இது, பிரம்மா ஒன்றையும் புதிதாகச் சிருஷ்டித்து விடவில்லை என்பதையும், முன் இருந்தவைகளையே விசித்திரமாய்த் தோன்றும்படி செய்திருக்கிறார் என்பதையும் குறிக்கின்றது. முன் செய்யவேண்டியவைகளைக் கடவுளே செய்துவிட்டமையால், இப்பொழுது பிரம்மா சூட்சும சிருஷ்டியையும், ஸ்தூல சிருஷ்டியையும், உலகத்தில் சிருஷ்டித் தொழிலை விருத்திசெய்வதற்கு வேண்டிய ஸ்வயம்புவாகிய புருஷர்களையும், சிருஷ்டிக்க வேண்டியதே.

ஜான் மில்டன்

JOHN MILTON

கலைமடந்தையும், மலர்மடந்தையும் உறைந்து வாழும் திவ்விய தேசமான இங்கிலாந்திலே, அதன் பிரதான நகரமாயமைந்துள்ள லண்டன் பட்டணத்தில், 1608-ம் வருஷம், டிசம்பர் மாதம் ஒன்பதாந்தேதியன்று ஜனித்தார் "ஜான் மில்டன்" என்னும் ஆங்கில மஹா கவி.

ரோஜாயுத்தம் (Wars of the Roses) கி. பி. 1455-ம் வருஷம் முதல் 1485-ம் வருஷம் வரை இங்கிலாந்தில் நடைபெற்றுவந்தபொழுது, அதில் தன் காணி பூமிகளை யிழந்த "ஆக்ஸ்போர்ட்ஷயர்" வம்சத்தைச் சார்ந்தவர் மில்டன். அவர் பாட்டனர் "போப்" மதத்தைத் தழுவினவர். அவருடைய தகப்பனரோ, போப் மதத்துக்கு விரோதமான "ப்ராடஸ்டண்டு" அதாவது "சுவிசேஷமார்க்க" மதத்தைத் தழுவினபடியால், தகப்பனரால் உரிமையிழக்கப்பட்டு, லண்டனுக்கு வந்துசேர்ந்து ஓர் எழுத்துக் கூலிக்காரனய் அமர்ந்தார். இவ்வுத்தியோகத்தில் உள்ளன்புடன் வெகு சிரமப்பட்டு உழைத்து சீக்கிரத்தில் ஏராளமான திரவியத்தையும் சம்பாதித்துக்கொண்டு வேலையினின்றும் விலகிக்கொண்டார். அவர் ஸங்கீதத்தில் ஞானமுள்ளவர். கவனமும் செய்யக் கூடியவர். மில்டனுடைய தாயாரும் நல்ல வமிசத்திற் பிறந்தவள்.

லண்டனில் உள்ள "ஸெண்ட் பால்" பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படுமுன் மில்டன் வீட்டிலேயே "தாமஸ் யங்" என்னும் போதகாசிரியரால் கல்வி கற்பிக்கப்பட்டார். மில்டனுக்கு தாமஸ் யங்குடன் உண்டான சேர்க்கையானது, அவர் மனதை விசாலப்படுத்தினதுந் தவிர அவர் புத்தியையும் கூர்மையாக்கியது. பால்யம் முதற்கொண்டே வித்தையில் மில்டன் அதி நிபுணராயிருந்தார். கல்வியில் மஹா மேதாவியாயிருந்ததோடு வெகு உழைப்பாளியாயும் இருந்தார். தம்முடைய பனிரண்டாவது பிராயம் முதற்கொண்டே அவர் இரவு பனிரண்டு

மணிவரையிலும் வாசிக்கும் தன்மை யுடையவரென்றும் நமக்குத் தெரிகிறது. ஐயோ, பாவம்! அவ்விதம் வாசித்து வித்வானாக ஆசைப்பட்ட அவர், சீக்கிரத்தில் கண்ணொளியை யிழந்தார். அவர் தகப்பனாரும் மைந்தன் கல்வியிற் றேர்ந்து ஸகல கலாவல்லவனாகுமாறு ஏராளமான பணத்தையும் செலவுசெய்து, வெகு சிரமமும் பட்டார்.

தம்முடைய பதினேழாவது வயதில் மில்டன் ஸெண்ட் பால் பள்ளிக்கூடத்தைவிட்டு, கேம்ப்ரிட்ஜ் பட்டணஞ்சென்று, அங்குள்ள "கிறிஸ்து" கல்லூரியிற் சேர்ந்து, ஏழுவருஷம் வாசித்தார். 1629-ம் வருஷத்தில் "பீ. ஏ." பரீக்ஷையிலும், 1632-ம் வருஷத்தில் எம். ஏ. பரீக்ஷையிலும் ஒப்பேறினார். அவர் கேம்ப்ரிட்ஜிலிருந்த ஏழு வருஷ காலத்துக்குள், கவனஞ்செய்வதில் வல்லவனாயும், கணித சாஸ்திரத்தில் நிபுணராயும் ஆனார்.

மில்டனுடைய பெற்றோர்கள் அவரை சர்ச்சு (தேவாலயத்து)க்கு அனுப்புவதாக எண்ணியிருந்தனர். அவர் படிப்பு முடிந்தவுடன் தான் பாதிரியாக முடியாதென்று சொல்லி, அதற்குள்ள கஷ்டங்களையெல்லாம் எடுத்துரைத்துக் கண்டிப்பாய் மறுத்துவிட்டார்.

1632-ம் வருஷத்தில் ஸர்வகலாசாலையை விட்டதும், மில்டன், அப்பொழுது தன் தகப்பனார் வாசஞ்செய்து வந்த "ஹார்டன்" என்னும் கிராமத்தில் அவருடன் தங்கி, அங்கு ஐந்துவருஷகாலம் வசித்துவந்தார். அப்பொழுது அவர், பிராசீன, நவீன கிரந்தங்களைப் பரிசீலனம் பண்ணுவதிலும், ஸங்கீதத்தை விருத்தி செய்வதிலும், சிறிய செய்யுட்களைக் கவனஞ் செய்வதிலும் அக்காலத்தைச் செலவிட்டார். இந்தப் பருவத்திலேதான் அவர் "கோமஸ்" "ஆர்க்கேடிஸ்," "லிஸிடஸ்" "லல்லீக்ரோ" "இல்பென்ஸரஸோ" முதலிய கிரந்தங்களை எழுதினார். இவைகளுள் முதலாவதான "கோமஸ்" என்பது ஓர் சிறிய நாடகம் போன்றுள்ளது. அதை ஆங்கில பாஷையில் (Mask) "மாஸ்க்" என்று கூறுவர். "பிரிட்ஜ் வாடர்" பிரபுவின் மகள் ஒருநாள் இரவு நடுக்காட்டில் வழிதப்பித் திகைத்து நின்றதைக் கேள்வியுற்ற மில்டன், அச்சம்பவத்தை விஷயமாக வைத்து "கோமஸ்" என்னும் நாடகத்தை யெழுதினார்.

ஐரோப்பா கண்டத்துக்கு யாத்திரைபோய் வரவேண்டுமென்கிறவோர் எண்ணம் மில்டனுடையமனதில் வெகுநாளாகக் குடிகொண்டிருந்தது. சீமையிலிருந்த அநேகம் பிரபுக்களிடமிருந்து சிபார்சுக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு, 1638-ம் ஆண்டில் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார். அவர் லண்டனிலிருந்து பிரஞ்சு ராஜதானியாகிய பாரிசுக்குச் சென்று அங்கு பிரசித்திபெற்று விளங்கும் கிரந்த கர்த்தாவான "ஹ்யூகோ க்ரோஷியஸ்" என்பவரைத் தரிசித்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு, நைஸ், ஜினோவா, லெக்ஹார்ன், பைஸா, ப்ளாரன்ஸ், முதலிய நகரங்களின் வழியே சென்று, அங்குற்ற இத்தாலிய இயற்கைப்பொருள்களின் வளப்பையுங் கண்டு அதிசயித்துக்கொண்டு, இத்தாலியின் பிரதான நகராயமைந்துள்ள "ரோம்" பட்டணத்தையுஞ் சார்ந்து, அங்கு சின்னாட் தங்கிவிட்டு, நேபிள்ஸுக்குச் சென்று, அங்கிருந்து ஸிஸிலி, க்ஸ்பீ, முதலிய பிரதேசங்களுக்குப் போகவெண்ணியிருக்கையில், இங்கிலாந்தில் அரசனுக்கும், ஆலோசனைச் சபையாருக்கும் மனஸ்தாபம் நேரிட்ட செய்தியைக் கேள்வியுற்று, அன்னிய நாடுகளைச் சுற்றிப்பார்த்து, அதன் அழகைக் கண்ணாரக்கண்டு களிப்பதைவிட, சுயபூமியில் தன் நாட்டாருக்காகப் பாடுபடுவதே உத்தமமென மதித்து, உடனே திரும்பி இங்கிலாந்து வந்து சேர்ந்தார். அவர் இங்கிலாந்தை விட்டுப் பிரிந்திருந்தது பதினைந்து மாத காலம்தான். ஆனாலும் அவ்வளவு சீக்கிரத்தில் என்னென்ன மாறுதல்கள் ராஜ்யத்தில் உண்டாயின! அரசனுக்கும் சபையாருக்கும் மனஸ்தாபம் நேரிட்டு, அரசன் தனக்குத் தோன்றியதைச் செய்ய எண்ணினதும், சபையார் அதை மறுத்து, ஜனங்களின் மதத்தையும், சுயேச்சையையும் காக்க நினை

த்து, அரசனுக்கு இடங் கொடாதிருந்ததும், அரசன் வெருண்டு தன்னை யெதிர்த்தவர்களை இம்ஸிக்கத் தொடங்கியதும், இம்மாதிரியான சம்பவங்கள் பல நேர்ந்தன. ஊர் வந்து சேர்ந்ததும் மில்டன், லண்டனில் ஜாகை வைத்துக்கொண்டு, இரண்டு பிரபுச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார் இதோடுகூட அவர் தன்னுடைய மதத்துக்காகவும், தன்நாட்டு ஜனங்களின் பொது நன்மைக்காகவும் "பேனா"வினால் யுத்தஞ்செய்தார் அவர் ஒரேவருஷத்தில் மதவிஷயமான புத்தகங்கள் அநேகம் எழுதினார். உதாரணமாக, 1641-ம் வருஷத்தில் அவர் இங்கிலாந்தின் மதச்சீர் திருத்தம், ரோமகுருவான போப்புக்குக் கீழ்ப்படியாமை, இவைகளைச் சார்ந்த கிரந்தங்கள் ஆறு, ஏழு எழுதினார்.

1643-ம் வருஷத்தில், அதாவது அவருடைய முப்பத்தைந்தாவது வயதில் மில்டன் மணஞ்செய்துகொண்டார். ஆனால், அவர் கட்டழகமைந்த வாலிபனா யிருந்தபோதிலும், அவர் மனைவி, அவருடன் வசிக்கப் பிரியப்படாது தகப்பன் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். கலியாணம் செய்துகொண்டும் பிரம்மசாரியாக மில்டன் நான்கு வருஷ காலங் கழித்தார். கடைசியில் 1647-ம் வருஷத்தில் இருவருக்கும் இராசியுண்டாக, ஐந்துவருஷ காலம்வரை அவர்கள் புருஷனும் பெண்சாதியுமாக விருந்தனர். 1652-ம் வருஷத்தில் அவள் பிரஸவித்து, ஈன்றெடுத்த சிரமம் ஆற்றமாட்டாது இறந்துபோனாள். மனைவி மாண்டது வருத்தத்தை யுண்டாக்கியபோதிலும், அதைப் போக்கடிப்பதற்காகவும், தமது வாழ்நாளில் தமக்கு உற்றதுணை வேண்டுமென்றும், அவர் மறுமணம் புரிந்துகொண்டார். ஆனால், ஐயோ, பாவம்! அம்மாதும் ஒரு வருஷத்துக்குள் பிரஸவித்து இறந்துபோனாள்.

இக்காலத்தில் மில்டன் "காமன் வெல்த்" அரசாக்ஷிக்கு "லத்தீன் செக்ரடரியாக" அமைக்கப்பட்டார். அப்பொழுது அவருக்குச் சம்பளம் வருஷம் ஒன்றுக்கு இருநூறு பவுன் வீதம் கொடுக்கப்பட்டது. இந்த உத்தியோகத்தை அவர் 1660-ம் வருஷம்வரை, அதாவது, "இரண்டாவது சார்லஸ்" பட்டத்துக்கு வரும்வரை, பார்த்து வந்தார். இக்காலத்திலேதான் அவர் தன் மதத்தின் உயர்வைப்பற்றியும், ஜனங்களின் சுயேச்சையைப்பற்றியும் வியாஸங்கள் எழுதிவந்தார். அவ்விதம் எழுதின ஓர் லேகனத்திற்காக ராஜாங்கத்தார் அவருக்கு 1000 பவுன் இனாமளித்தார்களாம்.

இப்பொழுது மில்டன் முழுதும் குருடரானார். இவருடைய கண்ணொளி மழுங்கின காரணத்தை முன்னமேயே கூறியுள்ளோம். அவர் ஜனச்சந்தடியை நீத்து, ஓர் ஒதுக்கிடம் தேடி வசிக்க வாரம்பித்தார். தன் மனதில் நெடுநாளாய்க் குடிகொண்டிருந்தவோர் எண்ணத்தையும் பூர்த்திசெய்ய அவருக்கு அவகாசமேற்பட்டது. கண்ணொளி மழுங்கினபோதிலும் மனவொளி மழுங்காது பிரகாசமாயிருந்தபடியால் தான் உத்தேசித்திருந்த பெருங்காவியத்தை எழுதுவதில் மனத்தைச் செலுத்தினார்.

"காமன் வெல்த்" என்ற அரசாக்ஷியானது நெடுநாள் நீடித்திருக்குமேயானால் மில்டன் உத்தேசித்திருந்த காவியரத்னம் முடிவு பெற்றிருக்காது. ஏனெனில் "லத்தீன் செக்ரடரி" வேலையிலிருந்தபடியால் கிரந்தம் எழுதும் விஷயத்தில் மனத்தைச் செலுத்த அவருக்கு அவகாசம் ஏற்பட்டிராது. 1660-ம் வருஷம் மேமீ 29௳ "இரண்டாவது சார்லஸ்" ஆங்கிலச் சிங்காதன மேறினான். அப்பொழுதே மில்டனுடைய உத்தியோகமும் அவரிடமிருந்து பிடுங்கப்பட்டது. கண்ணுங் குருடாகி, வேலையும் போய், மூன்று பெண் குழந்தைகளுடன் மில்டன் சில நாள் கஷ்டப்பட்டார். ஆயினும் தன் மனத்திலிருந்த பெருத்த வெண்ணத்தை ஈடேற்றும் பொருட்டு, தன்னாலானமட்டும் முயன்றார். தன்னால் சொந்தமாக எழுதுவது அசாத்தியமாய்ப் போனபடியால், அவர் மூன்று முறை மணக்க வேண்டி வந்தது. அவ்விதம் மணஞ் செய்த மாதும் அவருடைய கிரந்தவேலையில் அவருக்கு

வெகுவாக ஒத்தாசை செய்தது மன்றி, அவரை அன்புடன் ஆதரித்துப் போற்றியும் வந்தாள். ஆனாலும், மூத்தாள் பெண்களுக்கும், இளைய தாயாருக்கும் சகஜமாய் நேரிடக்கூடிய சச்சரவுகளினால் மில்டனுடைய குடும்பத்தில் அமைதியில்லாமற் போயிற்று.

கண் குருடாய்ப் போனபடியால் மில்டன் தன் கையால் எழுதுவது முடியாமற் போயிற்றென்று முன்னமே கூறியுள்ளோம். ஆகையால் அவர் ஒவ்வொரு தடவையும் தான் கவனஞ் செய்த செய்யுளில் இருபது முப்பது வரிகளை அடிக்கடி உருப்போட்டு, மனப்பாடமாக்கி வைத்துக்கொண்டு, யாரையாவது கொண்டு எழுதச் சொல்வார். அவர் எழுதின கிரந்தங்களுள் சிரேஷ்டமானதும், ஆங்கில பாஷைக்கே ஓர் சிரோரத்தினம்போல் விளங்குவதுமான, அவருடைய (Paradise Lost) "பரமபத பங்கம்" என்னும் மஹா காவியமானது 1665-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டு, 1665-ம் வருஷத்தில் முடிவுபெற்றது.

மில்டன், லண்டனில் வசித்து வருகையில், "எல்ட்வுட்" என்னும் ஒருவனிடம் தன்னுடைய கிரந்த சிரேஷ்டத்தை விமர்சனத்துக்காகக் காண்பித்தார். அதைப் பார்த்த அவன் "பரமபதம் இற்றதைப்பற்றி இவ்வளவுதூரம் புகழ்ந்து பாடினீர். பரமபதம் திரும்பி அடையப்பட்டதைப்பற்றி ஒன்றும் எழுதவில்லையே" என்றான். உடனே அவ்வெண்ணம் மனத்தில் உதிக்க, "பரமபதம் அடையப்பட்டது" என்கிற கிரந்தச் சார்பையும், "ஸாம்ஸன் அகனிஸ்டஸ்" என்ற நாடகத்தையும் எழுதிமுடித்தார்.

நெடுநாளாய்த் தன் மனத்திலிருந்த விருப்பம் நிர்விக்னமாய் முற்றுப் பெற்றதும், அவ்விதம் முடித்து வைத்ததற்காகக் கடவுளை மனதார வாழ்த்திக்கொண்டு, தான் கிருத கிருத்யனாய் விட்டதைப்பற்றி அகமகிழ்ந்து, அமைதியான இதயத்துடன், 1674-ம் வருஷம், நவம்பர்மாதம் 10-ம் தேதியன்று கால கதியை யடைந்தார்.

ஜி. ரகுநாதாசாரியார்.

உருளைக்கிழங்கு

POTATOES

உருளைக்கிழங்கு இததேசத்து சேப்பங்கிழங்கு வெள்ளிக்கிழங்கு இவைகளைப்போன்ற ஒரு வகைக் கிழங்கு. இதன் பெயர் இதன் உருவத்தை யொத்ததேயாகும். சற்றேறக்குறைய பந்தைப்போலிருப்பதாலும் உருட்டிவிட்ட மாத்திரத்தில் உருளும் தன்மை யுடையதாலும் இதற்கு இப்பெயர் வாய்ந்ததென்று சொல்லலாம்.

உருளைக்கிழங்கு இயற்கையாய் நம் தேசத்தில் உண்டானதல்ல. ஆனால் அதைக் கொண்டுவந்து பயிர் செய்து பார்த்ததில் நமது பூமியில் அது நன்றாக வளருவதாகக் காணப்பட்டது. ஆறு மாதத்தில் பலன் தருவதாலும் ஜனங்கள் அதை அபரிமிதமாய் உபயோகப்படுத்துவதாலும் இப்பொழுது ஏராளமாய் பயிர் செய்யப்பட்டு வருகிறது.

வண்டல் படிந்த களிமண் நிலத்திலேதான் உருளைக்கிழங்கு வெகு செழிப்பாக வளரும். சேப்பங்கிழங்கும் வெள்ளிக்கிழங்கும் இன்னும் இதர கிழங்குகளும் வளரக்கூடிய நிலத்திலேயும் பயிர் செய்யலாம். ஆனால் நன்றாய் எருவடித்து மிக்க ஜாக்கிரதையுடன் பயிர் செய்துவரவேண்டும். ஆழவுழுது காற்றை நிலத்தினுட் புகும்படியும் செய்யவேண்டும். உழுத பிறகு மண்கட்டிகளை யெல்லாம் நன்று யுடைத்துவிடவேண்டும். எவ்வளவுக் கவ்வளவு சிறிதாக மண்கட்டிகள் உடைக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு காற்று நிலத்தினுட் புக இடமுண்டாகிறது. காற்று நன்றாய் நிலத்தினுட் புகுந்தாலொழிய பயிர் செழிப்பாக வளராது. ஆடி மாதக் கடைசியில் நிலத்தை இரண்டு சால் ஆழமாக உழுது மண்கட்டிகளை உதிர்த்து சமமாக்கி ஆவணி முதலில் எருவடித்துப் பிறகு ஆவணி மத்தியில் நன்றாய் ஒருதரம் உழுது விதை விதைக்கவேண்டும். ஆவணிமாதக் கடைசியும் புரட்டாசிமாத முதலுமே உருளைக்கிழங்கு பயிர் செய்வதற்கேற்ற காலம். எரு விஷயத்

தில் அனுபோக முடையோர்கள், மட்டுமே தங்கள் தங்கள் நிலத்திற்குத் தக்கவாறு எருவடித்து உருளைக்கிழங்கை நன்றாய் பயிர் செய்துவர முடியும். பின் கூறப்போகிற எருக்கள் அனுபோகத்தில் நல்ல பலனைத் தருவதாகக் காணப்படுகின்றன.

(1) ஏகரா ஒன்றுக்கு 20-வண்டி ஆட்டுப் புழுக்கை யடித்தல் அல்லது

(2) ஏகரா ஒன்றுக்கு 30-வண்டி சாணியடித்தல் அல்லது

3. ஏகரா ஒன்றுக்கு 9 மணு எலும்புத்தூள் (Bone meal) யடித்தல்.

முக்கால் அல்லது ஒருகஜ தூரத்திற்கப்பால் குழிகள் வெட்டி சுமார் ஒரு அடி ஆழத்திற்குக் கீழே விதையைப் புதைக்கவேண்டும். நல்ல விதை தொட்டால் அதுங்காமலும் பார்வைக்குக் கொஞ்சம் மங்கின நிறமாயுமிருக்கும். உருளைக்கிழங்கு பயிர் செய்பவர் தண்ணீர் பாய்ச்சுவதில் மிக்க சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டும். நிலத்தில் ஈரப்பசை எப்பொழுது மிருந்து கொண்டேயிருந்தால் உருளைக்கிழங்கு நன்றாய் வளரும். மழை அதிகமாக விருக்குமிடங்களில் தண்ணீர் தேங்காது. ஓடும்பொருட்டு வாய்க்கால்கள் வெட்டிவிடவேண்டும். மேற்கூறியபடி மிகவும் சிரத்தையுடன் பயிரிடும் பக்ஷத்தில் ஏகரா ஒன்றுக்கு 200-250 மணு கிழங்குக்குக் குறையாமல் கிடைக்கும். அதாவது ஏகரா ஒன்றுக்கு 30 ரூபாய் வரும்படி கிடைக்கும்.

தற்காலத்தில் உருளைக்கிழங்கு மிகவும் சாமானியமான காய்கறிகளில்ஒன்றாக உபயோகப்பட்டு வருகிறது. இக்கிழங்கில் 100-ல் 75 பங்கு தண்ணீரும், 20 பங்கு சர்க்கரையும் 3 பங்கு பிரோடீனும் (Protein) பாக்கி 2 பங்கு உப்புக்களுமே. அரிசி கோதுமை பருப்பு முதலியவைகளி லிருப்பதைவிட உருளைக்கிழங்கில் தண்ணீர் ஜாஸ்தியாயும் சர்க்கரை குறைச்சலாயு மிருப்பதினால் உடம்புக்கும் புஷ்டியைத் தரத்தக்கதாக விருக்கிறது. இக்கிழங்கு கறியாகவும் வருவலாகவும் பக்குவஞ்செய்யப்படுகிறது. பிராமணர்களில் சிலர் இதை உபயோகிப்பது சாஸ்திர விரோதமென்று சொல்லுகிறார்கள்: அது மிகத்தப்பான கொள்கை. பூர்வீகத்தில் இக்கிழங்கு இல்லாததினால்தான் நமது முன்னோர்கள் இக்கிழங்கை சாஸ்திரத்தில் எடுக்கவில்லை. ஆகையால் இக்கிழங்கை உபயோகித்தல் சாஸ்திர விரோதமென்பது மதியீனமென்றே சொல்லலாம். உருளைக்கிழங்கிலிருந்து ஆல்கொஹாலும் (Alcohol) எடுக்கப்பட்டு வருகிறது. இக்கிழங்கை வெயிலில் காயவைத்து மாவாக அரைத்து கோதுமை மாவுடன் சேர்த்து பிஸ்கோத் (Biscuit) செய்கிறார்கள். இப்பொழுது உருளைக்கிழங்கின் உபயோகம் அதிகரித்திருப்பதால் அதை நன்றாய் பயிர்செய்து வருபவர்கள் தக்க லாபம் பெறக்கூடும்.

பி. கே. நாராயணசாமி.

மனிதன் பிறக்கும் பொழுதே இருவித சுபாவமுடைமை:—மனிதன் இருவித சுபாவத்துடன் இவ்வுலகத்திற் பிறக்கிறான். ஒன்று முக்திக்கு ஸாதநமாயிருக்கும் வித்யாஸ்வபாவம்; மற்றொன்று ஸம்ஸாரத்திலும் பந்தத்திலும் அழுத்தும் அவித்யாஸ்வபாவம். ஜநந காலத்தில் இவ்விரு சுபாவங்களும் தராசின் தட்டு போல் ஸமநிலையிலிருக்கின்றன. பிறந்தவுடனே ஸம்ஸாரமானது தன் சுகங்களையும் போகங்களையும் ஒரு தட்டிலும் வைக்கின்றன. மனிதனது புத்தி ஸம்ஸார சுகங்களை விரும்பும்பக்ஷத்தில் ஸம்ஸாரத்தட்டு பளுவாகிக்கீழே பூமியின் பக்கமாய்ச்சாய்கின்றது; ஆத்மாவை விரும்பும் பக்ஷத்தில் ஆத்மத்தட்டு ப்ரஹ்மத்தின் பக்கமாய் சாய்கின்றது.

சந்திரன்
MOON

சந்திரகாந்தி நிலவு:-ஸூரியோதயமாவதற்கு வெகு நேரம் முன்னமேயே நிலம் தெளிந்து இருள் நீங்கி விடுகிறது. ஆனல் பௌர்ணிமையன்று சந்திரன் முழுகாந்தி வைபவத்துடன் பிரகாசிக்கும்போதுகூட மாஞ்செடி வீடு முதலியவற்றினடியில் நிழலிலிருக்கும் பொருட்கள் தெளிவாய்க் காணப்படுகிறதில்லை. நாலாபக்கங்களிலும் அடிவானத்திலாரம்பித்து ஆகாய முழுவதும் (அதாவது ககோளத்திலொருபாதி) பூர்ண சந்திரர்களை வைத்திழைத்தாலும், அதனலுண்டாகு மொளி சூரிய காந்தியில் அரைக்கால்கூட இராதாம்! சில சாஸ்திரிகள் சுமார் 60,000 பூர்ண சந்திரமண்டலங்கள் ஒன்று சேர்ந்து ஒரே காலத்திலுதித்துப் பிரகாசிக்குமானல் தினகரன் தேஜஸ்ஸை ஒருவாறு எட்டலாகுமென்கிறார்கள்!



பருமன்: ஆகர்ஷணம்.—முழு சந்திர கோளத்தில் பௌர்ணிமையன்று நாம் பார்க்கும் பாகம் சரிபாதி. அதன் விஸ்தீரணம் நம்முலக ஐரோப்பா கண்டத்தைப்போலிரண்டு பங்கு. மாகஷிமை தங்கிய நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் அரசாக்ஷிக்குட்பட்ட ராஜ்யத்தின் மொத்த விஸ்தீரணத்திற்குக் குறைந்ததே! இப்பூமியை யொரு தராசுத்தட்டில் வைத்தால், நிறை சரிக்கட்ட மற்றத் தட்டில் சுமார் 52-சந்திர கோளங்களைப் போடவேண்டும். சந்திரனைவிட இப்பூமி குறுக்களவில் சுமார் நான்கு மடங்கு கொண்டது. மேற்காட்டிய படம் இரண்டினுடைய தாரதரப் பருமனைக் காட்டும்.

நம்முலக வஸ்துக்களின் கனம் அவைகள் பூமியாலிழுக்கப்படுவதாலுண்டாகின்றது. பொருட்கள் பூமியை நெருங்கினல் அவற்றின் கனம் அதிகரிக்கும் விட்டு விலகக் கனம் குறையும். பூமியின் கனமிரட்டித்தால் ஒரு பலம் நிறையுள்ள படிக்கல் இரண்டு பலம் நிறையுள்ளதாய்விடும். தூரம் இரட்டித்தால், கனம் கால் பங்காய்விடும்; தூரம் பாதியானல், கனம் நான்மடங்காகும்! ஆகவே ஆகர்ஷண சக்தியாலுண்டாகும் வஸ்து கனம் அதையிழுக்கும் மூலப்பொருளின் கனத்தையும் தூரத்தையும் தன்னுடைய பொருளடக்கத்தையும் பொறுத்தது. நம்மைப்போலொருவன் அரிசி மூட்டையொன்றைச் சிரமப்பட்டுத் தூக்கிக்கொண்டு திடீரென்று சந்திரதலத்தைப் போய்ச்சேர்ந்தால், அவனுக்கு அதன் பாரம் இங்கிருந்ததில் ஆறிலொரு பங்குகூட இராது! சந்திரதலத்தில் நின்றுகொண்டு அதைப்போன்ற ஆறு மூட்டைகளை யவன்முதுகின்மேலேற்றலாம். இவ்வுலகிலொரு மூட்டை தூக்குவதிலும் சந்திரதலத்தில் அதேவிதமான ஆறு மூட்டைகளை யொரே சமயத்தில் தூக்குவதிலுமுள்ள சிரமம் ஒன்றே. சந்திரன் இப்போதிருப்பதைவிடச் சிறியதானல் அதன்மேல் நின்றுகொண்டு இன்னுமதிக மூட்டைகளை எளிதில் சுமக்கலாம். சந்திரமண்டல ரயில்வே போர்டர்கள் பாடு சுகந்தான்!



ஒரு விசேஷம். இதோவிருக்கும் படத்தைப் பாருங்கள். A-என்னுமிடத்தில் சந்திராஸ்தமன காலம். B-என்னுமிடத்தில் சந்திரன் தலைக்குமேல் வானமத்தியிலிருக்கிறது. B-யிலிருந்து அதற்கிருக்கும் தூரத்தைவிட A-யிலிருந்து அதிகமானது. ஆகையால் A-யிலிருப்போர்க்கு சந்திரபிம்பம் B-யிலிருப்போர்க்குத் தோன்றுவதைவிடச் சிறுத்துக் காணவேண்டும். அதாவது உதயாஸ்தமான காலங்களைவிட வானமத்தியம் வந்ததும் பெருத்துக் காணவேண்டும். ஆனல் நமது அனுபவமெப்படி? பௌர்ணிமை தினம் சந்திரனுதிக்கையில் அதன் பருமனைப் பார்த்திருப்பீர்களே. அகன்ற தாம்பாளத்தளவு பெரியதாய்க் காண்கிறதல்லவா? மேலேற வரவரச் சிறுத்துவிடுகிறது. வானமத்தியம் வந்ததும் உரிக்கா தேங்காயொன்றின் அளவுதானிருக்கிறது. மேற்கில் சாய்ந்ததும் பருத்து, அஸ்தமன காலத்திலும் உதயத்திலிருந்ததுபோலவே பிம்பம் விசாலமாய் விடுகிறது. நியாயமா யிருக்கவேண்டியதற்கும் தோற்றத்திற்குமுள்ள பேதத்தைப் பாருங்கள்! இதற்கென்ன காரணம்?



இப்படத்திலிருக்கும் AB, CD என்ற இரண்டு கோடுகளில் எது நீண்டதாகத் தோன்றுகிறது? அளந்து பாருங்கள். வாஸ்தவத்தில் இரண்டும் ஒரே நீளமானவையா யிருக்கின்றனவே! நமது கண்ணையே நாம் நம்பக்கூடவில்லை பார்த்தீர்களா! இதே விதமாய்த்தான் நாயிப்போது சொன்ன தோற்ற வித்தியாஸங்கள் வுற்படுகின்றன. யதார்த்த காரணம் நமது கண்களுக்குண்டாகும் ஓர்விதப் பிரமையே!

பல பெருத்த வஸ்துக்களுக்கு மத்தியமாக ஒரு சிறு வஸ்துவை வைத்துப்பார்த்தால், அது தன் ஸ்வபாவமாயுள்ள பருமனைவிட அதிகரித்துக் காணும். சந்திரோதயாஸ்தமன காலங்களில், அடிவானத்தை மறைத்துக்கொண்டு பெரிய விருக்ஷங்களும், மலைகளும், மேகங்களும் பல தோன்றி, அவை மத்தியமாகவோ, சமீபமாகவோ, தோன்றும் சந்திரபிம்பத்தைப் பெரியதாக்கிக் காட்டுகின்றன. வானமத்தியமாயிருக்கையில் இவ்விதத் தாரதம்யத்தைக்காட்டக்கூடியவையொன்றுமில்லை. சிறு பொத்தலொன்றிட்ட கடிதத்தைக்கண்முன் பிடித்து, மாஞ்செடி முதலியவற்றை மறைத்து, துவாரத்தின்வழியாகச் சந்திரனைமாத்திரம் பார்த்தால், உடனே அது சுருங்கிவிட்டது போலாய்விடும்! வானமத்தியிலிருந்தா லெவ்வளவு சிறிதாய்க்காணுமோ அவ்வளவுதானிருக்கும். கைவிரல்களைக் குவித்துக் குழாய்போலாக்கி, அதன் துவார வழியாகவும் பார்க்கலாம். ஆகையால் அடிவானத்திற்குச் சமீபத்திலிருக்கும்போது பிம்பம் பெருத்துக் காண்பது சுத்தப் பிரமமே யொழிய வேறில்லை.

உதயாஸ்தமன காலங்களில் சூரிய பிம்பம் பெருத்துக்காண்பதும் இவ்விதக் காரணத்தினல்தான்.

சந்திரஸ்வரூபம்.—விண்மண்டலத்திற் சஞ்சரிக்கும் தேஜஸ்ஸுகளுக்குள் பூமிக்கு அதிக நெருங்கியது சந்திரன். அதன் அமைப்பை வானசாஸ்திரிகள் விடா முயற்சியுடன் ஆராய்ந்திருக்கிறார்கள். இவ்விதக் காரியத்திற்கு முக்கிய ஸாதனம் தூரதிருஷ்டிக்கண்ணாடியே. இதனுதவியால், பூதலத்தில் அத்துவானமாய்க் காடுகளும், மலைகளும், பாலைவனங்களும் அடர்ந்த சில தேசங்களைப்பற்றி யெவ்வளவு நமக்குத் தெரியுமோ, அதைவிட அதிகமாய்ச் சந்திரதலத்தைப்பற்றிய விசேஷங்கள் தெரியும். தூரதிருஷ்டிக் கண்ணாடி யேற்படுவதற்குமுன் சந்திர களங்கங்களின் ஸ்வபாவத்தையும் காரணத்தையும்பற்றி ஜனங்களுக்கெவ்வித விசித்திர அபிப்பிராயங்க ளிருந்தனவென்று முன்னமேயே சொல்லி யிருக்கிறோம். இவ்விதப் பிரமங்களெல்லாம் நீங்கி, வாஸ்தவ மின்னதென்று ஏற்பட வெகுகாலஞ் சென்றது.

ஏறக்குறைய 350 வருஷங்களுக்குமுன் இத்தாலியா தேசத்தில் கலீலியோ வென்று ஒரு மஹாதத்வசாஸ்திரி யிருந்தார். அவர்தான் முதல்முதல் தூரதிருஷ்டிக்கருவியைச்செய்தவர். புதிதாயுண்டாக்கிய இக்கருவியைக்கொண்டு சந்திரபிம்பத்தைப் பார்த்ததில், அதன் தலம் சமமாயிராமல் கரடுமுரடாய்க் காணப்பட்டது. உடனே அதன் தலமும் பூதலம் போலவே ஜலாசயங்களையும் மலைப்பிரதேசங்களையும் பள்ளத்தாக்குகளையும் உடையதாயிருத்தல் வேண்டுமென்றெண்ண இடமுண்டாயிற்று. இக்கருவி வரவரத் திறமானதாயும் பெரியதாயும் செய்யப்படவே, சந்திரகோளம் செவ்வையாய்ப் பரீக்ஷிக்கப்பட்டு, அதன் நிஜஸ்வரூபம் பெரும்படியாய் வெளியாகலாயிற்று. இதற்குத் துணையாக மற்றொரு ஸாதனமும் சேர்ந்தது. வெறுங்கண்ணாடி மூலமாய் வெளிப்படாத ரகசியங்களும் போடோகிறப் மூலமாய் தெரியலாயின. அழகிய சந்திரபோடோக்கள் அநேக மெடுக்கப்பட்டு இவ்விஷயத்தில் வெகு உபயோகமுள்ளவா யிருக்கின்றன. இவற்றில் சாம்பல் நிறமாய்க் காண்பவை சாந்திரதல ஸமுத்திரங்களின் அடித்தலங்கள். காந்தியும் இருளும் கலந்து தோன்றுவன மலைகளையும் அவற்றின் நிழலில் மறைபட்ட தாழ்வரைகளையும் குறிக்கும். இம்மலைத்தாக்குகளில், நடுவிற் கறுத்துச் சுற்றி வெண்மையான பல சிறுசிறு வட்டங்களிருக்கின்றன. இவை வெகுகாலத்திற்குமுன் எரிந்து அணைந்த எரிமலைகளின் சிகரங்களாம்!

பூமியைப்போல் சந்திரனு மோருலகந்தானே. பலவித மலைகளும் ஏரிகளும் கடல்களு மிருக்கவேண்டியது நியாயந்தான். நமது உலகத்திலுள்ள எரிமலைகளைப்பற்றி வெகுவாய்ப் படித்திருப்பீர்கள். அவற்றின் காரண மின்னதென்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயம். சந்திரன் முற்காலத்தில் வெகு சுறுசுறுப்புள்ள பல அக்கிபர்வதங்களுள்ளதாக விருந்திருக்கவேண்டும். அதன்மேல் தோன்றும் மலைச்சிகரங்களின் சங்கியையும் நெருக்கமும் அக்காலத்திலிருந்திருக்கும் சந்திரனுடைய உஷ்ணக்கொதிப்பைச் சூசிப்பிக்கின்றன. வரவர அதன் சூடு வெளிகளிற் பரவியோடி ஆறி, அம்மலைகளின் சேஷ்டை ஓய்ந்துவிட்டது. அவற்றின் சிகரங்களினின்று வழிந்தோடிய உருக்குப் பிர

வாகங்களுடைய அடையாளங்கள் சந்திரதலத்திற் பலவிருக்கின்றன. இம்மலைகளுக்கும் கடல்களுக்கும் விசித்திரப் பெயர்களும் வைத்து, இலக்கமுமிட்டிருக்கிறார்கள்.

நான்கு அங்குலக் குறுக்களவுள்ள ஓர் இரும்புக் குண்டையும்,ஒரு அங்குல அளவுள்ள மற்றொரு இரும்புக்குண்டையும் அனலிலிட்டுச் செந்நிறமானதும் ஒரே க்ஷணத்தில் வெளியிலெடுத்து வைத்தால், சிறு குண்டு சிறிதுநேரத்தில் செந்நிறத்தை யிழந்து ஆறிக் கறுத்துவிடுகிறது. பெரிய குண்டைவிட்டுக் காந்தியும் சூடும் ஆறத் தாமதப்படும்.

வெகு காலத்திற்குமுன் சந்திரனும் பூமியும் அத்தியோஷ்ணமான கோளங்களா யிருந்திருக்கவேண்டும். அந்தஸ்திதியில் எரி மலைகளனேகம் அவற்றின்மீது தோன்றி வெடித்திருக்கும்.சந்திரன் சிறு கோளமாகையால் பூமியைவிடச் சீக்கிரத்தி லாறிப்போய்விட்டது. பூமியோ இன்ன முஷ்ணமுள்ளதாகவே யிருக்கிறது. அடிக்கடி பல தேசங்களில் எரிமலைகளால் ஜனங்களுக்குண்டாகும் பீதியையும் சேதத்தையும்பற்றிக் கேள்விப்பட்டுக்கொண்டே யிருக்கிறோம். ஆழ்ந்த குழிகள் தோண்டினா லவற்றினடிபாகங்கள், மேல்தரையை விட, உஷ்ணமுள்ளவையா யிருக்கின்றன வல்லவா? நிலக்கரிச் சுரங்கங்களுக்குள் ளிறங்கி வேலை செய்வோர் இவ்வுஷ்ணத்தை நன்குணர்கிறார்கள். பூமியினுள்மத்தியம் இன்னு மதிகக் கொதிப்புள்ளதாய், அங்கடங்கி யிருக்கும் பொருள்க ளெல்லாம் உருகித் திரவரூபமாயும் காசரூபமாயு மிருக்கின்றன. இவை மத்தியில் எதாவது கலக்கம் கோளாறு நேரிட்டால், அதற்குச் சமீபமாயுள்ள அக்கி பர்வதங்களின் மூகவழியாகவாவது, அல்லது புதிதாய்த் தரையைப் பிளந்துகொண்டாவது அவ்வுருக்கு வெளிப்பட்டு நாலாபக்கங்களிலும் வழிந்தோடுகிறது. கலக்கம் பலமாயிராவிட்டால் பூகம்பத்தோடு நம்மை விட்டுவிடுகிறது.

முன் பூமிக்கிருந்த உஷ்ணத்தில் நூற்றிலொருபங்கு கூட இப்போது கிடையாது. ஆதலாற்றான் அதன் சீதோஷ்ண நிலைமை உயிர் பிராணிகளும் புற்பூண்டு விருக்ஷ வர்க்கங்களும் தோன்றி ஜீவிக்க ஒத்திருக்கிறது. வரவர இன்னம் உஷ்ணம் சாந்தியடைந்தால் குளிர் மேலிட்டு ஜீவவர்க்க மனைத்தும் நசித்துப்போய் விடும். இவ்வளவு பெரிய ஆபத்து நேரிடப் பல யுகங்கள் செல்லும். ஆகையால் அற்பகாலஞ் ஜீவித்திருக்கப்போகிற நமக்குக் கவலையில்லை!

மற்றொரு பெரிய விசேஷம். பூதலப் பள்ளத்தாக்குகளில் நமக்கு ஜீவாதாரமான ஜலம் தங்கியிருக்கிறது. நம்மைச்சுற்றிக் கனத்த வாயுப்போர்வையுமிருக்கிறது. சந்திரனிடத்திலோ இவ்விரு பூதங்களி னிடையாவமே கிடையாது. அதன் சமுத்திரங்களிலும் ஏரிகளிலும் ஜலமே யில்லையாம்! ஜலமிருந்தால் எவ்விதத்திலும் அதினின்று ஆவி கிளம்பி மேகங்களுண்டாகிச சந்திரதலத்தின்மேற் பரவி யோடி மங்கலாய்க் காணும். இப்படி யொன்றும் நமக்குத் தோன்றுவதில்லை. வாயு மண்டலமுமில்லை யென்பதற்குச் சாக்ஷ்யமிருக்கிறது. நாம் நடுப்பகலில் வெயில் கடுமையாயிருக்குஞ் சமயத்தில் வெளிகளில் நின்று தூரத்தில் நிற்கும் மரஞ் செடி முதலியவற்றை நோக்கினால், அவை சஞ்சலமாயும் வீரூபமாயும் தோன்றும். அவற்றிற்கும் நமக்கும் நடுவிலிருக்கும் வாயு, சூரிய வெப்பத்தைத் தரையினின்று கிரகித்து சலனமுள்ள தாவதால், அதன் வழியாய் நாம் பார்க்கும் செடிகளின் பாகங்களும் சஞ்சல முள்ளனபோலத் தோன்றுகின்றன

சந்திரன் நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும்விட மிக்க நெருங்கியது; ஓட்டத்திலும் அவற்றைவிட வேகமானது. இதனால் சந்திரன் கிரக நக்ஷத்திரங்களுக்குமுன்னால் ஓடி அவற்றை மறைப்பதுண்டு. இவ்விதம் மறைக்கப்படும்போதெல்லாம் அவை ஓர் தட்டின்பின் சிறு புள்ளி யொளிவதுபோலத் தோன்றும். சந்திரன் நக்ஷத்திரங்கள் குறுக்காக வானத்தில் கிழக்காயோடுகிறதல்லவா? அதன் மார்க்கத்திலதற்குச் சற்றுக் கிழக்காக ஓர் நக்ஷத்திரத்தைக் கவனிப்போம். சந்திரன் மெதுவாய் அதை நெருங்கி மறைத்துத் தாண்டிவிடுகிறது. நக்ஷத்திரமும் சந்திர மண்டலத்தின் மேற்புறமாய்க் காணப்படுகிறது. சந்திரன் எவ்வேகத்துடன் நெருங்குகிறதோ அவ்வேகம் அதன் பிம்பத்தின் பின் நக்ஷத்திரம் மறைபடும் க்ஷணத்திலும் மாறுவதேயில்லை. மறைத்துப் பிரிவுறும் க்ஷணத்திலும் வேகத்தில் வித்தியாஸம் காணப்படுவதில்லை. இவ்விரு ஸந்தர்ப்பங்களிலும் அந்த நக்ஷத்திரத்தின் ஒளி சற்றும் குன்றுவதுமில்லை. இதனால் சந்திரனைச் சுற்றி வாயுப் போர்வையாவது மேகங்களாவது கிடையாதென்று நிச்சயிக்கலாம். அப்படியிருக்கும்பக்ஷத்தில் அதன் மண்டலத்திற்குப்பின் நக்ஷத்திரம் மறைய வரும் க்ஷணத்தில் கொஞ்சம் வேகந் தணிந்து தயங்குவதுபோலத் தொன்றும். மறுபுறம் வெளிப்படும் போதும் மெதுவாய் விலகுவது போலத் தோன்றி, சற்று நேரத்திற்கெல்லாம் பிழைத்தேனென்று தப்பியோடுவதுபோல் அவ்வேகமதிகமாய்விடும். மறைபடும் க்ஷணத்திலும் வெளிப்படும் க்ஷணத்திலும் அதன் காந்தி வாயுவினால் தடைபட்டு மங்கியிருக்கும். வாயு மண்டலத்தின் சேஷ்டை யிப்படிப்பட்டது. மேற்சொல்லிய வேக வித்தியாஸங்க ளொன்றும் சந்திரன் விஷயத்திற் கண்டதேயில்லை. இதனால் அதற்கு வாயுமண்டலமில்லை யெனலாம்.

ஜலமும் வாயுவுமில்லாவிட்டா லுயிர்ப்பிராணிகளிருக்க முடியாது. இப்பூலோக வாஸிகளான நமக்குத் தெரிந்திருக்கிறமாதிரி ஜீவராசிகளொன்றும் சந்திரகோளத்தில் வசிக்கவில்லை யென்று நிர்மாணித்திருக்கிறார்கள். போதுமான உஷ்ணத்திற்கு அடையாளமொன்றும் அதனிடமில்லை. எங்கும் நடுநிசிபோல நிச்சப்தமாய் ஓய்ந்து கிடக்கும்.

S. பாலகிருஷ்ணய்யர்.
B.A., L.T.

பிரிட்டிஷ் துரைத்தன ரீதி

THE BRITISH CONSTITUTION

அத்தியாயம் 3

பார்லிமெண்டு: அதன் வரலாறு.

பிரிடிஷ் துரைத்தனரீதியில் மூலாதாரமானவோர் விஷய மென்னவெனில் பார்லிமெண்டு மகாசபையின் மட்டில்லாத அதிகாரமாம். நாட்டில் ஜாரியிலிருக்கும் சட்டங்கள் எல்லாம் பார்லிமெண்டால்தான் செய்யப்படுகின்றன. நாடடங்கலும் நடந்துவரும் ராஜாங்க முறை முழுவதும் அதன் அதிகாரத்துக் குட்பட்டுள்ளது. அரசர், பிரபுக்களின் சபை (House of lords) சாமான்னியர் சபை (House of Commons) ஆகிய மூன்று அம்சங்களும் சேர்ந்தானது பார்லிமெண்டு மகா சபை. இவற்றுள் முதலம்சமாகிய அரசரைப்பற்றி முன்னத்தியாயத்தில் கூறினோம். மற்றவை இனிக் கூறப்படும்.

நாட்டிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் பிரதிநிதிகளாக வைதீக பிரபுக்கள் என்றும், லௌகீக பிரபுக்கள் என்றும்,சாமான்னியர் என்றும் மூவகை வகுப்பினர் இருக்கின்றனர். வைதீக பிரபுக்கள் என்பவர் சில அத்தியக்ஷகுருக்கள்மாராம். உயர்குலத்துக் குடும்பங்களின் தலைவர்கள் சேர்ந்தானது லௌகீக பிரபுக்களின் சபை. ஜனங்களால் தேர்ந்தனுப்பப்பட்ட பிரதிநிதிகளே சாமான்னிய சபையங்கத்தினராவர். இம்மூவகையார்க்கும் தலைவராக அரசர் வீற்றிருக்கின்றனர். ஆகவே,பார்லிமெண்டில் நடக்கும் விஷயமெல்லாம் ஜனங்களும் அரசரும் கூடியே நடத்துவதாக ஐதீகம்.

"பார்லிமெண்டு" என்னும் வார்த்தைக்கு "பேச்சு" அல்லது "சம்பாஷணை" யென்று பொருள். முதன் முதலில் அப்பதம் ஜனங்கள் ஒன்றுகூடிப் பேசிய பேச்சைமட்டுமே குறித்து நின்றது. பின்னர் காலக்கிரமத்தில், அவ்வாறு பேசுவதற்குக் கூடும் ஜனசபையைக் குறித்தது. இவ்விரண்டாவது பொருளிலேயே அப்பதம் இச்சிறு நூலில் வழங்கப்படும்.

பார்லிமெண்டு மகாசபையின் ஆதிவரலாற்றையும் சரித்திரத்தையும் பற்றிப் பேசவேண்டுமானால், ஆயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ள காலத்திலிருந்தே ஆரம்பம் செய்யவேண்டும். அதன் காலப்பிரமாணம் நான்கு பிரிவுகளாக்கப்படும்: (1) 1295-ம் வருஷத்துப் பார்லிமெண்டை மாதிரியாகக் கொண்ட மத்தியகாலப் பார்லிமெண்டின் காலம். (2) அரசருக்கும் பார்லிமெண்டுக்கும் பாத்தியாபாத்திய விஷயமாகச் சண்டை ஏற்பட்ட காலமாகிய டியூடர்-ஸ்டூவர்ட் அரசர்களின் காலம். (3) 1688-ம் வருஷத்துத் துரைத்தன மாறுபாட்டுக்கும் 1832-ம் வருஷத்தில் நடந்த பார்லிமெண்டின் சீர்திருத்தத்துக்கும் இடையிட்ட காலம். (4) 1832-ம் வருஷத்தி லாரம்பமான நவீன காலம், என்பனவாம்.

இனி, 1295-ம் வருஷத்துப் பார்லிமெண்டு தோன்றிய விதத்தையும், அது விருத்தியடைந்த மாதிரியையும் சுருங்கக் கூறுவோம்.

சட்ட நிர்மாணம் முதலிய முக்கியமான விஷயங்களில் அரசர், ஆலோசனையும் அனுமதியுமின்றி நடக்கக் கூடாதென்னும் சித்தாந்தம் இங்கிலாந்தில் நெடுநாளாகவுண்டு. பிராசீன ஸாக்ஸன் அரசர்கள் தங்களுடைய அறிஞர்களாலான "மூதறிஞர் சபை [1]"யின் ஆலோசனையையும் அனுமதியையும் பெற்று வந்தனர். ஆயினும் அச்சபைக்கு ஓர் நியமமிருந்ததாகத் தெரியவில்லை. வலிய அரசன் ஒருவன் அச்சபையை அடக்கியாள்வான். பலங்குன்றிய அரசனை, சபை யடக்கியாளும். மேலும் அச்சபை, ஜனசங்கியையிலாவது பெரியதாக விருந்ததில்லை. ஏழை ஜனங்கள், தூரங்களில் வாழ்பவரானால், வருவதற்குச் சவுகரியப்படாது.செல்வவான்களுக்கோ வருவதற்குமனமிராது. ஆகவே, இச்சபை அரசனுடைய அதிக்கிரமங்களைக் கண்டித்து, ஜனங்களுடைய சுதந்தரங்களைப் பாதுகாக்கக் கூடியதாக விருந்ததென்று சொல்வதற்கிடமில்லை. ஆயினும் இச்சபையின் அந்தஸ்து குறைந்துபோய் விடவில்லை. நார்மன் வெற்றிக்கு முன் அரசாண்ட இங்கிலீஷ் மன்னர்களில் ஒருவராவது இத்தேசிய சபையின் ஆலோசனையையும் அனுமதியையும் பெறாமல்,தாமே சுயமாக வரி விதிக்கவோ, சட்டமுண்டாக்கவோ அதிகாரத்தை மேற்கொள்ளத் துணியவில்லை.

நார்மன் அரசர் வந்த பிறபாடு, இந்தத் தேசிய சபைகளில் சிற்சில மாறுபாடுகள் உண்டாயின. ஜெயங்கொண்ட உவில்லியம் என்னும் அரசர், நாடடங்கலுமுள்ள நிலமெல்லாம் தம்முடையதென்றும், அந்நிலங்களில் சர்வபாத்தியதைகளையும் கொண்டாடும் சுவான்தாரர் அரசனைத்தவிர வேறொருவரில்லை யென்றும், நிலங்களைக் கைப்பற்றி யிருப்பவர்கள் எல்லோரும், அரசருக்கு நேராகவே அடங்கிவாழும் குடிகளென்றும் சித்தாந்தப்படுத்தினார்.ஏராளமான பூஸ்திதியையுடைய

1 Witenagemot.

நிலசுவான்கள், செல்வாக்கிலும் பலத்திலும் அளவுக்கு மிஞ்சி விருத்தியடையாவண்ணம், அவர், அவர்களுடைய நிலங்களை இங்கிலாந்தில் பற்பல விடங்களில் சிதறியிருக்கும்படிப் பகுத்துக்கொடுத்தனர். வலிய ஜமீன்தாரர்களுக்கிடையே ஏழை மிராசுதாரர்களும் கலந்து கலந்து இருந்தது பார்லிமெண்டுக்கு ஒரு அனுகூலமாயிற்று. நார்மன் அரசர்கள் மனம்போனபடி நடந்தகொடுங்கோலரசர்கள் வலியஜனங்களுடைய விரோதத்துக்கு மட்டுமே கொஞ்சம் பயப்படும் சுபாவமுடையவர்கள். ஆயினும் அவர்கள் பழைய ஸ்மிருதிகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் கொஞ்சம் மரியாதை வைத்தேதான் வந்தனர். ஜனங்களுடைய அங்கீகாரத்தையும் ஆலோசனையையும், கூடுமானல் பெறுவது நல்லதென்றே அவ்வரசர்களுக்குத் தோற்றியது. ஆகவே, அவர்கள் அடிக்கடி சபை கூட்டுவதுண்டு. ஆனல் நார்மன் அரசர்களின் சபை, போர்ச் சேவகத்துக்காக ஜாகீர் அனுபவிக்கும்மிராசுதாரர்களின் சபை யென்பதும், அச்சபையோர் அரசனுக்குப் பலவிதத்திலும் பணிந்து நடக்க வேண்டியவராக விருந்தனரென்பதும் ஞாபகத்தி லிருக்கவேண்டும். பொதுப்படக் கூறுமிடத்து, அக்காலத்திய சட்ட திட்டங்களெல்லாம் ஜனங்களுடைய அங்கீகாரத்தையும் ஆலோசனையையும் பெற்றிருந்தனவென்று சொல்வதற்கிடமில்லை. இரண்டாம் ஹென்றியின் காலத்தில் கூடிய சபைகளும், ஜான் காலத்தில் கூடிய சபைகளும் மேற்கூறியவாறே ஜாகீர்தார்களின் சபையாக விருந்தன. இந்த ஜான் காலத்தில்தான் "மகாசாஸனம்" என்பது பிறந்தது. மகாஜன சபையாரின் அங்கீகாரமின்றி வரி விதிக்கக்கூடாது என்று இச்சாஸனத்தில் எழுதப்பட்டது, பார்லிமெண்டாரின் அபிவிருத்திக்கு ஊன்றுகோல்போல நின்றது. பின்னர், 1254-ம் ஆண்டில் மூன்றும் ஹென்றி அரசனுக்குப் பணம் தேவையாக விருந்தபோது, அவ்விஷயமாக ஆலோசனை செய்வதற்கு மாகாணங்கள்தோறும் நான்கு போர்வீரர்கள் வரவேண்டுமெனக் கட்டளை பிறப்பித்தார். இவ்வித போர்வீரர்கள், ஜாகீர்தார்கள் அல்லர்; மகாஜனங்களின் பிரதிநிதிகள். இது முதற்கொண்டுதான் தேசீய சபையில் பிரதிநிதித்துவம் ஒழுங்காக ஆரம்பித்தது என்னலாம். மறுபடியும் 11 வருஷங்கள் கழிந்தபின் 1254-ம் ஆண்டில், ஸைமன்டி-மாண்டுபோர்டு என்னும் ராஜ்யதந்திர நிபுணர், தாம் பிரமுகராக விருந்து அழைப்பித்த சபைக்கு மாகாணங்களிலிருந்து மட்டுமின்றி, நகரங்களிலிருந்தும் வட்டங்களிலிருந்தும்பிரதிநிதிகள் வரவேண்டுமென்று உத்தரவனுப்பினர்.

ஆரம்பத்திற்கூறிய மாதிரிப் பார்லிமெண்டு 1295-ம் வருஷத்தில் முதலாம் எட்வர்டு அரசரால் அழைக்கப்பட்டது. இரண்டு பிரதம அத்திய குருக்களும், மற்றைய குருக்கள்மாரும், பெரிய மடாதிபதிகளும், நாற்பத்தெட்டுப்பிரபுக்களும் சபைக்கு வரவேண்டுமென்று அவர்களுக்குத் தனித்தனியே ஸ்ரீமுகம் அனுப்பப்பட்டது. ஒவ்வொரு வட்டத்திலிருந்தும் இரண்டு பிரதிநிதிகளும், ஒவ்வொரு நகரத்திலிருந்தும் இருவரும், ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் இரண்டு போர்வீரரும் தேர்ந்தெடுத்து அனுப்பப்படவேண்டுமென்று கட்டளைக்காரர்களுக்கெல்லாம் உத்தரவு பிறந்தது.

இந்தப் பார்லிமெண்டைப்பற்றி நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டுள்ளன. முதலாவது, இது ஜாகீர்தாரர்கள் சபையல்லாமல், தேசீய மகா ஜனங்களின் பிரதிநிதிகளாலான சபையாக விருந்தது. அக்காலத்தில் மகா ஜனங்கள் மூவகுப்பினராக விருந்தபடியால், அம்மூவகையினரும் பிரதிநிதித்துவம் பெற வேண்டுமென்று, வைதீகர்கள், பிரபுக்கள், சாமான்னியர் எனப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தஸ்தில் தாழ்ந்த வைதீக வகுப்பினர் வரவர, பார்லிமெண்டுக்கு வராதொழிந்தனர். உயர்ந்த வைதீகர்களான குருக்கள்மார், லௌகீகப் பிரபுக்களுடன் சேர்ந்துகொண்டனர். மற்றையோ ரெல்லோரும் சாமான்னியர் கோஷ்டியாயினர். ஆகவே, பார்லிமெண்டு, இருபெரும் பிரிவாகப் பிரிந்து, பிரபுக்கள் சபையெனவும் சாமான்னியர் சபையெனவும் தனித்தனிப் பெயரொடு விளங்குவதாயிற்று.

கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவெனில், பார்லிமெண்டு மகாசபை, பூர்வத்தில் அரசர்கள் கூட்டிய தேசிய சபையின் தொடர்ச்சியே யென்பதாம். ஆகவே, அச்சபை செய்துவந்த காரியங்களையெல்லாம் இப்பார்லிமெண்டு செய்யவேண்டியதாயிற்று. சாதாரணமாக, பார்லிமெண்டு சபை கூடுவதின் காரணம் அரசருக்குப் பணம் தேவையாகவிருப்பது தான். எதாவது ஒரு செலவு, தம்முடைய சாதாரண வரும்படியைக்கொண்டு செய்ய முடியாமற் போனல், அரசர் ஒரு பார்லிமெண்டு சபை கூட்டி, கஜானிஜி மூலமாகவேனும், மந்திரிமார்களில் ஒருவர் மூலமாகவேனும், தாம் விரும்புவதையும் விரும்பும் காரணத்தையும், அச்சபையார்க்கு விவரிப்பார். அரசர் கூறும் மொழியில் வேறு விஷயங்கள் இருக்குமாயினும், முக்கியமாகப் பணம் வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக விருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான், மகாஜனங்கள் தங்களுக்கிருக்கும் கஷ்டம் குறை முதலியவைகளைக் கூறிப் பரிகாரம் கேட்பார்கள். இவ்விதமாக ஜனங்கள் செய்துகொள்ளும் விண்ணப்பங்கள் பலவகைப்பட்டனவாகவிருக்கும். அவைகளைக் கவனித்து, என்ன பரிகாரங்கள் செய்யலாமென்று பார்ப்பதற்குச் சில உத்தியோகஸ்தர்கள் நியமனம் பெறுவார்கள்.

அக்காலத்துப் பார்லிமெண்டு நெடுநாள் கூடியிருப்பதில்லை. பிரயாணம் செய்வது கடினமாயும் பணச் செலவுள்ளதாயுமிருந்தது. வீடு வாசல்களை விட்டு விட்டு, மெம்பர்கள் வெகு நாள் தலைநகரில் தாமதிக்கக் கூடாதிருந்தது. சபை கூடுவதின் முக்கிய கருத்தெல்லாம், அரசருக்கும் ஜனங்களுக்கும் ஒருவித உடன்பாடு உண்டாகவேண்டுமென்பதாம். அரசருக்கு வேண்டியது பணம். ஜனங்கள் மன்றாடுவது குறைகளின் பரிகாரம். உபய கக்ஷிக்காரர்களுக்கும் ஏதோ ஒருவாறு திருப்தியாகக் காரியம் முடிந்தவுடன், சபையோர்கள் யதாஸ்தானம் போய்ச் சேருவார்கள். அரசரும் அவரது மந்திரிமார்களுமே பரிகாரங்கள் செய்ய வழி தேடுவார்கள்.

இனி, பார்லிமெண்டு மகாசபை காலக்கிரமத்தில் அடைந்த சுதந்தரங்களைக் கூறுவோம். பதினான்காம் நூற்றாண்டிலேயே அச்சபை, அரசருக்கு வரி விதிக்கப் பாத்தியதை இல்லையென்றும், அவ்வித பாத்தியதை பார்லிமெண்டு சபையாருக்கு மட்டுமே உண்டென்றும் சித்தாந்தப் படுத்திக்கொண்டது. வரி விதிப்பதில் சாமான்னியர்களே பெரும் பொறுப்பை வைக்க வேண்டியவரா யிருந்தபடியால், பணவிஷயமாக வரும் எல்லாவித நடவடிக்கையும் சாமான்னிய சபையிலேயே ஆரம்பமாக வேண்டுமென்னும் சித்தாந்தமும் தீர்மானமாயிற்று. முதன் முதலில் சாமான்னியர், தங்கள் தங்களுடைய குறைகளுக்குப் பரிகாரம் மாத்திரம் கேட்டவராதலால், சட்டநிர்மாணம் செய்வதில் அவர்களுடைய அங்கீகாரத்தையும் ஆலோசனையையும் அரசர் எதிர்பார்க்காமல், வைதீகலௌகிகப் பிரபுக்களைக் கொண்டுமட்டுமே காரியம் நடத்திவந்தனர். இதனல் கேட்டதொன்றும் கொடுப்பது வேறுமாகச் சிற்சில சமயங்களில் முடிந்ததுமுண்டு; இக்குறைபாட்டைத் தீர்க்கும்பொருட்டு, அரசராகவிருந்த ஐந்தாம் ஹென்றி, சாமான்னியரின் ஆலோசனையைப் பெறாமல் சட்டநிர்மாணம் செய்வதில்லை யென வாக்களித்தனர். இதன் மேல், சாமான்னியர், தங்களுக்கு வேண்டும்விதிவிலக்குகளை விண்ணப்பம் மூலமாகக் கேட்டுப் பெற்ற வழக்கத்தை விட்டுவிட்டு, ஜாரிக்கு வர லாயக்கான சட்டமொன்றையே அரசருடைய அங்கீகாரத்துக்கு அனுப்பத் தொடங்கினர். இந்தச் சுதந்தரம் கிடைத்ததும் சாமான்னிய சபையின் அந்தஸ்தும் உயர்ந்தது. இதற்கு முன்பெல்லாம், அரச அங்கீகாரத்தைப் பெற்ற சட்டம் "பிரபுக்களின் அனுமதியின் பேரிலும், மடாதிபதிகளின் அனுமதியின் பேரிலும், சாமான்னியர்களின் வேண்டுகோளின் பேரிலும்" நிர்மாணமானதாக வழங்கப்பட்டது. மேற்கூறிய சுதந்தரம் கிடைத்த பிறகு; சட்டங்களெல்லாம் பிரபுக்களுடையவும் சாமான்னியருடையவும் ஆலோசனையின் பேரிலும் அங்கீகாரத்தின் பேரிலுமே செய்யப்படுவதாக வழங்கலாயின. ஆகவே இரண்டு சபைகளும் சட்டநிர்மாணம் செய்வதில் பொறுப்பை வகிக்கும் சபைகளாயின.

பார்லிமெண்டின் செல்வாக்கு பதினான்காம் நூற்றாண்டிலும் பதினைந்தாம் நூற்றாண்டிலும் வெகு தீவிரமாக வளர்ந்தது. 1327-ம் வருஷத்தில் கூடிய ஒரு பார்லிமெண்டு இரண்டாம் எட்வர்டு அரசனைப் பட்டத்தினின்றும் அகற்றிவிடத் தீர்மானித்து, அவரை ராஜிவைக்கும்படி கட்டாயப்படுத்திற்று. பின்னும் சில வருஷங்களில், இன்னொரு பார்லிமெண்டு, இரண்டாம் ரிச்சர்டு அரசனைப் பட்டத்தினின்றும் அகற்றிவிட்டு, நான்காம் ஹென்றிக்கு அரசுரிமையைக் கொடுத்தது. இம்மாதிரி அரசனையே ஆக்கவும் அழிக்கவும் பார்லிமெண்டு அதிகாரம் பெற்றிருந்ததென்றால் அதன் செல்வாக்கைப்பற்றி விஸ்தரிக்கவேண்டுமோ?

டியூடர் வம்சத்தாரது காலத்தில் பார்லிமெண்டின் செல்வாக்கு, அஞ்சா நெஞ்சினரான அரசரது மன வன்மைக்குக் கீழடங்கியே யிருந்தது. எட்டாவது ஹென்றி சொன்னபடியெல்லாம் பார்லிமெண்டு செய்தது. எலிஜபெத் ராணி, தனது பார்லிமெண்டைக் கண்டித்து, அதன் ஜோலியை மட்டும் பார்க்கும்படி சினந்து கூறினள்.

ஸ்டூவர்டு வம்சத்தவரது காலத்தில், பார்லிமெண்டுக்குச் சுக்கிரதசை வந்தது. அரசர்களுக்கும் பார்லிமெண்டுக்கும் சண்டை யுண்டாக, அரசர்கள் தோல்வியடைந்தனர். அரசருடைய அனுமதியின்றிச் சபை கலையும் சுதந்தரத்தைப் பார்லிமெண்டார் பெற்றனர். பார்லிமெண்டு இல்லாமலே ராஜ்யபாரம் வகிக்க முயற்சி செய்தது பயனற்றதாயிற்று. பின்னர் 1688-ம் வருஷத்துத் துரைத்தன மாறுதல் நிகழ்ந்தது. அதனுடன் நாம் ஆரம்பத்தில் விவரித்த பார்லிமெண்டின் காலப்பிரமாணத்தில் இரண்டாம் பிரிவு முடிவுபெற்றது. அடுத்த மூன்றாவது நான்காவது காலப்பிரிவுகளைப்பற்றி அதிகமாக விவரிக்கவேண்டியதில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரசங்கவன்மையிற் றேர்ந்தவர்கள் பலரிருந்தனர். சாமான்னிய சபை பெரிய பிரபுக்களின் கைக்குள்ளிருந்தது. அப்போது உண்டான சட்டங்களில் முக்கியமானதொன்றென்னவெனில் 1715-ம் வருஷத்தில் ஏற்பட்ட "ஏழுவருஷச் சட்டமாம்." அதன்படி ஒரு பார்லிமெண்டின் ஆயுள் மூன்று வருஷங்களிலிருந்து ஏழு வருஷத்துக்கு உயர்த்தப்பட்டது. 1832-ம் வருஷத்தில் பார்லிமெண்டு சீர்திருத்தமடைந்து, ஊக்கத்துடன் வேலை செய்யத் தொடங்கிற்று. இரண்டு வருஷங்கள் சென்றதும் 1834-ம் வருஷம் அக்டோபர் மாதம் 16-ந் தேதியில், பார்லிமெண்டு மகாசபையின் பழைய வாசஸ்தானம் அக்கினிக்கு இரையாய்விட்டது. புதிதாக வெஸ்டுமின்ஸ்டர் அரண்மனை கட்டப்பட்டு, பார்லிமெண்டின் வாசஸ்தானமாகியது.

இனி, அடுத்த அத்தியாயத்தில் பார்லிமெண்டு சபைகளில் வியவஸ்தைகளைப்பற்றிப் பேசுவோம்.

சக்திதத்வ போதினி

PHYSICS PRIMER

ஒளியின் போக்குமாற்றம் :
இருபுற வளைவுக் கண்ணாடிகள்

Refraction of light—Lenses

கண்ணாடிகளுள் ஒளிஸம்பந்தமாக விசித்ரம் காட்டும் ஒருவகைக் கண்ணாடி உண்டு. இவைகளுக்கு இருபுற வளைவுக் கண்ணாடி என்று பெயர். இவைகளுள் முக்கியமாக இருபுறமும் குவிவான கண்ணாடிகளும், இருபுறமும் குழிவான கண்ணாடிகளும் நாம் கவனிக்க வேண்டியவை. இக்கண்ணாடிகள் பொதுவாக வட்டமாகவிருக்கும். முன்னது ஓரத்தில் பருமன் குறைவாயும் மத்தியில் பருமன் அதிகமாயும் இருக்கும்: பின்னது ஓரத்தில் பருமன் அதிகமாயும் மத்தியில் குறைவாயும் இருக்கும். அவைகளைக் குறுக்கே வெட்டினால் படத்திலிருப்பதுபோல விருக்கும். இம்மாதிரியான கண்ணாடிகளில் அநேகமிருந்தும் இவ்விரு விதங்களே முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியவை.



இவைகளுள் ஒளி ஊடுருவிப்போவதைக் கவனிப்போம். இருபுறக் குவிவான வட்டக் கண்ணாடித் துண்டை எடுத்து ஸூர்யன் ஒளி நேராகப் படும்படியாகப் பிடித்து அதன் அருகில் மறுபுறம் ஒரு காகிதத்தைப் பிடிபபோம். அதில் கண்ணாடிபோல வட்டமான நிழலும், மத்தியில் ப்ரகாச வட்ட பாகமும் காணப்படும். இதை எடுத்துவிட்டு தூசி கிளப்பினால் ஸூர்யரச்மி குவிந்து கொஞ்ச தூரத்தில் ஒரு புள்ளியில் சேருவதையும், அப்பால் அது விரிந்துபோவதையும் கண்ணால் காணலாம். இந்தப் புள்ளியில் கொஞ்சம் பஞ்சு அல்லது லேசான காகிதத்தைப் பிடித்தால் அது பற்றி எரியும். இந்தவிடத்திற்கு முக்ய சேர்க்கை ஸ்தானம் என்று பெயர். ஆகவே இதனுள் ஊடுருவிச் செல்லும் ஒளி பருமனதிகமான மத்திய பாகத்தை நோக்கி வளைந்து குவிகின்றது. ஆதலால் இந்தக் கண்ணாடிகளுக்கு குவிவுக் கண்ணாடி என்று பெயர்.

இருபுறக் குழிவான கண்ணாடியை எடுத்து இம்மாதிரி செய்தால் எதிர்புறம் நிழலே இராது. கண்ணாடி அளவு ஒளி நிறைந்தும் அதற்கு அப்பால் ஒளியுள்ள பாகமும் சூழ்ந்தும் காணப்படும். இங்



கும் ஒளி பருமன் அதிகமான ஓரத்தை நோக்கி வளைய விரிந்துபோய்விடுகிறது. இவைகள் சேருவது ஒளிவரும் பக்கத்திலேயே. அதாவது ஒளி வரும்பக்கத்திலேயே ஒரு புள்ளியிலிருந்து வருவனவாகத் தோற்றும். ஆகவே இந்தக் கண்ணாடியில் முக்ய சேர்க்கை ஸ்தானம் போலியானது: இரு புறமும் உண்டு. ஆனால் முன்கூறிய கண்ணாடியில் இது உண்மையாக உள்ளது: அதைக்கொண்டு சில வஸ்துக்களை எரிக்கலாம். இதனால் இக்கண்ணாடிக்கு விரிவுக்கண்ணாடி என்றும், முன்னதற்கு குவிவு அல்லது எரிக்கும் கண்ணாடி என்றும் பெயர்.

இருபுறக் குவிவான கண்ணாடிதான் இவை இரண்டுள் மிக முக்யமானது. இதில் உண்மையாயும் போலியாயும் உள்ள இருவித ப்ரதிபிம்பங்கள் உண்டாகும். முக்ய சேர்க்கை ஸ்தானம் போன்ற இரட்டிப்பு தூரத்தில் இருபுறமும் உள்ள புள்ளிக்கு வளைவு மத்தியம் என்று பெயர். ஒரு புறம் வஸ்து ஸூர்ய நக்ஷத்ராதிகள்போல வெகுதூரத்தி லிருந்தால் அதன் உண்மை பிரதிபிம்பம் மறுபுறம் முக்ய சேர்க்கை ஸ்தானத்தில் உண்டாவதை முன்னரே பார்த்துவிட்டோம்



இனி தூரத்திலுள்ள மரம்முதலியவைகளுக்கு எதிரே இதைப் பிடித்தால் எதிர்புறம் முக்ய சேர்க்கை ஸ்தானத்திற்கும் வளைவு மத்யஸ்தானத்திற்கும் இடையில் சிறிதாயும் தலைகீழாயும் உள்ள உண்மை ப்ரதிபிம்பம்

உண்டாகும். வளைவு மத்யஸ்தானத்திலுள்ள வஸ்துவுக்கு எதிர்புறத்தில் வளைவு மத்யஸ்தானத்தில் அதே



அளவுடன் கூடிய தலைகீழான உண்மை ப்ரதிபிம்பம் உண்டாகும். வஸ்து வளைவு மத்தியத்திற்கும் முக்ய சேர்க்கை ஸ்தானத்திற்கு இடையில் வந்துவிட்டால்



உண்மையாயும் தலைகீழாயும் உள்ள ப்ரதிபிம்பம் மறுபுறம் வளைவு மத்ய ஸ்தானத்திற்கு அப்பாற்பட்டு பெரிதாகிவிடும். முக்ய சேர்க்கை ஸ்தானத்திற்கே வஸ்து வந்துவிட்டால் அதிலிருந்துவரும் ஒளி வளைந்த பின் ஒரே புறமாக மட்டமாகப் போவதால் உண்மை ப்ரதி



பிம்பம் உண்டாகாமல் எகாண்ட வெளிச்சமாகிவிடும். வஸ்து முக்ய சேர்க்கை ஸ்தானத்திற்கும் கண்ணாடிக்கும் இடையில் வந்துவிட்டால், அதே புறத்தில் பெரிதாயும் நேராயும் உள்ள போலி ப்ரதிபிம்பம் உண்டாயிருப்பதை மறுபுறம் இருந்து நோக்கினால் காணலாம். இந்த அவஸரத்தில் இக்கண்ணாடிக்கு பூதக்கண்ணாடி என்று பெயர். ஒரு சிறுகுவிவுக்கண்ணாடியை மெழுக்குவத்தி விளக்கையும் இருட்டறையில் வைத்துக்கொண்டு இவை எல்லாவற்றையும் நாமே சோதித்தறியலாம் இக்கண்ணாடி இம்மாதிரியாக சிறு எழுத்து வாசிப்பதற்கும் கைகடிகாரம் பிரிப்பது முதலிய நுட்ப வேலைகளுக்கும், ரத்ன பரீக்ஷைக்கும் பூதக்கண்ணாடியாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தூரவஸ்துக்களை சிறிதாயும் தலைகீழாயும் உள்ள உண்மை ப்ரதிபிம்பமாக்கும் அவஸரத்தில் இக்கண்ணாடி படப்பெட்டியில் உபயோகப்படுத்தப்படுகிறது. வெகுதூரவஸ்துக்களை ப்ரதிபிம்பமாக்கும் அவஸரத்திலும் பூதக்கண்ணாடி அவஸரத்திலும் இக்கண்ணாடிகள் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் உபயோகப்படும். அப்பொழுது முன்னதற்கு வஸ்துக்கண்ணாடி என்றும், இரண்டாவதற்குப் பார்வைக் கண்ணாடி என்றும் பெயர். ஆதலால்தான் இருபுற



குவிவுக்கண்ணாடி மிக முக்யம் என்று கூறியது. இருபுற வளைவான கண்ணாடிகளின் தகுந்த சேர்க்கையால் விசித்ரப்படவிளக்கு, பெரிய பூதக்கண்ணாடி, வான சாஸ்திர தூரதிருஷ்டிக்கண்ணாடி, அற்புதப்படப் பெட்டிகள் முதலிய ஒளிஸம்பந்தமான யந்திரங்கள் ஆக்கப்படுகின்றன.

இதை முடிக்குமுன் விரிவுகுவிவுக்கண்ணாடி ஆகிய இவைகளின் முக்ய உபயோகம் ஒன்று கூறாமலிருக்க முடியாது. நாற்பது வயதிற்குமேல் சாளேச்வரம் அல்லது வெள்ளெழுத்து என்பது எல்லோருக்கும் வருவதுண்டு. இது வந்துவிட்டால் ஸுமார் ஓரடி தூரத்திற்குள்ளிருக்கும் வஸ்துக்கள் நன்றாகத் தெரியமாட்டா. நமது பெரியவர்களிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னால், அவர்கள் எவ்வளவு தூரம் கையால் புத்தகத்தை ஒதுக்கிப் பிடிக்க முடியுமோ அவ்வளவு தூரத்தில் வைத்துப் பார்ப்பார்கள். நமது கண் ஒவ்வொன்றிலும் உள்ள இருபுறக் குவிவான வட்டக் கண்ணாடியிலிருந்து பின்புறமுள்ள ஸூக்ஷ்மசக்தி வாய்ந்ததிரையில் வெளிவஸ்துக்களின் பிரதிபிம்பங்கள் உண்டாகும். இது நன்றாக அந்தத் திரையில் விழுந்தால்தான் நமக்குத் தெளிவான திருஷ்டி உண்டாகும். தூர வஸ்துக்களை நோக்குங்கால் இந்தக்குவிவுக்கண்ணாடி,உள்ளே ஏற்பட்டுள்ள நரம்புச் சக்திகளால் குவிவு குறைய ப்ரதிபிம்ப ஸ்தானம் ஒதுக்கப்பட்டு திரையில் நன்றாய் அது விழும். அருகாமையிலுள்ள வஸ்துக்களை நோக்குங்கால் அந்தக் கண்ணாடி குவில் அதிகமாக ப்ரதிபிம்ப ஸ்தானம் நெருங்க திரையில் அதுவிழும். மேலும் கண் கோளத்தில் முன்முதல் பின்வரையிலும் உள்ள குறுக்களவு வயதாகக் குறைவாகலாம் அப்பொழுது அருகிலுள்ள வஸ்துக்கள் ப்ரதிபிம்பம் கண்ணின் பின்புறம் தள்ளிவிழ திரையில் மங்கலான ப்ரதிபிம்பம் விழலாம். இதோடும் கண்ணுள்ளிருக்கும் கண்ணாடி அதிகக்குவிவாகும் சக்தியை இழந்தும் இருக்கலாம். இந்த ஸமயத்தில்தான் வெள்ளெழுத்து வரும். இங்கு

அருகிலுள்ள வஸ்துவின் ப்ரதிபிம்பத்தைத் திரையின் மேல் நன்றாக விழச்செய்ய அதிகக் குவிவு கொடுக்கும்படியான குவிவுக்கண்ணாடியைக் கண்முன் பிடிக்க வேண்டும். அதாவது தகுந்த குவிவுக்கண்ணாடிகளாலாகிய மூக்குக்கண்ணாடி போட்டுக்கொள்ளவேண்டும்.

இக்காலத்தில் எல்லாமாணாக்கர்களும் பளபளப்பான வெளுப்புக் காகிதத்தில் கருப்பு எழுத்துக்களையும், கருப்புப் பலகைகளில் வெளுப்பு எழுத்துக்களை ஓயாது பார்க்கும்படி நேரிட்டுவிட்டது. இதனால் இளம்பிராயத்திலேயே எல்லோருக்கும் தூரதிருஷ்டிக்குறைவு என்ற கண்நோய் உண்டாகிறது. இது உண்டாகாவண்ணம் நம்முன்னோர் பனைஓலையில் பச்சை எழுத்தை நமது சிறுவர்களுக்குப் படிக்கக் கொடுத்து வந்தனர். புத்தகம் படிப்பது முதலிய அருகிலுள்ளவஸ்துக்களைக் காணும் விஷயத்தில் யாதொரு குறைவும் இராது. இந்த நோயில் தூரவஸ்துக்கள் மங்கலாகக் காணப்படும். அநேகருக்கு இந்நோயிருந்தும் வெகுநாள் தெரியாமலிருக்கலாம். அதிக தூரம் போகப்போக வஸ்துக்கள் சிறிதாகி அவைகளின் பாகங்கள் நன்றாகத் தெரியாமற்போவதால் தூரவஸ்துக்கள் மங்கலாகத்தானிருக்கும் என்று அவர்கள் எண்ணிவிடுவார்கள். தூரவஸ்துக்கள் மங்கலாகத் தெரிய நியாயமே இல்லை. யாருக்கு மங்கலாகத் தெரிகின்றனவோ அதாவது தூரவஸ்துக்களின் ஓரத்தோற்றம் மங்கலாகக் காணப்படுமோ அவர்களுக்கு எல்லாம் இந்நோய் உண்டு. இவர்கள் விஷயத்தில் தூரவஸ்துக்களின் ப்ரதிபிம்பம் பின்திரையில் விழும்படி கண்ணுள்ளிருக்கும் கண்ணாடி குவிவில் குறையும் திறனற்றதாகிவிடும். அல்லது கண்கோளம் குறுக்களவில் சற்று அதிகமாகவிருக்கும். குவிவுக்குறை ஸரிப்படுத்த இருபுறமும் குழிந்த கண்ணாடியைக்கண்முன் பிடிக்கவேண்டும். அதாவது இவர்கள் இருபுறமும் குழிந்த கண்ணாடிகளாலாகிய மூக்குக்கண்ணாடிகள் போட்டுக்கொள்ளவேண்டும். இந்தக் குறைவு இக்கண்ணாடிகள் போட்டு வந்து முதலில் கொஞ்சம் அதிகமாகி நாளடைவில் நீங்கிவிடும். இதைக் கவனியாது விட்டுவிட்டால் சாளேச்வரம் வரும் வயதில் இரண்டும் கூடி கண்ணைக் கெடுத்துவிடும். கண்ணுள்ளிருக்கும் கண்ணாடி வஸ்துக்கள் தூரத்திற்கு ஏற்பக் குவிந்து, குறைவதற்கு இசைவு சக்தி என்று பெயர். இம்மாதிரியான இசைவுசக்தி இருக்கிறது நமது கண்ணுள் என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். தூரவஸ்துவொன்றை வெகு உன்னிப்பாகப் பார்த்துவிட்டு திடீரென்று புஸ்தகத்தைப் பார்த்தால் கண்ணுள் சிறு குறுகுறுப்பு வலியும் உண்டாகும். உள்ளேயிருக்கும் கண்ணாடி குவிவில் அதிகமாகிப் பக்கத்து சதைகளை அழுத்துங்கால் உண்டாகும் வலி. ஒளியின் போக்கு மாற்ற . ஸம்பந்தப்பட்டுத்தான் ப்ரகிருதி சாஸ்திரத்தில் அநேக யந்திரங்கள் உண்டாயிருக்கின்றன. இதன் ஸம்பந்தத்தால்தான் நாம் பார்க்கும்பொழுது கண்ணுள் உண்டாகும் மாறுபாடுகளை நன்கு உணரலாம்.

SOUTH INDIAN FOLKLORE

திராவிடக் கதைகள்

1. "அஞ்சாள் வேலைக்காரன் ஓராள் திண்டிக்காரன்
ஆத்துலே போறான்! ஆத்துலே போறான்!
எடுப்பாருண்டோ! பிடிப்பாருண்டோ!!"

மூங்கில் தோப்பில் வேலைசெய்துகொண்டிருந்த தன் தகப்பனுக்கு "மனம்போன போக்கன்." என்று பெயர்கொண்ட சிறுவன் கஞ்சி கொண்டு போய்க்கொண்டு இருந்தான். மத்தியானவேளை, பசிபொறுக்க முடியாத அந்தச் சிறுவன் தன் தகப்பனுக்கு எடுத்து போய்க்கொண்டிருந்த கஞ்சியைக் கொஞ்சம் குடித்துவிட்டு மிஞ்சியதை எடுத்துப்போனான். தகப்பன் இவன் குடித்ததைத் தெரிந்து அவனைப் பலவிதம் வைது புடைத்தான். இதை எல்லாம் சிறுவன் பொறுமையுடன் தாங்கிக்கொண்டிருந்தான். பக்கத்திலிருந்த அந்தச் சிற்றாற்றின் அழகைப் பார்த்துக்கொண்டிருந்த அவனது விநோதம் அடிகளை லக்ஷியம் செய்யாமல் தன் தகப்பனை "இந்த ஆறு எங்கு போகிறது?" என்று கேட்கும்படித் தூண்டியது. தகப்பனுக்கு வந்த கோபத்திற்களவேயில்லை. "உன் நடுவீட்டிற்கிந்த ஆறு போகிறது" என்றான். அதுவும் நிச்சயம்தான் என்று அந்தப் பையன் எண்ணினான்.

சற்றுக் கோப மாறியதும் தான் வெட்டிய விறகைக் கட்டுகட்டி சிறுவன் தலைமேல் வைத்து வீட்டிற்கெடுத்துப் போகும்படி தந்தை ஏவினான். சிறுவன் தன்தந்தை கூறியதை மறக்காது மஹாபக்தியுடன் அந்த விறகு சுமையைப் பொத்தென்றந்த ஆற்றில் வீசினான். தகப்பன் கோபித்து "ஏன் அவ்வாறு செய்தாய்?" என்று கேட்டான். சிறிதும் மயங்காதந்தச் சிறுவன் "நடுவீட்டிற்குக் கஷ்டமில்லாமல் போவதற்காக" என்றான். எரியும் தீயுள்விட்ட நெய்போலிந்தப் பதில் அவன் கோபத்தை அதிகப்படுத்த அப்பயலை நன்றாகப் புடைத்து அந்த ஓடும் சிற்றாற்றில் தள்ளினான். வந்தகோபம் அச்சிறுவனைப்பற்றிக் கவலைப்படாமலிருக்கும்படி அவனைச் செய்துவிட்டது.

நிற்க, அந்தச் சிறுவன் அந்தச் சிற்றாற்றின் ஓட்டத்தின் விசையின்படி உருண்டு உருண்டு போய்க்கொண்டே யிருந்தான். அதன் விசையைத் தடுக்க முடியவில்லை. ஆனாலும் அது அவன் உடம்பைச் சிறிது அலட்டியதே அல்லாமல் உடலை ஒன்றுஞ்செய்யவில்லை. ஆகையால் தன்னை யாரேனும் வந்து எடுத்துக் காப்பாற்றலாம் என்னும் நம்பிக்கையால்

"அஞ்சாள் வேலைக்காரன், ஓராள் திண்டிக்காரன்
ஆத்திலே போறான்! ஆத்திலே போறான்!
எடுப்பாருண்டோ! பிடிப்பாருண்டோ!!"

என்று கூவிக்கொண்டே அந்த ஆற்றினுடனே உருண்டு புரண்டு வந்துகொண்டிருந்தான். இதைக்கண்ட ஓர் தோட்டக்காரன் சிறுவன்பால் இரக்கங்கொண்டு "இவன் ஐந்தாள் வேலை செய்யக்கூடியவனும்! ஓராள் உண்டிதான் கொள்வான்போல் தோன்றுகிறது! நமக்கிப்படிப்பட்டவேலைக்காரன் கிடைப்பது அரிது!" என்று ஆலோசித்து அவனை அவ்வாற்றிலிருந்து வெளி ஏற உதவிசெய்து "உன் பேர் என்ன? என்னிடம் வேலை செய்கிறாயா?" என்றான்.

"அதற்கொன்றும் தடையே கிடையாது. என் பெயர் 'தோலிருக்கச் சுளைவிழுங்கி" என்றான்.

"ஸரி அப்படியே யிருப்பாய், தோலிருக்கச் சுளைவிழுங்கி" இவ்வாறு ஒற்றுமையுடன் 'மனம்போன போக்கன்' வேலை செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில் அவன் வாழைத்தோட்டத்தைக் காக்கும்படி ஏவப்பட்டான்.

நமது சிறுவனும் தன் பெயர் கோணாது விளங்க, கனத்த அந்தவாழைக்குலைகள் தாங்கமுடியாத பாரத்துடன் வளைந்திருந்ததைப் பார்த்து மிகுஇரக்கமடைந்து ஒரு குலையிலாவது ஒரு பழத்தின் கனமாவது காணாத விதம் வாழைப்பழத்தைத் தின்று பக்ஷணம் செய்து, குலைகள் தோலோடு மாத்திரம் விளங்கச் செய்தான். வாழைகளும் சாய்ந்த தலை நிமிர்ந்து சற்று மேல் பார்த்தன. வந்த தோட்டக்காரனும் மேல்பார்த்து குலைகளில் ஒன்றிலாவது மருந்திற்கும் ஒரு பழமுமில்லாமல் விளங்குவதைக் கண்டு அவன் வயிறெரிய "அடே! 'தோலிருக்கச் சுளைவிழுங்கி' என்னடா இது! காவலிருந்து நாசமாய்ப் போனாய்! யாரடா இப்படிச் செய்தது? எடுத்தவன் நாசமாய்ப்போக!" என்றுரத்துக்கூவினான். "ஒன்றும் பயப்பட வேண்டாம்! யாரும் இங்கு வரவில்லை. எல்லாம் பத்திரமா யிருக்க ஏன் இப்படிக் கோபிக்கிறீர்? யாராவது ஒருவன் இங்கு வந்து திருட முடியுமா? இந்தமாதிரியாக நான் செய்ததற்கு நீங்கள் ஏன் இப்படிக் கோபிக்கிறீர்?" என்றுத்தரமளித்தான். தோட்டக்காரன் நடந்ததை ஊகித்து, அந்தச் சிறுவனைப்புடைத்து விலாவொடிய முறிய அடித்து அந்த நட்டாற்றிலே போக்கினான்.

நிற்க, நமது சிறுவன் அடியுண்ட உடம்பெல்லாம் பட்ட ஊமைக்காயங்களிற்கு அந்த ஆற்றின் ஓட்டம் உடம்பெல்லாம் பிடித்து கொடுத்தாற்போல சற்று உடல் வலி நீங்கி 'நாம் நன்மையுடன் திருடர்கள் வாராதிருக்கும்படிச் செய்தால் இவனுக்கேன் இப்படிக் கோபம் வந்தது" என்று எண்ணிக்கொண்டு மறுபடியும்

"அஞ்சாள் வேலைக்காரன் ஓராள் திண்டிக்காரன்!
ஆத்திலே போறான்! ஆத்திலே போறான்!
எடுப்பாருண்டோ! பிடிப்பாருண்டோ!!"

என்று கூவிக்கொண்டே அந்தவெள்ளத்துடன் புரண்டுக்கொண்டிருந்தான்.

புறத்துக் கழனியில் வேலை செய்துகொண்டிருந்த குடியானவன் இந்த ஆற்றிலிருந்துவந்த சப்தத்தைக் கேட்டு என்னவென்றங்குப் பார்க்கவந்தான். அச்சிறுவனதிரைச்சலைக் கேட்டு அநுதாபங்கொண்டு "நீ ஏன் இவ்வாறு கஷ்டப்படுகிறாய்? என்னிடம் இரு. இந்த நெற்கொல்லைக் காத்துக்கொண்டிரு. நீ யார்? உனக்கிங்கிருக்க இஷ்டம்தானா? உன் பெயரென்ன?" என்று ஓராள் உணவுண்டு ஐந்தாள் வேலைசெய்வான் என்று எண்ணிக்கொண்டு கேட்டான்.

"என் ஐயனே! எனக்கு ஏவலிட யார் இருக்கிறார்கள் என்று காத்துக்கொண்டிருக்கிறேன். என் பெயர் 'போர்ச்சுட்டு பொறிபொறுக்கி'; உங்களிடம் வேலை செய்ய எனக்கு யாதொரு தடையும் கிடையாது."

இதைக்கேட்ட குடியானவன் தனக்கிதுவரையும் கிடைக்கமுடியாத வேலைக்காரன் கிடைத்தான் என்று ஸந்தோஷத்துடன் அவனை வேலையை ஒப்புக்கொள்ளச் செய்தான். தான் இரவுமுழுதும் இதுவரையும் மூடாத கண்களை மூடி கலக்கமில்லாமல் தூங்கினான்.

சிறுவனும் இரவில் குளிர் பொறுக்காது பக்கத்திலிருந்த சக்கிமுக்கிக்கல்லைத் தட்டி போரில் தீ மூட்டி குளிர்காய்ந்து இடையே பொரிந்த நெற்பொரிகளை பொறுக்கி உண்டு கழனியைக் காவல்செய்துகொண்டிருந்தான். இந்த அதிசயத்தைப் பார்க்க வென்று கிழக்கு அருணனை யனுப்பி அவன்மூலமாக உள்ளதையுணர்ந்து "போர்ச்சுட்டு பொறி பொறுக்கி"யைக்காண கிழக்கில் சூரியனுமுதித்தான். அதே ஸமயத்தில் குடியானவனும் அந்தப் போரிருந்த விடத்தில் வந்துதித்தான்.

சிறியவனது சாகசத்தைப் பார்த்து மூக்கின்மேல் கைவைத்து "என்னடா செய்தாய்?" என்றந்த "மனம்போன போக்கன்"மேல் எள்ளும் கொள்ளும் வெடித்தான்..

சிறுவனும் "ஒன்றுமில்லை; சொல்லிய விதமே செய்தேன். தவறு ஒன்றும் இல்லை. போர்ச்சுட்டு பொறி பொறுக்கினேன் என்பதை என் என் பெயரே தெரிவிக்கவில்லையா?" என்று பல் இளித்தான். மனம் களித்தான்.

போர் எரிந்த பண்ணையின் சொந்தக்காரன் மனஞ் சுளித்து, மனம்போன போக்கனைத் தன் மனம்போன படி எல்லா முதைத்தவனை எங்கிருந்தெடுத்தானோ

அங்கேயே கொண்டுபோய் பொத்தென்றெறிந்தான். மேலும் அந்தப் பையல்

"அஞ்சான் வேலைக்காரன்! ஓரான் திண்டிக்காரன்!
ஆத்திலே போறான்! ஆத்திலே போறான்!
எடுப்பாருண்டோ! பிடிப்பாருண்டோ!"

என்றிரைந்துகொண்டே உருண்டுக் கொண்டிருந்தான்.

அந்த ஆற்றின் கரையில் வேலை செய்துகொண்டிருந்த வண்ணான் இவனை தனக்கு வேலையாளாக அடைய விரும்பி அவனை வெளி எடுத்து "உன் பெயரென்ன?" என்றான்.

"என் பெயர் 'போனான்"

"அப்படி ஆனால் அடே போனான்! என்னிடம் வேலை செய்கிறாயா?"

"ஆகா!"

இந்தவிதமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது வெளுத்திருந்த துணி மூட்டையை எடுத்துக்கொண்டு "போனான்" தன் வழியே போனான். வண்ணானே 'போனான் போனான்' என்று புலம்பிக்கொண்டிருந்தான். இவனை யார் என்ன கேட்டபோதிலும் "போனான் போனான்" என்பானே தவிர வேறு பதில் அவர்க்குக்கிடைக்கவில்லை. கடைசியாக அவனால் அழமுடியாது நடந்ததை எல்லாம் முழுதும் கூறினான்.

பின் கொத்துவால்களெல்லாம் தங்கள் மணக் கயிற்றைத் திரித்து, விரித்து அந்த மனம்போன போக்கனைப் பிடித்து அரசன்முன் விட்டார்கள். இதற்குள் எல்லாரும் இந்தச் சிறியவன்மேல் குற்றஞ் சாட்டத் தலைப்பட்டனர். அங்கு வாழைத்தோட்டக்காரனும் பண்ணைத்தலைவனும் வந்திருந்தார்கள்.

தலையாரியானவன் ஆற்றில் புரண்டுவந்த வீரனை நோக்கி "உன் தப்பிதமெல்லாம் விளங்கி விட்டது. உன்னைச் சிறையிடப் போகிறார்" என்றான்.

'அப்படிக்கொன்றுமில்லை. எல்லாருடனும் நான் உடம்படிக்கையுடன்தான் அமர்ந்தேன். வாழைத்தோட்டத்தாரும் இருப்பாய் தோலிருக்கச் சுளைவிழுங்கி என்றார். பண்ணைக்குடையவரும் காவலிரு அப்பா போர்ச் சுட்டு பொறிபொறுக்கி என்றார். அவர்களே இதைச் சொல்லுவார்" என்று நமது மனம்போன போக்கன் மறுத்தான்.

அரசன் அவர்களை "நீங்கள் அவ்விதம் சொல்லியதுண்டா?" என்றான்.

இதன் நுணுக்கத்தை உணராத அவர்களெல்லாம் "ஆமாம். அப்படித்தான் கூப்பிட்டிருக்கச் சொன்னோம்" என்று பதிலளித்தார்கள்.

இதைக் கேட்க வந்த சபையிலிருந்தவரெல்லாம் கொல்லென்று சிரித்தார். சிரிக்க முடியாது தலையாரியும் சிரித்தான்.

பின் மனம்போன போக்கன் தன் வழியேபோனான்.

கமலாகாந்தன்

அல்லது

ஓர் பித்தன்

KAMALAKANTHAN

அனேகமாக ஜனங்களெல்லாரும் அவனைப்பயித்தியம் பிடித்தவனென்றுதான் சொல்லிக்கொள்ளுகிறார்கள். பெயர் நன்றாகத்தானிருக்கிறது. யார் என்ன செய்யலாம்? தாய்தகப்பனாரிட்ட பெயர் நன்றாயிருக்கிறதென்பதற்காக ஜனங்கள் பயித்தியக்காரனைப் பித்தம் பிடித்தவனென்று சொல்லாம விருப்பார்களா? முதலில் ஒருவன் சொல்லிவிட்டால் அது ஆளுக்காள் தொடர்ந்து பரவி ஊரெல்லாம் பிரசித்தமாய் விடுகிறது. அவனுக்குக் கமலாகாந்தனென்று பெயரிட்டிருந்தது அவனெழுதப்படிக்கத் தெரியாதவனா யிருக்கவில்லை. ஸம்ஸ்கிருத பாஷை அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அதனால் பயனென்ன? எந்தப் படிப்பினால் பணம் சம்பாதிக்கச் சாத்தியமில்லையோ, அந்தப் படிப்பும் ஒரு படிப்பா? அவனுக்கு இங்கிலீஷ் பாஷையும் தெரியும். ஆனால் அவன் வார்த்தைக்கு முதலாவது முடிவாவது இருப்பதில்லை. அவன் செய்யும் காரியங்களுக்கு நீக்குபோக்கிருப்பதில்லை. ஆனாலும் அவன் படித்தவன் படித்தவனே.

படிப்புக்கு முக்கியமான பலனென்ன? உங்களுக்குத் தெரியுமா? நான் சொல்லுகிறேன். கேளுங்கள். துரைகளிடத்திற்குப் போக்குவரத்தா யிருக்கவேண்டும். கவர்ன்மெண்டு ஸர்வீஸில் உத்தியோகம் ஆகவேண்டும். காரணமிருந்தாலும் இராவிட்டாலும் ஸமயம் வரும்போது புருவத்தை நெறித்துக்கொள்ள வேண்டும். அநுபவமும் வயதும் முதிர்ந்திருந்தும் துரதிருஷ்டத்தால் கீழேயிருக்கும் கீழ் உத்தியோகஸ்தர்களையெல்லாம் புருவத்தை நெறித்துக்கொண்டே 'ஸ்டுபிட்' (stupid) என்று வையவேண்டும். இங்கிலீஷிலேயே பேசவேண்டும் யாராவது தேசபாஷையில் பேசினால் அதைக் காதிலே போட்டுக்கொள்ள கூடாது. தேசபாஷையில் பேசுவது வெகு அகௌரவம். ஸமயம் தப்பாமல் 'காபீ' முதலியவை குடிக்க வேண்டும். இது இக்காலத்திற்கேற்ற பலன். எத்தனையோ பெயர் கையெழுத்துமாத்திரம் போடக்கற்றுக் கொண்டவர்கள் பெரிய பெரிய உத்தியோகத்தில் இருக்கவில்லையா? இப்போது தேசபாஷையின் பிரபாவத்தினால் தேசபாஷையை நிஹீனமாக நினைத்துக்

கொண்டிருக்கிற எத்தனையோ மஹாத்துமாக்கள் எப்படி யெப்படியோ இருக்கவில்லையா? அப்படிப் பட்டவர்கள்தான் பண்டிதர்கள். மற்றவர்கள், அதாவது கமலாகாந்தனைப்போலே ஸம்ஸ்கிருதபாஷையில் படித்துத் தேர்ந்தவர்கள் சுத்த மூட்டாள்கள் என்பதே எனது அபிப்பிராயம். அவர்கள் பி. ஏ. பரீக்ஷை தேறியிருக்கிறார்களோ, இல்லையே. எம். ஏ. பரீக்ஷை யேது?

ஒருதடவை கமலாகாந்தனுக்கு இங்கிலீஷ் ஸர்க்காரில் ஒரு உத்தியோகம் கிடைத்தது. ஒரு துரை இவன் இங்கிலீஷில் வார்த்தை சொல்லுவதைப் பார்த்து ஸந்தோஷித்து இவனுக்குத் தன் ஆபீஸில் ஒரு குமஸ்தா வேலை செய்துவைத்தான். ஆனால் இவன் அந்த வேலையைக் காப்பாற்றிக்கொள்ளவில்லை. ஸரியான ஸமயத்திற்கு ஆபீஸிற்குப் போவதில்லை. போனாலும் ஆபீஸ் வேலைகளைச் சரியாய்ச் செய்வதில்லை. கச்சேரி தஸ்தவேஜு புஸ்தகங்களிலெல்லாம் தான் கவனம் செய்த சுலோகங்களை யெழுதிவைப்பான். சர்க்கார் ரிகார்டுக்களிலெல்லாம் 'ஷேக்ஸ்பியர்' கவியின் வாக்கியங்களை யெழுதி நிறைத்துவைப்பன், பில் புத்தகங்களிலும் செக்குபுஸ்தகங்களிலும்சித்திரம்எழுதிவைப்பான்.

ஒருநாள் ஆபீஸ் சிப்பந்திகளின் சம்பள பில் எழுதிக் கொண்டுவரும்படி அந்த துரை கமலாகாந்தனுக்கு உத்தரவுசெய்தார். இவன் சம்பளபில் பாரத்தில், நாலைந்துபேர் பிச்சைக்காரர்கள் துரையிடத்தில் வந்து வணக்கமாய் நின்று பிச்சை கேட்பதாகவும் துரை அவர்களுக்கெதுவோ கொஞ்சம் காசு கொடுப்பதாகவும் சித்திரமெழுதி அதனடியில் 'வாஸ்தவமான சம்பளப் பட்டி' என்று எழுதிவைத்தான். புதிதாகத் தயார் செய்யப்பட்ட இந்த நமூனாவைப் பார்த்ததும் துரையானவர் கமலாகாந்தனுக்கு வீட்டிற்குப்போய்விடும்படி மரியாதையாய் உத்தரவு கொடுத்துவிட்டார்.

கமலாகாந்தன் ஸர்க்காரில் உத்தியோகம் செய்தது அதோடே நின்றுவிட்டது. அவனுக்குப் பணம்வேண்டிய அவசியமில்லை. அவன் விவாஹம் செய்துகொள்ளவில்லை. இருந்த இடத்தில் அரை வயிற்றுக்குச் சோறும் கொஞ்சம் அபினியும் அகப்பட்டுவிட்டால் போதும். எங்கேயிருந்தானோ, அங்கேயே யிருந்துவிடுவன். அவன் நம்வீட்டிலும் வெகுநாள் இருந்தான். அவனைப் பித்தம் பிடித்தவனென்று நாங்களெண்ணியிருந்தபடியால் ஸாவதானமாய்ப் பார்த்து வந்தோம். ஆனாலும்நாங்கள் அவனைவீட்டிலேயே வைத்துக்கொண்டிருக்க ஸாத்தியப்படாமல் போய்விட்டது. அவனெங்கேயும் நிலையாயிருப்பதில்லை. ஒரு நாள் காலை யெழுந்து அவன் ஸந்நியாஸியைப்போலே காவிவஸ்திரம் தரித்துக்கொண்டு எங்கேயோ புறப்பட்டுப் போனான். அவனெங்கே போனானோ, தெரியவில்லை. மறுபடி நாம் அவனைப் பார்க்கவில்லை. அவன் பின் திரும்பி வரவில்லை.

அவனுடைய தாய் தஸ்திரம் (அதாவது கடிதாசுகளும் புஸ்தகங்களும் வைத்துத் துணியால் கட்டப்பட்ட மூட்டை) ஒன்று இருந்தது. அதில் ஒரு கடிதாசாவது எழுதாதிருக்க வில்லை. ஒவ்வொரு தடவை அவன் அதில் சிலவற்றை நமக்கு வாசித்துச் சொல்லியிருந்தான். கேட்கத் தொடங்கின உடனே நமக்குத் தூக்கம் வந்துவிடும். அந்த மூட்டை கட்டியிருந்த துணியோ முழுதும் இங்கியாயிருந்தது. அவன் புறப்படும்போது அவைகளை எங்கள் கையில் கொடுத்து 'இதை நான் உங்களுக்கு உபகாரமாகக் கொடுத்திருக்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனான்.

விலையில்லா மாணிக்கம் கைக்கெட்டியிருக்கிறது. நாம் அதை யென்ன செய்யலாம்? 'அக்நி தேவதைக்கு ஸமர்ப்பணம் செய்துவிடுவோமா?' என்று முதல்முதல் யோசித்தோம். உலகத்தாருக்கு நன்மை செய்யவேண்டியது நமக்கு முக்கியமான கடமை என்பது மனதில் பட்டது. மனுஷ்யனாய்ப் பிறந்த பிறகு ஜனங்களுக்கு ஸகாயம் செய்யாமல் போனால் அவன் பிறப்பு வியர்த்தம் என்பது மனதில் உறப்பாய் ஊன்றிவிட்டது. அந்தக் கட்டில் 'தூக்கமில்லாமை' என்னும் நோய்க்கு விலையுயர்ந்த மருந்திருப்பது தெரியவே அதைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம்.

அநித்திரை, அதாவது தூக்கம்வராமை, என்னும் நோய் யாருக்கிருக்கிறதோ, அவர்கள் நமக்கு எழுதிக் கொண்டால் நாம் கமலாகாந்தனது புத்தகக் கட்டிலிருந்து அவனெழுதிய இரண்டொருகாகிதங்களை அனுப்புவோம், அதை யெடுத்து வாசிக்கத் தொடங்கினால் உடனே அந்த நோய் இருந்த இடம் தெரியாமல் பறந்து போய் நல்ல தூக்கம் வந்துவிடும். இப்போது காற்று கெட்டிருக்கவில்லை. அந்த நோய் எங்கும் தலைகாட்டவில்லை. ஜனங்களெல்லாரும் ஆரோக்கியமான ஸ்திதியிலிருப்பதாகவே தெரியவருகிறது. எப்போது வேண்டுமோ அப்போது தானாகவே நல்ல தூக்கம் வருகிறது. இராத்திரி காலங்களில் தூக்கம் வருகிறது எல்லாருக்கும் ஸ்வபாவமாய் இருக்கிறது. பிரகிருதத்தில் எல்லாரும் பகலில் சராசரி பத்துமணி காலம் ஸுகமாகத் தூங்குவதாகக் காலஸ்திதி யறிக்கையினால் தெரியவருவதால் கமலாகாந்தனது கட்டை

நாம் பிரிக்கவேண்டிய அவசியம் இப்போது யாதொன்றும் தென்படவில்லை. ப்ளேக் முதலிய நோய்களைப் போலே தூக்கமில்லாமை யென்கிற இந்த வியாதியும் தொத்து வியாதியாய்த் தலையெடுக்குமானால் அப்போது நாம் இந்தமருந்தை விலையின்றி யெல்லாருக்கும் கொடுக்கச் சித்தமா யிருக்கிறோம்.

அபினிப்பித்தம் பிடித்த அந்தக் கமலாகாந்தனை நாம் அனேகந் தடவைகளில் தேடிப்பார்த்தும் அவன் அகப்படவில்லை. ஆனால் வெகுநாள்கள் கழிந்த பிறகு ஒருநாள் அவன் மேஜஸ்திரேட்டு கோர்ட்டில் வந்திருந்தான். அவனப்போதும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து வெற்றிலைப்பாக்கு போட்டுக்கொண்டிருந்தான். ஒரு மரத்தில் சாய்ந்துகொண்டும் ஒரு மரத்தில் காலை யுதைத்துக்கொண்டும் கண்களை மூடிக்கொண்டு புகையிலை மென்றுகொண்டிருந்தான். அவன் எந்தத் தப்பிதமும் செய்திருக்கமாட்டானென்பது நிச்சயமேயானாலும் அவன் யாருடையதோ ஒரு அபினி மருந்து பாணியைக் களவுசெய்திருப்பனென்று நாம் நினைத்தோம். அவன் வேறெந்தப் பொருளையும் களவாடுகிறவனன்று. அது நமக்கு நன்றாய்த் தெரியும். அவனது ஸமீபத்தில் கறுப்பு உடுப்பு போட்டுக்கொண்டிருந்த போலீஸ் ஜவானொருவன் நின்றுகொண்டிருந்தான். நாம் அங்கே நிற்கவில்லை. ஒருக்கால் தனக்கு ஜாமீன் கொடுக்கும்படி அவன் நம்மைக் கேட்டுக்கொண்டா லென்ன செய்கிறதென்று பயந்து விலகி வந்துவிட்டோம். ஆனால் ஸங்கதி யின்னதென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவலினால் தூர நின்று பார்த்துக்கொண்டிருந்தோம்.

சிறிது பொழுது போனதும் கொப்பூழ்வரையில் வளர்ந்து தொங்கும் வெளுப்புத்தாடியுடைய கிழச் சேவகனொருவன் ஒரே மூச்சில் இவன் பெயரைச் சொல்ல முடியாமையால் நாலு பதமாகப் பிரித்துக்கொண்டு நிறுத்தி நிறுத்திக் கூப்பிடலானான். 'கமல்-காந்தி-சக்கிரி-பத்தி' என்று மூன்று தடவை அவன் கூப்பிட்டான். அதற்குள் அவனுக்கு முகமெல்லாம் சிவந்து வெயர்த்துப் போய்விட்டது. உடனே போலீஸ்ஜவான் வந்து கமலாகாந்தனை யெழுந்திருக்கச் சொல்லி அவனைத் தன்னுடன் கூடக் கோர்ட்டுக்குள் அழைத்துப் போனான். நாமும் பின்னோடே போனோம்.

வழக்கம்போலே கோர்ட்டில் மேஜஸ்திரேட்டு தமது ஆஸனத்தில் வீற்றிருந்தார். அவர் சுதேசி மேஜிஸ்திரேட்டாகையால் டிப்டி கலெக்டர் பதவியிலிருந்தார். கமலாகாந்தன் கைதியாயிருக்கவில்லை. ஸாக்ஷியாயிருந்தான். பசுக்களவு கேஸ் விசாரணை நடக்கிறது. பாபா என்னும் இடைச்சி பிரிதிவாதி.

கமலாகாந்தனை ஸாக்ஷிகள் நிற்கும் கூண்டில் நிற்கும்படி செய்தாயிற்று. கமலாகாந்தன் கொஞ்சம் சிரித்தான். பக்கத்தில் இருந்த சோல்தாரன் 'கபட்தார், சிரியாதே' என்று அதட்டினான். அவன் கைகூப்பிக்கொண்டு 'அண்ணா நான்யார் கொல்லையில் மேய்ந்தேனென்று இந்தக் கூண்டில் அடைக்கிறீர்கள்?' என்று கேட்டான்! சோல்தாரனுக்கு அந்த வார்த்தை ஒன்றும் அர்த்தமாகவில்லை 'இது வேடிக்கை செய்யக்கூடிய விடம் அல்ல, பிரமாணம் செய், பலகையில் எழுதியிருக்கிறபடி சொல்,' என்று தாடியை உருவிக்கொண்டே சோல்தாரன் சொன்னான். 'நீயே சொல்லிவை' என்று கமலாகாந்தன் சொன்னான்.

கோர்ட்டு குமஸ்தா ஒருவன் எழுந்துநின்று பலகையில் எழுதியிருப்பதைச் சொல்லுவிப்பதற் காரம்பித்து 'சோல், நான் சொல்லுகிறபடி சொல்'என்றான். கமலாகாந்தன் 'நீ சொல்லுகிறபடி' என்றான்.

முனிஷி.—'நான்' என்று சொல்.

ஸாக்ஷி.—நான்.

முனிஷி.—ஸர்வசக்தியுள்ள பரமேசுவரனைப் பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொண்டு,—

ஸாக்ஷி.—(ஆச்சரியப்பட்டவனாகி) என்ன சொல்லட்டும்?

முனிஷி.—காது கேட்கவில்லையா? பரமேசுவரனைப் பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொண்டு,

ஸாக்ஷி.—ஸர்வேசுவரனைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்தா? இதென்ன அநியாயம்?

ஸாக்ஷி சண்டை செய்வதாக அறிந்த மேஜஸ்திரேட்டு ஸாக்ஷியைக்குறித்து அநியாயமென்ன? என்றார்.

ஸாக்ஷி.—ஸர்வேசுவரனைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொண்டென்று சொல்லவேண்டுமா?

ஜட்ஜி.—ஆம். சொல்வதில் தப்பிதமென்ன? பிரமாணம் செய்யவேண்டியதற்கு அந்த நமூனாதானேற்பட்டிருக்கிறது.

ஸாக்ஷி.—மஹாஸ்வாமிகளே! தங்கள் அதிகாரிகளே, சரி ஆனால் நான் ஒரு விஷயம் மனு செய்துகொள்ளுகிறேன். ஸாக்ஷி வாக்குமூலம் கொடுக்கும்போது ஏதாவது இரண்டொரு சிறுபொய்கள் சொல்லவேண்டிநேரும். வேண்டுமென்று பொய் சொல்லாவிட்டாலும் அப்படிப்பொய்தானே வந்துவிடும்படியான ஸமயமும் உண்டாய்விடும். பிரமாணத்தின்பேரில் கொடுக்கிற வாக்குமூலமாகையால் அது பொய் என்றுதான்

நினைக்கப்படும். அப்படிப்பட்ட வாக்குமூலம் கொடுக்க ஆரம்பிப்பதற்கு முன்னே பெரும்பொய் சொல்லலாமா? தாங்களே ஆலோசிக்க வேண்டும்.

ஜட்ஜி.—இதில் பொய் எப்படி?

ஸாக்ஷி.—'இப்படிப் புத்திக் கூர்மையாயிருப்பதைப்பற்றித்தான் பெரிய உத்தியோகம் கிடைத்திருக்கிறது' என்று மனதில் நினைத்துக்கொண்டு, (வெளிப்படையாய்) தர்மாவதாரமே*! இந்தக் கலியுகத்தில் பரமேசுவரன் நேரே ப்ரத்யக்ஷமாகிறதில்லை யென்பது எனது முடிவாயிருக்கிறது. இதுவரையில் நான் பரமேசுவரனைக் கண்ணால் கண்டதில்லை. அதற்கு என் கண்களின் தோஷமே காரணமோ, அல்லது வேறே ஏதுவாவது காரணமோ தெரியாது. தாங்களென்னவோ, சட்டமென்னும் மூக்குக்கண்ணாடியால் பரமேசுவரனை நேரில் கண்டிருப்பவர்போலே சொல்லுகிறீர்கள். நான் இந்த அறை முழுதும் நன்றாகப் பார்த்தும் ஈசுவரன் தென்படாமலிருக்க அவனைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்து என்று எப்படிச் சொல்லலாம் என்றான்.

வாதிபக்ஷத்தில் ஒரு பெரிய வக்கீல் வந்து ஹாஜராயிருக்கிறார். இவன் வார்த்தையைக் கேட்கும்போது அவருக்குக் கண்களில் நெருப்புப்பொறி பறக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் அவனுக்கு வரும்படி வரக்கூடியது. அப்படிப்பட்ட பெருவிலையுள்ள காலத்தை இந்தப் பைத்தியக்கார ஏழைஸாக்ஷி பாழாக்கிக்கொண்டிருக்கிறானே. அவருக்குக் கோபம் வராதிருக்குமா? அதனால் அவன் 'அய்யா ஸாக்ஷியாரே! இந்த வேதாந்த உபந்நியாஸங்களையெல்லாம் பிருஹ்மஸமாஜ மண்டபத்திற்கு வைத்துக்கொண்டால் நலமல்லவா? இப்போது சட்டப்படி நடந்துகொள்ள வேண்டும்' என்று கடுகடுத்துக் கூறினான்.

கமலாகாந்தன் அவனுக்கெதிராகத் திரும்பிக்கொண்டு சிரிப்பு முகமாய், 'அய்யா! தாங்கள் வக்கீல் என்று தோன்றுகிறதே' என்றான்.

வக்கீலும் சிரித்துக்கொண்டே 'எப்படித் தெரிந்தது?' என்றார்.

சாக்ஷி அய்யா! பெரிய சங்கிலி, கறுப்பு உடுப்பு, சிவப்பு முகம், இவைகளைப் பார்த்த உடனே தெரிந்துவிட்டது. நான் உங்களுக்காக வேதாந்த உபந்நியாஸம் செய்ய வரவில்லை. நான் உங்களுடைய 'கக்ஷிக்காரனாய் வரும்போது 'நீங்கள் பரப்ரஹ்மத்தைக் கண்ணால் கண்டிருக்கிறீர்களென்று ஒப்புக்கொள்ளுகிறேன்.'

வக்கீல் பெருங் கோபத்தோடு கண்கள் சிவந்து எழுந்து நின்றுகொண்டு ஜட்ஜியைப் பார்த்து "இந்த ஸாக்ஷி என்னை அவமானப்படுத்துகிறான், என்னைக் கரையேற்றிக் காப்பாற்றவேண்டியது கோர்ட்டாருடைய பொறுப்பாயிருக்கிறது. (I ask the protection of the Court against the insults of this witness) என்றார்.

ஜட்ஜி 'ராயரே! அவன் உங்களுடைய ஸாக்ஷி, வேண்டுமானால் அவரை நீங்களே வெளியிலே அனுப்பிவிடக்கூடும். அது உங்களுடைய அதிகாரமாயிருக்கிறது' (Babu! the witness is your own witness, and you are at liberty to send him away if you like). என்று பதிலுரைத்தார் கமலாகாந்தனை வெளியே அனுப்பிவிட்டால் கேஸ் ருஜுவாகாமல் போய்விடும். அதனால் ராயர் ஒன்றும் செய்யமுடியாமல் உட்கார்ந்துவிட்டார். 'ஜட்ஜி ஸ்வஜாதி வைரி' என்று கமலாகாந்தன் நினைத்துக்கொண்டான்.

பிரமாண வாக்கியத்தை உச்சரிக்கும் விஷயத்தில் இவனுக்கு ஏதோ ஆக்ஷேபம் (Objection) இருப்பதாகத் தோன்றுகிறபடியால் (Simple affirmation) ஸாதாரணமான பிரமாணம் செய்வி என்று முனிஷிக்கு மேஜஸ்திரேட்டு உத்தரவு செய்தார். பிறகு முனிஷி கமலாகாந்தனைப் பார்த்து 'அதை விட்டுவிடு, பிரமாணம் செய்' என்றான்.

'எதற்காக பிரமாணம் செய்யவேண்டுமோ, அது முதலில் தெரியவேண்டும். பிறகு பிரமாணம் செய்யவேண்டும். அதுவல்லவோ நலம்' என்றான் ஸாக்ஷி.

ஸாக்ஷி பெரும்போக்கிரியா யிருக்கிறானென்று முனிஷி மேஜஸ்திரேட்டிடம் தெரிவித்தான். ஆம், பெரும்போக்கிரி, துஷ்டன், என்று வக்கீலும் கூவிச் சொன்னான். கமலாகாந்தன் வக்கீலைப்பார்த்து 'கோர்ட்டுக்கு வெளியிலே வெற்றுக் கடிதாசில் கக்ஷிக்காரனது கையொப்பம் வாங்கிக்கொள்ளுகிறதுபோலே கோர்ட்டிற்குள் செய்யமுடியுமா? அதிங்கே சாயாது ராயரே.!' என்றான் 'வெற்றுக் கடிதாசில் உன் கையொப்பம் வாங்கியது யார்?' என்று ராயர் கேட்டார். இன்ன விஷயத்தைப்பற்றி பிரமாணம் செய்யவேண்டுமென்பது தெரியாமலே பிரமாணம் செய்வதும் வெற்றுக்கடிதாசில் கையொப்பம் செய்வதும் இரண்டும் ஒன்றே' என்று ஸாக்ஷிக்காரன் பதில் உரைத்தான்.

*வங்காளதேசத்தில் ஜட்ஜிகளை 'தர்மாவதாரமே!' என்று சொல்லுகிறது மரியாதை.

வீண் தகரார் செய்வதில் உபயோகமில்லை யென்றும் முதலில் பிரமாணம் செய்ய வேண்டுமென்றும் ஸாக்ஷிக்காரனுக்குத் தெரிவிக்கும்படி ஜட்ஜி முனிஷிக்குக் கட்டளையிட்டார். 'நான் சொல்லுகிறபடி சொல்லும் அப்பா! நான் என்ன சொல்லுகிறேனோ அதெல்லாம் உண்மை, ஒரு வார்த்தையும் மறைப்பதில்லை. உண்மையல்லது வேறொன்றும் பேசுவதில்லை' என்று சொல்லும், என்று முனிஷி கமலகாந்தனுக்குத் திட்டம் செய்தான்.

கமலாகாந்தன் —ஓகோ! இதுதானா, வெகு நன்றாயிருக்கிறது.

முனிஷி.—வேறென்ன?

ஸாக்ஷி.—ஆனால் மறுபடி சொல்லும், நான் சொல்லிவிடுகிறேனெனவும் முனிஷி பிரமாணம் செய்வித்தார். கமலாகாந்தன் கிரமப்படி பிரமாணம் செய்துவிட்டான். பிறகு அவனை விசாரிக்க வேண்டியதற்காக வக்கீல் ராயர் எழுந்துநின்று கண்களைச் சிவக்கச் செய்துகொண்டு ஸாக்ஷியைப் பார்த்து, 'தெரியுமா' போக்கிரித்தனம் செய்யப்போகிறாய், அந்த மூட்டையையெல்லாம் கட்டி தூரவைத்துவிடு. நான் கேட்பதற்குப் பதில் சொல், மற்ற வீண் வார்த்தைகளை விட்டுவிடு' என்று சொன்னார்.

கமலா.—ஆனால் தாங்கள் எது கேட்கிறீர்களோ, அவ்வளவுதான் சொல்லவேண்டுமோ, வேறே ஒன்றும் சொல்லக்கூடாதோ?

வக்கீல் —ஆம். வேறே ஒன்றும் சொல்லக்கூடாது.

ஸாக்ஷி.—(ஜட்ஜியைப் பார்த்து) தர்மாவதாரமே! இந்த ஏழையின் தப்பிதத்தை மன்னிக்கவேண்டும். இப்போதுதான் என்னைக்கொண்டு பிரமாணம் செய்வித்திருக்கிறீர்கள். அதில் ஒரு வார்த்தைக்கூட மறைப்பதில்லை என்று பிரமாணம் செய்வித்தீர்கள். ஊரிலே இன்றைய தினம் ஒரு நாடகம் ஆடுவதாகக் கேள்விப்பட்டேன். அங்கே போய் நாடகம் பார்க்க வேண்டுமென்று ஆசைப் பட்டுக்கொண்டிருந்தேன். அது முடியாதென்று தோன்றுகிறது. வக்கீல் பிரபு அவர்கள் நாடகமாடும் பிள்ளைகள் போல அவர் சொல்லச் சொல்வதையே நான் சொல்லவேண்டு மென்றும் அவர் சொல்லச் சொல்லாததை, ஒன்றும் சொல்லக் கூடாது என்றும் திட்டம் செய்துவிட்டார். அவர் எதைச் சொல்லச் சொல்லவில்லையோ, அதை நான் மறைத்ததாகிறதல்லவா? அதனால் நான் பிரமாணம் தப்பினவனாய் விடுகிறேனே, அந்தத் தப்பிதத்தை மன்னித்துக் கொள்ளவேண்டுமாய் கோருகிறேன்,

ஜட்ஜி.—முக்கியமான விஷயங்களாயிருந்தால் வக்கீல் கேளாவிட்டாலும் நீரே சொல்லலாம்.

கமலா.—(ஸலாம் செய்து) வெகு நன்றாக உத்தரவு செய்தீர்கள் என்றான். வக்கீல் விசாரணை செய்யத் தொடங்கினார்.

வக்கீல்.—உம்முடைய பெயர் என்ன?

ஸாக்ஷி.—ஸ்ரீகமலாகாந்த சக்கிரவர்த்தி.

வக்கீல்.—உம் தகப்பனாருடைய பெயர் என்ன?

ஸாக்ஷி.—வாக்குமூலத்திற்குக்கூட நாந்திசிராத்தமா என்ன? எனக்குத் தெரியாது.

வக்கீல்.—(வெறுப்பும் கோபமுமாய்) (ஜட்ஜியுடன்) தர்மாவதாரமே! இதெல்லாம் கோர்ட்டாரை அவமதிப்பதாகிறது.

ஜட்ஜி.—(அவனது துர்த்தசைக்கு இரங்கி) அவர் உம்முடைய ஸாக்ஷியாயிற்றே.

வக்கீல்.—(ஸாக்ஷியைப்பார்த்து) நீர் என்ன ஜாதி?

ஸாக்ஷி.—நானென்ன ஜாதியா? மனுஷ்யனன்றோ?

வக்கீல்.—எந்த ஜாதி அய்யா?

ஸாக்ஷி.—ஹிந்து ஜாதி.

வக்கீல்.—என்ன வர்ணம்?

ஸாக்ஷி.—அச்சம் கறுப்பு.

வக்கீல் —பாழாய்ப்போயிற்று. இப்படிப்பட்டஸாக்ஷியை விசாரித்துப் போதும் போதும். என்ன அய்யா! உமக்கு ஜாத உண்டா? (ஜாதியென்பது உச்சாரணத்தில் ஜாத என்று கேட்கும்.)

ஸாக்ஷி.—செத்தது யார்? (ஸம்ஸ்கிருதத்தில் ஜாத என்பதற்குப் பிறந்தவன் என்று அர்த்தம்.)

ஜட்ஜி. — (வக்கீல் வார்த்தைக்கு அவன் சரியாய்ப் பதில் சொல்ல மாட்டானென்று தெரிந்ததும்) (ஸாக்ஷியை) பிராஹ்மணர் காயஸ்தர் கைவர்த்தர் முதலான ஹிந்துக்களில் பல பிரிவுகள் உண்டே, நீர் எந்தபிரிவில் சேர்ந்தவர்?

கமலாகாந்தன்.—தர்மாவதாரமே! இந்த வக்கீல் வெகு போக்கிரியாயிருக்கிறார். என் கழுத்தில் பூணூலிருக்கிறது. அவர் அதைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறார். பெயர் சக்கிரவர்த்தியென்று சொல்லியிருக்கிறேன். இதினாலேயே நான் பிராஹ்மணனென்று தெரியவில்லையா? மறுபடி கேட்கிறதேன்? (ஜட்ஜி பிராஹ்மணனென்று எழுதிக்கொண்டார்.)

வக்கீல்.—வயது என்ன?

ஸாக்ஷி.—(கோர்ட்டிலிருந்த பெரிய கடிகாரத்தைப் பார்த்து கணக்கு செய்து) எனக்கு ஐம்பத்தொரு வருஷம் இரண்டுமாதம் பதின்மூன்றுநாள், நாலுமணி, ஐந்துநிமிஷம், ஆயிற்று.

வக்கீல்.—இதென்ன வயிற்றெரிச்சல்! உன்னை மணி நிமிஷம் யார் கேட்டார்கள்?

ஸாக்ஷி.—என்னய்யா ராயரே! ஒன்றையும் மறைக்கிறதில்லையென்று இப்போதுதானே பிரமாணம் வாங்கிக்கொண்டார்கள்.

வக்கீல்.—உன்னிஷ்டப்படி சொல். நான் சொல்ல முடியாது. நீ இருக்கிற இடம் எது?

ஸாக்ஷி.—எனக்கு இடம் கிடையாது.

வக்கீல்.—ஆ அப்படியா? உன் வீடு எங்கே?

ஸாக்ஷி.—வீடா, குடிசைகூட கிடையாது.

வக்கீல்.—அப்படியானால் நீ இருப்பது எங்கே?

ஸாக்ஷி.— எங்கே யிருந்தால் அங்கேயே.

வக்கீல்.—நிற்பதற்கு நிழல் இல்லையா?

ஸாக்ஷி.—இருந்தது. (இந்த கிரந்தகர்த்தாவுடன் கூட இருக்கும்போது) இப்போது இல்லை.

வக்கீல்.—இப்போது எங்கே யிருக்கிறீர்?

ஸாக்ஷி.—என்ன ராயரே! உம்முடன்கூடவே கோர்ட்டில் இருப்பதைப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறீர்.

வக்கீல்.—முன்னே, இங்கே வருவதற்கு முன்னே இருந்தது எவ்விடத்தில்?

ஸாக்ஷி.—ஒரு கடையில்.

ஜட்ஜி.—வீண் வார்த்தை வளர்ப்பதில் பயனில்லை. வீடில்லை யென்றெழுதிக் கொண்டாயிற்று. மேலே நடக்கட்டும்.

வக்கீல்.—உம் ஜீவனம் என்ன?

ஸாக்ஷி.—ஜீவனமா, நான் வேசியா, வக்கீலா, ஜீவனம் செய்ய?

வக்கீல்.—எப்படி அய்யா நீர் போஜனம் செய்வது?

ஸாக்ஷி.—அன்னத்தில் நெய் கொட்டிக்கொண்டு பருப்பும் புளியும் போட்டுக் கலந்து உண்டை உண்டையாய் எடுத்து வலக்கையால் வாயில் போட்டுக்கொண்டு கழுத்து வழியாய் வயிற்றுக்குப்போய்ச் சேரும்படி செய்கிறது.

வக்கீல்.—அந்த அன்னமும் பருப்பும் புளியும் அகப்படுவதெப்படி?

ஸாக்ஷி.—ஸ்வாமி கொடுத்தால் உண்டு, இல்லாவிட்டால் இல்லை.

வக்கீல்.—எதாவது ஸம்பாதித் திருக்கிறாயா?

ஸாக்ஷி.—ஒருகாசுகூட இல்லை.

வக்கீல்,—ஆனால் களவு செய்கிறாயோ?

ஸாக்ஷி.—ராயரே! அப்படி யிருந்தால் எப்போதே, எத்தனை நாள் முன்னேயே, தம்மைச் சரணம் அடைந்திருப்பேனே, உமக்கும் அதில் பாகம் கிடைத்திருக்குமே.

வக்கீல்.—(கோபத்துடன் கோர்ட்டாரைப் பார்த்து) எனக்கு இந்த ஸாக்ஷி வேண்டாம். இவனை விசாரிக்க என்னால் ஸாத்தியம் இல்லை, என்றார்.

வக்கீல் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த இடைச்சி பாபா வக்கீல் மடியைப் பிடித்துக்கொண்டு "அய்யா! இந்த ஸாக்ஷியை விட்டுவிடக்கூடாது.இந்தப் பிராஹ்மணன் உண்மையே சொல்லுகிறவன்." இவன் ஒரு நாளும் பொய் சொல்லமாட்டானென்று எனக்குத் திட்டமாய் நம்பிக்கையுண்டு.அவனை விசாரிக்கிறதற்கு உங்களுக்குத் தெரியவில்லை. அதினாலே இப்படியெல்லாம் ஆகிறது. கேஸை பாழாக்கிவிடுகிறீர்களே,இந்தப் பிராஹ்மணனுக்கு ஜீவனம் எங்கேயிருந்து வரும்? அவன் ஜீவனத்தைக் கேட்டால் அவனென்ன சொல்வது. அவன் அண்டையயலார் வீடுகளில் தின்றுகொண்டு காலம் போக்குகிறான். அவனை உன் ஸம்பாத்தியமென்ன வென்று கேட்கிறீர்கள், அதற்கு அவன் என்ன பதில் சொல்லுவான்?" என்றாள். வக்கீல் முகம் வாடினவன் போலாகி ஜட்ஜியைப் பார்த்து, 'யாசகஜீவனம்' என்றெழுதிக்கொள்ள வேண்டும் என்றார்.

இதைக் கேட்டதும் கமலாகாந்தனுக்குக் கோபம் அதிகமாயிற்று. "ஆகா! கமலாகாந்த சக்கரவர்த்திக்கா யாசகஜீவனம்? நான் பிரமாணமாய்ச் சொல்லுகிறேன். நான் எப்போதும் யாரையும் ஒரு காசுகூட யாசகம் செய்ததில்லை. அப்படிப்பட்ட எனக்கு யாசக ஜீவனம் என்று எழுதுவிப்பது போக்கிரித்தனம்" என்றான். அதற்கு இடைச்சி, "என்ன டாகூர்! அப்பப்போ நீர் அபினிமருந்து யாசகம் கேட்டு வாங்கிக் கொள்ளுகிறதில்லையா?" என்றாள். "துஷ்டப்பெண்ணே! அபினிகூட துட்டா என்ன? நான் யாரையும் ஒரு காசுகூட யாசித்ததில்லை." என்று கமலாகாந்தன் சொன்னான் "ஆனால் என்ன ஜீவனமென்று எழுதிக்கொள்ளுகிறது கமலாகாந்தரே!" என்று ஜட்ஜி கேட்டார். "தயவு செய்து எழுதிக்கொள்ளுங்கள் ஸந்தர்ப்பனைபோஜநம், நிமந்தரணபோஜனம்" என்று எழுதிக்கொள்ளுங்கள்," "என்று ஸாக்ஷி பணிவாயும் அடக்கமாயும் கூறினான். அதைக்கேட்டதும் கோர்ட்டில் இருந்தவர்களெல்லாரும் சிரித்தார்கள். ஜட்ஜியும் சிரித்து அப்படியே எழுதிக்கொண்டார். கேஸைப்பற்றி அவனை வக்கீல் விசாரிக்கத் தொடங்கினார்.

வக்கீல்.—இந்தப் பிரியாதியை உமக்குத் தெரியுமா?

ஸாக்ஷி.—தெரியாது.

இடைச்சி.—இதென்னடாகூர் அய்யா! எத்தனையோ நாளாய் என்னிடத்தில் பாலும் மோரும் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறீர். என்னைத் தெரியாதென்கிறீரே.

ஸாக்ஷி.—உன் பாலும் மோரும் தெரியாதென்று சொல்லவில்லையே. உன் பாலும் மோரும் நன்றாய்த் தெரியும். ஒரு சேர்ப்பாலுக்கு இரண்டு சேர் ஜலம் கலந்திருந்தால் அது இடைச்சிபாபா பால் என்று தெரியும். மோர் பச்சைத் தண்ணீர்போலே யிருந்தால் அது இடைச்சி பாபா மோர்' என்று நிச்சயம்தான். உன் பாலும் மோரும் தெரியாமல் என்ன?

இடைச்சி.—சரி. என் பாலும் மோரும் தெரிந்தால் நான் தெரியாதா?

ஸாக்ஷி.—அம்மா! ஸ்திரீகளை யார்தான் நன்றாய் அறிவார்கள். அதிலும் இடைச்சி தலைமேலே மோர்ப் பானைக்கூடை யிருந்துவிட்டால் யாரப்பனுக்குத்தான் அவளைத் தெரிந்துகொள்ள ஸாத்தியப்படும்.

வக்கீல்.—ஸரி. தெரிந்தது. நீ பிரியாதியை யறிவாய். உனக்கும் அவளுக்கும் என்ன உறவு?

ஸாக்ஷி.—இதென்னவோ கெட்டதன்று. அப்படிக் கில்லாவிட்டால் நீர் வக்கீலாய் வருகிறீரா?

வக்கீல்.—நீ என் குணங்களைத் தெரிந்துகொண்டாயா?

ஸாக்ஷி.—பிராஹ்மணனுக்கும் இடைச்சிக்கும் உறவு கட்டி வைத்துக்கொண்டு திரிகிறீரே.

வக்கீல்.—அப்படிப்பட்ட உறவு இருப்பதும் இல்லாததும் யாருக்குத் தெரியும்? அவளை போஷிக்கும் பிள்ளையோ என்னவோ.

ஸாக்ஷி.—அவளைப் போஷிக்கும் பிள்ளையல்ல, ஆனால் அவளது பசுவைப் போஷிக்கும் பிள்ளையென்பது நிச்சயம்.

வக்கீல்.—இப்போது தெரிந்தது. உனக்கும் பிரியாதிக்கும் ஒருஸம்பந்தம் இருக்கிறது முதலிலேயே ஒரே வார்த்தையில் சொல்லிவிடக்கூடாதா? வீணுக்கு எவ்வளவு தொந்தரவு செய்தாய். நல்லது இந்தக் கேஸ் விஷயத்தில் உனக்கென்ன தெரியும்?

ஸாக்ஷி.—இந்த கேஸ் விஷயத்திலா, சொல்லுகிறேன். பிரியாதி பாபா. நான் ஸாக்ஷி. இதோ நின்று கொண்டிருப்பவன் கைதி. நீர் வக்கீல்.

வக்கீல்.—அதல்லவப்பா, பசுக்களவு விஷயத்தில் உனக்கென்ன தெரியும்? சொல் அப்பா.

ஸாக்ஷி.—பசுக்களவா, எங்க அப்பன் பாட்டன் முப்பாட்டன் யாருக்கும் அது தெரியாது. அவர்கள் எனக்கு எப்படிச் சொல்லிக்கொடுப்பார்கள்? எனக்கென்னவோ பால் மோர் வேண்டிய அவசிய மிருக்கத்தானிருந்தது.

வக்கீல்.—அதன்றப்பா, பசு களவு போனதைப் பார்த்தாயா?

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

வஸந்த மாளிகை

VASANTHA MALIKAI

அத்தியாயம் 10

பிரபுவும் பாதகனும்

THE LORD AND THE VILLIAN

இன்னும் விடியச் சுமார் ஒருமணி நேரமிருக்கலாம். அந்தப்புரத்தில் ஹம்ஸதூளிகா மஞ்சத்தால், நமது கதாநாயகர் பரஸ்பரம் காடாலிங்கனம் செய்த பிரகாரமே நித்திரை செய்துகொண்டிருக்கிறார்கள். பக்கத்தில் சிறியதாய் எரிந்துகொண்டிருக்கும் விளக்கொளி, அவ்விருவரின் வதனங்களையும், அவைகளின் களைப்பையும் தெரிவித்தன. இரவில் வெகுநேரம் ஸல்லாபித்துக்கொண்டிருந்ததால், இருவரும் அயர்ந்து நித்திரை செய்கின்றார்கள்.

காலைச்சங்கு ஊதப்பட்டது. நமது ப்ரபு திடீரென்று விழித்து கொண்டு அருகில் நித்திரை செய்யும் தன்காதலியை யிறுகத்தழுவி முகமோடு முகம் பதித்து முத்தமிட்டு, அவளை நித்திரையினின்றும் எழுப்ப மனமில்லாமல் அவஸரமாய் வெளியே சென்று, கீழே முன் மண்டபம் வந்து சேர்ந்தான்.

கபடம், தந்திரம், ஸமயோபசாரம் முதலியன சகல திறமைகளும் வாய்ந்த மஹாவீரன், ப்ரபுவின் மாறுடையுடனும், குதிரையுடனும் தயாராய் ஆசாரவாசலில் காத்துக்கொண்டிருந்தான். ப்ரபு வந்ததும், "மஹாராஜ்! இவ்வுடைகளைச் சீக்கிரம் அணிந்துகொள்ளுங்கள். அருணோதயம் வருவதற்குள் யாவருமறியாமல் இப்பிரதேசத்தை விட்டகல வேண்டும்" என்றான்.

ப்ரபு மனவெறுப்புடன் அவ்வுடைகளை யணிந்துகொண்டே "மஹாவீர! இவ்விலங்குகளினின்றும் நான் எப்பொழுது விடுபடுவேனோ," என்று பெருமூச்சுடன் சொல்ல,

மஹாராஜன்.—ராஜச்சின்னங்களாகிய இவைகள்—

ப்ரபு:—மஹாவீர! ராஜஸேவையெனும் இப்பெருங்கடலில் நீந்துவதில் எனக்குக் கொஞ்சமேனும் மனமில்லை. அந்திநேரத்தில் என்ன நேரிடுமோ? எவ்வளவோ ராஜபக்தியுடன் உழைத்துவந்த என் தகப்பனாருடைய கதி எவ்வாறு முடிந்தது. போதும்! போதும்! ஸ்வாதீனமென்பதே கொஞ்சமேனும் கிடையாது. எப்பொழுதும் கவலை, எப்பொழுதும் சஞ்சலம், எப்பொழுதும் அபாயம், கொஞ்சகாலமாவது ஸ்வேச்சையாய் நமது வீடு, நமது வாழ்வென்று இருப்பதெப்படி.

மஹாவீரன்.—எப்பொழுதும் மாதரின் மோகவலையிலகப்பட்டு—

ப்ரபு.—(கோபத்துடன்) மஹாவீர! என்ன பிதற்றுகின்றாய்—?

மஹாவீரன்.—ப்ரபோ! அடியேன்மீது கோபங் கொள்ளலாகாது. மஹாராஜ் தங்கள் இஷ்டமே சட்டம். தங்கள் காதலினியிடத்துள்ள பிறிவாற்ற அன்பால் எவ்வளவோ ப்ரயாஸையின்மேல் ஸம்பாதித்த இப்பதவியை கடினச் சித்தத்தால் கைவிடுவதாய்த் தீர்மானித்தால் அதற்கு அடியேன் குறுக்கிடுவது நியாயமல்ல. ஆயினும், 'தன் நன்மையே' இவ்வுலகிலுள்ள ஜீவராசிகளின் நடத்தைகளுக்குக் காரணமா யிருக்கின்றது. ஸ்வயநன்மையைக் கருதாதவன் உலகிலேயே ஒருவனுமில்லை. அப்படி யிருக்க என்போன்ற எளியோனும் ஒருமனிதன்தானே. தங்கள் பெரும்பதவியாலும், பெருங் கருணையாலும் அடியேனும் இச்சிறு பதவியடைந்தேன். ஆனால், அதற்கும் இப்பொழுது அழிவு காலம் கிட்டிவிட்டது போலும்.

பிரபு:—அப்படியானால் இவ்வபாயமான ராஜஸேவையினின்றும் நாமிருவரும் அழிந்துபோகாது தப்பித்துக்கொள்வதில் உனக்குச் சம்மதமில்லை?

மஹாவீரன்.—மஹாராஜ்! தங்களிஷ்டப்படி விலகிக்கொள்ளுவதால் எனக்கென்ன ஆக்ஷேபனை! என் கதிதான் அதோகதி! பழைய மஹாவீரன்தான், உலகத்தோர் நகைக்க ஓர் இடமாயிற்று. மஹாராஜ்! இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வொழிவு ஏற்படுமென்று தெரிந்தால், இவ்வளவு முயற்சியும் இவ்வளவு ஆடம்பரமும் செய்திருக்க வேண்டாம். மஹாராஜ்! ஆராய்ந்து செய்வதே பதிந்தோரி னியல்பு. எதுவும் கொஞ்சம் பதறாது ஆலோசித்துச் செய்தல் நலம். பிறகு தம இஷ்டம். 'பதறாத காரியம் சிதறாது' அடியேன் என்ன சொ—ல்—

ப்ரபு:—சும்மாச் சொல். நான் இன்னும் ஒருவித முடிவுக்கும் வரவில்லை.

மஹாவீரன்.—ப்ரபோ! தாங்கள் இப்பொழுது ராஜஸேவையினின்றும் விலகி விடுவதாய் வைத்துக்கொள்வோம். தாங்கள் செய்வது மனஒழிவினாலும் நல்ல எண்ணத்தினாலும்தான். ஆனால் தமது எதிரிகள் எவ்வாறு இகழ்வார்கள்! 'ஏதோ தங்களுக்குச் சாமர்த்தியமில்லையென்றும், மஹாராணியாருடைய விரோதத்துக் குட்பட்டுவிட்டதாகவும், 'கைக்கெட்டாக் கனி கசக்கு' மென்றபடி, தாங்கள் விலகிவிட்டதாகவும் தங்களைப்பற்றி யவதூறுகள் உலக முழுமையும் பரவிவிடும். இப்பாண்டிய நாட்டுக்கே ஓர் திலகம்போல் ப்ரதான மந்திரியாயிருந்த தாங்கள் அதைத் தவிர்த்து—

பிரபு:—மஹாவீர! சற்று பொறு—!

மஹாவீரன்.—மஹாராஜ்! ஏதோ அடியேனுக்குத் தெரிந்ததைப் பிதற்றி முடிக்கின்றேன். தாங்கள் விலகவேண்டியதுதான் தாமதம், தங்கள் எதிரி ராமராஜன் தாங்கள் இதுவரை கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பதவிக்குச் சுநேவாய் வந்துவிடுவான். என்னைப் போன்ற தங்கள் அடிமைகளின் கதிஎன்னவாகும் சந்திரனோடு அஸ்தமிக்கும் தாராகணங்களின் கதிதான்.

பிரபு.—மஹாவீர! ரொம்ப ஸந்தோஷம். அவ்வளவு பதட்டமாய் ஒருகாரியமும் செய்துவிட மாட்டேன்.

இதற்குள் ப்ரபு பாதாதிகேசம்வரை மாறு உடை தரித்துவிட்டார்.

'மஹாவீர! இக்குதிரையைப் பிடித்துக்கொண்டு சற்று இங்கே நில்.

மனிதர் ஸஞ்சரிக்கத் துவங்குமுன், இவ்வெல்லை விட்டு கடந்துவிடவேண்டும். அந்தப்புரம் சென்று என் காதலியிடம் விடைபெற்று வருகின்றேன்.'

என்று சொல்லிக்கொண்டு சரேலென்று அரண்மனைக்குள் மறைந்தார்.

மஹாவீரன்.—(வெறுப்புடன் நகைத்துக்கொண்டு) 'ஆஹா! மனிதரின் பேதமை எப்படிப்பட்டது! நரஸிம்மராஜ் உன் புத்தியீனத்தை நீயே வெளியிட்டுவிட்டாய். எத்தனையோ மந்திரிகளைப் பார்த்தாய்விட்டது வாஸ்தவந்தான். அவர்கள் நிலைமை யாகாசவாணம் யாதிரிதான். உனக்கு மோஹினிப்பிசாசு பலமாய் பிடித்துவிட்டது. வலமும் இடமும் சுற்றிச்சுற்றி வா, எனக்கென்ன. இந்த மடமில்லாமல் போனால் இன்னொரு மடம், இப்பொழுது போனாலும் உன் எதிரி ராமராஜன் என்னைத் தடைசொல்லாமல் அங்கீகரித்துக்கொள்ளுவான். என்ன பதவியிருந்து என்ன பயன். புத்தித்திறமையல்லவோ வேண்டும். 'மாதரசே'—ஐயோ! என்ன அழகு—நான் கொடுத்த பதவியல்லவோ உனக்கு. மஹாவீரனென்றால் உங்கள் வீட்டுக் கிள்ளுக்கீரையென்று எண்ணமோ? ஹும் நடக்க நடக்கப் பார்க்கலாம். நான் இப்பொழுது நரசிம்மன் குதிரையைப் பிடித்துக்கொண்டு நிற்பதைப்போல நமது குதிரையையும் ஒருவன் பிடித்துக்கொண்டு நமக்குக் காத்திருக்கும் நிலைமை ஒருகாலத்தில் வாராமலா போகிறது. 'மதியேவிதி.'

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

I ஆத்திசூடி விளக்கம்

23. மன்றுபறித்துண்ணேல்

பொது விஷயங்களில் பிடுங்கி ஜீவனம் செய்யாதே என்பது இதன் பொருள். இது பொது ஜன நன்மைக்காகப் பாடுபடும் அரசன் அவன் கீழ் உள்ள உத்யோகஸ்தர்கள், ஆலயம் சத்திரம் சாவடி தண்ணீர்ப்பந்தல் முதலிய தர்மங்களை நீடித்து நிறுத்தி ஓங்கும்படிசெய்ய அமையும் தர்மகர்த்தர்கள் ஆகிய பொது ஜன உபகாரிகளை நோக்கிக் கூறிய வாக்கியம். பொது நன்மைக்கு உழைக்கும்படியான உலக அந்தஸ்து நிலை முதலியன எல்லோருக்கும் கிடைக்குமா? அவ்வாறு கிடைக்குங்கால் அதை அடைபவன் 'இது நமக்குக் கிடைத்ததே இதற்கு உழைப்பது நமக்குப் பரலோக ஸாதனமாகும் என்று ஒரு பயனையும் கருதாது, கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமோ? என்னும் மனோநிலையிலிருந்து' அதை நடத்திவிட்டு ஒதுங்கிநின்று பழகுவதே முக்கியம். இதுவும் அல்லாமல் பொதுநன்மை செய்யத் தலையிடுங்கால் அதில் பெரும்பள்ளம் ஒன்றுண்டு. அதன் விஷயமாக ஏராளமான பொருள் இவன் வழியாகப் புரண்டு போகும். இவன் ஏழையாகவிருந்தால் ஒரு சிறுதொகை சம்பளமாக ஏற்பட்டிருக்கலாம். கொஞ்சம் ஸொத்துக்காரனாகவிருந்தால் அந்தப் பிச்சை காசை இச்சியாது முதலில் தர்மம் நடத்துவதில் கீர்த்தியை எண்ணி முயலலாம். இவ்விருதிறத்தாருக்கும், தர்மவிஷய ஸம்பந்தமாக செய்யும் அதிகாரம், ஏற்பட்டுள்ள இடம் பொருள் ஏவல் முதலியன தமக்காக அனுபவிக்க இயலாமலிருக்கலாம். ஆகவே தர்மஸம்பந்த விஷயங்களை தமது ஸொந்த விஷயங்களுக்கும் உபயோகப்படுத்திக்கொள்ளுவது இயற்கையாகிவிடும். மேலும் இதென்ன சம்பளமில்லாச் சேவகமாக விருக்கிறது: இதற்கு நமக்கு இந்த ஸௌகரியம் கூடவேண்டாமா என்ற எண்ணம் இந்தப் பொது விஷய இடம் பொருள் ஏவல்களைத் தன் விஷயத்தில் உபயோகப்படுத்திக்கொள்ளத் தூண்டிவிடும் தர்மகர்த்தனை. இது பாபம் என்ற எண்ணமே அவன் மனத்தில் எழவொட்டாது. தான் உழைப்பதற்குப் பொதுவிஷயத்திலிருந்து வரும் கைம்மாறு இது என்ற துர் எண்ணமே ஊறிக்கொண்டு இந்த மன்று பறித்துண்ணலாகிய பாபத்தை விடாது செய்யும்படி நம்மைத் தூண்டிக்கொண்டே யிருக்கும். ஆகவே பொதுநன்மை விஷயத்தைக் கைக்கொள்ளும் நிலையிலிருக்கும் புத்திசாலிகள் 'அதைவிட்டு ஒதுங்கி நிற்க முடியாததால் அதைக் கைக்கொள்ளவேண்டி யிருக்கிறது. மனப்பூர்வமாக உழைத்து இதில் ஏற்படக்கூடும் மன்று பறித்துண்ணலாகிய பாபத்திற்கு ஆளாகாமல் நடந்துகொள்வதற்கு வேண்டிய மனோபலத்தை ஈசுவரன் அளித்து என்னைக் காக்கவேண்டும்' என்ற துக்கத்துடனே அதை அங்கீகரித்தால் அவர் தொழில்கள் நன்றாகவிருக்க விடமுண்டு. இம்மாதிரி காலஞ்சென்ற மஹா தர்மசீலையான **விக்டோரியா மஹாராணி** யவர்கள் தாம் ராஜ்யமேற்கும் மகுடதாரண காலத்தில் அதை ஸரிவர நிர்வஹிக்கக் கடவுள் சக்தி தந்தருள வேண்டும் என்று கண்ணீர்விட்டு பரவசையானார்கள். அவர்கள் அரசாட்சியில் உலகம் தழைத்து ஓங்கியது என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. இதுபோன்ற சித்த விருத்தியொடு பொது நன்மைகளை ஏற்கும் புத்திமான்கள் மன்று பறித்துண்ணும் படுகுழியில் விழாது உலகிற்கு உண்மையான உபகாரிகளாவார்கள்.

மன்று பறித்து உண்ணுவதால் வரும் கேடுகளை நன்கு விளக்கும் கதை ஒன்று உத்தரகாண்ட ராமாயணத்தில் உள்ளது. ராமர் ராஜ்யம் ஆண்டுவந்த காலத்தில் ஸர்வார்த்தஸித்தன் என்ற ஒரு ஏழை ப்ராஹ்மணன் இருந்தான். அவன் அயோத்தி முழுவதும் காலைநேரங்களில் பிச்சை யெடுத்து, நடுப்பகலில் அதை வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் காலங்கழித்து வந்தான். இப்படி அவன் செய்துவந்த நாளில் ஒரு நாள் ஊரெங்கும் சுற்றி அலைந்தான்; நேரமோ பதினைந்து நாழிகை ஆய்விட்டது: கொஞ்சங்கூட பிச்சை யகப்படவில்லை. வெயிலில் அலைந்து களைத்து என்ன செய்வதென்று தெரியாது அவன் ஒரு தெருப்பக்கம் திரும்பினான். முதல் வீட்டில் எச்சில் இலை விழ, அதை ஒரு நாய் மிகுந்த ஆவலுடன் புசிக்கத் தொடங்கியது, ஸர்வார்த்தஸித்தனுக்கு துக்கம் அதிகரிக்க, அப்பொழுது அவனுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. கையிலிருந்த தடியால் அந்த நாயின் மண்டையில் இரண்டு மூன்றடி அடித்துவிட்டான்.

அடிபட்ட நாய் மிகவும் வருந்தி அழுதுகொண்டு ராமர் ஸபை வாயிலில் வந்து நின்றது. அந்த ஸமயத்தில் வழக்குத் தீர்க்க எண்ணங் கொண்டவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று பார்க்க லக்ஷ்மணர் அங்குவந்து சேர்ந்தார். அந்த நாயையும் ப்ராஹ்மணனையும் கண்டு, இருவரையும் ஸ்ரீராமர் முன்பு கொண்டுபோது நிறுத்தினார். உடனே நாய் தனது வழக்கை எடுத்துரைத்து "நான் ஒரு அபகாரம் அல்லது அபராதம் செய்யாதிருக்கையில் என்னை அகாரணமாய் இந்த ஸர்வார்த்தஸித்தன் அடித்து விட்டான்" என்று முறையிட்டது. அப்பொழுது ஸ்ரீராமர் ப்ராஹ்மணனை விசாரிக்க, "எனக்கு ஒன்றும் அகப்படாமல் போக நடுப்பகல் வரையிலும் அலைந்து பசியால் வருந்திக் களைத்திருக்கும்போது நாயின் உத்ஸாகத்தைக் கண்டு என் மனம் பொறுக்கவில்லை" என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டான். தகுந்த தண்டனை விதிக்க முடியாமல் சபையோர் தத்தளிக்க, அவர்களை நோக்கி அந்த நாய் "இந்த ப்ராஹ்மணனுக்கு கௌலபத்யம் (பலரைக் காப்பாற்றும் நிலை) கொடுங்கள். அதுதான் இவனுக்குத் தகுந்த தண்டனை" என்றது.

இம்மாதிரி தண்டனை விதிக்கவேண்டிய காரணம் என்னவென்று கேட்க, நாய் சொல்லுகிறது. 'நான் முன் ஜன்மத்தில் ஒரு குலபதியாக (கௌலபத்யம் கோயில் மணியம் முதலிய வேலைகள்) இருந்தேன். அப்பொழுது பொது விஷயத்துக்காக இருந்த தனம் வஸ்து முதலியவைகள் என்னை யறியாமல் என் ஸொந்த விஷயத்துக்கு உபயோகப்படும்படி நேரிட, எனக்குப் பாபம் வந்தது. அந்தப் பாபத்தால் இந்த ஜன்மம் எடுத்தேன். ஆதலால் கௌலபத்யம் என்பது எவ்வளவு சிறப்பான நிலையாயினும் அஜாக்ரதையா யிருப்பவனுக்கு மிகுந்த பாபத்தை உண்டாக்கும். ஆதலால் இந்தப் பொறுமை நிறைந்த ஸர்வார்த்தஸித்தனுக்கு என் கதி வருமென்பதற்கு ஸந்தேஹமே இல்லை. ஆதலால்தான் இத்தண்டனை விதித்தேன்" என்றது.

இக்காலத்தில் இந்த நீதிவாக்யத்தை எல்லோரும் அவசியம் மனதில் வைக்கவேண்டும். இக்காலத்து உத்யோகங்களுக்கு எல்லாம் பொதுநன்மை உழைபபு (Public Service) என்றே பெயர். முன் காலங்களிலாவது கவர்ன்மெண்டார் கீழ்உள்ள எல்லாப் பதவியும் இவ்வாறு கருதப்படாதும் மேல் பதவிகளான மந்திரி, ப்ரதானி முதலிய பெரிய உத்யோகங்கள் மாத்ரம் இவ்வாறு கருதப்பட்டும் வந்தன. அதற்கேற்ப ஸாதாரண 15 ரூபா சம்பளக்காரனை முற்காலங்களில் கண்டால் வாய் கூசாது மேல்வரும்படி என்ன என்று கேட்பது வழக்கமாக விருந்தது. இப்பொழுது வர வர அதிகாரிகள் சம்பளம் ஏறிவிட்டதாலும், மன்று பறித்துண்ணுவது குற்றம் என்ற எண்ணம் எல்லோருக்கும் வந்துவிட்டதாலும், அகவிலை அதிகமாகிவிட்டதால் சில தாழ்ந்த உத்தியோகஸ்தர்கள் மன்று பறித்துண்ணும்படி நேரிட்டிருந்தாலும் மேல் வரும்படி என்ன என்று கேட்க நம் வாய் கூசத் தொடங்கிவிட்டது. இதுவே ஔவையின் இந்த நீதிவாக்கிய அனுஷ்டான ஆரம்பம். இது வரவர முதிர்ந்துவிட்டால் இப்பொழுது கொஞ்ச இலைமறைவு காய்மறைவாகவிருக்கும் மன்று பறித்துண்ணுதல் தானே நின்றுவிடும்.

வேறுவழியில் இந்தப்பாபம் இக்காலத்தில் வளர்ந்து வருகிறது. அதைப் புத்திசாலிகள் கவனியாது விட்டால் அது பெருங்கேடு விளைவிக்கும் வக்கீல் உத்யோகமும், வைத்யர் உத்யோகமும் இக்காலத்தில் பெரும் வியாபாரங்களாகி விட்டபடியால் இவர்கள் நியாயம் வெளிப்படுத்துவது, வியாதிகளை தீர்ப்பது என்ற வியாஜத்தைக்கொண்டு மன்றுபறித்துண்டு வருகின்றனர். இவர்கள் இந்நீதி வாக்கை அலக்ஷியம் செய்து வருவார்களாகில் பொது உழைப்பு உத்யோகஸ்தர்களை விட அதோகதியை அடையும்படி நேரிடும். மேலும் இக்காலத்தில் நகர ரக்ஷணஸபை, தொழிலாளிகள் ஸபை ஏழைகளைக்காக்கும் ஸபைமுதலிய பொது நன்மை ஸங்கங்கள் ஏற்பட்டு விருத்தி யடைகின்றன. இவைகளில் ஏராளமாக வந்து குவியும் பணம் இந்த தர்மங்களை மேல்பார்வை பார்க்கும் சிப்பந்திகளுக்கு அநேகவிதமாகப்போனதுபோக பாகியைவிடக் குறைந்தபாகம்தான் இவைகள் உண்மைநோக்கத்திற்கு உள்ளவாறு பயன் படுகின்றன என்பது இக்காலத்திய நாகரீகத்தார் துக்ககரமான அபிப்பிராயம். இதைத் திருத்த வகையறியாது எல்லோரும் தவிக்கிறோம். 'மன்றுபறித்துண்ணேல்' என்னும் நீதிவாக்கியத்தை தர்மங்களில் ஸம்பந்தப்பட்டவர் ஆராய்ந்து தெளிந்து தமது பொது நன்மைகளை நடத்துவார்களாகில் இதுவும் எளிதில் திருந்துமே ஒழிய வேறு எந்த தந்திரங்களாலும் இது பலிக்காது.

இதற்கு மண்பறித்துண்ணேல் என்ற பாடபேதமும் உண்டு. நிலத்தைப் பொய்வழக்காடிப் பிடுங்கி ஜீவனம் செய்யாதே என்பது பொருள்.

கூறவழக்கெண்ணுத கூதைச் சகடற்கு வண்டில் [றும்
ஏறமுன்போல வாராதிருந்ததினல்—தேறேறி என்
மாமதில் காப்புன்னை வனமன்னு கேள் பூமியதில்
எதிலன் மண்பறித்துண்ணேல்

என்ற ஆத்திச்சூடி வெண்பா இப்பொருளுக்கு அமைந்துள்ளது.

II. மொழிபெயர்ப்பு விளக்கம்

The uses of Cinemotograph.

We can learn from our senses even when they deceive us. If the eye does not deceive us so as to make us think we see things for a tiny part of a second after they are gone, the cinemotograph would perplex and tire us, and would not give us the effect of reality at all. Some wise people are teaching us by

it. For instance students can learn how a surgeon performs an operation thousands of miles away by seeing a living picture of him at work. Other persons have taken pictures of horrible things, which we ought to know about, so that we can stop them. Yet other men have made living pictures of the blood running through the web of a frog's foot, so that thousands of people at once can see with their own eyes what circulation of blood is and how the little blood cells tumble over each other, as they hurry through these tubes, carrying oxygen from the frog's lungs to every part of its body, just as our blood does for us. Before long, I believe that the cinemotograph will be used all over the world for teaching, as the black board is to-day!

அசையும் பட யந்திரத்தின் உபயோகங்கள்

நமது பொறிகள் நம்மை ஏமாற்றுங் காலங்களிலும் அவைகள் வழியாக நாம் தெரிந்துகொள்ளக் கூடியவை உண்டு. வஸ்துக்கள் மறைந்த பின்னரும் அதி நுட்பகாலம் அவைகள் இருப்பதுபோலத் தோற்றத்தை உண்டாக்கி நமது கண்கள் நம்மை மோசம் செய்யாவிடில் அசையும் பட யந்திரம் நம்மைக் குழப்பி வீணுக ச்ரமப்படுத்தும். அதில் தோன்றும் வஸ்துக்கள் நமக்கு உண்மைபோலக் காணப்படமாட்டா. சில அறிவுடையோர் இதன் மூலமாக நமக்கு விஷயங்களைக் கற்பிக்கின்றனர். உதாரணமாக, அநேக ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு ரணவைத்யன் இவ்வாறு அறுத்து குணப்படுத்துகிறான் என்று அவன் தொழில் செய்தக்கால் எடுத்த அசையும் படங்கள் மூலமாக ஒரு மாணுக்கன் உணரலாம். நாம் அறிந்து தடுத்துவிடவேண்டிய கொடிய விஷயங்களை வேறு சிலர் இம்மாதிரி படங்களாகக் காட்டுகின்றனர். மற்றும் சிலர் தவளையின் காலிடைச்சதையுள் ரக்தம் ஓடுவதைப் படங்கள் பிடித்திருக்கின்றனர். ரக்த ஓட்டமென்றால் இன்னது, நமது ரக்தம் நம் விஷயத்தில் செய்வதுபோல, தவளையின் நுரை ஈரலிலிருந்து எல்லாப் பாகங்களுக்கு ப்ராணவாயுவை எடுத்துச் செல்லும் அவஸரத்தில் ரக்தக் குழாய்களுள் இவ்வாறு ரக்த தாதுக்கள் ஒன்றின்மேல் ஒன்று இடறிவிழுந்து முன் செல்கின்றன, என்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதனுல் தம் கண்ணூரக் காணலாம். இக்காலத்தில் கறுப்புப் பலகை கல்வி கற்பிக்கும் விஷயத்தில் எவ்வாறு உலகெங்கும் உபயோகிக்கப்பட்டு வருகிறதோ அவ்வாறே கொஞ்சகாலத்தில் அசையும் பட யந்திரமும் உபயோகப்படத் தொடங்கி விடும் என்று எனக்குத் தோற்றுகிறது.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்தியாயம் 19

நிலவொளிக்கேளிக்கைகள்

வரா தகத் திசைக்கண் விஷயமே தடையாம்
ஸாத்தியமான பின் புசித்தற்குக்
காதல் வைத்திடில் அப்பிரஹ்மானந்தத்தில்
அதிகமோ விஷயானந்தம்:
கோதில்வீடு இன்பம் பெருகலாவிடத்து
கூடுதற் கெளின் சரிபிழைக்கில்
தீதிலோர் சிங்கம் அதனையேயன்றி
தேருமோ தேரையூண் தினவே!

அப்பந்தலில் பெருங்கூட்டம் கூடிக் கிடந்தது. ஸந்தோஷ பரவசர்களாக விருந்த அந்த ஸபையோருக்கிடையில் இருபதுவயதுச் சிறுமியான பெண்மணி ஒருத்தி ஸங்கீதம் பாடிக்கொண்டிருந்தாள். அவள் அங்க அமைப்பும் அளவும் அத்யத்புதமாக விருந்தன. அவள் மார்பு ஏறி இறங்குங்கால் கண்டவர்களை காம வலைகளில் சிக்கித் தத்தளிக்கும்படி செய்தன. அவள் முகம் சந்திரனைப்போல ப்ரகாசித்தபோதிலும், அதைவிட அதிக மயக்கும்தன்மை வாய்ந்திருந்தது. வெகு அழகாக வாரிப்பின்னி எடுத்துக்கட்டிய கருவண்டு போன்றுள்ள அவள் கூந்தல் அந்தரங்கமும் விஷம குணமும் உள்ள மன்மதன் மறைவான உறைவிடம் போலத் தோற்றியது. அவள் உடுத்தியிருந்த பட்டும், அதை அவள் அணிந்திருந்த மாதிரியும், அவள் அழகை நன்றாக வெளிப்படுத்தி அவள் தேஹத்தின் இயற்கை அழகை அத்யத்புதமாக சிறப்புற்றோங்கும்படி செய்து கொண்டிருந்தன. அவள் கண்கள் தேனைப்போல தித்திப்பாயினும், கொடிய காளகூட விஷத்தைப் போல் இருந்தன. வெறும் பார்வை மாத்திரத்தில் பிறர்மனத்தைக் கொல்லும் திறன் வாய்ந்திருந்தமையால் அவைகள் விஷத்தை விட மிக அபாயகரமாக விருந்தன என்றே கூறிவிடலாம். வெகு அழகாக உருண்டு பருத்திருந்த அவள் கைகள் அவள் யௌவனத்தையும் ஆரோக்கியத்தையும் நன்கு வெளிப்படுத்தின. பவழம் போன்ற அவள் உதடுகளுக்கு இடையில் தவழ்ந்துவந்த அவள் குரலோசையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அது மிகச் செழிப்பாகவும் இனிமை

யாகவும், மிருதுவாகவும் இருந்ததோடும் கூட அத்புத சக்தி வாய்ந்ததாகவும் இருந்தது. அது இயற்கை ஸங்கீதமாதலால் சிறந்த வாத்யங்கள் என்று கருதப்பட்ட புல்லாங்குழல், வீணையாகிய இவைகளைப் பழிக்குந் தன்மையதாக விருந்தது. ஒவ்வொரு சொல்லும் பாட்டாகவே தோற்றத்தக்க ஸங்கீதம் போன்ற குரலுடன் மிக இனிப்பாகப் பாடினுள்! அமிருதவருஷம் போன்ற அவள் பாட்டைக் கேட்டு ஸபையோர் எல்லோரும் மோஹனாஸ்திரத்தால் கட்டுண்டவர்கள்போல அதில் ஈடுபட்டு அதை வழிபடுவார்கள்போல அசைவற்று பரவசராக விருந்தனர்.

பந்தலுக்கு வெளியிலோ, நம் பஞ்சைப் பாதக் கண்டம் விடாது உரிமையாக தொன்றுதொட்டு அனுபவித்து வரும் நிலவொளி வெகு சோர்த்தியாக விருந்தது. மன்மதன் மணத்திற்காக உலகம் முழுவதும் தெய்வீக யந்திரங்களால் புதுப்பிக்கப்பட்டு பிரகாச பூர்ணமாகப்பட்டதுபோல அன்று காணப்பட்டது. நிலவொளி வெகு ஆனந்தகரமாகவும், பரவசப்படுத்துவதாகவும் இருந்தது. இதனுல் ப்ரபஞ்சம் எல்லாம் பகலில் தாங்கள் பட்ட அற்பமான கஷ்ட நிஷ்டூரங்களைவிட்டு, அந்தரானந்த பரவசமாக விருந்தனபோலக் காணப்பட்டன. ஒளிக்கடலில் மறைந்ததுபோக சிற்சில நக்ஷத்திரங்கள்தான் அங்குமிங்கும் மின்மினி போல மினுக்கிக்கொண் டிருந்தன. தேவதைகள் நிதிகளாகி நீரோட்டம் நிறைந்த சுத்த ரத்னங்கள் போலக் காணப்பட்டன. அன்று ஸ்வர்க்கமே பூமிக்கு வந்து பூதேவியை ஆனந்தபரவசமாக ஆலிங்கனம் செய்து கொண்டிருந்ததுபோலத் தோற்றியது. எங்கும் ஆனந்தமே அன்று குடிகொண்டிருந்தது. ஆகாயத்திலிருந்து ஒளி சொரியும் மாயாவியான சந்திரனுக்கு நிகராகப் பந்தலுள் தனது சுத்த ஸங்கீதத்தை வாரி வீசி அதை ஸ்வர்க்கமாக்கிக் கொண்டிருந்தாள், கந்தர்வஸ்திரீ போன்ற அப்பெண்மணி.

பாட்டுக்கச்சேரி தொடங்கியவுடன் ஸ்ரீநிவாஸனை ஸ்ரீரங்கம் வந்துவிட்டான். பந்தலைப்பார்த்த பின்னர் இந்தப்பாட்டுக் காதில் விழுந்தது. தன் அதிர்ஷ்டத்தை மெச்சிக்கொண்டு ஸபையுள் புகுந்துவிட்டான். பாடுபவளைக் கண்டதும், அவன் மனம் பதைத்ததை யாரால் எடுத்துக்கூற முடியும்? மேலும் இவனைக்கண்டதும் அவள் இவனைப் பெரிய மனிதன் என்று மதித்து, எழுந்து, பார்வை முழுமையையும் இவன்மேல் செலவிட்டு வந்தனம் செய்தக்கால் இவன் கண்களில் குறிப்பை விளக்கிக் கூறவும் வேண்டுமோ? அவள் அருகில் சென்று உட்கார்ந்துகொண்டு இவன் எண்ணமிடத் தொடங்கிவிட்டான். 'இங்குதான் ஸ்வர்க்கம்: வேறெங்கும் இல்லை! மனிதர்கள் மூடத்தனமாகத் தேஹத்தை வருத்தி மனதை நோகப்பண்ணி உள்ளே ஒரு சிறு ஜ்யோதியைக் காணவேண்டும் என்று, ஐயோ! வீணுகக் காலத்தைச் செலவிடுகின்றனரே! அந்த ஒளி ஒருவேளை அவர்கள் மனப்ராந்தியாகவே இருந்தாலும் இருக்கலாம். இவளைப்போன்ற தேவரம்பைகள் உலகில் இருக்கையில் தவம் எதற்கு? கண்ணையும் காதையும் அடக்கி அடங்கிய அந்தர்நாதத்தைக் கேட்க முயலும் மடையரை என்னென்று சொல்லலாம்! அவர் கேட்க முயலும் நாதம் பசி, ஓய்வு முதலியவைகளால் உண்டாவதாக விருக்கலாமே. இந்த தேவகானத்தை விட்டு அதை நாடும் மனம் எதோடு சேர்ந்தது! இவளைப்போன்ற ரதிகள் உலகில் இருக்கையில் அடர்ந்த காட்டுள் போய் தவம்செய்ய எண்ணுபவர்கள் அறிவீனத்தைக் கூறவும் வேண்டுமா? இவைகளை விட்டு ஓடிவிடுபவர்கள் 'திராக்ஷைப்பழம் புளிக்கும்' என்று வெறுத்து ஓடிய நரிபோலத் தமக்குக் கிடைக்காதவைகளை மறந்து செல்கின்றனர் போலும்! அல்லது ஒருவேளை மறு ஜன்மத்திலாவது இவளைப்போன்ற ரம்பைகளை அடைந்து ஸுகிக்கலாம் என்று பேராவல் கொண்டு தவம் செய்யப் போகின்றனர் போலும். இவள் அழகே அழகு! பாட்டே பாட்டு! இம்மாதிரியான ஓர் அற்புத மாதைக் கருதித்தான் கவி,

பனிமதியின் றெளிச்சிறப்பின் புதவாத
மங்கல்விண்மீன் பரவினுற் போல்
நினது மென்றீங் குரலுயிரில் தங்திகளுக்
குயிரளித்து நில்லா நின்ற
தெனையதுற மயக்கினுமீட் டும்பாடுன்
னின்குரல்தா னிசையார் பாட்டோ
டினியநிலா வுருக்கமொன்றும் வேற்றுலகத்
தொனியைவெளி யிடுதலாலே.

என்று பாடியிருக்கின்றனரோ! என்று ஸ்ரீநிவாஸன் த்யானம் செய்துகொண்டு பரவசமாக நிலை பெற்றிருந்தான்.

இந்நிலையில் ஸ்ரீநிவாஸன் இருக்கையில் வாஸுதேவசாஸ்திரி பந்தலுக்குள் நுழைந்தார். வழக்கப்படி முதலில் அவருக்குப் பாடும் பெண்ணுகிய ஜானகி தென்பட்டாள். அவளைக் கண்டதும் சாஸ்திரிக்கு ஒருவித இரக்கமுண்டாகிவிட, அந்த அனுதைப் பெண்ணுக்காகச் சற்று வருந்தினுர். 'ஆஹா! இவ்வளவு அழகும், சக்தியும் அநீதியுடனும் அபாயத்துடனும் ஸம்பந்தப்பட்டதாக விருக்கவேண்டுமோ? இப்பொழுது பாடும் இனிமையில் பத்திலொரு பங்குடனுவது கடவுளைப்பற்றி பாடிக் கேட்பவர் மனத்தில் இப்பொழுதிருக்கும் ஈடுபாடு பற்று முதலியவைகளில் நூறிலொருபங்காவது பிறக்கும்படி இவள் செய்வாளாயின் இவள் சீரும் சிறப்பும் எப்படி சோபிக்கும்! கடவுளே! இது உன் மாயை. நடக்கட்டும்! நடக்கட்டும்!! நீதான் இத்தாஸியும், ஸபையும், கல்யாணக்

க்ராரும், நானும் மற்றும் எல்லாம். இப்படியிருந்தும் உம்மை அறியாது உம்மைவிட்டு நாம் வேருக விருப்பதாகத் தோற்றுகிறதே!' என்று இவ்வாறு சாஸ்திரி எண்ணம் தாரையாகப் புறப்பட மனம் வரவர அந்தர்முகப்பட்டு ஆத்ம ஸந்நிதானமாம் அருங்கோயிலுட் புகுந்துவிட்டார். அவர் ப்ரஹ்மானந்தத் தொட்டிலில் யோக நித்ரையில் இருக்கையில் அவர்க்கு வெளிப்பாட்டு இனிமையான தாலாட்டுப்போல விருந்தது. ஆத்ம மௌன ஸங்கீதம், ஸுகதுக்க மேகங்களால் மறைக்கப்படாது உள்ளே இடைவிடாது ஒளிரும் ஆத்ம சந்திரப்ரகாசம், முதலியன ஜானகிபாட்டு அழகு முதலியவைகளைவிட மனம் நழுவச்செய்யும் சக்தி உடையவைகளாக இருக்க, பாட்டுக்கச்சேரி கலையும்தருணத்தில் தான் அவருக்கு வெளி ப்ரஞ்ஞை வந்தது. கச்சேரி கலைந்தவுடன் 'இதென்ன இவ்வளவு சீக்கிரம் கலைந்துவிட்டதே' என்று இவருக்கு தோற்றியபோதிலும், இவர் உண்மையாக வெகு நாழிகை யோக நித்திரையிருந்தார் என்பதற்கு என்ன ஸந்தேஹம்?

உடனே இவர் நாற்புறங்களிலும் ஸ்ரீநிவாஸனைத் தேடிப்பார்த்தார். அவனைக் கூட்டத்தில் பார்த்ததாகவும் அவருக்குத் தோற்றியது. கூட்டம் அதிகமாய் இருந்தமையாலும், அது வெகு வேகமாக நாற்புறமும் கலைந்து போனமையாலும், ஸ்ரீநிவாஸனைப் பின்தொடர அவரால் முடியவில்லை. ஸ்ரீநிவாஸனே வாஸுதேவ சாஸ்திரியைப் பார்த்துவிட்டான்! நடுங்கிவிட்டான்!! இப்பரமபுருஷர் பற்றையும் இவர் அளிக்கக்கூடிய உண்மை ஞானத்தையும்விட, தாஸியையும் அவள் காமலீலைகளையும் நன்கு மதித்து அவள் பின்னரே அவனும் பிரியாது போய்விட்டான்.

அந்த ஸமயத்தில் அவன் மனதில் ப்ராரப்த வசமாக ஒரு கெட்ட எண்ணம் உதித்து எழுந்து அவனை வசப்படுத்திவிட்டது. அன்றிரவே ஜானகிக்கு ஏராளமான பணம் கொடுத்து அவள் மூலமாக சாஸ்திரியை காமவலையில் சிக்கும்படி செய்து அவர் வேதாந்தத்தையும் ஞானத்தை பஞ்சாகப் பறக்கடித்து விடவேண்டும் என்பதே இக் கொடிய எண்ணம். வேதாந்தத்தின் வஞ்சகத்தையும், குறையையும் வெளிப்படுத்த இதுவே தருணம் என்று தோற்றியது அவனுக்கு. 'ஒரு மனிதன் ஏழையாக விருந்து கொடிய சண்டைக்காரியான பெண்சாதியால் அலைத்திழுக்கப்பட்டு தத்தளித்தால் வேதாந்தம் நல்லதுதான், சிறந்ததுதான்! ஜானகி ஒருவன்மேல் விழுந்து அணையக் காத்திருக்கையில் யார்தான், கடவுள், மோக்ஷம், முதலிய வீண் விஷயங்களை ஒரு பொருட்டாக மதிப்பார்கள்? 'கனியேனும் அரிய செங்காயேனும் உதிர்சருகு கந்தமூலங்களேனும் கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துக் கண்மூடி மௌனியாகிக்' கொடுந்தவம் புரிந்த விச்வாமித்ர பராசராதி மஹான்கள்கூட நாமாதீதமான பெண்கள் சக்தியில் ஈடுபட்டு காமம், கல்வி முதலியவைகளில் இழுக்கப்படவில்லையா? பலே! ஜானகி மார்பில் புரண்டு களிக்குங்கால் இந்த சாஸ்திரியைப் பிடித்து அவர் வேதாந்தத்தை சின்னபின்னப் படுத்திவிடுவது எவ்வளவு வேடிக்கையாகவிருக்கும்! இத்தருணம் போனால் எத்தருணம் வாய்க்குமோ? விடக்கூடாது' என்று கொக்கரித்துக்கொண்டே ஜானகியைவிட்டு இவன் சாஸ்திரியை ரஹஸ்யமாகப் பின்தொடர்ந்தான்.

இரவில் அதிக நாழிகையாகி விட்டபடியால் சாஸ்திரி விடிந்து தேடிக்கொள்ளலாம் ஸ்ரீநிவாஸனை என்று தேடுவதை நிறுத்திவிட்டு, பிராஹ்மணர் தெருவில் ஒரு வீட்டுத்திண்ணையில் வெறும் தரையில் படுத்து உறங்கத்தொடங்கினர். இவர் படுத்த வீட்டைக் குறிப்பாகப்பார்த்துக்கொண்டு ஸ்ரீநிவாஸன் ஜானகி வீட்டிற்கு அவள் போய்ச் சேருவதற்குமுன் சென்று, அன்றிரவு அவளோடு தங்கி ஸுகிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து அங்கிருந்த தாய்க்கிழவியிடம் ஏராளமான பணத்தையும் கொடுத்துவிட்டான்.

ஜானகி மிகுந்த கர்வத்துடனும் மனப்பூரிப்புடனும் வீடு வந்துசேர்ந்தாள். அன்று ஸபையோர் இவளைப் புகழ்ந்து அளித்த பரிசுகளுக்குக் கணக்கு வழக்கில்லை. திரும்பி வருகையில் எல்லோரும் தன் அழகையும், தன் பாட்டையுமே பற்றி வாய் ஓயாது புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது. எங்கு திரும்பினாலும் இந்தப் புகழ்ச்சியே நிறைந்திருந்தது. சுற்றுமுள்ள வீடுகளும் மரங்களும்கூட தன்னையே வியந்து துதிப்பதாக அவளுக்குத் தோற்றியது. அவள் மனம் ஸுகத்தில் மூழ்கிப் பதைத்தது. அவள் நடந்து வரும்பொழுது கால் கீழே பாவவில்லை: அவள் தலையோ நக்ஷத்திரங்களைச் சென்று எட்டிவிட்டதுபோல அவளுக்குத் தோற்றியது. இவ்வாறு வீடுவந்து சேர்ந்ததும், பொக்கைவாய், குருடு, கூனல் முதலிய லக்ஷணங்கள் வாய்ந்த அவள் தாய்க்கிழவி— இவள் காலத்தில் இவள் விஷமகுணம் அற்புத அழகு முதலியன வாய்ந்திருந்து இப்பொழுது ஆடிப்பாடி அமர்ந்த பரதேவதை என்று கூறவும் வேண்டுமோ?— இவளை வாரி எடுத்து மார்புறத்தழுவிக் கன்னம் வீங்க முத்தமிட்டு அன்று அவள் ஸுகத்திற்காகச் செய்திருக்கும் ஒப்பந்தத்தை வெளியிட்டாள். 'அந்தப் பாப்பாரப்பய பெருத்த பணக்காரண்டீ! ராஜகுமாரன்போலிருக்காண்டீ! நரைய பணக்குடுத்திருக்காண்டீ!' என்று கூறிக்கொண்டே இதைத் திடப்படுத்த கையிலிருக்கும் பணத்தைக் குலுக்கினள். தாலிகள் காதுக்கினிமையான ஜிலிஜிலிப்பு சப்தம் உண்டாவதைக் கேட்டு இருவரும் ஆனந்த பரவசராயினர்.

இதற்குள் அழகிய தாதி ஒருத்தி ஸ்ரீநிவாஸனை விஸ்தாரமான படுக்கை அறைக்குள் கொண்டுபோய் விட்டாள். வாயால் வர்ணிக்கத்தகாத படங்கள், பெரிய நிலைக்கண்ணாடிகள், பெரிய சரவிளக்குகள், விலைஉயர்ந்த நாற்காலிகள், சித்திர வேலைகள் செய்த ஸோபாக்கள், அசைக்கும் அழகிய இரும்புக் கட்டில்கள், பட்டுமெத்தை தலையணைகள் முதலிய ஸுக ஸாதனங்களால் அந்த இடம் நன்றாக அலங்கரிக்கப்பட்டு விளங்கியது. அங்கு சந்தன அகரு தூபங்கள், பால், பழம், பக்ஷணம், புஷ்பம் முதலிய எல்லாம் மன்மத பூஜைக்காகத் தயார் செய்து வைத்திருந்தது. ஸ்ரீநிவாஸன் நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்து அதன் சிறப்பைக்கண்டு உள்ளம் பூரித்தான். சிறு பிராயமாயினும், அவனை அணுகியவர் மனதை வசப்படுத்தித் தன்னிடம் பயபக்தியுடன் நடந்துகொள்ளும் படியான எண்ணத்தைத் தூண்டும் அழகும் கம்பீரமும் அவனிடம் அமைந்திருந்தன. அவன் இதுவரையில் இது போல தேவடியாள் வீடுகளுக்குப் போனதேயில்லை. கடவுளிடம் கோபங்கொண்டு 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று கூறும் சார்வாக சாஸ்திரப்படி மனதை என்ன தேற்றிக் கொண்டு இத்தொழிலில் இறங்கியபோதிலும் மனச்சாக்ஷியை இக்கெட்ட தொழிலுக்கு இசைந்து அனுமோதிக்கும்படி செய்யமுடியாது தத்தளித்ததால்; அவன் நெஞ்சும் மார்பும் படபடவென் றடித்துக் கொள்ள தேஹம் நடுங்கியது. ஆனால் 'வேறொருவன் போடும் வேதாந்த வேஷத்தின் சூதை வெளிப்படுத்தத்தான் இவ்வாறு செய்கிறோமே ஒழிய நாம் இந்த அநீதியான ஸுகத்தை இச்சித்தா இங்கு வந்தோம்?' என்ற எண்ணம் சிற்சில ஸமயத்தில் அவன் மனதை ஒருவாறு தேற்றியது. அவன் தன் நடத்தைக்கு ஸாதகபாதகமான விஷயங்களை இவ்வாறு மனனம் செய்து தன் நடத்தையின் நியாயத்தை ஆராய்ந்துகொண்டிருக்கையில் திடீரென்று ஒரு கதவு திறந்தது. கால்சலங்கை ஜில்ஜில் என்று சப்திக்க ஒரு ம்ருதுவான ராகத்தை ஆலாபனம் பண்ணிக்கொண்டு உட்புகுந்து விட்டாள் ஜானகி. அவள் தேஹத்தை மறைத்தும் கூடியவரை நன்றாக வெளிப்படுத்தும் குணமுள்ள லேசான ரவை சல்லாபுடவையை அவள் கட்டியிருந்தமையால் பந்தலில் இருந்ததைவிட ஆயிரம் மடங்கு அழகுடன் காணப்பட்டாள். அவள் அப்பொழுது உடனே ஏதோ ஒரு புதியவரைக்கண்டதுபோல ஆச்சர்யப்பட்டு திடீரென்று ஒரு புறம் ஒதுங்கி மிகுந்த அடக்கமும் வெட்கமும் காட்டும் முகக்குறியுடன் தலைகுனிந்து நின்றுவிட்டாள். ஸ்ரீநிவாஸனே அவளைக்கண்டதும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கிவிட்டான். ஆச்சர்யத்தால் பேச நாவெழவில்லை. அவன் தேஹம் மாத்திரம் தலைமுதல் கால்வரையில் கிடந்து பதறியது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சாந்தை அல்லது பொறுமையினிலை

உபோத்காதம்

கற்பனையாற் கண்டு கலந்து மனமயங்கா
நிற்பதுவே நாடும் நெறிகாண் பராபரமே.

நேராகக் காணுவிடினும் ஒருவரைப்பற்றிக் கேட்டுக் காதல்கொள்ளுவது மங்கையரது இயற்கை. கன்னிலை, நற்குணம் முதலிய கலந்து விளங்குமொருவனை நினைந்து நினைந்து கனவிலாழ்ந்து தமது விரும்பியப்பொருளை தமது கண்முன் காண்பாற்போல் காண்பதவரியற்கை. இது அவரது கற்பனையானது தூண்டப்பட்டு தமது மனத்தைக் கொள்ளைக் கொண்டவனை மனவெளியிற் காணச் செய்யும் இன்பத்தவம். அத்தகைய இன்பம் வாய்ந்த தமது மனத்திற்கு உகந்த தலைவனை நேரில் கண்டவர் ஆனந்திப்பது வரையாகாது. அதுவும் கற்பனையின் விசாலத்தால் தான் விரும்பிய தலைவன் அநந்தமாகிய நல்ல குணங்களும் வீரச்சுவையும்வாய்ந்து விளங்கும் மஹா புருஷனுகில் அவன் எந்த சாதி எந்த வருணம் என்றெண்ணுது குணமொன்றையே கருதுவது மனத்தின்வழிநின்று குணங்கொண்டவர் யாவராயினும் தாமடையத்தக்க மேன்மையுடையவனென்றே எண்ணுவது அதன் இயற்கை. இவ்வழியை யார் தடுக்க முயன்றாலும் மனோபலம் எவற்றையும் துலைத்து தன் வழியைத் தான் நாடும். அதனால் எதுவரினும் அதைத் தாங்க அதற்கு பலமுண்டு. தனது எண்ணங்கள் தவருக முடிய நேரினும், அதாவது, தான் கொண்ட தலைவன் தன்னை மதியானாயினும் தான் அவன்பால்கொண்ட அன்பு ஓயாது அலைத்துக்கொண்டிருப்பதே அத்தகைய மாதரின் இயற்கை. பரமசாந்தம் வாய்ந்து அறியாமையாற் காதலன் செய்தாரென்றே அவனைத் தூற்றார். பொறுமையே அவர் அணி. மோனத்திலாழ்ந்த முனிவர்போல், எல்லாம் தமது கணவனது செயலே என்று எண்ணி அவன் மனம் கோணுது விளங்கத் தம்மால் எது செய்ய முடியுமோ அதைச் செய்ய முயல்வர். அவர் சாந்தத்திற் களவேயில்லை. எத்தகைய துயரையடையினும், அடாதபழியைத் தம்மேல் இடினும், எதையும் கணிசியாது கணவனது ஸுகமே தமது ஸுகமென எண்ணுவர். தம்முயிரையுமதற்காக அர்ப்பணஞ் செய்யச் சித்தமாயிருப்பர்

அத்தகைய பெருங்குணம்வாய்ந்த பரமசாந்தையான சாந்தையின் சரிதம் இனி எழுதப்படும். இச்சாந்தை ஆங்கிலத்தில் கவிசிரேஷ்டர் ஷேக்ஸ்பியர் எழுதிய ஒதெல்லோ என்னும் நாடகத்தில் காணும் 'டெஸ்டிமோனு'வின் தமிழ் அவதாரம்.

க—காமருற்ற காதை.

"எந்நெஞ்ச மேனு மிரங்குமே நின்னருட்குக்
கன்னெஞ் சருமுளரோ காட்டாய் பராபரமே."

விஞ்சையர் திருநாடு—அழகிற் சிறந்து விளங்கும் ஆரியர் திருநாடு. அந்நாட்டின் முக்யபட்டினம் விஞ்சய நகரம்.* தெருவெங்கும் நீர்காலே தவழ்ந்து விளங்குமிடம். காண்பதற்கு அந்நகரம்போன்ற காக்ஷியுடைய பட்டினமே கிடையாது. இத்தகைய திருநகரத்தில் ராஜாங்க சபையில் உத்தம பதவியி லிருந்தவன் பிரபுன்னதன் † அவனுக்கோர் மகளுண்டு. அவள் குணத்தில் சிறந்ததன்றி குணத்தையே விரும்பியவள். அது மாத்திரமன்றி அவளது இளந்தளிர்போன்ற சோபையில் இயற்கை அழகின் அமைப்பைக்கண்ட யாவரும் எவ்வாறேனுமவளை அடையவேண்டும் என்று எக்கங் கொள்ளாதிருக்க முடியாது. கணக்கற்றவர் அவளை மணக்க விருப்பமுற்ருர். பெதும்பைப் பருவந்தாண்டி பேரிளம் பெண்ணுக விளங்கிய அவளைக் கண்ணுற் கண்டதும் காமப் பித்திலாழ்ந்த அயோக்யபுஞ்சன் ‡ ஒருவன். அவனை மங்கலமாக யோக்ய புஞ்சன் என்று யாவரும் அழைப்பது வழக்கம். நாமும் அப்படியே அவனை அழைப்போம்.

யோக்ய புஞ்சன்*—இவன் வாய்க்கினியப் பேசி நாசஞ்செய்யா இடமே கிடையாது. தித்திக்கப்பேசி கசக்கவேலை செய்வதே இவன் இயற்கை. தன்னயத்தையே பார்க்கும் தகைமையுடையவன். பிறருக்கிழிவென்றல் இவனுக்குக் கொண்டாட்டம். இவன் பெருமை உலகெங்கும் பிரசித்தம். இம்மஹாயோக்யன் நமது சாந்தையை எவ்வாறேனு மடையவேண்டும் என்று முயற்சித்தான். அது பலிக்கவில்லை. அவள் மறுத்துவிட்டாள். என்ன செய்வான்? வெறும் வாயை மெல்லும் பாட்டிக்கொருவாய் பொறிமா கிடைத்தால் சும்மாவும் இருப்பாளா? இவனுடைய க்ஷுத்ரகதிக்கோர் வேகத்தை கொடுக்கும் ஸாதனமாக இம்மறுப்பு இல்லாதிருக்க முடியா?

அயோக்ய சிகாமணியை வெறுத்தது போலவே சாந்தை பலரையு மறுத்தாள். அவள் குணமொன்றையே கவனித்தவள். அழகாவது வெறும் டாம்பீகத்தையாவது கணிசித்தவள் அல்ல. அவளுக் கவ்வூரில் விளங்கிய உத்புல்லன் என்னும் நற்குணமே கவசமாகக் கொண்ட வீரனொருவனைப் பற்றிக் கேள்வியுண்டு. அவனை யாவரும் உத்துல்லன் † என்று கூப்பிடுவது வழக்கம். உத்புல்லன் என்று கூப்பிட நா எழும்புகிறதில்லை. இந்த உத்துல்லனைக் குறித்து அவள் கேள்விப்பட்ட சமாசாரத்திற் களவேயில்லை. அவனது வீரம் பெருமை சாந்தம் தயை நிஷ்கபட முதலிய அநந்தமாகிய நற்குணங்களைக் கேட்ட தன்றி தன் தந்தை வீட்டிற்கவன் வந்தபொழுதும் கண்டதுண்டு. அவன் பார்ப்பதற்கு கறுத்திருப்பினும் வேறு சாதியானுயினும் அவள் அவற்றை எல்லாம் எண்ணவில்லை. எவ்விடம் பெருமையும் குணமும் தவழ்ந்து விளங்குகிறதோ அங்கே தானுமடைய அவளது விருப்பம். பின் அவள் மனம் அவனிடம் லயித்தல் அதிசயமன்று. குணமொன்றே அவள் லக்ஷியம். அதுவே அவன் தனிகலன் என்றவள் அவனுடன் பேசியபொழுதெல்லா மறிந்தாள். அவன் வாயிலாகவே அவன் சரிதமுழுதும் கேட்டதிசயமுற்றதன்றி அவன்பால் அனுதாபமு மாசையுமடைந்தாள். மஹா ரணரங்க வீரனொருவன் தனது கஷ்டநிலை முழுதுங்கூறி அதில் தப்பிப்பிழைத்த வகையையும் உற்சாகத்துடன் எளிமையுடன் கூறில் வைசித்ரகத்தில் பாய்ந்து கற்பனைக் கனவிலாழ்ந்து விளங்கும் பெண்ணொருவள் கேட்டு மனங்களிக்காதிருப்பதாகும்? அதிலும் குணம் நிறைந்து வீரம் பொதிந்து டம்பமில்லாது இயற்கையிலேயே வணக்கங்கொண்ட மஹாவீரன் தானொருவனுக அடைந்த தொந்தரைகளைக் கூறி 'தனக்குறிய உற்றார் பெற்றார் இல்லையே, இருக்குமாயின்—'என்று இருகரத்தையும் விரித்து என் கதையை கேட்டானந்திக்க எனக்கோர் உயிர்த்துணையு முண்டோவென்று சொன்னல் அக்கரங்களோடு கரங்கலந்து "ஐய! கவலைப்படாதேயும்; யான் உம்மை உயிருள்ளவரைத் துறக்கேன்" என்று சாந்தையர் மனங்களித்து குணத்தைக் கண்டும் கூருதிருப்பள்?

* Venice. † Brabantio. ‡ Iago.

† Othello.

டெல்லிமாநகர் வெடிகுண்டு விபத்து

BOMB OUTRAGE AT DELHI

டில்லியில் நடந்த சம்பவம்.—1911 வருஷத்தில் டிசம்பர்௴ 12௳ யன்று நமது மாட்சிமைதங்கிய மகாராஜ சக்கரவர்த்தியவர்கள் சகல குடிபடைகளும் மனமகிழ்ந்து ஆனந்த நிர்த்தனங்களாட இந்தியா தேசத்துக்குச் சக்கரவர்த்தியென டில்லிமாநகரில் மகுடாபிஷேகம் செய்யப்பெற்ற காலத்தில் மனமுவந்து நமக்கருளிய பலவித நன்மைகளில் நமது ராஜப்பிரதிநிதியின் ராஜதானியைக் கல்கத்தா நகரத்திலிருந்து டில்லிமா நகரத்திற்கு மாற்றியது ஓர் முக்கியமானதாகும். தர்மபுத்திரர்முதல் பிருதிவி ராஜன் வரையிலுள்ள இந்து அரசர்களும் பிற்பாடு மகம்மதிய அரசர்களும் இந்த டில்லியிலேயே வசித்தார்களென்று சரித்திரம் ரூபிப்பதையும் இப்பொழுது ஆங்கில அரசாட்சியிலும் இதுகாறும் ராஜ தர்பார்களெல்லாம் இந்நகரிலேயே நடந்தேறின என்பதையும் இப்பொழுது இந்நகரமே பிரதான ராஜஸ்தானமாய்விட்டது என்பதையும் ஓர்ந்துபார்க்கின், இந்நகரத்திற்குப் பிராதனுதிபத்தியத்தை ஆக்ருஷித்துக்கொள்ளும்படியான பாரம்பரிய கௌரதாசகித வசியசக்தி ஏதோ இருக்கின்றது என்றே தோன்றுகின்றது. இங்ஙனம் இந்துக்கள் மகம்மதியர்கள் எல்லாருக்கும் அபிமானத்திற்குக் காரணமாயிராநின்ற இந்த டில்லிமாநகரத்திற்குள் ராஜாக்ஞையின்பிரகாரம் அதை ராஜஸ்தானமாக்கவேண்டி சென்ற வருஷம் டிசம்பர்௴ 23-ந்தேதியன்று பகல் 12-மணி சமயத்தில் பிரவேசித்து ஓர் அழகிய யானையின் பேரில் நவரத்தின கசிதமயமாய் அலங்கரிக்கப்பட்ட ஓர் அம்பாரிக்குள் ராஜப் பிரதிநிதியாகிய லார்ட் ஹார்டிஞ்சு துரையவர்களும் அவரது அருமை மனையாட்டியாரும் வீற்றிருந்து அநேகம் சிற்றரசர்கள், பிரபுக்கள், எண்ணற்ற குடிபடை பரிவாரங்கள் இவர்களெல்லோரும் சூழப்பெற்று பவனி வருங்காலத்தில் சாந்தினி சவுக் என்னுமிடத்தில் சண்டாளன் எவனோ களங்கமின்றிக் காருண்ணியம் நிறைந்த ராஜப்பிரதிநிதியவர்கள்மீது வெடிகுண்டை எறிந்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்படியாக நீசச்செயல் புரிந்தனன் எனக் கேள்வியுற்று இந்தியாதேசம் முழுவதும் அளவற்ற விசனத்தை அடைகின்றது. அதே அம்பாரியின் பின் பக்கத்தில் குடை பிடித்துக்கொண்டிருந்த ஜமேதார் ஒருவர் மாணமடைந்தனர். லார்டு ஹார்டிஞ்சு துரை அவர்களும் அவ்வெடிக் குண்டினின்றும் வெடித்து வெளிக்கிளம்பிய சில ஆணிகள் தோட்பட்டையிலும் கழுத்திலும் தைத்து சில பலமான காயங்களை அடைந்தனர். டாக்டர்கள் அவ்வாணிகளை யெல்லாம் எடுத்துவிட ராஜப்பிரதிநிதியவர்கள் இப்பொழுது சுகமடைந்து வருகின்றனரெனக் கேள்வியுற்று சந்தோஷிக்கின்றனம். ஓர் சிறுபையன் அபாயகரமாகக் காயப்பட்டு கஷ்டம் அடைந்தனன். இன்னும் பத்து பேருக்கு மேலாகக் காயப்பட்டனர். இவ்வளவு பயங்கரமான செய்கைகள் நடந்தும், வெடிக்குண்டினல் ஆபத்து தனக்கே உண்டாயிருந்தும், லார்டு ஹார்டிஞ் துரையவர்கள் பட்டணப் பிரவேசத்தை நிறுத்த மனம் இல்லாதவராகி, நடவுங்கள், நடவுங்கள், என்று அச்சமயத்தில் தனது பரிவாரங்களை உற்சாகப்படுத்தினது அவரது மனோதைரியத்திற்கு ஓர் அறிகுறியாகும். அன்றைய தினமே தான் கொலைபாதகனது குறிக்குத் தப்பினும் பலமாய் காயப்படுத்தப்பட்டு படுக்கையிலிருந்தும், தான் தனது ராஜரீக விஷயக் கொள்கையை மாற்றப் போவதில்லை யென்றும் ஆனல் இக்கொடுஞ் சம்பவம் இந்தியர்களுக்குப் பரிதாபத்தையும் அவமானத்தையும் உண்டாக்கி விட்டதென்றும் கூறியது அவரது சலிக்காத சத்திய நிஷ்டைக்கு ஓர் அடையாளமாயுள்ளது. இங்ஙனம் சத்தியம், தைரியம் முதலிய உத்தம குணங்களைப் பூஷணமாகவாய்க்கப் பெற்ற இம்மகிபனது சரீரத்தின்மீது வெடிக்குண்டை யெறியத் துணிந்த கிராதகனது வரவை இருள் நரகோ, எரி நரகோ, எந் நரகோ எதிர்பார்த்திருக்கின்றது. அஹிம்சையே அணிகலனுயுள்ள ஆரியாவர்த்த பூமியில் இத்தகைய கொடுஞ் செயல்கள் இந்தியருக்கு ஆச்சரியத்தையும் அவமானத்தையும் உண்டாக்குகின்றது. ஆகையால் தேசாபிமானிகள் பலரும் ராஜாங்கத்தாருடன் சேர்ந்து இத்தகைய கொடுஞ் செய்கைகள் நம் நாட்டில் தலையெடா வண்ணம் வேண்டிய ஏற்பாடுகள் உடனே செய்ய வேண்டியது. இதுகாறும் குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு அனுகூலமான துப்பு சொல்கிறவர்களுக்கு ரூ. 50,000 வெகுமதி அளிப்பதாக டில்லி அடிஷனல் சூப்பரிண்டெண்டு விளம்பரம் செய்திருக்கிறார். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் போலீசார்களுக்கு உதவியாயிருந்து உழைப்பவர்களுக்கும் தகுந்த வெகுமதி அளிக்கபபடுமாம். பாட்டியாலா மகாராஜா அவர்கள் 30,000 ரூபாயும், காஷ்மீர்மகாராஜா 10,000 ரூபாயும், க்வாலியர் மகாராஜா 8000 ரூபாயும், டில்லி பொது ஜனங்கள் 8000 ரூபாயும், டில்லியில் ஓர் பிரபு 5000 ரூபாயும், மாலர் கோட்லா நவாபு 5000 ரூபாயும் இம்மாதிரியே பல பிரபுக்களும் ராஜாக்களும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் நிமித்தம் செலவு செய்ய கணக்கற்ற தொகை அளித்திருக்கின்றனர். இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்தும் சீமையிலிருந்தும் ராஜப்பிரதிநிதியவர்கள்மீது வெடிகுண்டு எறிந்ததற்காக அனுதாபப்பட்டும் ஈஸ்வர கிருபையால் உயிர் தப்பியதற்காக ஆனந்தித்தும் தந்திகளும் கடிதங்களும் ராஜப்பிரதிநிதியவர்களுக்கு வந்து குவிந்துகொண்டேயிருக்கின்றன. கூடிய சீக்கிரம் கொலைப்பாதகன் பிடிபட்டு குற்றத்திற்குத் தக்க சிட்சை யடைவானென்று ஜனங்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். ராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்சு பூர்ணசுகமடைந்து தமது மனைவியாருடனும் பந்து மித்திரர்களால் சூழப்பட்டும் நீடூழி காலம் வாழ்வாராக.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

சென்னைக்கும் ரங்கூனுக்கும் கப்பற் பிரயாணம்.—1913௵ ஜனவரி௴ முதல் சென்னைக்கும் ரங்கூனுக்கும் போகும் கப்பல்கள் இப்பொழுதைவிட அதிக விரைவாகச் செலுத்தப்படும். இப்பொழுது சென்னையிலிருந்து வியாழனன்று மாலையில் புறப்படுவதற்குப் பதிலாகக் கப்பல்கள் வெள்ளியன்று நடுப்பகலில் புறப்பட்டு திங்களன்று பிற்பகலில் ரங்கூன் போய்ச் சேரும். ரங்கூனிலிருந்து வெள்ளியன்று நடுப்பகலில் புறப்பட்டு செவ்வாயன்று காலையில் சென்னை வருகிறதற்குப் பதிலாகத் திங்களன்றே பிற்பகலில் வந்து சேரும்.

*
* *

போர்செய்யும் ஒரு ஸெர்வியப்பெண்.—பதினைந்துவயதுடைய ஸோபியோவ்ஜேவிச் என்னும் ஒரு செர்விய இளம்பெண் ராணுவ உடை தரித்துப் போர்முகத்தில் நின்று துருக்கியருடன் போர்செய்து வருகின்றாள். இவளுக்கு வயது இன்னும் இருபதாகவில்லை. இவள் போர் முடிந்தபிறகு ஒரு யுத்தவீரனைக் கலியாணஞ் செய்துகொள்ளுவேனென்று கூறுகிறாள். இவள் விரும்பிய புருஷனும் இவளிருக்கும் சேனையிலேயே யிருக்கின்றானும். இவள் தன் தகப்பனிறக்குந் தருணத்தில் தனக்குக் கூறிய வுறுதி மொழியைக் காப்பாற்ற இவ்வாறு ராணுவ வுடை தரித்துப் போர் செய்கின்றாளாம்.

*
* *

ஒரு பெரிய குடும்பஸ்தர்.—சபக்கைச்சேர்ந்த காவெண்டிஷ் கிராமத்தில் வாசஞ்செய்யும் மிஸ்டர் காவேஜ் என்பவரும் அவர் மனைவியாரும் தாம் கல்யாணஞ் செய்துகொண்ட 73வது வருஷக் கொண்டாட்டத்தை நடத்திய காலத்தில் நமது மகாராஜா சக்ரவர்த்தியார் அவர்கட்கு உபசாரமாக ஒரு தந்தி யனுப்பினார்; மிஸ்டர் சாவேஜுக்கு இப்போது 94-வயதாம்; அவர் இன்னும் தமது தோட்டத்தில் வேலைசெய்யும் தேகவலிவுள்ளவரா யிருக்கின்றனராம். அவருடைய மனைவியாருக்கு 92-வயதாம். அவர்களுக்குப் பிறந்த 10-பிள்ளைகளுள் ஐவர் இன்னும் உயிருட னிருக்கின்றனராம். இவ்வைந்து பிள்ளைகட்கும் 19 பேரப்பிள்ளைகளும், 30 பேரப்பிள்ளைகளின் பிள்ளைகளு மிருக்கின்றனர்.

ஒரு கப்பல் முழுகிப்போயிற்று.—ஹாலிபாக்ஸ் நகரத்திலிருந்து சாக்கேற்றிக்கொண்டு செயின்ட் ஜான்ஸ் நகரை நோக்கிவந்த ப்ளாரீரன்ஸ் என்னுங் கப்பல் நடுவழியில் மோதுண்டுடைந்து போயிற்று; காப்டனும், 21-மாலுமிகளும் கடலில் முழுகிப் போயினர். 4-மாலுமிகள் ஒரு படகிலேறி 4-நாள் அலைந்த பிறகு காப்பாற்றப்பட்டனர்.

*
* *

லார்ட் கார்மிகேலின் ஒரு விசேஷ செய்கை.—முன்புசென்னைக்கவர்னராக இருந்து இப்போது வங்காளக் கவர்னராகவிருக்கும் லார்ட் கார்மிக்கேல் தமது சுற்றுப் பிரயாணத்தில் ராஜஷாய்க்குப் போம்போது இடையே யோரிடத்திலிறங்கினார். இறங்கியவுடனே ஒரு பிச்சைக்காரன் ஜனக்கூட்டத்தினுள் நுழைந்து சென்று கையை நீட்டினான். உடனே கவர்னர் அவனது கையைப் பிடித்துக் குலுக்கிச் சந்தோஷக்குறி காட்டினார். இஃதவரது பெருங்குணத்தை நன்கு விளக்குவதாம்.

*
* *

சென்னை ஹைகோர்ட் புதிய ஜட்ஜ்.-ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீமுக்குப் பதிலாய் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் பத்ருதீன் த்யாப்ஜி 1903-ம் வருஷத்தில் பாரிஸ்டராகி அதே வருஷம் எப்ரல் மாதத்தில் பம்பாய் ஹைகோர்ட்டில் பாரிஸ்டராய்த் தாக்கல் செய்யப்பட்டார். அவர் இப்பொழுது பம்பாயில் சட்டப் போதகராயிருக்கிறார்.

*
* *

11-ஜட்ஜிகள் அரஸ்ட் செய்யப்பட்டனர்.—ருஷியாவில் பின்ஜாதியாரும் ருஷ்யரும் சமான அந்தஸ்துடையவரென்னும் சட்டத்தை நிறைவேற்றாது மறுத்தமைபற்றி முன்பு 6-ஜட்ஜிகள் அரஸ்ட் செய்யப்பட்டனர்; பின்னும் அது விஷயமாக 11-ஜட்ஜிகள் அரஸ்ட் செய்யப்பட்டிருக்கின்றனர்.

*
* *

ஜப்பானின் பிரதான நகரமாகிய டோக்கியோவில் 800 ஸ்நானக்கட்டடங்க ளிருக்கின்றனவாம். அவற்றுள் மூன்று லட்சம்பேர் தினந்தோறும் ஸ்நானஞ்செய்கின்றனராம். அதற்காக ஒவ்வொருவரும் ஒரு அணா வீதம் வரி செலுத்த வேண்டுமாம்.

Supplement to the "Viveka Bodhini"

"விவேக போதினி" அநுபந்தம்

HER EXCELLENCY LADY HARDINGE

லேடி ஹார்டிஞ்

HIS EXCELLENCY LORD HARDINGE

லார்ட் ஹார்டிஞ்

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி V } பரிதாபி௵ தைமீ : 1913-௵ பிப்ரவரிமீ { பகுதி 8

தேசகாலநிமித்தம் II

SPACE, TIME & CAUSATION

ஸௌஷுப்தியில் காண்பான், காட்சி, காட்சிப்பொருள் ஆகிய திரிபுடியும் இருக்கின்றது என்றும், இதுதான் நிமித்தத்தின் ஸூக்ஷ்ம ரூபம் என்றும் இது நிலைத்திருப்பதால்தான் மறுபடி விழிப்பு ஏற்படுகின்றது என்றும் முன்னமே கூறியுள்ளோம். இந்த ஸூக்ஷ்ம நிமித்தத்திலிருந்து மறுபடி விழிப்பு வரும் விதத்தைச் சற்று ஆராய்வோம். ஸௌஷுப்தியிலும் காண்பவன், முன்னிரண்டு அவஸ்தையிலும் காண்பானாகவிருந்த, ஆத்மாவே. ஆனால் இவன் காண்பது, முன் அவஸ்தைகளிலிருந்த வஸ்துக்களின் இன்மையாகிய சூன்யத்தை. இதை தூங்கி விழித்தபின்பு நமக்குத் தோன்றும் "ஒன்றும் தெரியவில்லை" என்ற அனுபவம் நன்கு விளக்கும். கொஞ்சகாலம் ஸௌஷுப்தியிலிருந்து தேஹ இந்திரிய மனங்கள் ஓய்வால் தேறிய பின்பு மனத்துடன் ஆத்மாஸம்பந்தப்பட அதில் அடங்கிக் கிடக்கும் எண்ணங்களை ஸ்வப்னரூபமாகக் காண்கிறான். இங்கும் ஆத்மா காண்பவன்தான். ஆனால் எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருவதால் இங்கு கால உணர்ச்சியும், முன்னிருந்த நிமித்த உணர்ச்சி இவைகள் ஸம்பந்தப்பட்டு திடப்பட்டும், உண்டாகிவிடுகின்றன. பின்னர் தேஹேந்திரியங்களோடு ஸம்பந்தப்பட்டு விழிப்புக்குவருங்கால் வீரஸம்பவத்தை ஒரே காலத்தில் வேறாகக் காணவேண்டி வருதல் மூலமாக தேச உணர்ச்சியும் காலநிமித்த உணர்ச்சி திடப்பட்டும் உண்டாகிவிடுகின்றன. ஆகவே ஆத்மா காணும் பொருளாகச் சேஷிப்பதால் இதற்கேற்ப காணும் பொருள்களில் காட்சி ஒழுங்கு அதற்குப் புலப்பட அதனோடு எப்பொழுதும் கார்யகாரண ஸம்பந்தமாகிய நிமித்தம் இம்மூன்று அவஸ்தையிலும் ஸம்பந்தப்பட்டிருக்கின்றது. ஸௌஷுப்தியில் இந்த நிமித்தம் தேசகாலங்களை விட்டு தனித்திருப்பதாலும் விளங்கும் காட்சிப்பொருளின்மையாலும் ஸூக்ஷ்மமாக இருக்கின்றது. ஆகவே தேசகால நிமித்தங்கள் அந்தக்கரண பரிணாமங்களாயினும், நிமித்தம் தேசகாலங்களுக்குக் காரணமாக இருக்கிறது. இதுபற்றியே ஸௌஷுப்தி அவஸ்தையில் ஆத்மாவுக்கு உள்ள நிமித்தத்தைக் காரணசரீரம் என்றும், ஸ்வப்னத்திலுள்ள காலநிமித்த ஸம்பந்தத்தை ஸூக்ஷ்மசரீரமெனவும், ஜாக்ரதையில் உள்ள தேசகால நிமித்த ஸம்பந்தத்தை ஸ்தூலதேஹம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு விஸ்தரிக்கப்பட்ட தேசகால நிமித்த ரூபமாயும் நிமித்தத்தை ஆதாரமாக உடையதாயும் உள்ளதற்கு மூல அஞ்ஞானம் என்று பெயர் கொடுக்கப்பட்டது. பெரியோர்கள் தேசகால நிமித்தாதீதமான ஒரு நிலையில் தேசகால வஸ்து பரிச்சேதமற்ற பொருளாகவிருந்து தேறியிருப்பதால், ஆத்மா அறிபொருளாகிய தேசகால நிமித்த ஸம்பந்தமான காட்சிப் பொருளும் அல்ல ; அறிபடாப் பொருளாகிய தேசகால ஸம்பந்தமற்ற சூனியமும் அல்ல ; இந்த நிலைகளில் எல்லாம் அறியும்பொருளாகவிருந்து உண்மையில் அறியும் பொருள் என்ற உபாதியுமற்ற அறிவு ஸ்வரூபமானதுவே என்று அனுபவித்து ஸௌஷுப்தியிலுள்ள நிமித்தமும் பரம்பொருளுக்கு உபாதி, உண்மையானதல்ல என்று, வற்புறுத்துகின்றனர்.

ஆனால் தனிப்பொருளான ஆத்மாவுக்கு இந்த அஞ்ஞான ஸம்பந்தம் எப்பொழுது வந்தது என்ற கேள்வி நமக்குண்டாகும். இது உண்டானதும் நாம் தேசகால நிமித்தமாகிய அஞ்ஞானத்திற்கு உட்பட்டே இக்கேள்வி கேட்கவேண்டிவருவதால் கால ஸம்பந்தம் எப்பொழுது உண்டாயிற்று என்று பொருள்படும் நமது கேள்வி. இந்தகேள்விக்கே இடமில்லை என்பது உடனே விளங்கும். இந்த ஸம்பந்தம் அனாதி என்று கூறி நிறுத்திவிடவேண்டும். தேசகாலாதீதமான வஸ்துவுக்கு இந்தஸம்பந்தம் இல்லவே இல்லை என்பது பெரியோர் அனுபவம். அதற்கு இப்பொழுதும் இல்லை எப்பொழுதும் இல்லை, என்ற அனுபவம் நமக்கு வந்துவிட்டால், இப்பொழுது இருப்பதுபோலக் காணப்படும் ஸம்பந்தம் இல்லாமலிருக்கிறது என்ற சாந்தம் நமக்கு வரும். மரணம் மூர்ச்சையாதி அவஸ்தைகளுடன் இதை ஸம்பந்தப்படுத்தி இதை விவரிப்போம்.

விவேக போதினி

தொ. 5.] பரீதாபிஸு தைமீ [பகுதி 8

ஸ்ருஷ்டி விஷயம்

3. சாஸ்திரபுராண சிருஷ்டிகளின் பொருத்தம்

SASTRAIC & PURANIC CREATION RECONCILED

(Continued)

இப்படி நிஷ்டையால் சிருஷ்டி சக்தியை அடைந்து, பிரபஞ்சம் முன் கல்பத்தில் இருந்த மாதிரியை அறிந்துகொண்டு பிரம்மா முதலில் பஞ்ச அவித்தியைகளைச் சிருஷ்டித்தார். இதனால் திருப்தியடையாதவராய் மஹா ஸந்நியாஸிகளாகிய ஸனகாதி யோகிகளைப் பின்பு சிருஷ்டித்தார். இவர்கள் பிரம்மாவினது மானஸ புத்திரர்கள். அவித்தியைகளின் ஸ்வபாவமானது நான்கு மானஸ புத்திரர்களின் ஸ்வபாவத்திற்கு நேர் விரோதமாய் இருந்தது. முன்னையவற்றின் ஸ்வபாவம் அஞ்ஞானமே. பின்னவர்களின் ஸ்வபாவம் நிஷ்களங்கமான ஞானமே. ஸகல சாஸ்திரங்களிலும் அஞ்ஞானத்தை வயது முதிர்ந்த கிழவனாகவும், ஞானத்தைச் சிறிய வாலிபனாகவும் கொள்வதற்கு ஏற்பவே, இங்கும் அஞ்ஞானங்கள் முன்பு உண்டானவைகள் என்றும், ஸனகாதிகள் பின்புண்டானவர்கள் என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளாலே சிருஷ்டி விருத்தியாவது அஸாத்தியம்; ஏனெனில், முன்னையவை அறியாமை நிறைந்திருப்பதால் சிருஷ்டிக்கு வேண்டிய சக்தியை உடையனவாய் இருக்கமாட்டா.

பின்னவர்களோ மஹாஞானிகளாய் இருப்பதால் ஸ்ருஷ்டி விஷயத்தில் தமது சக்திகளை உபயோகப்படுத்த மனமில்லாதவர்களாய் இருப்பார்கள். ஆனால் இவ்விரண்டுவித சிருஷ்டியும், பின்னர் சிருஷ்டியாய் விருத்தியடைந்து வருவதற்கு அதிக அவசியம், ஏனெனில் அவித்தியா ஸம்பந்தமில்லாமற்போனால் சிருஷ்டி கர்த்தர்கள் சிருஷ்டிக்க இசையமாட்டார்கள்; ஸனகாதி யோகிகளைப்போன்ற மஹாத்மாக்கள் இல்லாவிடில் உற்பத்தியாகும் பிராணிகளுக்குப் பின்பற்றி நெறிதவறாது நடந்து உய்வதற்கு வேண்டிய மஹாத்மாக்கள் இல்லாமல்போய், அவர்கள் அதோகதியை அடைந்து அவஸ்தைப் படுவார்கள். இவைகளைப் பிரம்மா கடவுளின் தூண்டுதலால் ஸ்ருஷ்டித்தாரே ஒழிய, தாமாகவே செய்யவில்லை. கடவுள் இம்மாதிரி ஜீவாத்மாக்களின் உற்பத்திக்கும் விருத்திக்கும் உபயோகமாய் இருப்பதற்காகவே பிரம்மாவை இவ்விருவித சிருஷ்டிகளையும் செய்யும்படி தூண்டினார்.

இப்படி ஸனகாதிகளை ஸ்ருஷ்டி செய்தான பின்பும் தமது சிருஷ்டி விருத்தியாகாதது கண்டு, தாமே மரீசி முதலியவர்களைத் தமது அங்கங்களிலிருந்து பிரம்மா ஸ்ருஷ்டி செய்யத் தொடங்கினார். இந்நிலையில் பிரபஞ்சத்திலுள்ள ஸகலப் பிராணிகளது சரீரமும் பிரம்மாவின் சரீரத்தின் பாகமாதலால், பிரம்மா இக்காலத்தில் ஸ்தூல சிருஷ்டி செய்கிறார் என்பதும், அவர் விராட்ஸ்வரூபி என்பதும் எளிதில் விளங்கும். இந்த விராட் ஸ்வரூபத்தையே புருஷ ஸூக்தத்தில், ஆயிரம் தலை, ஆயிரம் கண், ஆயிரம் கால் முதலியவைகள் உடையதாகவும், புராண சிருஷ்டியில் சொல்லப்பட்டிருக்கும் வஸ்துக்களைத் தம்து அங்கங்களிலிருந்து சிருஷ்டிப்பதாகவும், வர்ணித்திருக்கிறது. ஆகையால் புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்ட விராட்டும், புராணத்தில் சொல்லப்பட்ட ஸ்தூல சிருஷ்டி செய்யும் அவஸரத்திலிருக்கும் பிரம்மாவும், சாஸ்திர

சிருஷ்டிக்கிரமத்திற் சொல்லப்படும் வைசுவானரன் அல்லது விராட் என்பதும் ஒன்றே. இவை தம்முள் பேதமே இல்லை என்பது எளிதில் விளங்கும்.

இதுவரையிலும் புராண சிருஷ்டியும் சாஸ்திர சிருஷ்டியும் நன்றாய்ப் பொருந்திவிட்டன. ஆனால் பிரம்மா தமது பெண்ணிடம் காதல் கொண்டார் என்ற விஷயம், எப்படிப்பட்ட கெட்டவரும் செய்யக் கூசும் விஷயம் அல்லவா? இப்படி இருக்க இவர் இக்காரியத்தைச் செய்தது தகுதியா? இப்படிப்பட்டவரை நாம் ஆராதித்தல் தகுமா? கடவுளுக்கு அடுத்தபடியில் உண்டான இவருக்குக் காமம் முதலியவைகள் உண்டாகலாமா? தன் பெண்ணைப் பெண்சாதியாகக் கொள்ளுதல் பிரம்மாவுக்கு அடுக்குமா? இப்படி பிரம்மா நடந்துகொண்டதால் என்ன விசேஷப் பிரயோஜன முண்டானது? என்ற இவ்விதமான சங்கைகள் நமது மனதைக் கலக்கலாம். இது தோற்றமாத்திரத்தில்தான் அடாத காரியமாய் இருக்கிறதே ஒழிய உண்மையில் அப்படிப்பட்ட காரியமில்லை என்பதை நன்கு விளக்குவோம். பிரம்மா ஸூக்ஷ்ம விஷயங்களுக்கு அதிதேவதை என்பதும், வாசா அல்லது ஸரஸ்வதி என்பவள் வாக்கிற்கு அதிதேவதை என்பதும் யாவரும் அறிந்த விஷயமே. ஆகையால் பிரம்மாவிற்கும் ஸரஸ்வதிக்கும் நடந்த விவாஹமானது, அர்த்தத்திற்கும் வாக்கிற்கும் உள்ள அந்நியோந்ய ஸம்பந்தத்தைக் குறிப்பிக்கின்றது. வெறும் சப்தங்களால் பிரயோஜனமில்லையாகையால், இந்த விவாஹத்தால் பாஷைகள் உண்டாக இடமுண்டாயிற்று. இந்த விவாஹத்தில் பிரம்மாவுக்கு அதிகக் காதல் உண்டானதாகச் சொல்லி இருக்கிறது. இப்படிப் பிரம்மா காட்டிக்கொண்டது, மரீசி முதலிய பிரஜாபதிகளைத் தமக்குப் பந்துக்களான பெண்மணிகளை விவாஹம் செய்யும்படி ஏவிச் சிருஷ்டித்தொழிலை விருத்திசெய்ய வேண்டியதற்கு, அதிக அவசியம்தான். ஏனெனில் சிருஷ்டியின் ஆரம்பகாலத்தில், ஜனங்கள் கொஞ்சமாய் இருக்கும்பொழுது, இக்காலத்திலுள்ள ஒழுங்குகளை வைத்துக்கொண்டு பார்த்தால் ஒவ்வொருவருக்கும் நெருங்கின பந்துத்வம் இருக்கவேண்டியது அவசியமாதலால், விவாஹம் என்பதே நடக்க இடமில்லாமல் போய்விடும். ஆகையால் பிரம்மா இப்படி முதலில் செய்து காட்டாமல் போனால் சிருஷ்டி விருத்தியாகாமல் தடைபட்டு நின்றுவிடும். இம்மாதிரியான விஷயங்கள் ஸகல மதங்களிலும் சிருஷ்டி விஷயமான சரித்திரங்களில் காணப்படுகின்றன. கிறிஸ்து மதத்தில், கடவுள் பிரபஞ்சத்தை விருத்திசெய்ய எண்ணி, முதலில் ஆதாம் என்ற ஆதிபுருஷனையும், பின்பு அவன் தூங்குகையில் அவனது விலா எலும்பிலிருந்து ஈவ் என்ற ஸ்திரீயையும் உண்டாக்கினாராம். அதன் பின்பு அந்த ஆதாமிற்கு பெண் அல்லது ஸகோதரி முறையிலிருக்கும் ஈவை விவாஹம் செய்துகொள்ளும்படி கொடுத்தாராம். இது போன்ற விஷயம் ஸகல மதங்களிலும் சிருஷ்டி ஆரம்பத்திற் காணப்படும். பிரம்மாவுக்கும் ஸரஸ்வதிக்கும் நடந்த விவாஹத்தை இது போன்ற விவாஹம் என்று கூடச் சொல்ல இடமில்லை. ஏனெனில் இவர்கள் இருவருக்கும், புத்திரர்கள் ஒருவரும் உண்டாகவில்லை. இது மரீசி முதலியவர்களை விவாஹ விஷயத்தில் தூண்டுவதற்காக மாத்திரம் செய்ததே ஒழிய வேறில்லை. மேலும் இது ஸாமான்னியமான விவாஹம் அல்ல என்பதை குறிப்பிக்கும் மற்றொரு விஷயமும் இக்கதையில் காணப்படுகிறது. பிரம்மாவுக்குமட்டும் காதல் உண்டானதாகவும், வாசாவுக்கு அஃது உண்டாகவே இல்லை என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. வாக் அர்த்தம் இவைகளில், வாக்குக் கேவலம் ஜடம் அறிவற்றது ஆதலால், அதற்கு ஒருவித ஆசையும் உண்டாகவில்லை என்றும், அர்த்தமானது சித்துருவாய் இருந்து வார்த்தையினுட் புகுந்து அதற்கு உயிரை அளிப்பதால், இதற்கு மாத்திரம் காதல் உண்டானதாகவும் சொல்லப்பட்டிருக்

கிறது. இம்மாதிரியாய் முதலிற் பிரம்மா செய்ய அதைக்கண்ட மரீசி முதலிய பிரஜாபதிகளுக்கு விவாஹ விஷயத்தில் வேண்டிய தைரியமுண்டாய்விட, உடனே பிரம்மா ஆவியுருவமாகி மறைந்தார் என்றும், பின்பு இந்த விஷய ஸம்பந்தமே இல்லாது தோன்றினர் என்றும், உடனே அர்த்தகர்ப்பிதையான வாக்கானவள் இப்பிரம்மாவின் நாவில் வந்திருந்தாள் என்றும் சொல்லியிருக்கிறது. இவ்வாறு ஸரஸ்வதி வந்த உடன்தான், பிரம்மாவின் வாய்களிலிருந்து ஸகல வேதங்களும் ஸகல கலைஞானங்களும் பிறந்தனவாம். இதன் பின்பு மரீசி முதலியவர்கள் சிருஷ்டியை விருத்திசெய்யாதிருப்பதைக்கண்டு, தானே இருபாகமாகப் பிரிந்து அவற்றிலிருந்து பிள்ளைகளையும் பெண்களையும் சிருஷ்டித்து, பெண்களை மரீசி முதலியோருக்குக் கொடுத்தார். அவர்களால் தேவாஸுரர்கள் உண்டாக, பிரபஞ்சம் ஒருவாறு உருவகப்பட்டு இப்பொழுதிருக்கும் நிலையை அடைந்ததாம்.

நண்பர்களே! தோற்றமாத்திரத்தில் அநீதியாய் இருக்கும் இக்கதையுள் அடங்கி இருக்கும் அரிய விஷயத்தைப் பாருங்கள்! மேலெழுந்தவாரியாய் நுனிப்புல் மேயும் குணமுடைய ஆத்திகக்காரர்கள் அவஸரப்பட்டு இம்மாதிரியான விஷயங்களில் தமது அபிப்பிராயங்களை வெளியிடாது சற்று நிதானித்துப் பார்க்கட்டும்! அவர்கள்மாத்திரம் ஸூக்ஷ்மமாய் நிதானித்து விசாரித்துப் பார்ப்பார்களேயானால், அநிவினோதமாய்க் காணப்படும் புராண கதைகளில் மறைந்து கிடக்கும் வேதரகஸியங்கள் அவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கி, அவர் மனதில் குடிகொண்டிருக்கும் அஞ்ஞானாந்தகாரத்தைப் போக்கி, அவர்களை எளிதில் மோக்ஷமடையும்படி செய்யும் என்பதற்குச் சந்தேகமில்லை.

ஹிந்தி

HINDI

ஹிந்தி என்பது ஹிந்துக்களால் பேசப்படும் பாஷை யென்று பெயர். இது உத்தர இந்தியாவில், கண்டகீ நதிதீரம் முதல் சதத்ரு (Satlej நதிதீரம் வரையிலும், ஹிமயமலை முதல் விந்திய மலை வரையிலுமுள்ள சுமார் 2½-லக்ஷம் சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள › ப்ரதேசங்களிலும்) தக்ஷிண இந்தியாவில், அநேக விடங்களில் சிற்சிலராலும் வழங்கப்பட்டு வருகின்றது. ஹிந்தியென்பது ஹிந்துக்கள் தவிர மஹமதியர்களும் விசேஷமாய்த் தாய்பாஷையாய் வழங்குகின்றனர். ஆனால் ஹிந்துக்கள் பேசும் ஹிந்தியைக் காட்டிலும், மஹமதியர் பேசும் பாஷையில், அராபி, பாரஸிக வார்த்தைகள் அதிகமாய்க் கலந்திருக்கும். மஹம்மதியர் பேசும் பாஷைக்கு உருது அல்லது ஹிந்துஸ்தானி என்று பெயர். உருது என்றால் ராணுவ (Camp) பாஷையென்றும், ஹிந்துஸ்தானி யென்றால் ஹிந்துஸ்தான் தேசத்தில் வழங்கும் பாஷையென்றும் பெயர். இலக்கணம் ஸம்பந்தப்பட்டமட்டில், ஹிந்துஸ்தானியும், ஹிந்தியும் அநேகமாய் ஸமமாயிருப்பினும், ஹிந்தியில் அதிகமாய் ஸம்ஸ்க்ருதச் சொற்கலப்பும், ஹிந்துஸ்தானியில் அதிகமாய் அராபி, பார்ஸீகச் சொல் கலப்பும் உண்டு. இலக்கணம் ஸம்பந்தப்பட்டமட்டில் இரண்டு பாஷைகளும் ஸம்ஸ்க்ருதபாஷையினின்று முண்டான ப்ராக்ருத பாஷையினின்றும் உண்டானவைகள்தான்.

இந்தியாவில் தற்காலத்தில், வழங்கிவரும் பாஷைகள், ஹிந்தி, பஞ்சாபி, ஸிந்தி, குஜராதி, மராதி, பங்காளி, ஊரியா, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், என்பவைகளே. இவற்றுள், கடைசி நான்கு பாஷைகளும் த்ராவிட பாஷைகள், இவைகள், ஸம்ஸ்க்ருத பாஷையின் உதவியில்லாமல் தனிப்பாஷைகளாய் இந்தியாவில் வெகுகாலமாயிருக்கின்றன. மற்ற பாஷைகளோ ஸம்ஸ்க்ருதபாஷையின் மறுஉகள்.

ஹிந்திபாஷையிலும், தேசபேதங்களுக்குத் தக்கவாறு சில வித்தியாஸங்களுண்டு. ஆனால், தற்கால இலக்கிய (literary) ஹிந்தியானது, மத்ரா ஆக்ரா ஜில்லாக்களிலும் டில்லியின் உபப்ரதேசங்(neighbourhood)களிலும், வழங்கிவரும் வ்ரஜபாஷை யென்பதையே தாய்பாஷையாய்க் கொண்டமைந்ததென நிர்ணயிக்கப்படுகின்றது. இலக்கண அமைப்புக்கள், வ்ரஜபாஷையினின்றும், சொற்கள் ஸம்ஸ்க்ருதம், ப்ராக்ருதம், ஆரபி, பாரஸிகம், கொஞ்சம் துருக்கி பாஷைகளினின்றும் ஸ்வீகரித்துக்கொண்டு உண்டான பாஷையே ஹிந்திபாஷை. வ்ரஜ பாஷையென்பது மேற்கண்ட பிரதேசங்களில் வழங்கிவந்த ப்ராக்ருத பாஷை. ப்ராக்ருத பாஷையோ ஸம்ஸ்க்ருத பாஷையின் மறுஉ. ஆதலால் ஹிந்திபாஷையானது, ஸம்ஸ்க்ருதபாஷையை மூலாதாரமாய்க் கொண்டு, இன்னும் ஆர்ய பாஷையாகவே வழங்கிவருகின்றது.

ஹிந்தி பாஷையின் சரித்திரம்

வேதபாஷை:—ஆதியில் சரித்திரத் துவக்க காலத்தில் நமது முன்னோர்களாகிய ஆர்யர்களால், வழங்கப்பட்டுவந்தபாஷை வேதபாஷையெனவும், அது இப்பொழு(து) ரிக்வேதாதி வேதங்களில் உபயோகிக்கப்பட்டிரு(க்)கும் பாஷைதானெனவும் தெரிகின்றது.

ஸம்ஸ்க்ருதபாஷை.—பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு வேதபாஷையானது பேசும் பாஷையல்லாமற் போனவுடன், ஸம்ஸ்க்ருத பாஷையே பேசும் பாஷையாய் வழங்க ஆரம்பித்தது. இதுதான், நிருக்த நிபுணரான யாஸ்காருடையவும், வையாகரணிக ச்ரேஷ்டரான பாணினிமஹரிஷியினுடையவும் காலம். இவர்கள் தங்கள் க்ரந்தங்களில், வழக்கிலில்லா வேதபாஷையை மந்த்ரம், சந்தஸ், முதலான பெயர்களாலும், அவர்கள் காலத்தில் பேசிக்கொண்டிருந்த ஸம்ஸ்க்ருத பாஷையை 'பாஷை' என்ற பெயராலும் விவரித்திருக்கின்றனர்.

இவர்கள் காலமானது பௌத்தர் காலத்துக்குக் குறைந்தது 4, 5 நூற்றாண்டுகளுக்கு முன்னிருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்படுகின்றது.

ப்ராக்ருத பாஷை.—கி. மு. 543-ல் பௌத்தமதஸ்தாபனாசாரியான, புத்தர் நிர்வாணமடைந்தாரென்றும், அவர் 80-வயதிருந்தாரென்றும் தெரியவருகின்றது. ஆகையால், அவருடைய உபதேச காலமான கி. மு. 6-ம் நூற்றாண்டில், ஸம்ஸ்கிருத பாஷையானது வழக்கிலில்லையென்றும், ப்ராஹ்மணர்களாலும், வித்வான்களாலுமாத்திரம் ஏகதேசத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வந்ததென்றும் தெரிகின்றது. பௌத்தருடைய உபதேசங்களெல்லாம் பெரும்பான்மை 'மாகதி' என்ற ப்ராக்ருத பாஷையிலேயே செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் பௌத்தமத க்ரந்தங்களும், அப்பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. *

மேற்கூறியவாறு ஸம்ஸ்கிருதம் வழக்கினின்றும் மறைந்தவுடன், அதன் மறுவான ப்ராக்ருத பாஷைகள் பேசும் பாஷைகளாய் ஏற்பட்டன.

ப்ராக்ருதபாஷைகள்

(1) மஹாராஷ்ட்ரீ
(2) ஸௌரஸேனி
(3) மாகதீ
(4) பைசாசீ
(5) அபப்ரம்சம்

என 5 வகுப்புக்களாகப் பிரிந்துவிட்டன. இவ்வைந்து விதப் பாஷைகளும் கி. மு. 2-வது நூற்றாண்டுகளுக்கு முன் முதல் எழுதப்பட்டுள்ள நாடக க்ரந்தங்களில், பல பல பாத்திரங்க(characters)ளால் உபயோகிக்கப்பட்டன. எப்

* குறிப்பு.—மகத தேசத்தை யாண்ட மௌர்ய வம்சத்தாசனான அசோகன் காலத்தில் (அதாவது கி. மு. 259-ல்) பௌத்தமத ஸ்தம்பங்கள், சாஸனங்களெல்லாம் எழுதப்பட்டதும், சிங்களதேசத்து பௌத்த க்ரந்தங்களும் பாலி பாஷையென்றும், அதுதான், மாகதீ பாஷையென்று சிலரும், அது மாகதீயின் மறுஉ என்று சிலரும், மாகதீதான் பாலியின் மறுஉ என்று சிலரும் அபிப்ராயப்படுகின்றனர்.

படியிருப்பினும், அக்காலத்தில் ப்ராக்ருதந்தான் வழக்கு பாஷையென்று நன்றாய்த் தெரிகின்றது.

இவைகளில், மாகதீ என்பது மகத தேசத்திலும், ஸௌரஸேனீ என்பது, தற்கால மத்ரா, ஆக்ரா ஜில்லா ப்ரதேசங்களிலும் மஹாராஷ்ட்ரீ என்பது மாலவம் முதலான தேசங்களிலும், பைசாசீ, அபப்ரம்ச பாஷைகள் அநாகரீகர்களான பூர்வ குடிகளாலும், ம்லேச்சர்களாலும் வழங்கி வந்தன.

மேற்கூறிய ப்ராக்ருதபாஷைகளெல்லாம்பேசும் பாஷைகளாய் க்றிஸ்தவ காலம்வரை யிருந்தனவென்று மிருச்சகடிகை முதலான அக்காலத்து நாடக க்ரந்தங்களாலும், அதற்குப்பிறகு அவைகளின் மாறுபாட்டால், வேறு பேசும் பாஷைகள், ஜன்யபாஷைகளாய் உண்டானவுடன், அப்ராக்ருதபாஷைகள் நாடகாதி நூல்களில் உபயோகிக்கமாத்திரம் பயன்படக்கூடிய இலக்கிய (literary) பாஷைகளாய் விட்டனவென்று பிற்பட்ட நாடகாதி க்ரந்தங்களாலும் தெரியவருகின்றது. இம்மாறுபாடுகளின் காலவரையைத் துல்யமாய்க் கணிப்பதும் இக்நிலமையில் மிகக் கடினமானது.

ஹிந்துவிபாஷை

* முன்கூறிய ஐவகை ப்ராக்ருத பாஷைகளில், ஸௌரஸேனி யென்பது ஒன்று. அது ஸௌர ஸேனர்களால் பேசப்பட்ட பாஷையென்று பெயர். அது ஆக்ரா, மத்ரா ஜில்லாக்களிலும், டில்லியின் உப்ப்ரதேசங்க (neighbourhood)ளிலும், க்றிஸ்தவகாலம்வரை வழங்கி வந்தது. அப்பாஷையின் ஓர் பிரிவு வ்ரஜ பாஷை யென்பது. வ்ரஜபாஷையென்றால் இடையர்கள், அல்லது யாதவர்கள் (Shepherds) பாஷையென்று பெயர். இது முக்கியமாய், மத்ரா கோகுலம், பிருந்தாவன ப்ரதேசங்களில் வழங்கப்பட்டு வந்தது. இதுதான் ஹிந்துவி பாஷைக்குத் தாய்பாஷையென்று, உபயபாஷைகளின் இலக்கணம் முதலான அமைப்பு (structures) களை யாராய்ச்சி செய்த நிருத்தநிபுணர் (Philologists and linguists) களால் ஊகிக்கப்படுகிறது.

ஹிந்துவி பாஷையானது கி. பி. 8-ம் நூற்றாண்டுவரை, அன்யபாஷைச்சொற்களின் கலப்பு யாதொன்றுமில்லாமல், சுத்தப்ராக்ருத, ஸம்ஸ்க்ருத பதங்களோடு மாத்திரம் கூடியதாயிருந்தது. பிறகு மஹமதியர்கள், வடமேற்கு ப்ரதேசங்கள் வழியாய் இந்தியாமேல் அடிக்கடி படையெடுத்து வந்து, இந்த தேசத்தைக் கொஞ்சங்கொஞ்சமாய் ஸ்வாதீனம் செய்துகொள்ள ஆரம்பித்ததுமுதல், சுத்தமான ஹிந்துவி பாஷையில், ஆரபி, பாரஸீகம், துருக்கிச்சொற்கள் கலக்க ஆரம்பித்தன. இவ்வாறு சிறிது காலம் சென்றது.

ஹிந்திபாஷை

தற்காலத்தில் வழங்கும் ஹிந்தி பாஷையானது மேற்கூறிய சுத்தஹிந்தியினின்றும் உண்டானது. இது கி. பி. 11-வது நூற்றாண்டு முதல் ஆரம்பம் என்று, அக்காலத்தில் எழுதப்பட்ட, சந்த் என்பவரின் 'ப்ரதிவிராஜ்-ரஸம்' என்ற காவ்யத்தாலும் இன்னும் பல வைஷ்ணவ க்ரந்தங்களாலும் வெளியாகின்றது. 11-வது நூற்றாண்டுகளுக்குமுன், அதன் சரித்திரம் நன்றாய்த் தெரியவில்லை.

இதுமுதல் ஹிந்தி பாஷையின் அபிவிருத்தியானது நான்கு பாகங்களாய் (Stages)ப் பிரிக்கப்படலாம்.

(1) பூர்வ ஹிந்தி (Early Hindi) 1200—1570. இக்காலத்தில் எழுதிய நூல்கள்.

சந்த் என்பவர் எழுதிய 'பிரிதிவிராஜ்ரஸம்' ராமானந்தர், ஜயதேவர், ராமதேவர், கபீர் முதலான வைஷ்ணவ பாகவதர்களின் க்ரந்தங்கள்.

(2) மத்ய ஹிந்தி 1570—1750. கேசவதாஸ், பஹ்ரினால், துளஸிதாஸ் (ராமாயணம்) முதலான ப்ரஸித்தர்களான ஹிந்திக்கவிகள் இக்காலத்தைச் சேர்ந்தவர்கள்.

* குறிப்பு:—தற்காலத்தில் பேசும் பாஷைகளாய் வழங்கிவரும், பஞ்சாபி, ஸிந்தி, குஜராதி, மராதி பங்காளி, ஒரியா முதலான பாஷைகள், மேற்கூறிய ப்ராக்ருதங்களில் ஒவ்வொன்றின் மருவுகளாய் இருக்கின்றன.

(3) உருது அல்லது ஹிந்துஸ்தானியின் ஆரம்பம்.

இதுவரை, ஜயித்தவர்களான மகம்மதியர்கள், ஆரபி, பாரஸிகம், துருக்கி முதலான பாஷைகளையும் ஜயிக்கப்பட்ட ஹிந்துக்கள் ஹிந்தியையும் பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க 16-வது நூற்றாண்டின் இறுதியில் டில்லியில் அரசாண்ட மோகல் சக்ரவர்த்தியான அக்பர் காலத்தில் நடந்த ஓர் தர்பாரில், பல தேசத்துச் சிற்றரசர்கள் விஜயம் செய்தார்கள். அப்பொழுது அவர்கள் பற்பல பாஷைகள் பேசுவதையும், அவர்கள் பரஸ்பரம் தாராளமாய்ச் சம்பாஷிக்கச் சக்தியற்றுத் தவிப்பதையும் கவனித்த அக்பர் சக்ரவர்த்தி, ஸர்வ தேசத்தாரும் பேசும்படி ஓர் பொது பாஷை யுண்டுபண்ணக் கருதினர். இதுதான் ஹிந்துஸ்தானி யல்லது உருது பாஷை யென்று பெயர். உருது என்றால் ராணுவம், படை (Camp) என்றருத்தம். இப்புதிய பாஷை அக்பர் காலத்தில் துவங்கினாலும், அன்னவர் பேரனை ஷாஜகான் காலத்தில்தான் விசேஷப் பயிர்ச்சி யடைந்தது.

(4) இயல்ஹிந்தி (Prose literature) ஈஸ்ட் இந்திய கம்பெனியார் இந்தியாவில் வர்த்தகம் செய்ய ஆரம்பித்த பிறகு, கொஞ்சம் கொஞ்சமாய் இந்தியாவில் தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்துக் கல்கத்தாவில் தங்கள் ராஜதானியேற்பட்டபிறகு, அநேக ஹிந்துஸ்தானி பாஷைக்காரரை வரவழைத்து ராஜாங்கம், வ்யாபாரம், ந்யாயாதிகாரம், ராணுவம் முதலான சகல கார்யங்களையும், அப்பொழுது தேசபாஷையாய் வழங்கிய ஹிந்துஸ்தானி பாஷை மூலமாகவே நடத்திவரத் துவங்கினார்கள். இக்காலத்தில் ஹிந்துஸ்தானியின் நடை (Prose) யானது விசேஷமாய்ப் பயிர்ச்சியடைந்தது.



இலக்கண அமைப்பு
Grammatical Structures

ஹிந்திச்சொற்கள் பொதுவாக மூன்று வகுப்பாகப் பிரிக்கப்படலாம் :

1. ஸம்ஸ்க்ருதத்தினின்றும் மறுவு அன்னியில் நேரே வந்த சொற்கள்.

உதாகரணம்:—ராஜா, பிதா, காமீ, நாகரீ (பட்டணத்தான்), கர்ம (=தொழில்), கார்ய, க்ரோத (क्रोध=கோபம்).

2. ப்ராக்ருத பாஷை மூலமாய் மறுவாய் வந்த சொற்கள். உதாகரணம்: —

ஸம்ஸ்க்ருதம்	ப்ராக்ருதம்.	ஹிந்தி.	அர்த்தம்.
கர்ம்ம	கம்ம	காம் =	தொழில்
கர்ண	கன்ன	கான் =	காது
அஷ்ட	அட்ட	ஆட் (ठ) =	எட்டு
ஹஸ்த	ஹத்த	ஹாத் (थ) =	கை
வார்த்தா	வாத்தா	பாத்(बा) =	வார்த்தை
அத்ய (द्य)	அஜ்ஜ	ஆஜ் =	இன்று
அக்னி (ग्नि)	அக்கி (ग्गि)	ஆக் (ग) =	நெருப்பு
दुग्ध	दुग्ध	धूद =	பால்
फाल्गुन	फागुन	फागुन =	பங்குனி

(3) பூர்வகுடிகளின் வார்த்தைகளில் சில. உதாஹரணம்:—பக்ரி = தலைப்பா.

பெயர்ச்சொற்கள்.

பால் (gender) ஹிந்தி பாஷையில், ஆண்பால், பெண்பால் என இரண்டு பால்கள்தான். பொதுப் பால் (நபும்ஸகலிங்கம் = neuter gender) என்பது ஹிந்தி பாஷையில் கிடையாது. ஆகையால், மற்ற பாஷைகளில் நபும்ஸகலிங்கமாய் விளங்கும் சொற்கள் ஹிந்தியில் ஆண்பால், அல்லது பெண்பாலாய் இருக்கும். இது யாதொரு விதிக்கும் உட்பட்டவையல்ல. ஆதலால் ஹிந்தி பாஷையில், ஒரு பதத்தின் பால், அனுபவத்தால் அறியவேண்டுமேயொழிய யுக்தியால் அறியத் தக்கதன்று.

ஆயினும் சில பொதுவிதிகள்.

(1) ஆணினம், ஆண்பாலாயும், பெண்ணினம் பெண்பாலாயும் இருக்கின்றன.

லட்(ड़)கா = பையன், லட்கீ = பெண்.
சோக்ரா = பையன் சோக்ரீ = ,,
பே(बे)டா = மகன் பேடீ = மகள்.

(2) 'ஆ' அந்தமாயுள்ள சொற்கள் பொதுவாய் ஆண்பால்கள். உதாகரணம்:—

ஜாடா (ड़ा) = மாரிகாலம்
லோடா = பாத்திரம்
घड़ा(கடா) = குடம்,

(3) ஆவ், பல், பா, த்வ, விகுதியுள்ள சொற்கள், ஆண்பால்களா யிருக்கின்றன. உதாகரணம்:

சடா (ढा) வ் = ஓட்டம் (flow)
லட் (ड़) கபன் = சிசுத்துவம் (childhood)
பு (ढ़ा) டாபா = கிழமை
மனுஷ்யத்வ = மனிதத்தன்மை

(4) மலைகளின் பெயர்கள். ஆண்பால்கள். நீலகிரி, ஹிமாலய.

(5) மாதம், நாட்களின் பெயர்கள். சைத்ர, சனிவார.

(6) 'ஈ' அந்தமாயுள்ள சொற்கள் பெண்பால்கள். ரோடீ = ரொட்டி; டோபி = தொப்பி; குர்ஸீ = குறிச்சி.

ஆனால் (द) தஹீ = தைர், மோதீ = முத்து. பாணி = ஜலம், ஜீ = மனது—இவைகள் ஆண்பால்கள்.

வசனம்
Number

ஹிந்தி பாஷையில் ஒருமை (Singular) பன்மையென இரண்டே வசனங்களுண்டு. ஸம்ஸ்க்ருதபாஷையிற்போல இருமை (Dual = த்விவசனம்) கிடையாது.

வேற்றுமை (case)

ஹிந்தி பாஷையில் ஏழு வேற்றுமைகளும், 8-வது விளிவேற்றுமையு முண்டு.

1-ம் வேற்றுமை—			
2-ம்	,,	கு	= ஐ
3-ம்	,,	னே, ஸே	= ஆல்
4-ம்	,,	கு, கேலியே	= கு
5-ம்	,,	ஸே	= இருந்து
6-ம்	,,	கா, கீ, கே	= உடைய
7-ம்	,,	மே, பர்	= இல்
8-ம்	,,	ஹே, ரே, அரே = ஏ!	

உண்மையான ஸாது, வேஷதாரி ஸாது.—ஆகாயத்திற் பறக்க விடுகிற லக்ஷங் காற்றாடிகளுக்குள்ளே, ஒன்றிரண்டு மாத்திரந்தான் கயிற்றை அறுத்துக் கொண்டு சுயேச்சையாய் ஸஞ்சரிக்கின்றன. அவ்வாறே முக்தியைத்தேடும் நூற்றுக்கணக்கான ஸாதகர்களுக்குள்ளே ஒருவரிருவர் மாத்திரமே இவ்வுலக பந்தத்தினின்றும் நீங்கிவீடு பெருகின்றனர்,

ராபர்ட்—ஸிஸிலி அரசன்
ROBERT, KING OF SICILY

1. சிறப்பு விளங்கிய ஸிஸிலி தேசத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் பெயர் ராபர்ட். பரம்பரையாக ஏராளமான செல்வமும், கீர்த்தியும், செல்வாக்கும் உடையவன். எப்போதும் தற்பெருமை ஒன்றையே விரும்பி யிருக்கக் கூடியவன். தன் குடிமக்கள் இடத்தில் வெகு அன்புள்ளவன். நீதிமான். சில அருமையான குணங்கள் அவனிடத்தில் குடிகொண்டு இருந்தன. எவரையும் சோம்பல் இன்றித் தங்கள் தங்கள் தொழில்களை ஊக்கமுடன் நடத்திவரச் செய்வான். அன்னியர் இன்ப துன்பங்களைத் தனது என்று கொள்கின்றவன். பொதுவாக எவற்றையும் தளர்ச்சி யுண்டாகாது இருக்க எண்ணுபவன். அதனால், ஜனங்கள் ஒற்றுமையோடு கீழ்ப்படிந்து இருந்து நன்மை அடைவார்கள். அவன் நாடும், அரசும் நாளுக்கு நாள் செழிப்பு அடைந்து யாதொரு குறைவின்றி ஓங்கி வளர்ந்து வந்தன. கண்டவர் எவரும் அரசன் வெகு நல்லவன் என்று புகழ்ந்து கொண்டாடி வருவார்கள். அவனுக்கும் கடவுள் சோதனையால் செல்வச் செருக்கும், டம்பாகாரமும், அற்பப் பொருள்களின்மேல் இச்சை அதிகமும் கொழுந்து விட்டுக்கொண்டு வரத் தலைப்பட்டன. குணம், வீரம், அழகு, சாந்தம், சமத்காரம் முதலிய குணங்கள் நிறைந்த இரண்டு சகோதரர்கள் அவனுக்கு உண்டு. அவருள் ஒருவன் அலிமேன் தேசத்து மஹா சக்ரவர்த்தி. மற்றவன் ரோம் பட்டினத்து அர்பேன் போப்.

2. ஒருநாள் சுமார் மாலை மணிநாலுஇருக்கும். அவன் வழக்கம்போல் பிரஜைகள் யாவரும்போய் தொழுதுவரும் கோயிலுக்குப்போக எண்ணிச் சென்றான். மந்திரிகள், பிரதானிகள், கனவான்கள், சிப்பாய்கள் முதலிய பிரஜைகளும் பின் சென்றார்கள். குருக்கள்மார் எப்போதும் கோயில்களில் உண்மையாகவும் பணிவாகவும் சாஸ்திரயுக்தமாகவும் மந்த்ரம் ஜபிப்பாரோ இல்லையோ! ஆயினும் சர்வ அதிகாரம் உடைய அரசர்கள் கோவிலுக்குள்சென்றால், அவர்கள் ஜபிப்பது வெகு ஆடம்பரமாக இருக்கும் அல்லவா? அதைப்போலவே, அக்கோயிலில் இருந்த குருக்கள்மார் யாவரும் ஒருங்கு சேர்ந்து பயபக்தி விசுவாசத்தோடு மிகுந்த பணிவாக-மாக்னிபிகட்-என்ற தேவ கீர்த்தனத்தைப் பாடினர். இயற்கையாகவே, ஒரு கீர்த்தனம் பாடப்பட்டால் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்று மூன்று பகுதியின் கடைசியில் பல்லவி அடிக்கடிவரும். அவ்வாறே அவர்கள் லத்தீன் (Latin) பாஷையில் பாடிய பல்லவி அடிக்கடி ராபர்ட் அரசன் கேட்டான். லத்தீன் பாஷையில் அவைகள் கூறப்பட்டமையால் அவனுக்கு 'அர்த்தம்' விளங்கவில்லை. சமீபத்தில் இருந்த ஒருவனைக் கூப்பிட்டு, "அடிக்கடி வரும் பல்லவியின் பொருள் என்ன!" என்றான்.

3. அவனும் பணிவாக இருந்து அரசே! ஸர்வவல்லபரான கடவுள் ஒருவனை உயர்ந்த ஸ்தானத்தில் வைப்பதற்கும், அந்த உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவன் கர்வப்பட்டால் அவனைத் தாழ்ந்த ஸ்தானத்தில் தள்ளுவதற்கும் சக்தி யுண்டு. வாழ்க்கை யாவும் அவராலே உண்டாகிறது. இப்படியேதான் பைபிலும் கூறுகின்றது," என்று சவிஸ்தாரமாகச் சொன்னான்.

4. இதைக் கேட்டதும் ராபர்ட் மனம், காய்ந்த சட்டியில் விட்ட வெண்ணெய்போல் ஆயிற்று. தன்னாலேயே எல்லாம் உண்டாகிறதே யன்றித் தேவனால் என்ன காரியம் ஆகும் என்று தடிப்பேறி கர்வமுங் கோபமுங் கொண்டான். ஹா! இது என்ன பேதமை. இப்படிப்பட்டவர்களும் உலகில் பலர் இருக்கின்றனர். இவர்கள் இம்மாதிரி பிதற்றுவது லத்தீன் பாஷையில் இருப்பது எவர்க்கும் நல்லது தான். என் என்றால், அந்தப் பாஷையில் இருப்பதால் ஜனங்கள் அர்த்தம் பண்ணிக்கொள்ளத் தெரியாது. நம் பாஷையில் இது இருக்குமே யானால் அர்த்தமும் செவ்வையாய்த் தெரியும். அதனால் பல குடிகள்கெடும். எங்கும் சோம்பேறிக் கூட்டங்கள் நிறைந்திருக்கும். நம்மை நம் உன்னத ஸ்தானத்தில் இருந்து தள்ளுவதற்குக் கடவுளாலுஞ் சரி, மற்று எவராலும் சரி முடியாது" என்று பெருமூச்சு எறிந்து அங்குள்ளவர் உள்ளங் கலங்க விளங்கித் தன் நாற்காலியில் உட்கார்ந்தபடியே சாய்ந்து படுத்தான். தெய்வ அருளால் நித்திரையும் வந்தது. தன்னையும் மறந்து உறங்கினான்.

5. வெகுநேரங் கழித்து விழித்தான் மன்னன். அக்கோயிலில் மூலைக்கு மூலையில் மினுக், மினுக் என்று சிறு தீபங்கள் தவிர வேறு ஒன்றும் காணப்படவில்லை. தன்னோடு வந்த பிரஜைகள் எங்கு சென்றார்களோ! 'என்ன விபரீதம்!' என்று ராபர்ட் திகைத்தான். கதறினான். கூக்குரலிட்டான். அந்தோ! ஒன்றையும் காணகிலன். என் செய்வான். தன்னைத்

தானே தடவிக்கொண்டான். கிரீடத்தை யாரோ எடுத்துச் சென்றனர். தான் உடுத்தி இருந்தது இன்ன உடுப்பு என்று தனக்கே அவ்விருட்டில் தெரியவில்லை எழுந்து வெகு விரைவாக நான்கு மூலைகளையும் தடவிக்கொண்டே வாசற்படியண்டை வந்து பெருஞ் சத்தம் இட்டான். கதவு பூட்டப்பட்டு இருந்தது. அது அவனிடம் பட்ட உதை இவ்வளவு அவ்வளவு அல்ல. மணியும் இரவு இரண்டாயிற்று. சத்தமும் அடங்கி விட்டது. பிறகு யாரோ ஒருவன் அவ்வழியே போகையில் இவன் சத்தத்தைக்கேட்டுத் திடுக்கிட்டு நின்று நிதானித்தான். யாரோ திருடன் கோயிலுக்குள் அகப்பட்டுக்கொண்டு வெளியே வர வழியில்லாமல் கதறுகின்றான். ஐயோ! பாவம்! எங்கேயாவது போய் பிழைத்துப்போகட்டும் என்று எண்ணிக் கதவைத் திறந்து விடுவித்தான்.

6. அதற்குப் பின்னர் ராபர்ட், தனது அரண்மனையை நினைந்து விரைவாகப் போய்ச்சேர இரண்டு அடியில் ஓடிவந்தான். தாண்டினன் பல வேலிகளை. பார்த்தவர் யாவரும் "யாரோ? வெறி பிடித்தவன்" என்று எண்ணினார்கள். அனேகக் கூடங்களைக் கடந்தான். ஒரே ஓட்டமாக மாடிமீதேறினான். தனது அறையைச் சேர்ந்தான். அந்தோ! அப்பொழுது அவன் அடங்காக் கோபங்கொண்டான்.

அந்த அறையில் வேறு யாரோ ஒருவன் இவன் உடுப்பை உடுத்திக்கொண்டு இவன் சிம்மாஸனத்தில் உட்கார்ந்திருக்கக் கண்டான்.

7. அச்சிம்மாஸனத்தில் உட்கார்ந்திருந்தவன் தேவதூதன். ராபர்ட்டின் கர்வத்தை யடக்கிப் புத்தி கற்பிக்க வந்தவன்.

ராபர்ட் அத்தூதனைக் கண்டவுடன் அடே! "நீயாரடா!" என்று சண்டையிட ஆரம்பித்தான். சமீபத்திலிருந்த சேவகர்கள் அவனை உதையுதைக்கப் போனார்கள். தேவதூதனுக்கோ அவனை அடிக்க இஷ்டமில்லை. ஆகையால் அடிப்பவர்களைக் கண்டித்தான்.

8. அதுமுதல் ராபர்ட்டை அத்தேவதூதன் தனது அரண்மனை வாசலிலே எச்சிலைப்பருக்கையை உண்டு, கழுத்தில் மணியும், வேடிக்கையான பல கிழிந்த வர்ண உடுப்புகளையும் அணிந்துகொண்டு, விதூஷகனாக இருக்க உத்தரவு தந்தான்.

9. இவன் தேவதூதன் ஆனபடியால் ராபர்ட்டைப் போலவே எத்தன்மையினு மிருந்தான். ஆகையால் ஜனங்கள் இவனையே தங்களது உண்மையான அரசன் என்று நம்பி, ராபர்ட்டை மோசஞ்செய்யவந்த பாபி அவன் என்று பரிகசித்தார்கள்.

10. பிறர் பார்க்க வெகு வேடிக்கையாயிருந்த ராபர்ட்டைக் காணும் சமயமெல்லாம், தேவதூதன், "அப்பா! நீ இன்னும் இவ்வூர் அரசன் தானோடா!" என்பான். அவனும் 'ஆம்! அரசன்தான்' என்று கர்வமாய் பதில் சொல்வான்.

11. இப்படி இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தன. ராபர்ட்டை யழைக்க அலிமேனிலிருந்து தூதர்களில் பலர் வந்தார்கள். ரோமில் ஞாயிற்றுக்கிழமையதினம் திருவிழாவிற்கு வந்த அவர்களைப் போலி ராபர்ட் எதிர்கொண்டு அழைத்து வெகுவாக உபசரித்தான். ஒருநாள், தேவதூதன் வந்த தூதர்களையும் உடன்கொண்டு ரோமிற்குப் புறப்பட்டான். ராபர்ட்டும் வெகு வேடிக்கையாகச் சிங்காரித்துக்கொண்டு ஒரு கழுதையின்மீதேறி பின்றொடர்ந்தான்.

12. இப்படி இவர்கள் வருவதைக் கண்ட ஆர்பேன் போப்பு எதிர்கொண்டு, போலி ராபர்ட்டைத் தனது உண்மைத் தம்பி யென்று ஆசீர்வதித்துத் தழுவ வந்தான். இப்படித் தழுவுவதைக் கண்ட ராபர்ட் வெகு கோபம் கொண்டு ஜனங்களை இடித்துத்தள்ளி, தனது அண்ணனிடம் வந்து, 'அண்ணா! நானே உனது உண்மைத் தம்பி. அவன் யாரோவொருவன்' என்று சொல்லி யழுதான். பிரயோஜனமில்லை. எல்லாரும் இப்பைத்தியக்காரனை ஒரே பிடியாய்ப் பிடித்து எல்லாருக்கும் பின்னால் தள்ளிவிட்டார்கள்.

13. ரோமில் வெகு வேடிக்கையாய் திருவிழா நடந்தேறியது. ஒருவாரகாலமும் ஒரு நிமிஷம்போலக் கழிந்தது. அவ்வூர் அடைந்த சிறப்பைச் சொல்ல முடியாது. சாஸ்த்ரோக்தமாகவே யாவும் ஒழுங்காய் நடந்தன. தேவதூதனே அந்த ரோமில் இருப்பதால், தெய்வலோகமே அதுவோ என யாவரும் ஸந்தேகித்தார்கள்.

14. ஒருவாரம் கழிந்ததும், அங்கு வந்த அரசர்கள் யாவரும் தத்தம் ஊருக்குத்திரும்பிச் சென்றார்கள். தேவதூதனும் ராபர்ட் முதலியவர்களும் தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள்.

15. தங்கள் ஊர் ஆற்றங்கரையண்டை அவர்கள் வந்து சேர்ந்ததும், தேவதூதன் ராபர்ட்டைப் பார்த்து "ஹே! ராபர்ட்! இன்னும் ஸிஸிலிதேசத்து அரசன் நீதானா! இன்னமுங் கர்வம் அடங்கவில்லையா!" என்று நயமாகக் கேட்டான். உடனே ராபர்ட் பின்வருமாறு சொன்னான்:—

16. "ஹே! அரசே! நின்னை இப்பொழுதுதான் நான் முழுதும் அறிந்துகொண்டேன். எனக்குப் புத்தி கற்பிக்க வந்த தேவா! சரணம்; மூவா சரணம்! எனது குற்றங்களை க்ஷமித்து இன்றுமுதல் நான் சந்நியாசிக்குத் தொண்டுசெய்ய உத்தரவு தாருங்கள். இதுவரையில் ஸர்வசக்தி நம்மிடத்தில் இருக்கின்றதென்று கர்வித்திருந்தேன். மன்னிக்க!" என்றான்.

இப்பொழுதுதான் ராபர்ட்டுக்குக் கர்வம் நீங்கிப் புத்தி வந்தது. தேவதூதனும் உடனே தான் இன்னான் என்று வெளிப்படுத்தினான். ராபர்ட்டின் முகத்தை எறிட்டுப் பார்த்து புன்சிரிப்புகொண்டு எவையும் ஆய்ந்து ஓய்ந்து பார்க்கவேண்டும். அது உன்னிடத்தில் இல்லை. நான் என்கிற செருக்கு மூடி அல்லவா இவ்வளவு கஷ்டப்பட நேர்ந்தனை. கெர்வங் கொண்டவர்களைத் "தெய்வமே நின்று ஒறுக்கும்" என்பதை மறந்தாயே. இம்மட்டோ!

17. ஸர்வ வல்லபம், ஸர்வ வியாபகம், ஸர்வசக்தி முதலிய விசேஷத் தன்மைகள் எங்கு இருந்து உண்டாகின்றன. அணுப்பிரமாணமுள்ள மணல், கல் முதலியவைகள் தானே உண்டாகின்றனவா! பூமி, கடல், சந்திரன் சூரியன் நட்சத்திரங்கள் யாருடைய ஆணையால் நிலைபெற்றிருக்கின்றன. அவற்றின் குணங்களாகிய வெப்பம், குளிர்ச்சி, காற்று எவ்விதத்தால் இயங்குகின்றது. மனிதர்களும், உருவம், அறிவு, ஞானம் புத்தி, செல்வம் முதலிய பொருள்களும் எப்படிப் பெற்று மகிழ்கின்றார்கள். மற்றைய வஸ்துக்கள் தோன்றி மறைவதை நீ அறியாய்போலும். எவருக்கும் கர்வம் என்பது கூடாது. அது இல்லாதவர்கள் கடவுள் தயவால் பூமியில் சகல பொருள்களையும் பெற்று அநுபவிப்பார்கள். முடிவில் சூரியன் உதயம், உச்சி, அஸ்தமனம் என்கிற பேதங்கள் இல்லாமல் இரவும் பகலும்போலவே இளங்கதிர் வீச, எங்கும் பொன்னிறம் கொண்ட இன்னொளி பெற்று விளங்கும் நன்னகரை அடைவார்கள். அவ்வூர், கண்டவர் மனத்திற்குக் களிப்பையூட்டும். அங்கு வசிக்கும் உத்தமர் நம்மைப்போல் ஆறுபருவங்கள் அறியாராகி, சதா சந்தோஷத்தைஉண்டாக்கும் மேலான பருவமாகிய வசந்தகாலம் ஒன்றையே அனுபவிப்பார்கள். அங்கு இடைவிடாது ஓடும் அமுத நதியால் போஷிக்கப்படுவார்கள். என்றும் வாடாத பரிமளமுள்ள நித்ய மலர்களைச் சூடி, வேண்டுவனவற்றைப் புசித்து அழியாத சுகத்தில் இருந்து வாய்மை, தெய்வபக்தி நன்மை இவைகளை ஆபரணமாகப் பூண்டு, உபகாரம், தயவு, அருள், அடக்கம் என்கிற சேனைகள் சூழ அரசு செலுத்தி வருவார்கள். அவர்களை உலகம் புருஷோத்தமர் என்று கொண்டாடும்.

எப்போதும் நீ அப்படிப்பட்டவர்களைப்போல் இருக்க நல்வழியில் நடக்கக் கர்வத்தை ஒழிப்பாயாக" என்று, தக்க புத்திமதிகளைச் சொல்லிவிட்டு மறைந்து போய்விட்டான். ராபர்ட்டோ! முன்போலவே நல்ல ஸ்திதிக்கு வந்து எல்லோராலும் நன்கு புகழப்பட்டான்.

18. ஆகையால் எவரும் (தெய்வமிகழேல்) என்னும் பெரிய வாக்கை அறிந்து கர்வங்கொள்ளல் ஆகாது. எப்போதும் கடவுளுக்குப் பயந்து அவன் அரசாட்சியின்கீழ் அடங்கி நடக்கவேண்டுமாக!

பண்டித S. வேலாயுத முதலியார்.

பிரிட்டிஷ் துரைத்தன ரீதி

THE BRITISH CONSTITUTION

அத்தியாயம் 4

பிரபுக்கள் சபை

House of Lords

பார்லிமெண்டு சபைகளில் பிரபுக்களின் சபையை மேற்சபை யென்றும், சாமான்னியர் சபையைக் கீழ்ச்சபை யென்றும் கூறுவது பதிவு இங்கிலாந்திலுள்ள பிரபுக்களின் சபையே, உலகத்திலுள்ள மற்றைய மேற்சபைகளைக் காட்டிலும் புராதனமானது. பழைய இங்கிலீஷ் அரசர்களின் அறிஞர் சபையையும், நார்மனியாருடைய அரச சபையையும் இது பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. என்றாலும் அதன் அமைப்பிலும் சங்கியையிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

பிரபுக்களின் சபையில் வீற்றிருக்கக் கூடியவர்களின் சங்கியை நிலையுள்ளதன்று. பிராசீனக் குடும்பங்கள் சந்ததியற்று அழிந்து போவதினாலும் புதிதாக அடிக்கடி பிரபுக்கள் சிருஷ்டிக்கப் படுவதினாலும் இம் மாறுதல் உண்டாகின்றது. இப்போது, அறுநூற்றிருபதுக்கு அதிகப்பட்டவர் பிரபுக்கள் சபையில் அங்கத்தினராக விருக்கின்றனர். அவர்களுள், ராஜகுமாரர்களும் பிரதம அத்தியக்ஷ குருக்களும், டியூக், மார்க்விஸ், ஏர்ல், விகௌண்டு, என்கிற பட்டதாரிகளும், அத்தியக்ஷ குருக்கள்மாரும், பாரன் என்ற பட்டதாரிகளும், ஐந்து நியாயாதிபதிப் பிரபுக்களும் அடங்கியுள்ளனர்.

வைதீகப் பிரபுக்களுக்கு வமிச பரம்பரை கிடையாதாகையால், அவர்களுடைய சங்கியை நிலையுள்ளதாகவே யிருக்கும். இரண்டு பிரதம அத்தியக்ஷ குருக்களும், இருபத்துநான்கு அத்தியக்ஷ குருக்களுமாக இருபத்தாறு வைதீகர்களே பிரபுக்கள் சபைக்கு வரலாமென்று விதி யேற்பட்டுள்ளது.

லௌகிகப் பிரபுக்களின் குடும்பங்களில் தலைவராக இருப்பவர்மட்டுமே, சபைக்கு வர லாயக்கானவர்கள். அவர்களுடைய உற்றார் உறவினர் என்ன பதம் பெற்றிருந்தாலும் பிரபுக்கள் சபைக்குவர உரியரல்லர். சாமான்னிய சபைக்குப் போக அருகராவார்.

மேற்சபைக்கு அடிக்கடி புதுப்பிரபுக்கள் வருவார்களென்று சொன்னோமல்லவா? இப்போதுள்ள பிரபுக்களில் பாதிப்பேர் சுமார் ஒரு நூறு வருஷங்களுக்கு முன் பிரபுத்துவத்தைக் கொண்டாடவில்லையென்றால், இவர்கள் தாதைகளும் மூதாதைகளும் சாமான்னிய

ராகவே யிருந்தனரென்பது சொல்லாமலே அமையும். நாட்டுக்கு நற்கருமங்கள் செய்தவர்களைக் கண்ணியப் படுத்தும்பொருட்டு, புதிய பிரபுக்கள் சிருஷ்டிக்கப் படுவார்கள். காலம்சென்ற டெனிஸன்கவி பாண்டித்தியத்துக்காகவும், ராபர்ட்ஸ், போரினில் வெற்றிக்காகவும், கொஞ்ச காலத்துக்குமுன் நமது செகர்டெரியாகவிருந்த விகௌண்டு மார்லி ராஜ்ய தந்திரத்துக்காகவும் பிரபுக்களாக வுயர்த்தப்பட்ட சங்கதி நமக்கு நன்கு தெரிந்ததேயாம். நியாய சாஸ்திரத்தில் பிரக்கியாதி பெற்றிருப்பவர்களை அப்பீல் பிரபுக்களாக நியமிப்பதுண்டு.

ஸ்காத்லாந்து தேசம் இங்கிலாந்தோடு 1707-ம் வருஷத்திலும், ஐர்லாண்டுதேசம் 1801-ம் வருஷத்திலும் ஐக்கியமாயின. அக்காலங்களுக்கு முன்னால் அந்தந்த் தேசங்களில் பிரபுக்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் மேற்சபைக்கு வர உரியரல்லர். ஸ்காத்லாந்திலிருந்து பதினாறு பிரபுக்களும் ஐர்லாண்டிலிருந்து இருபத்தெட்டுப் பிரபுக்களும் பிரதிநிதிகளாக வரலாம். ஸ்காத்லாந்திலிருந்து வரும் பிரதிநிதிப் பிரபுக்கள் ஒவ்வொரு பார்லிமெண்டுக்கு மட்டுமே நியமனம் பெறுவர். ஐர்லாண்டு பிரதிநிதிப் பிரபுக்களோ ஆயுள்வரையில் மேற்சபையில் வீற்றிருக்கலாம். இன்னும் இவர்கள் சாமான்னிய சபையங்கத்தினராகவும் வரலாம். இச்சுதந்திரம் ஸ்காட்லாண்ட் பிரபுக்களுக்குக் கிடையாது. அவர்களுடைய சங்கியையும் வரவரக் குறைந்துகொண்டு வருகின்றது.

அப்பீல் பிரபுக்கள் அனைவரும் ஆயுள்வரையில் பிரபுக்கள் சபையிலிருக்கலாம். இப்பதவி வமிச பாரம்பரியமாய் வருவதன்று. நியாயவிசாரணை செய்வதற்கு மாத்திரமே உள்ள இவர்களது பதவியைப் பற்றிக் கொஞ்சம் கூறப்படும்.

துரைத்தன நிர்வாகத்தில் கீழ்ச்சபையும் மேற்சபையும் காரியப் பொறுப்பை ஒருங்கே வகித்தபோதிலும், நியாய விசாரணை விஷயத்தில் மட்டும், மேற்சபைக்குப் பிரத்தியேகமான சுதந்தரம் ஏற்பட்டுள்ளது, வைதீக விஷயமாக வரும் வழக்குகளுக்குத் தனியே நியாயஸ்தலங்கள் ஏற்பட்டுள்ளன. இவைகளைத் தவிர மற்றெல்லா வழக்குகளையும் தீர்க்கும் நியாயஸ்தலங்களினின்றும், பிரபுக்களின் சபைக்கு அப்பீல் கொண்டுபோகலாம். சார்பு நாடுகளிலிருந்து வரும் அப்பீல்கள் பிரிவி கவுன்ஸிலின் நியாய ஸபையால் விசாரணை செய்யப்படுகின்றன. மேற்கூறிய அப்பீல்களை விசாரணை செய்வதற்கு, சம்பளம் பெற்ற நான்கு நியாயவாதிகள் பிரபுக்கள் சபைக்கு 1876-ம் வருஷத்தில் நியமனம் பெற்றனர். இப்படி நியமனம் பெறுபவர்கள் வேலையை ராஜி வைத்தபிறகும்கூட ஆயுள்வரையில் மேற்சபையில் வீற்றிருக்கலாமென்று 1887-ம் ஆண்டில் ஒரு சட்டம் பிறந்துள்ளது.

பிரபுக்கள் சம்பந்தமாக வரும் எல்லாச் சட்டங்களும் மேற்சபையிலேயே ஆரம்பமாகவேண்டும். மற்றுமுள்ள பொதுச்சட்டங்களும் அங்கு முதன் முதலில் கொண்டுவரப்படலாம். ஆனால் பணம் சேர்க்கவோ செலவிடவோ மட்டுமுள்ள மசோதாக்களும், சாமான்னிய சபையின் அமைப்பைப்பற்றிய சட்டங்களும் பிரபுக்கள் சபையில் ஆரம்பமாகக்கூடாது. சாமான்னிய சபையில்தான் ஆரம்பமாகவேண்டும். மற்றைய விஷயங்கள் பிரபுக்கள் சபையில் ஆரம்பமாகலாமானாலும், முக்கியமான மசோதாக்கள் இப்போது கீழ்ச்சபையிலேயே ஆரம்பமாகின்றன. சாமான்னிய சபையில் ஒரு விஷயம் நன்றாகத் தீர்மானிக்கப்படும் வரையில் அவ்விஷயத்தைப்பற்றிய பொதுஜன அபிப்பிராயம் எப்படியுள்ளதென்பது தெரியாமல் போய்விடுமென்பதே இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

மேற்சபையின் உபயோகம் என்னவெனில், அது சாமான்னிய சபையாருண்டாக்கும் சட்டதிட்டங்களைக் கவனித்து, அவைகள் கீழ்ச்சபையில் நியாயமாகவும் அவசரத்திலாகாமல் ஆழ்ந்த யோசனையுடனும் செய்யப்பட்டனவா என்பதைச் சூக்ஷிப்பதாம். சுருக்கிச் சொல்லுங்கால், மேற்சபையானது கீழ்ச்சபைக்கு ஒரு மேல்விசாரணைக்காரச் சபைபோலானது. ஆகவே, அபிப்பிராய பேதங்கள் நிகழும்போது இரு சபைக்கும் சச்சரவு ஏற்படுவதுண்டு. இச்சச்சரவுகளைச் சலீசாய்த் தீர்த்துக்கொள்வதற்காக, இரண்டு சபைகளிலிருந்தும் சில மத்தியஸ்தர்கள் கூடிப் பேசிக்கொள்வதுண்டு. இவ்வாறு, கூடிப் பேசிக்கொள்வதில் ஏற்பட்ட அசௌகரியங்களை நிவர்த்திக்கவேண்டி, ஒரு சபையார் தமது அபிப்பிராயங்களைக் கடிதமூலமாக மற்றொரு சபையாருக்கு அனுப்பும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றனர்.

சாமான்னிய சபையில் தீர்மானிக்கப்பட்டு, மேற்சபைக்கு அனுப்பப்பட்ட ஒரு விஷயத்தைப்பற்றி விஸ்தரித்துப் பேசவும் அதை நிராகரித்துவிடவும், பிரபுக்களுக்குப் பாத்தியமுண்டு. அவ்வாறே பிரபுக்களால் தீர்மானிக்கப்பட்ட விஷயம் ஒன்றைச் சாமான்னியரும் தள்ளிவிடலாம். மந்திரிமார்கள் காரியப் பொறுப்பைச் சரியாக நிர்வகிக்கவில்லை யென்பதாகக்

கீழ்ச்சபையில் ஒரு நிந்தைமொழி (vote of censure) தீர்மானமாகுமானால், மந்திரிமார்கள் உடனே ராஜி வைத்து விடுவது பதிவு. ஆனால் அதே மாதிரியான நிந்தை மொழி மேற்சபையில் தீர்மானமானால், அதை மந்திரிமார்கள் ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. மந்திரிமார்கள், சாமான்னிய சபைக்கு மட்டும் உத்தரவாதியாக விருப்பதே இதன் காரணம்.

பிரபுக்களின் சபையில் மகாராஜாவின் ஸ்ரீமுக பத்திரம் படித்துப் பார்லிமெண்டு மகாசபை ஆரம்பமாகும். மகாராஜாவோ அல்லது மேற்சபையின் அக்கிராசனாதிபதியாகிய சான்ஸலர் பிரபுவோ இதைப் படிப்பார். அக்காலத்தில், சாமான்னிய சபையார் தங்கள் தலைவனான "நாவலன்" உடன் பிரபுக்கள் சபைக்குப் போவார்கள். சாமான்னியர் அனைவரும் இருப்பதற்கு அங்கு இடம் இராததால் அச்சமயத்தில் சற்று நெருக்கடி நேர்வது சகஜம். ஆகவே, இஷ்டப்படுபவர் சிலர் மட்டுமே போவது பதிவு.

பார்லிமெண்டு சபை நடவடிக்கைகள் முழுவதும் நிர்பந்தமற்றிருக்க வேண்டுமென்றும், பேசுகிறவர்கள் தாராளமாகப் பேச இடமுண்டாகவேண்டுமென்றும் உத்தேசித்து வியவகாரம் தொடங்குமுன் அரசர் அச்சபையைவிட்டுப் போய்விடுவது வழக்கம். ஆதலால், பார்லிமெண்டில் அதன் நடவடிக்கைகள் துவங்கும்போது அரசர் இருப்பதேயில்லை. "உரோமப்பை" என்றுபெயருள்ளசிவந்த ஆசனம் சிங்காதனம் போடப்படும் இடத்திலிருப்பதால், அதன்மேலுட்காரும் சான்ஸலர்பிரபு, சபையில் ஏதாவது பேசவேண்டுமானால், அவ்விடத்தைவிட்டகலவேண்டும்.

சாதாரணமாக, மேற்சபையில் அங்கத்தினர் அதிகமாகக் கூடுவதில்லை. இரண்டொரு சந்தர்ப்பங்களில் மட்டுமே பிரபுக்கள் பலர் வருவார்கள். இதை யுத்தேசித்தேதான், பிரபுக்களின் சபையில் வியவகாரம் நடப்பிக்க மூன்று பேர் இருந்தால் போதுமென்று ஏற்பட்டிருக்கிறது.

அப்பீல் விசாரணை செய்யவேண்டியிருந்தால் மட்டும், மேற்சபை காலைவேளைகளில் கூடி மத்தியானத்துக்குள் கலைந்துவிடும். ராஜாங்க விஷயங்கள் பொதுவாக மாலை நாலரைமணிக்கு ஆரம்பமாகும். ஆரம்பமாவதற்குமுன், ஒரு அத்தியக்ஷ குரு தேவதாப் பிரார்த்தனை செய்வது பதிவு. சாதாரணமாக காரியம் வெகு சீக்கிரத்திலேயே முடிந்துவிடும். கீழ்ச்சபையைப்போல, இங்கு மெம்பர்கள் சிரமப்படுவதில்லை. கேள்விகள் வெகு சொற்பம். விவரித்துப் பேசவேண்டிய விஷயங்களும் அற்பம். ஆகவே பிரபுக்களின் சபைக்கு விஷயங்கள் நடக்கும் முறையில் ஒரு காலவரையறை ஏற்படவில்லை

இனி, பிரபுக்கள் சபையங்கத்தினருக் கிருக்கும் சுதந்தரங்களைப் பற்றிக் கூறி இவ்வத்தியாயத்தை முடிவுசெய்வோம்.

எப்போதுவேண்டுமானாலும் பிரபுக்கள் மகாராஜாவிடம் தாராளமாகப் பேசப்போகலாம். சபையில் நடக்கும் விஷயங்கள் தங்களுக்குச் சம்மதமில்லாவிட்டால் அவ்விஷயத்தைச் சபா தினசரிப்புத்தகத்தில் குறிப்பிட்டெழுதலாம். கடனுக்காக பிரபுக்களைக் கைது செய்து மறியலில் வைக்கக்கூடாது, ஆனால் கடன்காரனாய்ப் போய்விட்ட பிரபு, தன்னுடைய கடனைத் தீர்க்கும் வரையில் சபைக்கு வரக்கூடாதென்ற விதியேற்பட்டுள்ளது.

பிரபுவோ, சாமான்னியரோ ஒருவர் ராஜயததுக்கு விரோதமாகப் பெருங் குற்றம் செய்துவிட்டால், சாமான்னிய சபையார் அவர்மீது தோஷாரோபணம் செய்து, பிரபுக்களின் முன்னர் விசாரணைக்குக் கொண்டுவருவார்கள். இவ்வழக்கம் பதினேழாம் நூற்றாண்டிலும் பதினெட்டாம் நூற்றாண்டிலும் விசேஷித்திருந்தது. இந்திய கவர்னர் ஜனரலாகவிருந்த உவாரன் ஹேஸ்டிங்ஸ் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்ட சங்கதியை நாமறிவோம். இந்த நீதிமுறையில் ஒரு ஒழுங்கு இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே இது இப்போது வழக்கத்திலில்லை. பிரபுக்களிலேயே ஒருவர் ராஜதுரோகமான காரியம் செய்திருந்தால், அவரையும் மேற்சபையார் விசாரிப்பதுண்டு. இப்படி விசாரணை செய்யும் நியாயாதிபதிகள் பன்னிருவர் இருக்கவேண்டும். அவர்களுக்குள் பெரும்பாலார் அபிப்பிராயமே தீர்மானமாகும்.

குழந்தையைப்போலிரு :— குழந்தையின் களங்கமற்ற தன்மை எவ்வளவு இனிமையா யிருக்கிறது! அஃது உலகத்திலுள்ள செல்வத்தை யெல்லாம்விடத் தன் விளையாட்டுப் பொம்மையே மேலானதெனக் கருதுகின்றது. மெய்யன்புள்ள பக்தன் இயல்பும் அத்தகையதே. எல்லாவித செல்வத்தையும் கௌரவத்தையும் கடவுளுக்காகப் பரித்யாகம் செய்துவிடுவதற்கு அவனைத்தவிர வேறெவராலும் முடியாது.

—உபதேசரத்னமாலை

உபநிஷத் ரத்தினமாலை

THE SUMMARY OF THE MINOR UPANISHADS

34. வராஹோபநிஷத் (98).

ரிபு என்ற மஹரிஷி வெகுகாலம் பகவானைநோக்கித் தவமிருக்க பகவான் வராஹரூபத்துடன் அவர் முன் தோன்றினார். அப்பொழுது ரிபு பகவானை நோக்கி 'எனக்கு ஒருஉலகவிஷயத்திலும்பற்று இல்லை. உமது ஸ்வரூபஞானமே முக்தி என்று சாஸ்திரங்கள் எல்லாம் கூறுகின்றன. ஆதலால் மோக்ஷகாரணமான பிரஹ்மவித்தையை எடுத்துரைக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

பகவான் முதலில் தமது தத்வாதீத நிலையை விளக்குகிறார். தத்வவிவரம் பின் அட்டவணையில் வருவன.

இவைகளுக்கு அப்பாற்பட்டிருக்கும் என்னை யார் பஜிக்கிறார்களோ அவர்கள் எந்த ஆச்ரமத்திலிருந்த போதிலும் ஜீவன்முக்தர்களாவார்கள் என்று பகவான் முதலில் தத்வநேதி செய்து காட்டினார்.

பின்னர் ப்ரஹ்மவித்தை விஷயமாகக் கூறலுற்றார் பகவான். "ஸ்வதர்மானுஷ்டானம், தபஸ், குருபக்தி இவைகளால் ஒருவனுக்கு ஸாதன சதுஷ்டயம் வரவேண்டும். நான்கு ஸாதனங்களாவன (1) நித்யாநித்யவஸ்து விவேகம். (2) இஹபரபோகங்கள் விஷய நிராசை. (3) சமம், தமம், உபரதிதிதீக்ஷா சிரத்தை, ஸமாதானம் ஆகிய ஆறன் கூட்டம் (4) மோக்ஷ விருப்பம் ஆகிய இவைகளே. இவைகளை அப்யவித்து தேர்ந்து வருபவன் எல்லா வஸ்துக்களிலிருந்து "நான்" என்ற புத்தியை நீக்கி என்னிடம் வைக்க வேண்டும். மனுஷத்வம், புருஷத்வம், ப்ராஹ்மணத்வம் இவைகளுள் முன்னதைவிடப் பின்னது மிக அரிது. இது வந்து ஸுசமாகிய என்னை அறியாதிருப்பவனுக்குக் கதியேது? நான் என்ற பாவத்திற்கு உண்மையான ஆதாரமாக நான் இருப்பதால் தான் அறிவு, ஸுகம் முதலியவைகள் வெளிப்படுகின்றன. என்னையன்றி இவைகள் வேறாகவில்லை. என்னைத்தவிர ஜகத்ஜீவபரன் என்பதே இல்லை. ஸர்வஸாக்ஷி வர்ணாச்ரமாதீதன் ஆகிய ஆத்மாவை வேதாந்தப்படி ப்ரஹ்மமாக உணர்பவன் ப்ரஹ்மமேயாகிறான். தேஹமே ஆத்மா என்ற உணர்ச்சியைப்போல, ஆத்மாவே ப்ரஹ்மம் என்ற உணர்ச்சி திடப்பட்டுவிட்டால் மோக்ஷம் எளிதில் வரும். இவனுக்குக் கர்மபந்தமில்லை. ப்ரஹ்மம், அவஸ்தாத்ரயஸாக்ஷி, ஸத்யஞான அனந்தானந்தன், லக்ஷயம், தோஷரகிதன், ஸர்வவியாபி இவ்வாறு அறிபவன் அழிவற்றவனாகிறான். இந்த ப்ரஹ்மத்தை தன் ஆத்மாவாக உணர்ந்தவன் பயங்கள் நீங்கிவிடும் இதைத்தவிர வேறாக அணுக்கூட இல்லை. அக்ஞானிக்குத் துக்கரூபமாகக் காணப்படும் உலகம் ஞானிக்கு ஆனந்தரூபமாக விருக்கும். என்னிடம் அத்வைதபாவனை இருந்தால் பந்தமேது? முக்தியேது? ஆத்மா என்றும் தனித்திருப்பவன். தேஹாதிகளுக்கோ பொருளே இல்லை. எல்லாம் நான் என்ற பாவனையுடன் என்னைத்தவிர வேறு ஒன்றுமில்லை என்று என் ஸ்வரூபத்தை உணர்ந்தவனுக்குப் பந்தம் ஏது? இவனுக்கு ஸைர்யம்வர என்ன தடை? இவன் நானே, நீயும் அவன்!! இப்படி உணருபவனுக்கு இப்பார்வைகிடையாது எப்பொழுதும் ஞானப்பார்வையே! ஸ்வஸ்வரூபானு ஸந்தானத்தால் என்னை அனுபவிப்பவன் விடுபடுவன். இவ்வாறு என்னை வழிபடுபவன் செய்யவேண்டியது எல்லாம் செய்துமுடித்தவன். இவன், மேல் செய்யவேண்டியது ஒன்றும் இல்லை. இவனுக்கு ஸர்வஸங்கபரித்யாகம், தனிமை, ஸ்திரீ ஆசையின்மை, வைராக்யம், முதலியவைகள் குடிகொண்டிருக்கும். இவனுக்குத்தான் பரமஹம்ஸன் என்று பெயர். உபவாஸம் என்ற பதத்திற்கு நெருங்கிய வாஸம் என்று பொருள். ஜீவாத்ம பரமாத்ம ஸமீபவாஸமே உபவாஸம், வெறும் பட்டினி கிடப்பதுமாத்ரமல்ல. பிரஹ்மம் உண்டென்றறிவது கேட்ட ஞானம், நான் பிரஹ்மம் என்று உணருவது ஸாக்ஷாத்காரம். எனது எனதல்ல என்ற பாவங்களே பந்த மோக்ஷங்களுக்குக் காரணம். வெளியிலும் உள்ளிலும் மனம் அசையாது சாந்தமாக திருப்தி யடைந்திரு. ஜகத்ஸங்கல்பமாத்ரம் இதைவிட்டு நிர்விகல்பமாகிய என் நிலையைப்பாவனை செய். ஸதா என் விஷயஸம்பந்தமாகவே உன் காலத்தைப்போக்கு. எல்லாம் சின்மயம்தான். பற்றற்றவனாகி, ஞானப்பற்றைக் கைக்கொள். தேஹாத்ம புத்தியை மறந்துவிடு. முன்னும்இல்லாது பின்னுமில்லாது இருப்பது எதுவோ அது மாயை, மாயையும் இதன்காரியமும் நீக்கப்பட்டால் ஜீவன் ஈச்வரன் இருவரும் இல்லாமல்போக அகண்டநிலைஒன்றே மிஞ்சும்.

ஆதியில் இச்சை உண்டாகி எங்கும்பரவிப் பொதுவாக நின்று சேதன அசேதப்ரஞமாகும் வரையில் ஈச்வர ஸ்ருஷ்டி. பின்னர் ஏற்படும் ஜாக்ரதைமுதல் மோக்ஷம் வரையில் உள்ளது ஜீவஸ்ருஷ்டி; யாகம்முதல் யோகம் வரையில்உள்ள கர்மங்கள், ஈச்வரஸம்பந்தமானவைகள் லோகாயதமதம் முதல், ஸாங்கியம் வரையில் ஜீவ ஸம்பந்தமானவைகள். முமுக்ஷுக்கள் இவைகளிலிருந்து விலகி, ப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டும் இது தவிர முக்திக்கு வேறு வழியில்லை. எனக்கு மூன்றவஸ்தையுமில்லை. நான் இவைகளுக்கு அப்பாற்பட்டவன்.

பாகம்.	பெயர்கள்.	கணக்கு	விவரம்.
ப்ராஹ்மவித் தத்வங்கள்.	ஞானேந்திரியம்	5	மெய், வாய், கண், மூக்கு, செவி.
	கர்மேந்திரியம்	5	வாக்கு, கை, கால், பாயு, உபஸ்தம்
	வாயுக்கள்	5	பிராண, அபான, வியான, உதான, ஸமானன்.
	விஷயங்கள்	5	சப்த, ஸ்பர்ச, ரஸ, ரூப, கந்தம்.
	அந்தஃகரணம்	4	மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்.
	ஆக	24	
முனிகள் உணரும் தத்வங்கள்.	ஸ்தூலபூதம்	5	ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்.
	தேஹம்	3	ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணம்.
	அவஸ்தை	3	ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி.
	ஜீவன்	1	
	ஆக	36	
மிகுந்த தத்வங்கள்	பாவ விகாரங்கள்	6	இருத்தல், உண்டாதல், வளருதல், திரிதல், குறைதல், நசித்தல்.
	ஊர்மிகள்	6	பசி, தாகம், சோகம், மோஹம், ஜரை, மரணம்.
	கோசங்கள்	6	தோல், ரத்தம், மாம்ஸம், கொழுப்பு, மூளை, எலும்பு.
	அரிஷ்ட வர்க்கங்கள்	6	காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யம்.
	ஜீவன்	3	விச்வ, தைஜஸ, ப்ராஞ்ஞன்.
	குணம்	3	ஸத்வ, ரஜஸ், தமஸ்.
	கர்மம்	3	பிராரப்தம் ஆகாமி ஸஞ்சிதம்.
	கர்மேந்திரியத்தொழில்	5	பேசுதல், எடுத்தல், நடத்தல், மலம் ஜலம் விடுதல், ஆனந்தம்.
	அந்தஃகரணத்தொழில்	4	ஸங்கல்பம், ப்ரயத்னம், அபிமானம், நிச்சயம்.
	ஆத்மகுணம்	4	மைத்ரி, கருணை, உபேக்ஷை, முதிதை.
	திக்குகள்	8	
	தேவதைகள்	6	சந்திரன், பிரஹ்மா, ருத்ரன், க்ஷேத்ரஞ்ஞன், ஈசுவரன்.
	ஆக	96	

ஸமதிருஷ்டி உடையவனே ஸமஸ்தஹரிஹராதி தேவதைகளும். தீர்க்க ஸ்வப்னம், ப்ராந்தி, மனக்கோட்டை ரூபமாக உள்ளது ஸம்ஸாரம். ஆதலால் விழித்ததுமுதல் தூக்கம்வந்து கவிந்துகொள்ளும்வரையில் ப்ரஹ்மத்தையே நினைத்து ஓய்ந்திருக்கவேண்டும். ஜகத் ஒடுங்கினால் மனம் என் ரூபமாகிவிடும். பின்னர் எது எப்படிப் போனால் என்ன? பாம்புக்கு உரித்த தன் சட்டைமேல் எப்படிப் பற்று இராதோ அது போலத்தான் ஞானிக்கும் தேஹவிஷயம் பொய், அறிவு நீங்கில் நேதி களைவது மூலமாக ஞானி அசரீரியாகிறான். மாயை மூன்றுவிதமாக அழிந்துகொண்டே வரும். சாஸ்திரத்தால் ஜகத் ஸத்ய புத்தி நீங்கும்.

ஸாக்ஷாத்காரத்தால் வ்யவஹாரம் நீங்கும். ப்ராரப்த நாசத்தால் வெளித்தோற்றமும் நீங்கும். அத்வைதத்தால் வாஸனை நீங்கும். இதனால் ப்ராரப்தம் நீங்கப் பிறப்பு வாராது. கானல்நீரில் பாலைவனத்தைத் தவிர வேறொன்றும் எப்படி இல்லையோ அப்படி ஜகத்தில் ப்ரஹ்மத்தைத்தவிர வேறொன்றுமில்லை. ஜீவன் ஈசன் குரு இந்நிலைகளுக்கு அப்பாற்பட்ட ப்ரஹ்மத்தினிடத்தில் அக்ஞானலேசமே இல்லை. குரு கிருபையின்றி விஷயத்தைத் துச்சம் என்று தள்ளுதல், உண்மையை உணர்ந்து ஸமாதியில் நிற்றல், எப்பொழுது ப்ரஹ்மமேயாகி இருத்தலாகி ஸஹஜம் மூன்றுகிடைப்பது அரிது. அலையும் மனம் நிலையில் நின்றால் பின்னர் அஸாத்யம் என்பது உண்டோ. அதுதானே ப்ரஹ்மத்வத்தை அடைய ஞானோதயமாகி, ஸஹஜநிலை தானே வரும். மனம் அடங்கித் தேர்ந்தவன்,

எத்தொழிலைச் செய்தாலும், எதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே—வித்தகமாய்க்
காதி விளையாடி இருகைவீசிநின்றாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

என்று கூறப்படும் நிலையை அடைவன். ஆகவே இந்த மனம் அடங்க யோகத்தில் பயிலவேண்டும்.

மேலும்பகவான் கூறுகிறார்:—

'என் ரூபம் அகண்டம் பிரஹ்மமே நான். நான்ஸச்சிதானந்தம். சுத்த அசுத்தங்களுக்கு அப்பாற்பட்டவன். ஆதலால், 'இதுவரையிலும் கூறிவந்த பிரஹ்மம் நான்' என்று உன்னுள்மதித்து மௌனமாகவிருந்து விடு. ஈசுவரபக்தி,கிளிஞ்சலில் வெள்ளி தோற்றுவதுபோலவும், ஸூர்யன்முன் உலகம் சேஷ்டிப்பதுபோலவும், இவ்வுலகம் என்னிடம் தோன்றி நடைபெறுகிறது என்றஅறிவு,எக்காலத்தும் எங்கும் நான்பேதமற நிறைந்திருக்கின்றேன் என்று இருந்து பேதமாகக்காணப்படும் வஸ்துக்கள் நானல்ல என்ற உணர்ச்சி, பிறர் குற்றத்தை அறியும் ஆற்றலோடு தன்குற்றத்மை அறியமுயலுதல் ஆகிய இவைகளில் பழகுபவனுக்கு பந்தம் சீக்கிரம் நீங்கும். ஞானிக்கு விஷயப்ரவிருத்தி உண்டாகுமாயின் அவன் ஞானம் பலனில்லாததாகும். ஆதலால் மனமிறந்து ஓய்ந்திருக்கும் ஞானிக்கு மனவ்யாபாரத்தன் அடங்கிக் கிடக்கும் விஷயங்களில் விருப்பம் ஒருநாளும் இராது. அந்த ஆசையிருக்கும் சிஷ்டர்கள் ஆத்மஞானிகள் அல்லர். அவர்களுக்கு இந்த ஆசை மோக்ஷமார்க்கத்தில் பலமான தடையாக வந்து குறுக்கிடும்.

இவ்வாறு பகவத் உபதேசம் பெற்று முக்தரான ரிபு மஹரிஷியை நிதாகர் என்பவர் நோக்கி ஜீவன் முக்தி விஷயத்தைக் கூறவேண்டுமென்று கேட்டார்.

ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி, துரியம் என்ற அவஸ்தைகள் நான்கு. இதற்கேற்ப அ, உ, ம், அர்த்த மாத்திரையாகிய ப்ரணவ பாகங்கள் நான்கு. இவைகள் ஒவ்வொன்றுடன் ஒவ்வொன்று ஸம்பந்தப்பட ஜீவனுக்கு விச்வ தைஜஸ ப்ராக்ஞ துரியன் என்று பெயர் வருகின்றது. இந்த நிலைகளுக்கு முறையே ஸ்தூல, ஸூக்ஷ்ம, பீஜ, ஸாக்ஷி நிலைகள் என்று பெயர்.

இவைகளுள் அகார, உகார, மகார, அர்த்த மாத்திரைகளோடு துரீய ஸம்பந்தத்தால் ஜீவனுக்கு முறையே, முதல் மூன்று ஞான பூமிகளும், 4, 5, 6-வது பூமிகளும் ஏற்படுகின்றன. ஏழாவது பூமி இவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டது. இவைகளிலிருப்பவர்களுக்கு முமுக்ஷு பிரஹ்மவித், வரன், வரீயான், வரிஷ்டன் என்றும் பெயர்.

பூமிகள் விவரம் வருவன.

1. **சுபேச்சை**—உலக விஷய ஆசையைத் தடுத்து சாஸ்திரஞான விருப்பம், ஸத்ஸங்க ஆசைமேல் கிளம்பி இவைகளில் ப்ரவிருத்திக்கும்படி செய்யும் நிலை.

2. **விசாரணை**—முற்கூறிய ஆசைப்படி நிறைவேற்றி கற்றபடி நடக்கத் தொடங்குதல்.

3. **தனுமானஸி**—கற்றபடி நின்று வருகையில் மனதில் விஷயப்பற்றுக் குறைந்துகொண்டு வருதல்.

4. **ஸத்துவா பத்தி.**—மூன்று பூமிகள் அப்யாஸத்தால் விஷயப்பற்று நீங்கி ஸத்தான ஆத்மாவிடம் மனம் ஒடுங்குவது.

5. **அஸம்ஸக்தி**—முன் அப்யாஸத்தால் நிஷ்காம்ய ஸத்வகுண விளக்கம் உண்டாகும் நிலை.

6. **பதார்த்தா பாவனை.**—உள்வெளி வஸ்துத் தோற்றமின்மை ஆயினும் பிறர் தூண்டினால் ப்ரவ்ருத்திக்கக்கூடிய ஒய்வு நிலை.

7. **துரீயம்.** பேதத்தோற்றம் முற்றிலும் நீங்கி அப்பொழுது ஆத்மாவாகவே நிலைத்துவிடுவது. முதல் மூன்று பூமிகளிலும் உலகம் நன்றாகத் தோற்றுவதால் அவைகள் ஜாக்கிரதை என்றும், நான்காவதில் ஸ்வப்னம்போலத் தோன்றுவதால் அதற்கு ஸ்வப்நம் என்

றும், ஐந்தாவதற்கு, ஸுஷுப்தி, ஆறாவதற்கு துரியம் என்றும், துரியத்திற்கு அதீதம் என்றும் பெயர்கள் உண்டு.

நான்காம் பூமியிலிருப்பவனுக்கே ஜீவன்முக்தன் என்று பெயர். இவனிடம் ஸகல நற்குணங்களும் இயற்கையாகவே அமைந்து கிடக்கும். இவன் ப்ரயத்னமன்றியிலேயே மனம் உள்முகப்பட்டு குவியப்போகுமே ஒழிய வெளிமுகப்பட்டு ஓடிவிடாது. இவன் அனுபவிக்கும் இரண்டற்ற ப்ரஹ்மநிலைக்கு சீக்கிரம் ஆசார்ய சாஸ்திர சஹாயத்தால் போய் நின்றுவிடு. அங்கு தோன்றும் சிவனே குரு, தேவன், வேதம், பிரபு, நான், மற்றெல்லாம். இதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. மோக்ஷத்திற்கு இரண்டுவழி. **விஹங்கமார்க்கம்** (பக்ஷிமார்க்கம்) **பிபீலிகாமார்க்கம்** எறும்புமார்க்கம் ஆகிய இவைகளே. மரத்தின்மேலிருக்கும் பழத்தைப் பக்ஷிகள் நேரிடப் பறந்துசென்று புஜிப்பதுபோல நேராக ஞானவைராக்கிய வாயிலாக நிஷ்டை பயின்று ஸித்திபெற்று தேஹபாவம் நீங்கியதும் உடனே முக்திபெறும் மார்க்கத்திற்கு விஹங்கமார்க்கம் என்று பெயர். இவ்வாறு முக்திபெற்றவர் சுகர், ஆதலால் இதற்கு **சுகமார்க்கம்** என்றும் பெயர். இதனால் ஏற்படும் முக்திக்கு ஸத்யோமுக்தி என்று பெயர். இனி முற்கூறிய பழத்தைத் தின்ன எறும்பு பூமியில் நகர்ந்து மெதுவாக மரமேறித் தீரவேண்டியதுபோல, ஸத்கர்மம் முதலியவைகளில் ப்ரவ்ருத்தித்துகாம்யம்,நிஷ்காம்யம் முதலியவைகளில் பழகி படிப்படியாக மேலான ஜன்மங்கள் அடைந்து ப்ரஹ்மலோகம்வரையில் பதவிபெற்று முடிவில் ப்ரஹ்மாவுடன் முக்திபெறுவது பிபீலிகாமார்க்கம் என்று பெயர். இவ்வாறு முக்திபெற்றவர் வாமதேவராதலால்,இதற்கு **வாமதேவமார்க்கம்** என்றும்பெயர். இந்த முக்திக்கு கிரமமுக்தி என்று பெயர். விஹங்கமார்க்கத்திலிருக்கும் ஜீவன்முக்தன் பார்வை எப்படிப்பட்டவர் பாபத்தையும் போக்கும். அவனுடன் ஸம்பந்தப்பட்ட இடம், பஞ்சபூதங்கள் எல்லாம் பாபநாசனங்கள்."

பின்னர் நிதாகர் ரிபுவை நோக்கி 'யோகாப்பியாஸ விஷயத்தைக் கூறவேண்டும்' என்று கேட்டார். அதற்கு ரிபு முதலில் சாரீக உபநிஷத் விஷயத்தைச் சுருக்கிக்கூறி பின்னர் யோகவிஷயத்தைக் கூறுகிறார்.

"யோகம் மூன்று விதம், மந்திரம், லயம், ஹடம் என்பவைகளே. இவைகளை மிருது, மத்யமம், மந்திரம் ஆகிய காலங்களில் செய்யவேண்டும். அதிக பசி, அஜீர்ணம் முதலியவைகள் உடையவர் இதைத் தொடங்கக்கூடாது. இந்த யோகம் எட்டு அங்கங்களை உடையது.

1. **யமம்.**—துன்டம் செய்யாமை, ஸத்யம், திருடாமை, ப்ருஹ்மசரியம், தயை, நேர்மை, பொறுமை, தைர்யம்,மிதாஹாரம்,சுத்தம் ஆகிய பத்துகுணங்களும்.

2. **நியமம்.**—தபஸ், ஸந்தோஷம், ஆஸ்திக்யம், கொடை, பூஜை, ஸித்தாந்தவிசாரம், வெட்கம், நற்புத்தி, ஜபம், விருதம் ஆகிய பத்துமே.

3 **ஆஸனம்.**—சக்ரம், பத்மம், கூர்மம், மயூரம், குக்குடம், வீரம், சுவஸ்திகம், பத்ரம், ஸிம்ஹம், முக்தம், கோமுகம் ஆகிய பதினொன்றுமே.

4. **ப்ராணாயாமம்.**—ரேசக பூரக கும்பகம் ஆகிய மூன்றுவிதம். இவைகளுக்கு முறையேமூச்சைவிடுதல், இழுத்தல், உள்ளே நிலைத்து நிறுத்துதல் என்று பொருள். இதற்குமனவிஷயமாக ஒருபொருள் உண்டு. விஷய ஆசை தியாகம்ரேசகம்,சாஸ்திரஞான உணர்ச்சி பூரகம், தனக்குள்ளேயே அடங்கி அதன்படி நிற்றல் கும்பகம். பின்னது வரத்தான் முன்னதில் பழகுவது.

ப்ரத்யாஹார, தாரணை த்யான ஸமாதி என்பவை. மற்றைய நான்கு அங்கங்கள் இவைகளில் ப்ரணவ த்யான மூலமாக மனம் அதில் தைலதாரைபோல் நிலைக்க முயலுவது.

யோக பூமிகை நான்கு. அவையாவன:—

1. **ஆரம்பம்.**—வெளித்தொழிலை விட்டு உள் தொழிலில் ப்ரவேசிப்பது.

2. **கடம்.**—வாயுமேல் நோக்கிக் கிளம்பி நிறையும் நிலை.

3. **பரிசயம்.**—நீங்கி அசையாது ஜீவபாவம் இருந்தும் இல்லாததுபோல அடங்கிக் கிடப்பது.

4. **நிஷ்பத்தி.**—ஜீவ பாவத்திலிருந்து விடுபட்டு யோகம் ப்ரயாஸமின்றியில் தானே கைகூடி வரும் அந்த நிலை.

இந்த உபநிஷத்தை அத்யயனம் செய்பவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு சுத்தனாவான்; ஜீவன் முக்தனாவான்.

ராகங்களின் உற்பத்தி
ORIGIN OF TUNES
(தொடர்ச்சி)

ஆகவே, இதுவரையில் சொன்னதைக் கொண்டு நாம் ராகம் கற்றுக்கொள்வதற்கு முதல் முதலில் பாட்டிலிருந்து ராகத்தின் சிறுபாகங்களை அகாரமாகக் கற்றுக்கொண்டு, பிறகு அவை எந்த ஸ்வரங்களாலானவை என்பதையும், அவைகளை ஸ்வரத்தோதுதிகளாக உச்சரிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். இப்படிக் கற்குங்காலத்திலேயே அந்தந்த ராகங்களில் முக்கியமாய் வரும் சிறுபாகங்களாகிய ஸ்வரச்சேர்க்கைகள் எவை எவை வருகின்றனவென்றும் அறிந்து ஞாபகத்தில் வைத்துக்கொண்டு விடவேண்டும்.

இப்படி ஸ்வரத்தொகுதிகள் வருவதில்கூட, சில தடவைகளில் இரண்டிரண்டு ஸ்வரங்கள்சேர்ந்தும், சில வேளைகளில் மூன்றுமூன்று ஸ்வரங்களாய் சேர்ந்தும் வருகின்றன. திருஷ்டாந்தமாக, கேதாரகௌளம் என்னும் ராகம் பாடும் காலத்தில், பா பா தப ம கரீ ரீக மக ரிம சரி ஸ நிதப நீ ஸா ரிமா மகரீ ஸா நிதப மப நீ ஸா மேலே எழுதப்பட்ட விஷயத்தில் நாம் நிதப என்னுமிடத்தில் மூன்று ஸ்வரம் சேர்ந்து வருகிறது என்று காணலாம். மற்றவை எல்லாம் இரண்டு ஸ்வரங்களானவைகளேயாம். கவனித்துப் பார்த்தால் ஒவ்வொரு ராகத்திலும் வருகிறஸ்வரச்சேர்க்கைகளில் மிகுதியாய் வருவது இரண்டு ஸ்வரங்களாலானவைகளே என்று அறியலாம். (இப்படி இரண்டுமாயும் மூன்றுமாயும் ஸ்வரங்கள் சேர்ந்து வருவதற்குக் காரணம் உண்டு; அதைத் தாளங்களைப்பற்றி எழுதும்போது விவரித்து எழுதப்படும்).

பெரும்பாலும் நம்மவர்களில் பாடகர்களும் சரி, மாணாக்கர்களும் சரி, எல்லாரும் ராகம் என்பது வேறு, கீர்த்தனம் வேறு என்பதாக அபிப்பிராயமுள்ளவர்களா யிருக்கிறார்கள் என்று மேலே சொன்னோமல்லவா? அது ஒரு பெரிய தப்பெண்ணம். ராகம் என்பது கீர்த்தநம் முதலிய எல்லா ஸாஹித்தியங்களுக்கும் அந்தர்பூதமாயுள்ளது. ஆகவே, சரியான ராகஞானம் ஏற்படவேண்டுமென்றால் அந்தராகத்தில் ஏற்பட்டுள்ள முதல்தரமான தியாகய்யர் அவர்களது கீர்த்தனங்கள் அல்லது க்ஷேத்திரக்ஞருடைய பதங்கள், இவைகளின் ஸங்கீதத்தை முதலில் கற்றுக்கொண்டு அதிலிருந்து அந்தந்த ராகபாவத்தினது முக்கியமான ஸ்வரச்சேர்க்கைகளைக் கற்றுக்கொள்ளவேண்டியது. இக்காலத்தில் பெரும்பாலும் பாடகர்கள் நன்றாய் ராகம் பாடாததற்குக் காரணம் இப்படி மேலேசொன்ன மாதிரியான நன்றாய் ராகபாவத்தை வெளியிடக்கூடிய தியாகய்யர் அவர்களுடைய கீர்த்தநங்களையும் க்ஷேத்திரஜ்ஞருடைய பதங்களையும் நன்றாய்ப் பாடம் பண்ணி, அவைகளை நன்றாய் ஆராய்ந்து அந்தந்த ராகங்களின் முக்கியமான ஸ்வரத்தொகுதிகளையும் கற்றுக்கொண்டு ராகஞானம் ஏற்படுத்திக்கொள்ளாமல், ஏதாவதொரு பாடகர் பாடும் காலத்தில் காதில் பட்டவரையில் கேட்டறிந்த ஞானத்தைக்கொண்டும், ராகங்களுக்கு ஸம்பிரதாயமாய் எழுதிவைத்திருக்கும் ஆரோஹண அவரோஹண கிரமங்களிலிருந்து ஸரளி வரிசைகளையும் ஜண்டைவரிசைகளையும் உருப்போட்டு, சண்டை போடுவதுபோல் உரக்க உச்சரிப்பதனாலும் தான். ஆனால் ராகம் வேறு கீர்த்தநம் வேறு என்று நினைக்கக்கூடாது. அவை வேறுவேறு விஷயம் என்று உண்டாயிருக்கும், இந்தத் தப்பெண்ணம் வரக் காரணம் என்ன?

அதற்கு முதல் காரணம், கீர்த்தநம் வார்த்தை ரூபமாய் உள்ளதால், வார்த்தைகளைப் பாடம்பண்ணிவிடல் எவருக்கும் எளிதான காரியம். அந்த மூலமாய் உச்சரிக்கும் மாதிரியான கீர்த்தநத்தின் ஸங்கீதத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். ஆனால் கேவலம் ராகம் என்பதை அப்படி ஞாபகப்படுத்திக்கொள்ள முடியாது. இன்னொரு காரணம் என்னவென்றால், சில ஸாஹித்தியங்களில் அந்தந்த ராகத்தின் முக்கிய அம்சம் வெளிப்படையாய்த் தெரியும்படி ராகபாவம் அமைவதில்லை. அதனால் சாதாரண ஜனங்கள் ராகம் வேறாயிருப்பதனால் கீர்த்தநம் பாடும்போது ராகபாவம் வராதுபோனாலும் என்று தப்பபிப்பிராயப்பட்டு விடுகிறார்கள். மேலும், இப்படி ஸாஹித்தியம் ராகபாவத்தைக் காட்டாமலிருப்பது, ஸாஹித்தியம் செய்தவருடைய குறைவான ஸங்கீத ஞானத்துக்கு அத்தாட்சியாம். க்ஷேத்திரக்ஞருடைய பதங்களைப் பாடும்போது கேட்டு அநுபவித்திருப்பவர் ராகபாவம் வரவில்லையே என்னும் சந்தேகம் ஸாஹித்தியம் செய்பவரின் குறைவுதான் என்று எளிதில் அறியலாம்.

நமது ஸங்கீதத்தின் முக்யலக்ஷணம் ஸௌகமாயும்—அதாவது ஸ்வரங்களை அவஸரமாய் உச்சரிக்காமல் பாடுவதும்—செவியாறுமா யிருப்பதே என்பதால், நமது ஸங்கீதத்தை லக்ஷணம் பொருந்திப் பார்க்க வேண்டுமென்றால் க்ஷேத்திரஜ்ஞருடைய பதங்களில்தான் பார்க்கலாம். இக்காலத்தில் அவஸரமாய் வேலையைச் செய்து முடிக்கக் கருதுவோரும் சரி,

சாவகாசமிருப்பவரும் சரி, கௌரவ நிமித்தம் ரொம்ப அவசரக்காரன்போல, ரெயிலில் ஏறிப்போவதும், மோடார்கார், மோடார்ஸைகில் முதலியவற்றில் ஏறிக்கொண்டு போய், அதனால் மிகுந்த காலத்தையும் சேர்த்துக்கொண்டு வியர்த்தகாலக்ஷேபம் பண்ணுவதுபோல், ஸௌகமாயும் ஆறமாறப் பாடவேண்டிய க்ஷேத்திரக்ஞருடைய பதம்போன்றவைகளைப் பாடாமல், (மேலேசொன்ன வண்டிகளுக்கு மேலே வேகமாய் ஓடுகிற) துரிதகாலத்தில், பார்வி வக்கடாக்களைப் பாடுவதுடன் தியாகய்யர் அவர்களுடைய திவ்வியமான பின்வரும், தெலிசிராம்சிந்தநதோ, சலமேலா ஸாகேதாராம, பதவிநீஸத்பக்தியுகல்துடே என்னும் கீர்த்தநங்களை வெகு துரிதகாலத்தில் பாடிப்பாழாக்குவது மிகவும் பரிதபிக்கத்தக்கதே.

அதுபோலவே, ஸ்வரம் பாடும் காலத்திலும், அந்தந்த ராகங்களுக்கு வரக்கூடிய ஸ்வரத் தொகுதிகளையும், ஸ்வர தீர்க்கங்களையும் கவனித்து மனதில் வைத்துக்கொண்டு பாடாமல், ஸரளி, ஜண்டை வரிசைகள் வித்தையின் ஆரம்பத்தில் ஸாதகம் செய்யும் மாணாக்கர்போல ஸ்வரவிந்நியாஸம் செய்யும் பாடகர்கள் இளம்பியிருப்பது வித்தையின் துரதிர்ஷ்ட காலம் நடப்பதுபோலிருக்கிறதே தவிர வேறில்லை.

இது மாத்திரமல்ல. இந்தக் காலத்தில் ஸ்வரத்தொகுதிகளின் அழகை அறியாமல் ஸங்கீதம் கேட்டிருப்பதுடன், ஸங்கீதத்தில் ஸ்வரத்தின் தலைமை கெட்டுத் தாளத்தின் பெருமை மேலாட ஆரம்பித்திருக்கிறது இன்னொரு குறைவாம். அதாவது பாடகர்கள் ஸ்வரத்தொகுதிகள் அந்தந்த ராகத்துக்கு உரித்ததோ அன்றோ அதை கவனியாமல், திரியஸ்ர ஜாதி, சதுஸ்ரஜாதி மிச்ரஜாதி, கண்டஜாதி, முதலிய ஸ்வரங்களைப் பாடுவதுதான் வித்துவான்களின் லக்ஷணம் என்று தப்பெண்ணம் உண்டாகி ஸங்கீதத்தைப் பாழாக்குவது மிகவும் பரிதாபமானதாகும்.

இவ்வளவு குறைவுகளையும் தீர்க்க வேண்டுமானால், சுருக்கமாயும் சுத்தமாயும் ராகபாவத்தை வெளியிடக்கூடிய ராகநூல்கள் எழுதிப்பிரசுரிப்பதேயாம்.

சென்னை ஸ்ரீநிவாஸ வரதாசாரி அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்ட "இராகவிபோதினி" என்னும் நூல் மாணாக்கர் எளிதில் ராக ஆரோஹ அவரோஹம் வரும் முக்கிய ஸ்வரத்தொகுதிகள், தீர்க்க ஹ்ரஸ்வம் முதலியவைகளைக் காட்டியிருக்கும் நூலாம். இது நமது ராகங்கள் கெட்டுப்போகாமலிருக்கிறதற்குப் போட்ட முதல் அணைபோலும். என் அபிப்பிராயத்தில் இதுமாதிரியாய் அநேக நூல்கள் வெளிவரவேண்டுமென்பதே. பி. எஸ். சுந்தரம் ஐயர், பி. ஏ. எல். டி.

கமலாகாந்தன்
அல்லது
ஓர் பித்தன்
KAMALAKANTHAN
(முன்தொடர்ச்சி)

ஸாக்ஷி.—ஒருநாள் பார்த்தேன், அலிமுஹம்மது ஸாஹேப்பு வீட்டுப் புறக்கடையில் ஒரு தோட்டக்காரனை.

வக்கீல்.—இதென்ன தொந்தரவு! அதல்லவய்யா, இந்தப் பிரியாதி பாபாவினுடைய பசு களவுபோனபோது பார்த்தாயா?

ஸாக்ஷி.—இல்லை. அந்தத் திருட்டுமுண்டை மகனுக்கு, என்னை அழைத்து சாக்ஷிவைத்துக்கொண்டு களவு செய்யவேண்டுமென்கிற அவ்வளவு தீர்க்காலோசனையில்லாமல் போயிற்று. அவன் அப்படிச் செய்திருந்தால் உங்கள் வேலையும் ஸுலபமாய் முடிந்திருக்கும், எனக்கும் ஸுலபமாயிருந்திருக்கும்.

வக்கீலுக்குக் கொடுத்த பீசு வீணென்றும் தானே நேராகக் கேஸை நடத்தியிருந்தால் நலமாயிருக்குமென்றும் அப்போது பாபாவுக்குப் புலப்பட்டது. வக்கீலின் காதில் 'இவன் அதற்குச் சாக்ஷியன்று. பசுவை அடையாளம் பிடிப்பதற்கு மாத்திரமே இவன் ஸாக்ஷி என்று சொன்னான். வக்கீலுக்கு அது ஒருபெரிய அவலம்பம் கிடைத்ததுபோல் ஆய்விட்டது. வெகு கம்பீரமாய்க் கனைத்துக்கொண்டு,

வக்கீல்.—உனக்குப் பசு தெரியுமா?

ஸாக்ஷி.—(கொஞ்சம் சிரித்துக்கொண்டே) தெரியாதுண்டோ, இல்லாவிட்டால் உங்களோடு இவ்வளவு பிரியமாய் வார்த்தையாடுவேனா?

ஸாக்ஷி வீணாய் வார்த்தையை வளர்த்துகிறவன் என்று தெரிந்துகொண்டு, அதை யெல்லாம் நிறுத்து என்று ஸாக்ஷிக்குத் திட்டம் செய்து பிரியாதியின் பசுவைக் கோர்ட்டுக்கெதிரில் கொண்டுவரும்படி உத்தரவு செய்து அது கொண்டுவந்து நிறுத்தப்பட்டதும்,

ஜட்ஜி.—சக்கிரவர்த்திகளே! அந்தப் பசு உங்களுக்குத் தெரியுமா?

ஸாக்ஷி (கைகளைக் கூப்பிக்கொண்டு) எந்தப் பசு? தர்மாவதாரமே!

ஜட்ஜி.—எந்தப் பசு வென்பதேன்? எதிரேயிருப்பது ஒரே பசுதானே. வேறேயில்லையே.

கமலா.—தங்கள் கண்ணுக்கு ஒரே பசு இருப்ப

தாய்த் தெரியவருகிறதோ என்னவோ? என் கண்ணுக்கு அநேகம் பசுக்கள் இருப்பதாய்த் தோன்றுகிறதே.

ஜட்ஜி.—(கோபித்துக்கொண்டு) தெரியவில்லையா, கறுப்புவர்ணம், வெளுப்புப்புள்ளி, சிவப்புமுகம், கழுத்தில் சங்கிலி அதோ பார்.

ஸாக்ஷி:—(அதைப்பாராமல் கடிகார கொலுசும் உடுப்புமாய் நிற்கும் வக்கீலைப் பார்த்து சுட்டிக்காட்டி) இது களவுசொத்தா?

ஜட்ஜி:—உன் போக்கிரித்தனம் வெகு அதிகமாயிருக்கிறது, கோர்ட்டார் வேலைக்கு நீ வெகுஆடங்கம்பண்டு பண்ணுகிறாய். நீ கோர்ட்டை அவமதித்தாயென்று குற்றம் சாட்டி உனக்கு ஐந்து ரூபாய் அபராதம் விதித்திருக்கிறேன்.

கமலா.—(பூமிவரையில் குனிந்து ஸலாம்செய்து கைகூப்பிக்கொண்டு) வெகு உத்தமம். ஆனால் அபராதத்தொகை செலுத்தவேண்டியது யாரோ, தயவு செய்து உத்தரவு செய்ய வேண்டுகிறேன்.

ஜட்ஜி.—அதென்ன, உனக்கு விதித்த அபராதத்தை வேறே யார் செலுத்துவான்?

கமலா.—நானேயா செலுத்தவேண்டும்?

ஜட்ஜி.—ஆம்.

ஸாக்ஷி,—அப்படியானால் பணம் ஸம்பாதிக்க வேண்டியதற்கு யுக்தி சொல்லிக்கொடுக்கவேண்டும்.

ஜட்ஜி.—அதேன்?

ஸாக்ஷி.—இந்த ஜன்மத்தில் என்னவோ நான் அபராதத் தொகையைச் செலுத்துகிற வழியைக்காணேன், பரலோகத்தில் எப்படிச் செலுத்துகிறது?

ஜட்ஜி.—அபராதம் கட்டாவிட்டால் ஜயிலுக்குப் போகவேண்டும்.

ஸாக்ஷி.—எத்தனை நாள்? தர்மாவதாரமே!

ஜட்ஜி.—ஒருமாதகாலம்.

ஸாக்ஷி.—இரண்டுமாத மிருக்கக்கூடாதோ?

ஜட்ஜி.—அதிகநாள் ஜயிலிலிருக்க நீ என் ஆசைப்படுகிறாய்?

கமலா.—தர்மாவதாரமே! இப்போது காலம் கெட்டுப்போயிருக்கிறது. முன்போலே ஸந்தர்ப்பணையோ நிமந்த்ரணமோ கிடைப்பதில்லை. ஜயிலிலே இரண்டு மூன்று மாதகாலத்துக்குப் போஜனம் கிடைக்கும்படி தாங்கள் தயவுசெய்து உத்தரவு செய்தால் இந்த எழை பிராஹ்மணன் ஸுகமாயிருப்பான்.

(இப்படிப்பட்டவர்களுக்கு அபராதம் விதிப்பதில் பயன் என்ன?)

ஜட்ஜி.—(சிரித்துவிட்டு) நல்லது, நீ தகரார் செய்யாமல் ஸரியாக வாக்குமூலம் கொடுத்தால் அபராதத்தை மன்னித்து விடுகிறேன். இப்போது சொல், உனக்கு அந்தப் பசு தெரியுமா?

ஜட்ஜி ஒரு ஜவானைக் கூப்பிட்டு 'பிரியாதியின் பசு விருக்குமிடத்திற்கு இவனை அழைத்துப்போய் அதைக் காட்டி அழைத்துவா' என்று திட்டம்செய்தார்.

ஜவான் காட்டி அழைத்துவந்தான்

வக்கீல்.—அந்தப் பசு தெரியுமா அய்யா?

ஸாக்ஷி.—கொம்புப்பசுவா, அப்படிச் சொல்லுங்களே.

வக்கீல்.—நீயே சொல்லு.

ஸாக்ஷி.—கறுப்புநிறம், அதல்ல, அது போகட்டும். அந்தக் கொம்ப்புபசு, எனக்குத் தெரியும்.

வக்கீல்.—அது யாருடைய பசு?

ஸாக்ஷி.—என்னுடையது.

வக்கீல்.—உன்னுடையதா?

ஸாக்ஷி.—என்னுடையதுதான்.

(ஐயோ பாவம்! பாபாவின் முகம் வாடிவிட்டது. கேஸ் கெட்டுப்போய்விட்டதென்று வக்கீல் நினைத்தான்.)

பாபா.—(பரபரப்புடனெழுந்து) அடே நீ நாசமாய்ப் போக, பசு உன்னுடையதா?

ஸாக்ஷி.—என்னுடையதல்லாமல் வேறே யாருடையது? நான் அதன் பாலைக் குடிக்கிறேன். அதன் மோரைக் குடிக்கிறேன். அதன் வெண்ணெயைத் தின்கிறேன். அப்படியிருக்க அந்தப் பசு என்னுடையதல்லாமல், நீ மேய்க்கிறது மாத்திரம்தானே, அதனால் உன்னுடையதாய்ப் போய்விடுமா?

(வக்கீலுக்கு இதன் அர்த்தம் தெரியவில்லை.)

வக்கீல். — (கோர்ட்டாரைப்பார்த்து) தர்மாவதாரமே! ஸாக்ஷி விரோதமாய் இருப்பதால் இவனை கிராஸ் (குறுக்குவிசாரணை) செய்வதற்கு கோர்ட்டார் அநுமதி தரவேண்டும்.

ஸாக்ஷி.—என்ன என்ன? என்னைக் கிராஸா செய்யப்போகிறாய்?

வக்கீல்.—ஆமாம். தடையில்லை.

ஸாக்ஷி.—அணை கட்டியா, படகு வைத்துக்கொண்டா?

வக்கீல்.—அதென்ன?

ஸாக்ஷி.—ஐயோ! இந்த கமலாகாந்த ஸமுத்திரத்தைத் தாண்டும்படி நீ இன்னும் அவ்வளவு பெரிய ஹநுமானாகவில்லையே.

(இப்படிச் சொன்னதும் கமலாகாந்த சக்கரவர்த்தி

கோபங்கொண்டு கிளிக்கூண்டிலிருந்து இறங்கப்போனான். ஜவான் அவனைப் பிடித்து மறுபடி அதிலேயே நிறுத்தினான். அவனை மீறி இறங்கிவிடச் சாத்தியமில்லாமல்போகவே ஸங்கடத்தோடு)

ஸாக்ஷி.—பண்ணப்பா, பண்ணு. கிராஸ் (தாண்டுகிறது) பண்ணு. நான் ஸமுத்திரம்போலே விழுந்து கிடக்கிறேன். இஷ்டமிருந்தால் ஒரே தாண்டாய்த் தாண்டிவிடு.

வக்கீல் ராயரே! இந்த ஸமுத்திரம் சாந்தமானது; அலைகள் இல்லை. ஸுகமாய்த் தாண்டிவிடலாம்.

வக்கீல் (கோர்ட்டாரோடு).— தர்மாவதாரமே! இவன் பித்தம் பிடித்தவனென்று தோன்றுகிறது. இவனைக் கிராஸ்பண்ணி உபயோகமில்லை. இவனை விசாரியாமல் விட்டுவிடவேண்டியதா யிருக்கிறது. இவனைப் போகச் சொல்லிவிடலாம்.

(தெய்வாதீனமாய்த் தொல்லை விட்டதென்று ஸந்தோஷத்தோடு ஜட்ஜி கமலாகாந்தனுக்குப் போகும்படி உத்தரவு கொடுக்கிறபோது)

பாபா.—மஹா ப்ரபுவே! உத்தரவு கொடுத்தால் நானே இவனை இரண்டொரு கேள்வி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜட்ஜி.—(ஆச்சரியப்பட்டவராய்) அப்படியே செய்.

பாபா.—(ஸாக்ஷியைப்பார்த்து) டாகூர்! நித்தியப்படி (அபினி தின்னுகிற) ஸமயம் வரவில்லையா?

ஸாக்ஷி.—அதற்கு ஸமயமாவது அஸமயமாவது? எல்லாம் ஸமயமே லவண்டிமிண்டாய்!

பாபா.—இப்போ அது வேண்டுமோ வேண்டாமா?

ஸாக்ஷி.—வேண்டாமல் போமோ, வேண்டும் கொடு.

பாபா.—என் கேள்விக்குச் சரியாய்ப் பதில் சொல்லிவிட்டால் அது கிடைக்கும்.

ஸாக்ஷி.—அப்படியா, ஆனால் வேகம்வேகமாய்க் கேள். வேகம் வேகமாய்ப் பதில் சொல்லிவிடுகிறேன்.

பாபா.—சொல். பசு யாருடையது?

ஸாக்ஷி.—அது மூன்று பேருக்குச் சொந்தம். முதல் வயதில் பெற்றவருக்கும் உபாத்தியாயருக்கும் சொந்தம். நடுவயதில் பெண்சாதியர்களுக்குச் சொந்தம். கடைவயதில் உத்தர வார்சுதாரருக்குச் சொந்தம். கயிறு அறுந்துபோனால் யாருக்கும் அல்ல.

பாபா.—ஐயா! அதோ நிற்கிற கறுப்புப்பசு யாரது?

ஸாக்ஷி.—அதன் பாலை யார் குடிக்கிறார்களோ, அவர்களுடையது.

பாபா.—அது என் பசு வல்லவா?

ஸாக்ஷி.—பட்டிமிண்டாய்! நீ அதன் பாலை ஒரு துளியாகிலும் குடித்திருக்கிறாயோ, இல்லையே. அதன் பாலையெல்லாம் விற்றுவிற்றுச் செத்துச் சுண்ணும்பாய்ப் போய்விடுகிறாயே. பால் விற்கிறதாலேயே பசு உன்னுடையதாய்ப் போய்விடுமா? அது உன்னுடையதாய் விடுவதானால் பங்காளம் பாங்கியிலிருக்கிற பணமெல்லாம் என்னுடையதாய்விடத் தடையென்ன? கொடுத்துவிடு. மிண்டாய் பசுவைத் திருடனுக்கே கொடுத்துவிடு. எழை, பாறும்! பாலைக்குடித்துப் பிழைத்துப்போகட்டும்.

ஜட்ஜி.—(அவ்விருவரையும் அடக்கிவிட்டு) பாபா அந்தப் பசுவின் பாலை விற்கிறாளோ?

ஸாக்ஷி.—ஆம் தர்மாவதாரமே!

ஜட்ஜி.—அந்தப் பசு அவன்வீட்டுத் தொழுவத்திலிருக்கிறதோ?

ஸாக்ஷி.—ஆம். அந்தப் பசுவும் இருக்கிறது. நானும் சில ஸமயம் அங்கே யிருப்பதுண்டு.

ஜட்ஜி.—அவன் அதற்குத் தீனி போடுகிறானோ?

ஸாக்ஷி.—பசுவுக்கு; எனக்கு, இரண்டுக்கும் அவன் ஆஹாரம் போடுகிறான்.

வாதிவக்கீல்.—என் வேலை முடிந்துவிட்டது. இனி கேட்கவேண்டியது ஒன்றுமில்லை.

(உடனே குற்றவாளியைப் பார்த்து வக்கீல் எழுந்தான். அவனைப்பார்த்து)

சாக்ஷி.—மறுபடி எழுந்த நீ யார் ஐயா?

அவன்.—நான் குற்றவாளியின் வக்கீல். உன்னை கிராஸ் செய்யப்போகிறேன்.

ஸாக்ஷி.—ஒருவன் வந்து கிராஸ் பண்ணிவிட்டுப் போய்விட்டானே, மறுபடி நீ குமாரபஹதூர் வந்தாயோ?

அவன்.—குமாரபஹதூர் யார்?

ஸாக்ஷி.—தெரியாதா? திரேதாயுகத்தில் கிராஸ் செய்தவன் ஹநுமான். பிறகு கிராஸ் செய்யக்கூடியவன் குமாரபஹதூர். (வாலியின் மகன் அங்கதன்.)

வா-வக்கீல்.—அதிருக்கட்டும். அந்தப் பசு தெரியுமென்று சொன்னாயே, எப்படி அப்பா தெரியும்?

ஸாக்ஷி.—ஒரு ஒரு தடவை கொம்புகளாலே, ஒரு ஒருதடவை கறுப்புநிறத்தாலே.

வா-வக்கீல். — (கோபித்துக்கொண்டு மேஜையைக் கையால் தட்டி) உன் பித்தம்பிடித்த ஆட்டங்களைத் தூரக்கட்டிவை. நீ அந்தப் பசுவைத் தெரிந்துகொண்டது எப்படி? சொல்.

ஸாக்ஷி.—அது 'அம்மா' என்று கூச்சலிடுகிறதே,

அத்தாலே என்றான். அந்த வக்கீல் அதைக் கேட்டதும் நிராசை (hopeless) என்று சொல்லி யுட்கார்ந்துவிட்டான். அவன் ஒன்றும் கேளாமையால் ஜட்ஜி ஸாக்ஷியைப்போய்விடும்படி சொல்லிவிட்டார். அவன் மூச்சுவிட்டுக்கொண் டோட்டமாய் ஓடினவன் வெளியிலே ஒரு மரத்தின் நிழலிலே உட்கார்ந்து உக்காகுடிக்கத் தடங்கினான். அனேகர் அவனைச்சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். இடைச்சி பாபாவும் அங்கே நின்றுகொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும், கமலாகாந்தன் அவளை வைது திரஸ்காரம் செய்து, "உன் பசுவின் சாணத்தின் மேலாணை, உன் மோர் தாயின் மேலாணை, உன் மத்தின்மேலாணை, உன் மூக்குத்திமேலாணை, இத்தனை ஆணையிட்டிருக்கிறேன். நீ பசுவை அந்தத் திருடனுக்கே கொடுத்துவிடு. நீ வைத்துக் கொள்ள வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

பக்கத்திலிருந்த ஒருவன் 'ஐயா! சக்கரவர்த்திகளே! பசுவைத் திருடனுக்கே கொடுக்கவேண்டியது எதற்காக?' என்று கேட்டான்.

"பசுவின் சொந்தக்காரனுக்கும் திருடனுக்கும் பசுவைப்பற்றி விவாதம் வந்தால், பசுவின் பாலை யார் குடிக்கிறானோ, அவனே பசுவுக்குச் சொந்தக்காரன் என்று தீர்மானிக்கவேண்டும். மற்ற பெயர் அதின் மேல் சொந்தம் பாராட்டுவது வீண் ஆடம்பரமே யல்லது வேறில்லை" என்று சியேநஜித் என்னும் அரசனுக்கு ஒரு பிராஹ்மணர் சொல்லியிருக்கிறார். (மஹாபாரதம், சாந்திபர்வம், 174 அத்தியாயம், 34-வது சுலோகம்). இது பீஷ்மதேவருடைய ஹிந்து லா. இது அனுஷ்டானத்துக்கு வரக்கடவதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இந்துலாவை அநுஸரித்துத்தான் யூரோப்தேசத்தில் இப்போது-(International law) ஏற்பட்டிருக்கிறது. இது வெவ்வேறு ஜாதியாருடைய அல்லது தேசத்தினுடைய பரஸ்பர ஸம்பந்தத்திற்காக ஏற்பட்டது. நீங்கள் நாகரீகம்பெற்று உன்னத பதவிக்கு வரவேண்டுமானால், சொத்தை அபஹரித்துத் தின்னவேண்டும். 'கோ' என்பதற்குப் பசுவென்றும் பூமி யென்றும் இரண்டு அர்த்தம் உண்டு. பூமி யென்னவோ திருடன் வசம். 'ஸகந்தரஷாஹ' முதல் ரணஜித்ஸிம்ஹன் வரையில் உள்ள அரசர்கள் எல்லாரும் திருடராயே பூமியை அநுபவித்து வந்ததே இதற்கு முக்கிய ஸாக்ஷியமாயிருக்கிறது. யுத்தத்தில் ஜயம் பெற்றவனுக்குப் பூமி சொந்தமாய் விடுகிறதென் றும்போது திருட்டிலும் அது சொந்தமாய்விடத் தடையென்ன? ஆகையால், அடி பாபாவென்கிற இடைச்சீ! நீ லாப்படி காரியம் செய். இதிஹாஸத்தில் சொல்லப்பட்ட ராஜநீதியைக் கைப்பிடித்து நட. திருடனுக்குப் பசுவைக் கொடுத்துவிடு" என்று படபடப்புடன் சொல்லிவிட்டுத் திடீரென்றெழுந்து கமலாகாந்தன் புறப்பட்டுப் போய்விட்டான். மறுபடி அவன் கண்ணுக்குத் தென்படவேயில்லை. எங்கே மறைந்து போய்விட்டானோ, தெரியவில்லை.

இது நிற்க, பிரியாதிதரப்பில் வேறு ஸாக்ஷிகள் இல்லாமையாலும் குற்றவாளிதரப்பிலும் ஸாக்ஷி யாரும் கோரப்படவில்லையாகையாலும் அந்தக் கேஸ் விசாரணை முடிந்ததாய்விட்டது. அதனால் ஜட்ஜியானவர் "உம்கேஸ் விஷயமாய் நீர் ஏதாவது வாதிக்கவேண்டியிருந்தால் வாதிக்கலாம்" என்று பிரியாதி வக்கீலுக்கு உத்தரவு செய்தார். அந்த வக்கீல் ராயர் எழுந்து நின்று அந்தக்கேஸின் நடவடிக்கைகளை யெல்லாம் சுருக்கமாகத் தெரிவித்து கமலாகாந்த சக்கரவர்த்திகளின் ஸாக்ஷியத்தால் பசு வாதிக்குச் சொந்தமென்று ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

குற்றவாளிபக்கத்து வக்கீல் எழுந்து நின்றுகொண்டு புன்சிரிப்போடு வாதித்ததாவது :—

"தர்மாவதாரமே! எனது ஸரியாளாகிய (compeer) எதிர்பக்கத்து வக்கீல் இந்தக் கேஸின் முக்கியாம்சம் இரண்டொன்றைக் கனம்பொருந்திய கோர்ட்டாரின் ஞாபகத்துக்குக் கொண்டுவராமல் விட்டுவிட்டிருக்கிறார். கமலாகாந்தன், தர்மாவதாரமே! புத்திஸ்வாதீனமில்லாதவன். அபினி தின்பவன். வாதி அவனுக்கு வழக்கமாய்ப் பால் கொடுத்துவந்தாள். (ஜட்ஜி—ஸாக்ஷியே அதை ஒப்புக்கொண்டிருக்கிறான்). அவனுக்கும் வாதிக்கும் ஏதோ ஒருவிதமான ஸம்பந்தம் இருப்பதுமல்லாமல், கமலாகாந்தன் தர்மாவதாரமே! பித்தம்பிடித்தவன். அவனிட பசு யாருடையதுமல்லவென்றும் சங்கிலிகளோடு கறுப்பு நிறமாய் சிவப்பு முகமான பசுக்கள் அநேகம் இருக்கின்றனவென்றும் சொல்லிப் பிரமித்துப்போய் கோர்ட்டின் மூன்பாக இருந்த வக்கீலைப்பார்த்து இதென்ன களவுசொத்தா?" என்று கேட்டிருக்கிறான்.—

ஜட்ஜி.—(சிரிப்புடன்) வக்கீலையே களவுசொத்தென்று காட்டுகிற அபிப்பிராயத்தால் வேடிக்கையாய்ச் சொன்ன வார்த்தை.

வக்கீல்.—அப்படிச் சாதுர்யமாய்ச் சொல்வதற்கு அவன் அவ்வளவு புத்திசாலியாகத் தோன்றவில்லையே.

ஜட்ஜி —தங்களவ்வளவு படித்தவனல்ல.

வக்கீல் — சரி.

ஜட்ஜி.—மேலே நடக்கட்டும்.

வக்கீல்.—இதென்ன களவுசொத்தா என்று வக்கிலின் முகத்தைப் பார்த்து ஆச்சரியத்தோடு கேள்வி கேட்டிருக்கிறான். உண்மையில் அந்தப்பசு களவுசொத்தாயிருந்தால் வக்கிலைப்பார்த்து அவன் அப்படி கேள்வி கேட்க வேண்டியதில்லையே.

ஜட்ஜி —(சிரிப்புடன்) (தனக்குள்) பேசுகிற களவு சொத்துக்கும் பேசாத களவு சொத்துக்கும் பேதம் காணப்படவில்லை. (வெளிப்படையாக) அவனுக்கு அவைகளின் பேதம் தெரியவில்லை.

வக்கீல்.—ஆம் ஆம். தர்மாவதாரமே! அவன் மூடனாகையால் பேதம் தெரியவில்லை. அவன் முதலில் பார்த்தது கொம்பில்லாத பசுவாயிருக்கலாம்.

ஜட்ஜி.—(Exactly I see so many of them in Court as sworn to by the witness.)

வாஸ்தவம் ஸாக்ஷி பிரமாணத்தின்பேரில் சொன்னபடி கோர்ட்டில் அப்படிப்பட்டவை அனேகம் இருப்பதை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

வக்கீல்.—அப்படிக்கில்லாதபக்ஷத்தில் கொம்புள்ள அந்தப்பசுவை உடனே அடையாளம் தெரிந்துகொண்டிருப்பன்.

ஜட்ஜி.—நீங்கள் தடையா யிருந்தீர்கள்.

வக்கீல்.—ஆகையால், கனம்பொருந்திய தர்மாவதாரமே!, கொம்பில்லாத பசுக்கள் பிரியாதிபக்கத்தில் இருந்திருக்கலாம் ஸாக்ஷி பார்த்தும் இருக்கலாம்.

ஜட்ஜி.—But only one Advocate appeared for the complainant? Did more than one appear for her?

பிரியாதிபக்கத்தில் ஒரே வக்கீல்தானிருக்கிறது போல் தெரிகிறது. இன்னும் யாராவது இருந்தால்—

பிரியாதிபக்கத்து வக்கீல்.—(தன் பக்கத்திலிருந்த இரண்டு வக்கீல்களைச் சுட்டிக்காட்டி) நாங்கள் மூன்று பேரும் பிரியாதிபக்கத்தில் வக்காலத்துப் பெற்றிருக்கிறோம்.

ஜட்ஜி.—(குற்றவாளியின் வக்கீலைப் பார்த்து) நீங்கள் சொல்வது சரி. வாதமெல்லாம் முடிந்துவிட்டதா?

வக்கீல்.—ஸாக்ஷியைப்பற்றிச் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லியாய்விட்டது. லாவிஷயமாய் ஒரே அம்சம் கனம்பொருந்திய கோர்ட்டாருக்கு ஞாபகம் செய்யவேண்டி யிருக்கிறது. அதுதவிர வேறில்லை. கோர்ட்டார் அதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இந்தியன் பினல் கோடு 379-வது பிரிவுப்படி எதிரிமேல் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. வாதி வக்கீல் அதைத்தான் வற்புறுத்திப் பேசியிருக்கிறார். அவர் அந்தப் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற உதாஹரணத்தைப் படித்துப் பார்க்கவில்லையென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. அந்த உதாஹரணத்தாலேயே கைதி திருடனல்லவென்றும் குற்றவாளியல்லவென்றும் நிஸ்ஸம்சயமாய் ஏற்படும். உத்தரவு கொடுத்தால் அந்த உதாஹரணத்தை வாசிக்கிறேன்.

(ஜட்ஜி புஸ்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு பார்க்கிறார்.)

வக்கீல்:—(தன் புஸ்தகத்தைப் பிரித்துக்கொண்டு) தயவுசெய்து கேட்கவேண்டும்.—நிதானமாய் ஒவ்வொரு பதமாய் வாசிக்கிறார்.

'A' என்பவன்—'B' என்பவனுடைய—சொத்தை—அவனுடைய—அநுமதி—யில்லாமல்—அநியாயமாய்—கொண்டுபோய்விட்டால்,—'A' என்பவன்—திருடினவனாகிறான்.

ஜட்ஜி.—மெய்தான். அது ஒரு உதாஹரணம். அதனால் குற்றவாளிக்குச் சாதகமென்ன?

வக்கீல்.—விசேஷ ஸாதகம் இருக்கிறது. தர்மாவதாரமே! பிரகிருத வியவஹாரத்தில் பிரியாதியின் பெயர் பாபா. அவளுக்கு 'B' என்று பெயரில்லை. தனக்கு 'B' என்றுபெயர் இருப்பதாக அவள் சொல்லிக்கொள்ளவும் இல்லை. மேலும் குற்றவாளி 'A' என்ற பெயருடையவனென்று பிரியாதியாவது பிரியாதிபக்கத்து ஸாக்ஷிகளாவது சொல்லவில்லை. இப்படியிருக்கையில் குற்றவாளியின்மேல் பிரியாது செய்ய பிரியாதிக்கு அதிகாரமில்லை. ஆக்டின் படிபார்த்தால் 379 நம்பர் பிரிவுக்குட்பட்ட தப்பிதம் செய்தவன் 'A' என்பவனாய் இருக்கவேண்டும். குற்றவாளி 'A' என்பவன் அல்ல. பிரியாதி அவர்பக்கத்து வக்கீலின் அவலம்பத்தால் நிரபராதியாகிய இந்த ஏழையைக் குற்றவாளியாக்கிப் பிரியாது செய்திருக்கிறாள். ஸாக்ஷிபிரமாணம் செய்திருந்தும் அவன் சொன்னதெல்லாம் பொய்யே. ஆகையால் கோர்ட்டார் அவர்கள் தயவுசெய்து வீணாக அலைக்கழித்துத் தொந்தரவு செய்ததற்காக எதிரிக்கு வாதி காம்பென்சேஷன் கொடுக்கும்படி கனம்பொருந்திய தர்மாவதாரர் அவர்களுடைய உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று முடித்துவிட்டு உட்கார்ந்தார்.

ஜட்ஜி.—வக்கீல்ராயரே! ஸாக்ஷிசொன்னதெல்லாம் உண்மையேயென்று நினைக்கிறேன்! கேஸ் அடுத்த வாரத்தில் தீர்மானிக்கப்படும். என்று சொல்லிவிட்டு வேறு கேஸை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

வஸந்த மாளிகை

VASANTHA MALIKAI

அத்தியாயம் 11

பிறிவு

SEPARATION

அந்தப்புரத்தில் நித்திரை செய்துகொண்டிருந்த பாநுமதி திடீரென்று விழித்து, பக்கத்தில் படுத்திருந்த தன் காதலனைக் காணாமல் வியசனமுற்று, 'ஏது! திடீரென்று சொல்லிக்கொள்ளக்கூட இல்லாமல் புறப்பட்டுவிட்டார். ஏதாவது பெண் பேதமையால் பிதற்றிவிட்டேனோ?' என்று பலவாறு சிந்தித்துக்கொண்டு கட்டிலினின்றும் இறங்கி அருகிலிருந்த நிலைக்கண்ணாடி முன் நின்று இரவில் நித்திரை மோஹத்தால் சிதிலமாய்க் கிடந்த தனது துயிலையும் கேசபாரங்களையும் சரிப்படுத்திக்கொண்டு மறுபடி ஆலோசித்துக்கொண்டிருந்தாள்.

இந்நிலைமையில் நமது ப்ரபு திடீரென்று ப்ரத்யக்ஷமாய் அன்னவளை வாரி யணைத்து மார்போடு மார்பணைத்து முத்தமிட்டு கண்மணி! விடைகொடு சீக்கிரம். நான் போய்வருகிறேன். நமது தண்டுதலிங்களெல்லாம் திருப்புரங்குன்றஞ் சோலையில் தங்கியிருக்கின்றது. எனது வெற்றி ஸமாசாரங் கேட்ட நமது மஹாராணியார் ஜயபேரியுடனும் மங்கள வாத்தியங்களுடனும் என்னை எதிர்கொண்டழைப்பதாய் நிரூபித்திருக்கின்றார்கள். காலதாமதமாகிறது. சூரியோதயத்துக்கு முன் யாவருமறியாமல் நான் சைநிய சாலை சேரவேண்டும். விடைகொடு கண்மணி!

'ப்ராணநாத!'

"கண்மணி! காலதாமதமாகின்றது, பிறகு எல்லாம் ஸாவகாசமாய்—"

"ப்ராணநாத! ஐயோ! ஒரு வேண்டுகோள்! ஒன்றே தான்!"

"கண்மணி! ஏது இவ்வளவு சஞ்சலம் எல்லாவற்றிற்கும் காலமுள்ளது. உன்னை ராஜகோலத்துடன்—"

ப்ராணநாத! அதுவும் ஒன்றுதான். ஆயினும் அஃதைப்பற்றி இப்பொழுது பிரார்த்திக்கவில்லை. என்னுடைய உயர் பதவியையும், உத்தம புருஷனாகிய தம்மைத் தேடி மாலையிட நேர்ந்த எனது பெரும்பாக்கியத்தைப்பற்றியும் எனது தகப்பனாருக்கு—

ஐயோ! அவருக்கு உடம்பு சௌக்கியமில்லையாமே! அவருடைய முகத்தைப் பார்த்து அவருக்குத் தெரிவித்து அவரது ஆசீர்வாதம் பெற்று வா விடைகொடுத்தருளவேண்டும்.

அசௌக்கியம்?—உன் தகப்பனார்?—யார் சொன்னது? கண்மணி உன்னை இப்பதவியினின்றும் கலைக்க யாரோ செய்த வஞ்சனை இது.

ப்ரதிதினமும், இரண்டு தடவையாவது தூதுவர் சென்று உன் தகப்பனாருடைய க்ஷேம சமாசாரம் விசாரித்து வருகின்றார்கள். உன் க்ஷேமஸமாசாரமும் உன் தகப்பனாருக்கு ஒருவாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எல்லாம் சுபமாகவே நடந்துவர இவ்வபவாதவார்த்தைகளை உனக்குச் சொல்லத் துணிந்தவன் யார்? "ப்ராணநாத! ஒருவருமில்லை. ஆயினும்—என் கண்ணாரக்கண்டு—மனதைச் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்பதுதான் எனது ஆவல்—"

சும்மா இரு! பாநுமதி! சும்மா இரு! எவ்வளவு இரகஸ்யமாக இவ்வந்தப்புரமானது பாதுகாக்கப்பட்டு வருகின்றதென்று நீ அறியாயோ? இவையெல்லாம் ஒரு காரணார்த்தமாகவென்று நினைத்தாயா அல்லது கேவலம் விளையாட்டென் றெண்ணினாயோ? உன் தகப்பனாரண்டை, யந்தக் குள்ளப்புரத்தான் அவன் பேரென்ன?— பீமராஜனோ—தர்மராஜன்—அடிக்கடி வருகின்றான். இவ்விரகஸ்யங்களெல்லாம் அவனறிதல் தகுதியன்று.

ப்ராணநாத! தர்மராஜன் தங்கள் கோபத்துக்கு எள்ளளவேனும் பாத்திரனல்ல. அவன் யோக்யன். ஸத்யஸந்தன். நான் சொல்லுவதின் உண்மையைத் தாங்களே ஒரு நாளறிந்துகொள்ளுவீர்கள்.

"எனக்கு அவன்மேல் நம்பிக்கையில்லை. என் கொடிய விரோதி. நமது ரகஸ்யங்களை யவனறிதல் கொஞ்சமேனும் தகுதியன்று."

"ப்ராணநாத! அவன் விஷயத்தில் ஏன் அவ்வளவு கடுமை?"

பெண்ணே! இதற்கெல்லாம் உனக்குச் சமாதானம் சொல்லிமுடியாது! ஆயினும் கேள்! இந்தத் தர்மராஜன் நமது கொடிய எதிரியான ராமராஜனுக்கு வேண்டியவன். இப்பொழுது இம்மதுரை ஸம்ஸ்தானமானது இருகட்சிப்பட்டிருக்கிறது. நான் மங்கம்மாள் கட்சியைச்சேர்ந்து அவள் தயவால் இம்மஹோந்நத பதவியை யடைந்திருக்கிறேன். புதுக் கட்சியைச்சேர்ந்த ராமராஜனைத் தலை எடுக்கவிடாது நமது மஹாராணியார் அடக்கிவிட்டார் என்னிடத்தில் ராணியார் அதிவிசுவாசமா யிருக்கிறார். இந்நிலைமையில் நமது விவாக விஷயம் ராணியார் காதில் விழுமானால் என்னை எவ்வாறு மதிப்பார்கள்,

"ப்ராணநாத! தர்மராஜனை தாங்கள் நேரில் அறிந்ததில்லை. அப்படியிருக்க அவன்மேல் ஏன் அவ்வளவு கொரோமா யிருக்கவேண்டும்? என் நிமித்தியமாய் அவன் எவ்வளவோ வருத்தமடைந்திருக்கின்றான். ஆதலால் என்னாலேயே அவன் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டும். நமது ரகஸ்யங்களை யவன் ஒருக்காலும் வெளிவிடமாட்டான். பரமயோக்யன்—அவன் பெயரைச் சொன்னபொழுதே இவ்வளவு கோபிக்கின்றீர்களே. அவனை நான் பார்த்திருந்தாலோ நேரில்—"

"பார்த்திருந்தால், அதோடு போகட்டும். ஒருவனைக் கெடுப்பது என் எண்ணமல்ல. ஆயினும் என் காரியத்துக்கு இடையூறாக எவன் குறுக்கிட்டாலும்—"

"பாபம்!" (முகம் வெளிறினாள்)

"கண்ணே! நீ ரொம்ப அசதியாயிருக்கின்றாய். சுகமாயிரு, இந்தச் சங்கடங்களிலெல்லாம் நீ கவலைப்படாதே. வேறு என்ன வேண்டும்?"

"ஒன்றுமில்லை. ஏதோ ஒன்று கேட்க விரும்பினேன். தாங்கள்செய்த கோபத்தடபிடலில் எல்லாம் மறந்துவிட்டேன்."

"சரி அடுத்த தடவை ஞாபகமாய்ச் சொல். நான் போய்வருகிறேன்" என்று சொல்லிச் சரேலென்று வெளியேறினான்.

ப்ரபு ஆசாரவாசலில் வந்ததும்,மஹாவீரன் தயாராய் வைத்திருந்த குதிரையின் முதுகில் வேகமாய்ப் பாய்ந்து குதிரையைத் தட்டிவிட, குதிரை வேகமாய்ப் புறப்பட்டது. "மஹாவீரா சீக்கிரம் தொடர்ந்துவா" என்று சொல்லி யதிவேகமாய்ச் சென்றான்.

"மஹாவீரனும் தன் குதிரையின்மீது பாய்ந்து அதிவேகமாய்ப் பின்தொடர்ந்தான். அரண்மனைக்குச் சற்று தூரத்தில் வலபத்ரனைக் கண்டான்."

"ஏனடா உன் தோழன் தர்மராஜனைக் காணவில்லையே! உன் முகத்தைப் பார்த்தால் தெரிகின்றதே!"

வலபத்ரன் (ஸலாமிட்டு) என்னையா! வேட்டை நாய் மாதிரி என்னேரம் தொடர்வது. இந்தத் திருவூர் முழுதும் பார்த்தேன். ஓடியே மறைந்து விட்டான்."

"சரி போகட்டும்! இதற்குமுன் எப்பொழுதாவது ராஜ வேலை பார்த்திருக்கின்றாயா?"

"இல்லை. ஆனால் ஒருநாள் ராஜாவேலை பார்ப்பேனென்று நான் சின்னப்போ, ஒரு கோடாங்கி குறி சொல்லியிருக்குதான்."

"அப்படியானால் அந்தக்குறி நிறைவேறாதது உன் தப்பிதந்தான்."

வலபத்ரன்.—"வாஸ்தவந்தான்! எனக்கும் ஆசை தான்!"

மஹாவீரன்.—"சரி! உனக்கு ராஜஸேவகத்துக்கு வேண்டிய குணங்களெல்லாம் தெரியுமா?"

வலபத்ரன்.—"ஏன் அதெல்லாம் கற்றுவைத்திருக்கிறேன். கவனமான பார்வை, மூடின வாய், தைர்யமும் தாயாருமானகை, பேச்சுத்திறமை, கல் நெஞ்சம்-எல்லாம்—"

'ஆகையால் உன் நெஞ்சம் கல்லாய்விட்டதென்று மதிக்கிறேன்'

என்னவோ ஐயா! என் நெஞ்சம் கல்லா இல்லாமல் இளக்கமாய் எக்காலத்திலாவது இருந்ததோ என்பது எனக்கே சந்தேகம். ஒருவேளை சின்னப்போ கொஞ்சம் கொஞ்சத்திலும் கொஞ்சமிருந்திருக்கலாம். அதுவும் போச்சு, பறங்கியர், நவாப் கும்பினியான் வெங்க பட்டாலித்தே சேர்ந்ததும் விடிந்தெழுந்தால் வெள்ளரிக்காய் நறுக்குவதுபோல ஆள்வேட்டையாடினது!

"ரொம்பசந்தோஷம்! அப்படியானால், எனக்கும் என் எஜமானனுக்கும் தக்க வேலைக்காரனாயிருப்பாய் என்று எண்ணுகிறேன். ஆனால் எங்களிடத்திலும் இப்படித்தான்—துரோக—"

வல.—"ஐயா! நான் உண்மையைச் சொல்லுறேன் இந்த ஆலமரத்தடியான் ஆணை. நீங்க கொஞ்சம் நல்லவுக. என்னை நீங்க சரியாய் வச்சுக்கிட்டா நானும் துரோகமில்லாமல்—தூக்குமரம் போனாலும் சரி, உழைப்பேன்."

மஹாவீரன்.—"இதெல்லாம் சரிதான். சமயங்களில் இந்த விளையாட்டுப் பேச்செல்லாம் விட்டுவிட வேண்டுமே!"

வல.—அவ்வளவுகூடத் தெரியாமலா போகும்."

"சரி அப்படியானால் புறப்படு" என்று மஹாராஜன் ஆக்ஞாபிக்க, வலபத்திரன் மரத்தடியில் கட்டியிருந்த குதிரையை யவிழ்த்து அதன்மேல் ஏற இருவரும் வேகமாய்ப் புறப்பட்டார்கள்.

SOUTH INDIAN FOLKLORE

திராவிடக் கதைகள்

இன்றைக்குத்தப்பினால் இன்றைக்குப் பதினைந்தாம் நாள்

ஓர் தாய்க்கு ஒரே மகன். அவன் தனது சின்னஞ் சிறுவயதிலேயே தகப்பனது முகத்தை இப்படி இருக்கும் என்று எண்ணாதவிதம் தெய்வம் செய்துவிட்டது. தாயும் தனது சிறுமகனை வெகு ஜாக்ரதையாக வளர்த்துவந்தாள். புத்துருக்கு நெய்யில்லாமல் ஒரு பிடி சோறு தின்ன அவனால் முடியாது. சொன்னதைக் கிளிப்பிள்ளைபோல் படிப்பதில் மிகு சாமர்த்திய முடையவன். வெகு சாந்தன்; பொறுமையாளி. இன்றைக்கெல்லா மடித்தாலும் அழத்தெரியாது. மிக புத்தி விசாலமுள்ளவன். அவனது கூரிய மதியை எண்ணி எண்ணி யாவருமவனை மந்தமதி என்றழைப்பது வழக்கம். அரையணாவை சிகப்பு ரூபா என்று சொல்லுவன். அவன் தாயாருடைய தங்கக்கொடியில் பதித்திருந்த தங்கமொஹராவை மஞ்சள் ரூபாய் என்றவன்சொன்னால் அவனைக்காட்டிலும் புத்திசாலி யார் இருப்பார்?

இந்த அசமஞ்ச சிகாமணியைத் தாய் வெகு செல்வமாக வளர்த்தாள். அவனால் தலையெடுக்க வேண்டுமென்ற எண்ணத்தால் அவள் செலவு செய்ததற்களவில்லை. தனது கடிகார சங்கிலியை எடுத்து அவன் நாய் கழுத்தில் கட்டி அதை அடித்துத் துரத்தியபோழ்து "ஐயோ! குழந்தை! சிறுவன்! தெரியாமல் செய்துவிட்டான்" என்று யாவர்க்கும் ஸமாதானஞ் செய்துவிட்டாள். மற்றொரு ஸமயத்தில் நமது மந்தமதி பிடிவாதம் பிடித்தழுதான் எதற்காக அழுதான் என்றவன் தாயால் அறிய முடியவில்லை. அப்பொழுது அவள் போட்டுவைத்த மந்திரங்களுக் களவில்லை; கேட்காத குறியில்லை; செய்யாத செலவில்லை. என்ன செய்தாலும் கொம்பேறிமூக்கன் கோபம் இறங்கவில்லை. மண்டையை யுடைத்து மாவிளக்கேற்றியிருந்தால் அக்கோபம் மலையேறி இருக்கும். ஆனாலும் அன்றைக் கடங்காவிட்டாலும் அடுத்த நாள் சிறுவன் முகம் விளம்பமாக விளங்கியது.

அன்றைக்குத் தனது உத்தம குமாரனுக்குத் தாயார் ஒருவேலை யிட்டாள். அவளுக்கு ஏகாதசி என்றைக்கென்று அறியவேண்டி இருந்தது. தான் அனுஷ்டிக்க வேண்டிய விரதமானதால் அவளுக்கு அவசியம்தெரிய வேண்டி இருந்தது. தனது செல்வக்குழந்தையைக் கூப்பிட்டு "அப்பா! நீ ஜாக்ரதையாக அடுத்த அக்ரஹாரத்தில் இருக்கும் வாத்தியாரை (புரோஹிதனை)க் கேட்டு என்றைக்கு ஏகாதசியென்று கேட்டுக்கொண்டு வா? ஜாக்ரதையாய்ப்போய் ஜாக்ரதையாகவா" என்றுத் தரவளித்தாள்.

நமதிளஞ்சிங்கமாகிய மந்தமதியும் "ஏகாதசி என்றைக்கு? ஏகாதசி என்றைக்கு?" என்று ஜபம் செய்துகொண்டு காலால் வழியெல்லாம் அளந்துக்கொண்டு போனான். அக்ரஹாரம் போய் புரோஹிதனைப் பார்த்து "ஏகாதசி என்றைக்கு? ஏகாதசி என்றைக்கு?" என்று கிளிப்பிள்ளைபோல் பாடினான். அவனும் வெகு விரைவாக "இன்றைக்குத் தப்பினால் இன்றைக்குப் பதினைந்தாம் நாள்" என்று விடை கொடுத்தான்.

சிறுவனும் "இன்றைக்குத் தப்பினால் இன்றைக்குப் பதினைந்தாம்நாள்" என்று ஜபித்துக்கொண்டுவந்தான். எவர் எப்படிச் சொன்னாலும் அப்படியே நடப்பது அவன் வழக்கம். துள்ளித்துள்ளி பசுவின் கன்றுபோல் குதித்துக்கொண்டுதனது குறலெட்டியவரையும் உச்சம்பெற "இன்றைக்குத் தப்பினால் இன்றைக்குப்பதினைந்தாம்நாள்" என்று ஜபித்துக்கொண்டே நடந்தான். வரும் வழியில் ஓர்வீட்டுத் திண்ணையில் இப்பவோ எப்பவோ என்று நெஞ்சுள் தங்கிய உயிரோடு ஒரு சின்னஞ்சிறுமகனை விட்டுக்கொண்டு கவலைப்பட்டுக்கொண்டிருந்தவர் பக்கத்தில் இவன், "இன்றைக்குத் தப்பினால் இன்றைக்குப் பதினைந்தாம் நாள்" என்று ஜபித்துக்கொண்டேநடந்துகொண்டிருந்தான். இவன் என்னமோ சொல்லிக்கொண்டு போனால் அவருக்கு நெஞ்சுள் பற்றிக்கொள்வானேன்? குற்றமுள்ள நெஞ்சங்குறுகுறுக்கும்? அல்லது இருண்டமனத்திற்குதுரும்புமேயெனை எல்லாம் பயமுண்டாக்குமோ? எதுவோ? எல்லாரும் நமது சிறுவனை அலட்டிவிட்டார்கள். அவனை வைததற்கு அளவு சங்கையில்லை. அடித்தார்களோ என்னவோதெரியாது. அது எப்படிபோனால நமக்கென்ன? சிறுவனை மடக்கி 'ஜாக்ரதை! இனிமேல் அப்படிச் சொல்லப் போகிறாய்? உன்னை அவன் என்னடா செய்தான்? ஐயோ பிள்ளை பிழைக்கவேண்டுமே என்று சொல்லாது என்னவென்னவோ உளறுகிறாய். இனி சரியாகச் சொல்வாய்! பத்ரம்!" என்றெச்சரிக்கை செய்தார்கள். சிறுவனும் அவர்கள் சொன்னதெல்லாம் நிச்சயம்தான் என்று எண்ணிக்கொண்டு "ஐயோ பிள்ளை பிழைக்கவேண்டுமே!" என்று மூலமந்திரத்தை மாற்றி மொணமொணத்துக்கொண்டே போனான்.

நமது சிறுவனது அத்ருஷ்டமே அத்ருஷ்டம்! போகுமிடமெங்கும் என்ன மரியாதை! வரும் வழியில் ஓர் கலியாணவீடு. அதன் வாயிலில் கன்றூஞ்சலாட வதூவரர் இருவரும் போகும் ஸமயம். அந்த லக்னத்தைப் பார்த்து வந்தவன்போல் நமது சிறுவன் "ஐயோ பிள்ளை பிழைக்கவேண்டுமே!" என்று சொல்லிக்கொண்டே பல்லிளித்துக்கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். யார் என்ன சொல்லி வாயைமூடிய போதிலும் சிறுவன் உத்ஸாகம் குறையாமல் "ஐயோ பிள்ளை பிழைக்கவேண்டுமே!" என்று ஜபித்துக்கொண்டிருந்தான். அதே ஸமயத்தில் கலியாணப்பிள்ளையின் காலில் அடிபட்டது. அபபொழுதே நமது சிறுவன் முதுகிலும் அடிபட்டது. யாவரு மவனைப் பிடித்து நன்றாகப் புடைத்தார்கள். தப்பிதமொன்று மறியாத சிறுவன் "ஐயோ பிள்ளை பிழைக்கவேண்டுமே!" என்று தேம்பித்தேம்பி அழுதான். பரிதாப நிலையைப் பார்த்த சிலர் "என் அப்பா! அப்படி சொல்லாதே! அழாதிரு! 'கௌரி கல்யாணமே வைபோகமே' என்று பாடு" என்றார்கள். உடனே சிறுவனும் "கௌரி கல்யாணமே! வைபோகமே!" என்று பாடலானான். இதற்குள் யாவரும் அவனைத் தட்டிக்கொடுத்து அப்புறமனுப்பிவிட்டார்கள்.

சிறுவன் "கௌரி கல்யாணமே! வைபோகமே!" என்று பாடிக்கொண்டு இருந்தான்; நடந்துகொண்டே இருந்தான். என்ன விசித்திரம்! இவன் போனவிடம் எல்லாம் பொங்கல்! யார்க்கு? எல்லார்க்குமா? அது கிடையாது; இவன் ஒருவனுக்குத்தான். வரும் வழியில் ஓர் வீடு கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. என்ன விதிவசம். அந்த வழியில் இந்த மதி போவானேன்? போனாலும் தகுந்த விதமாக "கௌரிகல்யாணமே! வைபோகமே!" என்றவன் பாடிக்கொண்டு போகவேண்டுமோ? வருவன தாமே வரும்; யாரால் தடுக்க முடியும்? வீடு தடபுடலாகத்தான் எரிந்துகொண்டிருந்தது படீல் படீல் என்று வெடித்துக்கொண்டு உத்திரங்கள் ஜ்வாலையில் குளித்துக்கொண்டிருந்தன. கரியாய்ப் போன பாகங்கள் சுடுகாற்றால் தூக்கப்பட்டு பறந்துகொண்டிருந்தன. கண்டிராத காட்சி. சிறுவன் கண்கொட்டாது பார்த்துக்கொண்டு நின்றுவிட்டான். சும்மா நிற்கவில்லை. "கௌரி கல்யாணமே! வைபோகமே!" என்று எச்சரித்துக்கொண்டு தன் பாட்டத்தைப் படித்துக்கொண்டிருந்தான். வீடெரிய வயிறு எரிய நின்ற சொந்தக்காரன் இவனைக் கண்டதும் கோபாவேசத்தோடு ஒரு அடி வைத்தான். உச்சம்பெற அவன் அதேபாட்டைப் பாடினான். அடித்ததால் ஒன்றையும் காணாதவன் ஓய்ந்தான். ஆனால் சிறுவன் வாய் அப்பாட்டை விட்டோயவில்லை. இதற்குள் ஊரெல்லாங்கூடி அவனிருமவியாகி சிறுவனைத்தேற்றி "தடியாலடித்து தண்ணீர் கொட்டு" என்று மூலமந்திரத்தை மாற்ற உபதேசித்தார். பழுக்க உபதேசம் பெற்ற சிறுவனும் புதுஜபத்தை அப்யஸித்துக் கொண்டே நடந்தான்.

அப்பாடி! வீட்டை யடைந்தான். தாய் "ஏகாதசி என்றைக்கு?" என்றாள்.

"தடியாலடித்து தண்ணீர் கொட்டு" என்று பதிலளித்தான்.

"என்னடா உளறுகிறாய்" என்றாள்.

அப்பொழுதும் அதுவே பதில் கிடைத்தது. மறுபடியும் கேட்டாள். ஒரே பதில்தான். அவளுக்குக் கோபம் மூண்டு தன் கையிலிருந்த செம்பிலிருந்த நீரால் அவனுக்குத் திருமஞ்சனமாட்டி மடிபுலர்த்தும் கழியால் பூஜை செய்தாள். பூஜையுடன் மந்திரபாடம் பேதமடைந்துவிட்டது. "கௌரிகல்யாணமே! வைபோகமே" என்று குதித்துக் குதித்துக் கூவினான்.

"என்ன கூத்தடா இது? ஏகாதசி என்றைக்கு?" என்றாள்.

"கௌரிகல்யாணமே! வைபோகமே!" என்றான்.

தாய் கோபித்து, மீண்டும் தான் என்றும் அடியாத பிள்ளையை, செல்வக்குழந்தையை தோல் வெளுக்கப் புடைத்துவிட்டாள்.

"ஐயோ பிள்ளை பிழைக்கவேண்டுமே!" என்று சிறுவன் அலற ஆரம்பித்தான். அழத்தெரியாதவன் தேம்பித் தேம்பி அழலானான்.

பரிதாபமுற்று தன் விரதானுஷ்டானத்தின்பேரில் மிகு கவலையுற்றவளாய் "என்றைக்கடா ஏகாதசி? சொல்லித் தொலையேனடா" என்றவள் உரத்துக் கூவினாள்.

"இன்றைக்குத் தப்பினால் இன்றைக்குப் பதினைந்தாம் நாள்" என்று வெகு அமைதியுடன் மந்தமதி உத்தரமளித்தான்.

தீயாரோடிணங்கேல்.—புலியினுள்ளும் பகவான் இருக்கின்றார் என்பது உண்மையாயினும், நாம் போய் அந்த ஜந்துவின் முன் நிற்கலாகாது. அவ்வாறே, பரம துஷ்டர்களிடத்தும் பகவான் இருப்பினும் அவர்களுடன் நாம் சேர்வது சரியன்று.

—உபதேசரத்நமாலை

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

I. நியாயமஞ்சரி.

55. गोबलीवर्द न्यायः

గోబలీవర్ద న్యాయం

கோபலீவர்த்த ந்யாயம்.

இதற்கு காளை பசுந்யாயம் என்பது பொருள். இங்கு பசு என்பது பொதுவான ஜாதிப்பெயராக உபயோகப்படுத்தியுள்ளதே ஒழிய பால்கரக்கும் பசுமாடு என்ற பொருளில் உபயோகப்பட்டதல்ல. ஆகவே இதனுள் ஆடுமுதலிய க்ராம்யமிருகங்களும் அடங்கிவிடும். ஆகவே இந்த ந்யாயத்திற்கு பசுஜாதியைச் சேர்ந்த காளைமாடு என்று பொருள். இதற்குத் தமிழில் சுருக்கிப் பொருள் கூறுங்கால் காளையாகிய பசு ந்யாயம் என்று அமைந்து நிற்குமாதலால் இதை இலக்கணங்களில் இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்று பெயரிட்டழைத்திருக்கின்றது. இந்த தொகைக்கு உதாரணமாக் சாரைப்பாம்பு என்பது காட்டப்பட்டிருக்கிறது. இதற்கு சாரையாகிய பாம்பு அதாவது பாம்பு ஜாதியைச்சேர்ந்த சாரைப்பகுதி என்று விரியும். இதுபோல ஸ்தாவர ஜங்கமநூல்களில் ஒவ்வொரு செடிகொடி புற்பூண்டு, பூச்சி, புழு முதலியவைகளை சாஸ்திரப்படிப் பெயரிட்டழைக்குங்கால் பகுதிப் பெயரை ஜாதிப் பெயரோடு கூட்டியே கூறி விளக்குவது வழக்கம். இது பொதுப்பெயரும், சிறப்புப் பெயரும் சேர்த்து ஒரு வஸ்துவின் ஸ்வரூபம் நன்கு விளங்குவதற்காகப் பெயரிட்டழைக்கும் இடங்களில் எல்லாம், ந்யாயம் உபயோகப்படும். இதற்கு गोवृषन्यायः என்ற பாடபேதமும் உண்டு. பொருள் வித்தியாசமே இல்லை.

56. गोमयपयसी न्याय:

గోమయపయసీన్యాయం

கோமயபயஸீ ந்யாயம்

இதற்கு சாணிப்பால் ந்யாயம் என்பது பொருள். சாணியும் பாலும் பசுவினிடமிருந்தே உண்டாவதால் சாணியும் பாலும் ஒன்றே என்பது போன்ற அறியாமை விஷயமான ந்யாயம் இது. ஒரே காரணத்திலிருந்து வரும் பல காரியங்களும் ஒரே மாதிரியாகவே இருக்கும் என்று எதிர்பார்த்துக் குதர்க்கம் செய்யும் மூடர்கள் நிலையை விளக்குவது இது. இந்த ந்யாய விஷயத்தை கைவல்ய நூலாசிரியர் பின் வருமாறு ஞானம் கர்மமல்ல என்ற விஷயமாக திருஷ்டாந்த பூர்வகமாகப் பொருத்துகிறார்:—

விருத்திஞானமும் அந்தக் காணத்தொடு
விருத்தியாகிலும்மைந்தா
ஒருத்திமக்களே தங்களிற் பகைக்கின்ற
துலகெங்குங் கண்டோமே
கருத்தனாகிய புருட தந்திரங்களாம்
கருமங்கள் அவைபோல
வருத்தஞானமோ புருட தந்திரமன்று
வஸ்து தந்திரமாமே.

இந்நியாயத்தால் காம்ஒருமாதிரி நடந்துகொண்டால் முடிவு இம்மாதிரிதான் வரும் என்று எதிர்பார்க்க இடமே இல்லை என்பது தோன்ற, ஒருகாரணத்தாலே உண்டாகுங்காரியம் பலவிதமாக இருக்கலாம் என்று தேறி இருக்கும் நிலை நமக்கு வரும்.

57. घट्टकुटीप्रभात न्यायः

ఘట్టకుటీప్రభాతన్యాయం

கட்டகுடீப்ரபாத ந்யாயம்.

சுங்கச்சாவடி அருகில் பொழுதுவிடிந்த ந்யாயம் என்பது இதன் பொருள். வெளியூரிலிருந்து சாக்கு ஏற்றி வந்த வியாபாரி சுங்கச்சாவடியருகில் மாலைப் பொழுதில் வர, சுங்கம் கொடுக்காது தப்பி உள்ளே புகுந்து விடவேண்டும் என்று எண்ணங்கொண்டு, வந்த வழியே திரும்பிப்போய் வேறு மார்க்கமாக ஊருள்புக யத்தனித்தான். இப்படி இவன் செய்கையில் இருள் வந்து மூடிக்கொள்ள காட்டு வழிகளில் வழி தெரியாமலும், இன்னபுறம் போகிறோம் என்று அறியாமலும் திண்டாடி இரவுமுழுவதும் கஷ்டப்பட்டு, பொழுது விடிந்த காலத்தில் மாலைவிட்ட சுங்கச்சாவடிக்கே வந்து சேர்ந்துவிட்டான் என்ற ஒருகதை ஸம்பந்தமாக ஏற்பட்டது இந்த ந்யாயம்.

ஒரு கெடுதியை விலக்க எண்ணி பெரு முயற்சி செய்தும் முடிவில் அவைகள் மூலமாகவே அந்தக் கெடுதி ஸம்பவிக்குங்கால் இந்நியாயம் உபயோகப்படும். அதாவது எண்ணியது கைகூடாக்கால் இது பொருந்தும் என்பதாயிற்று. விதி வலிது: அதை விலக்கச் செய்யும் ப்ரயத்னங்கள் எல்லாம் வீணாகி வருவதைக் கொண்டு சேர்க்கும் ப்ரயத்னங்களாக முடியும் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். தமிழ்பாரதத்தில் ஜனமேஜயன் பாரதம் கேட்கத் தொடங்கியதற்கு ஒரு விசித்ர கதையுண்டு. அது இந்த ந்யாயத்திற்கு உதாரணமாகும்.

ஸர்ப்பயாகம் அஸ்தீகரால் நின்றதும், வியாஸர் ஜனமேஜயன் ஸபையை நோக்கி வந்தார். அவரைக்கண்டு அரசன் 'நீர் ஞானியாய் இருந்தும் என் மூதாதைகளுக்குள் சண்டைவரவொட்டாது தடுத்து அவர்களுள் ஸமாதானம் செய்துவிடுவதை விட்டு அவர் சண்டையிட்டு மாளும்படி என் பார்த்திருந்தீர்?' என்று கேட்டான். அதற்கு அவர், 'நமக்கு என்ன தெரிந்தபோதிலும் என்ன? அவசியம் நடக்கவேண்டியதை யாரால் தடுக்கமுடியும்' என்று சொல்ல, 'நீர் நினைத்தால் முடியாதா? அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டிறக்கும்படி செய்துவிட்டீரே!' என்று அரசன் மறுபடியும் வியாஸரைக் குற்றங் கூறினன். வியாஸர் தமது வார்த்தையின் உண்மையை அரசனுக்குக்காட்ட, தமது ஞான திருஷ்டியால் பார்த்து 'ராஜனே உனக்கு இன்றைக்குச் சரியாய்ப் பத்தாம்நாள் ஒரு பிரம்மஹத்தி தோஷம் ஸம்பவிக்கப்போகிறது. எங்கே! உன் பிரயத்தனங்களால் அதைத் தடுத்துவிடு பார்ப்போம். நான் பத்தாம் நாள் உன்னிடம் வருகிறேன்' என்று சொல்லி தமது இருப்பிடம் சென்றார். உடனே அரசன் அநேக பிராம்மணர்களை அழைத்து வரப்போகிற பிரம்மஹத்தியைத் தடுப்பதற்கு உபாயத்தை ஆலோசித்தான். பிராம்மணர்கள் எல்லோரும் 'இன்றுமுதல் யாராவது ஒரு பிராம்மணனை நியமித்து அஹோராத்திரம் தண்ணீர் கூடக் குடியாமல் அக்னியில் வேதமந்திரங்களால் ஹோமம் செய்தால் பிரம்மஹத்தியைத் தடுத்து விடலாம்' என்று அரசனுக்கு உபாயம் கூறினர். இதை சரிவரநடத்தவல்லவர் யாராவதுவந்துநடத்துவித்தால், அவர்களுக்கு ஏராளமான பொருள் கொடுப்பதாக அரசன் சொல்ல ஒருவரும் தைரியமாய் முன்வரவில்லை. அப்பொழுது தரித்திரத்தால் பீடிக்கப்பட்ட ஒரு கிழட்டு பிராம்மணர் அந்த வேலையை ஒப்புக்கொண்டு ஊண் உறக்கமின்றி ஒன்பதுநாள் ஹோமத்தை ஸரிவர நடத்திவிட்டார். ஒன்பதாம்நாள் பின் இரவில் நாலாம் ஜாமத்தில் அந்தப் பிராம்மணன் கொஞ்சம் கண்ணயர்ந்தார். அருகில் மந்திரம் சொல்லிக்கொண்டிருந்த அரசன் அவரை எழுப்பத் தர்ப்பை நுனியால் அவரைத் தொட்டான். உடனே அலறிக்கொண்டு அவர் நெருப்பில் விழுந்து இறந்தார். உடனே பத்தாம்நாள் காலையில், வியாஸர் சொல்லிப்போன பிரம்மஹத்தியும் அரசனை வந்து பிடித்துக்கொண்டது. அந்த ஸமயத்தில் வியாஸர் தமது சிஷ்யர்களோடு அங்குவந்து, 'வருவன தாமே வரும். நாம் தடுத்தால் நிற்கா. நமது புத்தியைக் கொண்டு அவைகளைத் தடுக்க முயன்றால், அம்முயற்சியே வருவனவற்றிற்கு ஸஹாயமாக ஏற்படும்: இப்பொழுதாவது, நான் முன்சொல்லிய வாக்கின் பொருள் நன்றாய் விளங்கியதா?' என்று கேட்டார். அப்பொழுது அரசன் தான் செய்த அபராதத்திற்குத் தகுந்த தண்டனை ஸம்பவித்ததாகச் சொல்லி மஹா விநயத்துடன் அதை நீக்க உபாயம் சொல்லவேண்டும் என்று வியாஸரைக் கேட்டான். அதற்கு அவர் 'என் சிஷ்யர் வைசம்பாயனரைக்கொண்டு உனக்கு பாரதத்தைச் சொல்லுவிக்கிறேன். அதனாலே உனக்கு பிரம்மஹத்தி போவதும் அன்றி, உன் மூதாதைகள் விஷயமாக என்னிடம் வந்த அவநம்பிக்கையும் உனக்குத் தீரும். இந்தக் கரியவஸ்திரத்தை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொள். நீ பாரதம் கேட்கக்கேட்க, அந்தக் கரியவஸ்திரம் வெள்ளையாய்க் கொண்டேவரும். இதுதான் உன் பிரம்மஹத்தி போவதற்கு அடையாளம்' என்று கூறி வைசம்பாயனரை நோக்கி ஜனமேஜயனுக்குப் பாரதம் சொல்லும்படி கட்டளையிட்டுத் தமது ஆச்ரமம் சென்றார். இதுதான் வைசம்பாயனர் ஜனமேஜயருக்குப் பாரதம் சொல்லிய காரணம்.

இம்மாதிரியே வாதத்திலும் ஒருவிஷயத்தை இல்லை என்று சாதிக்கப்புகுந்து கக்ஷி கூறிவரும்பொழுது அதன் உண்மையை ஒத்துக்கொள்ளும்படியான நிலைக்குத்தானேவந்து விடுங்காலும் இந்நியாயம் உபயோகப்படும். மேனாட்டார், மனிதன் பிரபஞ்ச அனுபவத்திற்கு வெளி வஸ்துவும், அதனிடம் ஓடியாடித் திரிந்து உணரும்மனதும்மாத்திரம் போதும்என்றுகூறி வாதித்து வந்து முடிவில் முன்விஷயங்கள் ஞாபகம் நமக்கு எப்படி பின்னர் ஏற்படுகிறது என்ற கேள்வி வருங்கால் ஓடியாடித்திரியும் மனம் தன் திரிதலையும் உணரும் சக்தியுள்ளதாக இருக்கவேண்டும் என்று முற்கூறிய மனதின் லக்ஷணத்திற்கு விரோதமாகக் கூறும்படி வந்துவிடுகிறது இதனாலேயே ஸகலத்தை உணரும் சக்தியுடன் மனம்போல மாறும் தன்மை இல்லாத ஸாக்ஷிஒன்று மனதிற்கு அப்பாலிருக்கவேண்டும் என்பது ஸ்திரப்பட,மனமும்,வெளிப்பொருளும் தவிர வேறொன்றும் வேண்டுவதில்லை உலக அனுபவத்திற்கு என்றவாதம் இந்நியாயத்திற்கு வேதாந்தபரமான நல்ல திருஷ்டாந்தம்.

58. घुणाक्षर न्यायः

ఘుణాక్షరన్యాయం

குணாக்ஷர ந்யாயம்.

குளவி எழுத்து ந்யாயம் என்பது இதன் பொருள். மரத்தில் தொளைக்கும் குளவி, புத்தகங்களில் தொளைக்கும் பூச்சி, நத்தை முதலியன உண்டாக்கும் தொளை கோடு முதலியவைகளில் சிற்சிலஸமயங்களில் எழுத்துருபம் வந்துவிடும். இதுபோலவே சிறு குழந்தைகள் கற்பலகை, தரைமுதலிய விடங்களில் கண்டபடி கோடிழுக்குங் காலத்திலும் அக்ஷரரூபம் வந்துவிடும். இம்மாதிரி குழந்தைகள் மழலைச்சொற்களில் நன்றாக அமைந்த பதங்களும் வரலாம். இவைகளுடன் ஸம்பந்தப்பட்டது இந்நியாயம். ஒரு காரியத்தில் முயன்று வரும்பொழுது எதிர்பாராதமற்றொருகார்யம் ஸித்தியாகுங்கால் இந்த ந்யாயம் உபயோகப்படும். உறவினர்களைக் கொல்லவேண்டியிருக்கிறதே, யுத்தம் விட்டு நீங்கிவிடவேண்டும் என்ற அர்ச்சுனனுக்கு வேதாந்த ப்ரஸங்கம்கேட்டு ஸர்வதுக்க நிவாரணமாகும்படிக் கிடைத்ததும், தகப்பன் மடியில் உட்கார்ந்து ஸுகிக்கவேண்டுமென்ற கருத்துடன் சென்று தவம்செய்யச்சென்ற துருவருக்கு தவ முடிவில் பரமபதம் வேண்டுமென்று மனம் திரும்பியதும், இதுபோல

ஒன்றை நினைக்கும்பொழுதே வேறொன்று மனத்தில் வருவதும் இந்நியாயத்திற்கு உதாரணங்கள்: ஔவை நல்வழியில் இந்நியாய விஷயத்தை,

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்

என்ற பாட்டில் நன்கு விளக்கியிருக்கிறாள். இந்நியாயத்திற்கும் காகதாளீய ந்யாயத்திற்கும் கருத்து ஒன்றே. நமது ஸத் பிரயத்னங்கள் ஸுகத்திலும், அஸத் பிரயத்னங்கள் துக்கத்திலும் முடியவேண்டியது அவசியமில்லை. மாறியும் மாறாமலும் முடியலாம். எல்லாம் முடியும்விதம் குணாக்ஷரம்போல என்றே மதித்து நாம் தேறியிருத்தல் வேண்டும்.

32. ABSENCE OF MIND.

A man who had occasion to provide himself with a pair of new shoes, took the measure of his own foot to a nicety, intending to send a boy to the shoe maker's, about three miles distant, to fetch him the shoes. Something however occurred to prevent the boy from going, and the man resolved to go himself: He accordingly set off on his journey and was about half way on his road, when he suddenly stopped short, scratched his head, and muttered to himself; 'I have forgot the measure.!' Back he went to procure it, and then proceeded to his original destination. Here he learned with astonishment from the shoemaker that he migat have saved himself the trouble of going back for the measure, for his foot would have answered far better.

மனத்தடுமாற்றம்.

ஒருவனுக்கு ஒருஜோடி செருப்புவாங்கும் தருணம் வர, அவன் தன்கால் அளவை வெகு நுட்பமாக எடுத்து, மூன்று மைலுக்கு அப்பாலுள்ள ஒரு செம்மான்கடைக்கு ஒரு சிறுவனை செருப்பு வாங்கிவர அனுப்புவதாக விருந்தான். ஒருவிஷயம் நடந்து அச்சிறுவனைப் போகவொட்டாது தடுத்துவிட, அவன் தானே போவதாகத் தீர்மானித்துவிட்டான். இதன்படி அவன் பயணம் புறப்பட்டுப் பாதிவழி போயிருப்பான்; உடனே திடீரென்று நின்று, தலையைச் சொறிந்துகொண்டு 'அளவைக்கொண்டுவர மறந்துவிட்டேனே!' என்று முணுமுணுத்தான். போனான் அதை எடுத்துவர வீட்டுக்கு, பின்னர் தான் போகவேண்டிய விடம் நோக்கி நடந்தான். இங்கு வந்ததும், 'அளவு விஷயத்தில் காலே சிறந்தது, ஆதலால் அளவை எடுக்க திரும்பிப்போன கஷ்டம் வேண்டியதில்லை,' என்று செம்மானிடமிருந்து தெரியவரத் திகைத்து நின்றான்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்தியாயம் 20

வேதாந்தம் நிலைபெற்றது

மையரிசேர் கண்ணார் மயக்குகின்ற தன்மையென்றும்
மெய்யடியார் பக்கத்து மேவாதால்—வையத்து
இணரெரிமாட் டின்னா எரித்தன்மை நீரார்
புணரியணு காவாறு போல்.

முற்கூறிய விஷயங்கள் நடந்தேறி ஸுமார் ஒரு மணி நேரத்திற்கப்பால், ஒரு அய்யங்கார் வாஸுதேவ சாஸ்திரி படுத்திருந்த இடத்திற்கு வந்து அவரைத் தட்டி எழுப்பினார். அவர் எழுந்ததும், 'ஐயா! இது தேவடியாள் வீடாச்சதே! இங்கு தாங்கள் படுத்திருப்பது நியாயமல்லவே! மேலும், பனி அடிக்கிறது, எப்படி ஐயா தரையில் படுக்க உமக்கு மனம் வந்தது? என் வீட்டிற்கு வாரும், பாய் தலையணை, கம்பளி முதலியவைகள் தருகிறேன். போவோம்' என்று மிகுந்த அன்புடன் கூறினார் அய்யங்கார். 'எனக்கு இப்படிப் படுத்து வழக்கம் உண்டு; எனக்காகத் தாங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டதே மேல். உமது மனக்கனிவைக் காணுங்கால் எனக்கு ஸந்தோஷம் வருகிறது. இதுவே எனக்குப்போதும். காலையில் உம்மைப் பார்த்துப் பேசிக்கொள்ளுகிறேன்' என்று அமைதியுடன், அய்யங்கார் ஸஹாயத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அய்யங்கார் விடாது அவரைத் தன்னுடன் வந்து தன்னை இருதார்த்தப்படுத்தவேண்டும் என்று மன்றாட, அதைநிராகரிக்க முடியாது, அவர் பின்னே எழுந்துபோகத்தலைப்பட்டார் சாஸ்திரி. அய்யங்கார் வீட்டிற்குப்போகிறோம் என்ற பூர்ணநம்பிக்கையுடன் அவரை சாஸ்திரிபின்தொடர்ந்தார். அய்யங்கார் இவரை ஒரு வீட்டின் அழைத்துச்சென்று வெகு விநோதமாக அலங்கரிக்கப்பட்ட தேவடியாள் படுக்கை உள்ளில் இவரைத் திடீரென்று தள்ளி கதவைச்சாத்தித் தாளிட்டுவிட்டார். ஆச்சர்யத்தால் அசைவற்று நின்றுவிட்டார் சாஸ்திரி! 'இதென்ன வெகு அதிசயச் சூதாகவிருக்கிறதே! பலே' என்று வியந்து கூறிவிட்டு அடிக்கடி கதவிடிக்கத் தொடங்கினார். இவரைக் கவனிப்பார் ஒருவரும் காணப்படவில்லை. எங்கும் நிச்சப்தமாக விருந்தது. ஒரு மாய மண்டபத்துள்ளி

ருப்பதாக அவருக்குத் தோன்ற, அவருக்கு இன்னது செய்வது என்றுப் புலப்படவில்லை. இதைவிட்டுவெளியேறுவது அஸாத்யம் என்று அவருக்குத் தோற்றிவிட்டது இம்மாதிரி ஸுமார் அரைமணிகிடந்து தத்தளித்தார் சாஸ்திரி. 'இதைப்பற்றி யோசிப்பதில் பயன் என்ன. எல்லாம் கடவுள் பாரம்' என்று மனதைத் தேற்றிக்கொண்டு வெறும் தரையிலிபடுத்து உறங்கத் தொடங்கிவிட்டார்.

திடீரென்று ஒரு இனிமையான ஸங்கீத த்வனி அவர் காதில் விழுந்தது. அதில் கணேசர் பரமசிவன் மஹாவிஷ்ணு முதலியவர்பரமான வெகு அருமையான கருத்துக்கள் அமைந்திருந்த பாடல்கள் இழைந்து வெளிப்பட்டன. சாஸ்திரி கேட்கிறார் பாட்டை; அதுகிளம்பும் இடம் இன்னது என்பது விளங்கவில்லை. மேலி கீழ் நாற்புறம் எல்லாம் திரும்பித் திரும்பி வெருண்டு நோக்குகிறர்! ஒன்றும் பயன்படவில்லை. உடனே அந்தர்முகப்பட்டு பாட்டின் சாரத்தில் சித்தைவைத்து அசைவற்று நிற்கிறர். திடீரென்று திரை நகருவது போன்ற சப்தம் ஒன்றும் அவர் காதில் விழுந்தது. கண்விழித்து வெகு ஆவலுடன் மினமினா நோக்குகிறார். ஸுமார் ஐந்துநிமிஷம் நிச்சப்தம்! மறுபடியும் அதே சப்தம் பிறந்தது; மறுபடியும் தலைதூக்கி பார்த்ததும் ஒன்றும் புலப்படவில்லை. பாட்டு துரிதப்படுகின்றது: வாஸனை கமகமாயக்கத் தொடங்கிவிட்டது. காப்பு, கொலுஸு, பாதஸரம், கிண்கிணிகளின் ஜிலிஜிலிப்பு சப்தமும் அவர் காதில் விழத் தொடங்கிவிட்டது. திடீரென ஒரு திரை உயருகிறது! கந்தர்வஸ்திரீபோன்ற ஒரு பெண் நர்த்தனம்பண்ணிக்கொண்டு வருகிறாள்!! ஸரஸ்வதிபோன்ற வெள்ளைக்கலையுடுத்து, தாமரைமாலை, வயிரமாலை முதலியவைகள் அணிந்து, தேஹமெல்லாம், முத்து, வயிரம், கெம்பு, தங்கம் இவைகளாலாகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, அங்கிருந்த ஜிலுஜிலுப்பான ஜகத்ஜ்யோதி ப்ரகாசத்தால் அதிகரித்த சோபையுடன் விளங்கிக்கொண்டு ஒரு அமானுஷரூபம்போல அவள் காணப்பட்டாள்!!! பாட்டும் ஆட்டமும் துரிதப்படுகின்றன. ஆச்சர்யத்தில் மூழ்கிக் கிடக்கும் சாஸ்திரியை நோக்கி அந்த சுந்தரஸ்வரூபம் அணுகி வருகின்றது. வெகு கிட்டே வந்துவிட்டாள். சற்றேறக்குறைய ஒரு அடி தூரம்தான் இருக்கும். அந்த தேவ தோற்றத்திற்கும், குழம்பும் வேதாந்திக்கும்! அந்த உள்ளைவிட்டு ஓடஎழுந்திருக்கிறர். வழியறியாது விழிக்கிறர்!! 'இதென்ன விபரீதம்! மோசடியாய் என்னை ஒரு தேவடியாள்வீட்டின் கொண்டு தள்ளி விட்டார்களே!! இந்தப் பெண்ணும் கல்யாணப் பந்தலில் பாடின குட்டிபோலிருக்கிறாள். யார் செய்தது இந்தக் கொடிய தந்திரத்தை?' என்று கேட்டுக் கொள்ளுகிறார். தகுந்த விடை தோன்றாது தத்தளிக்கிறார். இதற்குள் அழகிய ஜானகி அவர் கையை மெதுவாக எடுத்து மிகுந்த காமத்துடன் முத்தம் கொடுத்துவிட்டாள்!!

வாஸுதேவசாஸ்திரி சரேலென்று தமது கையை இழுத்துக்கொண்டு, விசேஷமான கருணை நிறைந்த நோக்குடன் அவளைக் கடாக்ஷித்துக் கூறலுற்றார். 'உன் முத்தத்தை அங்கீகரித்தேன், உன்னைப் பெண்ணென மதித்து. ஒரு தகப்பனுக்குத் தன் பெண்ணிடமிருக்கும் அன்பு உன்னிடம் எனக்கு உண்டாகிவிட்டது. ஆனால் இவ்வளவு அழகும் இவ்வளவுதேர்ச்சியும், தினம் தினம் எலத்திற்கு வந்து அதிகத் தொகைக்குக் கேட்பவர் வசமாகும்படி நேர்ட்டதே என்ற துக்கம்தான் என்னை மிக நெருங்கி வருத்துகிறது. என்ன செய்வேன்? உனது முக அமைப்பை நோக்கில், அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற பழமொழிக்கு ஏற்ப நீ உண்மையாகக் கெட்ட பெண்ணாயிருக்கமாட்டாய் என்பது வெளியாகிறது: இன்று கல்யாணப் பந்தலில் நீ வாரிச் சொரிந்து விட்ட ஸங்கீதாமிருதமோ இயற்கையில் கெட்டவர்களாக அமைந்தவர்களிடம் பொருந்தியிராது. இம்மாதிரியான பாட்டு நல்ல மனோதர்மத்தால்தான் உண்டாகும். இவ்வளவு அழகின்கீழ் கெட்ட குணம் எவ்வாறு மறைபட்டு நிற்கும்? இப்பொழுது உன் நடத்தை எப்படி இருந்தபோதிலும், உன் தொழில் உண்மையாக உனக்கு அமைந்துள்ளதல்ல என்று காட்டும் ஒருவித நாணம் உன் முகத்தில் வெளிப்படுகிறதே! இதனால் எவ்வளவு விபசாரக்குற்றம் உனக்கு ஏற்பட்டிருந்தபோதிலும், அவை எல்லாம் உன் ஸ்வபாவம், குணம் முதலியவைகளுக்கு விரோதமாகவும், உன் நிலைமையின் கொடுமையினாலும் ஏற்பட்டவைஎன்றே விளங்குகிறது. மேலும் இப்பொழுது நீ பாடிய பாட்டுத்தான் என்ன! எவ்வளவு பரவசமாக விருந்தது!! இது கேவலம் வாக்மாத்திரமாக வந்ததாகவே இராது! ஆதலால் பெண்ணே! நீ இருக்கும் தொழில் உன் மனதுக்குப் பொருத்தமானதுதானா! சொல்லேன் பார்ப்போம்!! உண்மைக் கூறிவிடலாம்; என்னிடம் உனக்குப் பயம் இருக்கவேண்டியது அவசியமில்லை' என்று சரமாரியாகப் பொழிந்துவிட்டார் வேதாந்த கேசரி.

ஜானகிபாடு, இடிவிழுந்தாற்போலாகிவிட்டது. பாவம் அசைவற்றுத் தூண்போல நின்றுவிட்டாள்

இதுவரையில் இம்மாதிரியான புத்திமதிகளைக் கேட்டதே இல்லை: இவ்வளவு அன்பு, ஆராமை, முதலியவைகள் நிறைந்ததாயும் தன் நன்மையைக்கருதி உள்ளனவாயும் இருக்கும் சொற்களைக்கேட்க அவளுக்கு எத்தருணம்தான் வாய்த்திருக்கும்! சாஸ்திரிகள் கண்டித்துப் புத்திகூறியதன் நயம் அவள் மனதில் அழுந்திவிட்டது. தன் வெளிவேஷத்தால் மறைபட்டுக்கிடந்த தன் உண்மை மனோதர்மம் வெளிப்பட்டுவிட்டதை எண்ணி எண்ணி வியந்துகொண்டாள். உடனே சாஸ்திரிகாலில் விழுந்து குழந்தைபோல தன் குற்றத்தைச்சூதின்றிவெளியிட்டுத்தீர்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஆராமை அவள் உள்ளத்தில் கதித்தெழுந்தது. சற்று நிதானித்ததன்பேரில் தத்கால நிலையை உத்தேசித்துத் தன் மயக்கும் சோதனையை மேல்நடத்தியே பார்க்கவேண்டும் என்று பட்டது. தனக்குத் தெரிந்தவரையில் கண்டவர் உடனே கலங்கி ஈடுபடும்படி செய்யும் தன்மை வாய்ந்ததன் இணையிலா ஸௌந்தர்ய வலையில் சிக்காத நிஜஜிதேந்திரியரா இந்த சாஸ்திரி என்று நேரே உணரவேண்டும் என்ற ஆவல் தாண்ட மிகுந்த ஊக்கத்துடன் சாஸ்திரியை அவள் தகையத் தொடங்கிவிட்டாள்.

'தனிமையாக என்னுடன் இந்த ரமணீய இராவில் இருந்துகொண்டு, என் தொழிலை விட்டுவிட வேண்டும் என்ற தீவ்ர புத்திமதியையா கூறுகிறீர்? பார்ப்போம் இவர் வல்லமையையும், நமது சரக்கையும்' என்று எண்ணமிட்டுக்கொண்டு முன்னைவிட மிகுந்த சுறுசுறுப்புடன் தாக்க ஆரம்பித்தாள். அவர் முகத்தை மிகுந்த அன்புடன் தன் முகத்தோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டு கன்னம் வீங்க முத்தமிட்டாள். ஒரு முத்தத்தை அநேக முத்தம் கொடுக்கு நாழிகைவரையிலும் அனேக முத்தத்தை ஒரு முத்தம் கொடுக்கும் நாழிகைக்குள்ளுமாக அனேக விதமாக முத்தம் கொடுத்து அவர் கன்னம் மாறிமாறி சிவந்து வெளுக்கும்படி செய்து விட்டாள். சாஸ்திரியோ காமத்தால் கனியாமலே இருப்பவராதலால் சிலாவிக்ரஹம்போல அசைவற்று உட்கார்ந்துவிட்டார். ஜாநகியும் விட்டபாடில்லை. அவள் மனம் தளரவில்லை. மல்லிகைக்கொடிவேம்பின்மேல் சுற்றிப் படருவதுபோல அவர்மேல் அவள் மெதுவாகச் சுற்றிக்கொண்டாள். அநேக அல்ப உபாயங்களைச் செய்து, அநேக பொருளில்லா இனிமையான காமமொழிகளைக் கூறிக் கொஞ்சிப் பார்த்தாள். சாஸ்திரி மனம் கலையவில்லை. பின்னும் ஜாநகி பின்னடையவில்லை. சாஸ்திரிகள் புதுமையான நடத்தையைக் கண்டதும் அவளுக்கு ஆச்சர்யம் அதிகமாகிவிட்டது: இன்னும் தான் கற்ற வித்தையை எல்லாம் காட்டிவிடவேண்டும் என்ற பேராவல் அவளுக்கு உண்டாகிவிட்டது. அவள், ஆண்மையற்றவன் என்று பரிஹாஸம் செய்தாள், கண்ணே என்று சீராட்டிக் கொஞ்சினாள், உனக்கு என்ன கோபம் என்று வேடிக்கை பண்ணினாள், புன்னகை செய்து மயக்கினாள், தன் சரக்கு செல்லாததைக் கண்டு கடுகடுத்தாள், மறுபடி அவரைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள், முத்தமிட்டாள்: எல்லாம் வீணாயின. இம்மாதிரி ஒருமணிநேரம் சாஸ்திரியிடம் தேவமாதர் கேளிக்கைகளை எல்லாம் நடத்திப் பார்த்துவிட்டாள்: வாஸுதேவ சாஸ்திரி மனம் கொஞ்சமேனும் நெகிழவில்லை. ஸலவைக்கல் பிம்பம்போல வெகு கம்பீரமாக அசைவற்று அமர்ந்திருந்தார்! மஹான் மேல் தந்திரம் தெரியாது குழம்பி ஓய்ந்து ஒதுங்க யத்தனித்தாள் ஜானகி.

'ஜானகி (அப்படித்தான் தெருவில் எல்லோரும் உன்னைப் பெயரிட்டழைத்து உன் சிறப்பை வியந்து கொண்டிருந்தனர்.) என் சொற்படி நான் உண்மையில் உன்னை மதிக்கிறேன் என்பது உன் புத்தியில் விளங்கிற்றா? உன்னை இன்னமும் பெண்போலவே கருதுகிறேன். உன்னுடைய மயக்கும் சூதுகள் எல்லாம் பாலர் விளையாட்டுப்போல எனக்குத் தோன்றின. சக்தியற்ற உன் மாயா வித்தைகளைக் கண்டு இதுவரையில் நான் சிரித்துக்கொண்டுதான் இருந்தேன். யார் பிச்சைக் காசு, அம்மா! என்னிடம் நீ கற்ற வித்தையை எல்லாம் காட்டி சிதைந்து துக்கிக்கும்படி செய்தது உன்னை? பத்ரம் இதை ஒருநாளும் மறவாதே! குளிர்ந்திருக்கும் கருங்கடலிடம் நெருப்புப் பொறியின் சாக்குச் செல்லமாட்டாதே அதுபோல, மாதர் மயக்கச் சிறப்பெல்லாம் நிஷ்பந்தர்களிடம் நடவாது!! சொன்னேன்!!! இப்பொழுது உன் விஷயத்திலோ என் மனம் இரங்குகிறது. இவ்வளவு அழகும் தேர்ச்சியும், இந்நிலையிலா கிடந்து தத்தளிக்கவேண்டும்! எனக்கு உலக அநுபவம் கொஞ்சமிருப்பதால் உன் நடத்தையை விட உன் மனோதர்மம் மிகச் சிறந்தது என்பது எனக்குத் தெரிந்துவிட்டதே! மிகுந்த அதிருப்தியுடன் உன் ஸ்வபாவத்துக்கு மாறாக வேஷம் போட்டிருக்கிறாயல்லவா? உண்மையைக் கூறிவிடு' என்று வற்புறுத்திக் கூறிவிட்டார் சாஸ்திரி.

இந்த வேதாந்தப் பிரகடனம் நடந்தேறி வருகையில் ஜாநகி ஆச்சர்யம், துக்கம், பயம் ஆகிய மூன்றினாலும் தாக்கப்பட்டு அசையாது மௌனமாக நின்றுவிட்டாள். தன் காமக்களியாட்டுக்களை எல்லாம் புறம்

உபேக்ஷையுடன் சாஸ்திரி எற்றதைக் கண்டு ஆச்சர்யம் ஒருபக்கம், தன் இழிவான பஞ்சை நிலையைப்பற்றிய துக்கம் ஒருபுறம், தன் முன்னிருப்பவர் ஒரு பெரிய யோகியாக விருந்து தன் வெட்கம்கெட்டதனத்திற்குத் தன்னைச் சபித்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் ஒருபக்கம் பற்றியிழுக்க, அவள் மனம் அலைபாய்ந்து தத்தளித்ததால் அவளுக்குப் பேச நாவெழவில்லை.

சாஸ்திரி அவளை நோக்கி, 'என் கண்ணே ஜானகி! இந்த இழிதொழிலை விட்டு நீ விலகலாகாதா? யாராவது ஒரு தகுந்த கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு உன் குண, மனோதர்மத்திற்கேற்ற நிலையில் அமரலாகாதா? அகன்றுயர்ந்த உன் நெற்றி புத்திக்கூர்மையையும், உன் புருவத்திற் கிடையிலுள்ள இடம், உன் இயற்கை ஆத்மஞானத்தையும் காட்டுகின்றனவே! உன் தெளிவான முககாந்தியோ நிஷ்கல்மஷமான குழந்தைகளது போல இனிமையாயும், ஆனந்தமாயும் விளங்குகின்றதே! ப்ரகாசமான உன் கருவிழிகளில் யோசனை, விவேகம் துரிதக்ரஹணம்முதலிய அருங்குணங்கள் சோபிக்கின்றனவே! மேலும் பகவந்நிஷ்டையில் அமர்ந்திருக்கும் மஹான்களுக்குக் காணப்படும் பார்வை ஜிலுஜிலுப்பு உன் நோக்கில் அமைந்துகிடக்கின்றதே! உன் குரலில் ஞானஸ்வரம் கலந்திருப்பதால் நீ எதைப்பாடும்பொழுதும் உலக அதீத நிலையிலிருந்துவரும் த்வனிபோலக் காணப்படுகிறதே! உன் பூர்ணஸௌந்தர்யம் தெய்வீகமாகக் காணப்படுவதால் காமத்தைக் கிளப்புவதைவிட்டு, அன்பையும் வணக்கத்திற்கு இனமான ஒரு கனிவான மதிப்பையும் கிளறி விடுகிறதே! தேவடியாள் தொழிலை நடத்துவதைவிட மிகச்சிறந்த காரியங்கள் செய்யப் பிறந்தவள் நீ. இத்தொழிலில் மனமொத்து நீ இறங்கிவிடவில்லை என்பது என் துணிவு: ஆகலால் இதைவிடச் சிறந்த ஸுகமும் சாந்தமும் தரக்கூடியதும், உன் அளவிறந்த தேர்ச்சி இதைவிட நன்றாகச் சோபிக்கக் கூடியதுமான நிலைகளை அணுகிச்சென்று நீ நிலைபெறவேண்டியது என்று எனக்குத் தோற்றுகிறது. நான் உனக்கு வேறென்ன கூறப்போகிறேன்' என்றுகூறி அவளை மெய்ம்மறந்து பரவசமாகும்படி செய்துவிட்டார்.

ஜானகிக்குத் தன் மனக்கொதிப்பைத் தாங்கமுடியவில்லை. வாய்விட்டு மிகுந்த உருக்கத்துடன் கதறத் தொடங்கிவிட்டாள். 'என் பிதா இன்னாரென்று எனக்குத் தெரியாததால் நீரே என் பிதா. இவ்விழி தொழிலில் நான் பிறக்கவில்லை: சிறுவயதில் என்னைத் திருடி வந்து இந்தத் தொழிலில் புகுத்திவிட்டனரே ஒழிய வேறில்லை. ஆகவே என் தாயையும் எனக்குத் தெரியாது. ஆதலால் என் தாயும் நீரே. முன்னறி தெய்வமாகிய என் தாய்தந்தையர் இருவரும் நீரே. அவர்களைத்தவிர வேறு யாரால் நீர் கூறியதுபோலக் கூறமுடியும். இவ்விரவே என் வாழ்க்கைமாறும் தருணம் என்பது உறுதிதான். நான் இனி ஒரு பாழும் தேவடியாள் அல்ல: என் முன்னிருக்கும் பரம புருஷன் புத்திரி. உமது நற்குணம், பரிசுத்தம் முதலியவைகளில் ஈடுபட்டிருப்பதுபோல இவ்வுலகில் வேறு எவர் உபகாரத்திலும்நான் ஈடுபட்டவள் அல்ல. வெள்ளை வஸ்திரம் தரித்திருப்பினும் உம்மைப் பார்த்தால் ஒரு மஹரிஷிபோலத் தோற்றுகிறது. தேவரம்பைகள் நிர்வாணமாக ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்த குளக்கரை வழியாகச் சுகப்ரஹ்மம் போனகாலத்திலும் அவர் கண்ணெடுத்துக்கூட நோக்காது சாந்தமனதுடன் நடந்துவிட்டனர் என்று கதையில் தான் வாசித்திருக்கிறேன். அது வெறும் கதை என்றே மதித்திருந்தேன். இதுவரையில்! என்ன ஆச்சர்யம்! கொழுத்து மிக காத்திரமாக விருக்கும் யௌவன புருஷோத்தமனாகிய நீர் பெண்மணிகளில் சிறந்த ஒருத்தியின் மயக்க லீலைகளை அலக்ஷ்யம் செய்யும் திறனுடனிருக்கிறீரே! என்ன முத்தமிட்டும், கட்டியணைத்தும், என்ன ஜாலங்களால் மயக்கியும் கலங்காது மூலஸ்தான பிம்பம்போல நிலைத்திருக்கும் உத்தமனே! உம்மைக் கண்டதால் கதையும் உண்மையாகிவிட்டது என்று ஸந்தோஷம் பொங்குகிறதே!' என்று சாஸ்திரியை வியந்து முதலில் ஈடுபட்டாள் ஜானகி.

ஆராமை மேலிட்டதால், அவர் பாதபத்மங்களில் விழுந்து புரண்டு கண்ணீரால் பாத்யம் ஸமர்ப்பித்து மறுபடியும் கூறலுற்றாள் ஜாநகி. 'பரமபரிசுத்த புருஷா! என் வெட்கம் கெட்டதனத்தை மன்னித்து என்னைக் கரையேற்றும். என் மூடத்தனத்தைப் பொறுக்கும் சக்தி உம்மிடத்தி லிருப்பதால், ஒரு கொடுஞ் சொல்லால் என்னைக் கருங்கல்லாக்கும் வல்லமை இராதா உமக்கு? என்னை மன்னியும்! வேண்டிக் கொள்ளுகிறேன்! கெஞ்சுகிறேன்! நான் பெரும் பஞ்சை! பிறப்பு குலகோத்ரம் முதலியன விளங்கா விடுகதையாக விருக்கும் ஜாதிகெட்டவள்!! கொடிய ஸ்திரீகள் சதியாலோசனையால் பாபத் தொழிலில் புகுத்தப்பட்ட அனாதை!!! என் அருமை அப்பனே! நான் இன்றிரவு செய்த அல்ப விஷயங்களை மறந்துவிடும்! மனதில் வையாதேயும்!! என்னை உமது பெண்ணாகவே மதித்துவிடும்: இந்த அருமை

யான உறவில் முன்னரே ஒருத்தி யிருப்பாளானால் என்னை அவள் தங்கையாக விருக்க அனுமதி கொடுத்தே தீரவேண்டும். விடிவதற்குமுன் இந்நரக ஸ்தானத்தைவிட்டு நாய்போலக் கடல்கடந்து வேண்டுமானாலும் உம்மை தொடர்ந்து வருவேன். நீரே என் குரு, ரக்ஷகர், தகப்பன், தெய்வம், எல்லாம்: ஸஹாயம் நடத்தை ஒழுங்கு எல்லாவற்றிற்கும் நீரே எனக்குக் கதி. நீர் ஸாதாரணர் அல்ல என்பது விளங்கிவிட்டது. உம்மருகில் நான் எம்மட்டு: சிறு புழுவினும் கடையள். நக்ஷத்ரத்தருகிலுள்ள மின்மினிபோன்றவளல்லவா? காத்தருளும்! கருணைகூர்ந்து காத்தருளும் நாதா!' என்று கதறிவிட்டாள் ஜானகி.

ஜானகியின் ஆற்றல், ஆராமை, வாக்சாதுர்யம் எல்லாம் சேர்ந்து வாஸுதேவசாஸ்திரி மனதை உருக்கி கண்ணீர் பெருகும்படி செய்துவிட்டன. சுற்றுமிருந்த கற்சுவர்களுக்குக் கேட்கும் திறன் மாத்திரம் இருந்திருப்பின் அப்பொழுது கரைந்து உருகி மறைந்திருக்கும்: அவ்வளவு உருக்கமாக விருந்தது அந்தத் தருணம்! சாஸ்திரி கண்ணைத் துடைத்துக்கொண்டு ஜானகியை நோக்கினார். அவள் கண்ணருவியில் மூழ்கிக் கிடந்ததால் ஆழ்ந்த நீர் நிலையில் பிரதிபிம்பித்து சோபிக்கும் சந்திரன்போலிருந்தது அவள் முகம். 'என் கண்மணியே! உன்னை முதலில் கண்டபொழுது உன்னிடம் உண்டான பற்று இப்பொழுது ஆயிரமடங்கு ஓங்கிவிட்டது. ஸுகபூர்ணமான இந்த அறையில் இவ்வளவு கனிந்த மனமிருக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே!' என்றார்

சாஸ்திரி மனமுருகி இவ்வாறு சொல்லி வாய்மூடும்முன் திரையை பரபரப்புடன் நீக்கிக்கொண்டு ஒருவன் வெளிப்பட்டான். 'அப்படிக் கூறிவிடாதேயுங்கள். இதனுள் இன்னும் ஒரு உருகித்தத்தளிக்கும் மனமும் உள்ளது. இந்தத்தேவமாதின் பெருந்தன்மையில் நூறிலொருபங்குகூட என்னிடமில்லையாயினும் தாபம் எனக்கு அதிகம்தான். மறந்துவிடும்! மன்னியும்!! ஹேப்ரபோ!!! எனக்கு ஊன்றி உணரும் சக்தியிருப்பதால் இக்குற்றம்செய்யலாகாதென்று இவளைவிடநன்றாய் நான் அறிந்திருக்கவேண்டுமாயினும், இப்பொழுதாவது என் நடத்தையை எண்ணி வெட்கி ஒடுங்கும் நிலைவந்துவிட்டது எனக்கு!!! நான்,கொடியன்,பாவி, மூடன்,உமது கடல்போன்ற கருணையே எதிர்பார்த்திருக்கிறேன்! என்னைக் காத்தருளும், நாதா! இது முதல் நீரே எனக்குக் குரு; என்னைக் கரைவற்றும் கடன் உம்மைச் சேர்ந்தது' என்று கூறிக்கொண்டு ஓடோடியும் வந்து பரம்பொருளேயாகி நிற்கும் பரமபுருஷர் காலில் விழுந்து எல்லாம் மறந்து சரணம் புகுந்துவிட்டான்.

ஓம் தத்ஸத்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சாந்தை அல்லது பொறுமையினிலை

2. ஒற்றியுரைத்த காதை

"தாதை தன்னினுந் தனையர் தன்னினு
மாதர் மென்மொழி மைந்தர்க டம்மினுங்
கோதில் கற்புடை யார்தங் கொழுநர்பாற்
காதல் கூர்ந்து களிமகிழ் வெய்துவார்."

சாந்தையும் உத்துல்லனும் மணமும் மலரும்போல் ஒருவர் மற்றொருவரது சாயைபோல் இணைபிரியாமல் விளங்கி வந்தார்கள். அவர்கள் உள்ளமும் கலந்தது, ஒருவருமறியாது தம்முள் கந்தர்வ முறையில் மணம் செய்துகொண்டார்கள். இது எத்தனை நாள் ரகசியமாக இருக்கக்கூடும்?

பிரபுன்னதனுக்கு இவ்விருவருடைய காதலைப்பற்றியாவது அதன் உயர்வைப்பற்றியாவது அல்லது தன் உண்மைப் பெருக்கைப்பற்றியாவது தெரியாது. கார் இருள் மேகம்போல கறுத்தவர்ணமுடைய உத்துல்லன் இடம் சாந்தையின் மனம் செல்லும் என்று அவனால் எண்ண முடியவில்லை. ஓர் விஞ்சைய குலமகள் ஓர் அன்னியனை, வேறு மதத்தவனை, அதிலும் கறுப்பே உருவாக அமைந்தவனை, மணக்க இணங்க மாட்டாள் என்பது அவனுடைய திடநம்பிக்கை. இதற்கு அக்காலத்து விஞ்சைய மகளிர்களுடைய சுபாவமே இடங்கொடுத்தது. ஆதலால், தன் பெண் உத்துல்லனைக் காதலித்து மணந்திருக்கிறாள் என்ற விஷயம் காதில் எட்டியபொழுது அது நிச்சயமாயிருக்கும் என்று அவனால் நம்ப முடியவில்லை.

மௌர்யனாகிய உத்துல்லன் ஏதோ சாந்தையின் தலைக்கு மிளகு அரைத்து அவள் மனத்தைக் கெடுத்துவிட்டான் என்றே யவன் திடமாக நம்பினான். அதிலும் அயோக்ய புஞ்சன் மண்டையிலேற்றிய விஷயம் பிரபுன்னதனுக்கு கடுங்கோபத்தை யுண்டாக்கியது. அயோக்ய புஞ்சனுடைய உதவிக்குவந்த ருத்திரகாமன் * "ஐயா! இந்த நடுராத்ரியில் அழகிய உங்கள் மகள் யாருடன் சென்றாள்? கீழ்மகன் — கூலியாள்; — அந்தக்காமி மௌர்யன் தழுவச் செல்வதா? நான் விளையாடுகிறேன் என்று எண்ணுதீரும்; அதற்கு உமது வயதும் குணமும் தகுந்ததல்ல. உமது பெண்— உமது அனுமதி பெறாதிருக்கும் பக்ஷத்தில்—கொடுங் குற்றம் செய்திருக்கிறாள். தனது பேரழகு, செல்வம், புத்தி இவையுடன் தனது தர்மத்தையும், ஓர் அந்நியன், தெருவில் போகும் ஓடுகாலியிடமா அவள் தத்தம் செய்வது? நன்று! உங்களுக்கு சந்தேஹமேன்? நேராக வாரும். இப்பொழுதவள் உமது வீட்டிலாவது அல்லது அவள் கன்னிமாடத்திலாவது இருந்தால் நான் உம்மை ஏமாற்றியதற்காக என்னை விதிப்படி, ராஜமுறைப்படி, கொடுமையாகத் தண்டியும். ஸத்யமாகச் சொல்லுகிறேன்" என்று உறத்துச் சொன்னான்.

* Roderigo

பிரபுன்னதனும் தீவர்த்தி கொளுத்தி,தன் ஜனங்களுடன் தன் பெண்ணைக்காணச் சென்றான். அவள் இல்லாமையைக் கண்டான். கடுங்கோபங் கொண்டான். உத்துல்லனிடம் தான்கொண்ட சலத்தை சாதிக்க எண்ணிக் கத்தியும் கையுமாகப் புறப்பட்டான். அவனுக்குதவியாக அயோக்யபுஞ்சனும் நாட்டியமாடருத்ரகாமனுடன் வந்தான். உத்துல்லனை தானனுப்பிய ஆட்கள் அழைத்துவர, பிரபுன்னதன் அவன்மேல் கத்தியை வீசும்படி மற்றவர்களுக் கேவினான். "நல்லவரே! பெரியவரே! கத்தியை உறையிலிருந்து எடுக்காதீரும். அதன் பிரகாசம் பனியால் கறையடையும். ஆயுதத்தைக்காட்டிலும் தமது வயது என்னையாளும். அதுவே உமக்குகந்தது" என்றுரைத்து உத்துல்லன் பிரபுவின் செயலைத் தடுத்தான்.

"சீ! மடையா! கொள்ளைக்காரா! பித்தலாட்டக்காரா! எங்கடா என் பெண்ணை யடக்கிவைத்திருக்கிறாய்? அருவெறுக்கத்தகுந்தவனே! என் மகளை மயக்கிவிட்டாய்? வசியஞ்செய்துவிட்டாய்? சொக்குபொடியிட்டாய்? எந்த மந்திரக்கட்டால் என் செல்வக்குழந்தை, மெல்லிய உருவாள், வஞ்சனை என்பதை அறியாத அவள், உன் மாயவலையில் விழுந்தாளடா? அந்த மந்திரக்கட்டில்லாமலா அவள் தன்னை மணக்கவந்த செல்வக்காளையர்களை, இந்த நாட்டு புத்ரசிகாமணிகளையெல்லாம் மறுத்தாள்.வெறுப்பே குடிகொண்ட இந்தக் கறுங்குரங்குபோன்ற உன்முகத்தை கண்டுநடுங்குவதைவிட்டு, ஸந்தோஷத்தை யடையாமலிருப்பதைவிட்டு, யாவரும் எளனம் செய்ய, என்னுடைய ஆதரணையை விட்டு, கரிபூசிய உன் தோளைத் தழுவ மருந்தில்லாவிட்டால் அவள் மயங்குவளா? நீ பாழுஞ் சூனிய மந்திரங்களால் அவள் மனதைப் பாழாக்கி விட்டாய்? மருந்திட்டு அவள் மெல்லிய இளமையை நாசஞ் செய்தாய்? அவள் புத்தியை மந்திக்கும்படிச் செய்து அவளைக்கெடுத்தாய்? ஆ! கொடியாய்! வா; உன்னைச் சும்மா விடேன். உன் செயலை எண்ண என் மனம் குமுறுகிறது. வெதும்புகிறது. எல்லாம் ஸரிப்படுத்துகிறேன். உலகத்தை ஏமாற்றும் உன்னைச் சும்மாவிடலாகாது. செய்யத்தகாத செயல்களைச்செய்யும் உன்னை தக்கவிதம் சிக்ஷிக்கச் செய்கிறேன்" என்று உரத்துக் கூவி கண் தீப்பொறி பறக்க பிரபுன்னதன் ராஜஸபைக்கு உத்துல்லனை அழைத்துப் போகும்படி வேலையாட்களை ஏவினான்.

தகாத காரியத்தை உத்துல்லன் செய்துவிட்டான் என எண்ணப்பட்டான். விஞ்சையர் நாட்டு சட்டங்களிற் கவன் மாறாக நடந்ததாகவும் எண்ணப்பட்டான். தகப்பனது அனுமதியைப் பெறாமல் ஒரு பெண்ணின் மனதை மயக்கத்தால் கெடுத்தவனாகவும் நினைக்கப்பட்டான். தன்னைக் காப்பாற்றி வந்த தலைவனுக்குபகாரம் செய்வதற்குப் பதிலாகப் பிரபுன்னதனது மகளின் மூளையை பிரமையில் படும்படிச் செய்து, அவனது உத்திரவு பெறாமல் அவளை உத்துல்லன் கைப்பற்றி, தன்னிஷ்டத்திற் குபயோகப்படும்படியாக வஞ்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டான். பிரபுந்நதனும் ராஜசபையில் தனது பெண்ணைக் கெடுத்த உத்துல்லனைப் பற்றி விசாரிக்கும்படியாக செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்துக்கொண்டிருந்தான்.

இதே ஸமயத்தில் விஞ்சையருடைய அரசாட்சியின் கீழிருந்த சிபிரந்தீவை* துருக்கிப்படைக் கவர்ந்ததாக ஸமாசாரம் ராஜாங்கத்திற் கெட்டியது. அப்படையைத் தாக்கி எதிர்க்கத்தகுந்த வீரன் உத்துல்லன் ஒருவனே என்று யாவராலும் கருதப்பட்டான். விதியின் வலிமையால் துருக்கிப் படையைத் தாக்கத்தகுந்த வீரனும், பிரபுன்னதனுடைய பெண்ணை மாயவழியில் களவாடிய குற்றவாளியாகியும், ஒரே சமயத்தில் கருதப்பட்டு உத்துல்லன் விளங்கினான்.

ராஜஸபை கூடியது; அங்கு துருக்கிப்படையின் எழுச்சியைப்பற்றிப்பேசிக் கொண்டிருந்தார்கள். அதே ஸமயத்தில் பிரபுன்னதன், உத்துல்லன், அயோக்ய புஞ்சன், ருத்ரகாமன் முதலியோர் நுழைந்தார்கள். உத்துல்லனைக் கண்டதும் துருக்கிப்படையைத்தாக்க அரசன் ஆணையிட்டு பிரபுன்னதனை வரவேற்றனன். அவனும் தான் பொறுக்கமுடியாத கஷ்டத்தை அடைந்திருப்பதாகச் சொன்னான்.

அரசன்.—என்ன? என்ன விசேஷம்?

பிரபுன்னதன்.—அந்தோ! என் பெண்!—அகோ! என் மகள்!

அரசனும், மந்திரித்தலைவர்களும்.— இறந்துவிட்டாளா?

பிரபு.—ஆம்! ஆம்! என்வரையும் அவள் அப்படித்தான். என்னிடமிருந்தவள் களவாடப்பட்டாள்.

* Cyprus.

தவருக உபயோகப்படுத்தப்பட்டாள். மருந்து மாயம் மூலிகை எல்லா வகையினாலும் மயக்கிக்கெடுக்கப்பட்டாள். இயற்கையில் நல்லகுணமுடையவள். இவ்வளவு அநியாயமாக எப்படி நடக்கமுடியும். மூடமா? குருடா? மந்தமா?—அது வொன்றுமில்லாதிருக்க மாயத்தால் அல்லாது இப்படி மயங்குமா? குட்டிச்சாத்தான் வித்தையில்லாமல் அப்படிக் கூத்தாடுமோ?

அரசன்.—அது யாரோ? இந்தக் கொடுஞ்செயலைப் புரிந்து உன்னிடமிருந்து உன் மகளைப்பிரித்து அவளையுங் கெடுத்தவன் யாராயிருந்தாலும்சரி; அவன் என்மகனே ஆனாலும் என்ன, நீயே சட்டத்தின் வாக்கியத்தின்படி என்னைச் சொல்லவேண்டுமோ, என்ன விதிக்கவேண்டுமோ அதைச் சொல், அதை தயை தாக்ஷண்யமில்லாமல் விதிக்க நான் சித்தமாயிருக்கிறேன்.

பிரபு.—தாங்கள் சொல்லியதற்கனந்தகோடி நமஸ்காரம். நீங்கள் இங்கு அழைத்திருக்கும் இம்மௌரியனே அவ்வாறு செய்தவன்.

அரசன்.—அதற்காக யாம் வியசனப்படுகிறோம். உத்புல்ல! நீர் என்ன சொல்கிறீர்?

பிரபு.—சொல்லவேண்டியதென்ன இருக்கிறது. எல்லாம் அப்படித்தானே நடந்திருக்கிறது.

உத்துல்லன்.—பெருமையுடையவர்களே! தவறறியாத உத்தமர்களே! பொறுமை யுடையவர்காள்! எனது உத்தமத் தலைவர்காள்! குணத்தின் நிதிகளாக விளங்குபவர்களே! நான் இப்பெரியவருடைய மகளை அடைந்தது உண்மையே; நிச்சயம். அவளை நான் மணந்ததும் நிச்சயம். நான் செய்ததவறும், அதனுடைய மிகுதியும் அவ்வளவே; அதற்குமேல் கிடையாது. இதுதான் நான் இப்பெரியவர்க்குச் செய்த அபசாரம். எனக்குப் பேசவும் தெரியாது; உடைந்த சொற்கள் தான் சொல்லத் தெரியும். அமைதி என்கிற பதத்தைக்கூட நான் இதுவரையுங் கண்டதில்லை. இந்தக் கைகள் அன்றுமுதல் அவற்றின் செயல் முழுதையும் யுத்தகளத்திலேயே செய்திருக்கின்றன. சில நாளாகத்தான் அமைதி என்பதைக் கண்டிருக்கிறது. எனக்கிந்த வுலக விஷயங்களில் அநுபவமே கிடையாது. அதைப்பற்றிப் பேசினால் யுத்தம் களம் இவைகளைப் பற்றி யல்லாமல் வேறு பேசச் சிறிதும் தெரியாது. ஆகையால் யான் என்னைப்பற்றி பேசுவதில் ரம்மியமுமிராது; சுகமுமிராது. ஆயினும் தங்களுடைய கனத்த பொறுமையின் ஆதரவால் என் காதலாகியக் கதையின் வழியை முற்றும் சொல்லுகிறேன். என்ன மூலிகைகள், என்ன மந்திரங்கள், என்ன மாயங்கள்—இவைகளால்தானே நான் அபசாரம்செய்திருக்கிறேன். இவைகளை நான் எவ்வாறு உபயோகித்து இந்தப் பிரபுவின் மகளை மயக்கினேன் என்கிறதை வரிசையாகச் சொல்லுவேன்.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

புதுக்கோட்டை, இரண்டாவது ஸ்ரீமார்த்தாண்ட வருஷாந்தர பொருட்காட்சி சபை.—கைத்தொழில், விவசாயம், படிப்பு இவைகள் சம்பந்தமான பொருட்காட்சி சபை ஒன்று புதுக்கோட்டையில் சென்ற டிசம்பர்ம் 21உ கூடிற்று. ஒருமாதமாகக் காட்சிப்பொருள் சபை திறந்து வைக்கப்பட்டிருந்தது. பொருட்காட்சி சபைமுடிவுபெறும் தினத்தன்று H.H. ராஜா அவர்கள் சபா நாயகராக வீற்றிருந்து தங்க மெடல்கள், வெள்ளி மெடல்கள், பித்தளை மெடல்கள் இவைகளையும், ரொக்கப்பணம் வெகுமதிகளையும் கொடுத்தார். பொருட்காட்சி சபை கிரம்ப திருப்திகரமாக இருந்தது. கால்நடைக்காட்சியும் ஏற்பட்டிருந்தது. உழவுத் தொழில், நெசவுத் தொழில், வளையல் செய்யும் தொழில் முதலிய தொழில் சம்பந்தமான பொருள்களும், பட்டுத் தொழில் தினுசுகளும் பாடசாலைகளில் நவீன முறைப்படி கற்பிக்கப்படுவதற்குச் சாதகமான பொருள்களும் பூமிகளுக்குப் போடவேண்டிய எருவுதினுசுகள் முதலியவைகளும் வைக்கப்பட்டிருந்தன தறிகளில் நெசவுத் தொழில் செய்யப்படும் விதம், நவீனத் தறிகளைக் கையாடும் விதம் ஆகிய இவைககள் பிரத்தியட்சமாய்க் காண்பிக்கப்பட்டன. சந்தையில் விவசாயக் கருவிகளைக் கொண்டுபோய் வேலைசெய்து பிரத்தியட்சத்தில் காண்பிக்கப்பட்டன. இவைகளைப் பார்த்துப் போகவேண்டுமென்று கிராமத்தார்களை வரவழைத்திருந்தார்கள். அவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்களைப் பற்றி கவனித்துவந்தார்கள். பொருட்காட்சி சபையைப் பார்க்க வந்தவர்களின் சங்கியை 32,000; காட்சிப் பொருள்களின் சங்கியை 13,880 என்று கணக்கிடப்பட்டன. மைசூர், திருவாங்கூர், கொச்சி முதலிய சமஸ்தானங்களும், சமீபத்திலிருக்கும் திருச்சி ஜில்லாவும், இந்தப் பொருட்காட்சி சபைக்கு பலவிதத்தில் உதவி புரிந்திருக்கின்றன. சென்னை கவர்ன்மெண்டார் இச்சபைக்கு பல சிறந்த காட்சிப்பொருள்களை இரவலாக அனுப்பி யிருந்ததல்லாமல், உபந்நியாசங்கள் செய்வதற்குத் தகுந்த நிபுணர்களையும் அனுப்பியிருந்தார்கள். இப்பொருட்காட்சி சபைக்குப் பல தேசங்களிலிருந்து அனுப்பப்பட்ட பொருள்களுக்கு, சென்னை, தென்னிந்தியா ரெயில்வே அதிகாரிகள் குறைந்த சார்ஜைப் பெற்றுக்கொண்டு சகாயஞ் செய்திருக்கிறார்கள். வித்யாசம்பந்தமான சித்திரவேலைகள் பல ஸ்தலங்களிலிருந்தும் அனுப்பப்பட்டன. பொருட்காட்சி சம்பந்தமாய் பிரஸிடெண்ட் ம-ா-ா-ஸ்ரீ தர்மராங்க ராஜு அவர்களும் செக்ரிடெரி ம-ா-ா-ஸ்ரீ தியாகராஜஅய்யர் அவர்களும் ஸ்கூல் ஸுபரின்டெண்டெண்டு ம-ா-ா-ஸ்ரீ R. சீனிவாசய்யங்கார்அவர்களும், அவர்கள் இன்ஸ்பெக்டர் டிப்டி இன்ஸ்பெக்டர் இவர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தையும் ஊக்கமும் மெச்சத்தக்கதே. இவ்வித பொருட்காட்சி நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வரவேண்டும் என்பதே எமது கோரிக்கை. ஏற்கனவே நம்முடைய பத்திரிகையில் பொருட்காட்சிகளின் உபயோகங்களைப்பற்றி சவிஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறோம். 10 நாள், காலை, மாலை இரண்டு வேளைகளிலும் தக்க நிபுணர்களால், கல்வி, விவசாயம், கைத்தொழில் இவைகளைப்பற்றி சிறந்த உபந்நியாசங்கள், பற்பல நடந்தன. அவ்விடம் வந்திருந்த உபாத்தியாயர்கள் எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடியபடி, தமிழிலேயே உபந்நியாசங்கள் செய்யப்பட்டன.

*
* *

சென்னையிலிருந்து இரங்கூனுக்குச் செல்லும் கப்பல்.—சென்னையி லிருந்து இரங்கூனுக்குச் செல்லும் கப்பல்கள் பிரதி வியாழக்கிழமைகளிலும் மாலை நேரத்தில் சென்னைத் துறைமுகத்தைவிட்டுப் புறப்படும் வழக்கம் மாற்றப்பட்டு, வெள்ளிக்கிழமை தினம் பிற்பகல் புறப்படுவதை நேயர்களறிவார்கள். வெள்ளிக்கிழமைகளில் காலை 10-30 மணிக்கே இரங்கூன் கப்பல் புறப்பட்டுவிடுமென்றும் தபால் அனுப்புகிறவர்கள் சென்னை ஜெனரல் போஸ்டாபீஸில் போஸ்ட் செய்வதானால் அன்று காலை 8-30 மணிக்குள்ளாகவே போஸ்ட் செய்யவேண்டுமென்றும் தபால் அதிகாரிகள் அறிவிக்கிறார்கள்.

*
* *

துருக்கியின் விஸ்தீரணமும் ஜனசங்கியையும்.—யுத்த ஆரம்பத்திற்கு முன்னர் துருக்கிக்கு 6535 சதுரமைல் விஸ்தீரணமுள்ள நிலமும், 6 மிலியன் ஜனத்தொகையு மிருந்தன. ஆனால்இப்போது அங்கு 1,263,000 ஜனத்தொகைதா னிருக்கின்றது. பால்கன் கட்சியாரின் யுத்தசமாதான ஏற்பாட்டின் பிரகாரம் துருக்கிக்கு 2,238 சதுரமைல் விஸ்தீரணமுள்ள நிலந்தான் கிடைத்தல்கூடும்.

*
* *

இரங்கூனிலிருந்து சென்னைக்கு வரும் கப்பல்கள். வாரந்தோறும் இரங்கூனிலிருந்து சென்னைக்கு வரும் கப்பலானது பிரதி வெள்ளிக்கிழமையிலும் பிற்பகலில் இரங்கூனைவிட்டுப் புறப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது இரங்கூன் ஐராவதி ஆற்றின் வெள்ளம் பெருகுவதையும் வடிவதையும் அநுசரித்து, கப்பல்களை நடத்தவேண்டியிருப்பதால் பிற்பகல் புறப்படுவதான ஏற்பாட்டை மாற்றி சீக்கிரம் சென்னைவந்து சேரும்படி செய்வதற்காக வெள்ளிக்கிழமைகளில் காலை 10-மணிக்குப் புறப்பாடு செய்யப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் இறந்துபோனார்.—பிடில் வாத்தியத்தில் சம்பூர்ண ஞானம் அடைந்து தென்னிந்தியா வெங்கும் பிரக்யாதி பெற்ற திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர், கும்பகோணத்திற் கடுத்த தம் சொந்த கிராமத்தில் இறந்துபோனதைக் கேட்டு விசனப்படுகிறோம். அவர் இறந்துபோனதில், சங்கீத சாஸ்திரப் பிரபஞ்சத்திற்கு பெருத்த நஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. கொஞ்சம் நாளாக அவர் தேக அசௌக்கியமாக இருப்பினும், அதை வெளியே காட்டாமல் தம்முடைய தொழிலைத் தளர்ச்சி யில்லாமல் நிறைவேற்றி வந்தார். இவர் தம்சொந்த முயற்சியால் சங்கீத வித்தையில் தேர்ச்சி யடைந்து, பிடில் வாத்தியத்தைக் கற்றுக்கொண்டு அதில் நிபுணரானார். அவர் இறந்ததைக்கேட்டு தென்னிந்தியாவில் அவரை அறிந்த அனைவரும் விசனப் படுகிறார்கள்.

*
* *

இரவு 8-மணிக்குப் போடப்படும் குண்டு.—இரவு எட்டுமணிக்கு சென்னை ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டையில் போடப்பட்டு வந்த குண்டானது இனிமேல் சாச்வதமாக பிரதிதினமும் போடப்படுமென்பது உறுதியாய்விட்டது. சென்னைக் கவர்ன்மெண்டார் மேற்படி குண்டுபோடுவதின் செலவுக்காக 300-ரூபாய் கொடுக்க வேண்டுமென கார்ப்பரேஷனைக் கேட்டிருந்ததற்கு கார்ப்பரேஷன் அத்தொகையைக் கொடுக்க ஒப்புக்கொண்டுவிட்டது.

*
* *

பம்பாய் கவர்னர் லார்ட் வில்லிங்டன்.—லார்ட் ஸைடன்ஹாமுக்குப் பிறகு, பம்பாய்க் கவர்னர் ஸ்தானத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கும் லார்ட் வில்லிங்டன் பி அண்ட் ஓ ஸ்டீமர் சைனாக் கப்பலில் (P & O Steamer China) ஏறி அடுத்த ஏப்ரல் மாதம் 4-ந் தேதி பம்பாய் வந்து சேர்கிறாரெனப்படுகிறது.

*
* *

புதுக்கோட்டை ராஜா அவர்களுக்கு G. C. I. E. பட்டம் அளிக்கப்பட்டது.—புதுக்கோட்டை ராஜா அவர்களுக்கு G. C. I. E. பட்டம் கிடைத்திருக்கிறதைப்பற்றி ஜனங்கள் தங்களுடைய சந்தோஷத்தையும் ராஜவிசுவாசத்தையும் காண்பிப்பதற்காக டவுன் ஹாலில் கூட்டம் கூடினார்கள். ராஜா திவ்யாலங்காரத்துடனும் மிலிடேரி உடுப்புதரித்த தம் சகோதரருடனும் படைகள்சூழ ராஜ ஆடம்பரத்துடனும் டவுன் ஹாலுக்குவந்து சேர்ந்தார். அவரை வரவேற்று அவருக்கென்றேற்படுத்தி யிருந்த சிங்காசனத்தின் மீது உட்காரச் செய்தார்கள். அட்ரெஸ் வாசிக்கப்பட்டது. அதைக் கேட்டு ராஜா நிரம்ப சந்தோஷப்பட்டு அடியில் வருமாறு பேசினார்:—

"இன்று நீங்கள் காட்டிய ராஜ விசுவாசத்தைக் கண்டு மெச்சினேன். அசௌக்கியமாயிருந்த நான் தேக ஆரோக்கியஞ் செய்துகொள்ளுவதற்காக மேனாட்டுக்குப் புறப்பட்டு அங்கே வெகுகாலம் இருந்துவிடும்படி எனக்கு நேர்ந்தபடியால் அடிக்கடி உங்களைச் சந்தித்து சில வார்த்தைகளைச் சொல்லலாம் என்று எனக்கிருந்த அபிலாஷையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு இடமில்லாமற் போனதற்காக நான் விசனப்படுகிறேன். இப்பொழுது சமயம் வாய்த்திருக்கிறபடியால் சில வார்த்தை சொல்லுகிறேன். நம் ராஜ்ஜியம் சிறியதாக இருப்பினும், சகல விஷயத்திலும் முன்னுக்கு வந்திருக்கிறதாகச் சொல்லக்கூடும். நாம் மற்ற சிறந்த ராஜ்யங்களில் நடந்துவரும் பலஉபயோகமுள்ள விஷயங்களை நம்முடைய ராஜ்யத்தில் அநுஷ்டித்துவரச் செய்யவேண்டும். நவீன நாகரிகத்துக்குத் தகுந்தபடி அப்போதைக்கப்போது சீர்திருத்தங்களைச் செய்துகொண்டிருக்க வேண்டும். அவ்விதச் சீர்திருத்தங்களை செய்யும்படியாய் நீங்கள் வற்புறுத்தவேண்டும். உங்களுடைய சுகத்தைப்பற்றிக் கவனிப்பதே எனக்குச் சந்தோஷம். நீங்கள் உங்களுடைய குறைகளைத் தாராளமாக வெளியிடலாம். என்னுடைய தர்பார் கவுன்ஸிலர்கள் அதற்குவேண்டிய பரிகாரஞ்செய்யத் தயாராக இருப்பார்கள்."

*
* *

ராஜகுடும்பச் செலவு.—பார்லிமெண்டார் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியாருக்குக் குடும்பச் செலவிற்காக வருஷத்திற்கு 92,10,000 ரூபாய் கொடுத்து வருகின்றனர். இத்தொகையுள் 10,50,090 ரூபாய் சக்கரவர்த்தியார் தமது அன்னையாருக்குக் கொடுக்கவேண்டும்.

*
* *

பிரிட்டிஷ் ராஜ்யத்தின் பெருக்கம்.—பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் விஸ்தீரணம் 11,13,406,600 சதுரமயிலாம்; அதில் வசிக்கும் ஜனங்களின் தொகை 416,318,000 ஆம்; இத்தொகையில் இந்தியாவில் வரும் ஜனங்களின் தொகை 315,000,000 ஆம்.

*
* *

வங்காளத்தில் ஸபைகள்.—வங்காளத்தில் 52 மிலியன் ஜனத் தொகைக்கு 1000 சபைகளிருக்கின்றனவாம். இவை 50,000 பேருக்கு ஒரு சபை வீதமாக இருக்கின்றன. ஆனால் ஜர்மனியில் 2547 பேருக்கு ஒரு ஸபை யிருக்கின்றதாம்.

எலிமெண்டரி உபாத்தியாயர் சம்பளம்.—எலிமெண்டரி கிரேட் உபாத்தியாயர் வேலைக்கு வரப் பழகி வருகின்றவர்க்கு இதுகாறும் மாதமாதம் 9 ரூபாய் கொடுக்கப்பட்டுவந்தது. இனி 10½ ரூபாயாகக் கொடுக்கவேண்டுமென்று கல்வியிலாக்கா டைரெக்டர் கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய்தனர்; அதனைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்தனர்.

*
* *

இந்தியாவில் தபால்கள் பட்டுவாடா.—ஒவ்வொரு வருஷமும் பிரிட்டிஷ் இந்தியாவில் சுமார் 72 கோடி கடிதங்களும், 9½ கோடி பத்திரிகைகளும் தபால் மூலமாகச் செல்லுகின்றன.

*
* *

நெல் சாகுபடி.—சென்ற வருஷம் இந்தியாவில் 6,39,32000 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டதென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது.

*
* *

ஆல்ப்ஸ் மலையைக் கடந்தவர்.—சில தினங்கட்கு முன் பிலோவுகோ என்னும் ஓர் ஆகாயவிமானி தமது ஆகாயவிமானத்தில் ஸ்விட்ஸர்லாண்டு தேசத்திலேறி, ஆல்ப்ஸ் மலையைக் கடந்து அதன் தெற்குப்பக்கத்தில் 25 நிமிஷத்தில் வந்திறங்கினர். ஆல்ப்ஸ் மலை யென்பது எறக்குறைய இமயகிரிபோன்றதாம். அவர் ஆல்ப்ஸ் மலையை ஆகாயவிமானவாயிலாகக் கடந்து பிழைத்திறங்கியது அருமையினும் அருமையாம். முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.

*
* *

ஜப்பானில் ரயில்பாதைகளும் கப்பல்களும்.—இப்போது ஜப்பான் தேசத்தில் 5000-மைல் ரயில் பாதை யிருக்கின்றது. 1100-புகைக்கப்பல்களும், 3500 பற்பல வகையான கப்பல்களுமிருக்கின்றன.

*
* *

ஜப்பான் புதிய சக்கிரவர்த்தியின் முடி சூட்டு.—ஜப்பான் புதிய சக்கிரவர்த்தியின் முடிசூட்டு அடுத்த வருஷம் நவம்பர் மாதத்தில் கயாடோவில் (Kyoto) நடக்கப்போகிறதென்றும், 22 அன்னிய தேசங்களின் பிரதிநிதிகள் அம்மகோற்சவத்துக்கு வந்திருப்பார்களென்றும், சர்வதேச மகுடாபிஷேக முறைகளையும் சிற்சில அமிசங்களில் ஒத்திருக்கும் மகுடாபிஷேக முறைகளை யனுசரித்து அம்முடிசூட்டு மகோற்சவம் நடத்தப்படுமென்றும் ஜப்பான் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது

சென்னை ராஜதானியில் பிரசுரமாகும் சமாசாரப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும்.—சென்னை ராஜதானி முழுவதிலும் 1911-12-ம் வருஷத்தில் (சுதேச ராஜ்யங்களும் சென்னை ராஜதானியில் பிராஞ்சுக்காரருக்குச் சொந்தமான நாடுகளும் சேர்ந்து) பிரசுரமாகும் சமாசாரப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இவைகளின் மொத்தம் 387. அதற்கு முந்தின வருஷத்தில் 385.

*
* *

புதிய தலைநகரம்.—டெல்லியைப் புதிய தலைநகரமாகச் செய்யும் பொருட்டு கட்டப்படும் கட்டிடங்கள் இந்தியச் சிற்பசாஸ்திரத்தை யனுசரித்ததனவாயும் இந்தியச் சிற்பசாஸ்திரிகள் தங்களுடைய வேலைத்திறத்தைக் காட்டக் கூடியனவாயும் இருந்தால், க்ஷீணதிசை யடைந்திருக்கும் இந்திய சிற்ப சாஸ்திரத்தைத் தெரியப்படுத்துவதாகு மென்று இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேய பெருமாட்டிகளிலும் பிரபுக்களிலும் சிலர் சேர்ந்து கையெழுத்திட்டு, இந்தியா மந்திரி லார்டு க்ரூவுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பிக்கொண் டிருக்கிறார்கள். புதிய தலை நகரம் கட்டப்படுவதில் எவ்வித முறை அனுஷ்டிக்கப்படு மென்பது தீர்க்காலோசனை செய்து தீர்மானிக்கப்பட வேண்டுமென அந்த மெமோரியலில் குறிப்பிடப்பட் டிருக்கிறது. இந்தியாவில் தாஜ்மஹால், அக்பர், ஷாஜிஹான்,முதலானவர்களின் அரண்மனைகள் முதலியன என்றைக்கும் வெகு அழகாய்க் காணப்படுகின்றன வென்பதையும், 2000 வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடங்கள் யாதொரு பின்னங்களுமின்றி என்று மழியாதவிதமாய்க் காணப்படுகின்றன வென்பதையும் எடுத்துக் காட்டி இவைகளை யெல்லாம் நன்கு யோஜித்து சரியான முறையை அனுஷ்டிக்கத் தவறக்கூடாதென்றும் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது

*
* *

எழும்பூர் கவர்ன்மெண்ட் விதவாச்ரமம்.—இப்பெயர்புனைந்த ஹோம் ஒன்று ஸ்தாபித்திருப்பது நமது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். பிராமண பால்ய விதவைகளைப் படிப்பித்து முன்னுக்குக்கொண்டுவந்து அவர்கள் கௌரவமாய் ஜீவிக்க வழிகாட்டும்பொருட்டு நமது காருண்ய கவர்ன்மெண்டார் இந்த ஹோம் எற்படுத்தியிருக்கிறார்கள். இதில் வந்துசேரும் விதவைகளுக்கு சாப்பாடு இனாமாயிருப்பதுடன் ஒவ்வொருவருக்கும் மற்றச் சில்லரைச் செலவுகளுக்காக ரூ 3 கொடுக்கப்படுகிறது. இப்பொழுது இந்தஹோமில் 9-வயது முதற் 19வயதுவரை ஒன்பது விதவைகள் இருக்கிறார்கள். ஹோமிலிருப்பவர்கள் மிகச்சந்தோஷமாகத் தம் வீட்டிலிருப்பதைவிட அதிக சௌகரியங்களை அடைந்திருக்கிறார்கள். எல்லாரும் எழும்பூர் உபாத்தியாயினி பாடசாலையில் படித்துவருகிறார்கள். வீட்டில் சமஸ்கிருதம் கற்றுக்கொள்கிறார்கள். இவ்விதசௌகரியங்களையும் ஹோமிலிருக்கும் விதவைகளின் மிகக்குறைந்த எண்ணிக்கையையும் பார்த்தால் இவ்விதஹோம் இருப்பதே பலருக்குத் தெரியாதெனை எண்ணவேண்டி யிருக்கிறது. இச்சமயத்தை இழக்காமல் நமது மித்ரர்கள் தம் தம் உறவினரானவும் சிநேகரானவுமான பால்ய விதவைகளை ஹோமில் சேர்த்துப்படிப்பித்து அவர்கள் தம் வாழ்நாட்களைக் கௌரவமாகவும் சந்தோஷமாகவும் கழிக்கும்படிசெய்தல் அவர்களுக்கும் நமது ஜன சமூகத்திற்கும் நலம்.

*
* *

கொசுக்கடிக்கோர் உபாயம்.—கொசுக்களுக்குச் சிவப்பு நிறம் வெகு பிரியமாம். மஞ்சள் நிறம் அவைகளுக்கு அருவருப்பு. சாதாரண இருட்டிலுங்கூட நிறங்களின் வித்தியாசத்தை அறியக்கூடிய சக்தி, கொசுக்களுக்குண்டு. ஆகவே நித்திரை செய்யும்போது மஞ்சள்நிற உடுப்புகளை உபயோகித்தால் கொசு கிஞ்சித்தும் தொந்தரவு செய்யாதாம்.

*
* *

ராயல் கமிஷன்.—இக்கமிஷன், முதலில் சென்னையில் சென்ற மாதம் 8-ந் தேதி கூடி 18-ந்தேதியோடு முடிவுபெற்றது. இது 10 நாள் விசாரணை செய்ததில், 9 நாள் பகிரங்கமாகவும், ஒரு நாள் சென்னைக் கவர்ன்மெண்டாரை அந்தரங்கமாகவும் விசாரணை செய்தது. அப்போது 19 உத்தியோகஸ்தர்களும், 23 உத்தியோகஸ்தரல்லாதவர்களும், ஆக 42 பேர் விசாரணை செய்யப்பட்டனர். அவர்களுள், ஐரோப்பியர் 10, இந்துக்கள் 31, இந்தியரல்லாதவர் 1, பத்து ஐரோப்பியர்களுள், உத்தியோகஸ்தர் 6, உபாத்தியாயர் 1, பாதிரி 1, வர்த்தகர் 1. 31 இந்துக்களுள், உத்தியோகஸ்தர் 10, உபகாரச்சம்பளம் பெறுபவர் 3, லாயர்கள் 6, பத்திராதிபர் 3, தேசாபிமானிகள் 2, டாக்டர் 1, உபாத்தியாயர் 1, வர்த்தகர் 1, ஜமீன்தார் 1, வியவசாயி 1. இவர்களுள், பிராமணர் 19, பிராமணரல்லாதவர் 7, மகம்மதியர் 2, கிறிஸ்தவர் 3. சாட்சிகளுள் 24 பேர் பட்டம் பெற்றவர்கள், 17 பேர் சட்டசபை அங்கத்தினர்களா யிருந்தவரும் இருக்கின்றவர்களுமாவர். மேலும் அவர்களுள் 32 பேர் யூனிவர்சிட்டியில் உயர்தரக் கல்விப்பட்டம் பெற்றவராவர். அவர்களுள், 15 பேர் இங்கிலாந்தில் அல்லது இந்தியாவில் பாரிஸ்டர் அல்லது வக்கீல் அந்தஸ்து பெற்றவர்.

சிவப்புவர்ண விசேஷம்.—சிகப்பு வர்ணமுடைய வஸ்திர மூலமாய்ச் சூரிய கிரணத்தின் உஷ்ணம் ஊடுருவிச் செல்வதில்லை. வெயிலிற் போகும் ஜனங்களும் குதிரைகளும் தலைக்காப்பாகச் சிகப்பு வஸ்திரம் தரித்தல் நலமாம்.

*
* *

விக்ரகங்கள் கண்டெடுக்கப்பட்டன.—நெல்லூர் முனிசிபாலிடியின் தண்ணீர் வசதியின் பொருட்டு நீர்நிலையொன்று கட்டுவதற்காக, பெண்ணையாற்றில் ஆழமுண்டுபண்ணுவதற்காக முனிஸிபல் சண்டிராக்டர்களின் வேலைக்காரர்கள் தோண்டுகையில் வெகு அழகாய் வார்க்கப்பட்ட விக்ரகங்கள் அகப்பட்டனவாம். விக்ரகங்களனைத்தும் சைவ சின்னங்களுடையனவாம். பரமசிவம் பார்வதி விக்ரகங்கள் ஒரு கஜத்திற்குமேல் உயரமாயும், கொஞ்சங்கூட பின்னமில்லாமலும், வெகு விசித்திரமான வேலைப்பாடுள்ளனவாயுமிருக்கின்றனவாம். நாலடி உயரமுள்ள குத்துவிளக்குகளும் கோவில், கைங்கரியத்திற்குரிய சாமான்களும் அகப்பட்டனவெனத் தெரிகிறது. இவைகளனைத்தும் மணலில் சொற்பஆழத்தில் புதைந்து கிடந்தனவாம். மகம்மதியர்களின் படையெடுப்புக்காலத்தில் அவர்களுக்குப் பயந்து ஹிந்துக்களால் புதைக்கப்பட்டனவாயிருக்கலாமென எண்ணப்படுகிறது. சில வருஷங்களுக்கு முன்னால் தற்போதை இடத்திற்குச் சிறிது தூரத்திற்கப்பால் மண்ணால் மூடப்பட்டிருந்த கோவிலொன்று வெளிப்படுத்தப்பட்டதாம். ஆகவே, அக்காலத்தில் மகம்மதிய கொள்ளைக்காரர்கள் கையில் விக்ரம் உடைபடாமல் காப்பாற்றப்பட வேண்டியதின் நிமித்தம் இப்படிக் கொஞ்சதூரத்திற்கப்பால் புதைக்கப்பட்டனவென ஜனங்கள் எண்ணுகிறார்கள். மேற்படி விக்ரகங்கள் முற்காலத்திய சிற்பிகளுக்குத் தங்களுடைய கப்பங்களைக் கட்ட வந்து நிற்பனபோல் நிற்கின்றனவென ஹிந்துப் பத்திரிகைக்கு ஒரு நிருபர் எழுதுகிறார். அவைகள் தற்போது தாலூக்காக் கச்சேரியில் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கின்றன. டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டின் உத்தரவின்பேரில் மேற்கொண்டு தோண்டும் வேலையும் நிறுத்தப்பட்டிருக்கிறதாம்.

*
* *

சென்னை கவர்ன்மெண்டும் வித்யா இலாகா டைரெக்டரும்.—சென்னை ராஜதானிப் பொதுஜனப் படிப்பின் அபிவிருத்தியைக் கருதி இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்கெனவே சாங்கிஷன் செய்திருக்கும் தொகையுடன் இன்னும் 25000-ரூபாய்-சேர்த்து வருஷா வருஷம் கொடுத்துக்கொண்டு வருவதாக சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். இந்தத் தொகை எவ்விதம் பிரயோஜனப்படுத்தி வரப்படும் என்ற விஷயத்தைச் சீக்கிரம் தெரிவிக்கும்படியாய் சென்னைக் கவர்ன்மெண்டார் வித்யா இலாகா டைரெக்டரைக் கேட்டுவிட்டிருக்கிறார்கள்.

எலிமெண்டரி ஸ்கூல் தோட்டங்களுக்குக்கிராண்டு

எலிமெண்டரி ஸ்கூல் தோட்டங்களின் அபிவிருத்திக்காக சாங்ஷன் செய்யப்பட்ட 10,000 ரூபாய் கிராண்டுத்தொகையை சென்னை ராஜதானியைச் சேர்ந்த அடியிற்கண்ட டிஸ்டிரிக்ட் போர்டு, முனிசிபாலிடிகளுக்கு வித்தியா டைரெக்டர் அடியிற்கண்ட தொகையைப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்:—

		ரூபா
1	கஞ்சம்	... 400
2	விசாகப்பட்டணம்	... 400
3	கோதாவரி	... 400
4	கிருஷ்ணா	... 350
5	குண்டூர்	... 400
6	நெல்லூர்	... 400
7	பல்லாரி	... 450
8	அனந்தபுரம்	... 400
9	கடப்பை	... 400
11	கர்நூல்	... 400
11	செங்கல்பட்டு	... 400
12	நீலகிரி	... 350
13	கோயமுத்தூர்	... 400
14	சேலம்	... 400
15	வட ஆற்காடு	... 400
16	சித்தூர்	... 400
17	தஞ்சாவூர்	... 450
18	திருச்சினப்பள்ளி	... 400
19	தென் ஆற்காடு	... 400
20	ராமநாதபுரம்	... 600
21	மதுரை	... 250
22	திருநெல்வேலி	... 450
23	மலையாளம்	... 600
24	தென் கன்னடம்	... 400
25	பெஜவாடா முனிஸிபாலிட்டி	... 70
26	மசுலிப்பட்டணம் முனிஸிபாலிட்டி	... 30
	மொத்தம்	ரூ. 10,000

இதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

*
* *

ஓர் நவீன கடியாரம்.—ஐரோப்பாவிலுள்ள ஜெனிவாஎன்னும் பட்டணத்திலிருக்கும் கெடியாரக் கம்பெனிக்காரர் ஒரு மூகத்திற்குள் கடுகளவு சன்மானமுள்ள ஓர் நவீன கடியாரம் செய்வித்திருப்பதாகவும் அது செய்து முடிக்க 15 நாள் பிடித்ததாகவும் ஒரு பத்திரிகை கூறுகின்றது. அதற்கு அவர்கள் கூறும் விலை 1200 பவுன்.

Supplement to the "Viveka Bodhini"

"விவேக போதினி" அநுபந்தம்



THE GOLDEN MOSQUE, DELHI.



JUMA MUSJID, DELHI.



LAHORI GATE, FORT, DELHI.



The Dewan-i-Khass, Delhi.

SOME VIEWS OF DELHI

டெல்லியாகரின் சில காட்சிகள்

174

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி V } பரிதாபி௵ மாசியீ : 1913-௵ மார்ச்சுமீ { பகுதி 9

தேசகாலநிமித்தம் III

SPACE, TIME & CAUSATION

தேசகால நிமித்த ஸ்வரூபத்தைப்பற்றி இதுவரையில் கூறிவந்தவைகளிலிருந்து அவைகள் மனதின் பரிணாமங்கள் என்றும், அவைகளுக்கு அப்பாற்பட்டுள்ள வஸ்து அவைகளில் நிமித்தத்துடன் ஸம்பந்தப்பட்டதுபோல ஏற்பட்டுக் காண்பான் காட்சிப்பொருளாகப் பின் இந்தத்தோற்றத்திலிருந்துமுறையே காலமும், தேசமுமாக ப்ரபஞ்சம் விரிந்ததென்றும்: இவைகளின் உண்மையை உணர நமது ஜாக்ரத்ஸ்வப்ந ஸுஷுப்தியாகி மூன்று அவஸ்தைகளைப்பற்றி யோசித்தால் முடியும் என்பதும் தெரியவரும். ஞானிகளாக இருந்தவர்களிற் சிலர் இந்த தேசகால நிமித்தாதீதநிலையிலிருந்து வெளிப்பட்டே உபநிஷதாதிகளை அமைத்துள்ளனர். அவர்கள் அனுபவங்கள் நிறைந்த இவைகளிலிருந்துதான் நாம் இந்தப் பரமநிலையைப் பற்றி ஒருவாறு உணர்ந்து நம்பி அதை நாமும் அடைய, அவர்கள் வெளிநடை முதலியவைகளைப் பின்பற்ற வேண்டும்.

தேசகால நிமித்தாதீதமான நிலையிலிருந்து நோக்குங்கால் அவர்களுக்கு இந்த உலகவாழ்க்கை தீர்க்க ஸ்வப்நம் என்றும், மாணம் தீர்க்க ஸுஷுப்தி என்றும் தோற்றும். தமது நிலை ஸத்யஜாக்ரத் நிலையாகவே தோன்றும். நமக்கோ அவர்கள் நிலையைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நமது ஜாக்ரத்நிலை ஸத்யமென்றும் மாணம் இன்னது என்றும் அறியமுடியாததால் அதில் ஒரு பயமும் தோன்றும். இதுபற்றியே கீதையில் 'எல்லோருக்கும் இரவாகி இருக்கும் (ஒன்றும் விளங்காது இருக்கும்) நிலை (தேசகால நிமித்தாதீத நிலை) மனம் ஒடுங்கிய ஞானிக்குப் பட்டப்பகல் போல விழிப்பாக (நன்றாக விளங்குவதாக) இருக்கும். எல்லோருக்கும் வெட்டவெளிச்சமாக (நன்றாய் அறியக் கூடியதாக உள்ள) நிலை (உலகவாழ்க்கை) ஞானிக்கு நடுநிசியாக (ஒன்றுமில்லாததாக)த் தோற்றும்" இந்த மாதிரியான விஷயத்தில் ஞானியாகிய பெரியவரது அனுபவத்தைப் பின்பற்றி அதை அடையவே பயப்படாது முயலவேண்டும். ஆதலால் இந்தத் தேசகால நிமித்த விசாரத்தால் இவைகளுக்கு அப்பாற்பட்ட நிலை ஒன்று உண்டு: அது இப்பொழுதும் எங்கும் உள்ளதே. அது புதிதாக உண்டாக்கப்படுவதல்ல. அதன் இருப்பை உள்ளபடி உணர்ந்து ஒவ்வொருவரும் அதன்படி நிலைக்கவேண்டும். அவ்வளவுதான் என்று உணரவேண்டும்.

இப்படியானால் நாம் செய்யவேண்டியது ஒன்றுமில்லையா? இந்த விஷயத்தை உணர்ந்துவிட்டால் மாத்திரம் போதுமா? என்ற எண்ணம் வரலாம். அப்படியல்ல. இவ்வாறு தெரிந்துவிட்டால் மாணம் மூர்ச்சை இவைகள் புதுமையாகத் தோன்றி நமக்குப் பயத்தை உண்டாக்கா என்று சாஸ்திரங்கள் கூறும். இவ்வாறு உணர்ந்ததும், நமக்கு மாணபயம் போய்விடுமா? போகாததால் நாம் செய்ய வேண்டியது ஒன்று உண்டு என்பது வெளியாகும். பெரியவர்கள் சொல்லுகிறபடி தேசகால நிமித்தாதீதமாக நிற்கப் பழகவேண்டும். அவ்வாறு செய்யவொட்டாது நம்மைக் கலைக்கும் மனம் இந்திரியம் முதலியவைகள் குழப்பத்தை அடக்கி இந்த விஷய நம்பிக்கையில் செலவிட்டு உள் முகப்பட்டு இடைவிடாது பழகவேண்டும். இந்தப் பழக்க விசேஷத்தால் உள்ளபடி தேசகால நிமித்தாதீதமாகும் திறன் பகுத்தறிவு நிறைந்த மனித ஜன்மத்திற்குத்தான் உண்டு. இந்த ஜன்மம் வந்ததும் இந்த வழியில் இதன் இருப்பை உணராது உலக விஷயங்களிலேயே ஈடுபட்டுப் பொழுது போக்கிவிட்டால் மாணத்திற்குப்பின் நமக்குமானிடஜன்மம்வரும்என்பது என்ன நிச்சயம்? மாணத்தின் உண்மை ரஹஸ்யமாகிய 'நீண்ட ஸுஷுப்தி அதிலும் காண்பான் பாழுவதில்லை' என்பதை உயிருடனிருக்கும்பொழுதே அனுபவித்து உணர்ந்த நிலைத்தால் அல்லது உள்ளபடி தேசகால நிமித்தாதீதப்பட்டு நிற்க முடியாது.

விவேக போதினி

தொ. 5.] பரீதாபிஷூ மாசிமீ [பகுதி 9

ஸ்ருஷ்டி விஷயம்

4. யுகங்கள் முதலிய நெடுங்கால அளவைகள்

COSMIC AGES

ஸகல ஜாதியார்களும், தம்தம் வேதமெனக் கொண்டாடும் புஸ்தகங்களில் ஒவ்வொன்றிலும் பிரபஞ்ச சிருஷ்டி ஆரம்பித்து இப்பொழுது இவ்வளவு காலம் இருக்கலாம் என்பது ஒருவாறு சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லும் நூல்களுள் மற்ற நூல்களைப் பார்க்கிலும் ஸநாதன தர்மத்தின் ஆதி நூல்களாகிய வேதம் முதலியவைகளே சிருஷ்டிக்கிரமத்தின் காலங்களையும், பிரளய காலத்தின் அளவைகளையும் உள்ளபடி எடுத்துக் காட்டுகின்றன. இவற்றுள் காட்டப்பட்டிருக்கும் கால அளவைகள், தோற்ற மாத்திரத்தில் விபரீத வர்ணனையாகக் காணப்படும். இத்தோற்றத்தால் மோசம்போன சில வித்வான்கள், இவைகள் உண்மையாய் உள்ளன அல்லவென்று எண்ணுகிறார்கள். இக்கால அளவைகள் உண்மையா அல்லவா என்று ஸந்தேகிப்பவர்களுக்கு உண்மைதான் என்பது, இவைகளை இப்பொழுது விருத்தியாய் முன்னுக்கு வரும் பிரகிருதி சாஸ்திரத்தின் உண்மைகளோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், நன்றாய் வெளிவரும். வானசாஸ்திரம் பூதத்துவ சாஸ்திரம் ஆகிய இவைகளின் பிரபஞ்ச சிருஷ்டிக்கிரமம், பூமியின் விருத்தியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் ஒழுங்கு, இவைகளோடு நமது சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் சிருஷ்டிக் கிரமத்தை ஒப்பிட்டுப் பார்க்குங்கால், அவைகளுள் உள்ள ஒற்றுமையைக் காணலாம். நமது சாஸ்திரங்களிற் காணப்படும் அளவிட முடியாத யுகாதிகள் எல்லாம் விபரீத வர்ணனைகள் அல்லவென்பதும், அவைகள் உண்மையல்ல என்றுஞ் சொல்லுபவர்களுக்கு யுக்திக்கும் பிரகிருதி சாஸ்திரங்களுக்கும் பொருந்தும்படியான தகுந்த ஆதாரம் ஒன்றும் இல்லை என்பதும், நமது மனதில் நன்றாய்ப் படும். ஆகையால் முதலில் புதிய பிரகிருதி சாஸ்திரங்கள் பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றிச் சொல்லும் விஷயங்களைச் சுருக்கிச் சொல்லுவோம்.

வானசாஸ்திரப்படி ஸகல அண்டங்களும் ஆதியில் பிரகாசத்தோடு கூடிய வாயுபதார்த்தமாய் ஒரே கட்டியாய் இருந்தனவே ஒழிய, இப்பொழுதிருப்பவை போலக் கடின பதார்த்தமாயும் பலவாயும் இருக்கவில்லை. இம்மாதிரியாய்க் கடின பதார்த்தமாகாமல் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் வாயு பதார்த்தங்களை, இருளாய் இருக்கும் இரவில் நிர்மலமான ஆகாயத்தில் அதிசக்தி வாய்ந்த தூரதிருஷ்டிக்கண்ணுடிகள் மூலமாய், ஆங்காங்கே காணலாம். இக்கண்ணுடிகளின் ஸகாயமில்லாமலும் இரவில் மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தின் அருகில் உள்ள மூன்று நக்ஷத்திரத்தில் நடுநக்ஷத்திரம் புகையால் சூழப்பட்டதுபோலத் தோன்றுவதைக் காணலாம். இதற்குக் காரணம் அதன் அருகில் இம்மாதிரியான வாயுபதார்த்தம் இருப்பதே. இவ்வாறு ஒரே கட்டியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்த வாயு பதார்த்தத்துள்ளேயே சூரியனும் அதைச் சுற்றிவரும் கிரகங்களும் அடங்கிக் கிடந்தன. இக்கட்டி இப்பொழுது அந்தரத்தில் காணப்படும் கோளங்களாகப் பிரியும் முன்னர், தன்னிடமிருந்த உஷ்ணத்தை வெளியிட்டுக் குளிர்ச்சி அடைந்துகொண்டு வந்தது. இவ்வாறு குளிர்ச்சி யடையும்பொழுது இக்கட்டி

சுருங்கிவர அதனுள் ஏற்பட்ட பிரிக்கும் சக்தியால், அது தன்னைத்தானே சுற்ற ஆரம்பித்தது. சுற்றும் வேகம் வரவர அதிகரிக்க, அதிலிருந்து பிரிந்து, சிறு கட்டிகள் வேறாய் ஓடிப்போயின. இப்படிப் பிரிந்தவைகள், முன்னமே சுற்றிக்கொண்டிருக்கும் பெரிய கட்டியில் அடங்கியிருந்தமையால், இவைகளுக்கும் பெரிய கட்டிக்கும் ஒருவிதமான ஆகர்ஷண சக்தியுண்டாக அதனால் இவைகள் பெரிய கட்டியைச் சுற்றத் தொடங்கினவே ஒழிய அதைவிட்டு ஒரே அடியாய்ப் பிரிந்துபோய் விடவில்லை. இதுவே சூரியன் முதலிய நக்ஷத்திரங்கள் உண்டான விதம். பிரிந்து வந்தவைகளும் பெரிய கட்டி தன்னைத்தானே சுற்றுவதுபோலத் தம்மைத் தாமே சுற்ற அவைகளிலிருந்து கிரகங்கள் உண்டாயின. இப்படி உஷ்ணங் குறைந்து பிரிந்துவந்த கட்டிகளுள் நமது பூமியும் ஒரு கட்டி. இது 8000-மைல் குறுக்களவுள்ளது. இதில் சுற்றிலும் 50-மைல் வரையுள்ள பாகம் மாத்திரம் கடினபதார்த்தமாக மாறி இருக்கிறது. இது இவ்வாறாக, அநேக கல்பகாலங்கள் அவசியம் வேண்டியது. இப்பாகத்திற்கே பூமியின் ஏடு என்று பெயர். இதன் உள்ளே, இன்னும் உருகிய நிலையில் திரவபதார்த்தம் இருக்கிறது. இஃது எரிமலைகளின் செயலை உற்று நோக்கினால் வெளிவரும். ஆகாயத்திற் காணப்படும் கோளங்களில் அநேகம், இன்னும் அதிக உஷ்ண நிலையில் இருக்கின்றன என்று வானசாஸ்திரிகள் தமது தூரதிருஷ்டிக்கண்ணுடிகள் முதலிய அரிய சூட்சும யந்திரங்களால் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வாறு செய்யுங்கால், முன்னால் ஒரே கட்டியாய் இருந்த பிரகாசமான வாயுபதார்த்தம் இப்பொழுது இருக்கும் நிலைக்கு வரவேண்டியதற்கு, அவசியம் இத்தனை காலமா யிருக்குமென்பதை அளவிட முயன்று, கணக்கிட முடியாத கோடானுகோடி நூற்றாண்டுகள் முடிந்த பின்புதான் இவ்வாறு ஆயிருக்க வேண்டுமென்று நிர்மானித்திருக்கிறார்கள். இதுவே வானசாஸ்திரத்திற் கண்ட சிருஷ்டிக்கிரமம் முதலியவைகள்.

இனி, பூதத்துவசாஸ்திர சிருஷ்டி ஒழுங்கை உற்று நோக்குவோம். வானசாஸ்திரம் சிருஷ்டிக்கிரமத்தை எவ்விடத்தில் நிறுத்திவிடுகின்றதோ, அவ்விடத்தில் இருந்து பூதத்துவ சாஸ்திரம் காலநிர்ணயம் செய்யத் தொடங்குகிறது. பூமி உஷ்ணம் குறைந்து குளிர்ந்துகொண்டு வருங்கால், பூமியின் கடின பாகங்கள் படைபடையாய் அமைந்திருக்கும் ஒழுங்கைப் பரிசோதித்து நோக்கி, ஒவ்வொரு படை உண்டாக ஆயிருக்க வேண்டிய காலத்தை முதலில் நிர்ணயம் செய்து, பின்பு இப்பொழுது இருக்கும் நிலைக்குப் பூமி வருவதற்கு இவ்வளவு காலம் ஆயிருக்கலாம் என்று நிர்மானிக்கிறது. படை என்றால் இன்னது என்பதையும், அது இவ்வாறு பூமியின் கடின பாகத்தில் அமைந்திருக்கிறது என்பதையும் சற்று விளக்குவோம். மலை நாடுகளில் வாஸம் செய்திராத மனிதர்கள் பூமியின் கடினபாகம் முழுவதும் இறுகலான மண்ணாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணக்கூடும். இதற்கும் உண்மைக்கும் வெகு தூரமன்றோ? அந்த விதமான மண் அதிக ஆழம் காணப்படும் இடங்களிற்கூட, அது சற்றேறக்குறைய 100 அடி ஆழந்தான் இருக்கும். அதன் கீழ் கற்பாறையே காணப்படும். இதை நாம் குடைந்துகொண்டு கீழே போகுங்கால், இதில் படைகள் ஒன்றன்பேரில் ஒன்றாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது எம்மாதிரியான பாறைகளிலும் இப்படைகளை நன்றாய்க் காணலாம். அடியிற் காணப்படும் படையின் நிலையே, உலகம் கடினமாகுங்கால் முதலில் இவ்வாறிருந்தது என்பதையும், முறையே மேல்மேலும் காணப்படும் படைகள், வரவர உலகம் இவ்வாறு மாறியதென்பதையும், குறிப்பாகத் தெரிவிக்கும். ஆகவே பூமியின் ஏட்டில் எவ்விடங்களிலும் காணப்படும் ஐந்துபடைகளுக்கேற்ப ஐந்து நெடுங்கால அளவைகள் இருந்திருக்கவேண்டுமென்று பூதத்துவ சாஸ்திரிகள் ஸ்தாபிக்கிறார்கள். இந்நெடுங் காலங்களுக்கு இக்காலம் முதல் பின்னே கணக்

கிடுங்கால் முறையே நான்காவது, மூன்றாவது, இரண்டாவது, முதலாவது நெடுங்காலங்கள் என்றும், உயிர்ப்பிராணிகள் ஒருவாறு வஸிக்கத் தொடங்கிய நெடுங்காலம் என்றும் பெயர். இந்நெடுங்காலங்கள் ஒவ்வொன்றும் அநேக உட்பிரிவுகளை உடையதாய் இருக்கின்றன. இவைகளை விவரிக்கப் புகுந்தால் மிக விரியுமாதலால், அவைகளின் விஷயத்தை ஒருவாறு சுருக்கிச்சொல்லுவோம் இப்பொழுது காணப்படும் நான்காம் நெடுங்காலமானது இரண்டு உட்பிரிவுகளை உடையது. அவைகளுக்கு முறையே பனிக்கட்டிகள் திரண்டிருந்த காலம் என்றும், அதற்குப் பிந்தியகாலம் என்றும் பெயர். இதில் பின் உட்பிரிவிலேதான் நாம் இப்பொழுது இருக்கிறோம். முந்திய பனிக்கட்டிகள் திரண்டிருந்த காலத்தில் ஐரோப்பா ஆசியா அமெரிக்கா முதலிய கண்டங்களின் வடபாகமானது, பெரும்பாலும் அநேக ஆயிரம் அடி வரையில் பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருந்ததென்றும், அப்பொழுது பூமியில் வடக்குத் துருவபாகமானது ஸௌகரமான சீதோஷ்ண ஸ்திதியை உடையதாய் இருந்ததென்றும், அவ்விடத்தையே நமது முன்னோரான ஆரியர்கள் முதலில் வாஸஸ்தானமாகக் கொண்டிருந்தனர் என்றும், சில பூதத்துவ சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். பின் வந்த இரண்டாம் பாகத்தின் முதலில் இப்பொழுதிருப்பதுபோல வடக்குத் துருவம் அதிகக் குளிர்ச்சியுடையதாயும், பூமியின் மத்திய பாகம் அதிக உஷ்ணமுடையதாயும் மாறிவிட்டன. இனி நான்கு மூன்று ஆகிய நெடுங்காலங்களில் மனிதர்கள் வஸித்துக்கொண்டிருந்தார்கள் என்பது அந்தந்தக் காலங்களுக்குரிய பூமியேட்டின் படைகளில் காணப்படும் குறிகளால் நன்றாய்த் தெரியவரும். இரண்டாவது முதலாவது நெடுங்காலங்களில், மீன்கள், ஊர்வன, வாலில்லாக் குரங்குகள் முதலிய ஜீவஜந்துக்கள் வஸித்திருந்தனவென்பது அந்தந்தக் காலங்களில் உண்டான படைகளிற் காணப்படும் குறிகளால் வெளிவருகிறது. இவற்றால் பிராணிகள் முதலாவது நெடுங்காலத்தில் ஏராளமாய்த் தோன்றி வரவர மற்றைய நெடுங்காலங்களில் விருத்தி யடைந்துகொண்டு வந்திருக்கவேண்டுமென்பது நன்றாய் விளங்கும். ஆதி நெடுங்காலத்தில் உயிர்ப்பிராணிகள் அதிகமாய் வஸித்திருந்ததாக அக்காலத்திற்குரிய படையிலிருந்து தெரியவரவில்லை. இவ்வைந்தாம் படைக்குக்கீழ் அலைமோதிக்கொண்டு அதிக உஷ்ணமான திரவபதார்த்த ரூபமாகப் பூமி காணப்படுகிறது. பூதத்துவ சாஸ்திரிகளுக்கு இத்திரவபதார்த்த பாகத்தால் அதிகப் பிரயோஜனமில்லை; அதன்மேற் காணப்படும் ஐந்து படைகளே அவர்களுக்கு மிக முக்கியமானவைகள். இவ்வைந்தும் சேர்ந்து சற்றேறக்குறைய 140,000-அடி ஆழமுள்ளது. பூதத்துவசாஸ்திரிகள் அபிப்பிராயம் 600-அடி உண்டாவதற்கு ஏறக்குறைய 100,000 வருஷங்களாகும் என்பதே. இந்தக் கணக்கின்படி இவ்வைந்து படைகள் உண்டாவதற்கு ஏறக்குறைய 23,400,000 வருஷங்களாயிருக்கவேண்டுமென்றும், ஆதி நெடுங்காலம் முதல் இப்பொழுதிருக்கும் நிலை வருவதற்கு ஏறக்குறைய 4,000,000-வருஷமாயிருக்கவேண்டுமென்றும் தெரிகின்றன. இப்பொழுது நாம் பூதத்துவ சாஸ்திரிகள் தீர்மானித்த விஷயத்திற்கும் நமது சாஸ்திரங்களில் காணப்படும் கால அளவைகளுக்கும் உள்ள பொருத்தத்தை எடுத்துக்காட்டுவோம்.

நமது சாஸ்திரப்படி உள்ள கால அளவைகளின் விவரத்தையும் விஸ்தாரத்தையும் ஸ்ரீமத் பாகவத வினா விடை, முதல்பாகம் 3-வது ஸ்கந்தம் வினாக்கள் 9, 10-இல் காண்க.

இங்கு முக்கியம் கவனிக்க வேண்டியவை

1. மஹாயுகம் = 4,320,000 ... மனுஷ்ய வருஷங்கள்
1. மன்வந்தரம் = 306,720,000 ,,
1. கல்பம் = 4,320,000,000... ,,
பிரம்மாவின் ஆயுஸ் = 8,640,000,000 × 360 × 100

நண்பர்களே! இக்கால அளவின் விஸ்தீரணத்தைப் பாருங்கள்! எவ்வளவு அஸாத்தியமாயிருக்கிறது! இதை ஆழ்ந்து யோசிக்குங்கால் நமது ஆயுஸ் எந்த மூலை? நம்முள் அநேகர் சீக்கிரத்தில் இறக்கவில்லையா? இந்தப் பிரம்மாவினது ஆயுஸ்தான் பெரிதென்று எண்ணித் திகைத்து நின்றுவிட வேண்டாம். இதை கடவுளோடு இருக்கும் அவரது உருவாகிய காலதத்துவத்தில் ஒரு நிமிஷம் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இவை எவ்வளவு நம்பக்கூடாதனவாய் இருந்தபோதிலும், இவைகளை வானசாஸ்திரி, பூதத்துவ சாஸ்திரி ஆகிய இவர்களது அபிப்பிராயங்களோடு ஒப்பிடுவோம். உடனே இவைகளின் ஒற்றுமை எளிதில் விளங்கும். நமது மன்வந்தரம், கல்பம், மஹாகல்பம், பிரம்மாக்களின் ஆயுஸ் இவைகள் அநாதிகால தத்துவத்திற்கு நம்மை எவ்வாறு கொண்டுபோய் விடுகின்றனவோ, அவ்வாறே வானசாஸ்திர சிருஷ்டி ஒழுங்குகளும் நம்மைக் கொண்டுபோய் விடுகின்றன. பூதத்துவ சாஸ்திரப்படி, பூமியேட்டின் படைகள் உண்டாவதற்கு வேண்டிய 23400,000 வருஷங்கள் அநேகமாய் மஹாயுகங்கள், யுகங்கள் முதலியவைகளை அடக்கியுள்ளன. முதல் நெடுங்காலத்தில் உயிர்ப்பிராணிகளுண்டாகி மீன், ஊர்வன, வாலில்லாக் குரங்குகள் முதலிய பிராணி பேதங்களின் வழியாய் விருத்தியடைந்து நான்காம் நெடுங்காலத்தில் உயர்ந்த நாகரீகத்தோடு கூடி மனிதனாய் வெளிவருவதற்கு வேண்டிய 4,000,000-வருஷங்களுக்கும், நமது சாஸ்திரத்தில் இம்மன்வந்திரத்தில் 4,320,000 வருஷங்களுக்கு முன்பாக, முதல் யுகாரம்பத்தில் பிராணிகளுண்டாகி மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமன முதலிய உருவங்கள் மூலமாய் விருத்தியடைந்து இப்பொழுது அடைந்திருக்கும் நிலைக்கு வந்திருப்பதற்கும் உள்ள ஒற்றுமையைப் பாருங்கள்!—நண்பர்களே இப்பொழுதாவது நீங்கள் நமது சாஸ்திர விஷயங்களின் மேன்மையை அங்கீகரிக்க வேண்டியது அவசியமல்லவா?

நாம் முதலில் இவ்வத்தியாயத்தைத் தொடங்குங்கால், வெகு காலங்களுக்கு முன்பு எழுதப்பட்ட நமது சாஸ்திரங்களுக்கும் புதிய பிரகிருதி சாஸ்திர உண்மைகளுக்கும் இவ்வளவு பொருத்தமிருக்குமென்று கனவிலுங்கூட யாராவது எண்ணியிருப்பார்களா? முற்காலத்து மஹான்களான ரிஷிகள் உண்மையான விஷயங்களையே எடுத்துரைத்தனர். அவைகளைப் புதிய சாஸ்திர மூலமாய் ஆராயுங்கால், அவைகளின் உண்மை திடப்படுகின்றனவே யொழிய வேறில்லை. இதனால் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் நமது சாஸ்திர புராண கதைகள் எவ்வளவுதான் வீண் வர்ணனைகளாகத் தோற்றியபோதிலும், அவைகளை அவ்வாறு எண்ணித் தள்ளாது ஆய்ந்தோய்ந்து நோக்கின், அவைகளின் உட்பொருளை அறிந்து மனம் சுத்தியாகிக் கடைசியில் மேலான பதவியை அடையலாம் என்பதே.

திருத்தணிகேசன் தசாங்கம்

THE TEN INSIGNIA OF GOD MURUGA

தசாங்கம் என்பது தச + அங்கம் எனப் பிரிந்து அரசருக்குரிய பத்து உறுப்புக்களைக் குறிக்கும்; அவையாவன பேர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை; முரசு, மாலை, கொடி என்பன ராஜ ராஜேசுரனாய பரமசிவனது தசாங்கங்களை ஸ்ரீ மணிவாசகப் பெருமானார் "ஏரா ரிளங்கிளியே" எனத் துவக்குந் திப்பிய பாசுரத்திற் கூறியுள்ளதை யாவரும் அறிவர். அப்பதிகத்தைப் படித்து அகமகிழ்ந்த யான் எனது குலதெய்வமாகிய தணிகாசலப் பெருமானுடைய தசாங்கங்களைக் கூற அவாவுற்று "ஆசை வெட்கமறியாது" என்னும் பழமொழிக் கிலக்காகிப் பின்வரும் பாக்களைத் துணிவுகொண்டு வெளிப்படுத்தலாயினேன்.

செய்யவாய்ப் பைங்கிளியே
சேயோன் திருத்தணிகைத்
தூய்யன் திருநாமஞ்
சொல்லுதியால்—(a) மெய்யன்
அமரர்சிறை மீட்ட
அறுமுகவன் வேலன்
குமரனிறை யோன் மூவர் கோ. (1)

காதன் மொழிக்கிளியே கந்தன் திருத்தணிகை
நாதன் மகிழ்ந்துறையு நாடுரையாய்—ஏதுங்
குறையிலா அன்பிற் (b) குகனென்பார் நெஞ்சே
உறையிலா நாடென் றுணர். (2)

குறிப்பு:—

(a) பால சொரூபமாய் ஆறு திருமுகங்களைக்கொண்டு வேற்படையை யேந்தி அருட்டிறமையிற் றவறாது தேவர் சிறையை மீட்ட இறையோன் திருநாமம் "மூவர்கோ" என்க.

"சிலைமகள் நாயன் கலைமகள் நாயன்
திருமகள் நாயன் தொழும்வேலா"—திருப்புகழ் (245)

(b) குக ஸ்மரணை செய்பவர் நெஞ்சகமே குடியாகக் கொண்டுள்ளார் குமாரக்கடவுள்—மேற்கோள்,—

"பிரம புரந்தனி லுங்குக னென்பவர்
மனதினி லும்பரி வொன்றி யமர்ந்தருள்
பெருமானே".திருப்புகழ் (722)

தித்திக்குஞ் சொற்கிளியே
தேவன் திருத்தணிகை
அத்த னுறையும் அரும்
பதியென் (c) முத்தித்
திருப்புகழ்செய் தார்க்குச்
சிவஞானங் கூடும்
இருப்பிடமாஞ்
செய்ப்பதிய தே. (3)

வண்ணக் கிளியே வா தன் திருத்தணிகை
அண்ணற் குகந்ததாம் ஆறுரையாய்-(d)மண்ணிற்
புகுந்தவர்தம் உண்மாசு போக்கிப் புலன்சேர்
அகந்தவிர்க்கு மெய்நந்தி யாறு. (4)

கிள்ளைக் கணிகலமே கேடில் திருத்தணிகை
வள்ளற் குகந்த மலைபகராய்—(e) உள்ளிற்
பிணிகி யருள்பெம்மான் பேணுமலை வேண்டில்
விணுவுள் விடையுளதே மேல். (5)

அமுதமொழிக் கிள்ளாய் அமலன் தணிகை
உமைதனய னூர்தி யுரையாய்—திமிதிமெனக்
கார்கண்டு கூத்தாடு காமர் பசுந்தோகை
சீர்கொண்ட சேந்தனூர் தி. (6)

கொஞ்சுமொழிக் கிள்ளாய்குமரன் திருத்தணிகை
மஞ்சனவன் என்றும் மகிழ்படையென்—நஞ்செ
வாரிதியும் பூதரமும் மாமரமும் வீழஎறி [ழுந்த
கூரிதழ்வேல் ஏந்துங் குகன். (7)

நண்பூடு கொள்கிளியே நாதன் திருத்தணிகைப்
பண்பூடு கொண்டான் பறைபியம்பாய்-(f) எண்பூ
இடுதொண்டர் மெய்குளிர இன்னார் நடுங்கப்
படுதொண்ட கங்காண் பறை. (8)

தேமிக்க செஞ்சொற்
செழுங்கிளியே நந்தணிகைச்
சாமிக் குகந்ததாந்
தாருரையாய்-பூமிக்குள்
வெங்கலரே (g) னுந்தணிகை
வேட்டோர்க் கருள்சேய்க்குக்
கொங்கலர்தார்
தண்கடம்பா கும். (9)

கற்றவின்சொற் பைங்கிளியே
காதலனார் நந்தணிகைக்
கொற்றவன்கைக் கொண்ட
கோடிகூறாய்—உற்றவிண்ணில்
ஊழியாம் போது முலவா (h)
வுடுக் கொறித்த
கோழியாங் கொண்ட கொடி. (10)

—வ. சு. செங்கல்வராயன், எம். ஏ.

(c) செய்ப்பதி என்பது மேலே வயலூர். இத்தலம் திரிசிராப்பள்ளிக்கு 6-மைல் தூரத்தில் உள்ளது. இத்தலத்தில் திருப்புகழ் ஆசிரியராகிய ஸ்ரீ அருணகிரிநாதர் முருகக்கடவுளின் அநுக்கிரகம்பெற்றார்,—

" பாதபங்கய முற்றிட வுட் கொண்
டோதுகின்ற திருப்புகழ் நித்தம்
பாடுமென்பது செய்ப்பதி யிற்றந் தவனீயே."

—திருப்புகழ் (611)

(d) நந்தியாறு—திருத்தணிகைத் தலத்தில் உள்ளது; இத்தீர்த்தத்துக்குச் சிவதத்துவ அமிர்தம் என்றும் பெயர்.

" இந்நதிப் புனல் படிந்தோர் கேவல சகலங் கடந்த
வைந்தவத்தைக் கிளர்ராளி முத்தியை யுறுக"
" பொருவி லிந்நதியிற் படியினு மவரும்
புகர் மலப் பிறவியை யொழிக."

—திருத்தணிகைப் புராணம்.

(e) தணிகையெம் பெருமானுக்கு உகந்த மலை மேலே கேட்ட வினுவில் சொல்லப்பட்ட தணிகை மலையே என்க.

" விரையி டங்கொளும் போதினுள்
மிக்கபங் கயம்போற்
றிரையி டங்கொளு நதிகளிற்
சிறந்தகங் கையைப்போற்
றரையி டங்கொளும் பதிகளிற்
காஞ்சியந் தலம்போல்
வரையி டங்களிற் சிறந்தநித்
தணிகைமால் வரையே.

மந்த ரத்தினு மேருமால் வரையினு மணிமீதாய்
கந்த ரத்தவன் கயிலையே காதலித் ததுபோற்
சுந்த ரக்கிரி தொல்புவி தனிற்பல வெனினும்
இந்த வெற்பினில் ஆற்றவு மகிழ்ச்சியுண் டெமக்கே."

—கந்தபுராணம்.

(f) அட்டபுட்ப மாவன:—புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை; ஞானபூசை செய்வார்க்குக் கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன அட்டபுட்பமாமென்ப.

(g) வெங்கலர் = கொடிய கீழ்மக்கள்.

(h) " தாரகை செல்லாக் கொறித்துச்
சமுத்திரநீ ரறக்குடித்துச் சமரில் வந்து
சேரவுணர் படவிடிகோர்
குரல் காட்டுஞ் சேவல். "

—சேவற்பத்து

இயற்கைப் பாடங்கள்

NATURE STUDY

பூச்சிகளை உண்ணும் மிருகங்கள்.

தேவையானவை :—மீஞ்சூறு ஒன்று. எலி ஒன்று. அகழெலி ஒன்று. வேலிப்பன்றி ஒன்று. இவைகளே.

1. மீஞ்சூறு.

இந்த இரண்டு பிராணிகளைப் பாருங்கள். எவ்விரண்டில் நாம் முன்பார்த்த பிராணி இது? இதுதானே? ஆம் இதை முன் பார்த்திருக்கிறோம். இதுதான் எலி. ஆனால் இது என்ன? இது ஒரு குஞ்சு எலி என்கிறீர்கள். இதுவும் எலிதானா வென்று தெரிந்துகொள்ள இவை இரண்டையும் கிட்டக்கிட்ட வைக்கின்றேன். கவனித்துப் பாருங்கள். இவற்றுள் ஏதேனும் வித்தியாச மிருக்கிறதா? ஆம் வித்யாசம் இருக்கிறது. இது எலியை விடச் சற்றுச் சிறியது. இதன் மூக்கு வாயின் முன்னே நீண்டு ஒரு சிறு துதிக்கைபோலிருக்கின்றது. இதன் ரோமம் எலியின் ரோமம் போல் குச்சி குச்சியாயில்லை. தடவிப் பார்த்தால் கைக்கு வெல்வெட்டைப் (Velvet) போல் வழவழப்பாயிருக்கிறது. இதன் வால் எலியின் வாலைவிடக் குட்டையாயிருக்கின்றது. எலி வாலிலிருக்கும் சிறு செதில்கள் இதற்கில்லை. இதன் வாலில் வெல்வெட்டைப்போன்ற ரோமங்களே இருக்கின்றன. இதன் கண்கள் மிகவும் சிறியதாயிருக்கின்றன. இந்த வித்தியாசங்களிருப்பதால் இது எலியல்ல; எலியினத்தைச் சேர்ந்ததுமல்ல. இதையும் நமது வீடுகளில் நாம் பார்க்கிறோம். அஸ்தமனமானதும் வீட்டில் வெளிவந்து கீச்சு மூச்சென்று கத்திக்கொண்டு அங்குமிங்கும் உலாவி, பல பூச்சிகளையும் பிடித்துண்பதை நாம் பார்க்கலாம். அப்பொழுது நாம் யாரேனும் அதைப் பயப்படுத்தினால் கீச்சென்று கத்திக் கொண்டு ஓடிப்போவதுண்டு. அச்சமயத்தில் ஒரு துர்நாற்றம் உண்டாகும். அந்த நாற்றம் இதிலிருந்தே உண்டாகிறது. அது செத்த மீனின் நாற்றம்போலிருப்பதால், இந்தப் பிராணிக்கு நாம் மீஞ்சூறு என்று சொல்வது வழக்கம். இவ்விதம் இது இரவில் வந்து சஞ்சரித்துப் பூச்சிகளைப் பிடித்துண்ண இதன் தேகம் எவ்விதம் அமைந்திருக்கிறதென்றும், இதனிடமிருந்து வீசும் நாற்ற மென்னவென்றும், அந்த நாற்றத்தை எதற்காக உண்டாக்குகிற தென்றும், மற்றுமுள்ள விசேஷங்களையுங் கவனிப்போம்.

தேகம்.—மீஞ்சூறானது நமது வீடுகளைத் தவிர வேறெங்கும் வசிக்காது. வீடுகளிலும் தோட்டங்களிலுமுள்ள பொந்துகளில் பகல் முழுவதும் ஒளிந்திருக்கும். அஸ்தமித்ததும் வெளிவரும். அதனால் இது ஒரு இராச்சஞ்சாரி யாகும். இரவில் சஞ்சரிக்க அமைந்த இதன் நிறத்தைக் கவனியுங்கள். இதற்குத் துதிக்கை போன்ற மூக்கிருக்கின்றது, சதைபோல் சற்று சிவப்பாயிருக்கும் வாலு மிருக்கின்றது. ஆனால் தேகம் முழுவதும் சிலேட்டுப்பலகைபோல நீலக் கறுப்பாயிருக்கிறது. இருட்டில் சஞ்சரிக்கும் பொழுது ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமலிருப்பதற்கே இதற்கு இந்நிறம் அமைந்திருக்கிறதென்று சொல்லலாம். மீஞ்சூறானது கொட்டும் பனியிலும் மழையிலும் நிர்விசாரமாய் உலாவுவதுண்டு. பனியினால் இதற்கு குளிருண்டாகாது. மழையினால் இதன் தேகம் நனையாது. அப்படியிருப்பது எதனாலென்றுகவனிப்போம். அடர்த்தியாயுள்ள குட்டைரோமங்கள் வெல்வெட்டைப் போல் இதன் தேகமுழுது மிருப்பதினாலேயாம். ஒரு வெல்வெட்டை நாம் ஜலத்தில் போட்டால் அது நனையுமா? சிறிதும் நனையாது. அது போலவே மீஞ்சூறின் தேகமும் மழையில் நனைவதில்லை.

உணவு.—மீஞ்சூறு ஒரு இராச்சஞ்சாரி யென்றோம். இதன் கண்கள் புலி பூனைகளின் கண்களைப்போல் பெரிதாக விருந்தாலல்லவா இரவில் இதற்கு நன்றாகத் தெரியும். கடுகுபோல் சிறிதாகவல்லவா இருக்கின்றன. இப்படிக்கேன்? புலி பூனைகளுக்குப் பெரிய கண்களிருப்பானேன்?

புலி பூனைகளின் உணவென்ன? புலிக்கு ஆடு மாடு மான்களும் பூனைக்கு எலிகளுந்தானே? புலி பூனைகள் தங்களுக்கு உணவாகும் பிராணிகளைக் கண்டு அவற்றை நோக்கிச் சென்று அவை ஓடினால் அவற்றைத் தொடர்ந்தோடிப் பிடிப்பதால் அவற்றிற்கு பெரிய கண்களிருக்கின்றன. மீஞ்சூறின் உணவோ நமது தோட்டங்களில் கிடைக்கும் புழுக்களும், நத்தைகளும், நமது வீடுகளில் மெதுவாக ஊர்ந்துசெல்லும் கரப்புகளும் வண்டுகளுமேயாம். இவை எளிதில் அகப்படுமானதால் அதற்கேற்றபடி கண்கள் சிறியதாயிருக்கின்றன. ஆனால் தன் உணவு இருக்குமிடத்

எலி

தை மிகவும் எளிதில் மோர்ந்து அறிந்துகொள்ளும் சக்தி மீஞ்சூறுக்கு உண்டு. இதன் மூக்கு சிறு துதிக்கைபோல் நீண்டும் சதைபோல் சிவந்துமிருப்பது இதற்காகவே. போகும்பொழுது மூக்கை அடிக்கடி ஆட்டி மோர்ந்து பார்த்துக்கொண்டே போய் புழுபூச்சிகளைப்பிடித்துக்கொள்ளும். புலி பூனைகளைப்போல உணவின் சதையைக் கிழித்து இது உண்பதில்லை. அதனால் இதற்கு கோரப் பற்களில்லை. பிடித்துக்கொண்ட புழு பூச்சிகளை நழுவவிடாமல் வைத்துக்கொள்ள இதன் முன்பற்கள் பின்பக்கமாக வளைந்த சிறு கொக்கிகள்போலவும் இரையின் சதையைத்துண்டு துண்டாக்க இதன்கடைவாய்ப் பற்கள்பூனையின் கடைவாய்ப்பற்கள்போலக் கத்தரிக்கோல்போலவுமிருக்கின்றன, இதோ பாருங்கள். பூச்சிகளைத்தவிர தேளையும் பூரானையும் இது உண்ணும். நம்மைத் தொந்தரவு செய்யும் பிராணிகளை இப்படி இது உண்டு ஒழிப்பதால் இது நமது சிநேகிதனாகும். இதனாலும் இதற்குச் சிறு துதிக்கை யிருப்பதாலும் இது மிகவும் சாதுவானதாலும் ஹிந்துக்கள் இதைக் கணேசருடைய வாகனமென்று கொண்டு இதைப் பூஜித்து வருகிறார்கள்.

துர்கந்தம்.—கந்தம் வெளிப்படுத்தும் மிருகங்கள் அநேகம் உங்களுக்குத் தெரியுமல்லவா? புனுகுபூனை, நரி, முயல், எலி, மான், முதலியவையல்லவா? அவைகளுக்கு இருப்பதுபோலவே மீஞ்சூறின் துடையிலும் ஒவ்வொரு தைலப்பை உண்டு. ஆனால் அது பெரியதாயிருக்கும். தைலம்



மீஞ்சூறு

வெளிப்படும்பொழுதுதான் இந்நாற்றம் உண்டாகும். இணைபிரியுங் காலத்திலேதான் இத்தைலத்தை அதிகமாகப் பீச்சும். இந்தவினத்திற்கு மோர்ந்தறியும் சக்தி அதிகமானதால், வழி தப்பிப்போன இதன் ஸம்ஸாரமும் குஞ்சுகளும் தந்தையிருக்குமிடத்தைக் காற்று வாடையால் மோர்ந்தறிந்துகொண்டு அதனண்டையில் வந்துவிடும். இன்னொன்று; மீஞ்சூறு நமது வீடுகளில் சாதாரணமாய் உலாவும்பொழுது நமது உடுப்பு வஸ்திரங்களின்மேல் நடப்பதுண்டு. அது போனதும் நாம் உடுப்பு வஸ்திரங்களை மோர்ந்து பார்த்தால் நாற்றம் இருப்பதாகத் தெரியாது. ஏனென்

றால் மீஞ்சூறு நாற்றத் தைலத்தை எப்பொழுதும் போகுமிடமெல்லாம் பீச்சிக்கொண்டிருக்காது. எலியென்று எண்ணி அதை நாம் விரட்டி அடிக்கப் போவதுண்டு. பூனையும் பாம்பும் அம்மாதிரியே எலியென்று எண்ணி அதை உண்ண விரட்டிக் கௌவுவதுண்டு. இவ்விதம் அதைப் பயப்படுத்தி ஹிம்சிக்கும் காலத்தில்தான் அது அதன் தைலத்தை வெளிப்படுத்தும். அப்பொழுது அந்தக்கெட்டநாற்றம் அதனைத்தொடர்ந்து போவோருடைய மூக்கில் பாய்ந்து அவரைச் சிறிதுகாலம்சுவாசிக்க முடியாமல் மூச்சுத்திணர அடித்துவிடும். அந்தச் சமயத்தில் மீஞ்சூறு தப்பி ஓடிப்போய்விடும். இதற்காகவுந்தான் அது நாற்றம் வெளிப்படுத்துகிறது. இது தொடும் பதார்த்தங்களெல்லாம் நாற்ற மெடுக்கும் என்றும், தேன் சர்பத்து, ஒயின் இவைகளிருக்கும் புட்டிகளினருகில் வருவதாலேயே அவை நாற்றமடைகின்றன வென்றும் மூடத்தனமாய் நம்மில் அநேகர் சொல்வதுண்டு. மீஞ்சூறு கடித்தால் விஷமுண்டென்றும், அதனால் இழுப்பு வாதம் முதலிய ரோகங்கள் வருகின்றனவென்றும் சிலர் சொல்வதுண்டு. அது தப்பு. மீஞ்சூறுக்கு விஷம் கிடையாது. இந்த வியாதிகள் எலி கடித்தால்தான் வரும்.



அகழெலி

குட்டிகள்.—மீஞ்சூறு தடவைக்கு நாலைந்து குட்டிகளிடும். அவை சில நாள் கண் திறவாமலிருக்கும். தேகம் சற்றுத் தவிட்டு நிறமாயிருக்கும். மூக்கும் வாலும் சிவந்திருக்கும். மிகவும் பயந்தனவாதலால் வெகு நாளைக்கு வெளிவரா. அப்பொழுது தாயின் முலைப்பாலை உண்டு வளரும். சற்றுப் பெரிதானதும் குட்டிகளைத் தாய் தன்னோடு அழைத்துக்கொண்டுபோய் பூச்சிகளைப்பிடிக்கக் கற்றுக்கொடுக்கும். அப்பொழுது தாயின் வாலை ஒருகுஞ்சும், அதன்வாலை இன்னொரு குஞ்சும் அதன் வாலை இன்னொரு குஞ்சுமாகக் கௌவிக்கொண்டு ஒரு ரயில்வண்டித் தொடர்போலப் போகும்.

2. அகழெலி

இதைப் பாருங்கள். இதுவும் மீஞ்சூறு போலவே இருக்கிறது. இதற்கு அகழெலி யென்று பெயர். இது நமது வீட்டில் வசிப்பதில்லை, வீட்டண்டையிலுமிருப்பதில்லை. இந்தியாவில் வடக்கு ப்ரதேசங்களில்தான் அகப்படும். அங்கே குன்றுகளில் ஈரம் பாய்ந்த தரையில் பொந்து தோண்டி அதனுள் வசிக்கும். பகல் முழுதும் அதில் ஒளிந்திருந்து அஸ்தமித்ததும் வெளியில் வந்து புழுப்பூச்சிகளை உண்ணும். அதனால் இதுவுமொரு இராச்சஞ்சாரியாகும். இப்படி குழி தோண்டவும் இரவில் சஞ்சரித்து புழுப்பூச்சிகளை உண்ணவும் இதன் தேகம் எவ்விதம் அமைந்திருக்கிறதென்று கவனிப்போம்.

தேகம்.—இதன்தேகம் மீஞ்சூறின் தேகத்தைவிடக் கறுப்பாயிருக்கிறது. இதன் ரோமமும் வெல்வெட்டைப் போலிருப்பதால் இதன் மேல் மழைஜலமாவது, பனியாவது, தூசி துரும்புகளாவது யாதொன்றும் படா. தேகம் குழவி போல் உருண்டையாயிருக்கிறது. தேகம் சதுரமாயிருந்தால் பொந்தில் சுலுவாய்ப் போய்வாவும் பொந்தில் தன் தேகத்தை சுழற்றவும் முடியுமா? முடியாது. இதுபற்றியே பாம்புகளின் தேகமும் ருல்தடிபோலிருக்கிறது. இதற்கும் ரோமமுள்ள ஒரு குட்டை வாலுண்டு. இதன் கண்களைப்பாருங்கள். மீஞ்சூறின் கண்களைவிடச் சிறிதாய் ஊசிநுனிபோல் இருக்கிறது. இருட்டான அதன் குழியில் மற்ற பிராணிகளெதுவும் நுழைந்து அதை உண்பதில்லை. அதனாலேயே பிர

யோஜனமற்ற சிறுகண்களிருக்கின்றன. வெளிக்காதும் காதுத்துவாரமும் இதற்கில்லைபாருங்கள். வெளிக்காது நீண்டிருந்தால் அதெப்படி தடைநேரிடாமல் சுளுவாய்ப் பொந்தில் நுழையும். காதுத்துவாரமிருந்தால் மண்ணும் மணலும் காதிற்குள் புகுந்து அதைத் தொந்தரவு செய்யுமல்லவா? அதனாலேயே அவை இல்லை. ஆனால் இதற்கு உட்காதுண்டு. நாம் தரையில் தலையை வைத்து வண்டியேதேனும் வருவதை எப்படி அறிகிறோமோ அதுபோலவே அகழெலியும் சத்துருக்கள் வரும் சத்தத்தைத் தரையிலிருந்தே கேட்டுப் பொந்தினுள் மறைந்துவிடும். இதன் மூக்கும் ஒரு சிறு துதிக்கைபோலிருக்கிறது. அதனால் மோர்ந்து உணரும் சக்தி இதற்கு அதிக முண்டு. மூக்கால் இன்னொரு உபகாரமு மிதற்குண்டு. ஈரமான தரையில் பொந்து தோண்டும்பொழுது கூர்மையான தலைநுனியால் முதலில் துளைக்கும். பிறகு ஆப்புப்போல் பின்பக்கம் அகன்ற தலையால் அழுத்தும். அப்பொழுது பொந்து அகலும். துளைக்கும்பொழுது தலையை உறுதியாய் அழுத்துவதன்பொருட்டே அகழெலிக்குக் கழுத்தில்லாமலிருக்கிறது. கழுத்திருந்தால் அழுத்தும்பொழுது தலையாடுமல்லவா? அப்படித் துளைக்கவும் குழியிலிருக்கும் மண்களை வாரி யெறியவும் இதன் மூக்கு உதவுகிறது. மூக்கின் நுனி சற்றுத் தட்டையாயிருக்கிறது. அதை வலுப்படுத்த பன்றிக்கிருப்பதுபோல் இதன் மூக்கினுள் ஒரு தட்டையான எலும்பு உண்டு.

கால்.—அகழெலியானது கெட்டித் தரைகளிலும் பொந்து துளைப்பதுண்டு. அப்பொழுது அதன் முன் கால்களாலேயே குழி தோண்டும். கால்களைப் பாருங்கள். பின்கால்கள் சிறுத்துப் பிரயோஜனமற்றும் முன்கால்கள் பெருத்து அகன்றும் இருக்கின்றன. கை குட்டையாயிருந்தபோதிலும் உள்ளங்கை மிகவும் அகன்று மண்வெட்டிபோலிருக்கிறது. மணிக்கட்டும் வலுவாயிருக்கிறது. கையில் ஐந்து நகங்களிருக்கின்றன. நகங்கள் பெருத்தும் அகன்றும் தட்டையாயும் இருக்கின்றன. இவற்றால்தான் அது குழி பறிக்கிறது. பறித்த மண்ணைப் பின் எறிவதற்காகவே இதன் கையினுட்பக்கம் பின்னோக்கியவண்ணமாயிருக்கிறது. கை குட்டையாயிருப்பதற்குக் காரணம் முதலாவது, பொந்தில் தேகத்தைச் சுளுவாய் நுழைப்பதற்காம். இரண்டாவது நீண்டபிடியுள்ள ஒரு மண் வெட்டியினாலாவது அகப்பையினாலாவது நமக்கு எப்படி நன்றாகச் சுரண்ட முடியாதோ அதுபோலவே நீண்ட கையிருந்தால் அதற்கு மண்ணைச் சுரண்ட முடியாது.



வேலிப்பன்றி

உணவு.—அகழெலியும் ஒரு பூச்சி பக்ஷணியாகும். தன் கூட்டினண்டையிலிருக்கும் பல மண்புழுக்களையும், வண்டுகளையும், பூச்சிகளையும், நத்தைகளையும் பிடித்துண்ணும். சில சமயம் தவளையையும், தேரையையும், சுண்டெலியையும் உண்பதுண்டு. மழைகாலங்களில் உணவுக்காக அநேகம் மண்புழுக்களைக் கொண்டுவந்து தன் கூட்டில் சேர்த்துவைக்கும். புழுக்கள் ஓடிப்போகாமலிருப்பதற்கு அவற்றின் தலைகளை மட்டும் கடித்துவிடும். புழுபூச்சிகளை நழுவவிடாமல் வைத்துகொள்வதற்கும் அவற்றைக் கடிப்பதற்கும் இதன் பற்கள் மீஞ்சூறின் பற்கள்போலிருக்கும். அகழெலியும் மனிதர்களுக்கு

உதவிசெய்யும் ஒரு பூச்சியாகும். ஐரோப்பாவில் அநேகர் தங்கள் தோட்டங்களைப் பாழாக்கும் புழு பூச்சி நத்தைகளை ஒழிப்பதற்காக அகழெலியை வளர்ப்பதுண்டு. அகழெலியும் தடவைக்கு நாலைந்து குட்டிகள் போடும். அவற்றினருகே யாரும் வாராமல் பாதுகாத்துக்கொள்ளும்.

3. வேலிப்பன்றி

இதைப் பாருங்கள். ஒரு பலாக்காய்போலிருக்கிறது. இதென்ன? கண், வாய், கை கால்கள் இருப்பதால் இது ஒரு மிருகந்தானே. இதன்மேலெங்கும் முட்களிருப்பதால் இது ஒரு முட்பன்றியின் குட்டியென்கிறீர்கள்.

முட்களிருந்தபோதிலும் இது முட்பன்றியல்ல. பன்றியினத்தைச் சேர்ந்ததுமல்ல. பூச்சியுண்ணும் மீஞ்சூறினத்தைச் சேர்ந்ததாகும். இதற்கு வேலிப்பன்றி யென்று பெயர். இது தென் இந்தியாவில் எங்கும் அகப்படும். மணல் பிரதேசங்களிலும் புதர்களின் அடியிலும் ஒரு சிறுபள்ளம் பரித்து அதில் படுத்துத் தன்தேகத்தைச்சில இலைகளால் மூடிக்கொண்டு பகல்முழுவதும் உறங்கும். அஸ்தமித்ததும் வெளிவந்து தன் ஆகாரத்தைத் தேடித்திரியும்.

தேகம்.—இதைக் கவனியுங்கள். இது ஓரடி நீளமிருக்கிறது. தேகம் பலாக்காய்போல் உருண்டிருக்கிறது. முன் நீண்ட தலையும் பின்லேசம் கூட வால் இல்லாமலுமிருக்கிறது. தலையில் சிறு துதிக்கைபோன்ற மூக்கும் பெரும் கண்களும் காதும் இருக்கின்றன. குட்டையான நான்கு கால்களும் உண்டு. இதன் தேகம் சாதால் மூடப்பட்டிருக்கிறது. நெற்றியிலும் தேகத்தினடியிலும் சிறு ரோமங்களிருக்கின்றன. ஆனால் தேகத்தின்மேலெங்கும் அனேகம் முட்களிருக்கின்றன. முட்களைத் தொட்டுப் பாருங்கள், கெட்டியாயும் வலுவுள்ளனவாயும் நுனி ஊசிபோலும் இருக்கின்றன. முட்பன்றியின்முட்கள்போல் அவ்வளவு நீண்டதாயில்லை. இதோபாருங்கள் முட்பன்றிகளுக்குத்தங்கள் முட்களை தேகத்தோடுதேகமாய் மடக்கிக்கொள்ளவும் வேண்டும்பொழுது அவற்றை நேர்செங்குத்தாய் நிமிர்த்திக்கொள்ளவும் கூடுமல்லவா? ஆனால் வேலிப்பன்றியின் முட்கள்ச் செங்குத்தாய் தேகத்திலிருந்து நிற்கிறவண்ணமாகவே இருக்கின்றன. இந்த முட்களின் உபயோகமென்ன? வேலிப்பன்றி பயப்படும் சுபாவமுள்ள ஒரு சிறு மிருகமானதால், அதை யுண்ணவரும் நாய் நரி முதலியவற்றோடு முட்பன்றியைப்போல் அது எதிர்த்துச் சண்டைபோட முடிவதில்லை. கால்கள் சிறியனவா யிருப்பதால் ஓடிப்போய்த் தப்பவும் முடிவதில்லை. அதனால் தன் சத்துருவைக் கண்டதும் ஓடிப்போகாமல் தன் தேகத்தைக்



முட் பன்றி

கமான்போல் வளைத்துத் தன் தலையையும் கால்களையும் வயற்றினடியில் மடக்கிக்கொண்டு ஒரு பந்தைப்போல் சுருண்டுகொள்ளும். அப்பொழுது அதன் தேகமெங்கும் முட்களால் மூடப்பட்டிருக்கும். இப்படி சுருண்டு கொண்டு வெகு நேரம் கிடக்கும். முட்களுள்ளவற்றை உண்ண முடியாததலால் நாய் நரி சற்றுக் காத்திருந்து பிறகு போய்விடும். அவை போனதும் அது தன் தேகத்தை நிமிர்த்திக்கொண்டு தப்பி ஓடிப்போய் ஒளிந்துகொள்ளும். சுருண்டுகொண்ட வேலிப்பன்றியைச் சில நரிகள் வெகு தந்திரமாகக் கொல்லப் பார்க்கும். அவற்றை உருட்டிக்கொண்டே போய் அதிக உயரமான இடத்திலிருந்து கீழே கற்களின் மேல் தொப்பென்று தள்ளிவிடும். அப்பொழுது அவற்றிற்கு யாதொரு கெடுதியும் நேரிடுவதில்லை.

கிழே விழும்போது இவற்றின் தேகத்திலடிபடாமல் இவற்றின் முட்களே மெத்தைபோல் அவற்றைக் காப்பாற்றுகின்றன. சிலவேளை நரியானது வேலிப்பன்றியைக் குளம் குட்டைகளுக்கு உருட்டிக்கொண்டே போய் நீரில் தள்ளிவிடுவதுண்டு. வேலிப்பன்றி கொஞ்சநேரத்தில் சுவாசிப்பதன்பொருட்டு நீண்டு கரையினருகே வரும். அப்பொழுது நரி அதன் முட்களில்லாத அடிப்பக்கத்தைக் கடித்துக் கிழித்து அதைப் புசித்துவிடும். தரையில் நடமாடும்பொழுது சத்துருக்கள் தன்னருகில் வருவதை முன்னதாகவே அறிவதற்கே இதன் கண்ணும் காதும் பெரிதாயிருக்கின்றன.

உணவு.—வேலிப்பன்றி முக்கியமாய் பூச்சிகளைத்தான் புசிக்கும். பூச்சிகளைத்தவிர மண்புழு நத்தை சிறு பறவை இவற்றையும் உண்ணும். நமது வீடுகளில் வந்து கோழிக்குஞ்சுகளையும் முட்டைகளையும் தின்று போவதுண்டு. நமது வீடுகளிலும் தோட்டங்களிலுமிருக்கும் எலிகளையும் பாம்புகளையும் உண்ணும். ஆகையால் வேலிப்பன்றி நமக்கு மிகவும் உதவியாயிருக்கிறது. உணவுப் பிராணிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளவும் அவற்றைக் கடித்துண்ணவும் அதன் பற்கள் மீஞ்சூறின் பற்கள் போலவே இருக்கின்றன. எலிகளும் புழு பூச்சிகளும் ஒளிந்திருக்கும் வளைகளைப் பேர்த்தெடுப்பதற்காகவே அதன் சிறுகால்களில் தடித்த நகங்களிருக்கின்றன பாருங்கள். இரைக்காகப் பிராணிகள் அகப்படாத காலங்களில் அது காய் கனி கிழங்குகளை உண்டு வளரும். நமது தோட்டங்களில் வந்து மரங்களிலேறிக் காய் கனிகளைப்பறித்துத் தன் முட்களில் கோர்த்துக்கொண்டு போவதுண்டென்று சிலர் நம்புவதுண்டு. அது தப்பு. இதற்கு மரமேற முடியாது. காய் கனிகளைப் பறிப்பதுமில்லை. ஆனால் தரையில் உருண்டு பிரண்டு அங்கே கிடக்கும் வாடின இலைகளை முட்களில் கோர்த்துக்கொள்வதுண்டு. அப்பொழுது வேலிப்பன்றியைப் பார்த்தால் இலைபோலிருக்கும்; அதனால் அதன் சத்துருக்கள் கண்களுக்குப் படாமலிருக்கும். இந்த இலைகளைக் கொண்டுபோய், தான் தோண்டிய பள்ளத்தில் மெத்தையாக விரித்துக்கொள்வதுண்டு. இரவில் நமது வீட்டில் வேலிப்பன்றி வந்து நமது ஆடுமாடுகளின் பாலை உறிஞ்சிவிடுகிறதென்றும் சிலர் நம்புவதுண்டு. விஷப் பாம்பு கடித்தால் வேலிப்பன்றி சாவதில்லை. அதில் இதொரு விசேஷம். அனேக ஈன ஜாதியார் அதை உரியுடன் உண்பதுண்டு.

குட்டிகள். — வேலிப்பன்றி தடவைக்கு நாலைந்து குட்டிகள் போடும். குட்டிகள் கண் திறவாமல் சிலநாளிருக்கும். அவற்றின் தேகம் வெளுப்பாயும் முட்கள் சிறியதாயும் வளைக்கக் கூடியனவாயுமிருக்கும். குட்டிகளுக்குத் தாய் பாலூட்டி வளர்க்கும்.

மீஞ்சூறு அகமெலி வேலிப்பன்றி இம்மூன்றிற்கும் தேகத்தில் ரோமங்களிருப்பதாலும் அவை குட்டிகள் போடுவதாலும் குட்டிகளுக்குப் பாலூட்டுவதாலும் அவை மிருகங்களாகும். அவற்றிற்கு மூக்கு சிறு துதிக்கைபோலிருப்பதாலும், பற்கள் பூச்சிகளைப் பிடித்துண்ண அமைந்திருப்பதாலும் அவை பூச்சி பக்ஷணியைச் சேர்ந்ததாகும்.

வீ. ஆர். துரைசாமி சாஸ்திரி, எம்.ஏ., எல்.டி.

கடவுளைக்கண்டவர்கள்.—கடவுளைக் கண்டவனே உண்மையான ஞானியாவான். அவன் நிலை குழந்தையின் நிலையைப் போன்றது. குழந்தைக்கும் ஒருவித அஹங்காரம் இருப்பதாகத் தோற்றினும், அது வெறுந் தோற்றமேயன்றி தேற்றமான அகந்தையன்று. வளர்ந்த மனிதனது அஹங்காரத்தை நோக்கப் பால்மணம் மாறாப் பசிய குழந்தையின் அஹங்காரம் சூனியமேயாகும்.

—உபதேசரத்நமாலை.

உபநிஷத் ரத்தினமாலை

THE SUMMARY OF THE MINOR UPANISHADS

36. நாரத பரிவ்ராஜகோபநிஷத் (43)

ஸந்யாஸிகளுக்குள் மிகச் சிறந்தவரும் ஸஞ்சரிக்கு மிடமெல்லாம் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு ஆனந்தமாக உலாவி வருபவருமான நாரதர் நைமி சாரண்யம் வந்து சேர்ந்தார். அங்கு ஸத்திரம் என்றபன்னிரண்டு வருஷத்தில் நடந்தேறும்யாகத்தில் முனைந்திருந்த சௌனகாதி மஹரிஷிகள் அவருக்குத் தகுந்த வந்தனை வழிபாடுகள் செய்து தங்களுக்கு முக்தி மார்க்க ரஹஸ்யத்தை எடுத்து விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கு நாரதர் 'நல்லகுலத்திற் பிறந்தவன் உபநயனம் முதலிய 40 ஸம்ஸ்காரங்களுடையவனுகி தனக்கு ஏற்ற குருவை யடைந்து தன் வேதத்தை அத்யயனம் செய்து 12 வருஷங்கள் போக்கி, கல்வியும் கற்று, ப்ரஹ்மசரிய விருதமாகிய குருசொல் தவறாமை முதலியவற்றை நன்றாக நடத்திப் பின் 25 வருஷம் கிருஹஸ்தனுகியும், 25 வருஷம் வானப்ரஸ்தனுகியும் கழித்து, நான்கு மோக்ஷஸாதனங்கள் பெற்று, ஆசையை முற்றும் துறந்து சாந்தனுகி தன் உண்மை ஸ்வரூபத்திலேயே ஈடுபட்டு தேஹத்தை நழுவவிடுவதே முக்தி மார்க்கம்' என்று சுருக்கிக் கூறினர்.

இதன் பின்னர் சௌனகாதிகள் நாரதரை நோக்கி ஸந்யாஸ விஷயத்தை நன்றாக விளக்கவேண்டும் என்று கேட்க அதற்கு நாரதர் 'இதைப் பிரம்மாவிடமிருந்து கேட்டறிவதே மேல். ஆதலால் இந்த யாக முடிந்ததும் என்னுடன் வாருங்கள். ப்ரஹ்மாவிடம் போவோம்' என்றார். அதன்படி ஸத்திரம் முடிந்ததும் நாரதர் இவர்களை அழைத்துப்போய் ப்ரஹ்மா விடம்விட்டு ப்ரஹ்மாவை ஸந்யாஸவிஷயமான கேள்விகள் கேட்க அவர் ஸந்யாஸ ரஹஸ்யத்தையும் நியமங்களையும் விஸ்தாரமாகச் சொன்னர்.

முதலில் நாரதர் முன்னர் எடுத்துக் கூறிய ஆச்ரம ஒழுங்குகளை வெளியிட்டார் ப்ரஹ்மா.

ஸந்யாஸ அதிகாரம்.—நபும்ஸகன், பதிதன் (ஜாதி கெட்டவன்) உடற்குறையுள்ளவன், பெண் பித்துப் பிடித்தவன், செவிடன், சிறுபிள்ளை, ஊமை, விபரீத ஞானமுடையவன், சக்கிரீ, லிங்கீ, காட்டாள், குருக்கள், பட்டாசாரிகள், பணம் வாங்கிக்கொண்டு வேதம் சொல்லிக் கொடுப்பவன், சொட்டைத்தலையன், அக்னிஹோத்ரம் இல்லாதவன், ஸந்யாஸம் வாங்கி மீண்டவன் ஆகிய இவர்களுக்கு வைராக்யம் ஏற்பட்டிருந்தாலும், இவர்களுக்கு ஆச்ரம ஒழுங்கான ஸந்யாஸத்திற்கு யோக்யதையில்லை. ஆதுரஸந்யாஸம் என்ற மரண அவஸரத்தில் வாங்கும் ஸந்யாஸத்திற்குத்தான் அதிகாரம்.

ஆதுரஸந்யாஸம்.—இது மரண காலத்தில் வாங்கிக் கொள்ளவேண்டிய ஸந்யாஸம். இதில் ப்ரேஷோச்சாரணம் உண்டு. மற்றைய கர்ம மந்திரங்கள் சுருக்கம்தான். ஆதலால் ஆதுர ஸந்யாஸம் அல்லது ஆபத் ஸந்யாஸம் வாங்கிக்கொண்டவன் பிழைத்துவிட்டால் உடனே வீட்டைவிட்டு வெளியேறி ஸத்குருவை அடைந்து கிரமஸந்யாஸம் பெற வேண்டும். இவ்வாறு பெற்றாலும் முன்னர் கூறியுள்ள அனதிகாரிகளுக்கு மஹாவாக்ய உபதேசம் பெறுவதற்கு அதிகாரமே இல்லை.

க்ரம ஸந்யாஸ லக்ஷணம்.—இங்கு கூறுபவைகள் ஸந்யாஸம் வாங்குபவனிடம் அப்யாஸ பலத்தால் இருக்கும்: ஸந்யாஸத்தில் தேர்ந்தவனிடம் இயற்கையாக அமைந்ததுபோலவே இருக்கும். சாந்தி, சமம், சுத்தி, பொய் இன்மை, ஸந்தோஷம், நேர்மை, ஏழ்மைத்தனம், டம்பமின்மை, பாபமின்மை, தைர்யம், பொறுமை, உள்வெளி இந்திரிய அடக்கம், களவாமை, வெட்கம், ஞானம், கோபமின்மை, ஸத்யம், ஆத்ம விஷயப்பற்று, அபேக்ஷயின்மை, அனுக்ரஹிக்கும் ஆவலின்மை, ஸுகவிருப்பம், தேஹாத்ம புத்தி இன்மை, ஸமதிருஷ்டி, இச்சைராகத்வேஷாதியின்மை, ப்ரஹ்மசரியம், பொருள் ஸம்பாதியாமை, கர்வமின்மை, பாநிந்தையின்மை, எளிமைத்தனமின்மை, மனத் தெளிவு, உறுதி, பற்றின்மை, குரு சிச்ருஷை, சிரத்தை, அசட்டை, திடபுத்தி, மதுரப்பேச்சு, ஸஹித்தல், பகுத்தறிவு, யோகம், மிதாஹாரம், கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைதல், அஹிம்ஸை, புழுவைப்போல ஸாவதானமாக ஸஞ்சரித்தல், பிக்ஷை எடுப்பது, வைராக்யம், மூற்றும் நிஜவிரக்தியால் துறத்தல், நானே ப்ரஹ்மம் என்ற பாவனை, மூன்றுவிதக் கடன் இன்மை, ச்ரவணம், சென்றது கருதாது, வருவது நினையாது, நிகழ்வதில் உபேக்ஷயுடன் இருத்

தல், ஸுகதுக்க விஷயங்களில் செத்தாரைப்போலே இருத்தல், முன் ஆச்ரம விஷய சம்பந்தமின்மை, மனோ நிரோதம், தேஹ விஷயமான எந்த விரோதமும் வாராமை, வாக் மௌனம், நாராயணநாம உச்சாரணம், வாழ்வு இழவுகள் விஷயத்தில் விருப்பு வெறுப்பு இன்மை, ஊணில் ருசியைக் கவனியாமை, ஹிதம், ஸத்யம், மிதமான வார்த்தை, ஆசை இன்மை, உபநிஷத் அப்யாஸம், கூர்ம விருத்தி, ஸ்திரீ ஆசையின்மை, ஆத்மவிசாரம், உபந்யாஸம் வைத்யம் முதலிய உபகாரகர்மமும் இன்மை, லௌகீகப்பேச்சின்மை, பிறரைவேலை ஏவாமை, உலக விஷய வேஷமின்மை, உள்ளத்துறவு, ஆகிய இவைகளே ஸந்யாஸி லக்ஷணம் இந்தக் குணங்களை உள்ளபடி அப்யாஸம் பண்ணுபவன் ப்ரமகீட ந்யாயமாக, க்ரமமாக ப்ரஹ்மமேயாவான்.

இவ்வளவு குணங் கூறியிருப்பினும், முக்யமாக ஸந்யாஸம் வாங்குபவனுக்கு இருக்கவேண்டியது வைராக்யம் அல்லது ஞானம். இது வருகிறவரையில் ஸந்யாஸத்தை ஸ்மரிக்கவே கூடாது. இதைக் கவனியாது ஸந்யாஸத்தை மேற்கொண்டால் அதோகதி தான் வரும். வைராக்யம் என்பது, கர்மேந்திரியங்கள் வயிறு இவைகளின் தொழில் ஒடுங்கிவருவதே. ஞானமென்பது ஸத்தாகிய பரம்பொருளை உள்ளபடி உணரவேண்டும் என்ற தீவ்ர ஆவலே. இந்த இரண்டில் ஏதாவது ஒன்று திடமாக இருந்தால் மற்றதையும், மற்றும் முன்னர் கூறப்பட்ட லக்ஷணங்களையும் ஸந்யாஸம் வாங்கிய பின்னர் மனப்பூர்வ அப்யாஸ பலத்தால் எளிதில் அடையலாம். இதில் ஏதாவது ஒன்றில்லாதிருக்கையில் மற்றகுணங்களிருந்தபோதிலும் ஸந்யாஸம் நிலைக்காது. கர்மகாண்டாதி சாஸ்திரப் பகுத்தறிவால் வைராக்யம் பெற்று வாங்கும் ஸந்யாஸத்திற்கு விவிதிஷா ஸந்யாஸம் என்றும், ஞான பூர்வமாக வாங்கும் ஸந்யாஸத்திற்கு வித்வத் ஸந்யாஸம் என்றும்பெயர். இவ்விரு விதமான நிலையிலிருந்துதான் ஸந்யாஸம் பெறலாம். இந்நிலை ப்ரஹ்மசரியத்திலேயாவது க்ருஹஸ்தத்திலேயாவது வந்துவிட்டால் நேரே ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளலாம், இதுவும் கிரம ஸந்யாஸமே யாகும்.

ஸந்யாஸம் வாங்கும் முறை—இதிலிருந்த ஸந்யாஸ ஆச்ரமம் ப்ராஹ்மண ஜாதிக்கே ஒழிய வேறு ஜாதிக்கு இல்லை என்பது நன்றாக விளங்கும். கிருச்சிர ப்ராயச்சித்தம்; தேவ, ரிஷி, த்வ்ய, மனுஷ்ய, பூத, பிதுர், மாத்ரு, ஆத்ம ஆகிய எட்டுவித சிராத்தங்கள் முதலில் செய்யவேண்டும். இவை எட்டுநாளிலாவது, ஒரு நாளிலாவது நிறைவேறலாம். ஸாயங்கால ஸமயத்தில் இது முடிந்த பின்னர், ஏழுதலைமயிரை பிடுங்கி எறிந்து, ஏழுமயிரை க்ஷவரம் செய்துகொள்ளவேண்டும். பின்னர் க்ஷவரம் செய்துகொண்டு, ஸ்நானம், சாயத்ரி, ப்ரஹ்மயஞ்ஞம் முதலியன விதிப்படி செய்து அக்நிகர்மத்தை பூர்த்தி செய்துவிடவேண்டும். பிற்பாடு அக்னிக்கு வடபுறமிருந்து இரவு மூன்று ஜாமம் முடிகிறவரையில் புராணங்கள் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். நாலாம் ஜாமத்தில் புருஷஸூக்த மூலமாக 16 அன்ன ஆஹூதிகள் கொடுத்து ப்ரஹ்மாவைக் கிளப்பி அந்த கார்யத்தை முடிக்கவேண்டும். அக்னியை மந்திரமூலமாகத் தன்னுள் அடக்கிக்கொள்ளவேண்டும். பின்னர் ஸந்த்யாவந்தனம்செய்து தொப்புள் அளவு தண்ணீரில் நின்றுகொண்டு திக்பாலகர்களுக்கு அர்க்யம் கொடுத்து காயத்ரீயை விட்டுவிடவேண்டும். பிறகு ஸந்யாஸம் கொள்ளுகிறேன் என்று பொருள் படும் பிரேஷயந்திரத்தை மனப்பூர்வமாக நிதானித்துக் கூறி, கிழக்குநோக்கி இரண்டுதரம் ஜலத்தை விடவேண்டும். குடுமியைப் பிடுங்கிவிடவேண்டும், பூணூலையும் அறுத்து ஸமுத்ரம் போய்ச்சேர் என்று தண்ணீரில் விடவேண்டும். பின்னர் ஜலஹோமம் செய்து வஸ்திரத்தையும் அரைஞாணையும்தண்ணீரில் போடவேண்டும். பின்னர் சாந்தமாகக்கையைத் தலைமேல் உயர்த்திக்கொண்டு வடக்கு நோக்கிப் போய் குருவை அடைந்து ப்ரணவ உபதேசம் பெற்று ஸந்யாஸியாக ஸஞ்சரிக்கவேண்டும்.

இவ்வாறு குருவிடமிருந்து கிளம்புவதற்கு முன்னர் சிற்சில ஒழுங்குபேதங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையத் தூண்டும் அபேத பாவனை வரும் வரையில் வேதாத்யயனம் செய்து தீர்க்கவேண்டும். ஒருவருஷம், குருவினிடமே இருக்கலாம். பின்னர் ஒரு வருஷம் தன் ஆச்ரம தர்மத்தை அனுஷ்டித்து அபேத பாவனை வரும்வரையில் பழகலாம். இவ்விரண்டு வருஷமானதும் ஞான இச்சை ஒருவாறு வந்துள்ள அதிகாரி, குருவால் கொடுக்கப்படும் தெண்டம், அரைஞாண், கோவணம், காஷாயவஸ்திரம், கமண்டல முதலியவைகளை மந்திரபூர்வமாகப் பெற்றுக்கொள்ளலாம். எனக்கு 'யோக பட்டாபிஷேகமாகிவிட்டது' என்று உள்ளம் பூரித்து ஸந்யாஸி தர்மத்திலேயே வழுவாதிருக்கவேண்டும்.

ஸந்யாஸதர்மம்.—ஸந்யாஸி ஸத் வஸ்துவில் ப்ரீதியுடனும் அஸத் வஸ்துவில் விரக்தியுடன் மதுகரவிருத்தியால் பிக்ஷை எடுத்துத்தான் ஜீவிக்கவேண்டும். நல்ல பிக்ஷை கிடைக்குமிடத்திற்கு ஆவலுடனும் தாண்டி விட்டவீட்டிற்கு மறுபடியும் போகலாகாது. வீடுகளில் நெருப்பு அணைந்து சாப்பாடு ஆனதும் பிக்ஷைக்குப்

போகலாம். கதவு திறந்திருக்கும் வீட்டிற்குத்தான் போகவேண்டும். இரண்டு கௌபீனம், ஒரு கந்தல் தைத்த துணி, தண்டம் இதற்கும் அதிகம் வைத்துக்கொள்ளலாகாது. வஸ்திரமில்லாமலும் இருக்கலாம். இவன் பற்றற்று ஸாதாரணமாகத் தனியே தான் உலாவி வரவேண்டும். மரத்தடி முதலிய (ஜாபால உபநிஷத்தைப் பார்க்க) ஏகாந்த ஸ்தலங்களில்தான் இருக்கவேண்டும். ஸந்யாஸி இருவர் (மிதுனம்) மூவர் (க்ராமம்) அதிகம் (நகரம்) ஆகிய இவ்வாறு கூடியிருந்தால் வ்யவஹாரங்கள் வலுத்து ஆச்ரம தர்மம் நஷ்டமாக நரகமே வரும். காலத்தை எதிர்பார்த்துக்கொண்டே கூலிக்காரன்போலிருக்கவேண்டும். கிராமத்தில் ஒரு ராத்திரியும், பட்டணத்தில் மூன்று நாளும், நகரம், க்ஷேத்ரம் இவைகளில் ஐந்து நாளும்தான் ஸந்யாஸி வஸிக்கலாம். இங்கும் கூட்டமில்லா ஓரமான பாகங்களில் இருக்கவேண்டும். காடு மலைகளில் இடைவிடாது வஸிக்கலாம். மழை காலத்தில் முற்கூறியவிடங்களில் 4 மாஸம் ஸஞ்சரிக்காது ஒரே இடத்தில் இருந்து மற்றைய நாள்களில் ஒவ்வோரிடத்திலும் குறிப்பிட்ட அளவுக்கு மிஞ்சித் தங்காமலும் ஸஞ்சரிக்கவேண்டும். இராஜனில்லாத் தேசத்திற்குப் போகவே கூடாது. இவைகளை மீறி நடந்தால் வ்யவஹாரம், ஆசை முதலியன அதிகரித்து ப்ரஹ்மபாவனை திடப்படாது. ஸந்யாஸி அதோகதியடைவான். கட்டில், வெள்ளைத்துணி, நடனம் முதலிய காட்சி, சூது, அழகிய ஸ்திரீ, பூஜார்ஹம், முதலிய போக்ய விஷயங்கள் எல்லாவற்றையும், அசுத்த வஸ்துக்களை வெறுப்புடன் நீக்குவதுபோல நீக்கிப் பயந்து ஓடவேண்டும். ஸ்திரீயைச் சித்திரத்தில்கூட ஸந்யாஸி பார்க்கலாகாது. இந்தப் பழக்கத்தை முன்னிட்டு தேஹ ஸம்பந்தத்தையும் (ஆத்மா என்னும் பற்றையும்) அதன் ஸம்பந்தமாக வரக்கூடிய ந்யாய போகங்களையும் வாந்திசெய்த அன்னத்தில் உண்டாகும் வெறுப்புடன் முதலில் ஒதுக்கிவிடவேண்டும். இந்திரியங்களிருந்தும் அவை இல்லாதுபோலச் செத்தாரைப்போல ஸந்யாஸி திரியவேண்டும். ஊணில் ருசிபாராமை, ஸத்ய, ஹித, மிதவார்த்தைகளைத் தவிர மற்றவைகளைப் பேசாமையாகிய ஊமைத்தனம்; பெண் குழந்தை, பாட்டி இவர்களிடமிருப்பது போன்ற மனச்சுத்தியுடன் 16-வயது யுவதியிட மிருத்தலாகிய நபும்ஸகத்தனம்; தேஹதாரண நிமித்தம் மாத்திரம் ஸஞ்சரிப்பதைத் தவிர வேறு காரணத்தால் நடவாமையாகிய முடவத்தனம்; திருஷ்டி எப்பொழுதும் ஒரு நுகத்தடி தூரத்திற்கு அப்பாற் பாயாமையாகிய குருட்டுத்தனம்; இஷ்டானிஷ்ட வார்த்தைகளைக்கேட்டாலும் ஒரு படித்தாய் தன்லக்ஷ்யம்விட்டு மனம்பெயராமையாகிய செவிட்டுத்தனம்; விஷயமத்தியிலிருந்தும் தூங்குகிறவன்போலும், பிணம்போலும் தாக்கற்றிருப்பதாகிய ஜடத்தனம் ஆகிய இவைகளை அனுஷ்டித்து திடப்பட்டிருக்கவேண்டும். ஸதா ஆத்மானுஸந்தானம், ஆத்ம நிஷ்டை இவைகளிலேயே இருக்கவேண்டும். இவன் பாலனைப்போலவும் (பற்றின்மை பரிசுத்தமுடையவனாகவும்) உன்மத்தனைப்போலவும் (தேஹமுள்பட எல்லாவற்றிலும் உபேக்ஷை உடையவனாகவும்) பிசாசம் (கண்டோர் அணுகி தன் நிலையைக் கலைக்க இடங்கொடாமலிருக்கும் பயங்கரத்தன்மை யுடையவனாகவும்) உலாவி வரவேண்டும். வஸ்து ஒன்றேயாயினும், ஸந்யாஸம் முற்றும் துறந்து ஸகல தர்மங்களுக்கும் அப்பாற்பட்டு வஸ்துவாக இருத்தலாகிலும் இந்நிலையை அடைய முயலும் அதிகாரிகளுக்குத் தேஹாதி ப்ரபஞ்சம் இருப்பதால் ஸந்யாஸதர்மம் என்ற வ்யவஹாரம் ஏற்பட்டது. முடிவை நோக்கில் அதுவாகவே இருந்துவிடுவதன்றி வேறொரு தர்மமும் ஸந்யாஸிக்குக் கிடையாது.

ஸந்யாஸ பேதங்கள்.—ஸந்யாஸத்தின் முடிவு ஒன்றேயாயினும் அதிகாரிகள் நிலையின் பேதத்தால் நான்கு விதமாகும்.

1. **வைராக்ய ஸந்யாஸம்.**—(விவிதிஷா) பூர்வ புண்ய பரிபாகத்தாலும் வேதத்தின் கர்மகாண்ட அப்யாஸத்தாலும் பாப புண்ய ஸ்வரூப பலன்களை உணரும் விவேகம் வந்து கெட்ட விஷயங்களில் வெறுப்புப் பிறந்து வாங்கிக்கொள்வது இந்த ஸந்யாஸம்.

2. **ஞான ஸந்யாஸம்.**—சாஸ்திர அறிவால் பிரபஞ்ச நிலையாமையை உணர்ந்து, மனமடங்குவதால் ஆசை தளரப்பெற்று வாங்கிக்கொள்வது இது.

3. **ஞான வைராக்ய ஸந்யாஸம்.**—(வித்வத்) ஆச்ரம ஒழுங்குகள்படி கிரமமாக நடந்து வைராக்யம் உண்டாகப்பெற்று ஸாதன சதுஷ்டயம் வர ஆத்மானு ஸந்தானத்தில் உள்ள விருப்பால் ஆத்ம நிஷ்டை பெற வாங்கிக்கொள்வது இது.

4. **கர்ம ஸந்யாஸம்.**—ஆச்ரம ஒழுங்குப்படி தனக்குவைராக்யாதிகள் உண்டாகாவிடினும் விதிஒழுங்கில் நம்பிக்கையுடன் வாங்கிக்கொள்வது இது. இந்த ஸந்யாஸம் இரண்டுவிதம்.

(i). **நிமித்த ஸந்யாஸம்.**—ஒரு காரணம் பற்றி சாஸ்திர ஒழுங்கில் நம்பிவாங்கும் ஆதுர ஸந்யாஸம் இதுவே. இது ஒழுங்காக வரவேண்டியதில்லை. ஏதாவது ஒரு அவஸரம் வெறுப்பு நோக்கம்முதலியவைகளை முன்னிட்டு வருவது.

(ii). **அநிமித்த ஸந்யாஸம்.**—க்ரம ஸந்யாஸம் இதுவே. ஈச்வரன் எங்குமிருக்கிறார் என்ற பூர்ண திட நிச்சயத்துடன் உலக நிலையாமையைக் கண்டு வானப்ரஸ்தாச்ரம முடிவில் விதிப்படி வாங்கிக்கொள்ளும் ஸந்யாஸம் இது.

ஸந்யாஸ தர்மானுஷ்டான விஷயமாக ஸந்யாஸம் ஆறு விதமாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

1. **குடீசகன்.**—குடுமி, பூணூல், திரிதண்டம், கமண்டலு, கௌபீனம், கந்தை, ஸ்தாலி, கயிற்றுப்பை ஊர்த்வபுண்ட்ரம், உடையவனாகி, தாய்தந்தை குருவழிபாடு, ஜபம், முதலிய ஸத்கார்யம் செய்துகொண்டு, ஒரேயிடத்தில் பிக்ஷைவாங்கி ஜீவிப்பவன் இவனுக்கு மூன்றுகால ஸ்நாநம்,ருதுவுக்குருதுக்ஷவரம், மானஸப்ரணவ ஜபம் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவனுக்கு சாஸ்திரச்ரவணத்தில்தான் அதிகாரம். உபதேசம் செய்யும் அதிகாரமேயில்லை. பூர்புவர் லோகங்களை அடைவதே இந்தத் தர்மானுஷ்டான பலன்.

2. **பஹூதகன்.**—திரிபுண்டரதாரணம், எட்டு வீட்டில் பிக்ஷை எடுத்து எட்டு கவளம் புஜித்தல். இரண்டுதரம் ஸ்நாநம், இரண்டு ருதுவுக்கு ஒருதரம் க்ஷவரம் ஆகிய இவை இவனுக்குச் சிறப்பான நியமங்கள். இவைதவிரகுடீசகன் தர்மங்களும்மற்றைய மேற்கூறிய ஸந்யாஸி தர்மங்களும் இவனுக்கு உண்டு: உபதேசம் கூடாது: மானஸ ப்ரணவ ஜபம் உண்டு. இந்த தர்மானுஷ்டானத்திற்கு ஸ்வர்க்க லோகம் பலன்.

3. **ஹம்ஸன்.**—ஜடையைத் தரித்துக்கொண்டு மான்தோல் போர்த்து, ஏதாவது ஒரு புண்டரதாரணம் அல்லது விபூதி தூளனம் செய்யவேண்டும் இவன். கவள நியமம் இல்லை. ஒரு கால ஸ்நாநம், அயனக்ஷவரம் அல்லது க்ஷவரமின்மை, மனன அதிகாரம், அந்தர்ப்ரணவம், இவனுக்குச் சிறப்பு விதிகள். ஸந்யாஸ விதிகளைத் தீவிரமாகப் பின்பற்றவேண்டும். உபதேசம் செய்யக் கூடாது. தபோலோக ப்ராப்திபலன்.

4. **ப்ரமஹம்ஸன்.**—குடுமி பூணூல் கிடையாது. ஐந்து வீட்டில் பிக்ஷை எடுத்து உண்ணவேண்டும். ஒரு கோவணம், காவித்துணி, தண்டம், விபூதிதாரணம் பற்றின்மை ஆகிய இவைகள் இவனிடம் முக்யமாக இருக்கவேண்டும். மற்றையவைகளில் எல்லாம் ஹம்ஸனைப்போலிருக்கவேண்டும். ஸத்யலோகம் பலன்.

5. **துரியாதீதன்.**—பசுவைப்போல வாயாலேயே பழங்களை உட்கொள்ளவேண்டும். அன்னம் சாப்பிடுவதானால் மூன்று வீட்டில் பிக்ஷை எடுத்து உண்ணலாம். தேகமாத்திரமாய் திகம்பரனாக செத்தாரைப்போலே திரியவேண்டும். ஒருவிடத்திலும் நிலைத்திருக்கக் கூடாது. ஒருவிதி என்ற நிபந்தனை இவனுக்கில்லை. ஒருவரையும் நமஸ்கரிக்கக்கூடாது. இவன் விபூதி ஸ்நாநம், திலகதாரணம் செய்துகொள்ளலாம். க்ஷவரமே இல்லை. நானே ப்ரஹ்மம் என்ற பாவனை ஸதா இருக்கவேண்டும். நிதித்யாஸனம் மஹாவாக்ய உபதேசம் இதில் அதிகாரம் இவனுக்கு உண்டு. இவனுக்கு லோகாந்தர ப்ராப்தியான பலனே இல்லை: இருந்தவிடத்திலே மோக்ஷம் இவனுக்கு.

6. **அவதூதன்.**—வியபசாரி, ஜாதிகெட்டவன், நீங்கலாக மற்றவரிடமிருந்து மலைப்பாம்புபோலக் கிட்டினதை உட்கொள்வதைத்தவிர வெளிநியமம் ஒன்றும் இவனுக்கில்லை. ஸ்வரூப நிஷ்டையிலேயே இவனிருக்கவேண்டும். புண்ட்ரமில்லை, விதியில்லை, நிஷேதம் இல்லை. க்ஷவரமே இல்லை. வாயுஸ்நாநம். இருந்தவிடத்திலே மோக்ஷம்.

பொதுக்குறிப்புக்கள்.—மரணகாலத்தில் உண்டாகும் எண்ணமே மறுஜன்ம ஸூசகம். ஆதலால் ஸந்யாஸி ஸதா ஆத்ம நாட்டத்திலேயே இருந்து மாறாது தேஹத்தை நழுவவிடவேண்டும். மூன்று அவஸ்தைகளிலும் ஸுஷுப்திபோன்ற வெளித்தாக்கின்மை இருத்தல்வேண்டும். இகபர ஆசை இருக்கவே கூடாது. கூலிக்காரன்போல நிகழ்வதில் ஒருவித விருப்பு வெறுப்பு இன்றிக் காலத்தையே எதிர்பார்த்திருத்தல் வேண்டும். உள் ஸந்யாஸமில்லாவிடில் வெளிஸந்யாஸம் வீணே. வெளிப்படையாகச் சில அடையாளங்களை நீக்கி சிலவற்றைக் கைக்கொள்வதனால் உள்ளத் துறவு இருந்தால் நீக்கி யவைகளில் உட்குறிப்புக்களிருக்கும் ஆதலால் பாபமே வரமாட்டாது. திரிதண்ட ஏகதண்டத்தை த்யாகம் செய்துவிட்டபோதிலும், அவைகள் குறிப்பாகக் காட்டிக்கொண்டிருந்த ஞானம் (மனோநிச்சயம்) என்பதும், வாக்தண்டம், மனத்தண்டம், கருமதண்டம் என்பவைகளும் இருக்கும். இதுபோல யஞ்ஞோபவீதத்தை அறுத்தெறிந்துவிட்டபோதிலும் மணிகளை மாலையாக நிற்கச் செய்யும் உட்கயிறுபோல எங்கும் பரவியுள்ளார் ஸூத்ராத்மா என்ற உணர்ச்சியாகிய ஸூத்ரத்தைஉடையனாக இருப்பதால் பாபம் வருமா? ஞானமாகிய முடிவான குடுமியை உடையவனுக்குச் சிகை எதற்கு? ஒருவித கர்மம் பக்தி ஒன்றும் இருக்கலாகாது: இருந்தால் பிணத்திற்குச் செய்த அலங்காரம்போலத்தான். இவனுக்கு மன அடக்கமே தண்டம்; கையே பாத்திரம், திக்கே துணி ஒழிய வேறில்லை. மிகுந்த மரியாதையுடன் கிடைப்பவைகளை ஸந்யாஸி வெறுக்கவேண்டும். நின்று அல்லது நடந்துகொண்டே இவன் புஜிக்கலாம். ஸந்யாஸி ஸூர்யனைப்போல ஒழுங்கு தவறாதிருப்பன். ஞானயஞ்ஞமே செய்வன். வேறு ஆச்ரமிகளுடன் சேரவே கூடாது. இவன் எவரையும் அண்டி ஜீவிக்கக் கூடாது: கக்ஷிகள் பேசவே கூடாது. சிஷ்யர்களைச் சேர்க்கலாகாது: கர்மங்களைத் தொடங்கவேகூடாது.

ஞானத்தை சரீரமாகவும், வைராக்யத்தை ப்ராணனாகவும், சாந்திதாந்திகளைக் கண்களாகவும், மனத்தை முகமாகவும், புத்தியை தேஜஸ்ஸாகவும் 25 தத்துவங்களை அவயவங்களாகவும், மதித்து ஸந்யாஸி இந்திரியாதிகளை எல்லாம் தன் வசப்படுத்தி தனக்கு அந்யம் ஒன்றுமில்லை என்று த்யானித்து; நானே பிரஹ்மம் என்று உச்சரித்துத் தேறித் தெளியவேண்டும். மூன்று அவஸ்தைகளிலும் உள்ள ஜீவனுக்கும் அந்யனான ஸாக்ஷி ஒருவனே. தேஹஸம்பந்தப்பட சைதந்யம் ஜீவன், நீங்கி நின்றால் அதுவே ஸாக்ஷி. இந்த ஜீவனே உண்மையில் மாறாஸாக்ஷி என்று வெளிமூச்சு உள்மூச்சு மூலமாக ' ஹம்ஸ: ஸோஹம்' என்ற 'நானே அவன் அவனே நான்' என்று பொருள்படும் (அஜபகாயத்ரீ) மந்திர உச்சாரணம் எல்லோரிடத்தும் நடைபெற்றுவருகிறது. இதை த்யானித்து நின்றால் ப்ரமரகீடந்யாயமாக மோக்ஷநிலை ஸந்யாஸிக்குக் கைகூடிவிடும்.

ஆத்மாவுக்கு ஆச்ரமபேதமில்லை என்று உணர்ந்து விதி நிஷேதமற்று நிற்பவன்தான் அதிவர்ணாச்ரமி. மறந்துபோன வஸ்து கிடைத்தக்கால் உண்டாகும் ஸந்தோஷம்போன்ற ஆனந்தத்தை இவன் ஆத்மாவில் பெற்ற நிலையாக விருப்பன். ப்ராரப்த நாசம்வரையில் இவன் தத்வம் பதலக்ஷ்ய வாச்யார்த்தங்களாகிய நான்கின் ரூபமாகவே இருப்பன்.

இதன் பின்னர் ஓம் என்ற பரப்ரஹ்மப்ரணவத்தின் ஸ்வரூபம் விஸ்தாரமாக (அ-ம் உபதேசத்தில்) விளக்கப்படுகிறது.

ஆத்மா விச்வதை ஜஸப்ராஞ்ஞனுமல்ல. கிஞ்சிக்ஞனுமல்ல, பிரஞ்ஞை இல்லாதவனுமல்ல. ப்ரஞ்ஞானகனனே! இவன் ஒருவித ப்ரமாணத்திற்கும் எட்டியவனல்ல. ஸ்வானுபவத்தில் தானே விளங்குவன். இது துரியத்திற்கும் அப்பாற்பட்டதாதலால் துரீயம் என்றுகூட இதை மதிப்பதற்கு இடமில்லை.

' நான் வேறு பரமாத்மா வேறு' என்று எண்ணுபவர்கள்தான் பசுக்கள். நானே பரப்ரஹ்மம் என்று தேறித் தெளிந்தவனே மரணம் நீங்குவன். மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை. தேஹாதி ப்ரபஞ்சத்திற்குக் காரணம் எல்லாவற்றையும் ஆட்டிவைப்பதாயும் திரிமூர்த்தி சக்தி மறைந்துள்ளதாயும் இருக்கும் ஆத்மசக்தியே. இந்தச் சக்தி வேறு, தான் வேறு என்ற ப்ரமம் ஜீவனுக்கிருப்பதால், இந்த சக்தியுடைய ஈசன் அனுக்ரஹத்தால் ஞானம் பெற்ற ஜீவன் ப்ரமரகீடந்யாயமாக முக்தி பெறுவன்.

பிரஹ்மத்துள் எல்லாம் அடக்கம்; அது எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டுள்ளது. இதையுணர்ந்து இதில் ஸமாதிபெறுபவர்கள் இதுவே யாகின்றனர். விசித்ரப்ரபஞ்சத்திற்கு ஈசன் ஆதாரம். ஜீவனோதான் தானே அனுபவிப்பவன் என்று எண்ணி பந்தத்திற்கு உள்ளாகிறான். ஈசனை உள்ளபடி உணர்ந்தால் இவன் விடுபடுவன். ஈசன், ஜீவன், சக்தி இவை பிறப்பற்றவை. இந்த ரூபமான ப்ரஹ்மத்தை ஈசன் அனுக்ரஹத்தால் உணர்ந்தால் பந்தம் நீங்கும். ஆத்மவித்தையும் தபஸும் இந்த சோகமோகமற்ற நிலையில் கொண்டு சேர்க்கும் ஸாதனங்கள். ஸூக்ஷ்மத்தைவிட அதி ஸூக்ஷ்மமாயும், பெரிதைவிடப் பெரிதாயும் உள்ள ஆத்மா எல்லா ஹ்ருதயத்திலும் இருக்கிறான். இந்திரிய நிரோதம் ஈச்வரானுக்ரஹம் இவைகளால்தான் இதை உணரலாம். இந்திரியாதிகள் ஸஹாயமன்றியிலேயே எல்லாம் செய்ய வல்லவன் ஆத்மா. இவன் அறிபவன்: இவனை ஒருவராலும் அறிய முடியாது. விபுவாயுள்ள இந்த ஆத்மாவை உணர்ந்த தீரனுக்குத் துக்கமேது. கெட்டவன்,பொறியடக்காதவன். மனமடக்காதவன், காம்யகர்மம் செய்பவன், அப்யாஸமில்லாதவன் ஆகிய இவர்களால் இதை உணரமுடியாது. இது ஸ்வதஸ் ஸித்தமானது. இவ்வாறு உணர்ந்து எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு ப்ரஹ்மமே யாகி நிற்கும் பரிவ்ராட் சரீரமாத்திரமாக உலகில் மிஞ்சித் தடையின்றி எங்கும் உலாவி தான்உள்ளவிடத்திலேயே மீளாநெறியில் நடந்து கைவல்யம்பெற்றிருப்பன் என்றும்.

உலகவாஞ்சைகளிற் பற்றுள்ள பக்தன். -- தன் எண்ணங்களையே அபஹரிக்கின்ற கள்வன் எதையும் ஸாதிக்கின்றானில்லை. உன் முழுமநதும் பிராணனும் பகவானை நாடி நினையாவிட்டால் அவரை நீ எவ்வாறு காண்பாய்.

—உபதேசரத்நமாலை.

பிரிட்டிஷ் துரைத்தன ரீதி
THE BRITISH CONSTITUTION
அத்தியாயம் 5
சாமான்னியர் சபை

பூஸ்திதியை யுடைய குடியானவன் ஒவ்வொருவனும் முன் காலத்திய ஜனசபைக்கு வருவதற்குப் பாத்தியதை யுள்ளவனாக விருந்ததை நாமறிவோம். மூன்றும் ஹென்றியின் காலத்தில் சட்டநிர்மாணம் செய்வதில் ஜனங்களுக்கும் கொஞ்சம் பாத்தியமுண்டென்று ஏற்பட்டதும்; சிறிய பட்டினங்களிலிருந்து சிலர் சிலர் பார்லிமெண்டு சபைக்குவாத் தொடங்கினர். ஆயினும் பதினைன்காம் நூற்றாண்டுக்குப் பின்புதான் சாமான்னியர் சபை தனியாக ஏற்பட்டுவாத் தொடங்கிற்று. அவ்வளர்ச்சி எவ்வாறு மேன்மையாக விருந்ததென்பதை இப்போது அச்சபை அடைந்திருக்கும் அபரிமிதமான செல்வாக்கினாலும், வல்லமையினாலும் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். கல்வி, கைத்தொழில், தன்னடக்கம், ஞானம் முதலியவற்றில் தேர்ச்சிபெற்ற ஆங்கிலேயரின் உத்தம குணங்கள் இச்சாமான்னியர் சபையின் சரித்திரத்தில்தான் விளங்குகின்றன.

தனியாகக் கூடியபோதுள்ள அதன் பாலியாவஸ்தையில், அதில் மெம்பர்களாக விருந்தோர் மாகாணங்களினின்றும் வந்த போர்வீரர்களும், நாட்டிலுள்ள மானியக்காரர்களும், நகரங்களிலுள்ளவருமே யாவர். ராஜ்ய விவகாரத்தில் இவர்கள் அதிக கவலை யெடுத்துக்கொள்வதில்லை. அரசர் கேட்கும் பணத்தைக் கொடுக்கச் சம்மதி யளிப்பதற்கே கூடுவது பதிவு.

டியூடர் வம்ச அரசாட்சியில் சாமன்னியருக்குச்செல்வாக்கு வரவர அதிகப்பட்டதென்றாலும், ஸ்டுவர்ட் அரசர் காலத்தில்தான் இப்போதுள்ள வல்லமை அவர்களுக்கு உண்டாயிற்று. முன்னவர் காலத்தில், கல்விச் சவுகரியங்கள் ஏற்பட்டதினால் சாமான்னிய ஜனங்கள் மேற்படிப்புப்படித்து,சர்வகலாசாலைக்குப் போகத் தொடங்கினர். சர்வ கலாசாலையினின்றும் வெளிவந்த ஒருவன் தேச சஞ்சாரம் செய்து ஆங்காங்குள்ள நாட்டாரின் நடையுடை பாவனைகளையும் அரசியலையும் நன்கறிந்துகொண்டு, திரும்பிவந்து பார்லிமெண்டு சபையில் புகுவான். தேசாபிமானமும் சாமர்த்தியமும் இவனிடமிருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? இத்தகையோர் நிரம்பியிருந்ததனால்தான் சாமான்னிய சபையார், வரவர அதிகாரத்திலும் செல்வாக்கிலும் மேலோங்கி, முதலாம் ஜேம்ஸ்,முதலாம் சார்லஸ் என்பவர்களுடைய அதிக்கிரமங்களை ஆக்ஷேபித்துப் போராடித் துரைத்தன நியமத்தைக் காப்பாற்றினர்.

இப்படிப் பலங்கொண்ட சாமான்னிய சபையினுடைய முக்கியத்தையும் உபயோகத்தையும் ஹானோவரிய அரசர்கள் நன்குணர்ந்திருந்தனர். ஆகவே அவர்கள் பார்லிமெண்டு சபையில்லாது ராஜ்யாதிகாரம் செய்யப் பிரயத்தனப்படவில்லை. என்றாலும் வேறு சில கெடுதல்கள் இக்காலத்திற் கண்டன. அவைகளினால், சாமான்னியர் சபை கேவலம் மந்திரிமார்கள் சொன்னபடி யெல்லாம் ஆடவேண்டிய பிரதிமைகளின் சபையாய் விட்டது. வெளித்தோற்றத்துக்கு மட்டுமே இச்சபை ஜனங்களுடைய பிரதிநிதிகளாலானதாக விருந்தது. உண்மையை நோக்குங்கால், அதிகாரிகளின் வசத்தில்தான் இச்சபை யிருந்தது. இதற்குக் காரணங்கள் பலவாயினும், முக்கிய காரணம் பூஸ்திதிமான்களுடைய அக்கிரமமே. சபைமெம்பர்களில் அனேகர் இவர்களுடைய அடிமைகளாக விருந்தனரென்னலாம். ஆதலால் 1780-ம் ௵ முதல் 1830-ம் ௵வரை நீராவி யந்திரம் முதலிய சாதனங்கள் பெருகி, கைத்தொழில் வியாபாரம் ஆகிய இருவகையிலும் அனேகர் தனவான்களாகி யானைக்கு யானை கைகொடுத்ததுபோலப் பூஸ்திதிமான்களுடன் போராடத் தொடங்கும் வரையில் இந்தப் பிரதிமைத் துரைத்தனமே நடந்துவந்தது. என்றாலும் பார்லிமெண்டு சீர்திருத்தம் பெறவேண்டும் என்ற பேச்சுமட்டும் ஓய்ந்தபாடில்லை. கடைசியாக 1832-ம் வருஷத்தில் இச்சபைக்குச் சீர்திருத்தச் சட்டம் முதன்முதல் ஜாரிக்கு வந்தது. இதனால் மேற்குறித்த முதலாளிகளுக்குச் சௌகரியங்கள் ஏற்பட்டன. மெம்பர்களின் சங்கியை, எலெக்ஷன் முறை முதலியவெல்லாம் ஒழுங்குபட்டன. இச்சட்டம் 1867-ம் வருஷம் வரையில் அனுஷ்டானத்திலிருந்தது. இந்த 35-வருஷங்களுக்குள் இங்கிலாந்தில் பெரும் மாறுதல்கள் உண்டாகிக்கொண்டிருந்தன. 1832-ம்வருஷத்துசட்டத்தினால் முதலாளிகளுக்கு மட்டும் பிரதிநிதித்துவம் கிடைத்தது ; என்றாலும் அதற்குப்பின்,கூலிவேலைசெய்துபிழைக்கும் ஜனங்களுக்குள்ளும் கல்வியறிவு விருத்தியாயிற்று. ஏழைகளுக்கு ராஜாங்கத்தாரால் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப் பட்டன. புஸ்தகங்களும் பத்திரிகைகளும் விசேஷமாகக் கிளம்பி அறிவை விருத்திசெய்தன. இவைகளன்றியும், பிரசங்கங்கள் முதலியவைகளால் கல்வியறிவு ஐம்பது வருஷங்களுக்கு முன்னிருந்தோர் கனவிலுமறியாதவாறுவிருத்தியாயிற்று. இப்படிப் பலவிதத்திலும் அறிவு முதிர்ப்

பெற்ற வேலையாட்கள் பார்லிமெண்டு சபையில் நடக்கும் விஷயங்களை வெகு கவலையோடும் ஜாக்கிரதையோடும் கவனித்து வந்து தங்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று மன்றாடினார்கள். 1867-௵ல் பிறந்த சட்டத்தினால் இவர்கள் கருத்தும் நிறைவேறியது. இதற்குப் பின்னும் கூலிக்காரர்களில் அனேகர்களுக்கு வோட்டு இல்லாததினால் 1885-ம் வருஷத்தில் இதைப் பரிகரித்தும், எலெக்ஷன் டிஸ்டிரிக்டுகளைச் சரிப்படுத்தியும் ஒரு சட்டம் பிறந்தது. அதுவே நாளதுவரையில் ஜாரியிலிருந்து வருகின்றது.

இப்போது சாமான்னியர் சபையில் 670-மெம்பர்கள் உளர்; அவர்களில் 465-பெயர் இங்கிலாந்துக்கும், 30-பெயர் உவேல்ஸுக்கும் 72-பெயர் ஸ்காத்லாந்துக்கும், 103-பெயர் ஐர்லாந்துக்கும் பிரதிநிதிகளாம். பொதுவாக ஒவ்வொரு எலக்ஷன் ஸ்தானத்திலிருந்து ஒரு மெம்பரே வருவார். இரண்டு மெம்பர்களை அனுப்பும் ஸ்தானங்களும் சிலவுள. சிற்சில சர்வகலாசாலைகளிலிருந்தும் வித்தியார்த்திகளால் தேர்ந்தனுப்பப்பட்ட மெம்பர்கள் வருகின்றனர்.

பொதுப்படக் கூறுமிடத்து, சட்டப்படி வயதுவந்த ஒவ்வொருவனும் சாமான்னியர்சபையில் மெம்பர் ஸ்தானத்தைப் பெறப் பாத்தியமுள்ளவனாவான். ஆனால் ஐர்லாந்து தேசப் பிரபுக்களொழிந்த மற்றைய பிரபுக்கள், நியாயாதிபதிகள், குருக்கள்மார், கட்டளைக்காரர்கள், வோட்டு எடுப்பதற்காக நியமனம் பெறும் உத்தியோகஸ்தர்கள், கவர்ன்மெண்டு கண்டிராக்டர்கள், குற்றவாளிகள், உன்மத்தர்கள், அந்நிய தேசத்தினர் ஆகிய இவர்கள் மெம்பர்களாவதற்கு அருகரல்லர். இதுவரையில் மெம்பர்களுக்கு யாதொரு சம்பளமும் கிடையாது. சென்ற வருஷத்தில் பிறந்த சட்டமொன்றினால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷமொன்றுக்கு 400-பவுன் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு சம்பளம் வேண்டுமென்று கேட்போருக்குமட்டும்தான் கொடுக்கப்படும்.

பார்லிமெண்டு மெம்பரான ஒருவர் தமது ஸ்தானத்தை ராஜிவைக்க முடியாது. பார்லிமெண்டில் உழைக்க விருப்பமில்லையானால், கவர்ன்மெண்டு உத்தியோகமொன்றைப் பெற் முயலவேண்டும். அவ்வுத்தியோகம் கிடைத்தால் பார்லிமெண்டு ஸ்தானம் காலியாகிவிடும். பொது எலெக்ஷனுக்கு முன்னதாகவே பார்லிமெண்டை விட்டுவிட விரும்புவோர் இப்படித்தான் செய்யவேண்டும்.

பார்லிமெண்டு மெம்பர்களுக்குச் சில அரிய சுதந்தரங்கள் உள்ளன. அவர்கள் சபையில் பேசும் விஷத்யத்தைப்பற்றி யாரும் எவ்விதமான கேள்விகளும் கேட்கக்கூடாது ; கோர்ட்டுகளில்கூட இதைப்பற்றி வழக்கு வரக்கூடாது; பார்லிமெண்டு மெம்பர்கள் கடனுக்காகச் சிறையிலடைக்கப்படக் கூடாது. சபை கூடியிருக்கும் காலத்திலும் அதற்கு நாற்பதுநாள் முன்னும் பின்னும் பார்லிமெண்டு மெம்பர்கள் குற்றங்களுக்காகக் கைது செய்யப்படக்கூடாது. மெம்பர்களை யாரும் தடை செய்யக் கூடாது. சபையில் சாட்சிகளாக வருபவர்களைச் சத்தியம் செய்யச்சொல்ல அதிகாரம் மெம்பர்களுக்குண்டு. சபா நடவடிக்கைகளைக் கேட்கப் பிரியப்படும் மெம்பரல்லாத ஒவ்வொருவரும், யாரேனுமொரு மெம்பரை முன்னிட்டுக்கொண்டேதான் சபைக்குப் போகலாம். சபையின் ஒழுங்குமீறி நடக்கும் மெம்பர்களை, சபையைவிட்டு அப்புறப்படுத்தவும், சிறைச்சாலைக்கு அனுப்பவும் நாவலனுக்கு அதிகாரமுண்டு.

பார்லிமெண்டு மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க யோக்கியதை யுள்ளவர்களுக்கு "வோட்டர்கள்" என்று பேர். பொதுப்படக் கூறுமிடத்து இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு புருஷனும் வோட்டுக்கொடுக்க லாயக்குள்ளவனாம். ஆனால் ஏழைகள், குற்றவாளிகள்,அந்நியநாட்டினர்,பிரபுக்கள்,ஸ்திரீகள், காட்டுக்கள்ளர்கள், உன்மத்தர்கள், போலீஸ்காரர்கள் ஆகிய இவர்கள் வோட்டுக்கொடுக்க யோக்கியதையற்றவர்கள். இவர்களில் ஸ்திரீகள் தங்களுக்கு "வோட்டு" வேண்டுமென்று சென்ற சில வருஷங்களாகப் பெரும்போராடி வருகின்றனர்.

ஒரு முறை கூடிய பார்லிமெண்டு ஏழுவருஷங்களுக்கு மேலாக இருக்கக்கூடாது. அது அப்போது கலைந்துபோய், புதுப் பார்லிமெண்டு கூடும். ஆனால் இந்த ஏழுவருஷத்துக்குள்ளாகவே அடிக்கடிப் பார்லிமெண்டு கலைந்து போவதுண்டு. மந்திரிமாருடைய அபிப்பிராயத்தை அங்கீகரித்து அவர் சார்பாகஇருக்கக் கூடிய மெம்பர்கள் பலர் அவர்கள் பக்க மிராவிட்டாலும், ராஜாங்கத்தாரால் கொண்டுவரப்படும் சட்டங்கள் சபையில் நிராகரிக்கப்பட்டாலும், மந்திரிமார்மீது நிந்தைமொழி சபையாரால் கூறப்பட்டாலும், அவர்கள் வேலையை ராஜிவைத்து விடுவார்கள். அல்லது அந்தப் பார்லிமெண்டைக் கலைத்துவிட்டுப் புதுப் பார்லிமெண்டைக் கூட்டுவார்கள். அப்படிப் புதிதாக வந்த பார்லிமெண்டில் மந்திரிமாருக்கு விசேஷ உபபலம் இருக்குமானால் அவரே ராஜ்யபாரம் வகிப்பார். இல்லையானால் வேலையை ராஜிவைத்து விடுவார்கள்.

புதுப் பார்லிமெண்டு கூடவேண்டுமானால் மெம்பர்களைத் தேர்ந்தனுப்ப உத்திரவிடும்படி மகாராஜாவிடமிருந்து சான்ஸலர் பிரபுவுக்கு ஒருஆக்ஞாபத்திரம் வரும். உடனே அவர் உத்திரவுகளை எழுதி ஆங்காங்குள்ள உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்புவார். இந்த உத்த

ரவு வந்த இரண்டொரு நாளுக்கெல்லாம், எலெக்ஷன் நொட்டீசு கொடுக்கப்படும். பின்னர் நான்கு தினங்களானபின் மெம்பர்களை நியமிக்கும் நாள் குறிப்பிடப்படும். அப்பால் மூன்று தினத்துக்கெல்லாம் வோட்டுக் கொடுக்கவேண்டுமென்பது விதி.

குறித்த காலத்தில், வோட்டுப்பெற விரும்புவோன் ஒருவன் வோட் ஸ்தலத்துக்கு வந்து, தன்பெயரும் தன்னைப் பிரோபோஸிப்போன், ஆமோதிப்போன் ஆகிய இருவர் பேரும் அடங்கிய ஒரு துண்டுக்கடிதத்தைக் கட்டளைக்காரனிடம்கொடுப்பான். அத்துண்டில் அவனுக்கு வோட்டு கொடுக்கப் பிரியப்படும் எட்டு வோட்டர்களின் பெயர்களும் எழுதப்பட்டிருக்கும். போட்டியாக மெம்பர் ஒருவனும் வராவிட்டால் இவனே பார்லிமெண்டு மெம்பராவான். இதனுடன் காரியம் முடிந்துவிடும்.

அவ்வாறன்றி, வேறொருவர் இவ்விதமாக வருவதாக வைத்துக்கொள்வோம். இவ்விருவரில் யாருக்கு அதிகமாக வோட் கிடைக்கிறதென்பதை நிச்சயிக்க ஒரு நாள் குறிப்பிடப்படும். அன்றைய தினம் வோட்டர்கள் ஒவ்வொருவரும் வோட் ஸ்தலத்துக்குப் போய், தமது நியமனத்தை ஒரு துண்டு கடிதத்தில் குறிப்பிட்டு அதை ஒரு பெட்டியில் போட்டுவிடவேண்டும். வோட்டர்கள், தங்கள் யாருக்கு வோட்டுக் கொடுக்கிறார்களென்பதை அக்காலத்தில் மற்றவர்களுடன் சொல்லக்கூடாது. ஒரு ஸ்தானத்திலிருந்து எவ்வளவு மெம்பர்கள் பார்லிமெண்டுக்கு அனுப்பப்படலாமோ, அவ்வளவு வோட்டுகள் ஒவ்வொரு எலெக்டருக்குமுண்டு. மேற்கூறிய பெட்டியைத் திறந்து பார்த்து, துண்டுக் கடிதங்களை யெண்ணி, யாருக்கு அதிகமாக வோட் கிடைத்திருக்கிறதோ, அவரையே பார்லிமெண்டு மெம்பராகத் தீர்மானிப்பார்கள். இருவருக்கும் சமமான வோட்டுக்களிருந்தால், இதுவரையில் வோட்டுக்கொடாமலிருந்த கட்டளைக்காரன் அவ்விருவரில் யாரேனுமொருவருக்கு வோட்டுக்கொடுத்து, அவரைப் பார்லிமெண்டு மெம்பரெனப் பட்டங்கட்டி விடுவது பதிவு.

முன்னாளில் எலெக்ஷன் ஸ்தலங்களில் மிகுதியான சீர்கேடுகளிருந்தன. சுமார் பதினைந்து நாள்களுக்கதிகமாகவே எலெக்ஷன் நடைபெறும். லஞ்சம் கொடுத்து வோட் பெறுவது சர்வ சாதாரணம். சத்திரங்களும் சோற்றுக்கடைகளும் வோட்டுப்பெற விரும்புவோர்களின் வசமிருக்கும். அவர்களுடைய செலவில் ஜனங்கள் கண்டபடி குடித்துத் தின்று கலகஞ் செய்வார்கள். இப்போது இவையெல்லாம் மாறிவிட்டன. மெம்பர்கள் ஒவ்வொருவரும் இவ்வளவுதான் வோட்டுப் பெறும் விஷயமாகச் செலவு செய்யலாமென்று விதியேற்பட்டுள்ளது. முதல் 500-வோட்டர்களுக்கு 25-பவுனும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு வோட்டருக்கும் 3-பென்சும்தான் செலவழிக்கலாம். இதற்கு மேற்பட்ட செலவுள்ள எலெக்ஷன் அங்கீகரிக்கப்படாது.

வாழையின் வகை

THE SEVERAL KINDS OF PLANTAIN

நமது சென்னை ராஜதானியில் விவசாயிகள் தங்கள் விவசாயங்களை முறைப்படி நடத்தாது, சொற்ப லாபத்தையோ, அல்லது நஷ்டத்தையோ பெரும்பாலுமடைந்து வருகிறார்கள். இவர்கள் விவசாய கிரமத்தைத் தெரிந்துகொண்டு பயிர் செய்வாராயின், பெருத்த லாபத்தை யடைவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. மிகுந்த ஊதியத்தைத் தரக்கூடிய வேளாண்மைகளில் வாழை பயிரிடுதலுமொன்றே.

சென்னை ராஜதானியில் முக்கியமாய்த் தஞ்சாவூர், திரிச்சிறுப்பள்ளி, கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களிலும், இன்னுஞ் சில மலைப் பிரதேசங்களிலும் வாழை பயிரிடப்படுகிறது. அப்படிப் பயிரிடப்படும் வாழைகள் வளர்ச்சியிலும் பலனிலும் பலவேறு வகைப்பட்டு, பல தினுசகளா யிருக்கின்றன. அவை யாவன:—

(1) தேன்கதலி, (2) கருவாழை, (3) செவ்வாழை, (4) கூழிவாழை, (5) பச்சைநாடன், (6) குரங்குநாடன், (7) சாம்பல் நாடன், (8) ஆனைக்கொம்பன், (9) ஆட்டுக்கொம்பன், (10) நேந்திரன், (11) மொந்தன், (12) பேயன், (13) பூவிலாச்செண்டன், (14) ரஸ்தாளி, (15) பூவன், (16) விசிறிவாழை என்பனவாம்.

1. **தேன்கதலி.**—இதை ராஜா வாழையென்றுஞ் சொல்லுவதுண்டு. இது 9-10மாதங்களில் குலைவாங்கும். சீப் பொன்றுக்கு 10-12 காய்வீதம் 5-6 சீப்புகளிருக்கும். காய் கறிக்கு நன்று யிராதுபற்றிப் பெரும்பாலுஞ் சமைப்பதில்லை. பழம் கனிவின்பேரில் தேன் சொட்டத் தகுந்ததும், சாப்பிடுவதற் காரோக்கியமுள்ளதும், சூட்டைத் தணித்துக் குளிர்ச்சியைத் தரத்தக்கதுமானது

“ விரிதலை யரம்பை யீன்ற
மென்பழ முகுத்த தேனும்
குருதியாய் தடமும் யாறும்
குறைவறப் பெருகு மன்றே. (நைடதம்)
என்பதை இதனிடத்தில் காணலாம்.

2. **கருவாழை.**—இது குலைவாங்க 13-மீ செல்லும். ஒரு குலையில் 5-6-சீப்புகளுக்குமேலதிகம் காய் விடுவதில்லை. சீப்புக்கு 9-10-க் காய்கள்தானிருக்கும். பழம் நல்ல வாசனை யுடையது. மற்றெந்தப் பழத்துக்கும் இவ்வளவு வாசனையில்லை. மரம், இலை, காய், பழம் இவைகள் கருப்பாக விருப்பதினு லிதற்கு இப்பெயர் வந்ததுபோலும்.

3. **செவ்வாழை.**—இதைப் பயிரிட்டால் பலனுக்கு வர $1\frac{1}{2}$ வருஷம் செல்லும். சீப்பு 4-5க்கு மேலதிகப்படுவதில்லை. மரம் பருத்து வளர்ந்தும், இலை காய் பழம் முதலியவை சிவப்பாயுமிருக்கும். பழம் புளிப்புள்ளது.

4. **கூழிவாழை (கூழைவாழை).**—இது $4\frac{1}{2}$-அடி உயர்த்துக்குமேல் வளர்வதில்லை. இலைகள் தடிப்பாயும், அகல நீளமாயுமிருக்கும். 8-9-மீல் பருமனான தார்விடத் தகுந்ததும், தாருக்கு 9-10 சீப்புள்ளதும், 10-11 அங்குல நீளமுள்ள 250 காய்களுள்ளதுமானது. இதன் பழம் பச்சைநிறத்தோடு உண்பதற்கு ருசியாயுமிருக்கும். இது பச்சைவாழை யென்ற பெயர் பெற்று தென்னாற்காடு முதலிய ஜில்லாக்களில் பயிரிடப்பட்டு வருகிறது.

5. **பச்சைநாடன்.**—இது 7-8 மீல் தார் போடும். ஒரு தாரில் சீப்புக்கு 11 காய் வீதம் 6 முதல் 10 சீப்பு வரை வைக்கும். பச்சைநிறமும் ருசியுள்ளதுமான பழத்தை யுடையது.

முக்கியமாக நாடன் என்ற பெயருள்ள எல்லா வாழைப்பழங்களுமே சூட்டைநீக்கி குளிர்ச்சியுண்டாகுஞ் சுபாவத்தை யுடையன.

6. **குரங்குநாடன்.**—இது பெரும்பாலும் பச்சைநாடனைப் போன்றதே. என்றாலும் பச்சை நாடனைக் காட்டிலும் காய், பழம் உருவத்தில் சிறியதாகவும், ருசி அதிகமாகவு மிருக்கும்.

7. **சாம்பல்நாடன்.**—இது சாம்பல் படர்ந்த காய் கனிகளை யுடையதாயிருப்பதால் இப்பெயர்பெற்றது. இதன் காய் பருமனுக்குத் தகுந்த நீளமில்லாது இருக்கும்.

8. **ஆனைக்கொம்பன்.**—இதன் கொன்னை பருமனாக நீண்டு தடித்திருக்கும், காய் 9, 10 அங்குல நீளமுள்ளதாயும், யானைத்தந்தம் போன்று வளைந்துமிருக்கும்.

9. **ஆட்டுக்கொம்பன்.** – இது பெரும்பாலும் ஆனைக்கொம்பனைப் போலவே யிருக்கும், காய் அவ்வளவு பருமனும் நீளமுமில்லை. காய் வளைவாகவே யிருக்கும்.

10. **நேந்திரன்.**–இதன் காய் சமைப்பதற்குதவுமேயன்றிப் பழம் உண்ணத் தகுதியற்றுப் பார்வைக்குமட்டில் அழகாயிருக்கும்.

11. **மொந்தன்.**—இதில் பலவகை யுண்டு (மொந்தனென்றால் பெரும்பாலும் நாட்டுமொந்தனையே குறிக்கின்றது). இது 8மாதகாலத்தில் ஈனும். தாரில் 5 முதல் 8 சீப்புவரையில் 80-90 காயுடையதாயிருக்கும். இதன் காய் 8 அங்குல சுற்றளவுள்ளதும் 9-10 அங்குல நீளமுள்ளதாகவு மிருக்கும். இக்காயைப் பலவிதமாய்ச் சமைத்துண்பார்கள். பழம் தேகத்துக்குக் குளிர்ச்சி யுள்ளதும் ருசியுள்ளதுமாயிருக்கும். ஈரோட்டு மொந்தன், சாம்பல் மொந்தன், பன்றி மொந்தன், நாதாங்கி மொந்தன், சோங்கு மொந்தன், என்பன இதன் வகைகளாம்.

(1) **ஈரோட்டு மொந்தன்.**—மொந்தன் காயைப் போலும் காயின் நுனியில் பருமனாவிருக்கும். பழத்துக்குச் சிலாக்கியமானதல்ல.

(2) **சாம்பல் மொந்தன்.**—சாம்பல் படர்ந்த காய் பழங்களை யுடையது. சாம்பல் நாடனைக்காட்டிலும் காய் பருமனாக விருக்கும். இதன் பழம் ருசியிலும் குணத்திலும் மிகச் சிலாக்கியமானது.

(3) **பன்றி மொந்தன்.**—நாட்டு மொந்தன் காயவ்வளவு பருமனாவிருக்கினும் நீளமில்லாதது. பழத்துக்குச் சிலாக்கியமுள்ளதல்ல.

(4) **நாதாங்கி மொந்தன்.**—பெரும்பாலும் மொந்தனைப் போன்றதே.

(5) **சோங்கு மொந்தன்.**—மொந்தனைவிட தாருங் காயும் பருத்து இடையிடையே விசாலமான 9-10 சீப்புகளுள்ள 140-150 காயுள்ளதாக விருக்கும். இதன் பழம் குணமுள்ளதுதான். மொந்தன் பழம் ஈரோட்டுக் கருகிலுள்ள பெருந்துறையிலதிகம்.

12. **பேயன்.**—மரம் உரங்கொண்டு தாருட்டியமாய்த் தடித்தும், நீண்ட தோகைகளுடையதாயும், 20 22 அடி உயரம் வளரும். $\frac{3}{4}$ கெஜ நீளமுள்ளதாக சீப்பு எண்ணக்கூடாதபடி நெருங்கி 250 முதல் 450 வரை காயுள்ளதாக 10மீத்தில் குலைவாங்கும். பழம் மிகுந்த ருசியும் குளிர்ச்சியுமுள்ளது. பழம் மருந்துகளுக்குபயோகமானது.

இதில் பட்டணம் பேயனென்றொரு வகையுண்டு. அதை காளிவாழை யென்றுஞ் சொல்லுவார்கள். இது பேயனைவிடத் தாருங்காயும் பருமனாகவும், மரம் சிவப்பாகவுமிருக்கும்.

13. **பூவிலாச்செண்டன்.**—இது மிக விசித்திரமுள்ளது:—இதன் மோத்தை வீணாகாமல் முழுவதுங் காயாகக் [illegible]கிறது. காய் சமையலுக்கன்றி பழத்துக்குதவுவதில்லை. அதாவது பழம் சுண்ணும்பு நாற்றமடித்துக்கொண்டிருக்கும்.

14. ரஸ்தாளி.—10ஸ்ரீ தாரீனும்.குலைக்கு 5-முதல் 7-வரையில் சீப்பு விடும். சீப்பில் 13-முதல் 20-வரையில் காய் காய்க்கும். எங்குஞ் சாதாரணமாகப் பழத்துக்குக் கொண்டாடத்தக்கதும் பிரசித்தமுமானது.

15. பூவன்.—இதைப் பங்காளாவென்றும், சுகந்தனென்றுஞ் சொல்லுவார்கள். இது 8ஸ்ரீல் மோத்தை தள்வத்தக்கதும், தாருக்கு 200-முதல் 275-வரையில் காயுள்ளதுமானது. இதன் பழம் சிறிது புளிப்பாகவிருக்கும். இந்த வாழையைப் பயிரிடுவதில் ரஸ்தாளிக்குச் செய்யவேண்டிய செய்நேர்த்தியளவு தேவையில்லை. பலனுமதிகமாகக் கொடுக்கக்கூடியது. ஆதலால் பலருமிதையே பயிரிடுகிறார்கள். இதன் பூவில் தேன் அதிகமாய் இருக்கும்; அதனுல் தேன் சேர்க்கும் வண்டுகள் இதில் எப்போதும் மொய்த்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.

ரஸ்தாளி, பூவன், இந்த இரண்டும் தோட்டங்களில் தனியாகப் பயிர் செய்யப்படுகின்றன. மேற்கூறிய மற்ற வாழைகள் இவற்றோடு சொற்பமாகக் கலந்து பயிரிடப்படுகின்றன.

பழங்களுக்குச் சிலாக்கியமானவை கொல்லிமலை, சிறுமலை முதலிய மலைப்பிரதேசங்களிலிருந்து வரும் பழங்களே. இவை நிலத்துப் பழங்களைக் காட்டிலும் அதிக ருசியுள்ளன.

16. விசிறிவாழை.—இது அழகுக்காகப் பூந்தோட்டங்களில் பயிர் செய்யப்படுகின்றது. இதன் மரம் தென்னைமரத்தைப்போலவே வடுக்களுள்ளதாக விருக்கும். மட்டை ஒரே சாரியாக மர[த்]தைச் சுற்றி ஒழுங்காகவிருக்கும்.

இனி, கல்வாழை யென்றொரு வ[கை] வாழையுண்டு. அது திருச்சிறுப்பள்ளி ஜில்லா திருப்பைஞ்ஞீலி என்னும் பாடல்பெற்ற சிவஸ்தலத்தில் கற்பாறையினிடையில் வாழையடி வாழையாக விரு[த்தி]துகொண்டு வருகிறது. இதன் பழம் முதலியன மனிதருக்கு உபயோகமில்லை. ஸ்வாமிக்கு நிவேதனஞ் செய்து குளத்தில் போட்டுவிடுகிறார்கள்.

இவைகளில் நிலங்களுக்கேற்றவற்[றை] [illegible] [க]ரித்து பயிர் செய்து விவசாயிகள் பயனடைவ[ா]ராக.

K. S. மாணிக்கம் பிள்ளை.

கடல்!

THE OCEAN

கடலே! கடலே! கண்மணி கடலே!
உடல்புள கிதமுற உவந்திடு கடலே!
துய்யவள் ஜானகி துய்ய உளங்கவர்
மெய்யன் ராகவன் மெய்நிறக் கடலே!
நித்ய புகழொளி நிலவிடு குரிசில்
ஸத்ய வானெனும் சற்குணத் தோன்பால்
ஸாவித்ரி எனும்பெயர் சார்ந்திடு காரிகை
ஆவியை அகற்றிடும் எமனை வென்றாள்
செஞ்சொற் கிள்ளையின் செவ்விதழ் நங்கையின்
நெஞ்சமும் நெடுங்கயல் நேத்திர முங்கொளும்
காதலின் ஆழங் கடுத்த ஆழமார்
தீதறு சீதளத் தெண்ணீர்க் கடலே!
அன்னைதன் மடியில் அன்பாய் அணைத்திடப்
புன்னகை பொலிவுறு பொற்பித முடனவள்
வலம்புரிச் சங்கின் வண்ணக் கழுத்தினை
அலங்கரித் திலங்கும் ஆபா ணத்தினை
ஆதா வாய்ச்செவ் வங்கையிற் பற்றிய
கோதறு கருவிழிக் குழந்தையை விளித்துப்
பாலா தூங்கெனப் பரிவுடன் பாடுந்
தாலாட் டுதலாந் தண்குரல் நிகர்த்தென்
அகத்தில் நிறைந்த ஆறுத் துயரையும்
அகற்றியவ் வகத்திற் கமைதியை அளித்து
ஒன்றிய கழிபே ருவகையும் உதவி
என்றும் இணையிலா எகவின் குரலில்
எண்ணிய இசைபல எய்ந்திடு யாழின்
பண்ணைப் பழித்துப் பாடுங் கடலே!
உளத்தினைக் கொள்ளைகொள் உன்னருங் காதலி
இளந்தளிர் நங்கையை இந்நிலத் தொருவரும்
உணர்ந்திலர் எனநீ உணரினும் யானவ்
வணங்கினை அறிவேன் அறிவேன் அறிவேன்.
அன்னவள் எவளெனில் அறைகுவேன் நானேல்
தன்னிக ரில்லாத் தண்ணொளி பரப்பி
விண்ணிலே எழுமுன் விழைந்துனை அணையும்
வெண்ணிலா மதியென விளம்புறு விமலைதான்.
உன்கா தலிசீர் உரைத்திட உரைத்திட
என்பா லன்பினை எய்ந்திடு வாயெனக்
கருதியான் அவள்சீர் கழறுவேன் கனிந்து
மருவிய மங்கையை மறந்திடாக் கடலே!
அமிர்தவெண் ணமையும் அமிர்தத் தண்மையும்
அமிர்த இனிமையும் அணைந்தபே ரணங்கவள்.
உத்தம நங்கையர் ஒண்முக உவமையாய்
முத்தமிழ் வல்லோர் மொழிந்திடும் மாண்பினள்.
தசமுக ராவணன் தசசிரந் துணித்த
தசரத பாலன் தாய்முலை மறவாப்
பருவத் தவனகம் பரிந்தெழு காதலால்
மருவி விளையாட மங்கைவெண் மதியை

அன்னாய் எடுத்தெனக் களித்திடுயென் றழுதிட
நன்னிற வானில் நாணிநில் நங்கை
விரிபூங் குழலார் வெற்பிகல் தோளராம்
பிரிவுறு காதலர் பிரியசத் துருவவள்.
நிசியில் நீல நெடும்படாம் நிகர்த்த
விசும்பிற் பதித்த விலையிலா மணிகளாங்
கணக்கறு மீன்களும் கருவ மொடுங்கி
வணங்கிக் கரந்திட வானிற் றிகழ்ந்து
வளந்தரு மதநீர் வனநடை மேவிய
இளமுகி லாகும் இளம்பிடி களுடன்
களையுறக் கண்டோர் களியுற ஓடும்
விளையாட் டதனில் விருப்புறு பேதை
என்னே கடலே! இத்துணைத் தலைவியை
மன்னிய நினது மாண்பே மாண்டு.
உரைசெயற் கரிய ஒப்பிலா உயர்வினள்
விரைந்துனை அணைந்தபின் விண்ணிற் செல்ல
கரையிலாக் காதலால் காதலி நோக்கியுன்
திரைகளை உயர்த்துத் திறலினைக் கண்டதால்
அன்னவள் எய்திய ஆநந்த ஒளியால்
மின்னிய நினது மேனியைக் கண்டு
என்னகம் எய்திய இன்பமே இன்பம்.
என்னென் றியம்புவல்! என்னென் றியம்புவல்!
ஆஹா! இந்த அற்புதக் காட்சியை
ஏகாந் தமெனும் என்னுயிர்த் தலைவியே!
கண்டுயான் களித்தேன் களிப்பாய் நீயும்
எண்டிசை மாந்தர் எவருமே அளியா
இணையிலா இன்பம் இனிதெனக் களிக்குந்
துணைவியே! துயரொழி தூயமெல் லணங்கே!
பாராய் பாராய் பரிவோ டிக்கடல்
நேராய் எழுதலை நெஞ்சமும் நெகிழ்தலை.
அலைகளாம் புயல்கள் அலையுமோர் விதானம்
நிலத்தினை அணைந்து நிலவுதல் நோக்காய்
வியனுல கணைந்தவவ் விசும்பினில் உலவும்
புயலெனும் அலைகளைப் பொற்புறக் கிழித்த
வெண்ணுறை மின்னலின் எண்ணரும் வரிசைகள்
கண்ணுழைந் தகத்தைக் கனித்தலைக் காணாய்.
கடலே கடலே காதலி வெண்மதி
யுடனீ யுற்ற உவகையைக் கண்டு
தனிமை எனுமென் தலைவி யுடன்யான்
இனிதள வளாவி இன்புற் றிருக்கவவ்
வஞ்சியைப் பிரியா வாழ்வுற் றிருக்க,
துஞ்சுதல் தோன்றுதல் துறந்திடு தூயவன்
எனக்கும் உனக்கும் எவர்க்கும் முதல்வன்
மனமும் வாக்கும் மன்னுதற் கரியவன்
அருளுக வென்றே அவனையான் போற்றினேன்
விருப்பொடவ் வனைநீ விமலனைப் போற்றுவாய்
உன்பா லன்புயான் உற்றிருப் பதுபோல்
என்பால் அன்புநீ இயைந்தனை யாயின்
கடலே! கடலே! கண்மணி கடலே!
உடல்புள கிதமுற உவந்திடு கடலே!

சு. அ. சுப்பராயன்.

இவனே வீரன்

THIS THE HERO

I

தஞ்[சா]வூரில் தெற்கு வீதியில் தெற்குப்பார்த்த ஓர் வீட்டின் தெருத்திண்ணையில் இரண்டு ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுள் ஒருத்தி சுமார் 50 வயதுள்ள அமங்கலி, மற்றொருத்தி சுமார் 18 வயதுள்ள அழகான பெண்.

அப்பொழுது மணி பன்னிரண்டு. சித்திரை மாதத்து வெய்யில் அதி உக்கிரமாய்க் காய்ந்துகொண்டிருந்தது. தெருவில், யாருமில்லை, காலில் செருப்பணிந்து வெய்யில் பாராது பனஞ்சுளைவிற்க அங்குமிங்கும் அலையும் கிழவிகளும் கானல் பொறுக்காமல் பற்பல தெருத்திண்ணைகளில் இளைப்பாறிக்கொண்டிருந்தார்கள். இவர்களில் ஒருத்தி அந்த ஸ்திரீகள் இருந்த திண்ணையைச் சேர்ந்தாள்.

அந்த 50 வயதுள்ள கிழவி நெற்றி முழுவதும் விபூதி யணிந்து தோய்த்துத் தோய்த்துக் காவியேறிய வெள்ளைப்புடவை யுடுத்திக் கையில் ருத்ராக்ஷ மாலையும் பட்டுக்கயிறுமாக ராமஸ்மரணை செய்துகொண்டு தன் மருமகளோடு பேசிக்கொண்டிருந்தாள். அவள் செல்வ மனைவி, செல்வ மருமகள். எப்பொழுதும் இருவேளையும் மாமியாரே சமையல்செய்து மாமியாரே பரிமாறுவது வழக்கம். மாமியாரெதிரில் கணவனோடு பேசுவதும் புசிப்பதும் முதலான சுதந்தரங்களுடையவள்.

மேலும் இப்பொழுது அவள் பூர்ண கர்ப்பிணி. வளைகாப்பு ஆய் 15 நாள்கூட ஆகவில்லை. உயர்ந்த காஞ்சீபுரத்துப் புடவையும் பெங்களூர் ரவிக்கையும் அவள் தினம் உடுத்துக்கொள்வாள். பலவிதமான பம்பாய் வளையல்களும் ரப்பர் வளையல்களும் அடுக்கடுக்காய் இருகைகளிலும் பூண்டிருந்தாள். கையில் கெட்டிக்காப்பும் கொலுசும் மெருகழியாமலிருந்தன. கல்லிழைத்த முகப்புடைய தங்க ஒட்டியாணம் தகதகவென்று ஜொலித்துக்கொண்டிருந்தது. காதில் ஆர்ஷாப்புக்கம்மல் டால் வீசிக்கொண்டிருந்தது.

அவளுக்கு என்ன குறைவு. அவள் புருஷன் சுந்தரமையர் தஞ்சாவூர் சப்மேஜிஸ்டிரேட். வீட்டுவாசலில் எப்பொழுதும் பில்லை போட்ட சேவகன். ஆனால் அன்று அந்நேரத்திற்குக்காவலாளர் யாருமில்லை. ஆகையால் பனஞ்சுளை வாங்கும்பொருட்டு அந்த மாது கிழவியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு திண்ணையில் வெற்றிலை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். கிழவியும் வந்தாள். பனஞ்சுளையும் வாங்கியாயிற்று.

அப்பொழுது அவ்விடத்தில் ஓர் துலுக்கன் வந்

தான். காலில் செடாவுமில்லை சேர்டுமில்லை. துலுக்காணிவதுபோல் பெரிய கால்சரா யணிந்து, பால் நிறமான மஸ்லின் ஜிப்பாவைப் போட்டுக்கொண்டு, அதன்மேல் வெல்வெட் அரைச்சொக்காயும் போட்டிருந்தான். அவன் மொட்டைத்தலைக்கு சிங்ஙு வேலை செய்த பட்டுக்குல்லாய் போட்டிருந்தான். கழுத்தில் வெள்ளிக்கம்பியில் கட்டிய ஜெபமாலை அணிந்திருந்தான். ஆனால் அவன் மேல்போட்டிருந்த புதுச்சேரி ருமால் அதை மறைத்திருந்தது. குரட்டிலேறி மாமியாரைப் பார்த்து "அம்மா, கொஞ்சம் தாவத்துக்குத் தண்ணி கொடுங்க" என்று பெருமூச்செறிந்து சொன்னான். அதற்குள் பனஞ்சுளை விற்கும் கிழவி "எம்பா, பனஞ்சுளை வாணும்" என்றாள். "குட்டி, யாராயிருந்தா என்ன,போயி, ராத்திரி கொண்டுவந்த செவிங்கித் * தூத்தமிருக்கே அது ஒரு பஞ்சாத்திரங் கொண்டுவந்து சாயபுக்குக் கொடு" என்று மாமியார் சொல்லவே, குட்டியம்மாள் உள்ளே போய் குளிர்ந்த நீரைப் பெரிய வெங்கல லோடாவில் கொண்டுவந்து கீழே வைத்தாள்.

"அப்பா அதைக் குடிச்சிட்டு முத்தத்துலேமூலேலே கவுத்துவை" என்று மாமியார் சொன்னாள். அவன் குடித்துக்கொண்டிருக்கும்போது "ஐயோ, ஜோடில்லே, வெய்யில் கொளுத்தாது, என்ன பண்ணுவன்" என்று பல விஷயங்களைப்பற்றி மாமியார் கிழவியோடு பேசிக்கொண்டிருந்தாள். அவன் அரைலோடா குடித்ததும் மறுபாதியை "அல்லா நல்லவன்! நாளை பார்" என்று குட்டியம்மாள் முகத்தில் பளாரென்று வீசி லோடாவைத் திடீரென்று போட்டுப் பக்கத்து சந்தில் நுழைந்து மறைந்துபோய்விட்டான். ஜலம் வீசியதும் மாமியார் "அடே ஒன்னே கட்டேல வக்கே" என்றும், கிழவி "அடே ஒன்னே காளியாயி வாரிகினு போவ" என்றும், குட்டியம்மாள் சுத்தஜலம் தன்மேல் படவே, அது இரத்தம்போல் சிவந்ததைக்கண்டு நடுநடுங்கி பதறிக்கொண்டும் மூவரும் திகைத்து நின்றார்கள். சற்று தெளிந்ததும் பக்கத்து சந்தில் பார்த்தார்கள். அங்கு ஆளுமில்லை தேளுமில்லை.

ஊர்சப்மேஜிஸ்ட்ரேட் மனைவிக்கு இவ்விதமான விபத்து நேரிட்ட விஷயம் ஊரெல்லாம் பரவ எங்கோம், தெற்குவீதி வக்கீல்கள் பெண்சாதிகள் அனைவரும் உடனே ஆஜர்.தாசில்தார் பெண்சாதி காமாபாயிதனியே வரபயந்து தன்கணவன் டலாயத்துடன் பெட்டிவண்டியில் வந்திறங்கினாள். இரண்டு வாசலுக்கப்பாலுள்ள பக்ஷணக்கடையில் இட்டலிமாவு அரைத்துக்கொண்டிருந்த குப்பச்சி மொட்டைத் தலைமேல் தலைப்புமில்லாமல் மாவுக்கை சொட்டச்சொட்ட "ஐயோ குட்டி ஒனக்கிது வாலாச்சா" என்று புலம்பிக்கொண்டு ஓடிவந்தாள். சுந்தரமையர் வீட்டிற்கு மூன்று சந்திற்கப்பால் இந்தக் கூக்குரலும் சந்தடியும் கேட்டு வீடு கூட்டும் வீராயியும் அவள் தெருக்கூட்டத்துடன் ஓடிவந்தாள். போலீஸ் புலிகள் பலர் அங்குமிங்கும் உறுமிக்கொண்டு அலைந்தார்கள். இவ்வளவும் பயனற்றதே. எல்லாரும் குட்டியம்மாளைச் சாந்தப்படுத்தி, குளிப்பாட்டி, குங்குமமிட்டு சாம்பராணி போட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் டக்டக் என்று பூட்ஸ் சத்தம் கேட்டது. பெண்டீர்களனைவரும் விலகினார்கள்.

சுந்தரமையர் விளாங்காட்டு செடிஷன் கேஸ் விசாரணை செய்துகொண்டிருந்தார். தன் வீட்டில் நேரிட்டதைக் கேட்டவுடன், ஜட்ஜ் மனக்குழப்பமாயிருக்கிறபடியால் கோர்ட் கலைக்கப்பட்டது என்று விண்ணப்பஞ் செய்து, போலீஸ் இன்ஸ்பெக்டர் பங்காரு நாயுடுவோடு அவர் டாக்கார்ட்டில் உட்கார்ந்து அதிவேகமாய் வீடுவந்து சேர்ந்தார். உடனே ஒரு போலீஸ்காரன் சுந்தரமையர் கொடுத்த கடிதத்தைக் கனவிரைவாக ஸைக்கிளில் ஏறிப்போய் டிஸ்டிரிக்ட் ஸர்ஜன் உட்ஹவுஸ் துரையிடம் கொடுத்தான். அவர் சுந்தரமையர் கேட்டுக்கொண்டபடி மோட்டார் பைஸிகிலேறி சுந்தரமையர் வீட்டிற்கு இரண்டுநிமிஷத்தில் வந்துசேர்ந்தார்.

அவர் வந்ததும், குட்டியம்மாள் பயந்திருந்தபடியால் இரத்தப்பை அதிவேகமாய் அடிக்கிறது என்று அதைச் சாந்தப்படுத்த ஒரு மருந்து சீட்டு எழுதிக்கொடுத்தார். ஓர் போலீஸ்காரன் மருந்து கொண்டுவர ஆஸ்பத்திரிக்கு ஓடினான். மணி அப்பொழுது இரண்டு, ஆனால் என்ன. கஷ்டப்படுபவள் யார்? மருந்துசீட்டு கொடுத்த டாக்டர் யார்? தூங்கிக்கொண்டிருந்த கம்பவுண்டர், விழித்துக்கொண்டு, காலந்தப்பி மருந்து கொடுக்கலாமாவென்று யோசித்துக்கொண்டிருக்கையில், உட்ஹவுஸ் துரையே அங்கு வந்துவிட்டார். இன்னும் மருந்து கொடாததைப் பார்த்து "யூ டாம்ட் நிக்கர்ட்" என்று கம்பவுண்டரை போலீஸ்காரன் எதிரில் பளாரென்று செவிட்டிலறைந்தார். போலீஸ்காரன் தனக்கும் அம்மரியாதை நேரிடுமோவென்று பயந்து நடுநடுங்கி நின்றான். கம்பவுண்டர் அடிபட்டது, இது முதல் தரமல்ல. மற்றும் பலர் உட்ஹவுஸ் துரையது உள்ளங்கையின் பெருமையைப்

* சிவகங்கை என்பது செவிங்கி என்று மருவி வழங்கும்.

பன்முறை யறிந்தவர்களே. துரைமேல் வந்த கேஸ்கள் பல. ஆனால் சுந்தரமையரும் துரையும் நண்பர்கள். அதுபற்றியே துரை எப்பொழுதும் தப்பிவருவது. அதுபற்றியே, சுந்தரமையர்மீது துரைக்கும் மற்றும் தஞ்சையிலுள்ள ஐரோப்பியர் பலர்க்கும் விசுவாசம். ஸர்ஜன் பேரமுன்னர், சுந்தரமையர் அவரிடமிருந்து தன் மனையாள் ஸ்திதியைப்பற்றி ஓர் மெடிகல் ஸர்டிபிகேட் பெற்றுக்கொண்டார்: குட்டியம்மாள் பூரண கர்ப்பிணியா யிருக்கும்போது குற்றவாளியின் கொடிய செய்கை அவள் உயிருக்கு மிகவும் அபாயகரமானதென்று ஸர்ஜன் உறுதிமொழி யெழுதிக்கொடுத்தார்.

பிறகு ஒரு விசாரணை ஏற்பட்டது. முதல் சாக்ஷி பனஞ்சுளை விற்கும் கிழவி. அவள் எங்கே? வந்த கூட்டத்தையும், நடந்த சந்தடியையும், டொப்பிப்போட்ட துரையையும் கண்டவுடனே தன்மேல் என்னவருமோவென்று பயந்து பனஞ்சுளையோடு கூடையை அங்கேயே போட்டுவிட்டுப் பலசந்துகளில் நுழைந்து நெடுந்தூரமுள்ள தன் குடிசைக்கு ஓடிவிட்டாள். இரண்டாம் சாக்ஷி சுந்தரமையர் தாயார். மூன்றும் சாக்ஷி குட்டியம்மாள். முதல்சாக்ஷி தவிர மற்றைய இரண்டு சாக்ஷிகளின் வாக்குமூலங்களை உடனே பதிந்துகொண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர், ஆறு ஜவான்களை இந்தக் குற்றவாளியை ஆறுமணி நேரத்தில் பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்று உத்தரவு செய்தார். அவ்வாறே சாக்ஷிகள் சொன்ன அடையாளங்களை நன்றாக அறிந்துகொண்டு தங்கள் புத்தகங்களில் பதிந்துகொண்டு இவ்வறுவரும் வெவ்வேறு திசைகளிற் சென்றார்கள்.

இரவில் 9 மணிக்கெல்லாம் ஆறு போலீஸ்காரரும் ஆறு குற்றவாளிகளைப் பிடித்துக்கொண்டு சுந்தரமையரிடம் வந்தார்கள். இந்த ஆறு குற்றவாளிகள் யார்; ஜவான்கள் அவர்களை ஏன் பிடித்தார்கள்; சற்று ஆராய்வோம்.

முதல் குற்றவாளி வடக்குவீதியில் நெய் மண்டி வைத்திருக்கும் ஸுலதான ஆமத். அன்று கண்ணாடி மாலையைத் தவிர வேறு ஜாப்தாவில் கண்ட உடுப்பெல்லாம் போட்டுக்கொண்டு ஈரோட்டிலிருந்து வந்த தரகாளியோடு அவர் பேசிக்கொண்டிருந்தார். கான்ஸ்டேபில் அவரைக் கையைப் பிடித்து 'அகப்பட்டாய் ராஸ்கல்' என்று இழுத்துக்கொண்டு வரவே, அவர் இரும்புப் பெட்டியைப் பூட்டிவர அவதி கேட்டார். ஜவான் கொடுக்கமாட்டேன் என்றான். தரகாளியின் பணம் ரூ. 1000 பெட்டியிலிருந்தது. ஆகையால் ஜவான் உள்ளங்கையில் 1 ரூபாயை வைத்து அமுத்தி 'உடய்யா வருவாரு' என்றான். பெட்டி பூட்டியாயிற்று என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. அதன்பிறகு ஸுல்தானை ஐயர் வீட்டுக்கு இழுத்துச் சென்றான். அவனுக்கோ வயது 45. பெரிய தொந்தி. சுந்தரமையருக்கும் தாசில்தாருக்கும், நெய் பக்கத்தில் ரூபாய்க்கு 3-சேராய் விற்கும்போதும் 6-சேராகக் கொடுப்பது வழக்கம். உள்ளூர் அதிகாரிகளுக்கு எப்பொழுதும் ஒன்றுக் கரையாக விற்றால் ஏதாவது சமயத்தில் நன்மை யுண்டாகுமென்பது அவருடைய முக்கிய கொள்கை. அப்படியே சுந்தரமையருக்கு ஸுல்தான்மேல் சிறிதேனும் சந்தேகமில்லை. மேலும் அவர் மனைவி 'அந்தத் தடியன் ரொம்ப ஒல்லியாயிருந்தான்' என்றாள். பிறகு அவரை விட்டுவிட்டார்கள்.

மற்றைய ஐவர் சரித்திரங்களைச் சொல்லப்புகின் சாலவிரியும். ஆனாலும் எமக்கு ஆராத வியப்பை உண்டாக்கியதொன்று. அதைச் சுருக்கிச் சொல்வோம். ஹெட் கான்ஸ்டெபில் ஒருவன், கள்ளரைச் சாதுர்யமாய்க் கண்டுபிடிக்கும் திறமுடையவனென்று பேர் பெற்றவன். கொலைகேஸ் விசாரணைகளில் பங்காரு நாயுடுவுக்கு அவன் வலதுகை. எவ்விதமாகவோ உண்மையான குற்றவாளி மதத்தில் துலுக்கனல்லன்; பிராமணனே மாறுவேடம் பூண்டு அவ்வாறு செய்திருக்க வேண்டுமென்று அவனுக்கு உதயமாயிற்று. மேலும், நீர் இரத்தமானதுபற்றி அப்பிராமணன் மந்திரத்தில் வல்ல நம்பூரியே என்று அவனுக்கு நிச்சயமாயிற்று. மலையாள தேசத்தார் தஞ்சாவூரில் யாருமில்லாததுபற்றி அவன் ஒரு கிளப்பில் வந்து இறங்கி யிருக்க வேண்டுமென்று ஊகித்தான். ஆகவே பிரசித்திபெற்ற சேலம் சுப்பாசாரியார் ஓட்டல் வாசலில் உட்கார்ந்துகொண்டு இராப்போஜனத்திற்கு உள்ளே போகும் ஒவ்வொருவரையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். இப்படி யிருக்கும்போது திருப்பதியிலிருந்து வந்த ஒரு பிராமணன் போஜனத்திற்கு $8\frac{1}{2}$-மணிக்கு வந்தான். அவன் முடிகொடுத்து, மிகவும் சிரத்தையாய் சிதம்பரம் முதலிய ஸ்தலங்களுக்குப் போய், திருப்பதியிலிருந்து வெங்கடாசலபதியின் கிருபை பெற்ற ஊன்றுகோல் கையில்கொண்டு அங்கே வந்தான். உடனே கான்ஸ்டெபில், அவன் சித்திரவேலை செய்த ஊன்றுகோல் மந்திரக்கோல் என்று பயந்து அதை யவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டு அவனை சுந்தரமையரிடம் இழுத்துவந்தான். அவன் சாப்பாட்டுக்குச் சற்று அவதி வேண்டுமென்று கெஞ்சிக்கேட்டும் நேரமானபடியால் கான்ஸ்டெபில் அவன் வார்த்

த்தையைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. மற்றைய ஐந்து ஜவான்களும் உண்மையான குற்றவாளியைக் கொண்டுவாராததுபற்றி கோபமாயிருந்த சுந்தரமையர், ஹெட் கான்ஸ்டெபில் திறமையைப்பற்றி மிகவும் புகழ்ந்து, பட்டினியான ஏழைப்பிராமணனை லாக்கப்பில் வைக்கும்படி உத்தரவு செய்துவிட்டார். முதல் சாக்ஷி கிழவியையும் பிடித்துவரும்படி உத்தரவு ஆய்விட்டது.

III

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆபீஸ் இல்லை. சுந்தரமையர் தாயாரையும் மனையாளையும் நடந்த விஷயங்களையெல்லாம் விவரமாய்ச் சொல்லுங்கள் என்று கேட்கவே 'அல்லா நல்லவன்: நாளை பார்' என்று துலுக்கன் சொன்னனென்றார்கள். சுந்தரமையர் திடுக்கிட்டார். அந்தத் தருணத்தில் குலாமாலி அங்கே வந்தான்.

குலாமாலி யார். சுந்தரமையர் தந்தைஇராணுவத்தில் குமாஸ்தா. அவர் பர்மா யுத்தங்களில் யுத்தகளத்தில் வேண்டும் போஜனாதிவிஷயங்களைப் பார்ப்பவர். அவரைச் சேர்ந்த சைனியத்தில் குலாமாலி ஒருவீரன். சமவயதுள்ளவன். சுமார் 6 அடி உயரமுள்ளவன். அவன் பாலியத்தில் நன்றாய் சிலம்பம் குஸ்தி முதலியவை பயின்றவன். குஸ்தியில் வல்லவன். அவன் சேனாதிபதி மேஜர்ஹார்டி ஐரோப்பாவில் பல குஸ்திக்காரர்களை வென்று, மெடல்கள் பெற்றவர். அவரையும் குலாமாலி தோற்கடித்தான். குலாமாலியைக் கண்டால் எவருக்கும் சைனியத்தில் நடுக்கம். அவனுடைய குழந்தைபோல் கபடில்லாத சுபாவத்தை விரும்பாதவர் யாருமில்லை: உண்மையான சிநேகபாவத்தை கல்வியில்லாவிடினும், நன்கறிந்தவன். இவனும் சுந்தரமையர் தந்தையும் ஒரே ஊரார், ஒரே சைனியத்தார், மேலும் பாலிய சிநேகர்.

சுந்தரமையர் தந்தை இறந்துபோன பிறகு யுத்தத்தில் இடக்கண் இழந்துபோனபடியால் குலாமாலிக்குப் பென்ஷன் கொடுத்துவிட்டார்கள். உடனே குலாமாலி சுந்தரமையரைத் தன் புதல்வன் போலவும், அவர் தாயைத் தன் தமக்கைபோலவும் பாவித்து சுந்தரமையர் வீட்டில் வசித்தான்.

வடவாற்றின் ஓரத்தில் அரண்மனையைச் சேர்ந்த ஒரு பாழ் மண்டபத்தில் தன் துணிமணிகளை வைத்திருந்தான். அவன் பெரும் பக்தன். நாற்பது வயதுக்குமேல் கொரானைத் தானே படிக்கவேண்டுமென்று பாரசீகம் கற்றான். மும்முறை ஸ்நானஞ்செய்து, ஐம்முறையும் தவறாது ஜெபஞ்செய்வான். அவனுக்கு உறவினர் யாருமில்லை. இருபத்தைந்து வயதுக்கெல்லாம் தன் பிரிய மனைவி மாண்டுபோனபடியால் உலகத்தை வெறுத்து பட்டாளத்தைச் சேர்ந்தான். கொரானில் புனர்விவாகம் செய்துகொள்ளலாமென்றிருந்தும் அதை இவன் வெறுப்பவன். ஆகவே தன் உண்டியைத் தானே செய்துகொண்டு சந்நியாசிபோல் பாழ் மண்டபத்தில் எக்காலும் ஜெபமும் தியானமும் செய்துகொண்டிருப்பான். இராப்போஜனமானபிறகு உடுப்பு பூண்டு கருங் கம்பளியைத் தோள்மேல் போட்டுக்கொண்டு சுந்தரமையர் வீட்டுக்குப் போவான். குட்டியம்மாள் அவனுக்கு வெற்றிலையும் பாக்கும் கொடுப்பாள். குலாம் என்னும் பதத்துக்கு அடிமை யென்று ஒரு பொருள். குலாமாலி அடிக்கடி 'இந்தக் குலாம் உங்களுக்கு அடிமை'யென்று பொருள்பட 'ஹேருலாம் துமாரே குலாம்' என்று விழுந்து விழுந்து சிரிப்பான். பிறகு விடியும் வரையில் தெருத்திண்ணையில் படுத்துறங்கி உஷத்காலத்தில் வடவாற்றுக்குப் போய்விடுவான்.

வெள்ளிக்கிழமையன்று அவன் நாகூருக்குப் போயிருந்தான். சனிக்கிழமையும் பக்திரஸம் மிஞ்சி அங்கேயே தங்கிவிட்டான். ஞாயிற்றுக்கிழமை காலையில் 8 மணி வண்டிக்கு தஞ்சாவூர் வந்தான். உடனே சுந்தரமையர் வீட்டுக்குப் போனான்.

சுந்தரமையர் திடுக்கிட்டு நின்றதையும், குட்டியம்மாள் படுத்துக்கிடந்ததைப் பார்க்கவே அவன் மனங் கலங்கிற்று. கணவனும் மனைவியும் குலாமாலியைப் பார்த்ததும் புலம்பி யழுதார்கள்.

குலாமாலி தன் பையைத் திறந்து,ஒரு டப்பாவிலிருந்து நாகூர் மீராஸாயப் திருநீறை எடுத்து குட்டியம்மாள் நெற்றியில் 'அல்லா பிஸ்மல்லா' என்று தடவினான்: பிறகு நடந்ததையெல்லாம் விசாரித்து மனம் நொந்தான்.

'நாளை பார்' என்னும் சொற்கள் அவர்களை மிகவும் வருத்திற்று. என்ன அபாயம் நேரிடுமோ வென்று பயந்து, குட்டியம்மாள் நகையெல்லாம் கழற்றி டாங்கி செய்து காமாபாய் நகைப்பெட்டியில்குலாமாலி வைத்துவிட்டான். நீர் இரத்தமாகும்படி மந்திரம்வல்ல சண்டாளன், தவறாமல் ஏதேனும் கொடுமை விளைவிப்பான் என்று பயந்து சுந்தரமையர் பன்னிரண்டு ரிஸர்வ் கான்ஸ்டெபில்களை தனக்குக் காவலாக வரவழைத்துக் கொண்டார். மாறிமாறி எப்பொழுதும் ஆறுபேர்கள் மருந்திடித்து துப்பாக்கியும் உருவின கத்தியுமாகக் காவல் காத்து நின்றார்கள். பங்காரு நாயுடு தய்வால் தெற்கு வீதிக்கு அன்று பன்னிரண்டு பீட் கான்ஸ்டெபில்கள் அதிகமாய் நியமிக்கப்பட்டார்கள்.

குலாமாலி வீரனே யாயினும் குட்டியம்மாளுக்கு ஏதோ அபாயம் நேரிடப்போகிறது என்று அஞ்சலானான். அவன் தன் பழைய மார்ட்டின் கைத்துப்பாக்கியில் 6 குண்டிடித்து நாள் முழுதும் சுந்தரமையர் வீட்டுத் தெருத்திண்ணைமேல் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு சுந்தரமையரே பெரிது. அவருக்கு அபாயமானால் அவனுக்கு அல்லாவும் பொய்யே. அன்று ஸ்நானமுமில்லை, ஜெபமுமில்லை, தியானமுமில்லை, நாள் முழுதும் விசேஷம் யாதொன்றும் நேரவில்லை.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

ஸங்கல்பமும் ஸம்பவமும்

EXPECTATION AND THE EVENT

ஒரு காலத்தில் ஒரு காட்டில் ஒரு சவுக்கமரமிருந்தது. அது வெகு ஸுகமாக வளர்ந்துகொண்டிருந்தது. போதுமான அளவு மழை சூர்ய வெப்பம் முதலியவையால் அது நன்றாய் செழித்து வளர்ந்திருந்தது. அதன் நிழலில் குழந்தைகள் விளையாடிக்கொண்டும் பாட்டுப்பாடி ஆடிக்கொண்டும் குதூஹலமா யிருந்தார்கள். பக்ஷிகள் அதன் கிளைகளில் கூடுகட்டி இனிமையாய்க் கூவிக்கொண்டு இருந்தன. அணில்கள் அங்குமிங்கும் கிளைகளில் தாவி விளையாடிக்கொண்டு பார்ப்பவர்களுக்கு சுறுசுறுப்பை ஊட்டிக்கொண்டிருந்தன. அந்த மரத்தைச் சார்ந்துள்ள ஒவ்வொன்றும் ஸந்தோஷத்தோடும் சுறுசுறுப்போடு மிருந்தபோதிலும் அம்மரமானது திருப்தியா யிருக்கவில்லை. இப்போதிருக்கிறதைவிட வேறு எதாவதொன்றாய் இருந்தால் நல்லது என்று அது விரும்பி ஏங்கிக்கொண்டிருந்தது. முக்யமாய் அது உலகத்தில் பிரவித்தியுள்ளதாயிருக்க ஆசைப்பட்டுக்கொண்டிருந்தது. இதை அறிந்த பக்கத்திலிருந்த ஒருமரம் "நல்லது, ஒருநாள் நீ கப்பலின் பாய்மரம் ஆவாய். அதைவிட விசேஷமானது என்ன இருக்கிறது" என்று சொல்லிற்று. ஆனால் சவுக்க மரத்திற்கு அது இஷ்டமில்லை "பூ! கப்பலின் பாய்மரமா! நன்றாய்ச் சொன்னாய். அதைவிட விசேஷமானதாய் இருக்க எனக்கு விருப்பம்" என்றது. ஒவ்வொரு வருஷமும் அளவெடுக்கிறவர்கள் அக்காட்டிற்கு வந்து உயரமான மரங்களுக்கெல்லாம் குறியிட்டுவிட்டுப் போவார்கள். பிறகு வெட்டுகிறவர்கள் வந்து அவைகளை வெட்டி, கிளைகளைத் தறித்து கப்பல் செய்கிறவர்களிடம் கொண்டுபோவார்கள். இவைகளை யெல்லாம் அந்த சவுக்கமரம் இழிவாகக் கருதி பார்த்துக்கொண்டிருக்கும்.

இப்படியிருக்கு நாளில் ஒருநாள் அளக்கிறவர்கள் வந்து அந்த சவுக்கமரத்தையே வெட்டுவதற்காக அதன் பட்டையின்மேல் அடையாளம் வைத்துவிட்டுப் போனார்கள். "ஹா! ஹா! உனக்குக்கூட காலம் வந்துவிட்டதா" என்று பக்கத்திலிருந்த மரம் கேட்டது. "அவர்களுக்குமேலிருக்கும் என் ஸாமர்த்தியம்" என்று கேலி செய்து சிரித்தது அந்த சவுக்கமரம். பிறகு அந்த அடையாளத்தை அணிலின் வாலினால் அழிக்கும்படி செய்துவிட்டது. அடுத்த வருஷம் தூக்கணாங்குருவிகள் திரும்பி வந்தபோது "ஓ! நீர் இன்னும் இங்கே இருக்கிறீரா!" என்றுகேட்டன. "ஆமாம், அவர்கள் என்னை வெட்டப் பார்த்தார்கள். நானா அவர்களுக்கு மசிகிறவன்" என்று கர்வமாய்ப் பதில் சொல்லிற்று.

"ஆனால் அழகான கப்பலின் பாயைக் கட்டிக்கொண்டு உலகத்திலுள்ள ஸமுத்திரங்களிலெல்லாம் ஆடம்பரமாய்ப்போய்க்கொண்டு,புதிது புதிதான துறைமுகங்களையும் ஜனங்களையும் பார்க்கவிரும்பவில்லையா?" என்றது ஒரு தூக்கணாங்குருவி. "இல்லை, எனக்கு அது விருப்பமில்லை. ஸமுத்ரம் ஒரேமாதிரியாக விருக்கிறது. எனக்கு அது பிடிக்கவில்லை. மனுஷ்யர்கள் என் மூலமாய் உலகத்திற்கு உபகாரம் செய்ய நான் பிரயோஜனபடவேணும் என்பதே என் எண்ணம்" என்றது. "புத்தியில்லாமற் பேசுகிறீர் நீர். உம்மோடு பேச எங்களுக்கு இப்போது ஸாவகாசம் கிடையாது" என்று சொல்லி தூக்கணாங்குருவிகள் தங்கள் வேலையைச் செய்துகொண்டிருந்தன. பிறகு அந்தச் சவுக்கமரத்தின் எண்ணம் பூர்த்தியாகுங்காலம் வந்தது. ஒருநாள் வேறு சில மரம் வெட்டுகிறவர்கள் அங்கு வந்து, உயரமாயும் நேராயும் வளருகிறவைகளைப் பார்த்துப் பொறுக்கி வெட்டுவதற்குப் பதிலாக கண்ட மரங்களையெல்லாம் வெட்டிச் சாய்க்கத் தலைப்பட்டார்கள். இதைக்கண்டு தூக்கணாங்குருவிகள் தங்கள் பழைய ஸ்நேகனான சவுக்கமரத்தைப் பார்த்துச் சொல்லிற்று. "ஜாக்ரதையாயிரும். உமக்கு இஷ்டமோ இல்லையோ? நிச்சயமாய் இன்று உம்மை வெட்டிவிடுவார்கள். "எனக்கு இஷ்டந்தான்.உலகத்திற்கு உபகாரம் செய்ய நான் பிரயோஜனப்படவேணும் என்பதுதான் என் விருப்பம்" என்றது. இதைக்கேட்டு அந்த மரம் வெட்டி "நல்லது உன் விருப்பப்படியே செய்" என்று சொல்லி கோடாலியினால் மரத்தை வெட்டி வீழ்த்தினான். "கப்பலின் பாய்மரமாகச் செய்வதற்கு நீ உதவமாட்டாய். பயப்படாதே. அவ்வளவு உபயோககரமானதாய் செய்வதற்கு நீ தகுந்த மரமில்லை. உன்னைக் காகிதம் செய்ய உபயோகப்படுத்துவார்கள்" என்று சொல்லிப் போய்விட்டான். "காகிதம் என்றால் என்ன?" என்று தூக்கணாங்குருவிகள் அதன் கிளைகளிலிருந்து அங்கு மிங்கும் பறந்தோடும்போது அந்தச் சவுக்கமரம் அவைகளைக் கேட்டது. "எங்களுக்குத் தெரியாது. சிட்டுக்குருவிகளைக் கேட்கிறோம்" என்று சிட்டுக்களைக் கேட்க அவைகள் "காகிதம் என்பது ஜனங்கள் அதன்மேல் எழுதிப் படிக்கிறார்களே வெள்ளையான வஸ்து அதுதான். முன் கந்தைகளிலிருந்து காகிதம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது மரங்கள் மிக நயமாய் கிடைக்கிறபடியால்

மரத்திலிருந்து செய்கிறார்கள்" என்று தங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லின. "அப்படியானால் ஜனங்கள் என்னைப் படிப்பார்களா" என்று அம்மரம் ஆவலோடு கேட்டது. ஆமாம் என்று உத்தரஞ் சொல்லின. இதைக்கேட்டு அந்த சவுக்கமரத்திற்கு வந்த ஸந்தோஷம் அளவிட முடியவில்லை. ஸந்தோஷத்தினால் ஸ்தம்பித்து நின்றுவிட்டது. இதைப் பார்த்து சிட்டுக்குருவிகள் இவ்வளவு ஸந்தோஷப்படக் காரணமில்லையென்று நினைத்து "ஐயா, ஒரு நிமிஷம் பொறும். உம்மை ஸமாசாரப்பத்திரிகைக் காகிதமாகச் செய்யப்போகிறார்கள். புஸ்தகங்களுக்கு வேண்டிய காகிதமாகச் செய்யமாட்டார்கள்" என்றன.

மரம் "எப்படியானாலும் படிக்கத்தகுந்த ரஸமுள்ள நல்ல விஷயங்களை என்மேலெழுதுவார்கள். இல்லையா?" சிட்டுகள் "இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நல்ல விஷயங்கள் எழுதுவது ஸாதாரணமாய் வழக்கமில்லை." அப்பொழுது சில மனிதர்கள் அந்த மரத்தை இழுத்துக்கொண்டு போக வந்தார்கள். பாவம்! அந்த மரத்திற்கு எவ்வளவு ஸங்கடங்கள் நேர்ந்தன. முதலில் துண்டு துண்டாய் வெட்டி, மற்றவைகளோடு சேர்த்து அரைக்கும் யந்திரத்தில் தள்ளி அதன் உடம்பிலுள்ள ரஸமெல்லாம் நசுங்கி ஒழுக அரைத்து, கூழாக்கி இன்னும் பலவித ஹிம்ஸை செய்து அதைக் காகிதமாகச் செய்தார்கள். ஹிம்ஸைப்படும்போது பலவித எண்ணம் எண்ணி பலன் என்ன? இப்போது முன்போலக் காட்டில் மலைச்சரிவில் ஸுகமாக வெய்யிலடிக்க, பக்ஷிகள் கிளைகளில் கொஞ்ச, குழந்தைகள் நிழலில் விளையாட தான் கம்பீரமாய் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததைப் பற்றி நினைத்தலினால் யாது பயன்? "உலகம் இப்படி இருக்குமென்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை" என்று, அது சொல்ல காகிதரூபமாயிருந்த மற்ற மரங்கள் ஒரே மனதாய் "உலகத்தைப் பற்றிச் சொல்லும் சொல்லெல்லாம் மிகையாகக் கூறப்படுகின்றன" என்று ஆமோதித்தன. பிறகு அதை ஐந்துமைல் நீளமுள்ள சுருளாய்ச் சுற்றி கப்பலில் ஏற்றினார்கள். அங்கே பாவம். அது தனியாயும் கப்பலில் போவதனால் உண்டாகும் தலை சுற்றல் முதலிய வியாதியாலும் அவஸ்தைப்பட்டுக்கொண்டு ஒருவாரம் கிடந்தது. தலைக்குமேல் பயங்கரமான காற்று அடித்துக்கொண்டிருந்தது. அந்த சப்தத்தைக் கேட்டபோது காகிதமாயிருக்கிற மரமெல்லாம் காட்டில் மனோஹரமாய்க் கழித்த காலத்தைப் பற்றியும், காற்றுக்குப் பயப்படாமல் தைரியமாய் தாங்கள் எதிர்த்து நின்றதையும் பற்றி நினைத்து நினைத்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தன. நமது (காகிதரூபமாயுள்ள) சவுக்கமரம் அந்தக் கப்பலின் பாய்மரத்தின் அடிவாரத்திலிருக்கும்படி நேரிட்டது அதன் துர்ப்பாக்யமே.

அதுவுமல்லாமல் அந்தப் பாய்மரம் தன்து பழைய ஸ்நேகன் என்றும் கண்டுகொண்டது. அந்தப் பாய்மரம் நமது சவுக்கமரத்தைப் பார்த்து, பாய்மரமாயிருப்பதைவிடச் சிறந்த வாழ்க்கை வேறு இல்லையென்றும் எப்போதும் வெய்யிலும் இரவில் நக்ஷத்திரம் சந்திரன் முதலியவைகள் வெளிச்சங்கொடுக்கவும், புதிது புதிதான தேசங்களுக்கு வியாபார வஸ்துக்களையும் மனிதர்களையும் ஏற்றிக்கொண்டு போகவும் அநேக துறைமுகங்களைப் பார்க்கவும் கூடியதாயிருக்கிறதென்றும், உலகத்துக்கு நம்மால் பெரிய உபகாரமென்றும்; தன் ஸ்தானத்தைப்பற்றி பெருமையுடனும் திருப்தியுடனும் பேசினதைக் கேட்டு அந்த சவுக்கமரம் அழ ஆரம்பித்தது. பிறகு அது தனக்கு ஆறுதலுக்காக அந்தப் பாய்மரத்தைப் பார்த்து "ஒரு பாய்மரம் ஸமாசாரப் பத்திரிகையைப்போல அவ்வளவு முக்யமானதென்று நீ சொல்லுகிறாயா?" என்று கேட்டது. இதைக் கேட்ட பாய்மரம் உடலெல்லாம் அசைய இடி இடியென்று நகைத்து "நல்லது எனக்கு அதுதான் இஷ்டமானது. ஏன்? ஒரு ஸமாசாரப் பத்திரிகைக்கு ஒரு நாள்தான் ஆயுஸ்; மறுநாள் அது ஒன்றுக்கும் உபயோகப்படுவதில்லை. ஒரு பாய்மரமோ பல ஆண்டுகள் இருந்து உதவுகிறது. மறந்துவிட்டேனே இன்னொரு விசேஷங்கூட அதற்கு உண்டு. சில சமயங்களில் கப்பலோட்டி அதன்மேல் சார்ந்துகொள்கிறான். நினைத்துப்பார் அதனாலுண்டாகும் பெருமையை" என்றது. இதையெல்லாம் கேட்டு அந்த சவுக்கமரம் அளவிடமுடியாத துக்கம் கொண்டது. துறைமுகம் போய்ச் சேர்ந்ததும் கப்பலிலிருந்து காகிதச்சுருளை யெடுத்து கரையிலெறிந்தார்கள். கடைசியாய் நகரத்திலுள்ள ஸமாசாரப் பத்திரிகை ஆபீஸு கிடங்கில் போய்ச் சேர்ந்தது. காட்டில் ஸுகமாய் நல்ல காற்றடிக்க இருந்ததற்கும் காற்றுப்படாத கிடங்குகளில் அடைந்து கிடப்பதற்கும் எவ்வளவு வித்யாஸமிருக்கிறது. அங்கு கிடந்த சுருள்கள் ஒன்றோடொன்று வெகு துக்கத்துடன் பேசிக்கொண்டன. பிறகு ஒருநாள் இரவு நமது (காகிதமாயிருக்கிற) சவுக்குமரம் அச்சடிக்கிற இடத்திற்கு கொண்டுபோகப்பட்டு அங்கு அச்சினால் மூச்சுவிட முடியாமல் அமுக்கப்பட்டு பிரக்ஞையற்றுக் காலையில் பிரக்ஞை வந்து பார்க்கும்போது தன்மேல் எழுத்துக்கள் பதிந்திருந்ததைக்கண்டது அந்தோ! சிட்டுகள் சொன்னது ஸரியாய் விட்டது. ஏனென்றால் ஸமாசாரப் பத்திரிகையில் விகார உருவங்களுடன் "ஸுகந்த மூக்குத்தூள்" "சிட்டுக்குருவி லேகியம்" "மனோரஞ்சித வாஸனைப் புகையிலை" "ஒரு ரூபாய்க்குப் பதினாறு விலையுயர்ந்த உபயோகிக்கக்கூடிய ஸாமான்" "நூதன ரோமசங்காரி" "செங்கல்பட்டில் பட்டப்பகலில் கொலை" "மரமேறி விழுந்துமாண்டான்" "ரெயில் மோதிக்கொண்டன" "காற்றைப் பக்ஷித்துக்கொண்டிருக்கும் யோகி" "ஆகாயத்தில் பறக்கும் குழந்தை" முதலியவற்றைத் தவிர விவேக ரஸம் பொருந்திய வார்த்தை ஒன்றுவது காணப்படவில்லை.

அஹோ! பரிதாபம்! அந்த மரம் தன்மேல் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்று அறிந்தபோது தான்

பாய்மரமாக ஆகாததைப்பற்றி பட்ட வருத்தத்தை ஆதிசேஷனாலும் சொல்லத் திறமில்லை. இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிற வாழ்க்கையிலிருந்து தப்பும்பக்ஷத்தில் இனி ஒருபோதும் தன் மனம்போனபடி போகிறதில்லையென்று சபதம் செய்துகொண்டது. ஆனால் ஐயோ! காரியம் மிஞ்சிவிட்டது. பிறகு அதையும் அதைப்போன்ற மற்றவைகளையும் கத்தரித்து மடித்து பனியுடன் கூடிய விடியற்காலத்தில் ரெயில் ஸ்டேஷனில் விற்பதற்காகக் கொண்டுபோனார்கள். ஒரு மனிதன் அதை அரையணாவிற்கு வாங்கி, அதை முழுவதும் படித்துவிட்டு விசேஷம் ஒன்றுமில்லை என்று சொல்லி உட்காருமிடத்திற்குக் கீழே எறிந்துவிட்டான். இன்னொருவன் அதை யெடுத்துப் படித்துவிட்டு வீட்டுக்குப் போகும்போது கொஞ்சம் மீன் வாங்கும்படி நேரிட்டதனால் அதை அதில் பொதிந்துகொண்டு போனான். அங்கே அது இரவெல்லாம் மீன் நாற்றத்துடன் காட்டில் வஸித்ததைப்பற்றி நினைத்துக்கொண்டே பொழுதைப் போக்கிற்று. மறுநாள் ஒரு வேலைக்காரி அடுப்புப் பிடிக்கவில்லையென்று சொல்லி மீன் பொதிந்திருந்த காகிதத்தை எடுத்து அடுப்பில் போட்டாள். ஒரு நிமிஷத்தில் புஸ் என்று எரிந்துபோய்விட்டது.

இதை வாசித்து முடிந்தவுடன் இது ஒரு கதைதான் என்பதை மறந்து, அந்த மரம் அனுபவித்திருக்கக் கூடிய ஸுகத்தையும் ஆனால் வாஸ்தவத்தில் பட்ட கஷ்டத்தையும்பற்றி யோசித்துக்கொண்டிருந்த சிறுவர்களை, "வாத்தியார் சாகானா" என்று மாணவர்கள் சொல்லும்படியான அவர்கள் ஜன்ம வைரியாகிய உபாத்யாயர், அயர்ந்து நித்ரைசெய்யும் குழந்தைகளை எழுப்பி விளக்கெண்ணெய் புகட்டுவதுபோல் "இந்தக் கதையின் கருத்தென்ன" என்று கேட்டாராம். "நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்" என்றோ அல்லது "விதியை வெல்லலாகாது" என்றோ அல்லது இவைகளுக்கு ஸமமான மஹத்தான தத்வம் ஒன்றை யெடுத்துப் பையன்கள் சொல்லவேண்டும் என்று இவர் அபிப்ராயம் இருந்திருக்கலாம். ஆனால் கதை விஷயத்திலேயே புத்தி ஓடிக்கொண்டிருந்த ஒரு பையன் "தரித்திரம் பிடித்த தினசரிப்பத்திரிகைகளே கூடாது என்பது கருத்து" என்று உபாத்யாயர் சற்றேனும் எதிர்பாராத பதில் சொன்னதைக்கேட்டு அவர் பிரமித்துப் பேசாமல் இன்னது செய்வதென்று தெரியாமல் இருந்துவிட்டாராம். பதில் சொன்ன பையன் சிறுவனானதால் கேலிக்காகப் பதில் சொன்னான் என்று நாம் நினைப்பதற்கு இடமில்லை. அதையும் தவிர அவன் சொன்ன கருத்தும், தப்புந் தவறுமாய் அழுக்குப்பிடித்த காகிதத்தில் அதிக மையும் மையில்லாமலும் மாற்றிமாற்றி அச்சிடப்பட்டு நாம் படும் சிரமத்திற்குத் தக்க பலன் கொடுக்காத அநேக தினஸரிப் பத்திரிகைகளால் பீடிக்கப்பட்டப் பெரியோர்களாகிய நாம் அங்கீகரிக்கக் கூடியதல்லவா?

அம்மணி அம்மாள்.

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

I. ஆத்திசூடி விளக்கம்

24. இயங்கித் திரியேல்

ஸம்பந்தப்பட்டு அலைந்து கெடாதே என்பது இதன் பொருள். எதனுடன்? ஐம்புலன்களுடன் ஐம்பொறிகள் வழியாக. ஐம்பொறிகளாவன, மெய், வாய், கண், மூக்கு, செவி: ஐம்புலன்களாவன, ஸ்பர்ச, சப்த, ரூப, கந்த, ரஸங்கள் ஆகிய முற்கூறிய பொறிகளால் உணரப்படும் விஷயங்களே. ஆகவே இந்த நீதிவாக்யத்திற்கு பொறிகள் வழியாக ஓயாது வெளிப்பட்டு விஷயங்களை அனுபவிக்கவேண்டும் என்று அவைகளில் ஈடுபட்டு மானிடப் பிறவியை வீணாகக் கெடுத்துக் கொள்ளாதே: அதாவது பொறிகளை அடக்கி மானிடத்தன்மையைத் திடப்படுத்திக்கொள் என்பதாயிற்று. இதற்கேற்பவே சிதம்பர ஸ்வாமிகளும்.—

அறிஞனே நல்லோர் சொன்ன தத்துவ வழியெல்லா [வும்
பொறிவழி சென்றுபோகம் புசித்திடா திருக்கத்தானே.

என்று சாஸ்திர ஸாரத்தின் முதலான விஷயத்தை முதல் கூறினார். திருவள்ளுவரும்:—

ஒருமையுள் ஆமைபோல ஐந்தடக்கலாற்றின்
எழுமையும் மேம்பா டுடைத்து

என்று பகவத்கீதையில் ஸ்திதப்ரஞ்ஞனது கூர்மவிருத்தியைக் குறித்துக்காட்டி எழுபிறப்பு ஸபலமாகும் ஒரு பிறப்பில் இந்திரியங்களை அடக்கிவிட்டால் என்றார். அபாய காலத்தில் ஆமை, தன் தலை, நான்கு கால் முதலியவைகளை முதுகு ஓட்டுக்குள்ளடக்கி ஸுகமாக விருக்கும்: இதுபோல புத்தி ஸன்மார்க்கத்தில் நிலைக்கப்பெற்றவன் அதற்கு மாறான விஷயங்கள் எதிரே தோன்ற இடமே கொடுக்கமாட்டான். அவ்வாறு தோன்றிவிட்டால் அதனோடு ஸம்பந்தப்படவொட்டாது இந்திரியங்களை அடக்கிச் செயலற்றிருப்பன்.

கற்றறி மூடர்களாகிய சிலர் 'இந்திரியநிரோதம் வேண்டியதில்லை: மனதை நேரே அடக்கிவிட்டால் இந்திரியம் தானே அடங்கிவிடும்: ஆதலால் கஷ்டப்பட்டு இந்திரியங்களை அடக்கிக்கொண்டு வீண்பொழுது கழியாது மேல்வேலையில் முயன்று வேரை அறுத்துவிட்டால் மரம் பட்டுப்போகும்: கிளைகளை வெட்டி வருந்துவானேன்' என்பர். இந்த அபிப்ராயத்திற்குசாஸ்திரங்களிலும் ஆதாரம்ஏற்படலாம். 'வெளிவிஷயங்களை

ஏற்கவொட்டாது தடுக்கப்பட இந்திரியங்களில் விஷயத்தாக்கு நின்றுவிடும். ஆனால் விஷய அனுபவ ஆசை நீங்காது. இது பரம்பொருளை உள்ளபடி உணர்ந்தால் தான்நீங்கும்' என்ற ஒரு கீதாவாக்யம் உள்ளது. இதைக் கொண்டு இந்திரியங்களை அடக்க முயலாது பரம்பொருளைக் காண முயற்சித்து விஷய ஆசையை ஒழித்துவிட்டால் இந்திரியங்கள் எப்படி இருந்தால் என்னஎன்று தர்க்கம்பேசுவர் முற்கூறியவர். இந்திரியங்களை வெளிச் செல்லவொட்டாது தடுக்கத்தொடங்கினால்தான் உள்ளிருக்குங்காரணமாகிய விஷய ஆசை நமக்குத் தெரியவரும். அதை நீக்க மேல்முயற்சி உண்டாக இடமுண்டு. போனபடி எல்லாம் இந்திரியங்களை விட்டுக்கொண்டிருந்தால் ஸுக துக்கங்களில் அடிபட்டுத் திண்டாடுவோமே ஒழிய அந்த கலக்கத்தில் உள் ஆசை விளங்கவே மாட்டாது. ஆகவே முதலில் இந்திரியங்களை நியாயமான விஷயங்களில்மாத்திரம் போகவிட்டு நமக்கு ஏற்பட்ட ஸுகங்களை அனுபவிக்கும்படி செய்து, தகாத விஷயங்களில் போய் பாயவொட்டாமல் செய்யவேண்டும். பின்னர் ந்யாயவிஷயானுபவங்களிலும் இந்திரியங்களை உணர்விழந்து மூழ்கும்படி விடாது, அவைகளுடன் விஷய ஆசை நீக்கும் காரணமாகிய ஆராதனையைக் கலந்துவிடவேண்டும். அதாவது மெய்யால் நமஸ்காரம் கடவுள் பாதத்தைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளுதல், வாயால் ப்ரஸாதம் புஜித்தல், கடவுளைத் துதித்தல், கண்ணால் கடவுள் விஷயங்களைப்பார்த்து ஆனந்தித்தல், மூக்கால் ப்ரஸாத புஷ்பாதிகளை முகர்ந்து அந்த விஷயப்பதிவை அதிகப்படுத்தல், செவியால் கடவுள் விஷயங்களைக் கேட்டல் இவைகளைச் செய்யவேண்டும். வைராக்யம், ஆராதனையாகிய இவ்விரண்டுமே இயங்கித்திரியாததன் லக்ஷணங்கள்.

ஆதலால் பொறியடக்கமாகிய முதல்படி இன்றி மனமடக்கமாகிய இரண்டாம்படி பலிக்காது. இதுபற்றியே கீதையிலும், 'புத்திசாலி அடக்க முயன்றுகொண்டிருக்கையிலேயே இந்திரியங்கள் மனதை வலிய இழுத்துப் போய்விடும். (அவை போனபடி விடும் குதர்க்கன் கதி என்ன!) எந்த மனம் விஷயங்களில் திரியும் பொறிகளுடன் ஸம்பந்தப்பட்டிருக்கிறதோ அது, காற்றுக்கப்பலை அடித்துச் செல்வதுபோல, அறிவைக் கெடுத்துவிடும் என்று கூறப்பட்டிருக்கிறது.' ஆகவே இந்திரியங்களைப் போன வழி விட்டுக்கொண்டு வந்தால் மனதில் விஷயானுபவப் பதிவுகள் அதிகமாக மனமடக்குவது முடியாமல் போய்விடும். ஒரு குளத்தை இறைக்கப் புகும் ஒருவன் அதனுள் ஜலம் கொண்டு சேர்க்கும் வருவாயை அடைத்துக்கொண்டல்லவோ ஜலத்தை இறைக்க முயலவேண்டும்?

இந்திரிய நிரோதம் மிகுந்த அவசியமாயினும், அது முதல்படி என்ற உணர்ச்சி இருத்தல் வேண்டும். இல்லாவிடில் வீண் மனக்கொதிப்பு சஞ்சலாதிகளுக்கே இடமாகும். இந்திரிய நிரோதம் முற்றிலும் ஸாதாரணமாக ஸித்தியாவது கஷ்டம். 'இது ஒருவாறுதான் முதலில் ஏற்படும். இதை வைத்துக்கொண்டு மனம் தளராது அடுத்த படியாகிய மனம் அடக்குவதில் முயலவேண்டும். இதையும் ஒருவாறு பழகிக்கொண்டே புத்தியைத் திடப்படுத்த முயலவேண்டும். இவ்வாறு இந்த மூன்றுவிதப் பழக்கத்தின் விசேஷத்தால்தான் புத்தி நிலைக்க இந்திரிய மனங்கள் நன்றாக அடங்கும். மனம் அடக்கல் புத்தியைத் திடப்படுத்தல் இவைகளுக்குத் தகுந்த மார்க்கங்கள் சாஸ்திரங்களில் நன்றாகக் கூறப்பட்டுள்ளன. இங்கு அவைகளை விவரிக்கவேண்டியதில்லை. நாம் இந்நீதிவாக்கிய எல்லையை இங்கு உணரவேண்டும். இந்திரியங்கள் என்ன அடக்கியும் மேல் படியில் பழக்க பலமில்லாவிட்டால் முற்றிலும் அடங்கிநிற்கா! இப்படி இருக்கிறதே என்று குதர்க்கிகள் போல இந்திரியங்களை அடக்காது விட்டுவிட்டாலோ மனதை எட்டிப் பிடிக்கவே முடியாது. ஆதலால் இந்திரியம் அடக்குவதே ஒரு முடிவல்ல அது மேலான ஒரு முடிவிற்கு ஏற்பட்டுள்ள வழியில் முதற்படி. இது பூர்ணமாகத் திடப்படவேண்டுமானால் மேல்படி அப்யாஸம் வேண்டும். ஆதலால் இந்திரியங்களை ஒருவாறு அடக்கிக்கொண்டு பின்னர் அதில் மனம் செலுத்தாது மேல்படி அப்யாஸத்தைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யமுடியாத ஸமயங்களில் இந்திரியங்களைச் சிதறிப் போகவிட்டு மனமடங்குவதற்கு விரோதமான பதிவுகள் ஏற்படும்படி செய்யாமல் காத்துக் கிடக்கவேண்டும். இவ்வாறு செய்வதே இயங்கித் திரியேல் என்பதன் கருத்து. இதுபற்றியே கீதையில் 'எவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் பாய்ந்தோடுவதில்லையோ அவன் புத்தியே திடப்பட்டதென்று கூறலாம்' என்று காட்டப்பட்டிருக்கிறது. ஆதலால் பரம்பொருளை உள்ளபடி கண்டு புத்தி திடப்பட்டு ஆசை நீங்கி இந்திரியங்கள் தாமே பொட்டிப்பாம்புபோல் அடங்கும்வரையில் மேல்மேலும் புதிய விஷயானுபவப் பதிவுகளை உண்டாக்காது, நமது முயற்சியால் இயங்கித் திரியாதிருந்து காத்துக் கிடக்கவேண்டும். இவ்வாறின்றி ஆசையடங்காது இந்திரியங்களை அடக்குவது பாசாங்காகும் என்றுகுதர்க்கம் செய்து அவிழ்த்துவிட்டதும் கழுதை

எடுத்துவிட்டதாம் ஓட்டம் என்றபடி இந்திரியங்களைப் போன வழி விட்டுதிரிபவருக்கு முக்தி மார்க்கத்தில் முதல்படியே கைவராததால் மேல் விஷயம் இன்னதென்றே உணர இடமில்லாது கிடந்து தத்தளிக்க வேண்டியதுதான்.

மேலும் மனிதன் இந்திரிய நிரோதம் இல்லாவிடில் அதோகதியை அடைவன் என்பதை ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் பின்வருமாறு எடுத்து விளக்குகிறார் தமது விவேக சூடாமணியில்.

உலவுமான் யானை விட்டில்
  ஊறுமீன் வண்டிவ் வைந்தும்
ஒலிமுதல் புலன்ஒன் றொன்றில்
  உவந்ததா லிறக்கு மாகில்
புலனிவை யைந்தி னும்மால்
  பொருந்திய புருஷன் சேரும்
பலவிதத் துன்பம் தன்னை
  பகர்ந்திட முடியு மோசொல்.

தவ்விய புலனை த்தும்
  தன்னுடைத் துகளி னாலே
வெவ்விய கருநா கத்தின்
  விடத்தினுங் கொடிதே யாகும்
கவ்விய வவ்வி டம்தான்
  கடித்தலுற் றவனைக் கொல்லும்
தவ்விய புலன்நி னைந்தோன்
  தன்னையும் சொல்லு மன்றோ.

இந்தப் பாட்டிலடங்கியிருக்கும் கதைகளைத் தத்தாத்ரேய அவதூதாள் யது மஹாராஜாவுக்கு விளக்குவதாக ஸ்ரீமத் பாகவதம் 11-ம் ஸ்கந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மான்.—வேடர்கள் ஊதும் குழல் ஓசையைக்கேட்டு அவர்கள் போகும் வழியே மான்கள் ஈடுபட்டுச்சென்று அவர்கள் விரித்திருக்கும் வலையில் அகப்பட்டு மாளும்.

யானை.—யானைக்கூட்டங்களுள் பழகிய பெண் யானைகளை விட்டுவிட, இவைகள் அவைகளைத் தொட்டு ஸுகமுண்டாக்க அதில் ஈடுபட்டு ஆண் யானைகள் இவைகள் பின்னே தொடர்ந்து பாகர்கள் கையில் அகப்பட்டுவிடும்,

விட்டில்.—விளக்கைக் கண்டதும் அதன் உருவத்தில் மயங்கி விட்டில்கள் 'இது ஒருபழம் இதைத் தின்று ஸுகிக்கலாம்' என்று அதில் வந்து விழுந்திறக்கும்.

மீன்.—பிடிப்பவர்கள் போடும் தூண்டி முள்ளில் உள்ள புழு அல்லது சோற்றை ருசிபார்த்து ஸுகிக்க வந்து மீன் பிடிபட்டிறக்கும்.

வண்டு.—வண்டுகள் தாமரை மலரிலுள்ள வாஸனையில் ஈடுபட்டு அதனுள் சொக்கியிருக்கும். ஸூர்யாஸ்தமன ஸமயத்தின் மலர் மூடிக்கொள்ள அவைகள் இறக்கும். வாஸனையைப் பெரிதாக எண்ணிப் போகையில் வண்டுணுமலராகிய சண்பகத்தின் அருகில் செல்ல அதன் அதிக வாஸனைபட்டு இறந்தும்விடும்.

இம்மாதிரியாக இந்திரிய விஷயங்களில் ஈடுபட்டிறக்கும் ஜந்துக்களுக்கு இவைகளைச் சேர்த்து த்யானித்து ஸுகிக்கவேண்டிய கருவியாகிய மனமும் புத்தியும் இல்லை. மனிதனுக்கு இக்கருவிகள் இருப்பதால் ஐந்து விஷயங்களையும் சேர்த்து அனுபவித்து த்யானித்து ஸுகிக்க முயலுவான், புத்தியும் மனமும் உள்முகப்பட்டு மேலான விஷயத்தை நாடிநிற்காவிடில். ஆகவே நினைத்த மாத்திரத்தில் மனம் புத்திகளைக் கொள்ளைகொண்டு அவைகள் உருவிழந்து ஈடுபடும்படிசெய்வதால் விஷத்தைவிட மேலான விஷமாகிய விஷயம் அறிவுடையோரால் அணுகத்தக்கதல்ல. மேலும் இக்காலத்திய நாகரீகம் இயங்கித் திரிவதை அதிகமாக்கும் குணமுடையது! மனம் புத்திகளை விஷயானுபவ விஷயத்தில் நன்றாகச் செலுத்தி குறைந்த காலத்தில் எளிதாக அதிக இந்திரிய ஸுகம் கொடுக்கும் ஸாதனங்களை உண்டாக்க முயல்வதும் அவ்வாறு ஸுகித்திருப்பதுமே தத்கால நாகரீகம் என்பது நூதன நாகரீகம் குறைந்த முன் காலத்தில் இந்திரிய அடக்க விஷயத்தில் ஸ்ரீமத் சங்கராச்சாரியார் இவ்வளவு கூறியிருந்ததால் இந்தக் காலத்தில் அதற்கு ஆற்றலதிகமாகிவிட்டது!! அப்பொழுதே பயந்து இந்திரியங்களை அடக்கித் திரியவேண்டுமானால், விஷய ஸுகஸாதனம் நிறைந்த இக்காலத்தில் செத்தாரைப்போலவே திரிந்தால்தான் இந்திரிய நிரோதம் கைகூடும்போலிருக்கிறது !!!

II. மொழிபெயர்ப்பு விளக்கம்

TRANSLATION MODELS

WHAT MAKES THE COLOURS OF THE SUNSET.

When the sun is setting, its light does not come so straight down upon us as it does when the sun is high in the sky; but in order to reach our eyes, it has to pass through a long layer of air, just as if you stick a needle straight into an orange it does not have to go far through the peel before it gets inside: but if you stick it sideways in the orange, it has a long journey through the peel before it gets inside. So the light from the setting sun passes through so much air and all the dust and smoke and so on, that is in the air; and all these take something out of the white light, and throw out what they do not take. The things floating in the air are of all sizes and so we get many different colours in sunset. So it comes about that sunsets are often finer and more rich when the air is not pure but has much dust in it.

ஸூர்யன் அஸ்தமிக்குங்காலத்தில் பலவர்ணங்கள் தோற்றுவதேன்?

ஸூர்யன் உச்சியிலிருக்குங்கால் அவன் கிரணங்கள் நம்மேல் வந்து தாக்குவதுபோல, அஸ்தமன காலத்தில் அவன் கிரணங்கள் நேராக வந்து தாக்குவதில்லை, நமது கண்ணில் வந்து படுவதற்கு அந்தக் காலத்தில் அவை நீண்ட ஸாதாரணவாயுப்படைகள் வழியாக ஊடுருவி வரவேண்டியிருக்கிறது. ஒரு நார்த்தம்பழத்தில் நேராக ஊசி ஒன்றைச் சொருகினால் அது உள்ளே போவதற்குமுன் அதிக தூரம் அதன் தோலுள் போகவேண்டியிராது: அந்த ஊசியை ஒருபுறம் சாய்வாகச் சொருகிவிட்டால் அது உள்ளே போவதற்குமுன் அதிகதூரம் தோலுள் போகவேண்டி வரும். இதுபோல அஸ்தமிக்கும் ஸூர்யனிடமிருந்து வரும் கிரணங்கள் அதிக ஸாதாரணவாயு, அதில் உள்ள தூசி, புகை முதலியவைகள் வழியாக வரவேண்டியிருப்பதால், அவை அந்த வெண்மையான கிரணங்களில் அடங்கிய வர்ண ஒளிகளில் சிலவற்றை உள்ளடக்கி மற்றவைகளை வெளியே செலவிடுகின்றன. ஸாதாரண வாயுவில் தொங்கித் திரியும் வஸ்துக்கள் பலவித அளவுடன் இருப்பதால் ஸூர்யாஸ்தமன காலத்தில் அநேகவித வர்ணங்கள் தோற்றுகின்றன. இதனால் தான் ஸாதாரண வாயு சுத்தமாக இல்லாது, தூசிகளால் நிறைந்திருந்தால், அப்பொழுது ஏற்படும் ஸூர்யாஸ்தமனம், வெகு நேர்த்தியாகவும் சிறப்பாகவும் தோற்றுகிறது.

"THIS LIFE A BUBBLE".—*Drummond.*

இவ்வாழ்வு ஓர்குமிழியே

This Life, which seems so fair,
Is like a bubble blown up in the air
By sporting children's breath,
Who chase it everywhere
And strive who can most motion it bequeath,
And though it sometimes seem of its own might
Like to an eye of gold to be fixed there,
And firm to hover in that empty height,
That only is because it is so light
—But in that pomp it doth not long appear;
For when 'tis most admired, in a thought,
Because it erst was nought, it turns to nought

—*Drummond.*

இனிதெனத் தியங்கும் இவ்வாழ் வோவெனில்
கனிமுகச் சிறுவர் களித்தா டுகையில்
ஆகாயத் துள்தம் ஆவியி னுயிர்ப்பால்
எகா நிற்க எழுப்பும் குமிழியே.
எங்கும் பின்றொடர்ந் தேகிச் சென்றே
தங்களில் எவரதைத் தக்க விசையில்
எழுப்ப வல்லார் எனவழக் கிடுவர்.
விழுப்பொன் னிழைத்த வீறுபோ லாங்குத்
தன்னியல் கதியில் தங்குவ தாகச்
சின்னேரம் அது தென்படி னும்மிக
மெல்லிய தாகையால் வெட்ட வெளியில்
வல்லே யுலாவ வலியுடைத் திடினுமென்?
இச்சிறப் பினிலே என்றும் தங்குமோ?
மெச்சிடும் போததை வெகுவாய் மனதில்
ஆதியில் ஒன்றும் அலதால் அஃது
ஏது மிலதாய் இறுதியில் முடியுமே.

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று"

குமாரகுருபரஸ்வாமிகள்.

C. M ராமச்சந்திரன், பி. ஏ., பி. எல்,

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

நந்தன் சரித்திரம்

1. ஆதனூர்ச் சருக்கம்

அல்லது

நந்தன் பக்தி தோன்றி வளர்ந்தது

'மானிடப் பிறவி மிக அரிதாயினும் ஒருவன் தன்னைத்தான் வரவர அபிவிருத்தி செய்துகொள்ளாவிடில் இந்தப் பிறப்பை அடைந்ததாலாய பயன் என்ன? இவ்வாறு செய்துகொள்ளாதவன் புழுவினும் கடையனல்லவா?' என்று ஒருபெரியவர் சிந்தனை செய்திருக்கின்றனர். நம்முள் மறைந்து எப்பொழுதும் மாறாதிருக்கும் தெய்வத்தன்மையை வெளிப்படுத்தி அதை நிலைத்தோங்கும்படி செய்வதுதான் இங்கு அபிவிருத்தி என்று குறிக்கப்பட்ட விஷயம். ஸாதாரணமாக மனிதன் ஸத்வரஜஸ் தமோகுணக்கலப்பால் அமைந்தவன். இவைகளுள் ஸத்வம் அபிவிருத்தியாக ஆக மற்றிரண்டு நீங்கிவிடும். இதுபற்றியே கைவல்ய நூலாசிரியரும்:

மனது ஸத்துவஸ்வரூபம்;மற்றிரண்டும் வந்துகலந்தன;
அவற்றை மாற்றினால் போம்;
தனது ஸங்மார்க்கத்தை விடாதிருந்தபோது, தமோ
குணமும் ரஜோகுணமும் சமிக்கும்; பின்னை
கனபரிணும சஞ்சலம் போம்: போனக்கால்
களங்கமற்று நின்ற ஆகாசம் போலும்
நினதுளமப்படியாம் பிரஹ்மத்தொன்றாய் நிர்விகல்ப
ஸமாதியிலே நிற்கும்தானே!

என்ற பாட்டில் தன்னைத்தான் அபிவிருத்தி செய்துகொள்ளும் விதத்தைக்காட்டி இதன் ரஹஸ்யத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இவ்வாறு தெய்வத் தன்மையை வெளிப்படுத்தி நிலைத்தோங்கும்படி செய்வதாகிய அபிவிருத்தி மார்க்கத்தில் தேர்ந்து தெளிந்தவர்களுள் மிகச் சிறந்தவர் திருநாளைப் போவார் என்ற காரணப் பெயர் பெற்ற நந்தனார் என்பவர்.

ஸுமார் 600 வருஷங்களுக்கு முன்னர் பறையர் குலத்தில் இந்த மஹான் அவதரித்தார். இப்பாத கண்டத்தில் முன்னிருந்த ஆரியர்கள் அல்லாத ஜனங்களில் மிஞ்சியிருப்பவர்களாக விருக்கலாம் இவர்கள். இவர்களுக்கு ஹீனஜாதி என்றும், தீண்டாத ஜாதி என்றும், பஞ்சமர்கள் என்றும் பெயர்கள் உண்டு. ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்திரர்கள் ஆகிய நாற்பெரும் வருணத்திற்கு வெளிப்பட்டவர்கள். ஆதலால் முதல் மூன்று வருணத்தாருக்கும் இவரை அணுகினால் அசுத்தம் உண்டாகிவிடும் என்ற அபிப்பிராயம் இப்பவும் மாறாதிருக்கிறது. அவர்கள் சிற்சில விடங்களில் நிலங்களோடு அடிமைகள்போல ஸம்பந்தப்பட்டிருக்கின்றனர்; வேறுசில விடங்களில் தமது குடும்பவாழ்க்கைக்குப் போதுமான அளவு தான்யங்களைப் பெற்று நிலங்களைப் பயிரிட்டுப்பிழைக்கின்றனர். அவர்கள் ஸொத்து சேர்த்துப்பணக்காரராவதற்குத் தருணமே வாய்க்காது. மேல் ஜாதியார் மதவிஷயங்கள் இவர்களை வந்து எட்டி திருத்தாதிருந்ததால் தங்களுக்கு ஏற்ற ஜாதிக் கூட்டங்களையும், கடவுட் கூட்டங்களையும் இவர்கள் ஏற்படுத்திக்கொள்ள இவர்களுள் விசித்திரமாயும் பயங்கரமாயுமுள்ள ஆசாரங்களும், பூத ப்ரேத பிசாச தெய்வங்களுமே உண்டாகிவிட்டன.

நந்தனார் அவதரித்த ஆதனூர் பறச்சேரி இக்காலத்திய பறச்சேரியைப்போலேதான் இருந்தது.

நொண்டிச்சிந்து-ராகம்-புந்நாகவராளி

பழன மருங்கணையும்—புலைப்
பாடியது கூரை வீடுதனில்
சுரையோ படர்ந்திருக்கும்—அதைச்
சுற்றிலும் நாய்கள் குலைத்திருக்கும்
பருந்தோடி வட்டமிடும்—இளம்
பச்சைப் பிசிதமே விச்சைகொண்டு
கோழிகூவும் கூக்குரலும்—பாழுங்
கொல்லை யருகினில் வெள்ளெலும்பும்
நரம்பும் குவித்திருக்கும்—பல
நெட்டி மிதந்திடும் குட்டைகளில்
நண்டோ குடியிருக்கும்—சிறு
நத்தை கமட்டம் வலுத்திருக்கும்
தோலூறும் கேணிகளில்—வெகு
தொல்லைப் படும்வாடை சொல்லறியாப்
பாம்போ அடித்திருக்கும்—வயற்
பக்கங்களில் மெத்த நொக்கெலும்பும்
கிழித்தோல் நரம்புகளும்—அவர்க்
கினமில்லை சிறு மீனுலரும்
தெருவில் விளையாடிக்கொண்டு—அவர்
தெந்தினம் பாடுவார் ஸுந்தரமாய்
இலுப்பை மணி யறையில்—கட்டி
இண்டந்தலைகளில் பூண்டிருக்கும்
சங்குதோடுகாதணியும்—அருந்
தாவடமே யவர் தாவிடமாம்
மணியோ தரித்திருப்பர்—தெரு

வாசற்புறத்தினில் வசிக்கொண்டு
கொண்டாட்டமாயிருப்பர்—கையைக்
கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன்
மதுவுண்டு கொக்கலிப்பர்—பறை
வாத்தியமும் வெகு நேர்த்தியுடன்

இருக்கும் புலைப்பாடி—அதில்
ஈசன்திருவடி நேசமுடன்
சாரும் ஒருபுலையர்—அவர்
ஜாதிமுறை தவறாதவராம்
நந்தனார் அவர்பெயராம்.

என்றார் கோபாலகிருஷ்ண பாரதி அவர்களும். இம்மாதிரியான விஷயங்களுக்கு இடையில் சிறந்த மஹானாகிய நந்தனார் ஈசனருளால் மானிட உடல்பெற்று தோன்றினார். நமது கர்மங்கள் எப்பொழுதும் புண்ணிய பாபகலப்பாகவே இருக்கும். கடவுளையாக உலகத்தோர் உருகிப் பின்பற்றி கடைத்தேற ஏற்பட்டுள்ள முத்தி மார்க்கத்தை எல்லோரும் உணரும்படிக் காட்டக்கொடுத்துவைத்திருந்த நந்தனார் ஸத்கர்மத்தோடு ஸம்பந்தப்பட்டிருந்த ஏதோ ஒரு கெட்ட கர்மம் அவரைப் பரம்பொருள் விஷயமே கனவிலும் அறியா ஜாதிக்கிடையே பிறக்கும்படி செய்தது. கடவுள் கருணையை என்னவென்று கூறுவோம்! நமது கெட்ட கர்மங்கள் பலனைத் தண்டனைமூலமாக அளிக்குங் காலத்தும் அதுவும் ஒரு அநுக்கிரஹமாகவே முடிந்து நமது தெய்வத்தன்மை வெளிப்படுத்தச் சிறந்த ஸஹாயமாக ஏற்படும்படி செய்து விடுகிறாரே !! இந்த திவ்ய சரித்திரத்தில் கடவுள் கொடுமையிலும் கருணையே குடிகொண்டிருக்கிறது என்பதை நன்றாகக் காணுவோம். முத்திமார்க்கத்திற்கு விரோதமாகத்தோன்றும் பறைய ஜன்மமே நந்தனுக்கு அந்த மீளா நெறிக்கு இவ்வாறு ஸாதகமாகவிருந்து உலகிற்கும் உபகாரமாக முடிந்தது என்பது இந்தக் கதையால் நன்றாக வெளியாகும்.

'விளையும் பயிர் முளையிலே' என்பதற்கு ஏற்ப சிறுபிள்ளைப் பருவத்திலேயே பறைச்சேரியிலிருந்த மற்றையப் பிள்ளைகளைப்போல விருக்கவில்லை,நந்தன். தன் வயது பிறப்பு முதலியவற்றிற் கேற்றபடி தடியாயும் கருப்பாயும் ; பெரியமீசை, ஜரிகைத்தலைக்கட்டு, பாதக்குறடு, கத்தி, கோடாலி, முதலியவைகளைத் தாங்கியும், உள்ள கடவுள் விக்ரஹங்கள்செய்து, அக்கடவுளைக் கருணாநிதி, நம்பினவர்களைக் கைவிடாதவர், தயாபரர் என்றுமதித்து, ஈடுபடுவதே அவன்பால்யவிளையாட்டாக விருந்தன. இம்மாதிரி கடவுளைச் செய்துவைத்துவிட்டு, அதைச் சுற்றி ஆடுவான்: பாடுவான்: அதற்கு உத்ஸவங் கொண்டாடுவான்: சிறுபிள்ளைகளைப் பக்தர் திருகூட்டமாகத் திரட்டுவான்: கடவுளை ஆனந்தபவனியில் எடுத்துச்செல்லுவான். இவைகளே இவன் பால்ய லீலைகள். ஆதனூர் அக்ரஹாரத்திலிருந்த சிறு கோபுரத்தில் அழகு, கம்பீரம் முதலியவைக ளிருந்தபடியாலும், தன்னால் அணுகக் கூடாதாகையால் அதனுள் வெளிப்படா ரஹஸ்யம் புதைந்து கிடந்தமையாலும்அது அவன் இளமனதை வசப்படுத்திக் கொள்ளைகொண்டு விட்டது. அழகு, கம்பீரம், ரஹஸ்யம், அமைந்துள்ள விஷயங்களில் ஈடுபடும் குணம் நந்தனிடம் தீவ்ரமாக இருந்ததே அவனுக்கு மோக்ஷஸாதனமாக ஏற்பட்டது. கோபுரத்தை மிகுந்த ஆவலுடன் அடிக்கடி கண்கொட்டாது பார்ப்பான். அதன் உருவம், பருமன், சிறப்பு, முதலியவைகளைக்கண்டு ஆச்சர்யபாவசனாகி, 'இதனுள் என்ன அழியாச் செல்வம் அடங்கிக் கிடக்கிறதோ! அதன் மேன்மையை யல்லவா வெளியிட ஏற்பட்டுள்ளது இது !!' என்று எண்ணமிட்டு நிலைத்திருப்பான். இப்படி யிருக்கையில் அந்த அக்ரஹாரத்தில் சில புண்ணிய தினங்களில் தீவட்டி, வாத்யம், நகரா, வேதபாராயணம் முதலியவைகளுடன் அக்கோயில் ஈசன் ஆனந்தபவனி வருவதுண்டு. அந்தக் காலங்களில் தன் பக்தத்தோழர்களுடன் நந்தன் பக்திபரவசனாகி ஓட்டோடியும் வந்து தூரத்திலிருந்தபடியே கூடியவரையில் கடவுளையும் உத்ஸவச் சிறப்பையும் கண்டு அதன் அத்புதரஸம் மனதில் ஊறிக்கொண்டிருக்க அதில் ஈடுபட்டே வீட்டிற்குத் திரும்புவன். கோயில், உத்ஸவம், ப்ராஹ்மணர்கள், வேதம் முதலிய பரிசுத்த விஷயங்களில் மிகுந்த மதிப்பு பிறவியிலேயே நந்தனாருக்கு ஏற்பட்டிருந்தது. அவர்நீசப்பிறவி இந்த மதிப்பை பரமநிஷ்டையாக உயர்த்த மிகுந்த உதவியாக விருந்தது.

யௌவனம் வரவர, நந்தன் த்யானபக்தியும் உருக்கமும் வளர்ந்து வேரூன்றிக்கொண்டே வந்தன. எவ்வளவு அற்பமாயினும் தன்னால் இயன்றதைக் கடவுள் கைங்கர்யத்திற்குச் செலுத்தவேண்டும் என்ற ஆவல் அவனுள் கிளம்பி ஓங்கியது. நிஜபக்தி மனங்கரைந்து வெளிப்படும்வரை உள்ளூறவே பூரித்துவரும்: பூரிப்பு அதிகமாகிவிட்டால், அதை வெளிப்படாது தடுத்து நிறுத்த முடியாது. அது பகவத் கைங்கரியமாகவே வெளிப்பட்டுவிடும். 'கடவுள் களிக்க நாம் செய்வது என்ன இருக்கிறது? நாமோ ஏழை! நீசன்! என்ன செய்ய முடியும்?' என்று வெகுகாலம் யோசிப்பான்: ஒருவித தர்மவழியும் தோன்றாது விழிப்பான். இவ்வாறு ஒருநாள் யோசனையுள் ஆழ்ந்திருக்கையில் திடீரென்று கோயில் நகராக்கள் முதலிய தோற் கருவிகளுக்குத் தோல் தர்மம் செய்து கடவுளுக்கு அர்ப்பணம் செய்யலாமே என்று தோற்றியது! இந்த எண்ணம் உதித்த அத்புதம்விதம் அவரைப்பரவசமாக்கக் 'கட்டளையிட்டார் கடவுள், அவர் கோயில் பேரி முதலியவைகளுக்கு தோல்ஸமர்ப்பிக்கும்படி' என்று கூறிஆனந்தக் கூத்தாடினான். அதுமுதல் தோல்துண்டுகள் முதலியன தயார்செய்யத்தொடங்கிவிட்டான். வெகுபரபரப்புடன், கடவுள்எப்பொழுதும் எல்லோரோடும் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்: நாம் மாத்திரம் அவர் வாக்கைச் செவிகொடுத்து கேட்பதில்லை, அவ்வளவுதான். அவர் எல்லாவற்றிற்கும் ஈசனாகையால் நாம் ஸமர்ப்பிப்பவைகளின்விலையுயர்வு முதலியவைகளில் ஈடுபடாது, பக்தி, உருக்கம் முதலியவைகளைக் கருதியே அவைகளை ஏற்றுக்கொள்ளுகிறார். தோல் தயார்செய்து, நனைந்து பதனிட்டு தகுந்த அளவாக வெட்டி தயார்செய்வதே

நந்தனுக்குப் பரிசுத்தமான பொழுது போக்காக ஏற்பட்டது. தோல் வாஸனை அடித்துவிட்டால் போதும், அவன் மனம் பக்தி பாவசமாகி சிறந்த த்யான விஷயங்களைக் கிளப்பிவிட்டுவிடும். இப்படிக் கைங்கரியத்தி லிறங்கி,

கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோயில்தொறும்
பேரிகை முதலாய முக்கருவிப் பிறவினுக்கும்
போர்வைத்தோல் விசிவாரென் றினையவும் புகலுமிசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கு நிலைவகையில்
சேர்வுற்ற தந்திரியும் தேவர்பிரான் அர்ச்சனைகட்
கார்வத்தி னுடன்கோரோ சனையு மிவையளித்தார்.
இவ்வகையால் தந்தொழிலின் இயன்றவெலாம் எவ்
[விடத்தும்
செய்வனவும் கோயில்களின் திருவாயில் புறநின்று
மெய்விரவு நோன்பு மிகுதியினு லாடுதலும்
அவ்வியல்பில் பாடுதலு மாய்நிகழ்வா ரந்நாளில்

என்று வர்ணித்தார் சேக்கிழார் ஸ்வாமிகளும். நந்தனாருக்குப் பக்திதோன்றி வளர்ந்த விதத்தைப் பின்வரும் நொண்டிசிந்தில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

நொண்டிச்சிந்து : ராகம் புந்நாகவராளி

நந்தனார் அவர்பெயராம்—வெகு
நல்லவராம் இந்தத் தொல்லுலகில்
அவரே சிவனடியார்—அவர்க்
கா நுமில்லை இத்தாரணியில்
கோடிகோடி ஜென்மங்களே—முன்னம்
குற்றமறச் செய்த நற்றவமே
அவதார மானதுவோ—ஈசன்
அன்புபுரியும் பேரின்ப ஈசுவை
கொள்ளை கொள்ளவோ பிறந்தார்—திருக்
கோயில் வலம்சுழன் றுவலுடன்
செய்யும் பணிவிடைகள்—ஈசன்
சிந்தை மகிழ்ந்து குளிர்ந்திடவே
மத்தள பேரிகளும்—இசை
வார்கொடுத்து புறந்தோல் கொடுத்து
மறவாமலே தினமும்—நல்ல
வாசம் பெருங் கோரோசனையும்
தேவாலயங்கள் தோறும்—தந்து
சித்தமுருகிய பத்தி வெள்ளம்
புரண்டோடிக் கங்குகரை—என்று
பேதமறிய வொண்ணாது கண்டீர்
ஜாதியில் நீசரவர்.

என்று இவ்வாறு புகழ்ந்து கூறியிருக்கிறார் கோபால கிருஷ்ண பாரதிகளும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
LADIES' PAGES

சாந்தை அல்லது பொறுமையினிலை
2 ஒற்றியுரைத்த காதை
(தொடர்ச்சி)

பிரபுன்னதன்.—எப்பொழுதும் தைர்யமென்பதே அறியாத பெண் ; என்ன மெதுவு, என்ன பொறுமை, தான் எண்ணும் எண்ணங்களின் தூண்டலினால் கூச்சமடையும் அவள் ; — இயற்கை குணம் மாறி, வயதின் நிலைமை தவறி, தேசாசாரத்தை அசட்டை செய்து, தேசம், பெருமை, புகழ் எல்லாவற்றையும் விட்டுவிட்டு — தான் பார்க்க வெருண்டதின்மேல் மோஹங்கொள்ளலாமா? என்ன! நியாயவிருத்தமல்லவா அது? நிறைவு குறையு மென்பதற்கு சாட்சியமல்லவா அது? இயற்கைக்கு எதிராக நெறியுந் தவறுமென்றல்லவா ஏற்படுகிறது?—இல்லை, அந்தப் பாழும் மருந்து மாயங்களால் தான் இந்த கதி அடைந்திருக்க முடியும்! பின்னை எப்படி இருக்கமுடியும்? மறுபடியும் நான் சொல்லுகிறேன், வசீகர மருந்தேதோ இட்டு அவள் மூளையைக் கலக்கித்தான் இந்த நிலைக்கவளை அவன் ஆளாக்கிவிட்டான்.—

அரசன்.—உறுதிச்சொல்லே ருஜுவாய்விடுமோ? தீர விசாரியாமல், உண்மையை நன்றாக அறியாமல் எப்படிச் சொல்லமுடியும்? வெளித்தோற்றங்களும், வெறும் ஸந்தேஹங்களும், பொதுவாக நடந்ததாகத் தோன்றும் விஷயங்களும் ஆகிய இவைகள் அவனது குற்றத்தை ஏற்படுத்தி விடுமோ?

முதல்பிரதானிகன்.—ஆனால் உத்துல்ல! நீர் சொல்லும்! தாங்கள், நேரில்லாவழியாக வில்லங்கமாக மருந்து மாயங்களால் அப்பெண் மனமும் சுபாவமுங் கெடச் செய்தீர்களா? அல்லது மனங்கனிய இங்கித மொழிகளாலும் கேள்விகளாலும் அவள் மனதை நல் மொழிப் பெருக்கால் ஒருவர் மற்றொருவரது உள்ளங் கலக்கச் செய்வதுபோல் கொள்ளைகொண்டீரா?

உத்துல்லன்.—தங்களிடம் யான் தயவு செய்யச் செய்துகொள்ளும் விண்ணப்பம். தாங்கள் அப்பெண்ணையே இங்கு வரும்படிச்செய்து அவளையே என்னைப் பற்றிப் பேசச்செய்யும். அவளுடைய தகப்பனார் முன்பாக என்னைப்பற்றி அவளிடம் விசாரியும். அவள் சொல்லுவதில் தங்களுக் கேதேனும் தவறாகப்பட்டால், யான் சொல்லுவதைக் கேளும்: என்னிடம் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, எனக்குக் கொடுத்திருக்கும் கௌரவம், வேலை,—இவைகளை மாத்ரம் உமது நியாயம் என்னிடமிருந்து அபகரிப்பதுடன் விடாமல், இந்த என்னுடைய உயிரையும் அபகரித்துக் கொள்ளட்டும். யான் சொல்வது இது உண்மை மொழி. சத்தியம்! அதுதான்!

அரசன்.—சாந்தையை யிங்கு வரவழையும்.

உத்துல்லன். — நண்ப! தங்களுக் கவளிருக்கு

மிடம் தெரியும். இவருடன் போய் அவளை அழைத்து வாரும்.

அயோக்யபுஞ்சன் சாந்தையை அழைத்துவர அவருடன் சென்றான்.

உத்துல்லன்.—அவள் வருவதற்குள் தேவன்முன் எம்முறையாக என் தவறை எல்லாம் எடுத்துரைப்பேனோ அதேமாதிரியாகத் தங்களிடமும் கூறுவேன். என்னென்னகுற்றம்செய்து அவ்வழகிய சாந்தையிடம் யான் விளங்கினேன் ; எவ்வாறவளது அன்பிற்குப் பாத்திரனானேன் ; எப்படி அவளிடமிருந்தவளை மயக்கினேன்; அவள் என்னிடம் எப்படி நடந்துகொண்டாள்;—என்பதை எள்ளளவும் தவறாமல் உண்மையாகத் தாங்கள் யாவரு மறியச் சொல்லிவிடுகிறேன். தயவு செய்யவேண்டும்.

அரசன்.—உத்துல்ல! சொல்லும்.

உத்துல்லன்.—சாந்தையின் தகப்பனார் என்னை நேசித்திருந்தார். என்னை அடிக்கடி வீட்டிற்கழைப்பித்திருக்கிறார். எப்பொழுதும் என் வாழ்க்கையைப் பற்றிய கேள்விகளை கேட்டது கேட்டவண்ணமாக இருந்தார். வருஷந்தோறும் என்னென்ன யுத்தங்கள் யான் கண்டேன் ; எந்தெந்த போரில் உழைத்தேன் ; முற்றுகள் எவ்வெவைகளில் நான் தாக்கினேன் ; விசித்ர விசித்ரமாக யான் அடைந்த திருஷ்டா திருஷ்டங்கள் கஷ்டஸுகங்கள்—இவை முதலாகிய விஷயங்களையெல்லாம் கேட்பார். என் சின்னஞ்சிறுநாள் முதல் அவர் சொல்லக்கேட்ட சமயம் வரைக்கும் நான் அடைந்த ஸுகதுக்கங்களை அவரிடம் சொன்னேன். அக்காலத்தில் யுத்தகளத்தில் யான் அடைந்த துக்கஸம்பவங்கள், தாங்கமுடியா தடைந்த கஷ்டங்கள், நீர்மேலும் நிலமேலுமடைந்த வருத்தங்கள் ; இவைகளைப்பற்றி எல்லாம் சொல்லினேன். முற்றுகை தாக்கிய காலங்கள் கொடுமையாக இடிக்குட்பட்டு மயிரிழை தப்பிக் குற்றுயிராய்க் கிடந்து பிழைத்து வெளிவந்த கதையையும் சொல்லினேன். இடும்புற்ற என் விரோதிகளால் கவறப்பட்டு ஊழியக்காரனாக விற்கப்பட்டதையும் சொல்லினேன். எவ்வாறதிலிருந்து மீண்டு வெளிவந்தேன் ; வெளிவந்து எவ்வாறு நாடுநாடாய் அலைந்தேன் ; பெருங் குகைகளிலும் அகன்ற பாலை நிலத்திலும், பரந்த கல்லுக்கிண்டிய படுகுழிகளிலும், வானமளாவிய மலையுச்சிகளிலும், கற்பாங்குகளிலும் எப்படிப் பாய்ந்து பாய்ந்தலைந்தேன்—இவைகளைப் பற்றித்தான் பேசுவேன். யான் செய்த தேசசஞ்சாரத்தில் கண்ட இவைகளைப்பற்றி பேசுவதுமுண்டு. மனிதரையே யுண்டு வாழும் ராக்ஷதர்களைப்பற்றியும் பேசுவதுண்டு. தோளின்கீழ் தலைவளரும் பெருமைவாய்ந்த சில மனிதர்களது சரித்திரங்களை சில சமயத்தில் சொல்வேன். இவைகளைக் கேட்பதென்றால் சாந்தைக்கு வெகு விருப்பம் ; கடும் ஆவல். தன்வீட்டு வேலைகள் கேட்பதை சில சமயங்களில் தடுக்கும். அவற்றை யுடனேசென்று சீக்கிரம் செய்துவிட்டு, எனது கதையைக் கேட்க பாபாத்து ஓடிவருவள். (தொடரும்.)

புதுக்கோட்டை மஹாராஜா அவர்களின் வெள்ளி ஜுபிளி

SILVER JUBILEE OF HIS HIGHNESS THE MAHARAJA OF PUDUKOTTAI

ஆங்கில ராஜாங்கத்திற்கன்றுமுதல் இடைவிடாது தொண்டு செய்யும் பெருமை நீங்காத புகழடைந்த தொண்டைமான் சக்ரவர்த்திகளது வம்சத்தின் பெருமையைப்பற்றி அறியாதவர் யாருமில்லை. புதுக்கோட்டை யரசராகிய மார்த்தாண்ட பைரவ தொண்டமான் பகதூர் தாம் இதுவரையும் இருபத்திநான்குவருஷம் பிரஜைகள் சுகமடையக் காப்பாற்றி தமதரசின் இருபத்தைந்தாம் வருஷத்தை அடைந்தனர். அவரது வெள்ளி ஜுபிளி சென்ற மாதம் 22உ விமரிசையாகக்கொண்டாடப்பட்டது. அழகான தர்பார் மண்டபத்தில் காலை8-மணிக்கு ராஜா சர்வாலங்கார பூஷணராய் ராஜபடாடோபாடம்பரங்களுடன் சேனைகள் பின் தொடர, தர்பார் மண்டபத்தை அடைந்து அவரது பிரஜைகளின் பேரால், திவான் அவர்கள் அட்ரெஸ் ஒன்று வாசித்து, அதை வெள்ளிச்சிமிழியில் வைத்து அவர்க்குக் கொடுத்தார். அதற்கு ராஜா தகுந்தபடி பதில் சொல்லி, பிரஜைகளுக்குப் பல நன்கொடைகள் அளித்தார். ராஜா பதில் சொல்லுகையில், ஜனங்கள்ஸந்தோஷ ஆரவாரஞ் செய்தார்கள். ராஜா சொன்னதின் தமிழ் மொழி பெயர்ப்பை திவான் வாசித்த பொழுது ஜனங்கள் கரகோஷம் செய்தார்கள். அன்று மாலை, ராஜா அவர்கள் பிருதுகளுடன் யானையின்மீது ஏறி திருக்கோகர்ணத்திற்குப் பவனி சென்றார். திவான் முதலிய உத்தியோகஸ்தர்கள் பின் தொடர்ந்தார்கள். வழியில் ராஜா பூண்டிவாண்டையாருடைய வாசஸ்தானத்திற்கு எதிரில் தங்கினார். மிஸ்டர் V. A. வாண்டையார், ராவ்பகதூர் அண்ணாசாமித் தேவர், பாபாநாடு ஜெமின்தார் முதலிய அரண்மனை விருந்தினர்கள் ராஜாவை வந்து பார்த்தார்கள். அவர்களைத் திவான் கண்டுகொண்டார். அன்றுமாலை மிஸ்டர் வாண்டையார் ராஜாவுக்கு ஒரு அட்ரஸ் வாசித்தார்.

23-ந்தேதி மாலை ஆனந்த பாக்கில் ஒரு தோட்டக் கச்சேரி நடத்தப்பட்டது. அதற்குப் பலர் வந்திருந்தார்கள். கச்சேரி நடந்தது. 24-ந் தேதி காலை பொலிடிகல் ஏஜெண்டான மிஸ்டர் பக்ளே, நான்கு லட்சம் ரூபாய் செலவுசெய்து கட்டப்போகிற ராஜா அரண்மனையின் அஸ்திவாரக்கல்லை நாட்டினார். அச்சமயம் ராஜாவும், சில ஐரோப்பிய விருந்தினர்களும், சில பிரமுகர்களும் வந்திருந்தார்கள். அது முடிந்த பிறகு, வெள்ளிக்கிழமைதோறும் கூடும் சந்தைக்குக் பல்லாயிரம் கால்நடைகளின் தாகசாந்தியின்பொருட்டு புதிதாய்க் கட்டி முடித்த ஜலத்தொட்டியைப் பார்ப்பதற்காக ராஜாவும் மற்றவர்களும் சென்றார்கள். தண்ணீர்த்தொட்டி அதற்குள் ஜலம் சேகரிப்பதற்காக வெட்டப்பட்ட கிணறு ஆகிய இவ்விரண்டுக்கும் பிடித்த செலவை, மிஸ்டர் T. N. நாச்சியப்ப செட்டியார் கொடுத்திருக்கிறார்.

சென்னை மூர் மார்க்கட்டைப்போல் 8000-ரூபா செலவு செய்து புதிதாய்க் கட்டப்பட்டிருக்கும் ஸமஸ்தான காய்கறி சந்தைச்சாவடியை ராஜா திறந்துவைத்தார்.

வெள்ளி ஜுபிளி சமயத்தில் புதுக்கோட்டை ராஜா அவர்கள் அளித்த நன்கொடைகள்.—

I. **வரிகள் வஜா.**—அதாவது, (1) வருஷம் ஒன்றுக்கு 25000 ரூபாய் வீதம் வசூலாகும் கணக்கு வரி, மூன்று வருஷத்திற்கு வஜா செய்யப்பட்டது. (2) வருஷம் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் வீதம் வசூலாகும் மோதர்பா என்ற வீட்டுவரி மூன்று வருஷத்திற்கு வஜா செய்யப்பட்டது. (3) வளையல்காரர்களுக்கும், துணிகளை வெளுப்பதற்கு உபயோகப்பட்டு வரும் உழமண்ணுக்கும் போட்டிருக்கும் வரி நிரந்தரமாய் வஜா செய்யப்பட்டது.

II. **ஸ்தல சுயாட்சி ஏற்பாடு செய்தல்.**—அது எப்படியென்றால், புதிதாக அமைக்கப்படப்போகிற சமஸ்தான லெஜிஸ்லேடிவ் அட்வைஸரி கவுன்ஸிலில், தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சேர்க்கப்படுவதனாலும், மேலே சொன்ன கவுன்ஸிலில் காலிகள் ஏற்படும்பொழுது முனிசிபல் கவுன்ஸிலர்களில் இருவரைத் தெரிந்தெடுத்து அனுப்பும் உரிமை கொடுக்கப்படுவதினாலுமே.

III. **கல்வி விஷயம்.**—ஸமஸ்தானத்தில் விவசாய ஸ்கூல் ஒன்று ஸ்தாபிக்கப்படும். கோயமுத்தூர் விவசாயக் காலேஜில் போய்படிக்கும் ஸமஸ்தான மாணவர்களுக்கு வருஷாவருஷம் இரண்டு ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படும். ஸமஸ்தானத்தைச் சேர்ந்த கிராமாந்தரங்களில் எலிமெண்டெரி ஸ்கூல்களைக் கட்டுதற்காக வருஷம் ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் மூன்று வருஷம் வரையில் கொடுத்து வரப்படும்.

IV. மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் அதற்குக் குறைந்த சம்பளம் பெறும் ஸமஸ்தான ஸேவகர்களுக்கு இன்னும் நான்கு மாதங்கள் வரையிலும் பஞ்சப்படி கொடுக்கப்படும். மாதம் ஒன்றுக்கு 30 ரூபாயும் அதற்குக் குறைந்த சம்பளம் பெறும் ஸமஸ்தான உத்தியோகஸ்தர்கள், உணவுப் பொருள்களின் விலை ஏறி இருக்கும் பிராந்தியங்களில் வேலையாய் இருந்தால் அவர்களுக்கு ஸ்பெஷலாக அலவன்ஸு கொடுக்கப்படும். ஸமஸ்தானத்து டவுன் ஹால் கட்டடம் பூராவாகக் கட்டி முடிப்பதற்காக டவுன் ஹால் கமிட்டிக்கு 1000 ரூபாய் கொடுக்கப்படும். வெள்ளி ஜுபிளி சம்பந்தமாய் புதிதாய் ஏற்படுத்தப்படும் விவசாய தானிய விதைகள் சேகரிப்பு பாங்குகளுக்கு 10,000 ரூபாய் கொடுக்கப்படும்.

இவ்விதமாக சிலவு செய்து தமது அரசாட்சியின் இருபத்தைந்தாம் வருஷாரம்பத்தை புதுக்கோட்டை ராஜா அவர்கள் கொண்டாடியது, யாவர்க்கும் ஆநந்த மூட்டும். தமது அரசாட்சியை ஜனங்கள் பேறாக எண்ண, ஜார்ஜ்மன்னர் செய்ததைப்போலவே இவரும் செய்தது அவரது மனப்போக்கின் பெருமையை மாத்திரம் காட்டியதன்று ; அவர் தமது பிரஜைகளிடம் கொண்ட ஆசையின் பெருக்கையும் காட்டும். தமது ஜனங்கள் இனிது நாடி தனது தம்பியாராகிய திவானுருடைய அரிய உதவியாலும் யுக்தியாலும் நீதியுணர்ந்து நிலம் தழைக்க, ஜனங்களது மனந்தளிர்க்கவும் தளிர்ந்து பெருமை பெற்றோங்கும் தொண்டைமான்பெருமான் என்றும் ஸுகமும் பெருமை தோள் மேல் குதித்தாட விஜயலக்ஷ்மி விலாஸமாக விளங்கி தேசநன்மைக்குழைக்கும் ஜனத்தலைவனாய் விளங்கும் எம்பெருமான் எவற்றிற்கு முதல்வனாகியவோ முதல்வன் காக்க பிரார்த்திக்கின்றனம்.

திண்டிவனத்தில் ஒரு கல்விப் பொருட்காட்சி.— சென்றமாதம் 26உ 27உகளில், திண்டிவனம், ஆர்காட் அமரிகன் மிஷன் ஹை ஸ்கூலில், பொருட்காட்சி ஒன்று செவ்வனே நடைபெற்றது. இப்பொருட் காட்சிசாலை தென்னாற்காடு ஜில்லா அஸிஸ்டண்டு இனிஸ்பெக்டர் ம-ள-ள-ஸ்ரீ, T. V. சிவகுமார சாஸ்திரிகள் அவர்களால், திறந்துவைக்கப்பட்டது. அப்பொழுது சாஸ்திரிகள் அவர்கள் பொருட் காட்சிகளின் உபயோகங்களைப்பற்றி சிறந்த உபந்நியாஸம் செய்தார். அநேகம் மாதிரிப் பாடங்கள், தக்க அனுபவம் பெற்றவர்களால் அவ்விடம் வந்திருந்த உபாத்தியாயர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டு, கொடுக்கப்பட்டன. அநேகம் ஊர்களிலிருந்து காட்சிகள் அனுப்பப்பட்டிருந்தன. அவைகளுள், சித்திர ஸம்பந்தமான காட்சிகள் ரொம்பவும் மெச்சத்தக்கதாயிருந்தன. இக்காட்சி செவ்வனே நடைபெற, திண்டிவனம் ரேஞ்சு ஸப் அஸிஸ்டெண்டு, அவர்கள் ஷையூர் ஹைஸ்கூல் ஹெட் மாஸ்டர், ஆர்காட் மிஷன் மானேஜர் ம-ள-ள-ஸ்ரீ ஸ்கட்டர் துரையவர்கள், ஷையூர் கிருஷ்ணராவ் அவர்கள், இன்னும் அநேக உபாத்தியாயர்கள், இவர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தை மெச்சத்தக்கதே.

*
* *

ட்ரெயினிங் ஸ்கூல் மாணவர்களுக்குச் சம்பளம்.— தற்போது மாதம் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் சம்பளம் பெற்று கவர்ன்மெண்ட் ட்ரெயினிங் ஸ்கூல்களில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கு அதிகப்படியாக ரூபா 1-8-0 பிரதிமாதமும் கொடுக்கப்பட வேண்டுமென வித்தியா இலாக்கா தலைவர் தெரிவித்துக் கொண்டதற் கிணங்கி, அத்தொகையைச் சேர்த்துக் கொடுக்க கவர்ன்மெண்டு உத்தரவு கொடுத்துவிட்டது.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

ஸ்கூல்களில் தோட்டவேலை.—சென்னை ராஜதானியிலுள்ள, எலிமெண்டரி ஸெக்கெண்டரி ஸ்கூல்களில் தோட்டங்கள் ஏற்படுத்தி அவைகளில் பயிராக்கும் தொழிலைப் பிள்ளைகளுக்கு நேரில் கற்றுக்கொடுக்கும் பழக்கத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற வித்யா டைரெக்டருடைய பிரேரணையைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்து அப்படியே செய்துவரும்படி உத்தரவு செய்துவிட்டார்கள். ஏற்கனவே சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கும் 1½ லட்சம் ரூபாய் கிராண்டிலிருந்து 10,000 ரூபாய் கிராண்டுத் தொகையை இந்த விஷயத்திற்காக சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது. எலிமெண்டரி ஸ்கூல்களில் தோட்டம் வைப்பதும் அதைப்பற்றிய விஷயங்களைப் பிள்ளைகளுக்குப் பிரத்தியட்சத்தில் செய்து காட்டுவதும் இன்ஸ்பெக்டிங்கு ஆபீஸர்களின் மூலமாகத்தான் நடைபெற்றுவர வேண்டும் என்பது கவர்ன்பெண்டாரின் அபிப்பிராயம். ஸெகெண்டரி ஸகூல்களின் விஷயத்தில், கைதேர்ந்த உபாத்திமார்களை முதலில் நியமனஞ்செய்து அவர்களைக்கொண்டு பிள்ளைகளுக்குத் தோட்டம் வைத்தல், பயிராக்கல் முதலியவைகளைக் கற்பித்துவரும்படிச்செய்வதுதான் முதற்காரியமாகும். இந்த விஷயத்தைப் பற்றி டைரெக்டருடைய பிரேரணையைக் கவர்ன்மெண்டார் தீர்க்காலோசனை செய்து அதை ஒப்புக்கொண்டு விட்டார்கள். இங்கிலாந்திலிருந்து (400-20-500) சம்பளத்தில் ஐந்து வருஷத்திற்கு இரண்டு நிபுணர்களை வரவழைத்து நியமிப்பதற்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளப்படும். அவர்களுள் ஒருவர், டிரெயினிங் காலேஜில் படிக்கும் செக்கண்டெரி ஸ்கூல்கள் காலேஜ்கள் இவைகளைச் சேர்ந்த உபாத்திமார்களுக்குப் போதனுமுறை கற்பித்து வருவதுந் தவிர, தோட்ட வேலைகளைக் கற்றுக்கொள்ளப்பிரியமுள்ளவர்களுக்கு அந்தத் தொழிலைக் கற்பித்து வரவேண்டும். மற்றொரு ஆபீசர் ஐரோப்பிய ட்ரெயினிங்கு ஸ்கூல் இன்ஸ்பெக்டரிடம் வேலைபார்த்து வருவதும் தவிர, சென்னையிலுள்ள ஐரோப்பிய ட்ரெயினிங்கு ஸ்கூல்களிலும் வெளியூர்களில் வகுப்புகளை ஏற்படுத்தி கற்பித்து வரவேண்டும். இந்த இரண்டு ஆபீஸர்களின் கீழ் மாதம் ஒன்றுக்கு 25, 20 ரூபாய் சம்பளத்தில் 2 ஓர்க்ஷாப்பு அஸிஸ்டெண்டுகளும், 20 ரூபாய் சம்பளத்தில் ஒரு தச்சனும் வேலை செய்து வருவார்கள். ஐரோப்பிய டிரெயினிங்கு ஸ்கூலைச்சேர்ந்த போதகருக்கு உதவியாக 25-ரூபாயில் மூவர் நியமனம் பெறுவார்கள். டிரெயினிங் காலேஜைச் சேர்ந்த போதகருக்கு உதவியாக 3-வித்யார்த்திகள் ஏற்கெனவே பெற்றுவரும் ஸ்டைபெண்டுடன் மாதம் 5-ரூபாய் அதிகச் சம்பளம் பெறுவார்கள். ஆபீஸர்களும் அவர்களுக்குச் சேர்ந்த சிப்பந்திகளும் என்றையதினம் வேலை செய்ய ஆரம்பிக்கிறார்களோ அன்றுமுதல் இந்த விதி அமுலுக்கு வரும். வேண்டிய பண்டு விஷயமாய்ப் பினான்ஷியல் இலாகாவில் பிரத்தியேகமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

*
* *

சென்னை ராஜதானியில் பிளேக் என்னும் வியாதியால் மரணம்.—1898-ம் வருஷம் முதல் 1912-ம் வருஷம் அக்டோபர் மாதம்வரையிலும் சென்னை ராஜதானி முழுவதிலும் 1,22,144-பேர்களுக்குப் பிளேக் நோய் கண்டது. அதில் 95,006 பேர் இறந்து போனார்கள்.

	மரணம்
பல்லாரியில்	434,59
சேலம்	175,86
கோயமுத்தூர்	14,184
வட ஆற்காடு	6103
அனந்தபுரம்	4259
தென்கன்னடம்	3282

சதேச ராஜ்யங்களில், சார்தூர் ராஜ்யத்தில் 138 பேருக்குக் கண்டு 116பேர் இறந்துபோனார்கள். குண்டூர், பங்கனபல்லி, புதுக்கோட்டை இவைகளில் பிளேக்கே இல்லை.

*
* *

இவ்வருஷ நெல் விளைவு.—சென்னை ராஜதானியிலே 1912-13ம் வருஷத்தில் தொண்ணூற்றொன்பது லட்சத்துத் தொண்ணூற்று மூவாயிரத்து எழுநூறு ஏக்ரா நிலத்தில் நெல் சாகுபடியாயிருக்கிறதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தைக் காட்டிலும் நூற்றுக்கு மூன்று பங்கு குறைவே, காலகதி பொதுவாகக் கிரமமாகவும், தென் ஜில்லாக்களில் சற்று நன்றாகவுமே இருந்திருக்கிறது. இவ்வருஷ விளைவால் 783 லட்சம் அந்தர் / சுத்தமான அரிசி தேறும். இது சாதாரண விளைவில் 100ல் 88 பங்கே ஆகும். (ஒரு அந்தர் என்பது 1 மணங்கு 5 சேர்.)

*
* *

ஜார்ஜ் சக்கரவர்த்தியின் உருவச்சிலை.—ஜார்ஜ் சக்கரவர்த்தியின் வெண்கல உருவச்சிலை ஒன்றைச் செய்துத் தருவித்து இச்சென்னையில் நாட்டுவதாக இச்சென்னை கனவான் திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் வாக்களித்திருந்தார். அவ்வுருவச்சிலையைச் செய்து தரும்படி லண்டன் சிற்பி மிஸ்டர் கிராஸ்லண்ட் மக்ளூர் (Mr. Crosland Maclure) கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார். அவ்வுருவச்சிலையைச் செய்ய 40,000 அல்லது 50,000 ரூபாய் பிடிக்குமென்று மதிப்பிடப்படுகிறது. அது செய்து வந்ததும் அச்சிலை பச்சையப்பன் காலேஜுக்கு எதிரில் பூக்கடை போலீஸ் ஸ்டேஷனை யொட்டிவைக்கப்படும்.

["விவேக போதினி" அனுபந்தம்]



பார்வதி (சிவன்)



ஸரஸ்வதி (ப்ரஹ்மா)



லக்ஷ்மி (விஷ்ணு)

Supplement to the "Viveka Bodhini"

விவேக போதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி V } பரீதாபி௵ பங்குனிமீ : 1913-௵ ஏப்ரல்மீ { பகுதி 10

உள்நாட்டம்

INWARDNESS

இந்த உள்நாட்டம் இரண்டுவிதமாகத் தொடங்கும். வெளிவிஷயங்களாகிய ப்ரபஞ்சசப்தாதிகளில் சென்று விழுந்து திண்டாடாமையாகிய இந்திரிய நிரோதமும், உள் விஷயங்களாகிய வெளிவிஷய அனுபவங்களால் ஏற்படும்பதிவுகளைக் கிளப்பி மனோராஜ்யம் செய்யாமையாகிய மனோநிரோதமும் ஆகிய இவைகளே. ஆகவே தேசகால நிமித்தாதீதப்பட்டு நிற்பதற்கு இந்திரிய நிரோதமும், மனோநிரோதமும் வேண்டும். மனோநிரோதம் எளிதில் கைகூடாதிருப்பதற்கு இந்திரிய மூலமாக ஏற்படும் விஷயானுபவ விசித்ரங்களாதலால் முதலில் இந்திரிய நிரோதத்தில் தொடங்கவேண்டும். இதற்கே வைராக்யம் என்றும் பெயர். பொதுவாக முதலில் நமக்கு ந்யாயமாக ஏற்படாத ஸுகவிஷயங்களில் மனதை இந்திரியங்கள் மூலமாகச் செல்லவொட்டாமல் பழக்கியும், நமக்கென்றேற்பட்ட விஷயங்களை அனுபவிக்குங்கால் அவைகளில் ஒருவித அஹங்காரம் மூல்வாராமலும் அனுபவித்துப் பழகவேண்டும். இதில் நமக்குத் தேர்ச்சிவருவதற்குப் பொதுவாக தகாதவிஷயங்களில்தோஷ திருஷ்டி (அதாவது நமதுபிரயத்தனங்களாகிய இந்திரிய மன அடக்கங்களை ஸரிவர செய்யவொட்டாது தடுத்தல், அவைகளிலிருந்து வரும் ஸுகங்களின்நிலையாமை, அதன் முன்னும் பின்னும் உள்ள துக்கரூபமான ஆசை, வெறுப்பு ஆகிய இவைகளைவிசாரித்தறிவதால் அவைகளை ஒதுக்கவேண்டும் என்றுஏற்படும் விருப்பு வெறுப்பற்ற திருஷ்டி) தகுதியான விஷயங்களில் பற்றின்மை (அவைகளின் அனுபவத்தில் அகங்காரமின்றிக் கலந்து ஏற்படும் நல்ல பலன்களைக் கடவுள் பாரமாக ஒதுக்கி நிற்றல்) ஆகிய இவைகள் வேண்டும். இது திடப்பட இந்திரியங்கள் தாமே அடங்கிக்கொண்டு வரும். ஆனால் மனம் அடங்கும் வரையில் இந்திரிய நிரோதம் பூரணமாகாது.

இதோடு நின்றுவிடாது மனோநிரோதமும் பழகிவரவேண்டும். இந்திரிய மூலமாக மனதிற்கு ஏற்படும் வெளி விஷய ஸம்பந்தத்தை எப்படி நீக்குகிறோமோ அப்படியே மனது தன்னுள்ளிருக்கும் எண்ணங்கள் வசமாகி ஓடிவிடாது காத்துப் பழகவேண்டும். இது தான் மனோநிரோதம் என்று கூறுவது. இதற்கு முற்கூறிய வைராக்யம் அதிக அவசியமன்று. இங்கு தொழில் செய்யும் கடமை நம்மை வந்து தாக்காது. கெட்ட எண்ணங்கள் நல்ல எண்ணங்களாகிய இரண்டு விதம்தான் இங்கு ஏற்படும். இவைகளுள் கெட்டஎண்ணங்கள் எல்லாவற்றையும் நல்ல எண்ணங்கள் ஸஹாயத்தால்வரவொட்டாது தடுத்து,நல்லஎண்ணங்களிலும் நம்மைத் தொழில் செய்யத் தூண்டும் பரோபகாராதி எண்ணங்களையும்நீக்கி, ஓய்ந்திருப்பதற்கு ஸஹாயமாகவிருக்கும் பகவத் ரூபகல்யாண குணத்தியானங்களைக் கடைப்பிடித்துநிற்கவேண்டும். இவ்வாறு உண்மையிலுள்ள பரம்பொருளை நம்மனதுக்கேற்ற இஷ்டதெய்வமாகப்பாவித்துப் பழகி மற்றவைகள் நல்லதாயினும் கெட்டதாயினும் மனதில் வரவொட்டாமலும், மனம் அவைகளில் பாய்ந்து போகுங்கால் எல்லாம் அதைமறுபடி சேம்பல், வெறுப்பு, பயம் முதலியவைகளுக்கு இடங்கொடாது இழுத்துவந்து இஷ்டதேவதா விஷயத்தில் செலவிடுவதற்கு அப்யாஸம் என்றும் பெயர். பரம்பொருளை எதாவது ஒருவிதமாகவும் ஸம்பந்தப்படுத்தாது ஏற்படும் இந்திரிய நிரோதமாகட்டும் மனோநிரோதமாகட்டும் பயன்படாது. இந்தப் பரம்பொருளை உள்ளபடி காண்பதாகிய முடிவான உள்நாட்டம் வந்தால்தான் இந்திரிய நிரோதமாகிய வைராக்யமும், மனோநிரோதமாகிய அப்யாஸமும் உள்ளபடி பூர்ணமாக நமக்கு இவைகளால்ஏற்படும் முழுஸுகமும்விளங்கும். இந்த இரண்டுவித நிரோதப் பழக்கத்தால் முறையே தேசமும் காலமும் நீங்கிவிட தூக்கத்தின் வசமாகாது விழித்துக் கொண்டிருக்கையிலேயே ஒருவாறு ஸுஷுப்திபோன்ற தேகஸம்பந்தமற்ற அனுபவம் நமது முயற்சியாலேயே ஏற்படும். தூக்கத்தில் போகுங்கால் இந்த நீக்கம் நமது முயற்சியின்றி ஏற்படுவதால் இந்நிலைகளின் ஸுகம் நன்றாக நமக்கு விளங்காது. இனிமேல் உள்நாட்டமுடிவாகிய நிமித்தமும் நீங்கிநிற்கும் நிலைகளாகிய அனுபவ அருடங்களைப்பற்றிப் பின்னர் சாஸ்திரங்களில் கண்டவாறு ஆராய்வோம்.

விவேக போதினி

தொ. 5.] பரீதாபி௵ பங்குனிமீ [பகுதி 10

திரிமூர்த்திகள்

THE HINDU TRINITY

ஸநாதனதர்மத்தைப் பின்பற்றுபவர்களாகிய நமக்கு மூன்று என்ற எண் மிகச் சிறந்தது. மும்மூன்றாக ஸம்பந்தப்பட்டுள்ள பொருள்கள் அநேகம். அவைகளில் சில, மூன்றுவேதங்கள், மூன்று குணங்கள், மும்மூர்த்திகள், மூன்று அவஸ்தை, மூன்று சரீரம், திரிபுடி, இதுபோன்றவைகளே. இம்மாதிரியாக உள்ள சாஸ்திர ரஹஸ்யங்களடங்கிய மூன்றன் கூட்டங்களை எல்லாம் அடக்கியுள்ளது, ஓம் என்ற ப்ரணவம் என்பதும், அதன் முடிவு த்வனியான அர்த்தமாத்திரை இவைகளுக்கெல்லாம் அப்பாற் பட்டு நிற்கும் மாறாப்பரம்பொருளைக் குறிக்கும் என்பதும் நமது வேதங்களின் துணிபு. இம்மாதிரியான சிறந்த கூட்டத்தில் சேர்ந்து நமக்குக் கடவுளை உள்ளபடி வழிபடுவதற்கு ஸஹாயமாக விருப்பது திரிமூர்த்திகளே. அவைகளில் ஏதாவது ஒன்றைப் பரம்பொருளேயாக மதித்து ஆராதித்து அதன் மூலமாகப்பரம்பொருளை உள்ளபடி உணர்ந்து மூர்த்தி யதீதமாக நிலைக்கப்பழகுவதுதான் விக்ரஹாராதனத்தினதும், வேதத்தில் நேரிட ப்ரதிபாதிக்கப்படும் ப்ரதீகாராதனத்தினதும் நோக்கங்கள்.

திரிமூர்த்திகளின் ஸ்வரூபத்தை முதலில் நன்கு ஆராய்வோம். ப்ரஹ்மா விஷ்ணு சிவன் என்பவர்களே திரிமூர்த்திகள்: இவர்களது தொழில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்பவைகளே என்பது எல்லோரும் அறிந்தவிஷயம். ஸாதாரணமாக எப்பொருளுக்கும் ஆதி மத்யம் அந்தம், அதாவது அடி நடு முடி என்ற மூன்று நிலைகளும் உண்டு. இது போலவே ப்ரபஞ்சத்திற்கும் தொடக்கம், வாழ்வு, அடக்கம் ஆகிய மூன்று நிலைகள் உண்டு. இவற்றிற்கு ஆதாரமாகவிருந்து நடத்திவைக்குங் கடவுளுக்குமுறையே ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் என்று பெயர். வேதாந்த சாஸ்திரத்தில் வர்ணிக்குங்கால் இவர்களை மூன்று குணங்களுடன் ஸம்பந்தப்பட்ட பரம்பொருள் என்றே கூறியுள்ளது. ஸ்ருஷ்டித் தொடக்கத்தில் பரம்பொருளது ஸந்நிதான விசேஷத்தால் ப்ரகிருதியில் ஸமப்பட்டு நிற்கும் ப்ரளய ஸ்திதியிலுள்ள குணங்களுக்குள் ஏற்றத்தாழ்வு ஏற்பட கலக்கமும் ஒன்றோடொன்று சேரும் கலப்பும் உண்டாயின. அதில் உயர்ந்த ஸத்வ குணத்தோடு மூன்று குணங்களும் கலக்க இதில் ராஜஸக்கலப்பில் ஸம்பந்தப்படும் பரம்பொருள் ப்ரஹ்மாவாகவும், ஸத்வக்கலப்பில் விஷ்ணுவாகவும், தாமஸக்கலப்பில் சிவனாகவும் ஏற்பட்டார் என்று விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் இவர்கள் விஷயத்தில் முக்குணங்கள் கலந்து தொழில் அவஸரங்கள் ஏற்பட்டபோதிலும், ஸத்வமே எல்லோருக்கும் ஓங்கி நிற்பதால் இவர்கள் தொழில் நடாத்தும் காலத்தும் மூலரூபமாகிய தமது பரம்பொருள் ரூபம் மறைபடாமலே இருக்க அதுவேயாகி நிற்கும் பரமநிலை இவர்களைவிட்டு அகலாது. ஆதலால்தான் பரமநிலையை இவர்கள் மூலமாக ஆராதித்தால், நாம் வாழ்க்கையில் எந்நிலையி லிருந்தபோதிலும் பரம்பொருளை இவர்களைப்போல உணரும் முடிவான நிலை நமக்கும் எளிதில் கைகூடும் என்பது நமது கொள்கை. இந்த ரஹஸ்யத்தை வற்புறுத்தவே புராணங்களில் ப்ரஹ்மாவுக்கு க்ரியாசக்தியாகிய ஸரஸ்வதியும், விஷ்ணுவுக்கு இச்சாசக்தியாகிய மஹாலக்ஷ்மியும், சிவனுக்கு ஞானசக்தியாகிய பார்வதியும் அமைக்கப்பட்டு க்ரியாசக்தி மறைவாக நாவிலும், இச்சாசக்தி ஏகதேசத்தில் மார்பிலும்

(மனத்திலும்), ஞானசக்தி பாதிதேஹத்திலும் பொருந்தியிருப்பதாகக் கூறி இவர்களுக்கு அப்பாற்பட்டும் இவர்களாகியும் நிற்கும்பரம்பொருள் முழுவதிலும் என்ன உள்ளது என்று மனம் விரியும்படியாகப் பொருத்தப்பட்டிருக்கிறது. மேலும் இம்மூன்று மூர்த்திகளும் தமது லோகங்களில் வேதார்த்தத்தில் ஈடுபடுதல், யோகநித்ரை, பரம்பொருள் தியானம் ஆகிய இவைகளில் அமைந்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஏற்பட்ட வாஹனங்களோ, பாலும் தண்ணீரும் கலந்திருந்தால், தண்ணீரை நீக்கிப் பாலைப் பருகும் குணமுடைய அன்னம், வேதஸ்வரூபமான கருடன், சமம், விசாரம், ஸந்தோஷம், ஸாதுஸங்கம் என்ற ஆத்ம குணரூபமான ரிஷபம் ஆகிய இவைகளே. இவைகளை எல்லாம் பார்த்தால் மூன்று மூர்த்தி ஆராதனைகளிலும் வேதரஹஸ்யங்களை நன்றாகக் கலந்து ஏதாவது ஒன்றைப் பின்பற்றியபோதிலும் முடிவாகிய பரம்பொருளைப்பற்றி நின்று மோக்ஷம் பெறும்படியான ஆற்றல் நமக்கு வரும்படியாகச் செய்திருக்கின்றனர் நமது பெரியோர் என்பது விளங்கும்.

இனி இந்த மூர்த்திகளை ஆராதிப்பதற்குச் சிறப்பாக வேண்டிய குணங்கள் நிலைகள் முதலியவைகளைப்பற்றி ஆராய்வோம். மூன்று மூர்த்தி தியானங்களாலும் சென்றடைய வேண்டிய ஒரே பொருளை ப்ரஹ்மா மூலமாக அடைவதற்கு முக்யமாக நமது அஞ்ஞான ஸ்வரூபம் நன்கு விளங்கவேண்டும். இந்த ப்ரஞ்ஞை இல்லாவிடில் இதற்குள்பட்ட ப்ரபஞ்சாதிகளில் உழலவேண்டியதுதான். நாம் எவ்வளவு கற்றவர்களாக இருப்பினும் கற்றது கையளவு, கல்லாதது கடலளவு என்ற உண்மையான பாவம் ஏற்படவேண்டும். பொதுவாக அறியாமையிலிருந்து அறிவைப் பெறப்போகும் பொழுதெல்லாம், இந்த அஞ்ஞானப்ரஞ்ஞை நமக்கு இருப்பதால்தான் ப்ரஹ்மா பெண்சாதியாகிய க்ரியாசக்தியான ஸரஸ்வதியை ஆராதிக்கிறோம். அப்பொழுது அஞ்ஞான நிஜஸ்வரூபம் பூர்ணமாக விளங்காது ஒருவாறு விளங்குவதால்தான் ப்ரஹ்மாவை நேரிட ஆராதிக்கும் சக்தியில்லாது ஸரஸ்வதியை ஆராதிக்கும்படி வருகிறது. ஆயினும் இது ப்ரஹ்மா ஆராதனையே. ஆனால் ப்ரஹ்மா ஆராதனம் உள்ளபடி இருப்பது வேதத்தில்; அவ்வாறு ஆராதிக்க அதிகாரிகள் ப்ராஹ்மணர்களே. சப்தரூபமாகிய வேதரஹஸ்யங்களை உணர்ந்து கர்மகாண்ட வழிகளில் யாகாதிக்ரதுக்கள் செய்து ப்ரஹ்மாவை ஆராதித்து உபாஸனாகாண்டவழிகளில் கர்மங்களை த்யானத்தால் செய்து ப்ரஹ்மாவை த்யானித்தால், அவர்நிலை ஒருவாறு ஏற்பட்டு அதில் ஞானகாண்ட ஒழுங்குபடி நமது அஞ்ஞானரூபம் உள்ளபடி விளங்க அது ஆசார்யராக ஏற்படும் ப்ரஹ்மாவாலேயே நீக்கப்பட்டு அவர் மூலரூபமான பரம்பொருளே யாகிநிற்கும் நிலைவரும். வேதத்தில் கூறப்படும் சப்த ப்ரஹ்மம், ஹிரண்யகர்பர், விச்வகர்மா ஆகிய ஆதியிலிருந்தவர் என்று கூறப்படுபவர் இந்த ப்ரஹ்மாவே. இந்த ப்ரஹ்மாவை ஆராதிக்கும் வழி வேதாத்யயனம் செய்வது, ப்ரஹ்மசரியாதி ஆச்ரம தர்மானுஷ்டானம், யாகாதிக்ரதுக்கள் செய்வது, அவைகளை த்யானத்தால் செய்வது, ப்ரஹ்மாவை ஆசார்யனாக மதித்து அடுத்து நிற்பது ஆகிய இவைகளே. வேதங்களில் ஸ்ருஷ்டிவிஷயங்கள் அநேக விதமாகக் கூறப்படுகின்றன. அவைகளில் 'எல்லாம் முதலில் ஒன்றிருந்தது: அது இரண்டுபட்டு அநேகமாக அவைகளுள் அந்த ஒன்று பாவிநின்றது. அந்த ஒன்றுக்கு நாமே இதெல்லாம் என்ற உணர்ச்சி வருங்கால் உள்ளபடி நிலைத்து ஓய்ந்து ஸுகம் எப்படி ஏற்படுமோ அதுபோல ஸ்ருஷ்டி எல்லாம் நானே என்று நிலைப்பவன் முத்திபெறுவன்' என்று ப்ரஹ்மாவுக்கு இருக்கும் ஸ்ருஷ்டி விசித்ர விஷய அனுபவத்தை எடுத்துக்காட்டி அந்தப்படி நாம் உணர்ந்து நிலைபெற அவரை பலவிதமாக வழிப்பட்டு அவரைப்போல முடிவில் நிஷ்டையில் நிலைக்கவேண்டும் என்று வேதங்கள் கோஷிக்கும். இவ்வாறு ஸ்ருஷ்டிகர்த்தா ரூபமான கடவுளுக்கு ப்ரபஞ்சம் எப்படி உள்ளபடி விளங்கித் தன்னிலை விளங்குமோ அதுபோல நமக்கும்

அவர் கருணையால் அம்மாதிரி விளங்கும்படி செய்துகொண்டு அஞ்ஞானம் முற்றிலும் நீங்கப் பெறவேண்டு மென்பதே ப்ரஹ்மா ஆராதனத்தின் உட்கருத்து.

ப்ரஹ்மா ஆராதனம் சுத்தமான ப்ரதீகோபாஸனையாக இருப்பதாலும், அவ்வாறு ஆராதிப்பதற்கு ஸஹாயமாக அக்னி ஸூர்யனாகிய கண்ணுக்குப் புலப்படும் ரூபங்கள் தொடக்கத்தில் ப்ரஹ்மா வழிபாட்டின் முதல்படிகளாக, யாகம் நித்ய கர்மானுஷ்டானாதிகளுள் வேதங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இந்தவித ஆராதனம் ப்ராஹ்மணஜாதிக்கே சிறப்பானது: மற்ற ஜாதிகளுக்கு இது பயன்படாமலிருந்தது. இப்படியிருக்கையில் 'எண்ண ரூபமான ப்ரதீகைகள் மூலமாகப் பரம்பொருளை ஆராதிக்கும் திறன் வரவர ப்ராஹ்மணர்களுக்கும் கால வித்யாஸத்தால் குறையும்படி நேரிடலாம். அவர்களுக்கும் ஒருவித ஸஹாயம் வேண்டும். மேலும் மற்றைய ஜாதியாருக்கும் பொதுவான வேதமுடிவை அடையும் ஆராதனா மார்க்கம் வேண்டும்' என்ற இரண்டுவித நோக்கங்களுடன் நமது ரிஷிகள் கருணைகூர்ந்து ப்ரதீகோபாஸனையை விஸ்தாரப்படுத்தி, கண்ணுக்குப் புலப்படும் ரூப ஆராதனைக்கு இடங்கொடுப்பதாகிய ப்ரதிமோபாஸனத்தை அதாவது விக்ரஹாராதனத்தை ஏற்படுத்தி வேதத்தில் ப்ரஹ்மா ஆராதனத்திற்கு ஏற்பட்ட ஒழுங்குகளை ஒருவாறு இதற்கேற்பமாற்றி ஆகம சாஸ்திரங்களாக அமைத்துவிட்டனர். மேலும் விக்ரகங்களை அமைப்பதிலும், அவைகள் அங்கங்கள் அமைப்புக்களிலும் வேதரஹஸ்யங்கள் வெளிப்படும்படி பொருத்தியும் விட்டுவிட்டனர். இந்த விக்ரஹாராதனத்தைப் பின்பற்றி வேதமுடிவை அடைந்த ஆழ்வார்கள், ஆசார்யர்கள், நாயனார்கள், மதாசார்யர்களாகிய. இவர்களுடைய அருள்வாக்கால் இந்தப்ரதிமாராதனம் திடப்பட்டு ஓங்கி இக்காலத்தில் மற்றவர்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் சிறந்த மோக்ஷமார்க்கமாக ஏற்பட்டுள்ளது. இக்காலத்தில் வேதப்பயிற்சி ப்ராஹ்மணர்களுள் வரவாக்குறைந்துகொண்டு வந்து விட்டபடியால் விக்ரஹாராதனமே எல்லோருக்கும் வேதமுடிவை அடைவதற்குச் சிறந்த வழியாகிவிட்டது. (இந்த விஷயம் விக்ரஹாராதன வ்யாஸங்களில் நன்கு எடுத்து விளக்கப்பட்டது).

விக்ரஹங்கள் மூலமாக ஆராதிக்கும் மூர்த்திகள் சிவ விஷ்ணுக்களும் அவர்களது அவஸர அவதார ரூபங்களுமே. இவர்கள் நீங்கலாக மற்றைய தாழ்ந்த தேவதைகளும், மற்றைய மதத்தில் வணங்கப்படும் தேவதைகளும் விக்ரஹரூபமாக ஆராதிக்கப்படுகின்றன. ப்ரஹ்மாவும் வேதத்தில் கூறிய ரூபப்படி அபூர்வமாகச் சில இடங்களில் ஆராதிக்கப்பட்டும் வருகிறது. கன்னியாகுமாரிக்கடுத்த சுசீந்திரம், ஈரோட்டிற்கு அடுத்த கொடுமுடி, புஷ்கரம் என்ற க்ஷேத்ரம் ஆகிய இவைகளில் ப்ரஹ்மா கோவிலிருக்கின்றன. இப்படி இருப்பினும் விக்ரஹாராதனை செய்யும் பரதகண்டவாஸிகள் எல்லோரும் சைவர் வைஷ்ணவர்கள் என இரண்டு பாகங்களாகவே பிரிந்து நிற்பர். விஷ்ணு சிவரூபமாகப் பரம்பொருளை ஆராதிப்பதற்கு முக்யமாக நம்மிடமிருக்க வேண்டிய குணங்கள் என்ன என்ற கேள்வி பிறக்கும். விஷ்ணு ஸ்திதிகர்த்தாவாதலால் நமக்கு வாழ்க்கைக் குழப்பம் விசித்ர முதலியவைகளுடைய உணர்ச்சி நன்றாக இருத்தல்வேண்டும். அப்பொழுதுதான் இந்த மாறுபாடுகளுள் பரவி நின்று எல்லாவற்றையும் ஒழுங்கு தவறாது நடத்திவரும் விஷ்ணுவின் சிறப்பில் பரவசமாக ஈடுபட்டு மனம்குளிர்ந்து அவராகநிற்கும் பரம்பொருளிடம் மனம் செல்லும்: விஷ்ணு ஆராதனம் உள்ளபடி ஏற்படும். சிவனை உள்ளபடி ஆராதிப்பதற்கு அவர் ஸம்ஹார கர்த்தாவாக இருப்பதற்கு ஏற்ப, உலக நிலையாமை வெளி ப்ரபஞ்ச வாழ்க்கையின் பயனில்லாமை ஆகிய இவைகள் உணர்ச்சியால் ஏற்படும் வைராக்யம் முக்யமாகவேண்டும். இந்த முக்ய நோக்கங்களை முன்னிட்டே விஷ்ணு கோயில்களில் உத்ஸவகோலாஹலங்கள், அலங்காரங்கள், விநியோகங்கள், உத்ஸவாதிகளில் ஆராதிப்பவர்கள் செய்துகொள்ளும் அலங்கார அழகுகள், பக்தி

விஷய பஜனாதிகள் இவைகள் ஏராளமாக அமைக்கப்பட்டுள்ளன. சிவன் கோயில்களிலோ ஆடம்பரமின்மை, நியமங்கள், சிவஸொத்தைத் தொடாமை, த்யானம், ஞானம், சாந்தம் முதலிய வைராக்ய விஷயங்கள் ஆகமங்களால் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ப்ரஹ்மாவின் ஆராதனத்திற்கு அறியாமையின் உணர்ச்சியும், விஷ்ணு ஆராதனத்திற்கு ஸ்ருஷ்டி விசித்ர உணர்ச்சியும், சிவாராதனத்திற்கு வாழ்க்கை நிலையாமை உணர்ச்சியும் ப்ரதான மனோபாவங்களாக விருக்க வேண்டும் என்று தெரியவரும். இதைமாத்திரம் கொண்டு நோக்கில் ப்ரஹ்மாராதனம் ப்ரஹ்மசாரிக்கும், விஷ்ணு ஆராதனம் க்ருஹஸ்தனுக்கும், சிவாராதனம் வானப்ரஸ்தனுக்கும் தகுந்தவைகள் என்றும், ஸந்யாஸி இவைகளுக்கு அப்பாற்பட்டு இவைகளாக ஆராதிப்பவர்களுக்குத் தோன்றும் பரம்பொருளை நேரிட ஆராதிக்க வேண்டும் என்றும் தோன்றும். ஆதலால் மனிதனுக்கு ஆச்ரமபேதம் ஏற்பட ஆராதிக்கும் ரூபம் மாறவேண்டும். இம்மாதிரி ஆராதனா ரூபம் மாறுவது ஸகுணபக்தி த்யானாதிகளை நிலைக்கவொட்டாது கலைத்துவிடும் என்று கருதியே ஒவ்வொரு மூர்த்தி யாராதனத்திலும் பெரியோர் மூன்று மூர்த்தி ஆராதனத்தையும் கலந்து மூன்றிற்கு அப்பாற்பட்ட பரம்பொருளையும் ஒவ்வொரு வழியிலும் காட்டி இந்த மூன்றுவித ஆராதனைகளை அமைத்திருக்கின்றனர். வேதங்களில் கூறப்பட்டுள்ளது ப்ரஹ்மா மூலமான பரம்பொருளாராதனமாக விருப்பினும், அதில் முற்கூறிய மூன்று உணர்ச்சிகள் அமைந்து ஈடுபட்டு அப்பாற்பட்டு நிற்க வேதங்களில் வழி கூறியுள்ளது என்று நாம் கூறவும் வேண்டுமோ? இம்மாதிரியே தான் சைவ வைஷ்ணவங்களிலும் என்பது புராணங்களிலிருந்தே ஸ்தாபிக்கலாம். விஷ்ணு அவதாரமாகிய ராமர் ராவணாஸம்ஹார காலத்திலும், ஹிரண்ய ஸம்ஹார காலத்தில் நரஸிம்ஹரும், சிவாம்சங்களைக் கொண்டார்கள் என்றும், ஸ்ருஷ்டி காலத்தில் பரம்பொருள் ப்ரஹ்மாம்சத்தைக் கொண்டதென்றும் விஷ்ணு புராணங்களிலும் இதுபோல, சிவ புராணங்களில் சிவன் மற்ற மூர்த்திகள் அம்சம் கொண்டார்என்றும் உண்மையான சிவ விஷ்ணுக்கள் இவைகளுக்கு அப்பாற்பட்டவை என்று தொனிக்கும்படி சொல்லியுள்ளது. மேலும் ஒரேநிலை ப்ராஹ்மணர்களுக்கு ப்ரஹ்மலோகமாகவும், வைஷ்ணவர்களுக்கு வைகுண்டமாகவும், சைவர்களுக்கு கைலாசமாகவும், இருக்க இந்த ஸ்தானங்களில் ப்ரஹ்மா விஷ்ணு சிவர்கள் தமது மூலரூப நிஷ்டையிலேயே நிலைபெற்றிருந்து ஸந்நிதான மாத்திரத்தில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதிகள் நடைபெறச் செய்கின்றனர் என்றும் வேதாதி புராணங்கள் கூறும். இவைகளை உற்று நோக்கில் மும்மூர்த்தி ஆராதன ஒழுங்கு ஒவ்வொன்றும், பின்பற்றுவோர்களுக்கு முற்றிலும் பயன்பட்டுவருவதற்காக மற்றைய மூர்த்தி ஆராதனா ஸாரங்களையும் அடக்கியுள்ளது என்பது விளங்கும். இதனால்தான் விஷ்ணு சிவன் கோயில்களில் ஆராதிக்கப்பட்டுவரும் மூலஸ்தான உத்ஸவ விக்ரஹங்கள், ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களாகிய விஷ்ணு சிவர்களல்ல. முத்தொழில் கர்த்தர்களாகிய ப்ரஹ்மா, விஷ்ணு, சிவனுமாகி, அவர்களுக்கு அப்பாற்பட்டு உள்ள பரம்பொருளே. இப்படி இருப்பினும் பரம்பொருள் சிவ விஷ்ணு மூலமாக ஆராதிக்கப்படுவதால் ஆசாரம் ஒழுங்கு மனோபாவனை ஆகிய இவைகளில் சற்று மாறுபாடுகள் காணப்படும். வேதத்தில் கூறப்படும் ப்ரஹ்மாவும் இப்பரம்பொருளே என்று கூறவும் வேண்டுமா? இதற்கேற்பவே இந்தத் திரிமூர்த்தி அதீதமாக ஆராதிக்கும் பரம்பொருளுக்கு அந்த மூர்த்தி ஆராதனா க்ரமத்தில் பரப்ரஹ்மம், பரவாஸுதேவன், பரமசிவன் என்றும் பெயர்கள் பொருத்தப்பட்டுள்ளன. இம்மூன்றும் ப்ரஹ்மஸூத்ரத்தில் தடஸ்தலக்ஷணத்தால் விளக்கப்பட்டு 'ஜன்மாத்யஸ்யயத:' (ஸ்ருஷ்டியாதிகள் எதிலிருந்து வெளிப்படுகின்றவோ) என்ற ஸகுணப்ரஹ்மமே. இன்னும் வேதரஹஸ்ய மூலமாக ஊன்றி நோக்கில் ஸச்சிதானந்தம் என்ற

ஸ்வரூப லக்ஷண மூலமாக விளக்கப்படுவதும், அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற அனுபவலக்ஷணமூலமாக விளக்கப்படுவதுமான பரம்பொருளையும் இவை குறித்துக்காட்டி, அதனுள் கரைந்து உருவிழுந்து நிற்கும் ஸ்வபாவமுடையவர்களுக்கும் இந்த மும்மூர்த்தி ஆராதன மூலரூபம் இன்னது என்பதை விளக்காமல் போகாது.

இம்மாதிரியாக மும்மூர்த்தி ஆராதன ரஹஸ்யத்தைக் கொண்டே ப்ரஹ்மாராதனையிலிருந்து பரப்ரஹ்ம நிஷ்டையாகி ஞானகாண்டம் விஷயம் வெளிவந்திருக்கிறது. மேலும் வேதத்தில் பரம்பொருளை விருஞ்சி நாராயண சங்கரஸ்வரூபி என்று வர்ணித்திருக்கிறது. அவைகளிலிருந்து ஏற்பட்டவைகளான ஸந்தியா வந்தனத்திலும் மூன்று மூர்த்திக்குப் பேதங்கல்பிக்காது எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட பொருளையே அமைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரஹ்மா ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைநோக்கி 'நானும் விஷ்ணுவும் சிவனும் அடிமரம்போன்ற உமக்கு மூன்று கிளைகளே' என்று துதிக்கிறார். இந்த மூர்த்தியாராதன ஸமரஸத்தைத்தேர்ந்த சைவ வைஷ்ணவர்களும் பின்வருமாறு எடுத்து வெளியிடுகின்றனர்.

தானே ருருவே தனிவித்தாய்
தன்னில் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்
தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி அதனுள் கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன்
வைகுந்தனெம் பெருமானே.

—நம்மாழ்வார்

மேவரு ஞான னந்தவெள்ளமாய் விதித்தோனுதி
மூவரு மாகியந்த மூவர்க்கும் முதல்வனாகி
யாவரும் யாவுமாகி யிறைஞ்சுவா ரிறைஞ்சப்படுபல்
தேவரு மாகின்ற செங்கண்மா லெங்கள்கோவே.

—வில்லிபுத்தூர் ஆழ்வார்.

ஆக்குமா றயனுமுத லாக்கிய வுலகம்
காக்குமா றுசெங்கண் ணிறைக்கருணையங் கடலாம்
வீக்குமாற ரனுமவை வீந்தநாள் மீளப்
பூக்குமா முதலெவ னவன் பொன்னடிபோற்றி.

—வில்லிபுத்தூர் ஆழ்வார்.

சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகிச்
செழுஞ்சுடராய்த் தீயாகி நீருமாகி
* * * * *

தவனாய தலையாலங்காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கினேனே.

—அப்பர்ஸ்வாமிகள்

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையா ரவர்
தலைவ ரன்னவர்க்கே சரண் நாங்களே.

—கம்பர்

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக்
கேதுவாம் அயனாய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே
யநந்த மூர்த்தியுமாய் நிற்கும்
மூன்றமுத் தனுமாய் இன்பப்
புணியா தவனாய் நாளும்
தோன்றிய விமலபோத
சொரூபத்தைப் பணிகின்றேனே.

—தாண்டவராய ஸ்வாமிகள்.

* * * * உயிர்காள்

உணர்ந்துணர்ந் துரைத்துரைத்
தரியயனரனென்னுமிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்
திறைஞ்சுமின் மனபட்டதொன்றே.

—நம்மாழ்வார்

ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள்
நன்றெழில் நாரணன் நான்முகனரனெனுமிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் இருபசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைநாளே.

—நம்மாழ்வார்.

அவாவறச் சூழரியை யயனை யரனை யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்சடகோபன்சொன்ன
அவாவி லந்தாதிக ளாயிரமும் முடிந்த
அவாவி லாந்தாதி யிப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே.

மும்மூர்த்தி ஆராதனஸமரஸம் உணராது ஒரு மூர்த்தியை வழிபடும் மூர்க்கனிடம் ஸ்தாத்வேஷமும், மனக்குறுக்கமுமே இருக்கும். மற்றைய மூர்த்திகள், அந்த உபாஸகர்கள் இவர்களைக்கண்டுவிட்டால் மனக்கொதிப்புகோபம் வெறுப்பு முதலி

யனவே அவன் மனதில் நிறைந்துவிடும். விக்ரஹாராதனத்தின் கெட்ட பாகங்கள் எல்லாம் இவனிடம் குடிகொண்டுவிடும். மும்மூர்த்தி ஆராதன விஷயத்தில் ஓரே மூர்த்தியை மேலாகக் கருதி த்யானித்துப் பின்னர் எல்லா மூர்த்தியையும் தன் மூர்த்தியாகப் பாவித்து வழிபட்டு ஸகுணத்யானத்தில் முதிருவதற்காக ஏற்பட்டிருக்கும் பாஹ்ய அனந்ய பக்திகளை, இந்தக் குதர்க்கன் அதோகதியடையும் வழிகளாக மாற்றிக்கொண்டுவிடுவான். இதனால் அவன் தன் மூர்த்தியே கடவுள், மற்ற மூர்த்திகள் எல்லாம் அஞ்ஞானிகள் மூடத்தனத்தால் ஏற்படுத்தும் கல்மண் செம்பு முதலிய லோகங்களே, தன்வழி நல்லது பிறது பொய்மதம் என்ற மனக்குறுக்கத்தைப், பெரியோர் சித்த ஒருமை ஏற்பட அமைத்திருக்கும் இஷ்டதேவதாத்யயன மூலமாக, உண்டாக்கிக்கொள்ளுவான், இந்த குதர்க்கன். அனந்ய பக்தியை மற்றைய தேவதைகளை ஆராதிக்காது தன்னதையே ஆராதன யோக்கியமாக மதித்து மற்றவைகளைக் கண்டால் விஷத்தை வெறுப்பதைப்போல வெறுத்து ஒதுங்கவேண்டும் என்று பொருள் படுத்திக்கொண்டு விபரீத ஞானத்துடனிருப்பன். ப்ரஹ்மா ஆராதனத்தை முக்யமாகக் கொண்ட ஸமரஸ புத்தியில்லாத மூர்க்கர்களுக்கு வேதத்தை பொட்டை உருப்போடுவதில் புத்தி போக அவ்வாறு செய்யாத மற்றவர்கள் பாபிகள், அர்த்தம் பார்ப்பவர் அதிக ப்ரஸங்கிகள் என்ற கொடிய தொழிலும் எண்ணமும் வீண் கர்வமுமே கதி. இதற்கு இக்காலத்திய ப்ராஹ்மணர்கள்தான் உதாரணம். நிஜபக்தியும் இல்லாதுவேதபாராயணமும் இல்லாது போக அவர்களுக்கு அதோகதி வரப்பார்க்கிறது. விஷ்ணு ஆராதனத்தை மூர்க்கமாகப் பின்பற்றுபவர்களுக்கு லௌகிக விஷயப் பற்றும், வேதம் அனாவசியம் என்ற எண்ணமும் அதிகப்படும். சிவனையே மூடமாகப் பின்பற்றுபவர்களுக்கு வேதத்வேஷம், ப்ராஹ்மணத்வேஷம், திடமில்லாவைராக்யம், வெளிவேஷம் முதலியன திடப்படும்.

இந்த ஆராதனையில் ஏதாவது ஒன்றை முற்கூறிய ஸமரஸ உணர்ச்சியை இழக்காமல் பின்பற்றினால் மூன்று ஆராதனையின் சிறப்புக்களும் நமக்கு ஏற்பட இவைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் பரம்பொருளை உள்ளபடி உணர்ந்து நிலைக்கும் பரமபதமும் கிடைக்கும்.

இந்திய ராஜாங்கம்

(1) சென்னை சட்ட நிரூபண சபை

MADRAS LEGISLATIVE COUNCIL

(அமைப்பு)

(i) ராஜ அதிகாரிகள் Ex-Officio 4	கவர்னர்		... ...	1
	நிர்வாக அதிகாரிகள்		... ...	3
(ii) உதவி மெம்பர்கள். Additional Members 45	உத்தியோகஸ்தர்கள் 19		... ...	19
	உத்தியோகமில்லாதவர்கள்	ஸர்க்கார் நியமனம் 5	... ...	5
		எலெக்ஷன் 21	ஜில்லா வகுப்புக்கள் (பொது)	9
			தனி	7
			சங்கங்கள்	5
				49

ராஜாங்க அதிகாரிகள். Ex-Officio		உதவி சபையார் 45.							
		உத்யோகஸ்தர்கள் ஸர்க்கார் நியமனம்.	உத்யோகமல்லாதவர்கள்.						
			ஸர்க்கார் நியமனம்	எலெக்ஷன் 21.					
				பொது 9.		தனி 7.			சங்கங்கள். 5
				வகுப்புகள் 9.	ஜில்லாக்கள்.	பூஸ்வான்தார் கள் 3.	ஜமீன்தார் கள் 2.	மகமதியர் 2.	
கவர்னர் 1.	நிர்வாக சபையார் 3.	ஸர்க்கார் வக்கீல் 1 உத்யோகஸ்தர்கள் 16 நிபுணர் 2 உத்யோகமில்லாதவராயுமிருக்கலாம்.		1. 2. 3. 4. 5. 6. 7. 8. 9.	சஞ்சம் விசாகபட்டணம் கோதாவரி கிருஷ்ணா குண்டூர் நெல்லூர் கடப்பை சித்தூர் கர்னூல் பல்லாரி அனந்தபூர் வட ஆற்காடு செங்கற்பட்டு தென் ஆற்காடு சென்னப்பட்டணம் சேலம் கோயம்புத்தூர் நீலகிரி அஞ்சேங்கோ தங்கசேரி உள்பட மலையாளம் தென்கன்னடம் தஞ்சாவூர் திருச்சிணாப்பள்ளி மதுரை ராமநாதபுரம் திருநெல்வேலி	1. வடபாகம். 2. தென்பாகம் 3. மேல்பாகம்	1. வடபாகம் 2. தென்பாகம்	1. வடபாகம் 2. தென்பாகம்	1. சென்னை சர்வகலாசபை 2. சென்னை நகர பரிபாலன சபை (Municipal Corporation) 3. சென்னை வியாபார சபை (Chamber of Commerce) 4. சென்னை வர்த்தக சங்கம் (Madras Trades Association) 5. தோட்டக்காரர் சங்கம்.
	4	19	5		9	3	2	2	5

எலெக்டர்களுக்கும் மெம்பர்களுக்கும் வேண்டிய யோக்யதாம்சங்கள்

பொது எலெக்ஷன்களுக்கு அடியிற்கண்ட பொதுவிதிகட்குட்பட்டு, யாராகிலும், எலெக்டர்களாகவாவது, அல்லது மெம்பர்களாகவாவது ஆகலாம்.

ஒவ்வொரு வகுப்பினர்க்கும் சொல்லப்பட்ட விசேஷ யோக்யதாம்சங்களுடையவர்களே அவ்வவ்வகுப்பு எலெக்டர் அல்லது மெம்பர்களாக இருக்கக்கூடும்.

பொது விதிகள்

எலெக்ஷனுக்கு யோக்யதை யில்லாதவர்கள்

1. ப்ரிடிஷ் ப்ரஜையாயில்லாதவர்.
2. ஸர்க்கார் உத்தியோகஸ்தர்.
3. ஸ்திரீகள்.
4. புத்திமாருட்ட முள்ளவர்கள்.
5. 25 வயதுக்குட்பட்டவர்.
6. பாபர்கள்.
7. ஸர்க்கார் உத்தியோகத்திலிருந்து தள்ளு தண்படி (Dismiss) ஆனவர்கள்.
8. ஆறு மாதத்துக்குமேல்பட்ட க்ரிமினல் டனை யடைந்தவர்கள்.
9. வக்கீலாயிருந்து ஸந்நத் பரிஹரிக்கப்பட்டவர்கள்.
10. இதர காரணங்களால் லாயக்கில்லையென்று கவர்னர் ஜனரல் சபையோரால் அபிப்பிராயப் படப்பட்டவர்கள்.

குறிப்பு :—ஆனால், 7,8,9,10வது லக்கங்களில் குறிப்பிடப்பட்ட தகுதியின்மைகள், கவர்னர் ஜனரல் ஸபையோரால் நிவர்த்திக்கப்படலாம்.

எலக்டர்களாயிருக்க லாயக்கில்லாதவர்கள்

1. ஸ்திரீகள்.
2. மைனர்கள்.
3. புத்திமாருட்ட முள்ளவர்கள்.

விசேஷ யோக்யதாம்சங்கள்

i பொது எலெக்ஷன் (அதாவது ஜில்லா வகுப்புகள்) 9

ii தனி எலெக்ஷன் { ஜமீன்தார்கள் 2, இதரபூஸ்திதிக்காரர் 3, மகமதியர் 2 } 7

iii சங்கங்கள் { சென்னை நகரபரிபால சபை 1, சென்னை சர்வகலா சபை 1, சென்னை வ்யாபார சபை 1, சென்னை வர்த்தகர் சங்கம் 1, தோட்டக்காரர் சங்கம் 1 } 5

ஆகமொத்தம் 21

i பொது எலெக்ஷன் அல்லது ஜில்லா வகுப்புக்கள்.

விசேஷ யோக்யதாம்சங்கள்

(1) பொது யோக்யதாம்சங்கள் உடையவர்களா யிருக்கவேண்டும்.

(2) அந்தந்த வகுப்பிலிருப்பவர்கள்.

(3) சபை.

(a) ப்ராக்ருதத்தால் ஜில்லா சபை மெம்பராகவாவது, தாலூகா சபை மெம்பராகவாவது, நகர (முனிஸிபல்) சபை மெம்பராகவாவது.

(b) 10-வருஷத்துக்குள், 3-வருஷகால அளவுக்குக் குறையாமல் மேற்கண்ட மெம்பராகவாவது,

(c) அல்லது ராவ் ஸாஹிப் பட்டத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகளாகவாவது, ஸ்டார்-ஆவ்-இந்தியா, அல்லது இந்தியன் எம்பையர் என்ற கௌரவ மெம்பர்களாகவாவது கேஸர்-இ-ஹிந்த் மெடல் பெற்றவர்களாகவாவது இருக்கவேண்டும்.

குறிப்பு.—ப்ராக்ருத மெம்பர்கள் என்றால் எலெக்ஷன் வருஷ ஜூன்மீ 30உ தயாராகும் அட்டவணையில் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டும்,

ii தனி எலெக்ஷன் (Special)

1 ஜமீன்தார்கள்	வடபாகம், தென்பாகம்	2
2 பூஸ்திதிக்காரர்கள்	வடபாகம், தென்பாகம், மேல்பாகம்	3
3 மகமதியர்	வடபாகம், தென்பாகம்	2
	ஆகமொத்தம்	7

(1) ஜமீன்தார்கள்

யோக்யதாம்சங்கள்

(1) பொது யோக்யதாம்சங்களுடையவர்களா யிருக்கவேண்டும்.

(2) அந்தந்த எலெக்ஷன் மாகாணவாஸிகளா யிருக்கவேண்டும்.

(3) (a) * வருஷம் ஒன்றுக்கு 3,000 ரூபாய்க்குக் குறையாத பூஸ்திதி வருமானம், அல்லது (b) 3,000 ரூபாய்க்குக் குறையாத ஸர்க்கார்மானிய வருமானமுடையவரா யிருக்கவேண்டும்.

2. இதர பூஸ்திதிக்காரர்கள்

யோக்யதாம்ஸங்கள்

1. பொது யோக்யதாம்சங்களுடையவர்களா யிருக்கவேண்டும்.

2. அந்தந்த மாகாண வாஸிகளா யிருக்கவேண்டும்.

3. வருஷம் ஒன்றுக்கு 1000-ரூபாய்க்குக் குறையாத பூஸ்திதி வருமான முடையவர்களா யிருக்கவேண்டும்.

குறிப்பு.—1. ரயத்வாரி நிலங்களால் 500-ரூபா கிஸ்திசெலுத்துவோர்களும்,

2. இனாம் பூமிகளில், நிலவரி 1000-ரூபாய்க்கு (Land cess) செலுத்துவோரும் 1000-ரூபாய் வருமானக்காரராய் மதிக்கப்படுகிறார்கள்.

3. மகமதியர்

யோக்கியதாம்சங்கள்

1. பொது யோக்யதாம்சங்கள் உடையவர்களா யிருக்கவேண்டும்.

2. அந்தந்த எலெக்ஷன் மாஹாண வாஸிகளா யிருக்கவேண்டும்.

3. விசேஷ யோக்யதாம்சங்கள்.

1. சென்னை ராஜதானிக்குள் 500-ரூபாய்க்குக் குறையாத பூஸ்திதி வருமான முடையவர்கள் அல்லது,

2. முன் வருஷம், 2000 ரூபாய்க்குக் குறையாத தொகைக்கு வருமானவரி (இன்கம் டாக்ஸ்) செலுத்தியவர்கள், அல்லது,

3. சென்னை சர்வகலாசபை மெம்பர், அல்லது,

4. ஸ்டார் ஆப் இந்தியா அல்லது இந்தியன் எம்பயர் ஆர்டர், முதலான பட்டங்கள், அல்லது கேஸர் இ ஹிந்தி மெடல் பெற்றவர்கள், அல்லது

5. மாதம் 15-ரூபாய்க்குக் குறையாத பென்ஷன் பெறுபவர்கள்.

சில முக்கிய விஷயங்கள்

1. காலம்.—நியமனகாலம் முதல் 3 வருஷங்கள் மெம்பர்களாயிருக்கலாம்.

2. மறு எலக்ஷன்.—பழைய மெம்பர் மறுபடி நியமனமாகலாம்

3. ஸபாநாயகர்.—கவர்னர், அல்லது அவர் இல்லாத காலத்தில், முதல் நிர்வாக அதிகாரி.

4. ப்ரேரேபணைகள்.—அனுமதியின் பேரில் எந்த மெம்பர் வேண்டுமானாலும் புதிய சட்ட மசோதா (Bill) ப்ரேரேபிக்கலாம்.

5. தீர்மானங்கள் (Resolutions)—ராஜாங்க விஷயங்களைப்பற்றி அபிப்ராய ரீதியாய், (in the form of resolutions) சில தீர்மானங்கள் செய்யலாம்.

6. கேள்விகள்.—ராஜாங்க விஷயங்களைப் பற்றி மெம்பர்கள், கேள்விகள் கேட்டு விடை தெரிந்துகொள்ளலாம்.

R. S. நாராயணஸ்வாமி அய்யர், B.A., B.L.

* குறிப்பு :—இதர பூஸ்திதிக்காரர்கள். சென்னை ராஜதானியிலுள்ள பூஸ்திதிக்காரர், சென்னை சட்டசபை எலெக்ஷன் நிமித்தம் இருபிரிவினராய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள் :—அதாவது

பூஸ்திதிக்காரர் { ஜமீன்தார்கள் / (ஜமீன்தாரர்களைத் தவிர) மற்ற பூஸ்திதிக்காரர்கள்.

காப்பிச் செடி

COFFEE PLANT

முன்னாளில் நமது பெரியோர்களுக்குப் பிராதஸ்நாநம் எவ்வளவு பதிவாக ஏற்பட்டிருந்ததோ, அதைப்போல நமக்கு இக்காலத்தில் காப்பி குடிக்கும் வழக்கம் பதிவாகிவிட்டது. சில பேருக்குக் காப்பி குடிக்காவிட்டால் தலைவலி வந்துவிடும். இப்படி ஸர்வ ஜனங்களும் காப்பி குடிக்கத் தொடங்கினதினால் பெரிய நகரங்கள் மட்டுமன்றிச் சிறிய குக்கிராமங்களில்கூட காப்பி ஹோட்டல்கள் நிறைந்துவிட்டன. இதன் காரணமாக நல்ல பால் கிடைக்காமல் போவதைப்பற்றி யாவது, காப்பி குடிக்கும் வழக்கம் கெட்டதா நல்லதா என்பதைப்பற்றியாவது நாம் இங்கு பேச வரவில்லை. காப்பிச்செடி இன்னதென்பதையும் காப்பிக்கொட்டை யுண்டாகும் விதத்தையுமே கூறுகிறோம்.

காப்பிச் செடி அபிஸீனியாநாட்டுக்குச் சொந்தமான வோர் செடியென்று தெரிகின்றது. அங்கிருந்து அது அரேபியா நாட்டுக்குக் கொண்டு போகப்பட்டு விசேஷமாகப் பயிரிடப்பட்டு வந்தது. மெக்காவுக்கு யாத்திரை போயிருந்த பாபா புதன் என்னும் முகம்மதிய சீமான் ஒருவரால் அது நமது நாட்டில் சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்னால் மைசூர் தேசத்துக்கு முதன் முதலில் கொண்டுவரப்பட்டதாம். 250-வருஷங்களுக்கு முன்னால் நமது நாட்டில் யாத்திரை செய்த டாவர்னியர் என்னும் ஐரோப்பியர் தாம் பார்வையிட்ட காப்பித் தோட்டங்களைப் பற்றியெல்லாம் விரிவாக எழுதி வைத்திருக்கிறார். கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கல்கத்தாவுக்குச் சமீபித்த கிராமங்களில் காப்பிச்செடி பயிரிடப்பட்டது. 1860-ம் வருஷம் முதற்கொண்டுதான் ஏராளமாய்ப் பயிர் செய்யப்பட்டது. மைஸூர், குடகு, திருவாங்கூர், வைநாடு, நீலகிரி, சேர்வராய மலை ஆகிய இடங்களில்தான் காப்பிச்செடி நன்றாய்ப் பலன் கொடுக்கின்றது. என்றாலும் வர்வர அத்தொழில் க்ஷீணிக்கின்றதென்றே சொல்லவேண்டும். பிரஜீல் நாட்டுக்காப்பி தலையெடுத்து யூரோப்பியாவுக்கு ஏராளமாக ஏற்றுமதியாகிறபடியால் அதனுடன் இந்திய நாட்டுக் காப்பி போட்டி போட முடியாததுதான் மேற்கூறிய க்ஷீணத்துக்குக் காரணம்.

காப்பிச்செடி அநேகம் கிளைகளுள்ள வோர் அடர்ந்த செடியாகும். சாதாரணமாக அது 15 அல்லது 20 அடி உயரம் வளரும். புஷ்பங்கள் வெண்மையாகவும் நாரத்தைப் பூப்போலவும் இருக்கும். பழம் முதிரமுதிர சிகப்பு நிறமாக மாறும். ஒவ்வொரு பழத்திலும் ஒன்றோடொன்று நெருங்கிய இரண்டு விதைகளுண்டு. காப்பிச்செடியில் அநேக தினுசுகள் இருந்தாலும் இந்தியாவில் விசேஷமாய்ப் பயிரிடப்படுவது அரேபியா தினுசாம். லைபீரியன் தினுசுக் காப்பியும் கொஞ்சம் கொஞ்சம் பயிரிடப்படுகின்றது.

சாதாரணமாக நீர்மட்டத்துக்கு 2000 அடி முதற்கொண்டு 5000 அடி வரையிலுமுள்ள உயரமான விடங்களில் காப்பிச்செடி நன்றாக வளரும். வருஷமொன்றுக்கு 70 முதல் 90 வரையுள்ள அங்குல மழை வேண்டும். நன்றாய் நீர் வடியத்தக்க சாய்வான விடங்கள்தான் சிலாக்கியம். சமமான நஞ்சை நிலங்கள் உபயோகமற்றவை. ஈரந்தாங்கக்கூடியதாயும் போதுமான ஆழமுள்ளதாயும் நிலமிருக்கவேண்டும். இவ்வித குணங்களெல்லாம் புதிதாக வெட்டித் திருத்திய காட்டுப் பிரதேசங்களிலிருக்குமாதலால் அவைகளே சிறந்த பூமியென்று கருதப்படுகின்றது.

விதைப்பதற்கு வேண்டிய கொட்டைகளை நன்றாய் முற்றியவைகளினின்றே பொறுக்கி யெடுப்பார்கள். ஏழுவருஷமுதல் பத்துவருஷம் வரையில் வளர்ந்த செடிகளிலிருந்துதான் இவ்விதம் முற்றிய விதைகள் எடுக்கப்படும். இவ்விதைகளுக்கு முளையுண்டாகும் காலம் வெகு சீக்கிரத்தில் கடந்துவிடுமாதலால், எடுத்த விதைகளை

நெடுநாளைக்கு வைத்திருக்கக்கூடாது. விதை போடுவதற்கு ஏற்ற காலம் பிப்ரவரி மாதமாம். தகுந்த பாத்திகள் தயார்செய்து அதில் விதைகளை நெருக்கமாகப் போட்டு, பழைய கோணிச் சாக்குகளால் மூடிவிடுவது நீலகிரி வழக்கம். இப்படி மூடியதில் ஈரமிருக்கும்படி பார்த்துக் கொண்டால், சீக்கிரத்தில் விதைகளிலிருந்து முளைகள் கிளம்பும். முளைகள் அரை அல்லது ஒரு அங்குலம் வந்தவுடன் நாற்றங்கால்களில் அவைகளைப் பெயர்த்து நடுவார்கள். நாற்றங்கால்கள் தண்ணீர் வசதியுள்ளவையாகவும் நிழலுள்ளவையாயும் நன்ருய் நீர்வடியக்கூடிய சமதரையாகவும் இருக்கவேண்டும். அதிக அடர்த்தியில்லாத . மரங்களில் நிழல் வெகு உபயோகம். பாத்திகள் ஐந்து அடி அகலத்துக்கு மேற்படாமலும் இடையேயுள்ள பாதைக்கு உயரமாகவும் இருக்கவேண்டும். முளைத்த விதைகளை நாலங்குலம் இடைவிட்டு நடவேண்டும். தினந்தோறும் காலையிலாவது மாலையிலாவது தண்ணீர் பாய்ச்சவேண்டியது அவசியம். இரண்டு அல்லது நாலு இலைகள் விட்டவுடன் செடிகளை வேறு பாத்திகளில் 9-முதல் 12-அங்குலம்வரையில் இடைவிட்டு மாற்றி நடுவார்கள். இவ்வாறு மாற்றி நடுவதற்கு மப்பு மந்தாரமான காலம் வெகு சிலாக்கியமானது. ஒரு வருஷத்துக்குப் பிறகு தோட்டங்களில் செடிகள் நடுவதற்கு லாயக்காகும்.

சாதாரணமாகக் காடுகளை வெட்டித் திருத்திய விடத்திலேயே காப்பித்தோட்டம் போடுவார்கள். டிஸம்பர் மாஸத்தில் காடுகளை அழித்து, வெட்டிய மரங்களுக்கு பிப்ரவரி மாஸத்தில் தீ வைப்பார்கள். பெரிய மரங்களை வெட்டுவதில்லை. நிழலுக்காக விட்டுவிடுவார்கள். நிலத்தை வெட்டிக் கொத்திச் சமனாக்கி, கிழங்குகளை எரித்து சாம்பலை நெடுகப் பாப்பிப் பண்படுத்துவார்கள். இரண்டடி ஆழமுள்ள குழிகள் வெட்டி, அக்குழி மண்ணைத் தூளாக்கி, அக்குழிக்குள்ளேயே போட்டபின்னர், செடியை நடுவார்கள். ஒரு செடிக்கும் மற்றொன்றுக்கும் இடையேயுள்ள விஸ்தீரணம் நிலவாசியைப் பொறுத்திருக்குமாயினும் 6-அடி முதல் 8-அடி வரையில் விடுவது சாதாரண வழக்கம். அவசியமானல், சீக்கிரத்தில் வளர்கிற நிழல் மரங்களையும் உடன் நடுவார்கள்.

நிலம் தயாரானவுடன் கையினால் களை யெடுப்பார்கள். செடிகளெல்லாம் நன்ருகப் பிடிக்கும் வரையில் அடிக்கடிக்கொத்திக்கொடுக்கவேண்டும். முதல் வருஷத்தில் ஏகரா ஒன்றுக்கு களையெடுப்பதற்கும் கொத்துவதற்குமாகப் பிடிக்கும் செலவு முக்கால் ரூபா முதல் ஒரு ரூபாவரையிலாம். வருஷம் ஒரு முறை ஆழ உழவும் வேண்டும். பலமான காற்றடிக்குமிடங்களில் செடிகளுக்குக் கொள்கொம்பு வேண்டியது அவசியம்.

காப்பிச்செடி பூசாரத்தை வாங்கிவிடுமாதலால், அடிக்கடி எருப்போடவேண்டும். ஆடுமாடுகளின் மலமூத்திராதிகள், எலும்பு எரு, புண்ணாக்கு முதலியவைகள் தகுந்த எருவாகும். பொதுவாக மாருல் அறுவடையான பின்பு ஒரு முறையும், மழைகாலம் நின்றவுடன் ஒரு முறையுமாக வருஷத்தில் இருமுறை எருப்போடுவது உத்தமம்.

செடிகள் 4½ அல்லது 5 அடி உயரமானதும் அவைகளின் நடுமொட்டைக் கிள்ளிவிடவேண்டும். இதனால் செடிகள் நெட்டையாக ஓங்கி வளராமல், தழைந்து பரவி வளரச் சவுகரியம் ஏற்படும். காற்றுக்கும் பந்தோபஸ்தாகும். பிரதான செடியிலிருந்து இரட்டை இரட்டையாகக் கிளைகள் உண்டாகும். பிரதான கிளைக்கு ஆறு அங்குலத்துக்குள் உண்டாகும் கிளைகளை யெல்லாம் வெட்டிவிடவேண்டும். இல்லாவிட்டால் தாராளமாகக் காற்றுப்போய் வருவதற்கு இடமிராது. இவ்வாறு வெட்டுவதினால் செடியின் சாரமுழுவதும் செடி பெருக்கப்போகாமல் பழத்துக்கே போகும். பிரதான கிளைகளை அடித்தண்டிலிருந்து 2½ அடி உயரத்தில் வெட்டிவிடுவார்கள். கிளைத்த கிளைகளைப் பலனின்ற பிறகு வெட்டுவார்கள். என்றாலும் பக்கக்கிளைகளில் ஒரு ஜோடியை வெட்டாமல் விட்டு செடி எப்போதும் பலன் கொடுக்கும்படி சவுகரியம் செய்துகொள்வதுண்டு.

நட்டு இரண்டு மூன்று வருஷங்கள் ஆனவுடனும், அப்பால் பிரதி வருஷமும் மார்ச்சு மாஸத்தில் செடிகள் புஷ்பிக்கும். நல்ல செடிகள் நட்ட இரண்டாம் வருஷத்தில் பலன் கொடுக்கும். ஆனால் இந்தப் பலனைக் கையாளாமல் விட்டுவிடுவார்கள். பழங்களை முதிர்வதற்கு முன்பேயே உதிர்த்துவிடுவது பதிவு. மூன்று வயதுள்ள செடிகளின் பலன் முதல் தடவையில் அதிகமாகவிருந்தால், பலனைக் குறைத்து விடுவார்கள். இல்லாவிட்டால், பிற்பட்ட வருஷங்களில் நல்ல பலன் இராது. நட்ட நாலாவது வருஷத்திலும் அதற்கு அப்பாலுமே முழுப்பலனையும் கைக்கொள்ள வேண்டும். பழங்கள் அக்டோபர், நவம்பர் மாஸங்களில் முதிரத்தொடங்கும். ஜனவரி மாஸத்தில் காய்ப்பு நின்றுபோகும். நன்ருகச் சிவந்த பழங்களைப் பொறுக்குவதற்காக அடிக்கடி ஸ்திரீகளையும் சிறுவர்களையும் அனுப்புவார்கள். பூரா மகசூலும் கைக்கு வந்த பிறகு கிளைகளை மேலே தூக்கிக் கட்டிவிடுவார்கள். இதனால் கீழே விழுந்த பழங்களைச் சுலபமாகப் பொறுக்குவதற்கும் நிலத்துக்கு எருவிடுவதற்கும் சவுகரியமுண்டாகும்.

காப்பிப் பழத்தில் மேல் சதையும், அதற்குள் ஒரு மெதுவான ஜவ்வுத்தோலும் அதன் கீழே விதையைச் சுற்றி வெண்மையான வேர்த்தோலும் உண்டு. ஆகவே, விதையை எடுக்கிறதற்கு முன் மேற்கூறிய மூன்று பொருள்களையும் எடுக்கவேண்டியதாகிறது.

பறிக்கும்போதே, பழங்களின் தோலை எடுத்துவிடுவார்கள். கையினாலாவது யந்திர உதவியாலாவது இவ்வாறு மேல்தோல் எடுக்கப்படும். அப்பால் அதன்மீதிருக்கும் ஓர்வித பசையை நிவர்த்திக்க விதைகளை ஒருதொட்டியில் போட்டு 24-மணி முதல் 36-மணிவரையில் கிடந்து புளிக்கும்படி விடுவார்கள். பின்னர் ஓடுகிற தண்ணீரால் அலசி, வேறொரு தொட்டியில் விதைகளைப் போகவிட்டுச் சுத்தமாக்குவார்கள். கழுவிய விதைகளை எடுத்துக்கொண்டுபோய் காற்றும் வெயிலுமுள்ள விடங்களில் போட்டு உலர்த்துவார்கள். அப்போது விதைகளை அடிக்கடி கிளறிக்கொண்டிருக்கவேண்டும். அப்பால், விதையைச் சுற்றியிருக்கும் வெண்மையான தோலை உலக்கையினால் குத்தியோ, யந்திர உதவியாலோ எடுத்துவிட்டு தூசிபோகப் புடைக்கவேண்டும். மப்பும் மழையுமாகவிருக்கும் நாள்களில் மேற்கூறியவாறு குத்துவது கூடாது. புடைக்கிறது, கைமுறத்தைக் கொண்டாவது, யந்திர உதவியாலாவது செய்வார்கள். இப்படிப் புடைப்பதினால், விதையுடனிருக்கும் தோலும் தூசியும் போய் நயமான விதைகளே தங்கும். நன்ருய்க் காய்ந்த விதைகளைப் பெட்டிகளில் அடைத்து வியாபாரத்துக்காக வெளியில் அனுப்புவார்கள். முதிர்ந்த செடிகளிலிருந்து ஏகரா ஒன்றுக்கு சுமார் 300-முதல் 400 பவுன் வரையில் கொட்டை கிடைக்கும்.

இப்படிக் கடைக்கு வந்த காப்பிக்கொட்டையை வறுத்துப் பொடிசெய்து உபயோகிக்கும் விதம் நமது நாட்டு ஸ்திரீகள் அனைவருக்கும் இப்போது தெரியும். ஆனால் அவர்களுக்காவது, காப்பியை ஆவலோடு குடிக்கும் ஜனங்களில் பெரும்பாலர்க்காவது, அது உற்பத்தியாகும் விதம்மட்டும் இன்னதென்றே தெரியாது.

காப்பிக்கொட்டையை வேறு ஒரு விதத்திலும் பக்குவம் செய்வதில்லை. மேற்கூறியவாறே கடைக்கு வருகிறபடியால்தான், அதை சிராத்தத்துக்கும் உபயோகிக்கலாம் என்று ஒருவர் வேடிக்கையாகக் கூறினர்போலும்!

பாபாத்மாவின் ஹ்ருதயம்.—பாபியின் ஹ்ருதயம் சுருண்ட மயிரை யொத்தது. அதை எவ்வளவு நீளம் இழுத்தாலும் நேராய்ச் செய்யமுடியாது. அதுபோல் பாபிகளின் ஹ்ருதயத்தையும் எளிதில் மாற்ற முடியாது.

—உபதேசரத்நமாலை.

தமிழின் தற்கால நிலைமை

TAMIL: ITS PRESENT STATE

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளர்கின் றளே."

எல்லாம் வல்ல ஈசன் திருவருளாற் றோன்றி வடமொழிக் கிணையாகித் தொன்றுதொட்டு வழங்கிவரும் நம் தமிழ்மொழி, முற்காலத்துக் குடத்தினிற் றோன்றி அலையெறிகடலை யள்ளிக் குடித்துப் பொதியமலையிற் போந்திருந்த அகத்தியமுனிவராலும், திரணதூமாக்கினி முதலிய அவர்மாணுக்கர்களாலும்,பிறராலும் இலக்கணம் செய்யப்பெற்று,பாண்டியர்கள் ஆண்டமுதலிடைகடையென்னும் முச்சங்கங்களினும் நின்று நிலாவிற்று. கடைச்சங்கத்துக்குப்பின்னர், பாண்டிய வம்சம் அருக வேற்றரசாட்சிக் குட்பட்டதனால் நூல்களைப் படிப்போரும் படித்தவரை யாதரிப்போரும் நாளுக்குநாட் குறையலாயினர். ஒரு காலத்தில் திருவேங்கடத்துக்கு வடக்கேயும், கன்னியாகுமாரிக்குத் தெற்கேயும் சிலதூரம் பரவியிருந்த நம்தமிழ் இடைக்காலத்தில் மேற்சொன்ன இரண்டெல்லைக்கும் உட்பட்டதாய்ப் பிற்காலத்தில் இவ்வெல்லையினுஞ் சுருங்கிவிட்டது: கன்னியாகுமாரிக்குத் தெற்கே யிருந்த நிலத்தைக் கடல்கொண்டது அது காரணமாகப் பல அரிய தமிழ் நூல்கள் இறந்தன. திருவேங்கடத்துக்கு வடக்கிலுள்ள நிலங்களை ஆரிய பாஷைகளும் அதற்குத் தென்மேற்கிலும் தெற்கிலும் உள்ள சில இடங்களைத் தெலுங்கு மலையாள முதலிய சில பாஷைகளும் கைக்கொண்டன. பாண்டியர் காலத்துக்குப் பின்னும் ஆங்கிலேயர் காலத்துக்கு முன்னும் பெரும்பாலும் அரசாட்சி சீர்கேடடைந்திருந்தது. அவ்வரசர்களிற் சிலர் நம் நூல்களை ஆதரிக்காமையோடு நில்லாமல், அவற்றை நெருப்பினும் நீரினும் எறிந்து சேதப்படுத்தினார்கள். இதனாற் பல நூல்கள் இறந்துபோயின. இந்நாடு மோகலாயர் முதலிய அன்னியர் ஆட்சிக்குட்பட்ட நாள் முதல் அவ்வன்னியர் பாஷை தலையெடுக்க நம் மொழி மெலிவடைந்தது.

ஆதிகாலத்தில் தனியே வழங்கிவந்த தமிழில் வடமொழிப் பதங்கள் கலக்கத் தொடங்கிச் சிறிது சிறிதாக அதிகரித்தன. பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் காலத்திற்குப் பின்னர், வடமொழிப்பதங்கள் மிகவும் அதிகமாகக் கலந்துவிட்டன. தெலுங்கு முதலிய வேறு பாஷைச் சொற்களும் சில கலந்தன. இப்பொழுது ஆங்கிலச் சொற்களுங் கலந்துவருகின்றன. இதனால், தமிழ் தனிமொழியோ என்னுஞ் சந்தேகம் பலர்க்கும் உண்டாய்விட்டது.

முச்சங்கக் காலத்தில் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என மூன்று பாகுபாடுகளாக வழங்கி வந்ததனால், 'முத்தமிழ்' எனப் பெயர்பெற்றிருந்தது. காலவேற்றுமையாலே பிற்காலத்தில் இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் இரண்டும் இல்லாமற்போயின. சில இசைத் தமிழ் நூல்களின் பெயர்கள்மட்டும் பழைய நூலுரைகளிற் காணப்படுகின்றன. நூல்கள் இருக்குமிடந் தெரியவில்லை. இயற்றமிழ் நூல்களினும் பெயர்மாத்திரந் தெரிந்து இதுகாறும் வெளிப்படாதிருக்கும் நூல்கள் பல. கணித நூல்கள் தமிழ்மொழிக்குத் தனியாக இருந்தன வென்பதை இப்பொழுதுள்ள தமிழ்க்கணக்கு முறையே வெளிப்படுத்தும். இம்மி, கீழ்முந்திரி, முந்திரி, காணி முதலிய மிக நுட்பமான சிற்றெண்களெல்லாம் நம் தமிழ்மொழியிற் காணப்படுகின்றன. ஆனால் இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, கீழ்வாயிலக்கம், குழிமாற்று என்னுஞ் சுவடிகளையன்றி வேறு பெரிய கணிதநூல் ஒன்றும் இக்காலத்துக் காணப்படவில்லை. கணக்கதிகாரம் என்றொரு சிறுபுத்தகம் அச்சிடப்பட்டிருக்கின்றதாயினும் அதனைப் பார்ப்பவரின்மையாற் பெரும்பாலும் பிழைபட்டுச் சிலவிடத்துக் கணக்கின் உருவமே தெரியாமலிருக்கின்றது. நல்ல பதிப்புப் புத்தகமும் இல்லை. இவையெல்லாவற்றிற்குங் காரணம் அன்னிய பாஷைத் தலையெடுப்பும், நம்மவர்க்குப் பாஷாபிமானம் இன்மையுமாம்.

ஒரு நாட்டை ஒரு சாதியார் ஆளும்பொழுது அவர்கட்குரிய பாஷை தலையெடுப்பது இயற்கையேயாம். ஆயினும் இந்நாடு ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட பிறகு அதற்கு முன்னிருந்த தீமைகளெல்லாம் நீங்கச் சனங்களுக்குள் கல்வியும் ஸமாதானமும் நிலைபெற்று வருகின்றதெனினும், இராஜபாஷையாகிய ஆங்கிலத்திற்குரிய ஏற்றம் பிறபாஷைகளுக்கு ஏற்படவில்லை. ஆங்கிலங் கற்றால், உத்தியோகம் வியாபாரம் முதலிய வழிகளில் ஊதியம் மிக்கு வருகின்றதென்று, அதனைப் பெரும்பாலார் விரும்பிக் கற்கின்றனர். அவர்கள் விரும்பியபடியே பயனையும் பெறுகிறார்கள். காருணியம் பொருந்திய ஆங்கில அரசாட்சியார், அவர்கட்குமுன் அரசாண்ட அன்னியரைப்போல நமது தேசபாஷையை அனுதரவு செய்யாது பள்ளிக்கூடங்களிற் கற்பித்து வருதலாலும், திருவாவடுதுறையாதீனமடம் முதலிய இரண்டோரிடங்களில் தொன்றுதொட்டுத் தமிழ் பயிற்றுவிப்பதாலும், இன்னும் ஆங்காங்கு இலை மறை காய்போலச் சில தமிழபிமானிகளிருத்தலாலும், நம் தமிழ்மொழி இவ்வளவேனும் வழங்கி வருகின்றதென்னலாம். இந்தியாவில் வடக்கே யுள்ளவர்களுக்கிருப்பதுபோல நம்மவர்க்குப் பாஷாபிமானம் இல்லை. அவர்கள் ஆங்கிலம் எவ்வளவு பயின்றிருந்தாலும் தமக்குரிய பாஷையை அனுதரவு செய்யமாட்டார்கள்.நம்மவரிற் பெரும்பாலார் ஆங்கிலங் கற்றுவிட்டால் நம் பாஷையைப் பேசுவது பெருமையன்றென்று எண்ணுகிறார்கள். இரண்டாவது பாஷையாகத் தமிழ் எடுத்துக்கொண்டு டிகிரிப் பரீக்ஷை தேறினவர்களுங் கூடத் தங்களுக்குத் தமிழ் பேசவாராதென்று சொல்லுவோர் சிலருளர். இவர்கள் இப்படியானாற் படியாதவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இனி, தமிழ்க்கல்வி முக்காலத்துப் பயின்ற முறையையும் இக்காலத்துப் பயிலும் முறையையும் ஆராய்வோம்:—முற்காலத்திற் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, "குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை, கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை, நிலமலை நிறைகோன் மலர் நிகர் மாட்சியும், உலகிய லறிவொடுயர்குண மினையவும், அமைபவனூ லுரையாசிரியன்னே." என்ற வண்ணம் இலக்கணங்களெல்லாம் அமைந்த நல்லாசிரியனிடத்தில் விட்டுக் கல்வி பயிலுவித்தார்கள். பிள்ளைகளும் அவ்வாசிரியனை நீங்காது நிறைந்த நெஞ்சமோடு வழிபட்டு முறையாக நூல்களைக் கற்றுத் தேறினார்கள். ஆசிரியர்களும் "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்பதை யனுசரித்து எழுத்துக்கு அரிச்சுவடியும், எண்ணுக்கு இலக்கமுமாகத் தொடங்கி அரிச்சுவடிக்குப் பின் இரண்டெழுத்துப் பேர், மூன்றெழுத்துப் பேர், நாலெழுத்துப் பேர் முதலிய பல சொற்களையுஞ் சொல்லிக்கொடுத்து, ஒவ்வொரு நாளும் போதிப்பதைப் பனையோலையிற், சட்டம் சரவைகள் எழுதச்சொல்லி இவற்றைப் பயின்ற பிறகு பிரபவச் சுவடியும், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, முதுமொழிக்காஞ்சி, வாக்குண்டாம் முதலியனவுமாக முறையே பயிற்றுவித்துப் பின்னர் மற்றுமுள்ள இலக்கியம், நிகண்டு, இலக்கணம் என்பவற்றையும், இவ்வாறே கணக்குகளையும் முறையாகப் பயிற்றுவித்து வந்தார்கள். நூல்களை மனப்பாடஞ் செய்வது பெரும் பயனைத் தருமாதலால், அதற்கேற்பச் செய்யுள் ரூபமாகவே முற்காலத்து நூல்களெல்லாஞ் செய்யப்பட்டன. இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி முதலிய கணித நூலுக்கும் காப்புகள் செய்யுள் ரூபமாக அமைக்கப்பட்டன. பிற்காலத்தில் தமிழுக்குப் பெருமை குறையக் குறைய, இதனை முறையாகப் படிப்போரும் குறையலாயினர். முறையான

படிப்புக் குறையவே, சரியான ஆசிரியர் கிடைப்பது அருமையாயிற்று. ஆயினும் அறிவு விருத்திக்குக் கல்வி யின்றியமையாததா யிருத்தலால், ஒவ்வொரு ஊராரும் அவ்வூரினுள்ளவர்களுட் சிறிது நன்றாகப் படித்தவர்களைக்கொண்டு சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றுவிப்பாராயினர். கொஞ்ச காலத்திற்கு முன்வரையிலும் அச்சுப் புத்தகம் ஏற்படாமையால் எல்லாவற்றையும் உபாத்தியாயர் ஏட்டில் எழுதிக்கொடுத்தே படிப்பிக்கவேண்டி யிருந்தது. பழைய ஏட்டுப் புத்தகங்களில் மெய்யெழுத்திற்குப் புள்ளியும், உயிர்மெய் ஏகாரவோகாரங்கட்குக் கொம்புசுழித்தலும், ரகரத்துக்குக் கீழே இழுத்தலும் ஆதியாக இப்பொழுது காணப்படும் அடையாளங்கள் காணப்படாவாதலால் படிப்போர் அர்த்தஞானத்துடன் படித்தாலன்றி உண்மைப்பாடம் விளங்காது. முன் சொன்னவாறு அரைகுறையாகக் கற்றவர்கள் அர்த்த ஞானமின்றி யெழுதிக்கொடுத்துப் போதிக்கத் தொடங்கவே "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்னும் பழமொழிப்படி எழுதிய ஏடுகளும் பாட்டுக்களும் பிழைப்பட்டன. சொற்களெல்லாம், ரகரறகரம், ழகரளகரம் முதலியவற்றின் பேதங்களின்றி எழுதவும் பேசவும் பெற்றுப் பிழைபட்டன. இதற்கு உதாரணம் சில வருமாறு :—

1. இலக்கத்துக்குக் காப்பாக ஏற்பட்ட "கண்ணன் மருகன் கணபதியைக் கைதொழுதால், எண்ணிலக்கமெல்லாம் வரும்" என்னுங் குறள் வெண்பா—"கண்ணன் முருகன் கணபதியைக் கைதொழுதால் எண்ணிய லக்கம் எல்லாம் வருமே" எனவும்,

2. நெல்லிலக்கத்துக்குக் காப்பாகிய "சீரான நெல்லிலக்கஞ் செப்பமுடன் யான் படிக்கக், காரானை மாமுகத்தோன் காப்பு" என்னுங் குறள் வெண்பா—சீரான எண்ணிலக்கம் சிறப்புடனே யான் படிக்கக் காரானே நான் முகத்தோன் கணபதியே காப்பு" எனவும்,

3. எண்சுவடிக் காப்பாக ஏற்பட்ட "நெடுமாற் றிருமருகா நித்தன் மதலாய், கொடுமால் வினையறுக்குங் குன்றே தடுமாறு, தெண்முப்பதுவாயுமென் சித்தத்தே நிற்கப், பண்ணுத்தமனே பரிந்து," என்னும் வெண்பா— நெடுமால் திருமுருகா நித்தம் முதலாய் கொடுமா வினையறுக்குங் கொண்டே தடுமாறுமல் எண்ணெழுத்தும் முப்பதுவாயும் எழுத்துமேல் சித்தத்தே நிற்கப்பண் உத்தமனே பணிநமோத்து" எனவும் வழங்கப்பெறுகின்றன. இவற்றிற் பாடபேதம் மற்றும் பலவுள. இது யாவரும் அறிந்த விஷயம்.

4. எண்சுவடி ஒன்பதாம் வாயில் "ஓரொன்பா னொன்பான்" என்பது "ஓரொம்பா ஒப்பா" எனவும் "பதிற்றுக்கொன்பான் றொண்ணூறு" என்பது "பயித்துக்கும்பாதொண்ணூறு" எனவும் "ஒன்பதிற்றுக்கொன்பா னெண்பத்தொன்று" "தொண்ணூற்றுக்கொன்பா னெண்ணூற்றுப் பத்து" என்பன முறையே "ஒம்பத்திக்கும்பா எம்பத்தொண்ணு" "தொந்நூத்திக்கும்பா எண்ணூத்திப்பத்து" எனவும், பத்தாம் வாயில் "பதிற்றுப்பத்துநூறு" என்பது "பயித்திப்பத்து நூறு" "பயித்திப் பயித்தி நூறு" எனவும் வழங்குகின்றன. பிறவும் இவ்வாறு வேறுபட்டவை பலவுள. "பத்துநூறுயிரப்பத்து ஒரு கோடி" என்பது "பத்துநூறுயிரப்பத்து பத்தொரு கோடி" எனத் தொகையே மாறுபட்டுவிட்டது. இவ்வாறு மாறிக்கொண்டே போமாயின் நாளடைவில் தமிழ்மொழி உருத்தெரியாமலே மாறிவிடக்கூடும்.

இனி, அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் தமிழ்க்கல்வி திருத்தமாகப் போதிப்பிக்கப்பெறினும், அவர்கள் இலக்கணத்தைப் பிரதானமாகக் கொள்ளாமையால் அடிப்படையில்லாத கட்டிடம்போலாகிப் பள்ளிக்கூடத்தைவிட்ட சில நாளைக்கெல்லாம் பிள்ளைகள் மனத்தில் நில்லாமற் போய்விடுகிறது. "எழுத்தறியார் கல்விப்பெருக்கமனைத்தும், எழுத்தறிவார்க்காணிணியலையாம்" என்று இலக்கணத்தின் பெருமையை ஆன்றோர் கூறியிருக்க, இக்காலத்துச் சிலர் "இலக்கணமென்பது ஒன்று வேண்டியதேயில்லை ; வாக்கியங்கள் சந்திசேர்த்து எழுதக்கூடாது ; இலகுவாக எழுதவேண்டும்" என்பன ஆதியாகப் பல திருத்தங்கள் கூறுகிறார்கள். இவ்விஷயத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையைக் குறை கூறுவாருஞ் சிலருளர். "செந்தமிழும் நாப்பழக்கம்" என்றபடி ஒரு பாஷையில் எவ்வளவுக்கெவ்வளவு பயிலுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அது இலகுவாகத் தோன்றும். ஆங்கிலத்தை யதிகமாகப் பயின்றவர்களுக்கு அது இலகுவாகத் தோற்றுகின்றது. தமிழை யவ்வாறு பயின்றவர்களுக்குத் தமிழும் இலகுவாகத் தோற்றுகிறது. தமிழில் புணர்ச்சி விதி கடினமாயிருக்கிறதென்றால், ஆங்கிலத்தில் எழுத்துக்கூட்டுதல் கடினமாயிருக்கின்றது. இவ்வாறே ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொன்று கடினமாயிருக்கும். பழகினால் எல்லாம் இலகுவாம்.

மேற்சொன்னவாறெல்லாந் தளர்வடைந்திருக்கிற நம் தமிழ்மொழிக்கு, ஈசன் அருளால் இப்பொழுது நற்காலம் ஏற்பட்டு வருகிறது. பதினொரு வருஷ காலமாக மதுரைத் தமிழ்ச் சங்கம் ஏற்பட்டு நடைபெற்று வருகிறது. அதிற்பயின்று தேறிய பலர், காலேஜ்களிலும் ஹைஸ்கூல்களிலும் பிறவிடங்களிலும் உபாத்தியாயராக அமர்ந்து தமிழ்க்கல்வியை விருத்தி செய்கிறார்கள். ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கட்குப் பின்னர், மஹாமஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் இவ்வுலகில் எடுப்பாரும் படிப்பாருமின்றிச் சிதல்வாய்ப்பட்டுச் சீரணமான தமிழ்த்தெய்வத்தின் கோயில்கள்போன்ற பழைய அரும்பெரு நூல்களை யெல்லாம் பரிசோதித்தச்சிடுதலாகிய திருப்பணியைச் செய்துவருகிறார்கள். இத்திருப்பணி முற்றும் நிறைவேறித் தமிழ்த்தெய்வத்தைச் செழிக்கச் செய்யும்பொருட்டு எல்லாம் வல்ல ஈசன் அவர்களுக்குப் பூரண ஆயுளையும் ஆரோக திடகாத்திரத்தையும் அளிக்குமாறு தமிழரனைவரும் வேண்டவேண்டும்.

இதுகாறும், சத்திரம், குளம், கோயில், பசுமடம், நந்தவனம், வேதசாஸ்திர பாடசாலைகள் முதலிய தருமங்களைச் செய்துவந்த நாட்டுக்கோட்டை வணிகர்கள் இப்பொழுது தமிழ்க் கலாசாலைகளும் ஸ்தாபிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இன்றுவரை ஷை கலாசாலைகள் ஏற்பட்டுள்ள இடங்கள் முறையே மேலைச் சிவபுரி, வலயபட்டி, சொக்கலிங்கம்புதூர், நேமத்தான்பட்டி, ஆத்தன்குடி, கோனாபட்டு, பள்ளத்தூர், தேவகோட்டை என்பனவாம். கொற்றமங்கலம், கண்டனூர், காரைக்குடி, நாச்சியாபுரம் முதலிய இடங்களிற் கலாசாலைக்குரிய முயற்சி நடந்துவருகிறது. அநேக ஊர்களில் தமிழ்ச்சபைகளும் புத்தகசாலைகளும் நடைபெற்று வருகின்றன. இரங்கூன்முதலிய வர்த்தக ஸ்தலங்களிலுங்கூடச் செந்தமிழ்க்கலாசாலை, ஸபை முதலியன ஏற்படுத்தி வருகிறார்கள். இவ்வகுப்பினர் எடுத்த முயற்சியைத் தளாவிடுவதில்லை யென்பது உலகப்பிரஸித்தமான விஷயம்.

காருணிய அரசாங்கத்தினரும் இப்பொழுது தமிழ் விஷயத்தில் முன்னிலும் அதிகமாக ஆதரிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். இவர்களால் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தமிழ்ப் பரீக்ஷைகள் 1915-ம் வருஷமுதல் நடைபெறுமென்று தெரிகிறது. இதுவுமன்றி, இலக்ஷக்கணக்கான ரூபா செலவிட்டு இன்னும் ஐந்து வருஷத்திற்குள் ஒரு பெரிய தமிழ் அகராதியை அச்சிட்டு முடிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆதலால் இனித் தமிழரனைவரும் ஒத்து உழைத்து இடங்கடோறுஞ் செந்தமிழ்க் கலாசாலைகள் ஏற்படுத்திப் பிள்ளைகளை ஷை பரீக்ஷைகளுக்குத் தயார் செய்யவேண்டும். இவ்வாறு செய்யின், நம் தமிழ்மொழி இனிது தழைத்தோங்குமென்பதற் கையமில்லை.

இத்தகைய ராஜாங்கமும், இன்னும் தமிழை யாதரிப்போரும், செந்தமிழ் மொழியும் நீடூழி வாழுமாறு ஈசன் அருள்புரிவாராக. மேலே கூறியவற்றிலுள்ள பிழைகளைப் பெரியோர் பொறுத்தருள்க.

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

அ. கோபாலையன்.

கடமை முரண்

CONFLICT OF DUTIES

1. "கடமை" யென்பது ஒவ்வொருவரும் பிறரிடம் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கத்தின் முறைமையைக் குறிக்கும். அம்முறைமை, ஸ்தான வேறுபாடுகளாலும் கால வேறுபாடுகளாலும் பலவித பாகுபாடுகள் உள்ளது. உதாரணமாய் ஒருவன் தன் பெற்றோர், மனைவி, மக்கள், உடன் பிறந்தோர், சுற்றத்தோர், சினேகிதர், ஒரே தொழிலில் நிற்பவர், நகரத்தார், உபாத்தியாயர், அதிகாரிகள் முதலான பலர்களிடமும் பழகவேண்டி வருவதால் அவ்வவர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைமை வேறுபடுகிறது. ஆகவே பலவேறுபட்ட கடமைகள் ஏற்படுகின்றன. இத்துடன் கால வேறுபாட்டால் நடத்தை மாறுபட வேண்டி வருவதால் அவ்வக்காலத்திற்கு உரித்தான கடமைகள் ஏற்படுகின்றன.

2. இவ்விதம் பகுக்கப்பட்ட கடமையின் தன்மை பெரியோர்களால் இயற்றப்பட்ட நூல்களிலும், புராண கதைகளிலும் தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது. தர்மம் என்னும் வடமொழிச் சொல்லும் கடமையையே குறிக்கும். அந்த தர்மத்தை அறிந்து அதன்படி நடப்பது சரியான நெறியாகும். முன் சொன்னபடி ஒவ்வொருவரிடமும் நடந்துகொள்வதில் ஒவ்வொரு கடமையாகப் பாகுபட்டிருப்பதால் ஒரு காரியத்தை செய்ய எத்தனித்தாலும் அது யாரைக் குறித்து நடந்துகொள்ளவேண்டிய விஷயம் என்பதைத் தெளிய அக்காரியத்தில் செலுத்தவேண்டிய கடமையும் தெளிவாகின்றது. ஆனால் எந்தக் காரியமும் ஒருவரை மட்டும் குறியாமல் பலருக்கும் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது. அக்காரியத்தில் சம்பந்தமுள்ள பலருக்கும் ஒருவன் காட்டவேண்டிய முறைமை ஒருவிதப் படாமல் மாறுபடுங்காலத்து அக்காரியத்தில் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டியது என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இவ்விதமாய் மனக்கலக்கம் ஏற்படும்படி ஒரு கடமையும் மற்றொரு கடமையும் மாறுபடுவது "கடமை முரண்" அல்லது தர்மசங்கடம் என்று சொல்லப்படும்.

3. இக்கடமை முரண் நமது தேசத்து இதிகாசங்களில் தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக விபீஷணர் ஸ்ரீராமரிடம் அடைக்கலம் புகுந்து அவருடன் சேர்ந்து தன் தமையனுடன் போர்புரிந்ததாய் இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விபீஷணர் இராவணனுடைய தம்பி. அவனுடைய பிரஜைகளில் ஒருவர். அவன் அன்னத்தையே புசித்தவர். ஆனால் இராவணன் அதர்மகாரியத்தைச் செய்து இராமரோடு போர்புரிய ஆயத்தம் செய்தவன். இந்நிலைமையில் விபீஷணருடைய கடமை என்ன என்று யோசிப்போம். இராவணனோடு சேர்ந்து போர்புரிந்தால் அதர்ம யுத்தத்தில் அதர்மத்தை ஸ்தாபிக்க முயன்றதாகிறது. இராமருடன் சேருவதில் தன் தமயனுக்கு விரோதமாயும், தன் அரசனுக்கு விரோதமாயும் தனக்கு அன்னமிட்டவனுக்கு விரோதமாயும், சண்டைசெய்வதாகிறது. அதர்ம யுத்தத்தில் சேரக்கூடாது என்பதும் கடமைதான். அன்னமிட்டவனுக்கும் அரசனுக்கும் தமயனுக்கும் எதிரியாகச் சண்டை செய்யக் கூடாது என்பதும் கடமையே. எந்தப் பக்கத்தில் சேர்ந்தாலும் கடமை தவறியதாகிறது. இவ்விருவகை கடமைகளில் பாபத்தொழில் புரிந்த இராவணனுக்கு ஒத்தாசை செய்யாமலிருப்பதே உயர்ந்த கடமை என்று நிச்சயித்து விபீஷணர் இராமரை அடைந்தார். இதேமாதிரியாய் மஹாபாரதத்தில், பாரதயுத்த காலத்தில் பீஷ்மர் முதலியவர்களுக்கு அவர்களை அன்னமிட்டு வந்தவனும் அரசனுமான துரியோதனனுடன் சேர்வது கடமையா அல்லது நியாயத்தை ஸ்தாபிக்க போர்புரியும் யுதிஷ்டிரருடன் சேர்வது கடமையா என்ற சந்தேகம் ஏற்பட அவர்கள் அதர்ம யுத்தமாயினும், அதில் மடியும்படி நேரிடினும் அன்னமிட்ட அரசனுக்காக உயிரைவிடுவதே உயர்ந்த கடமை என்று நிர்ணயித்தார்கள். இந்த இரண்டு உதாரணங்களில் அனேகமாய் ஒரேவிதமான சங்கை ஏற்பட்டகாலத்து ஒருவர் ஒருவிதமாயும் மற்றவர்கள் வேறுவிதமாயும் தீர்மானித்தது கடமை முரண்படும் காலத்தில் தீர்மானிப்பது எளிதான விஷயமல்ல என்பதை ஸ்பஷ்டமாய் காண்பிக்கிறதல்லவா?

4. மேலே காட்டிய உதாரணங்கள் பிரசித்தியானவை என்பதை உத்தேசித்தும் "கடமை முரண்" ஆதிகால கவிவாணர்களாலும் தெளியப்பட்டது என்பதைக் காட்டுவதற்கும் இராமாயண மஹாபாரதங்களிலிருந்து எடுத்துக்காட்டப்பட்டதேயல்லது வேறல்ல. கடமை முரண் புராண கதைகளில்மட்டும் எடுத்தாளப்பட்ட நிகழ்ச்சியல்ல. முற்காலத்தினர்களுக்கு மட்டும் ஏற்படக்கூடியது என்பதுமல்ல. இன்றைக்கும் நாளைக்கும் வீட்டில் செய்யும் சிறுகாரியங்களிலும் இம்முரண் ஏற்படக்கூடியது. சற்று ஆராய்ந்து பார்த்தால் இதன் உண்மை வெளியாகும். மேலும் தற்காலத்தில் இத்தேசத்தில் இந்த நிகழ்ச்சி விசேஷமாய் ஏற்படுகிறது. மேல்நாட்டு நாகரீகமும் அதனால் ஏற்படக்கூடியநவீன மனோபாவங்களும் சிலருக்கு உண்டாயிருக்க அவ்விதபக்குவம் இல்லாத மற்றவருடன் அடிக்கடி அவர்கள் பழக நேரிடுவதாலும் விசேஷமாய் வயது முதிர்ந்தவர்களும் பெண்பாலரும் மேல்நாட்டு உயர்தர கல்வி இல்லாதவராகவே இருக்கின்றமையால், பெற்றோர், சகோதரிகள் முதலானவரிடத்து நடந்து கொள்ளவேண்டிய முறைமைகளில் தெளிவான மார்க்கம் இல்லாததாலும் ஒவ்வொரு சிறு காரியங்களிலும் மனக்கலக்கம் உண்டாகிறது.

(5) தற்காலத்தில் தர்மசங்கடம் ஏற்பட பலமான ஏதுக்கள் இருக்கின்றன என்பதை மேலே விவரித்தோம். அது எப்படி நிகழக்கூடியது என்பது சற்று நிதானித்துப் பார்ப்பவர்கள் எளிதில் அறிந்து கொள்ளக்கூடியது. ஒரு உதாரணம் மட்டும் எடுத்துக்கொள்வோம். ஒருவனுக்குத் தள்ளாத வயதான தாயார் ஒருவள் இருக்கிறாள். அவளுக்கு பலமான சீக்கு ஒன்று ஏற்பட்டு மற்ற எவ்விதத்திலும் சௌக்கியமாகக் கூடாமல் ஆங்கிலவைத்ய முறையில் தயாரித்த ஒரு ஔஷதத்தைத் தவிர வேறுகதியில்லை என்று வெளியாகிறது. கிழவயதான தாயார் அம்மருந்தை அருந்துவது அனாசாரமென்று கருதி இறக்கவேண்டி வரினும் வயது காலத்தில் ஆசாரக் குறைவான காரியத்தைச் செய்யக்கூடாதுஎன்று தீர்மானித்து அம்மருந்தை உட்கொள்ள சம்மதிக்கவில்லை. அப்பொழுது அனாசாரமென்பது மூடநம்பிக்கைஎன்று அவளுக்குப் பிரசங்கம்செய்யக்கூடிய காலம் அல்ல. மருந்தின் உண்மையை மறைத்து அது நாட்டுமருந்து என்று சொல்லி அதை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டியிருக்கிறது. இத்தருணத்தில் மகனுக்கு எவ்விதத்திலும் தாயாரின் உயிரைக் காப்பாற்றவேண்டியது கடமை. அதற்காக முன்சொன்னபடி செய்தால் தன்தாயாரின் ஆசாரத்திற்குகுறைவு உண்டுபண்ணுவதுடன் தான் பொய்பேச வேண்டியதாகிறது. தாயார் சொல்லை மீறிநடந்ததும் ஆகிறது. இந்தத் தர்மசங்கடத்தை நிவர்த்திப்பதற்குப் புராண இதிகாசங்களைத் தேடினால் அவைகளில் தெளிவாய் ஒன்றும் விளக்கப்படவில்லை. தாயார் உயிரை எப்படியும் காப்பாற்றவேண்டும் என்று தர்ம சாஸ்திரங்கள் விதிக்கின்றன. அதே சாஸ்திரங்கள் தாயார் கட்டளையை மீறக்கூடாது என்றும் விதிக்கின்றன. ஒரு முகாந்திரத்தைக் கொண்டும் பொய்சொல்லக் கூடாது என்றும் முறையிடுகின்றன. எப்படிச் செய்தாலும் ஏதாவது ஒரு கடமையை மீறவேண்டியதாகிறது. உலகவாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் இதைப்போல் பலவிதங்களில் கடமைமுரண் ஏற்படுகின்றன. அவைகள் எல்லாம் இதேவிதமாய் மனக்கலக்கத்தைக் கொடுக்கின்றன. படித்துத் தேர்ந்த பலர் ஆசார சீர்திருத்தக் கொள்கைகளைக் கைக்கொண்டவராக இருக்கின்றார்கள். அவர்கள் சுற்றத்தார் முதலானவர்கள் பிராசீன தர்மத்தை நம்பினவர்களாக இருக்கிறார்கள். தங்கள் வீட்டில் தங்கள் குழந்தைகள் சம்மந்தமாய் எந்தமட்டில் தங்கள் கொள்கைகளை அனுஷ்டிக்கலாம் என்பதை யோசிக்குமிடத்துப் பலவிதமான சந்தேகங்கள் ஏற்படுகின்றன. இவைகள் எல்லாம் பொதுவாய் தெரிந்தவைகளாதலால் அந்த விஷயத்தை விஸ்தரிக்க வேண்டியதில்லை.

6. இதுவரை கடமை முரண் ஏற்பட தற்காலத்தில் விசேஷ காரணங்கள் இருக்கின்றன என்பதும் அது ஏற்பட்ட விடத்து எவ்விதம் நடந்துகொள்ள வேண்டியது என்று நிச்சயிப்பது சிரமமான விஷயம் என்றும் தெளிந்தோம். முரண்படு கடமைகளை சரிப்படுத்தி அவைகளில் முக்கிய கடமை எதுவென்று துணியக்கூடிய சாதனங்கள் ஏதாவது உளவா என்பதை இனி விசாரிப்போம்.

ஜீ. ஏ. சுந்தரம் ஐயர், பி.ஏ., பி.எல்.

பிரஸிடண்டு லிங்கன்

ABRAHAM LINCOLN

அப்ராகாம் லிங்கன் (Abraham Lincoln) 1809ஞு பிப்ரவரிமீ 12வ அமெரிகாவில் கேண்டகி ஸமஸ்தானத்தில் ஓரிழிந்த ஏழைக் குடிசையில் பிறந்தவர். அவர் தந்தை தாமஸ் லிங்கன், ஒரு திறமையற்ற சோம்பேறித்தச்சன். அவன் தன் தொழிலைச் செம்மையாகப் புரியவும் அறியா திருந்தான். சிக்கன ஜீவனத்தையாவது சாமர்த்தியமான செய்கையாவது அவன் கண்டறிந்ததில்லை. அப்ராகாமின் தாய் நான்ஸி (Nancy) உழைப்பும் பொறுமையுமுள்ள ஸ்திரீயாயிருந்தபோதிலும் தாமஸின் அறிவற்ற முரட்டுக் காரியங்களுக்காக மனநொந்து வாடினாள். கெண்டகியைவிட்டு இந்தியானா ஸமஸ்தானத்துக்குப் போய்த் தங்கிய சில காலத்துக்குள் அதாவது 1818-வது வருஷத்தில் நான்ஸி ஒருவித சுரத்திலடிபட்டு இறந்தாள். அப்ராகாமுடன் கூடப் பிறந்தவர்கள் ஒரு தமக்கையும் ஒரு தம்பியும். தமக்கைக்குப் பதினைந்து வயதிலேயே கல்யாணமாகி இளமையிலேயே உயிர் நீத்தாள். தம்பி சிசுவாயிருக்கும் போதே, உம்பருலகு சென்றான்.

நான்ஸி இறந்த பதின்மூன்று மாதத்துக்கெல்லாம் தாமஸ் ஒரு பிள்ளையும் இரண்டு பெண்ணுடன் கூடிய ஸாலி ஜான்ஸ்டன் என்ற விதவையை மணந்துகொண்டான். தாமஸுக்குத் தன் மகன் அப்ராகாமிடம் உள்ளன்பு இருந்ததோ என்னவோ தெரியாது. ஆனால் அவன் அப்ராகாமை தினம் காரணமின்றிப் புடைத்து வந்ததுண்மை. ஸாலி மாத்திரம் அப்ராகாமை அதிகப் பிரியத்துடன் வளர்த்து வந்தாள். அவரும் தன் மாற்றாந்தாயை அதிக மதிப்புடனும் விசுவாசத்துடனும், கடுத்த முகத்தைக் காட்டாமலும், எதிர்த்துப் பேசாமலும் பாராட்டி வந்தார். ஸாலியைப் பற்றிப் பின்னொருதரம் அப்ராகாம் கூறுங்கால் புனிதவதியென்றும் பரதேவதையே தன்னைச் சம்ரட்சிக்க வேறுருக்கொண்ட மாற்றாந்தாயென்றும் இவ்வுலகில் குத்தும் அடியும் வசையுமே தன் பங்காக விருக்குமென் றெண்ணியிருந்த தன்னை ஆளாகச் செய்த மாதா வென்றுஞ் சொல்லியிருக்கிறார். அப்ராகாம் கற்று விருத்திக்கு வரவேண்டுமென்ற கவலை தாமஸுக்கு எப்பொழுதுமில்லை. அவர் மாற்றாந்தாய்தான் அவரைப் பாடசாலைக்கனுப்பி வேண்டிய சௌகரியங்களைச் செய்வாள். அவர் பாடசாலையில் பாலியத்திலேயே நன்னடைக்கைகளை நன்றாய்க் கற்றுக்கொண்டார். ஜீவஹிம்சை செய்வதை அவர் எப்பொழுதும் வெறுத்து வந்தார். காருண்யமும் தயாள குணமும் அவரிடம் இளமைப் பருவமுதல் குடிகொண்டிருந்தன. பாடசாலைப் பிள்ளைகள் ஆமைகளைப்பிடித்து அவற்றின் முதுகில் நெருப்புத்தணலை வைத்து வேடிக்கைபார்ப்பதுண்டு. அப்ராகாம் இக்கொடிய செய்கைகளைக் கண்டித்து ஜீவஹிம்ஸை கூடாதென்பதைப் பற்றி பாடசாலையில் முதல் முதல் உபந்நியாசஞ் செய்தார்.

அப்ராகாம் சமத்காரமாகப் பேச வல்லவர். எவ்விஷயத்தைப்பற்றிப் பேசியபோதிலும் முடிவில் அவ்விஷய சம்பந்தமான சிறு கதையைச் சொல்லி முடிப்பார். வேலை செய்யும்போதும் விளையாடும்போதும் வேடிக்கையாகப்பேசித் தன் நண்பர்களைக் களிக்கச் செய்வார். சிறு வயதிலேயே ராபின்ஸன் குருஸோ, ஈசாப் கட்டுக்கதைகள் முதலிய நூல்களைப் பாடஞ் செய்திருந்தார். எப்புத்தகம் படித்தபோதிலும் அவர் படித்ததின் கருத்தைக் குறிப்பெடுத்துக் கொள்வது வழக்கம். உயர்ந்த ஞாபகசக்தியாவது புகழத்தக்க புத்திசாலித்தனமாவது அவரிடம் இயல்பாகக் கிடையாது. ஊக்கத்தினாலும் விடா முயற்சியினாலுமே அவர் அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

அவர் 16-வயதாயிருக்கும்போது கல்வி கற்பதற்காகத் தினம் 9-மைல் தூரத்திலுள்ள ஒரு பாடசாலைக்கு நடந்து சென்றுவருவார். அச்சமயம் அவர் கிட்டத்தட்ட 6-அடி 4-அங்குல உயரம் வளர்ந்திருந்தார். காற்றிலும், மழையிலும், வெயிலிலும் அடிபட்டதால் அவர் தேகம் கருத்து சுருக்கம் விழுந்து லட்சணமின்றி இருக்கும். அவருக்கு எப்பொழுதும் எழுதுவதிலும், படிப்பதிலும், கவி கட்டுவதிலும் பிரியமேயன்றிக் கஷ்டமான வேலை செய்வதில் இஷ்டமிராது. பாடசாலைவிட்ட நேரங்களில் அவர் தன் தந்தைக்காக நிலத்தைச் சாகுபடிசெய்ய வேண்டியிருந்தது. அப்படி வீட்டில் வேலையில்லாவிடில் அயலாருக்குக் கூலிவேலைசெய்து திரவியசம்பாத்தியம் செய்யும்படிக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். அதிகாலையிலெழுந்து அவர் வேலை யாரம்பிக்க வேண்டும். அப்படியிருந்தும் அவர் அந்திநேரத்தில் நள்ளிரவுவரையில் படிப்பார். அவருக்குப் படிப்பென்றாற் கொள்ளும், வேலையென்றாற் கடிவாளமுமாயிருந்தது. அவர் தந்தை அவரை வேலை செய்யவெளியே யனுப்பினால் ஜனங்களைக் கூட்டி வைத்துக்கொண்டு வேடிக்கையாகக் கதைகளையும் புராணங்களையுஞ் சொல்லித் திரிவார். இப்படி வீண்பொழுது போக்குவதைத் தாமஸ் அடிக்கடி கண்டு கோபம் பொங்கி அவரை நெட்டித்தள்ளி வேலைக்கிழுத்துச் செல்வதுண்டு. பால்யத்தில் அப்ராகாமுக்கு மதத்தில் நம்பிக்கையாவது கடவுளிடத்தில் பக்தியாவது அதிகமாகக் கிடையாது. ஆனால் அவர் மதவிஷயங்களைப்பற்றியும் ராஜாங்க விவகாரங்களைப்பற்றியும் பிரசங்கிக்குமிடங்களிற் சென்று அதிக கவனத்துடன் உபந்நியாசங்களைக் கேட்டிருந்து மறுநாள் தானும் ஒரு மரக்கட்டையின்மேலேறி நின்றுகொண்டு முதல் நாள் பிரசிங்கித்தவர்போலவே கையையுந் தலையையும் ஆட்டியும் குரலைத் தூக்கியுந் தணித்தும் முகத்தைச் சுளிக்கியும் சைகைகளைச் செய்தும் பிரசங்கிப்பார். ஸ்திரீகள் அபலையென்று அவர்களுக்காக அவர் எவ்வித வேலையுஞ் செய்வார். அதனால் அச்சுற்றுப்பக்கத்து மாதர்களெல்லாம் அவரிடம் மிகவும் பற்றுக்கொண்டிருந்தார்கள்.

லிங்கன் அவர் வயதுக்கு மிக்க பலவானாயிருந்தார். அறுநூறு பவுன் கனமையை எளிதாய்த் தூக்கிச் செல்வார். நான்கு ஆள்களால் தூக்கமுடியாதிருந்த ஒரு பெருந் தம்பத்தை அவர் அலட்சியமாகத் தூக்கியெடுத்துச் சென்றிருக்கிறார், கோடாலியை யெடுத்து வெட்டினால் அவர் வெட்டு ஏனையோரினைவிட மரத்தில் அதிக ஆழம் பதியும். மல்லயுத்தத்தில் அவருக்கு சமானம் அப்பிரதேசங்களிலேயே கிடையாது. மாகாணங்களிலெல்லாம் மகா வீரனென்று விருதுபெற்றுவந்த ஒரு மல்லக சட்டியை அவர் ஒருசமயம் எளிதாய் வீழ்த்தியதுண்டு. அந்நாட்டில் குடியானவர்களெல்லாம் மிதமிஞ்சிக் குடித்து வெறித்திருப்பவர்கள் இருந்தும் லிங்கன்மாத்திரம் குழந்தைப் பருவமுதல் மதுபானத்தையும் சுருட்டுமுதலியவைகளைப் புகைப்பதையும் விலக்கிவந்தார். இவ்வறிவான செய்கை அனைவருக்கும் ஆச்சரியத்தை யுண்டுபண்ணிற்று. களைக்காமல் அவர் எத்தனைகட்டைகளை வேண்டுமாயினும் பிளப்பார்.

1825-ஞுத்தில் அவர் ஒரு கால்வாய்ப் படகு தள்ளும் வேலையும் ஒழிந்த நேரங்களில் எஜமானன்வீட்டில் தானியமரைத்தல், தண்ணீர் நிரப்புதல், கட்டை பிளத்தல் முதலிய சுற்றுவேலைகளும் செய்ய ஜேம்ஸ் டெய்லர் என்பவரிடமமர்ந்தார். 1827-ஞுல் அவர், மதுவிலக்கு, அமெரிக்கா ராஜதந்திரம் என்னும் இரண்டு விஷயங்களை விரித்தெழுதி ஒஹியோவிலுள்ள ஒரு சமாசாரப் பத்திரிகைக் கனுப்பினார். 1828ஞுல் அவர் ஜெண்ட்ரி என்பவரிடம் வியாபாரப்படகு தள்ளுந்தொழிலி லமர்ந்தார். வியாபாரவெல்லை சுமார் 1,800 மைல் தூரம். ஒருநாள் இரவு படகைக் கட்டிவிட்டு நித்திரை செய்துகொண்டிருக்கையில் தரையிலிருந்துவரும் காலடி சத்தத்தைக்கேட்டு அப்ராகாம் எழுந்துபார்த்தார். அப்பொழுது 7 பேர் நீகிரோக்கள் கொள்ளையடிக்கவோ அல்லது தன்னைக் கொல்லவோ படகை நோக்கி வருவதைக் கண்டு அப்ராகாம் தைரியத்தை விடாமல் ஒரு சலாகையெடுத்துப், படகில் தாண்டிய முதல்வனைக் குத்தி நீரில் வீழ்த்தினார். இப்படி நான்குபேரை வீழ்த்தவே மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். இச்சமயத்தில்

அப்ரகாமுக்கு ஒருகாயமும் பட்டு அதன் வடு அவர் ஆயுள்நாள் முழுது மிருந்தது. இவர் எவ்வளவு சம்பாதித்தபோதிலும் அவர் தந்தை அதை ஒருங்கப் பற்றிக்கொள்வாராதலால் அப்ராகாம் வேறூர் சென்று ஒரு குடிகாரச் சிநேகிதனுடன் சேர்ந்து வியாபாரஞ்செய்யத் தலைப்பட்டார். அதனால் பெரிய நஷ்டமும் விளைந்து கடனுமேற்பட்டது. இக்கடன் முழுதுக்கும் அப்ரகாமே உத்தரவாதமாகி நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்துத் தீர்த்துவந்தார். இச்சமயம் அவர் தனக்கு ஒரு நண்பர் கடனாகக் கொடுத்திருந்த ஸர்வே புத்தகமொன்றைப் படித்து ஸர்வே தொழிலறிந்துகொண்டு அதனால் ஜீவனஞ் செய்துவந்தார்.

அவர் எடுத்துக்கொண்ட காரியத்தை யெல்லாம் மிக்க சிரத்தையுடனும் மனப்பூர்வமாயும் செய்ததால் அவர் யாவராலும் விரும்பப்பட்டார். அவர் யாரையும் முகஸ்துதி செய்வதுங் கிடையாது. யாருக்குங் குற்றேவல் புரிந்து அவர்களுடைய நன்மதிப்பைப் பெற முயலுவதுங் கிடையாது. தன் யோக்கியதையாலும் பிரயத்தனத்தாலும் மேன்மைப்பட வேண்டுமென்பது அவர்கொள்கை. இதனால் அவருக்கு எப்படிப்பட்ட இடையூறு நேர்ந்தபோதிலும் அதினின்று தப்புவிக்கவும் அவருக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்யவும் நண்பர்கள் குறைவின்றி இருந்து வந்தார்கள்.

1833௵த்தில் லிங்கன் புதுசேலம் என்னும் ஊரில் போஸ்டுமாஸ்டர் வேலை வகித்துவந்தார். இந்த உத்தியோகத்தில் அவருக்கு வேலை அதிகமாக இராதிருந்ததால் தபாலாபீசில் வரும் சமாசாரப் பத்திரிகைகளைப் படித்தும் படிக்கத் தெரியாதவர்களுக்கு வரும் கடிதங்களைப் படித்துக் காட்டியும் அறிவைப் பெருக்கிவந்தார். அவரது கந்தையுடையும் ஏழ்மைத்தனமும் அவரை விட்டகலாமலிருந்தபோதிலும் அவர் பட்சபாதமின்மைக்கும், இளகிய நெஞ்சத்துக்கும், நியாயத்தை யெளிதிலறியும் நுண்ணறிவுக்கும் ஜனங்களால் மிகவும் நன்கு மதிக்கப்பட்டு வழக்குகளைத் தீர்க்கவும் பந்தயங்களில் நியாயஞ்சொல்லவும் அடிக்கடி நிர்ப்பந்திக்கப்பட்டார்.

அப்ரகாம் 25-வயது ஆவதற்குள்ளேயே யாருடைய போதனையுமின்றித் தானே புஸ்தகங்களைப் படித்து நியாய சாஸ்திரத்தில் நிபுணரானார். இல்லினாய் சமஸ்தானத்தின் பிரதான நகர் ஸ்பிரிங்பீல்டுக்கு மாற்றப்பட்டதும், அப்ரகாம் அவ்வூரிற் றங்கி நியாயவாதியாக ஜீவனஞ் செய்துவந்தார். அவர் அநியாயமான வழக்குகளை வாதிக்க உடன்படமாட்டார். ஏழைகளுக்குப் பணம் வாங்காமலே வாதித்து வழக்கை ஜயித்துக்கொடுப்பார். வறுமையாய் பீடிக்கப்பட்டபோதிலும் தர்மசிந்தையும் பரோபகாரமு மேற்கொண்டு ஜனங்களுக்கு அனுகூலஞ் செய்வதிலேயே கருத்தாய் இருந்து வந்தார். நியாயவாதத்தில் மிக்க சமர்த்தனென்று ஆரம்பத்திலேயே பெயரும் பெற்றார்.

1834௵த்தில் அவர் இல்லினாய் சட்டநிருபணசபைக்குமெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தஸ்துக்குத் தகுந்தபடி நல்லுடை தரித்துக் கொள்ளும்பொருட்டு ஒரு நண்பர் அவருக்கு 200 டாலர் கடன்கொடுத்தார். அப்பொழுதுதான் அவர் தன் ஆயுளில் முதல் முதல் நல்லுடை தரித்துக்கொண்டார். 1835௵த்தில் தான் காதலித்திருந்த ஒரு யுவதி வேறொருவனுக்காக மனமுடைந்து இறந்ததால் லிங்கன் சித்தபிரமை யடைந்து முழுதுந்தேராமலே வியாகூலப்பட்டுக்கொண்டிருந்தார். சட்ட நிருபண சபையிற் சேர்ந்த இரண்டொரு வருஷத்தில் வாது செய்யாமலே விஷயங்களை யெல்லாம் நன்றாகக் கவனித்து வந்தார். இச்சபையிற்றான் அவர் தன் ஜன்ம விரோதியும் அதிபராக்கிரமனுமாகிய ஸ்டீபன் டக்லாஸை முதல் முதல் சந்தித்தார். இச்சபையிற்றான் அவர் முதல் முதல் அடிமை விலக்கைப்பற்றித் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

இச்சமயம் ஐக்கிய மாகாணத்து ஜனங்கள் மூவிதக்கொள்கை யுடையவர்களாக வகுக்கப்பட்டிருந்தார்கள்.

வர்ஜனியர் (Abolitionists).—இவர்கள் மாகாணங்களில் அடிமைகளே யிருக்கக் கூடாதென்றும், வெள்ளை மனிதர்களும் கருப்பு மனிதர்களும் வித்தியாசமின்றிச் சகல சுதந்தரங்களுக்கும் ஒரேவிதமாக உரித்தாகவேண்டு மென்றும், கருப்பு மனிதர்களின் க்ஷேமத்தைக்கருதி அவர்களை முறியினின்றும் உடனே விடுவிக்கவேண்டு மென்றுங் கூறுபவர்கள்.

விஸர்ஜனியர்:-(Emancipationists or Free soil party):—இவர்கள் அடிமையாயிருந்தவர்கள் இருந்து தீரட்டும். இனிமேலாவது அடிமைத்தனத்தைப் பரவச்செய்யக்கூடாது. இப்பொழுது அடிமைகளில்லாத சமஸ்தானங்களிலும் இன்னும் புதிய நாடுகளிலும் அடிமைத்தனத்தை யனுகவொட்டாது செய்யவேண்டும். நாளடைவில் அடிமைத்தனம் எவ்விடத்திலும் நசித்து ஜனங்கள் சுயேச்சையாகவும் சுபிட்சமாகவும் வாழவேண்டுமென்று அபிப்பிராயப்படுவார்கள். அடிமைத்தன மில்லாவிடில் நீகிரோ ஜாதியார்களுக்கு க்ஷேமமென்று இவர்கள் வாதிப்பதில்லை. அடிமைகளில்லாவிடில் வெள்ளையர்களுக்குள் தாரதம்மியமும் ஏற்றக்குறைவு மிராது. இப்பொழுது அடிமைகளைக்கொண்டு வேலைவாங்கிக் கொண்டு சோம்பேறித்தனமாய்ப் பிரபுத்துவம் செய்துவரும் வெள்ளையர்கள் நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழைக்கும் வெள்ளையர்களைப் போல உபயோகமான வேலைகளைப் புரிந்து தேசவிருத்தியைப் பாராட்டச் செய்யவேண்டுமானால் அடிமைகொள்ளுதலை யகற்றவேண்டுமென்று வாதிப்பார்கள்.

ஊர்ஜிதர்கள் (Slave-owners):—இவர்கள் அடிமைத்தொழிலை எங்கும் வியாபிக்கச் செய்யவேண்டுமென்றும் கருப்பு மனிதனுக்கு சுதந்தரமாவது சுயேச்சையாவது எப்பொழுதுங் கிடையாதென்றும் ஆடு மாடுகளைப்போல நீகரோக்கள் யஜமானுடைய பொருள்களா மென்றும் கருதுபவர்கள்.

இம்மூவகுப்பாரில் அப்ரகாம் இரண்டாவதாகிய விஸர்ஜனியரைச் சேர்ந்தவர். இவர் காடுகரம்பாயிருந்த சமஸ்தானங்கள் அடிமைகளிருந்ததாற்றான் சாகுபடிசெய்யத்தக்க செழிப்புள்ள பூமியாக மாற்றப்பட்டன வென்றும் ஒரு காலத்தில் அவசியமாயிருந்த அடிமைகள் தற்காலத்துக்கு வேண்டியதில்லை யென்றும் ஆனால் தேசசட்டம் அடிமை கொள்வதற்கு ஆட்சேபனை செய்யாமலிருந்தபடியால் அச்சமயம் அடிமைகளாக வகுப்பவர்கள் அவ்விதமே யிருந்து தீரவேண்டுமென்றும் ஆனால் புதிதாக யாரும் அடிமைகொள்ளக்கூடாதென்றும் அபிப்பிராயம் கொண்டிருந்தார். இல்லினாயிலும் மற்றும் அநேக சமஸ்தானங்களிலும் வர்ஜனியர் தேசத்துரோகிகளென்று கருதப்பட்டார்கள். அவர்களுடைய மனுக்களைக் கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாதென்று இல்லினாய் சட்ட நிருபண சபையில் தீர்மானமாயிற்று.

ஆனால் அப்ரகாம் லிங்கன் மாத்திரம் மற்றொருவனுடைய அங்கீகாரத்தைப் பெற்று இத்தீர்மானத்தை மென்மையான பதங்களாற் கண்டித்து ஒரு விண்ணப்பமனுப்பினார். ஆனால் இவருடைய முயற்சி யெதுவும் ஆரம்பத்தில் வெற்றி பெறுவதில்லை. ஒன்றிரண்டு தோல்விகளுக்குப் பின்தான் அவரது கொள்கை பலப்படும். ஆனால் அவர் தோல்வியால் மனந்தளர்வது கிடையாது. ஊக்கமும் விடாமுயற்சியுமே அவரது வெற்றிகளுக்கு முதற்காரணம்.

1842௵ நவம்பர்மீ லிங்கன் உயர்குலத்துதித்தோமென் றிறுமாப்புக்கொண்டிருந்த மிஸ் டாட் (Tad) என்பவளை மணந்துகொண்டார். இதனால் லிங்கன் பெருமைக்காசைப்படுபவரென்று நண்பர்களவரை இகழத் தொடங்கினார்கள். அன்றியும் மதவிஷயத்தில் அவர் உபேக்ஷையாயிருந்தது ஜனங்கள் அங்கீகரிக்கத் தகாததாயிருந்தது. வாலிபத்தில் அவர் சில நாஸ்திகர்களின் கிரந்தங்களைப் படித்ததால் அவருக்குக் கொஞ்ச காலம் மதவிஷயத்தில் நம்பிக்கை தளர்ந்து வந்தது. ஆனால் வயது முதிர அவருக்குக் கடவுளில் நம்பிக்கையும். இறந்த பிறகு வேறொருவருக்குத் தான் வழி சொல்ல

வேண்டுமென்கிற உண்மையும் புலப்பட்டது. அவர் பிறகு செய்த பிரசங்கங்களிலெல்லாம் கடவுளின் மாட்சிமையையும், அபாரசக்தியையும், கபடநாடக சூத்திரத்தையும், மாயோவினோதங்களையும் புகழ்ந்து உள்ளப் பூரித்து மயிர்க்கூச்செறிவார். வெகு ஜனங்களால் ஆமோதிக்கப்படும் விஷயம் யதார்த்தமாகவே யிருக்கவேண்டுமென்பது அவரது நம்பிக்கை.

1846௵த்தில் லிங்கன் காங்கிரஸ் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவரது வைரி டக்லாஸ் அப்பொழுது அக்காங்கிரஸில் ஒரு ஸெனடாராகவிருந்தார். அச்சமயம் ஐக்கியமாகாணங்களுக்கும் மெக்ஸிகோ நாட்டுக்கும் யுத்தம் நிகழ்ந்தது. லிங்கனுக்கும் அவர் கட்சியார்க்கும், யுத்தஞ்செய்து தேசங்களைப் பிடிப்பதில் கொஞ்சமும் சம்மதமில்லை. போரை யெதிர்த்து வாதாடும் லிங்கன் போர்க்களத்தில் கஷ்டப்படும் வீரர்களுக்கு உணவும் சௌகரியங்களுமளிக்க திரவிய விரயஞ்செய்ய உடன்படுவார். இதனால் உறுதியான கொள்கை யற்றவரென்று லிங்கனைச் சிலர் பரிகசித்தார்கள். 1849௵ முதல் 1854 வரையில் அவர் காங்கிரஸ் மெம்பராயிராமல் தன்னூரிலேயே நியாய வாதியாயிருந்து திரவியஞ் சம்பாதித்து வந்தார். குற்றவாளியென்று தன் மனதுக்குத் தெரிந்த ஒருவன் வழக்கை யவர் ஏற்கவேமாட்டார். தான் வாதிக்கும்போது எதிர்க்கட்சியில் நியாயமும் உண்மையு மிருப்பதாகத் தோன்றினால் அவ்விதமே சொல்லித் தன் வாதத்தை நிறுத்திவிடுவார். ஏழைகளுக் கிரக்கமும் கஷ்டப்படுபவர்களுக் கனுதாபமுங் காட்டி அவர்களுக்குத் தன்னால் கூடிய உபகாரத்தைச் செய்வார்.

இச்சமயம் ஊர்ஜிதர்கள் நாளுக்கு நாள் பெருகி பரவிவந்தார்கள். ஐக்கியமாகாண ஜனத்தொகையில் மூன்றிலொரு பாகத்தார் மாத்திரமே ஊர்ஜிதராயிருந்தபோதிலும் அவர்கள் ஏதோ உத்தியோகங்களில் மூன்றில் இரண்டு பங்கை வகித்திருந்தார்கள். இதனால் ஊர்ஜிதருக்கனுகூலமான பல சட்டங்களேற்படுத்தப்பட்டன. பிரபலமானவர் ஜனியர்களைக் கொல்பவர்களுக்கு ஏராளமான திரவியம் பரிசாகக் கொடுக்கப்படும் என்று வெளிப்படையாக ஊர்ஜிதர்கள் விளம்பரஞ்செய்தார்கள். ஆபிரிக்காவுக்கும் தென் சமஸ்தானங்களுக்கும் நேராகவே அடிமை வியாபாரஞ் செய்ய ஏற்பாடுகள் நடந்துவந்தன. மெக்ஸிகோவிலிருந்து புதிதாகக் கைப்பற்றப்பட்ட சமஸ்தானங்களிலும் அடிமைத் தொழிலைப் பரவச்செய்யவேண்டுமென்று ஊர்ஜிதர்கள் தீர்மானித்தார்கள். இது கூடாதென்று டேவிட் வில்மாட் என்பவர் இரண்டு மணி நேரம் காங்கிரஸில் எதிர்த்து வாதித்தும் பயனில்லாமற் போயிற்று. கடைசியில் கலிபோர்னியா சமஸ்தானத்தாரே தங்களுக்கு அடிமைகள் தேவையில்லை யென்று தீர்மானித்ததின் மேல் ஊர்ஜிதர்களின் மும்முரம் அடங்கிற்று.

1854௵த்தில் டக்லாஸ் என்பவர் ஐக்கிய மாகாணங்களி லெங்கும் அடிமைத்தொழிலைப் பரவச் செய்யவேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டுவந்தார். இதற்குமுன் மிஸௌரி சமஸ்தானத்துக்கு வடக்கிலும்மேற்கிலுமுள்ள பாகங்களிலெல்லாம் அடிமைகளே யிருக்கக்கூடாதென்றும் அதற்குத் தெற்கிலுங் கிழக்கிலுந்தான் முறிகொள்ளலா மென்றுஞ் சட்டமிருந்தது. டக்லாஸ் கொண்டுவந்த இப்புதுசட்டம் காங்கிரஸில் அதிகாரம் வகித்திருந்த ஊர்ஜிதர்களுடைய சகாயத்தால் நிரூபணமாயிற்று. இது தான் பின்நேர்ந்த மாகாண யுத்தத்துக்கு முதற் காரணம். கான்ஸாஸ் சமஸ்தானத்து ஜனங்களெல்லாம் சாந்தமும் உழைப்பும் பொருந்திய உழவர்கள். அவர்கள் அடிமைத்தனத்தை வெறுத்து வந்தார்கள். ஆனால் அயல் சமஸ்தானங்களிலுள்ள ஊர்ஜிதர்கள் அடிக்கடி கான்ஸாஸில் புகுந்து சிலகாலந்தங்கி வழிபறித்தும் கொள்ளை யடித்தும் கான்ஸாஸ் நாட்டாரின் மனோரதங்களை ஈடேறவொட்டாமற் செய்துவருவார்கள். இந்த அக்கிரமங்களையறிந்த வடசமஸ்தானத்தார் கான்ஸாஸ் ஜனங்களுக்கனுகூல

மாக அங்கு வந்து குடியேறி ஊர்ஜிதர்களின் தீவிரத்தைக் குறைத்து வந்தார்கள். இந்த சமயத்தில்தான் ஊர்ஜிதர்களின் நடக்கையை ஆமோதித்தும் வியந்தும் பேசிய டக்லாஸை எதிர்த்து லிங்கன் புகழும் பெருமையும் பெற்றார். அமெரிக்காவில் பிரபல வாதாடி யென்றனுமானிக்கப்பட்ட டக்லாஸ் லிங்கனால் வாதில் அறவும் முறியடிக்கப்பட்டார்.

1858௵ ஜூன்மீ லிங்கன் மாகாண ஸெனட் மெம்பராக நியமிக்கப்பட்டார். அவர் அச்சமயம் செய்த 'பிரிந்தவீடு' என்னும் பிரசங்கம் அனைவராலும் ஒப்புயர்வற்றதென்று அங்கீகரிக்கப்பட்டது. இவ்வளவு சாமர்த்தியமிருந்தும் லிங்கன் ஒழுக்கமும் அடக்கமும் எப்பொழுதும் தவறமாட்டார். இவ்வடக்கமே அவருக்குச் சிறப்பை விளைத்தது. எப்படியெனில் இவரினும் சூழ்ச்சியும் கீர்த்தியும் வாய்ந்தவர்கள் காங்கிரஸில் சிலர் இருந்தபோதிலும் அவர்களுக்குள்ளிருந்த பொச்செரிப்பினாலும், வஞ்சகத்தினாலும் அதிகப் பிரக்கியாதி பெறாது அடங்கியிருந்த ஒருவனை அவர்களே பிரஸிடண்டாக நியமனஞ் செய்தார்கள். லிங்கன் இறுமாப்பாவது ஆடம்பரமாவதின்றி எளிய வண்ணமாகத் தன் கருமத்தைக் கருத்தாகச் செய்துவந்ததால், மகோன்னத பதவியாகிய பிரஸிடண்டு பதவி அவருக்கு 1860௵ நவம்பர்மீ கிடைத்தது. இதற்குச் சில நாளைக்கு முன்பு ஒரு நண்பர் அவரிடம் பிரயத்தனஞ் செய்தால் அவ்வுன்னத பதவியை ஒருசமயம் அவர் அடைந்தாலு மடையலாம் என்று சொன்னபொழுது லிங்கன் "நான் பிரஸிடண்டாக விருக்கத் தகுந்தவனல்லவென் றெண்ணுகிறேன்" என்றார்.

லிங்கன் எதைப்பற்றிப் பேசியபோதிலும்நியாயத்தையும் நன்னடக்கையையும் ஒளிவு மறைவின்றியாவரும் பிரியப்படும்படியாக எடுத்துச் சொல்வார். அவர் ஆட்சிரீதியையாவது, தென் சமஸ்தானத்தையாவது, ஊர்ஜிதர்களையாவது கடிந்து தூறிப்பேசினதில்லை. உருவத்தில் வசீகர சக்தி யுடையவராகத் தோன்றாமற் போனபோதிலும், கேட்பவர்கள் ஆரம்பமுதல் கவனத்தை அவர் பேசுவதிலேயே செலுத்தும்படிச் செய்யுந் திறமையுண்டு. அவர் குரல் இனிமையா யிராது. ஆனால் தன்னில் மாறபிப்பிராயங்கொண்டவனும் ஒட்டிக்கொள்ளும்படியாக முதல் அரைமணி நேரம் பேசிவிட்டுப் பின் சம்பாஷணையைத் தனக்கனுகூலமாகத் திருப்பிக்கொள்ளுஞ் சக்தி வாய்ந்தவர். அவரை ஏதேனுங் கேள்வி கேட்டால் அதற்கு நேரான உத்தரந் தரமாட்டார். ஆனால் வினாவுக்கு விடைதெளிவாய் விளங்கும்படியான ஒரு சிறு விருத்தாந்தத்தைச் சொல்லி முடிப்பார். மேலான ஸ்தானத்தை வகிக்க வேண்டுமென்று லிங்கனுக்கு ஆசை அதிகமாயிருந்தபோதிலும் அதை அவர் வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார்.

வாஷிங்டனில் லிங்கன் பிரஸிடண்டாக நியமிக்கப்பட்டபோது அவர் தன்னூர் ஸ்பிரிங்பீல்டில் ஓய்வுநாள் கழித்துவந்தார். லிங்கனுக்கு புதுப்பதவி கிடைத்த சமாசாரம் தந்திமூலமாய்த் தெரிந்ததும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் அவர் இல்லமேகி அவருக்கு வாழ்த்துதல் கூறி மகிழ்ந்தார்கள்.

ஐக்கிய மாகாணங்களில் சகல உத்தியோகங்களும் பிரஸிடண்டால்தான் நியமனஞ் செய்யப்படவேண்டும். லிங்கன் பிரஸிடண்டான விஷயம் தெரிந்ததும், நூற்றுக்கணக்கான ஜனங்கள் தினம் அவரிடம் வந்து உத்தியோகத்துக்காக மன்றாடினார்கள். லிங்கன் பட்சபாதமும் சுயநலமும் பாராட்டாதவராதலால் எக்கொள்கைகளையுடைத்தானவர்களா யிருப்பினும் உண்மையில் யோக்கியதை யுள்ளவர்களெவர்களோ அவர்களுக்கு மாத்திரமே உத்தியோகங்கொடுத்து மற்றவர்கள் வேண்டுகோளைக் கண்டிப்பாய் மறுத்துவிடுவது வழக்கம். யோக்கியதை யுடையவர்களாயிருப்பினும் மனுதாரர்கள் லிங்கனுடைய நண்பர்களாயிருந்தால் அவர்களுக்கு உத்தியோகங் கிடைப்பதரிது.

லிங்கன் பிரஸிடண்டாவதற்கு நான்கு வருஷ காலமுதல் தென்சமஸ்தானங்கள் ஐக்கியமாகாணங்களினின்றும் பிரிந்து சுயமே ஆட்சிசெய்ய ஏற்பாடு செய்துகொண்டு வந்தன. இதன் காரணம் வடசமஸ்தானத்தாரெல்லாம் வர்ஜனியராயும் விஸர்ஜனியராயு மிருந்துவந்ததே. வாஷிங்டனில் முக்கிய மந்திரிகளும் பிரபல உத்தியோகம் வகித்தவர்களும் ஊர்ஜிதர்கள். இவர்கள் தந்திரமாக வடசமஸ்தானங்களிலிருந்து ஆயுதங்களையும் திரவியங்களையும் யுத்தசாதனங்களையும் தென் சமஸ்தானங்களுக்கு அனுப்பிவந்தார்கள். சமஸ்தானங்கள் பிரிந்து பலவீனப்படுவதில் லிங்கனுக்குக் கொஞ்சமும் சம்மதமில்லை. எவ்விதமாயாவது சமஸ்தானங்களுக்குள் ஐக்கியமுண்டாகி அவை ஒரு மேலாட்சிக்குட்பட்டிருக்கவேண்டுமென்பது அவர் கருத்து. ஆனால் தென் சமஸ்தானங்களோ தம்மிஷ்டப்படி வட சமஸ்தானங்கள் நடவாவிட்டால் பிரிந்து விடுவதாகப் பயமுறுத்தி வந்தன. லிங்கனுடைய விஸர்ஜனக்கொள்கைக்காக அவரைக் கொலைசெய்து விடுவதென்று ஊர்ஜிதர்கள் கங்கணங் கட்டிக் கொண்டிருந்தார்கள். லிங்கன் உயிரிழக்க விருப்பதைக் கடிதமூலமாகத் தெரிவித்து அவருக்குப் பீதியையு முண்டுபண்ணி வந்தார்கள். முதல் சில கடிதங்களைப் படித்து ஜாக்கிரதையாயிருந்த லிங்கன், தினம் அம்மாதிரி கடிதம் கிடைக்கவே விசாரம் நீங்கி அவற்றைப் பொருட்படுத்தாமலே யிருந்தார்.

லிங்கன் பிரஸிடண்டாக நியமிக்கப்பட்ட சில தினங்களுக்கெல்லாம் மாகாணங்களினின்றும் தென்கரோலினா பிரிந்தது. உடனே இன்னும் ஆறு சமஸ்தானங்கள் தாமதிக்காமல் பிரியத் தலைப்பட்டன. டென்ஸி, வர்ஜீனியா, வட கரோலினா இவைகள் முன் பிரிந்தவைகளைப் பின் தொடர்ந்தன. இப்பிரிவினைக்கு சூத்திரதாரிகள் வாஷிங்டனிலுள்ள மந்திரிகள் தாம் இருந்தும் லிங்கன் அதிஜாக்கிரதையாயும் பொறுமையாயும் இருந்தார். பிரிந்துபோன சமஸ்தானங்களைத் தாக்கவாவது கலகஞ்செய்தவர்களைத் தண்டிக்கவாவது அவர் ஆக்ஞாபிக்கவில்லை. ஆனால் 1861 வருஷத்தில் அவர் மிக்க சாமர்த்தியமும் நற்குணமும் பொருந்திய மந்திரிகளை ஏற்படுத்திக்கொண்டார். அதே வருஷத்தில் ஏப்ரல் மாதத்தில் ஊர்ஜிதர்கள் மாகாணங்களுக்குச் சொந்தமான ஸம்டர் (Sumter) என்னுங் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்த சமாசாரம் வடசமஸ்தானத்தார்கள் காதில் பட்டதும், இவர்கள் கோபம்பொங்கித் தென்பாகத்தார்களுடன் தாமதமின்றிப் போர்புரிய வேண்டுமென்று ஆரவாரித்தார்கள். லிங்கனும் யுத்தத்துக்கு மாகாணங்களிலிருந்து 75,000 பேர்களைத் தயார்செய்தனுப்பும்படி மசோதா விடுவித்தார். ஒவ்வொரு சமஸ்தானமும் தாமதமின்றி வேண்டிய மனிதர்களையும், ஆயுதங்களையும், திரவியத்தையும் அனுப்பிவிட்டன. இப்படிக் கூடிய சைனியம் சரியாக அணிவகுக்கப்பட்டு தக்க தளகர்த்தர்களின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டு மூலைக்கு மூலை அனுப்பப்பட்டன. லிங்கன் போர்க்களத்திலிருந்து யுத்தம் புரியாமற் போனபோதிலும், தலை நகரிலிருந்துகொண்டு சமயோசிதமான உத்தரவுகளை யனுப்பியும், தேர்ந்த தளகர்த்தர்களை நியமித்தலும், யுத்த வீரர்களையும் ஆயுதங்களையும் சேகரித்து வேண்டிய விடங்களுக்கனுப்பியும் சண்டையை நடாத்திவந்தார். பலவிடங்களில் போர்கள் நிகழ்ந்தன. ஆயிரக்கணக்கான வீரர்கள் படுகாயமடைந்து வீழ்ந்திறந்தார்கள். நூற்றுக்கணக்கான கிராமங்களும் கட்டிடங்களும் பகைவர் தீக்கிரையாயின. ஜயம் மாறிமாறி நேர்ந்தது. இச்சமரில் நீக்ரோக்களும் வடசமஸ்தானத்தார் படையிற் சேர்ந்து வியக்கத்தக்க விதமாய்ப் போர்புரிந்தார்கள். ஊர்ஜிதர்கள் செய்த அக்கிரமங்கள் கொஞ்ச நெஞ்சமல்ல. போரிற் கலக்காத ஜனங்களைச் சுட்டுக் கொன்றார்கள். கைதிகளாக்கிய எதிரிகளைக் கொலைசெய்தார்கள். ஸ்திரீகள், சிசுக்களென்றும் பாராமல் அதஞ்செய்தார்கள். இவ்விதம் நான்கு வருஷகாலம் அதிக மும்முரத்துடன் யுத்தம்

நடந்தது. கடைசியில் லிங்கனுடைய அபார சாமர்த்தியத்தாலும், சேனாதிபதிகளின் திறமையினாலும் வடசமஸ்தானத்தார்கள் முழுதும் வெற்றிபெற்றார்கள். இடையில் இங்கிலாந்து தேசத்தாரும் பிரான்சு நாட்டாரும் இருகட்சியாரும் சமாதானஞ் செய்துவைப்பதாக வந்தார்கள். ஆனால், லிங்கனோ, தன்னுட்டு வாழ்க்கை அயலார் தீர்த்து வைக்கக் கொஞ்சமுமிடங் கொடுக்கவில்லை. 1863 வருஷத்தில் அடிமைகள் விடுதலை செய்யப்பட்டார்கள். 1864-ல் யுத்தமும் ஓய்ந்ததென்னலாம். தென் சமஸ்தானத்தார் தொடர்ச்சியாக அபஜயப்பட்டு சமாதானம் வேண்டினார்கள்.

1866 வருஷத்தில் பிரஸிடண்டு ஸ்தானத்துக்கு அப்ராகாம் லிங்கனே திரும்பவும் நியமனஞ் செய்யப்பட்டார். இதனால் ஜனங்களுக்குண்டான திருப்தி யளவிடப்படாதது. இரண்டுமணி நேரம் இடைவிடாது ஜனங்கள் தோன்றி அவரைக் கைக்குலுக்கிச் சென்றார்கள். வெள்ளையர்கள் மறைந்ததும் நீக்ரோக்கள் தங்களுக்கு சுதந்தரமளித்த மகானைக் கண்காணவேண்டி லிங்கனுடைய அரண்மனைக்குள்ளே நுழைந்தார்கள். அவர்களுடைய ஆர்வத்தையும் பக்தி சிரத்தையையுங் கண்ட லிங்கனுக்கு இரண்டு மணிநேரம் நின்று கைகுலுக்கியதால் உண்டாயிருந்த பெருத்த ஆயாசம் தீர்ந்ததுபோலாயிற்று. லிங்கனைக் கண்டதும் நீக்ரோக்கள் நகைபுரிந்தும் கண்ணீர்விட்டும் பரவசமானார்கள். பேச நாவெழவில்லை. தங்களை ரட்சிக்க வந்த அவதாரபுருஷனென்றே லிங்கனை மதித்தார்கள். கடைசியில் அவர்கள் "கடவுள் தங்களை நீடூழி வாழ்விக்க" என்று வாழ்த்திச் சென்றார்கள். ஜனங்களெல்லாங் குதூகலித்தார்கள்.

இக்குதூகலம் அதிகநாள் நீடிக்க எம்பெருமானுக்குப் பொறுக்கவில்லைபோலும்; பேரானந்தத்திற்குப்பின் துக்கசாகரம் நிலைபெற்றிருப்பது உண்மைபோலும். பாஞ்சோதியையும் மாயை சூழ்கிறது. ஆதித்தனையும் கிரகணம் பிடிக்கிறது. லிங்கனின் உயிரை வாங்கச் சூழ்ச்சிசெய்து கொண்டிருந்த கொலைபாதகர்கள் தருணத்தை யெதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அப்படிப்பட்ட சண்டாளத்துரோகிகளில் பூத் என்பவனொருவன். 1864 வருஷம் ஏப்ரல்மீ 14உ அப்ராகாம் லிங்கன் தன்மனைவியுடன் நாடகசாலை சென்று ஆட்டத்தைப் பார்த்திருக்கும்போது இப்பாபி அவருக்குப் பின்னால் நின்று தலையிற் சுட்டான். உடனே அவர் கண்மூடி தலை சாய்ந்துவிட்டது. பிறகு ஒருவார்த்தையும் பேசவில்லை. வெடிச் சத்தத்தைக்கேட்டதும் ஆட்டப்பந்தலில் பெரிய கலவரம் உண்டாயிற்று. லிங்கனின் மனைவியார் மூர்ச்சையாகி நிலத்தில் விழுந்துவிட்டாள். பூத் தன்னைப்பிடித்த மேஜர் ராத்போனைக் காயப்படுத்திவிட்டுத் தப்பியோடிவிட்டான். மறுநாள் காலை ஏழுமணி 20 நிமிஷத்தில் அப்ராகாம் லிங்கன் உயிர்நீத்தார்.

இக்கொலையைக்கேட்ட ஐக்கிய மாகாணத்தாரெல்லாம் துயரக்கடலிலாழ்ந்தார்கள். புருஷர்கள் நிர்க்கதியானவர்கள்போல் வாய்விட்டுக்கதறினார்கள். ஸ்திரீகள் குழந்தைகளுடன் விம்மி விம்மி யழுதார்கள். ஜனங்கள் உன்மத்தங்கொண்டவர்கள் இன்ன செய்வதென்று தெரியாமல் அலைந்தார்கள். தங்கள் உறவினர்க்கே இவ்விபத்து நேர்ந்ததுபோல் ஒவ்வொரு வீட்டாரும் துக்கங் கொண்டாடினார்கள். யுத்தவீரர்கள் ஆராத்துயரடைந்தார்கள். நீக்கிரோக்கள் தங்கள் ஜாதியே நசித்துவிட்டது போல் திக்பிரமையடைந்தார்கள். இன்றைக்கும் கல்பூபாவிலும் மற்றிடங்களிலுமுள்ள நீகிரோக்கள் அப்ராகாம் லிங்கனுடைய படத்தைத் தங்கள் வீட்டில் வைத்து பூஜைசெய்வதைப் பார்க்கலாம். அவர்கள் அப்ராகாம் லிங்கன் திரும்பவும் அவதரித்து தங்களை சம்ரட்சிப்பார் என்று நம்புகிறார்கள்.

பிரஸிடண்டு வாஷிங்டனைப் புதைத்தவிடத்தில் லிங்கனைப் புதைப்பதாகப் பிரயத்தனஞ் செய்தார்கள். ஆனால் இல்லினாய் சமஸ்தானத்தார் லிங்கனின் சொந்த ஊரிலேயே அவன் உடலைப் புதைக்கவேண்டுமென்று பிரேதத்தை வாங்கிச் சென்றார்கள். ஐம்பதினாயிரஞ் சனங்கள் கூடி, இறந்தவர்க்கு மரியாதை செய்தார்கள்.

வி. சுப்பிரமணிய ஐயர், பி.ஏ

இயற்கைப் பாடங்கள்
NATURE LESSONS
விநோதமான சில மீன்கள்

தேவையானவை.—சுறுமீன், நாக்குமீன், ஈல் (குழிப்பாம்பு), குளோப்புமீன், முட்பலாச்சி, கடற்குதிரை இவற்றின் பஞ்சடைத்த தேகங்கள்.

1. சுறுமீன். (Shark)

இந்த மீனைப்பாருங்கள். இது சாதாரணமாய் கடலில்தான் வசிக்கும். இதற்கு சுறுமீன் என்றுபெயர். சுறுமீன்களில் பலவிதமுண்டு. இது நாலடி நீளமிருக்கிறது. இதற்கு நாய்ச்சுறுவென்று பெயர். வெண் சுறுமீன்கள் 30 அல்லது 40 அடி நீளமும் வளரும். இது மீன்களில் மிகவும் பராக்ரமமுள்ளது. கடலில் கரையோரத்தில் இது அனேகமாய் வருவதில்லை. கடலினடியிலுமிருப்பதில்லை. நடுக்கடலில் நீர்மட்டத்தின் அருகில் உலாவிக்கொண்டிருக்கும். இதன்நிறத்தைக் கவனியுங்கள். அடிப்பக்கம் வெண்ணிறமாயும் முதுகு கடலின் நிறம்போல் நீலக்கறுப்பாயுமிருக்கிறது. அதனால் இது கடலிலிருப்பது யாவருக்கும் எளிதில் தெரியாது. சில சுறுமீன்கள் கப்பல்கள் வந்து தங்கும்துறைமுகங்களிலும் ஆற்றுத் துறைகளிலும் ஏராளமாயிருப்பதுண்டு. தரையில் வாழும் புலி சிங்கங்கள் எவ்விதம் தரையில் வேட்டையாடி மற்ற மிருகங்களைப் பிடித்து உண்கின்றதோ அவ்வாறே கடலில் வாழும் இது மற்ற மீன்களையும் கடற்பாம்புகளையும் இன்னும் அனேகம் கடற்பிராணிகளையும் விரட்டிப்பிடித்து உண்கிறது. கடலிலும், கங்கை, ஹூக்ளிமுதலிய ஆற்றுத் துறைகளிலும் ஸ்நானம் செய்யும் மனிதர்களையும் கப்பலுடைந்து கடலில் வீழ்வோரையும் பிடித்துண்பதுண்டு. கப்பல்களிலிருந்து கடலிலெறிந்துவிடும் மாம்சத் துண்டுகளையும் எச்சிலையும் உண்பதுண்டு. அதுபற்றியே சுறுமீன் கப்பல்களின் சமீபத்திலேயே சுற்றிக்கொண்டிருக்கின்றன. கப்பல்கள் போகும்பொழுதும் அவற்றை வேகமாகப் பின்தொடர்ந்து கொண்டே போவதுண்டு. கப்பலளவு வேகமாய் நீந்துவதன் பொருட்டு இதன்தேகம் மிகவும் நீண்டும் மூக்குப் பக்கம் கூர்மையாயு மிருக்கின்றன. இதன் சிறகுகளும் மிகவும் அகன்று வலுவாயிருக்கின்றன. இதன் வலுவுள்ள வாற்சிறகால் ஒரே அடியில் ஒரு மனிதனைக் கொன்றுவிடும். இந்த மீனுக்கு இவ்வளவு பெருந்தேக மிருந்தபோதிலும் இதற்குத் தேகத்தில் கெட்டியான எலும்புகளில்லை. அதனாற்றான் தன்தேகத்தை நன்றாக வளைத்து வேகமாக நீந்த இதற்கு இயலுகிறது.



சுறமீன்.

இந்தமீனில் இன்னும் அனேக விசேஷங்களுண்டு. இது இரையைப்பிடிக்கும்பொழுது மல்லாந்துபடுத்துக்கொள்ளும். ஏன்? இதன்வாயைக் கவனியுங்கள். அது தலைக்கு முன்பக்கமில்லாமல் தலையின் அடிப்பக்கத்தில் கமான்போல் வளைந் திருக்கிறது. அதனால் மல்லாந்து கொண்டோ அல்லது தேகத்தை ஒரு பக்கம் சாய்த்துக் கொண்டோதான் இது இரையைப் பிடிக்கும். இதன்வாய் குகைபோல அகன்றிருப்பதால் இது சிலவேளை மனிதர்களையும் பெரும் மீன்களையும் கடிக்காமல் அப்படியே முழுசாய் விழுங்கும். இதன் பற்கள் கத்திகள்போல் கூர்மையாயும் நாலைந்து வரிசைகளாயு மிருப்பதால் பெரும்பிராணிகளைக் கௌவவும், அவற்றின் தேகத்தைத் துண்டுதுண்டாக்கி உண்ணவும் இதற்கு முடிகிறது. மீன்களைப் பிடிக்கக் கடலில் வீசும் வலைக்குள் தப்பித்தவறி இம்மீன் அகப்பட்டுவிட்டால் இப்பற்களால் வலையை அறுத்துவிட்டு ஓடிவிடும். பெரும் வெண் சுறுவின் பற்களை சண்டைபோட உதவும் கத்திகளாக பூர்வீகக் காட்டுமனிதர்களிலநேகர் வெகு காலமாய் உபயோகித்து வந்தார்கள். அதை க்ஷவரம் செய்துகொள்ளவும் உபயோகித்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் இரும்பைப் பார்த்தவர்களன்று. பிராணிகளைக் கொன்றுண்பதைத்தவிர, தரையில்வாழும் கழுதைப்புலி கழுகு இவற்றைப்போல் சுறுமீன் கடலில் செத்துக்கிடக்கும் பிணங்களையும் தின்பதுண்டு.

சுறுமீனுக்குச் செவுள் மூடியில்லை. அதனால் செவுள் துவாரங்கள் தனித்தனியாய்ப் பக்கத்திற்கு ஐந்தாகத் தெரிகின்றன இதோபாருங்கள். இந்தச் சுறுவின் மேற்றோலைப் பாருங்கள். மற்ற மீன்களுக்கிருப்பதுபோல் அதில் பெரும் செதில்களைக்காணோம். இப்பொழுது அதன் மேலே தடவிப்பாருங்கள். சொரசொர வென்றிருக்கின்றது. அதனாலேயே சுறுவென்று இதற்குப் பெயருண்டாயிற்று. சொரசொரப்பா யிருப்பதற்குக் காரணம் இதன் தேகமெங்கும் மணல் கணக்கான சிறு சிறு பற்கள் அமைந்திருப்பதினாலேயே. சுறுவின் இத்தோலை உரித்தெடுத்து மேஜை, நாற்காலி, பெஞ்சுமுதலிய மரச்சாமான்களை மெருகிட்டு நைஸாக்க மணற்காகிதத்திற்குப் பதிலாக இதை அனேகவிடங்களில் உபயோகித்து வருகிறார்கள். சண்டைக்காலத்தில் உபயோகப்படுத்தும்கத்திகள் நழுவாமலிருப்பதற்கு இத்தோலைக் கத்திப்பிடியின் மேல் உறையாகத் தைப்பதுண்டு. சுறுமீனை அனேகர் உண்பதுண்டு. அவற்றைக் காயவைத்து ஊருகாய்போடுவதுமுண்டு. சில சுறுவின் (liver) ஈரலிலிருந்து ஒருவிதத்தைலம் எடுப்பதுண்டு. 'காட்' (cod) என்னும் மீனின் எண்ணெய்போல இத்தைலத்தையும் தேகபுஷ்டிக்காகக் குடிப்பதுண்டு. நம்மைக் கொல்லவோ, ஹிம்ஸிக்கவோ செய்யும் புலி, ஸர்ப்பம், முதலிய பிராணிகளை நாம் வணங்குவதுபோல ஆஸ்திரேலியாவிலும் பஸிபிக்தீவுகளிலுமுள்ள மனிதர்கள் சுறுமீனுக்கு அடிக்கடி பலிகொடுத்து பூஜை செய்வதுண்டு. சில சுறுமீன்கள் முட்டையிடுவதில்லை. ஆடுமாடுகளைப்போல் குட்டிகளேபோடும். மற்ற அனேகம் சுறுமீன்கள் முட்டைகளிடுவதுண்டு. ஒவ்வொரு முட்டையும் கொம்பால் செய்த ஒரு கறுப்பு ஓட்டினுள்ளிருக்கும். ஓடு சற்றுத் தட்டையாயிருக்கும். அதிலிருந்து பட்டுப் போன்ற அனேகம் நார்கள் வெளியில் தொங்கும். முட்டைகளை ஜலமடித்துக்கொண்டு போகாமல் இந்நாரால் அவை சில நீர்ச்செடிகளோடு பின்னிக்கொண்டிருக்கும். குஞ்சுகள் சிலகாலத்திற்கப்பால் முட்டையை ஒரு துவாரமிட்டு வெளியில்வரும். போலான இம்முட்டைகளை அலையடித்துக் கடற்கரையில் கொண்டுவந்து சேர்ப்பதுண்டு. அதைச் சிறுவர்கள் 'கடற்பணப்பைகள்', என்று எடுத்து வைத்துக்கொள்வதுண்டு. 'கொம்பன்சுறு' என்னும் சில சுறுவின் தலை சுத்தியின் தலைபோல் இருபக்கமும் அகன்றிருக்கும். அதன் கண்கள் அவற்றின் நுனியிலிருக்கும். சில சுறுவின் மேல் உதடு பெரும் அரிவாள்போல் 10-அடி நீளம் நீண்டிருக்கும். இதன் இரு ஓரங்களிலும் கத்திபோன்ற ~~—20—~~30-பற்களிருக்கும். ஒருஜாதி மீனின் மேல்வாய் ஒரு கொம்புபோல் 10-அடி நீளம் முன்னுக்கு நீண்டும் நமது காலளவு பெருமனுமிருக்கும். இதனால் கடலில் வாழும் பெரும் மீன்களையும் திமிங்கலங்களையும் குத்திக் கொன்றுவிடும். கடலில் மிதக்கும் கட்டை மரங்களையும், படகு கப்பல்களையும், ஏதோ பிராணியென்று மூடத்தனமாயெண்ணி, அவற்றை இக்கொம்பால் குத்திக் கவிழ்ப்பதுமுண்டு. இப்படிப்பலமாகக் குத்தும்பொழுது சிலவேளை இந்தக்கொம்பு ஒடிந்து அந்தமீன் இறந்துபோவது முண்டு.



நாக்கு மீன்கள்

2. நாக்குமீன் (Flat fish)

இதைப்பாருங்கள். இதன் தேகம் தகடுபோல் தட்டையாயிருக்கிறது. நமது நாக்குப்போல் நீண்டுமிருக்கிறது. அதனால் இதை நாக்குமீனென்று சொல்வது வழக்கம். இதுவும் கடலில் வாழும் ஒரு மீனாகும். இதன் சிறகுகள் சுறுவின் சிறகுகள்போல் அவ்வளவு பெரிதாயில்லை. அதனால் நீரில் அதிகநேரம் நீந்த இதற்கு முடிவதில்லை. அனேகமாய் நீரினடியில்தான் இது வாழ்கின்றது. ஆனால் அங்கும் இது தரையில் நிற்பதில்லை. ஏனென்றால் இது தட்-

டையா யிருப்பதினாலேயே. இது ஒரு நீர் ஆமையைப்போல் மேலுங்கீழும் தட்டையாயில்லை. இதன் இரு விலாப்பக்கமும் இரு தகடுகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டதுபோல் தட்டையாயிருக்கிறது. தட்டையான அப்பளத்தைச் செங்குத்தாய் நிறுத்தினால் அது நிற்குமா? நிற்காதல்லவா? அதுபோல நாக்குமீனும் சரியாய் நிற்கமுடியாமல் ஒரு பக்கமாக வீழ்ந்து படுத்துக்கொள்ளுகிறது. சிலவேளை கடலினடிப்பக்கமுள்ள சேற்றிலும் மணலிலும் புகுந்து மறைந்துகிடக்கும். இதோ பாருங்கள். இதன் இடதுபக்கம் வெளுப்பாயிருக்கின்றது. இந்தப் பக்கத்தை தரையில் வைத்துக்கொண்டுதான் இது படுத்துக்கொள்ளும். இதோ வலதுபக்கம் ஊதா நிறமாயும் கறுப்புப் பொட்டுகளுள்ளதாயு மிருக்கிறது. இப்பக்கத்தின்நிறம் கடலினடியி லிருக்கும் கல் செடி பாசிகளின் நிறம்போ லிருப்பதால் இது கடலினடியிலிருப்பது, உயரத்திலாவும் இதன் சத்துருக் களுக்குத் தென்படாது.



ஈல் (குழிப்பாம்பு)

இதன் கண்களைப் பாருங்கள். இரண்டு கண்களிருக்கின்றனவல்லவா? ஆம். ஆனால் அவை பக்கத்திற்கொன்றாக இராமல் இரண்டும் தலையின் வலது பக்கத்திலிருக்கின்றன. இதற்கு இடதுபக்கத்தில் கண்ணில்லை, இதோ பாருங்கள். இப்படிக்கேன்? நாக்குமீன் குஞ்சாயிருக்கும்போது அதன் தேகம் தடித்தும் உருண்டும் கண்கள் பக்கத்திற் கொன்றாகவு மிருக்கும்: குஞ்சுகள் வரவரத் தட்டையாய் வளரும். தட்டையாய் வளரவளரச் சரியாய் நிற்கமுடியாமல் அவை அவற்றின் இடது அல்லது வலது பக்கத்தில் படுத்துக்கொள்ளும். தரையில் படுப்பதால் படுக்கும் பக்கம் கண் வேண்டியதில்லையல்லவா? அப்பக்கமிருந்து சத்துருக்கள் யாவரும் அதனருகில் வருவதில்லை. மேற்பக்க மிருந்தே வருவதனால் படுத்த பக்கத்துக் கண் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து மேற்பக்கம் வந்து விடுகிறது. இவ்விதம் மேற்பக்கம் இருகண்களு மிருப்பதால் அங்கிருந்து வருவோரை நன்றாகக் கவனிக்க இதற்கு முடிகிறது. இதோ இந்த இரண்டு நாக்குமீன்களைப் பாருங்கள். இவற்றின் கண்களிரண்டும் இடது பக்கமிருக்கின்றன. இதனால் இவை வலதுபக்கம் படுத்திருந்த மீன்களென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டியது. டர்பட் சோல் என்னும் பலவித நாக்குமீன்களுண்டு. நாக்குமீன்களை அனேகர் ருசியுடன் உண்பதுண்டு.

3. ஈல் (Eel)

இதைப் பாருங்கள். பாம்புபோலிருக்கிறது. இது சாதாரணமாய் குளம், தடாகம், ஆறு இவற்றில் வசிக்கும். இதில் சில ஜாதி கடலிலும் வசிப்பதுண்டு. இவ்விடங்களில் நீரினடிப்பக்கம் பகல் முழுவதும் கற்களினிடையில் ஒளிந்தும், சேற்றில் புதைந்தும் கிடக்கும். பாம்பு போலிருப்பதாலும், நீரினடியில் குழிதோண்டி வசிப்பதாலும் இதற்கு குழிப்பாம்பென்று சொல்வது வழக்கம். ஆனால் இது பாம்பல்ல. இதற்குச் சிறகுகளும் செவுள்களும் செவுள் மூடியுமிருப்பதை இதோ பாருங்கள். அதனால் இது ஒரு மீனாகும். விலாங்கென்பதும் இதில் ஒரு ஜாதி மீனாகும். இதற்குக் கால் சிறகுகளில்லை. கைச் சிறகு சிறிதாயிருக்கிறது. முதுகுச்சிறகு வால் சிறகோடு சேர்ந்து ஒன்றாயிருக்கிறது. இது நீந்தும்பொழுது நீண்ட தன்தேகத்தைப் பாம்பு

போல் நெளித்துக் கொண்டே நீரில் நீந்தும். இதற்குச் செதில்கள் இல்லை: தேகம் வழ வழவென்றிருப்பதால் இதை நாம் எளிதில் பிடிக்க முடியாது. இது வேனிற்காலத்தில் தானிருக்குமிடம் வற்றிப்போகும் போலிருந்தால், இரவில் அவ்விடத்தைவிட்டு தரையில் நடந்து வேறிடம் செல்லும். யாத்திரையின் பொழுது தனக்குச் சுவாசிப்பதற்கு வேண்டிய நீரைத் தன் பெரும் செவுள் பைகளில் நிரப்பிக்கொள்ளும். வழிதப்பிப்போன சில விலாங்குகளை சிலவேளை நாம் போகும்பொழுது வழியில் கிடக்கப் பார்க்கலாம்.

இதன் ஆகாரம் நீரில்வாழும் புழுபூச்சி நீர் நத்தைகளும், தவளை மீன் இவற்றின் குஞ்சுகளுமாகும். சில விலாங்குகள் தவளை, மீன், நீர்ப்பாம்பு இவற்றையும் உண்ணும். சில தேசத்து ஈலுகள் இரைதேடிச் செல்வதில்லை. மற்ற நீர்ப்பிராணிகள் தன்னருகில் வந்ததும் அவற்றை மூர்ச்சை யடையும்படி செய்து பிறகு உண்ணும். இப்படிப்பட்ட மீன், தென் அமெரிக்காவில் ஏராளமாயுண்டு. அதன் தேகத்தில் இரு விலாப்புறத்திலும் ஒருவிதம் மின்னல் உண்டாகும் கருவி (Electricity) உண்டு. வேண்டும் பொழுது அது மின்னலை வெளிப்படுத்தும். அதனால் அதற்கு மின்னல் (Eel) ஈல் அல்லது மின்சாரவிலாங்கு (Electrical) என்று பெயர். மின்னலாவது, மின்னலுண்டாகும் யந்திரமாவது மின்னல்விசிறியாவது நம்மைக் கொஞ்சம் தொடுமாகில் நமது தேகம் அதிர்ந்துபோய் கைகால்களில் விறுவிறுப்புண்டாகி, அதிக நோவுடன் நாம் சிறிதுநேரம் ப்ரமித்துப்போய் அசைவற்றிருக்கிறோம். நமதுபேரில் மின்னல் ஜாஸ்தியாகப்படுமாகில் நாம் இறந்துவிடுவோம். அவ்விதமே இந்த ஈலண்டைவரும் பிராணிகள் அசைவற்றுப்போய் அங்கேயே தங்கிவிடுகின்றன. அப்பொழுது அவற்றை இந்த ஈல் உண்டு விடுகிறது. சிறு பிராணியா யிருந்தால் இந்த மின்னலால் அது தக்ஷணமே இறந்துவிடும். தன்னைப் பிடிக்கவரும் முதலை, பெருமீன் முதலிய சத்துருக்களையும் இம்மாதிரியே மின்னலை வீசி அண்டையில் வாராமற்செய்து தன்னைக்காப்பாற்றிக்கொள்கிறது. இதுதவிரத் தானிருக்கும் ஓடைக்கு நீருந்தவரும் நாய் மாடு குதிரைகளையும் மனிதர்களையுங்கூட அது மூர்ச்சை யடையும்படி செய்வதுண்டு. இதை அவ்வூர் மனிதர்கள் வெகு தந்திரமாகப் பிடிப்பார்கள். இது வசிக்கும் நீரில் குதிரைகளை விட்டடிப்பார்கள். அப்பொழுது அங்கிருக்கும் ஈல்கள் தங்களிடமிருக்கும் மின்னலை வெகு சீக்கிரத்தில் குதிரைகளின் மேல் பாயச்செய்யும். அவ்விதம் மின்னல் சோர்த்து கிடக்கும் இவற்றை உடனே பிடித்துக் கொன்று உண்பார்கள்.

சில ஊர்களில் விலாங்கை ஒருவிதத் தண்ணீர்ப்பாம் பென்று கருதி அதை உண்பதில்லை. ஆனால் நமது ஊர்களில் உணவுக்காக அதை மிகவும் சுலபமாகப் பிடிப்பதுண்டு. சில மண் சட்டிகளில் மண் புழுக்களை விட்டு வாயை ஒரு ஓட்டைக் கொட்டாங்கச்சியால் மூடி அச்சட்டிகளை நீரினடியில் வைப்பார்கள். விலாங்குகள் இரவில் சட்டிக்குள் நுழைந்து புழுக்களையுண்ணும். வெளிவர முடியாமல் சட்டியினடியில் சுருண்டு படுத்துறங்கும். காலையில் அவற்றைச் சட்டியோடு வீட்டிற் கெடுத்துக்கொண்டு போவார்கள்.

விலாங்குகளும் ஈல்களும் கோடானுகோடி முட்டைகளிடும். அவை யெல்லாம் சிறுசிறு குஞ்சுகளாகும். ஒவ்வொன்றும் ரோமம்போல் மெல்லியதாயும் நீண்டு மிருக்கும். அதனால், ஆடுமாடுகள் நீரண்டை செல்லும்பொழுது அவற்றின் வால் ரோமங்களே நீரில் விழுந்து விலாங்குகளாகின்றன வென்று சிலர் நம்புவதுண்டு.

4. முட்பலாச்சி (Globe Fish)

இதைப்பாருங்கள். பெரும் பலாக்காய்போல் உருண்டையாயிருக்கிறது. இதன் தேகமெங்கும் வேலிப்பன்றிக் கிருப்பதுபோல் முள்ளு முள்ளாயிருக்கிறது. அதனால் இதை கடல்

முட்பன்றி யென்றும் முட்பலாச்சி யென்றும் சொல்வதுண்டு. குளோபுமீனென்பதும் இவ்வி



முட்பலாச்சி

னத்தைச் சேர்ந்ததுதான். இதற்குச் சிறகுகள் சிறியதாயிருப்பதால் இது வேகமாக நீந்துவதில்லை. சத்துருக்கள் அண்டையில் வந்தால் ஓடிப்போவதுமில்லை. ஆனால் இதை அவை உண்பதுமில்லை. இம்முட்களே இதைக் காக்கின்றன. சும்மாவிருக்கும் பலாச்சியின் தேகம் ஒன்றுமில்லாத பணப்பைபோல் சுருங்கியும் முட்கள் தேகத்தோடு தேகமாய் பின்சார்பாகவுமிருக்கும். சத்துருவேதேனும் அண்டையில் வந்தால் தேகத்துள் காற்றையாவது நீரையாவது குடித்து தேகத்தைப் பெரியதாக உப்பச்செய்யும். அப்பொழுது முட்கள் தேகத்திலிருந்து ஈட்டிகள்போல் செங்குத்தாக நிற்கும். இதுவும் தவிர பலாச்சியின் முட்களினடியில் விஷமுண்டு. இம்முட்களால் குத்தி எதிரிகளை தூரத்திவிடும். இந்த மீன் விஷமுள்ளதாகையால் இதை யாவரும் உண்பதில்லை. தெரியாமல் உண்போமாகில் பேதியாகிச் சிலவேளை இறந்துபோகவும் கூடும். இதன் இருபற்களும் கிளிமூக்குப்போல் பெரிதாயிருப்பதைப் பாருங்கள். இவற்றால்தான் கடலில் வாழும் நத்தை, நண்டு சிப்பிகளை இது உண்கிறது.

5. கடற்குதிரை (Sea-horse)

இதைப்பாருங்கள். இதென்ன? இதுவும் கடலில் வாழும் பிராணிதான். இதற்குச் சிறு கழுத்திருப்பதைப் பாருங்கள். இதன் தலை தேகத்திலிருந்து முன்னுக்கு நேராக நீண்டிராமல் முன்பக்கம் மடங்கிக் குதிரையின் தலைபோலிருக்கிறது. அதனால் இதை கடற்குதிரை என்று சொல்வது வழக்கம். ஆனால் இது குதிரையல்ல. இதன்தேகத்தில் ரோமங்களோ சுவாசப் பைகளோ வில்லை செவுள்களிருப்பதால் இது ஒருவித மீனாகும். மீனைப்போல் இதற்குச் செதில்களுண்டு. ஆனால் அவ்வைலேசாகவும் தனித்தனியாகவுமிரா. கெட்டித் தகடுபோலும் ஒன்றோடொன்று கட்டம் கட்டமாய் ஒட்டிக்கொண்டுமிருந்து தேகத்தை ஒரு கவசம் போட்டது போல்மூடிக் காப்பாற்றுகின்றன. மற்றமீன்களுக்கிருப்பதுபோல் சில சிறகுகள் மார்பிலும் முது



கடற் குதிரை

கிலுமுண்டு. ஆனால் அவை சிறியதாயிருக்கும். அவற்றை படபடவென்றடித்து தலையை உயர்த்திக்கொண்டு நீரில் மிதந்து நிற்கும். இதற்கு வால் சிறகு இல்லை. அதனால் இது வேகமாக நீந்துவதில்லை. இதன் வாலைப் பாருங்கள். பாம்பின் வாலைப்போல் நீண்டும் பச்சை ஓந்தியின் வாலைப்போல் சுருண்டுமிருக்கிறது. இந்த வாலால்தான் இது நீர்ச்செடிகளைச் சுற்றிப் பிடித்துக்கொள்ளும். பிடித்த வண்ணமே தலை கீழாகத் தொங்கும். தேகத்தை நாலா பக்கங்களிலும் ஆட்டி யாட்டித் தன் கண்களைச் சுற்றிலும் சுழற்றிப் பார்க்கும். கடற்குதிரைகள் ஒன்றுக்கொன்று வாலை பின்னிக்கொண்டு கட்டிமுத்தமிட்டு விளையாடும். அப்படிப் பிடித்துக் கொள்வதற்கும் அதன் வால் அமைந்திருக்கிறது. கடற்குதிரையின் தலையிலும் முதுகிலுமிருந்து தொங்கும் அனேகம் நீண்ட நார்களைப் பாருங்கள். செடியில் கொடிகள் தொங்குவது போல் தொங்குகின்றன. அதனால் கடற் குதிரை நீர்ச் செடிகளோடு செடிபோலிருந்து அதன் சத்துருக்களின் கண்களுக்ககப்படாமல் நன்றாக மறைந்திருக்கும். கடற் குதிரைகளுக்குப் பற்களில்லை. வாய் குழாய்போல் நீண்டிருக்கும். அதால் சிறு நீர்ப் பிராணிகளை உறுஞ்சியுண்ணும். கடற் குதிரைகளில் ஆண்களுக்கு வயிற்றின் வெளிப்பக்கத்தில் ஒரு பையுண்டு. பெண் குதிரைக்கு அது இராது. பெண் குதிரை முட்டைகளிட்டதும் ஓடிப்போய்விடும். அப்பொழுது அம்முட்டைகளை ஆண்குதிரை இந்தப் பையிலெடுத்து வைத்துக்கொண்டு முட்டைகள் குஞ்சுகளாகும் வரையில் அவற்றை பத்திரமாகக் காப்பாற்றிவரும்.

வீ. ஆர். துரைசாமி சாஸ்திரி, எம்.ஏ., எல். டி.

பகவத் பக்தர்கள்.—ஈசுவரத்தியான பாராயணர்களும் ஞானிகளுமான பகவத்பக்தர்கள் எம்பெருமான் திருவுள்ளத்துக்குகந்த ஆப்த பந்துக்களாவார்கள். அவர்களை எம்பெருமான் தனது நண்பர்களென்றும், தோழர்களென்றும் உறவினர்களென்றும் கருதுகின்றான். மற்ற ஜனங்கள் யாவரும் அவனால் சிருஷ்டிக்கப்பட்ட சாதாரண ஜந்துக்களாகமாத்திரம் கருதப்பெறுவார்கள்.

விவசாயம் விரைவாக விர்த்தியடைய வழி

A SUGGESTION TO ACCELERATE THE IMPROVEMENT OF AGRICULTURE

நமது நாட்டுக்குக் கைத்தொழில் வியாபார முயற்சிகள் அதிகமாகக் கிடையாதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நமது நாட்டுக் குடிகளில் முக்காற்பங்குக்குமேல் விவசாயத்தையே ஜீவனமாய் அடைந்திருக்கிறார்கள். விவசாயம் விர்த்தியடைந்தாலொழிய நமது நாட்டிலிருந்து அயல் தேசங்களுக்குக் குடிபோகும் விவசாயக் கூலியாட்கள், முன்னிலும் அதிகமாகவே அயல் தேசங்களுக்குப் போவார்கள். அதினால் நமது நாட்டில் விவசாய வேலையாட்கள் குறைவாகி நிலங்களைச் சரியாய் சாகுபடி செய்வதற்கு அவசியமான வேலையாட்கள் இல்லாமல் கிருஷிகர் கஷ்டத்துக்குள்ளாவார்கள். அதுவுமன்றி அவர்கள் கூலியாட்களுக்குக் கொடுக்கும் கூலி நிறக்கு மிகவும் அதிகமாகும். விவசாயம் விர்த்தியடைந்தாலொழிய நமது நாட்டிலுள்ள வியாபாரமும் பலதொழில் முயற்சிகளும் விர்த்தியடையா. மெல்லிய நீண்ட இலையுள்ள வெண்பஞ்சு நமது நாட்டில் உண்டாகுமானால், டாக்கா மஸ்லின்போன்ற மெல்லிய வஸ்திரங்கள் நெய்யக்கூடும். நிலக்கடலை அதிகமாய் விளைவித்தால் அதிலிருந்து எண்ணெயெடுக்கும் கைத்தொழிலும், அந்த எண்ணெயை விற்கும் வியாபாரமும் விர்த்தியடையும். நமது நாட்டில் அதிகமாய்க் கரும்பு சாகுபடி செய்து உயர்தரக் கரும்பு தினுசுகளை விர்த்திசெய்து நோய் நொடிகளணுகாமல் செவ்வையாய்ப் பயிரிடுவோமானால் தற்காலத்தில் நமது தேசத்துக்கு அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கோடிக்கணக்கான விலையுள்ள சர்க்கரையை நமது நாட்டிலேயே செய்து கொள்ளக்கூடும். அதனால் சர்க்கரை செய்யும் கைத்தொழில் விர்த்தியடைவதுமன்றி அந்த வியாபாரத்தினாலுண்டாகும் இலாபமும் நமது

தேசத்தவர்களுக்கே கிடைக்கும். நமது நாட்டில் நன்செய் புன்செய் தோட்டக்கால் நிலங்களுக்கு வேண்டிய எருவகைகள் கிடைக்காமல் நாம் கஷ்டப்படுகிறோம். அனேக கிராமங்களில் நன்செய் நிலங்களுக்கு வேண்டிய எருவும் அகப்படுவதில்லை. இப்படியிருக்கும் ஸ்திதியில் தொழு எருவைச் சேர்ப்பதில் சற்று கவனம் செலுத்தி அந்த முறையைச் சற்று சீர்திருத்துவோமானால் முன்னிலும் இரண்டு மடங்கு எரு சேகரிக்கக்கூடும் என்பதைத் தவிர, அப்படிச் சேகரித்த எருவின் சாரமும் சத்தும் தற்காலம் நாம் உபயோகிக்கும் தொழு எருவைவிட மூன்று மடங்கு அதிகமாக்கலாம். நமது நிலங்கள் தரிசாய்க் கிடக்கும் காலங்களில் அவைகளில் தழை எருவுக்கு உபயோகமான பல பயிர்களை விதைத்துண்டாக்குவதால் சுவல்ப செலவில் அந்த நிலங்களுக்கும் அண்டை அயல் நிலங்களுக்கும் போதுமான தழைகுழைகளை நாமே உண்டாக்கிக்கொள்ளக் கூடுமானால் அது நமக்கு எவ்வளவு அதிகமான பிரயோஜனமுண்டாக்கும்!

நாம் நாட்டுக்கலப்பையால் உழுது கிளறும் விஸ்தீரணத்தைப் பார்க்கிலும் சீர்திருத்திய ஒரு வித் நாட்டுக்கலப்பையால் கால்நடைகளுக்கு அதிக சிரமமில்லாமல் மூன்றுமடங்கு அதிக நிலத்தைக் கிளறி அந்த மண்ணைக் கீழ்மேலாய்ப் புரட்டக்கூடுமானால் அது எத்தனை சிலாக்கியம்! புன்செய் நிலங்கள் ஏராளமாக விதைப்பாக வேண்டிய தருணத்தில் மழை பெய்துவிட்டால் நமது நாட்டுக்கலப்பையைக் கொண்டு, நாள் ஒன்றுக்குக் கால் ஏக்கர் சரிவர உழக்கூடும் என்று வைத்துக்கொண்டாலும், நிலங்கள் ஈரம் காக்கும். சுமார் 8 தினங்களில் 2 ஏக்கருக்குமேல் உழவு செய்ய முடியாமல் போகும். சீர்திருத்திய சிறு கலப்பை ஒன்றை உபயோகிப்பதால் அந்த 8 தினங்களில் 6 ஏக்கர் உழுது முடிக்கக்கூடும் என்பதன்றி, அந்த நிலம் மிகவும் ஆழமாய் இடைகட்டையின்றி உழவாகிக் கீழ்மண் மேல் மண்ணாய்ப் புரண்டு காற்றுடிப் பண்படுகிறது.

மேலும் விதைப்புக்கு அநுகூலமான பருவகாலம் விவசாயிகளுக்கு அநேக நாட்களில் கிடைப்பதில்லை. முதல் நாள், நிலங்களெல்லாம் பெரும்பதமாயிருக்கும். அதில்விதைக்கமுடியாது. மறுநாள் விதைப்புக்குப் பருவம் வந்துவிடும். அன்றைக்கு அந்தக் கிராமத்தில் 100 ஏர்களிருக்குமானல் சுமார் 100 ஏக்கர் நிலம் விதைத்துமுடிப்பார்கள். மறுநாள் கடும்பதமாய்விடும். அன்றைக்கும் சிலர் விதைப்பார்கள். அதற்கு மறுநாளோ விதைப்புக்கு வேண்டிய ஈரம் நிலத்திலிருக்காது. இவ்விதமாக விதைப்பு மாதங்களில்விதைப்புக்கு அநுகுணமான பட்டமும் பதமும் கிடைப்பது மிகவும் துர்பலம். அப்படிக் கிடைக்கும் தருணங்களை நாம் சரியாய் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டியது நமது கடமை. அப்படி உபயோகப்படுத்திக் கொள்வதற்கு விதைப்புக் காலத்துக்கு முன் கூட்டியே நிலங்களை உழுது புழுதியாக்கி வைத்திருக்கவேண்டும். அப்படிப் புழுதியாயிருக்கும் நிலத்தில் மழை பெய்தவுடன் விதைத்து பல்மரம் என்னும் ஒரு சிறுகருவியைக் கொண்டு பரம்படித்தால் நாட்டுக்கலப்பை கொண்டு விதை மூடிவதைப் பார்க்கிலும் 6-மடங்கு அதிக விஸ்தீரணத்தில் விதை மூடலாம். இதனால் 100-ஏக்கர் விதைக்கக்கூடிய ஒரு நாளில் 600-ஏக்கர் விதைத்து முடிக்கலாம். இது எத்தனை பெரிய அநுகூலம்!

இவ்விதமாக எண்ணிறந்த வழிகளில் நாம் நமது விவசாயப் பழக்கங்களைச் சீர்திருத்திக் கொள்ளக்கூடும். ஆனல், ஏன் இந்தச் சீர்திருத்தங்கள் நமது நாட்டில் எல்லாவிடங்களிலும் உண்டாகவில்லை என்றால், அதற்கு அனேக இடையூறுகள் குறுக்கிட்டிருக்கின்றன. அவையென்னவெனில் முதலாவது அனேக விடங்களிலுள்ள கிருஷிகருக்கு இந்த நூதன முறைகள் உண்டென்பதே தெரியாது. சிலர் அவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாலும், அந்தக் கருவிகளையும் அவற்றின் வேலையையும், நூதனமுறைகளைக் கையாடும் இடங்களிலுண்டாகும் பயன்களையும் அவர்கள் தங்கள் கண்களால் பார்த்

திருக்கமாட்டார்கள். சிலர் ஏதோ ஒரு காலத்தில் பார்த்து அவைகளின் ஏற்றத்தையும் விசேஷ அனுகூலத்தையும் வியப்புடன் ஒப்புக்கொள்வார்களானாலும், அவையெல்லாம் அபரிமிதமான பணச்செலவினல் உண்டான பயன்களென்றும், அம்முறைகள் தம்மைப்போலுள்ள ஏழைக்குடிகளுக்கு உபயோகப்பட மாட்டாதென்றும் உளறிவிட்டுப் போவார்கள். சிலவிடங்களில் விசேஷப் பயிர்களை உண்டாக்கினல் மாடுகள் தின்று அழித்துவிடும் என்றும், கள்ளர்கள் இராக்காலங்களில் அந்தப் பலனைத் திருடிக் கொண்டு போய்விடுவார்களென்றும், சொல்வார்கள். அனேகர் விவசாய விர்த்தி முறைகளை அநுஷ்டிப்பதற்கு அவசியமான பணம் தங்களிடத்தில் இல்லை என்று எளிதில் சொல்லிக் கழித்து விடுகிறார்கள். இப்படியாக அறிவீனத்தினலும் அநுபோகமில்லாத காரணத்தினலும், நூதன முறைகளைப்பற்றிய அஞ்ஞான அபிப்பிராயங்களாலும், தங்கள் முன்னோர் செய்த காரியங்களை மாற்றுவது பிசகென்றும் மனமுறண்டினலும், விவசாயவிர்த்தி நடத்தும் சாதனங்கள் இல்லாமையாலும், விடாமுயற்சி யில்லாமையினலும், ஊக்கக் குறைவினலும், 'உள்ளதே போதும்' என்னும் திருப்தியுள்ளவர்களா யிருப்பதாலும், ஒற்றுமையும் கூட்டுறவும் இன்னதென்றே தெரியாதவர்களா யிருப்பதாலும், இவை போன்ற வேறு பல காரணங்களாலும் நமது தேசத்தில் விவசாய விர்த்தி தடைபட்டு நிற்கின்றது. சுமார் 50 வருஷக் காலத்துக்குள் ஜப்பான் தேசத்தில் அரசாக்ஷி, கப்பல் போர், விவசாயம், கைத்தொழில், வியாபாரம், தேகப்பயிற்சி, கலவி முதலான எல்லா விஷயங்களிலும் உண்டாயிருக்கும் சீர்திருத்தத்தையும் விருத்தியையும் கவனித்தவர்களில் எவர்தான் ஆச்சரியங்கொள்ளார்? அதையும் நமது நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தேவலோகத்தையும் பூலோகத்தையும் ஒப்பிடுவதுபோலவே தோன்றும். என்றாலும் ஜப்பானியரும் நம்மைப்போன்ற மனிதர்தானே! நாமும் அவர்களைப்போல் முயற்சி செய்தால் ஏன் முன்னுக்கு வாமுடியாது?

ஆகையால் நாம் மேலேசொன்ன இடையூறுகளைக் கூடிய சீக்கிரத்தில் நீக்க முயலவேண்டும். நமது நாட்டிலுள்ள பல ஜில்லாக்களிலும், அவைகளின் பல தாலுகாக்களிலும், அந்தத் தாலுக்காக்களிலுள்ள பற்பல கிராமங்களிலும், உள்ள நிலத்தின் நேர்மை, மண்சாரம், நீர்வரவு, மழையளவு, சீதோஷ்ணம், குடிநெருக்கம், போக்குவரவு சௌகரியம், வியாபார ஸ்தலங்களின் நிலைமை என்னும் விவசாய சம்பந்தமான பல விஷயங்களைப்பற்றியும் ஆங்காங்குள்ள விவசாய பழக்கங்களையும் விவசாய முறைகளைப்பற்றியும், ஆங்காங்கு உபயோகிக்கப்படும் விவசாய கருவி காரணங்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டியதும், அப்படி ஆராய்ந்தறிந்த பல விஷயங்களையும் திரட்டி எல்லாருக்கும் தெரியும்படி பிரசுரப்படுத்த வேண்டியதும் அவசியமாகின்றது.

இவ்விதமாக ஒரு கிராமத்தின் விவசாய சம்பந்தமான பல விஷயங்களையும் தெரிந்துகொண்டபின் அக்கிராமத்தின் விவசாய முறைகளையும் பழக்கங்களையும் கருவிகாரணங்களையும் எப்படிவிருத்திசெய்யக்கூடும் என்பதை ஆலோசித்துக் கண்டுபிடிக்கவேண்டியது அவசியம். அப்படிக் கண்டுபிடித்தபின் அந்தக்கிராமத்திலுள்ள கிருஷிகருக்கு அவ்விஷயங்களைத் தெரியச் செய்து, அவர்களில் சிலரைக்கொண்டாவது இந்த நூதனமுறைகளை அநுஷ்டிக்கச் செய்யவேண்டியது அத்தியாவசியமாகிறது. ஏனென்றால் நமதுதேசத்துக் கிருஷிகர் "ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என்னும் பழமொழிப்படி புஸ்தகத்தில் வாசித்ததை மட்டும் வைத்து ஒரு காரியமும் செய்யத் துணியார்கள். யுக்திக்கும், புத்திக்கும், அநுபோகத்துக்கும் பொருத்தமான விஷயங்களை அவர்கள் எளிதில் செய்வார்கள். மற்றொருவர் ஒரு முறையை நடத்தி சித்திபெற்றதை ஒருவர் பார்த்தறிந்தால் அந்தப்படி அவரும் நடத்தத் தடையே இருக்காது. ஆகையினல்தான் இந்த

நூதன முறைகளை ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிருஷிகனைக் கொண்டாவது அவ்விடத்தில் நடத்தி சித்திபெறச் செய்யவேண்டும். இப்படிச் செய்யவில்லை யானல் இன்னும் இருநூறு நூற்ருண்டுகள் சென்ருலும் நமது கிருஷிகர் இருந்த இடத்திலேயே இருப்பார்கள்.

ஆகையால், விவசாய விருத்தி யடைய வேண்டியதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் சில விவசாய உத்தியோகஸ்தர் இடைவிடாமல் சில வருஷங்களுக்கு உழைப்புடன் வேலை செய்ய வேண்டியது அவசியம்.

ஒரு ஜில்லாவில் சாதாரணமாக 8-தாலூக்காகளிருக்கின்றனவென்று வைத்துக்கொள்வோம். அவைகளில் 4-தாலூகாக்களடங்கிய ஒவ்வொரு பாகத்தை ஒரு டிவிஷனுக்கி, அதில் முக்கியமான டிவிஷனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400 சம்பளமுள்ள ஒரு அசிஸ்டெண்டு டைரெக்டரையும், மற்ருெரு டிவிஷனுக்கு மாதம் ஒன்க்கு ரூபா 250-சம்பளமுள்ள அசிஸ்டெண்ட் டிப்டி டைரெக்டரையும் நேமிக்கவேண்டும். 8 தாலூக்காக்களிலும் ஒவ்வொரு தாலூக்காவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50-சம்பளமுள்ள ஒவ்வொரு மானேஜரை நேமிக்கவேண்டும். ஒவ்வொரு தாலூக்காவிலும் சுமார் 4 ரெவின்யூ இன்ஸ்பெக்டருள்ள பிர்க்காக்கள் இருக்கும். அந்த ஒவ்வொரு பிர்க்காவுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 30-சம்பளமுள்ள ஒரு விவசாய இன்ஸ்பெக்டரை நேமிக்கவேண்டும். ஒவ்வொரு இன்ஸ்பெக்டரிடத்திலும் மாதம் ஒன்றுக்கு ரூ.10-சம்பளமுள்ள பழக்கமுள்ளமேஸ்திரிகள் 2 பேரும் இருக்கவேண்டும். இவ்விதமாக ஒரு ஜில்லாவில் வேலைசெய்யும் விவசாயச் சிப்பந்திகளும் உத்தியோகஸ்தரும் அடியிற் காட்டிருக்கிறது.

உத்தியோகஸ்தர்.		மாதச்சம்பளம்.	மொத்தம்.	சுற்றுப்பிரயாணப்படி.
		ரூ.	ரூ.	ரூ.
1. அசிஸ்டெண்டு டைரெக்டர்.	1.	400	400	100
2. ஷை டிப்டி டைரெக்டர்.	1.	250	250	50
3. மானேஜர்கள்.	8.	50	400	200
4. விவசாய இன்ஸ்பெக்டர்கள்	32.	30	960	300
5. மேஸ்திரிகள்.	64.	10	640	300
	106–	740–	2650–	950

மொத்தம் மாதம் ஒன்றுக்கு	2650 + 950 = 3600
வருஷம் ஒன்றுக்கு ரூ.	3600 × 12 = 43,200
விதை, எரு, கருவி காரணங்கள்	2000
சாதல்வார் செலவு	1000
அகஸ்மாத்தாய் நேரிடக்கூடிய செலவு	800
ஆக வருஷம் ஒன்றுக்கு மொத்தம்	ரூ. 47,000

மேற்காட்டியபடி சுமார் ரூ. 50,000 வருஷாந்தரச் செலவு செய்தால், இந்த உத்தியோகஸ்தர் செய்யக்கூடிய வேலையை விவரித்துக் காட்டுகிறேம். அசிஸ்டெண்டு டைரெக்டரும் அசிஸ்டெண்ட் டிப்டிடைரெக்டரும் தங்கள் தங்கள் டிவிஷன்களிலுள்ள விவசாய இலாகா வேலைகளைச் சுற்றிப்பார்த்து, மானேஜர்களுக்கு வேண்டும் விவசாய யோசனைகளைச் சொல்லவேண்டியது, மேற்பார்க்கவேண்டியது. மானேஜர்கள், தங்கள் தாலூகாவிலுள்ள இன்ஸ்பெக்டர்கள் சேகரித்தனுப்பும் ரிப்போர்ட்டுகளை வாசித்துத் தங்கள் அனுபோகத்தைக்கொண்டு அவைகளைப் பரிசோதித்து அந்தந்தக் கிராமத்துக்கு வேண்டிய விவசாய விருத்தியம்சங்கள் இன்னின்னவென்று தீர்மானித்து மேல் உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்க வேண்டியது. இவ்விதமாக அவ்வருஷத்தில் இன்னின்ன கிராமத்தில் இன்னின்ன வேலை நடத்தப்படும் என்று தீர்மானிக்க வேண்டும். அந்தப்படி நடத்த இன்ஸ்பெக்டர்கள் ஒவ்வொரு கிராமத்துக்கும் போய், அங்கிருக்கும் மிராசுதார்களைப்பார்த்து பேசி இதமுறப்போதித்து அவர்கள் நிலங்களில் முன் கூட்டித் தீர்மானித்தபடி அம்முறைகளை நடத்தச்செய்வார்கள். மேஸ்திரிகள் சில நாட்களாவது அங்கேயிருந்து காரியங்களை நடத்திவிட்டு வேறு கிராமங்களுக்குச் செல்வார்கள். மறுபடியும் அந்தவேலை எப்படி நடக்கிறதென்று இந்த உத்தியோகஸ்தர் அடிக்

கடி பிரயாணம்செய்து கவனித்து, வேண்டும் காரியங்களைச்செய்வார்கள். இவ்வேலை சரியாய் நடக்கிறதாவென்று மானேஜர்கள் அந்தந்த தாலூக்காக்களிலும், டைரெக்டர்கள் அந்தந்த டிவிஷன்களிலும் சுற்றிப் பார்த்துவருவார்கள். இதனுல் வெகு சீக்கிரத்தில் விவசாயம் அபிவிருத்தியடையும்.

இந்த முக்கியமான விஷயம் நடைபெற நமது காருண்ய கவர்ன்மெண்டார் கருணை புரிவார்களென்று நம்புகிறேம். நிலத் தீர்வையிலிருந்து ஒவ்வொரு ஜில்லாவிலும் சுமார் 30 லக்ஷம் ரூ. வருமானம் கைக்கொள்ளும்போது, அதில் அரைலக்ஷம் ரூ. விவசாயவிருத்தி சம்மந்தமாகச் செலவழிப்பது கவர்ன்மெண்டாருக்கு ஒரு பெரிய காரியமல்ல. ஜனங்களின் சுகாதாரத்துக்காக அனேக லக்ஷம் ரூபாய் வருஷாவருஷம் செலவாகிறது. ஜனங்களின் கல்வி விஷயத்திலும் அப்படியே. இவைகள் தர்மச்செலவுகள் என்று சொல்லலாம். விவசாய அபிவிருத்தியோ அப்படித் தர்மச் செலவல்ல. விவசாயத்திலிருந்து கவர்ன்மெண்டாருக்குக் கிடைக்கும் வருமானம் வேருென்றிலிருந்தும் கிடைப்பதில்லை. விவசாயம் விர்த்தியடைந்தால் நிலத்தீர்வையும் விர்த்தியாகும். “ குடியுயரக் கோனுயரும்”

J. தர்மரங்கராஜு.

கடவுளைக் கண்டவனை உலகம் பாதிக்காது.—ஒருவன் சந்தைகூடும் இடத்திற்குத் தொலைதூரத்திலுள்ள வரையில் ஹோ!! ஹோ!! என்ற ஒருவித ஆரவாரத்தை மாத்திரம் கேட்கின்ருனயினும், சந்தைக்குட் சென்ற பிறகு முன்போல் ஆரவாரம் கேட்பதொழிந்து, ஒருவன் உருளைக்கிழங்கு ‘பேரம்’ செய்வதையும், மற்ருெருவன் கத்தரிக்காய் ‘பேரம்’ செய்வதையுந் தெளிவாய்த் தெரிந்துகொள்வதுபோல, ஸாதகன் ஸர்வேசுவரனுக்குத் தூரமாயிருக்கும் வரையில் மதவாதிகளின் வாதப்ரதிவாத விதண்டாவாத கோலாஹலத்தை மாத்திரம் கேட்பவனுகிருன். ஆனல் அவன் பகவத்ஸாமீப்யத்தை யடையும்பொழுது இச் சமயவாதிகளின் விதண்டவாதங்கள் ஒழிந்துபோகப், பரமபதியின் அரிய ரஹஸ்யங்களை யெல்லாம் அவன் காதலாகமலம்போல் அறிகின்ருன்.

உபநிஷத் ரத்தினமாலை

THE SUMMARY OF THE MINOR UPANISHADS

35. ஹம்ஸோபநிஷத் (15)

இவ்வுபநிஷத்தால் வெளியிடப்படும் நாதங்களின் கூட்டம் எதைச் சென்றடையுமோ அந்த ஆதாரமற்ற ஆதாரமான ப்ரஹ்மஜ்யோதியாகவே இருக்கிறேன் !!

‘ஸர்வதர்ம சாஸ்திர ஞானங்களில் தேர்ந்த பகவானே ! ப்ரஹ்ம வித்யா ஞானம் எவ்வாறு பிறக்கும் ?’ என்று கௌதமர் ஸநத்குமாரரை நோக்கிக் கேட்டார். ஸநத்குமாரர் ‘‘வேதங்கள்மூலமாகப்பரமசிவனதுஅபிப்ராயத்தை உணர்ந்தபின் பார்வதியால் நான் கற்றுணர்ந்தது இந்த வழி. கேளும் ஹே ! கௌதமா ! யோகிகளுக்குப் பொக்கிஷமாயும், போக மோக்ஷ ப்ரதமாயும் உள்ள ஹம்ஸாக்ருதி விஸ்தாரமானது, ரஹஸ்யமானது. ஹம்ஸ பரமஹம்ஸ நிர்ணயத்தை விளக்குவோம். இதை ப்ரஹ்மசரியம், சாந்தம், இந்திரிய நிக்ரஹம், முதலியவை உடையவனுக்குத்தான்சொல்லவேண்டும்.

ஹம்ஸ ஹம்ஸ என்ற த்யானத்துடன் எல்லா தேஹத்திலும் விறகுள் நெருப்பும், எள்ளுள் எண்ணெயும் போல ஒரு வஸ்து வியாபித்திருக்கிறது. இதை உணர்ந்துவிட்டால் மிருத்யு அணுகுவதில்லை. ஆஸனத்தை ஸ்திரமாக வைத்து உட்கார்ந்துகொண்டு, மூலாதாரத்திலிருந்து வாயுவைக் கிளப்பி ஸ்வாதிஷ்டானத்தை மூன்றுதரம் ப்ரதக்ஷிணம் செய்து, மணிபூரகத்தை அடைந்து, அனாஹதத்தைத் தாண்டி, விசுத்தியில் ப்ராணவாயுவை அடக்கி, ஆஞ்ஞையைச் சிந்தித்து, ப்ரஹ்மரந்தரத்தை த்யானம் செய்து, நான் த்ரிமாத்ரன் என்றே எப்போதும் த்யானம் செய்தால், மூலாதாரம் முதல் ப்ரஹ்மரந்திரம் வரையில் சுத்தஸ்படிக காந்தியுடன் விளங்குவதே பரமாத்மா. (இங்கு அங்கந்யாஸம் கரந்யாஸத்துடன் கூடி ஹம்ஸ மஹாமந்திரம் கூறப்பட்டுள்ளது.)

இவ்வாறு செய்து எட்டு தளமுள்ள ஹ்ருதயத்தில் ஹம்ஸரூபத்தை த்யானம் செய்யவேண்டும். இதற்கு அக்னியும் ஸோமனும் இறக்கைகள், ஓங்காரம் தலை,

பிந்துதான் கண், ருத்ரன் முகம், ருத்ராணி கைகால்கள், காலனும் அக்னியும் இருபுறங்கள்.

இது கோடிஸூர்ய ப்ரகாசத்துடன் விளங்கும். ஸர்வ வியாபகமாக விருக்கும். இதற்கு எட்டுவித விருத்தியுண்டு. கிழக்குதிக்குமுதல் ஒழுங்காக எட்டுதிக்ஹிருதயதளங்களில் முறையே இதற்குத் தூக்கம், சேம்பல், துர்புத்தி, பாபசிந்தை, விளையாட்டு, தேஹஸஞ்சாரம், ஸம்போகபுத்தி, அர்த்தபுத்தி, முதலியனவும் மத்தியிலிருக்கும்பொழுது, வைராக்யமும் ஏற்படும். இந்த ஹம்ஸத்திற்குத்தாதுக்களிருக்கையில் இதற்குஜாக்ரதாவஸ்தையும், கழுமொட்டில் ஸ்வப்னமும், லிங்கத்தில் ஸுஷுப்தியும்; ஹ்ருதயபத்மத்தை விட்டுவிட்டால் துரீயமும் ஏற்படும். ஹம்ஸம் நாதத்தில் மறைந்திருக்கையில்தான் துரீயாதீதம் உண்டாகும். இதற்கு உன் மனனம் (அஜபோபஸம்ஹாரம்) என்று பெயர். இவ்வாறு எல்லாம் ஹம்ஸஸ்வரூபமே. ஆகையால் மனன ஹம்ஸத்தை விளக்குவோம். அதுவே கோடி ஜபத்தால் நாதத்தை அநுபவிக்கும். ஹம்ஸ வசத்தால் பத்துவித நாதம் உண்டாகும். அவை முறையே சிணீ, சிஞ்சிணீ, மணி, சங்க, தந்தி, வேணு, ம்ருதங்கம், பேரீ, மேக, நாதங்களே. இதில் பேரீ நாதத்தைக் கவனித்து பத்தாவதாகிய மேகநாதத்தில் அப்யாஸம் செய்யவேண்டும். இவைகளுள் முறையே இரண்டாவதிலிருந்து நாதங்கள் உண்டாகும்பொழுது தேகத்தில் சேம்பல், ஆயாஸம், சதை அசைவு, கன்னத்தில் வியர்வை, அம்ருத ஸேவனம், மறைந்த அறிவு, மேலான வாக்கு, பரவசம், திவ்யசக்ஷுஸ், பரப்ரஹ்மநிலை ஆகிய இவைகள் உண்டாகும். இந்தப் பிரஹ்மம் ஆத்மா இவைகள் எதிரில் மனம் ஒடுங்கிவிடும். ஸங்கல்ப விகல்பரஹிதமான மனத்தில் புண்ய பாபம் எரிக்கப்பட்ட உடன், சக்தி ஸ்வரூபமாயும், ஸர்வ வ்யாபியாயும், ஜ்யோதி ரூபமாயும், சுத்த புத்த நித்ய நிரஞ்ஜன ஸ்வரூபமாயும் உள்ள சாந்தஸதாசிவ ஸ்வரூபம் ப்ரகாசிக்கும். இது வேதம், இதுவே தம்.

37. ஸர்வஸாரோபநிஷத் (33)

இந்த உபநிஷத் வினவிடை ரூபமாக வேதாந்த ஸாரத்தை விளக்குகிறது.

1. **பந்தம்.**—அநாத்மாவாகிய தேஹம் முதலியவையாகிய அறிபடுபொருள்களை ஆத்மாதான் என்று அபிமானிக்கும் நிலையே பந்தம் என்னப்படுவது.

2. **மோக்ஷம்.**—அபிமான பந்த நிவர்த்தியே மோக்ஷம்

3. 4. **அவித்தை : வித்தை.**—தேஹமே ஆத்மா என்ற பந்தத்தை உண்டாக்குவது அவித்தை. இந்த பந்தத்தை நீக்குவது எதுவோ அதுதான் ஞானம் என்ற வித்தை.

5. **மூன்று அவஸ்தையும் துரீயமும்.**—ஸூர்யன் முதலிய இந்திரிய அபிமானி தேவதைகள் கருணையால் நிறைந்து, மனது முதலிய 14-கரணங்களினாலே ஸ்தூல விஷயங்களால் சப்தாதிகளைக் கிரகிக்கும் நிலையே ஆத்மாவுக்கு ஜாக்ரதா அவஸ்தை. வெளி விஷயங்களில்லாவிடினும், அப்பப்போ உண்டாகும் வாஸனாரூபமான விஷயங்களை ஜாக்ரத் வாஸனையுடன் பதினான்கு கரணங்களால் கிரஹிப்பது ஸ்வப்நாவஸ்தை. இந்தக் கரணங்கள் ஓய்ந்து விளக்கமான அனுபவ ஞானமில்லாது விஷய உணர்ச்சியில்லாமல் உள்ளதே ஸுஷுப்தி அவஸ்தை. இந்த மூன்று அவஸ்தைகளது தோற்றம், தோற்றாமை, ஆகிய இவைகளுக்கெல்லாம் ஸாக்ஷியாகி பாவாபாவ அதீதமாகி அகண்ட சைதன்யமாகத் தனித்திருக்கும் நிலையே துரீயம். இந்த தனியான சைதன்யம் மூன்று அவஸ்தைகளுடன் ஸம்பந்தப்பட்டிருப்பதால் அவைகளால் ஊஹிக்கக் கூடியதாயும் உண்மையில் இவைகளற்றதாயும் சுத்தமாயும் உள்ளது.

6. **பஞ்சகோசங்கள்.**—அந்ந காரியங்களின் சேர்க்கை அந்நமயகோசம். அந்நமய கோசத்தில் வாயு ஸஞ்சாரம் செய்யுங்கால் ப்ராணமயகோசம் ஏற்படும். இந்த இரண்டு கோசங்களுடன் மனம் முதலிய இந்திரியங்களோடு ஸம்பந்தப்பட்டு சப்தாதி விஷய உணர்ச்சி, எண்ணங்கள் உண்டாகுங்கால் மனோமயகோசம் தோன்றும். மூன்று கோசங்களோடு ஸம்பந்தப்பட்ட அந்தக்கரணத்தில் உள்ள விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சி, த்யானம் முதலியன உண்டாகுங்கால் விஞ்ஞானமயகோசம் வெளிப்படும். அஞ்ஞானத்துடனிருக்கும் நான்கு கோசங்களோடு சேர்ந்து விதையில் மரம்போல ஸ்வந்த ஸ்வரூப ஸுகத்தில் தன் ஞானம் அடங்குங்கால் ஆனந்த மயகோசம் தெரியவரும்.

7. **கர்த்தா.**—சப்த ஸ்பர்சாதி விஷய ஸம்பந்தத்தால் வரும் ஸுகதுக்க (இஷ்டாநிஷ்டம்) புத்தியைப் பின்பற்றி ஏற்படும் இச்சையினாலே நிறைந்த தேஹ அந்தக்கரணங்களை உடையவனே கர்த்தா.

ஜீவன்.—புண்ய பாபகர்ம பலனாக ஏற்பட்டிருக்கும் உடலை தான் அடையாததுபோன்ற பாவனை உடனிருந்தும் தேஹமே ஆத்மா என்று மயங்குபவன் ஜீவன்.

பஞ்சவர்க்கங்கள்.—மனம் முதலான அந்தக்கர

ணம் நான்கும், பிராணாதி வாயுக்கள் ஐந்தும், ஸத்வாதி குணங்கள் மூன்றும், பிருதிவ்யாதி பூதங்கள் ஐந்தும், புண்யபாபங்களாகிய இரண்டும் பஞ்சவர்க்கங்கள் என்னப்படும்.

க்ஷேத்ரஞ்ஞன்.—மூல அவித்தையான லிங்கசரீர பீஜமென்றும், ஹ்ருதயக்ரந்தி என்றும் கூறப்படுவதில் ப்ரதிபலித்து விளங்கும் சைதன்யமே க்ஷேத்ரஞ்ஞன். இந்த லிங்க சரீரபீஜம் முற்கூறிய பஞ்சவர்க்கங்களையும் தர்மமாக உடையது. ஆத்மஞானம் வராதவரையில் அழியாது. ஆத்மஸந்நிதானத்தில் நித்யமாகத் தோற்றும் ஆத்மோபாதியாகும்.

ஸாக்ஷி.—திரிபுடியாகிய அறிபவன், அறிவு, அறிபடுபொருள் ஆகிய இவைகளின் தோற்ற மறைவுகளை உணர்ந்துதான் தோன்றி மறையாது ஸ்வப்ரகாசமாக உள்ள சேதனனே ஸாக்ஷி.

கூடஸ்தன்.—பிரம்மாமுதல் எறும்புவரையில் உள்ள எல்லா ஜீவராசிகள் புத்தியிலும் ஸமமாகப் பாவிக்காணப்பட்டு ஸாக்ஷிக்கிருப்பிடமாகவிருந்து விளங்குபவன் கூடஸ்தன்.

அந்தர்யாமி.—கூடஸ்தன் முதலியவர்களுடன் சேர்ந்து பேதங்களை உணருவதற்குக் காரணமாகி, மணிகளுள் ஊடுருவிநிற்கும் நூல்போல வெளிப்படையாகவிராது தொடர்ச்சியாக தேஹங்களிலிருந்துகொண்டு ஒழுங்குபடுத்துபவனாக விளங்கும் ஆத்மா அந்தர்யாமி.

8. **பிரத்யகாத்மா.**—அவித்யோபாதிக்கு உட்பட்டதும் துவம்பதத்தின் அர்த்தமும் உண்மையில் ஸத்ய ஞானானந்தமாகி, உபாதியற்று, ஆபரணபேதமற்றிருக்கும் தங்கக்கட்டிபோல ஞானகனமாகி, ஆத்மாவாகி, ப்ரஹ்மமாகி இருப்பதே பிரத்யகாத்மா.

9. **பரமாத்மா.**—தத்பதத்தின் அர்த்தமாயும் மாயோபாதியுடன் கூடினதாயும் உண்மையில் ஸத்யஞானானந்தமாகியும், ஸர்வஞ்ஞனாகியும், உள்ளது பரமாத்மா.

10. **பிரஹ்மம்.**—உபாதியற்றது, நிர்விசேஷம், சின்மாத்திரம், ஸத். இரண்டற்றது, ஆனந்தம், மாயை அற்றது. இதுதான் உபாதி ஸஹிதமான துவம்பதார்த்தத்தையும், உபாதிவிசித்ர ஸஹிதமான தத்பதார்த்தத்தையும் விட்டு அப்பாற்பட்டிருக்கும் அபேத அதிஷ்டானம்போல விருப்பதான சுத்த பாரமார்த்திக ஸத்தாமாத்திர அவிநாசி.

ஸத்யம்.—வேதலக்ஷ்யமான ஸத் ஸத்யம். அதுதான் அஸத்தென்னப்படாதது. முக்காலத்திலும் பாதிக்கப்படாதது, உள்ளது, இரண்டாவதற்ற ஒன்ருகவே இருப்பது, ஸஜாதி விஜாதீய பேதமற்றது, எல்லா கற்பனைக்கும் அதிஷ்டமாக உள்ளது.

அவிநாசி.—தேசகால வஸ்து நிமித்த முதலியவைகளில் எது நசித்தாலும் நாசமடையாதிருப்பதுதான்.

ஞானம்.—ஸ்வப்ரகாசம். எல்லாவற்றையும் விளக்குவது. மறைப்பற்றது. அடிமுடி நடுவுமின்றி எப்பொழுதுமிருக்கும், விருத்திக் காப்பாற்றப் பட்டு அதற்கு ஸாக்ஷியாக விருக்கும் சைதன்யமே ஞானம்.

அனந்தம்.—உற்பத்தி, நாசம், ஷட்பாவ விகாரம், உபாதி யற்றது, மண், பொன், நூல் முதலியவைகளின் மாறுபாடுகளில் மண், பொன், நூல்போல அவ்யக்தம் முதலிய ஸ்ருஷ்டி விசித்திரத்தில் வியாபித்துப் பூர்ணமாயும் நாசமற்றதாயும் உள்ள சைதந்யமே அனந்தம்.

ஆனந்தம்.—ஜலத்திற்கு கடல்போல ஸுகரூப அறிவுகளுக்கு ஆதாரமாகி நித்யசுத்த அகண்ட அத்வைத சித்தான ஏகரஸமாயுள்ளதுதான் ஆனந்தம்.

11. **பதார்த்தவிபாகம்.** — ஸத்தாகிய பிரஹ்மம், அஸத்தாகிய துச்சம், மித்யையாகிய ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தினிடம் காணப்படுவது ஆகிய இம்மூன்றுவித பதார்த்தம்தான் உண்டு. அறியத்தகுந்த பொருள் பிரஹ்மமே.

பிரஹ்மஞானம்.—அநாத்மாவாகிய ஜீவன் முதலிய தேஹாதி ப்ரபஞ்சங்களை வேரோடு நீக்கி ஸத்தான பிரஹ்மத்தில் அடங்குவதுதான்.

12. **மாயை.**—அநாத்ம காரணம் மாயை. ஆகாசத்தில் மேகம்போல ப்ரஹ்மத்திலிருக்கிறது. இது அநாதி ஆனால் அந்தமுடையது. இன்னதென்று குறிப்பிட்டுக் கூற இடங்கொடாத அனிர்வாச்யம். அதிஷ்டானத்தில் இது இல்லவேயில்லை. ஸகல தாழ்ந்த உயர்ந்த ரூபங்களுள்ளவளாக அறிவுடையோர் வர்ணிப்பர் இதை. உண்மையில்லாததுதான் மாயை. இதற்கு அஞ்ஞானம், மூலப்ரகிருதி, குணஸாம்யம் (மட்டம்) அவித்தை முதலிய ரூபங்களுண்டு இதற்கு. ப்ரபஞ்சமாகிவிடும் இது என்பது ப்ரஹ்ம ஞானியின் அனுபவம்.

இவ்வாறு கூறிய விஷயத்தை நான் ‘ தேஹாதி ப்ரபஞ்சம் ஒன்றுமல்ல. அஸங்க சின்மாத்திரனை பிரஹ்மமே’ என்று முனிவர்களுக்கு வெகுவாக ஒரு ஆகாயவாணி கூற அவர்கள் இது ஸத்யம் என்று ஈடுபட்டார்கள்.

38. நிராலம்போபநிஷத் (34)

இந்த உபநிஷத் அஞ்ஞான ஸம்பந்தப்பட்டிருக்கும் பிராணிகள் துக்கநிவர்த்திக்கு அவசியமாக

உணரவேண்டியவைகளை எல்லாம் வினாவிடை ரூபமாக வெளியிடுகிறது.

1. **ப்ரஹ்மம்.**—மஹத், அகங்காரம், பூமியாதி பஞ்ச பூதங்கள் ஆகிய பெரிய உருவுடைய ப்ரபஞ்சத்தால் இச்சை, கருமம், ஞானம் ஆகிய இவைகள் ரூபமாக விளங்குவதாயும், இரண்டாவதற்றதாயும், உபாதி ரஹிதமாயும், ஸர்வசக்தி, அனாத்யந்தம், சுத்தம், சிவம், சாந்தம், நிர்குணம், ஆகிய இவைகளின் லக்ஷ்யமாயும் வாக்குக்கு எட்டாமலிருக்கும் சைதந்யமே ப்ரஹ்மம்.

2. **ஈசுவரன்.**—தன் சக்தியாகிய ப்ரகிருதியாலே ஒருபெயரைத் தாங்கி ப்ரபஞ்சங்களை ஸ்ருஷ்டித்து உள்ளே அந்தர்யாமியாய்ப் புகுந்து ப்ரஹ்மாதி அவஸர மூர்த்திகள் புத்தியாதிகளை அடக்கி யாள்பவனாகிய பிரஹ்மமே ஈசுவரன்.

3. **ஜீவன்.**—ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், இந்திரன் முதலிய நாமரூபமூலமாக 'நான் இந்த ஸ்தூல தேஹம்' என்று இல்லாததை உள்ளதுபோல எண்ணிக் கொள்வதாலே ஈசனே ஜீவனாகிறான். ஈசன் ஒருவனேயானாலும், தேஹஸம்பந்தத்தின் காரணமாகிய கருமங்கள் மாறுபட்டால் பல ஜீவர்களாகக் காணப்படுகிறான்.

4. **ப்ரகிருதி.**—ப்ரஹ்ம ஸந்நிதானத்திலே விசித்ர ப்ரபஞ்சங்களை ஏற்படுத்தும் திறனுடைய புத்திரூபமான ப்ரஹ்மசக்தியே ப்ரகிருதி.

5-20. **பரமாத்மா.**—தேஹாதிகளை விட மிகச் சிறந்ததாகையினாலே ப்ரஹ்மமே பரமாத்மா. இந்த பரமாத்மாதான், பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், இந்திரன், யமன், சூரியன், சந்திரன், தேவதைகள், அசுரர்கள், பிசாசுகள், மனிதர்கள், ஸ்திரீகள், பசு முதலியவை, ஸ்தாவரம், பிராஹ்மணர் முதலியவர்கள் எல்லாம்.

21. **ஜாதி.**—தோல், ரத்தம், மாம்ஸம், எலும்பு, ஆத்மா இவைகளுக்கில்லை ஜாதி. வ்யவஹாரத்திற்காகக் கற்பிக்கப்பட்டதே அது.

22. **கர்மம்.**—இந்திரியாதிகள் தொழிலை 'நான் செய்கிறேன்' என்று ஆத்மாவிடம் பொருத்திச் செய்யப் படுபவைகளே கர்மம்.

23. **அகர்மம்.**—நான் செய்பவன், அனுபவிப்பவன் என்ற அகங்கார ஸம்பந்தப்பட்டு பந்தரூபமான ஜனன மரணாதிகளுக்குக் காரணமாகும், நித்திய நைமித்திக, யாக, விருத, தபோ, தானாதிகளை பலத்தில் இச்சைவிட்டுச் செய்வதே அகர்மம்.

24. **ஞானம்.**—அறிபவன், அறிபடுபொருள் என்ற ரூபமாகி எங்கும் அந்தர்யாமியாகி, ஸமமாய், விசித்ரமில்லாததான சைதந்யத்தைத் தவிர, பலவாகத் தோற்றுபவைகளில் வேறாக ஒன்றும் இல்லை என்று அறிந்து, தேஹேந்திரிய அடக்கம், ஸத்குருஸேவை, வேதாந்த சிரவணம், மனன, நிதித்யாஸனம் ஆகிய இவைகள் வழியாக ஏற்படும் ஸாக்ஷாத்கார அனுபவமே ஞானம்.

25. **அஞ்ஞானம்.**—இரண்டாவதற்று அகண்டமாகி எல்லாமாகி நிற்கும் ப்ரஹ்மவஸ்து விடத்தில், தேவ, மிருக, மனித, ஸ்தாவர, ஸ்திரீ, புருஷ, வருணாசிரம, பந்த மோக்ஷப் பாகுபாடுகளை தேஹ மாறுபாட்டால் கயிற்றில் பாம்புபோல கற்பிதமாகக் காணும் அறிவே அஞ்ஞானம்.

26. **ஸுகம்.**—ஸச்சிதானந்த ஸ்வரூபத்தை அனுபவத்தால் உணர்ந்து ஆனந்தமாக விருத்தலே ஸுகம்.

27. **துக்கம்.**—ஸுகத்தைவிட்டு ஸம்ஸார விஷய ஸங்கல்பமே துக்கம்.

28. **ஸ்வர்க்கம்.**—ஸத்ஸங்கமாகிய, ஸாதுக்களுடன் சேர்வதும் ஸத்வஸ்துவாகிய பரம்பொருளுடன் கலத்தலுமே ஸ்வர்க்கம்.

29. **நரகம்.**—அஸத்தாகிய ஸம்ஸாரத்தை வளரச் செய்பவைகளுடன் சேருவதே நரகம்.

30. **பந்தம்.**—அனாதி அஞ்ஞானத்தால் 'நான் பிறந்தேன்' என்பது போன்ற எண்ணமும், வெளி விஷயங்களில் 'என்னுடையது' என்று வரும் மனோ வியாபாரமும், கர்த்திருத்வாதி அகங்கார எண்ணமும், ஸித்திகள் பெறவேண்டும் என்ற ஆசையும், தேவ மனுஷ்யர்களை வழிபடவேண்டும் என்ற எண்ணமும், யோகாப்யாஸம் செய்யவேண்டும் என்ற ஆவலும், வருணாச்ரம தருமகர்மவிஷய எண்ணமும், ஆக்ஞை, பயம், ஸந்தேஹங்கள் ஆத்மாவின் குணங்கள் என்ற எண்ணமும், யாகம், தவம், விருதம், தானம் முதலியவைகள் ஒழுங்கை உணர்ந்து அவைகளின்படி நடக்க வேண்டும் என்ற எண்ணமும் எல்லாம் பந்தத்தின் மாறுபாடுகளே. ஊன்றிப்பார்த்தால் மோக்ஷாபேக்ஷை கூட பந்தந்தான். கேவலம் ஸங்கல்பமே பந்தந்தான்.

31. **மோக்ஷம்.**—நித்தியாநித்யவஸ்து ஆராய்ச்சியால் அநித்யமான ஸம்ஸார ஸுகதுக்கஸம்பந்தப்பட்ட எல்லா விஷய அபிமானம், மனோவியாபாரம் ஆகிய இவைகள் நீங்கிநிற்கும் நிலையே மோக்ஷம்.

32. **ஆராதிக்கத்தகுந்தவன்.**—எங்கும் பரவிநிற்கும் ப்ரஹ்மத்தை அடையச்செய்யும் குருவே ஆராதிக்கத் தக்கவன்.



சிதம்பரம் கோவில்



ஸ்ரீரங்கம் கோவில்

33. சிஷ்யன்.—பிரஹ்மஞானத்தால் ப்ரபஞ்சரூப உணர்ச்சி கழன்றுதனித்திருக்கும் பிரஹ்மமே சிஷ்யன்.

34. வித்வான்.—எங்கும் அந்தர்யாமியாக விருக்கும் தன் ஞானரூபத்தை உணர்ந்தவன் வித்வான்.

35. மூடன்.—தேஹம், வருணாசிரமம், கர்த்தா போக்தா என்ற அகங்காரபாவனை உள்ளவன் மூடன்.

36. ஆஸுரதவம்.—ப்ரபஞ்சச்சிறப்பு வேண்டும் என்ற ஆசையால் ப்ரஹ்மாதி தேவதைகளைப் பட்டினி, ஜபம், அக்னிகார்யம் முதலியவைகள் மூலமாக அந்தராத்மாவைக் கஷ்டப்படுத்திச் செய்யப்படும் தவமும், கொடிய ராகத்வேஷம் துன்பம் டம்பம் முதலியவைகளுடன் கூடியதாகவும் உள்ள தவமும் ஆஸுரதவம்.

37. உண்மைத்தவம். — ப்ரஹ்மஸத்யம் ஜகத் மித்யா என்ற அனுபவ அக்னியினாலே தேவதாச்சிறப்புக்களை அடையவேண்டும் என்ற ஆசைக்கு விரையாகிய ஸங்கல்பத்தை வறுக்கிறதே உண்மைத்தவம்.

38. பரமபதம்.—எல்லாத் தோற்றத்திற்கும் அப்பாற்பட்ட சிறந்த ஸச்சிதானந்த ரூபமான ஸர்வஸாக்ஷியான நித்யமுக்த ப்ரஹ்மஸ்தானம் பரமபதம்.

39. கிராஹிக்கத்தக்கது.—தேசகால வஸ்து பரிச்சேதமற்ற சின்மாத்திர ஸ்வரூபம்தான்.

40. கிராஹிக்கத்தகாதது.—தன் உண்மை நிலைக்கு வேறுபோலத் தோற்றும் மாயாமயமான புத்தியாதிகளுக்கு விஷயமாகும் ஜகத்து ஸத்யமென்று வரும் ஸங்கல்பமே.

41. ஸந்யாஸி.—ஸகல தர்மங்களையும் விட்டு, அகங்கார மமகாரமற்று ப்ரஹ்மத்தையே கதியாகச் சார்ந்து ‘தத்வமஸி’ ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மா, நேஹநாநா அஸ்திகிந்து நேதி முதலிய வாக்கிய அனுபவ ஞானத்தால் ‘அஹம் ப்ரஹ்மாஸ்மி’ என்ற திடத்துடன், நிர்விகல்ப ஸமாதியில் நிலைபெற்று, ஸ்வதந்திரனாகத் திரியும் யதி எவனோ அவன்தான் ஸந்யாஸி, முக்தன், பூஜ்யன், யோகி, பரமஹம்ஸன், அவதூதன், ப்ரஹ்மஞானி.

இந்த உபநிஷத்தை அத்யயனம் செய்பவன் பூர்ண பரிசுத்தனாகி, மறுபடி திரும்பிவந்து பிறக்கிறதில்லை.

கர்மாநுஷ்டானம்.—ஹரிநாம ஸங்கீர்த்தநத்தைக் கேட்டமாத்திரத்திலேயே அன்பு நீர் ஆறாய்ப் பெருகாதிருக்கும் வரையில்தான் கர்மாநுஷ்டானங்கள் வேண்டப்படும். ஹரிநாமத்தை யுரைக்கும்பொழுதே உள்ளங் கனிந்தாநந்தக் கண்ணீர் மல்கும் மெய்யன்பனுக்குக் கர்மாதிகள் அநாவசியம்.

—உபதேசரத்நமாலை.

மயிலைக் கபாலிக் கலி வெண்பா
MAYILAI KAPALI KALI VENBA

காப்பு

தானே நடாத்துவள் தாழ்ந்து மறைவேண்பூ
மாலை மனதிற் கொள.

நூல்

அருவுரு வில்லா தடைந்த பொருளு
மரு மரு கொன்றை மணந்து—திருமருவுஞ்
சோதியே தானாகித் தொண்டர்தமைத் தானாக்கு
மாதியாய் நின்ற அரும்பொருளும்—வேதத்தின்
மூலமாய் நின்ற முதுபொருளுங் காலற்குக்
காலனாய் நின்ற கலையவனு—மேலான
வீட்டை யளிக்குமுயர் வேதியனும் பேய்ச்சூழக்
காட்டின்க ணின்ற கருத்தனு—மாட்டினனு
மஞ்சின்க ணொன்றேறி யஞ்சின்க ணொன்றினோ
டஞ்சின்க ணொன்றாக்கு மஞ்சினனு—மஞ்சு
மடங்க வருமியோக மாற்றி மயர்விற்
சடங்கு தனைக்காட்டு மாசிற்—படையனு
ஞான மறைபொழிய நாகர் புலிதமக்கா
யூன மிலாதாடு முத்தமனும்—ஆனமெய்ப்
பத்தர் தமதாற்றன் முற்றும் பரீக்கைசெயுஞ்
சித்தமுளா னதலினாற் சித்தத்தின்—சுத்த
வெளுப்பற்று ளீதறியார் வீணாகி யாலக்
களிக்கறைக் கண்ட னெனவே—விளித்தாரால்
பூமேவு மாரியற்கு போதந் தெரிந்து மந்தோ
நாமென் னகங்கார நண்ணியதா—னேமென்றே
யோர்சிரத்தைக் கிள்ளி யுணர்விலா ராங்காரச்
சார்விலா ராக சமைத்தனனாற்—சீர்மேவு
நாகனுரி ஞானமிலா நாட வணக்கமஃதை
போகமொடு பூண்ட புராதனனு—நாகனை
நல்லணியாக் கொண்ட நயத்தவனும் பூதலத்தி
லுள்ளவர்தம் முள்ளத் துணர்வதனைக்—கொள்ளும்
யோகமது காட்ட வுயர்ஞானப் பச்சைமயிற்
பாகமிடங் கொண்ட பரமனும்—போகா
ரருளாழி யாகி யறனாகி நின்ற
பொருளாகித் தோன்றும் புராணன்—மருவில்
குணமோடு நின்றுங் குணமற்று நின்ற
குணமோடு கூன லெரிபுள்—கணனாகி
நின்றலர்ந்து ஞான வொளியி னெறிபூட்டி
பொன்றிகழும் வேதாந்த பூரணனு—மின்றிகழும்
வேயதின்கண் மேவி விழுமடைந்து விண்ணவர்க்கு

மாயமுடன் கீழிடத்து மூண்டாவர்—மாயாத [குஞ்
மேன்மையுண் மீப்பெரிய வென்றறிவான் காட்டுகிற்
சான்மையுடைத் தந்திரமுட் டானுவு—மான்ற
சடையிடை கங்கை தனிமதியஞ் சூடி
மடைமையுள நாயேற்கு மஞ்ஞை—நடையுடையா
டன்னோடு தண்ணளிக்கச் சார்புடைய மான்போனு
மன்னுடைத்து தக்கனை மாளச்செய்—பின்னைப்
பரம னகலா படரன்பு செய்யா
சுருதிச் சுடர்ப்பிழம்பாத் தோன்றி—யுருவின்
றதன்கண்ண னின்று யனங்கட்கு மாதி
பதங்காட்டும் பண்ணின் பரய—னிதங்காட்டு
மானர்க்கு மாண்புள் மதியளித்து வேதத்து
ஞானத்தை நல்கு நயத்தினனு—மோனநிலை
தந்து தனிமூல வாதாரத் தாமரையின்
விந்துதொனி யாகின்ற வித்தகனுஞ்—சந்ததமுங்
குற்ற மிலானுகிக் குற்றத்தைக் கொல்லுகிற்குஞ்
சுற்ற மிலானுய தூயவனு—முற்றுங்
காணங்க ளின்றி களங்க மகற்றுங்
கருணைக் கடலாய கண்டன்—ஒருபொழுது
நீங்காத சத்தியுளா னீங்காத புத்தியொடு
நீங்காத முத்தியரு ளீண்டவனு—நீங்காத
தந்திரத்தோ னந்தமிலா தாகமிலாத் தானவனு
மந்திரத்து மூல மறைப்பொருளு—நந்தா
வெழிலுடைய ஞகி யிடும்பை யொழிக்குங்
கழிநடம் கண்டுநின்ற கண்ணன்—மொழியாதம்
மன்றினிடை யாடி மயக்கி வழிகாட்டு
நன்றுடைய நாடகஞ்செய் நாட்டியனும்-பொன்றுவணம்
பேத மதம்பாவம் பீடை யகமுடன்கு
ரோதமொடு லோபமயல் ரூமிலை—யோதுகின்ற
ஐயமிவை யின்றி யவைமாளத் தானுகந்து
செய்து மருளின்றி நின்றவனுஞ்—செய்ய
பிசுற்ற வாசாரம் பேணுஅ தலைதை
சுசக்குகின்ற காரியனுங் கல்லா—தசக்ரீவன்
சைல மெடுக்கத் தடுத்துப் பிணிசெய்யும்
சைலத் தரசன் தனையொடு—கைலையிடை
நின்றுயர்ந்த சாம செடும்பண் மயங்குவனும்
பொற்குன்றை நாண்செய்த புண்ணியனு—நிற்கு
நெறியளிக்குந் தூய னிலிங்கத்து னின்று
மறையளிக்குஞ் சேய்க்காய் மறவி—விறலுடைத்குங்
கண்ணுதலுங் கண்ணுங் கருத்துங் கருத்தினிடை
எண்ணும் வழுத்தும் எழுத்தினிடைப்—பண்ணும்வி
கொண்டற் குலங்களகங் கொன்ற குலமிலியு [ண்
மண்டக் கடங்கா வலைநலைக்—கொண்டானு
மிக்கோரின் புந்தியின் மேவியென்றும் பத்தர்மனம்
புக்குபு நின்ற பொலிவினனு—நக்கனுய்
நின்ற நடுநிலையு சேமங்கட் கண்டோனுங்
குன்றிக் குறுகிப்பின் கூன்கொண்ட—நன்றியொடு
பெண்டொழே னென்று பிணங்குமம் மானவர்தா
மென்பூ தனைநாடு மேன்மையுள—வண்டதுவா
யாகந் துளைத்துதனை நாடு மகந்தையர்க்கும்
போகத்தே காலளித்த புண்ணியனுஞ்—சோகார்
பகீரதன் போற்ற இழிகங்கை பாரிற்
புகும்படித் தோன்று புனிதன்—நகையாற்
புரமூன் றெரித்த பொறையுருவா மேன்மை
யுறமூன்றி நின்ற வுயர்வுங்—கரியுரைக்க
தீக்கைக்கொள் தேவர்த் தலையதுவுந் தேவர்க்குக்
காக்கை யளிக்குங் கருணையுந்—தீக்கண்ணன்
வேவொழிக்கும் வித்தகனும் வேதர்க் குயர்முதலும்
வாளொளிகான் வேயினிடைத்தோன்றலும்—வாள்விழி
மாயை கழிக்கு மருத்துவனு நானென்னும் [யார்
பேயை யொழிக்கும் பெரியவனுர்—தாயைப்போ-
லுள்ளத்தி னின்று மறைப்பொருளை யோதுகின்ற
கள்ளக் கருத்தில்மதிக் கண்ணியனும்—விள்ளுமெற்
கைந்திலையுங் கட்ட வருணைத் தான்றந்தென்
னைந்திலையு நீக்கி யருளுவின் ஐந்தெழுத்து
முற்றுப் பனுவலிடை யார்வோ டுறைக்கின்ற
கற்கரும் பேசாதக் காட்சிதனை—யுற்றதன்பின்
மூலாதா ரத்தினின்று முன்னேங்கு மோங்காரக்
காலோலைக் கண்டு கருத்தினன்—மேலா
மனமரையின் மண்டலத்து வானேனும் பேதை
யினத்தேனு நின்று சகஜநிட்டை—யின்புறீ இ
யொன்ற விரண்டிலையு மோதும் படிக்குணர்வை
நன்றூண் மன்னிடைத்தா ளுட்டுவனும்—பொன்றிக
தூய மலர்க்கொன்றைத் தும்பை மலர்ச்சூடி [மூக்
யாய மயிலை யரன்.

வீ. சேஷகிரி, பீ. ஏ.

கர்மாநுஷ்டானம்.—அருமையான முத்தை மூடிக் கொண்டிருக்கும் சிப்பியானது தன்னளவிற் பயனற்றதாயினும் முத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாயிருக்கின்றது. முத்தையே வைத்துக்கொண்டிருக்கின்றவனுக்கு அதன் ஓட்டினல் யாதொரு பயனுமில்லை. அவ்வாறே பரமஹம்ஸமாகிற பரம்பொருளைப் பெற்றவர்களுக்குச் சரியை கிரியையாதிகள் அநாவசியமாகும்.

—உபதேசரத்நமாலை.

பிரிட்டிஷ் துரைத்தன ரீதி

THE BRITISH CONSTITUTION

அத்தியாயம் 5

முற்கூறியவாறுதான் பார்லிமெண்டு மெம்பர்கள் நியமனம் பெறுகின்றனர். அச்சபையில் பிரதான கட்சிகள் இரண்டுண்டு. இவ்விருதிறத்தாரும் ஒருவர்க்கொருவர் பிரதீகாரம் செய்பவர்களாதலால், ராஜ்யாதிகாரம் வெகு ஜாக்கிரதையாக நடக்கிறது. இவ்வாறுள்ள கட்சிப் பிரதிகட்சியினல், சபையில் கொண்டுவரப்படும் ஒவ்வொரு விஷயமும் பரிஷ்காரமாய் விமரிசிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு விஷயத்திலுள்ள குற்றங்களையும் ஆக்ஷேபனைகளையும் எதிர்க் கட்சிக்காரர் எடுத்துக் கூற, அவைகளுக்குச் சொல்லும் சமாதானத்தால் அவ்விஷயத்தின் நன்மையும் பயனும் வெளியாகின்றன.

இவ்விரு திறத்தாருக்கும் பிராசீனர் என்றும், நவீனர் என்றும், சாமான்னியமாய்ப் பெயருண்டு. நவீனர் சாதாரணமாக விமர்சனம் வேண்டுபவர். பிராசீனரோ இருப்பதைக் காப்பாற்றுபவர். நவீனரால் ஜாரிக்கு வருகிற எவ்விஷயமும் சீக்கிரத்தில் பிராசீனரின் பாதுகாப்பில் போய்விடும். பெயருக்கு மாத்திரம் இவர்கள் விரோதிகளே யொழிய, தீர்மானிக்கப்பட்ட ராஜ்ய விஷயங்களில் விரோதத்தைக் காட்டுவதில்லை. இவர்கள் இருதிறத்தாரிலும் அனேக சில்லரைக் கட்சிகளுண்டு. அவைகளைப் பற்றிப் பேசினல் பெருகும்.

சாமான்னிய சபையில் அக்கிராசனம் வகிப்போருக்கு, மேற்கூறியபடி "நாவலன்" என்று பெயர், ஆனல் சாமான்னியமாய் அவருடைய நாவன்மை மவுனவிரதமாகவே காணும்! தகரார் பிறந்தால் அவர் வாயைத் திறப்பார்; விஷயவிவாதங்களாலுண்டாகும் கட்சிகளில் இவர் சம்மந்தப்படுவதில்லை. அக்கட்சிகளில் சபையார் சமமாகப் பிரிந்து போனல்மட்டும் இவர் ஏதேனுமொரு பகுதியில் சேருவார், வாசலுக்கு எதிராக உயர்ந்த ஆசனத்தில் இவர் வீற்றிருப்பார். அவருக்கு வலது பக்கத்திலுள்ள ஆசனங்களில் முன் வரிசையில் ராஜ்யாதிகாரம் வகிக்கும் கட்சிக்காரும், அவர்களுக்குப் பின்னல், அவர்களுடைய சகாக்களு மிருப்பார்கள். நாவலனுக்கு இடது பக்கத்தில் ராஜ்யாதிகாரமிழந்த கட்சிக்காரர், தங்கள் தலைவனை முன்னிட்டுக்கொண்டு இருப்பார்கள். மந்திரிமார்களில் மாறுதல்க ளுண்டாகும் போது, இக்கட்சியார் இடம் மாறியுட்காருவார்கள். சாமான்னியர் மகாராஜாவுக்குச் செய்து கொள்ளும் விண்ணப்பம் முதலியவை யெல்லாம் நாவலன் மூலமாகவே செய்து கொள்ளவேண்டும்.

புதிதாகப் பார்லிமெண்டு சபை நியமனம் செய்யப்படும்போது, நாவலரும் நியமிக்கப்படுவார். அவர் பிரிவி கவுன்சில் மெம்பர்களில் ஒருவராகவே யிருப்பார். அப்பார்லிமெண்டு கலைந்துபோகும் வரையில் அவருக்கு அந்தப்பதவி யிருக்கும். பிற்பாடு அவர் மறுநியமனத்துக்கும் அருகராவர். நாவலர் வாராமலிருந்தால் அவர் ஸ்தானத்தை வகிக்கவும், விசாரணைச் சபையில் அக்கிராசனாதிபதியாக விருக்கவும் ஒரு உபநாவலர் இருக்கின்றனர். நாவலர், உத்தியோகத்தை விட்டு நீங்கும்போது, அவரை ஒரு பிரபுவாக்கி 4000 பவுன் உபகாரச் சம்பளம் கொடுத்து கவுரவப்படுத்துவது பதிவு.

பிரபுக்கள் சபையைப்போலவே, சாமான்னியர் சபையிலும் நடக்கும் நடவடிக்கைகளெல்லாம் அந்நியர் நிர்ப்பந்தமற்று நடப்பவை. மெம்பரல்லாதவர் யாரேனுமிருந்தால் அவரை நாவலன் வெளியே போகும்படி செய்துவிடலாம். பேசுவதற்கு எழுந்திருக்கும் ஒவ்வொருவரும் நாவலனை விளித்து "ஐயா" என்று தொடங்குவதே மரியாதை. சபாக்கிரமத்துக்கு விரோதமாக நடக்கும் மெம்பர்களைக் கண்டித்துப் புத்திசொல்ல நாவலனுக்கு அதிகாரமுண்டு.

சபையில் காரியம் தொடங்குவதற்குக் குறைந்தது 40 மெம்பராவது இருக்கவேண்டும். சாமான்னியர் சபையில் 670 மெம்பர்கள் இருந்தாலும், அவர்கள் அனைவரும் ஒரேகாலத்தில் சபையி லிருப்பதற்குப் போதுமான இடம் சபாமண்டபத்தில் இல்லை. சாதாரணமாக 350 மெம்பர்கள் தாம் தாராளமாக விருக்கலாம்.

வருஷாவருஷம் பிப்ரவரிமாதத்தி னிடையில் பார்லிமெண்டு கூடி டிசம்பர்மாதம்வரையில் இருக்கும். ஈஸ்டர், விட்ஸன் முதலிய ரஜா நாட்களில் சபை கூடாது. சபை கூடியிருக்கும் காலங்களில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த மற்றைய முதல் நான்கு நாள்களில், பகல் இரண்டேமுக்கால்மணிக்கு தேவப்பிரார்த்தனையுடன் சபை ஆரம்பமாகும். ஆக்ஷேபனையற்ற பிரத்தியேக மசோதாக்களைப்பற்றிப் பேசுவதும், துரைத்தன விஷயமாக மெம்பர்கள் மந்திரிமார்களைக் கேள்விகள் கேட்பதும் முதலில் நடக்கும். இக்கேள்விகளுக்கு முக்கால்மணிநேரம் சாவகாசமுண்டு. இதற்குமேலும் சாவகாசம் வேண்டியிருக்குமென்று

தோன்றினால், கேள்விகளின் பதிலை அச்சடித்து மெம்பர்களுக்குக் கொடுத்துவிடுவது பதிவு. சாயங்தரம் 1 மணி முதல் இரவு 11 மணிவரை கவர்ன்மெண்டு மசோதாக்கள் கவனிக்கப்படும். பின்னர், சபை கலைந்துபோகும். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பகல் 12 மணிக்குச் சபை ஆரம்பமாகி சாயந்தரம் 5 அல்லது 5½ மணிக்குக் கலையும். அன்றைய தினம் கேள்விகள் கேட்பதில்லை.

பார்லிமெண்டில் கொண்டு வரப்படும் விஷயங்கள் பகிரங்கமென்றும், பிரத்தியேகமென்றும் இருவகைப்படும். பொதுவாக ராஜ்ய விஷயத்தைப் பொறுத்தவையெல்லாம் பகிரங்க விஷயமெனப்படும். சில மனிதர்களையோ, ஒரு வகுப்பினரையோ பொறுத்தவைகள் பிரத்தியேக விஷயமாம். பிரத்தியேக விஷயங்கள் சட்டமாவது சற்று சிரமசாத்தியம்.

சாமான்னியர்சபை செய்யும் காரியம் மூன்றுவிதமானது. முதலாவது சட்டநிரூபணம்; இரண்டாவது பணவரவு செலவு; மூன்றுவது துரைத்தன விஷய ஆராய்ச்சி. முதலாவதான சட்டநிரூபணத்தில், இச்சபை பிரபுக்கள், சக்கரவர்த்தி, இவ்விருவருடைய அனுமதியைப் பெறவேண்டும். ராஜ்ய நிருவாகத்துக்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்க வழிதேடுவது இச்சபைக்குமட்டுமுள்ள காரியம். சபையில் கேள்விகள், தர்க்கங்கள், இவை மூலமாய் துரைத்தன விஷயங்களைச் செவ்வனே ஆராய்ந்து குணதோஷ பரிசீலனை செய்கின்றது.

இம்மூவகைக் காரியங்களில் சட்டநிருபணத்தைப் பற்றி மட்டும் இங்குப்பேசுவோம். மற்றைய விரண்டையும் அதற்குரிய விடங்களில் பிரஸ்தாபிப்போம்.

மகாராஜாவினுடைய அங்கிகாரத்தைப் பெறுவதற்கு முன்னால் ஒரு மசோதா அடைந்து தீரவேண்டிய பருவங்கள் சில வுள்ளன. ஒரு மசோதாவை பார்லிமெண்டு மெம்பர்களில் ஒருவர் தாம் கொண்டுவருவதற்குரியவர், மற்றையோர் கொண்டுவரக்கூடாது. அம்மசோதா சாமான்னிய சபையில் உதிப்பதானால் அதைக்கொண்டு வரும் மெம்பர் முதன் முதலில் நாவலனுடைய அனுமதியைப் பெறவேண்டும். அல்லது அதற்கென்றேற்பட்ட ஒரு விளம்பரத்தை அறிக்கை செய்யவேண்டும். குறித்தகாலத்தில் நாவலன் இந்த மெம்பரைக் கூப்பிட்டு, அவருடைய மசோதாவைக்கொண்டு வரலாமென்பார். பார்லிமெண்டு உத்தியோகஸ்தர் ஒருவர் ந்த மசோதாவின் பெயரைப் படிப்பார். இதுதான் மசோதா முதன்முறை படிக்கப்படுவதென்பது. உடனே அம்மசோதாவை அச்சடிக்க உத்திரவிட்டு, இரண்டாமுறை படிக்கப் படுவதற்கு ஒருநாளும் குறிப்பிடுவார்கள். இரண்டாமுறை படிக்கும்போதுதான் அம்மசோதா விஷயமாக மெம்பர்கள் பொதுவாகத் தர்க்கித்துப் பேசுவார்கள். மெம்பர்களுக்கு மசோதாவின் பொது நோக்கம் சம்மதமானால், அதைப்பற்றி இன்னும் ஆலோசனை செய்ய ஒரு கமிட்டி ஏற்படும். கமிட்டியில் மசோதாவின் ஒவ்வொரு வாக்கியமும் ஜாக்கிரதையாகக் கவனிக்கப்படும். அதில் பழையன கழிந்து புதியனபுகும். அங்கு கரையேறியதும், கமிட்டியின் தலைவன் நாவலனுக்கு ஒரு ரிபோர்ட்டு செய்வர். இவ்விதக் கமிட்டிகள் நான்குள்ளன. அதில் காரியம் தொடங்குவதற்கு இருபதுபேர் இருக்கவேண்டும்.

கமிட்டி பருவத்தைத் தாண்டிய மசோதா, மறுபடியும் பார்லிமெண்டுக்குள் வரும். அப்போது அதில் இன்னும் ஏதாவது கூட்டிக் கழிக்கவேண்டுமாவென்று ஆலோசிப்பார்கள். பின்னர்வருவது கடைசிப்பருவம். அதாவது மசோதா மூன்றுமுறை படிக்கப்படும் காலமாம். அப்போது, அதிகமான மாறுபாடுகள் ஏற்படுவதில்லை. அது சட்டமாகலாமா கூடாதா வென்பதுமட்டும் கவனிக்கப்படும். இவ்வாறு எடுக்கும் விஷயங்களைக் கிரமப்படி மூன்று முறை வெவ்வேறு தினங்களில் படித்து, வியவகரித்து, கடைசியாய், ஏதோ ஒருவிதம் சபையார் ஒப்புக்கொண்டதும் அவை மேற்சபைக்குப் போகும். அங்கும் அவை மூன்று முறை படிக்கப்படவேண்டும். பிரபுக்கள், இவ்விதம் வரும் மசோதாக்களை நிராகரித்துவிடலாம்; அல்லது மாற்றலாம். ஆனால் பணவிஷயமாகவுள்ள மசோதாவை மாற்ற அவர்களுக்கு அதிகாரமில்லை. இரு சபையாருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், அதை நிவர்த்திக்க வழி தேடுவார்கள். இருவரும் ஒருமனப்படாவிட்டால் மசோதா சட்டமாகாது.

பார்லிமெண்டு கூடியிருக்கும் காலத்திலேயே ஒரு மசோதா சட்டமாகாவிட்டால், அது இறந்துபோனதாகக் கருதப்படும். அவ்விஷயமான சட்டம் வேண்டுமானால், மறுபடி கூடும் பார்லிமெண்டில் புதிய மசோதா கொண்டுவரவேண்டும்.

இரண்டு சபையாரும் ஒப்புக்கொண்ட மசோதா மகாராஜாவினுடைய அங்கீகாரத்துக்குப் போகும். இதற்கு அவர் சம்மதித்துத்தான் தீரவேண்டுமென்பதை முன்னொரு அத்தியாயத்தில் விளக்கியிருக்கிறோம். ஆன் மகாராணி காலத்துக்குப்பின் இங்கிலாந்தில் அரசாண்டவரில் ஒருவராவது, இவ்விதம் இரு சபையாரும் ஒப்பிய விஷயத்துக்கு அங்கீகாரத்தை மறுதளித்ததில்லை. இவ்வங்கீகாரம் மகாராஜாவால் நேரிலாவது, அதிகாரிகள் மூலமாவது, அப்போதைக்கப்போது, அநேக மசோதாக்களுக்கு மொத்தமாக அளிக்கப்படும்.

இப்படி, மகாராஜாவினுடைய கையொப்பத்தைப் பெற்ற பின்பேதான் மசோதா ஜாரிக்கு வரக்கூடிய சட்டமாகும்.

பணம் சம்பந்தமான மசோதாக்கள் சாமான்னியர் சபையிலும் மற்றைய மசோதாக்கள் எங்கு வேண்டுமானாலும் ஆரம்பமாகும் என்றோம். இதற்கு ஒரு விலக்கு ஏற்பட்டுள்ளது. பெருங் குற்றவாளிகளுக்கெல்லாம் பொதுவாக அபராத க்ஷமைசெய்ய வெண்ணிக்கொண்டுவரும் மசோதாமட்டும் மகாராஜாவால் கொண்டுவரப் படவேண்டும். அம்மசோதா, மற்றைய மசோதாக்களைப் போல ஒவ்வொரு சபையிலும் மூன்று முறை படிக்கப்படுவதில்லை. ஒரே ஒரு தரம் தான் படிக்கப்பட்டு, சட்டமாகி ஜாரிக்கு வரும்.

பார்லிமெண்டு நடவடிக்கையின் ரிகார்டைப் பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லி இவ்வத்தியாயத்தை முடிவு செய்வோம். எட்டாம் ஹென்றி காலத்துக்கு முன் வரையில் நடவடிக்கைகளெல்லாம் "பார்லிமெண்டு சுருள்" என்பனவற்றுள் அடங்கியிருந்தன. அதற்குப் பிறகு ஒவ்வொரு சபைக்கும் தனித்தனி ரிகார்டு ஏற்பட்டது. 1909-ம் வருஷம் வரையில் இவ்வித ரிகார்டு கவர்ன்மெண்டாரால் பிரசுரமானதில்லை. "ஹான்ஸார்டு" என்பவர் பிரசுரமே சிறந்த தென்றெண்ணப்பட்டது. 1909-ம் வருஷம் முதற்கொண்டு ஒவ்வொரு சபையிலும் பிரத்தியேகமாக ரிபோர்ட்டர்களிருந்து ஒவ்வொரு நாளும் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டெழுதி, அச்சிட்டு மறுநாட்காலையில் மெம்பர்களுக்குக் கொடுக்கும்படி புதிய ஏற்பாடு உண்டாகியிருக்கின்றது.

வீணவாதம் புரியேல்.—வெறுங்குடத்தில் நீரைக் கொட்டினால் உண்டாகும் நீர்க்குமிழிகளின் சத்தமானது குடம் நிறைந்தபொழுது நின்று விடுகின்றது. அதுபோலவே கடவுளைக்காணாதவன் ஈஸ்வரன் நிச்சயத்தைப்பற்றியும் ஈஸ்வரன் லக்ஷணத்தைப் பற்றியும் வீண்தர்க்கம் புரிகின்றான்; ஆனால் பகவானை ஏகாந்தத்தில் தரிசித்தவன் ப்ரஹ்மானந்த சுகத்தை மௌனமாய் அநுபவிக்கின்றான். "நிறைகுடம் நீர்தளும்பலில்."

—உபதேசரத்நமாலை.

திராவிடக் கதைகள்

SOUTH INDIAN FOLKLORE

3. தும்மட்டிக்காய் பட்டன்

முன் ஒரு ஊரில் ஒருவன் இருந்தான். அவன் நிரக்ஷரகுக்ஷி. அவன் வயிற்றைக்கீறி எடுத்தாலும் ஒரு எழுத்தைக் காணமுடியாது. ஆனால் வெகு நல்லவன். அவனுடைய மனைவி ஓர் ஜோதிஷ சாஸ்திரியின் மகள்; மிகப் படித்தவள். பூர்வகருமவிசேஷம். மொட்டைதலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டுவிட்டது. என்ன செய்வது? தன் கணவனை ஜோதிஷத்திலாவது பயிலும்படிச் செய்து அவனை வாழ்விக்கவேண்டுமென்பது அவள் கருத்து. பலமுறையும் தூண்டப்பட்டவனாகி நமது கதாநாயகன் தன் மாமனார் வீடு செல்ல மனங்கொள்ளாமல், தான் தேசாந்தரம் போய் படித்துவரப் போனான்.

போகும் வழியில் ஓர் ஆற்றங்கரையில் தங்கினான். அங்கு ஓர் புங்கமரநிழலில் சுகமாக உட்கார்ந்துகொண்டிருந்தான். தென்றல் காற்றும் மந்தமாக வீசிக்கொண்டிருந்தது. படிக்கவந்த பெரியவனும் வெள்ளை வெளேலென்று வெளுத்துக்கிடந்த ஆற்றங்கரையைப் பார்த்து ஆச்சரியமடைந்து "புதுமணலும் புங்கநிழலும் தென்றலாறே" என்று பாடினான். அது அவனுக்கப்பொழுது இன்பம் பயந்தது. தனக்குத் தெரியாமல் அவன் மகாபண்டிதனாக ஆகிவிட்டதாக எண்ணினான். அவனுக்கு, தான் ஓர் பாதம் கவி பாடியதாகத்தான் எண்ணம்.

வீட்டைநோக்கித் திரும்பினான். தனது மனைவியிடம் அடைந்தான். அவள் தன் தலைவன் மிகப்படித்து வந்ததாக எண்ணி என்றுமில்லாத மரியாதைகள் செய்தாள். இதைப் பார்த்தவன் "ஓகோ! இது படிப்புக்கு மரியாதை. நமக்கல்ல. நாம் இன்னம் படிக்கவேண்டும்" என்று நிச்சயம் செய்துகொண்டான். பின் தன் படிப்பை உடனே அவளுக்குக் காட்டினால் அதன் பெருமை குறைந்துவிடும் என்று உடனே காட்டவில்லை. பின் உண்டி உணவு எல்லாமானதும் மனைவி "தேசாந்திரம் சென்றீரே, தாங்கள் என்னவென்ன படித்தீர்" என்று வினயத்துடன்கேட்டாள். "படித்ததா! கொஞ்சமல்ல நெஞ்சமல்ல! ஓரேயடியில் உலகத்தையெல்லா முணர்ந்துவிட்டேன்" என்று பதில் சொன்னான். படிப்பில் வாமனமூர்த்தியென்று இவன் எண்ணம்தான். "ஆனால் அந்த அடி யென்ன?" என்றவள் கேட்டாள். "அடியா!" என்றவளை அடித்துக் காட்டி

னான். "இதைக் கேட்கவில்லையே! தாங்கள் ஏதோ ஓர் அடியால் எல்லாவற்றையு முணர்ந்தீர்கள் என்றீர்களே! அந்தப் பாதத்தைச் சொல்லும்" என்று கேட்டாள். "பாதத்தைச் சொல்வதாவது; பார்" என்று தன் பாதத்தைக் காட்டினான். பின் மற்றுமவள் தான் கொண்ட எண்ணத்தை நன்றாக வெளிப்படையாகக் கூறியபொழுது "பார்த்தையா! இப்பொழுது என்னிடம் உன்னால் சொல்ல முடியவில்லை. இனி உன் படிப்பால் என்னை ஏமாற்ற முடியாது. கொஞ்சம் சாக்ரதை இருக்கட்டும்! பத்ரம்! போனால் போகிறது. அந்தப் பாட்டை சொல்லுகிறேன் கேள்" என்று சற்று யோசித்தவன்போலக் காட்டிக்கொண்டு "புது மணமும் புங்கநிழலும் தென்றலாறே" என்று முகாரி பாடலானான். இதைக் கேட்டு அவன் மனைவி "இதைத்தானாக் கற்று வந்தீர்" என்று ஏங்கலானாள். அவளது பிரலாபத்துக்கிரங்கி மற்றும் நமது கதாநாயகன் ஜோதிஷம் படிக்க தேசாந்தரம் சென்றான்.

நமது பெரியவர் இப்பொழுதும் ஓர் ஆற்றங்கரையில் தங்கினார். மனோரம்மியப் பிரதேசம்—அதைப் பார்த்துப் பார்த்து பரவசமானார். அழகு மிகுந்த அந்த இடத்தில் மாலையிருள் நீங்கி பூர்ண சந்திரன் களங்கமின்றி ஆற்றங்கரை மேலெல்லாம் நிலாப் படுக்கை விரித்திருந்தது. நிச்சப்தமாகத்தானிருந்தது. அப்பொழுது எங்கள் ஐயா ஓர் எலிவளையும் பார்த்தார். மேல் விளங்கிய சந்திரனையும் பார்த்தார். சந்தோஷத்துடன் சந்திரனுடன் பேசவேண்டுமென்று ஆவல் கொண்டவர்க்கு அந்த எலியின் செய்கை பேச இடம் கொடுத்தது.

"எலி வளை நோண்டுது சந்தமாமா"

என்றவன் சந்திரனுடன் பேசினான். நிச்சப்தமான இடத்தில் ஓசை கேட்டதும் எலி உற்றுப் பார்த்தது. அப்பொழுது

"உத்து உத்து கேட்குது சந்தமாமா"

என்று பாடினான். அந்த எலி மீண்டும் விழித்துவிட்டு உள்ளே ஓடிவிட யத்தனித்தது. அதைக் கண்டதும்

"ஓடிப்போகப் பார்க்குது சந்தமாமா"

என்றான். பின் தனக்கும் தோன்றாமல்

"ஓடிப்போனால் விடுவேனோ சந்தமாமா"

என்று முடித்துவிட்டான்.

"நன்றாக முடித்துவிட்டேன். இன்னம் ஒரு முறை சொல்லிப் பார்ப்பேன்" என்று தனக்குள் யோசித்து,

"எலிவளை நோண்டுது சந்தமாமா!
உத்து உத்து கேட்குது சந்தமாமா!
ஓடிவிடப் பார்க்குது சந்தமாமா!
ஓடிப்போனா விடுவேனோ சந்தமாமா!"

என்று பாடி "பலே! பேஷ்" என்றுகொண்டு தலையசைத்தசைத் தானந்தமடைந்தான். நன்றாகக் கல்வி கற்றுவிட்டதாக அவன் எண்ணம். இதற்குள் தன் வீட்டைப்பற்றிய எண்ணமும் அவனுக்குண்டாகிவிட்டது. உடனே வீட்டை அடைய திரும்பிவிட்டான். வழியில் ஓர் சோலையில் சிரமபரிகாரம் செய்து கொள்ள நின்றான்.

அச்சோலையின் மூலையில் இரண்டு பனமரங்கள் இருந்தன. இதைப்பார்த்து "இரட்டைப் பனமரம் நிற்கக்கண்டேன்" என்று குதூஹலித்தான். அப்பொழுதுதான் அதன் பக்கத்தில் ஓர் பெரிச்சாளித் தோண்டிக்கொண்டிருந்தது. உடனே,

"சீமைப் பெரிச்சாளித் தோண்டக் கண்டேன்"

என்றான். இவனுடைய மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஓர் ஆந்தை விழித்து விழித்து பார்த்தது. அதைக் கண்டதும்,

"ஆந்தை விடாது விழிக்கக் கண்டேன்"

என்றிவன் ஆனந்தமாக உச்சம்பெறக் கூவிக்கொண்டிருந்தான். இந்த இரைச்சலைக் கேட்ட அங்கு ஒளித்திருந்த முயல் வேடர்களோ என்று வெருண்டு ஓடியது. நம்முடைய கதாநாயகனும் "நன்றாக முடிகிறது!" என்று தலையசைத்து,

"பதுங்கிய முயலும் ஓடக்கண்டேன்"

என்று முடித்தான்.

வீட்டை அடைந்தான். முன்போல வந்தான் என்றவன் மனைவி சும்மா இருந்துவிட்டாள். கற்றுவந்த தன்னை யவள் மதிக்கவில்லை என்றவனும் அவளோடு பேசாதிருந்தான். காலைபொழுதும் கடந்து மாலை நெருங்கியும் கணவன் பேசாதிருந்ததைக்கண்ட மனைவி தான் பேசவில்லை என்றவர் தன்னுடன் பேசவில்லை என்றெண்ணினாள். பின் இரவு உண்டி யானதும் தன் பள்ளியறையுள் கணவற்குகந்தவிதம் படுக்கை சோடித்து அவரை வணங்கி "நான் உங்களுடன் பேசாதிருந்ததை மன்னிக்கவேண்டும். நீங்கள் நெடுநாளாய் என்னை தனியே விட்டுவிட்டு இருந்து விட்டீர்கள். அதுதான் எனக்குக் கோபம்" என்றாள். "அதற்காகத்தான் நானும் பரபரத்து ஓடிவந்தேன்" என்று விடையளித்தான்.

"ஆனால் நீங்கள் போன விஷயமென்ன? என்ன

வென்ன கற்று வந்தீர்கள். தயவுசெய்து உங்கள் விருத்தாந்தம் முழுதும் சொல்லவேண்டும். கேட்கவேண்டும் என்றாவலாயிருக்கிறேன்."

"இப்பொழுது நடுநிசிவேளை. யாராவது கேட்பதன்முன் உனக்குச் சொல்லுகிறேன். யாரிடமும் சொல்லாதே. ஒரு சமாசாரம் நடந்தது. அதைச் சொல்லுகிறேன்; சாக்ரதையாகக் கேள்."

"அப்படியே! சொல்லும்."

"சாக்ரதையாகக்கேள். நான் சொல்வது இன்னதென்று பின்சொல்வாய்!"

"எலிவளை நோண்டுவது சந்தமாமா!"

"எனக்கது அர்த்தமாக வில்லையே?"

"சும்மாயிரு இன்னம் சொல்வதைக் கேள்—
உத்து உத்து கேட்குது சந்தமாமா!"

பள்ளியறைக்குள் நடந்த சம்பாஷணையைச் சில அயலார்கள் கேட்டார்கள். திக்பிரமை யடைந்தார்கள். தங்களுடைய எண்ணத்தை உள்ளிருப்பவன் கண்டுவிட்டதாக அவர் எண்ணம். அவர் நமது கதாநாயகரது வீட்டில் கொள்ளையிட அப்பொழுது கன்னமிட்டுக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது,

"நீங்கள் சொல்லுவது எனக்கொன்றும் விளங்கவில்லை" என்பது அவர் காதில் பட்டது.

"நீ சும்மாயிரு; உனக்குத் தெரியுமா? அது எப்படி தெரியும்? நான் சொல்வதைக் கேள்.—

"ஓடிவிடப்பார்க்குது சந்தமாமா" என்று கூறிய பதிலும் அவர் காதில் பட்டது. அப்பொழுது மேலும் கூறிய "ஓடிப்போனா விடுவேனோ சந்தமாமா" என்ற சப்தமும் அவர் காதில் பட்டது. அப்பொழுது அவர் பள்ளியறைக் கருகில்தான் இருந்தார்கள். நான்கு வாசலைத் தாண்டி உள்ளே வந்திருந்தனர். தமது எண்ண முற்றையும் வீட்டிலிருந்தவன் அறிந்ததாக எண்ணினார்கள். ஓடவேண்டும் என்றுதான் அவர் இருந்தார்கள். அப்பொழுது மனைவி "நீங்கள் சொல்லும் சமாசாரம் இன்னதென்றெனக்குத் தெரியவில்லையே" என்று ஏங்கினாள். கணவன் "நான் சொன்னது இதுதான்.—

எலிவளை நோண்டுது சந்தமாமா!
உத்து உத்து கேட்குது சந்தமாமா!
ஓடிவிடப் பார்க்குது சந்தமாமா!
ஓடிப்போனா விடுவேனோ சந்தமாமா!" என்றான்.

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை" என்றவன் மனைவி மொண மொணத்தாள். ஆனால் வந்த திருடர்கள் தங்களுக்கெல்லாம் தெரிந்ததாக எண்ணினார்கள்.

"போனால் போகட்டும். நீ வெகு புத்திசாலியாச்சுதே! நான் வேறுவிதம் சொல்லுகிறேன். கண்டு பிடித்துக்கொள்" என்று கணவன் கூறினான்.

"ஆனால் சொல்லும்."

"சொல்லுகிறேன் கேள்:

இரட்டைப் பனமரம் நிற்கக் கண்டேன்
சீமைப் பெருச்சாளித் தோண்டக் கண்டேன்
ஆந்தை விடாது விழிக்கக் கண்டேன்
பதுங்கிய முயலும் ஓடக் கண்டேன்.

இப்பொழுதாவது தெரிகிறதா?" என்றாரத்துக்கூச்சலிட்டான். தம்மைத்தான் சொல்லியதாக எண்ணித் திருடர்கள் தாம் திருடிவந்த பொருளையெல்லாம் அங்கே விட்டுவிட்டுத் தங்களை யாராவது பிடித்து விடுவாரோ என்று வாயுவேக மனோவேகமாக ஓட்டம் பிடித்தார்கள். ஆனால் மனைவி மாத்திரம் 'என்ன வென்னவோ சொல்லுகிறீர்கள்! எனக்கு ஒன்றும் தெரியவில்லையே" என்றாள்.

"எல்லாந்தானே தெரியும். எனக்கிப்பொழுது தூக்கம் வருகிறது. எல்லாம் காலை ஆகட்டும்" என்று கனமுடுக்காகப் பதிலளித்துவிட்டுத் தூங்கலானான்.

மனைவியும் வழக்கம்போல விடியற்காலமெழுந்து, வீட்டில் கன்னமிட்டிருப்பதையும் குவியல் குவியலாகப் பணப்பைகள் விழுந்திருப்பதையும் கண்டாள். "ஓகோ! இதைத்தான் அவர் நேற்றிரவு கண்டு சொல்லியிருக்கிறார். இதனால்தான் எல்லாம் தானே தெரியுமென்று சொன்னார் என்று தெரிகிறது. இனி நமக்கென்ன குறைவு. அவரும் ஜோதிஷம் படித்து வந்திருக்கிறார். நேற்றிராத்திரி அவரிட்ட இரைச்சலால் கள்ளரெல்லாம் ஓட பொருள் நம்மதாகிவிட்டது" என்று சந்தோஷமடைந்து காலை கால் முதலிய கழுவிக்கொண்டு கைப்பொத்தி வாய்ப்பொத்தி தனது கணவனை யெழுப்பி தனது ஆச்சரியத்தையும் அறிவின்மையும் சொன்னாள்.

கண்விழித்தெழுந்த ஜோதிஷன் "எனக்கது அப்பொழுதே தெரியும். தெரியாமலா சும்மா இருந்தேன். அந்தப் பொருள் குவியலை விடாமல் போயிருந்தால் அவர்களை சும்மாவிடுவேனா. நான் தூக்கந்தான் தூங்குவேனோ?" என மிடுக்குடன் மீசைமுறுக்கி பேசினான்.

நிற்க, ஜோதிஷன் வியவஹாரம் ஊரெல்லாம் பரவிவிட்டது. தேசாந்தரஞ் சென்று மிகப் பண்டிதனாக வந்தவனாக நமது கதாநாயகன் நினைக்கப்பட்டான். அவனும் தனக்குக் கள்ளர்கொடுத்த கப்பத்தைக் கொண்டு ஓர் புதிய வீடு கட்டி தடபுடலாக இருந்தான். அத்ருஷ்டவசத்தால் இவன் சொல்லும் பாவபலன்களும் கேட்போர்க்கு நடந்த செயல்களும் குருட்டுத்தனமாக ஒற்றுக்கொண்டே வந்தது. அவன்தசை சுக்ரதசையாகவே நடந்தது.

ஓர்நாள் அரசனுடைய வண்ணான் தன் தடிவிட்ட

கழுதை ஏழுநாளாகத் தேடியுங் கிடைக்காததைக் குறித்துத் துக்கப்பட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்த ஓர் குடியானவன் "பாப்பாரய்யா புதிசா ஜோஷியம் சொல்ருங்கோ. ஆண்டே! அவங்ககிட்டே போலாம் வாண்ணே" என்றவனைக் கூப்பிட்டான். அவனுடன் போய் நமது ஜோசியரை நஷ்டபாவங் கேட்டான். மீசை முறுக்கிக்கொண்டு கனமுடுக்காயிருந்த ஐயர்வாளும் சுவரைப்பார்த்துப் பேசுபவன்போல "கழுதைக் கெட்டாற் குட்டிச்சுவர்" என்று மொணமொணத்தார். வண்ணானும் அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டு தன் வீட்டிற்குப் போய்க்கொண்டிருக்கும் வழியில் தன் வீட்டிற்கருகு இருந்த குட்டிச்சுவரண்டை கழுதை மேய்ந்துக்கொண்டிருக்கக் கண்டு களித்தான்.

கழுதையைக் கண்ட வண்ணான், கெட்டுப்போன பொருளடைந்தவனாகையால் நமது ஜோசியரது புகழை ஊரெங்கும் பரவச்செய்துவிட்டான். ஐயரது பெருமையைக்கேட்ட குடியானவனொருவன் தன் நிலத்தில் விதைத்திருந்த கீரைப்பாத்தி விளையவில்லையே என்று கவலைகொண்டு ஜோசியம் கேட்கப்போனான். அப்பொழுது ஐயர்,

> "பாடிக் கண்டது திருடு
> தேடிக் கண்டது கழுதை
> இறைத்து விளைந்தது கீரைப்பாத்தி
> வருந்தி யுரைத்தது ராஜாத்தி"

என்று பாடிக்கொண்டிருந்தார். இதைக் கேட்ட குடியானவன் "சாமி தண்டம்" என்று கைகூப்பி சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணினான்.

"எங்கு வந்தாயப்பா?" என்று ஐயர் அவனைக் கேட்டார்.

"ஒங்களண்டெக்கித் தாங்கோ சாமி."

"என் வந்தாயப்பா? அதற்குத்தானே."

"நீங்கோ சொல்லிக்கிண்டிருந்திங்களே! அதுத்தான். மழையே யில்லே; நெலமெல்லாங் காஞ்சிப் போச்சுதுங்களே! ஒரு ஜோஷியஞ் சொல்லுங்களே! மழை பெய்யுங்களா! கீரைப்பாத்தி பிழைக்குமா? எங்கோசாமி நீங்கத்தான் சொல்லுங்களே."

"நான் அப்பொழுதே சொன்னேனே! நீ வரும்பொழுதேதான் சொல்லிக்கொண்டிருந்தேன். 'இறைத்து விளைந்தது கீரைப்பாத்தி' என்றுத்தான் சொன்னேனே. உன் காதில் விழவில்லையா?"

"விழுந்துச்சுங்கோ சாமி."

"உனக்கில்லாத மழையா? எல்லாம் வரும்; 'இறைத்து விளைந்தது கீரைப்பாத்தி' நீ பயப்படவேண்டாம் போ."

"மெய்த்த நல்லதுங்கோ, சாமிதண்டம். நான் போய்வேறேங்கோ" என்றுக்கொண்டவன் போனான்.

அன்று இரவு முழுதும் அவன் உத்சாகத்துடன் இறைத்தான். காலையில் வந்ததும் கீரைமுளைகள் கண் கொட்டாமல் அவனைப் பார்த்தன. அவனுக்கு வந்த சந்தோஷத்தில் ஐயரது பெருமையைப் பரவச்செய்ய பெரிய ஆளானான்.

இதற்குள் நமது ஜோசியரது மஹிமை ஊரெங்கும் பரவிவிட்டது. அவரைப் பார்த்தவரெல்லாம் "அவர் யார் தெரியுமா" என்று விரல்சுட்டிக்காட்டும் பெருமையடைந்துவிட்டார். இவ்வாறு இருக்குங் காலத்தில் அரசன் வீட்டில் பெரும் நகைகள் எல்லாம் திருடு போய்விட்டன. அந்தப்புரத்திலிருந்து களவு வைக்காமலே பொக்கிஷப்பெட்டி இருந்தவிடம் தெரியாமல் மாயமாய்ப் போய்விட்டது. இக்களவைக் கண்டுபிடிப்பவர்க்குப் பலத்த பஹுமானஞ் செய்வதாக ராஜாங்கத்தில் முரசறைவித்தார்கள்.

கொத்துவால்களெல்லாம் தலையுங் காலுமில்லாமல் செய்த சாட்சியெல்லாம் பொய்யென விளங்கியது. இதைக்கண்ட கொத்துவால் தலைவர், தானே அதை விசாரிப்பதாகச் சென்று நடந்த திவ்விதமறிய முடியவில்லை என்று அரசர்க்குத் தெரிவித்தார்.

நிற்க ராணியம்மாள் வண்ணான் மூலமாக ஜோசியரது பெருமையைக் கேட்டாள்; 'வருந்தி யுரைத்தது ராஜாத்தி' என்றவர் வண்ணானிடம் சொல்லியதையும் கேள்விப்பட்டிருந்தாள். மேலும் அவரை யாவரும் புகழ்வதாகவும் அறிந்தாள். அதனால் தனது நாதனிடம் நமது ஜோசியரை வரவழைத்து நஷ்டபாவபலன் விசாரிக்கும்படி ஆவலுடன் கேட்டுக்கொண்டாள். "போனதாவது வருவதாவது" என்று சொல்லிக்கொண்டே அரசன் நமது ஐயரைத் தருவிக்க, தன் மனைவி களிக்க உத்தரவிட்டான்.

ஜோசியரும் வந்தார், வணக்கமுடன் நின்றார். அவர்க்குத் தகுந்த மரியாதை செய்து அரசன் பின்வருமாறு சொன்னார்.

"நமது அரண்மனை யந்தப்புரத்திலிருந்து மூல பொக்கிஷம் கன்னமிடாமலே நடுப்பகலிலே கொள்ளையிடப்பட்டிருக்கிறது. அது எங்கு இப்பொழுதிருக்கிறது? யாரிடமிருக்கிறது? எப்படிக் கிடைக்கும்? இவற்றையெல்லாம் சொல்லவேண்டும்."

இதைக்கேட்ட ஜோசியர் "தங்களுத்திரவுபடிக்கே! ஆனால் ஓர் விண்ணப்பம்:—உமக்கு நகை கிடைக்கக் கூடிய இடமாத்திரம்தான் என்னால் சொல்லமுடியும். சாஸ்திரம் அவ்வளவுதான் சொல்லுகிறது" என்றார்.

"அதைச் சொன்னால் போதும்; சொல்லும்!"

"சொல்லுகிறேன். அதற்கு எனக்கோர் நல்ல தோட்டத்தில் அரசமரமிருக்குமிடத்தில் அதன் அடியில் ஓர் ஆசனம் செய்துகொடுக்கவேண்டும். நான் இருக்கும்படிக்கு அங்கு யாரும் என்னை தொந்திரை செய்யாதபடிக்கு சுற்றும் வேலிச்சுவரும் வழியும் கட்டிகொடுக்கவேண்டும்."

"அப்படியே செய்து தருகிறேன். எத்தனை நாட்குள் கண்டுபிடிப்பாய்?"

"ஒரு வாரத்திற்குள்."

"அப்படியே செய். அந்தக் காலம் முடிந்ததும் கண்டுபிடித்துக் கொடுக்காவிட்டால் உன் கண்களைப் பிடுங்கி மூக்கையுமறுத்து உன்னைத் துன்பப்படுத்துவேன். ஜாக்ரதை. பயமிருக்கட்டும்" என்று சொல்லி மந்திரியைக் கூப்பிட்டு ஜோசியருக்கு வேண்டியதெல்லாம் செய்யும்படி உத்தரவிட்டான்.

ஜோசியனும் அரசமரத்து பிள்ளையாராய் அரசன் ஆணைப்பேய் பிடித்தாட்ட

> "கண்ணே போமோ! மூக்கே போமோ!
> கண்டதைப் போனதைச் சொல்லிவிடு!
> கண்ணே போமோ! மூக்கே போமோ!
> கண்டதைப் போனதைச் சொல்லிவிடு!!"

என்று ஜபித்துக்கொண்டிருந்தார். இந்த மந்திரத்தை இடைவிடாதவர் சபிப்பதைக் கேட்ட இருவர் நடுங்கினார்கள். அவர்களுக்கு ஜோசியரைப் பார்த்து பேச வேண்டுமென்பது பேராவல். அவரிடம் நெருங்க அவரால் எப்படி முடியும்? மந்திரி அந்த வேலி சுற்றிலும் கடுங்காவல் வைத்திருந்தான். கொத்துவாலும் அப்படியே செய்திருந்தான். இவ்விருவர்க்கும் ஜோசியர்மேல் கொஞ்சம் ஸந்தேஹம். ஒருவேளை அவரே களவாடி யிருக்கலாமென்பது அவரது எண்ணம். நிற்க. ஜோசியரைப் பார்க்க விரும்பிய இருவரும் நல்ல ஸமயம் ஒன்றுபார்த்து காவல் செய்பவர்க்கு மறைவாய் இருக்கும்படியான பக்கம் வேலியைத் தாண்டி உள்ளே குதித்தார்கள். குதித்ததும் ஐயர்க்காலில் விழுந்து அவர் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்கள். பயத்திலடைந்திருந்த ஐயர் "ஹா! ஹா!" என்று கூச்சலிட்டார். வெளியிலிருந்த காவல்காரர் எல்லாம் நடுங்கினார்கள்.

இதற்குள் ஐயர்,

> "கண்ணே போமோ! மூக்கே போமோ!
> கண்டதைப் போனதைச் சொல்லிவிடு!
> கண்ணே போமோ! மூக்கே போமோ!
> கண்டதைப் போனதைச் சொல்லிவிடு!!"

எனக் கூச்சலிடவும் ஆரம்பித்தார்.

வந்த இருவரும் அவரை அவ்வாறு இரைச்சலிடாமலிருக்கக் கெஞ்சினார்கள். "நாங்கள் இங்குத்தான் வந்துவிட்டோமே. இன்னம் ஏன் கூப்பிடுகிறீர்கள். நான் கண்ணி! அவள் மூக்கி! இருவரும் இதோ வந்திருக்கிறோம். பொருள் முழுதும் எங்களிடம் இருக்கிறது. தயவுசெய்து எங்களைக் காட்டிக்கொடுக்காமல் காப்பாற்றும்" என்று இருவரும் மெதுவாகச் சொன்னார்கள்.

"பின் எதற்காக இரவும் பகலும் ஓயாமல் உங்களைக் கூப்பிட்டேன். நான் செய்த மந்திர மல்லவா நீங்கள் தாண்டியபொழுதுகூட அவர் காணமுடியாமல் செய்துவிட்டது."

"வெகு நல்லது. அப்பணச்சுமை, நகைச்சுமை, எல்லாவற்றையும் இவ்வூர் ஆற்றின் தென்கரையில் இருக்கும் ஆலமரத்தடியில் புதைத்து வைத்துவிடுகிறோம். நீங்கள் அங்கே பொருளைக்காணலாம் என்று மாத்திரம் சொல்லுங்கள். எங்களை இழுத்துவிடாதீரும். உங்களுக்குத் தகுந்த மரியாதை செய்கிறோம்."

"அப்படியே ஆகட்டும். நீங்கள் இப்படியே தாண்டினீர்களானால் உங்களை எல்லாரும் பிடித்துவிடுவார்கள். ஆகையால் எனக்குப்பின் ஓர் சிறு குடிசையுள் மண் கலயத்தில் கீல்மை இருக்கிறது. அதை நீங்கள் இருவரும் பூசிக்கொண்டு அக்குடிசை முற்றத்தில் இலவமரத்துக்காய் வெடித்து பரந்து கிடக்கும் பருத்திப் படுக்கையில் புரண்டு அவ்வுருவத்தோடு யாவரும் பயப்பட வீட்டிற்கேகுங்கள். நேராய் வீட்டிற்குப் போகாதியும்; கைக்குள் வஸ்திரத்தை வைத்துக்கொண்டு, ஆற்றங்கரையில் உங்கள் வேஷத்தை மாற்றிக்கொண்டு வீடு சேரும்."

அவர்களும் அந்த வேஷத்தோடு ஐயரிடம் செலவு பெற்றுக்கொள்ள வந்தார்கள். அப்பொழுது ஐயரவர்கள் "சீ! மலையாள பகவதீ! போ! செல்! செல்!! அந்தப் பணத்தையும் நகைகளையும் எடுத்துவா! குட்டிச் சாத்தான்போ! போ!!" என்று கர்ஜித்துக் கொண்டு பேயுருவங்கொண்ட இருவரையும் அழைத்துக்கொண்டு வாயிலிடம் வந்து மறுபடியும்

'செல்! மலையாளபகவதீ! போ!—செல்! குட்டிச் சாத்தான்! செல்!' என்றவரைப் போகும்படி யுதவி செய்தான்.

அப்பொழுதங்கு காவல் செய்துகொண்டிருந்தவர் யாவரும் பேய்களிரண்டு ஓடிக் களவைக் கண்டுபிடிக்கப்போகின்றன என்று எண்ணிக்கொண்டார்கள். மறுநாள் உதயமானதும் அரசன் ஆணையிட்ட ஏழாவது நாளும் உதயமாகியது. ஆவலுடன் அந்த நாளை எதிர்பார்த்திருந்த மன்னனும் காலை எழுந்ததும் ஐயரிடம் சென்று "என்ன? கண்டுபிடித்தீரா?" என்றார்.

"ஆஹா!" என்றையர் தலையாட்டினார்.

பின் ஐயர் அரசனை கண்ணி மூக்கி சொல்லிய ஆலமரத்திட மழைத்துபோய் அதனருகிருந்த புல்வளர்ந்த இடத்தைத் தோண்டச் சொன்னான். அப்பொழுது அங்கு தான் கொள்ளைகொடுத்த பொருள் முற்றுமிருக்கக் கண்டானந்தமடைந்து குதித்தான்.

இதற்குப்பின் ஐயருக்கு நடந்த மரியாதைகளைச் சொல்லவும் வேண்டுமோ? மொத்தத்தில் அரசனது அந்யோன்ய நேசனானார். பெரிய பணக்காரனானார். ஜோசியபண்டிதன் என்னும் பட்டப்பேரடைந்தார்.

இந்த ஸ்திதிக்கு ஜோசியர் வந்தது மந்திரிக்குப் பொறுக்கவில்லை. ஜோசியனிடம் அரசனுக்கு அவநம்பிக்கையுண்டாக்க வேண்டுமென்றுவல்கொண்டு அவன் விளங்கினான். இணைபிரியா அவ்விருவரையும் பகைவராக்க வேண்டிய சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

காட்டில் ஓர்நாள் அரசனும் மந்திரியும் வேட்டையாடிக்கொண்டிருந்தார். ஜோசியர் விடுதியிலேயே இருந்தார். மந்திரி அரசனை நோக்கி "விட்டிப்பாப்பானை பெரிய மனிதனாக்கி விட்டாய்?" என்றான். "பெரியவர்க்கு அபசாரம் நீ செய்தாய்" என்றான் அரசன்.

"அது ஒன்றும் இல்லை. உம்முடைய ஐயர் அவ்வளவு அறிந்தவரானால் உமது கையில் இருக்கும் காய் இன்னதென்று சொல்லுவாரா?"

"அதற்கென்ன தடை?"

"அப்படியானால் பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டிருவரும் விடுதியை அடைந்தார். அரசன் வெகு உத்சாகத்துடன் பரபரப்புடன் "என் கையிலிருப்பதைச் சொல்லும் பார்ப்போம். ஜோசியர்வாள்! உங்களைத்தான்! சொல்லும்" என்றான்.

ஜோசியன் யோசித்தான்; சிறிது மயங்கினான். பின் ஒளிப்பதில் பிரயோஜனமில்லை என்று எண்ணிக்கொண்டு

"அங்குமில்லை இங்குமில்லை
அகப்பட்டுக் கொண்டான் தும்மட்டிபட்டன்"

என்று அபிநயப்பாட்டு பாடினான்.

"வெகு சந்தோஷம்! நன்றாகச் சொன்னீர். என் கையிலிருப்பது தும்மட்டிக்காய்தான்" என்றையரைத் தோத்திரம் செய்தான் அரசன்.

நிற்க. வேட்டையிலிருந்ததும் வீடுவந்த ஜோசியன் பின்வருமாறு யோசித்தான். "நமது அரசன் நம்மைப் பிரதான ஜோசியனாகும்படிக் கேட்டுக்கொள்ளுகிறான். ஆனால் இப்படிச் செய்வேன்" என்று எண்ணிக்கொண்டு தன் மனைவியை வெளியில் போகச்சொல்லி உள்ளிருந்த பொருளை எல்லாம் மறைவாக ஓரிடம் யாருமறியாதபடி புதைத்துவிட்டு, கட்டிவைத்த வீட்டிற்குக் கொள்ளியிட்டுவிட்டான். "ஐயோ! புதிதாய் கட்டிய வீடு நீறாய் போய்விட்டதே" என்று அயலிலிருந்த யாவரும் பிரலாபித்தார்கள்.

மறுநாள் அரசன் ஜோசியனைக் கூப்பிட்டு "தாங்கள் தயவுசெய்து பிரதான ஜோசியஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்றான்.

"பெற்றுக்கொள்ள வேண்டுமென்றாவலுடன்தான் இருந்தேன். ஆனால் அந்தப் பாழும் நெருப்பை நேற்றென்வீட்டை நீறாக்க நான் சொல்லவில்லையே. அந்த அக்கினிபகவான் என் பழஞ்சுவடியை எல்லாம் திருநீற்றுப் பொடியாக்கிவிட்டானே. இனி ஜோசியமாவது! சொல்வதாவது! அதெல்லாம் இனி முடியாது. என்னை மன்னிக்கவேண்டும். நான் என்ன செய்வேன். என் பிசகல்ல. ஏடில்லாமல் எழுத்தாணிக்கென்ன பிரயோஜனம். புத்தகமில்லாமல் ஜோசியம் நான் எப்படிச் சொல்லமுடியும். அந்த உயர்ந்த அந்தஸ்திற்கு இனி நான் ஆள் அல்ல" என்று பிரலாபித்தான். அரசனும் இங்கிதம் கூறி அவனுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்தான்.

தும்மட்டிக்காய்பட்டனும் புதைத்த பொருளையெடுத்து, பெற்ற பொருளையும் சேர்த்து சேமித்து சுகமாக ஜீவித்து வந்தான்.

"அளந்தன போகமவரவர்க் கற்றைநாளே" என்ற கடவுளருளிருந்தால் எதுவும் நன்மையாக முடியும்; அதற்குத் தக்கவிதம் புத்தியும் துணையாக விளங்குமென்பதற்கு நமது பட்டனாரே அத்தாட்சி.

இயற்கைப் பொருள் அறிவு

STUDY OF NATURAL OBJECTS

நம்மைச் சுற்றிலும் உள்ள செடிகள், மரங்கள், பிராணிகள், மலைகள், ஆறுகள் இவைகள் இயற்கைப் பொருள்களாம். இயற்கைப்பொருள் பாடம் பள்ளிக்கூடங்களில் கற்பிக்க வேண்டுமென்பதன் நோக்கம் என்ன? அதைக் கற்பிக்கும் வழி எது? புத்தகங்களிலிருந்து கற்பிப்பதால் ஞாபகசக்தி மாத்திரம் விருத்தியாகும். ஆனால் தாங்கள் படிக்கும் விஷயம் இன்னதென்பது தெரியாமல் கற்பிப்பதில் பிரயோசனம் என்ன. தற்காலத்தில் பாடங்களைப் போதிக்கும்புதிதான அநேகமுறைகள் ஏற்பட்டு அவ்வழியே கற்பிக்கமுயலுகிறார்கள். எல்லாவற்றிற்கும் பிள்ளைகளை சுயமாய் கவனிக்கும் சக்தியை அதிகரித்து புலன்களால் அறிவுறுத்துதல்தான், நோக்கம். இந்த முடிவை அடைய பலவிதமான பாடங்கள் வைத்துக் கற்பித்தபோதிலும் இயற்கை பொருட் பாடத்தைப்போல மற்றெதிலும் அவர்கள் உற்றுப்பார்க்கும் சக்தி விருத்தியாவதற்கு வேண்டிய மார்க்கம் அவ்வளவு இல்லை. இயற்கைப் பொருளின் வளர்ச்சி,தோற்றம், காலாகால மாறுதல்கள் அவற்றிற்குக் காரணங்கள் இவைகளைக் கண்காண அறியச்செய்வதால் பண்டங்களின் ஒற்றுமை வேற்றுமைப் பாகுபாட்டை யறிந்து தங்கள் சுய புத்தியைக் கொண்டே யோசனைசெய்து பள்ளிக்கூடம் விட்ட வெளிநேரங்களில் உற்சாகத்துடன் பயன்பெறும் வழிகளில் தங்கள் மனதைச் செலுத்தி அதிக புத்தி கூர்மை அனுபோக வழிகளில் உண்டாகக் காரணமாகிறது. நாம் கற்பிக்கும் விஷயங்கள் பிற்காலம் அவர்களுக்கு உபயோகமான தொழிலைச்செய்ய அனுகூலமானதாக இருக்கவேண்டுமென்பதுதான்.

பிள்ளைகள் இயற்கைப்பொருள்களை நேர் நேராகப் பார்த்தறியவேண்டியதே ஒழிய, உபாத்தியாயர் குறிப்புகள்கொடுத்துப் பாடம் செய்யச்சொல்லுதல் கூடாது. ஆரம்பத்தில் பிள்ளைகள் உபாத்தியாயர் முயற்சியின் விஷயங்களை சுய முயற்சியாலேயே அறியவேண்டும். முதல்முதல் அவர்களுக்கே காரணகாரியங்கள் தெளிவாகத் தெரியாவிட்டாலும் நாளடைவில் சுயமுயற்சியால், சொல்லிவைப்பதைப்பார்க்கிலும் பலமடங்கு அதிக மேம்பாடான தேர்ச்சி காட்டுவார்கள்.

இயற்கையறிவுபாடம் இதர பாடங்களுக்கு சம்பந்தமான விஷயங்களாக இருக்கவேண்டும். தாவரநூல், பூகோளம், சித்திரம், பிராணிகளின் அமைப்பு இவைகள் சம்பந்தமாக இருத்தல் அவசியம். இப்பாடங்களில் சிறுவர்களுக்கு அதிக அறிவுண்டாவதுடன் கவனித்தவற்றை காரண காரியங்களுடன் சொல்வதால் நன்றாக விஷயங்களைப்பற்றிப் பேசவும் ஸம்பாஷணை அபிவிருத்தியும் வியாசம் எழுதுவதில் தேர்ச்சியும் உண்டாகும். இயற்கையறிவு பாடங்களில் பலவித கருவிகளைக் கையாடுவதால் கைத்தொழில் ஏதாவதொன்று

பழகி ஒழியுநேரங்களில் உபயோகமானவிதத்தில் செய்யலாம்.

இவ்வியற்கைப் பாடங் கற்பிக்கும் உண்மையான வழியை யறியாத சில உபாத்தியாயர்கள், பிள்ளைகளுக்கு புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச்செய்தும் இயற்கைப்பொருள் படங்களைக் காண்பிக்கவும் செய்கிறார்கள். இவைகளினால் உண்டாகும் அறிவு மனதில் நிலைபெற்றிராது என்பதோடுகூட உற்றுப்பார்க்கும் சக்தியை விருத்திசெய்வதில்லை. தாங்கள் கற்பிக்கும் விஷயம் உண்மைதானா இல்லையா என்று பகுத்தறியும் சுய அறிவையும் குறைத்துவிடுகிறது. பிள்ளைகளின் புத்திக்கேற்ற கேள்விகளைக் கேட்பதும் அவர்கள் புத்தி எண்ணம் செல்லும்வழி சரியான வழிதானா செல்லுகிறது என்று கவனித்தலுமே உபாத்தியாயர் செய்யவேண்டியது. இதைச் சரியானபடி செய்வதற்கு உபாத்தியாயர் மேற்படி விஷயங்களில் தற்கால புஸ்தகங்களைப் படித்தலும், பிறர் அனுபோகங்களைக் குறிக்கும் முறைப்புத்தகங்களைப் பார்க்கவேண்டியதும் அவசியம். புத்தகங்களினின்று மாத்திரமே கண்ணாரப் பார்க்கச் செய்யாமல் கற்பிப்பது இயற்கை யறிவுபாடம் என்றே சொல்லக்கூடாது. தாங்கள் எந்தெந்த விஷயங்களைச் சொல்ல விரும்புகிறார்களோ அவைகளை அவரே யறியும்பொருட்டும் கவனிக்கும்பொருட்டும் சில வழிகளும், சில கேள்விகளுமே உபாத்தியாயர் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டியது. உபாத்தியாயர் ஊரைச் சுற்றிலுமுள்ள, செடிகள்,கொடிகள், புஷ்பங்கள், நிலத்தோற்றம், மண்வேறுபாடு, பக்ஷி, பூச்சிகள், கல், இவற்றின் குணங்களையும், வியவசாயமுறை கைத்தொழில்கள், மழை, பனி, சீதோஷ்ணஸ்திதி, இவைகளை நன்றாக அறிந்திருந்து இவற்றையே இயற்கையறிவு பாடங்களில் நடத்தவேண்டியது. இவ்வளவு விஷயங்களையும் முற்றிலும் அறிவது அசாத்தியமானாலும், ஒவ்வொரு விஷயத்திலும் கொஞ்சம் கொஞ்சம் சிறுவர்களுக்கு வேண்டியவளவு அறிந்துகொள்ளுதல் சுலபம். உபாத்தியாயருக்கு இவ்விஷயத்தில் ஊக்கமும், உற்சாகமும் இருந்தால்தான் பிள்ளைகளுக்கும் அவ்வித ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டலாம்.

பெரிய பட்டணங்களில் சிறுவர்கள் ஆறு,தோட்டம், முதலியனவை பார்ப்பது அசாத்தியமானாலும், பிள்ளைகளை, நந்தவனம், சிங்காரத்தோட்டம், பழக்கடை, புஷ்பக்கடை, கறிகாய்க்கடைகளுக்கு அழைத்துப்போய் அறியச்செய்யலாம். கற்பிக்கும் பாடங்கள் எந்தெந்த காலத்தில் என்னென்ன பண்டங்கள் அதிகமாக காணப்படுகின்றனவோ அவைகளையே கற்பிக்கவேண்டும். அப்பொழுதுதான் மாதிரிபுஷ்பம், செடி, பூச்சிகள், இவைகள் ஏராளமாயிருப்பதால் கவனிப்பதற்குத் தக்க சமயமாகும். வேண்டிய தானியவகைகள் சேகரித்தலும் எளிது. காலங்கள்தோறும் சீதோஷ்ண மாறுதல்கள் அப்போதைக்கப்போது கவனிக்கப்படவேண்டும்.

பள்ளிக்கூடத் தோட்டங்களால் புலனறிவுறுத்தல் எளிதாயும், பிற்காலத்தில் பிள்ளைகளுக்கு உபயோகமாயிருக்கும் என்பது தெரிந்த விஷயமானாலும், இந்தியாவில் தோட்டங்கள் விஷயத்தில் உபாத்தியாயருக்குக் கவனம் மிகக்குறைவு. இதற்குக் காரணம் தோட்டச் செடி வளர்க்கும் விதம் உபாத்தியாயருக்குத் தெரியாததேயாம். மற்றும் சாதாரணமாக அவ்விஷயங்களில் நல்ல ஞானத்தைக் கொடுக்கக்கூடிய புஸ்தகங்கள் உபாத்தியாயர் கைக்குக் கிட்டாமை, தண்ணீர் வசதி இல்லாமை, முதலியவையேயாம். பள்ளிக்கூடத்தில் தோட்டம் வைக்க அதிக பணம் வேண்டுமென்றும் நினைக்கிறார்கள். மேலும் நம்மவர் ஆயுதங்கள் எடுத்து வெட்டுதல், தண்ணீர் இறைத்தல் முதலியவை உபாத்தியாயருக்கும், மாணாக்கர்களுக்கும் கௌரவக் குறைவென்றும் நினைக்கிறார்கள். அவற்றால் உண்டாகும் தேகப்பயிற்சி, பலன், செய்வனத் திருந்தச் செயல் முதலிய நற்பழக்கங்கள் அவர்கள் மனதிற்படுவதில்லை. சில உபாத்தியாயர் கீரைப்பாத்தி போட்டுவிட்டு அதைத்தான் பள்ளிக்கூடத் தோட்டமென்று நினைக்கிறார்கள். ஊர் நந்தவனத்தை பரிக்ஷாதிகாரிகள் வருங்காலத்தில் பிள்ளைகள் தோட்டம் என்று சொல்லுகிற வழக்கமும் சிலரிடம் உண்டு.

முற்காலத்தில் குருகுலவாஸம் என்னும் உபாத்தியாயர் வீட்டிலேயே வசித்து பிரமசரியத்தைக் கழிக்குங்காலத்தில் இம்மாதிரி தோட்டவேலைகள் சிஷர்கள் செய்துவந்ததாகத் தெரிகிறது. ஆசிரியன் பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள் சம்பாதிக்க சிஷர்களே நந்தவனம் வைத்து அவற்றைப் பாதுகாத்ததாகவும் தெரிகிறது. இவ்விதம் முற்காலத்தில் தோட்டங்களில் இருந்த ஊக்கம் ஏன் குறைந்ததென்பதற்குக் காரணம் குருகுலவாஸம் இல்லாமையே.

பள்ளிக்கூடத் தோட்டங்களில் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறு பாத்தி நிலம் கொடுத்து அவைகளில் உபாத்தியாயர் பார்வையிலேயே விதைகளை விதைக்கச் செய்யவேண்டியது. இடமில்லாவிட்டால் வகுப்பிற்கு ஒரு பாத்தியாகிலும் கொடுக்கவேண்டும். பொதுவில் உபாத்தியாயரே ஒரு பாத்தியில் மாதிரிக்கு செடிகள் வைத்து வளர்க்கவேண்டியது. இவ்விஷயத்தில் அக்ரிஹார்ட்டிகல்சரல் ஸொஸைடி வேண்டிய புஷ்பவிதைகள், செடி வகைகள் கொடுத்துதவ தயாராயிருக்கிறார்கள். ஒவ்வொரு சிறுவனும் தனது நோட்புஸ்தகத்தில் தான் கவனித்தவற்றையும் செய்தவற்றையும் தேதியுடனும் எழுதி, சித்திரப்படங்களால் அலங்கரிக்க வேண்டியது. நிழலில் இருந்த செடி வெயில் பக்கமாக வளைவதையும், தண்ணீர் ஒழுங்காக விட்ட செடி, அவ்விதம் செய்யப்படாத செடியைப் பார்க்கிலும் வாட்ட முறுவதையும் எருப்போட்டு வளர்த்தவை நன்றாக வளர்தல் முதலியவற்றை பிரத்யக்ஷமாகப் பார்த்தறியவேண்டியது. முளைத்தல், குருத்துவிடுதல், பூத்தல், காய்த்தல், பழுத்தல், விதை யெடுத்தல் முதலியவற்றை தேதியுடனும் குறிக்கவேண்டியது.

தோட்டத்தின் நீளம், அகலம், திசை இவைகளைக்

குறித்த ஸ்கேலுக்கு பிளான் வரைந்து ஒவ்வொரு பாகத்திலும் என்னென்ன செடிகள் போடப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடவேண்டும். மேலும் அதில் பக்கத்திலுள்ள கட்டடங்கள் நிழல் எந்தெந்த காலங்களில் எந்தெந்த பாகங்களில் நிழலை உண்டாக்குகிறதென்றும், காலைநிழல், சாயந்திர நிழல் இவைகளையும் கவனிக்கவேண்டியது.

செடிகள், பிராணிகள் இயற்கையான இடங்களில் வளரும்போது அவைகளைப்பற்றி கவனித்தும் குறித்தும், சித்திரங்களுடன் விளக்கியும் காட்டினால்தான் உண்மையான இயற்கையறிவாம். தோட்டத்திலில்லாமல் வெளியிடங்களில் மரங்கள் செடிகளையும், அவைகளின் குணம், அவைகள் வளர்க்கும் விதம், அவைகளின் புஷ்பம், இலை, வேர் இவைகளின் தோற்றம், இவைகளையும் காட்டுவதற்குப் பிள்ளைகளை வெளியே அழைத்துப்போவதால் உண்மையான அபிவிருத்திக்கிடமாகும். தவளை, வண்ணாத்திபூச்சி, நத்தை, புழுக்கள், இவைகளின் வளர்ச்சியைக் கவனிப்பதிலும் நல்ல உபயோகம் உண்டு. இவைகளைப் பள்ளிக்கூடத்திலேயே வைத்து வளர்க்காவிட்டாலும் அவைகள் எந்தெந்தக் காலங்களில் காணப்படுகின்றனவோ அந்தந்தக் காலங்களில் அவைகள் இருக்கும் கிணறுகள், ஆறுகள், குளங்களுக்குப் பிள்ளைகளை அழைத்துப்போகவேண்டியது. புழுக்கள் பெரிதாவதையும் பிறகு சிறகு முளைத்துப் பறப்பதையும் கவனித்தல் அதிக உபயோகமாகும். இவ்விதம் கற்பிக்க பிள்ளைகளை வெளியே அழைத்துப் போவது அவசியம். அப்படிப் போகும் பிள்ளைகள் நோட்புக் பென்சில் பொறுக்கின வஸ்துக்களைப் போட்டுக்கொள்ள ஒரு சிறு பெட்டியும் அவசியம். கூடுமானால் ஒரு கத்தியும், பூதக் கண்ணாடி, திசையறி கருவி யிருத்தல் நலம். இவ்விதம் புறப்படுவதற்கு முந்தியே குறித்த நோக்கத்துடன் புறப்படவேண்டும். ஆனாலும், ஏதாவது ஒரு விஷயத்தையே கவனிக்கவேண்டுமென்ற கட்டுப்பாடும் பண்ணக்கூடாது. ஏனென்றால் அவர்கள் வேறு விசேஷமான அதிசயக் காட்சிகளைக் கவனியாது விட்டுவிடுவார்கள். ஆற்றங்கரை, அல்லது சமுத்திரக்கரைக்குப் பிள்ளைகளை அழைத்துப்போனால், அவைகளில் உள்ள செடிகளையும் பிராணிகளையும் மாத்திரம் கவனிக்கவேண்டும் என்று கட்டுப்பாடுசெய்தல் கூடாது. பாறைகளின் தோற்றம், அமைப்பு, சிறுகற்களின் இயற்கை, மணல், சுக்கான் இவைகளின் உருவம், இவைகளைக் கவனித்தல் அவசியமே.

இவ்விதம் வெளியே போதல் எப்பொழுதும் பள்ளிக்கூட தினத்தில் இருக்கவேண்டுமென்பதே அவசியம் இல்லை. சனிக்கிழமை முதலான ஓய்வுநாள்களிலும், பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்குப் போகும் வழிகளிலும், இவ்வித கவனிக்கத்தக்க விஷயங்கள் ஏற்படலாம். ஒவ்வொரு வாரமுடிவிலும் அடுத்த வாரம் இன்ன பாடத்தைப்பற்றி இயற்கையறிவு பாடங்கொடுக்கப்படும் என்று பிள்ளைகளுக்கு முன்னதாகத் தெரிவித்தால் அவர்களாகவே அவ்விதமாக சனிக்கிழமைகளில் போய்க் கவனித்து மாதிரிகள் சேர்த்து வைப்பார்கள். பிள்ளைகளுக்கே ஊக்கம் உண்டாக்கும் வழிக்கு இது மிக உபயோகமாகும். ஆனாலும் இம்மாதிரி பள்ளிக்கூடத்திற்குள் கற்பிக்கும் பாடங்கள் சம்மந்தமான மாதிரிகள் பொறுக்குவதே இவ்வித வெளியேற்றத்தின் நோக்கமாக்கக் கூடாது. பள்ளிக்கூடத்தில் வெளியே போனால் கவனிக்கப்படவேண்டிய விஷயமும், முன்னமேயே கவனித்த விஷயங்களைப்பற்றியே பேசவேண்டும். அவர்களுக்குண்டாகும் சில கடினமான விஷயங்களைச் சொல்லிக் கொடுப்பதும், சம்பந்தப்பட்ட இதர விஷயங்களை இதுடன் இணைப்பதும் அவற்றின் உபயோகங்களைப்பற்றிப் பேசுவதும் வேண்டும்.

இவ்விதம் போய்வந்த வழியையும், அதன் பிளானையும் குறித்த ஸ்கேலுக்கு எழுதவேண்டும். இதிலிருந்து பூகோளபடம் வரைதல் கற்பிக்கவேண்டும்.

பொருட்காட்சிசாலைக்கு வேண்டிய பொருள்களைப் பிள்ளைகளைக்கொண்டே சேகரிக்கச் செய்யவேண்டும். இதில் பிள்ளைகள் பக்ஷியின் கூடுகளை களவுசெய்யாதபடி, ஜீவஹிம்சை நேராதபடி கவனிக்கவேண்டும். அபூர்வ செடிகளை வேரோடு பிடுங்கி மியூஸியத்தில் வைத்தல் நன்றன்று.

அவ்விதம் மியூஸியத்தில் வைக்கப்பட்ட ஸாமான்களைப்பற்றிய அறிவும், அவற்றின் ஒற்றுமை வேறு இவைகள் கவனிக்கவேண்டும். மியூஸியம் வெகு பெரியதாய் இருக்கவேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டே எல்லாவிதமான வஸ்துக்களை சேகரிப்பதில் உபயோகமில்லை. பலவித இலைகளில் வகைக்கொன்று மொட்டுக்களையுடைய சிறு கிளைகள், விதைகள், கடல் பூண்டுகள், கிளிஞ்சல் பலவிதம், தினுசுக்கொன்று பக்ஷிகளின் அபூர்வ ஸாமர்த்தியத்தைக் காட்ட அவை கட்டியிருக்கும் கூடுகள், அவைகளுக்குப் பிரயோசனமில்லாமல் போனபிறகு, பக்ஷிகளின் சிறகுகள், பாறைகள், கற்கள், மணல், பலவித லோகங்கள் பூமியிலிருந்து மண்ணோடு கலந்திருந்தமாதிரி சேகரித்து வைத்தல் நலம்.

பையன்கள் நோட்புத்தகத்தில் எந்தத் தேதியில் பனி ஆரம்பம், எந்த தேதியில் அதிக உஷ்ணமாயிருந்தது, வெயில் அதிகமா மழை அதிகமா, எந்த தேதியில் புழுக்கள் தென்பட்டன, எப்பொழுது வண்ணாரப்பூச்சிகள் பறந்தன, தவளைகள் குஞ்சு பொறித்தன முதலியவற்றைக் குறிப்பிடவேண்டும்.

வீடுகள் கட்டும் விதம், குயவன் சட்டி செய்தல், காளவாயில் செங்கல் அறுத்தல் கவனிக்கப்பட்டு குறிக்கப்படவேண்டும். பிள்ளைகள் விசேஷமான சங்கதிகளை உற்றுநோக்கி கவனித்திருந்தால் அதைப் பொதுவான ஒரு புத்தகத்தில் பையன் பெயருடன் எழுதிவைப்பதனால் பிள்ளைகளுக்கு உற்சாகம் அதிகம் உண்டாகும்.

சாதாரணமாகப் பள்ளிக்கூடங்களில் சிறு பிராணிகளைப் பிள்ளைகளைக்கொண்டு வளர்க்கச் செய்தல் மிக்க உபயோகமுள்ளது. இதில் முக்கியமாக லீவு நாள்களில் அவைகளுக்குத் தீனி போடுவது பெருங்கஷ்டமாகிவிடுகிறது. இதனால் பெருஞ்சிரமம் இருந்தாலும் பிராணிகளின் ஜீவிய சரித்திரம் பழக்கவழக்கம் பிள்ளைகளே பார்த்தறிய இது மிக்க உபயோகமாகும். இம்மாதிரியே பிள்ளைகள் வீடுகளிலும் வளர்க்கலாம். ஆனால் பக்ஷிகளைக் கூட்டில் அடைப்பதும், பிராணிகளுக்கு ஹிம்சை உண்டாகும்படி செய்தல் நல்லதன்று. பாடும் பக்ஷிகளுக்கு ஏற்ற ஆச்ரமங்களாயுள்ள பெரிய மரங்கள் பள்ளிக்கூடத்தைச்சுற்றி யிருத்தல் நல்லது. ஆனால் அவை மிக்கசமீபத்திலும்இருக்கக்கூடாது. கைத்தொழில் கற்பிக்கும் பாடசாலைகளில் அவ்விதம் பிராணிகளுக்கு அவசியமான கூடுகளும் வைத்தல் நல்லது. பெரிய தோட்டங்களில் தேனீக்கள் அடைய கூடுகட்டி வைத்தால் அவைகளின் சரித்திரம் ஊக்கம் புஷ்பங்களின் மகரந்த ஸ்பர்சம் முதலியவற்றைப் போதிக்க உபயோகமாகும். சிறு மீன்கள், தவளை இவைகளைப் பள்ளிக்கூடங்களில் சரியான ஜலபாத்திரங்களில் நீர் பூண்டுகள் போட்டு அவற்றில் வளர்த்தல் நல்லது.

இவ்விதம் இயற்கை யறிவுப் பாடங்களில் இன்ன விஷயங்களைப் பற்றித்தான் சொல்லப்படவேண்டுமென்று கண்டிப்பது அசாத்தியமாகும். இவைகள் பெரும்பாலும் கற்பிக்கும் உபாத்தியாயர் அறிவுக்கும், பிள்ளைகள் தொழிலுக்கும், தகுந்தவையாயிருக்கவேண்டும். பெரிய பட்டணத்திலுள்ள பள்ளிக்கூடங்கள், கிராமாந்திரப் பள்ளிக்கூடங்கள், செம்படவர்கள் மிகுதியாக இருக்கும் கடலோரப் பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலை இருக்கும் பள்ளிக்கூடங்கள் முதலிய பலவித இடங்களுக்குத் தக்கபடி பாடங்களைக் கூறிவிட்டுக் கற்பித்தல் அவசியம்.

வருஷ ஆரம்பம் முதல் பருவங்கள்தோறும் காணப்படும் செடிகள், பிராணிகளே அந்தந்தக் காலங்களுக்குப் பாடமாகும். கற்பிக்கப்பட்ட விஷயங்கள் சில வேட்டையிலும் அவைகளில் ஞானம் பூர்த்தியாயிருத்தல் அவசியம். சிரத்தையில்லாத உபாத்தியாயரும், பிள்ளைகளும் இயற்கை யறிவுபாடம் படித்தலில் படியாதிருத்தல் நலம். அப்படிப் பள்ளிக்கூடங்கள் சௌகரியப்படி ஏற்படும் கரிகுலம் சில சமயங்களில் வித்தியாசப்படும்.

சிறு வகுப்புகளில் பிள்ளைகளுக்குத் தங்களைச் சுற்றியிருக்கும் இயற்கைப் பொருள்களில் கவனம் அதிகப்படுத்த வேண்டியது முதல் நோக்கம். சித்திரங்கள் எழுத முடியாத போனபோதிலும், கூடியவரையில் கோணலாகவாவது எழுதப் பழகவேண்டும். பாலர் வகுப்பில் விதை விதைத்து அவைகள் வளரும் வரை கவனிக்கச் செய்யலாம்.

வெளியே அழைத்துப்போய் சூரியோதயம், சூரியோதயமான திசை, மழை, பனி, மூடுபனி, திசைக்காற்றுகள், மாரிகால அஸ்தமனம், எந்தெந்தக் காலங்களில் எப்படி இருக்கின்றன என்றும், சூரியன் சாயல் எந்தெந்தக் காலங்களில் எந்தப் பக்கங்களில் விழுகிறதென்றும் கவனிக்கப்பட வேண்டியது. வானவில், ஆலங்கட்டிகள் வரும்போது பிள்ளைகள் கவனத்தைக் கவர வேண்டியது அவசியம். சீமைச்சுண்ணாம்பு கையில் பிடித்து எழுதத் துவக்கியதும், சரியானபடி பயிலாவிட்டாலும் தாறுமாறாயாவது அவைகள்மாதிரி சித்திரங்கள் எழுதப்பழக வேண்டியது. களிமண் வேலையில் பழதினுசுகள், செடியின் வேர், முதலியவை பழக வேண்டும்.

இரண்டு மூன்றாவது வகுப்புகளில் வளர்க்கும் பிராணி, செடிகளின் ஜீவியசரித்திரம், படங்களுடன் காணப்படவேண்டும். ஒரு புஷ்பம், இலை மரம் செடி, பிராணிக்கும் மற்றொன்றுக்கும் உள்ள ஒற்றுமை பேதம் தெளிவாகச் சொல்லத் தெரியவேண்டியது.

இலைகளின் சித்திரங்களும், அதிகமாக எழுதப் பழக வேண்டியது. மேல் வகுப்புகளில் புஷ்பங்களின் பாகங்கள், தோகைகளின் வேலை, விவசாய விருத்தி, சமுத்திர அலைகள், திசைக்காற்று, மழை, விலைப் பொருள்கள் இவைகள் பூகோள சம்பந்தமாயும், கவனித்தறிய வேண்டியது. சூரிய கடிகாரம் செய்தல் உபயோகம் தெரியவேண்டியது.

தோட்டத்திற்கு வேண்டிய விதைகளும் உபகருவிகளும், செடிகள் வளர்க்கும் விதங்களைப்பற்றிய ஞானமும் நன்றாகவிருத்தியாக்கவேண்டும். இவ்விதம் இயற்கையறிவைப் புகட்டுவதால் ஈசுவரமகிமையும், உழைப்பின் மேன்மையும் நன்றாக விளங்கும். அழகான பண்டங்களை விரும்புதல் என்னும் குணம் பிள்ளைகளுக்குப் படியும். மேலும் பிள்ளைகளுக்குப் பிற்காலத்தில் செய்வனதிருந்தச் செயல்படிந்து அவர்கள் தொழிலுக்கு மிக்க உபயோகமாகும்படி கவனிக்கும் சக்தி, உற்றுப்பார்க்கும் சக்தி விருத்தியாகும். அமெரிக்கா தேசத்தில் சில பள்ளிக்கூட மியூஸியங்களில் பல சிறு அறைகளாகத் தடுத்து ஒவ்வொரு அறையிலும் ஏதாவது ஒரு பெரு விஷய சம்பந்தமான பல பொருள்கள் சேகரித்து வைத்திருக்கிறார்கள். உதாரணமாக ரயில் ஸ்டேஷன் என்ற அறையில், தண்டவாளம், மாதிரிவண்டி, கைகாட்டி மரம், ஸ்டேஷன்மாதிரி, காகிதஅட்டையினாலும் செய்து மனிதர் ஏறுவதும், டைம்டேபிள் பழக்கடைகள் முதலியவை யமைத்தும் தந்தி ஆபீஸ், ஸ்டேஷன் மாஸ்டர் மேஜை, பார்ஸல் புக்கிங் ஆபீஸ், மூட்டைச்சாலை முதலியவை யனைத்தும் அழகாக அமைக்கப்பட்டிருப்பதால் பிள்ளைகளை அவ்வறையில் அழைத்துப்போனதும் ரயில் சம்பந்தமான பல விஷயங்களும் கற்பிக்க இடமுண்டாகும். இம்மாதிரி பல பெருந விஷயங்களைத் தெரிந்தெடுத்து அவ்வழியில் மியூஸியம் ஏற்படுத்தல் மிக்க உபயோகமாக விருக்கும். எல்லாவற்றிற்கும் உபாத்தியாயர் கல்வி, ஊக்கம், உழைப்பு இவைகளே காரணங்களாம்.

S. பஞ்சாபகேச சர்மா, பி. ஏ., எல். டி.

இவனே வீரன்

THIS THE HERO

IV

சாயங்காலம் வரையில் யாதொன்றும் நேரவில்லை. சுந்தரமையர் சீக்கிரமாகவே இராப்போஜனாதிகளை முடித்துக்கொண்டு குட்டியம்மாளோடு படுக்கையறைக்குப் போய்விட்டார். ஜன்னல்களை மாத்திரம் திறந்துவைத்து, பெரிய விளக்கை வைத்து கதவைத் தாளிட்டார். சுந்தரமையர் தாயாருக்குக் காவல், பக்ஷணக்கடை குப்பச்சி. அவளுக்கு இராத்திரி பலகாரம் சுந்தரமையர் வீட்டிலாயிற்று; அதுவே அவளுக்குப் பெரிய லாபமென்று அவள் மனதில் மகிழ்ச்சியோடிருந்தாள். நடைக்கதவை பத்திரமாகத் தாளிட்டு அவர்களும் சீக்கிரமாகவே உறங்கிவிட்டார்கள். நடையில் ரிஸர்வ் கான்ஸ்டெபில்கள் இருவர் துப்பாக்கியும் கத்தியுமாய் நின்றார்கள். தெருத் திண்ணையிலிருவரும், பக்கத்து சந்திலிருவரும் அவ்வாறாகவே இருந்தார்கள். மற்ற அறுவர் போஜனாதிகளை செய்துகொண்டு இரவில் 10-மணிக்கு ஆஜராகவேண்டுமென்பது பங்காரு நாயுடு கட்டளை.

குலாமாலி அவ்வீட்டி லிருப்பதைவிட இரண்டு வீட்டிற் கப்பாலுள்ள பக்ஷணக்கடையி லிருப்பது நன்றென்று போய்விட்டான். தன் கம்பளியை விரித்து கைத்துப்பாக்கியோடு சுந்தரமையர் வீட்டுவாசலைப் பார்த்துக்கொண்டு விழித்துக்கொண்டிருந்தான். சில சமயங்களில் இந்தப் பயமெல்லாம் குழந்தைத்தனமே என்று நினைப்பான். ஆனால் நீர் இரத்தமானதை யோசிக்கும்போது திடுக்கிட்டு, தொடைநடுங்கி பிஸ்மல்லாவென்று பெருமூச்செறிந்து கொரானிலிருந்து சுரங்களை மனதிலேயே சொல்லிக்கொள்வான். அன்று அமாவாசை. தெற்குவீதியில் அமாவாசையன்று பேயுமில்லை பிசாசுமில்லை யென்று பரிகசிக்கும் வித்வான்களும் நடுங்கும்படி பயங்கரமாயிருக்கும். பண்டைநாள் பெரிய கனவான்களின் பேரப்பிள்ளைகள் தங்கள் பெரிய மனைகளில் விளக்கேற்ற விதியில்லாமல் பாழ்களில் வரும் ஆந்தைகளோடும், வெளவால்களோடும் வாழ்வார்கள். இரவில் குலாமாலி ஆந்தையின் பயங்கரமான கூச்சலைக் கேட்கக்கேட்க, மேலும்மேலும் அஞ்சலானான். ஆனால் காவல் காக்கும் ரிஸர்வ் கான்ஸ்டெபில்கள் சிலர் பாடும் இந்திரஸபாபாட்டுகளைக் கேட்கும்போதெல்லாம் அவன் மனம் நொந்தது. குட்டியம்மாள் இவ்விதமான அபாயத்தி லிருக்கும்போது காவல் காற்பவர் சிறிதேனும் வருத்தம் பாராட்டாது பாடுவதைக் கேட்க அவர்களைச் சுட்டுவிடலாமென்று அவனுக்குத் தோன்றும்.

மணி பன்னிரண்டு. மேற்சொல்லியவாறு, பயத்திலும், கோபத்திலும், வருத்தத்திலும் குலாமாலி அமிழ்ந்திருந்தபோது திடீரென்று இரண்டு குண்டு வெடித்தது. குலாமாலி பார்த்தான். எதிரில் தெருமூலையில், ஒரு நெருப்புச்சட்டி வந்தது. நெருப்புச்சட்டியில் பெரிய சந்தனக்கட்டைகள் எரிந்துகொண்டிருந்தன. சட்டியினெதிரில் ஒரு பெருந்தடி கார்த்திகைக் கொள்ளிக் கட்டைபோல், சுற்றிக்கொண்டு வந்தது. கண்டவுடன் காவலாளர் அவற்றைக் குறித்துச் சுட்டார்கள். ஆனாலென்ன? அவற்றோடுகூட மனிதர் யாருமில்லை. அதிவிசித்திரமாய், கூட யாருமில்லாமல் முன் பிழம்பும் பின் சட்டியும் வருவதைப் பார்க்கவே, அமாவாசையிருட்டில் தஞ்சாவூர் தெற்குவீதியில், பன்னிரண்டுமணிக்கு யாருக்குத்தான் மனந்தவிக்காது? குலாமாலி வீரனானாலென்ன? மனிதன்தானே? அவன் நெஞ்சமே திக்திக் என்று அடித்ததென்றால், மற்றவரைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ? சேவகர் 12 துப்பாக்கிகளும் ஒன்றன்பின் ஒன்றாய் வெடித்தன. ஆயினும் சட்டிநேராய் வந்து சுந்தரமையர் வீட்டுவாசலில் நின்றது. நின்றதும் சுவாலை அணைந்துபோயிற்று. தடி பிடியொன்றுமில்லாமல் காந்த விசிறி சுற்றுவதுபோல் அதிவிரைவாகச் சுற்றிக்கொண்டு, இருட்டில் கதவண்டை வந்தது. சேவகர் 12 பேரும் பயந்து நடையில் சென்று வாயில் கதவைத் தாளிட்டார்கள்.

சுற்றும்தடி கதவைத் தொடவே, படாரென்று கதவு திறந்தது. சேவகர் அய்யோ! என்னசெய்வார்கள்? 5, 6, பேர்கள் பயந்து மயங்கிக் கீழே விழுந்துவிட்டார்கள். மற்றவர் கத்தியால் தடியை வெட்டலாமென்று ஓங்கி வீசினார்கள். கத்திகள் துண்டு துண்டாய்ச்சிதறி பக்கத்திலுள்ள பலரைக் காயப்படுத்தின. பிறகு தடி சுற்றாமல் ஒவ்வொரு சேவகனையுந் தொட்டுவிட்டு, ஒவ்வொரு கதவையும் தொட்டமாத்திரத்திலேயே திறந்துகொண்டு குப்பச்சியையும், ஐயர் தாயாரையும் தொட்டுவிட்டு சுந்தரமையரையும் தொட்டது. தடி தொட்டவரெல்லாம் $3\frac{3}{4}$ நாழிகை பிரஞ்ஞையில்லாமல் அவ்வவ்விடத்திலேயே கிடந்தார்கள். தடி, குட்டியம்மாள் மாமியார்போ லுருவங்கொண்டு, அவள் குரலோடு 'குட்டி, வா காபி ஆச்சு' என்றது.

குட்டியம்மாளுக்கு என்ன தோன்றியதோ சுவாமிக்குத்தான் தெரியும். உடனே அவள் கட்டில் விட்டிறங்கி பல்தேய்க்கச் சொம்பெடுத்தாள். உடனே தடி வெளியேவந்தது. குட்டியம்மாளும் அதன்பின், சொம்புடன் சென்றாள். இருவரும் தெருவில் வந்தவுடன் சட்டியில் சுவாலை முன்போல் கிளம்பிற்று. முன்போலவே சுற்றிக்கொண்டு தடி முன்சென்றது. குட்டியம்மாள் வயிற்றில் பிள்ளையும், கையில் சொம்புமாய் அதன்பின் செல்லலானாள்.

அவள் போவதை குலாமாலி பார்த்ததும் அவன் நெஞ்சம் எவ்வாறிருந்தது? நாம் சொல்லவேண்டியதில்லை. படிப்போரே! உங்கள் பாட்டனார் உங்கள்மீது எவ்வளவு பிரியமாயிருந்தார்? எத்தனை தரம் உங்களோடு சோழியாடி, பாட்டுபாடி, கொஞ்சி விளையாடியிருக்கிறார்? நீங்கள் குட்டியம்மாள்போல் இருட்டில் இவ்வாறுபோனால் அவருக்கு எப்படியிருக்கும்? சற்று யோசியுங்கள். தன் உயிரைக் காப்பாற்ற அவர் பின் தங்கி யிருப்பாரா? குட்டியம்மாள், குலாமாலியின் அபிமான புத்திரன் மனைவி அவள் குழந்தைக்கும் அவள் கதியே நேரிடுமாகையால், எவ்விதமாகவாவது தாயையும் குழந்தையையும் காப்பாற்ற வேண்டுமென்று நிச்சயித்து வெகு ஜாக்கிரதையாக சப்த மொன்றுமில்லாமல், கைத்துப்பாக்கியோடு குலாமாலி அவர்களைப் பின்தொடர்ந்தான்.

கோட்டை விட்டு வெளியேபோய் மாரியம்மன் கோயில் சாலையில் நான்கு மைல் போனார்கள். போகும்போதெல்லாம் குலாமாலிக்கு திக்திக் என்று நெஞ்சடித்துக்கொண்டே யிருந்தது. சாலையின் ஓரத்தில் ஓர் திடலிருந்தது. அதை நோக்கி தடியும் சட்டியும் போகவே, சட்டியின் வெளிச்சத்தில் திடலிலிருந்ததை யெல்லாம் குலாமாலி உற்றுநோக்கி அங்கேயே நின்று, சாலையோரத்தில் ஓர் ஆலமரத்தில் சப்தம் செய்யாமலேறி உட்கார்ந்தான்.

திடல் நடுவில் ஒரு பாலிய துலுக்கன் உட்கார்ந்திருந்தான். அவனெதிரில் தடிபோய் நின்றது, சட்டி யதன்பின் நின்றது. குட்டியம்மாளும் அதன்பின் நின்றாள். அத்துலுக்கனெதிரில் ஒரு பெரிய குழியில் காட்டுவிறகுகள் திகுதிகென்று எரிந்துகொண்டிருந்தன. தடி, துலுக்கன்பக்கத்தில் கீழே விழுந்ததும் ஒரு சிறிய கரும்பிரம்பாய்விட்டது.

பிறகு ஒரு பையிலிருந்து ஓர் கை எலும்பை எடுத்து குட்டியம்மாள்மேல் போட்டான். உடனே அவள் சொம்பை யெடுத்துக்கொண்டு, பையிலிருந்து ஒரு தாம்புக்கயிற்றைக்கொண்டு, பக்கத்திலிருந்து கிணற்றில் நீர் இழுத்து ஸ்நானஞ்செய்து ஜலம் சொட்டச் சொட்ட அவனெதிரில் போய் நின்றாள். பிறகு கசாப்புக்காரன் கத்திபோல் பெரியகத்தி ஒன்றையெடுத்து ஒரு பெரிய எலுமிச்சம்பழத்தை நறுக்கி நெருப்புக்குழியில்போட்டு அத்துலுக்கன் எவர்க்கும் தெரியாதபாஷையில் பல மந்திரங்களைச் சொல்லத்தொடங்கினான். அதன்பின் ஓர் கோழியை வெட்டி அக்குழியில் போட்டு அக்கோழி யிட்டிருந்த முட்டை யொன்றைக் குட்டியம்மாள், இன்னொருமுறை எலும்பினால் அவளைத் தொட்டான். அவள் உடனே அம்முட்டையை ஓட்டை உடைக்காமல், பல்லால் கடித்து கருவை உறிஞ்சி ஓட்டை நெருப்புக்குழியில் வீசினாள். வீசினதும் அக்குழியிலிருந்து அக்கினிச்சுவாலை அதி உக்கிரமாய்க் கிளம்பிற்று. நெருப்புச்சட்டி யணைந்துபோயிற்று. மந்திரவாதி அப்பெருங்கத்தியைத்தவிர மற்றதை யெல்லாம் பையில்போட்டுக் கட்டிவிட்டான். அவன் எழுந்திருந்தான். குட்டியம்மாளைப் படு என்றான். அவள் தரையில் விழுந்தாள். அவன் கத்தியை எடுத்துக்கொண்டு அவள் வயிற்றண்டை நெருங்கினான். அப்போது படாரென்று குண்டு வெடித்தது. மந்திரவாதி, கத்திபிடித்த முழங்கை முறிந்து, ஓவென்று பதறி, புத்திமயங்கி கீழே விழுந்தான். அவன் விழுமுன்னர் இடிமுன் மின்னல்போல், குலாமாலி புலிபோல் பாய்ந்து, அத்துலுக்கன் நெஞ்சின்மேலுட்கார்ந்தான்.

V

'இவளை எழுப்புகிறாயா நெஞ்சில் சுடட்டுமா' என்றான். ஐயோ மந்திரக்கோல் பையில் போயிற்றே என்று துலுக்கன் புலம்பினான். 'இவளை எழுப்புகிறாயா நெஞ்சில் சுடட்டுமா' என்று வீரன் மற்றொருமுறை கேட்கவே, மந்திரவாதி கண்ணில் நீர் ததும்ப 'எனக்கு என் ஜெபத்தில் வைத்த மந்திரக்கோலில்லாமல் யாதொன்றும் முடியாது. இது உண்மை. இதுசத்தியம் என்னைக் காப்பாற்றுங்கள்' என்று இந்துஸ்தானியில் சொன்னான். திரும்பியும் கண்களில் கோபத்தீ பொறிய 'எழுப்பு' என்று வீரன் அதட்டவே, 'என் மந்திரத்தின் வன்மை $3\frac{3}{4}$-நாழிகைதான். அந்நேரமானவுடன் அவளே எழுந்திருப்பாள். என்னை மன்னியுங்கள், காப்பாற்றுங்கள். அவள் அதற்குள் எழாவிடில் என்னை சுடுங்கள் என்று கெஞ்சினான். அவனைச் சுட்டால் அவள் எழுவாளோ மாட்டாளோ என்றஞ்சி, தானடித்த யானைமேலுட்காரும் சிங்கம்போல், கண்களில் கோபத்தீ பொறிய, அல்லா நல்லவன் நாளை பாரென்று புலம்பிக்கொண்டு அத்துலுக்கன் மார்பின் மேல் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

குட்டியம்மாளைப் பார்க்கப் பார்க்கக் குலாமாலி தேம்பித்தேம்பி அழத் தொடங்கினான். பூரண கர்ப்பிணி, நகையொன்றுமில்லாமல், நான்கு மைல், இரவில் கால்நோவாது நடந்து, அகாலத்தில் குளிர்ந்த நீரில் தலை முழ்கி, தலை துவட்டாது பிணம்போல் தரைமேல் கிடந்ததைப் பார்க்கும்போது குலாமாலி மனம் நோவாது மற்றென்செயும்? அவள் கண் மூடவில்லை; இமை கொட்டவில்லை. ஆனால் பேச்சுமில்லை மூச்சுமில்லை. அப்படியே ஒவ்வொரு நிமிஷமும் எப்பொழுது அவள் பேசுவாளென்று குலாமாலியும், எப்பொழுது சுட்டுவிடுவானோவென்று மந்திரவாதியும் பயத்தினலொடுங்கியிருந்தார்கள்.

$3\frac{3}{4}$-நாழிகையாய்விட்டது. 'ஐயையோ!' என்று கூவி அவள் எழுந்திருந்தாள். குலாமாலியைக் கண்டதும் 'சாயபூ' என்று புலம்பி தரைமேல் மீண்டும் விழுந்தாள். குலாமாலி பயப்படாதே நான் இருக்கிறேன் என்றான். அரைமணிக்கெல்லாம் சற்று மூர்ச்சை தெளிந்து கால்கை நடுங்கிக்கொண்டு 'இவன்தான்' என்றாள்.

இப்படி யிருக்கையில் பொழுதுவிடிந்தது. ஞாயிற்றுக்கிழமை மாரியம்மன் கோயில்போய் இராத்தங்கி திரும்பும் ஜனங்களெல்லாம் தஞ்சைநோக்கிச் செல்லலானார்கள். அவர்களில் சுந்தரமையர்வீட்டுப் பால்காரன் முதல்முதல் வந்தான். குலாமாலி துலுக்கன்மேல் துப்பாக்கியோடு உட்கார்ந்திருப்பதையும், குட்டியம்மாள் தலைதுவட்டாது குளிராலும் பயத்தாலும் நடுங்கிக் கிடந்ததையும் பார்த்தவுடன், பால்காரமுருகன் அத்திடலுக்கு ஓடினான். குலாமாலி அவனைப் பார்த்ததும் கண்களில் நீர்ததும்ப நாலைந்து தடியன்களை அழைத்துவா வென்றான். முருகன்கூட்டம் பின்னால் வந்துகொண்டிருந்தது. இடையர்களெல்லாரும் வந்ததும், குலாமாலி எழுந்திருந்து அத்துலுக்கனைக் காலுங்

யையும் கட்டுங்களென்று சொன்னான். அப்படியே அந்தத் திடலில் ஓர் பனைமரத்தோடு இவனைச்சேர்த்துப் பிடித்துக் கட்டிவிட்டார்கள்.

குட்டியம்மாள் வீடுவிட்டு 3¾-நாழிகைக்கெல்லாம், மயங்கிய அனைவரும் விழித்து, குட்டியம்மாள் காணமற்போனதைப்பற்றி மதிமயங்கி பலசாலைகளிலும் தேடத் தொடங்கினார்கள். அத்திடலருகில் இரண்டு போலீஸார் அகஸ்மாத்தாய் வந்தார்கள். குட்டியம்மாளைப் பார்த்ததும் அவர்கள் ஓடிச்சென்று துலுக்கனைக் காலிலுங் கையிலும் விலங்கிட்டார்கள். குலாமாலி நடந்ததையெல்லாம் சொன்னான். குட்டியம்மாள் அதற்குள் முருகன் சவுக்கத்தால் தலை துவட்டிக்கொண்டு ஈரப் புடவையோடு நின்றிருந்தாள். அதற்குள் ஆட்கள் ஓடிப்போய் சுந்தரமையரையும், பங்காரு நாயுடுவையும் அழைத்துவந்தார்கள்.

சுந்தரமையர் ஒரு புடவையைக் கொண்டுவந்தார். குட்டியம்மாள் அதை உடுத்ததும் அவர் அவளைக் கட்டி முத்தமிட்டுக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் ஆறுகச்சொரிந்தார். குலாமாலியைக் கட்டிக்கொண்டு அவன் மார்பில் குழந்தைபோல் புரண்டு அழுதார். இதற்குள் குப்பச்சியும் மாமியாரும் வண்டியில் வந்தார்கள். சுந்தரமையர் தாயார் அழுதுகொண்டு 'குலாமாலி! சாயபூ! நீ ஙிஜமா ருலாந்தாண்டா, அணஞ்ச தீவத்தே யேத்தினயே என்னப்பா, என் கண்ணே' என்று பலவிதமாகப் புகழ்ந்தாள். இதையெல்லாம் பார்த்து, குலாமாலி பிரமிஷ்டன்போல் நின்றான். இரா முழுவதும் தூக்கமில்லாதபடியால், முகம்சிவந்து, இருக்கும் ஒரு கண்ணும் கோவைப்பழம் போலாய்விட்டது.

இதெல்லாம் நடக்கும்போது பங்காரு நாயுடு பளாரென்று துலுக்கனை யறைந்தார். அவனைக் கட்டிய பனைமரத்தில் அவன் தலையை மோதினார். புண்மேல் வலியாக அவன் முறிந்தகையில் திரும்பியும் குத்தினார். கொலைமேடைக்கு இன்று இரை அகப்பட்டது என்றார். இன்னும் நாம் எழுதக்கூடாத பலவிதத்தில் அவனைத் திட்டினார்.

பிறகு அங்கிருந்த பலரிடத்திலிருந்தும் நடந்த விதமாகவே வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டு எல்லாரும் தஞ்சைக்குத் திரும்பினார்கள். துலுக்கனை போலீஸார் இட்டுக்கொண்டு சென்றார்கள். அவன் பையும் போலீஸ் கச்சேரிக்குப் போயிற்று. இவ்விஷயங்களெல்லாம் தினசரி பத்திரிகைகளில் மறுநாள் வெளியாயின. டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் துரையவர்கள் ஒரு வாரத்தில் இந்தக்கேஸை செஷன்ஸில் விசாரிக்கலானார்.

VI

கோர்ட் கூடியது. இது பெரியகேஸ் என்று பல வக்கீல்கள் வேடிக்கைப்பார்க்கக் கூடினார்கள். குற்றவாளிக்கு வக்கீல் யாருமில்லாதபடியால் சர்க்கார் செலவில் ஒரு பெரிய வக்கீலை நியமித்தார்கள். கேஸ் விசாரணையின் விவரங்களை இப்பொழுது நாம் வரையவேண்டிய அவசியமில்லை. எல்லாருக்குமே அதில் அபிருசியிருக்கமுடியாது. ஐந்துநாள் விசாரணையான பிறகு தீர்ப்பு சொல்லப்பட்டது. கனம்பொருந்திய ஜட்ஜின் தீர்ப்பில் முக்கியமான விஷயம் என்னவென்றால் இங்கிலீஷ் சட்டம், இவ்விதமான பேய், பிசாசு, மந்திரம், சூன்யம் முதலியவற்றை அங்கீகரிக்கவில்லையென்பது. இதை ஆதாரமாகவும், மேலும், குற்றவாளியைத் தண்டிக்க சாக்ஷியும் போதாதென்றும் கேஸைத் தள்ளிவிட்டார். கேஸ் தள்ளியாயிற்றென்று படித்ததும் குற்றவாளி குபீரென்று கூட்டிலேயே குதித்து நின்றான். பயம் நீங்கி ஆனந்த பாஷ்பமாறுகச் சொரிந்தான். ஆயினும், குலாமாலி காலில் விழுந்து நான் உண்மையாய் குற்றவாளியே, என்னை மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு "இன்று முதல் என் துன்மார்க்கத்தை விட்டேன். இதுகாறும் நான் செய்துள்ள பாவத்தைப் போக்கும்பொருட்டு நாகூர் சென்று அங்குவரும் பக்த ஜனங்களுக்குப் பணிவிடை செய்து காலங்கழிப்பேன்" என்று சத்தியம் செய்தான். இதுகாறும் குலாமாலி கையில் உருவின கத்தியோடு நின்றான். நாகூர்சமாசாரம் சொன்னவுடன் கத்தியைக் கூட்டில் போட்டு "என்னப்பா உன்னை அல்லா ரக்ஷிக்கவேண்டும்" என்று அவனைக் கட்டிக்கொண்டு அழுதான். குலாமாலியின் கோபத்தையும், அடுத்த நிமிஷத்தில் அவன்பக்தியையும் தயாளகுணத்தையும் பார்த்தவுடன் "இவனே வீரன்! இவனே வீரன்!" என்று பலர் கத்தினார்கள். கோர்ட்டிலிருந்த அனைவருக்கும் மயிர்க்குச்செறிந்தது. துரையவர்களே கீழே இறங்கிவந்து குலாமாலியோடு பாரசீகத்தில் அவனைப் புகழ்ந்து பேசி சுந்தரமையர் தன்னியமே தன்னியம் என்று சொல்லி குலாமாலி நீடு வாழ்கவென்று கடவுளைப் பிரார்த்தித்தார். இவ்வாறிருக்க, சுந்தரமையர் இதெல்லாம் கனவேயோ என்று மதிமயங்கி நாற்காலியில் விழுந்திருந்தார்.

அப்பொழுது ஓடிவந்து ஒரு போலீஸ்காரன் அவரைத் தட்டி யெழுப்பி 'குலாம் பிறந்தான்' என்று உரக்கச் சொன்னான். எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள் 'குலாம்பிறந்தான் என்றால் என்னடா மாடு' என்று பங்காரு நாயுடு அதட்டினார். அதற்கவன் "பிள்ளை பொறந்துச்சுங்க: பெரியம்மா புள்ளைக்கு குலாம் என்னு பேரிட்டாங்க. ஓடிப்போயி ஐயா கிட்ட குலாம் பொறந்தான் என்னு சொல்லச்சொன்னாங்க" என்றான். அக்கிழவியின் நன்றிக்கோர் அளவுண்டோ. குட்டியம்மாளும் குலாமாலியும், பிள்ளை குலாமை, குலாம் என்று கூப்பிட்டுக் கொஞ்சி விளையாடுவதைக் காணும்போது மனங்கலங்கி வியப்புறாதவருமுளரோ. குலாமோடு ஐயர் சேரும்போது அதென்ன பெயரென்று பிறகு கேட்காதவர்கள் பாவிகள். யார் கேட்டபோதிலும் குலாமையர் சிறிதேனும் வருத்தமில்லாமல், மேற்சொல்லிய விஷயங்களை யெல்லாம் விவரமாய்ச் சொல்லுகிறார். அவர் சொல்லும்போதிருக்கும் ஊக்கமும் மகிழ்ச்சியும் யாம் விளக்க முடியவில்லையே என்று வருந்துகிறோம். குலாமையரை நேரில் கண்டு, அவரிடமிருந்து இக்கதையைக்கேட்டு ஆனந்தக்களிப்படையவேண்டுமென்னும் விருப்பமுடையவர், அவரைத் தஞ்சை தெற்குவீதியில் காணலாம்.

நபாபிரியா.

இந்துலேகை

INDULEKHA

(தொடர்ச்சி.)

கோவி.—செம்போழியோட்டிலிருந்து கேசவன் நம்பூதிரி எழுதின கடிதம் ஒன்று வந்தது. அதை வாசிச்சவுடனே ஐயாவை அழைச்சுவரச்சொல்லி எனக்கு உத்தரவுபண்ணினாங்க.

"சரி, தெரிஞ்சுது; வேறே முண்டு கட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே செருப்பேரி நம்பூதிரி வீட்டுக்குள்ளே போனார்.

செருப்பேரி நம்பூதிரி அன்றைக்குச் சுமார் இருபது நாளைக்குமுன் கேசவன் நம்பூதிரியோடுகூட செம்போழியோட்டுக்குப் போயிருந்த சமயத்தில், இந்துலேகையையும் மாதவனையும் கண்டு அவர்களிடத்தில் அதிக ஸ்நேஹமும் அன்பும் கொள்ளலானார். கூடிய சீக்கிரத்திலேயே அவர்களை மறுபடியும் வந்துபார்ப்பதாகச்சொல்லி செருப்பேரி நம்பூதிரி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டிருக்கையில், கேசவன் நம்பூதிரி அவரை நோக்கி, மூர்க்கில்லாத்த ஸூரி நம்பூதிரிபாட்டோடு இந்துலேகைக்கு ஸம்பந்தம் நடந்தால் மிகவும் பொருத்தமாயிருக்குமென்றும், அதற்கு செருப்பேரி நம்பூதிரி சகாயம் புரியவேண்டுமென்றும் சொல்ல, அது அப்படி நடப்பது அஸாத்தியமென்று செருப்பேரி நம்பூதிரி கூறிவந்துவிட்டார். அவர் செம்பொழியோட்டிலிருந்து திரும்பிவந்த பிறகு இந்துலேகையைப்பற்றித் தான் தம்பியும் மகாபுத்திமானுமாகிய நாராயணன் நம்பூதிரிப் பாட்டுடன் மாத்திரம் பிரஸ்தாபித்ததுண்டேயொழிய ஸூரி நம்பூதிரிப் பாட்டோடாவது வேறே யாரோடாவது அவளைப்பற்றி ஓர் அக்ஷரமும் அவர் சொன்னது கிடையாது. இவ்விதமாக இந்துலேகைக்கும் செருப்பேரிநம்பூதிரிக்கும் ஏற்கனவே பரிசயம் உண்டாயிருந்தது.

கோவிந்தன் வந்து கூப்பிட்டவுடனே அவர் புறப்பட நிச்சயித்து, உள்ளே சென்று சுத்த வஸ்திரம் தரித்து, வெளியே வந்து, கோவிந்தனை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். அப்படி அவர்கள் வந்து கொண்டிருக்கையில், கோவிந்தன் "ஸ்வாமி, தேவரீரை அழைத்துவரச்சொன்ன காரியம் திருமனஸுக்குத் தெரிந்திருக்குமென்று அடியேன் நினைக்கிறேன். அப்படி தெரியாதிருந்தால், அடியேனுக்கு உத்தரவு பண்ணும் பட்சத்தில், சொல்லுகிறேன்" என்றான்.

செரு.—சொல்.

கோவி.—செம்போழியோட்டில் கேசவன் நம்பூதிரி ஸம்பந்தம் பண்ணியிருக்கிற பூவள்ளிவீட்டில் அதிருபவதியான ஒரு ஸ்திரீ இருக்கிறாளாம். அவ்விடம் தம்புரான் ஸம்பந்தம் செய்து கொள்ளும் நிமித்தமே இந்தக்கடிதம் வந்திருக்கிறது. தேவரீரும் அங்கே எழுந்தருளவேண்டி யிருக்குமென்று தோன்றுகிறது.

செருப்பேரி நம்பூதிரி சிரித்துக்கொண்டே கோவிந்தன் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து, கடைசியில், "கோவிந்தா, நீயும் கூடவரமாட்டாயா, நாங்கள் போவதாயிருந்தால்?" என்று கேட்டார்.

கோவி.—அதுக்கென்ன தடை? நிச்சயமாய் வர்ரேன். ஆனால் அந்தக் கடுதாசி கொண்டுவந்தவன் நீங்க அந்தக் குட்டியெ பார்த்திருப்பதாக என்னண்டே சொன்னான். அது நெசந்தானா?

செரு.—ஆமாம், நான் அவளைப் பார்த்திருக்கிறேன். ஆகச்சே அந்தக் கடுதாசி கொண்டுவந்தவன்தானோ இந்த ஸம்பந்தத்தின் விவரங்களெல்லாம் உனக்குச் சொன்னது?

கோவி.—இல்லெ, சாமி. தம்புரானே இந்த சங்கதியை சொன்னாருங்க, அடியன் அந்தக் கடுதாசியெ படிக்கல்லெ. தம்புரான் இன்னொண்ணுகூட சொன்னாருங்க. இது மத்த எல்லா ஸம்பந்தங்களையும் போல அல்லவாம். அந்தக் குட்டியின் பேரைக்கூட சொன்னாருங்க. சந்திரபானுவென்றோ சித்திரலேகையென்றோ இன்னும் எதுவோ ஒரு பேர் சொன்னார். அவளை ஸம்பந்தம் பண்ணின மறுதிவஸமே வீட்டுக்கு அழச்சுக்கொண்டு வரப்போகிறாராம். இந்த ஸங்கதியை இன்னிக்கு வலிய (மூத்த) தம்புரானுக்குத் தெரிவிச்சு, அவருடைய ஸம்மதியைக் கேட்கப்போறதாய் சொன்னாருங்க.

இதைக் கேட்டபோது செருப்பேரி நம்பூதிரிக்குத் தன்னையும் அறியாமலே அடக்கமுடியாத சிரிப்பு உண்டாயிற்று. அதற்குக் காரணம் இன்னதென்று நன்றாய் அறியாமலே கோவிந்தனும் சிரித்தான். இப்படி இருவர்களும் வேகமாய் நடந்து வந்தார்கள்.

செருப்பேரி நம்பூதிரியை அழைத்து வரும்படி கோவிந்தனை அனுப்பினவுடனே ஸூரி நம்பூதிரிப்பாடு அவசர அவசரமாய் ஸ்நாநம்பண்ணி போஜனத்தை முடித்துக்கொண்டு, வாசல் தாழ்வாரத்துக்கு வந்து, இந்துலேகையையே மனதில் விடாமல் தியானித்துக் கொண்டு ஆநந்தபரவசராயிருந்தார். அந்த சமயத்தில், அவர் குடும்பத்தின் விவகார காரியஸ்தனான தாச்சு மேனோன் ஒரு கட்டு கடுதாசை கையிலெடுத்துக் கொண்டு வந்தான்.

நம்பூதிரிப்பாடு.—எனக்கு இன்னிக்கி ஒரு வேலை பார்க்கவும் ஒழியாது. நீ போயிடு தாச்சு.

தாச்சு.—தயவுசெய்து இதை மாத்திரம் எப்படியாவது பார்க்கணும்.

நம்பூ.—நீ என்ன சொன்னாலும் இன்னையதினம் என்றால் முடியாது.

தாச்சு.—நாளையினன்னிக்கி கேஸ் விசாரணை யாச்சுதே. சில விவரங்களைப்பற்றி அடியேன் தேவரீருடன் பேச யோசித்திருந்தேன். அதுகளை இப்போது சொல்லாமல் சரியாது.

நம்பூ.—விசாரணை எக்கேடாவது கெட்டுப்போகட்டும். இப்போ எந்த சங்கதியைக் கேக்கறதுக்கும் எனக்கு ஒழியாது.

தாச்சு.—ஒரு தஸ்தாவேஜு தாக்கல் செய்யவேண்

டியிருக்கு. அதுக்கு ஒரு அர்ஜி கொடுக்கணும். அர்ஜியும் எழுதி தயாராயிருக்கு. தேவரீர் அதில் கையெழுத்து போடவேண்டியது தான் பாக்கி.

நம்பூ.—இன்னிக்கி சனிக்கிழமையாச்சே. சனிக்கிழமையிலே நான் ஒரு கடுதாசிலும் கையெழுத்து போட்றதில்லேன்னு ஒனக்கு தெரியாதா, தாச்சு? பின்னே என் என்னை இப்படிவந்து உபத்ரவம் பண்ணுய்?

தாச்சு.—தஸ்தாவேஜை திங்கக்கழமை கொண்டு போய் தாக்கல் பண்ணுதபோனால், கேஸு நமக்கு விரோதமாய் தீர்மானமாயிடும்.

நம்பூ.—அது எப்படியாவது ஒழிஞ்சுபோகட்டும். எனக்கு அவசியமில்லை. அப்பீல்கோட்டு இருக்கோ இல்லையோ?

தாச்சு.—தஸ்தாவேஜை தாக்கல் பண்ணுவிட்டால், அப்பீல் கோட்டிலும் தோத்துப்போயிடுவோம்.

நம்பூ.—கண்டபடிக்கெல்லாம் உளராதே. உன்னை நம்பி இந்தக் காரியத்தை கொடுத்திருக்கச்சே, என் இப்படி வந்து என் பிராணனை வாங்கருய்?

தாச்சு.—அப்படியானால், தேவரீருக்குப் பதிலாய் நான் கையெழுத்துபோட்டு அர்ஜியை தாக்கல் பண்ணலாமா?

நம்பூ.—சனிக்கிழமையில் நான் ஒரு அர்ஜிக்கும் கையெழுத்து போடமாட்டேன். முன்னே ஒரு சனிக்கிழமைதினம் ஒரு ப்ளெயின்டில் கையெழுத்து போட்டதனால் நமக்கு கேஸ் கெட்டுப்போனது ஒனக்கு ஞாபகமில்லையா?

தாச்சு.—இது ப்ளெயிண்டல்லவே, அர்ஜியாச்சே?

நம்பூ.—அது எதுவாயிருந்தாலும் சரி, நான் இன்னிக்கு கையெழுத்து போட்றதில்லை. அது நிச்சயம், தாச்சு, நீ போய் குளி.

தாச்சு.—இந்த கேஸுக்குதேவரீர் கோட்டுக்கு ஸாக்ஷியாக எழுந்தருளவேண்டி வருமென்னு தோன்றது.

நம்பூ.—நானு?

தாச்சு.—ஆமாம், ஸ்வாமீ.

நம்பூ.—அப்பப்பா! நான் ஒருகாலும் போகவே மாட்டேன். கேஸு தோத்துப்போனாலும் போகட்டும். கோட்டிலிருந்து எனக்கு ஸம்மன் வந்ததோ?

தாச்சு.—வந்தது, தேவரீர் இங்கே இல்லையென்று அதில் எழுதி அனுப்பிவிட்டேன்.

நம்பூ.—என்னை ஸாக்ஷியாக வரும்படி அழச்ச அந்த அதிகப்பிரசங்கி யார்?

தாச்சு.—உள்ளாட்டில் பஞ்சுமேனவன் பேரில் கொண்டுவந்திருக்கும் வியாஜ்யத்திலல்லவோ இது?

நம்பூ.—உள்ளாட்டில் பஞ்சுவா? பேஷ்! அவன் பேரில் நம்பர் பண்ணியிருக்கையா என்ன?

தாச்சு.—ஆமாம், அவனெ செர்ப்பற்றெ களத்திலிருந்து கப்பிவிட்றத்துக்கு.

நம்பூ.—சரி, சரி. நான் மறந்துபூட்டேன். அந்த கேஸு தீர்மானமாய் போச்சுன்னு நீ அன்னிக்கி என்னோடே சொல்லலே?

தாச்சு.—அடியேன் அப்படி ஒன்னும் சொல்லலையே. பஞ்சுமேனவன் நில உரிமை தனக்கே சொந்தமென்னு பாத்தியதை கொண்டாடி, மனைவகை நாலஞ்சு பூமிகள் தனக்கே சேரவேணுமென்னு வாதாட்றான்.

நம்பூ.—பஞ்சுவா இப்படி சொல்றான். கெட்ட போக்கிரியா யிருக்கானே! இதுவரையில் எனக்கு இந்த சங்கதி தெரியாதே. ஒரு ஆளை அனுப்பி, பஞ்சுவை அழச்சுவரச் சொல்லு. அந்த படவாவை நானே ரண்டொரு கேழ்வி கேழ்க்கிறேன். அவன் ஏதாவது வாலை ஆட்டினாலோ, அப்பவே பிடிச்சுது அவனுக்கு ஆறேழுக்காலும் அரையும் காலும். கொளம், கிணர், கழனி—மற்ற எல்லா இடங்களிலும் அவனை கிட்ட நாடாதபடி காதவழிதூரம் தூரத்தியடிக்கிறேன் பார். அப்புறம் தன்னாலே பட்டிநாயெப்போலே இங்கே ஓடிவரானா இல்லையா பாத்துக்கோ தாச்சு. இதையெல்லாம் நீ முன்னேயே என்னோடே சொல்லாதே இருந்துவிட்டையே.

தாச்சு.—இதனால் பிரயோஜனம் ஒன்னுமில்லேன்னு தோன்றது. பஞ்சுமேனவன் ஒரு வெள்ளைக்கார பாரிஷ்டரெ வருத்தியிருக்கிறான்.

நம்பூ.—அதனால் என்ன? வரட்டுமே.

தாச்சு.—அந்த தொரை ரொம்ப கெட்டிக்காரனும்.

நம்பூ.—அப்படியானால் நாம்பளும் ஒரு தொரையை வைச்சால் போறது. எலமலை குத்தகை எடுத்திருக்கானே—மக்ஷாமன் துரை—அவன் தான் இதுக்கு சரியானவன். எனக்கும் அவனுக்கும் ரொம்ப அந்யோந்யம். நீ உடனேபோய் இந்த கேஸைக்குறிச்சு சங்கதிகளையெல்லாம் அவனிடம் சொல்லு. புறப்படு.

தாச்சு.—சரிதான். எலமலைக் கந்தராக்டுதாரனுக்கு இப்படிப்பட்ட காரியங்களை நடத்த எப்படி முடியும்?

நம்பூ.—வாயைமூடு. அதிகப்பிரசங்கி. கந்தராக்டு துரையை வைக்கணும் என்னு எனக்கு இஷ்டமிருக்கு. எனக்காக அவன் என்ன வேணுமானாலும் செய்வன், அதை ஆக்ஷேபிக்கிறத்துக்கு ஒனக்கென்ன அதிகாரம்.

தாச்சு.—இல்லை, இல்லை. தாங்கள் சொல்றதே சரி. அப்படியே அடியேன் போய் தொரையைப் பார்த்து எல்லா சங்கதிகளையும் சொல்றேன். ஆனால் தேவரீர் தயவுசெய்து இந்த அர்ஜியில் விளையாட்டாக கையெழுத்து போடணும். இல்லாவிட்டால், திங்கக் கிழமை இந்த கேஸு நமக்கு விரோதமாகவே முடியும்.

இப்படி தாச்சு மேனவனும் நம்பூதிரிப்பாடு கையெழுத்துப் போடவேண்டுமென்றும் போடுகிறதில்லையென்றும் தர்க்கித்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் பண்ணிக்கொண்டிருக்கையில், நாராயணன் நம்பூதிரிப்பாடு உள்ளேயிருந்து வந்து, வெகுதூரம் மன்றாடிச் சொல்லிக் கடைசியாகத் தன் தம்பியை அந்த அர்ஜியில் கையெழுத்து போடும்படி செய்தார். கையெழுத்து போட்டவுடனே நம்பூதிரிப்பாடு, செருச்சேரி என் இன்னும் வரவில்லையென்று சிந்தித்துக்கொண்டே,

வாயிற்படிக் கப்புறமிருக்கும் வீட்டுக்குப் போய், அங்கே செருஸ்ஸேரியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு, இந்துலேகையின் சௌந்தர்யத்தை மனத்தில் நினைந்து நினைத்து ஆனந்தத்தில் மூழ்கியிருந்தார். அப்படி இருக்கும்போது செருஸ்சேரி நம்பூதிரியும் கோவிந்தனும் வருவதைக் கண்டார். கண்டதும், அவர்கள் படியேறுவதற்கு முன்னமே, உரக்கக் கூவிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

நம்பூ.—செருஸ்ஸேரி, வேகமாய் வா, வேகமாய் வா. என் இப்படி மெதுவாய் நடந்து வருகிறாய். வேகமாய் வரக்கூடாதா? சங்கதியெல்லாம் தெரிஞ்சு கொள்ள வாண்டாமா? செம்பொழியோட்டிலிருந்து கருத்தேடம் எழுதின கடுதாசி வந்திருக்கிறது. இந்துலேகை என்கிற பெண்ணைப்பற்றி கேள்விப் பட்டதுண்டோ? அன்னயதினம் போதாயப்பம் என்னோடு வார்த்தை சொல்லிக்கிண்டிருக்கச்சே நீ இருந்தையோ? இல்லையே. ஆகா! அவள் மகாரூபவதி; சாக்ஷாத் தமயந்தி என்றே சொல்லவேண்டும். நான் அந்தப் பெண்ணோடே சம்பந்தம் பண்ணிக்கொள்ளப் போகிறேன். ஆனால் முன்னுள்ள சம்பந்தங்களைப்போலல்ல; குட்டியை இங்கேயே அழச்சிக்கொண்டு வரப்போறேன். அவளுக்கு இங்கிலீஷூம், இன்னும் என்னென்னமோ எல்லாம் தெரியுமாம். இங்கிலீஷ் தெரிஞ்ச பொம்மனாட்டியை நான் இதுவரையில் பார்த்ததே யில்லை. மகாரூபவதியாம். சாக்ஷாத் தமயந்தி என்றே சொல்லுகிறார்கள்.

இப்படி சொல்லி முடித்தவுடனே, செருஸ்ஸேரி நம்பூதிரி அவருக்கு சமீபமாய் வந்து "அப்படியானால் அவளுக்குத் தகுந்த நளன் இருக்கவேணு மல்லவோ, நம்பூதிரிதான் அந்த நளன்.

நம்பூ.—செருஸ்ஸேரி! போரும், போரும், நிறுத்து. எனக்கு வயசாய்க்கொண்டு வருகிறது. இந்தக் குட்டிக்கோ வயசு பதினஞ்சே. எனக்கும் சௌந்தர்யம் இருக்கு! ஆகச்சே அந்த சங்கதி போகட்டும். நாம் புறப்படுவோம் வா."

செரு.—அந்த சங்கதி என் அப்படி போகட்டும் என்கிறீர். அதைப்பற்றித்தான் நாம் இப்போ பேசவேணும். நாற்பத்தஞ்சு வயசு ஒரு வயசா? இருவது வயசில் சௌந்தர்யம் உண்டானால், அது நாற்பத்தஞ்சு வயசில் எங்கே போய்விடும்? இப்படியெல்லாம் பேசாதேயும். இவ்விடத்துக்கு எண்பது வயசாகிறவரையில், இந்த நாட்டிலுள்ள நாரீமணிகளுக்கு இவ்விடத்திலுள்ள போகம் குறையாதென்று எனக்குத் தோன்றுகிறது. அப்படி இருக்கச்சே இப்படியெல்லாம் வயசைப்பற்றி என் அதிருப்தியடையவேண்டும்.

நம்பூ.—நீ இந்துலேகையைப் பார்த்ததுண்டோ? செருஸ்ஸேரி, கருத்தேடத்துடனே அன்னையதினம் போயிருந்தது அவ்விடத்துக்குத் தானே?

செரு.—ஆமாம். நான் இந்துலேகையைப் பார்த்திருக்கிறேன். (தொடரும்.)

மாணவர் பக்கங்கள்
STUDENTS' PAGES
I. நியாயமஞ்சரி
59. चतुर्वेदवित् न्यायः
చతుర్వేద విత్ న్యాయం
சதுர்வேதவித் ந்யாயம்.

இதற்கு நான்கு வேத உணர்ச்சி ந்யாயம் என்று பொருள். ஒரு பிரபு நான்கு வேதங்களு முணர்ந்த ப்ராஹ்மணனுக்கே மஹாதானம் ஒன்று செய்வதாகத் தமது கருத்தை வெளியிட்டிருந்தார். இதைக் கேள்விபட்டு வேதவிஷயமே அறியாத ஒருவன் நான்கு வேதங்களின் பெயரைமாத்திரம் எங்கேயோ கேட்டுத் தெரிந்துகொண்டு வீண் பணத்தாசையால் தானம் வாங்க வந்துவிட்டான். அவனைப் பரீக்ஷிக்கையில் வேதங்கள் பெயர்களைத்தவிர அவனுக்கு வேறு ஒன்றும் தெரியாது என்பது வெளியாக, எல்லோரும் அவன் மூடத்தனத்தைக் கண்டு பரிஹாஸம் பண்ணி ஓட்டிவிட்டார்கள். அவனுக்குத் தானம் கிடைக்காததுமன்றி அபகீர்த்தியும் வந்துவிட்டது. இந்தக் கதையுடன் ஸம்பந்தப்பட்டது இந்யாயம்.

பொதுவாக விஷயங்கள், ஒழுங்குகள் ஆகிய இவைகளின் கருத்தை உணராது வார்த்தைபடி நடந்து திண்டாடுபவர்கள் விஷயமாக இந்த ந்யாயம் உபயோகப்படும். பிறர்ஸொத்துக்களைத் தன்ஸொத்துப்போலப் பாவிக்கவேண்டும் என்பது நன்னடக்கைக் கோட்பாடு. இதன் கருத்து நமது ஸொத்தாக விருந்தால் நாம் எவ்வளவு கவலையுடன் அதைப் பாதுகாத்து அவசிய விஷயங்களில் செலவிட்டு அனாவசியமாக அதை இழக்காது, நாம் பிறரிடத்தில் நமது ஸொத்தைக் கொடுத்து வைத்திருந்தால் அவர்கள் அதை எவ்வாறு காக்கவேண்டும் என்று எதிர்ப்பார்ப்போமோ அதற்கேற்ப வெல்லாம் நாம் பிறர் ஸொத்தை வைத்திருக்குங்கால் அதன் விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டும் என்பதே. இந்தக் கருத்தை உணராது திருட்டு எண்ணமுடையவன் ஒருவன் பிறர் கொடுத்து வைத்த ஸொத்தைக் கண்டபடி செலவிட்டு ந்யாயஸ்தலத்திற்கு இழுத்து வந்த காலத்தில் 'பிறன் ஸொத்தைத் தன் ஸொத்தைப்போலப் பார்க்கவேண்டுமென்பது நன்னடக்கைக் கோட்பாடு. அதன்படி என் ஸொத்தை அச்சமின்றி எவ்வாறு நான் செலவிடுவேனோ அவ்வாறு நான் பரஸொத்தையும் செலவிட்டேன். என்மேல் என்ன குற்றம்?" என்று மன்றாடினால் வீண் பரிஹாஸத்திற்கு இடமாவதன்றிப் பக்காத் திருடன், நல்ல வாக்யங்களைத் தன் கொடுந்தொழிலுக்கு ஆதாரமாகப் பொருத்தும் குதர்க்கச்சூதன் வீணன் என்று மதிக்கப்பட்டு அதிக தண்டனைக்குக் உள்ளாவானல்லது, புகழ்பெறமாட்டான். இம்மாதிரியேதான்

பகவத்கீதையில் பகவான் கூறும் ஞானோபதேசமாகிய 'ஆத்மா என்றும் அழியாத வஸ்து, அது அழியும் என்று வருந்தவோ இடமில்லை. தேஹாதிப்ரபஞ்சங்கள் எப்பொழுதும் அழிபவைகளே, அவைகள் அழிந்து விடுகின்றன என்று வருந்திப் பயனில்லை. ஆதலால் ஒருவித வருத்தமும் கொள்ளாது உன் ஜாதிதர்மமாகிய யுத்தத்தைச் செய். பண்டிதர்கள் இவைகளைப்பற்றி துக்கியார்கள்' என்ற பரமவேதாந்த ரஹஸ்யத்தை, குற்றங் கூற வேண்டும் என்ற துர்எண்ணம் படைத்த வெளிமதஸ்தர்கள் 'இந்தக் காரணத்தைக்கொண்டு எந்த அநியாய காரியத்தை தயங்காது செய்துவிடலாம். கொலைபாளிகள் முதலியவர்கள்கூட இந்தப் பரம உபதேசத்தால் மஹான்களாக ஏற்படுவார்கள்' என்று குதர்க்கம் செய்கிறார்கள். இவர்கள் இந்யாயத்திற்குத் தகுந்த உதாரணங்களே. இவர்கள் 'நமது சாஸ்திரங்களில் பரமரஹஸ்யமான விஷயங்களாகிய ஜடபாதர் கதை முதலியவைகளை இவ்வாறு மேலெழுந்தவாரியாக உதறி எறிந்து விடுவதால் இவர்களைவிட இந்யாயத்திற்கு மிகப் பொருத்தமான உதாரணம் அகப்படுவது மிக அரிது! அரிது!!

இதுவரையிலும் கூறிவந்த உதாரணங்களில் சூதும் கெட்ட எண்ணமும் கலந்திருந்தன. இனி வருபவைகளில் முதலில் அறியாமையும், 'முதலையும் மூர்க்கரும் கொண்டது விடா' என்ற பிடிவாதமும் நன்கு விளங்கும். வேதாந்த விஷயங்களை எல்லாம் புத்தகங்களிலிருந்து நன்றாகத் தெரிந்துகொண்டு அதில் 'விசாரத்தால் ஞானம் ஞானத்தாலேயே மோக்ஷம் கர்மங்களால் மோக்ஷம் வருமா? அமாவாஸை இருட்டைக் கார் மேகங்கள்போக்குமா, ஸூர்யன் ஒளி போக்குமா?' என்று அமைந்துகிடக்கும் மேலான பரமரஹஸ்யத்தை நன்றாக வைத்துக்கொண்டு 'ஒன்றும் செய்யவேண்டியதில்லை. ஞானம் வந்துவிட்டது, விஷயத்தை உணர்ந்தாய்விட்டது, போதும்' என்று இறுமாப்புடன் இருந்துவிடுவர் சிலர். இவர்களிடமிருந்துதான் வாசாவேதாந்தங்களாகிய அஸுர வேதாந்தம் (கடவுளில்லை எல்லாம் நானே என்பது) விதவை வேதாந்தம் (வார்த்தைகளை ஒடித்துப் பொருள்படுத்தி ப்ரஹ்மம் ஒன்றே எங்கும் உள்ளது என்று பிதற்றுவது) கலுவாய் வேதாந்தம் (செய்வதும் ஏற்பதும் ப்ரஹ்மமே ஒரு ஸத்காரியமும் வேண்டியதில்லை என்று தானம் முதலியவைகளை நிறுத்திவிடுவது) ஸுக வேதாந்தம் (இந்திரியங்கள் விஷயங்களில் உழலுகின்றன. நான் ஸாக்ஷி அஸங்கன் சின்மாத்திரன் என்று மார்க்க அமார்க்கங்களில் விஷய ஸுகங்களைவிடாது பற்றுதல்). வயிறுநிறைந்த வேதாந்தம் (நல்ல சுகத்திலிருக்கையில் கஷ்டப் படுபவர்களைக் காணுங்கால் கடவுள் நம்மைஸுகப்படவே ஸ்ருஷ்டித்திருக்கிறார். கஷ்டப்படுவது நமது குற்றம் என்று ஒழுங்காகப் பேசுவது) ஆகியஇவை போன்ற வேதாந்த ஆபாஸங்கள் புற்றிலிருந்து ஈசல்போல் வெளிப்படும். எந்த நிலையில் எந்த அனுபவ விஷயத்தைப்பற்றி இந்தவாக்யம் வேதாந்த சாஸ்திரத்தில் பிறந்தது என்று ஆய்ந்தோய்ந்து பாராது வாக்கியமாத்திரத்தில் தங்கள் ஸுகாதிகளுக்கு ஏற்ப அவற்றைப் பொருள்படுத்தி வேதாந்த வழியில் உள்ளபடி முயலும் நிஷ்டாபரர்களைத் தூஷிப்பதுமே காரியமாகிய இத்தகைய ஆபாஸ வேதாந்திகள் நிலையை நன்கு விளக்கவே இந்யாயம் ஏற்பட்டது என்று கூறுவதில் தடை என்ன? வேத விஷயங்களை உள்ளபடி கண்டு தெளியவேண்டும்: இம்மாதிரி இந்யாயத்திற்கு இலக்காகவே கூடாது என்று சிதம்பரஸ்வாமிகள் வேதாந்தம் பயிலுவோர்களை நோக்கி.—

சுருதிக்கு அருத்தம் பொருளென்னும்
அவையும் சொல்லாய் முடிந்திடுமால்
சுருதிக் கருத்தம் பொருளாகில்
தூய குருவும் வேண்டுவதில்
சுருதிக் கருத்தம் பொருளல்ல
என்று துணிந்து மாணுநீ
சுருதி சொல்லும் பொருளதனைச்
சுட்டிக் காட்ட அறிவாயே!

என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

60 शालनीय न्यायः

శాలనీయన్యాయం

சாலநீய ந்யாயம்

61. चोरापराधेन माण्डव्यदण्ड न्यायः

చోరాపరాధేన మాండవ్యదండన్యాయః

சோரபராதேன மாண்டவ்யதண்ட ந்யாயம்

திருடர் குற்றத்திற்கு மாண்டவ்யர் தண்டனை பெற்ற ந்யாயம் என்பது இதன்பொருள். இந்த ந்யாயத்தோடு ஸம்பந்தப்பட்ட கதை மஹாபாரதம், ஆதி பர்வத்தில் காணப்படுகின்றது. ஒரு ஊர் அருகாமையில் ஒதுப்புறமாக ஒரு பர்ணசாலையில் மாண்டவ்யர் என்ற மஹரிஷி தவம்பண்ணிக்கொண்டு ஸமாதியிலிருந்தார். ஒருநாள் அவ்வூர் அரசன் அரண்மனையில் கொள்ளை போக திருடர்களைத் துரத்திக்கொண்டு ஸேவகர்கள் புறப்பட்டனர். வழியே கொஞ்சதூரம் ஓடிப்போய் திருடர்கள் குருக்குவழியில் விழுந்து ஓடத் தலைப்பட்டனர். அவர்கள் போனவழியில் மாண்டவ்ய ரிஷி ஆச்ரமம் இருக்கக்கண்டு அங்கு ஒளித்துக்கொண்டால் தம்மை ஒருவரும் பிடிக்கமாட்டார்கள் என்று எண்ணி அதனுள் புகுந்து மறைவான இடத்தில் சென்று ஒளித்துக்கொண்டார்கள். போகும் அவஸரத்தில் தாம் எடுத்துப்போன நகைகளில் சில மாண்டவ்ய ரிஷி முன்னிலையில் விழுந்து விட்டதை இவர்கள் கவனிக்க

வில்லை. துரத்திவந்த ஸேவகர்களும், திருடர்கள் போன வழி வந்து தாமும் அவர்கள் போலவே திரும்ப எதிரே இவர்களும் ஆச்ரமத்தைக் கண்டு அதனுள் புகுந்து பார்த்தனர். விழித்தகண் நிலைத்தபடி அசைவற்று ஒரு ரிஷி ஸமாதியிலிருப்பதையும்; அவர்முன் அரசன் வீட்டு நகைகள் சிதறிக்கிடப்பதையும் கண்டார்கள். ரிஷி விழித்திருக்கிறார் என்று எண்ணி 'இவ்வழியில் திருடர்கள் வந்தார்களா' என்று மஹா விநயத்துடன் எவ்வளவோ கேட்டுப்பார்த்தனர். மறுமொழி வரவில்லை. உடனே ஒருவேளை இவரும் திருடர்களுடன் கூட்டாக விருக்கலாம் என்று இவர் மௌனத்தால் மதித்து, ஆச்ரமத்தை சோதனை போட்டனர். திருடர்கள் அகப்பட்டுவிட ரிஷிமுன் நகைகள் கிடந்ததை இதனோடு சேர்த்து நோக்கையில் ரிஷியும் திருடர் கூட்டாளி என்று மௌட்டியமான ஸேவகர்களுக்குப்பட அவரையும் சேர்த்துப்பிடித்து அரசன் முன்பு கொண்டுவிட்டனர். என்னகேட்டும் மஹரிஷியிடமிருந்து மறுமொழி வாராமையால் அவரும் திருடர்களில் ஒருவரென்று அவஸரமாக அரசன் தீர்மானம்செய்துஎல்லோரையும் கழுவேற்றும்படி உத்தரவுசெய்தான். கழுவேறினதும் எல்லோரும் உடனே இறக்க ரிஷிமாத்திரம் உயிர்போகாது முன்போல மாறுபட்டமின்றி சாந்தமாகவிருந்தார். இதை அரசனுக்குத் தெரிவிக்க, அரசன் பயந்து ஓடோடியும் வந்து ரிஷியைக் கழுவிலிருந்து எடுத்துவிடும்படி உத்தரவுசெய்தான். இழுத்துப்பார்த்தால் ரிஷி மேலும் கீழும் அசையவில்லை உடனே அரசன் உத்தரவின்பேரில் கழுமரத்தை மேலும் கீழும் தரித்து ரிஷியைக் கீழே இறக்கினர், அவர்தேகத்துள் கழுவாணி தங்கிவிட்டபடியால் அவருக்கு அன்று முதல் ஆணிமாண்டவ்யர் என்ற பெயர்வந்தது. வேறு ஒருவர் செய்த குற்றத்திற்காக ஒரு அபராதமுமறியாத தனக்கு இக்கொடுந்தண்டனை வருவானேன், என்று இவர் யமதர்மனைக்கேட்டதில் 'நீர் இளவயதில் தட்டாரப் பூச்சிகளின் தேஹத்தில் முள்ஏற்றி அவைகள் துடிப்பதைக்கண்டு ஸந்தோஷித்துவந்தீர். அந்தப் பாபத்திற்காக நீர் தவம் செய்துகொண்டிருக்கையில் இந்தத் தண்டனை உமக்குவந்தது' என்று சொன்னான். இந்தக் கதையிலிருந்து ஏற்பட்டது இந்தந்யாயம்.

இந்த ந்யாய ரஹஸ்யத்தை உணர காகதாளீயம் கோமயகுக்ஷீர ந்யாயம் முதலியவைகளை ஞாபகத்திற்குக் கொண்டுவரவேண்டும். உலகில் நமக்கு வரும் ஸுக துக்க ரூபமான பலன்கள் எல்லாம் நாம் அவைகளுக்கு முன்னர் செய்துகொண்டிருந்த ஸத்கர்ம துஷ்கர்ம பலன்களல்ல. அந்த ஸமயங்களில் பலிக்க வேண்டிய நமது பிராரப்த கர்மபலன்கள்: ஆகவே முன்செய்த கர்ம மூட்டையில் இந்த ஜன்மத்தில் ஒழுங்காகப் பலன் தந்து தீரவேண்டிய கர்மத்தின் பலன்கள். ஆதலால் ராஜாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் காருண்யமான ந்யாயஸ்தலங்களில் ந்யாயாதிபதிகள் மிகுந்த ஜாக்ரதையுடன் ந்யாயம் விசாரித்து வரலாம். எல்லாவிஷயங்களிலும் உண்மையைக் கண்டுபிடித்து ந்யாயத்தை நிலைநிறுத்தி அநியாயத்தை தண்டனை முதலியவை மூலமாகத் தலை எடுக்கவொட்டாது செய்யவேண்டும் என்பதே அவர்கள் நோக்கம். அவர்கள் மனிதர்களாதலால் கூடியவரையில் நடந்ததை விசாரித்துத்தான் அதன்மேல் தமது தீர்ப்புக்களை வெளியிடவேண்டும். இவ்வாறு செய்வதில் ஒருபாபமும் அறியாத ஒருவன்மேல் பொய்க் குற்றம் ஸாக்ஷிமூலமாகச் சுமந்துவிடலாம். அந்த ஸமயத்தில் நல்லவன் சில கொடியவர்கள் குற்றத்திற்காக அவர்கள் சூதால் தண்டனைக்கு ஆளாகவேண்டி வரும். அவன் அப்பொழுதும் நல்லவனாகவே இருக்கவேண்டுமாயின், ராஜாங்கத்தார்மேல் குற்றம் சுமத்தாமல் தன்னை தண்டனைக்குள்ளாக்கியவர்களையும் வெறுத்துக் கொள்ளாமல் தன் கர்மத்தையே நொந்துகொண்டு அந்தத் தண்டனையை கடவுள்மேல் பாரத்தைப்போட்டு அனுபவித்தே தீரவேண்டும். இந்த மாண்டவ்யதண்ட ந்யாயம் அந்தப்பொறுக்கமுடியாத ஸமயங்களில் நமக்கு சித்த ஸமாதானத்தைக்கொடுத்து நமது மனோநிலை மாறாமலிருப்பதற்கு வேண்டிய ஸஹாயம்செய்யும். தற்கால நாகரீக கதியை உற்றுநோக்கில் ஸாதுக்களுக்குக் காலமில்லை என்றும், அஸாதுக்கள் ஓங்கித்தழைக்கும் தன்மையுடையதென்றும் வெளிவரும். இந்தக்காலத்தில் அநேக முகாந்திரங்களால் குற்றவாளியில்லாதவன் குற்றம் சுமத்தப்பட்டு தண்டனைக்கு உள்ளாகும்படி நேரிடும். இந்த ஸந்தர்ப்பங்களில் எல்லாம் இந்யாய பலம் உபயோகப்படும்.

II. மொழிபெயர்ப்பு விளக்கம்

TRANSLATION MODELS

The Secret in Conversation.

When two persons, say Rama and Krishna are talking there are at least six persons taking part in that dialogue. If these are not distinctly recognized, it is natural that among these there should be more or less confusion and misunderstanding. The six persons are the following. Three Ramas are:—the real Rama known only to his Maker, Rama's ideal Rama never the real

one and often very unlike him, Krishna's ideal Rama never the real Rama nor Rama's Rama but often very unlike either. So also there are three Krishnas namely: The Real Krishna, Krishna's ideal Krishna, Rama's ideal Krishna. Let us suppose the real Rama to be old, dull and ill looking, Rama very possibly thinks him self to be youthful witty and fascinating : and talks from this point of view. Krishna again believes him to be an artful rogue and so far as his connection with conversation is concerned Rama is an artful rogue though he is simple and stupid. The same conditions apply to the Krishnas. It follows that until a man can be found who knows himself as his maker knows him, or who sees himself as others see him, the two disputants would often get angry not knowing that there are six of them talking and listening at the same time.

ஸம்பாஷண ரஹஸ்யம்

ராமன் கிருஷ்ணன் என்ற இருவர் பேசுவதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த ஸம்பாஷணையில் குறைந்தது ஆறுபேர்கள் கலந்திருக்கிறார்கள். இவ்வறுவரையும் நன்றாகப் பகுத்தறியாவிடில் சற்றேறக் குறைய குழப்பம் மனஸ்தாபம் முதலியன ஏற்படுவது இயற்கையே. அறுவர் பின் வருபவர்களே. படைத்த கடவுளுக்கே தெரிந்திருப்பவனான உண்மையான ராமன் ஒருவன் : ராமன் பாவனையிலுள்ள ராமன், உண்மை ராமனைப் போன்றிராது ஸாதாரணமாக அதை விட்டு மாறுபட்டே இருப்பவனாகிய இவன் இரண்டாமவன் : கிருஷ்ணன் பாவனையிலுள்ள ராமன், இவன் முன்னவர்கள் போலில்லாது மூன்றாவது விதமாக இருப்பவனாகி மூன்றாமவன். இம்மாதிரியே கடவுளுக்கே தெரிந்த உண்மை கிருஷ்ணன் !, கிருஷ்ணன் பாவனையிலிருக்கும் கிருஷ்ணன் ! ராமன் பாவனையிலுள்ள கிருஷ்ணன் !!! என மூன்று கிருஷ்ணர்களும் உண்டு. உண்மையில் ராமன் கிழவன், மந்தன், அழகில்லாதவன் என்று வைத்துக்கொள்ளுவோம். வெகுவாக ராமன்தான் யௌவன புருஷன் சாதுர்யமாகப் பேசுபவன், மன்மதன் என்று மதித்துத்தான் பேசுவான். கிருஷ்ணன் ஒருவேளை இவனைக்கபடி என்ற எண்ணத்தின்பேரில் ஸம்பாஷணையில் ஸம்பந்தப்பட்டவரையில் ராமன் ஒரு சூதுமறியாத அசடாகிலும் திருடன் என்றே மதித்திருப்பான். இம்மாதிரியேதான் கிருஷ்ணனைப்பற்றிய விஷயமும். ஒருமனிதன் கடவுள் தன்னை மதிப்பதுபோலவாவது அல்லது பிறர் தன்னை மதிப்பதுபோலவாவது தன்னை உணரும் திறனுடனிருந்தால் அல்லது வாதம் செய்யும் இருவர், ஆறு பெயர்கள் பேசியும் கேட்டும் கொண்டிருக்கின்றனர், ஒரு ஸம்பாஷணையில் ஒரே காலத்தில் என்று உணராது கோபங்கொண்டு தத்தளிப்பர்.

புதிய தமிழ் அகராதியின் விவரம்.

THE PROPOSED TAMIL DICTIONARY

சென்னை யூனிவர்ஸிடியார் லக்ஷரூபாய் செலவழித்து, ஒரு புதிய தமிழ் அகராதி ப்ரசுரம் செய்ய உத்தேசித்திருக்கிறார்களென்பதும், அதைச் செய்துமுடிக்க கவர்மெண்டாரால் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறதென்பதும், நமது நேயர்கள் அறிவார்கள். அந்த கமிட்டியின் சேர்மனான ரெவரண்ட் ஜே. எஸ். சாண்ட்லர் எமக்கு அனுப்பியிருக்கும் விளம்பரம் பின் வருமாறு:—

இந்த அகராதியில், தமிழ்ப்பாஷையில் வழங்கும் எல்லாச் சொற்களும், அவற்றின் எழுத்துச் சேர்க்கை, உற்பத்தி, வெவ்வேறான பொருள்களுடனும், பிரயோகங்களுடனும், ஆராய்ச்சி செய்யப்படும்.

விஷயங்களுக்கு விரிந்த விவரங்கள் காட்டிச் சொல்வது, "என்ஸைக்லோபீடியா" போன்ற நூல்முறைக்கே உரியதாம். ஆதலால், பதப்பொருள்களையே பெரும்பான்மை விளக்குதற்குரிய, அகராதி முறைக்கு அவ்விவரங்கள் ஏற்றன ஆகா.

இவ்வகராதி சித்தப்படுத்துவதில் எங்கள் நோக்கங்கள் அடியில் வருமாறு:—

(a) தற்காலத்தில் கிடைக்கக்கூடிய நூல்கள் முதலிய சாதனங்களை நன்கு ஆராய்ச்சி செய்து அவற்றை உபயோகித்தல்.

(b) இதுவரை கிடைக்கப்பெறாத கையெழுத்துப் பிரதிகளிற்கண்ட அருஞ் சொற்களைச் சேர்த்தல்.

(c) இதுகாறும் கவனிக்கப்படாதிருந்த பழைய உயர்தரக் காவியங்களினின்றும் பொருள்களை விளக்கிக் காட்டுதல்.

(d) தவறாகக்கண்ட பொருளமைதிகளைத் திருத்தஞ் செய்தல்.

(e) தமிழ் நாட்டாரது தற்காலப் பேச்சு வழக்கில் உள்ள புதிய பதங்களைச் சேர்த்துக்கொள்ளுதல்—என்பவைகளாம்.

மேற்கூறியவற்றைச் செய்து முடிப்பதில் தமிழ்ப் பண்டிதர் அனைவரும், தமிழ்ப்பாஷையின் அபிவிர்த்தி கருதி ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களும் ஒத்துழைத்து, இவ்வரிய பெரிய காரியத்தை நிறைவேற்றிவைக்க விரும்புகிறோம்.

இவ்வாறு உதவி வேண்டி, மதுரை, தஞ்சை, சிதம்பரம், சென்னை, யாழ்ப்பாணம்,—இந்நகரங்களிலுள்ள

தமிழ்ச் சங்கங்களையும், பாளையங்கோட்டைச் சைவ சபையையும்,—தத்தம் பக்கங்களில் வழங்கும் கீழ்க்குறித்த விஷயங்கள் பற்றிய பதங்களை, அவற்றின் சரியான பொருள் விவரங்களுடன், சேகரித்து எங்கட்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அவ்விஷயங்களாவன :—

(1) ஜாதிகளும் அவற்றின் வெவ்வேறு உட்பிரிவுகளும், வழங்கும் விசேட பதங்கள்.

(2) குலாசாரங்கள், அவ்வவ் இடங்கட்குச் சிறப்பாகவுள்ள வழக்கங்கள்.

(3) தொழில்கள், ஆயுதவகைகள், பாத்திரங்கள் முதலியன.

(4) மருத்துவ முறைகள், மூலிகைகள் முதலியன.

(5) சங்கீத சம்பந்தமாகவும், ஏனைய சாஸ்திர சம்பந்தமாகவும் உள்ள விசேஷ பதங்கள்.

(6) மதங்களின் பல்வகை விரதாநுஷ்டானங்கள், மதக்கொள்கைகள்.

(7) கையெழுத்துப் பிரதிகளிலும் மற்ற வகைகளிலும் கண்ட அகராதி யமைப்பிற்கு வேண்டிய ஏனைய சாதனங்கள்—என்பவைகளாம்.

இவற்றோடு, தமிழ்ப் பாண்டித்தியத்திற் சிறந்த வித்வான்கள் சிலரை, இக்கமிட்டியின் "கௌரவ—வித்வத் அங்கத்தவர்" ஆகத்தேர்ந்தெடுத்து, உரிய காலங்களில் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டுக்கொள்ளவும் தீர்மானமாயிருக்கிறது.

இவ்வண்ணமாக, வின்ஸ்லோ, ராட்லர், போப், கதிரைவேற்பிள்ளை முதலிய பண்டிதர்களால் முன்னமே செய்யப்பட்டுள்ள பெரிய காரியங்களை மேலுந் தொடர்ந்து நடத்திச் சிறப்பிப்பதில், தமிழ் நாட்டார் எல்லாரும் தங்கட்குப் பாத்தியமுள்ளதாகவே எண்ணி வேண்டிய உதவி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

J. S. CHANDLER.

திவ்யஜ்ஞானத்தின் ரக்ஷகசக்தி.—பாதரக்ஷையில்லாமல் வெறுங்காலுடன் முள்ளிலும் கூரிய கல்லின் மேலும் நடக்க எவன் துணிவான்? திவ்யஜ்ஞானமென்னும் பாதரக்ஷையை யணிந்துகொண்டால் எந்த முள்ளேனும் கூரிய கல்லேனும் உனக்கு என்ன கெடுதி செய்யமுடியும்?

—உபதேசரத்நமாலை.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

நந்தன் சரித்திரம்

2. திருப்புன்கூர்ச் சருக்கம்

அல்லது

நந்தன் பக்தி ஒன்றுபட்டது

நந்தன் பக்தியில் ஈடுபட்டுக் கலந்து அவன் படும்பாடுகளைக் கண்டு உருகி ஒற்றுமைப்பட்டிருந்த தோழர் ஸுமார் பதினொரு பெயர்கள் இருந்தனராம். அவர்கள் பெயர் இன்னதென்று தெரியவரவில்லையாயினும் கோபாலகிருஷ்ண பாரதிகள் அவர்களுக்கு அறவன், தொந்தி, ஆனையேறி, முத்துமாறி, கழனிகாத்தான், பாச்சலூரான், ஆண்டிசேவகன், சொறியன், வெறியன், காணியான், எல்லைச்சுற்றி என்ற பெயர்களை அமைத்திருக்கின்றனர். அடிக்கடி இவர்களிடம் கடவுள் சிறப்பு அருள் இவைகளைப்பற்றி நந்தன் இடைவிடாது பேசுவான். நந்தன், தன்மேலும் அவர்கள்மேலும் விபூதிபூசுவான் அடிக்கடி. இப்படி இருக்கையில் ஒருநாள் வயலில் அதிக வேலையில்லாமல் போக ஒழிவு ஏற்பட்டது. இவர்கள் ஒரு யஜமானர் கீழ் அடிமைகளாதலால் அவருக்குத் தமது காரியங்கள் தெரிந்தால் என்ன செய்வாரோ என்று பயந்து ஒருவருக்கும் தெரியாமல் நந்தனும் அவன் தோழர்களும் அருகாமையிலிருந்த பழைய வைத்தீச்வரன் கோயில் என்று வழங்கி வரும் திருப்புன்கூர் கோயிலுக்கு ஸ்வாமி தர்சனம் செய்யப்போயினர்.

திருப்புன்கூர் சிவலோகன்
    சேவடிகள் மிகநினைந்து
விருப்பினொடும் தம்பணிகள்
    வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினால் ஒருப்பட்டங்
    காதனூர் தனினின்றும்
வருத்தமுறு காதலினால்
    வந்தவ்வூர் மருங்கணைந்தார்.

என்றார் சேக்கிழார் ஸ்வாமிகளும்.

முதலில் அவ்வூர் வீதியை அன்பு மிகுதியால் மூன்று தரம் வலம் வந்தனர் அவர்கள். அடிக்கடி விபூதி பூசிக்கொண்டு சிவநாமங்களை வாயார கூவி வந்தனர். நந்தன் பக்திபரவசமாகி கண்ணீர் ததும்ப ஆடிப் பாடத் தொடங்கிவிட்டான். ஸூர்யாஸ்தமன காலத்தில் கோயில் கதவு திறக்க அர்ச்சகரிடம் தான் கொண்டுவந்திருந்த தேங்காய் பழம் தோல்முட்டை முதலிய பகவத் அர்ப்பண பதார்த்தங்களை அனுப்புவித்தான். அவனும் அவன் தோழர்களும் கோயிலுக்கு வெளியிலிருந்துகொண்டு உள்ளிருந்த திவ்ய மங்கள விக்ரஹத்தை ஒருவாறு தரிசித்தனர். அப்

பெருங்கோயிலில் உள்ள ரஹஸ்யம் நிறைந்த தேஜோமயமாக விளங்கிய மூலஸ்தான லிங்கத்தை தூரத்திலிருந்து தர்சித்தபோதிலும் முதல்தரம் கண்டவுடன் தோழர்களுக்கும்,முக்யமாக நந்தனுக்கும்,ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. கண்டாமணியோசை, பரிசுத்தமான பக்தர் திருக்கூட்டம், வேதம், தேவாரம் முதலியவைகள் கோஷம், பூஜை, கற்பூரஹாரத்தி, தீபாராதனைகள், இவைபோன்ற கோயில் நித்யவிதிகள், இவைகளுக்கு அப்பாற்பட்டு முடிவாக நிற்பதும் தன் ஸந்நிதான விசேஷத்தால் அவ்விடமெல்லாம் ஒருவித பரிசுத்தம் பயபக்தி முதலியவைகளைக் கிளப்பிக்கொண்டிருப்பதுமான சிவலிங்கம் ஆகிய இவைகள் எல்லாம் அவன் எதிர்பார்த்த சிறப்புக்களைவிட அதிகமாகிவிட அவன் மனோபாவம் இந்த தர்சன விசேஷத்தில் ஈடுபட்டுப் பதிந்துவிட்டது. இங்குதான் நந்தனது பறைய ஜன்மம் உதவியாகவிருந்தது: அடிக்கடி இம்மாதிரியான தர்சனங்களை உள்ளே சென்று செய்து பழகியிருந்த ப்ராஹ்மணர்கள் மனதைவிட நந்தன் மனம் நன்றாகக் கனிந்துவிட்டது.

இந்தக் கோயிலுள் முற்றிலும் விளங்காத ஒரு பெரு விஷயம் அடங்கியுள்ளது என்றும், இதுவரையில் அனுபவித்தறியாத பயபக்தி ஒன்று தனக்குள் கதித்தெழுகிறதென்றும் உணர்ந்தான் நந்தன். தனக்குப் புதிதாயும் தன் உள்ளம் கவர்வதாயுமிருந்த அந்தத் தர்சன விசேஷத்தை மிகுந்த ஆவலுடன் மனதாரப் பருகினான். ஆனந்தக்கண்ணீர் ஆறாக ஓடியது. பக்தி பரவசத்தால் கடவுளிடம் அவனுக்கு ஏற்பட்ட ஸம்பந்தம் வரவர நெருங்கிக்கொண்டே வந்தது. முடிவில் அவன் த்யானத்தில் முற்றிலும் முழுகிவிட எண்ணம் எல்லாம் அங்கு ஏற்பட்ட அனுபவத்தில் மறைந்துவிட்டன. அப்பொழுது அவனைக் கண்டவர்கள் எல்லாம் அவன் பக்தியின் திடம், த்யான அழுத்தம், பறையனாகப்பிறந்தும் அவன் முகத்தில் விளங்கிக்கொண்டிருந்த தேஜஸ் எல்லாவற்றையும் கண்டு ஆச்சர்யபரவசர்களாகிவிட; அவன் பக்தி பரவசநிலையிலிருந்து விழிக்கும் முன் அவனைச்சுற்றி அவன் சிறப்பில் ஈடுபட்ட அநேகர் கூட்டங்கூடியிருப்பதைக் கண்டான். இந்த உண்மை ஆராதனத்தின் சிறப்பு அப்பொழுது அதிகமாக விருக்க திருப்புங்கூர் ஸ்தலபுராணத்திலேயே இந்த நந்தன் ஸேவை ஒரு முக்யமான விஷயமாகி அந்தக்கோயில் சிறப்பை அதிகப்படுத்திவிட்டது. இவ்விஷயத்தை

சீரேறு மிசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் எனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறும் எயில்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
பேரேற்றை விலங்கவருள் புரிந்தருளிப்புலப்படுத்தார்.

என்று வர்ணித்தார் சேக்கிழார் ஸ்வாமிகள். இதற்கேற்ப இன்றைக்கும் இந்தத் திருப்புன்கூர் க்ஷேத்திரத்தில், எல்லாக் கோயிலிலுமிருப்பதுபோல நந்தி லிங்கத்தின் முன்னர் இல்லாது ஒருபுறம் விலகியே இருக்கின்றது

நந்தி விலக நந்தனுக்குத் தர்சனம் கிடைத்த விஷயத்தைக் கோபாலகிருஷ்ண பாரதிகள் பின்வருமாறு எடுத்து வெளிப்படுத்துகின்றனர். ‘ சிவலோகநாதனைக் கண்டு ஸேவித்திடுவம் வாரீர் ’ என்ற கீர்த்தனையால் நந்தன் சேரியிலுள்ளோரைக் கூப்பிடுவதையும், திருப்புங்கூர் சென்று தரிசனங் கிடைக்கவொட்டாமல் நந்தி படுத்திருப்பதைக் கண்டு ஏங்கியதை :—

சிவலோக நாதன்திருச் சன்னிதானம்
மலையாகிய நந்தி மறைத் திடுதிங்கே
பலகாலஞ் செய்தபாழ் வினைகுவிந்து
மலையாகி யிப்படி மறைத்ததோ வென்றார்.

என்ற சவாயியாலும்

வழி மறைத் திருக்குதே மலைபோல—ஒரு
மாடு படுத்திருக்குதே

என்ற கீர்த்தனையாலும், விளக்கி, ‘ சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம் ’ என்ற கீர்த்தனையால் சிவன் நந்தியை விலக உத்திரவு செய்து, ‘ மற்றதெல்லாம் பொறுப்பேன் ’ என்ற கீர்த்தனையால் பரமசிவன் நந்தியை அவஸரப்படுத்தி விலகச் செய்ததையும்,

துதித்தார் எக்கலித்தார்—உள்ளங்களித்தார்
பள்ளுப்பாடினார்—கண்ணீர்வடித்தார்—பற்களைக்க
ஒருதரம் துடித்தார்—இருதரம் நடித்தார். [டித்தார்
இப்படி தெரிசனம் செய்தார்—நந்தனார்—தரிசனம்
செய்தாரே என்ற கடுக்காவால் நந்தன் தர்சனம் செய்த விதத்தையும்,

‘நட்டமாக சன்னிதானங் கண்டு, துடை தட்டினார்-
கை—கொட்டினார, ‘ தெரிசனம் செய்தாரே—
நந்தனார்—தரிசனம் செய்தாரே ’ என்ற இரண்டு கீர்த்தனைகளால் கடுக்காவின் கருத்தை விஸ்தாரமாக வெளிப்படுத்தியும் வெகு அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றது.

நந்தன் பக்திபரவச நிலையிலிருந்து வெளிப்பட்டதும் தன்னைச்சுற்றி கூடியிருந்து ப்ராஹ்மணர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் தீர்க்கதண்டம் ஸமர்ப்பித்து தன் தோழர்களுடன் மறுபடியும் அவ்வூர் வீதியை வலம்வரத் தொடங்கினான். இவ்வாறு இவன் மன உருக்கத்துடன் வலம் வருகையில் ஒரு கோடி வீட்டுவாயில் திண்ணையில் ஒரு சாஸ்திரிகள் அநேக ச்ரோதாக்களுக்கு சிதம்பர புராணம் வாசித்துக்கொண்டிருந்தார். நந்தன் அந்த வீட்டருகில் வரும்பொழுது ‘ சிதம்பரம் மஹாபரிசுத்தமான விடம். திவ்ய க்ஷேத்ரம். அந்தூர்க் கோயிலில் சென்று ஒருதரம் தர்சித்துவிட்டால் போதும், அவ்வாறு செய்பவன் சண்டாளனாயினும் ஜனனமரண ஸம்ஸார ஸாகரத்தை ஒரே அடியாகத் தாண்டிவிடுவன், மறுபடி இதனுள் அகப்படமாட்டான் ’ என்று ப்ராஹ்மணோத்தமர் சொல்லிக்கொண்டிருந்தார். உடனே கோயில் வர்ணிப்பு, அங்குள்ள விஷய அமைப்புக்களின் உட்கருத்து எல்லாவற்றையும் வர்ணிக்கத் தொடங்கிவிட்டார்.

221

ஸ்தல புராணங்கள் அமைந்த விடங்களில் மிகச் சிறந்தவையான ஸ்தலங்களுள் சிதம்பரம் ஒன்று. வைஷ்ணவர்களுக்கு ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், திருப்பதி ஆகிய மூப்பதியும் எவ்வளவு சிறந்தனவோ அதுபோலச் சைவர்களுக்குச் சிறந்தது இந்த ஒரு ஸ்தலம். பஞ்சபூதங்களை ப்ரதீகைகளாக அமைத்துக் கடவுளை ஆராதிக்கப்படும் திவ்ய ஸ்தலங்களுள் இது ஒன்று. இங்கு ஸூக்ஷ்மபூதமாகிய எல்லாவற்றிற்கும் ஆதாரமான ஆகாசம் ஸம்பந்தப்பட்டது. கடவுளைப் பஞ்சபூதங்களோடு பொருத்தி ஆராதிப்பது பூரணமான வைதிக ஆராதனம். ப்ரபஞ்சம் இந்தப் பஞ்சபூதக் கலப்பால் ஏற்பட்டு விசித்ரமாகப் பரவிக் கிடப்பதால் இதில் பரம்பொருளைக் கண்டு தெளிவதற்குப் பஞ்சலிங்காராதனம் மிகுந்த உதவியாக விருக்கும். ஸூக்ஷ்மமாக ஆராயுங்கால் சிதம்பரத்தில் ஆராதிக்கப்படும் ஆகாயம் ப்ரகிருதி சாஸ்திரிகள் ஊஹித்துணரும் பூதாகாயம் அன்று. தேசகாலாதீதமான அகண்ட ஆத்மாகாயமே.

சிதம்பரம் என்ற பதத்திற்குப் பொருளே ஞான ஆகாயம் என்பதுதான். அந்த ஊர்க்கோயிலுக்கும் வெறும் கோயில் என்றே பெயர் : ஒப்பற்ற கோயில் என்பது பாவம். வைஷ்ணவர்கள் கோயில் என்று ஸ்ரீரங்கத்தை அழைப்பதும் இதே அர்த்த பாவத்துடன்தான். இந்தக் கோயில் மத்தியில், தங்க ஓடு இட்ட சித்ஸபை என்ற மண்டபம் ஒன்று உண்டு. பதப்படி இதற்கு ஞானஸபை என்று பொருள். இதில் நடராஜர் தாண்டவம் காணப்படும் ; பின்னர் ரஹஸ்யம் என்பது அமைந்துள்ளது. அது என்ன ரஹஸ்யம்? ராஜவித்ய ராஜ குஹ்யமாகவிருக்கும் ஆத்மாவின் நிர்குண நிர்வாண நிலையைத்தவிர வேறொன்றுமன்று.

மானிடர்க்குத் தெரிந்த மனிதரூபமான விக்ரஹங்களுள் நடராஜவிக்ரஹமே மிகச் சிறந்தவைகளுள் ஒன்று. இதையே தாயுமானவரும், ‘ஸமயாதீதப் பழம்பொருளைக் கைவந்திடவே மன்றுள் வெளிக்காட்டும் இக்கருத்தை’ உடையது இந்த நடராஜவிக்ரஹம் என்றும், ‘ கருதரிய சித்ஸபையில் ஆனந்தநிருத்தமிடும் கருணாகரக்கடவுளே ’ என்றும் கூறியிருக்கிறார், மற்ற ஊர்களில் இருக்கும் விக்ரஹங்கள்போலச் சிதம்பரம் நடராஜ பிம்பம் இருந்தபோதிலும், பார்த்ததும் எல்லாவற்றையும்விட மிக பக்தி உருக்கம் முதலியன உண்டாக்கத்தக்கதாகஅமைந்துள்ளது. வெறும் உருவமாகப் பார்த்தபோதிலும் இதைப்போலக் குற்றமற்றதாயும், உயிருடனிருப்பதுபோலவும், அழகாயும் அமைந்துள்ள விக்ரஹங்கள் அதிகமில்லை. தீக்ஷிதர் முடிச்சுப்போல முடிப்பு அமைந்த மிருதுவான சுருண்டமயிர், நீண்டு அழகிய மூக்கு, உயிரோடிருப்பதுபோன்ற தோற்றத்தை உண்டாக்கிக் கருணாரஸம் காட்டும் கண்கள் ; கம்பீரம், ஆனந்தம், கருணை முதலிய வெளிப்படுத் தாண்டவமாடும் அந்த முகம், கைகள் வளைவு, அவைகள் ஆபரணங்கள், நடன உருவம், கடைசியாகப் பக்திபுகட்டும் குஞ்சிதபாதம் எல்லாம் நான் எழுதும்போது என்முன் தோற்றுகின்றன. இந்த விக்ரஹபரீக்ஷையுடன் அதன் அந்தர ரஹஸ்யமாகிய பின்வரும் கருத்தும் கலந்துவிட்டால் கேட்கவேண்டுமா ! ஒரு வலது கையிலுள்ள (உடுக்கு) விருந்து எண்ணிறந்த உலகங்கள் நெருப்பிலிருந்து பொறிபோலவும், ஜலத்திலிருந்து குமிழிகள்போலவும், கதித்தெழுந்து வெளிப்படுகின்றன என்றும், ததாஸ்து என்னும் அபய ஹஸ்தமாகிய மற்றைய வலது கையிலிருந்து உலகம் ஒழுங்கு தவறாது, குற்றங் குறைவில்லாது ஒரு முறைப்படி நடத்தப்படுகின்றது என்றும், ஒரு இடது கையிலிருக்கும் அக்னியிலிருந்து சக்தி ரஹஸ்யம் முதலியவை வாய்ந்த நக்ஷத்திரம், மலை, ஸமுத்திரம் எல்லாவற்றையும் ஆடிக் காற்றிலகப்பட்ட இலவம்பஞ்சுபோலப் பறக்க ஆடிக்கும் திறனுடையது ஸம்ஹார சக்தி என்றும், ஊன்றிய வலது காலிலிருந்து உண்மையை கற்பகோடிகாலம் நம்மிடமிருந்து மறைக்கும் திறனுடையது விசித்ர மாயசக்தி என்றும், முடிவாகக் குஞ்சித பாதத்திலிருந்து நம்மை இவைகளிலிருந்து விடுவிப்பதும், தண்ணிழலால் தன்னை ஆவலுடன் தேடிவருபவரை ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிய மாயத்திலிருந்து விடுவித்து ஆனந்தப்படுத்துவதுமானது கடவுள் அருள் என்றும், குறிப்பாக உணர்ந்துவிட்டால் மனம் பரவசமாகாமலிருக்குமா? இக்கருத்தைக் குமரகுருபர ஸ்வாமிகளும்,

‘ பூமலிக் கற்பகம் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நாநிலவளாகமும்

ஏனைய புவனமும் எண்ணிங் குயிரும்
தானே வகுத்தது உன் டமருக கரமே.

தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பது உன் அமைத்த கைத்தலமே.

தோற்றுப கின்ற அத்தொல்லுல கடங்கலும்
ஆற்றுவது ஆரழல் அமைத்ததோர் கரமே.

ஈட்டிய வினைபயன் எவற்றையும் மறைந்துநின்
றூட்டுவதாகும் நின்னூன்றிய பதமே.

அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வாநின் குஞ்சித பதமே.

இத்தொழில் ஐந்தும் நின்மெய்த்தொழில்
என்று வெளியிட்டிருக்கிறார்.

இம்மாதிரியாக ஈடுபட்டு அப்பர், மாணிக்கர், பட்டினத்தார் தாயுமானவர் முதலியோர் ஸாதாரணப் பழக்கமாகிய ஸாரமற்ற வசனநடையை மறந்து அற்புத கற்பனாரஸம் ஒழுகும்படியானதும் இதுவரையில் தமிழில் அமைந்திராததுமான இனிமையான தமிழ் பாமாரிகளை சொரிந்தது ஒரு ஆச்சர்யமா ?

கபடநாடக ஸூத்திரதாரியான நடராஜர் விக்ரஹத்துள் அமைந்திருக்கும் ஆனந்தநடனம் தென்னிந்தியாவில் வைஷ்ணவர்கள் அல்லாத கவிகள் தத்வஞானிகள் இவர்களால் மிகக் கொண்டாடப்படும் அற்புத விஷயம். அசைவால் நிறைந்துள்ள இவ்வுலகில் எங்கு

ந்து அசைந்து தொழிற்பட்டாலும் அங்கெல்லாம் நடராஜர் தாண்டவ மாடுகிறார் என்பதே அவர்கள் துணிபு. குழந்தைகள் விளையாட்டு, பெண்கள் ஆனந்தம், ஜாதியார்கள் சண்டைகள், அண்டகோடிகள் உருண்டோடுவது, பூகம்பம், பெருநெருப்புப் பரவுதல், ஜலப்ரளயம், நீர்த்துளி, மலைவீழ் அருவி ஆகிய இவைபோன்ற எல்லாவிடங்களிலும் நடராஜர் ஓயாத ஆனந்தத்தாண்டவ வைபவம்தான் வெளிப்படுவது. வேதாந்திக்கோ பரம நிலையேதான் ஸம்மதமாகும். அவன் பாவனையில் நடராஜர் பரிபூர்ண ஆத்மஸ்வரூபத்தைக் குறிக்கிறார். இந்த ஆத்மாவினிடமிருந்து உலகவாழ்க்கை, பரபரப்பு எல்லாம் கிளம்புவது. இந்த விக்ரஹத்தின் நடனம், மாயையாகிய வெளிப்ரபஞ்சம் காமக்ரோதாதி கொடுங்குணங்களாலாகிய உட்ப்ரபஞ்சம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டிருக்கும் ஆத்மாவின் ஆனந்த நிலையை உணர்த்தும். இம்மாதிரி பரமரஹஸ்ய உட்பொருளைப் பின்பற்றியேதான் கருணாகரக் கடவுளே என்ற மகுடமுடையனவும், ஆகாரபுவனம் சிதம்பரம் ரஹஸ்யம் என்று தொடங்குவனவுமான உபநிஷத்துக்கள் போன்ற அருட்பாடல்களை மஹானாகிய தாயுமானவர் அமைத்திருக்கிறார்.

சிதம்பர புராணத்தில் ஒரு அத்புத விஷயம் மாத்திரம் உண்டு. அது பதஞ்சலி யோகத்தாலும், வ்யாக்ர பாதர் பக்தியாலும் நடராஜரை அடைந்தார் என்பது தான். இதனால் யோகமும் பக்தியும், மோக்ஷம் சேர்க்கும் வழிகளே. இவைகள் கலப்புபேதங்களால் ஏற்பட்டிருக்கும் மதங்கள் எல்லாம் அவ்வவைகளுக்கு ஏற்றபடி பரமபதம் சேர்க்கும் வழிகளே என்ற கருத்தையே இன்னும் உறுதியாக வற்புறுத்த அதே கோயிலுள் நடராஜர் கோவிலுக்கு அருகாமையில் கோவிந்தராஜ பெருமாள் கோவில் ஒன்று அமைந்துள்ளது. இதனால் வைஷ்ணவர்களுக்குக்கூடச் சிதம்பரம் ஒரு திவ்யஸ்தலம்தான். (இதன் விஸ்தாரத்தை விக்ரஹரஹஸ்யம் ஆநந்த நடேசர் என்ற பெயருள்ள விவேக போதினி 4-ம் தொகுதி 426-ம் பக்கத்தைப் பார்க்க.)

இம்மாதிரியான விஷயங்களை சிதம்பர புராணம் வாசித்துக்கொண்டிருந்த ப்ராஹ்மணர்/ரஸமாக வாரிச் சொரிந்துகொண்டிருக்க, எல்லாவற்றையும் அமைதியுடன் நின்று கேட்டான் நந்தன். மந்திரம் போட்டாற்போல நந்தன் மனம் ஈடுபட்டு விட்டது. சிதம்பரம் போகவேண்டுமென்ற ஆவல் வர, அன்றிரவே அருகாமையிலிருந்து சிதம்பரம் போய்வர வேண்டும் என்று தோன்றிவிட்டது. 'சிதம்பரம் கோயில், நீ போவதற்கு முன் சாத்தியாகி இருக்காதா? மேலும் நம் ப்ராஹ்மணருக்கு அடிமை யல்லவா. நீ உன் நிலையை நீ இப்படிமறந்துவிடுவது ந்யாயமா? நாம் இங்கேயே அதிக நாழி தங்கிவிட்டோம், இனிமேல் நிற்பது நமக்குக் கேடுதருமல்லவா?' என்று பலவிதமாக வாதம் செய்து மிகுந்த கஷ்டத்தின்பேரில் அவனைப் போகவொட்டாது தடுத்தார்கள் அவன் தோழர்கள். இதே நிலையில் ஸாதாரணப்பறையன் ஒருவனிருந்திருந்தால் 'அந்தப் பாப்பான் சாமிவிட மேலோடா? அவனைநான் கவனிக்கமாட்டேன்! என் வழியேதான் போவேன்' என்று எடுத்தெறிந்து கூறியிருப்பான். ஆனால் நந்தன் மிகுந்த வணக்கத்துடன் 'ஸரி! நீங்கள் சொல்வது உண்மையே! என்னை அடிமையாக வைக்க வேண்டும் என்று கடவுள் கருணைகூர்ந்திருக்கிறார். எனக்கு நன்மை இன்னது என்பது என்னைவிடக்கோடிமடங்கு நன்றாகத் தெரியும் அவருக்கு. அவர் கோயில் சென்று தரிசித்து ஆராதிப்பதை அவர் ஆஞ்ஞைக்கு உட்பட்டு நடப்பதே மேலானது. என் ப்ராஹ்மண யஜமானர் காலில் விழுந்து நல்ல வழிகளில் என்றால் கூடியமட்டும் திருப்திபடுத்துவேன். கூடிய சீக்கிரத்தில் சிதம்பரம் போக அவர் அனுமதி கொடுப்பார்' என்று மறுமொழி கூறினான். பின்னர் தன் தோழர்களை அழைத்துக்கொண்டு வீடு வருமுன் திருப்பன்கூரில் ஒரு குளம் வெட்டி முடித்தான்.

நந்தன் செய்த வேலை மிக அற்புதமாக விருந்தது. இப்படிப் பறையர்கள் சேர்ந்து பரோபகாரமாகக் குளம் வெட்டி முடிப்பது புதுமையல்லவா? முடியாத காரியத்தை இவர்கள் செய்த விதத்தைத் திருப்புன்கூர் ஸ்தலபுராணம் பின்வருமாறு சிறப்பித்துக் கூறும். தன் தகப்பனாரான பரமசிவ பக்தனாகிய நந்தனாரைத் 'திருப்திப்படுத்த மஹாகணபதி வேலையாள் உருவமாக வந்து குளத்தை வெட்டி ஒரே ராத்திரியில் முடித்துவிட்டார் என்று கூறும்.

ஆராய்ந்து பார்க்குங்கால் பக்தி செய்யும் காரியம் மிக அத்புதமாகவே இருக்கும். நந்தன் பக்தி மிகச் சிறந்ததல்லவா? கோயிலுள் தேங்காய் பழம் முதலியவைகளை ஏராளமாக எடுத்துப்போகையில் வழியிலிருக்கும் பிச்சைக்காரருக்கு ஒரு காசுகூட கொடுக்க மனம் வாரா பக்தசிகாமணிகள் அன்பைப் போன்றதா நந்தன் மனோதர்மம்? எல்லோரும் கடவுள் குழந்தைகள் என்று நந்தன் மனதில் தோற்ற, கோயில் பேரிகைகளுக்குத் தோல், பூஜைக்குக் கோரோசனை முதலியவைகள் கொடுப்பதையும்விட எல்லோருக்கும் உபகாரமாக உழைத்துத் தொண்டு செய்வது மிகச் சிறந்தது என்று பட்டுவிட்டது. இந்த ஆவலுடன் பகவத்கைங்கரியமாக எண்ணி அக்குளத்தை வெட்டிவிட்டு ஆதனூருக்குத் திரும்பிவிட்டான் நந்தன் தன் தோழர்களோடு.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சாந்தை அல்லது பொறுமையினிலை

2. ஒற்றியுரைத்த காதை

உத்துல்லன்.—வெகு ஆவலுடன் நான் சொல்வதைக் காதாரக் கேட்டு பேரானந்த மடைவாள். கடும்பசியுடன் வருந்துபவள்போல க்ஷணநேரத்திற்குள் அநேக கதைகளைக் கேட்க ஆசை கொள்வாள். இதை எல்லாம் கண்ட நான் ஓர் நல்ல ஸமயங் கண்டு, "உங்களிடம் அங்கு மிங்குமாகக் கேட்ட உங்களது சஞ்சாரக் கதையை முழுதும் கேட்க விரும்புகிறேன்" என்று மனமார வாயார அவளே கேட்கும்படிச் செய்து விட்டேன். நானுமவ்வாறே சொல்ல ஒப்பினேன். யான் சிறுநாளடைந்த இக்கட்டுகளைக் கூறிக்கூறி அவள் கண்ணீரைப் பலமுறை கொள்ளைகொண்டிருக்கிறேன். என்கதை முடிந்ததும், பெருந் துக்கசாகரத்தில் ஆழ்ந்து நான் பட்ட கஷ்டத்திற்கு மாறளித்தாள். பின் சபதமும் செய்தாள்;— உண்மையில், அது ஆச்சரியம் தான்; ஆச்சரியமாகத்தான் வளர்ந்து வந்தது. அது மாத்திரமன்று, அனுதாபமடையும்படியாகவு மிருந்தது; என்றுங்கண்டிராத அனுதாபமுமடைந்திருந்தது. தான் கேட்டிராதிருந்திருக்கக்கூடாதா என்று விரும்பினாள்; ஆனாலும் கடவுளே தன்னை அவ்வாண்மையிற் காளாக்கியதாகி விரும்பினாள். எனக்கு வந்தன மளித்தாள். தன்னிடம் காதல் கொண்ட ஓர் நேசனுக் கென்னது கதையை வழியாகச் சொல்ல யான் கற்பித்தால் அக்கதையே அவளைக் காதலித்திடச்செய்யும் என்றவள் சொல்லினாள். அவள் கூறிய இங்கித குறிப்பைக் கொண்டுதான் யானும் பேசினேன். நானடைந்தனுபவித்த கோரகஷ்டங்களுக்காக அவள் என்னிடம் காதல் கொண்டாள்; எனக்கவள் காட்டிய அனுதாபத்திற்காக அவளிடம் காதல் கொண்டேன். இதுதான். இந்த மூலிகாமந்திர வச்யத்தால்தான் அவளை நான் மயக்கி வசியம் செய்துவிட்டேன். அவளும் இதோ வருகிறாள். இவர்களே சாட்சியம் சொல்லட்டும்.

இதற்குள் அயோக்ய புஞ்சன் பலபரிஜனங்கள் சூழ சாந்தையுடன் வந்தான். அரசனும் "என்ன பிரபுன்னத்! இந்த கதை என் மகளையும் ஆசைகொள்ளச் செய்யும் என்பதில் என் திடநம்பிக்கை. ஏதோ நடந்ததைப்பற்றிக் கவலைப்படாதியும். எல்லாம் நல்லதற்கே என்று எண்ணும். வெறுங்கையுடன் சண்டைசெய்வதைக்காட்டிலும் உடைந்ததானாலும் ஆயுதத்துடன் செய்வது மேல்தானே" என்றான். மிகக் கோபத்துடன் பிரபுன்னதன் கதறுகிறார்.

பிரபுன்னதன்.—என்னையனே! சற்று தயவுசெய்யுமே! அவள் சொல்வதைத்தான் கேளுமே. இந்த பாழுஞ்சமாசாரத்தில் பாதி ஸம்பந்தப்பட்டவள் என்றவள் மாத்திரம் ஒப்புக்கொள்ளட்டும்; நான் அப்பொழுது இம்மனிதன்மேல் வைத்த படுபழிக்கு ஆளாய் பாழாய்ப்போய்விடுவேன்! இங்கு வாடியம்மா! சாந்தை! இப்பெரும் பிரபுக்கள் சபையிடத்தில் இருக்கும் யாரிடம் நீ யடங்கியிருக்கவேண்டும் என்பது தெரிகிறதா?

சாந்தை.—அப்பா! கௌரவி மிகுந்த என்தந்தையே! நான் செய்யவேண்டியதர்மம் இரண்டுபட்டிருக்கிறதாக எனக்கு நன்றாய்த் தெரிகிறது. பிறப்புக்கும் கல்விக்கும் உமக்கு பாத்தியப்பட்டிருக்கிறேன். என்பிறவியும் படிப்பும் உம்மைக் கௌரவப்படுத்த எனக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது. தாங்களே என் தர்மத்திற்கு மூலாதாரம்.—ஆனால் இனி நான் உங்கள் மகள்தான்; என் பிராண நாதன் இதோ நிற்கின்றார்; தனது தகப்பனைக்காட்டிலும் உம்மையே விரும்பி என்தாயார் உம்மிடம் எவ்வாறு கடமை பாராட்டுகிறாளோ அவ்வாறே யானும் உயிர்த்தலைவனான எனது மௌர்யனுக்கு பந்தபட்டிருக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்பது ஒருவரும் ஆட்சேபிக்கமுடியாத விஷயம் என்பதை நான் உறுதியாய்ச் சொல்ல முடியும்.

பிரபுன்னதனது நிலைமை தவறிவிட்டது; தன் மகளை உத்துல்லன் கெடுத்ததாக சொல்லிய மொழியுந் தவறிவிட்டது. மகள்மேல் கொண்ட ஆசையும் தன் எண்ணங் குலைந்த ரோசமும் ஒன்றோடொன்று சச்சரவு செய்துகொண்டு இருந்தன. உத்துல்லனுக் கவ்வாறன்று. தன்னை நடுசபையில் சாந்தை வரித்தாள் என்று ஸந்தோஷமடைந்தான். அரசனுந் தன்னை கௌரவித்தான் என்று சந்தோஷமடைந்தான்.

மற்று சபைமுழுதும் உத்துல்லன்பாலிருந்த ஆசையுடன் அன்புமதிகரித்தது. உண்மையின் பிரகாசம் அந்த சபையில் எங்கும் வீசிக்கொண்டே இருந்தது.

விக்ரஹாராதனம்.—குழந்தைகள் விளையாடுவதன் பொருட்டு மரத்தாற் செய்யப்பட்ட புலியும் யானையும் உண்மையான புலியையும் உயிருள்ள யானையும் ஞாபகப்படுத்துவதுபோல், ஜனங்கள் ஆராதிக்கும் விக்ரஹங்களும் ஸாகாரமாயும் நித்தியமாயுமுள்ள பிரஹ்மத்தை ஞாபகப்படுத்துகின்றன.

—உபதேசரத்னமாலை.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

ஜாவா தீவிற்கு இந்தியாவிலிருந்து கால்நடைகள்.—டச் கவர்ன்மெண்டைச் சேர்ந்த ஜாவாத்தீவுகளில் வசிக்கும் விவசாயிகளுக்கு அந்தக் கவர்ன்மெண்டார், இந்தியாவிலிருந்து கால்நடைகள் வாங்கிக் கொடுக்கிறார்கள். அத்தீவில் தோட்டப்பயிர்செய்யும் மிஸ்டர் பிலிப் என்பவரைச், சில சிப்பந்திகளோடு இந்தக் காரியத்திற்காக அனுப்பியிருக்கிறார்கள். பிலிப் இப்போது கல்கத்தாவில் இருக்கிறார். சென்னை ராஜதானிப் பக்கங்களில் காளைமாடுகளும் வெள்ளாடுகளும் வாங்கிவிட்டுப் பஞ்சாப் மாகாணத்திற்குப் போய் அங்கும்வேண்டிய கால்நடைகளை வாங்கியிருக்கிறார். இவைகளையெல்லாம் ஏற்றிக்கொண்டுபோக புகைக்கப்பலும் தயார் செய்தாகிவிட்டது. இந்த மாடுகளையும் ஆடுகளையும் ஜாவாவில் வசிக்கும் குடிகளுக்குக் கொடுத்து உதவிசெய்து பணத்தை நீண்டகால கெடுவில் கொஞ்சங்கொஞ்சமாக வாங்குவார்களாம். இப்போது டச் கவர்ன்மெண்டார் இதற்காகச் செலவு செய்திருப்பது இரண்டு லட்சம் ரூபாய். ஜனங்களுக்கு இது ஒரு பெரிய உபகாரமே யல்லவா?

*
* *

ஐக்கிய நாணயச் சங்கத்தாரால் ஒரு செகண்டேரி பாடசாலை.—மதுராந்தகம் தாலூகாவைச்சேர்ந்த ஒரு கிராமத்தில் ஐக்கிய நாணயச் சங்கத்து சர்ப்ளஸ் தொகையின் உதவியினால் ஒரு செகண்டெரி பாடசாலையை ஸ்தாபித்து நடத்திவருவதாகத் தீர்மானித்திருக்கிறார்களாம். ஐக்கிய நாணயச் சங்கங்கள் மூலமாக ஜனங்கள் சகல மேன்மைகளையும் அடைய முடியுமென்பது இப்போது ஜனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வருவதற்கு இணங்க மேற்சொல்லிய விஷயம் திருப்தியைக் கொடுக்கிறது.

*
* *

சென்னை கார்பொரேஷனுடைய முதல் எலிமெண்டரி பாடசாலை.—இச்சென்னையில் சுமார் 250 எலிமெண்டரி பாடசாலைகள் இருந்தும், அவற்றின் பெரும்பாகம் சீர்கேடான ஸ்திதியில் இருந்து வருகிறதென்கிற குறையைத் தீர்ப்பதற்காக, வித்தியா இலாகா இன்ஸ்பெக்டர் ராவ்பகதூர் பிரணதார்த்தி ஹர அய்யர் அவர்களுடைய தூண்டுதலின் பேரில் கார்பொரேஷன் சங்கத்தார் பத்துவருஷகாலத்தில் நாற்பது பாடசாலைகளைக் கட்டுவித்து நடத்துவதாகத் தீர்மானித்தார்கள். படிக்கும் மாணவர்களின் சுகாதார ஸ்திதிக்கு அனுகூலமாகக் கட்டுவதற்குப் பாடசாலை ஒன்றுக்கு, சுமார் ரூபாய் 15,000 ஆகிறதாம். இப்போது திருவல்லிக்கேணி வல்லப அக்கிரகாரத்தில் முதல் பாடசாலை கட்டுவித்து அதை இம்மாதம் 7-ம் தேதி நமது கவர்னர்துரை அவர்களைக்கொண்டு திறக்கும்படி செய்தார்கள். ஒவ்வொரு பாடசாலையிலும் 200 மாணாக்கர்கள் படிக்கலாம்.

*
* *

செகண்டெரி பாடசாலை உபாத்தியாயர்களும் பிராவிடண்ட் பண்டும்:—லோகல்போர்டுகளைச் சேராத பாடசாலைகளில் வேலைபார்த்துவரும் உபாத்தியாயர்களும் உதவி பெறவேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்து விட்டார்களெனத் தெரிகிறது. செகண்டரி பாடசாலைகளில் இருக்கும் உபாத்தியாயர்களுக்கும் கவர்ன்மெண்டாரின் ஸ்வாதீனத்தில் பிராவிடண்ட் பண்டு ஏற்பாடு செய்ய யோஜித்துக்கொண்டிருக்கிறார்கள். விவரம் சீக்கிரம் வெளியாகும்.

*
* *

பிரொபஸர் ஹனுமந்தராவ் அவர்களது உருவப்படம்:—சென்னையில் உள்ள இஞ்சினீரிங் காலேஜில் நீண்ட காலமாக வேலைபார்த்துவந்த ம-ா-ா-ஸ்ரீ B. ஹனுமந்தராவ் அவர்கள் இப்போது பென்ஷன் பெற்றுக்கொண்டு விட்டபடியால் காலேஜில் இவருடைய ஞாபகச்சின்னமாக உருவப்படமொன்று தயார் செய்து வைத்திருக்கிறார்கள். இம்மாதம் 7-ந்தேதி அது ஆனரபில் P. S. சிவஸ்வாமி அய்யரால் திறக்கப்பட்டது. அப்போது சிவஸ்வாமி அய்யரவர்கள் பிரொபஸருடைய கல்வித்திறமையைப் பற்றியும் கல்வி சொல்லிவைக்கும் திறமையைப் பற்றியும் மனதாரப் புகழ்ந்து பேசி மெச்சியிருக்கிறார். கல்வி விஷயத்தில் உயர்ந்த மேதாவிகளெனப் பெயர்பெற்ற டாக்டர் }. மார்ஷ், மிஸ்டர் W. A. போர்ட்டர், ராவ் பகதூர் T. கோபாலராவ் முதலியவர்களால் நன்கு மதிக்கப்பட்ட ம-ா-ா-ஸ்ரீ B. ஹனுமந்தராவ் அவர்களும் சில வார்த்தைகளைப்பேசி முடித்தார்.

*
* *

தேங்கா யுரிக்கும் யந்திரம்.—மணிக்கு 100 தேங்காய்க்குக் குறையாமல் உரிக்கக்கூடிய தொரு நூதன யந்திரம் ஓர் ஜெர்மன் பிரபுவால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாயும், இதன் விலை ஏறக்குறைய ரூபா 200 ஆகுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

ஜஸ்டிஸ் ரானடேயின் உருவச்சிலை.— பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜியாக இருந்தவரும் இந்திய ஜனசமூகத்தின் அபிவிர்த்திக்காகப் பல வழிகளிலும் பாடுபட்டு உயர்ந்த தேசாபிமானி எனப் பெயர்பெற்றவருமான ஜஸ்டிஸ் ரானடேயின் ஞாபகச்சின்னமாக ஒரு உருவச்சிலை தயார் செய்யப்பட்டு பம்பாய் நகரத்தில் இம்மாதம் திறக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள். இம்மாதம் 9-ந்தேதி திறக்கப்பட்டது. இந்தச் சிலை கைதேர்ந்த ஒரு மகாராஷ்டிர சிற்பியால் வேலை செய்யப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு படத்தைக்கொண்டு மாத்திரம் வேலைசெய்தாலும், இந்த ஜட்ஜியை நேரில் பார்த்தவர்கள் சிலையைக்கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். அவ்வளவு ஒழுங்கான ஒத்துமையை அடைந்திருக்கிறது. வலது கண்ணில் இவருக்கு இருந்த ஒருவித குறையும் அப்படியே தெளிவாக விளங்குகிறது. இந்தச் சிலைக்காக வசூலானது ரூபாய் 27,000. சிற்பிக்குக் கொடுத்த ரூபாய் 17,000 போக, பாக்கியைக்கொண்டு ஒருபடம் தயார் செய்வார்களாம்.

*
* *

ஆஸாம் மாகாணத்தில் இருந்த அருணாசல ஆசிரமம்:—சென்ற சில மாதங்களாக நடந்த கவர்ன்மெண்ட் விசாரணையின் பயனாக, ஆஸாம் சீப் கமிஷனர் அருணாசல ஆசிரமத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். குணிதாஸ் சௌதரி என்ற ஒரு லோகல் போர்ட் குமாஸ்தா தயாநந்த ஸ்வாமிகள் என்றபெயர் வகித்து சில்காருக்குச் சமீபத்தில் ஆசிரமத்தை ஸ்தாபித்தார். இது நடந்தது 1903-இல். மதோபதேசம் செய்வதற்காகவும் தர்மத்தைப் பரவச் செய்வதற்காகவும் இந்த ஆசிரமம் ஆரம்பமாயிற்று. சில நாட்களுக்குப் பிறகு 1912-இல் ஜகத்ஸி என்ற இடத்திலும் ஒரு கிளையை ஸ்தாபித்தார்கள். அதில் நடக்கும் நடவடிக்கைகள் ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் அருவருப்பைக் கொடுத்தன. ஆண், பெண் இருதிறத்தாரும் சொல்ப ஆடைகளோடு பஜனை கோஷ்டிகளாகச் சேர்ந்து பஜனை செய்தவண்ணமே இருப்பார்களாம். ஆவேசம் அதிகப்படும் காலங்களில் ஆடைகளை யெல்லாம் எறிந்துவிட்டு நிர்வாணிகளாய்க் கூத்தாடுவார்களாம். அந்த ஆசிரமத்திற்கு அடிக்கடி போகும் சிறுவர்கள் அதிலேயே சேர்ந்து குடும்பங்களைத் துறந்து விடுவார்களாம். அதனால் ஜனங்கள் புகார்செய்யத் தலைப்பட்டார்கள். 1910-இல் புகார் கிளம்ப ஆரம்பித்தது. வயது வந்து விவாகமாகாமல் இருக்கும் கன்னிகைகளை தலைவரே நேரில் அலங்காரம் செய்து காளிதேவி என்று வணங்கி திரிசூலங்களும் கொடுப்பது வழக்கமாம். நாளடைவில் தாங்கள் பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்டவர்களல்லவென்றும் விளம்பரப் படுத்தினார்கள். இப்படியிருக்க இவர்கள் பேரில் ஒருகேஸ் வந்தது. தயாநந்த ஸ்வாமிக்கு சம்மன் வந்தது. கொண்டுவந்த போலீஸ் அதிகாரியை அவமதித்தபடியால் கேஸ் வலுத்து ஆசிரமத்திலுள்ளவர்களுக்கு வாரண்டு போயிற்று. போலீஸ் அதிகாரிகள் சென்றதும், ஆசிரமத்திலிருந்து ஆண், பெண் இருதிறத்தாரும் ஆடைகளில்லாமல் வெளியே எதிர் கொண்டு எதிர்த்து வந்தார்களென்றால், அதை விட நாம் என்ன சொல்லலாம். கேஸில் தயாநந்த ஸ்வாமிகளும் சிஷ்யர்களுள் சிலரும் தண்டனை யடைந்தார்கள்.

*
* *

ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் சா. ராம. மு. ராம. ராமசாமி செட்டியாரவர்கள் எழுதுகிறார்கள்.—

இப்பத்திரிகையை சென்ற ஒரு வருஷ காலமாகப் படித்து வருகிறேன். அதில் வெளிப்படும் விஷயங்கள் எவருக்கும் நன்மை பயப்பனவாயும், யாரும் எளிதில் அறிந்துகொள்ளத் தக்கனவாயும், மதச்சண்டையில் புகாதனவாயும், எவரும் நன்மையென்று பாராட்டத்தக்கனவாயு மிருக்கின்றன. இதுபோன்ற பத்திரிகைகள்தாம் தற்காலத்திற்கு அவசியம் வேண்டும். கவர்ன்மெண்டு அங்கத்தினரால் ஆதரிக்கப்படாது தள்ளாடும் சுவதேச பாஷைகள் அபிவிர்த்தியாதற்கு இதுபோன்ற பத்திரிகைகள் வெளிவந்து உலாவி நடைபெறுவது அவசியமாகும். ஆதலின் தமிழபிமானமுடையாரும் மற்றையத் தக்கார்களும் இப்பத்திரிகை நன்கு நடைபெறும் விஷயத்தில் ஊக்கம் வைப்பார்களென்று நம்புகிறேன்.

*
* *

ஒரு வியவசாயச்சாலை.—கொல்லத்தில் வியவசாய சம்பந்தமான ஒரு கருவிச்சாலைக்குத் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் 33,000 ரூபாய் நன்கொடை யளித்திருக்கின்றனர்.

மலையாளத்தில் ரப்பர் சாகுபடி.—தென்னிந்தியாவின் மேற்குப் பாகமானது ரப்பர் சாகுபடிக்கு ஏற்றதெனப் பலவியாபாரிகளாலும் கருதப்பட்டு ஏராளமாய் ரப்பர் சாகுபடி செய்துவருகின்றனர். இதுவரையில் ரப்பர் சாகுபடி செய்யப்பட்டு வரும் பூமியின் விஸ்தீர்ணம் 35,000 ஏக்கராவாகும். இதைத் தவிர ஐரோப்பிய வியாபாரிகளும் ஆங்குள்ள குன்றுகளில் ரப்பர் சாகுபடி செய்ய முயன்று வருகின்றனர்.

*
* *

டெல்லியில் லார்ட் ஹார்டிஞ்சுக்கு உருவச்சிலை.—லார்ட் ஹார்டிஞ்ச் டெல்லி விபத்துக்குப் பிறகு பொது ஜனங்கள் கண்டு சந்தோஷிக்கும்படி வெளியே வந்த சமயத்தின் ஞாபகமிருக்கும்படி ஏதேனும் ஒரு தருமம் செய்யப்படுவதைக் கருதி, இதுவரை உபகரிக்கப்பட்டிருக்கும் தொகை 1,37000 ரூபாயாகிறது. அந்

தொகை யவ்வளவும் தற்காலம் லேடி ஹார்டிஞ்சின் பொது தருமநிதிக்குச் செல்லுவைக்கப்பட்டிருக்கிறது. இம்முயற்சி ஒருபக்கம் நடந்துகொண்டிருக்க, டெல்லி வாசிகள் லார்ட் ஹார்டிஞ்சின் உருவச்சிலையொன்றைச் செய்து அதனை டெல்லியில் நாட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே 20,000 ரூபாய் கையொப்பமாய் விட்டது. யாதொரு கஷ்டமுமின்றி 50,000 ரூபாய் சேர்க்கப்பட்டுப் போமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

*
* *

மண்டபம்—பாம்பன் வாராவதி.—மண்டபம் பாம்பன் இவைகளுக்கிடையில் கட்டிக்கொண்டிருந்த வாராவதி வேலை முடிவுபெற்று வருகிறது. ஜுலை மாதம் முதல்தேதி முதற்கொண்டு, வண்டி விடப்படும். இன்னும் பலவித மாறுதல்களும் செய்யப்படும். சென்னையிலிருந்து புறப்பட்டு, தூத்துக்குடிக்கு நேராகப் போய்க்கொண்டிருக்கும் இரண்டு போட் மெயில்களும் இனிமேல் தூத்துக்குடிக்குப் போகாமல் தனுஷ்கோடிக்குப் போகும். பாம்பன் லயன் தனுஷ்கோடியில் தான் முடிகிறது. தனுஷ்கோடியிலிருந்து ஸ்டீம் போட்டு ஒன்று ஜனங்களை ஏற்றிக்கொண்டு மன்னாருக்குப் போகும். மன்னாருக்கும் கொழும்புக்கும் சீக்கிரத்தில் ரயில் சம்பந்தம் ஏற்படும். கொளம்புக்கு, தூத்துக்குடி மார்க்கமாக இதுவரையிலும் போய்க்கொண்டிருக்கும் பிரயாணிகள், ஜுலை மாதம் முதற்கொண்டு தனுஷ்கோடி வழியாகக் கொழும்புக்குச் செல்வார்கள் எனச், சொல்லப்படுகிறது.

*
* *

பம்பாய் புதிய கவர்னர் லார்ட் வில்லிங்டன்.—பம்பாய்ப் புதிய கவர்னர் லார்ட் வில்லிங்டன் லேடி வில்லிங்டனுடன் இம்மாதம் 4உ காலமே பம்பாய் வந்து சேர்ந்தார். அப்பாலோ பந்தர் துறைமுகத்தில் பல கனதனவான்களால் வரவேற்கப்பட்டார் பிறகு அவர்களிருவரும் மலபார் ஹில் (Malabar Hill) போய்ச் சேர்ந்தார்கள். அங்கே அவர்களை சிவில் ராணுவ உத்தியோகஸ்தர்களும் அன்னிய ராஜாங்க ஸ்தானாதிபதிகளும், தேசமன்னர்களும், வரவேற்றார்கள். அப்பால் அவர்களிருவரும் அங்கு வந்திருந்த கனதனவான்களுக்கு அறிமுகஞ்செய்துவைக்கப்பட்டார்கள். பம்பாய்க் கார்பொரேஷன் புதிய பிரஸிடெண்ட் வரவேற்புப் பத்திரத்தை வாசிக்க அதற்கு லார்ட் வில்லிங்டன் பதில்சொல்லித் தங்களுக்கு அட்ரஸ் வாசித்துக் கொடுத்தவர்களுக்கு நன்றி செலுத்தினார்.

*
* *

அமெரிக்காவில் சர்க்கரைத் தீர்வை.—யுனைடெட் ஸ்டேட்ஸுக்குள் இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கு வசூலிக்கப்படும் தீர்வை குறைக்கப்பட்டு, முடிவில் அடியோடு ஒழிக்கப்படுமென்று பிரஸிடெண்ட் வில்ஸன் தீர்மானஞ் செய்துவிட்டார். இதனால் நஷ்டமாகும் 80 லட்சம் டாலர் தீர்வையை வருமான வரியைச் சற்று உயர்த்தி ஈடு செய்து கொள்ளப்படுமாம். ஏழைகளுக்கும் சர்க்கரை தேவையாகையால் அவர்களுடைய நிலைமைக்கு அனுகூலமாகச் சர்க்கரை வரியைத் தள்ளி, பணத்தில் புரளும் தனிகர்களிடமிருந்து அந்த நஷ்டத்தை ஈடு செய்துகொள்வது காருண்ணியமே.

*
* *

மயிலாப்பூர் ராமகிருஷ்ண மாணவர்களின் ஆச்சிரமம்.— மயிலாப்பூர் ராமகிருஷ்ண மாணவர்கள் ஆச்சிரமத்தின் 8-வது வருஷத்திய ரிப்போர்ட்டில், அந்த ஆச்சிரமத்தில் நடந்த வேலை அதிக திருப்திகரம் என்றும், பொது ஜனங்கள் அதற்குப் பண உதவி செய்து அதை ஆதரித்து வருகிறார்கள் என்றும், அந்த ஆச்சிரமத்தின் பொருளாதார நிலைமை நிரம்ப திருப்திகரம் என்றும் ஆச்சிரமத்தில் 7-ஸ்தானம் காலியான பொழுது அந்த காலி ஸ்தானங்களுக்கு 200 பேர் விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள் என்றால், அந்த ஆச்சிரமத்தின் தேவையை ஜனங்கள் எவ்வளவு நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பது வியக்தமாகிறதென்றும், அதில் 25 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றும் தஞ்சை, கோயமுத்தூர், வடஆற்காடு, தென்னாற்காடு, சேலம், மைசூர், யாழ்ப்பாணம் முதலிய விடங்களிலிருந்தும் மாணவர்கள் வருகிறார்கள் என்றும், வடக்கேயுள்ள ஜில்லாக்களும் இனி அதில் சேர்க்கப்படவேண்டும் என்று பிரயத்தனஞ் செய்யப்பட்டு வருகிறதென்றும், அந்த ஆச்சிரமம் ஜாதிவித்தியாசம் பாராட்டுகிறதில்லையென்றும், அந்த ஆச்சிரமத்தில் மதப்படிப்பும், நல்லொழுக்கப் படிப்பும் கற்பிக்கப்பட்டு வருகின்றனவென்றும், 1911-12-ம் வருஷத்திய வரும்படி 2302 ரூபாய் என்றும், அதற்கு முந்திய வருஷத்திய வரும்படி 1971 ரூபாய் என்றும், வருஷக் கடைசியில் கையிருப்புத் தொகை 919 ரூபாய் என்றும், இதற்குப் பொதுஜனங்கள் இன்னும் பொருள் உதவி செய்துவரவேண்டும் என்றும், இவ்வித விஷயங்கள் கண்டிருந்தன.

*
* *

மதுரை இராமநாதபுரம் கூட்டுறவுச் சங்கத்தின் மஹோத்ஸவம்.—சென்ற மாதம் 23உ மதுரை காலேஜ் ஹாலில், ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் இச்சங்கம் செவ்வனே நடைபெற்றது. கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்தியில் சிரத்தைகொண்ட அநேகம் கனவான்களும், வெளியூர்களிலிருந்து 200 டெலிகேட்டுகளும் வந்திருந்தார்கள். அப்பொழுது ஆனரபில் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யர், இச்சங்கங்களின் உபயோகங்களைப்பற்றி ஓர் சிறந்த உபந்யாஸம் செய்தார். இச்சஞ்சிகையில் இடம் இல்லாதுபற்றி, மேற்படி உபந்யாஸத்தை அடுத்த பத்திரிகையில் வெளியிடுவோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 21 JUL 1913 MADR

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி V } பிரமாதீசஹு சித்திரைமீ : 1913-ஹு மேமீ { பகுதி 11

உள்நாட்டம் II
INWADRNESS

முன்னர்உள்நாட்டத்தின் முதல் பாகமாகிய அப்பியாஸத்தை, அதன் இருபகுதியாகிய இந்திரிய நிரோதம் மனோநிரோத மூலமாக எடுத்து விளக்கப்பட்டது. இந்த அப்பியாஸத்தை புருஷதந்திரத்தால் நாம்செய்து வரவேண்டும். இது முற்றிலும் பலித்து நமது இயற்கையாகவே ஏற்படுவது அடுத்த நிலையாகிய அனுபவத்தில் ஏற்படுவதாயினும் நம்மால் கூடியவரையில் அவைகளில் பழகி ஒருவாறு தேர்ச்சி பெறவேண்டும். இவைகளுடன் த்யானத்தில் பழகுகையில் நாம் ஸாக்ஷிவிருத்தியுடனிருந்து மனதில் வரும் எண்ணங்கள் மயமாகிப் போய்விடாமல் பழக முயலவேண்டும். இந்தப் பழக்கத்தொடக்கத்தில் வைராக்ய ஸ்வரூபமாகிய விருப்பு வெறுப்பு அற்ற நிலை சிறு முயற்சியாலே நமது மனதில் குடிகொண்டு வரத்தொடங்கும். இம்மாதிரி சாஸ்திர விஷயங்களில் ஊன்றிய புத்தியுடன் பழகி உலகம் துச்சம் என்று தள்ளும் நிலைக்கு **நிச்சயம்** என்று பெயர். இதற்கே **பரோக்ஷம்** என்று பெயர். இந்தப் பரோக்ஷம் அதிடபரோக்ஷம் என்றும், திடபரோக்ஷம் என்றும் இரண்டுவிதம். முற்கூறிய ஸாக்ஷிவிருத்தி அப்யாஸ ஆரம்பத்தில் வைராக்யப் பழக்கத்தால் மனம் ஒருவாறு அடங்கிவருவது அதிடபரோக்ஷம். இதில் சற்று ஏமாந்தால் விஷயத்தில் நம்மைப் புகுத்திவிடும் நமது இந்திரியமும் மனதும். இந்நிலையில்தான் முதல் ஜன்மத்தில் ஜடபாதர் இருந்தது. இதனால்தான் அஜாக்ரதையான ஸமயத்தில் மானிடம் ஏற்பட்ட ஜீவகாருண்யம், அபிமானமாக மாறி அவரைக் கஷ்டத்திற்குள்ளாக்கியது.

இந்த ஸாக்ஷிவிருத்தி அப்யாஸ முதிர்ந்து வரவர மனதுக்கு ஓய்வினால் ஒருவித உள்ளக்குளிர்ச்சி உண்டாகிவிடும். இதனால் வெளி விஷயத்தில் ஒருவித துச்சபுத்தி உபேக்ஷை உள்ளபடி வர, நிச்சய நிலை திடப்படும். இதற்கு திடபரோக்ஷம் என்று பெயர். இது நிச்சய நிலையின் உண்மை ரூபம். இதில் சூன்யத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்படி நேருமாதலால், இன்னம் உண்மைப்பொருள் விளங்கவில்லை என்ற போவல் ஏற்பட இதை விடாது காத்துக்கொண்டிருக்க புத்தி போகும். தீவ்ர ப்ராரப்த ப்ரதிபந்தமில்லாதிருக்கையில் வெளிவிஷயத்தில் புத்தி, உள்ளக்குளிர்ச்சியை விட்டு, நாடிவராது. இப்படி இங்கு நாடாது அங்கும் விளங்காது தத்தளித்து நிற்கும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் திடபரோக்ஷாவஸ்தையையே முமுக்ஷுத்வம் என்று கூறலாம். இவ்வளவுதான் நமது புருஷமுயற்சியால் போகக்கூடிய உள்நாட்ட பாகம். கடவுளை நம்மை விட்டுக்கொஞ்சமேனும் வேறாக எண்ணி ஆராதிக்க ஏற்படும் உலகில் உள்ள மதங்கள் உபாஸனா மார்க்கங்கள் த்யானங்கள் எல்லாம் இந்த முமுக்ஷுத்வத்தை உண்டாக்கும் புருஷதந்திரமார்க்கங்களே. இந்நிலையில் நமது செயலற்று என்ன விளங்கப்போகிறதோ என்று காத்துக்கிடப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய நம்மால் முடியாது, வெளி முகப்பட்டால் தாழ்ந்து விடுகிறோமே என்று மனம் பாதிக்கும்.மேலே போகவோ விளங்காது. இதுவரையில் தான் நமது முயற்சியும் வெளி ஆசார்யன் முயற்சியும் பயன்படுவது. மேல் விஷயம் ஸர்வகர்ம க்ஷயத்தின் பின்தானே அகத்து வெளிப்படவேண்டியதுதான். இந்நிலையைப் பாழ் என்றும் கூறுவர் பெரியோர்.

குரு கிருபை ஈசன் கருணை கர்மபரிபாகம் இவைகளுக்கு ஏற்ப,நம் மனத்துள்ளிருக்கும் உள்ளக்குளிர்ச்சியிலிருந்து அகண்டாகார விருத்தி உதயமாகும் என்பர் மேலோர்.இது தோன்றுவது புருஷதந்திரம் ஓய்ந்து வெளியாகும் வஸ்து தந்திரத்தாலேதான். இந்நிலைக்கு அனுபவநிலை என்று பெயர். இதுதான் உள்நாட்டத்தில் அப்யாஸத்திற்கடுத்த இரண்டாவது நிலை. இந்நிலையின் உண்மை ஸ்வரூபம் அனுபவத்தால்தான் விளங்குமாயினும், இதைப்பற்றிய சிற்சில லக்ஷணங்கள் சாஸ்திரங்களில் கூறியுள்ளன. இந்நிலையின் வேறு பெயர்களைக் கூறிவிட்டாலே நமக்கு ஒருவாறு இவைகளைப்பற்றிய உணர்ச்சி வரலாம். அவையாவன, ஜீவன் முக்தி, ஸத்வாபத்தி, பிரஹ்மவித்நிலை என்பனவைகளே. இதன் லக்ஷணத்தையும், இதற்கடுத்ததும் முடிவானதுமான ஆரூட நிலையையும் பின்னர் எடுத்து விவரிப்போம்.

விவேக போதினி

தொ. 5.] பிரமாதீசஹு சித்திரைமீ [பகுதி 11

சைவ வைஷ்ணவ ஸமரஸம்

SAIVISM AND VAISHNAVISM RECONCILED

முன்னர் எடுத்துக்காட்டிய திரிமூர்த்தி விஷயத்திலிருந்து மூன்று மூர்த்திகள் மூலமாகவும் ஆராதிக்கப்படும் பரம்பொருள் ஒன்றே என்றும், ஒரு மூர்த்தி ஆராதனத்திலேயே மற்றைய மூர்த்திகள் ஆராதனச் சிறப்புகள் அடங்கியுள்ளன என்றும், இந்த ரஹஸ்யத்தை உணர்ந்து ஒரு மூர்த்தியின் வழிபாட்டைப் பின்பற்றி நிற்பவர்கள் பரம்பொருளை அடைந்து சாந்தமாக விருப்பார்கள் என்றும்; அப்மாதிரி செய்யாது மற்றைய மூர்த்தி, உபாஸகர்கள் ஆகிய இவர்களிடம் த்வேஷபுத்தி பாராட்டுபவர்கள் அதோகதி அடைவார்கள் என்றும் கூறப்பட்டது.ப்ரஹ்மாவின் ஆராதனம் நேரே வைதிகமாதலாலும் ப்ராஹ்மணர்களுக்கே சிறப்பானதாலும் அதன் ஸம்பந்தமாக அதிக மாறுபாடு வழக்கத்தில் இக்காலத்தில் வெளிப்படுவதில்லை. ப்ரதிமாராதன ரூபமாக அமைக்கப்பட்டு எல்லோருக்கும் பொதுவாக உபயோகப்படுவதற்கு ஏற்பட்டிருக்கும் வைதிகமான சைவ வைஷ்ணவங்கள் தத்தமக்குரிய ஆகமங்களால் விவரிக்கப்பட்டிருப்பதால் மதத்வேஷம் பொதுவாக 'ஹரனதிகன் உலகளந்த ஹரியதிகன்' என்றே தோன்றி வளர்கின்றது. இந்த த்வேஷகாரணம் யாது என்பதை எடுத்து விசாரித்து, இந்தக் காரணங்களின் உள்நோக்கங்களை வெளியிட்டு இவைகளை இங்கு ஸமரஸப்படுத்தப் புகுவோம்.

இந்த மாறுபாட்டை அதிகப்படுத்தும் காரணங்கள் பின் வருவன:—

1. முதலில் சைவர்கள் சிவனே பரதெய்வமென்றும் வைஷ்ணவர்கள் விஷ்ணுவேபரதெய்வமென்றும் முடிவாகக் கூறுவர். இதற்கு ஆதாரம்,

சொல்லினும் சொல்லின் முடிவிலும்
  வேதச் சுருதியிலு
மல்லிலும் மாசற்ற வாகாயம்
  தன்னிலும் மாய்ந்துவிட்டோ
ரில்லிலும் அன்பரிடத்திலும்
  ஈச னிருக்குமிடம்
கல்லிலும் செம்பிலுமோ இருப்பான்
  எங்கள் கண்ணுதலே.

என்ற பட்டணத்துப்பிள்ளையார் வாக்கும்;

தேருங்கால் தேவ னொருவனே யென்றுரைப்பர்
ஆருமறியா ரவன் பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே—எத்தவம் செய்தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால்.

என்ற திருமழிசை யாழ்வார் வாக்குமே.

2. இதுவுமன்றி சிவன் மும்மூர்த்திகளுள் ஒருவர், ஆதலால் பரம்பொருளாகிய விஷ்ணுவுள் ளடக்கம் என்று வைஷ்ணவரும்; விஷ்ணு மும்மூர்த்திகளுள் ஒருவர், ஆதலால் சிவனுள் அடக்கம் என்று சைவரும் கூறுவர். இதற்கு ஆதாரம்

பெண்ணுலாம் சடையி னானும்
  பிரமனும் உன்னைக் காண்பான்
எண்ணிலா வூழி யூழித்
  தவஞ்செய்தார் வெள்கி நிற்ப.

என்ற தொண்டரடிப்பொடி யாழ்வாரும்,

நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்

என்ற திருமழிசை யாழ்வாரும்,

காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
  கடிக்கமலத் திருந்தயனுங் காணவண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத் திக
[ழொளியை

என்ற அப்பர்ஸ்வாமிகளும்,

நிலையியற் பொருளும் இயங்கியற் பொருளும்
  நிலைபெறத் தொழிற்படுத் துடைய
தலைவனங் கலைப் பணிவரைப் பராட்டி தன்னையும்
  நின்னை [illegible] பால்
மலரிணைப்புத் [illegible] தன்னையும் எனையும் வலப்
  கால ருத்[illegible]
[புடைக்
கலைமகள் [illegible] தந்தாய்
  காத்துயிர்த் [illegible]

என்ற காஞ்சிப்புராணமுமே.

3. இதனோடு நிறுத்திவிடாமல் பரம்பொருளுக்கும் மும்மூர்த்திகளுக்கும் உள்ள ஸம்பந்தத்தில் சிவனிடத்தே தான் பரம்பொருள் ஸாந்நித்யம் அதிகம் என்று சைவரும், விஷ்ணுவினிடம் அது அதிகம் என்று வைஷ்ணவரும் வற்புறுத்துவர். இதற்கு ஆதாரம்.—

அங்கமலத் தயனொடு மாலாகி மற்று
  மதற்கப்பா லொன்றாகி யறிய வொண்ணச்
செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை

என்ற அப்பர் ஸ்வாமிகளதும்

யானும் தானா யொழிந்தானை
  யாதும் யவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனு மாகிப்
  பணைத்தனி முதலை.

என்ற நம்மாழ்வாரதும் ஆன அருள் வாக்குக்களே.

இவ்வாறு பெரியோர்கள் கூறிய வார்த்தைகளின் உட்பொருள் உணராது பின்வந்தவர் சைவ வைஷ்ணவங்களுக்குப் பேதம் கல்பித்துத்வேஷபுத்தியை அதிகப்படுத்தி விட்டனர்.

4. மேலும், சிவமஹாத்மியத்தைச் சொல்லுங்கால் விஷ்ணு அதை லக்ஷ்மிக் குபதேசித்தாரென்றும், விஷ்ணு சிவனது பிரதம பக்தர் என்றும், அவர் ஒரு அவஸரத்தில் தாம் சிவபூஜைக்காகக் கொண்டுவந்திருந்த தாமரை மலர்களில் ஒரு மலர் குறைந்திருப்பதைக்கண்டு அதற்குப் பதிலாகத் தமது கண்ணைப் பிடுங்கி அர்ச்சனை செய்து பரிசுத்தரானார் என்றும், சிவனை ஏற்றமாயும் விஷ்ணுவைத் தாழ்வாயும் சொல்லும் இவைபோன்ற, அநேக கதைகள் சிவபுராணம் ஸ்காந்தம் முதலியவைகளில் காணலாம். இதுபோல் விஷ்ணு மஹத்துவத்தைச் சொல்லுங்கால் சிவன் அதைப் பார்வதிக்கு உபதேசிப்பதாகவும், சிவன் விஷ்ணுவினது முக்கிய பக்தர் என்றும், சிவனுக்கு ஆபத்துக்கள் வந்த ஸமயங்களில் விஷ்ணுவை ஆராதித்து அவைகளிலிருந்து நீங்கினார் என்றும், இதைப்போலவே விஷ்ணுவை ஏற்றமாயும், சிவனைத் தாழ்வாயும் சொல்லும் அநேக கதைகள் விஷ்ணுபுராணம் பாகவதம் முதலியவைகளில் காணலாம். ஆகையால் சைவர்கள் தாம் ஆராதிக்கும் சிவனைப் பரம்பொருள் என்றும், வைஷ்ணவர் ஆராதிக்கும் விஷ்ணுவை மும்மூர்த்திகளில் ஒருவர் என்றும், பரம்பொருளது ஸாந்நித்யம் திரிமூர்த்திகளுள் ஸம்ஹார கர்த்தாகிய சிவனிடம் அதிகம் என்றும் எண்ணுகிறார்கள் என்பதும்; அம்மாதிரியே வைஷ்ணவர்கள் விஷ்ணு சிவன் இவர்களைப்பற்றி ஏற்றத்தாழ்வாய்ச் சொல்லுகிறார்கள் என்பதும் முன்சொன்னவைகளால் எளிதில் விளங்கும்.

இம்மாதிரி சிவ விஷ்ணுக்களுள் பேதப்படுத்திக் கூறும் விஷயங்கள் நமது சாஸ்திரங்களில் இருப்பதன் காரணம் முன்னரே கூறியாகி விட்டது. மூர்த்தியை மாற்றி ஸமமாகப் பாவிப்பது எவ்வளவுதான் யுக்திக்குப் பொருத்தமாக விருப்பினும், அப்யாஸத்தில் தனது மனதைக் குவிந்துநிற்க ஸாதகமாக விருக்கும் மூர்த்தியைப் பற்றவேண்டும். இந்தப் பற்று திடமாக ஏற்பட்டு பழக்கம் பலிக்கவே இம்மாதிரி சிவவிஷ்ணுக்களை மற்றை மூர்த்திகளைவிட அதிக ஏற்றம் என்ற பாடல்களும் கதைகளும் அமைந்துள்ளன. தியானம் உறைத்து மனம் தெளிய ஏற்பட்ட விஷயத்தை த்வேஷம் முதிர்ந்து மனம் திண்டாடும் விஷயமாகக் கொண்டது அறியாமை நிறைந்த சைவவைஷ்ணவர்கள் புத்திக்கொடுமையே. இப்படிப் பேதப்படுத்தி வரையறுத்து நமக்கு உதவிபுரிந்த மஹான்கள் குற்றமேயல்ல. மஹான்கள் இந்த த்யானரஹஸ்ய, த்வேஷ நீக்கக் கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டிருக்கின்றனர்.

சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகிச்
  செழுஞ்சுடராய்த் தீயாகி நீருமாகிப்
புவனாகிப் புவனங்க ளனைத்துமாகி
  பொன்னாகி மணியாகி முத்துமாகிப்
பவனாகிப் பவனங்க ளனைத்துமாகிப்
  பசுவேறித் திரிவனோர் பவனாய்நின்ற
தவனாய தலையாலங் காடான்றன்னைச்
  சாராதே சாலநாள் போக்கினேனே.

—அப்பர்ஸ்வாமிகள்.

ஜகத் அதீச்வரனாகிய ஜனார்த்தனனாலும் ஸரி (விஷ்ணு),ஜகத் முடிவை உண்டாக்கும் மஹேச்வரனாலும் ஸரி (சிவன்), இவர்களுக்குள் வஸ்து பேதம் என்பது எனக்கு இல்லவே இல்லை; ஆயினும் என் பக்தி பிறைசூடியான பெருமானிடமே பாய்ந்தோடுகிறது.

—அப்பைய தீக்ஷிதர்.

நாங்கள் சைவர்கள், அதைக் கேட்கவேண்டியதே இல்லை, அதிலும் பஞ்சாக்ஷரியை அதிகமாக ஜபம் செய்கிறவர்கள். ஆகிலும் என் மனம் காசாம்பு நிறைத்தாயும், கோபஸ்திரீகள் குழந்தையாயும் உள்ள மந்தஹாஸமுகம் உடைய கிருஷ்ணமூர்த்தியை ஸ்மரிக்கிறது.—லீலாசுகர்.

நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனாய் அயனாய்
கூரா ராழி வெண்சங் கேந்திக் கொடியேன்பால்
வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் தேக்கவே

முனியே நான்முகனே முக்கண் [நம்மாழ்வார்.
ணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கரு
மாணிக்கமே யென்கள்வா
தனியே னாருயிரே யென்
தலைமிசையாய் வந்திட்டு
இனிநான் போகலொட்டேன் ஒன்றும்
மாயம் செய்யேலென்னையே.—நம்மாழ்வார்

இந்தக் கருத்தை உத்தேசித்தே சைவ வைஷ்ணவர்களில் சிறந்தவர்களும் விஷ்ணு சிவ கதைகளை எடுத்துக் கூறுமிடத்து வைஷ்ணவ சைவர்கள் போலவே பேதத்தை ஸஹித்துக் கொண்டு தம் ஈடுபாட்டுக்குத் தகாததான மூர்த்தியை ஏற்றமாகவே கூறியுள்ளார். இதற்கு உதாரணம்,

ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும்
இருபாத் தொருவனந்தப்
பேரேனம் தனைத்தேடி
கணங்களுடன் புறப்பட்டான் * *

என்று வில்லிபுத்தூர் ஆழ்வாரும்.

காரகார காரகார காவலூழி காவலன்
போரபோர போரபோர போரில்நின்ற புண்ணியன்
மாரமார மாரமார மரங்களேழும் எய்தஸ்ரீ
ராமராம ராமராம நாமமென்னும் நாமமே.

என்று—சிவவாக்கியரும் கூறியவைகளே.

இந்த த்யான ரஹஸ்யத்தையும் மதத்வேஷத்திற் கிடங்கொடா ஏகாக்ர ரஹஸ்யத்தையும் உணராது சைவ வைஷ்ணவர்கள் எவ்வளவுதான் மற்றையவாறு கடவுளைத் திரிமூர்த்திகளுள் ஒருவராக எண்ணித் தமது கடவுளைப் பரம்பொருளாக வெண்ணி அறியாமையால் தம்முள் சண்டையிட்டபோதிலும், நடுநிலையிலிருந்துகொண்டு வைஷம்யமொன்றுமின்றிச் சைவ வைஷ்ணவ புராணங்கள் உபநிஷத்துகள் முதலியவைகளையும், அவரவர்கள் சிவ விஷ்ணுக்களை வர்ணிக்கும் விதங்களையும், நாம் நன்றாய் விசாரித்து நோக்கினால், சைவர்களால் மேலாகக் கொள்ளப்படும் சிவனும், வைஷ்ணவர்களால் மேலாகக் கொள்ளப்படும் விஷ்ணுவும், ஓரே பரம்பொருள் என்பதும் ; இவ்விரண்டும் அப்பொருளின் பெயர்கள் என்பதும் நமக்கு எளிதில் விளங்கும். பின்வரும் பாகங்களில் இந்த விஷயங்களைச் சற்று உற்று நோக்குவோம்.

ஸெனபன்

XENOPHON (A LIFE SKETCH)

க்ரீஸ் தேசத்தில் ஆதென்ஸ் என்னும் நகரத்தில் ஏறக்குறைய கி. மு. ஐந்தாவது நூற்றாண்டில் 'க்ரில்லஸ்' என்னும் ஒருவர் இருந்தார். அவர் மிகுந்த பணக்காரருமல்ல, ஏழையுமல்ல. இவருக்கு ஸெனபன் என்று ஒரு பிள்ளை உண்டு. அக்காலத்தில் சரிதமெழுதுவோர் மிகுதியாக இல்லையாதலால் இவர் சரித்திரத்தை ஒருவரும் எழுதவில்லை. ஆனால் ஸெனபனே எழுதியுள்ள புஸ்தகங்களுள் ஒன்றினின்று அவர் சரிதத்தை யறியவேண்டியிருக்கின்றது. முதலில் ஸெனபன் எந்த வருடத்தில் பிறந்தார் என்பதே நிச்சயமாகத் தெரியவில்லை. பலர் பலவிதமாகச் சொல்லுகின்றார்கள். அவர் ஆசியாமைனருக்கு போய்ச் சண்டை செய்துவிட்டுத் திரும்புகையில் தம் இளமைப்பருவத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அதனால்தான் அவர் பிறந்த வருடத்தைத் தெரிந்து கொள்ளவேண்டியிருக்கின்றது. அவர் சண்டைசெய்து கி. மு. 401-ல் வந்தார். அப்பொழுது அவருக்கு முப்பது வயது என்பதால் அவர் கி. மு. 431-ல் பிறந்திருக்கலாம் என்று தெரிய வருகின்றது.

ஸெனபன் இருபத்தெட்டுப் பிராயம் வரையிலும் ஆதென்ஸிலேயே வளர்ந்துவந்தார். அவர் குழந்தையாயிருக்கும்போதே ஸ்பார்டன் தேசத்தார் ஆதென்ஸைப் பலதடவைப் படையெடுத்துத் தோல்வியடையச் செய்தார்கள். இவையெல்லாம் பார்த்திருந்த ஸெனபன் ஆதென்ஸை ஓர் அற்பராஜ்யமென்று நினைத்தார். ஆகையினால்தான் அவர் தம் தேயத்திலேயே யிருக்காமல் அன்னியதேயங்களுக்குச் சென்று யுத்தவீரராக கூலிக்கு சண்டைசெய்து பிழைத்துவந்தார். சண்டையில் தோல்வியடைந்தாலும் ஆதென்ஸ், கல்வி முதலியவைகளில் மிகவும் மேன்மையடைந்திருந்தது. ஸெனபனும் இவைகளில் மிகவும் கற்றுத் தேரியிருந்தனர். அவர் 'ஸொபோக்ளீஸ்' 'யுரிபிடீஸ்' 'அகெதான்' முதலானவர்களுடைய நாடகங்களைப்பார்த்து அவைகளினின்றும் அதிக பலனை யடைந்திருந்தார்.

ஸென்பன் எதுசெய்தாலும் 'ஸாக்ரடீஸ்' என்பவரைக் கேளாமல் செய்வதில்லை. இந்த 'ஸாக்ரடீஸ்' ஆதென்ஸிலிருந்த புலவர்களுளொருவர். ஸெனபன் இவர் சம்பாஷணைகளை யெல்லாம்

எழுதி வைத்து 'மெமொரோபோலியர்' என்னும் ஒரு புஸ்தகமாக வெளியிட்டார். ஸெனபன் எதிலும் தாமே செய்துபார்க்குமியல்பை யுடையவர். அவருக்கு எதிலும் சகுனம் பார்த்துச் செய்வதில் மிக்கப் பிரியமுண்டு.

இவரை கி. மு. 402-ல் 'ப்ராக்ஸீனஸ்' என்னும் பியோஷிய னொருவன் ஸைரஸினுடைய சைனியத்தோடு சேர்ந்து சண்டை செய்வதற்காகக் கூப்பிட்டான். ஸெனபன் 'ஸாக்ரடீஸை'க் கேட்க அவர் 'டெல்பிக்குப் போய் அங்கிருந்த தேவதையின் முன் குறிகேட்டு அதன்படி செய்யுமாறு சொன்னார். ஸெனபனுக்கோ எப்படியாவது அந்தச் சைனியத்துடன் சேர்ந்து சண்டை செய்யவேண்டுமென்ற எண்ண மிருந்தபடியால், குறிகேட்பதில் அந்த சைனியத்துடன் சேரலாமா, கூடாதா என்று கேட்டால் விரோதமாகச் சொல்லிவிட்டால் என்ன செய்வதென்று பயந்து, தம்கேள்வியையே சரியான பதில் வரும்படி மாற்றிக்கேட்டு, சார்டிஸ்போய் அந்த ஸைனியத்துடன் சேர்ந்துவிட்டார். இந்த சேனையின் செல்லுதலுக்குத்தான் 'பதினுபிரத்தின் படை யெழுச்சி' என்று பெயர் விளங்குகின்றது.

அந்த ஸைரஸ் தம் சகோதராகிய 'ஆர் டாக்ஸரஸ் என்னும் வேந்தனுடன் சண்டை செய்து ராஜ்யம் பெறுவதற்காக பெருஞ்சேனை சேர்த்துக்கொண்டுபோனார். க்ரேக் ஸைனியம் இதுவரையிலும் அவ்வளவு தூரம் சென்று சண்டை செய்யாததனால், அங்குவர ஸம்மதிக்காதென்று ஸைரஸ் சமீபத்திலுள்ள ஓரிடத்தைச் சொல்லி யழைத்துச்சென்றார். நெடுந்தூரஞ் சென்றும் குறித்த இடம் வாராததால் க்ரேக் ஸைனியம் தங்கள் நாட்டுக்குத் திரும்ப யத்தனிக்க அவர்களுக்கு ஸைரஸ் சம்பளத்தை உயர்த்தியும், பலவெகுமதிகளை கொடுத்தும் திருப்தியடையச் செய்து அழைத்துச் சென்றார். இவர்கள் சென்றவழி, பாலைவனங்களின் வழியாகச் சென்றதால் மிகவும் கஷ்டப்பட்டுச் சென்றார்கள்.

கடைசியில் 'கூனக்ஸா' என்னுமிடத்தில் எதிரியின் ஸைனியம் வந்து கலந்து எதிர்த்தன. ஸைரஸுக்கு ஆர்டாக்ஸரஸைக்கண்டு கொன்றுவிடவேண்டுமென்ற அவாவிருந்தபடியால், அவனைத்தேடிக்கண்டு, ஈட்டியால் கண்ணில் குத்தப்போக அக்குறி தவறிவிட்டது. ஆர்டாக்ஸர், ஸைரஸைக் குத்த அவர் குதிரையினின்று கீழேவிழுந்தார். யுத்தக்களத்தில் மற்ற விடங்களில் க்ரேக்கர்களே ஜயமடைந்தார்கள். அவர்கள் ஸைரஸ் இறந்ததை யறியாமல் தங்கள் தங்குமிடம் செல்ல அங்கு கூடாரங்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. பிறகு ஸைரஸ் இறந்ததை யறிந்து பதினுயிரம் திரும்பியோடத் தயாராயிற்று. இவர்கள் திரும்பிச் செல்லுகையில் வந்த வழியாகவே போனால் பாலைவனங்களின் வழியாகப் போகவேண்டியிருக்குமாதலால், வடக்கு வழியாகச் செழிப்பான இடங்களின் நடுவே சென்ற ஒரு மார்க்கமாகப் புறப்பட்டார்கள். 'டிஸ்ஸா பர்னஸ்' என்னும் ஆர்டாக்ஸரஸ் தளகர்த்தனொருவன் இவர்களை யழைத்துச் செல்வதாகக் கூடச்சென்றான். ஆனால் 'க்ரேக்' ஸைனியத்துக்கு அவன்மேல் நம்பிக்கையில்லாததால், க்ளியார்க்கஸ் என்னும் அவர்கள் தலைவன் சில வீரருடன், டிஸ்ஸாபர்னஸுடன் இரகசியம் பேசுவதற்காக ஸாப் நதிக்கரையில் ஒரு தனியிடத்துக்குச் செல்ல, அங்கே டிஸ்ஸாபர்னஸ் அவர்களைக் கொன்றுவிட்டான். இதைக் கேட்டதும் க்ரேக் வீரர்களுக்கு உண்டான துக்கத்திற்கும் பயத்திற்கும் அளவில்லை. அவர்களோ சத்துருக்களால் சூழப்பட்டிருந்தார்கள். மேலே நடத்துவதற்கும் தகுந்தவர்கள் ஸெனபனைத்தவிர வேறொருவருமில்லை.

இதுவரையிலும் ஓர் அற்ப யுத்தவீரனாக விருந்த ஸெனபன், இதுமுதல் ஒரு சிறந்த தளகர்த்தனாகின்றார். ஸெரிஸாபஸ் என்பவர் சேனையின் முன் பாகத்தையும் ஸெனபன், டைமேஷன் என்பவர் பின் பாகத்தையும் நடத்திக்கொண்டு போனார்கள். இவர்கள் ஸாப், டைகிரிஸ் நதிகளைத் தாண்டி, லாரிஸ்ஸா, மெஸ்பிலா, வழியாக ஸாகுக்கு வந்து பிறகு குருடிஸ்டான் வந்தார்கள். இங்கு குருடுஸ் ஜனங்கள் இவர்களை வந்து எதிர்க்க அவர்களை வென்று ஜபல்ஜுடி வழியாக ஒரு குன்றைத் தாண்டிச்சென்றார்கள். பின்னால் குருடுஸ் துரத்திக்கொண்டுவர 'ஸென்டைர்ட்ஸ்' நதிக்கரை வந்தார்கள். நதிக்கு அக்கரையில் ஆர்மீனியர்கள் இவர்களை எதிர்ப்பதற்காகத் தயாராக நின்றார்கள். யாது செய்வதென்று யோசனை செய்வதற்குள் சிலர் நதியைக் கடக்க ஒரு பாலமிருப்பதாகச் சொல்ல உடனே ஸெனபன் ஸைனியத்தின் முன்பாகத்தை செரிஸாபஸ் இடம் ஒப்பிவித்துவிட்டுத் தாம் பின்பாகத்தை

நடத்திச் சென்றார். இவர்கள் வருவதைக் கண்ட ஆர்மீனியர் ஒரு பெரிய சேனைவருவதாக எண்ணிப் பயந்து ஓடிவிட்டார்கள். பிறகு, ஆர்மீனியா வழியாக 'கான்ஸ்' என்னுமிடம் வந்தார்கள். இங்கிருந்து செல்லுகையில் சத்துருக்களால் சூழப்பட்ட ஒரு வழியைக் கண்டார்கள். இங்கு அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. செரிஸாபஸ் நேரேசென்று பகைவர்களை எதிர்த்துச் செல்லலாமென்றார். ஸெனபன் ராத்திரியில் சில வீரர்களை அனுப்பி மேலேயிருந்த ஓரிடத்தைப் பிடித்துக்கொள்ளலா மென்றார். ஆனால் அப்படிச் செய்வது வழியைத் திருடுவது போலாகும் என்று தடுத்துப் பிறகு சரியென்று சொல்ல அப்படியே சென்றார்கள். பகைவர்கள் எதிர்க்க, அவர்களை வென்று அந்நாட்டுள் சென்றார்கள். இவர்களைக் கண்டதும் அவ்வூர் ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளை மலையினின்று கீழே எறிந்து தாமும் விழுந்திறந்தார்கள். பிறகு இவர்கள் 'காலிபஸ்' ஜனங்கள் நகரத்துள் சென்று 'ஜிம்னியஸ்' நகரம் வந்தார்கள. இந்த ஊர்த்தலைவன் ஓர் ஆள் அனுப்ப அவன் இவர்களை அழைத்துச் செல்லுகையில் முன்னிருந்த வீரர்கள் கடல் கடல் என்று கூச்சலிட்டார்கள். உடனே எல்லோரும் வந்து கடலைக்கண்டு மிக்க சந்தோஷமடைந்து அங்கு தங்கள் ஞாபகத்திற்காக கற்களால் ஒரு மேடை கட்டி அதை அலங்காரஞ் செய்தார்கள். அங்கிருந்து இவர்கள் மேலே சென்று ஓர் ஆற்றங்கரைக் காண அக்கரையிலுள்ள 'மெக்ரோன்ஸ்' முதலில் எதிர்த்தார்கள். பிறகு சமாதானமாக வந்து இவர்களை கால்சியர்கள் தேசத்தெல்லையில் கொண்டுவந்து விட்டார்கள். இவர்களும் க்ரேக்கர்களை எதிர்ப்பதற்குத் தயாராக நிற்க அவர்களையும் வென்று துரத்திவிட்டு அவர்கள் நாடுவழியாக 'ட்ரெபீஸஸ்' வந்து சேர்ந்தார்கள். இங்கு ஒருமாதம் இருந்து சந்தோஷமாகக் காலத்தைக் கழித்தார்கள். இத்துடன் ஸெனபன் 'பதினாயிரத்'தின் திரும்புகையை முடித்துவிடுகின்றார்.

இங்கு ஸெனபன் கொஞ்ச சைனியத்தைக் கொண்டு அருகிலிருந்த 'ட்ஸைலே' என்னும் ஜனங்களை எதிர்த்துக் கொள்ளையடித்தார். இப்பொழுது வீரர்களெல்லாரும் மிகக் களைத்துப்போயிருந்தபடியால் செல்லவேண்டிய பாக்கி பாகத்தைக் கடல் மார்க்கமாகச் செல்வதாக நினைத்து, 'சேரிஸாபஸ்' என்பவனை பைஸாண்டியத்துக்குப் போய் அங்கிருந்து கப்பல் அனுப்பும்படி அனுப்பினார்கள். நெடுநாள் காத்திருந்தும் அவன் திரும்பி வாராததால் அவர்கள் தரை மார்க்கமாகவே போகலாமென்று, வியாதியா யிருந்தவர்களையும் வயோதிகர்களையும் அங்குக் கிடைத்த சில கப்பலில் அனுப்பிவிட்டுத் தாங்கள் கடற்கரையின் வழியாகச் சென்றார்கள். மூன்றுநாள் 'ஸிராஸஸ்' வந்து வீரர்களை எண்ணிப்பார்க்கையில் மிகவும் குறைந்திருப்பதைக் கண்டு வருத்தத்துடன் 'மாஸீனேஸி' ஜனங்களிருந்த நகர் வந்து அந்தப் பட்டணத்தைக் கொள்ளையடித்துக் கஷ்டமில்லாமல் 'காட்யோரா' வந்து சேர்ந்தார்கள். இங்கு ஸெனபன் ஏதாவது பக்கங்களிலுள்ள நாடுகளை ஜயிக்கலாமென்று உத்தேசிக்கையில் அங்கிருந்த 'ஸைனோப்' வியாபாரிகள் பயந்து இவர்களுக்குவேண்டிய திரவியமும் கொடுத்து இவர்களை அழைத்து வழிகாட்டிச் செல்வதாக வந்து வேண்டினார்கள். இங்கு சிலர் ஸெனபனை வீணாகக் குற்றஞ் சாட்டக் கடைசியில் அவர் செய்தது யாதொன்றும் பிசகல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. பிறகு, ஸைனியம் கருங்கடல் வழியாக 'ஸைனோப்' வந்து அங்கு வீரர்கள் யாரையாவது கொள்ளையடித்துப் பொருள் சேர்க்க வேண்டுமென்று விரும்பி ஸெனபனைத் தலைவனாயிருக்கும்படி வேண்ட அவர் தேவதை சரியாகப் பதில் கொடுக்காததனால் முடியாதென்று சொல்லிவிட்டார். பிறகு, அவர்கள் 'ஹெராக்ளியா' வந்தார்கள், அந்த ஜனங்கள் இவர்களை மரியாதையுடன் அழைத்து உபசரித்தார்கள். பிறகு, இவர்கள் மிச்சமுள்ள மார்க்கத்தை எப்படிச் செல்வதென்று யோசனை செய்கையில் சிலர் அந்த 'ஹெராக்ளியர்' களிடமிருந்து 2300 பவுன் கப்பம் வாங்கவேண்டு மென்றார்கள். அதை ஸெனபன் கூடாதென்று விட்டார். இதைக் கவனியாமல் அவர்கள் தங்களுள் சிலரைக் கப்பத்தைக் கேட்கும்படி அனுப்பினார்கள். இதனால் வீரர்களுள் கலகமுண்டாயிற்று. கால்பி வந்ததும் 'செரிஸாபஸ்' ஜ்வரமடித் திறந்துவிட்டார். ஸெனபன் முதல் தலைவரானார்.

ஸெனபன் ஸைனியத்தை அழைத்துக்கொண்டு பல நாடுகளைக் கொள்ளையடித்து 'க்ரைஸாபோலிஸ்' வந்தார். ஸெனபன் கொஞ்ச நாளில் ஆதென்ஸ் போகவேண்டுமென்று பிரிந்துவிட்டார். சில நாளைக்குப்பின் ஸெனபன் 'அஜிஸிலஸ்' என்னும் ஸ்பார்டா தேசத்து வேந்தனுடன் பெர்ஷியாவுக்கு எதிரியாக ஆசியாமைனரில் சண்டை செய்து மிகுந்த திரவியத்துடன் ஆதென்ஸுக்குத் திரும்பி வந்தார்.

இவர் வருவதற்குச் சில வாரங்களுக்கு முந்தியே 'ஸாக்ரடீஸ்' கடவுளடியைக் கலந்துவிட்டார். ஸெனபன் மூன்று வருஷம் ஆதென்ஸிலேயே யிருந்தார் பிறகு கி. மு 394-ல் 'கரோனியா' என்னுமிடத்தில் ஸ்பார்டாவோடு சேர்ந்து ஆதென்ஸையும், தீப்ஸையும் தோல்வியடையச் செய்தார். அதீனியர்கள் தம் நாட்டுக்கு விரோதமாகச் சண்டை செய்ததால் இவரை நகரப்ரஷ்டம் செய்து துரத்திவிட்டார்கள். ஆனால் ஸ்பார்டாவிலுள்ளவர்கள் இவருக்கு 'ஸில்லஸ்' என்னுமிடத்தில் ஒரு வீடு கட்டிக்கொடுத்து அங்கிருக்கும்படி செய்தார்கள். அங்கு ஸெனபன் வேட்டையாடுவதிலும், பல புஸ்தகங்கள் எழுதுவதிலும் தம் வாணாளைக் கழித்துவந்தார். அவர் 'அஸிடேட்ஸி' னிடம் கொள்ளையடித்திருந்த திரவியத்தால் 'டையானே' என்னும் தேவதைக்கு ஒரு கோயில் கட்டி வருடந்தோறும் ஒரு உற்சவம் நடக்கும்படியும் செய்தார்.

கி. மு. 371-ல் 'ல்யூக்ட்ரா' என்னுமிடத்தில் 'ஸ்பார்டா' தோல்வியடைந்த பிறகு ஸெனபன் 'காரிந்தில்' வந்து வசித்தார். பிறகு ஸ்பார்டாவும், ஆதென்ஸுடம் ஸமாதானம் செய்து ஒன்றுசேர ஆதென்ஸுக்கு வந்துவிட்டார்.

கி. மு. 362-ல் 'மான்டீனியா' என்னுமிடத்தில் 'க்ரில்லஸ்' என்னும் அவர் புத்திரனொருவன் சண்டைசெய்து மடிந்தான். புத்திரனிறந்ததற்காக அவர் வருத்தப்படவே யில்லையாம். பிறகு, ஸெனபன் தம் வாணாள் முழுதையும் ஆதென்ஸில் புஸ்தகங்கள் எழுதியே கழித்து வந்தார். அவர் புஸ்தகங்களெல்லாம் ஐந்தாவது நூற்றாண்டில் நடந்த விஷயங்களையும், அந்நாள் ஜனங்களின் நடையுடை பாவனைகளையும் நன்கு விளங்கத் தெரிவிக்கின்றன. அவர் நெடுநாள் வரையிலும் பிழைத்திருந்து தொண்ணூறு வயதுக்குமேல் தேகவியோகம் எய்தினாரெனத் தெரியவருகின்றது. அவர் எழுதிய புஸ்தகங்களுள் முக்கியமானவை--'ஹெல்லனிகா,' 'ஸைரோபேடியா,' 'அஜிஸிலஸ்,' 'ஹீரோ,' 'பாங்க்வெட்,' 'ஹிப்பார்கிகஸ்' 'வேட்டையாடுதல்,' 'குதிரைசவாரி' முதலியன.

சிவ புராண சரிதங்கள்.

STORIES FROM SIVA PURANAS

பத்திமானருக்குப்பேரானந்தம் பாலிக்கக்கூடிய பல தலங்கள் நமது புண்ணிய பூமியாகிய தென்னிந்தியாவிலுள்ளன என்பதைநாம் யாவரும் அறிவோம். அத்தலங்களுட் சிவஸ்தலங்கள் பெரும்பான்மைய. அச்சிவஸ்தலங்களுள் 274-ஸ்தலங்கள் தேவாரம் பெற்ற தலங்கள். இந்த இருநூற்றெழுபத்துநான்கு ஸ்தலங்களின் இருப்பிடமும், அத்தல விசேடங்கள் முதலியனவும் என் தந்தையார் அச்சிட்ட "சிவஸ்தல மஞ்சரி" என்னும் நூலில் விவரமாகக் காணலாம். ஆனால் ஒவ்வொரு ஸ்தல சம்பந்தமான சிவ சரிதங்கள் அவ்வத் தலத்துக்குள்ள ஸ்தல புராணங்களிற்றான் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பாற்கடலினின்றும் தேவர்பொருட்டு அமுதம் கடைந்தெடுத்த மகா விஷ்ணுவைப்போலத் தமிழ்ப் பாப்பினின்றும் தமிழர் பொருட்டுப் பல அரிய விஷயங்களைத் திரட்டிப் பயனூட்டும் நமது "விவேக போதினியின்" வாயிலாக ஸ்தல சம்பந்தமான திவ்ய சரிதங்களை வெளியிட்டால் பத்திமான்களுக்குப் பயனும் உவகையும் பயக்குமென நம்பி ஈண்டு எழுதுகின்றேம்.

I. வேதாரணியம்

இத்தலம் தஞ்சை ஜில்லாவில் திருத்துருப்பூண்டி என்னும் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு 22-மைல் தூரத்திலுள்ளது நாகபட்டினத்துக்குத் தெற்கு 30-மைல். வேதங்கள் பூஜை செய்த தலம். இவ்விஷயம்—

> "பல காலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
> மலரால் வழி பாடுசெய் மாமறைக் காடா"

என்னும் தேவாரத்தா லுணரலாகும். இத்தலத்துக்கு மறைக்காடு என்றும், சுருதிகானனம், நிகம கானனம் என்றும் பெயர். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று காரணங்களாலும் மேம்பாடுடையது. இத்தலத்தில் மணிகர்ணிகை என்னும் தீர்த்தமும், வேத நதி என்னும் சமுத்திர ஸ்நாநமும் மிகவும் விசேஷம். இத்தலத்தின் பெருமையைச் சொல்லுகின்ற கதைகளுட் சில கீழ்க் கூறுவாம்:

(i) வேதாரணியத்துக்குச் சமீபத்தில் மேற்றிசையில் இராமசந்திரபுரம் என்னும் ஊரில்

கணித சாஸ்திரத்தில் வல்ல ஒரு பிராமண குலதிலகன் இருந்தான். அவன் மனைவி பெயர் தருமசீலை. அவர்களுக்கு இளஞாயிறுபோல ஓர் ஆண்குழந்தை பிறந்தது. கணிதநூலில் வல்ல அம்மறையவர் தன் குழந்தையின் ஜாதகத்தைப் பரிசோதித்துப் பார்த்தார். பார்த்ததிற் பதினாறாவது வயதில் கள்ளை உண்ணுவன், தாயை யிச்சித்த காமியாகுவன், பசுவதை செய்குவன் என்று ஏற்பட்டது. இத்தகைய பொல்லாத யோகம் தன் மகனுக்கு இருப்பதைக்கண்ட மறையவர் அதே ஏக்கமாக இறந்துபட்டனர். அவர் புதல்வனும் தனது தந்தைக்குச் செய்ய வேண்டிய கடன்களைச் செய்துமுடித்து ஒருநாள் தனது தந்தை எழுதிவைத்த சாதகப் பயனைப் பார்த்தான். பார்த்ததும் பெருந்துயரம் அடைந்தவனாய்—"அந்தோ! இதுவோ என் விதி" என அலமந்து, "இவ்விதியை யான் எவ்வாறு வெல்லுவன்" எனத் திகைத்து, இவ்வூரில் இருந்தால் தானே தாய் சம்பந்தமான பாவம் எனக்கு நேரிடக்கூடும் என நினைத்து, இவ்வூரைவிட்டு அகலுவதே உசிதம் எனத் தீர்மானித்து, அவ்வூரைவிட்டு நீங்கினான். நீங்கித் திருவாரூர், கும்பகோணம், சிதம்பரம், காஞ்சீபுரம் முதலிய திவ்ய ஸ்தலங்களைத் தரிசித்துக் கங்கையாடி விசுவேசரைத் தரிசிக்க ஆர்வமுற்று வடதிசை நோக்கிக் கடுநடை கொண்டனன். காசியையடைந்து கங்கா ஸ்நாநம் செய்து, பின்பு கயா ஸ்நாநமும் செய்து, ஆங்குத் தன் பிதுருக்களுக்குச் சிரார்த்தம் முதலியன செய்து பின்னும் பல ஆலயங்களையும் தேசந்தோறுந் திரிந்து தரிசித்து வந்தான். இங்ஙனம் வருநாளில் பதினைந்தாவது வயது நிரம்பிற்று. விதிவசத்தால் அவனுக்குத் தன் ஊரைப் பார்க்கவேண்டும் என்னும் பேரவா உதித்தது. உதிக்கத் திருவாரூர் வந்து சேர்ந்தான். அவ்வூரில் சிலர், "இராமசந்திரபுரம் முன்போல இல்லை. ஊரே கிலமாய்ப் போய்விட்டது" என்றனர். இவ்வுரையைக் கேட்டதும் ஊரைப்போய்ப் பார்ப்போம் என்னும் ஆசை பின்னும் அதிகமாயிற்று. உடனே திருவாரூரினின்று தன் ஊர் நோக்கி நடந்தான். ஞாயிறு மறையும் வேளையில் ஊர்வந்து சேர்ந்தான். சந்தியாவந்தனம் முதலியன முடித்து, ஊர் பாழ்பட்டுக் கிடப்பதை நோக்கிப் பரிவுற்று, தான் முன் பிறந்த வீட்டைத் தேடியுங் காணாதவனாய், எதற்கும் பொழுது விடிந்தால் பார்த்துக்கொள்ளுவோம் என்று, அங்கும் இங்கும் இரந்து ஐயம் ஏற்று, அதனை உண்பதற்காக ஒரு வீட்டுக்குச் சென்றான். அவ்வீட்டில் ஒரு கைம்பெண் இருக்கக் கண்டு, அவள் தான் தன் தாய் என்பது தெரியாமல், அவளை நோக்கி "என் கையில் உள்ள அன்னத்தை இங்கு இருந்து உண்ண இடந் தருவீர்களா?" என்றான். இதனைக் கேட்ட அவள், வந்தவன் தன் மகன் என அறியாது, மனதில் காமவிகாரமுற்று "அப்படியே உண்ணலாம், தடையில்லை" என்றாள். அவன் உண்ணும்போது தான் சமைத்து வைத்துள்ளபதார்த்தங்களையும் அவன் இலையில் இட்டனள். அவன் உண்டு முடிந்ததும் தாகத்துக்குத் தண்ணீர் கொடுங்கள்" என்று கேட்டான். அப்போது அவள் "இதுதான் தக்க சமையம், ஆனால் இவ்வாலிபன் தவத்திற் சிறந்தவனாய்க் காண்கின்றான். இலேசாக மருளமாட்டான்" என நினைத்து ஒரு பாத்திரத்திற் கள்ளைப் பெய்து தண்ணீரெனத் தந்தாள். அதிக தாகமாக இருந்தபடியால் நிதானியாது அதை அவன் உண்டான். உண்டதும் உன்மத்தனாகி அருகிருந்த ஒரு தடியைக் கைப்பற்றிப் பக்கத்திற் கட்டியிருந்த பசுவை ஒரே அடியில் அடித்துக் கொன்றான். அவன் வெறியுற்றதைக் கண்ட மாது அவன் தோளைத் தழுவி இன்பம் புணர்ந்தனள். இக்கொடிய செயலைச் சகிக்க முடியாதது போலக் கங்குல் நீங்கிற்று. மதுமயக்கமும் மறையவனை விட்டகன்றது. அகலவும், "என்ன இவ்வாறு செய்தோமே" என நெஞ்சம் திடுக்கிட சாதகக் குறிப்பும் நெஞ்சில் ஞெரேலென உதித்தது. உதித்ததும் அம்மாதை மறையவன் நோக்கி "நீ யார்" என்றனன். வினவிய மறையவனை நோக்கி மாது கூறுகின்றாள்—"நான் இவ்வூரிற் கணித சாஸ்திரத்தில் மிக வல்ல ஒரு மறையவரின் மனைவி. எங்களுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவர் அப்புதல்வனுடைய ஜாதகத்தைப் பார்த்ததிற் கள்ளையுண்டு பசுவதை செய்து தாயையும் புணருவன் என்று ஏற்பட்டது. மகனுக்கு இவ்வாறு பொல்லாங்கு உள்ளதே என நினைத்து நினைத்து ஏக்கமுற்று அவர் மாய்ந்தார். மைந்தனும் அச்சாதகக் குறிப்பை நோக்கிப் பயந்து பரதேசம் போனான். கணவனையும் கான்முளையையும் கைவிட்டுப் பிரிந்து "தருமசீலை" என்னும் பெயருள்ள நான் இப்போது "கருமசீலை" யாயினேன்"

என்று சொல்லி நின்றாள். காதில் நாராசம் வீழ்வதுபோலத் தாயின் சொல் தன் காதில் விழ, "ஐயோ! தந்தைபாரது சாதகக் குறிப்பே நிலைநின்றுவிட்டதே" எனத் துக்கித்துப் பின்னும் "அந்தோ! மது உண்டேன், பசுவைக் கொன்றேன், அல்லாமலும், என் அன்னையையும் புணர்ந்தேன், என்னே விதியின் வலி" எனத் தன்மீது மிக வெறுப்புற்று "பெரு நரகத்துக்கு ஆளாக்கக் கூடிய இம்மாபாதகங்களைச் செய்தும் இவ்வுடற் சுமையைப் பொறுப்பனோ. என் கழுத்தை அரிந்து உடலை மாய்ப்பதே தகும்" என நினைத்து வாளை எடுத்துக் கழுத்திற் பூட்டினன், பூட்டிக் கழுத்தரியும் போதில், புண்ணிய தலங்களைத் தரிசித்த பெரும் பயனால், சுருதி கானனத்தில் வீற்றிருக்கும் எம்பெருமான், ஊட்டி அறுபடுமுன் அவ்வாளைத் தங்கரத்தாற் பற்றித் தமது திருவாக்கால் "வாட்டிறம் தவிர் தவிர்" என உரைத்து எதிர்நின்று "அஞ்சல்! மைந்த! நெஞ்சில் வாட்டம் தவிர்தி. நமது மணிகர்ணிகைத் தீர்த்தத்திலும் வேதநதியிலும் வந்து மூழ்குவையானால் உனது மாபாதகம் நீங்கும்" என்றனர். இவ்வுரையைக் கேட்ட மைந்தன் "என் அன்னையின் வினை எவ்வாறு நீங்கும்? இறைவனே!" எனப் பணிந்தனன். "அவளும் அப்புண்ணிய தீர்த்தங்களில் தோய்ந்தால் அவள் பாபம் போம்" என்றனர் கடவுள். இவ்வாறு சொல்லி இறையவன் மறைய, தன் தாயுடன் அம்மறையவன் வேதாரணியத்தை அடைந்து, இருவரும் மணிகர்ணிகையிற் றோய்ந்து, வேதநதியிலும் விருப்புடன் படிந்து, திருமறைக்காட்டு நாதர் சந்நிதியிற் சென்று—

"வேதநா யகனே போற்றி
    விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி
    மறுசம யங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி
    பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதகம் அனைத்துந் தீர்க்கும்
    பராபரா போற்றி போற்றி."

எனத் துதித்து நின்றான். பின்பு "யாழைப் பழித்த மொழியம்மை"யின் சந்நிதியிலும் சென்று வணங்கிப் பணிந்து இருவரும் அன்புடன் நிற்க, இறையவன் அவர் இருவருக்கும் சாயுச்சிய பதவியைத் தந்தனர்.

வ. சு. செங்கல்வராயன்.

கஞ்சி கருடோத்ஸவம்

THE KANCHI GARUDOTSAVAM

காந்திகழும் காஞ்சியிலே
வான்புகழும் மாவரதன்
தேன்கமழும் திருவடியை
மான்மனமே மறவாதே.

புராணங்களில் பிரஸித்தமாக முத்திதரும் நகரங்களென்று சொல்லப்பட்ட அயோத்தி, மதுரை, காசி, துவாரகை முதலானவைகளில் மிகவும் சிறந்தது காஞ்சீபுரம் என்கிற ஸ்தலம். திரிமதஸ்தர்களும் கொண்டாடும்படியான பெருமையும் ஐதிஹ்யங்களும் அநேகம் இங்கே உண்டு. முக்கியமாய் வைஷ்ணவர்கள் சிரேஷ்டமாகக் கொண்டாடும் நூற்றெட்டுத் திருப்பதிகளில் முதன்மையான கோயில், திருமலை, பெருமாள் கோவில் என்கிற மூன்றனுள் கடைசியாகச் சொல்லப்பட்ட பெருமாள் கோவில் என்பது இந்தக் காஞ்சீபுரம்தான். அநேக விஷ்ணு கோவில்கள் இங்கே சிறந்து விளங்குவதால் இதற்கு அது ஒரு காரணப்பெயர். அல்லாமலும் தேவராஜப்பெருமாள் கோவில் என்கிற பெயர் முதற்குறையாய் அப்படி வந்தது என்றும் சொல்லுவார்கள். வைஷ்ணவ மதத்தை நன்றாக ஸ்தாபித்துச் சீர்மை பெறும்படி செய்த "ஸ்ரீ ராமாநுஜாசாரியர்" என்கிற மஹான் சிறு பிராயம் முதல் இங்கே வசித்து வித்தியாப்பியாஸம் பயின்று, தமது ஆசார்யரிடத்தில் உபதேசமும் ஸந்நியாசி ஆச்ரமமும் பெற்று கடைசியில் எம்பெருமானிடத்திலிருந்து திருக்கச்சி நம்பி என்கிற அந்தரங்க கைங்கர்யபரர் மூலமாக வேதாந்தத்தில் உள்ள சம்சயமும் தீர்ந்து தெளிவடைந்து விளங்கினர். இவ்வாறே சைவர்களுக்கு முக்கிய க்ஷேத்திரங்களுள் முதன்மையான ப்ருதிவீலிங்க க்ஷேத்திரமும் ஸ்ரீ சங்கரபகவானுக்கு பிரத்யக்ஷமான ஸ்ரீ காமாக்ஷி ஸந்நிதானமும் இங்கே இருக்கின்றன.

இப்படிச் சிறப்புடைய இக்காஞ்சிமாநகரில் பிரதிவருஷம் வைகாசிமாதத்தில் தேவராஜப் பெருமாளுக்குச் சிறந்த உத்ஸவம் நடக்கிறது. "வைகாசி உத்ஸவம்" என்றும், "கஞ்சி கருடோத்ஸவம்" என்றும், இமயமலை முதல் ஸேது பரியந்தம் அறியாதவர்களில்லை. இந்த உத்ஸவமானது பத்துநாள் நடக்கிறது வழக்கம். அதில்

மூன்றாவது நாள் காலை உத்ஸவம் 'கருடசேர்வை என்பது.

காஞ்சீபுரம் நீண்ட வில் வடிவமான நகரம். இந்த நகரத்தில் ஒரு கோடியில் ஸ்ரீ தேவராஜ ஸ்வாமி ஸந்நிதி. மற்றொரு கோடியில் ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஸந்நிதானம். இந்தத் தேவராஜஸ்வாமி ஸந்நிதியைச் சுற்றியுள்ள பாகத்தை சின்ன காஞ்சீபுரம் என்றும், விஷ்ணுகஞ்சி என்றும் சொல்லுவார்கள். அப்படியே ஏகாம்பரநாதர் கோயிலைச் சுற்றியுள்ள பாகத்தை பெரிய காஞ்சீபுரம் என்றும் சிவகஞ்சி என்றும் சொல்லுவார்கள். மேற்குப்பாகத்தில் நெசவுத்தொழிலில் சிறப்படைந்திருக்கிற அநேக தொழிலாளிகள் வசிக்கிறார்கள். அந்தப் பாகத்திற்குப் பிள்ளை பாளையம் என்று பெயர்.

இந்த வைகாசி உத்ஸவத்தில் ஒன்றிரண்டு நாள் தவிர மற்ற நாட்களில் இரண்டு வேளையும் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி பெரிய வாஹனங்கள்மீது மிகவும் சிறப்பாக சின்ன காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டு வீதிகளில் வலமாக எழுந்தருளி, பெரிய காஞ்சீபுரத்தில் கச்சி வீதியிலுள்ள "கங்கைகொண்டான்" மண்டபம் என்று சோழராஜன் கட்டிவைத்ததாகச் சொல்லப்படுகிற மண்டபத்தில் சற்று எழுந்தருளியிருந்து, பிறகு கோவிலுக்குத் திரும்பிவிடுவார். இவ்வாறு நடக்கும் உத்ஸவங்களில் மூன்றாம் நாள் நடக்கும் "கருடசேர்வை" மிகவும் சிறந்ததாகும். அந்தத் தினத்தில் முதனாள் இரவு 12-மணி முதல் ஜனங்களெல்லாரும் திரளாக வந்து கோவிலுக்குள்ளும் முன் ஸந்நிதி வீதியிலும் நிறைந்துவிடுவார்கள். கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளுக்கு உண்டாகும் வருத்தத்திற்கு அளவே இல்லை. எவ்வளவு கண்டிப்பாக உத்தரவு செய்தாலும் ஜனங்கள் அங்கே எப்படியாகிலும் கூடிவிடுவார்கள். ஸ்வாமி புறப்படும் பொழுது கோவில்முதல் தெருவெல்லாம் சுமார் ஐந்து மைல் தூரத்திற்கு ஒரே கூட்டமாக நிறைந்துவிடும்.

அதிகாலை, சுமார் நான்கு மணிக்கு ஸ்வாமி வாஹன மண்டபத்தில் கருடவாஹனத்தின் மேல் காண்போர் கண்களைக் கவரும் தன்மையதான அலங்காரத்துடன் காட்சி தந்தருளுவார் :—

கருமுகில் தாமரை காடு பூத்துநீ
டிருசுடர் இருபுறத்தேந்தி எடவிழ் [மேல்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன்.

என்று கம்பர் கூறியதை மெய்ப்பிக்கும்படியாயிருக்கும். அதாவது:—கறுத்ததொரு காளமேகம் தன் பரப்படங்களும் தாமரை மலர்களை புஷ்பித்து, நித்ய ப்ரகாசமுள்ள சந்திர சூர்யர்களை இரண்டு பக்கத்திலும் ஏந்திக்கொண்டு, தனித்துழைந்ததோர் கொடிமின்னல் தன் மத்தியில் நிலைநின்று விளங்கிக்கொண்டிருக்க, ஓர் பெரிய சிவந்த பொன் மலையின்மேல் இனிப் படிந்திருக்குமாப்போல், எம்பெருமானை சர்வேசுவரன் கருடன்மேல் வந்து தோன்றினன்.

சற்று நேரத்திற்கெல்லாம் அங்கிருந்து புறப்பட்டுத் தனது ஸந்நிதானமாகிய அந்த ஹஸ்திகிரியை வலமாக ஆழ்வார்கள் எழுந்தருளியிருக்கும் ப்ராகாரம் வழியாய் எழுந்தருளுவார். இப்படி எழுந்தருளுவது ஸ்ரீராமாநுஜாசார்யர் காலந்தொடங்கி ஏற்பட்டதென்று ஓர் ஐதிஹ்யம் வழங்கி வருகின்றது. "பக்தருக்கென்றே உருக்கொண்டு கோவில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் கருடன்மீது எல்லாருக்கும் காட்சிக் கொடுத்துக் கொண்டு வெளியே எழுந்தருளி நாட்டாரை வாழ்விக்க, கோவிலில் ப்ராகாரத்தில் நிரந்தரமாகக் காத்துக்கிடக்கும் எம்போன்றவர்களுக்கு இறைப்பொழுதாயினும் முகங்காட்டலாகாதா" வென்று ப்ராகாரத்தில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வார் ப்ரார்த்தித்ததாகவும் அதை அறிந்த எம்பெருமானார் அக்காலம் முதல் அந்தப்ராகாரம் வழியாய் ஸ்வாமி திருவலமாக எழுந்தருளின பின்பே வெளிவீதிகளில் எழுந்தருள ஏற்பாடு செய்ததாகவும் சொல்லுவார்கள். இதற்காக திருவாய்மொழியினின்றும்

"அருளாத நீருளிய வாராவிது வாமுன்
அருளாழிப் புட்கடவீர் அவர்வீதி யொருநாளென்
றருளாழி யம்மானைக் கண்டக்கா விதுசொல்லி
யருளாழி வரிவண்டே யாமும் என் பிழைத்தோமே"

என்கிற பாசுரத்தையும் சொல்லுவார்கள். அதாவது:—"கொஞ்சமேனும் அருள் செய்யாத தேவரீர்! இப்படி 'பாம்பணையான் வார்த்தையொன்றே கதி என்று காத்து கிடக்கும்' அவருடைய ஆத்மா, ஸத்தை யழியுமுன்னமே அவர் இருக்கும் வீதிவழியாக அருளே வடிவா

யுள்ள கருடப்புள்ளை ஒரு நாளைக்காவது செலுத்த வேண்டும்" என்னு மிங்கொரு வார்த்தையை அருளும் தன்மையுள்ள கடல்போன்ற நிறமுள்ள அம்மானைக்கண்டால் கிருபை செய்து சொல்லவேண்டும் என்றும், அப்படிச் செய்யாமல் மறுமும்படியான பெரிய அபசாரத்தைத் தாம் ஒன்றும் செய்யவில்லை என்றும், அழகிய வண்டைப் பார்த்து ஆழ்வார் சொல்லியதாக உள்ள இப்பாசுரத்தை எடுத்துச் சொல்லுவார்கள். இப்படி உத்ஸவம் கண்டருளும்படி செய்த எம்பெருமானை ஆழ்வார் "ஆழிவரிவண்டே" என்று நாமமிட்டுச் சிறப்பித்தார் என்றும் வைஷ்ணவர்கள் கொள்கை.

இப்படி வலமாக எழுந்தருளி ஸந்நிதியின் திருமுன்பே கோபுரவாசலில் கூடியிருக்கும் ஜனங்களுக்குக் காட்சிகொடுத்தருளுவார். இந்த சேர்வை அதிக சிலாக்கியமானதென்றும் இகத்திலும் பரத்திலும் ஸகல நன்மைகளையும் தரக்கூடியதென்றும், இது கிடைப்பது ஓர் பெரிய நற்றவம் என்றும் ஜனங்களின் நம்பிக்கையாதலால் அனைவரும் இந்தக் காட்சிக்கு மேல் விழுந்து நெருக்குவார்கள். அந்தக் கோபுரவாயிலில் ஒரு முகூர்த்த காலம் அசையாமல் ஸ்வாமி எழுந்தருளி யிருப்பார். அந்த சமயத்தில் சோளங்கிபுரம் தோட்டையாசாரியர் என்கிற ஒரு மஹானுக்கு ஸேவை சாதித்து முத்தி தந்ததாகவும் ஐதிஹ்யம் வழங்கிவருகிறது. இவர் பிரதி வருஷமும் வந்து பெரிய திருநாளில் ஸ்வாமியை மங்களாசாஸனஞ் செய்வது வழக்கமாம். ஒரு தடவை தமது அந்திய தசையில் இவ்வளவு தூரம் சோளங்கிபுரத்தினின்றும் வரச் சக்தியற்றவராய் அவ்விடத்திலேயே தக்கான் புஷ்கரணியில் ஸ்நாநஞ்செய்து ப்ரணாமபூர்வகமாக ஸ்வாமியைக் குறித்து பக்திபண்ணி சரணமடைந்ததாகவும், அப்பொழுது அவருக்காக ஸ்வாமி கருடாரூடராக அங்கே எழுந்தருளி காட்சிகொடுத்து அவரை வாழ்வித்ததாகவும், அந்த முகூர்த்தக் காலம் இங்கே ஸ்வாமியை எழுந்தருளப்பண்ண சாத்தியப்படாமல் கைங்கர்ய பரிஹாரங்கள் மிகவும் வருந்த, ஸ்வாமி தனது பக்தனுக்காகத் தான் வேறிடஞ் சென்றிருப்பதை அறிவித்து, திரும்பும்வரையில் அப்படியே நிலையாய் நிற்கும்படி ஆஞ்ஞாபித்ததாகவும், கர்ண பரம்பரையாக வழங்கிவருகிறது. அந்த ஐதிஹ்யத்தைக் கொண்டாடும்நிமித்தம் இப்போதும் ஒரு முகூர்த்த காலம் ஸ்வாமியை அங்கே கோபுர வாசலில் நிறுத்தி வைத்து பிறகு கர்ப்பூரநீராஞ்சநம் ஸமர்ப்பித்து எழுந்தருளப் பண்ணுவார்கள்.

வீதி வழியாக ஸ்வாமி எழுந்தருளும்போது உத்ஸவம் நடக்கும் வேறு இடங்களிலெல்லாம் ஸ்வாமியுடன் கூட்டம் வருவதும் போவதுமாக இருக்கும். இந்நகரில் ஆங்காங்கு சிறு வீதிகளிலும் சந்துகளிலும் வசிக்கும் ஜனங்களெல்லாரும் அதற்குச் சமீபமாயுள்ள பெரிய ரோட்டின் ஓரத்தில் வந்து கூடி, ஸ்வாமி தரிசனத்துக்கு வெகுநேரம் காத்துக் கிடப்பது வழக்கமாகையாலும் ஸ்வாமிக்குப் பின்னால் வெகு தூரத்தில் பெரிய வேதபாராயண கோஷ்டி வருவதையும் கண்டு தரிசிப்பது புண்ணியமென்று ஜனங்கள் பக்தியாய் நின்று கொண்டிருப்பதாலும் தெருவெல்லாம் எப்போதும் கூட்டம் நிறைந்தேயிருக்கும்.

வெயில் வருத்தத்தையும் வெகுதூரம்சென்று திரும்பவேண்டிய கஷ்டத்தையும் ஜனக்கூட்டத்தினால் உண்டாகும் சங்கடத்தையும் கவனிக்காமல் வேதபாராயணஞ் செய்துகொண்டு 100 முதல் 300 வரையிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒரே கோர்வையாய் பல வரிசையாய் இரண்டு வேளையும் ஸ்வாமிக்குப் பின்னால் போவார்கள். கருடஸேர்வை தினத்தில் இந்த கோஷ்டியிலுள்ளளார் தொகை மிகவும் அதிகமாயிருக்கும். அவர்களது பக்திக்கும் சிரத்தைக்கும் அளவில்லை. இதர திவ்ய தேசங்களைப் போலவும் இதர இடத்தில் நடக்கும் திருநாள்களைப்போலவும் அல்லாமல் இப்படிக் கைங்கர்யஞ் செய்யும் வேதப்பிராமணர்களுக்கு இந்தக் கோவிலினின்றும் தளிகைப் பிரசாதமாவது, வேறு விதமான வரும்படி மரியாதை சௌகரியங்களாவது ஒன்றுமில்லாதபடியால், இவர்கள் பண்ணும் கைங்கர்யமே மிகவும் சிறந்த புருஷார்த்த மென்னப்படும். வேறு எவ்வித பிரயோஜனத்தையும் நாடாமல் பகவானுக்கு முகோல்லாஸமே ஹேதுவாகச் செய்யும் கைங்கர்யமே மிகவும் மேலானது. இதை அநந்யப் பிரயோஜநமான கைங்கர்யமென்று சொல்லுவார்கள்.

இவ்வாறு ஸகல ஸம்ப்ரமத்துடன் ஸ்வாமி எழுந்தருளி கச்சி வீதியில் காட்சி தந்தருளும்

போது வைஷ்ணவர்களில் மற்றொரு கூட்டத்தார் ஸ்வாமிக்கு முன்னே கோஷ்டியாக நின்று பிரபந்த ஸேவையைத் தொடங்கி அதிக சிறப்பாகவும் விமரிசையாகவும் கைங்கர்யம் செய்துகொண்டு ஸ்வாமிக்குத் திருமுன்பே செல்வார்கள். ஒரு அரசன் திருநகர்வலம் வரும்போது "விருதாவலி" கூறிக்கொண்டு கட்டியக்காரர் முன்னே செல்ல "ஸ்வஸ்திவாசநம்" சொல்லி ஆசி கூறிக்கொண்டு பிராமணர்கள் பின்னே செல்லுமாறு, எம்பெருமானுக்கும் இராஜாவுக்குப் போலவே செய்யப்படுமதான இந்தச் சிறப்பெல்லாம் மிகவும் ஏற்றதாகவே இருக்கும்.

திரும்பி எழுந்தருளும்போது நேர்நிலைக்கருகில் ஜவுளிக்கடைத்தெருவிலுள்ள தாதர் கோவிலுக்கு முன்பாக ஸ்வாமியை நிறுத்தி அக்கூட்டத்தார் முன்பொருதடவை ஸ்வாமிக்குச் செய்த உபகாரத்திற்காக அவர்களுக்கு மரியாதை செய்து மாலையும் பிரஸாதமும் கொடுத்தான பிறகு ஸ்வாமி நேராகக் கோவிலுக்கு எழுந்தருளுவார்.

அப்பொழுது சற்றேறக்குறைய பகல் ஒரு மணி ஆகிவிடும். இப்படி எழுந்தருளும் தூரம் ஐந்து மைலுக்குக் குறையாது. இவ்வளவு தூரமும் வெயிலில் வருத்தம் பாராமல் வாஹநத்தின் பாரத்தையும் குடை சாமரை முதலானவைகளையும் இவைகளுக்கான பரிகாரங்களையும் தாங்கிக்கொண்டு கீழே தரையில் அடி கொதிக்கச் செல்லும் ஸ்ரீபாதம் தாங்குவார் பெருமையும் புண்ணியமும் சொல்லத்தக்கதல்ல. இத்தனை வைபவங்களுடன் நடந்துவரும் கருட ஸேவையைக் கண்டு களிப்படைந்து புருஷார்த்த லாபம் பெறும்படி ஜனங்கள் திரளாகக் கூடுவது நியாயமே.

P. விஜயராகவாசாரி.

பிரிட்டிஷ் துரைத்தன ரீதி

THE BRITISH CONSTITUTION

அத்தியாயம் 6

மந்திர சபையும் மந்திரிச் சங்கமும்

ராஜ்யபாரம் புரிவதில் அரசருக்கு ஆலோசனை சொல்லி உதவி செய்வதற்குச் சில சமர்த்தர்கள் அவசியம் வேண்டுமென்பது எல்லாருக்கும் நன்கு தெரிந்ததேயாம். அறிவினாலும் பயிற்சியினாலும் முதன்மை யடைந்தவரையே இப்பதவிக்குத் தேர்ந்தெடுப்பது பதிவு. அவ்வறிவாளர்களுடைய சபை பழைய ஆங்கிலவரசர்கள் காலத்தில் இருந்ததென்பதை முன்னமேயே பிரஸ்தாபித்திருக்கிறோம். அக்காலத்தில் இச்சபைக்கு விசேஷ அதிகாரமும் செல்வாக்கும் இருந்தன. காலக்கிரமத்தில் இதன் அமைப்பு மாறியது. சபை மெம்பர்கள் அதிகமாயினர். கவுரவத்துக்காக மட்டும் சிலரை இந்த சபையின் மெம்பராக்கினர். அவர்களுடைய ஆலோசனையை அரசர் கேட்பது கிடையாது. அவசியமான சந்தர்ப்பங்களில் அரசர், பொறுக்கி யெடுத்த சிலருடைய ஆலோசனையை மட்டும் கேட்பது பதிவாயிற்று. இதனால் ராஜ்யத்துக்குக் கேடு வந்துவிடுமென்று பயந்தவர் பலர். என்றாலும், இச்சிறு சங்கம் வரவரப் பிரபலப்பட்டு, ராஜ்ய நிர்வாகம் முழுவதையும் தன் வசமாக்கிக்கொண்டு பிரிடிஷ் துரைத்தனத்தின் முக்கிய அங்கமாகிய "காபினெட்" என்ற பெயருடன் விளங்குகின்றது.

பழைய மந்திரசபை, "பிரிவி கவுன்சில்" என்ற பேருடன் இன்னுமிருக்கின்றது. ராஜ்யத்தின் பிரதான சபை அதுவேயாம். அதன் மெம்பர்கள் மகாராஜாவால் நியமனம் பெறுவார்கள். மகாராஜாவுக்கு, ஒரு பிரிவி கவுன்சிலரை சபையைவிட்டு விலக்கிவிட அதிகாரமுண்டாயினும், அப்படிச் செய்வது கிடையாது. புதிதாக ராஜ்ய நிர்வாகம் வகிக்கவரும் மந்திரிமார்கள் அனைவரும் பிரிவி கவுன்சில் மெம்பராகச் சேர வேண்டுமென்பது விதி. பெரும் பதவிகளை வகித்தவர்களையே இச்சபை மெம்பராக்கி வந்தனர். ஆனால் இப்போது அப்பதவி வகியாதவர்கூட மெம்பராக விருக்கின்றனர். இச்சபைக்குப் பிரத்தியேகமான சட்ட நிர்மாண அதிகாரம் கிடை

யாது. ஒரு அரசர் இறந்துபோன சமயத்திலன்றி இந்தச் சபையோர் அனைவரும் ஒரே மொத்தமாக அழைக்கப்படுவதில்லை. இச்சபை கூடும்போது மகாராஜாதான் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க வேண்டும். அதிகாரம் வகிக்கும் மந்திரிமார் அனைவரும் இச்சபை மெம்பர்களாவர். அவர்கள் ராஜ்யாதிகாரத்தை இழந்துபோனாலும், இந்த சபை மெம்பர் ஸ்தானத்தை இழப்பது கிடையாது. பிரிவி கவுன்சில் மெம்பர்கள் அனைவருக்கும் "மகாகனம்" என்ற பட்டமுண்டு. இச்சபை மெம்பர்களின் சங்கியை அடிக்கடி மாறும். இப்போது அதில் சுமார் 250 மெம்பர்களிருக்கின்றனர். மந்திரிமார், மகாராஜாவுக்கு ஏதேனும் ஆலோசனை சொல்லும்போது "பிரிவி கவுன்சிலர்" என்ற ஹோதாவில்தான் சொல்கிறார்கள். பிரிவி கவுன்சிலில் இப்போது நடக்கும் காரியமெல்லாம், மந்திரிமார் செய்திருக்கும் நடவடிக்கைகளை அங்கீகாரம் செய்வதாகவே காணும்.

இவ்விதமாகப் பிரிவி கவுன்சில், ஒப்பமிடும் சபையாக விருந்தாலும், அதினின்றும் தோன்றிய சில சங்கங்கள் வெகு முக்கியமான காரியங்களைச் செய்துவருகின்றன. அவைகளில் பிரதானமானது "காபினெட்" என்ற மந்திரிச் சங்கமாம். பிரகிருதத்தில் அதிகாரம் வகிக்கும் மந்திரிமார்களே இதில் மெம்பர்களாவார். இச்சங்கம் கூடும்போது மகாராஜா அக்கிராசனாதிபதியாக இருப்பது கூடாது. இதன் நடவடிக்கைகள் வெகு ரகசியம். ஒருவித ரிகார்டும் கிடையாது. தலைவருடைய அனுமதியிருந்தாலொழிய, அங்கு நடந்த விஷயங்களை ஒரு மெம்பர் வெளியில் பகிரங்கமாக்கக்கூடாது.

காபினெட் சங்கத்தில் ஒரு பிரதான கொள்கையென்னவெனில், அதன் மெம்பர்கள் அனைவரும் பார்லிமெண்டு மெம்பர்களாகவே யிருக்கவேண்டும். சாமான்னியர் சபையில் கைவலுத்திருக்கும் கட்சிக்காரர்களுடைய அபிப்பிராயத்துக்கு, காபினெட் சங்கத்தார் விரோதமாக விருந்தால் உடனே இவர்கள் வேலையை ராஜிவைத்து விட வேண்டும். துரைத்தன ரீதியில் நீதி நிர்வாகம் என்னுமிரண்டிக்கும் ஒரு தொடர்சங்கிலி போன்றிருப்பது காபினெட்டாகும். அதாவது, ஒரு பக்கம் அரசருடைய நோக்கத்தையும், மற்றொரு பக்கம் பார்லிமெண்டாருடைய நோக்கத்தையும் கவனித்து நடக்கவேண்டும்.

காபினெட்டுச் சபையில் இருபது மெம்பர்கள் இருப்பார்கள். அவர்கள் அனைவருக்கும் தலைவராகப் பிரதான மந்திரி யிருப்பார். பிரதான மந்திரியை அரசர் நியமிப்பார். அதாவது, துரைத்தனம் வகித்த கட்சிக்காரர் வேலையைவிட்டு நீங்கியதும், அதற்கு எதிர்க்கட்சிக்காரரின் தலைவனை அரசர் வரவழைத்து, துரைத்தன நிர்வாகத்தை மேற்கொள்ளும்படி கட்டளை யிடுவார். இவ்விதம் நியமனம் பெறுபவர் பிரதான மந்திரியாவர். அவரால்தான் மற்றைய காபினெட்டு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்படிப் பொறுக்கி யெடுப்பதில், பிரதான மந்திரி தமது அபிப்பிராயத்தை அனுசரிப்பவர்களையே எடுப்பது பதிவு. இப்போது, காபினெட்டில் கீழே கூறப்படும் உத்தியோகஸ்தர்களிருக்கின்றனர். பிரதான மந்திரி, பிரிவி ஸீல் பிரபு, சான்ஸலர் பிரபு, சபை அக்கிராசனாதிபதிப் பிரபு, கஜானா சான்ஸலர், உள்நாட்டு காரியதரிசி, அந்நிய நாட்டுக் காரியதரிசி, குடியேற்ற நாட்டுக் காரியதரிசி, யுத்த காரியதரிசி, ஸ்காட்லாந்து நாட்டுக் காரியதரிசி, இந்திய காரியதரிசி, கடற்படை முதற்பிரபு, ஐர்லாந்து காரியதரிசி, லான்காஸ்டர் மாகாணச் சான்ஸலர், வியாபாரச் சங்கத்தலைவர், அங்கவரசியல் சங்கத்தலைவர், கிருஷிச் சங்கத்தலைவர், போஸ்ட்மாஸ்டர் ஜனரல், கல்விச் சங்கத்தலைவர், மராமத்து முதல் கமிஷனர், ஐர்லாண்டு லார்டு லெப்டினண்டு என்பவர்களாம்.

சாதாரணமாக பிரதான மந்திரி தம்முடைய வேலையோடுகூட இன்னுமொரு உத்தியோகத்தையும் பார்ப்பதுண்டு. இப்போதுள்ள பிரதான மந்திரி கஜானா முதல் பிரபு என்ற உத்தியோகத்தையும் பார்த்துவருகிறார். காபினெட்டுச் சங்கத்துக்குச் சட்ட சம்பந்தமான ஆதாரம் ஒன்றுமில்லை. பிரதான மந்திரிக்கும் அப்படித்தான். உத்தியோகம் வகிக்கும் மந்திரிமார் அனைவரும் சமமான பதவிகளைப் பெற்றிருப்பதாகவே ஐதீகம் இருந்தாலும், பிரதம மந்திரியின் முதற்பதவியைப் பற்றி விவாதம் செய்பவர் ஒருவருமில்லை. ராஜ்ய நிருவாகம் முழுவதுக்கும் ஒவ்வொரு காபினெட்டு மெம்பரும் தனித்தனியாகவும் மொத்தமாகவும் உத்தர

வாதம் சொல்லவேண்டியவராயினும் பிரதம மந்திரியின் பொறுப்பு வெகு மேலானது. துரைத்தனம் நல்லதா கெட்டதா என்பது அவருடைய காரியத்தினால்தான் வெளியாகும்.

பிரதம மந்திரிக்கு கஜானா முதல் பிரபு உத்தியோகமும் இருப்பதாகச் சொன்னோம். ராஜ்யத்தின் அரசிறைப் பணமெல்லாம் இப்போது கஜானாச் சங்கத்தார் வசம் ஒப்புவிக்கப் பட்டிருக்கின்றது. அச்சங்கத்துக்கு இந்த முதல் பிரபுவே தலைவர். இந்த ஹோதாவில் இவர் செய்யும் காரியமெல்லாம், நிறைந்த சம்பளமுள்ள பெரிய உத்தியோகங்களான அத்தியக்ஷ குருக்கள்ஸ்தானங்கள் முதலியவை போன்றவற்றுக்கு நபர்களைத் தெரிந்தெடுத்துப் "போஷணை" செய்வதாகவே காணும்.

பிரிவிஸீல் பிரபுவின் வேலையும் கஷ்டமானதன்று. சபையில் எவருடைய வார்த்தைக்கு விசேஷ மதிப்பு ஏற்படுமோ அந்த ராஜ்யதந்திர நிபுணரையே இப்பதவிக்குத் தேர்ந்தெடுப்பார்கள். சான்ஸலர் பிரபுவின் காரியம் பல்வகைப் பட்டதாம். இவர் பிரபுக்கள் சபையில் அக்கிராசனாதிபத்தியம் வகிப்பவராதலால், சிறந்த மேதாவியாக விருப்பார். நாட்டங்களுமுள்ள நியாய விசாரணை முறைக்கெல்லாம் இவரே தலைவர். தலைமை நீதிஸ்தலத்தில் வீற்றிருந்து நியாயம் செலுத்துபவர் இவரே. நியாயாதிபதிகள், மாஜிஸ்திரேட்டுக்கள், மாகாணக்கோர்ட்டு ஜட்ஜிகள் முதலியோர் இவரால்தான் நியமிக்கப்படுகின்றனர். பார்லிமெண்டு எலக்ஷன் தொடங்குவதற்கு இவர் உத்திரவு இடவேண்டும். துரைத்தனம் விஷயமாக வெளிவரும் எல்லா விளம்பரங்களும் இவர் மூலமாகத்தான் வரவேண்டும். ராஜமுத்திரை இவரிடம் இருக்கிறது. அவர் எங்கு போனாலும் அம்முத்திரையைக் கையோடே கொண்டுபோகவேண்டும். ஒவ்வொரு மகாராஜாவுக்கும் புதிது புதிதாக முத்திரை வெள்ளியால் செய்யப்படும். பழைய முத்திரையை உடைத்து, அதை வைத்திருந்த சான்ஸலரிடமே கொடுத்துவிடுவது பதிவு.

சபா அக்கிராசனாதிபதிப் பிரபுவின் வேலையும் சிரமமில்லாத அந்தஸ்துள்ள வேலை. இங்கு சபையென்றது பிரிவி கவுன்சில் என்னும் பெரிய சபையே. கஜானா சான்ஸலர் வேலை, வெகு சிரமமானதாம். பணவரவு செலவெல்லாம் கஜானாச் சங்கத்தாரிடம் இருந்தபோதிலும், அவ்விஷயமான காரியங்களெல்லாம் இவரால்தான் ஆகவேண்டியிருக்கின்றன. ஒவ்வொரு வருஷ முடிவிலும் ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு இலாகாவும், அடுத்த வருஷத்தில் அதற்குச் செலவாகக்கூடிய தொகை எவ்வளவென்று கஜானா சான்ஸலருக்குத் தெரியப்படுத்தவேண்டும். இப்படி வரும் கணக்கை வைத்துக்கொண்டுதான் இவர் பார்லிமெண்டுக்கு அரசிறைக் கணக்கின் மதிப்பைப்பற்றி ஒரு ரிபோர்ட்டு செய்வார். நாணயசாலைக்குத் தலைவர் இவரே. ஒவ்வொரு மாகாணத்திலும் கட்டளைக்காரனை நியமிக்க நபர்களைத் தெரிந்தெடுத்து மகாராஜாவுக்கு அனுப்புவது இவர்தான்.

மற்றைய மெம்பர்களின் உத்தியோகப் பெயர்களிலிருந்தே அவரவர்கள் செய்யவேண்டிய காரியமும் வெளியாகும்.

துரைத்தனத்தை நிர்வகித்து, செல்வாக்கிலும் சிறப்பிலும் மேலோங்கி விளங்கும் இந்த மந்திரிச் சபைக்கு யாதொரு சட்டசம்பந்தமான ஆதாரமும் கிடையாது. பதினேழாம் நூற்றாண்டில் இச்சபைக்கு "காபினெட்டு" என்ற பேர் வந்தது. என்றாலும் பார்லிமெண்டு சட்டம் ஒன்றிலேனும் இதன் பெயர் காணுவதில்லை.

துரைத்தனம் வகிக்கும் மந்திரிமார் அனைவரும் இப்போது வெகுநாளாகப் பிரதம மந்திரியின் கட்சியைச் சேர்ந்தவராகவே இருப்பது பதிவு. ஆனால் இரு திறத்தாரும் சேர்ந்து நடத்திய மூரண் மந்திரிச் சங்கமும் முந்திச் சிற்சில சமயங்களில் இருந்ததாண்டு

பார்லிமெண்டில் பெரும்பாலார் சகாயம் இருக்கும் வரையில்தான் மந்திரிகள் அதிகாரம் வகிப்பார்களென்று முன்னமேயே கூறியுள்ளோம். இதனால் பிரதம மந்திரியை நியமனம் செய்வது மகாராஜாவின் காரியமானாலும், அப்பிரதம மந்திரி, தம்முடைய ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்வது மட்டும் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைப் பொருத்துள்ளது என்பது விளங்கும். மகாஜனங்கள் மந்திரியை ஆதரிப்பாரானால், அவர், தம்மை நியமனம் செய்த மகாராஜாவின் காலம் முழுவதும் அதிகாரம் வகிக்கலாம். மூன்றாம் ஜியார்ஜ் காலத்தில் 18-வருஷங்கள் பிட் என்பவர் பிரதம மந்திரியாக விருந்தது நமக்குத் தெரியும். ஆனால் இப்போது அவ்விதம் நேருவது துர்லபமென்று காணுகின்றது.

பிரிவி கவுன்சிலின் ராஜ்ய நிருவாகத்தைக் காபினெட்டார் கவர்ந்து கொண்டது போல, அதன் மற்றைய காரியங்களையும் வேறு வேறு சங்கத்தார் கைக்கொண்டு விட்டனர். நியாய சங்கம் என்பதில், நீதிசாஸ்திரத்தில் பிரக்யாதியடைந்த பிரபுக்களும், உயர்ந்த ஜட்ஜிகளாக விருந்தவரும் இருப்பவரும் நீதிபதிகளாக வீற்றிருந்து, பிரிடிஷ் ராஜ்யங்களி லிருந்தெல்லாம் வரும் அப்பீல்களை விசாரணை செய்வார்கள். இவர்கள் தீர்மானத்துக்கு மேலாக அப்பீல் கிடையாது. இக்கோர்ட்டைப்பற்றிய விபரம் பின்னர் வரும்.

மந்திரிகள் மூன்று வருஷங்கள் வேலை பார்த்தால், அவர்களுக்கு வருஷமொன்றுக்கு 2000 பவுன் பென்ஷன் கொடுக்கப்படும். அவ்விதம் பென்ஷன், வேண்டுமென்று கேட்போருக்கு மட்டுமே கொடுக்கப்படும்.

திராவிடக் கதைகள்

SOUTH INDIAN FOLKLORE

4. உதடன் கதை

விபரீத நகரத்தில் இளங்குடியில் பிறந்தவன்; வெகு நல்லவன்—அவன் பெயர் சிந்தாமணி. அவனை எல்லாருமப்படித்தான் கூப்பிடுவார்கள். அவனுக்கொரு மனைவி; அதிரூப சுந்தரி. ஒரு கண்ணில் பூப்படர்ந்து தழைத்துக் கொண்டிருந்தது. திருமூக்கில் சிறுநாளில் பட்ட காயம் அதன் துவாரத்தை மிக விசாலஞ் செய்திருந்தது. அழகிய காது சற்றே அறுந்து இருந்தது. முகமண்டலத்தில் அம்மை வடுக்கள் விளங்கிக் கொண்டழகு செய்துகொண்டிருந்தன. இந்த அழகி இவளுக்குத் தனது கணவனது உதடு சற்றே பருத்தகன்றிருந்தது பார்க்க முடியவில்லை. அவனைத் தனது இனிய மொழியோடு ஆசையுமன்புங் கலந்து உதடா உதடா என்று நாமமுச்சரித்தழைப்பது வழக்கம். இவ்வாறழைப்பது சிந்தாமணிக்கு வெகு கொண்டாட்டம். தன் பிரியமுடைய மனைவி புதுப்பெயரிட்டு அன்போடழைத்தால் மனதிற்கு ஸுகமே கொடுக்கும் அல்லவா?

இவ்வாறிவள் அழைத்து வந்ததால் சிந்தாமணியின் பெயர் தேவலோகத்து சிந்தாமணி போல் அபூர்வமாகிவிட்டது. அழகு சிந்தாமணியாகிய அவன் மனைவியின் வர்ணனை மொழிகளின் முன் அவன் பெயரெப்படி விளங்கும்? நிற்க, ஒருநாள் ஓர் விருந்தாளி சிந்தாமணியின் வீட்டிற்கு வந்தார். அவர்க்கு அதிதி ஸத்காரம் (விருந்தோம்பல்) செய்ய வேண்டுமென்று அவனுக்கு அவா உண்டாகியது. ஆகையால் தனது அன்பிற்குகந்த நாரிமணியைக் கூவியழைத்து மறைவாகப்போய் மெல்வருமாறு சொன்னான் :-

"அடியே! இன்றைக்கு நம்மகத்தில் விருந்தொருவர் வருகிறார். அவர் எதிரில் உன்னுடைய அவதாரத்தைக் காட்டி விடாமலிருக்கப் போகிறாய்? தெரியுமா? என்னுடைய திவ்ய நாமத்தைப் பாராயணம் இன்றைக்குச் செய்ய வேண்டாம். நான் இப்பொழுதென்ன சொல்கிறேன் என்பது தெரிகிறதா?"

"தெரிகிறதே! அத்தை சொல்லியுந் துலக்க

வேண்டுமோ என்னா? வெறுமை தொணதொணவென்று என்னமோ சொல்லுகிறீர்களே. நன்னாத்தான் இருக்கு! நான் என்ன இன்னமும் இளங்குட்டியா என்னா? எதுக்கெடுத்தாலும் பாடஞ் சொல்லித் தருகிறீர்களே. எனக்கென்ன இன்னம் அஞ்சு பிராயமா? என்னா? இவ்வளவு கேவலம் தாங்கள் செய்வது நன்றாகவே யில்லை. இது உங்களுக்கு நன்றாக இருக்கிறதா? உங்களுக்கே அது நன்றாக இருக்கிறதா என்னா ஆலோசித்துப் பாருமே—" என்று பிரஸங்கித்துக்கொண்டிருந்த தனது மனைவியை அவன் என்னத்தான் தடுத்தாலும், மேல்மேல் புற்றிலிருந்து கிளம்பு மீசல்களைப்போல அவள் வாய்ச் சுரங்கத்திலிருந்து புதையல்போல் கிளம்பிய வார்த்தைகள் மழை ஓயாது பெய்துக்கொண்டே இருந்தது.

சிந்தாமணியின் மனம் நொந்தால் அவளுக்கென்ன? அபூர்வமாகக் கிடைக்க முடியாத சமயங் கிடைத்தால் வாயிலிருந்த வார்த்தைகளையெல்லாம் அப்பொழுதே கொட்டி விடாவிட்டால் அவளுக்கெப்படித் தூக்கம் வரும்? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்பதவள் எண்ணம். சிந்தாமணி வெகு பொறுமையாளி யானாலும் நல்ல தீரன், கடைசியாகக் கால் பிடிக்காத தோஷம்; தனது மனைவி கெஞ்சி எப்படியாவது அன்றைக்கு உதடன் பட்டத்துடன் அழைக்கக்கூடாதென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டான். அவளும் "மிதந்து வருஞ் சோறும் அதிர்ந்துவரும் புருஷனும்" என்றால் போல கொஞ்சம் கணவன் என்கின்ற பயத்தினால் அப்படியே செய்ய ஒப்பிக்கொண்டாள். அந்த வைபவம் எத்தனை நாழிகை நிற்கும்?

சாப்பிடுங்காலமும் நெருங்கியது. சிந்தாமணிக்கும் அதிதிக்கும் அமுதுபடி அளந்தாள். நவரஸமும் அதனிடத்து விளங்கிக்கொண்டிருந்தது. நவரஸமா? அல்ல; அவை அறுசுவை. அதுவும் ஒன்றாகவே முடிந்ததென்றுண்டவர் அறிந்தார்கள். உப்பில்லா பண்டம் குப்பையிலே என்று படித்த பெருமாட்டியானதினால் உப்பிடுவதற்குக் கையஞ்சாமலே சமைத்தவை எல்லாவற்றிலும் சுவையூட்டியிருந்தாள். "அத்தனையும் வேண்டுமவர்க்கு" என்று இரட்டையர்கள் மூங்கிலி லொளித்திருந்த வேணுவனநாதர் மேல் தவறி விழுந்த பாலைப்பற்றிச் சொன்னதுண்டு. ஆனால் யான் அவ்வகைய கவிராயன் அல்ல. நான் சொல்லுவதெல்லாம் வாயில் போட்டதும் துப்பவேண்டிய உப்பின் ஸ்வபாவத்தை அடைந்திருக்கின்றன. இந்தக் குணத்திற்கு நான் என்னதான் கஷ்டப்பட்டுத் தடுத்தாலும் உப்பையுண்டவன் விஷயத்தை எண்ணும்பொழுதே எழுதுவதெல்லாம் உப்பாய் விடுகிறது. அந்த உணவையே உண்ட உதடன்பாடோ, அந்த விருந்தின்பாடோ எப்படியிருக்குமோ எனக்குத் தெரியாது ஆனால் "இது என்ன உப்புக்ஷாயமா?" என்று கண்கள் தீப்பொறி பறக்க, அதிதியின்முன் கோபத்துடன் கேட்டுவிட்டான். எதாவது பொறி கிளம்பினால் போதும் பற்றிக்கொள்ளலாமென்றிருந்தவளுக்கிது சுகந்தாரம விருக்குமா? வெறும் வாயை மெல்லும் பாட்டிக்கோர்பிடி பொறிமாக் கிடைத்தாற்போலாய்விட்டது?

"ஆமாம் உங்களிழவு; நீங்கள்தான் என்ன செய்வீர்கள். உமக்கிருக்கிறவாய், அதோபாரும்—அந்த மஹான், ஸாது—அவர்க்கு இருக்கிறதா? உடலோடு பிறந்தது கட்டையோடுதானே தொலையும். என்ன ஆனாலும் உதடன் குணம் விட்டுவிடுமா? அது ஆடி ஆடித்தானே வேலைசெய்யும், பக்கத்தில் ஒருவர் இருப்பதைக் கூடப் பார்க்காமல் என்ன என்னமோ மரியாதையில்லாத வார்த்தைகள் சொல்லிவிடுவது. நான் பயபக்தியுடன் வெகு ஜாக்ரதையாக உப்பு குறையாமலிருக்கும்படிச் சமையல் செய்து வடித்ததால்தானே இப்படிப் பேசுகிறீர்கள். உதடு துடிக்கிறதைப் பார். உதடன் கதை தெரியும். வாயைத் திறக்காமலே உதடன் கதையைக் காணலாமே. உங்களையும் கட்டிக்கொண்டு மாரடிக்க இந்தப் பாழுந்தெய்வஞ் செய்துவிட்டதே. அதற்குக் கண்ணில்லாமலா போய்விட்டது! அவன் கோயிலிடிய!—" என்று அபிநய நாட்டியஞ் செய்து அடாணாரகம் பாடிக்கொண்டிருந்தாள். வந்த சாமியாரும் சாப்பாடு போதும், கூப்பாடும் போதும் என்று எழுந்து கைகழுவி போனது தெரியாமல் போய்விட்டான்.

நமது சிந்தாமணி சிந்தை மயங்கிக் கிடந்தான். அவன் கோவப்பழத்தை அன்றைக்குத்தான் வயிறார புசித்திருந்தான். தன் மனைவியை மெதுவாக அர்த்த சந்திராஸ்திரப்பிரயோகம் செய்து

புறக்கடையில் கொன்று குழி வெட்டி புதைத்துவிட்டான். பின் "என்னமோ பாவம்; தெரியாமல் சொல்லிவிட்டால் நான், இப்படியா செய்துவிடுவது?" என்று எண்ணினான். அதற்கு அப்புறம் பெண்களிடம், எப்படியோ அவனுக்கு வெறுப்புமாத்திரம் உண்டாகவில்லை. தன்னை எங்கு வேறு யாராவது உதடா என்று கூப்பிட்டு விடுவார்களோ என்று பயம். இதென்ன அதிசயம்? குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும்.

மனைவியை புதைத்த விடத்தை யாருங் கண்டு பிடிக்கக் கூடாதென்று அந்த இடத்திலோர் கீரைப்பாத்தி யுண்டாக்கினான். அதுவும் பச்சைப்பசேல் என்று பளபளத்து செழித்து விளங்க ஆரம்பித்தது. அக்கீரையை அறுத்து சமைத்து சுவைக்க எண்ணம் கொண்டான். அடுப்பில் ஓர் பாத்திரத்தில் கீரை கொதித்துக் கொண்டிருந்தது. கொதித்தால் அது சும்மா இருக்கக்கூடாதோ?

"கொத கொத உதடா! கொத கொத உதடா!
கொத கொத உதடா! கொத கொத உதடா!"

என்று பாடிக்கொண்டு கொதித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்டதும் அவன் மனமும் கொதித்தது. "அந்தப் பாழு முண்டைதான் ஒழிந்தாளே. அவளைப் புதைத்த இடத்திலிருந்த இந்தக் கீரைக்கு யிவ்வளவு கொழுப்பா" என்று இரைச்சலிட்டான். அடுப்பிலிருந்த கீரையும் சீக்கிரத்திலேயே

"கொதகொத கொதகொத கொதகொத உதடா
உதடா உதடா கொதகொத உதடா"

என்று பாடி குதிக்க ஆரம்பித்தது. இதைப் பார்த்ததும் அவன் கோபங் கொண்டு கீரைச் சட்டியை கழுநீர்ப் பானையிற் போட்டுடைத்தான்.

அந்தக் கழுநீர்பானையில் நீர்க்குடித்த அவன் எருமைக்கடா அப் 'பாழுமுண்டை'யின் ஸ்வபாவத்தை அடையும் என்று அவன் எண்ணவில்லை. ஆனால் வாஸனைபலம் விட்டு விடுமோ? அந்த எருமையும்,

"மே! உதடா! அம்மே உதடா!
மே! உதடா! அம்மே உதடா!!"

என்றுச்சங்குரலில் பாட ஆரம்பித்துவிட்டது. சங்கீதக்குழக்கட்டை சாலோடுடைந்த தென்றபடி அவ்வெருமையின் தலைவேறு உடல்வேறாக ஆய்விட்டது. சிந்தாமணியின் கோபம் என்னத்தான் செய்யாது? ஆறுவது சினம் அவன் படித்தவன்தான். ஆனால் அர்த்தமறிந்து படித்தவனல்ல. தானாகவே அர்த்தம் செய்த வியாக்யான கர்த்தா. இவனுக்கு நன்னூல் முதலிய இலக்கணங்கள் பாஷையின் போக்கின் மஹிமையைக் குறைத்து விடுகின்றதென்ற எண்ணம். ஆகையால் இ ஈ ஐ வழி யவ்வும் ஏனையுயிர் வழி வவ்வும் என்று சூத்திரம் பாடி ஆறு என்னும் உகாராந்தபதத்தின் முன் அது வந்ததால் ஆறுவது ஆகிவிட்டது என்றுசொல்லி ஆறுபோல் பாய்வது சினம்என்று அர்த்தம் சொல்வான். அவன் சினம் ஆறாய் வழிந்தது.

காலஞ் சற்று கிடந்ததும் சினம் ஆறியும் போயிற்று. பின் எருமைப்போனால் போகட்டும் அதன் தோல் நம்மை என்ன செய்ததென்றெண்ணி அதை எடுத்து ஓர் தம்பட்டத்தில் போட்டுக் கொட்டும்படிச் செய்தான்.

தம்பட்டமும் தம்பட்டத்தையே பாடுவதாகக் கண்டான். அதைக் கொட்டும்பொழுதெல்லாம்,

டமடம டமடம டம்டம் உதடா!
டடட டம்டம் டடடம் உதடா!
தகிடுதம் தகிடுதம் தகிடுதம் உதடா!
தக்தக் தந்தக் தகிடுதம் உதடா!

என்றவன் நாமத்தின் பெருமையையே விளக்கிக் கொண்டிருந்தது. சீ! என்றவனும் மனம் வெறுத்ததை லக்ஷியம் செய்யாமல் தன் வேலையைப் பார்ப்பதானான்.

—

விவேக விளக்க

வியாசத் திரட்டு

ESSAYS FROM THE SPECTATOR

அமிழ்தினும் இனிய செந்தமிழ் மொழியில் நூல்கள் இயற்றிய பண்டைப்புலவர்கள் பெரும்பாலும் செய்யுள் நடையையே அநுசரித்து வந்தார்களாயினும், தற்காலத்திற்கு இன்றியமையாதது, இலக்கண நெறியும் இலக்கிய முறையும் ஒருங்கமைந்து, இசையும் இனிமையும் இனிது வாய்ந்து, ஆற்றொழுக்குப்போல், இலகுவும் தெளிவும் நன்கு பெற்று, நடைபெறும் இயல்பினதாகிய அழகிய வசன நடை என்பதை இக்காலத்து மூதறிவாளரும், கல்வி இலாகா அதிகாரிகளும் இனிதுணர்ந்து, “வியாசம் வரைதல்” என்பதனைக் கலாசாலை மாணவர்கள் செய்யவேண்டிய பல கடமைகளுள் ஒன்றாக ஏற்படுத்தியுள்ளார்கள். மாணவர்களின் நன்மையையே பிரதமமாகக் கருதி, அவர்கட்குப் பயன்படும் வகையில், வெளியிடப் பெறும் விவேக போதினி” யில் அம்மாணவர்களுக்கு உபயோகமாகக் கூடிய சில வியாசங்களைத் தொடர்பாக எழுதிவருதல், சிறிதாவது பயன் விளைவிக்காமற் போகாது என்னும் துணிபுடன், “விவேக விளக்க வியாசத் திரட்டு” என்று பொதுவாக ஒரு தலைக்குறிகொடுத்து, அதன் கீழ்ச் சில வியாசங்களை முறையாக எழுதி வருதற்கு இசைந்தாம். இத்தலைப்பின் கீழ் வரும் வியாசங்கள் எல்லாம், ஆங்கில மொழியில் பெரும் புலமை வாய்ந்த “அடிஸனர்” என்னும் பிரபல பண்டிதரின் “ஸ்பெக்டேட்டர்” (Addison's Spectator) என்னும் அரிய நூலின்கட் காணப்படும் சிறந்த வியாசங்கள் பலவற்றுள், சிலவற்றின் மொழிபெயர்ப்பாகும். ஆதலின், இத்தலைப்பின் கீழ் வரும் வியாசங்கள் மாணவர்கட்குப் பயன்படுதலோடு, ஆங்கில மொழி அறியாத தமிழ் மக்கட்கு அடிஸனரின் சிறந்த கருத்துகளையும், அரிய ஞானத்தையும் ஒருவாறு புலப்படுத்தி இன்பமளிக்கும் வகையிலும் பயன்படும் என்று யாம் நம்புகின்றோம்,—விரும்புகின்றோம். இவ்விருப்பம் நிறைவேறுமாயின், எம் முயற்சி பொதுவாகையால் தமிழ்மக்களுக்கும் சிறப்புவகையால் மாணாக்கர்கட்கும் சிறிதாவது பயன் விளைவிக்கும் என்னும் திருப்தி ஒருவாறு உண்டாகலாம்.

I கடவுள்

GOD

மனிதன் தன் நிலைமையைத் தானே நினைத்துப் பார்ப்பானானல், தான் பெருந் துன்பத்திற்கிடையில் உழலும் உதவியற்ற ஒரு பிராணி என்பது அவனுக்கு இனிது புலப்படும். ஒவ்வொரு நிமிஷமும் பெரும் துக்கத்திற்கும் துரதிர்ஷ்டத்திற்கும் ஆளாகும் நிலைமையில் அவன் இருக்கின்றான். நாலாபக்கத்திலும் அவனை அபாயம் சூழ்ந்துகொண்டிருக்கிறது. தற்செயலாக நேரும் எண்ணிறந்த அபாய சம்பவங்களால் அவன் துன்புறுகின்றான். அச்சம்பவங்கள் முன்னதாக அறிந்துகொள்ளக்கூடிய சக்தி அவனுக்கில்லை. ஒரு சமயம் அறிந்துகொண்டபோதிலும், அச்சம்பவம் நிகழாதபடி தடுக்கக்கூடிய ஆற்றலும் அவனுக்கில்லை.

எதிர்பாராமல் சம்பவிக்கக்கூடிய பல அபாயங்களுக்கு நாம் உட்படவேண்டிய நிலைமையில் இருந்தபோதிலும், இம்மாதிரியான சம்பவங்கள் நிகழச்செய்கின்ற ஒருவருடைய பாதுகாப்பில் இருக்கின்றோம் என்னும் உணர்ச்சி நமக்கு மனசமாதானத்தை விளைவிக்கின்றது. நமக்கு அபாயத்தையும் துன்பத்தையும் கொடுக்கும் ஆற்றலுடைய ஒவ்வொன்றும் அவருடைய அதிகாரத்தின் கீழ்தான் இருக்கின்றன என்று கருதுவதும் நமக்கு மனசமாதானத்தையே அளிக்கின்றது. எத்தகைய உதவி நமக்கு வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கின்றார். அத்தகைய உதவியை அவரிடம் கேட்கும் ஒவ்வொருவருக்கும் உதவி செய்ய அவர் எப்போதும் தயாராக இருக்கின்றார்.

நலமில்லாமலும், ஞானமில்லாமலும் இருக்கும் மிக அற்பனாகிய மனிதனுக்கு, இப்படிப்பட்ட பேருதவியைப் புரியும் வஸ்து ஒன்று இருக்கிறது என்னும் உறுதியான நம்பிக்கையானது, மனிதனுடைய வாழ்க்கையில் பல சௌகரியங்களையும் நன்மைகளையும் கொடுக்கின்றது. இந்த நம்பிக்கை, நமக்குச் சம்பவிக்கக்கூடிய எல்லா வகையான அபாயங்களிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் நீங்கும்படியான ஒரு தைரியத்தை நமக்கு உதிப்பிக்கிறது.

இம்மாதிரியான நம்பிக்கையுள்ள மனோவியல்பினைப் பெற்றிருக்கும் மனிதன், கடவுளுக்கும் தங்களுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்று கருதுகின்ற மனிதர்கள் மானுஷீக சுபாவத்தினைப்பற்றி ஆயாசத்துடனும் மருளுடனும் நினைப்பதுபோல், நினையான். ஆனால் அவன் தன்னுடைய சக்தியின்மையையும், எளிய நிலைமையையும், அடிக்கடி நினைந்து சிந்தனை புரிகின்றான். அவன், தன்னுடைய க்ஷேமத்தையும் நலத்தையும் கருதுகின்ற ஒரு பரம்பொருள் தன்னினும் மேம்பட்டதாக இருக்கிறதென்று கொண்டு அதற்குப் பல தெய்வீக விசேஷங்களைக் கற்பிப்பதில் ஒருவிதமான மனசமாதானத்தை அடைகின்றான். ஒரு விஷயத்தை முன்னதாக அறிந்து கொள்ளும் சக்தி தன்னிடம் இல்லாவிட்டாலும் அந்த சக்தி தன்னைக் காப்பவனாகிய கடவுளிடத்தில் பூரணமாய் அமைந்திருப்பதே தனக்குப் போதுமானதென்று அவன் திருப்தியடைகின்றான். தனக்கு உதவி புரிபவர் கடவுள் என்றும், அவருடைய ஆற்றல் அளவுக்கு அடங்காதது என்றும் மனிதன் நினைக்கும்போது அவன் தன்னுடைய பலமின்மையை உணருவானல்லன். அதிகம் சொல்லுவானேன்? எவனொருவன் எல்லாம் வல்ல இறைவனிடத்தில் உறுதியான நம்பிக்கை வைக்கின்றானோ, அவன் அவருடைய சக்தியினால் தானும் சக்தியுடையவனாகிறான்; அவருடைய ஞானத்தினால் தானும் ஞானியாய் விளங்குகிறான்; அவருடைய இன்பத்தில் தானும் இன்புறுகின்றான். கடவுளுக்குத் தான் கற்பிக்கும் ஒவ்வொரு தெய்வீக விசேஷணத்திற்கும் தகுந்த பலனை மனிதன் அடைகிறான்.

நம்முடைய வாழ்நாளைச் சுகமாய்க் கழிப்பதற்கும், விசாரமின்றிச் செலுத்துவதற்கும் கடவுளிடத்தில் நாம் நம்முடைய முழுநம்பிக்கையையும், பூரண உறுதியையும் வைக்கவேண்டியவர்களாய் இருக்கின்றோம். ஏனெனில் அவரே நம்மைத் துன்பத்திலிருந்து விடுவித்தும், இன்பத்தைக் கொடுப்பித்தும் பாதுகாக்கின்றார்.

முதன்மையாயும் பலமாயும் நாம் செய்துகொள்ளவேண்டிய உறுதி என்னவென்றால்; “கடவுளை நம்பினோர் கைவிடப்படார்” என்பதுதான். இத்தகைய கடவுளைப்பற்றி அபூதாலங்காரமாயும், இயற்கைக்கு மேற்பட்டதாயும் நாம் ஏதும் கருதவேண்டுமென்பது அவசியமில்லை. நம்மைக்காட்டிலும் அவர் மேலானவர், சிறந்தவர் என்று கருதுவதே போதுமானது. தன்னினும் மேம்பட்ட ஒருவர் இருக்கின்றார் என்று நம்பி, அவரைச் சிநேகிதர்போல் பாவித்து, அவர் முன்னிலையில் தான் எக்காரியத்தையும் செய்வதாக நினைத்து எந்த மனிதன் ஒரு காரியத்தைச் செய்கிறானோ, அந்த மனிதன் தன் சக்திக்கு மேற்பட்ட அநேகம் காரியங்களையும் அற்புதங்களையும் இயற்றுகின்றான். கடவுளிடம் உண்மையான நம்பிக்கை வைத்துக் காரியங்களைச் செய்பவன் மற்றவர்களைவிட தான் மேற்கொண்ட அக்காரியங்களை இனிது முடிக்கிறான்.

கண்ணுக்குப் புலப்படாததும், ஆனால் நிச்சயமாக உள்ளதுமான ஒரு பெரும் சக்தியின் உதவி தங்களுக்கு இருக்கிறதென்று நம்பி காரியங்களைச் செய்யும் இராணுவவீரர்களும் பிறரும் தங்களால் சாதிக்க முடியாத,—மனித சக்தியினால் செய்து முடிப்பதற்கு அரிய,—பெரும் காரியங்களை மிக எளிதில் சாதித்திருக்கிறார்கள் என்பதற்குச் சரித்திரங்களில் எண்ணிறந்த உதாரணங்கள் காணப்படுகின்றன.

இன்னும் போற்றலுடைய கடவுளிடத்தில் நம்பிக்கை வைப்பதால், அவர் மனிதர்களுக்கு வேண்டிய உதவியை அவசியம் அறிந்து செய்வார் என்று உறுதிகொள்ளுவதால் மனிதனுக்குப் பொறுமையும் சாந்தமும், நம்பிக்கையும் உறுதியும், ஊக்கமும் உற்சாகமும் இன்னும் மனத்தினுடைய வேறுபல சிறந்த குணங்களும் விருத்தி அடைகின்றன. தவிர, மனிதனுக்கு விலக்குவதற்கும் பொறுப்பதற்கும் முடியாத பெரும் துன்பம் நேர்ந்தவிடத்தும் அவனை மனந்தளராமல் இருக்கும்படி செய்யவல்லது அவனுக்குக் கடவுளிடமிருக்கும் நம்பிக்கையே.

இறைவனிடத்தில் நம்பிக்கையுள்ள மனிதனுடைய மனம் தரித்திர தசையிலும், துன்பகாலங்களிலும் சமாதானத்துடன் இருக்கும். இன்னும் முக்கியமாக மரணகாலத்தில் மனிதன் சிறிதும் அச்சமுறாமல் இருப்பதற்கு இந்த நம்பிக்கை ஒரு சிறந்த சாதனமாயிருக்கிறது. ஆன்மாவானது இந்த உடலைவிட்டுப் பிரிந்துபோக எத்தனப்படும் கடைசி நிமிஷத்தில், அது தனக்கு முற்றிலும் புதிதான காட்சிகளையும் பொருள்களையும் பார்க்கும்படியான வேறொரு புதிய நிலையை அடையும் சமயத்தில் அதற்கு உண்டாகும் பயத்தையும் கவலையையும் நீக்கும் வன்மை உடையது யாது? கடவுள். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளிடத்தில் பூரண நம்பிக்கையுள்ளவனுக்கு மரணம் பயத்தை ஒரு போதும் விளைவியாது.

நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்.

சந்திரன்
MOON

கிரகணங்கள்.—ஆகாயத்திற் காணும் அற்புதக்காட்சிகளில் நாமிப்போது சொல்லப்போவது அதி விநோதமானது. நம்மிடமிருந்து சந்திரனைவிட சூரியன் வெகுவாக விலகியிருக்கிறது. பூமியும் சந்திரனும் எப்போதும் தன்தன் பாதி பாகத்தில் மாத்திரம் சூரியகாந்தியை ஏந்திப் பிரகாசிக்கின்றன. இவ்விரண்டையும் விட சூரியனெவ்வளவோ மடங்கு பெரிது. ஆகையால் பின்வரும் படங்களில் அவற்றின் பருமனும் தூரமும் தாராதரப்படிக் காட்டப்படவில்லை யாயினும், விஷயம் தெளிவாய் மனத்திற்பட அவை போதுமானவை.



(படம் 1.)

நாம் வெளிச்சத்திற் சென்றால் நமது நிழல் நம்முடன் கூட வந்துகொண்டேயிருக்கிறதல்லவா? அவ்விதமே சூரியகாந்தியில் உலாவித்திரியும் பூமி, சந்திரன் முதலியவற்றின் நிழலும் அதனதன் கூடவே வானவெளியில் தொடர்ந்து செல்லும். சூரியனுடைய பருமன் விசேஷத்தால் அந்நிழல்கள் மொக்குள்போல வரவரச் சிறுத்து முடிகின்றன.

சூரியக்கிரகணம்.—குடையைப் பிடித்து வெயிலில் நடக்கையில் நாம் குடைநிழலில் மறைகிறோம். குடை சூரியனை நமது கண்ணிற் படவொட்டாமற் தடுக்கிறது. இவ்விதமே பூமி, சந்திரன் இவற்றின் நிழல்களினொன்றில் நாம் பிரவேசித்தால், அவ்விடமிருந்து சூரியனைச் சிறிதும் காணமுடியாது. பூமியின் நிழலில் நாம் நுழைந்தால் நமக்கு இராத்திரி காலம். சந்திரனுடைய நிழலில் மறைபட நேரிட்டால் சந்திரன் தூரத்திலேந்திய குடைபோலச் சூரியனை நம்மிடமிருந்து மறைத்துச் சூரிய கிரகணத்தைத் தரும்.

வெண்மையான கடிதமொன்றை வட்டமாகக் கத்திரித்துச் சுவரிலொட்டி, அதன் முன் கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டு அவ்வட்டத்திற்கும் நமது கண்ணுக்கும் நடுவே ஓர் அரையணாவைப் பிடித்தால், தூரத்திற்குத் தகுந்தவாறு அது அவ்வட்டத்தின் முழுவதையுமோ, அல்லது மத்தியை மாத்திரமோ, மறைக்கும். கடிதம் முழுதும் மறைய காசை நமது கண்ணுக்கு நெருங்கியும், மத்தியம் மாத்திரம் மறைபட நம்மிடமிருந்து தூரத்திலும் பிடிக்கவேண்டும். கண், நாணயம், கடிதவட்டம் இம்மூன்றும் ஒரே ஒழுங்காயிராமல், அவ்வரையணா சற்று ஒதுங்கினால், கடிதவட்டத்தின் ஓரமாய் ஓர்பாகம் மாத்திரம் மறைந்து தோன்றும். வெகுவாய் விலகிவிட்டால் ஒரு பாகமாவது மறைபடாது முழுதும் நமக்குத் தெரியும். சந்திரனை யரையணாவிற்கும் சூரியனைச் சுவரி லொட்டிய கடிதவட்டத்திற்கும் ஒப்பிடலாம். பின்வரும் ஐந்து படங்

களையும் கவனித்தால் மேற் சொல்லிய விஷயம் தெளிவாகும்.

ஒவ்வொருபடத்திலும்
E—பார்ப்பவரின் கண்
M—அரையணா, (சந்திரன்)
S—கடிதவட்டம், (சூரியன்)



i. படம்.—M என்பது ES′கோட்டை விட்டு வெகுவாக விலகியிருக்கிறது. S-ஐ சிறிதும் மறைக்காது.

ii. படம்.—M என்பது முதல் படத்திலிருப்பதைவிட ES ஐ நெருங்கியிருக்கிறது. சுவரில் மறைபடும் பாகம் ab. ஆகையால் S-ன் கீழ் ஓரமாய் கொஞ்சம் M மறைக்கும்.

iii. படம்.—இதில் S-ஐ M-ஆனது சரியாய்ப் பூராவும் மறைக்கும்.

iv. படம்.—இதில் கண் MVN என்னும் கோணத்திற்குள் எவ்விடமிருந்தாலும் S-முழுதும் மறைவதுமன்றி அதைச் சுற்றிக்கூட கொஞ்சம் மறையும்.

v. படம்.—இதில் XVY என்னும் கோணத்திற்குள் E-எங்கிருந்தாலும் S-னுடைய மத்தியில் கொஞ்சம் மறைந்து சுற்றிவளையம் போலத் தெரியும்.



(படம் 2.)

vi. படம்.—இதில் M-க்குப் பின்னால் XVY கோணத்திற்குள்ளடங்கி, ஆனால் MVN கோணத்திற்கு வெளிப்பட்டு, E எங்கிருந்தாலும் S-ன் ஓரமாய் ஓர்புறம் மாத்திரம் மறைக்கப்படும்.

vii. படம்.—இதில் கண்டபடி, XVY என்னும் கோணத்திற்கு வெளியில் E-எங்கிருந்தாலும் S-கொஞ்சமேனும் மறைபடாது.

சந்திரன் நமக்கும் சூரியனுக்கும் குறுக்கா யோடுகையில், அதன் மொக்குள்போன்ற நிழலுக்குள் நாம் வர நேரிட்டால் அவ்விடமிருந்து நாம் சூரியனைச் சிறிதும் காணமுடியாது. அந்நிழலின் கூர்முனை தாண்டி, அதன் தொடர்ச்சியில் பிரவேசித்தால், அங்கிருந்து சூரியபிம்பம் நடுவில் மாத்திரம் மறைபட்டு வளையம்போல் தோன்றும். மொக்குள்போன்ற கறுத்த நிழலையும் அதன் தொடர்ச்சியையும் சுற்றி மென்னிழல் (மெலிந்த நிழல்) சூழ்ந்திருப்பதும் கீழ்ப் படங்களில் காணலாம். அதிலிருந்து பார்க்க சூரிய தலத்தின் ஓர் பாகம்மாத்திரம்தான் தெரியும். மறைக்கும் சந்திரன் கோளாகாரமானதால், சூரியதலத்தின் மறைந்த பாகத்தின் எல்லை விருத்தா (வட்டா) காரமாயிருக்கும். இந்நிழலிலிருப்போர்க்கு சூரிய முழுபிம்பத்தினின்று வெயிற் கிடைக்காமல், எந்தப் பாகத்தைக் காண்கிறார்களோ அப்பாகத்திலிருந்து மாத்திரம் ஒளியைப் பெறுகிறார்கள். இதனால்தான் ஒளி மெலிந்து தோன்றுகிறது.

சூரியனைச் சுற்றிப் பூமியும், பூமியைச் சுற்றிச் சந்திரனும் ஓடிக்கொண்டிருக்கையில், அமாவாசையன்று இம்மூன்றும் ஒரே யொழுங்காய் வருவதுண்டு. சந்திரகோளத்தின் வெயிற்படாத இருண்ட பாகம் நம்மை நோக்கித் திரும்பியிருக்கிறது. அச்சமயத்தில் சந்திர நிழல் பூமியின்மேல் விழும்.

3-ம் படத்திற் காட்டியபடி விழுந்தால், கறுத்த நிழல் பட்ட பாகம் சிறு வட்டமாகவும், மென்னிழல் விழும் பாகம் அதைச் சுற்றிப் பெரிய வட்டமாகவுமிருக்கும். சிறு வட்டத்திலிருப்போர்மேல் சூர்யகாந்தி கொஞ்சமும் படாது. பூர்ண நிழலிலிருப்பார்கள். சூரிய மண்டலம் பூராவும் சந்திரனால் மறைபட்டு, பூர்ண சூரியக் கிரகணம் உண்டாகிறது.

கறுத்த நிழலிற்கு வெளியில் மென்னிழலில் நிற்போர் சூரிய பிம்பத்தின் ஓர் பகுதியைத்தான் காண்பார். மற்றப் பாகம் சந்திரனால் மறைபட்டிருக்கும். அவர்களுக்குத் தோன்றுவது பார்சுவ சூரியக் கிரகணம். பார்சுவம் என்றால் பக்கம்.

மேற்சொன்னபடி யல்லாமல் 4-ம் படத்திற் காட்டியவாறு சந்திர நிழல் பூதலத்தில் வீழ்ந்தால், முன்போல அந்நிழல் இருவிதப்படும். மென்னிழல் படிந்த பெரிய வட்டத்தின் நடுவில் சற்றுக் கறுத்த நிழல் வட்டம் தோன்றும். ஆனால் அது முன்படத்திற்கண்ட கறுத்த நிழல் போலல்லாமல், அதன் தொடர்ச்சியாலுண்டானது. இக்கறுத்த நிழலின் தொடர்ச்சியை யேந்திய பாகங்களிலுள்ளோர் வெகு அதிர்ஷ்டசாலிகள். அபூர்வமான காட்சியைக் கொஞ்ச நேரம் அவர்கள் அனுபவிப்பார்கள். சந்திரபிம்பம் சூரியதலத்தின் மத்தியைமாத்திரம்தான் மறைக்கும். அதைச்சுற்றிச் சூரியபிம்ப பாகம் அக்கினி வளையம்போலப் பிரகாசிக்கும். இக்காட்சியே கங்கண சூரியக்கிரகணம்.

இம்மூன்றுவித நிழலும் படாதவிடங்களில் கிரகணமே யிராது. அதாவது அந்த ஸ்தானங்களிலிருப்போர்க்கு சூரியன் பூராவும் பிரகாசித்துத் தோன்றும்.

நாம் ரயில் வண்டிகளில் பிரயாணம் போகையில், வண்டி ஜன்னல்வழியாய் வெளியிற் பார்த்தால், நம்மோடுகூடவே அதேதிசையாகப் பறந்து செல்லும் பருந்துகளையும் மற்றப் பக்ஷிகளையும் காண்கிறோம். ரயில் வேகமும் அவை பறக்கும் வேகமும் ஒன்றாயிருந்தால் அவை பறப்பதாகத் தோன்றாமல் வெளியில் ஸ்திரமாய் இறகுவிரித்து நிற்பதாகவே தோன்றும்! எப்போதும் நம்மிடமிருந்து ஒரே திசையிற் காணப்படும். அவற்றின் வேகம் கொஞ்சம் தணிந்தால் பின்தங்கிவிடும்; வேகமதிகரிக்க முன்போய்விடும்.

பூமியும் ஓடிக்கொண்டே யிருக்கிறது; சந்திரனும் அப்படியே. ஆனால் சந்திரனுடைய வேகம் அதிகமானது. இதனால் சந்திரனுடைய நிழல் பூதலத்தில் ஓரேயிடத்தில் வீழ்ந்து ஸ்திரமாயிராமல், நகர்ந்து ஓடும். அப்படிச் செல்லும் மார்க்கத்தி லிருப்போர் முறையே அந்நிழலில் மறைபட்டுக் கிரகணம் காண்பார்கள்.

சந்திரன் நிழல் நகர்ந்து வருகையில், முதல் மென்னிழலில் நாம் நுழைகிறோம். ஆகையால் ஆரம்பத்தில் சூரியபிம்பத்தில் கொஞ்சம் மறைபடும். வரவர நிழல் நகரக் கறுத்த நிழல் நம்மையெட்டும். அப்போது பூர்ணக் கிரகணமாவது கங்கணக் கிரகணமாவது ஏற்படும். கறுத்த நிழல் நகர்ந்துபோகவே மறுபடியும் மென்னிழலில் நாம் வருவோம். அப்போது மறுபடியும் பார்சுவக் கிரகணமாயிருக்கும். நிழல் முழுதும்

விலகிப்போய்விட்டால் கிரகணமும் முற்றுப்பெறும். நாம் நிழல் ஓட்டமார்க்க மத்தியமாயிராமல் சற்று ஒதுங்கி யிருந்துவிட்டால், நாமிருக்குமிடத்தைவிட்டு விலகி கறுநிழலோடிவிடும். அப்போது கிரகணம் முழுதும் பார்சுவமாகவே யிருக்கும்.

மென்னிழல் பாவியிருக்கும் பூப்பிரதேசம் கறுநிழல் விழும் பாகத்தைவிடப் பெரியதாகையால், பூர்ணக் கிரகணமும் கங்கணக் கிரகணமும் சற்று நேரம்தானேற்படும். பார்சுவக்கிரகணம் இதைவிட அதிககாலமிருக்கலாம். நாமிருக்கும் ஸ்தானத்திற் கேற்றபடி கிரககாலம் அதிகமாகவோ குறைந்தோ இருக்கும்.



(படம் 3.)

சூரிய தலத்தில் ஒரு மனிதன் நின்று இச்சமயங்களில் எவ்விதக் காட்சியைக் காண்பான்? அவனிருக்கும் பக்கமாய்த் திரும்பியிருக்கும் பூமியின் பாதியும் சந்திரனின் பாதியும் வெயிலையடைந்து பிரகாசிக்கும். ஒருகோளம் மற்றொன்றில் கால்பங்கு குறுக்களவுள்ளதாகத் தோன்றும். தூரதிருஷ்டிக் கண்ணாடியை உபயோகித்தாலொழிய சந்திரன் ஸ்பஷ்டமாயவன் கண்ணுக்குத் தோன்றாது. மேற்சொன்ன கிரகண காலங்களில் சந்திரன் பூமியை வரவர நெருங்கி, அதனுடன் சேர்ந்து, பிறகு மறுபக்கமாகப் பிரிந்துவிடும். இரண்டும் பிரகாசமுள்ளவை போலத் தோன்றி சந்திரன் பூமியை மறைப்பது போலவே யிராது. நமக்கு சந்திரபிம்பத்தின் குறுக்காக அதே காந்தியுள்ள சிறு வட்டமொன்று ஓடினாலெப்படியோ அவ்விதமே சூரிய மனிதன் கண்ணுக்குச் சந்திரன் பூமியின் குறுக்காக ஓடுவது காணப்படும்.



(படம் 4.)

சந்திரதலத்தில் நமது பக்கமாய்த் திரும்பி நிற்கும் பாகத்தில் நின்றொருவன் எவ்விதக் காட்சி காண்பான்? மேற்சொன்ன கிரகண காலங்களில் பூமியின் காந்திபெற்ற முகத்தின் குறுக்காகக் கறுத்தபுள்ளி யொன்று யோடுவதுபோல அவனுக்குப் புலப்படும். அப்புள்ளி சந்திர நிழலின் கறுத்த பாகமே. வெகுதூரத்திலிருப்பதால் குறுகி, காலணு, பைசா, துவரம்பருப்பு முதலிய அளவாய் வட்டமாய் சந்திரனுக்கும் நமக்குமுள்ள தூரத்திற்குத் தகுந்தபடி தோன்றும்.

சந்திரன் பூமியை $27\frac{1}{3}$ நாளுக்கொருமுறைசுற்றி வருகிறதல்லவா? அதன் வீதியின் நிஜஸ்வரூப மெய்வ்விதமானதென்று இவ்விடம் விசாரிப்போம். அடிக்கடி சந்திரனுடைய குறுக்களவை யளந்துகொண்டே வந்தால் அது எப்போதும் ஒரேமாதிரியாயிராமல் வித்தியாஸப்படுகிறது. இவ்வித்தியாஸத்திற்கும் பிறை மாறுதல்களுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. நாமிப்போது கவனிக்கவேண்டிய குறுக்களவு முழுசந்திரமண்டலத்தது. இந்த அளவு ஒரு ஸமயமிருப்பதுபோல மற்றொரு ஸமயமிராமல் குறைந்தும் அதிகரித்தும் காணப்படும். இவ்வித்தியாஸங்கள் சாதாரணமாய்க்கண்ணுக்குப்புலப்படா; அதிநுட்பமான அளவைக் கருவிகளாற் கண்டறியவேண்டும். பொருட்கள் சமீபித்திருந்தால் பெருத்தும், தூரவிலகினால் சிறுத்தும் தோன்றுகின்றனவல்லவா? ஆதலாற் சந்திரனுடைய குறுக்களவு குறைந்திருக்கையில் அது நம்மிடமிருந்து விலகியிருப்பதாகவும், ஜாஸ்தியாய்க் காணும்போது நமக்குச் சமீபமாயிருப்பதாகவும் அனுமானிக்கலாம். இதனால் பூமியைச் சுற்றிவருகையிற் சந்திரன் அதனிடமிருந்து எப்போதும் ஒரே தூரத்திலிராமல் நெருங்கியும் விலகியும் ஓடுவதாக ஏற்படுகிறது.

சந்திரவீதி பூமியை மத்தியிலிட்ட வட்டமாயிராமல் அகண்டாகாரமானதாக விருக்கவேண்டும். (படம், 5.) சூரியனைச்சுற்றிப் பூமி யோடுவதும் இவ்வித மார்க்கமாகவே.



(படம். 5)

இந்த விஷயத்திற்கும் சூரியகிரகணங்களுக்கும் நெருங்கிய ஸம்பந்தமுண்டு. சந்திரன் விலகியிருக்கையில் அமாவாஸை யொத்துக்கொண்டு, கிரகணம் ஸம்பவிக்குமானால், சந்திரனுடைய நிழற்கூர் பூமியை யெட்டமுடியாமல், அதன் கருநிழலின் தொடர்ச்சிதான் பூதலத்தில் விழும்படியாயிருக்கும். இச்சமயங்களிற்றான் கங்கணக்கிரகணமுண்டாகிறது. சந்திரன் பெருத்துத் தோன்றினால் பூமிக்குச் சமீபித்திருப்பதாகிறது. அப்போது அதன் சாயை கூராக முடிவுபெறுவதற்கு முன்னமேயே பூதலத்தை யெட்டிவிடும். இச்சமயங்களில் பூர்ண சூரியகிரகணங்கள் ஸம்பவிக்கும்.

சந்திரக்கிரகணம்.—சந்திரனுடைய சாயை பூதலத்தில் வீழ்ந்து ஸௌர்யக்கிரகணங்களுக்குக் காரணமாயிற்று. சந்திரன் பூமியைச்சுற்றி வருகையில், பௌர்ணமையன்று சூரியனிருக்கும் திக்குக்கெதிராக மறுபுறமாக வரவே, பூமி அவ்விரண்டு கோளங்களுக்கும் மத்தியில் இருக்கும். இம்மூன்றும் ஒரே ஒழுங்கில் நேராய் வாராவிட்டால் ஓர்விதப் புதுமையும் நமக்கு ஏற்படாது. சில வேளைகளில் ஒரே யொழுங்காய் வருவதுமுண்டு. அப்போது சந்திரன் பூமியின் நிழலுக்குட்புகும். சந்திரனுடைய நிழலைப்போலவே பூ நிழலும் இருவிதமானது. உள்ளாக அடங்கியிருக்கும் கருநிழலும் அதைச்சுற்றி மங்கிய மென்னிழலும் கொண்டது.

சந்திரனோடும் தூரத்தில் பூமிநிழலை குறுக்காக வாளால் அறுத்துவிட்டால், அறுப்புவாய் கீழே காட்டியவிதமாய் நடுவில் கறுத்தும் சுற்றிலும் மங்கியுமிருக்கும்.

பௌர்ணமையன்று, முதல்வீதி வழியாய் சந்திரனோடு நேர்ந்தால் அதன் தலம் (அல்லது தலத்தின் ஒரு பகுதி) சற்று ஒளி குன்றுமே யொழிய வேறொரு வித்தியாஸமும் தோன்றாது.

2-வது வீதி வழியாய் ஓடினால் மென்னிழலிலிருக்கும் சமயத்தில் ஒளி சற்றுத்தான் மங்கியும், கருநிழலில் பிரவேசித்துத் தாண்டுகையில் பார்சுவ சந்திரக்கிரகணமும் உண்டாகும்.



(படம் 6.)

3-வது வீதிவழி யோடுகையில் சந்திரபிம்ப முழுதும் கொஞ்சகாலம் கருநிழலில் மறைய நேர்ந்து பூர்ண சந்திரக்கிரகணம் ஏற்படும். முதலில் சந்திரபிம்பம் மென்னிழலில் புகுந்து ஒளி குன்றும். சற்று நேரத்தில் கருநிழலை யெட்டிப் பிம்பம் கொஞ்சங் கொஞ்சமாய் மறைய ஆரம்பிக்கும். ஈராவா முழுதும் சாயையில் மறைபட்டு சூரியகாந்தியைப் பூராவாயிழந்துவிடும். பிறகு அடர்ந்த சாயையிலிருந்து சிறுகச்சிறுக மறுபுறம் வெளிப்பட்டு மென்னிழலில் வர ஒளியைப்பெற்று மங்கியிருந்து, பின்னர் முழுதும் விலகி சூரிய வெளிச்சந் தாங்கிப் பிரகாசிக்கும். ஆகவே பூர்ண சந்திரக்கிரகணம், முன்னால் பார்சுவக்கிரகணமா யாரம்பித்துப் பின்னாலும் பார்சுவக் கிரகணமாக மாறி முடிவுபெறும்.

4-வது வீதிவழி போயோடினால் சந்திரக்கிரகணமே நமக்குக் கிடைக்காது.

சூரிய தலத்தில் ஓர் மனிதனின்று நோக்கின், சந்திரக்கிரகணம் பூர்ணமாயிருக்கையில், அதன் பிம்பம் பூ பிம்பத்தின் பின்னோடி யொளிந்து மறுபடி வெளிப்படுவது போலத் தோன்றும். பாரிசுவ சந்திரக்கிரகண காலங்களில் மேற்சொன்னபடி முழுப்பிம்பமும் ஓடி யொளியாமல் ஓர் பாகம் மாத்திரம் பூமியின்பின் மறைபடும். அம்மனிதன் கண்ணிற்படும் பூ சந்திரப் பகுதிகள் வெளிச்சம் பெற்றவை யாதலால், சூரியக்கிரகண காலத்தில் எவ்விதக் காட்சியைக் காண்பானோ, அதற்கும் மேற்கூறிய காட்சிக்கும் வித்தியாஸ மொன்றும் தெரியாது. இரண்டு வெண்மையான தட்டுகள் ஒன்றையொன்று நெருங்கித் தாண்டிப்பிரிந்து விடுவது போலவே இரண்டு விதக் கிரகண காலங்களிலும் தோன்றும்.

பூர்ண சந்திரக்கிரகண சமயத்தில் சந்திரதலத்திலிருப்போருக்குச் சூரியன் பூமியால் பூராவாய் மறைபடும். பார்சுவக் கிரகண காலத்தில் கருநிழலி லிருப்போர்க்கும் இம்மாதிரியே. பூ மென்னிழலி லிருப்போர்க்குப் பாரிசுவ சூரியக்கிரகணம் தோன்றும். ஆகவே, நமக்குச் சந்திரக்கிரகண மேற்படுங் காலங்களில் சந்திர தலவாஸிகளுக்கு சூரிய கிரகண வைபவம். ஆனால் ஒரு வித்தியாசம். சந்திரபிம்பம் சிறியதாகையால், ஸமயம் ஒத்துக்கொள்ளும்போது நமக்குக் கங்கணக்கிரகணக் காட்சி யேற்படுகிறது. ஆனால் சந்திரதலத்தி லிருப்போர்க்கு இவ்வதிர்ஷ்டம் கிடையாது. அவர்கள் கண்ணுக்குச் சூரியனைவிட பூமி எப்போதும் பெரியதாகவே தோன்றும். ஆதலால் பூராவாவது பக்கமாகவாவதுதான் பூமி சூரியமண்டலத்தை மறைக்கும்.

மேலும் சந்திரனோடும் தூரத்தில் பூச்சாயையின் அடர்ந்தபாகம் சந்திரபிம்பத்தைவிட அதிகமான குறுக்களவுள்ளது. அதனுள் சந்திரன் புகுந்துவிட்டால் நிழல்பட்டவிடம் தவிர அதைச் சுற்றிக் காந்தியுள்ள பாகமொன்று ஏற்படவியாயமில்லை. ஆகையால் கங்கண சந்திரக்கிரகணமே கிடையாது.

சூரியக்கிரகணம் சிலவிடங்களிற்றான் தெரியும். சந்திரனுடைய நிழற்படாத பூ பிரதேசங்களில் தெரியாது. அதாவது அவ்விடங்களிலிருப்போர்க்கு முன், சந்திரன் வந்து சூரிய தலத்தை மறைக்காது. சந்திரக்கிரகணமோ அத்தன்மையதல்ல. அதன் பிம்பம் பூமிச்சாயையில் புகுந்து மறைந்து ஒளியற்றுவிடும். ஆகையால் எவ்விடத்திலிருந்து பார்த்தாலும் கிரகணம் பிடித்தே தோன்றும்.

S. பாலகிருஷ்ணையர், பி. ஏ., எல். டி.

திருவண்ணாமலை விருபாக்ஷி குகையின்கண் அமர்ந்தருளும் சுவாமிகள்மேல் தோத்திரப்பாக்கள்

IN PRAISE OF THE SWAMI AT TRUVANNAMALI

காப்பு—நேரிசை வெண்பா

வாக்குமன மெட்டாத வத்துவே யாமறையால்
நோக்க வறிதான நுண்ணறிவே—நீக்கமற
எங்கெங்குந் தானே யிருந்தருளும் பேரொளியே
மங்குவினை நீக்க மதி.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

மலர்தலை யுலகில் வல்லிரு ளகல
மாதவன் கண்கண்மூன் றுடையோன்
அலருள நினைப்பான் கருதிமா மறையோ
ரருங்குல திலகனுயமர்ந்து
பலபல கலையுங் கற்றின வயதிற்
பன்மலச் சிக்கறுத் தொழித்து
நிலவெனச் சோணகிரியடி தானுய்
நின்றனன் பராபர நிமலன். (1)

கோதிலா மாதர்க் கண்ணெனும் வலையுங்
குஞ்சியா ரணிபழுங் கொல்லும்
வாதினன் மதவேள் கைவிலாம் புருவம்
மதர்த்தெழு மலையெனுங் குசமும்
ஒழிடுங் காம வாரியைக் கடந்தே
புற்றிடிற் காணலாங் கிரிக்கீழ்
ஆதியாய் நடுவாய் அந்தமாம் ஞான
வழியினை விளக்கிய குருவை. (2)

சமயமுஞ் சமயா தீதமாய்ச் சமயச்
சண்டையர்க் கெட்டொணாத் தருவாய்
அமலமாய் அறிவா யண்டமா யகிலத்
தனைத்தினு நிறைந்திடு மாதி
தமமது விலக்க நால்வருக் கன்று
தானுப தேசஞ்செய் ததுபோல்
மௌனுறு முகமாய் அருட்குகை யிருந்தே
யிருவினை யோட்டிய குருவே. (3)

இலக்கண விலக்கி யங்களும் வேத
மெழின்மறை யங்கமு மினிதாய்த்
துலக்கிய நீதி சாத்திரம் பிறவுஞ்
சுத்தமாய்க் கற்றுணர்ந் ததனால்

விலக்கிய மதியை யொருவழிப் படுத்தி
வீறுபே ரருளொளும் வாரி
கலக்கிய வமுதம் உண்டபின் யார்க்குங்
காட்டுவான் கருதிநின் றனனே. (4)

ஊத்தைசே ருடலை யுண்மையென் றுன்னி
யொன்றல வேபடும் பாடு
போத்தனன் பொய்யால் மெய்யதை யுணராப்
பேதையேன் பிறந்தனன் புவியில்
பார்த்தவர் பழிக்க நின்றநான் நின்பாற்
பரிவுட னடைக்கலம் புகுந்தேன்
சேர்த்துநற் குழுவி லாண்டருட் புரிவாய்
செவ்வியோய் ஞானதே சிகனே. (5)

திருவுரு வாகி யையுரு வாகிச்
செப்பிய விரண்டதா யொன்றாய்
உருவமா யருவா யுருவரு வாகி
யொன்றுமில்லாதகு ணியமாய்
பெருவழி காட்டும் வத்துவே தானாய்
பெற்றனன் அருவிநீர் பெருக்குந்
தருவளர் சோலை யருணையங் கிரிக்கீழ்
தனிநிலை யோச்சிய குருவே. (6)

வாசகம் படிப்பேன் மனநிலை நிறுத்தேன்
மலக்கயி றறுத்தவன் மான
ஈசனு னெனவே நிட்டையி னடிப்பே
னெண்ணிடு மெற்கருட் கிட்டா
ரேசக மாதி மூன்றதை யொடுக்கி
நின்றபே ரருளொளி நிரப்பி
மாசற நின்னரு ளளிப்பாய்
வான்பொழி கருணைநா யகனே. (7)

திங்களுக் கடுக்கை முடிமிசைத் தவழுஞ்
சிவனருட் பெருக்கினுற் சிறந்தே
யங்கமும் புளகித் திருவிழி கனிந்தா
னந்தமா யங்ஙனே வெழுந்து
பொங்கிய வமுத வாரியுண் மூழ்கி
போதளவுண்ட திலூறும்
எங்கணு யகனே யிருட்குகை விலக்க
யெழிற் குகை மேவிய யிறையே. (8)

செவ்வரி படர்ந்த கண்ணிய ருறவோர்
தீங்கினர் வஞ்சகர் மூடர்
வெவ்விய குணத்தர் பொய்யதே புகன்று
மேதினி வாழ்ந்திடு மிடியர்
ஒவ்விய கல்வி புணர்விலா மூடர்
உத்தமர்க் கிழிவதை யுறுத்தோர்

ஒளவியம் படிப்போர்க் குழுவினிலடியே
னமிழ்ந்திடா வகை யருளுவையே. (9)

கருமலை பகடின் மிசையுறு தருமன்
காத்துள பாசவங்குசமும்
வெருவிய விழியு மிடிகுரற் கண்டு
மெய்க்கடுக் குற்று வாழ் விழந்தேன்
அருமறைக் கெட்டா ஜோதியை யோக
வறிவினுலின்புறப் பிணித்து
மருவிய குருவே லல்வினை வாட்டி
வந்தெனையாண்டருட் புரிவாய். (10)

வெண்பாக்கள்

சுந்தரன் சொன்மாலை சூட்டுந் திருச்சுழியற்
சுந்தரன் மாதவத்திற் றோன்றியதே—சுந்தரஞ்சேர்
வேதம் பழுத்தவாய் வெங்கடரமண
போதம் பழுத்த பொருள். (1)

என்னப்பன் றாள்தேடி யான்செல்வே னென்றுவந்த
என்னப்பன் றாளை யிறைஞ்சுவார்க்—கின்னலுறும்
மாயாப் பிறவிநோய் வாராது வானமுதம்
ஓயாம லுண்பா ருணர்ந்து. (2)

கானற் றெண்ணீருங் கயிற்றரவுங் குற்றிகள்வன்
பான லுறுஞ்சிப்பி பால்வெள்ளி—வானதனிற்
கந்தருவ லூரதுபோற் காட்டுகின்ற பொய்யுடலை
யெந்தவிதமாய்நம் புவேன். (3)

ஏகமுடன் பலவா யென்றைக்கு முள்ளதுவாய்ப்
போகபர மானந்த போதமாய்—யோக
நிலையமர்ந்த வாழ்வின் நிலையமர்ந்த நித்த
கலையமர்ந்த மெய்க்குருவே கார். (4)

வானந் திகழருணை மந்திரத்தி னின்றுபெரு
கானந்த வெள்ள மதுபுரண்டு—ஞானமாய்
புத்தியுநற் பக்திசக்தி போதவருள் நித்தமுக்தி
சித்தியருள் வெற்றிதந்த தே. (5)

ஊனிறந் துள்ள முயிரு மூணர்விறந்து
தானிறந் தாதிபரந் தானிறந்து—வானிறந்து
முற்று முதலொளியாய் நின்றுவளர் மோனகுரு
வத்துவெனை யாட்கொள்ளும் வந்து (6)

ஆரணத்து மாகமத்து மாய்ந்த பொருளிடத்துங்
காரணத்துங் காரியத்தின் கண்ணின்ற—பூரணத்தின்
மெய்யொளியைக் கொண்டிலகு வேதபர சற்குருவென்
பொய்யொளியைக் கொல்லவினை போம். (7)

ஆசையெலா மற்றவிட மாமதுவே முத்தியென
பேசமறை யாதி பிணக்குறவே—பாசங்கொளும்

நாயேற் கருளளிக்க ஞானகுரு வாய்வந்த
தீயே வினையறுக்க நில். (8)

பூச்சுக்கும் நங்கையர்கள் பூட்டுகச்சு ளார்முலைக்கும்
பேச்சுக்குந் தீஞ்சொற் பிணக்கிற்கும்—வீச்சுக்கும்
காட்டிக் கொடுக்கின் கடையேன் உயிர்தரியேன்
நாட்டியருள் தந்திடுவாய் நன்கு. (9)

பூஞ்சயன முற்றாலும் பொன்னணியைப் பூண்டாலும்
தீஞ்சுவைசொற் பூவையர்தோட் சேர்ந்தாலும்—தாஞ்
[சதமென்,
றெண்ணிமிக வாழ்ந்தாலு மென்னபயன் சற்குருவின்,
கண்ணொளிப டாதவர்கள் காண். (10)

பொய்யுடலின் கட்டறுத்து போதநிலையே யறிந்து
மெய்யறிவிலே தனியாய் விட்டருள்வாய்-துய்யவொளி
தற்பரமாய் நின்றிலகு சற்குருவே சாந்தநிலை
அற்புதனே நீதி யதுவாய் (11)

கல்லடிக்கும் நாணாது காமன் கணையடிக்குஞ்
சொல்லடிக்குந் தோற்காது தோன்றுமால்—பல்லடியார்
சிந்தித்து வாழ்த்துந் திருவருணை வெற்பின்றாள்
மந்திரத்தி னின்றபெரு வாழ்வு. (12)

மாதர்த் தொடக்கறுக்கும் வானுலகை யாளுவிக்குந்
தீதறுக்குஞ் சான்றோரைச் சேர்ப்பிக்கும்—ஏதக்
கருவாக்ஷி பூண்டார்தங் கட்டறுக்கு நந்நீர்
விருபாக்ஷி வாழ்ந்தருளு மெய். (13)

பேர்பெற்ற வாழ்வும் பெரும்புகழும் பேரருளும்
யார்பெற்றா ரென்னைப்போ லார்பெறுவார்-நேர்பெற்ற
மெய்ப்பொருளை மெய்க்குகையின் மெய்யறிவை மேல்
வழியிற், கைப்பொருளாய்க் கொண்டதினாற் காண் (14)

ஞான குகையடைவர் நல்லறிஞர் நானிலத்தில்
ஈன குகையடைவர் ஏதமுற்றோர்—வானமுதம்
கொப்பளிக்குந் தீங்கனியைக் கோகிலமுட் கொள்ளும்
வேம், பைப்புசிக்கும் வாயசமே பார். (15)

கலையேறிக் காண்டற் கரும்பொருளை ஞான
மலையேறிப் பார்த்து மகிழ்ந்தேன்—சிலையேறும்
மற்கை மறவர் வயங்குந் திருவருணை
பொற்குகை யுண்ணுழைந்து போய். (16)

கட்டளைக்கலித்துறை

சொல்லற் கெளிய மலத்திலட நின்றுடற் றுன்பமுற்று
மல்லற் கொடு வாயு சேட்டையாற் றன்னவிம் மானிலத்
தில், வெல்லற் கரியதாம் வேள்கணை மேனியில் வித்தி
ரம்செய், யல்லற்படுதெ லழகோ கிரிக்கீழமர்குருவே. (17)

K. V. ராமசந்திரன்.

உபநிஷத் ரத்தினமாலை

THE SUMMARY OF THE MINOR UPANISHADS

(39) மைத்திராயண்ய உபநிஷத் (24)

வைதிக கர்மங்கள் எல்லாம் பரம்பொருள் ஆராதனம்தான். ஆதலால் யஜமானன் இவைகளை நிறைவேற்றி ஆத்மத்யானம் செய்யவேண்டும். இதனால்தான் வைதிக கர்மங்கள் முடிவு பெறும். இவ்வாறு த்யானம் சென்றடையும் வஸ்து தேவாதிகளுக்கு ஸாக்ஷியாகவிருப்பவனே. இதை ஒரு கதைமூலமாக விளக்குகிறோம். (இந்த உபநிஷத்தில் அநேக உபநிஷத்துக்களிலிருந்து மேற் கோள்கள் சேர்த்துத் தொகுக்கப்பட்டிருக்கின்றன).

ப்ருஹத்ரதன் என்ற அரசன் சரீர நிலையாமையை உணர்ந்து வைராக்யமடைந்து பிள்ளையிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டு வனம் போனான். அங்கு கைகளை மேலே உயர்த்திக் கொண்டு ஸூர்யனையே விடாது பார்த்துக்கொண்டு ஆயிரம் நாள் தவமிருந்தான். இதன் முடிவில் மிகுந்த தேஜோவானான சாகாயன்யர் என்ற ப்ராஹ்மவித் இவனிடம் வந்து இவனை எழுப்பினார். அரசன் இவர் காலில் விழுந்து 'எனக்கு ஆத்மவித்தையை உபதேசிக்கவேண்டும்' என்று வணங்கிக் கேட்டுக்கொண்டான். 'இந்த விஷயம் முன்னமே நிச்சயிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இதை அடைவது கஷ்டம். வேறு வரத்தைக் கேட்டுக்கொள்' என்றார். இதைக் கேட்டதும் அரசன்மறுபடியும் வணங்கிப் பரபரப்புடன் தேஹ நிலையாமை, உலகச்சிறப்புநிலையாமை, மேற்பதவிகளின் நிலையாமை, ப்ரபஞ்ச நிலையாமை, ஸம்ஸாரத்தின் சக்ராகாரகதி ஆகிய இந்த விஷயங்களில் தனக்கு ஏற்பட்டிருக்கும் ஞானவைராக்யாதிகளை நன்றாகவெளியிட்டு 'நீரென்னைக் கரையேற்றிவிடவேண்டும்' என்று மன்றாடினான். அரசன் மனம் பரிபாக மடைந்திருந்ததைக் கண்ட

சாகாயன்யர் மிகவும் ஸந்தோஷித்து ஆத்மஞான விஷயத்தைத் தன் குரு மைத்ரேயரிடமிருந்து கேட்டபடி எடுத்து விளக்கத்தொடங்கினார்.

“ஸ்தூல தேஹத்தில் ஜாக்ராதவஸ்தையில் நான் எனது என்று அபிமானித்து ஸம்பந்தப்படுபவன்போலக் காணப்பட்டும் அதற்கு அப்பாற்பட்டு நிற்பவன் ஆத்மா. ஸ்வப்நாவஸ்தையில் ஸூக்ஷ்ம தேகத்தில் புகுந்து பலவிதப்பட்டிருக்கும் அந்தக்கரண விகாரங்களை அநுபவிப்பவன் போலக் காணப்பட்டும் அப்பாற்பட்டிருப்பவன் இந்த ஆத்மாதான். இதைவிட்டு காரண தேஹத்துட் புகுந்து பரம்ஜ்யோதியாகி தன் ஸ்வந்த ரூபத்தோடிருப்பவனே ஆத்மா. இவன் தான் அழிவற்றவன், பயமற்றவன் ப்ரஹ்மம்.

பின்பு சாகாயன்யர் முன்னர் பிரஜாபதிக்கும் வாலகில்யர்களுக்கும் நடந்த ஸம்வாதத்தை எடுத்துக் கூறுகிறார்.

முன்னொரு காலத்தில் மிகச் சிறப்புடையவர்களான **வாலகில்யாள்** என்ற மஹான்கள் கிரது என்ற பிரஜாபதியை அணுகி, ‘இந்தச் சரீரம் ஜடம், இது எவனுடைய மஹிமையால் உயிருள்ளதுபோலத் தொழிற்படுகிறது. இந்திரியங்களுக்கு அது விளங்கவில்லையே! இதை ஏவுகிறவன் யார் என்று கேட்டார்கள்.’

பிரஜாபதி ‘பரமயோகிகளைப்போலத் தாக்கற்று ப்ரபஞ்சாதீதமாகி, ஆசையற்றதாகி, எல்லாவற்றையும் பரிசுத்தப்படுத்தும் தன்மையதாகி, ஏகமேவாத்விதீயமாகி, சாந்தமாகி, ப்ராண மனோ ரஹிதனாய், நாசம் குறைதல் அற்று மாறுதவனாகி, நித்யன், அஜன், ஸ்வதந்திரன் ஆகிநிற்கும் வஸ்துவால் இந்தத் தேஹம் தூண்டப்பட்டுத் தொழிற்படுகிறது’ என்றார்.

வாலகில்யாள்.—‘நடுத்தன்மையுடைய இந்தச் சிறந்த வஸ்துவால் தேஹம் எப்படித் தூண்டப்படுகின்றது என்று கேட்டார்கள்.

பிரஜாபதி.—‘இந்த வஸ்து ஸூக்ஷ்மமானது, கர்மேந்திரியங்களால் பற்ற முடியாதது, ஞானேந்திரியத்திற்குப் புலப்படாதது. இதற்குப் புருஷன் என்று பெயர். தூங்குபவர் தம் உணர்ச்சியால் விழித்துக்கொள்ளாததுபோல, இவன் இந்த தேஹத்தில் ஒரு அம்சத்தாலிருக்கிறான் பற்றின்றி. இவனது சித்ரூபத்திற்கே க்ஷேத்ரஞ்ஞன் என்று பெயர். ஸ்ருஷ்டி விசித்ரம் வெளிப்படுவதற்கு முந்தி ப்ரஜாபதி தனிமையாக விருந்தார். இதனால் அவருக்கு ஸந்தோஷம் பிறக்காது போக, ஆத்மாவை த்யானித்து வெகு பிரஜைகளை உண்டாக்கினார். (தாமேயானார்). அவர்கள் கல்லைப்போல ஜடமாக விருந்தார்கள். இதனால் ஸந்தோஷம் தடைபடுவதைக் கண்டு ‘நான் இவைகளுள் புகுந்துகொள்ளலாம்’ என்று எண்ணமிட்டார். அதிஸூக்ஷ்ம ரூபம் தரித்து இவைகளுட் புகுந்து இவைகளைத் தன் மயமாக்கிக்கொண்டார். (நெருப்பு இரும்புக் குண்டில் புகுவதுபோல தேஹங்களை அசைக்க பிராணாதிகள், ஐந்து வாயுக்களாகப் பிரித்துக்கொண்டன. வைச்வானராக்கினி மூலமாக உஷ்ணத்தை உண்டாக்கினார். இவர் ஹ்ருதய குஹையிலிருப்பவர். மனஸ்ரூபமாகவிருந்து பிராணனை சரீரமாக உடையவர். ஸத்யஸங்கல்பர். ஆகாசம் போலத் தாக்கற்றவர். இதனாலும் ஒருவித திருப்தி ஏற்படாமல்போக ‘விஷயங்களை அநுபவிக்கலாம்’ என்ற எண்ணம் உண்டாக இந்திரியங்களைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டு நின்றான். இந்தப் புருஷனுக்குச் சரீரம் தேர், மனம் ஸாரதி, கர்மேந்திரியம் குதிரைகள், ஞானேந்திரியங்கள் கடிவாளங்கள், பிரகிருதி குறடா ஆகவே சரீரம் தொழிற்படுகிறது. குணஸ்வரூபமான திரையில் மறைந்துகொண்டு கர்மபலன்களை அநுபவிப்பவன் போன்ற தோற்றத்தை உண்டாக்கிக்கொண்டு உண்மையில் தாக்கற்ற ஸாக்ஷியாக இருப்பவனாகிய இவனே ஆத்மா’ என்றார்.

வாலகில்யர்கள்.—‘ஆத்மா விஷயச் சிறப்பு இவ்வாறாக ப்ரபஞ்சாதிகளில் அகப்பட்டுக் காணப்படுங்கால் விளங்கும் ஆத்மா யார்?’ என்று கேட்டார்கள்.

பிரஜாபதி.—‘இவனுக்கு பூதாத்மா என்று பெயர். இவனுக்குத்தான் எல்லாவித கஷ்டங்களும். பூதஸூக்ஷ்மம், ஸ்தூலங்களாகிய தேஹங்களில் இருந்து ஆளும் குணமுடையது இந்த பூதாத்மா. இது தாமரையிலைத் தண்ணீர்போல எதனோடு ஒட்டாதிருப்பினும், ப்ரகிருதியின் முக்குணங்களால் பாதிக்கப்படுகிறது. மயக்கமுண்டாகிவிட, தன்னுள்ளிருக்கும் தூண்டும் வஸ்துவாகிய முற்கூறிய ஆத்மாவை உணராது பேதபுத்தி அகங்கார மமகாரங்களுக்கு இடந்

தந்து பக்ஷிவலையில் அகப்பட்டுத் தவிப்பது போலத் தானே கட்டுண்டு திண்டாடுகிறது. இதனால்தான் இவனுக்கு வருத்தம் அதிகம். கர்த்ருத்வாதி பாவமுடையவன் இவன். தன் சந்நிதானமாத்திரத்தால் எல்லாவற்றையும் ஏவுபவன் அந்தராத்மா. நெருப்பால் வியாபிக்கப்பட்ட இரும்புகுண்டு கருமானால் அடிபட்டு பல ரூபங்களாக்மாறினபோதிலும் நெருப்பு மாறுதும் அடிபடாதும் இருப்பது போல, அந்தர்யாமியால் வ்யாபிக்கப்பட்டு பூதாத்மா, ப்ரகிருதி குணங்களால் அடிபட்டு அநேக நிலைகளை அடைந்து தவிக்கும் அந்தராத்மா நிர்விகாரமாகவே இருக்கும். ஸ்தூலதேஹம் உற்பத்தி, விருத்தி, வெளிப்படுவது, ஆக்கப்பட்டிருக்கும் விதம், வ்யாதிக்கு இருப்பிடமாக இருப்பது இவைகளை யோசித்தால் பூதாத்மாவுக்கு இதனால் மிகுந்த துயர் ஏற்படுவதற்குத் தடையில்லை என்பது விளங்கும். ஸூக்ஷ்மதேஹத்திலிருக்கும் சஞ்சலஸ்வபாவம், மோசக்கருத்துக்கள் நல்ல வேலைகளை மனப்பூர்வமாகச் செய்யாது ஸுகம் விரும்பிச்செய்யும் காம்யத்தன்மை, இவைகளால் பூதாத்மாபடும் துயரத்திற்குக் கணக்கில்லை.

வாலகில்யர்கள்.—‘ஓ, பகவானே! இந்த பூதாத்மா இந்தக் கொடிய நிலையை விட்டு சித் ஆத்மாவிடம் ஸாயுஜ்யம் அடையும் விதத்தை எடுத்து விளக்கவேண்டும்’ என்றனர்.

பிரஜாபதி.—(முதலில் ஜீவாத்மாவின்கொடிய நிலையை தகுந்த திருஷ்டாந்த மூலமாக விளக்கிவிட்டு)ஸ்வதர்மாநுஷ்டானமும், தன்வர்ணாச்சிரமத்தில் விதிப்படி நிற்பதும், வேத மூலமாக ஆத்மதத்வ வித்தையை உணருவதுமே முக்ய உபாயங்கள் களாவற. வேதத்திலிருப்பதுதான் ஸ்வதர்மம். இதை மீறுகிறவனுக்கு ஆசிரமம் நிலைக்காது : தவம் ஸித்திக்காது. ஞானம், தவம், ஓங்காரத்யானம் ஆகியஇவைகள் மூலமாக ப்ரஹ்மத்தை அடைந்து விடலாம். இந்த ப்ரஹ்மம் முற்கூறிய ஆதி பிரஜாபதிக்கும் அப்பாற்பட்டது. இவன் உண்மை ஸுகத்தைப் பெருவன். இந்த மார்க்கத்தில் தொடங்கும் பூதாத்மா முற்கூறிய கஷ்டங்களிலிருந்து விடுபட்டு ப்ரஹ்மஸாயுஜ்யம் பெறுவன்’

வாலகில்யாள்.—அக்னி, வாயு, ஸூர்யன், ப்ராணரூபமான காலம், அன்னம், ப்ரஹ்மா, ருத்ரன், விஷ்ணு இந்த தேவதைகளுள் சிற்சிலர் ஒவ்வொன்றை ஆராதிக்கின்றனர். இவர்களுள் யார் ச்ரேஷ்டம்?’ என்று கேட்டார்கள்.

பிரஜாபதி. —‘இதுவரையிலும் கூறிவந்த ஆத்மாவாகிய ப்ரஹ்மத்தின் முக்ய ரூபங்கள் நீங்கள் கூறிய தேவதைகள். இவை எல்லாம் ப்ரஹ்மம்தான். எவனுக்கு எதை ஆராதிப்பதில் ஸந்தோஷம் ஏற்படுகிறதோ அதை ஆராதிப்பதால் யாதொரு கெடுதியும் வாராது. இவர்கள் ப்ரஹ்ம சரீரங்களாயினும் இவர்களை ப்ரஹ்மம் என்று மதித்தே த்யானம் செய்யவேண்டும். ஆராதிக்கவேண்டும். இவர்கள் மாறுபாடுகளை மறைத்து ப்ரஹ்மமாகவே கருதவேண்டும். இப்படிச்செய்வதால் அந்தந்த தேவதையில் கலந்து லோகாந்தரங்களில் உலாவி ப்ரபஞ்ச முடிவில் ஆத்மாவாகிறான் ஆராதிப்பவன். (இதுதான் கிரமமுக்தி)

(இதன் பின்னர் முற்கூறிய விஷயங்களடங்கிய உபாஸனா மந்திரமாக குத்ஸாயனர்என்ற சிரேஷ்டர் செய்த ப்ரஹ்மஸ்துதியை பிரஜாபதி வாலகில்யாளுக்கு உபதேசிக்கிறார்.)

‘இந்தப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கு முந்தி நாமரூபசூந்யமாக ப்ரஹ்மத்தினிடத்தில் இருந்தது. அதனால் ஏவப்பட்டு விசித்ரமாகப் பரிணமித்தது. இந்த நிலை ரஜோ ரூபம். ஆத்மாவின் ராஜஸ ரூபம் ப்ரஹ்மா. ரஜஸ் மாறுபட்டு ஸத்வம் தோன்றியது. இந்த ரூபத்திற்கு விஷ்ணு என்று பெயர். இதில் ரஸம் பெருகுகிறது. இது சேதன மாத்திரமாக இருந்து ஒவ்வொரு ப்ராணியிடத்தும் ப்ரதிபிம்பமாகிறது. இதுதான் க்ஷேத்ரஞ்ஞன் : தேஹங்களிலிருந்து ஆட்டிவைப்பவன். இவைகள் எல்லாம் விஷ்ணுவின் சரீரங்கள். ஆத்மா தாமஸ ஸம்பந்தமாகுங்கால் ருத்ரனெனப்படுவான். ஆத்மாவே பலவாகிப் பரவுவதால் பூதாத்மாவாகிறான். இப்படி ஆத்மா ஒன்றே உள்ளும் வெளியும் விளங்கி நிற்கிறது’ என்றார் பிரஜாபதி. மேல் ஒழுங்காக உபதேசிக்கிறார்.

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

I. ஆத்திசூடி விளக்கம்

25. அரவமாடேல்

சப்தம் உண்டாகும்படி செய்யாதே என்பது இதன் பொருள். அதாவது வீண் வார்த்தையாடாதே என்பதாயிற்று. வீண் வார்த்தை அநேகவிதமாக உண்டு. பொய், கோட்சொல்லுதல், பயனிலாச் சொல், கொடுமையான சொல் ஆகிய நான்கும் வாக்கின் குற்றம், என்பர் பெரியோர். இவைகள் எல்லாம் எழவொட்டாது நாவைக் காக்கவேண்டும். இவ்வாறு காக்காவிடில் அநேகவிதக் குற்றங்களுக்கு இடமுண்டாகி வீண் கஷ்டம்தான் உண்டாகும். 'தீயினால் சுட்ட வடு உள்ளாறுமாறாதே வாயினால சுட்ட வடு' ஆதலால் அநேகமாக உலகில் ஏற்படும் சண்டைகளுக்கெல்லாம் வீண் வார்த்தைகளே காரணமாக விருக்கும். இப்படி இருப்பதால் வீணாவார்த்தைகளைக் கிளம்பவொட்டாது தடுக்க வேண்டும்.

நாம் கவனியாது நாவை விட்டுவிட்டால் உனக்குச் சிரிப்பு எனக்கு வயிற்றெரிச்சல் என்ற வர்ணனைக்கு இலக்கான சொற்கள் நம்மை அறியாது வந்துவிடும். இதனால் சிலர் மனம் புண்பட நமக்கு முடிவில் கேடே உண்டாகும். இதற்கு ஸாக்ஷி பீமஸேனன் நடத்தையும் அதனால் பின்னர் விளைந்த கேடுமே. ராஜஸூயை யாகம் முடிந்ததும் வந்திருந்த அரசர்கள் எல்லோரும் தத்தம் இருப்பிடம் போய்ச்சேர 'துர்யோதனாதி துஷ்ட சதுஷ்டயர்கள் (துர்யோதனன், துச்சாஸனன், கர்ணன், சகுனி) மாத்திரம் தர்மபுத்திரரது மயஸபா விசித்திரத்தைக் கண்டு போகவேண்டும் என்று பின்தங்கினர். ஒருநாள் மயஸபையில் தர்மபுத்திரர் இருந்து ராஜ்யகாரியம் பார்த்திருக்க' வேறொரு புறத்தில் பீமன் முதலியோரும் த்ரௌபதி முதலிய சில ஸ்திரீகளும் இருந்து வார்த்தையாடிக்கொண்டிருந்தனர். இப்படி இருக்கையில் துர்யோதனாதியர் ஒருவருக்கும் முன் தெரியப்படுத்தாது தாமாக ஸபையைப் பார்த்துப்போக உள்ளே புகுந்துவிட்டனர். மயன்கட்டி இருந்தமாதிரியில் சிற்சில விடங்களில் தண்ணீர் இருப்பதுபோலவும், தடாகமிருக்குமிடத்தில் ஸமநிலம்போலவும், வாயில் இருக்குமிடத்து இல்லாததுபோலவும், இல்லாதவிடத்தில் இருப்பதுபோலவும் தோற்றமுண்டாயிற்று. இந்தச் சிறப்பறியாத துர்யோதனாதியர் ஸாதாரணவிடத்தில் துணிகளைத் தூக்கிக்கொண்டும், தடாகங்களில் விழுந்தும் மூழ்கியும், திண்டாட பீமஸேனாதிகள் வயிறுகுலுங்க நகைத்து கேலிபண்ணினர். ஸ்திரீகள் சும்மாவிருப்பார்களா? துர்யோதனாதியர் வெட்கி இங்கு மங்கும் ஓடி வாயில் தோற்றத்தைக் கண்டு விரைந்து சென்று சுவரில் முட்டிக்கொண்டு தத்தளிக்க பீமஸேனாதிகள் மேலும் ஓயாது நகைத்தனர். இதற்குள் தர்மபுத்திரர் அரவமாடேல் என்ற மொழியில் அடங்கியுள்ள ரஹஸ்யத்தை வெளியிட்டு அவர்களை அடங்கிக் கிடக்கச் செய்து துர்யோதனாதியருக்கு ஸபை முழுவதையும் காட்டிவிட ஒரு ஆளையும் அனுப்பினார். துர்யோதனனுக்கு முன் இருந்த பொறாமை இதனால் அதிகப்பட மாயச்சூதாட வேண்டும் என்ற எண்ணம் ஓங்கி திடப்பட்டது. அதனால் பாண்டவர்களுக்கு விளைந்த துயரப் பெருங்கடலை அறியாதார் யார்? இதேமாதிரி ராவணன் திக்விஜயம் செய்துவந்த காலத்தில் அயோத்யாபுரி அரசனான அனரண்யரை எதிர்த்து யுத்தகளத்தில் அடித்துத் தள்ளிவிட்டான். யுத்தகளத்தில் எதிரியைக் கொல்வது ஸாதாரணமாயினும், ராவணன் ஸாதாரணமாக அவரைக் கொல்லாது வீண் பரிஹாஸ வார்த்தைகள் பேசி அவரைப் புண்படுத்தி வதைத்தான். அவர் இறக்கும் தருணத்தில் 'என்னை ஒழுங்குக்கு விரோதமாக இவ்வளவு புண்படுத்தினமையால், என் வம்சத்தில் தோன்றும் ஒரு பிள்ளையால் நீ மரணமடைந்து கர்வம் அடங்கக்கடவாய் என்று சபித்து ப்ராணனை விட்டார். ஸ்ரீராமசந்திர மூர்த்தியால் ராவணன் இறந்ததை எல்லோரும் அறியாரா? ஆதலால் வீண் வார்த்தைகளைச் செலவிட்டால் விளையாட்டு விவாதம் வினைச் சண்டையாகவே முடிந்துவிடும். தீராக் கடும் சொற்கள் போராய் முடியும்.

பெரிய சண்டைச்சரவுக் குழப்ப காலங்களிலும் வாயை அடக்கி தகுந்ததைக் கூறிவிட்டால் கேட்போர் மனம் புண்படாது. பெரிய சண்டையும் சாந்தமாகும். நமது வாக்கால் கொடுமை விளைந்துவிட்ட போதிலும் 'ஐயோ இந்த

பாபத்திற்கு நாம் காரணமானோமே' என்று இரங்கித் தவித்தால் அதனால் துன்புறுபவர்கள் மனக்கொதிப்பும் அடங்கும். நமக்குப் பாப பலனும் வந்து நன்றாகத் தாக்காது. தசரதர் சப்தவேதியால் ஒரு ரிஷிபிள்ளை தண்ணீர் மொள்ளுகையில் ஒரு மிருகம் என்று எண்ணி அடித்துவிட, அவன் பிணத்தை எடுத்துக்கொண்டு குருட்டு ரிஷியிடம் சென்று நடந்ததைக் கூறித் துக்கித்தார். அவர்களுக்கு ஒரே பிள்ளையாகவிருந்தும் இந்த வாக்கால் அவர் மனம் கனிந்து 'புத்திர சோகம் உன் மரணத்திற்கு முன்பு வரும்' என்று மாத்திரம்தான் சபித்தனர். நயவாக்கு கேட்போர் கோபத்தைத் தணித்து விடும். மேலும் கொடிய எண்ணமுடையவர்களைச் சற்று நிதானித்துப் பார்க்கச்சொல்லும் நயவாக்கு. ராம ராவணயுத்தத்தில் ஒருநாள் மாலையில் ராவணன் நிராயுதபாணியாக அடிபட்டு வெட்கி ராமர் முன்னிற்கும்படி நேரிட அவர் அவனை நோக்கி 'அப்பா ராவணா! நீயோ மஹா பலவான். இப்பொழுது ஆயுதங்களை எல்லாம் இழந்து விட்டாய். உன்னை இப்பொழுதே நான் கொன்றுவிடலாம். உன்னிடத்தில் எனக்கு விரோதம் ஒன்றும் இல்லை. நீ ஸீதையை கொண்டு வந்து விட்டுவிடு. உன்னை ஒன்றும் செய்வதில்லை; நிதானி; யோசி; இன்று உன்னை விட்டுவிடுகிறேன். நாளைக்கு வந்து முடிவு சொல். ஸீதையைக் கொண்டுவந்து விட இஷ்டமில்லாவிடில் உன்னை நிர்மூலமாக அழிக்கும்படி நேரிடும். எனக்கு அவ்வாறு செய்யப் பிரியமில்லையாதலால் இப்பொழுது உன்னை விட்டுப் பார்க்கிறேன். போய்வா' என்று புத்தி கூறினார். 'ஸீதையைத் திருப்பி விடுவோமா?' என்ற சஞ்சலம் ராவணன் மனதிலும் உதிக்க அவன் ஊருள் புகுந்தான். தன் துர்மந்திரிகளால் இது மாறிவிட்டது. நயவாக்கு கொடிய விரோதிகளையும் கனிவிக்கும். இம்மாதிரியான நயமான பரோபகார வாக்கே வெளிப்பட வேண்டும்; வீண்வாக்கு வரலாகாது.

இதுபற்றியே வேதமும் ஸத்யம்சொல் என்றும் ஹிதமாயும், மிதமாயும், ஸத்யமாயும் இருக்கும் வார்த்தைகள் சொல்பவன் நாவிருந்தும் ஊமை என்றும் கூறி மௌனவ்ருதத்தின் ரஹஸ்யத்தை வெளியிட்டிருக்கிறது. ஒருவன் இத்தகைய வார்த்தைகளைத்தான் சொல்வது என்று விரதம் பூண்டு வார்த்தை சொல்லத் தொடங்கினால், ஸமாசாரப் பத்திரிகை, கச்சேரி வ்யவஹாரம், நாகரீக படாடோபம் நிறைந்த இக்காலத்தில் அதிகமாகப் பேச இடமேயிராது. அவன் தன்னையறியாது அரவமாடேல் என்ற ஔவையார் முதுமொழிப்படியே நடந்து வரும்படி நேரிடும்.

இம்மாதிரி அரவமாடேல் என்ற மொழிப்படிப் பழகிவந்தால் இதன் உட்கருத்துப்படி பழகும் திறன் வரும். ஏன் வீண்பேச்சுப் பேசாதிருக்க வேண்டும் என்று உண்டாகும் சங்கைக்கு ஔவையார் கொன்றைவேந்தனில் மோனம் என்பது ஞான வரம்பு என்று உத்தரம் கூறியுள்ளாள். உண்மை ஞானம் ஒருவன் மனதில் குடிகொண்டிருக்குமாயின் மௌனம் அதன் வெளியடையாளமாக விருக்கும். ஆகவே வீண்பேச்சுப் பேசாதிருப்பின் உண்மை ஞான நாட்டம் நமக்கு உண்டாக ஏற்பட்ட மௌனம் திடப்படும். இங்கு மௌனம் வாக்கு நிலையிலிருந்து உண்மை நிலைக்கு ஏறிவிடும். மௌனம் கலகம் நாஸ்தி என்பது வாக்மௌனத்தைப்பற்றிக் கூறிய போதிலும் உள் மௌனத்தில் பொருத்தியும் மௌனம் மனச்சஞ்சலமகற்றி சாந்தி பிறக்கும்படிசெய்யும் என்றும் கொள்ளலாம். இந்த மௌன ரஹஸ்யம் தான் கல்லால் நீழலில் ஸநகாதி யோகிகளுக்குப் பரம்பொருள் தக்ஷிணாமூர்த்தியாகி உபதேசிப்பது.

அரவமாடேல் என்ற வாக்கியத்தின் முடிவாகிய ஞானவரம்பாகிய மௌனத்தின் நிலை பின்வரும் கதையால் நன்கு விளங்கும். மூன்று ரிஷிகள் ஸ்வர்க்கம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். போகும்வழியில் ஒரு பருந்து பாம்பு ஒன்றைத் தூக்கிப்போவதைக் கண்டார்கள். அப்பொழுது ஒரு ரிஷி 'இது என்ன துக்கம் இந்தப் பஞ்சையான பாம்பு அநியாயமாக இந்தப் பருந்தின் வாயில் அகப்பட்டு வருந்துகிறதே! என்று சொல்லிப் பரிதபித்தார். உடனே அவர் பூமியை நோக்கி விழுந்துவிட்டார். இதைக் கண்டு மற்றொரு ரிஷி 'இக்கொடிய பாம்பிற்கு இம்முடிவே தகுந்தது.' என்று சொல்ல அவரும் கீழே விழுந்துவிட்டார். மூன்றாம் ரிஷி 'ப்ரபஞ்ச விசித்ரத்தின் நியாயாந்யாயங்களை எடுத்துக்கூற நமக்கு என்ன வல்லமை யிருக்கிறது? உண்டென்று சொல்வதற்கும் இல்லை என்று சொல்வதற்கும் நமக்கு என்ன அதிகாரம். பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அவராலேயே பாவப்

246

பெற்ற இவ்வுலகில் நடக்கும் விஷயங்களை அநியாயம் என்று கூற நமக்கு அதிகாரமும் இல்லை. ந்யாயம் என்று கூற எவ்வாறு மனம் துணியும். அவனன்றி ஓரணுவும் அசையாது. நடப்பவைகளைக் கண்டு மனங்கோணாது செய்வனசெய்து பொறுமையுடனிருத்தலே நமது கடமை' என்று எண்ணமிட்டுக்கொண்டு மனதை ஸமாதானப்படுத்திக்கொண்டு மௌனமாக விருக்க யாதொரு கஷ்டமும் இன்றி ஸ்வர்க்கம் சென்றடைந்தார்.

இதுபோலவே ஸ்ருஷ்டி விசித்திரத்தில் நாம் செய்யவேண்டியவைகளைச் செய்து பொறுமையுடன் இராது வீணை ந்யாயம் தீர்க்கப் புகுந்தால் பொதுவாகப் பாபம் வரும் என்பதை விக்கிரமாதித்தனுக்கு வேதாளம் இட்ட நாற்பது விடுகதைகளுள் ஒன்று நன்றாக விளக்கும். வேதாளம் சொல்லுகிறது: 'ஒரு ஊரிலே ஒரு பிரபு பெரிய ஸமாராதனை செய்தார். அதற்குத் தயிர்க்காரிகள் தயிர்கொண்டு வந்தனர். வழியில் கருடன் ஒரு பாம்பைப் பிடித்துப்போக அது வேதனை பொறுக்கமாட்டாது விஷத்தைக் கக்கியது. சில துளிகள் தயிர்ப்பானையில் விழுந்தன. தயிர்க்காரிகள் பிரபுவீட்டில் தயிரைக் கொடுத்துவிட்டுப்போயினர். பரிசாரகர்கள் இதை எடுத்து நீரைவிட்டு மோராக்கி ப்ராஹ்மணர்களுக்கு வார்த்துவிட்டனர். சாப்பிட்டவர் கையலம்பி முடிவதற்கு முன் எல்லோரும் பிணமாகி விழுந்தனர். இந்த ப்ராஹ்மஹத்தி கருடனதா, பாம்பினதா, தயிர்க்காரிகளதா, பரிசாரகர்களதா, பிரபுவதா, யாது?' என்று வேதாளம் கேட்டது. பார்த்தான் புத்திமானான விக்ரமாதித்யன். ஒருவரதென்று குற்றம் குறிப்பிடவும் முடியவில்லை. எல்லோரும் சேர்ந்து ப்ராஹ்மஹத்தி உண்டாகக் காரணமாகவும் இருக்கின்றனர். இந்த மாதிரி தர்மஸங்கடவிஷயத்தில் பாபம் இன்னாரது என்று எவன் கண்மூடித்தனமாகக் கூறுகிறானோ, அவனதே இந்த ப்ராஹ்மஹத்தி' என்று முடிவுகூறி விட்டான். இதுபோலக்கடவுளால் நடாத்தப்படும் இவ்வுலகில் நியாநியாய விவேசனம் செய்து வீண் தர்க்கம்செய்யும் வாக்கை அடக்கி எது தர்மப்படி எந்த ஸமயத்தில் செய்யவேண்டுமோ அதைச் செய்து மனச்சஞ்சலமின்றி எல்லாவற்றிலிருந்தும் நன்மையை க்ரஹித்து மௌனமாகவிருந்து அரவமாடேல் என்ற வாக்கியப்படி நடப்பதே ரஹஸ்யமான தத்வ வழியாம்.

II. மொழிபெயர்ப்பு விளக்கம்

TRANSLATION MODELS

BARGAINING WITH GOD.

There was a certain great king who went to hunt in a forest, and there happened to meet a sage. He had a little conversation with him and became so pleased with him that he asked him to accept a present from him. "No" says the sage, "I am perfectly satisfied with my condition. What do I care for your presents though you be an emperor. The emperor says "Just to purify myself, to gratify me, take some presents from me and come with me into the city" At last the sage consented to go withthe emperor, and he was brought into his palace wherein were most wonderful things. The emperor asked him to wait a minute, while he repeated his prayer. He went into a corner, and began to pray, "Lord ! give me more wealth, more children and more territory." In the meanwhile the Sage got up and began to walk away. The emperor went after him saying, stay sir ! you did not take my present and are going away." The sage turned round to him and said, "Beggar ! I do not beg of beggars what can you give ? You have been begging yourself all the time. What is the difference between love and shop-keeping, if you ask God to give you this and give you that !!"

கடவுளுடன் வ்யாபரம் செய்தல்

ஒரு பெரிய அரசன் காட்டில் வேட்டைக்குப் போய் ஒரு பெரியவரை ஸந்தித்தான். கொஞ்ச நாழிகை அவருடன் வார்த்தையாட, அவனுக்கு அதிகஸந்தோஷம் வந்துவிட்டது; ஆதலால்தான் கொடுக்கும் வெகுமதியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். 'வேண்டியதில்லை; என் நிலையில் எனக்குப் பூர்ண திருப்தி. நீ சக்ரவர்த்தியாயினும் உன் வெகுமதி எனக்கு எதற்கு?' என்று மறுத்துவிட்டார் மஹான். 'நான் பரிசுத்தனாகி திருப்தியடையும்பொருட்டு கொஞ்சம் வெகுமதி பெற என் பட்டணத்திற்கு எழுந்தருளவேண்டும் என்று மன்றாடினான் அரசன். முடிவில் அரசனோடு போக இசைந்தார் பெரியவர். உடனே அத்புத விஷயங்கள்நிறைந்த அரசன் அரண்மனைக்குள் அவரைக் கொண்டு விட்டார்கள். தான் பிரார்த்தனைசெய்து முடியும்வரையில் கொஞ்ச நாழிகை பொறுக்கவேண்டும் என்று அரசன் பெரியவரை வேண்டிக்கொண்டான். பின்னர், ஒரு ஓரமாகச் சென்று 'நாதா! இன்னும் ஏராளமான செல்வம், குழந்தைகள், ராஜ்யங்கள் ஆகிய இவைகளைத் தந்தருள வேண்டும்' என்று கடவுளைக் கேட்டுக்கொள்ளத் தொடங்கினான். இதனிடையில் பெரியவர் எழுந்து நழுவிவிட்டார். சக்ரவர்த்தி அவரைத் தொடர்ந்து சென்றான். 'ஐயா சற்று நிதானியும். என்னிடம் வெகுமதி பெற்றுக்கொள்ளாது நடந்துவிடுகிறீரே' என்று கதறினான். போன பெரியவர் திரும்பி நோக்கி 'அடே பிச்சைக்காரா! ஏழைகளிடம் நான் வாங்குவதில்லை. உன்னால் என்ன கொடுக்க முடியும்? நீதான் இதுவரையில் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தாயே! கடவுளை நோக்கி, இதைத் தர வேண்டும் அதைத் தரவேண்டும் என்று கேட்டு வருவாயானால் பக்திக்கும் வ்யாபாரத்திற்கும் பேதம்தான் என்ன?' என்று புத்திமதி கூறினார்.

நமது சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத் தொகை அனுப்பும்போதும் தமது விலாஸத்துக் கெதிரேயிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம் நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும்.

மானேஜர்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

நந்தன் சரித்திரம்

3. கழனிச்சருக்கம்

அல்லது

நந்தன் பக்தி தடைபட்டோங்கியது

முன் எடுத்து விஸ்தரிக்கப்பட்ட திருப்புன்கூர்ச் சருக்க விஷயத்தை —

ஜாதியில் நீசரவர்—பேணிச்
சாருந்தொழில் முறையாரும் பகல்
திருப்புன்கூர்சென் றானைக்—கண்டு
சேவித் திசைபாடிப் பாவித்தபின்
தில்லைச் சிதம்பரத்தைக்—கண்டு
ஸேவிக்க வேண்டுமென் றுவலுடன்
நாளைப்போவேன் என்று—ராம்
நாடும் பறையர்கள் ஓடிவந்து
அண்ணே நீ போகாதே—நமக்
காண்டை பொல்லாதவன்வேண்டிக் கொள்ளான்
பாப்பாரச் சாதியுண்டே—என்ன
பாடுபடும் முழுக்காடு மங்கே
நமக்கும் திருநாளோ—அந்த
ஞாயமுண்டோ வென்ன மாயமிது
வென்றே தடைசெய்தார்—சிவன்
வேடிக்கைதான் என்று நாடிக்கொண்டே
அறியாது போலிருந்தார்.

என்று ஒருவாறு சுருக்கிக்கூறி பின் இந்தச் சருக்க விஷயத்தையும் குறித்தார் ஸ்ரீமத் கோபால கிருஷ்ண பாரதி அவர்களும்.

திருப்புன்கூரிலிருந்து திரும்பிவந்தது முதல் எப்படியாவது சிதம்பரத்தில் ஆனந்த நடனம் புரியும் நடராஜப் பெருமானைத் தரிசித்திட வேண்டும் என்ற ஆவல் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது நந்தனுக்கு. இரவும் பகலும் ஓய்வு ஒழிவு இன்றி 'எப்பொழுது நமக்கு அந்த ஆனந்த ஸேவை கிடைக்கு' மென்று ஏங்கி உருகத் தொடங்கி விட்டான். கழனியில் வேலைசெய்யும் பொழுதாகட்டும், வீட்டில் சும்மா இருக்கும் பொழுதாகட்டும், உறங்குவதற்காகப் படுத்துக்கொள்ளும் பொழுதாகட்டும், இதுபோல எந்த ஸமயத்திலாகட்டும் ஸ்ருஷ்டி ஸ்திதியாதி பஞ்சகிருத்திய தாண்டவமாடும் அம்பலக் கூத்தனிடம் அவன் மனம்

சென்று சிதம்பரம் போய்வர அனுமதி கேட்கலாம் என்று எண்ணுவான்; 'மாட்டேன்' என்று அவர் மறுத்துவிட்டால் என்ன செய்வது என்று மயங்கி அவ்வாறு செய்யத் துணியாது பின்னடைவான். தம் தோழர்களிடம் தினம் 'நாளைக்குப்போவேன் சிதம்பரம்' என்று சொல்லிக்கொண்டே இருப்பான். நாளை நாளை என்று கூறிய தினங்கள் எல்லாம் இன்றைக்கு என்று மாறி, நேற்று, மூன்றும் நாள் என்று போய்க்கொண்டே இருந்தனவே ஒழிய, நந்தனார் சிதம்பரத்திற்குப் புறப்பட்ட பாடுகூட இல்லை. இந்தப் பக்தி ஆராமையை 'நாளைப்போகாமலிருப்பேனோ' என்ற கீர்த்தனமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இவர் தோழர்கள் இவரை 'நாளைப்போவார்' என்ற பட்டப் பெயரிட்டு அழைத்தனர். ஆதலால் இவருக்கு திருநாளைப்போவார் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த விஷயங்களை சேக்கிழார் ஸ்வாமிகள்,

"இத்தன்மை யீசர்மகிழ் பதிபலவும் சென்றிறைஞ்சி
மெய்த்திருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடும் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெருங் காதலுணர் வொழியாது வந்துதிப்ப.
அன்றிரவு கண்டுயிலார் புலர்ந்ததற்பின் அங்கெய்த
ஒன்றியணை தருதன்மை யுறுகுலத்தோ டிசைவில்லை
யென்றிதுவும் எம்பெருமான் ஏவலெனப் போக்கொழிவார்
நன்றுமெழுங் காதல்மிக நாளைப்போ வேனென்பார்.
நாளைப்போவேன் என்று நாள்கள்செலத் தரியாது
பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்"

என்று வர்ணித்திருக்கிறார்.

இப்படியிருக்க நிஜபக்தியின் வாஸனைகூட இல்லாத ஆதனூர் பறைச்சேரி வாஸிகள் நந்தனார் நாளுக்கு நாள் மாறுபட்டு வருவதை முதலில் இதென்ன புதுமை என்ற ஆவலுடனும், வரவர இதென்ன விபரீதம் என்ற மனக்குழப்பத்துடனும் நோக்கத் தொடங்கி விட்டனர். சிவநாம ஸங்கீர்த்தனம் அடிக்கடி செய்தல், அடிக்கடி மேனியில் திருநீறு பூசுவது, த்யானத்தில் கண்மூடி நிலைப்பது, முதலிய வெளி குணங்களையும் மேலும் நந்தன் மனம் முற்றிலும் மாறிவிட அதனால் ஏற்பட்டிருக்கும் பூர்ண அடக்க ஒடுக்கம், அடிக்கடிப் பரவசப்பட்டுக் கடவுளைப் பற்றி ஸம்பாஷித்தல், அதை நினைத்தும் அதை உரைத்தும் இருப்பதையும் அன்றி வேறொன்றும் செய்யத் திறனற்றிருக்க நிலை, வேலையிலிருக்கும் பொழுதே ஏற்படும் மன ஒடுக்கம் முதலிய ஆத்ம குணங்களையும் கண்ட அவர் மூட உறவினர்களுக்கும் தோழர்களுக்கும் உண்மையான மனக்குழப்பம் உண்டாகிவிட்டது. தமக்குப் பழக்கமாக ஏற்பட்டிருக்கும் ஒழுங்கிற்கு விரோதமாக ஏற்படும் எதைக் கண்டாலும் அவர்களுக்குப் பயம் உண்டாகி விடுவது இயற்கையே! தன் கொடுமையாயும் மூரட்டுத்தனமாயும் உள்ள கூட்டத்தார்களது ஆட்டம் முதலியவைகளில் அவர் சேரவேமாட்டார். மாம்ஸம் கள்ளு முதலியவைகளில் ஈடுபட்டு நிற்கும் வாஸனையே அவனுக்கு நீங்கிவிட்டது. ப்ராணிவதம் ஒரு பெரும் பாபம் என்ற எண்ணம் அவனிடம் குடிகொண்டுவிட்டது ஸமயம் வாய்த்த வேளையில் அதை நடந்தேற வொட்டாது தடுக்க முயலுவான். அடிக்கடி தன் கூட்டத்தார் சேர்ந்து வம்பளக்கத் தொடங்குகையில் தான் அதைக் கவனியாது ஒரு மரத்தடியில் ஒதுங்கிப்போய் உட்கார்ந்துகொண்டு தன்னைச் சுற்றியிருக்கும் ஸ்ருஷ்டி விசித்திரத்தை நோக்குவான். அவைகளைக் கண்டு ஆச்சர்ய பரவசனாகி, செடி, நதி, மலை, மரங்கள் முதலிய இவைகள் சிறப்பில் ஈடுபட்டு 'ஆஹா! இந்த மாயாத்தோற்றங்கள் விபூதி வைபவங்கள் எல்லாம், நடராஜர் ஊன்றியிருக்கும் காலின் மஹிமையல்லவா? இவை எல்லாம் அழகுடையன என்பதற்கு என்ன ஸந்தேஹம்? ஆயினும், உம்மிடம் வந்தடைந்து உம்மை உள்ளபடிக் கண்டு களிக்கவேண்டும் என்ற ஆவல் கொள்ளுகிறதே மனம். உம்மைத் தோற்றமாத்திரமாகக் காணாது உள்ளபடி காணவேண்டும் பரம்பொருளே! என்று ஆவலுடன் ஏங்கி பரவசமாவான். உடனே நடராஜர் குஞ்சித பாதத்தில் கருத்தைச் செலுத்தி 'உமது திருவடி நிழலில் என்று வந்து அமர்ந்து இளைப்பாறுவேன் கருணாகரக்கடவுளே' என்று ஆனந்தக்கண்ணீர் பெருக அரற்றுவான்.

ஒரு நாள் நந்தனார் ஆனந்தக்களிப்பு மேலிட பரவசமாக விருந்தார். இந்த நிலை 'காணாமலிருக்கலாகாது பாழுங் கட்டை கடைத்தேற வேண்டியிருந்தால்' என்ற ஆனந்தக்களிப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. நந்தனுக்குப் புத்தி கூறித்திரும்ப, சேரியிலுள்ளோர் முயன்று ஒரு பெரிய கிழவனை அவனிடம் அனுப்பிவித்தனர். அவன் 'நியாயம் தானோ நீர் சொல்லும் ஓய் நந்தனாரே நம் சாதிக்கடுக்குமோ' என்று

பலவாறாகப் புத்திமதி கூறினான். நந்தனார் அவரைப் பார்த்து 'சிதம்பர தெரிசனம் காணாவிடில் இந்த ஜன்மம் ஸபலமாமோ' என்று பலவாறாகக் கூறி, 'மீசை நரைத்துப் போச்சே கிழவா ஆசை நிறைக்கலாச்சோ' என்று பலவாறாக அவனுக்கு அவன் அபாய நிலையை விளக்கினார். பின்னர் நடராஜ பக்தியைப் புகட்டிவிட பெரிய கிழவன் 'பேரானந்தக் கடலாடி' வந்தான். எல்லோரையும் நோக்கி,

"ஒருதா மாகிலும் சிவசிதம்பரம் என்று
உரைத்திடு ரொன்றுண்மை கூறிய
திருநாளைப்போவார் இந்தச் சேரிக்கும் ஊருக்கும்
யாருக்கும் பெரியவர் திருநாளைப் போவார்"

என்று வியந்து பேசி, 'அடாதுசெய்தால் படாது படுவீர்—விடாது பாவம்: தேடாதே' நந்தனை என்று எல்லோரையும் எச்சரிக்கைசெய்தான்.

இப்படி என்ன மாற்றப்பார்த்தும் முடியாமல் போய்விட்டது. நந்தனார் வேறு ஒருநாள் முற்கூறியபடி த்யானத்திலிருந்து விட ஆனந்தபாஷ்பம் ஆறாய்ப்பெருகத் தொடங்கியது: பரவசமாகி தேஹ உணர்ச்சியின்றிச் சித்திரதீபம்போல நின்றுவிட்டார். இந்த ஸமயத்தில் நந்தன் நிலையின் ஸ்வரூபம் என்ன என்று உணர ஒரு பறையன் அருகேபோய்த் தொட்டுப் பார்த்தான். அவனுக்கு தேஹ உணர்ச்சியே இல்லாமலிருப்பதையும், அவன் தேஹமெல்லாம் நனைந்திருப்பதையும் கண்டு நந்தனுக்கு ஏதோ விபரீதம் வந்துவிட்டது என்று கூக்குரலிட்டு விட்டான். எல்லோரும் இது உண்மைதான் என்று உடனே நம்பிவிட்டனர். நந்தனை சிலர் சென்று கத்திரிக்காய்க் கூடையைப்போலக் குலுக்கி. கலைத்து 'என்ன ஸங்கதி உடனே சொல்,' என்று அதட்டினர். என்ன சொல்லுவான் நந்தன் 'கடவுள் ஒருவர் உண்டு என்ற பூர்ண நம்பிக்கை வந்துவிட்டால், அவரிடம் ஈடுபடாமல் எப்படி இருப்பது?' என்று மனமுருக தழுதழுத்த குரலுடன் அடக்கமாக மறுமொழி கூறிவிட்டான். இது பறையர்களுக்குத் திருப்தியாகப் படவில்லை. உடனே ஒரு கூட்டம் சேர்த்துவிட்டனர். இந்த விஷயத்தை அதில் விஸ்தாரமாகப் பேசி எல்லோரும்ஒரே மனதுடன் 'நந்தன்நோய், தெய்வாபராதத்தால்தான் வந்தது, நாம் அடிக்கடி அவர்களுக்கும் பூசை போடாதது நமது குற்றமல்லவா? ஆதலால் நாளைக்கே ஒரு பெரிய பூசைபோட்டுவிடவேண்டும்' என்ற தீர்மானத்திற்கு வந்தனர்.

வெகு விசேஷமாக பிடாரி பூசைக்கு வேண்டியவைகள் தயார் செய்யப்பட்டன. ஒரு பெரிய பந்தல்போட்டு அதை வாழைமரம், தேங்காய் மாவிலை, கொடிகள் முதலியவைகளால் அலங்கரித்து விட்டனர். ஆடு கோழிகள் ஏராளமாகப் பலிக்காகக் கொண்டுவரப்பட்டன. பூசாரியாகப் பெயர் பெற்ற ஒரு வள்ளுவனாரும் வந்துவிட்டார். வீரன் இருளன் காட்டேரி என்ற படாரிக்கூட்டத்தார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோரமான மண் பொம்மையும் தயாராகிவிட்டது.

மறுநாள் காலையில் பறச்சேரி முழுவதும் அந்தப் பந்தலுள் வந்து கூடிவிட்டது. மண் பொம்மைகள் ஏற்றத் தாழ்வுப்படி ஒழுங்காக வைக்கப்பட்டன. ஆடு கோழி கள்ளு எல்லாம் அங்கு வந்துவிட்டன. நந்தனைப் பலர் பிடித்து அந்தக் கூட்ட மத்தியில் வைத்துக்கொண்டார்கள். (இப்படி பலாத்காரம் பண்ணுவது அனுவசியம்தான்.) பெரிய பூசாரியாகிய வள்ளுவனார் உடுக்கடித்தார். உடனே காது செவிடுபட தப்பட்டைகள் அடிக்கப்பட்டன. தாரைகள் முழக்கப்பட்டன. எல்லாம் ஒரே காலத்தில் ஓய்ந்தன. கொஞ்சநாழிகை நிச்சப்தம். உடனே வந்துவிட்டது ஆவேசம் வள்ளுவனார்மேல். கடவுள் நேரே புகுந்துவிட்டார் அவனுள். பெருங் கூச்சலிட்டுக்கொண்டு கிளம்பிக் குதிக்கத் தொடங்கிவிட்டான் பூசாரி. அவனைப் பத்துப் பெயர்கள் பிடித்திழுத்துக்கொண்டிருப்பதை நோக்கினால், ஸ்வர்க்கத்திற்குப் பறந்துபோய்விடாது அவர்கள் தடுப்பதுபோலத் தோற்றியது. இப்படி இருக்க உடுக்கை அசைத்துக்கொண்டு தகுந்த அங்க அடையாளங்களுடன் பின்வரும் குறி

களைக் கூறலுற்ருர் வள்ளுவனர். 'நந்தன்! நந்தன்!! நந்தன்!!! நந்தன்!!!! இந்த நந்தனுக்கு சந்தைப்புளிய மரச்சடையாண்டி பிசாசு பிடித்துவிட்டது! அவன் அழுவான், சிரிப்பான், ஓடுவான், பிதற்றுவான் (பிசாசு பிடிக்காதவர்கள் இவ்வாறு செய்வதில்லையா?) அப்படிச் செய்கிருனு இல்லையா?' என்று கேட்டான்.

பறையர்.— ஆம், ஆம், நெசம் நெசம்! சாமிச் சொல்ரது நிசம். சாமி என்னமா சொல்லுது பாத்தியா' என்று எல்லோரும் கூக்குரலிட்டு மறுமொழிகொடுத்தனர். நந்தன் ஒன்றும் சொல்லாது 'நாதா! உமது ஆனந்தத் தாண்டவ வைபவத்தை என்ன சொல்வேன்! உமது தீர்க்க நாடகத்துள் இப்பொழுது நடப்பது ஒரு காட்சியல்லவா?, என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். 100 ஆடு, 200 கோழி, பலிகொடுத்து பானை பானையாகக் கள்ளுடன் சேர்த்துப் படையுங்கள் கருப்பணன் கூட்டத்திற்கு. உடனே நந்தன் பித்தம் தெளியும்.' இத்தனை நாள் பூசை போடல்லே. சாமிக் கோவிச்சிண்டாங்க'என்றது பூசாரி ஆவேசம். ஆவேசம் ஓய்ந்தது. உடனே நல்ல வயது உள்ள பறையர்கள் பாடி ஆடத் தொடங்கி விட்டனர்.

புலே.—எல்லைப்பிடாரியே! கொல்லையாள் தெய்வமே!
பாழுமிந் நந்தனை வாழ்விப்பாய்—என்ருர்.

நந்.—நடேசன் என்தலைவன் நாத னவனல்லாற்
[illegible]ட்டத்தைப் போக்குங் கடவுளே—தென்ருர்.

புலே.—முண்டாசு கட்டிவிருள் மண்டுமுடல் வீரனே.
கொண்டாடி யுன்பாதங் கும்பிட்டோ—மென்ருர்.

நந்.—பண்ணையெலாந் தாளுகிப் பரந்துநின்ற பெரி [யார்க்கு
முண்டாசு கட்டுவது முடியாதே—என்ருர்.

புலே.— (புகழ்ச்சியாக)
இலங்கு வீரமுக இருளப்ப வள்ளலே
கலங்கா டிடுதோடுன் துலங்கு வயி—றென்ருர்

நந்.—மோசப்போய் தொழல்விட்டு மூடர்காள் அன்பு [மருள்
வீசுஞ்சிற் றம்பலனைப் பூஜைசெய்—என்ருர்.

ஆவேசமாக ஆடிவரும் பறையருக்கு நந்தன் ஆனந்த உபதேசம் செவிக்கேறவேயில்லை. காதில் பட்டபோதிலும் அவர்கள் அதைக் கவனிக்கவும் இல்லை. ஆட்டம் முடிந்ததும் பெரும் கொண்டாட்டம் தொடங்கிவிட, ஆடு கோழிகளுக்குத் திண்டாட்டம் வந்துவிட்டது. அறியா ஆடு கோழிகள் கதிக்கு வருந்தி மனமுருகி நந்தன் அதை எவ்வளவோ தடுக்கமுயன்ருன்! பயன் படவில்லை. ஆதிமூர்த்தியான பரம்பொருள் கருணை சிறப்பு முதலியவைகளை புங்கானு புங்கமாக வர்ணித்து, கெட்ட தெய்வங்கள் கொடுமையான வழக்கங்கள் இவைகளை விட்டுவிட்டுத் தன்ேடு நித்யானந்த நடேசனை ஆராதிக்க வரும்படி எவ்வளவோ சொன்னுர். 'எல்லோரும் வாருங்கள். சுகமிருக்குது பாருங்கள்' என்று கூவியழைத்துப் பார்த்தார். எல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல வீணனது மன்றி, நந்தனுக்கு நிச்சயமாகப் பைத்தியம் பிடித்துவிட்டது என்ற பொது எண்ணத்தையும் திடப்படுத்திவிட்டது. துக்கம் அடைத்துக் கொண்டு இளப்ப மூடர் திருக்கூட்டத்தை விட்டு விலகி, 'ஈசா நீரேதான் இவர்களை ஈடேற்ற வேண்டும்,' என்று வேண்டிக்கொண்டான். இதனுல் சிதம்பரம் போகவேண்டும் என்ற எண்ணம் வரவர அதிகமாகிக்கொண்டு வந்தது. ப்ராஹ்மண யஜமானிடம் சென்று உத்தரவு கேட்டுவிட வேண்டும் என்ற எண்ணம் மாருது அவன் உள்ளத்தில் குடிகொள்ளத் தொடங்கிவிட்டது.

இப்படியிருக்கையில் புலையர்கள் தமது பூசைகள் எல்லாம் வீணனது கண்டு தோன்ருத் தெய்வங்களைவிட்டுத் தமக்கு முன்னறி தெய்வமாக விருந்து அடக்கியாளும் பண்ணைக் கடவுளான ப்ராஹ்மணரிடம் சென்றுமுறையிட்டனர்.

நொண்டிச்சிந்து—பைரவி—ஆதிதாளம்

ஐயே ஒரு செய்திகேளும்—உங்கள்
அடிமைக்காரப் பறையன் நடத்தை எல்லாம்
வரவரக் கெட்டுப் போச்சு—சேரியில்
வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்

குடியிருக்க மாட்டோம்—எப்போதும்
கூக்குரல் போடுகிருன் ஆக மறந்தே
இருப்பான் ஒருவேளை—கொள்ளாத
எக்கமடைந்தவன் போல் நாக்கை வளைத்துச்
சிரிப்பா னெருவேளை—தில்லைச்
சிதம்பா மென்றுசொல்லி மதம்பிடித்தே
அழைப்பா னெருவேளை—எங்களை
அண்ணேவா வென்றுசொல்லிக் கிண்ணாரங்கொட்டி
குதிப்பான் ஒருவேளை—திக்குமுக்கல்
கொண்டவன் போலெதையோ கண்டவன்போல்
களிப்பான் ஒருவேளை—மரம்போலே
கையசக்கல் காலசக்கல் மெய்யசக்கலும்
இருக்கா தொருவேளை—தாளம்போட்
டெக்கலித்து கொட்டியே குடிசையுட்புகுந்து
பேசா னெருவேளை—கண்ட தெல்லாம்
பிரட்டென்று சொல்லுவான் முரட்டுத்தனம்,
மன்ருர் சாமிபோலே—கிளம்பி
வாய்விட்டலறும் குரலுரெட்டுமே
ஐயோ சிவனே என்பான்—கீழே
புரண்டழுவானே யாரையும் தொழுதெழுவானே
தூண்டி மீனது போலே—துள்ளித்
துள்ளித் துடிப்பான் பற்களைக் கடிப்பானே
இது வென்ன காரணமோ—எங்களுக்
கீனமா யிருக்குது மான மல்லவோ
கருப்பண்ணு சாமி தானும்—இருளன்
காட்டேரி வீர னிவன் வீட்டேரியோ
பாவாடை துரை தானே—ரண
பத்திர காளியோ உன்மத்த வீரனே
பூசைகள் போட்டுப் பார்த்தோம்—ஒன்றிலும்
போக இல்லை காரிய மாவதில்லையே
எங்கள் வள்ளுவ னரைக் கேட்டோம்—அவர்
எடுத்துச் சொன்னுர் இதை விடுத்துச் சொன்னுர்
மயான ருத்திரனுர்—பிடித்து
வாட்டுதடா இப்படி யாட்டுதடா
தெளியா தென்று சொன்னுர்—ஐயே
தெளியா தென்று சொன்னுர்.

என்றிப்படிக் கூறி 'சேதிசொல்ல வந்தோம், நந்தனுர் சேதி சொல்ல வந்தோம்' என்று முடித்தனர். 'அவன் சிதம்பரம் போக உத்தரவு கேட்க வரும்பொழுது பார்த்துக் கொள்ளுகிறேன், நீங்கள் போங்கள்' என்று ப்ராஹ்மணர் அவர்களை அனுப்பிவிட்டார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
LADIES' PAGES

"அன்பார் துஞ்சிடிற் றுஞ்சுத லாங்கவர்
துனபமெய்திடிற் றுழுமத் துன்புற
வின்ப முற்றிடி லின்புற் றிருத்தலே
மன்பெ ருந்தவங் கற்புடை மாதரே."

சாந்தை அல்லது பொறுமையினிலை

3. உடன்சென்ற காதை

பிரபுன்னதனுக்குத் தனது மகள் கூறியது வியப்பாகத்தான் இருந்தது. அவளது எண்ணம் சிறிதும் அவன் அறியான். அவள் மெல்லிய மனம் கருணை என்னுங் கொடியால் பிணிக்கப்பட்டிருந்ததை அவன் அறிந்தவன் அல்லன். தன் போலவே பெரிய அந்தஸ்தும் பெருமிதமும் உள்ளவன்பால் அவள் எண்ணம் பின்தொடரும் என்றவன் எண்ணியிருந்தான். தான் அவளை அவ்வாறே வளர்த்ததாகவே அவன் நிச்சயம். தன் மகள் விலையுயர்ந்த உடுப்பும் ஸோகமும் அடைந்து அக்காலத்திய நாகரீகத்துடன் தன்னினத்துள் மணந்து விளங்குவள் என்பது அவன் நாள்தோறும் கண்ட கனவு. அக்கனவினுடைய எழுச்சியால் அவளுடைய இயற்கை குணம் அவனுக்குப் புலப்படவே யில்லை. அவள் மனத்தில் உள்ளூறிப் பாய்ந்துகொண்டிருந்த ஆசைவெள்ளத்தின் பெருக்கையும் அப்பெருக்கின் ஒழுங்கையும், ஆரவாரத்தையும், இடராக எது வந்தாலும் தடுக்கக்கூடிய எழுச்சியையும், அவளுடன் நித்தியம் பேசியும் அவனுல் காண முடியாமலிருந்தன. மக்கள் மெய்த்தீண்டல் உடற்கின்பம், மற்றவை சொற்கேட்ட லின்பம் செவிக்கு என்றவாறு, தன் குழந்தையின் இனிய மொழிகளையும் அரிய செயல்களையுங் கண்டானந்தங்கொண்டதோடு தன் சொல்லை ஒருநாளும் அவள் தடுத்துப் பேசாதிருந்ததால், சாந்தை உத்துல்லனைக் காணவும் வெறுப்பாள் என்றே நம்பியிருந்தான். ஆயினும் என்னதான் தகப்பன் தனது பயநய மொழிகளாலும் ஆசையின் பெருக்காலும் தன் மகளைத் தன் வழிப்பட செய்வானுனலும், எப்பெண் தன் கணவனிடம் கொண்ட காதலையும் அவனிடம் கொண்ட பக்தியும் தடுப்பள்? அதிலும் சாந்தை—குணமே மலர்ந்த பூபோல விளங்குபவள்—இவளா தடுப்பவள்? பிரபுன்னதனுக்கு உண்மை தெரியாததே தோஷம். தன் மகள் வரித்திருந்த வான்

என்பது அவன் அறியான். தெரிந்திருந்தால் இவ்வளவு அம்பலமாகுமோ?

மொத்தத்தில் தன் பெண் வாயிலிருந்தே உண்மையறிந்ததனால் இனித் தான் வீண் மனோவியாதிக்கிடம் கொடுத்தல் தகுதியில்லை என்று உணர்ந்தான். அதிலும் 'பிள்ளையைப் பெறுவதைக்காட்டிலும் ஒன்றை வரிப்பேன்' என்று கூறித் தனது மருமகனாகிய மௌரியனை வாவென்றழைத்து "என் மனப்பூர்வகமாய் உன்னிடமடையாதிருக்கத் தடுத்த பொருளை, எந்தப் பொருளை நீ முன்னமே அடைந்திருக்கிறாயோ அந்தப் பொருளை, என் மனப்பூர்வகமாகக் கொடுக்கிறேன்" என்று கூறி மனவமைதி யடைந்தான்.

இதற்குள் அரசனும் "ஆறிய புண்ணைத் தூண்டுவதில் பிரயோஜனம் என்ன? ஆனது ஆயிற்று. வீண் கவலை ஏன்? மனமும் ஸமாதானமடைய வழியுமுண்டாய்விட்டது பின் தன் தலைமேல் தானே மண்ணை வாரிக்கொட்டிக் கொள்வதுபோல் வீண் கவலைக் கிடம் கொடுப்பதில் பிரயோஜனம் என்ன? வீணே கவலைப்படுகிறவன் தன்னைத்தானே விசாரமுண்டாக்கிக் கொள்கிறவனாகிறான்" என்று கூறிய புத்திமதிகளும் பிரபுன்னதனது வேகத்தைச் சற்றே குறைத்துக் காலக்ரமத்தில் ஒழியவுஞ் செய்தது. பின் பிரபுன்னதன் அரசனை ராஜாங்க வியவஹாரத்தை நோக்கலாம் என்றான்.

அரசன் சொல்லுகிறான்: "சிபிரத்தைக் கவராதுருக்கிகள் பெருங்காரியங்களும் ஸாஹஸங்களுஞ் செய்திருக்கிறார்கள். உத்தல்ல! உமக்கவ்விடத்து அரண் முதலியவற்றின் வலிவு முதலியனவும் தெரியும். உள்ளுளவு யாவும் தெரியும். அவ்விடத்தில் வீரத்தில் சிறிதும் வாங்காத சேனாதிபன் இருந்தாலும், ராஜாங்க தந்திரங்களுக்கெல்லாம் காரண பூதமாய் உள்ளிருந்து வேலை செய்யும் பொதுஜனாபிப்பிராயம் உன்னையே கொண்டாடுகிறது. உன்னிடமே நம்பிக்கை கொண்டிருக்கிறது. புதிதாய் உனக்குண்டாகிய ஆனந்த வைபவத்தைக் கொந்தளிப்புங் கூச்சலுங் கலந்த இந்தப் பிரயாணத்தால் சற்றுத் தடுக்க மனங்கொள்ள வேண்டும்."

இதைக்கேட்ட உத்துல்லன் ஆனந்தமடைந்து "என்ன பாழும் வழக்கமோ தெரியாது—யான் என்ன செய்வது அறிஞர்களே! அந்த வழக்கம் கல்லும் முள்ளும் அம்பின் நுனியும் கலந்து மயங்கிய ரணரங்கத்தை மிக மெல்லிய இலவம் பஞ்சமளியாக்கிவிட்டது. கஷ்டமெவற்றையும் ஆனந்தத்தோடே அடைவேன். இதை ஒளிப்பானேன்? அது என் இயற்கை. தாங்கள் சொல்லியவிதம் நடந்துகொள்ள ஸித்தமாயிருக்கின்றேன். ஏவியதைச்செய்யக் காத்திருக்கிறேன். என் மனைவிக்கு மாத்திரம் அவளை எந்த எந்த விதத்தில் வைக்கவேண்டுமோ அவ்வழியில் வைக்க விரும்புகிறேன். அவளது பதவிக்கும் பெருமைக்கும் குணத்திற்கும் இழிவுண்டாகாது காக்கவும் விரும்புகிறேன். அவளது பிறப்புக்கும் வளர்ச்சிக்கும் தகுந்த விதம் இடம் தந்து தகுந்த சேர்க்கையுடன் விளங்கவும் வைக்க விரும்புகிறேன்" என்றான்.

அரசன்:—உனக்கு ஆக்ஷேபமில்லையானால் அவள் தகப்பனார் வீட்டிலிருககலாமல்லவா?

பிரபுன்னதன்.—அவ்வாறிருக்க எனக் கிஷ்டமில்லை.

உத்துல்லன்.—எனக்கு மிஷ்டமில்லை.

சாந்தை.—எனக்கு மிஷ்டமில்லை. நான் அங்கிருக்கவுமாட்டேன். என் தந்தை கண்ணெதிரிலேயே இருந்துகொண்டு அவர்க்கு வீண் கவலைக்கிடம் கொடுத்துத் துன்பப்படுத்த நான் அங்கிருக்கேன். தருமப்பிரபுக்களே! நான் தெரியாது, ஏதோ சொல்கிறேன். தயவுசெய்து அதை அங்கீகரிக்க விரும்புகிறேன். என் பேதமையைத் தங்களது வாக்கு சட்டம்போல் காக்கக் கடவது!

அரசன்:—தாங்கள் என்ன விரும்புகிறீர்கள்?

இவ்வாறு அரசன் கேட்டதும் சாந்தையின் முகமலர்ந்தது. அதில் ஓர்விதமாகிய துணுக்கமும் மனவலிமையுங் கூடிக் குலாவிக்கொண்டிருந்தன. அவளுக்கும் தெரியாமல் தடையில்லாமல் வாய்மொழிகள் வர ஆரம்பித்தன. உள்ளூறி வழியலாயின. சுனையிலிருந்து எழும் ஊற்றுநீர் குளிர்ச்சியுடன் இனிமை கலந்து விளங்குவதுபோல அவள் மொழிகள் தேன்மழை பிலிற்றலாயின. அவ்வினிய வுருவமும் கனிந்த மனமும் மயங்கி உண்மையே வடிவெடுத்த மொழிகள் வெளிவந்தகாலத்து அம்முகத்தின் சோபையைக் கண்ட உத்துல்லன்மனம் உவாமதியைக் கண்ட கடல் எழுச்சி யடையலாயிற்று.

சாந்தையும் தன் குயிலொத்த மொழியில் தேனைக்கலந்து பணியாரமிட்டாற்போல "அரசே! தலைகீழாக நடந்து அதனால் இவ்வளவு அம்பலத்தில் வந்து தசை தவறியான் விளங்குவதே யான் என் தலைவனாகிய மௌர்யனோடு இருக்க அவரிடம் காதல் கொண்டேன் என்பதைப் பறையடிக்கவில்லையா? என் பிராணநாதனது குணமே என் மனதை ஜயித்தது. உத்துல்லாது மனமே அவர் முகத்தை யடித்துக் காட்டியது. அவருடைய பெருமைக்கும், கீர்த்திக்கும், வீரத்திற்குமே என் ஆவி பொருள் யாவும் சமர்ப்பித்திருக்கிறேன். ஆகையால், சபையோர்களே! யான் இங்கு விட்டுவிடப்பட்டால் துரும்பிற்குமுதவாத வெறும் பொருளாவேன். யுத்தத்திற்கு அவர் போகவும், யான் ஸுகமாக வீணே இங்கிருக்கவுமானால் எதற்காக அவரிடம் ஆவல் கொண்டன்புடையவளானேனோ அது தவறிவிடும் அல்லவா? அது மாத்திரமா? கழிக்கமுடியா சங்கடங்கள்,—அவைமட்டுமல்ல — நாதனற்று ஏங்கிப் பொறுக்க முடியாத் துன்பமும் அடைவேன். கவலையிலாழ்ந்து கண்ணீர் மல்கி வாழல் உமக்குப் பொறுக்குமா? பிரிந்து, கஷ்டமடைந்து, பாழுங்காலத்தைப் போக்குவது பெருங்கவலையாய்விடும். என் ஐயனே! தயவுசெய்து யான் அவருடன் போக அநுமதி தர வேண்டுகிறேன்" என யாவருமதிசயிக்க மொழிந்தாள்.

எங்கும் நிச்சப்தமாகவே விளங்கியது. சாந்தையின் இனிய மொழியின் கானத்தைச் செவியார உண்ட சபையோர், அவள் மேலும் பேசிக்கொண்டிருப்பதாகவே எண்ணிச் சும்மா இருந்தார்கள். அவள் வாய் மொழி காதில் விழுவதாகவே அவர் எண்ணம். இதனால் பேசாதவர்களைக் கண்ட உத்துல்லன் "ஸபையோர்களே உங்கள் அபிப்பிராயம் சொல்லும்; சொல்லும். அவள் விரும்பிய அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்ய விரும்புகிறேன். அவள் எண்ணத்தை ஈடேற்றிவைக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

மேலும் "நான் சொல்லுவதற்குத் தெய்வமே சாட்சியம் சொல்லட்டும். யான் என்னுடைய ஸுகத்தைக் கருதி சொல்லியதாகவாவது; சிற்றின்ப அநுபவம், அந்தகாலைப்பருவக்குணம், என்னிடமிருந்தொழிந்த அந்த சுவையினிடம் ஆவல்கொண்டு ஆனந்தமடைய வேண்டுமென்று பேசியதாகவாவது தாங்கள் எண்ணக்கூடாது. யான் தெய்வத்தின் முன் பொதுவாக உண்மையே கூறுகிறேன். அவள் மனத்திற்குச் சிறிதுங்குறையாவது துன்பமாவது கவலையாவது உண்டாகக் கூடாது என்றே சொல்லினேன்; அவள் தன் விருப்பத்தை எல்லாம் சிறிதும் தடையின்றி அடையவேண்டும் என்றே சொன்னேன்; அவா முற்றும் அடையவேண்டும் என்றே சொன்னேன். அவ்வாறு சொல்லியது காமம் அன்று, கருமமே அல்லது தாங்கள் உமது பெரிய காரியங்கள்—எவற்றிலுமதிகமாகக் கவலையைத் தாக்கூடிய ராஜாங்க கருமங்களை—அவள் என்னுடன் இருக்க ஆசை நோயின்பெருக்கினால் அலக்ஷியம் செய்து விடுவேன் என்று எண்ணுவீர்களானால் நான் என்ன சொல்லக்கூடும்? அவ்வாறு தாங்கள் கூறுவதற்குக் கடவுள் உங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கத்தான் முடியும். இலேசாக மலர்க்கணைகளை ஏவும் அம்மன்மதன் விட்ட அப்புஷ்ப பாணங்கள் என் மார்பைப் பிளந்து மனத்தைக் கலக்கி மதியை மயக்கி என்னுடைய வியாபாரத்தைக் கெடுத்து எனது பெருமையையும் நாசஞ் செய்யுமானால் ஒவ்வொரு வீட்டு மடந்தையும் எனது தலைக்கணியுங் கவசத்தைச் சமையற்குதவும் பாத்திரமாக உபயோகப்படுத்தட்டும். வேறினும் என்ன வேண்டும். கொடிய கஷ்டமும் அவமானமும் குலாவி என்னுடைய பெருமையையும் பெருங்கீர்த்தியையும் நாசஞ் செய்வதாக!" என வெகு கம்பீரமாக யாவர் மனமும் தியக்கப் பேசினான்.

அப்பேச்சிலேயே அவன் வீரமும் மனோதைர்யமும் அடங்கா மனமும் ஒழுக்கத்தின் நிலையும் தாண்டவஞ் செய்தன. சாந்தைமேற் காதலும் சிபிரத்தைக் காத்தலும் தனது தர்மமென்றவன் எண்ணியுரைத்த மொழிகள் யாவர்க்கும் அவன் மனோவைபவத்தின் பெருக்கை எடுத்துரைத்தன. உள்ளங் களிகூர்ந்து சாந்தை தனது நாதனுடைய மொழியாகிய தேனையுண்டானந்தமடைந்து அவன்மேற் தன் கடைக்கண்ணை வீசிக்கொண்டேயிருந்தாள். அக்கண்கள் பிறர்க்குத் துன்பமுண்டாக்கியிருக்கும்; காமத்திலாழ்த்தியிருக்கும். எதற்குமடங்கா உத்துல்லனுக்கவை உத்ஸாகமூட்டு மருந்துபோல் அவனுக்கானந்த எழுச்சியை உண்டாக்கிக்கொண்டே இருந்தன. அவளுக்கும் உத்புல்லன் பேசுவதெல்லாம் தன்பால் அவன் கொண்ட ஆசையும், அவ்வாசையின் போக்கையும், அப்போக்கின் ஒழுங்கையும் விளக்கிக்கொண்டிருந்தன.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

சோடா உப்பு நிறைந்த ஏரி.—கீழ் ஆபிரிகாவில் இருக்கும் மகதி என்ற ஏரியைப் பார்வையிட்ட பிறகு இடாலிய உத்தியோகஸ்தரான ஒருவர் தெரிவிக்கிறார். தூரத்திலிருந்து பார்ப்பதற்கு அந்த ஏரியில் தண்ணீர் நிறைந்திருப்பதாகவே தோன்றினாலும் கிட்ட நெருங்கிப்பார்த்தால் ஏரியின் மேல் மட்டமுழுவதும் பளபளவென்று மின்னுகிற வெண்மை நிறத்தோடுங் கூடிய சோடா உப்பே நிறைந்திருக்கிறது. முப்பது சதுர மைல்கொண்ட அந்த ஏரியிலிருந்து தினம் ஏராளமான சோடா எடுக்கப்படுகின்றது. இபபோது அதனின்று ஆரம்பித்து போடப்படுகிற ரயில்பாதை பூர்த்தியானதும் மகதி ஏரியே உலக முழுமைக்கும் சோடா ஏற்றுமதி செய்யக்கூடியதா யிருக்கிறது.

*
* *

கோடீசுரனைப் பார்த்துவர 100-பவுன் பந்தயம்—உலகத்திலே பெரிய தனவந்தரெனப் பெயர் பெற்று வாழ்ந்து சமீபத்தில் காலஞ்சென்ற மிஸ்டர் பீர்பண்ட் மார்கன் என்பவர் அமெரிகாவிலுள்ள ஐக்கிய நாடுகளைச் சேர்ந்தவர். அவருக்கு யாழ்நாட்கள் முழுவதிலும் ஒழிவுநேரமே கிடைக்காதாம். அவரிடம் ஒரு பத்திரிகையின் நிருபர் சென்றுபார்க்கவேண்டும் என்ற விருப்பத்தை எழுதி யனுப்பினார். அந்தப் பிரபு தனக்கு சாவகாசம் கிடைக்கவில்லை என்றும், ஆனால் அவசியம் பார்க்கவேண்டுமானால் பத்து பவுன் கொடுத்தனுப்பினால் மூன்று நிமிஷநேரம் பேச இடந்தருவதாகவும் பதில் அனுப்பினார். பத்திரிகை நிருபர் உடனே பத்து பவுனையும் செலுத்திவிட்டுப் போய் மூன்று நிமிஷமும் காரியத்துக்கு பிரயோஜன மில்லாத வம்பு பேசி கழித்துவிட்டார். கடைசியில் பிரபுவானவர் அவரைப்பார்த்து "இப்போது நீர் பத்து பவுனை வீண்செலவுசெய்து விட்டதாகத் தோன்றுகிறதே. ஏனெனில் மூன்று நிமிஷங்களும் ஆகிவிட்டன. இதுவரையில் நீர் ஒன்றும் என்னை பிரயோஜனமுள்ள விஷயம் கேட்கவில்லையே," என்றார். அதற்கு நிருபர் "நான் பவுனை நஷ்டமாக்க வில்லை. இதைக்கொடுத்து 90பவுன் சம்பாதித்து விட்டேன். ஏனெனில் வெளியில் ஒருவரோடு பந்தயம் போட்டேன். அவர் தங்களை ஒருவரும் எப்பாடுபட்டாலும் பார்க்க முடியாதென்றார். நான் பார்த்துவிட்டு வருவதாக இருந்தால் 100 பவுன் தருவதாகச் சொன்னார். இப்போது 10 பவுனில் தங்களை நான் பார்த்துவிட்டேனாதலால் பாக்கி 90 பவுன் லாபம் அடைந்திருக்கிறேன்," என்று பதில் கூறினார்.

*
* *

ஜில்லா போர்டுகளும் ரயில்வேயும்.—அலகபாத்தில் நடந்துவரும் பயோனீர் பத்திரிகை எழுதுகின்றது: "சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லா போர்டுகள் சிறிய ரயில் பாதைகளை உண்டாக்கி ஜனங்களுக்கு உதவி புரிகின்றன. இந்த ரயில்வேக்களால் வரும்படியும் அதிகமெனத் தெரிகிறது." இவ்விதம் அப்பத்திரிகை எழுதுவதால், ரயில்வேக்களால் லாபமடைந்து வருகிற ஜில்லா போர்டுகள் இந்தியாவிற்குள்ளேயே நமது இராஜதானியில் அதிகமெனத் தெரிகிறது.

*
* *

டாக்ஸில்லா நகரம்.—வட இந்தியாவில் ராவல் டண்டிக்கு சமீபத்தில் கவர்ன்மெண்டார் சில விலையுயர்ந்த நாணயங்களும் மற்றும் பல பொருள்களும் வெட்டியெடுத்து வருகிறார்களாம். அதன் ஆரம்பத்தைப்பற்றி ஒரு நிருபர் பின் வருமாறு எழுதுகிறார். குடியானவர்கள் உழுது கொண்டிருக்கும்போது பழய காலத்து நாணயங்கள் அகப்பட்டதாம். சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன் திபேத் தேசத்திலிருந்து பௌத்த மதஸ்தர்கள் வந்து அந்த நாணயங்களுக்கு ஏராளமான பணம் கொடுத்து வாங்கினார்களாம். அதோடு அந்த நாணயங்கள் அகப்படும் பூமியையும் வாங்குவதற்கு பிரயத்தனப் பட்டார்களாம். இவ்விஷயம் கவர்ன்மெண்டாருக்குத் தெரியவந்ததன்பேரில் விசாரித்தார்களாம். திபேத்தியர்களிடமிருந்த கையெழுத்துப் பிரதிகளிலிருந்து டாக்ஸில்லா என்ற பெயர்போன நகரம் இருக்குமிடம் வெளிப்பட்டது. உடனே கவர்ன்மெண்டார் அந்த இடமுழுவதையும் வாங்கிவிட்டார்கள். பௌத்த மதம் இந்திய ராஜாங்கங்களில் பிரபலமாயிருந்தபோது டாக்ஸில்லா என்பது பெயர்போன நகரமாயிருந்தது.

*
* *

பால் சப்ளையும் சிசுக்களின் மாணமும்.—நாடெங்கும், முக்கியமாய் பட்டணங்களில், தேகத்திற்கு ஆரோக்கியமான பால் கிராக்கியாகிவிட்டது. அதிலும் சுயப்பால் கிடைப்பது நிச்சயமாய் கிடையாதென்றே சொல்லலாம். இப்படிப் பால்வசதி குறைந்திருப்பதனால்தான் பட்டணங்களில் சிசுக்கள் அதிகமாக மாணமடைகின்றன. இதற்காகப் பெரிய பட்டணங்களில் சிசுக்கள் அதிகமாக மாணமடைகின்றன. இதற்காக பெரிய பட்டணங்களில் முனிஸிபாலிடியார் பிரயத்தனமெடுத்தும் கஷ்டமுண்டாகின்றது. இப்போது பம்பாய் நகரவாஸிகள் ஒரு பெரிய காரியம் ஆரம்பித்திருக்கிறார்கள். நகரத்திலுள்ள தனவந்தர்கள் சேர்ந்து 70,000 ரூபாய் முதல்போட்டு ஒரு கம்பெனி ஏற்படுத்தி சுயப்பால் சப்ளைசெய்ய உத்தேசித்திருக்கிறார்கள். 50-ஆயிர ரூபாய் வசூலித்து விட்டார்கள். இவர்களுடைய நோக்கம் முக்கியமாய் ஜனங்களுக்கு சுயப்பால் கொடுத்து உதவிசெய்வதும் ஏழைகளாயிருக்கும் குழந்தைகளுக்குக் கூடியவரையில் சொல்ப விலைக்கோ அல்லது இனாமாகவோ கொடுப்பதும்தான். பம்பாய் நகரத்துக்கு சமீபத்தில் ஓரிடத்தில் நூறு மாடுகள்வாங்கி சௌக்கியமாய் கட்டிக்கொண்டு அங்கிருந்து தினம் மோட்டார் வண்டியில் பால்கொண்டு வருவார்களாம்.

["விவேக போதினி" அனுபந்தம்]

Supplement to the "Viveka Bodhini"



மஹாவிஷ்ணு



பரமசிவன்

விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி V } பிரமாதீச வரு வைகாசிமீ :— 1913-வரு ஜூன்மீ { பகுதி 12

OFFICE OF THE REGISTRAR ... 27 JUN 19..

உள்நாட்டம் III

INWARDNESS

உள்நாட்டத்தின் இரண்டாம் நிலையாகிய அனுபவ நிலையை ஒருவாறு முன்னர் குறிப்பித்தோம். இதை முன்னரே ஒருதரம், ஜீவன்முக்தி ; ஜீவன்முக்தர் பாகுபாடு என்னும் தலைப்பின்கீழ் நன்றாக எடுத்து விஸ்தரித்தாகிவிட்டது. அதை ஒருவாறு கூறி, மேல் கூற வேண்டியதையும் சேர்த்துக் கூறுவோம். இந்த நிலையில் அப்யாஸியின் புருஷ தந்திரம் முற்றிலும் போய் விடும். அந்தர்முக நாட்டம் இயற்கையாகிவிடும். வெளிப்படுங்காலத்தில் வெளி வஸ்துக்கள் எல்லாம் ஸ்வப்நம் போலவும், கானல் நீர்போலவும், துணியின் மேல் சித்திரங்கள் தாங்கி நிற்பதுபோல தேஹாதிப்ரபஞ்சமெல்லாம் தன்னிடம் அத்யஸ்தமாகத் தோற்றும். அவைகள் எல்லாம் இவனை ஒருவிதத்திலும் தாக்கா. இவனுக்கு மூன்றுவித கர்மங்களும் நீங்கி விடும். ஸஞ்சித மூட்டை ஞான அனுபவத்தால் அழிந்து விடும். ஆகாமியோ இவன் அகங்காரமற்று முன் பழக்கத்தால் செய்யும் கார்யங்களில் தோஷம் காண்பவர்கள் இவனுக்கு ஏற்படக்கூடிய பாபத்தையும் மற்றவர் புண்யத்தையும் பாகம் போட்டுக்கொண்டுபோய் விட, இவனை அந்தக் கர்மம் அணுகவேமாட்டாது. பிராரப்தமோ இவனை அணுகிப் பலன்கொடுத்து இவனை அனுபவிக்கும்படி செய்வதாக நமக்குத்தோன்றும். இவன் வெளிப்பட்டு தன் முற்பழக்கத்திற்கேற்ப தொழிற்பட்டு ஸுக துக்கங்களுள் கலப்பதால் நமக்கு இவ்வாறு தோற்றும். அவனுக்கோ ப்ராரப்தம் கூட இல்லை. அவனுக்கு உள்ள துக்கம் எல்லாம் திரஷ்ட துக்கமேயாக விருக்கும்.

துக்கம் இரண்டுவிதம் : அனுபவ துக்கம்; த்ரஷ்ட துக்கம் என்பவைகளே. பிறருக்கு வரும் துக்கம் த்ரஷ்ட துக்கம். அது கருணை மூலமாக நம்மை ஒருவாறுதான் தாக்கும் ; நாம் அதற்கு ஸாக்ஷியாகவே யிருப்போம். நமது தேஹாதிகளுக்கு வரும் துக்கம் தான் அனுபவ துக்கம். இதில் தான் நமது தேஹாதி தத்வங்கள் எல்லாம் நிலைகுலைந்து பெரிய கஷ்டம் நமக்கு உண்டாவது. ப்ரஹ்மவித்தாகிய அனுபவிக்கு அனுபவ துக்கம் என்பதேயில்லை. அதுவும் த்ரஷ்ட துக்கமாகத்தானிருக்கும் அதனால்தான் அவன் நோக்கில் ப்ராரப்தம்கூட இல்லை; உலகநோக்கில் ப்ராரப்தம் இருப்பதுபோலக் காணப்படும். இவனுக்கு கோபாதிகள் துஷ்ட நிக்ரஹார்த்தம் ஏற்படலாம். ஆனால் அது நிலைக்காது : விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல மாறிவிடும். இவன் இந்திரியாதிகள் முற்பழக்கத்தால் அசாஸ்திரீய வழிகளிலிருந்து தாமே சுருங்கி சாஸ்திரீய வழியிலேயே பாய்ந்து செல்லும். இவனால் தான் உலகிற்கு உபகாரம் ஏற்படுவது; இவனைப்போல நன்றாக ஒருவராலும் வேலை செய்யவே முடியாது. இவன் க்ருஹஸ்தனா இருப்பின், இவனைக் கண்டு பிடிப்பது மிக்ககஷ்டம். இவனும் நம்மைப்போலதான் இருப்பான். நெருங்கிப் பழகினால்தான் தெரியும். இவனே ஸந்யாஸியாக விருந்தால் இவன் சிறப்பு எளிதில் விளங்கும். இவன் வாழ்க்கையே உலக நன்மைக்காக. ஸமாதி கலையாமல் அதன் வாஸனையில், உபயோகப்படுத்தப்படும். ஒழிந்த வேளைகளில் வஸ்து தந்திரத்தாலிழுக்கப்பட்டு ஸமாதியிலேயே இருப்பன். வாழ்க்கை முடிவில் விதேஹ முக்தியாகிய முடிவான நிலைதானே எய்தும்.

சிலர் ப்ராரப்தவசத்தால் உலகத்தால் தாக்கப்பட்டு அடிக்கடி வெளிப்பட நேரிடாது அவர்கள் ஸமாதியிலேயே இருப்பர். இவர்கள் மூவகையாவர். தேஹ தர்மநடப்பதற்பொருட்டு பசியாதிகள் வரும்பொழுது மாத்திரம் தாமே எழுந்து அவைகளைத் தீர்த்துக் கொண்டு மறுபடி ஸமாதி யுற்றிருப்பர்ஒரு வகையார்; அவர்களுக்கு பிரஹ்மவரன் என்று பெயர். இவர்கள் தூங்கி சற்று விழித்துப் பின்னும் துங்குபவன்போல விருப்பர் இரண்டாவது வகையானவர். பிறர் தூண்ட ஆகாராதிகளை உட்கொண்டு ஸமாதியில் மூழ்கியிருப்பர் இவருக்கு ப்ரஹ்மவரீயான் என்று பெயர். இவன் நல்ல தூக்கத்திலிருப்பவன் நிலையிலிருப்பன். மூன்றுமவனாகிய ப்ரஹ்மவரிஷ்டன் தன்னாலும் பிறராலும் வெளிப்படாது உள்ளும் வெளியும் ஒன்று பட்டுப் போக ஸதா ஸமாதியிலிருப்பன். உயிர் உள்ளவரை இந்திரியாதிகள் தாமே சேஷ்டிக்குமே ஒழிய வெளி விஷயத்தாக்கு, உள் விஷயத்தூண்டுதல்ஒன்றுமிராது இவனிடம். இவன்வரையில் ப்ரஹ்மம்தான் உண்டு; வேறு ஒன்றும் இராது.

விவேக போதினி

தொ. 5.] பிரமாதீசஸு வைகாசிமீ [பகுதி 12

சைவ வைஷ்ணவ ஸமரஸம்

SAIVISM & VAISHNAVISM RECONCILED

வைஷ்ணவர்கள், மஹாவிஷ்ணு தர்மத்தைக் குறிக்கும் கருடனை வாஹனமாகக் கொண்டு பிரகிருதியை சூசிப்பிக்கும்படியான ஸர்ப்பத்தின்மேல் படுத்திருக்கிருர் என்று வர்ணிக்கிருர்கள். சைவர்களும், தர்மத்தைக் குறிப்பிக்கும் விருஷபத்தின்மீது சிவன் ஏறிக்கொண்டு பிரகிருதி என்பதைச் சூசிப்பிக்கும் பாம்புகளை ஆபரணமாகவும் தமது ஜடாமகுடத்தைக் கட்டும் கயிருகவும் தரிக்கிருர் என்று வர்ணிக்கிருர்கள். சிவனையும் விஷ்ணுவையும் அவரவர்களுக்கு ஏற்பட்ட புராணங்களும் உபநிஷத்துக்களும் பரம்பொருளென்றே வர்ணிக்கின்றன. ஆனல் புராணங்களில் அதிகாரிபேதம் உபதேச அவஸரம் இவைகளுக்கேற்ப மற்றைய மூர்த்திகளைத் தாழ்த்திச் சொல்லியிருக்கும். உபநிஷத்துக்களிலோ, ஒரு மூர்த்தியையும் ஒருபொழுதும் தாழ்த்திச் சொல்லாமல் ஸகல மூர்த்திகளும், ஏற்றமாய்ச் சொல்லப்பட்ட மூர்த்தியின் பற்பல ரூபங்கள் என்றே சொல்லப்பட்டிருக்கும். ஆகையால் நிந்தாவிஷயம் கூடாது என்பது உபநிஷத்துக்களின் அபிப்பிராயம் என்பதும் எளிதில் விளங்கும். முற்கூறிய புராணங்களும் தாழ்வு தோன்றும்படி சிற்சில விடங்களில் சொல்லியபோதிலும் அந்த அவஸரம் மாறியதும், வேறு சில விடங்களில் விஷ்ணுவிற்கும் சிவனுக்கும் பேதமே இல்லை என்று வற்புறுத்துகின்றன. வேதமானது விஷ்ணுவையும் சிவனையும் ஸ்துதிக்குமிடங்களில் தனித்தனியே அவரைப் பரம்பொருள் என்றே சொல்லுகிறது. அப்படிச் சொல்லுங்கால் சிவனையாவது விஷ்ணுவையாவது தாழ்த்திச் சொல்லுவதே இல்லை. இப்படி நமக்கு மோக்ஷ விஷயத்தில் ஆதாரமாய் இருக்கும் வேதசாஸ்திர புராணங்களே சிவ விஷ்ணுக்களுக்குப் பேதம் கல்பிக்காமல் இருக்கும்பொழுது, கனவிலும் பரம்பொருளைப் பார்த்திராத நாம் ஏன் வீணுகப் பேதங் கற்பித்துக் குதர்க்கம் செய்து தொண்டையைக் கிழித்துக்கொள்ளவேண்டும்?

மேலும் இந்தச் சிவ விஷ்ணுக்களுக்குள்ள பெயர்களின் அர்த்தம் முதலியவைகளை விசாரித்துப் பார்த்தாலும் அவர்களின் ஐகமத்தியம் எளிதில் விளங்கும். சிவன் என்ற சொல்லுக்கு மங்களகரமானவர் என்று பொருள். நாராயணன் என்ற சொல்லுக்கு ஞானநிலயம் என்று பொருள். ஞானத்தைவிட மங்களகரமான குணம் வேறொன்றும் இல்லாமையால் ஞானநிலயம் என்பதே மங்களகரமானதென்றும், மங்களகரமானதே ஞானநிலயம் என்றும் சொல்ல என்னதடை? ஈசுவரன் என்ற சிவனது பெயருக்கு எட்டுவித விபூதியை உடையவராய்ப் பிரபஞ்ச ரூபமாய்க் காணப்பட்டு அவைகளை அடக்கியாளுபவர் என்று பொருள். விஷ்ணு என்ற பெயருக்கோ பிரபஞ்சம் எங்கும் வியாபித்து ஸகலத்தையும் அடக்கியாளுபவர் என்று பொருள். ரங்கநாதர் என்ற விஷ்ணுவின் திவ்யமங்கள விக்ரஹத்திற்கும், நடராஜர் என்ற சிவன் திவ்ய

விக்ரஹத்திற்கும் அமைந்துள்ள பெயர்களின் பொருள் ப்ரபஞ்சமாகிய நாடகசாலாதிபதி, கபடநாடக ஸூத்ரதாரி என்ற ஒன்றே. சிவனது பெயர்கள் அடங்கிய சிவஸஹஸ்ரநாமங்களையும், விஷ்ணுவின்பெயர்கள் அடங்கிய விஷ்ணுஸஹஸ்ர நாமங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த ஒற்றுமை நன்ருய் விளங்கும். சிவஸஹஸ்ர நாமத்தில் சிவனுக்கு விஷ்ணு என்றபெயர் 621-ம் பெயாக 104-ம் சுலோகத்தில் வருவதும், விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் விஷ்ணுவுக்கு சிவன் என்ற பெயர் 27-ம் பெயாக 17-ம் சுலோகத்தில் வருவதும், ஒப்பிட்டு நோக்குங்கால் எவருக்கும் எளிதில் தெரியவரும். மேலும் சிவனுக்கு ஹரன் என்றும் விஷ்ணுவுக்கு ஹரி என்றும், பாபமுதலியவைகளைப் போக்குபவர் என்ற பொருளுடையனவாய் ஒரே தாதுவிலிருந்து வந்த பெயர்கள் அமைந்திருப்பதையும் பாருங்கள். 'அரியும் சிவனும் ஒன்று, அறியாதவன் வாயில் மண்ணு' என்று ஒரு பழமொழியும் வழங்கி வருகிறது. இவ்விஷ்ணு சிவபேதத்திற்கு ஒரு முக்கிய காரணமாய் காணப்படும் பாஞ்சராத்திர பாசுபத ஒழுங்குகளையும் இவ்வாறு ஒருவன் ஒப்பிட்டு நோக்குவானேயானல், அவ்வொழுங்குகளின் ஒற்றுமை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

சிவன் விஷ்ணு என்ற பெயர்கள் வேருயிருந்தாலும் குறிப்பிக்கும் பொருள் ஒன்றே என்பதற்கு அநேக ஆதாரங்கள் பொதுப் பிரமாண நூல்களிலிருந்தும் இருதிறத்தாரது பிரமாண நூல்களிலிருந்தும் எடுத்துக் காட்டலாம்.

இதற்குச் சாதாரணமாக ஸ்கந்தோபநிஷத்தை எடுத்துக்கொண்டு அதின் அர்த்தத்தைப் பின்வருமாறு சுருக்கிச் சொல்லுவோம். 'ஓ மஹாதேவ! தங்களுடைய காருண்ய லேசத்தினலே நான் அழிவற்றவனுய் இருக்கிறேன். விக்ஞானனுய் இருக்கிறேன். மங்களகரனுய் இருக்கிறேன். இதைப்பார்க்கிலும் சிரேஷ்டம் யாதிருக்கிறது? * * * விஷ்ணுரூபமாய் இருக்கிற சிவன் பொருட்டும் சிவன் ரூபமாய் இருக்கிற விஷ்ணுவின் பொருட்டும் நமஸ்காரம். சிவனுடைய ஹிருதயமே விஷ்ணு, விஷ்ணுவினுடைய ஹிருதயமே சிவன். எவ்வளவு இவ்விருவரிலும் நான் பேதம் காணவில்லையோ அவ்வளவு எனக்குச் சந்தோஷமும் பிறப்பு இறப்பற்ற வாழ்வும் உண்டாகக் கடவது. சிவகேசவர்களுக்குள்ளே பேதமே கிடையாது. * * * மனது விஷயத்திற் பற்றுமைதான் தியானம். மனதிலுள்ள தோஷத்தை விடுவதுதான் தியாகம்; இந்திரியங்களை அடக்குவதே சௌசம் * * ஸ்ரீமத்-பரஞ்சோதியின் பொருட்டு நமஸ்காரம். எப்பொழுதும் எனக்குப் பிறப்பு, இறப்பற்ற வாழ்வு உண்டாகக்கடவது. ஓ நரஸிம்மா! ஓ தேவேசா! உம்முடைய பிரஸாதத்தினலேயே ஜனங்கள் விரிஞ்சி நாராயண சங்கரஸ்வரூபமாயும், அசிந்தியமாயும் அவ்யக்தமாயும், ஆனந்தமாயும், துக்கமில்லாததாயும், தேவாத்மகமாயும் இருக்கிற பிரம்மத்தின் நிஜஸ்வரூபத்தை அறிகிருர்கள்.' இதற்கேற்பவே பொதுவாய்:—

யாவையும் யவருந்தானுய் யவரவர் ஸமயம் தோறும்,
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படா னுணர்வின் மூர்த்தி
ஆவிசே ருயிரினுள்ளான் யாதுமோர் பற்றில்லாத
பாவனை யதனைக்கூடில் அவனையும் கூடலாமே.

என்று நம்மாழ்வாரும்,

ஸமய கோடிகளெல்லாம் தன்தெய்வ மென்தெய்வம்
என்று எங்கும் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது.

என்று தாயுமானவரும் கூறியிருக்கின்றனர்.

தங்கமொன்று ரூபம்வேறு தன்மையான வாறுபோல்
செங்கண்மாலு மீசனும் சிறந்திருந்த தம்முளே
விங்களங்கள் பேசுவார் விளங்குகின்ற மாந்தரே
எங்குமாகி நின்றநாமம் நாமமிந்த நாமமே.

என்று சிவவாக்கியர் சிறப்பாகவும்கூறியுள்ளார்.

வேதமே ஸகல தேவதா நாமங்கள் விஷயத்தில் 'பரம்பொருள் ஒன்றே, அதை மஹானுபாவர்கள் (ஆராதிப்பவர்களது மனோதர்மத்திற்கேற்ப) அநேகவிதமாகப் பெயரிட்டழைக்கிறார்கள்' என்று கோஷிக்கிறது. பிரம்ம ஸூத்திரத்தில் வியாஸர், ஸகல தேவதைகளின் பெயர்களும், ஒரே பரம்பொருளின் பலபெயர்கள் என்று பல இடத்தும் ஸ்தாபிக்கிறார். இவைகளே இவ்விஷயத்தில் வேதசாஸ்திரம் முதலியவைகளின் அபிப்பிராயம்.

திரிமூர்த்திகளைப்பற்றி கூறிய காலத்திலே, மூன்று மூர்த்திகளில் எதை ஆராதித்தாலும் பரம்பொருளே ஆராதிக்கப்படுவதால் முடிவான நிலை கைகூடும் என்று ஆதாரத்துடன் காட்டப்பட்டிருக்கிறது. அந்த ஆதாரச்செய்யுள்களும் சைவ வைஷ்ணவ ஸமரஸத்திற்கு ஸாதகமே.

மேலும் முக்தியாகிய முடிவான நிலையைப் பற்றிக் கூறுங்கால் இருதிறத்தாரும் பொதுப்படையாகவே கூறுகின்றனர்.

நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந்திரியமெல்லா மீர்த்து
ஒன்றாய்க்கிடந்த அரும்பெரும் பாழ்உலப் பிலதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடதுவே வீடுவீடாமே.

—நம்மாழ்வார்.

தானான தன்மயமே யல்லால் ஒன்றைத்
தலை எடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலும் கற்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்பே தின்றி
ஞானாகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலும் இதன் பெருமை எவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவார் அதுவோ சொல்லும்.

—தாயுமானவர்.

இதுவுமன்றி சிவ விஷ்ணுக்களுள் பேதங் கற்பித்தல் கொடியபாபம் என்பதற்குச் சில ஆதாரங்கள் காட்டுவோம்.

'நாழியுப்பு நாழியப்பு நாழியான வாறுபோல்
ஆழியோனு மீசனு மமர்ந்து வாழ்ந்திருந்திடம்
எருதிலேறு மீசனு மியங்குசக்ர தரனையும்
வேறுகூறு பேசுவோர் வீழ்வர்வீ ணரகிலே'

என்றும்,

'தில்லைநா யகனவன் திருவரங் கனுமவன்
எல்லையான புவனமு மேகமுத்தி யானவன்
பல்லுநாவு முள்ளபேர் பகுந்துகூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே.'

என்றும் சிவவாக்கியர் அருளிச்செய்திருக்கிறார்.

'அரனதிக னுலகளந்த வரியதிகன் என்றுரைக்கு மறிவி லோர்க்குப்
பரகதி சென்றடைய வரிய பரிசேபோல் * * *'

என்று கம்பர் கிட்கிந்தா காண்டம் நாடவிட்ட படலத்திலும்,

'* * பலதெய்வம் பழித்துரைக்கும் பாதகரும் பரந்த தங்கள்
வாய்வழியே புழுச்சொரிய மாநரகக் கும்பியிடை மறுக்கக் கண்டான்'

என்று ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டம் திக்குவிஜயப் படலத்திலும் சொல்லியிருக்கிறார். இவைகளை எல்லாம் ஒருங்கு சேர்த்து ஔவையாரும் 'தெய்வமிகமேல்' என்றும், 'தெய்வம் ஒருவனே என்று உணரவல்லீரேல் அருவினைகள் ஐந்தும் அறும்' என்றும் திருவாய்மலர்ந்தருளினார்.

ஆகவே இவ்விஷயங்களை யறியாமையும், உண்மையில் பரம்பொருளைக் குறிக்கும் பெயர்களாகிய சிவன், விஷ்ணு என்பவைகள் திரிமூர்த்திகளில் அடங்கிய ஸம்ஹார ஸ்திதி கர்த்தர்களின் பெயர்கள் என்ற விபரீத ஞானமும் சிவ விஷ்ணுபேதச் சண்டைக்கு முக்கியமான காரணம். சிவன் அல்லது விஷ்ணுவை அவரவர்கள் தத்தமக்குத் தக்கபடி எண்ணி ஆராதிப்பதில் கெடுதி யொன்றுமில்லை. அதனால் அவர்களுக்கு நன்மையே உண்டாகும். இதற்கு ஏற்பவே :

யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்.

என்று சிவஞானசித்தியாரிலும்

ஞானமாய் ஒன்றாய் நின்ற என்னையே நானு வாகப்,
போனதீ வினையின் மாந்தர்வேள்வியால் பூஜித்ததால்
வானமா முலகமேறி வாழ்ந்துமண் ணிடையே வீழ்ந்திட்
டீனமா மாசையாலே யிறப்பது பிறப்பதாவார்.

என்று பகவத் கீதையிலும் அமைந்து கிடக்கின்றன. இதன்படி தம் மனோதர்மத்திற்கேற்ப ஆராதிக்குங்கால்,

'சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்'

என்று கூறிய ஔவையார்,

'திருமாலுக் கடிமைசெய்'

எனக் கூறியுள்ள கருத்தையும் 'தெய்வ மிகமேல்' என்று பொதுப்படையாகக் கூறியுள்ள கருத்தையும் முற்கூறிய சாஸ்திரக் கருத்துகளோடு பொருத்திப்பார்த்து நமது வழிபாடுகளை மதத்வேஷமின்றி நடத்தவேண்டும். இந்த வாக்யங்கள் கருத்துக்களை பின்வருமாறு நிராலம்ப, மைத்ராயண்ய உபநிஷத்துக்களில் எடுத்து விளக்கியிருக்கிறது.

நிராலம்ப உபநிஷத்தில் 'பரமாத்மா யார்? பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், இந்திரன், யமன், ஸூர்யன், சந்திரன், தேவதைகள், அஸுரர்கள் பிசாசங்கள், மனிதர்கள், ஸ்திரீகள், பசு முதலியவை, ஸ்தாவரம், பிராஹ்மணர், இவர்கள் யார்?' என்ற கேள்விகளை எடுத்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் 'தேஹாதிகளைக் காட்டிலும் அதிச்ரேஷ்டமான பிரஹ்ம ஸத்ய வஸ்துவே பரமாத்மா. அதுதான் இவர்கள் எல்லாம்' என்று ஒரேபதிலாகக் கூறிமுடிக்கிறது. மைத்ராயண்ய உபநிஷத்தில் வாலகில்யர்கள் பிரஜாபதியை நோக்கி 'அக்னி, வாயு' ஸூர்யன், பிராணன், காலம், அந்நம், பிரஹ்மா, ருத்திரன், விஷ்ணு இவர்களில் ஒருவரைச் சிலர் த்யானம் செய்கின்றனர்; சிலர் மற்றொருவரை த்யானம் செய்கின்றனர் : இவர்களுள் சிறந்தவர் யார்? உமக்கு எவர்சிறந்தவரோ அவரையே நாமும் சிறந்தவர் என மதித்து வழிபடுகிறோம்' என்றனர். அதற்கு பிரஜாபதி, 'சிறந்ததாயும் நாசமற்றதாயும் சரீரமற்றதாயுமுள்ள பிரஹ்ம வஸ்துவுக்கு நீங்கள் கூறியவர்கள் எல்லாம் முக்ய உருவங்கள். உலகத்தில் எந்தெந்த மனிதனுக்கு எதெதில் பிரியமோ அதில் ஈடுபட்டு திருப்தியடையலாம் அவன். இவை எல்லாம் பிரஹ்மம்தான். இவை எல்லாம் பிரஹ்மத்தினுடைய சிறந்தசரீரங்கள். இவைகளை பிரஹ்மமென்றே த்யானம் செய்ய வேண்டும். இப்படி உபாஸிப்பவன் அந்தந்த தேவதைகளில் ஐக்யமாய் மேல் மேல் லோகங்களில் உலாவுவான். பிரபஞ்சம் லயமாகுங்கால் ஆத்மாவில் 'ஒன்றாகிவிடுகிறான்' என்று ஸமரஸ மறுமொழி கூறிமுடித்தார்.

இவைகளை மறவாது த்வேஷபுத்தியை தலை எடுக்க வொட்டாது அடித்து, வேறுபெயர்களைப் பின்பற்றிப் பரம்பொருளையே ஆராதிக்கும் ஜனங்கள் மோக்ஷவழியில் நம்மைப் போல யத்தனம் செய்பவர்கள் என்று ஸதா பாவிக்க முயற்சிக்கவேண்டும். இவ்வாறு பல நாமங்களும் ஆராதனங்களும் சென்றடையும் இடமான பரம்பொருளது கிருபையால் பேதபுத்தியும் அதனால் உண்டாகும் சண்டையும், இருந்தவிடம் தெரியாது பறந்தோடிப் போகட்டும். எல்லோரும் கடவுளை அடைந்து நிலைபெறும் விஷயத்தில் அந்யோந்யமான அன்பு பாராட்டட்டும். மனிதர்கள் மனதில் சாந்தி குடிகொள்ளட்டும். ஸகலலோகங்களும் ஸௌக்யத்தை அடைந்து ஓங்கித் தழைக்கட்டும்.

ஓம் தத்ஸத்.

நமது சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத்தொகை அனுப்பும்போதும் தமது விலாஸத்துக்கெதிரே யிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும்.

மானேஜர்.

கோபர்னிகஸ்

COPERNICUS

"எப்பொருளெத் தன்மைத் தாயினுமப் பொருள்
மெய்ப்பொருண் காண்பதறிவு."—

இவர் கி. பி. 1473௵ பிப்ரவரி௴ 19௳ விஸ்டுலா என்னும் நதியின் மீதுள்ள, 'விசித்திரமான' தார்ன் (Thorn) என்னும் பட்டினத்தில் பிறந்தவர். இவர் பிறக்கும்பொழுது அப்பட்டினம் ஏற்படுத்தப்பட்டு இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகவே இருக்கலாம். பிரஷியாவுக்கும், போலண்டுக்கும் மத்தியிலமைந்திருப்பதினாலும், அந்நதியும் போக்கு வரவுக்கு வசதியான தண்ணீர் மார்க்கமா யமைந்ததினாலும், அப்பட்டினம் கூடிய சீக்கிரம் ஓர் முக்கிய வியாபாரஸ்தலமாகிவிட்டது. 15-ம் நூற்றாண்டில், அது ஓர் முக்கிய இராணுவஸ்தலமாக்கப்பட்டதுமன்றி தற்காலம் ஜர்மனி ராஜாங்கத்தாரால் முதல் தரமான கோட்டையாகவும் செய்யப்பட்டிருக்கின்றது.

வானசாஸ்திரத்தில் நூதன சங்கதிகளைக் கண்டுபிடிப்பதில் கெப்ளர், நியூட்டன் முதலியோர்க்கு முன்னோராகிய கோபர்னிகஸ் மற்ற வானசாஸ்திரிகளைப் போன்றுயர் குலத்தினுதித்தவரல்லர். அவர் தந்தை ஓர் வர்த்தகர். ஆனால் அவருடைய மாமன்மார்களில் ஒருவர் பிஷப்பாக(Bishop)விருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உன்னத பதவியை யடைந்த அநேகருடைய சரித்திரங்களில் அன்னோருடைய குழந்தைப் பருவம், வாலிபதசை முதலியவை எவ்வாறு நம்மனதைக் கவருதற்குக் காரணமாக விருக்கின்றனவோ அம்மாதிரி, பிரசித்திபெற்ற இவ்வான சாஸ்திரியின் சரிதையில் ஒன்றுமில்லை; ஏனெனில் அவைகளைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. கிராகோ (Cracow) சர்வ கலாசாலைக்குச் செல்லும்படியான யோக்கியதை அடையும்வரை நிக்கோலஸ் என்று நாமதேயம் பூண்ட இவர் தன் இல்லிலேயே கல்வி கற்று வந்தார். இவர் பெற்ற வித்தை பூர்வகால வெண்ணப்படி விருந்த போதினும், அதினின்றும் எவ்வளவு நன்மை அவர் அடையக்கூடுமோ அவ்வளவையும் அடைந்ததாகக் காணப்படுகிறது. கோபர்னிகஸ் வைத்தியம் செய்யும் தொழிலைத் தன் ஜீவனோபாயத்தைத் தேடுதற்குரிய தொழிலாக்கிக்கொள்ள எண்ணங் கொண்டவராய் வைத்திய சாஸ்திரத்தையே யாவற்றினும் அதிகமாகப் படித்து வந்தனர். ஆனால் பிரசித்திபெற்ற வானசாஸ்திரியாக விருக்கின்ற இவருடைய மனச்சார்புகள், கணித் சாஸ்திரத்தில் இவர் மிக்க அவாவுடன் உழைத்து வந்ததாகக் காட்டின. இதுவு மன்றி, இவருக்குப் பின் வந்த, புகழ்பெற்ற வானசாஸ்திரிகளில், கலிலியோவைப் போல, சித்திரம் வரைவதில் இவர் மிக்கப் பிரியங் கொண்டிருந்தது மன்றி அத்தொழிலிலும் தைத் தேர்ச்சியடைந்திருந்தன ரென்றும் தெரிய வருகிறது.

கோபர்னிகஸ், தனக்கு இருபத்தேழு ஆண்டுகள் நிறைவதற்கு முன்னமேயே, தான் வைத்தியத் தொழிலைக் கைக்கொள்வது என்ற எண்ணத்தைத் தவிர்த்து விட்டு, தன் ஜீவிய நாள் முழுவதையும் பிரகிருதி சாஸ்திரங்களுக்கு அர்ப்பணம் செய்து விடுவதாக தீர்மானித்து விட்டனர். இவர் கணித சாஸ்திரம் கற்பிப்பதில் சிறிது காலங்கழித்தது மன்றி, அத்தொழிலில் கீர்த்தியையுமடைந்தனர். இவருடைய கீர்த்தி மேன்மேலும் ஓங்கி அதிகரிக்கவே, பிஷப்பாகவிருந்த இவருடை மாதுலர் அதைக்கேள்விப்பட்டு, தேவாலயங்களில் பிரசங்கம் செய்வோருக்கு வேண்டிய, யோக்கியதாபத்திரத்தை யடைவதற்குரிய சாதனங்களைத்தேடும்படி சொல்லியவாறே, கோபர்னிகஸ் பெற்று, உடனே, விஸ்டுலா நதியின் முகத்துவாரத்திலிருக்கும் பிரான்பெர்க் (Fraunberg) கிலுள்ள தேவாலயத்தின் குருவாகவும் நியமிக்கப்பட்டனர்.

அப்படியே, நானாவித சக்திவாயப் பெற்ற இவர் பிரான்பெர்குக்குச் சென்றனர். துறவற நிலையில் அவாக்கொண்டிருந்த இவர் தன் வாழ்நாள் முழுமையும் சரியான வழியிலேயே கழிக்க வெண்ணங்கொண்டனர். அதனால், சாதாரண மனிதர்களின் சங்கத்தில் சேர்வதைக்கட்டோடே ஒழித்துவிட்டதுமல்லாமல் ஆழ்ந்த கருத்தும், கல்வித்தேர்ச்சிபெற்ற சிலர் மாட்டுமே தன் நட்பை வரம்புப் படுத்தினதுமல்லாமல் யாதொரு பிரயோசனமுமற்ற சம்பாஷணைகளில் தான் தலையிடுவதையும் தவிர்த்துவிட்டனர். சித்திரம் வரைதலில் தனக்கிருந்த சக்தியைக்கூட அற்பமென்று அவர் கருதியதாகவும்

காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும் அதற்கப்புறம் சித்திரம் வரைதலில் பழகுவதை விட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

தேவாலயத்துக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்து வந்ததுமல்லாமல், ஏழைகளுக்கு வைத்தியம் செய்வதிலும் மற்றைய காலங்களில் கணித சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் ஆராய்ச்சி செய்வதிலும் தன் காலத்தைச் செலவிட்டு வந்தனர். வான சாஸ்திரத்தைப்பற்றிப் படித்தற்கு, வேண்டிய கருவிகளில் இவரிடத்திலிருந்தவைகள் மிகவும் அற்பமென்று சொல்லக் கூடியவைகளே. அல்லென்ஸ்டீன் என்னுமிடத்திலிருந்த இவர் மனையின் சுவர்களில் இவராக ஏற்படுத்திய துவாரங்களே, இவர் நக்ஷத்திரங்கள் உச்சமடைவதை நோக்குவதற்கு உபகரணங்களாக உபயோகப்பட்டன. யந்திரம் நிர்மாணிக்கும் சாதனையில் இவர் மிக்க திறம் வாய்ந்தவர். பிரான்பெர்கிலுள்ளோரின் உபயோகத்திற்காக ஓர் ஓடையினின்றும் ஜலத்தை மேலே எடுப்பதற்காக இவர் ஏற்படுத்திய சூக்ஷமமே, இவர் சாமர்த்தியத்தை நிரூபிக்கத் தகுந்த சான்றும். இவ்வியந்திரத்தின் விசேஷத்தை இப்பொழுதுகூட பார்க்கலாமாம்.

கோபர்னிகஸின் ஆராய்ச்சி, பிரசுரிக்கப்படுவதற்கு முன்னாக அக்கால வானசாஸ்திரிகள் நம் பூமிக்குச் சலனமில்லை யென்றும், வானசோதிகளின் உண்மையான சலனங்கள் நமக்கு காணப்படும்சலனங்களேயென்றும் நிலைநாட்டி வந்தனர். இக்கொள்கையை சுமார் 1400-வருடங்களுக்குமுன்பாக டாலமி ஸ்தாபித்தனர். நாம் முன்னொரு சஞ்சிகையிற் கூறியபடி, இவ்வளவு பெரிய பிழை முக்கியமான உண்மையோடு கலந்தும், உண்மைத் தோற்றத்தையும் பெற்றிருந்ததினாலும் கோபர்னிகஸினுடைய கிரந்தம் வெளிப்படும் வரை, டாலமியின் கொள்கைகளின் உண்மையைக் குறித்து ஒருவரும் சந்தேகப்படவில்லை. ஆனால் சிலர் மட்டும் ஒவ்வொரு சமயத்தில், பூமியைச் சுற்றி வராமல் மற்ற கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருதல் தான் நிச்சயமாயிருக்க வேண்டு மென்று சந்தேகங் கொண்டதாகத் தெரிய வருகிறது. ஆயினும் சாஸ்திர சம்பந்தமான விஷயமொன்றைச் சொல்வது ஒருவனுக்கு மிக்க எளிது. ஆனாலோ அன்னான், அவ்விஷயத்தை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய குறிப்பு அல்லது பரிசோதனையை அஸ்திவாரமாகக் கொண்டுள்ள நியாயத் தொடர்ச்சியைக் கொண்டுள்ளானாகை விருப்பது அரிது. பிதகோராஸ் (Pythagoras) என்பவர், கிரகங்களெல்லாம் பூமியைச் சுற்றாமல் சூரியனைத் தான் சுற்றி வருகிறதென்று தன் மாணவர்களுக்கு போதித்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் அவர் கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் நம்பிக்கை, சரியென்று சாஸ்திரப்படி நிரூபித்தற்கு வேண்டிய காரணங்களை அவர் அறிந்திருந்தாரா வென்பது நிச்சயமாய்த் தெரியவில்லை. நமக்குக் கிடைக்கக் கூடிய, சங்கதிகளைக் கொண்டு மட்டும் பார்க்கின், வானசோதிகளின் சலனங்களைப் பற்றி இவர்கொண்டிருந்த, எண்ணங்களை, அக்காலத்திலிருந்த பிரகிருதி தத்துவம் என்னும் நூலின்கண்ணுள்ள விசித்திரமான கொள்கைகளோடு வித்தியாசமின்றி கலந்துவந்தன ரென்றும் தெரிய வருகிறது. வான சோதிகளில் எது முக்கியமானதென்று பிதகோராஸ் ஒருவேளை சரியாகச் சொல்லி யிருத்தற் கூடும். ஆனால் அவர் அதைத் திருப்திகரமாய் நிரூபிக்க வில்லையென்பதும் உண்மையே.

கோபர்னிகஸ் தான் சொல்லுவதைக் காது கொடுத்து கேட்க சம்மதிப்பட்டவர்களை சரியான நியாயத்தொடர்புகளைக்கொண்டு சூரியனைச் சுற்றித்தான் மற்றவைகள் செல்லுகின்றனவென்பதுதான் உண்மையென்று ஒத்துக் கொள்ளும்படியாகச் செய்தார். அதற்கு அவர் காட்டியனவும் அவர்பெயரை பிரசித்தி பெறச் செய்தனவுமாகிய அந்நியாயங்கள் என்னவென்றுபார்ப்போம். அவர் முதல் முதல் நூதனமாய்க் கண்டுபிடித்த சங்கதிகளில் விசேஷமானது, பூமி தன் அச்சுஸ்தம்பரேகையை (axis) ச்சுற்றிச் சுழலுவது என்பதேயாம்.

நக்ஷத்திரங்கள் முதலியவை, பூமியை 24மணி நேரத்தில் சுற்றிக்கொண்டுவருவதாக, நாம் தினந்தோறும் காணும் தோற்றம் சாத்தியமென்றும், நமக்குத்தோற்றும் சலனங்களே அவைகளின் உண்மையான கதிகளென்றும் டாலமி நிரூபித்ததாகவும் இக்கொள்கையின்படி, உண்டாகும் கஷ்டங்களெல்லாம் டாலமியும் அறிந்திருந்ததாகவும் முன்னமேயே சொல்லியிருக்கிறோம். வானசோதிகள் உதயமாவதும் அஸ்தமிப்பதும் பூமியல்லாமலுள்ள பிரமாண்டமான

கக்கோளம் பூமியைச்சுற்றி வருதலினாலாவது அல்லது பூமிமுதலியவை சூரியனைச்சுற்றிவருதலினாலாவது ஏற்படக்கூடுமென்று கோபர்னிகஸும் அறிந்திருந்தார். டாலமி செய்தவாறே இவ்விருகக்ஷி நியாயங்களையும் கோபர்னிகஸ் தீர ஆலோசனைசெய்து நிறுத்துப்பார்த்ததில் டாலமி அடைந்த தீர்மானத்துக்கு மாறான தீர்மானத்தை அடைந்தார்.

கோபர்னிகஸுக்கு, பெரியகக்கோளம் சுற்றி வருகிறதென்று கொள்வதாலுண்டாகுங் கஷ்டங்கள் பூமிசுழலுவதில்லையென்று டாலமியை சொல்லும்படியாகச்செய்வித்தக் கஷ்டங்களைக் காட்டிலும் அதிகமாகக் காணப்பட்டன. நாம் பார்க்கும் மாறுதல்களெல்லாம், கக்கோளம் சுற்றுவதனாலல்லாமல் தான்கொண்டபடி பூமி சுழலுவதனால் எவ்வாறுண்டாகலாமென்று கோபர்னிகஸ் நன்றாய் விளக்கிக் காட்டினார். சலனமற்ற சலத்தின் மேல் வேகமாய்ச் செல்லும் ஓர் கப்பலி லிருப்போர்க்கு அக்கப்பல் ஓரே விடத்திலிருப்பதாகவும், கரையிலுள்ள வஸ்துக்கள், தாம் அதிவேகமாய் செல்லுவதாய் தோற்றுகின்றன வென்ற சங்கதியை எடுத்துக்கொண்டு, அம்மாதிரியே பூமி சுழலுமாயின், பூமியிலிருப்போருக்கு அது அசைவற்றிருப்பதாகவும் அச்சலனத்தை, தப்பிதமாக, நாம் நக்ஷத்திர முதலியவைகளின் பேரில் ஏற்றி விடுவதாகவும் கூறினர். டாலமி, பூமி சுற்றுதல் அசாத்தியமென்பதை நிரூபிக்கக்கூறிய நியாயங்களிலுள்ள பிழைகளையெல்லாம் கோபர்னிகஸ் வெளிப்படுத்தி அந்நியாயங்களை கண்டதுண்டமாக சேதித்தனர். பூமி சுழலுமாயின் அதன் மேலிருக்கும் வாயுமண்டலம் அதனுடன் சுழலாதென்றும் அதனால் சூறாவளிக் காற்றுகள் உண்டாகி எப்பொழுதும் அடித்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும் அதனால் இப்பூமியின் பேரில் ஜீவராசிகள் வசித்தல் அசாத்தியமாய் விடுமென்றும் அவ்வாறில்லாமையால் பூமி அசைவற்றதென்று கூறிய டாலமியின் நியாயத்தை கோபர்னிகஸ் விபரீதமான வாதமாக மதித்தனர். தான் தெருவில் நடந்து கொண்டிருந்த போதிலுங் கூட, தன்னுடைய சட்டை தன்னுடலோடு கூடவே விருப்பது போலவே, வாயு மண்டலமும் பூமியின் மேலேயே அதைப் பின் தொடர்ந்து வர வேண்டுமென்று கோபர்னிகஸ் காண்பித்தனர்.

இவ்விதமாக பூமியின் சலனத்தை மறுக்கக் கூறப்பட்ட முதல்தடைகளெல்லாம் சரியானவைகளல்லவென்று தள்ளிவிட்டபிறகு இராப்பகலுண்டாவதன் காரணத்தை விளக்க எடுத்துக் கொள்ளப்பட்டனவும் ஒன்றுக்கொன்று மாறானவுமாகிய விரு கொள்கைகளில் எது சாத்தியமென்று அவைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்படியான ஸ்திதியில் கோபர்னிகஸ் இருந்தார். கடைசியாய் முடிவாக வேண்டிய விஷயத்தை, இம்மாதிரியாகக் கொண்டுவந்து விட்டபிறகு முடிவு இன்னதுதான் என்பது சந்தேகமேயில்லாத விஷயமாம். இப்பொழுது இந்த வினா ஒன்று; பெரிய கக்கோளத்தின் மத்தியில், ஓர் சிறுமணலைப் போன்ற பூமிதன்னைத் தானே 24-மணிநேரத்தில் சுழன்று வருதலா அல்லது பிரமாண்டமான அக்கக்கோளம் அதேகாலத்திற்குள் எதிர் திக்கில் பூமியைச்சுற்றி வருதலா—எதுசாத்தியம்? முதற்கூறிய உத்தேசமே மிகவும் சுலபமாகவிருப்பதாக வெட்டவெளி போல் தெரிகின்றது. இதுமட்டுமல்லாமல் இன்னும் பலமான நியாயங்கள் பலவும் கோபர்னிகஸ் எடுத்துக்காட்டினார். டாலமி நக்ஷத்திரங்களெல்லாம் அக்கோளத்தில் பதிக்கப்பட்டிருக்கின்றனவென்று கொண்டதாக முன்னமேயே கூறியிருக்கும் அவர் இவ்வாறு கொள்வதற்குத் தகுந்த காரணங்கள் காட்டவில்லை. அவர் சொன்னதெல்லாம் அவ்வாறில்லாமற் போயின் அப்பெரிய கக்கோளம் அசைவற்ற இப்பூமியை சுற்றிவருதல் சாத்தியமென்று நிரூபிக்க ஓர் சூழ்ச்சி கண்டுபிடிப்பது ஏறக்குறைய முடியாத காரியமென்பதேயாம்.

நாம் காணும் மாறுதல்களை, காகிதத்தின் பேரில் வரைந்து காட்டுவதற்குக் கக்கோளத்தை உருண்டைவடிவமாகக் கொள்வது யுக்தமாகவிருந்தபோதினும், உண்மையாகவே அநேக வஸ்துக்களாலாக்கப்பட்டுள்ள அக்கக்கோளம், அவ்வாறிருத்தற் முடியாத காரியமென்று கோபர்னிகஸ் எண்ணினார். ஏனெனில் அவ்வாறிருப்பின், கணக்கில்லா நக்ஷத்திரங்களெல்லாம் பூமியினின்று சமதூரத்திலிருக்கவேண்டி நேரிடும். நக்ஷத்திரங்கள் எல்லாம் பூமிக்கு சமதூரத்திலிருக்கின்றன வென்றும், வேறுவிதமாயிருத்தல் அசாத்தியமென்றும் ஒருவரும் கூறத்துணியார். அதற்கு வேறுவித நியாயங்களொன்றுமில்லாமையால், நக்ஷத்திரங்

களெல்லாம் டாலமி கூறியவாறு அக்கக்கோளத்தில் பதிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது மிகவும் அசம்பாவிதமானதோர் விஷயமாக கோபர்னிகஸ் கருதினர்.

டாலமியின் கக்கோளம் எத்தன்மைத்தான வஸ்துக்களாலாக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அறிந்துகொள்ள, ஐயமின்றி, கோபர்னிகஸ் மிகவும் கஷ்டப்பட்டிருக்கவேண்டும். விஷயங்களில் ஊடுருவிச்சென்று ஆராயும் கோபர்னிகஸ் அக்கக்கோளம் நம்மனத்திற்கு மெட்டாதபடி அவ்வளவு பெரியதாயிராவிடின், அதற்கு வெளியே இடமிருக்கவேண்டுமென்றும், அதனால் அநேக கஷ்டங்கள் நேரிடுமென்றும் அறிந்திராமலிருக்க முடியாது. மேற்கூறியபடி அவ்வளவு பெரியதாயிராவிடினுங்கூட பூமியினுடையதைவிட பல்லாயிரமடங்கு பெரிதான -குறுக்களவைக் கொண்டதாகவிருக்க வேண்டுமென்பது வெளிப்படையே. இந்நியாயங்களைக் கொண்டு நக்ஷத்திரங்களும் மற்ற வானசோதிகளும் மிகப் பெரியவைகளான பொருட்களாகவிருக்க வேண்டுமென்று கூறினர். இவ்வுண்மைகளை விளக்கியபிறகு, மேற்சொன்னகேள்வியை, அதற்கு சரியானவிடை தவிர வேறொன்றுஞ் சொல்லமுடியாதபடி அவ்வளவு சாதுரியமாய் கேட்கும்படியாக கோபர்னிகஸ் மனவலிவை யடைந்தவரானார். பூமி 24 மணிநேரத்துக்குள் தன் அச்சைச்சுற்றி வருவதா, அல்லது ஆயிரக்கணக்கான பெரிய நக்ஷத்திரமண்டலங்கள் அதேகாலத்தில், இப்பூமியை, பூமிசுழலும் வழியைக்காட்டிலும் பல்லாயிரமடங்கு பெரிதான வட்டவழியாய் சுற்றி வருவதா? எது நமது பகுத்தறிவுக்கு யுக்தமாகத் தோற்றுகின்றது? இவ்வுத்திரத்திற்கு, வெட்டவெளியைப் போலத்தோன்றும் விடை, கோபர்னிகஸின் மனதிற்கு மிக்கவலிவுடன் பட்டதால், பூமிசலனமற்றதென்று கொண்ட டாலமியின் சித்தாந்தத்தைத் தள்ளிவிடும்படியாகவும், பூமி தன்னைத் தானேச் சுற்றுவதனாலுண்டாவதாகக் கூறும்படியாக நேரிட்டது.

இவ்வளவு பெரியமாறுதல் எப்பொழுது செய்யப்பட்டதோ, அப்பொழுதே, அக்கக்கோளத்தைப்பற்றி இயல்புக்கு மாறாகக்கொள்ளப்பட்டிருந்த வெண்ணங்களெல்லாம் தவிடுபொடியாய் விட்டன. உதாரணமாக நக்ஷத்திரங்களெல்லாம் பூமியினின்றும் சமதூரத்திலிருப்பதாகக் கொள்ள வேண்டியதற் கவசியமொன்றுமில்லை.

கோபர்னிகஸ் அவைகள் ஒன்றுக்கொன்று தூரத்தில் எவ்வளவு வித்தியாசப்படுமோ அவ்வளவு தூரத்திலிருக்கலாமென்றும், சில, மற்றவைகளைக்காட்டிலும் பல்லாயிரமடங்கு தூரத்திலிருக்கலாமென்றும் ஊகித்தார். கோபர்னிகஸினுடைய சித்தாந்தம் எப்பொழுது நன்றாய் விளக்கப்பட்டதோ, அதுமுதற்கொண்டு அதை அறிந்துகொள்ள சக்தியையும்மனதையுமுடையோர் அதன் உண்மையை ஒத்துக்கொள்ளாமலிருப்பது முடியாதகாரியமாயிற்று. பூமி அசைவற்றதென்ற கொள்கையைத் தள்ளிவிட்டபிறகு, பூமி சலனமுடைத்து என்ற சித்தாந்தமும், மற்ற வானசோதிகளின் கதிகளினுண்டாம் மாறுதல்களை விளக்குவதற்கு நேரிடும் கஷ்டங்களுக்குட்படுமோ வென்று பார்ப்பது கோபர்னிகஸுக்கு அவசியமாகத் தோன்றிற்று.

முன்னாடியே பூமி அந்தரத்தில், ஒன்றினாலும் தாங்கப்படாமல் நின்றுகொண்டிருக்கிறது என்பது, எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அத்தன்மைத்தான பூமிக்கு தன்னைத்தானேசுற்றிவரும் சலனம்வேறுஉண்டென்று காண்பித்தனர். பூமி ஒரு இடத்தில் அசைவற்று நிற்பதில்லையென்று தெரிந்தபின், மேற்சொன்ன சலனத்தைத்தவிர வேறுவிதமான சலனங்கூட பெற்றிருக்கலாமென்று கொள்வது நியாயமாகவே தோன்றிற்று. இவ்விஷயமாகத்தான், இதுவரை இவர் கவனத்தைக் கவர்ந்த எண்ணங்களைவிட, மிகவும் கஷ்டமானதொன்றை சரியாய்வெளியிட இவர் மிக்க பிரயாசை எடுத்துக் கொண்டனர். பூமி சுழலுவதினால் இராப்பகல் எவ்வாறுண்டாகின்றதென்பதை நிரூபிப்பது அவருக்கு சுலபமாகவேயிருந்தது. ஆனால் கிரகங்களெல்லாம் சூரியனைச் சுற்றி வருகின்றனவென்றும், அக்கிரகங்களில் பூமி ஒன்றென்றும், அது வருஷத்தில் ஒரு தரம் சூரியனைச் சுற்றி வருகிறதென்றும், தான் கொண்ட எண்ணத்தைக் கொண்டு, டாலமி திருப்திகரமாய் விளக்கிய, மற்றைய கிரகங்களின் சஞ்சாரங்களை விளக்குவதில் மிகவும் கஷ்டமானதோர் பணிக்கு தன்னை ஆளாக்கிக் கொண்டனர் கோபர்னிகஸ். மிகவும் சுருக்கமான இக்குறிப்பில் கோபர்னிகஸி

னுடைய நேர்த்தியான ஆராய்ச்சிக்குக் காரணமாக விருந்த க்ஷேத்திர கணித சூத்திரங்களை சவிஸ்தாரமாய் எடுத்துக் காட்டுவது முடியாத காரியமாம். ஆயினும் முக்கியமான சில ஆதாரங்களை மட்டும் எடுத்துக் காட்டுவோம்.

சாதாரணமாய், வேகமாய்ச் செல்லும் புகைவண்டியிலிருப்போர் அவருக்குக்கெதிரிலுள்ள மாம், செடி கொடி முதலியவை தங்களுக்கு எதிராக மிக்க வேகமாய் செல்லுவதாக நினைப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவ்வித நியாயத்தைக் கொண்டு, டாலமி வட்ட வடிவினுல் விளக்கிய, கிரகசஞ்சாரங்களின் மாறுதல்களை யெல்லாம், நாமும் விளக்கிக் காட்டலாம். பூமிக்கப்பாலுள்ள கிரகங்களின் ஒழுங்கீனங்களின் முக்கியமான அம்சங்களை மட்டும் எடுத்துக் கொள்வோம். செவ்வாய், சாதாரணமாய் நக்ஷத்திரங்களினூடே மேற்கேயிருந்து கிழக்கே சென்ற போதினும் சிலசமயங்களில், தான் வந்த வழியிலேயே திரும்பிப் போவதும் சிறிதுகாலம் ஒரேவிடத்திலிருப்பதும் பிறகு முன்சென்றபடியே மேற்கேயிருந்து கிழக்கேசெல்லும் பிரயாணத்தை மறுபடியும் தொடங்குகிறதென்றும் முன்னமேயே கூறியிருக்கிறோம். கோபர்னிகஸ் எவ்வாறு உண்மையாக பூமிக்குள்ள கதியை செவ்வாயின் கதியோடு கலப்பதினுல் இவ்வித மாறுதல்கள் நேர்தல் சாத்தியமென்று தெளிவாக நிரூபித்தனர் என்பதை எடுத்துக் கொள்வோம். முக்கியமாக பூமி, செவ்வாய்க்கும் சூரியனுக்கும் மத்தியில் வரும் காலத்தை எடுத்துக்கொள்வோம்; ஏனெனில் அப்பொழுதுதான் செவ்வாயின் வக்கிரகதி மிகவும் நன்ருகக் காணப்படுகிறது. செவ்வாய், படத்தில் அம்புநுனி காட்டும் திக்கில் சென்று கொண்டிருக்கிறது. பூமியும் அதே திக்கில் செல்லுகிறதாகக் காட்டியிருக்கிறது. பூமியிலிருப்போராகிய நாம் நம்முடைய சலனத்தைப் பற்றி நினைவேயில்லாதவராய் மேற்காட்டிய நியாயப்படி பூமிசெல்லும் திக்கிற்கு மாருன திசையில் பூமியின் வேகத்துக்குச் சரியான வேகமுண்டென்று செவ்வாயின் தலைமேற் ஒருவேகத்தைச் சுமத்துகிறோம். அதனுல் நாம் காணும் முடி வென்னவெனில் செவ்வாய் இரண்டு சலனங்களை பெற்றதாகின்றது. அது உண்மையாகவே பெற்றுள்ள சலனம் ஒன்று. உண்மையாகச் செல்லும் கதிக்கு நேர் எதிர் திசையில் செல்லுவதாக நமக்குத்தோன்றும் சலனம் மற்றொன்று. பூமியும் செவ்வாயும் ஒரே வேகத்துடன் செல்லுவனவாய் நேரிடின் செவ்வாயின்மேற் சுமத்தப்பட்ட வேகமும் அதன் உண்மையான வேகமும் சமமாய் ஒன்றிற்கொன்று சரியாய்ப்போய்விடும். அதனுல் செவ்வாயைச், சுற்றியிருக்கும் நக்ஷத்திரங்களோடு ஒத்திட்டுப் பார்ப்பின் அது அசைவற்று ஒரேவிடத்தி லிருப்பதாகத் தோன்றுகிறது. படத்தில் காட்டப்பட்டிருக்கும் சமயத்தில் செவ்வாயைவிட பூமி அதிகவேகமாய் செல்லுவதால் செவ்வாய் பின்னுல் செல்லுவதாகத் தோற்றும். சலனத்தின் வேகமுன்னுடிசெல்லும் அதன் உண்மையான வேகத்தைக் காட்டிலும் அதிகமாயிருப்பதால் செவ்வாய் வக்கிரகதி அடைந்ததாகக் காண்கிறது. இம்மாதிரி நியாயங்களைக் கொண்டே கோபர்னிகஸ் மற்றகிரகங்களின் சஞ்சாரங்களின் முக்கியவிஷயங்களை மிக்க திறமையுடன் விளக்கிக்காட்டினுர். காலம் செல்லச் செல்ல இவர் கொள்கைகளுக்கு நேரிட்ட இடையூறுகளுமடங்கிவிட்டன. பூமி, ககோளத்தில், தான் பெற்றிருந்த விசேஷத்தையும் முக்கியத்தையும் இழந்துமற்றையகிரகங்களோடுதானுமொன்ருக சேரவேண்டி நேரிட்டது. முதன் முதல் ருதுக்கள் மாறிவருதற்குதகுந்த நியாயங்கொடுத்தவரும் விவேகசாலியான இவ்வானசாஸ்திரியே, மற்றும் வானத்திலுண்டாகும் மாறுதல்களில் அதுவரை தெளிவாய் தெரிந்திராதனவும் நுட்பமானவைகளுமாகிய சிலவற்றையும் கவனித்து வந்தார். ஆனுல் யாவராலும் ஆச்சரியப்படத் தகும்படியாகத், தான் கண்டு பிடித்த அற்புத விஷயங்களை பிரசுரப் படுத்துவதில் காலதாமதம் செய்து விட்டனர். ஆனுல் அவ்விஷயங்கள் கிளப்பும் வாக்குவாத மட்டும் இவ்வளவ்வளவென்று சொல்ல முடியாதபடியாயிருக்கும் என்றுந் தெரிந்திருந்தார். கடைசியாய் அவருடைய நண்பர்களின் வேண்டுகோளுக்கிரங்கி தன்னுடைய கிரந்தத்தை அச்சுக்கூடத்திற்கனுப்பினுர். ஆனுல் அக்கிரந்தம் உலகத்துக்களிக்கப்படுவதற்கு முந்தியே கோபர்னிகஸ்கொடிய வியாதியால் பிணிக்கப் பட்டவராயினர். 1543ம் வருஷம் மேமீ 23உ அவருடைய கிரந்தத்தின் அச்சுப்பிரதி ஒன்று அவரிடம் கொண்டு வரப்பட்டது. அவர் அதைக் கண்ணுல் பார்க்கவும் கையால் தொட்டு பார்க்கமட்டுமே சக்தியுள்ளவராயிருந்தனர். அதற்குப் பின், சிறிது நேரங் கழித்து இவ்வுலக வாழ்க்கையை துறந்து விட்டனரென்றும் தெரியவருகிறது. தன் வாழ்நாள் முழுதும் செலவிட்ட பிரான்பெர்கிலுள்ள தேவாலயத்தைச் சுற்றியுள்ள விடத்திலேயே அவருடைய தேகம் அடக்கம் செய்யப்பட்டது.

N. S. மணியம், பி. ஏ.

ஸ்வேச்சை.—நாம் நமது நடக்கையிலும், அபிப்பிராயங்களிலும் கூடியமட்டும் எப்பொழுதும் ஸ்வயமாய் நடக்கவேண்டும். நாமே ஒரு விஷயத்தை ஆலோசித்துப்பார்த்து அதன்மேல் நமது புத்திக்கு எது நியாயம் என்று தோன்றுகிறதோ, அவ்வாறு நடக்க வேண்டும். நமது நாட்டின் குடியரசாட்சிச் சபைகள் பலவற்றுள் ஒரு அதிகாரி தன்னபிப்பிராயம் இது என்ருல் மற்ற சபையார்களும் எங்கள் அபிப்பிராயமும் இதுதான் என்று சொல்லுவதுபோல் மற்ரெருவன் கூத்தாடச் சொல்லுகின்றபடி நாம் கூத்தாடினுல் நமக்கும் குரங்குக்கும் வித்தியாசமில்லாமற் போம். இவ்வாறு மனிதத் தன்மையை நாம் குரங்காகப் பண்ணிக்கொள்வானேன்? நாம் ஒரு புருஷன்; நமக்குச் சில அதிகாரங்கள் உள. நாமே நன்ருக ஒரு விஷயத்தை யோசித்து அது சரியாக நமக்குத் தோன்றிவிட்டால் அது மற்றவர்களுக்கு ஒவ்வாததாக விருந்தபோதிலும் நாம் அதனைத் தைரியமாக வெளியிட நமக்கு என்ன ஆக்ஷேபனை. ஆகையால் நாம் அவ்வாறு காட்டவேண்டும். இவ்வாறு சொல்லப்படும் புத்திமதியைத் தப்பாக அர்த்தம்பண்ணிக்கொண்டு சிலர்லோகவிருத்தமான காரியத்தில்புகுவார்கள். அவ்வண்ணம் நடப்பது எல்லாருடைய பழிப்புக்கும் பரிகாசத்துக்கும் காரணமாகும். ஸ்வேச்சை என்பது நமது படிப்புக்கும், ஞானத்திற்கும், ஒருவிஷயத்தை எடுத்து முடிக்கும் திறமைக்கும் தக்கபடி யிருக்கின்றது. அவ்வாறு அதை நாம் அறிந்துகொண்டு அதனுல் உண்டாகும் நன்மையையும் லாபத்தையும் பெறவேண்டும்.

வழக்கம் வழக்கம் என்று சொல்லிக் கொண்டு நாம் தப்பான காரியங்களை ஒருபொழுதும் செய்யக்கூடாது. வழக்கமாயிருந்தா லென்ன? தப்பானதாக விருந்தால் நாம் அதை வழக்கம் என்று அங்கீகரியாமல் பிசகு என்று ஆக்ஷேபித்துத் தள்ள வேண்டும்.

சூரிய சக்தி இயந்திரம்

THE SUN MOTOR

உலகத்தில், வரவர மனிதர்களும் புத்திசாலியாகிருர்கள். மனிதர்களுடைய யுக்தி அதிகரிக்கவே, அநேகவிதமான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இவற்றுள் சில, தந்தி, நீராவி இயந்திரம் இவற்றைப்போல மனிதருடைய க்ஷேமத்தைத் தேடி உதவிபுரியக் கூடியவை. இன்னும் சில, மனிதரை எவ்வித வழியால் கொல்லலாம் என்று 'டார்பீடோ போல்' வழியைத் தேடுகின்றன. இப்படி அவர்களுடைய நன்மையைத் தேடி, அவர்களுக்கு தேக உழைப்பைக் குறைத்து, அவருக்கு உதவி புரியும் வழிகளில் புதிதாகக் கண்டுபிடித்த தற்கால இயந்திரம் (Sun Motor) சூரிய சக்தி இயந்திரம் என்பது. உலகத்தில் ஜனங்களின் சந்தோஷத்திற்குக் காரணம் சூரியனே. அவன் இராவிட்டால் உலகம் குளிரினுல் உறைந்து, புல் பூண்டு ஜீவப்பிராணிகள் முதலியவை நசித்துப் போய்விடும். இவ்வண்ணம் மனிதருடைய க்ஷேமத்திற்கு முதற்காரணமாயிருக்கிறபடியால் சூரியனை நாம் தெய்வமாகக் கொண்டாடி, தினந்தோறும் அவர் பெருமையைப் புகழ்ந்து 'மித்ரஸ்ய சருஷணீ திருத:' என்ற ஸ்தோத்திரத்தைச் சொல்லுகிறோம்.

தற்காலத்தில் கண்டுபிடித்திருக்கும் இயந்திர சக்திகள் பலவற்றிற்கும் மூலகாரணம் சூரியனே. எல்லாவித இயந்திரங்களும் நிலக்கரியைக் கொண்டே ஓட்டவேண்டியிருக்கின்றன. நிலக்கரியாவது என்ன? சூரியனுடைய பிரகாசத்தால் லக்ஷக்கணக்கான வருஷங்களுக்கு முன் உலகத்தில் செடிகளும் விருக்ஷங்களும் உண்டாயின. பிறகு அவைகள் மடிந்து பிரளயத்தில் அமிழ்ந்து பூமியிற் பதிந்து பூமியின் உஷ்ணத்தினுல் கருகி நிலக்கரியாயிற்று. ஆகையால் நிலக்கரியை உபயோகிக்கும்பொழுதெல்லாம் லக்ஷக்கணக்கான வருஷங்களுக்குமுன் உண்டாகிய சூரிய வெளிச்சத்தை உபயோகிக்கிறோம். ஆகையால் நிலக்கரி பெட்டியில் அடைத்து வைத்திருக்கப் பட்ட பழைய சூரிய ஜோதியல்லவா? அவ்விதமே, நீர் வீழ்ச்சியைக்கொண்டு மின்சாரம் உண்டுபண்ணி அதைக்கொண்டு இயந்திரங்களை ஓட்டுவதையும் 'ட்ராம்' வண்டிகளை இழுக்கச்

செய்வதையும் நாம் பார்க்கிறோம். இதற்கு முக்கிய காரணம் சூரியனே. ஏனென்றால் சூரிய வெப்பத்தால் சமுத்திரத்திலுள்ள ஜலமெல்லாம் நீராவியாகி மலைகளில் காற்றில் அடிக்கப்பெற்று மழையாகப் பொழிந்தால்தானே 'நயாக்ரா' 'காவேரியில், சிவ சமுத்திரம்' முதலிய நீர் வீழ்ச்சிகளைப் பூட்டிப்போட்டு மின்சாரம் உண்டுபண்ணியிருப்பதுபோல் செய்ய முடியும்? காற்றினால் சிலவிடங்களில் இயந்திரங்கள் செலுத்தப்படுவதைப் பார்க்கிறோம். சூரிய வெப்பத்தால் ஆகாயத்தில் சீதோஷ்ண மாறுதல் உண்டாகிற படியால்தான் காற்று, வேகமாய் அடித்து, நமது காற்றாடி இயந்திரத்தை ஓடச்செய்கின்றது. ஆகையால் பல விதத்தில் யோசிக்குமிடத்து எல்லாவித இயந்திர, சக்திகளுக்கும் மூலசக்தி சூரியன் என்றே அறிகிறோம்.. ஆனால் இதுவரையில் அவனுடைய சக்தியை நாம் நேரே உபயோகிக்காமல் அவன் செயலால் உண்டாகும் நிலக்கரி, விறகு, காற்று, நீர் வீழ்ச்சி முதலியவைகளைக் கொண்டே உபயோகிக்கிறோம்.

தற்காலத்தில் சாஸ்திரிகள் இவ்விதம் சூரிய சக்தியை நேரில் நமது வேலைகளுக்கு உபயோகிக்க வேண்டுமென்று பிரயத்தனம் செய்து கடைசியாக அதில் திருப்திகரமான முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட இயந்திரத்திற்கு சூரிய சக்தி இயந்திரம் என்று பெயர். இதைக்கண்டுபிடித்த ஸ்வீடன் தேசத்து ஜான் எரிக்ஸன் (John Ericson) என்பவர் அநேக வருஷகாலமாக நிமிஷந்தோறும் சூரிய வெளிச்சம் விருதாவாகப் போகிறதேயென்று பரிதபித்து அவ்விதம் வீணாகப் போகும் சூரிய வெளிச்சத்தை உபயோகிக்க ஒருவழி கண்டுபிடிக்க, 15 வருஷகாலமாக 150,000 பவுன் செலவிட்டு உழைத்து கடைசியாக இவ் யந்திரத்தைக் கண்டு பிடித்தார்.

இதன் அம்சங்கள் என்னவென்றால், விறகு, நிலக்கரி முதலியவற்றைப் போட்டு கொப்பரைத் தண்ணீரைக் காய்ச்சி நீராவி இயந்திரமோட்டுவதைப்போல, நிலக்கரி,, விறகுக்குப் பதில் சூரிய வெளிச்சத்தைக் கண்ணாடிகளை வைத்து மடக்கி ஒரே இடத்தில் பிரகாசிக்கச் செய்து, அந்த உஷ்ணத்தினால் கொப்பரைத் தண்ணீரைக் காய்ச்சி நீராவி இயந்திரங்களை ஓட்டுவதேயாம். பூதக்கண்ணாடியை வெயிலில் பிடித்து அதனால் உண்டாகும் பிரகாசத்தினாலும் உஷ்ணத்தினாலும் நெருப்புண்டாவதைப் பார்த்திருக்கலாம். இவ்விதம் பல கண்ணாடிகளைக் கொண்டு சூரிய வெளிச்சத்தை ஒரே இடத்தில் கூடும்படி மடக்கித் திருப்பி அதனால் உண்டாகும் உஷ்ணத்தை நெருப்புக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள்.

இவ்யந்திரத்திற்குசாதாரணமாக ஒருபெரிய குழிவானதட்டுபோல் பல சிறு பளப்பளப்பான கண்ணாடிகளை, அவைகளால் திருப்பப்படும் பிரகாசம் ஒரே இடத்தில் விழும்படி அடுக்கி இருக்கிறார்கள். இவைகளால் உண்டாகும் வெளிச்சம் கண்ணைக்கூசம்படி செய்கின்றது. சுமார் 33அடி அகலமும் 100 அடி சுற்றளவுமுள்ள குழிந்த வட்டமான இடத்தில் சுமார் 1800சிறு கண்ணாடிகளால் சூரிய வெளிச்சம் திருப்பப்படுகின்றது. சாதாரணமாக குழந்தைகள், கண்ணாடியை வெயிலில் பிடித்து விளையாடுவது போன்றதேயாம். இவ்விதம்பிரகாசமான இடத்தில் ஒருகொப்பரைத் தண்ணீரைவைத்து நீராவியாக்கி, அதைக்கொண்டு இயந்திரங்களை செலுத்துகிறார்கள். இந்த பெரியகண்ணாடித் தட்டின் நிறை 4 டன்கள். இதை கெட்டியான எஃகு முளைகளில் தூக்கப்பட்டிருக்கிறது. இக்கண்ணாடிகள் சூரியனுடைய திக்கைநோக்கி அப்போதைக் கப்போது திருப்பக்கூடியவையாயிருக்கின்றன. இதனால் இறைக்கப்பட்ட தண்ணீர், வாய்க்கால்களில் ஓடுகின்றது. இவ்வித இயந்திரங்களிலிருந்து உண்டாகும் சக்தி 10குதிரைபலமென்றும் அந்த தட்டைப் பெரிதாக்கினால் சக்தி அதிகமாகும் என்றும் சொல்லுகிறார்கள். குளிர்ந்த தண்ணீரில் 150 ராத்தல் ஒரு மணியில் நீராவியாக்கக்கூடுமாம் காற்றில் அடித்துக் கொண்டுபோகாதபடி இயந்திரத்தைப்புதைத்துத் தூக்கியிருக்கிறார்கள். இதற்கு அதிக ஆட்கள் வேண்டியதில்லை. கொப்பரைக்குத் தண்ணீரும் இயந்திரத்துக்கு எண்ணெய் போடுவதும் தானாகவே யாகிறது. ஆகையால் சூரியன் புறப்பட்டவுடனே கண்ணாடிகளைத் திருப்பி, கொப்பரையில் வெளிச்சத்தை மடக்கினதும் பிறகு ஒருகவலையுமின்றி இயந்திரம் தானாகவே ஓடித் தண்ணீரை இறைக்கின்றது.

உபயோகம்:—

உலகத்தில் நிலக்கரி, விறகு முதலியவை

கிடைக்குந்தேசமே கைத்தொழிலில் விருத்தியாகிறது. ஆனால் இவ்வித நிலக்கரி சுரங்கங்கள் சீக்கிரம் அற்றுப்போகுமே என்று பயமுண்டாயிருக்கிறது. அவற்றின் உபயோகம் நாளுக்குநாள் அதிகமாக அவை இல்லாமல் போய்விட்டால் என்ன செய்கிறதென்று பயம் அதிகரிக்கின்றது. இனி அவ்வித நிலக்கரியில்லாமல் இயந்திரங்கள் ஓட ஒருவழி உண்டாகிறது. வெகுநாளாக ஜனங்கள் அதிக உஷ்ணமாக வெயில் இறைக்குந் தேசமாகிய எகிப்து, ஸஹாரா, காலிபோர்னியா முதலிய இடங்களில், ஏராளமான நிலங்களைப் பயிரிடவேண்டிய தண்ணீர் இல்லாமல் தவிக்கிறார்கள். அவ்வித இடங்களில் இவ்யந்திரங்களை வைத்து தண்ணீர் இறைத்தால் இனி பாலைவனமெல்லாம் செழிக்க அநுகூலமாகும். அவ்விடங்களில் தற்காலத்தில் விறகு, நிலக்கரி முதலியவை அகப்படுவதில்லை யாதலால், இனி அவற்றின் உதவியில்லாமல் தண்ணீர் இறைத்து நிலங்களை செழிக்கச் செய்யலாம். மேலும் இவ்யந்திரம் குளிர்காலத்திலும் வெயிற்காலத்திலும் வித்தியாசமில்லாமல் மப்பு, மந்தாரமில்லாமல் வெயில் அடிக்கும்வேளையில் ஓடக்கூடும். யாதொரு செலவுமில்லாமல் பாலைவனங்களைச் செழிக்கச் செய்யும் சக்தியுள்ள இயந்திரம் எவ்வளவு உபயோகம்! எவ்வளவு தேசத்துக்கு க்ஷேமத்தைக் கோரும் அநுகூலன்! இவற்றிற்குச் செலவும், அதிகமில்லை. 10 குதிரை பலமுள்ள இயந்திரத்துக்கு சுமார் 10,000 ரூபாய் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். தற்காலத்தில் முதல் முதல் எகிப்தில் வைத்து தண்ணீர் இறைத்து வருகிறதாகத் தெரிகிறது. ஆனால் கொப்பரை துத்தநாகத்தால் வைத்திருந்ததாகவும், அதிக உஷ்ணத்தால் அது உருகிப்போனபடியால் இனி கொப்பரை இரும்பினால் செய்யப்போகிறார்களென்றும் தெரிகின்றது. இவ்விதம் இவ்யந்திரங்கள் கொஞ்சகாலத்தில் மலிந்து போகுமென்பதற்குத் தடையில்லை. அவ்விதம் ஆகும்பக்ஷத்தில் இந்தியாவில் பாழாகக்கிடக்கும் எத்தனை ஆயிரம் ஏகர் நிலங்கள் செழிக்கும்! இவ்விதம் லோகோபகாரமாக இயந்திரங்களைக் கண்டுபிடிக்க உழைப்பவர்கள் உலகத்தாரால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

எஸ். பஞ்சாபிகேச சர்மா, பி.ஏ., எல்.டி.

நமது விரதங்களிற் சிலவற்றின் உட்கருத்து

OUR OBSERVANCES: THEIR IMPORT

இந்துக்களாகிய நாம் நோற்கும் நோன்புகளெல்லாம், தெய்வப்பிரீதிக்காகவும் ஆத்மலாபத்துக்காகவுமென்று நம்புகிறோம். இந்நம்பிக்கையில் ஒருவாறு உண்மையிருப்பினும் நமது நோன்புகளெல்லாம் பெரும்பாலும் நமது ஆயுள் ஆரோக்கியத்தை விருத்திசெய்வதற்காகவும் இகலோகசாதனங்களை யநுபவிக்க வுதவும்பொருட்டு மேற்பட்டுள வென்பதை நம்மில் வெகு சிலரே யறிந்திருக்கிறார்கள். நமது நித்திய நைமித்திய கருமங்களை தர்மசாஸ்திரங்களில் வரையறுத்து அவற்றினின்றும் வழுவின் நமக்கு எரிவாய் நரகே கதியென்று நம் முன்னோர்கள் பயமுண்டாக்கியிருத்தலின் நாம் செய்வதெல்லாம் கடவுளைச் சந்தோஷிப்பதற்கும் நரகத்தினின்றுந் தப்புவதற்குமென்று கருதுகிறோம். சாஸ்திரங்களை நமக்குத் தந்தவர்கள், ஜனாபிமானத்தாலும் தேசாபிமானத்தாலும் விதிகளைத் தக்க நியாயத்துடன் ஏற்படுத்தியுள்ளாரென்பதை நாம் எண்ணுவதில்லை. ஆகலின் நாம் விரதங்களின் உண்மைப்பொருளை யறியாமல் அவற்றைச் சாரமற்ற விதமாய்ச் செய்கிறோம். எப்படியெனின், ஒவ்வொரு குடும்பமும் வீண்பொழுதுபோக்காமல் வருஷமுழுதும் முயற்சி செய்து உபயோகமான தொழில்களைப் புரிந்து வரவேண்டுமென்பது நம் பூர்வீகர்களின் ஏற்பாடு. அதன்படியே ஒவ்வொரு குடும்பத்தாரும் தமது வருஷாந்தர முயற்சியின் பலனைப் பலருமறிந்து அவர்களுந் தங்கள் காலத்தைச் சரிவரக்கழிக்கத் தூண்டுகோலாக வேண்டுமென்று சில குறித்த தினங்களிற் றங்கள் தொழிற் பொருள்களைக் காட்சிப்படுத்திவந்தார்கள். பண்டை நாட்களில் நமது கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் நெசவுநெய்யத், தறிகளிருந்தன. இப்பொழுதும் மஹாராஷ்டிர தேசத்தில் அந்தணர் முதல் அடி வகுப்பினர் வரையிலுமுள்ள பல ஜாதியார் வீட்டிலும், ஸ்திரீகளும் பிள்ளைகளுங்கூட வஸ்திரங்கள் நெய்து வருவது ஸகஜமே. அப்படி ஒவ்வொரு வருஷத்துக்கும் வேண்டிய துணிமணிகளை ஒவ்

வொரு குடும்பத்தாரும் தாமே நெய்து கொள்வது தமிழ் நாடுகளிலும் வழக்கமாயிருந்தது. அப்படி உழைத்துண்டாக்கி புத்துடையகளைத் தீபாவளியன்று தமது உற்றார் நட்டாருடன் உடுத்து தமது அண்டை அயலாரும் பொதுவாய்க் கிராமத்துள்ளாரும் உணரும்படி வெளிப்படுதல் இயல்பாயிருந்தது. இக்காலத்திலோ தீபாவளி யன்று புத்துடை தரித்துக் கொள்ளவேண்டு மென்பது அவசியமாய்த் தோன்றுகிறதேயன்றி, அவ்வுடை தம்மாற் செய்யப்பட்டவையாயிருக்க வேண்டுமென்கிற உறுதிப்பாடு அற்றுப்போயிற்று. இதர தேசங்களில் செய்யப்பட்ட வஸ்திரங்களை மனங் கோணாமல் வாங்கி வெட்கமின்றித்தரித்து வெளிப்படுகிறோம். நமது வீட்டிற்றோன்றிய துணியைத் தரிக்க வியலாவிடினும் நமது நாட்டிற் செய்த உடையையேனும் அபிமானிக்கலாமல்லவா? இவ்விதமே நவராத்திரி காலத்தில் ஒவ்வொரு வீட்டு மாதரும், தாம் அவ்வருடத்திற் புதுப்பித்த சித்திர வேலைகளையும், தீட்டிய படங்களையும் ஏனையோர் கண்டுகளித்துங் கற்றும் போகும்படி வெளிப்படுத்த வேண்டுமென்றிருக்க, நாமிப்பொழுது சீனவிலும், ஜர்மனியிலுஞ் செய்த சூத்திரப்பாவைகளையும் படங்களையும் வாங்கி வைக்கிறோம். ஸ்திரீகளினிட்டிற்றிறனைத் தெரிவிக்கவே போலும் போகி, கனுமுதலிய விசேட தினங்களில் பலவித உண்டிகளையும், வற்றல், பொரியல்களையும் பக்குவமாய்ப் பாகஞ்செய்து பலருமறிய ஆறு குளங்களிற் பகுத்துண்ணுகிறார்கள். நமது பெண்கள் பணியாரவகைகள் செய்யுந் திறமையையும், கோலங்களிடுஞ் சாமர்த்தியத்தையும், விடுசிங்காரிக்கு மழகையும் இனிய குரலெடுத்துப்பாடும் வித்தையையும் வீணை குழல்முதலிய சங்கீதக்கருவிகளிற்பயிலும் விநோதத்தைத் தெரிவிக்க போலும் சிலநோன்பு தினங்களேற்பட்டுள.

ஆயுள் ஆரோக்கியத்தைக்கருதி நாம்செய்யும் நோன்புகளிற் சில ஏகாதசி, சாந்திராயனம் முதலிய விருதங்களும், தனுர்மாதம், ஸ்ரீராம நவமி முதலிய பூஜைகளும், மாதத்தில் இரு தினத்திலேனுஞ் சுத்தப்பட்டினியாயிருத்தல் தேக்செளக்கியத்துடன் வாழ்வதற்கேதுவென்றும், சாந்திராயனவிரதம்போல்போஜனத்தைக் கொஞ்சங்கொஞ்சமாகச் சிலகாலங்களில் குறைத்து உண்டுவருவது அநேகவியாதிகளுக்குப் பரிகாரமென்றும், மேனாட்டார் நூதனமாயறிந்து வெளியிட்டுள்ளார். மார்கழிமாதத்தில் இந்தியாவில் பனியதிகம். அம்மாதத்திற்றான் வியாதிகள் பெருகி மனிதரைத் துன்புறுத்துகின்றன. இதனாலேயே அம்மாதத்தை, நம்மவர் பீடமாதமென்றுஞ் சூனியமாதமென்றுங்கூறுவதுண்டு. வியாதிகளினின்றுந் தப்ப மனிதர்கள் தாங்கள் உட்கொள்ளும்பொருள்களில் வெகுஜாக்கிரதையாயிருக்க வேண்டும். வயிற்றில் ஆகாரமின்றி வெளிப்படக்கூடாது. சோம்பலைத்தவிர்க்கவேண்டும். இவற்றை விளக்கவே போலும் நாம் மார்கழிமாதத்தில் அதிகாலையிலெழுந்து ஸ்நானாதிகளைச்செய்து அப்பொழுது வட்டித்த பொங்கலைக் கடவுளுக்கு நைவேத்தியஞ்செய்து நாமு மருந்திப் பின்பு பஜனைசெய்து வெளிப்படுகிறோம். அப்படியே வேனிற்காலத்தில் நேரிடும் ஸ்ரீராமநவமியில் நாம் நீர்மோர், பானகம், பழங்கள், வெள்ளிரிக்காய் முதலிய கோடைகாலத்தில் தேகத்துக்கிதஞ்செய்யக்கூடிய உண்டிகளைக் கொள்ளுகிறோம்.

இகலோக, சாதனங்களையனுபவிக்க நாம் மனக்குறைவின்றி வசித்துவரவேண்டுவ தவசியம். மனக்குறையிருப்பின் எச்சுகமுஞ் சுகமாகக் காணப்படமாட்டாது. இதையெண்ணியே துக்கத்தைத் தோழனிடஞ் சொன்னால் பாதி துக்கந் தொலைந்தது போலாகும் என்பார். நமது வாழ்நாள்களில் நாமறிந்தும் அறியாமலும் பல பாபகர்மங்களைச் செய்து வருகிறோம். அப்பாபங்களை நாம் எண்ணும்பொழுது நம் மனத்துக்கு சாந்தம் உண்டாவதில்லை. பின்பும் மனக்குறை இருந்துகொண்டே வருகிறது. சிராவணமாதத்தில்வரும்உபாகர்மதினத்தன்று அந்தண ரொவ்வொருவரும் அவ்வருஷம் செய்துள்ள பாபகர்மங்களைப் பலரறியப்புகன்று பிறகேனும் நன்னடைக்கையுடன் வாழ்ந்து வருவதாக உறுதிப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இப்படிப் பலர்முன், தம் பாபத்தைச் சொல்லிக் கொள்வதினால் மனவேக்கம் நீங்கி இகசாதனங்களை யனுபவிக்கத் தக்கவராகிறார்கள். ஆனால் தற்காலத்திலோ சிராவணத்தின் கருத்தையறியாமல் கண்மூடித்தனமாய் அனுசரித்து வருகிறோம்.

மாரிகாலங்களில் நாம் அதிகமாக வெளியே நடமாடி உழைக்க வியலாதாகையாலும் வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து சோம்பலாயிருப்பின் பல தீவினைகளைச் செய்ய புத்தி தோன்றுமாதலாலும், நம்முன்னோர்கள், பக்தி சிரத்தையதிகமாகச் செலுத்தவேண்டிய பல நோன்புகளை மாரிகாலங்களி லேற்படுத்தியும், வேனிற் காலங்களில் நாம் ஆடியோடி வேலை செய்வதால் நமக்கு உற்சாகத்தைத் தரும் பொருட்டு உற்சவாதிகளையும், கலியாண தினங்களையும், கொண்டாடும் பண்டிகைகளையும் ஏற்படுத்தியும் உள்ளார்.

ஆகையால்நாம்நம்முன்னோரேற்படுத்தியுள்ள நோன்புகளைப் பிறழாமல் காக்கையில், அவற்றின் உட்கருத்தையும் நாம் நன்குணர வேண்டும். அப்படிச் செய்வதே சிலாக்கியம். இல்லாவிடில் காயத்ரீஜபம் முடிய இன்னும் இரண்டே துணுக்குத் தானிருக்கிறதென்ற பிராமணன் கதையாக சாரத்தைத்தள்ளி சக்கையை மாத்திரம் கிரகித்தவராவோம்.

வி. சுப்பிரமணிய அய்யர், பி.ஏ.

அவசரம்.—புத்தியுள்ளவன் பதவிசாயிருப்பானேயல்லாமல் அவசரப்படவே மாட்டான். ஏனெனில், அவசரப்படும் காரியம் எப்பொழுதும் அரைக்காரியம். அவன் ஒரு காரியத்தைச் சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று கருதுவான்? ஆனால் சீக்கிரம் என்றதால் அந்தக் காரியம் கெட்டாலும் அவசரமாய் முடியட்டும் என்று எண்ணமாட்டான். அற்பபுத்திகள் தாங்கள் தொட்டுக் கொள்ளும் காரியம் பெரியதாயிருக்கும் பக்ஷத்தில் அதிகமாய் அவசரப்பட்டுக் கொத்துங் குறையுமாய் முடிப்பது வழக்கம். காரியத்தில் தலையிட்டுக் கொண்ட பிறகு அற்பபுத்திகள் அங்குமிங்கும் ஓடுவார்கள்; செய்யவேண்டியது இன்னதென்று ஒரு நிச்சயமில்லாமல் கையைப் பிசைந்துகொண்டு, மாட்டை ஆட்டில் போட்டு ஆட்டைமாட்டில்போட்டு எப்படியோ கோணக்கோண கோவிந்தாவென்று ஒருவாறு முடிப்பார்கள். எல்லா வேலைகளையும் ஒரு தடவையில் முடிக்க முயன்று ஒன்றைக்கூட சரியாய் நிறைவேற்றாமல் போவார்கள். புத்தியுள்ளவனோ தான் தொட்ட காரியத்தை அமரிக்கையாய்ச் செய்து நன்றாய் முடிப்பான். தொட்ட காரியத்திலேயே இடை விடாமல் கண்ணாயிருப்பான். அந்தக் காரியத்தை முடித்த பிறகே மற்றொன்றைத் தொட்டுக்கொள்வான்.

தற்காலம் உபயோகத்திலிருக்கும் விவசாயக்கருவிகளை அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியம்

THE NEED FOR IMPROVING AGRICULTURAL IMPLEMENTS

சென்னை இராஜதானியில் இருக்கும் குடியானவர்கள் தற்காலம் தாங்கள் உபயோகித்து வரும் விவசாயக் கருவிகளைவிட சிரேஷ்டமானவைகளை உபயோகத்துக்கு கொண்டுவரவேண்டியகாலம் நெருங்கிவிட்டது. சென்ற விலைவாசிகள் அதிகரித்ததனால், தனது பூமியில் கிடைக்கும் மகசூலிலிருந்து ஒரு குடியானவனுக்கு லாபம் கிடைத்தபோதிலும் சாகுபடி செலவும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சென்ற ஐந்து வருஷங்களுக்குள் நல்ல வண்டி அல்லது உழவு மாடுகளின் விலை அநேகவிடங்களில் இரட்டித்து விட்டது. சாதாரண கால்நடைகளின் விலையும் அதிகரித்து வருகிறது. மாட்டு தீவனத்தின் விலையும் ஜாஸ்தியாய் வருகிறது. வேலையாட்களோ அகப்படுவது கஷ்டம். வேலையாட்களின் கூலியும் ஜாஸ்தியாகி வருகிறது. இன்னும் அதிகப்படும் என்பதில் யாதொரு சந்தேகமில்லை. ஒரு ஆளும், ஒரு ஜதை எருதுகளும் செய்யும் வேலையின் அளவு முன்போலவே யிருந்தாலும் அந்த வேலைக்கு முன்போலல்லாமல் தற்காலத்தில் செலவாகும் தொகை அதிகமே. சில விடங்களில் கூலியாட்கள் தங்களுக்கு சாகுபடி வேலையில் போதுமான கூலி கிடைப்பதில்லையென்று பட்டணங்களுக்குப் போகிறார்கள்: அல்லது ஜாஸ்தி கூலி கிடைக்கக்கூடிய தொழில்களில் பிரவேசிக்கிறார்கள். சிலவிடங்களில் சாகுபடி வேலைக்கு கூலியாட்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இன்னும் சில விடங்களில் கூலியாட்கள் கிடைத்தாலும், அதிக கூலி கொடுக்கவேண்டி யிருக்கிறது. இவைகளை உத்தேசித்து கூலியாட்களைக் குறைத்து சிரேஷ்டமான வேலையைச் செய்யக்கூடிய விதத்தைத் தேடவேண்டியது அவசியம். இச்சென்னை இராஜதானியில், இதர விடங்களைக்காட்டிலும் பல்லாரி, கடப்பை முதலிய தெலுங்கு ஜில்லாக்களில் குடிபரப்பு குறைவு. இவ்விடங்களில் குறைந்த கூலியாட்களைக் கொண்டு சிரேஷ்டமான சாகுபடிவேலை செய்

யப்படுகிறது. இந்த ஜில்லாக்களில் கரிசல் நிலத்தில் வேலைசெய்ய, கடினமான வேலை செய்யக்கூடிய எருதுகள் வேண்டியிருப்பதால், எருதுகளின் விலை அதிகம். தவிரவும் இந்த ஜில்லாக்களில் காலமழையும் குறைவு. ஆனதால் பெய்த மழையைக்கொண்டுவிதைப்புக்காலத்தில்அதிக நிலம் விதைக்கக்கூடிய விவசாயக் கருவிகள் அவசியமாயிருக்கிறது. ஆகைபால் இந்த ஜில்லாக்களில் எருதுகளைக்கொண்டு களைவெட்டக்கூடிய கருவிகள், விதைக்கலப்பைகள், மற்றும் எருதுகளைக்கொண்டு பயிர் உழவு முதலிய வேலைகள் செய்யக்கூடியகருவிகளாகிய சிரேஷ்டமான இந்திய நாட்டு விவசாயக் கருவிகளைப் பார்க்கிறோம். நாட்டுக் கலப்பையைக்கொண்டு கைவிதைப்பு நடத்திவரும் ஜில்லாக்களில் மூன்று ஜதை எருதுகளும் மூன்றுகூலியாட்களும் ஒரு நாளில் செய்யக்கூடிய வேலையை, மேற்கூறிய தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு ஜதை எருதுகளைக்கொண்டு அதேகாலத்தில் ஒரு ஆள் செய்துவிடுவான். ஐரோப்பா தேசத்து குடியானவர்கள் குடியேறி காடு வனங்களையழித்து சாகுபடி செய்யும் அந்நிய தேசங்களில் பூமியை சாகுபடிசெய்ய கூலியாட்கள் கிடைப்பது அருமையாயும் கூலியாட்களுக்கு அதிக கூலி கொடுக்கவேண்டியிருப்பதாலும் விநோதமாய் ஏற்படுத்தப்பட்ட விவசாயக் கருவிகளைக்கொண்டு அதிக வேலைகள் செய்யப்படுகின்றன. சாகுபடி வேலை முழுவதும் நீராவியந்திரங்களைக்கொண்டு நடத்தப்படுவதாய் கேள்விப்படுகிறோம்: உழவு, பயிர் உழவு, விதைப்பு, இழுவல் முதலிய எல்லா வேலைகளும், ஒரே காலத்தில் நடத்தப்படுகிறது. ஒரு மகசூலை அறுவிடை செய்து, அடித்து, தூற்றி, மூட்டைக்குள் தானியத்தை ஒரே காலத்தில் போடும்படியான யந்திரங்கள் இருக்கின்றன. புதிதாய் சாகுபடிக்குக் கொண்டுவரப்படும் சிரேஷ்டமான பூமியிருக்கும் தேசங்களுக்கு மாத்திரமே சொல்ப கூலியாட்களைக்கொண்டு வேலை செய்யக்கூடிய விலையுயர்ந்த கருவிகள் லாயக்கானது. இந்தியாவிலிருக்கும் குடியானவர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள பூமியின் விஸ்தீர்ணம் சொல்பம். ஆகையால் ஆயிரக்கணக்கான பூமியை சாகுபடிசெய்ய லாயக்கான விலையுயர்ந்ததும் வேலைப்பாடுமுள்ள விவசாய யந்திரங்கள் இந்திய குடியானவர்களுக்கு வேண்டியதில்லை. அப்படி அவ்வியந்திரங்களை வைத்து சாகுபடி செய்தால் லாபம்கிடைக்காது. ஆனால் இந்திய குடியானவர்களுக்கு லாயக்கான அனேக விவசாயக் கருவிகள் இருக்கின்றன. இவைகளை உபயோகிப்பதால் அதிகலாபம் கிடைக்கும். ரூபாய் 200 அல்லது 300 பெறுயான ஒரு ஜதை எருதுகளையுடைய ஒரு இந்திய குடியானவன் கூலியாளாவது காலமாவது குறைக்காததும் அல்லது ஜாஸ்தி வேலை செய்யக்கூடாததுமான விவசாயக் கருவிகளை வைத்துக்கொண்டு திருப்தியடைவதைப்பார்க்க, அன்னியநாட்டு விவசாயத்தில் பழக்கமுள்ள ஒருவனுக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஏனெனில் கொஞ்சம் செலவு அதிகம் செய்தால் குறைந்த கூலியாட்களைக்கொண்டு நல்ல வேலை செய்யக்கூடிய ஒரு உழவு கலப்பை கிடைக்கக்கூடியதாயிருந்தபோதிலும் இரண்டு அல்லது மூன்று ரூபாய்க்குமேல் கொஞ்சம் விலை அதிகமாயிருந்தாலும் அதை இந்திய குடியானவன் வாங்க மனம் தளர்ந்து பின்னடைகிறான். இந்திய குடியானவனுடைய ஏழ்மை நிலைமையை உத்தேசித்தும் அவன் செய்யவேண்டிய வேலையைப் பொருத்தும் இந்திய பூமிக்குத் தகுந்த அனேகவித கலப்பைகள் தற்காலம் இருக்கின்றன. கலப்பைகளே அல்லாமல் குறைந்த செலவிலும் குறைந்த கூலியாட்களைக்கொண்டும் அதிக சீக்கிரத்திலும் வேலை செய்யக்கூடிய அனேக விவசாயக் கருவிகள் உண்டு. உதாரணமாக, இரண்டாவது மூன்றாவது சால்நாட்டுக் கலப்பையைக்கொண்டு உழுவதற்குப்பதிலாக கல்டிவேடர் (Cultivator) என்று சொல்லப்படும் கருவியைக்கொண்டு வேலைசெய்தால் அதிக சீக்கிரம் மேற்கூறிய வேலைமுடியும். தவிர முள்பலுவை உபயோகிப்பதால் கைக்களை செலவு மிகக்குறையும். இவைகளைத்தவிர, அந்தந்த வேலைக்குரிய அனேக கருவிகள்உண்டு. கரும்பாட இரும்பாலைகளும், கறந்த பாலிலிருந்து ஆடை உடனே எடுக்கக்கூடிய யந்திரங்களும் இவைகள்போன்ற அனேக யந்திரங்கள் இருக்கின்றன. இந்திய குடியானவனுக்கு இது விஷயங்கள் தெரிந்து இக்கருவிகளின் அனுகூலங்களும் ஏற்பட்டு இம்மாதிரி கருவிகள் வேண்டியதெனப் பலரும் வெளிவந்தால்

அந்தந்த இடங்களுக்குத் தகுந்தபடி கருவிகளில் வேண்டிய மாறுபாடுகளும்செய்பக்கூடும். தற்காலம் செய்யப்படும் ஒரு வேலையை சீர்திருத்தம் செய்யப்பட்ட ஒரு கருவியைக் கொண்டு இப்பொழுது வேண்டியிருக்கும் ஆள்செலவிலும் கால்நடை செலவிலும் அரைவாசியில் செய்யமுடியுமேயானால் ஒரு ஜதை எருதுகளை குறைப்பதால்மட்டும் ஒவ்வொரு வருஷத்திலும் கீழ்குறித்த லாபம் அடையலாம்:—

	ஒரு வருஷத்துக்கு ரூ.
ஒரு ஜதை எருதுகளைப்பார்க்க ஒரு ஆள் சம்பளம் மாதம் ஒன்று 5 ரூ. வீதம்	60
மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3 வீதம் மாட்டுத் தீனி செலவு	36
ரூபாய் 200 பெறுமான ஒரு ஜதை எருதுகள், 10 வருஷ வேலை செய்தால் எருதுகள் வாங்காததால் பிரதி வருஷ லாபம்	20
ரூபாய் 100 க்கு 5 வட்டி வீதம் இந்த ரூபாய் 200 க்கு வட்டி லாபம்	10
ஆக ரூ.	126

வருஷம் ஒன்றுக்கு ரூ. 126 மீதிசெய்யலாம். வருஷா வருஷம் ஒருவனுக்கு ரூ. 126 லாபம் கிடைக்க 100 க்கு ரூ. 9 வீதம் ரூ. 1,400, முதல் வேண்டியது. இத்தொகையில் நாலில் ஒரு பங்கு, அதாவது ரூ. 350 க்கு ஆள் செலவையும் எருதுகளின் செலவையும் குறைத்து மேற்கண்ட லாபத்தைக் கொடுக்கக்கூடிய நல்ல விவசாயக்கருவி ஒன்று வாங்கலாம்.

கோயம்பத்தூர் விவசாயப்பண்ணையில் எல்லாவித விவசாயக் கருவிகளையும் ஒருமிக்க சேர்ப்பதாக உத்தேசம். இப்படிச் சேர்த்த பிறகு சென்னை இராஜதானியிலும் உள்ள குடியானவர்கள் தங்கள் பூமிக்கும் வேலைக்கும் தகுந்த கருவியைப் பொறுக்கி எடுத்து உபயோகிக்க சலீசாயிருக்குமென்று நம்புகிறோம்.

திராவிடக் கதைகள்

SOUTH INDIAN FOLKLORE

5. தவலைக் கதை

பழம்பாக்கம் என்பது ஒரு சிறு ஊர். அந்த ஊரில் சாவென்பதே கிடையாது; நெடுநாள் வாழ்ந்து பழம்போல் பழுத்த கிழமனிதர்கள் நிறைந்த ஊரானபடியால் அந்த ஊர்க்கு அப்படிப் பெயர் வந்தது. அபூர்வமாக அருமையான நூல்கள் காவியங்கள் வேண்டுமென்றால் எல்லாரும் இப்பவும் அங்குதான் போகிறார்கள். வெகு விசித்திரமான வஸ்துக்கள் எல்லாம் அங்குண்டு. மரங்களெல்லாம் காற்றில் உலாவிப்பாடும். பக்கத்திலிருந்த மலையிலிருந்து ஓடிவந்த நீர் ஓடை தடபுடலாக கீழேகுதித்து பக்கத்திலிருப்பவர் யார் என்று எண்ணுமல் நீரை வாரி இறைக்கும். ஊரில் வீட்டிலிருக்கும் உலைகளில் எல்லாம் சோறு குதித்துக் குதித்து கொதித்துக் கூத்தாடும். அந்த ஊர் சோற்றுத்தவலைகள் மிகவும் பேர்பெற்றன. அவை நன்றாகப் பேசும்; வருங்காரியங்களைச் சொல்லும்; வெகு அழகியவை, ஆனால் தவலைகளின் கழுத்து மாத்திரம் குறுகி அமுங்கி இருக்கும். அதில் ஜலம் விட்டால் குயிலிடமுண்டாகும் பஞ்சமஸ்வரம் அங்கு உண்டாகும். ஆனால் எல்லாரும் காற்றாவது பாடுவதாவது; நீராவது குதிப்பதாவது, ஓடுவதாவது; சோறாவது கூத்தாடுவதாவது என்றும் ஸந்தேஹப்படலாம். அது ஒருவேளை என்னவாக இருந்தாலும் தவலைபேசுவதாவது பாடுவதாவது என்றால் அப்பா! என்னால் ஒன்றும் சொல்ல முடியாது. திருவாலங்காட்டிற் கடுத்த பாக்கத்தில் ஓர் அம்மையார்க் கிழவி ஒருத்தியிருந்தாள். அவளுக்கு அதன் விஷயங்கள் நன்றாகத் தெரியும். அந்தப்பாட்டி நேராகவந்துதான் எனக்கு சொல்லியது. கிளிபோலப் பாடத்தை ஒப்பித்து விடுகிறேன். நீங்கள் தயவுசெய்து அவ்வளவு நான் சொல்லுவதில் நம்பிக்கை யில்லாவிட்டால் பாட்டியிடம் போம். சிதம்பர ரகசியத்தை முழுதும் அம்பலமாக்கி விடுவாள். எல்லாம் அந்தப் பாட்டி வியவஹாரந்தானே!

ஒருநாள் அந்தப் பாழும்பாட்டி அமுதபடியை உலையில் வைத்து பக்குவம் செய்துக் கொண்டிருந்தாள். அவள்ஓர் ஸத்திரம்வைத்து,

வந்தவர் போனவர்களுக்கு சோறுபோட்டு அவர் கொடுத்ததைக்கொண்டு ஜீவனம் செய்கிறவள். மொத்தத்தில்வெகுநல்லவள். வெளுத்ததெல்லாம் பால், கருத்ததெல்லாம் நீர் என்றே சாதிக்கக் கூடியவள். சாப்பிடவருபவர் பாட்டி பாட்டி என்று பத்தாயிரந்தாம் பரிகாசம் செய்தாலும் பல்லை இளிப்பதற்குமேல் அவளுக்குத் தெரியாது. வெகு ஸாது. முக்கா துட்டென்று ஒருகாசு கொடுத்தாலும் அதுவும் ஸரிதான் என்று எண்ணிக்கொள்வள். அவள் சிறிய பையைக் கொடுத்து யாரையாவது அரையணா எடுத்துக்கொள்ளச் சொன்னால் அவர் ஒரு ரூபாவை எடுத்துக்கொண்டு அரையணாத்தான் எடுத்துக் கொண்டேனென்றால் ஸரிதான் என்பாள். இவ்வளவு குணத்துடன்கூட பெரியவரிடம் பக்தி அதிகம். அதிலும் யாராவது ஜோசியன் வந்து 'உனக்கு தாம்பிரத்தைத் தங்கமாக்கித் தருகிறேன்; கொஞ்சம் பணம் தா' என்றால் தங்கம்போல் கைநிறைய காசு கொடுப்பாள். முன்னாலோசனை அல்லவா அது அவனைக் கொடுக்கச் செய்கிறது! பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும். அம்மையார் கிழவி ஆ! என்றால் அதிலென்ன அதிசயம். ஸ்வபாவத்தில் நல்ல குடித்தனக்காரி; வெகு செட்டு. யாராவது கால்படி அரிசி கொடுத்து 'பாட்டி சமைத்துத்தாரும்' என்றால் ஒன்றறையே ஆழாக்குத்தான் சமைப்பள். அன்னத்தை உதிர்த்து உதிர்த்துத்தான் இடுவள். இந்த காலத்தில் காப்பி ஹோட்டலில் உப்புமா கொடுக்கும் விதம் அவளுக்குத் தெரியாது. "காசு வாங்கிக்கொண்டால் அதற்குத் தகுந்தபடி சோறு போடவேண்டாமோ? நமக்கு பணந்தானா வயிறு?" என்று சொல்லுவள். கொஞ்சம் உண்மையாகவே செய்யவேண்டும் என்று எண்ணந்தான்.

தண்ணீர்ப்பந்தல் பாட்டி என்றால் எல்லோருக்கும் தெரியும். அவள் சமையல் அப்பொழுது உலகப்பிரசித்தம். கூட்டம் கூட்டமாக காலை தோசைக்காகவருவார்; பாட்டிதாலியை அன்று அறுந்தது பொய் இன்றறுந்தது மெய் என்று அறுத்து விடுவார்கள். இப்படி இருக்குநாளில் ஒருநாள் பெரியவர் ஒருவர் வந்தார். அவர் பெரிய ருத்ராக்ஷ பூனை; விபூதி பாஷாண்டி. உட்காரும் பொழுதெல்லாம் 'சிவா' என்றுக் கொண்டே உட்காருவர். எழுந்திருந்தால் 'ஹர' என்று உச்சரிப்பார். பாட்டிக்கவரிடம் பயித்தியம் பிடித்துவிட்டது. அவர் மகாஞானி என்று எண்ணம். பித்தளையைப் பொன்னாக்கும் சக்தி அவரிடமுண்டென் றவளுக்கு திட நம்பிக்கை. அவர் ஒவ்வொருநாளும் ஒரு உழக்கு அரிசிகொடுத்து சோறு வடித்துக் கொடுக்கச் சொல்வது வழக்கம். அந்தசோற்றை தன்னிடமிருந்த காற்படி தவலை ஒன்று, அதில் வடிக்கச்சொல்வது. முதல்நாள் வடிக்கும் "பாட்டி! ஒரு கை அரிசி எடுத்துவிட்டாளா! அப்படியா! அதனால் என்ன கெட்டுவிட்டது? ஐயோ! பாவம்! பெரியவள்! அவள்தான் எடுத்துக்கொண்டு ஸுகப்படட்டுமே! என்ன குடிகெட்டுப்போனது?" என்று தனது தவலையிடம் பேசினான். இதைக் கண்டதும் பாட்டிக்கும் அதிசயமுண்டாகியது. "என்ன அப்பா சொல்லுகிறாய்?" என்றாள். "என்னவோ அந்த தவலை சொல்லுகிறது. என்னமோ குடி கெட்டு விட்டதாம். அதுபோனால் போகட்டும்" என்று பதில்சொன்னான். "இந்தச்சோற்றுத் தவலையா பேசுகிறது!" என்று கிழவி ஆச்சரியப்பட்டாள். "இந்தச்சோற்றுத் தவலைதான். அதுஎன்னவென்னவோ சொல்லுமே. இது என்ன அல்பசமாசாரம். நீங்கள் ஒரு கை குறையவைத்து சமைத்துவிட்டீராம்! அதற்கு பொறுக்கமுடியா துக்கம். அதன்வாய் நிறையவில்லையாம். என்னவோ அதுகிடக்கட்டும். அதற்கென்னவேலை?" என்று வந்தவன் பதில்சொன்னான். கிழவி வாய்திறக்காது அப்புறம் போனாள்.

மறுநாள் சமைப்பதற்கு அரிசிபோடுவதன் முன் "பாழுந்தவலையே! உனக்கென்ன கொழுப்பு? நான் கொஞ்சமரிசி எடுத்துக்கொண்டால் உனக்கென்ன வயிற்றுக்கடுப்பு? இன்றைக் கதிகமாகத்தான் கொட்டிக்கொள்ளேன்" என்று உழக்குக்குமேல் அரிசிஅளந்து இட்டாள். விருந்தும் சாப்பிடவந்தான். அப்பொழுதும் அவன் "ஆ! அதிகமாகப் போட்டுவிட்டாளா? உனக்கென்ன வயிற்றுக்கடுப்பென்று கேட்டாள்? ஐயோ! பாட்டி பெரியவள்! கேட்டுக்கொண்டால் உனக்கென்ன குறை? அதிகமாக் கொட்டிக்கொள்ளென்று உழக்குக்கு மேலே இட்டாள்? உனக்கு வேணும்! வேண்டியதுதான்! சும்மாவிருந்தாலென்ன? கெட்டுப்போவையோ? நேற்றுஏன் அரிசிகுறைத்தாள்என்று சொன்னாய்? இன்றைக்கு அதிகமாக இட்டு

விட்டாள். சும்மா இரு.—" என்று நம்மவர் தவலையுடன் பேசிக்கொண்டிருந்தார். பாட்டிக்கு வயிற்றில் ஸங்கடமெடுத்து விட்டது. இது என்ன? கிணறு வெட்ட பூதம் புறப்படுகிறதே என்று பயந்தாள். தன் குட்டெல்லாம் வெளிவந்துவிடுமே யென்று நடுங்கினாள். "என்ன. அப்பா! சொல்லுகிறது?" என்று, தன்னுடைய பொக்கைவாயைத் திறந்து கேட்டாள். "என்னவோ நீர் அரிசி அதிகமாய்ப்போட்டீராம். அதன் வயிறு பிடிக்கவில்லையாம். கொதிக்கமுடியவில்லையாம். என்னுடன் அழுதால் நான் என்ன செய்யமுடியும்?" என்றுசொல்லினான். கிழவியும் அடுத்தநாள் ஆழாக்கரிசியைக்கணக்காக சமைத்தாள். தவலையும் "அப்பாடி! இன்றைக்குத்தான் வயிறாற இருந்தேன்" என்று சொன்னதாகப் பாட்டியினிடம் சொன்னான்.

வந்தவன் அம்பலவாணப் பரதேசி. ஆகாசப் பந்தலில்லாவிட்டால்அவனுக்குநிற்கநிழலில்லை. அவன் வஸ்திரமோ இந்திரன் போல ஆயிரங் கண்ணுடையது. நெஞ்சமோ சிவன் போல விஷத்தை உண்ணவில்லையானாலும் விஷமாகவே இருந்தது. சொல்லுகிற பேச்சோ அதற்கு ஸமானமே கிடையாது. இவன் வெகு யுக்திவாதன்; வம்பில் முதல் தரம். சொல்லும் வார்த்தையில் மருந்துக்குக்கூட மெய்கிடையாது. பாட்டிக்கு அரிசிக்கொடுத்ததும்சற்றுவிலகிநின்றுஅவள் என்னசெய்கிறாள் என்று பார்ப்பது வழக்கம். கிழவி செயல்களை எல்லாம் நேராகச் சொன்னால் அவளுக்குக் கோபம் வந்துவிடும்; அதுவாதவளை வழிக்குக் கொண்டுவர தவலையுடன் பேசுபவன் போல தனது மனத்தில்இருந்ததையே சொல்வன். இதைஅறியாத பாட்டி தன்னுடைய பித்தலாட்டத்தை அம்பலத்திலிழுத்து விடுமோ என்று தவலையிடம் வெகு வினயம் பயம் பக்தி இவைகளுடன் நடந்துக்கொண்டாள்.

இப்படி சிலநாள் கடந்ததும் நமது பரதேசி மாமரத்திலேறிக் கிழவிக்குத் தெரியாமல் மாங்காய் கொள்ளையடித்துக் கொண்டிருந்தான். அம்மரத்திலிருந்து அம்மையார் கிழவி வெகு ஸந்தோஷத்துடன் சேமித்துவைத்த ஐந்நூறு வராஹனை எண்ணிக்கொண்டிருப்பதைக் கண்டான். தலையசைத்து என்னமோ நிச்சயம் செய்துக்கொண்டு கொள்ளையைக்கொண்டு கீழிறங்கினான். பின் ஸ்நாந பானங்கள் ஆனதும் கிழவி தவலைச் சோற்றை வடித்தாள். அம்பலவாணர் "என்ன? அதிசயமா? நினைக்க முடியாததா? என்ன? ஐந்நூறுவராஹனா? யாரிடம்? பாட்டியிடமா? உனக்கெப்படி தெரியும்? நீபொய்சொல்லுகிறதில்லை, எனக்குத்தெரியும். ஆனாலும் உனக்கெப்படி தெரியும்? எண்ணினாளா? பாட்டியா? இன்றைக்குக் காலையா எண்ணினாள்? நீ பார்த்துக்கொண்டா இருந்தாய்?—" என்று தவலையுடன் விஸ்தாரமாய் பேசிக்கொண்டிருந்தான்.

பாட்டி பார்த்தாள்; மூக்கின்மேல் கை வைத்துக்கொண்டு சற்று தயங்கி நின்றாள். பின் இந்த தவலை யிருந்தால் தன் வீட்டில் பிறர் செய்யும் அக்கிரமங்கள் எல்லாம் தெரியும். பித்தளையைப் பொன்னாக்கும் வித்தையைச் சொல்லிக்கொடுக்கும் என்றவள் எண்ணினாள். பண்டாரத்தைப் பார்த்து "இந்த தவலையை எனக்குக் கொடுக்கக்கூடாதா" என்று கேட்டாள். "தவலையைக் கொடுப்பதா? என் என் உயிரைக் கேட்கக் கூடாதோ?" "இல்லையடா! எனக்கு வெகு உதவியாக இருக்கும். உனக்கு வேண்டியது கிடைக்கும். எனக்கு கொடேன். நீ எது கேட்டாலும் தருகிறேன்" என்று மன்றாடினாள். "உன்னால் என்ன கொடுக்க முடியும்?" என்று கேட்டான். "நீஎன்னகேட்கிறாய்?" "போனால் போகிறதுஉனக்காகவென்றால்கொடுக்கிறேன். ஆயிரம் வராஹன் தந்தால் தருவேன்" என்று முகம் சுளித்துக்கொண்டு சொன்னான். "என்னிடம், தவலையே சொல்லியதே! ஐந்நூறு வராஹன் தவிர வேறொரு காசுமில்லை. அதைத் தருகிறேன்" என்றாள் கிழவி. "போனால்போகிறது. அதை உனக்குத் தருகிறேன். கொடுப்பதற்கு முன் ஒன்று சொல்லவேண்டும். இத் தவலை கை மாறும்பொழுது மூன்றுநாள் பேசாது. ஆனால் "வலைத்தவலைத்த" என்று அம்மூன்று நாளும் ஜபித்துக்கொண்டு இருந்தால்நான்காம் நாள் ஊரிலுள்ள சமாசாரங்களை எல்லாம் சோளப் பொரி போல் பொரியும்" என்றான். கிழவியும் அவ்வாறே செய்ய ஒப்புக்கொண்டு ஐந்நூறு வராஹனை அம்பலவாணனுக்கு அளந்து அர்ப்பணஞ் செய்தாள்.

அன்றிரவே அப்பரதேசி வேறு வேஷங் கொண்டு பக்கத்திலிருந்த காட்டுமார்க்கமாகப்

போனான். ஐந்நூறு வராஹன் மூட்டையை அவன் தோளில் தாங்கிக்கொண்டே வழி கடந்தான். பலத்த காட்டு மார்க்கத்தில் வெகு வேகமாக நடந்துக்கொண்டிருந்தான். ஐயோ! பாவம்! பரதேசியாகிய பண்டாரம் புது வேஷத்துடன் தடபுடலாக வருவதைக் கண்ட காடி ஒன்று வந்தவரை இறுகத் தழுவிக் கொண்டு அவரோடு விளையாட ஆரம்பித்தது. வெகு விரைவாக அம்பலவாணர் அதன் கையை லாகவமாக பிடித்துக் கொண்டார். அதன் கையை விடுவதற்கு அவர்க்கு விருப்பமே கிடையாது. அதற்கும் விருப்பம் இல்லை. இவர்களுடைய காடாலிங்கனத்தில் தம்பிரான் தலைப்புமுடிப்பு கைத்தவறி கீழே விழுந்தது. அதன் மேல ஜாம்பவான் பிரஷ்டபாகத்திலிருந்து பிரசாதம் ஸாதித்தார். அந்த ஜாம்பவான் விருஷ்டியில் பரதேசியின் வராஹனும் கலந்து விழுந்தது.

நிற்க, அம்பலவாணப் பரதேசி படும்பாட்டைச் சொல்லவேண்டுமா? காடி கையிற் பட்டு திண்டாடும் வைபவத்தை ஏன் சொல்லவேண்டும்? மல்யுத்தம் செய்பவர்கள் போல இருவரும் கைகலந்து நின்றார்கள். இதற்குள் எதிரில் குதிரைமேல் ஒருவன் ஏறிவருவதைக் கண்டான். நமது பரதேசிக்கு மனத்தில் பளிச்சென்று ஒரு எண்ணம் தோன்றியது. உடனே காடியைப் பார்த்து "முக்கு! முக்கு!" என்று தானும் முக்கிக்கொண்டிருந்தான். எதிரில் வேட்டையாடி வந்த ராஜகுமாரன் கண்டு "ஏன் ஐயா அத்துணை நாழியாக முக்குமுக்கென்று அலறுகிறீர்" என்று கேட்டான்.

"சும்மாவா சொல்லுகிறேன்? ஐந்நூறு வராஹன் தானே விருஷ்டித்திருக்கிறது? அது ஆயிரமாக வேண்டாமா?"

"நீர் என்ன சொல்லுகிறீர்? எனக்கொன்றும் விளங்கவில்லையே."

"விளங்குமா? இந்த ஜாம்பவான் வெகு பொல்லாதவன்; முரடன். சரியான பூஜை இல்லை. வழக்கமாக ஆயிரம் வராஹன் விருஷ்டிக்கும். இன்றைக்கு முரண்டிக் கொண்டிருக்கிறான்."

"அப்படியா? அதற்காக நீ என்ன செய்கிறாய்?"

"முக்கினால் தவிர இதை விடப்போகிறேனா என்ன? ஆயிரம் வராஹன் விருஷ்டிக்காது போகுமா?" என்றுக் கொண்டு பக்கத்தில் அரசகுமாரனிருக்கும் தைரியத்தால் "முக்கு! முக்கு!!" என்றிரைச்சல் இட்டான்.

இதற்குள் அரசன்மகன் "இது அதிசயக் காடி, பொன்மலம்தரும் ஜாம்பவானிவர். இதை மெதுவாக நாம் வாங்கிக்கொண்டால் நமது பொக்கிஷத்திற்குச் குறையே கிடையாது முரண்டிக்கொண்டாலும் காசாய்த்தானே கழியும். எதிரிலேயே பார்த்துக் கொண்டிருக்கிறோம்; பொன்னாகவே விருஷ்டித்திருக்கிறது. ஆயிரமில்லாவிட்டாலும், ஐந்நூறு நிச்சயமாகக் கிடைக்கும்" என்றாலோசித்து "இவ்வளவு நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர் நான் வேண்டுமானாலும் பிடித்துக் கொள்ளுகிறேன்" என்று கேட்டான்.

"நல்ல வேடிக்கையிது! உமக்குக் கொடுத்துவிட்டு நான் தலைமேல கல்லைப்போட்டுக் கொள்வதா என்ன? போய்விட்டுவாரும் ஐயா!"

"நீர் என்ன அப்படி பேசுகிறீரே நீர் என்ன கேட்டாலும் கொடுக்கிறேன் ஐயா!—"

"அப்படி என்ன நீங்கள் கொடுக்கப்போகின்றீர். ஆயிரம்வராஹன் கொடுத்தால் உமக்காக வேண்டுமானால் கொடுக்கிறேன்."

"நான் பழம்பதி அரசன் மகன். ஐந்நூறுவராகன் தான் தருவேன்."

"போதாது! போதாது!! ஆயிரம்வராஹனும் அதற்கப்புறம் இந்த விருஷ்டியும்வேண்டும். இதற் கொப்புக்கொண்டால் இந்தாரும் இதன்கையைப் பிடித்துக் கொள்ளும்."

"அதுமுடியாது! ஐந்நூறு வராஹன் தான் தருவேன். விருஷ்டியை என்னவேணுமானாலும்செய்துக் கொள்ளும்."

"நான் வெளியிற் போவதுகூட கஷ்டமாச்சுதே! இந்த குதிரையைக்கொடுத்தால் அதற் கொப்புக் கொள்கிறேன்."

"குதிரை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளேன்"

இதற்குள் தனது விலங்கை அரசன் மகனுக்கு மாட்டினான். அரசன் மகனும் காடியின் முன் கால்களை பிடித்துக்கொண்டு "முக்கு! முக்கு!" என்று ஜபஞ்செய்யலானான். அம்பல

வாணன் தனது குட்டை ஒன்றில் அரசன் மகன் தந்த ஐந்நூறு வராஹனையும் காடியின் விருஷ்டியிற் கலந்த ஐந்நூறு வராஹனையும் எடுத்துக்கொண்டு குதிரை மேலேறினான். "நான் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். இது மூன்று நாள்வரையும் ஸரியாக சாணமிடாது. நீர் 'ரடிகரடிக' என்று மூன்று நாள் ஜபித்துக்கொண்டிருந்தால் ஸரியாய் விடும்" என்று சொல்லிக்கொண்டே வாயு வேகமாக குதிரையை ஓட்டினான்.

வருகிற வழியில் ஓர் ஓடை. அதில்வண்ணான் அரசன் வீட்டு உடைகளை எல்லாம் வெளுத்துக்கொண்டிருந்தான். அவன் வேலையாள் அன்றுதான் ஓடிவிட்டான். அப்பொழுது குதிரையை ஓர்பக்கம் விட்டு விட்டு அம்பலவாணர் அங்கு வந்துக்கொண்டிருந்தார். வந்தவனைப் பார்த்து "நீ யாரப்பா! உன் பெயரென்ன?" என்று கேட்டான் வண்ணான்.

"நான் பரதேசி. என் பெயர் போனான்"

"என் அப்பனே! போனான்! என்வீடு பக்கத்துத் தெருவிலிருக்கிறது. அங்குபோய் இந்த வெளுத்த உடைகளை எல்லாம் கொடுத்துவிட்டு புதிய உடைகளை எடுத்துவா. உனக்கு தகுந்த பிரயோஜனம் செய்கிறேன்" என்று வண்ணான் மேலுங் கூறினான்.

'ஆகட்டும்' என்று பரதேசி எடுத்துக் குதிரையிடம் வெளுத்த வேஷ்டிகளை எல்லாம் வைத்துவிட்டு வண்ணாத்தியிடம் போய் புது மூட்டையைக் கைக்கொண்டான். "உன் பெயர் என்ன ஐயா?" என்றவள் கேட்டதற்கு "என் பெயர் வந்தவன்" என்று சொல்லிச் சரேல் என்று நடந்து குதிரையிருக்குமிடம் போனான்.

வண்ணானோ 'போனான் வருவானோ' என்று ஏங்கிக்கொண்டு இருந்தான். அது எங்காவது உண்டா? வண்ணாத்தியும் வந்தாள். "போனான் எப்பொழுது வருவான்" என்று அவளைக் கேட்டான். "யார்போனான்?" என்றவள் தடுத்தாள். போனானிங்கு வரவில்லைபா" என்றவன் கேட்க "அங்கு வந்தவன் வந்தவன் தான்" என்று பதில் சொன்னாள் வண்ணாத்தி.

நிற்க, அம்பலவாணர் தான் கொண்டுவந்த இரண்டு பெரு மூட்டைகளையும் அவிழ்த்து அங்கிருந்த மரத்தில் கிளைகளுக்கு ஒவ்வொன்றாகக் கட்டிவிட்டு தான் குதிரைமேலேறி காவல் செய்துக்கொண்டிருந்தான். அப்படி அவன் செய்வதை ஓர் வழிப்போக்கன் கண்டான். அவன் குதிரைமேல் ஸவாரி செய்துக் கொண்டிருந்தான். இந்த பரமானந்தப் பரதேசியைப் பார்த்ததும் சற்று நின்று "என்ன காவல் செய்கிறீர்?" என்றார்.

"பார்த்தால் உமக்கு தெரியவில்லையா?"

"இல்லையே—"

"இந்த மரத்தில் இருக்கும் துணிகள் கூடவா தெரியவில்லை. இது துணிகாய்க்கும் மரம். நான் சற்றே எங்கேயாவது போனால் இத்தனை துணிகளும் திருட்டுபோய்விடுமே."

"இது எப்படி துணிகாய்க்கிறது?"

"எப்படியா? பார்த்தால் தெரியவில்லை? இதில் பூத்திருக்கும் துணிகள் விலையற்றவை. நன்றாக வேரை வெட்டி வென்னீர் விட்டால் நன்றாய் செழித்து எங்குங்காணாத துணிகளைக் காய்க்கும்."

"அப்படியா?" என்று வந்த பதசாரி எண்ணலானான்.

"இந்த மரம் நமக்கு கிடைத்தால் துணிக்குக் குறையே கிடையாது. நமது வண்ணான் வெளுத்தால் மறுபடியும் துணியை அடைவதே தொல்லை. புதுத்துணி எல்லாம் கந்தலாகத்தான் நம்மிடம் திரும்புகிறது?" என்று எண்ணிக் கொண்டு 'இந்த மரத்தை எனக்குக்கொடேன்' என்றான். "கொடுத்தால் நீர் என்ன எனக்குக் கொடுப்பீர்?" என்று தடுத்தான். "என் குதிரையைத் தருகிறேன்" என்றான்.

"ஆனால் ஸரி" என்று சொல்லி ஒப்புக் கொண்டான்.

பின் அம்பலவாணர் தனது மரத்தை வந்தவனுக் கொப்புவித்து அவர்க்கு "ஜாக்ரதையாக மரத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். வேரை வெட்டி வென்னீர்விட மறந்துபோய் விடப் போகிறீர்" என்று எச்சரித்துவிட்டு இரண்டு குதிரையுடன் புறப்பட்டுப்போனார்.

அடுத்தநாள் பெரியநகரம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தை அடைந்தார். அங்குத்தட்டித் தவறி விலைமகளிர்வீதியில் அகப்பட்டுக்கொண்டார். ஆனாலும், வெகுபுத்திசாலி ஆனதினால் ஒருகுதிரையை ஒருசோலையில் யாரும் அறி

யாதபடி கட்டி வைத்துவிட்டு வந்துக்கொண்டிருந்தார். தோளில் காடிவிரஷ்டித்தகாசு இளபழம்பதி அரசன் கொடுத்தகாசு கனமாகத் தாங்கிக்கொண்டிருந்தார். அங்கொரு வீட்டில் திண்ணைமேல் உட்கார்ந்துக் கொண்டிருந்தார். ஸாயங்காலவேளை. பக்கத்து வாசலில் குதிரை நின்றுக்கொண்டிருந்தது.

"என்ன ஐயரே! எங்கே வந்தேங்கோ! உள்ளேவாங்களேன்" என்றொரு தடிக்கிழவி தடுமாறிச்சொன்னாள். பரதேசியும் உள்ளே போனார். "இங்கு நீங்கள் தாவேண்டியது தெரியுமோ இல்லையோ? ஒருவேளைக்காயிரம் வராஹன் இருந்தால் வாரும்"

"என்னத்திற்காக 'ஆயிரம் வராஹன் தரவேண்டும்?"

"இராத்திரி இருந்து விட்டுப்போகிறதற்குத் தான்."

"இராத்திரி இருப்பதற்கு ஆயிரம் வராஹன் என்னத்திற்காக. சூரியன் கிளம்பாவிட்டால் இராத்திரி இருக்காது பறந்தோடுமா? என்ன?"

"என்னமோ பேசுகிறீர்களே. இது யார் வீடு தெரியுமோ?"

"எல்லாம் தெரியுமே! இரண்டுகால் மனுஷாள் வீடுதான்"

"இது தாசிவீடு என்று தெரியாது போலிருக்கு!"

"தாசிவீடா? இங்கு வந்தகப்பட்டுக் கொண்டுவிட்டேனா? என்னசெய்வது உரலில் அகப்பட்டுக்கொண்டு உலக்கைக்கு பயந்தால் முடியுமா? ஸரி ஆயிரம் வராஹன்தானே! ஆகட்டும்" என்று பரதேசியார் பதிலளித்தார்.

படுக்கை வீடு தடபுடலாக அலங்கரிக்கப் பட்டது. அம்பலவாணர் இதைப் பார்த்து தனக்குதவியாக வரும் தாசியைப் பார்த்து "ஒரு ஸமாசாரம்! இந்த இடத்திற்கு என் குதிரையை அழைத்துவா. அதை விட்டு விட்டு ஒருநாழியும் நான் இருக்க முடியாது. சீக்கிரம்! சீக்கிரம்!!" என்றார்.

"படுக்கும் அறையல்லவா இது! குதிரைக் கட்டும் லாயமல்லவே! என்ன அப்படி சொல்லுகிறீர்களே?" என்று கண் மயக்கி முகமினிக்கு தாசிதடுத்தாள். அவள் மினுக்கு எல்லாம் அம்பலவாணரிடம் பலிக்குமா? எத்தனை பெயரை ஏமாற்றியவர் அவர். அவரிடம் இவள் வார்த்தை செல்லுமா? அரசமரத்து பேய்க்கு வாக்கு பட்டவள் போல தாசி கடைசியாக அக்குதிரையை ஜாக்ரதையாக இருக்கும்படி படுக்கையறையில் இடம் ஏற்படுத்தினாள். பணம் அல்லவா எல்லாம் செய்கிறது! இரவு முழுதும் பரதேசியார் கண்மூடாது குதிரைமேலே காவலாயிருப்பதை தாசி கண்டாள். எப்படியானாலும் தனக்கவனிடமிருந்து பணம்பெற வேண்டியதவள் வாழ்க்கை. மற்றக்கவலைகள் அவளுக்கேன்? சற்று தாசி கண்ணயர்ந்து தூங்கும் ஸமயத்தில் தான் கொண்டு வந்த சாணத்தையும் பொன்னையும் கலந்து குதிரை இரவில் போட்டிருந்த லத்தியில் கலந்து விட்டான். காலை நான்கு மணி இருக்கும். அந்த சமயத்தில் இருந்த விளக்குகளை எல்லாம் அவித்து விட்டு தாசியைக் கூப்பிட்டு "விளக்கை ஏற்று! நாழியாய் விட்டது! பொழுது விடிந்தால் தெரிந்து விடும்! எழுந்திரு! விளக்கை ஏற்று ஏற்று!" என்று எச்சரித்தான். அவளும் திடுக்கிட்டெழுந்து விளக்கை ஏற்றினாள். அவளை உடனே அவ்விளக்கை எடுத்துக்கொண்டு வரச்செய்து குதிரையிருக்கும் இடம் போய் வெகு கவலையாக அதன் பின் பாகம் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். தாசிக்குப்பொறுக்க முடியா சிரிப்பு வந்து விட்டது. பகபக வென்று சிரித்தாள். பரதேசியார் "சிரிப்பு! சிரிப்பு! பலே! குனிந்து பார்த்தால் தெரியும்" என்று அதட்டினார். அவளுங்குனிந்து பார்த்து லத்தி முழுதும் வராஹன் விளங்குவதைக் கண்டதும் ஆ என்று வாயைத் திறந்துக்கொண்டு மூக்கின்மேல் கை வைத்து நின்றாள்.

"தெரிந்ததா! தெரிந்ததா!" என்றுக் கொண்டு லத்தியை எல்லாம் வாரிதனது மேல் வஸ்திரத்தில் முடிந்துக் கொண்டு தான் புறப்படுவதாகச் சொன்னார். "வேண்டாம்" என்று தாசி தடுத்தாள். "இந்த குதிரையை எனக்குக் கொடுமே" என்று மன்றாடினாள். பின்னால் அம்பலவாணப் பரதேசி, கொடுக்கவேண்டிய வராஹனை கொடுக்காமல் ஆயிரம் வராஹனையும் தனது மூட்டையையும் கொண்டு புறப்படலானார்.

"ஜாக்கிரதை! மூன்றுநாள்வரை அது புதுமையால் கொடுக்காது. பொன் லத்தியிடாது.

அதற்கு 'திலத்திலத்' என்று ஜபித்தால் கொடுக்கும். நான்காவது தினம் பொன்லத்தியிடா விட்டால் உலக்கை எடுத்து புடைத்தால் உடனே லத்தியிடும். கொஞ்சம் கூச்சம் உண்டு; உலக்கை பூஜை; அதை பறக்க அடிக்கும்" என்று எச்சரித்துவிட்டு ஒளித்து வைத்திருந்த குதிரைமேல் ஸவாரி செய்து தனது ஊராகிய மாயபுரத்தை அடைந்தார். பெரிய வீடுகட்டினார். ஸுகமாக இருந்தார்.

இதற்குள் அந்த ஊர் நியாயாதிபதி முன், சிலர் வந்து முறையிட்டார்கள். அவர்கள் சொல்லுவது இன்னதென்று நியாயாதிபதியால் அறியமுடியவில்லை. அந்த ஸமயத்தில் நமது பரதேசியாரும் ஏதோ தமது வியவஹார நிமித்தம்போனார். இவரைப்பார்த்ததும் "அந்த பாவிதான் செய்த" தென்று எல்லாருமாக இரைச்சலிட்டார்கள்.

"தவலை பேசவேயில்லை; பாவி பணத்தைக் கொள்ளை கொண்டான்" என்றாள் அம்மையார் கிழவி.

"தவலையிருக்கிறதா?" என்று கேட்டான் அம்பலவாணன்.

"அதை உன் இழவிற்காக எனக்கு வந்த கோபத்தில் அன்றே போட்டுடைத்து விட்டேன்." என்று பதில் சொன்னாள்.

"ஐயோ காடி பனைலத்திபி சிவதாவது? என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நான் பட்ட பாடுபோதும்" என்றான் பழம்பதி இளவரசு.

"குட்டிச்சுவராய்போக! என் துணி எல்லாம் நாசமாய் போச்சே! மாமும் உலர்ந்து போச்சே" என்றான் பதசாரி.

"குதிரையும் இறந்துவிட்டதே!" என்றாள் தேவடியாள்.

"மஹாப்பிரபோ! இவர்கள் ஏது? என் மேல் வீண்பழிவைக்கிறார்கள். நான் சொன்னபடி ஒருவராவது நடக்கவில்லை. சும்மா என்னை மாத்திரம் தூற்றுகிறார்கள். நான் கொடுத்த பொருளைக் கொடுக்கட்டும். நான் அவர் கொடுத்த பொருளை கொடுத்து விடுகிறேன். நான் என்ன கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறேனா?" என்று கனமுடுக்காகப் பேசினான்.

அந்த ஸபையிலிருந்தவர்கள் பரதேசிசொல்வதே நியாயம் என்று சொன்னார்கள்.

நியாயாதிபதியும் "உங்களால் அவர்கொடுத்த பொருளைக்கொடுக்க முடியுமா?" என்று கேட்டான்.

"எங்கிருந்து நாங்கள் இழவு எடுத்து கொடுப்பது?" என்று எல்லாரும் தலையசைத்தார்கள்.

"அதற்கு யாரென்ன செய்வது. போனசை பெருநஷ்டம் யாரென்ன பண்ணலாம். நம்மால் ஒன்றும் முடியாது" என்று நியாயாதிபதியவர்கள் தீர்ப்புசெய்துவிட்டார்.

அம்பலவாணப்பரதேசி எல்லாருக்கும் கடுக்காய் கொடுத்துவிட்டு தான் இப்பொழுது மஹா குலதிலக சிகாமணிபோல வாழ்ந்து வருகிறார். அவரே பெரியவர்.

சொல்வதைக் கவனியாதிருத்தல்.—ஒருவர் நம்மிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அவர் சொல்வதை நாம் கவனியாதிருந்தால் அதைவிட அவருக்கு அவமானம் வேறில்லை. சிலர் மூடர்களாயிருப்பார்களேயாகில் சில சமயங்களில் நம்மைக் கவனியாதிருத்தலுக்காக அடித்தும் விடுவார்கள். நாம் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் சிலர் நாம் சொல்வதைக் கொஞ்சமேனும் கேளாமல் உயரப்பார்க்கிறதும் காதைக் குடைகிறதும் மூக்கை நோண்டுகிறதுமாயிருப்பது வழக்கம். அப்படிச் செய்கிறவர்கள் அற்பபுத்தியுள்ளவர்களென்பதற்கு அவர்கள் செய்கைகளைத் தவிர வேறு அடையாளங்கள் வேண்டுமோ? ஒருவன் சொல்லும் சங்கதி எவ்வளவு சாதாரணமாய் இருப்பினும், நாம் அதைக் காதுகொடுத்துக் கவனிக்க வேண்டும். நாமே பேசுகிறவர்களாயிருந்து நம்மை ஒருவர் இந்தவிதமாக அலக்ஷியம் பண்ணுவார்களேயானால் அவர்கள் பேரில் நமக்கு எவ்வளவு கோபமிருக்கமாட்டாது? அதுபோலவே அவர்களுக்கும் நம்மிடத்திலிருக்குமல்லவா? நம்து வேலைக்காரன்கூட நாம் முதுகிலடிக்கும் அடியை எளிதில் மறந்துவிடுவான். அவன் பேசுகிற பேச்சை அலக்ஷியம் பண்ணினாலோ அதைமாத்திரம் ஒருபோதும் மறக்கவேமாட்டான்; ஆகையால் யார் நம்மிடம் பேசினாலும் நாம் வெளியில் ஒவ்வொரு விதத்திலும் அவர்களை ஆதரித்துக் கேட்பவர்கள் போலவே காட்டிக்கொள்ள வேண்டும்.

உபநிஷத் ரத்தினமாலை

THE SUMMARY OF THE MINOR UPANISHADS

39. மைத்ராயண்ய உபநிஷத் (தொடர்ச்சி)(24).

ப்ராணன், ஸூர்யன், மூலமாகச் செய்யப்படுவதும் கிரகமுக்தியைக் கொடுக்கக் கூடியதுமான சிதாத்மோபாஸனை:—

ஆத்மாவுக்கு இரண்டு ரூபம்:—அவைகள் உள்ளே மாறி மாறி ஸஞ்சரித்து விளங்கும் பிராணன், வெளியே சுற்றிவந்து விளங்கும் ஸூர்யன் ஆகிய இவைகளே. ஸாதாரணமாக ஸூர்யனுடைய கதியாலேயே ப்ராணகதி நிர்ணயிக்கப்படுகிறது. அந்தர்முக நாட்டமுடையவர் ப்ராணன் கணக்கால் ஸூர்யகதியை உணர்ந்து ப்ராணகதியை ஒழுங்கு படுத்தி வெகுகாலம் இருப்பார். ஸூர்யனுள் தங்கநிறமான புருஷ ரூபமாகவிருந்து எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாகி இருக்கும் பரம்பொருளே ஹ்ருதய கமலத்துள் இருந்து எல்லாவற்றையும் அனுபவிக்கிறான். இந்த அந்தர் ஆத்மாவே ஸூர்யனிடம் காலமாக விருந்து எல்லோரையும் ஸம்ஹரிக்கிறான்.

ஹ்ருதயாகாசமே கமலம் என்பது; உள் ஆகாசம் எட்டு திக்குகளும் இதழ்கள். ப்ராண ஆதித்தர்கள் ஸமீபத்தில் உலாவுபவர்கள். இவர்களை ப்ரணவவையாஹ்ருதி பூர்வமான காயத்ரீ மந்திரத்தால் உபாஸிக்கவேண்டும். ப்ரஹ்மத்திற்கு இரண்டு நிலைகளுண்டு. ரூபம் என்றும் அரூபம் என்றும். ரூபநிலை அஸத்யமானது. அரூபம் ஸத்யம். இதுதான் ப்ரஹ்மதேஜஸ். இந்த தேஜஸ் ஸூர்யன். இந்த ஸூர்யன் ப்ரணவ ரூபம். இதன் மூன்று பாகத்துள்தான் எல்லாம் பின்னிக்கிடக்கின்றன. இவ்வாறு ஸூர்யனைப் பிரணவமாக த்யானம் செய்து ஆத்மாவை ஸூர்யனோடு சேர்த்து ஏகமாகப் பாவியுங்கள். (இங்கு சாந்தோக்ய, ப்ரச்னோபநிஷத்திலிருக்கும் ப்ரணவ ரஹஸ்ய ஆராய்ச்சி எடுத்தாளப்பட்டிருக்கிறது) முடிவாக ப்ரணவத்தை பரப்ரஹ்மமாகவும் அபரப்ரஹ்மமாகவும் த்யானிக்கலாம். பின்னர் ஸூர்யனை வையாஹ்ருதிகள்மூலமாக ஆராதிக்கவேண்டும். முதல் மூன்று வையாஹ்ருதிகளும்ஆதி ப்ராஜாபதியினது,பாதம்,நாபி, தலையாகும்,ஸூர்யன் அவரது கண். ஆதலால் ஸூர்யனை வையாஹ்ருதிகள் மூலமாக உபாஸித்தால் ப்ரபஞ்சரூபமான ப்ராஜாபதியை ப்ரபஞ்ச நேத்ரமான கண்ணாக உபாஸித்ததாகும். (பின்னர் காயத்ரீ மந்திரத்தின் மூன்று பாதங்களில் உள்ள முக்ய பதங்கள் ஸூர்யனையே குறிக்கின்றன என்று காட்டப்படுகிறது. (தாது அர்த்த மூலமாகப் பிரித்துக் காட்டப்படுகிறது). ஸூர்யனுக்கு அநேகம் பெயர்கள் உண்டு. ஸூர்யன்=ஸூயமானன் (யஞ்ஞகர்த்தா) ஸவிதா=ப்ராணிகளையும் ஆஹாரத்தை ஏற்படுத்துபவன். ஆதித்யன்=ஆயுஸ்ஸாரம், இவைகளை க்ரஹிப்பவன். பாவனன்=(வாயு மூலமாகவும் தானாகவும் சுத்திசெய்பவன்) ஆப = ஜலம் (திருப்தி செய்விப்பவன்) ப்ராணன் தேஹத்துள் வ்யாபித்து எல்லா விஷயங்களையும் நடத்திவைக்கிறான். அறிவு த்வைதமாக (ஜாக்ரத் ஸ்வப்நாதிகளிற்போல இருக்கையில் ஆத்மா எல்லாவற்றையும் செய்பவனாகிறான். இது அத்வைதமாக (ஸுஷுப்தியிற்போல) இருக்கையில் காரிய காரண கர்மமில்லை. இது சொல்லால் குறிக்கக் கூடியதல்ல. காணக்கூடியதல்ல. இந்த ஆத்மா தான் ஸகலதேவதைகளும் ஸூர்யனும்,பெருநெருப்புப் பிரகாசத்தில் சிறுதீபம் மறைபட்டுப் போவதுபோல இந்த ஆத்மா மறைந்து கிடக்கிறான். ஸ்கலப் பற்றும்விட்டு இந்திரிய விஷயங்களை ஒதுக்கி ஆத்மாவைத் தேடி அறியவேண்டும். (இங்குப்ரச்னோபநிஷத்திலிருந்து ஸூர்ய விஷயம் எடுத்தாளப்படுகிறது)ப்ராணன் ஸூர்யன் இரண்டையும் உணர்ந்தவன், அபேதத்யானம் செய்வான். அந்தர்பூஜை செய்வான். மனதிலுள்ள துர்வாசனைகளை ஸந்த்யாவந்தனத்தில் கூறும் ஆபப்புனந்துபோன்ற ஒருமந்திரத்தால் ஆசமனீயம் செய்துநீக்க முயலவேண்டும். பின்னர் சாப்பிடும்போது ஜலத்தால் ஆபோசனம் செய்து மறைத்து ஐந்து பிராணாஹுதிகளை செய்து மௌனமாகப்பூஜிக்கவேண்டியது. பின்னர்ஆபோசன ஜலத்தால் அதைமூடவேண்டும். பின்னர் ஆத்மத்யானம் செய்யவேண்டும். 'பரமாத்மாவே ஜாடராக்னியாகி யிருக்கிறார். அவர் திருப்தி அடைவதால் எல்லாம் திருப்தியடையட்டும். எல்லாம் உம்மால் தாங்கப்படுகிறது; ஸகல ஆஹுதியும் உம்மைச் சேருகிறது.' என்று இந்த த்யானத்தோடு எவன் புஜிக்கிறானோ அவன் ஒன்றாலும் (யமனாலும்) புஜிக்

கப்படமாட்டான். மேலும் அன்னம் எது? புஜிப்பவன் யார்? மாயைக்குள்ளிருக்கும் சேதனனான புருஷன் ப்ரகிருதி கார்யமான அன்னத்தை உண்கிறான். இந்த புஜிப்பவனும் ஆத்மாவுக்கு அன்னமாகிறான். காரணமான ப்ரகிருதியும் போக்யம்தான். ஆகவே இதற்கப்பாற்பட்ட சேதனன் உண்டு என்பதாச்சுது. இந்த லோகம்ஸந்தோஷம் வியஸனம்மோஹம் என்ற ரூபமாக அனுபவிக்கப்படுகிறது. காரியம் வெளிப்படாதவரை காரணத்தின் ரூபம் விளங்குவதில்லை. பூதாத்மாவின் மாறுபாட்டால் பால்ய யௌவன, விருத்தாப்யங்களில் அந்நஸ்வரூபமாகிறான் (அறிபடுபொருளாகிறான்). இந்திரியாதிகள் உணரக் கருவிகளாகின்றன. வெளிப்படையாக உணரப்படுவதும், வெளிப்படையில்லாத காரணநிலைகளும் ஆத்மாவுக்குஅனுபவப் பொருள்கள்தான். பூதாத்மாவும் அறிபடுபொருள்தான். இவனுக்கு சிதாத்மா ரூபநிலைவருங்கால் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியான நிலைவரும். இப்படிதன் அனுபவம் அடங்கக் காண்பவன் தான் ஸந்யாஸி, யோகி, ஆத்ம யஞ்ஞம்செய்தவன். இந்திரிய நிக்ரஹம் செய்தவன் தனிமையாகவிருக்குமிடத்து காமிகளான ஸ்திரீகள் வந்தபோதிலும் அவன் எப்படித்தாக்கற்றிருப்பானோ, அப்படி இவனும் இந்திரிய விஷயங்கள் தகையுங்காலும் ஒதுங்கியே நிற்பன்.

2. இஷ்டகாம்ய ஸித்திகள் கொடுக்கும் உபாஸனைகள்:—இவை பரமாத்மாவின் சிறந்த ரூபம். ப்ராணன் அன்னத்தால் ஓங்கிவளர்கிறது. அதனால்தான் தேகத்தில் ஸகல கார்யங்களும் நடக்கின்றன. பூமியில் வாழ்ந்துவரும் ஜீவர்கள் அன்னத்தாலுண்டாகி அதனால் வளர்ந்து அதிலே லயமடைகின்றனர். அன்னம் இவ்வாறு எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விருப்பதால் அதை ப்ரஹ்மமாகக் கருதி ஆராதிக்கலாம். ஆனால் நான் ப்ரஹ்மம் என்று ஆராதிப்பதுபோல அன்னம் நானே என்று மாத்திரம் ஆராதிப்பது தகுந்ததல்ல. அன்னத்தின் சிறப்பைக் கூறும் தைத்ரீயம் முதலிய சில உபநிஷத் மேற்கோள்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அன்னத்திற்குக் காலம் காரணம், காலத்திற்கு ஸூர்யன் காரணம், தக்ஷிணாயனத்திற்கு அக்னிதேவதை உபாஸனமும், உத்தராயனத்திற்கு சந்திரதேவதை உபாஸனமும் செய்யலாம். காலத்தின் இருப்புக்குக் காலத்தின் சிறுபாகங்களாகிய நிமிஷம் நாழிகை முதலியவைகளேதான் ஸாக்ஷி. காலத்தையும் ஸூர்யனையும் ப்ரஹ்மமாகக் கருதி ஆராதிக்கலாம். பிரஹ்மத்திற்கு இரண்டு அவஸரம், ஸூர்யனுக்கு முற்பட்டதாகிய அகாலநிலை, பிந்தியதாகிய காலநிலை என்பதே. காலம் எல்லாவற்றையும் கடவுளிடம் அடங்கச் செய்யும். இதன் மூலமாகப் பரம்பொருளை அறிய முயலலாம். காலம் எவராலும் எளிதில் தாண்டக்கூடியதல்ல. ஸ்ருஷ்டிக்கு முந்தி ப்ரஹ்மமே ஜகத்தாக விருந்தது. அதுவே தனியாக விருந்தது. எங்கும் பூர்ணமாக விருந்தது. இதற்கு பேதங்களே இல்லை. வாக்கு மனத்திற்கு எட்டாதது இது எல்லாம் போன காலத்திலும் இவர் ஒருவர்தா னிருப்பவர். இவராலே த்யானமாத்திரத்தில் ஜகத் வெளிப்பட்டு விரிவாகிறது. லயமடைகிறது. ஸூர்யன், அக்னி, ஜாடராக்னி, இந்த தேஜோ ரூபமாக விருக்கும் ஆத்மா இவன் ஒருவனே. இப்படி உணருபவன் ப்ரஹ்மத்துடன் ஐக்கிய மடைகிறான்.

3. த்யான ஸித்திதரும் உபாயம்.—சித்தம்ஒரு நிலையாக நின்று த்யானம் கைகூட ஏற்பட்டிருக்கும் யோகோபாயம் ஆறு அங்கங்களை உடையது. அவையாவன, ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தியானம், தாரணை, ஸமாதி, தர்க்கம், என்பவைகளே. இந்த உபாயத்தால் பரமாத்மா எப்பொழுது விளங்குகிறானோ அப்பொழுது புண்யபாப பலன்களிலிருந்து விடுபட்டுப் பரமாத்மாவில் லயிக்கிறான். எரிமலை யருகில் மிருக பக்ஷிகள் எப்படி அணுகாவோ அப்படி ப்ரஹ்மவித்திடம் தோஷங்கள் அணுகா. இந்திரிய நிக்ரஹம், மனோலயம், ஆத்மானுஸந்தானம் ஆகிய மூன்றும் முக்யம். (பின்னர் லம்பிகா யோகமாகிய உள்நாக்கை நாக்கால் அழுத்திச் செய்வது கூறப்படுகிறது). இவைகளால் உன்மனீபாவம் என்றஆத்மமாத்திரமாக விருக்கும்நிலைவரும். இதுதான் மோக்ஷம். பிராணனை ஸ்வாதீனம் செய்துகொண்டு உள் நாக்கில் நிறுத்தி ப்ரம்ஹத்தைவிடத் தான் வேறு என்ற பாவத்தை விட்டு ஹ்ருதயத்திலிருந்துபிரம்மாந்திரம்வரையில் போகும் ஸுஷும்னாநாடி உள் நாக்கில் தடைபட்டுப்போகும் வழியே போய் பிரம்மாந்திரம் சேர்ந்து ஆத்மாவைப் பிரஹ்மத்துடன் சேர்க்கவேண்டும். பிரஹ்மம் இரண்டு விதம்; சப்தப்ரஹ்மம், அசப்தப்ரஹ்மமென்று.

ஓங்காரம் சப்தப்ரஹ்மம். இதன் த்யானத்தால் சிலந்திப்பூச்சி நூல் மூலமாக ஒதுங்குவதுபோல் கிளம்பி அசப்தப்ரஹ்மத்தில் மூழ்கிவிடவேண்டியது. சப்தப்ரஹ்மவாதிகள் காதுகளை மூடிக்கொண்டால் ஏற்படும் ஏழுவித த்வனியே சப்தபிரஹ்மம் என்றும், இவைகளைத் தாண்டி நின்று ஒடுங்குவது அசப்தநிலை என்றும் கூறுவர். சப்தப்ரஹ்மத்தில் தேர்ந்தவன் பரப்ரஹ்மத்தை அடைவன். (பின்னர் ராமதபனீ, வராஹம் முதலியவைகளிலுள்ள ப்ரணவத்யானம் கூறப்பட்டிருக்கிறது). சரீரம் வில், ஓங்காரம் அம்பு அதன் நுனியாகிற மனதால் அஞ்ஞானமாகிய மறைப்பைப்பிளந்து அப்பாற்படவேண்டும்: மனோலயத்தால் மிஞ்சி நிற்கும் பரம்பொருளே முடிவானது. விழித்திருக்கையிலேயே தூங்குபவன்போலத் தாக்கற்று எவன் ப்ரணவத்யானத்திலிருக்கிறானோ அவன் பிரஹ்மமேயாவன். சித்த விருத்தியடக்கமே யோகம் எனப்படுவது. ப்ரணவத்யானம் இந்த யோகத்தை ஓங்கச்செய்யும்.

விஷயஸாகரத்தைத் தாண்டி தைர்யமே தண்டாகவும், ஸந்யாஸமே நாணாகவும் உள்ள வில்லை எடுத்து அபிமானமின்மை என்ற அம்பைத் தொடுத்து, பிரம்மவாயிலில் இருக்கும் அகங்காரம் என்ற த்வாரபாலனைக் கொன்று தள்ளவேண்டியது. இந்த த்வாரபாலகனுக்கு மித்யாஞானமே தலைப்பாகை: ஆசை பொறாமையே குண்டலங்கள். சோம்பல், பாவம், தூக்கமே குண்டாந்தடிகள். இவன் காமம் என்ற தண்டையும் கோபம் என்ற நாணையும் உடைய வில்லில் இச்சை என்ற அம்புதொடுத்து பிராணிகளைஎல்லாம் வருத்துகிறான். இவனைக்கொன்றபின் பிரணவ தெப்பத்தைப்பற்றி ஹ்ருதயாகாசக்கடலைத்தாண்டிப் பார்த்தால் ப்ரஹ்ம ப்ரகாசம் சற்று விளங்கும். புதையலெடுக்கப்போகிறவன்ஸாவதானமாகப் போவதுபோல ஆசாரியர் காட்டியிருக்கும் ரஹஸ்ய வழியால் ப்ரஹ்ம சாலையில் புகவேண்டும். இதற்குள்ளேதான் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதாய் உள்ள ஆத்மா தன்னிலையில் இருக்கிறது. இதைத் தர்சித்தபின்னர் ஸம்ஸாரசக்ரத்திற்கு ஸாக்ஷியாகி அதை இஷ்டப்படித் தடுத்து நிறுத்தும் திறனுடையவனாகிறான். இந்த முடிவு அப்யாஸிக்கு ஸித்திக்குமே ஒழிய வ்யவஹாரிக்கு ஸித்திக்காது.

இதோடு ப்ரஹ்மா வாலகில்யருக்குச் செய்த உபதேசம் முடிந்தது. இனி சாகாயன்யர் நேரே உபதேசிக்கிறார் பிரஹத்ரதனுக்கு.

சுத்தமான ஒரு இடத்தில் சுத்தமனதுடன் பிரஹ்மத்தை நினைத்தும் உரைத்தும், ஆராதித்துமே இருக்கும் ஒருவன் அதுடன் ஐக்யம் பெறுவன். இதனால் பாசம் அறுபட்டு பயகாரணமற்று, நிரதிசய ஸுகம் அடையும் ஜீவன் முக்தனாவன் இவன் மனிதன் இதற்கு மாறான் நிலையிலிருந்தான். ஆசை நிறைந்த நிச்சயம், ஸங்கல்பம், அபிமானம் ஆகியஉருவானபந்தமே இவன் நிலையாக விருந்தது. எல்லாவித நல்ல கெட்ட வ்யாபாரங்களும் மனதின் பரிணாமமே. மனதின் குணங்களுள் பந்தப்பட்டு த்வைத பாவனையில்தானே அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தான். முக்தன் நிலை இதற்கு நேரே விரோதமானது. இதுதான் மோக்ஷலக்ஷணம். இந்நிலையை அடைந்து எதை இச்சித்தாலும் அது உடனே கைகூடி விடும். இம்மாதிரி நிலையை அடைவதற்கு ஞானேந்திரியங்கள் மனதில் சலனமின்றி அடங்க புத்தி திடப்படுவதே வழி. இதைத்தவிர குறுக்குவழியே இல்லை. ஹ்ருதயத்திலிருந்து அநேக தேஜோரூபங்கள் 101 நாடிகள் வழியாகப்போகின்றன. ஒன்று ஸுஷும்னா நாடிவழியே போய் ஸூர்யமண்டலத்தைத் தாண்டிப்போம். இது ப்ரஹ்மலோக மூலமாகப் பரமபதத்திற்குப் போகும் வழி. மற்றைய 100 நாடிகளும் பல தேவதைகள் நிலைக்குக் கொண்டு விடுவன. இவைகள் கர்ம பலன் அனுபவித்த பின்னர் மறுபடி திரும்பி பிறப்பதற்கு காரணமான மார்க்கங்கள். ஸூர்யாராதனம் இல்லாவிட்டால் ஸம்ஸாரமே கதியாகும்: ஸூர்யனை தேவதையாகஉபாஸித்தால் ஸ்வர்க்கமும். பிரஹ்மமாக உபாஸித்தால் மோக்ஷமும் வரும்.சாகாயந்யர்உபதேசம் முடிந்தது மேல் உபநிஷத்து இவைகளை விளக்குகின்றது.

இந்திரியங்கள் எல்லாம் ஆத்மஸ்வரூபந்தான். இவைகளை ஏவுகிறவனும் ஆத்மா: அடக்கியாள்பவனும் ஆத்மா. இவைகளைத் தூண்டும் வெளி விஷயங்களும், அபிமானி தேவதைகளும் ஆத்மாவே, அனுபவிப்பவனும் ஆத்மாதான். இந்த ஆத்மாவின் முக்ய அடையாளம் சுத்தம், நிர்மலம், நிர்விகாரத்வம், சாந்தம். சிலர் இந்திரியப்ராணன்களை ஆத்மாவுக்கு அடையாளம் என்பர். வேறுசிலர் புத்தி தைர்யம் ஞாபகம் ஞானம்ஆகியஇவைகள்தான் என்பர். இவர்கள் சொல்வதும் ஸரிதான், விரையிருப்பதற்கு முளை அடையாளம் என்பது போலவும், நெருப்பிருப்பதற்கு புகை காந்தி பொறிகள் போலவும்தான். நெருப்பிலிருந்து பொறிகள்போலவே ஆத்மாவிலிருந்து எல்லாம் திரும்பத்திரும்ப உண்டாகின்றன. அக்னியிலிருந்து புகை ஏற்படுவது போல சகல வேதங்களும் சாஸ்திரங்களும் புராணங்களும் இந்த ஆத்மாவின் மூச்சுக்காற்றுக்களாகவெளிப்படுகின்றன.

இங்கு அக்னிஹோத்ர விஷய ரஹஸ்யம் கூறப்படுகிறது. முதலில் கார்ஹபத்தியாக்னியை வருஷமாக த்யானிக்கவேண்டும். அதன் ஐந்து ருதுக்கள் (ஹேமந்தத்தையும்சிசிர ருதுவையும் ஒன்றாகக்கருதவேண்டும்), இந்த அக்னியின்கீழ் பக்ஷிரூபம் வரும்படி தலை இறகாதிரூபமாகப் பரப்பப்பட்ட செங்கற்கள். விராட்ரூபமான இந்த அக்னி நானே என்று முதலில் த்யானிக்க வேண்டும். இதனால் யஜமானன் அந்தரிக்ஷத்தில் வாயுவை அடைவன். இந்த நிலையில் தக்ஷிணாக்னியை ப்ராணனாகமதித்து ப்ராணாதி பஞ்சவாயுபேதங்களையே செங்கற்களாகக்கொள்ளவேண்டும். இது இரண்டாவது த்யானஸ்தானம். இதிலிருந்து ஸ்வர்க்க நிலையாகிய ஸூர்யனை அடைகிறான். ஸூர்யனாகிய ஈசன் தான் என்று ஆஹவனீயாக்னியை மதிக்கவேண்டும். இந்நிலையில் இங்கு நான்குவேதம் இதிஹாஸபுராணங்கள் ஐந்து செங்கற்கள். இது மூன்றாவது த்யானஸ்தானம். நான்காவது பிரஜாதிபதியிடம் சேருகிறான். அவர்மூலமாக ஸூத்ராத்மாவான பிரஹ்மாவினிடம் சென்று ஆனந்தநிலையடைகிறான். ஜாடராக்னியும் இம்மூன்று அக்னிகளது சேர்க்கையே அதுவும் ஹோமமூலமாக ஆராதிக்கத்தக்கது. 'ஸ்வர்ண வர்ணமான பக்ஷியானது தன் ஹ்ருதயத்திலும் ஸூர்யனிலும் உள்ளது. அதுமறைந்தும்சுத்தமாயும், தேஜோரூபியாயும் உள்ளது.' என்று த்யானித்து ஹவிஸை அக்னியில் ஹோமம் செய்யலாம். இதனால் பூர்ண மனச்சாந்தி ஏற்படும். ஆத்மா அனுசந்தானம் உண்டாகும்.

அக்னி விறகில்லாத காலத்தில் தன் காரணத்தில் அடங்குவதுபோல மனம் ப்ரவிருத்தியற்று நின்றால் தன்காரணமான அஞ்ஞானத்தில் அடங்கும். ஆனால் விஷயங்களில் மூழ்கும் மனம் பிரஹ்மத்தை உணரவேண்டும் என்று புறப்பட்டால் தன் காரணமாகிய பிரஹ்மத்தில் லயமடைய கர்மவசமாயும், பொய்யாயும் உள்ள விருத்திகள் மறுபடி எழும்புவதில்லை. மனமேதான் ஸம்ஸாரம். இதை முயற்சியால் சோதிக்கவேண்டும். மனம்போலத் தான் இருக்கும் ஒருவன் நிலையும். மனம் சாந்தப்பட்டால் சுபாசுப கர்மப்பிடிப்பு நீங்கும் இதனால் அவன் தன்னிலையிலிருந்துகொண்டு மாறாஸுகத்தை அடைவான். மானிடர் மனம் விஷயத்தில் பற்றி நிற்பது போல பிரஹ்மத்தில் பற்றிவிட்டால் யார்தான் பந்தம்நீங்கார்கள். நித்திரை நினைப்புக்கள் இன்றி மனம் அசையாமல் நின்று, எப்பொழுது தன்னிலை கெட்டிருக்கிறதோ அப்பொழுதே பரமபதம். இந்தக் காலத்தில் ஏற்படும் ஸுகம் மனோவாக்குக் கெட்டியதல்ல. அனுபவத்தில் மாத்திரம் தான் விளங்கும். ஜலம் ஜலத்துடனும், அக்னி அக்னியுடனும், ஆகாசம் ஆகாசத்துடனும் கலந்துவிட்டால் எப்படி அபேதம் ஏற்படுமோ அப்படியேதான் மனம் ஆத்மாவில் கலக்கும்பொழுதும் (அமிர்த பிந்து உபநிஷத்திலிருக்கும் முதல் 5, 6-ச்லோகங்கள் இங்கு இடை இடையே அமைந்து கிடக்கின்றன). அக்னிஹோத்ர மூலமாக இந்த பிரஹ்மத்யானம் அடையத் தகுந்தது. இதன் பின்னர் அக்னிஸ்தோத்ரமும்ஸூர்யஸ்தோத்திரமும்கூறப்படுகிறது. இங்கு ஸூர்யாந்தர்கத புருஷனும், உபாஸகாந்தர்கத புருஷனும் ஒன்றே; எல்லாம் அவனிடமிருந்து உண்டாயின என்பது வெளியாக்கப்படுகிறது. இப்படி உணர்ந்தவன் ஸகுண நிர்குண ப்ரஹ்மரஹஸ்யம் உணருவான்.

சாப்பாட்டு வஸ்துக்களையஞ்ஞவேதியில்முதலில் ஹோமம் செய்து மிஞ்சியதை வாயாகிய ஆஹவனீயாக்னியில் ஹோமம் செய்து சாப்பாட்டையும் ஒருவித யஞ்ஞமாகக்கருதியே செய்யவேண்டும். விதம்விதமான யாகங்களால் தேஜஸ்விருத்தி, புண்யலோக ப்ராப்தி ஆகிய காம்யங்களையாவது மோக்ஷப்ராப்தியாகி நிஷ்காம்ய முடிவையாவது எண்ணி இந்த ஹோமங்களைச் செய்யவேண்டும். தீபம், வத்தி எண்ணெய் இவைகள் சேர்க்கையால் எப்படி இருக்கிறதோ, அதுபோல தேஹவாஸனை லோகவாஸனை இருக்கும்வரையில் ஜீவேச்வர பேதம் தோற்றும். ஆதலால் ஓங்கார பூர்வமாக யஞ்ஞங்களைச் செய்யவேண்டும். இதனால் ஸர்வக்ஷேமமும் உண்டாகும்.

இம்மாதிரியான அக்னிகார்யங்களால் ஆசை நீங்க அதன் காரியமான கோபாதிகள் போய் விடுகின்றன. பின்பு பஞ்சகோசாதீதப்பட்டு ஸகுணப்ராஹ்ம ப்ராப்தியை அடைந்து பின்னர் நிர்குண நிலையில் நிலைபெறுவன். இப்படி சரீரத்துள்ளிருக்கும் அதிஸூக்ஷ்மமான ஆத்மாவை த்யானித்து முடிவடையலாம்.

பின்னர் தியானிக்கவேண்டியதான இந்திரியாபிமானிகள் ஸ்வரூபமும் ஸூர்யனுள் எல்லாம் அடக்கம் என்பதையும் கூறி ஸூர்யன் ஸ்வரூபம் வர்ணிக்கப்படுகிறது. இங்கு பிரஹ்மலக்ஷணங்கள் எல்லாம் ஸூர்யனிடம் ஏற்றிக் கூறப்படுகிறது. முதலில் தேஹவிலக்ஷணனைக் கூறப்பட்டுப் பின்னர் பிரம்மலக்ஷணத்தையே இங்கும் கூறப்படுகிறது. ஸ்வர்க்கார்ஹர்கள் அல்லாதவர்களுடன் (நாஸ்திகர்களுடன்) ஆஸ்திகன் சேரவேகூடாது என்று கூறி நாஸ்திகர்கள் இன்னர் என்று ஒரு அட்டவணை காணப்படுகிறது. வைதிகமார்க்கமான ஆத்மவித்யா மார்க்கத்திற்கும், சூதான ஸித்திகளான செப்படி வித்யாமார்க்கத்திற்கும் உள்ள வித்யாஸத்தை நன்றாக உணர வேண்டும். தேவதைகளுக்கு க்ஷேமமும், அஸுரர்களுக்கு மோஹமும் உண்டாக ப்ரஹஸ்பதி சுக்ரவேஷம் போட்டுக்கொண்டு வேதவிரோதமார்க்கத்தை ஏற்படுத்தினர். வித்தைக்கும் (ஞானகாண்டத்திற்கும்) அவித்யைக்கும் (கர்மகாண்டத்திற்கும் பரஸ்பர விரோதமுண்டு. இரண்டையும் உணர்ந்து ஒருவன் அனுஷ்டித்தால், அவித்யையால் ஞானவிரோதமான பாபங்களைப்போக்கி, வித்யையால் மோக்ஷத்தை அடைவன். இதை உணராது அவித்தையை அனுஷ்டிப்பவர்கள் பிறர்க்கு குருவுமாகி விட்டால் குரு சிஷ்யர் கதியைக்கூறவும் வேண்டுமா?

சாந்தோக்ய உபநிஷத் இந்தர விரோசனர் கதையின் கருத்து எடுத்துக்காட்டப்படுகின்றது. வேதஸம்மத மல்லாதவை அனுஷ்டிக்கலாகாது. அப்படிச்செய்தால் அஸுரநிலை அவனுக்கு வந்து விடும். ஓங்காரம் கிளம்பி நாதரூபமாவது பின்னர் கூறப்படுகிறது. ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி துரியவிஷயம் கூறப்பட்டு இவைகளுக்கு அப்பாற்பட்டது பிரஹ்மம் என்று கூறிமுடிக்கிறது இவ்வுபநிஷத்.

40 ருத்ரஹ்ருதயோபநிஷத் (85).

சுகர் தன் பிதாவான வ்யாஸர் அடிபணிந்து, 'எல்லாதேவர்களுக்கும் தேவர்யார்? எவரை வழிபட்டதால் எல்லோரையும் வழிபட்டதாகும்?' என்று வணங்கிக்கேட்டார்.

அதற்கு வ்யாஸர் பின் வருமாறு மறுமொழி கூறலுற்றார் 'ஸர்வதேவர்களுக்கும் தேவர் ருத்ரன். எல்லாதேவதைகளும் ருத்ரன் ரூபங்களே. ருத்ரன் வலபுறம் பிரஹ்மா, ஸூர்யன், மூன்று அக்னிகளும், இடபுறம் உமாதேவி, விஷ்ணு, சந்திரர்களும் நிலைபெற்றிருக்கின்றனர். இதனால் ருத்ரவிஷ்ணுக்களுள் பேதம் கல்பித்து த்வேஷித்தால் இருவரையும் த்வேஷித்த பாபம்வரும். இருபுறமிருப்பவர்கள் தம்முள் பேதமே இல்லை. ருத்ரரிடமிருந்து ப்ரபஞ்சவிரை உண்டாகிறது. இது உண்டாகும் ஸ்தானம் விஷ்ணு. ப்ரபஞ்சத்திலுள்ள ஆண்பாகமெல்லாம் சிவன், பெண்பாகமெல்லாம் உமை. ஆதலால் ஸ்தாவரஜங்கம ரூபமான உலகெல்லாம் உமாமஹேச்வர ஸ்வரூபம். வெளிப்படையாக விருப்பவை எல்லாம் உமாரூபம், ஸூக்ஷ்மமாக விருப்பது எல்லாம் மஹேச்வரரூபம். இந்த உமா மஹேச்வரச் சேர்க்கையே விஷ்ணு. ஆதலால் விஷ்ணு வாராதனம் வேண்டும். மேலும் ஆத்மாமூன்று விதம். ஆத்மா, பரமாத்மா, அந்தராத்மா ஆத்மா, ப்ராஹ்மா, ப்ரமாத்மா மஹேச்வரன், பூதாத்மா விஷ்ணு. ப்ரபஞ்சத்தை ஒரு மரமாகக்கொண்டால் அதன் நுனி விஷ்ணு, மத்தி பிரஹ்மா, வேர் மஹேச்வரர். காரியம் விஷ்ணு, கிரியை பிறஹ்மா, காரணம் மஹேச்வரர். தொழிலின் பொருட்டு ஒருமூர்த்தியே ருத்ரனால் மூன்றாக்கப்பட்டது. தர்மம் ருத்ரன், ஜகத் விஷ்ணு, ஸர்வஞானம் பிரஹ்மா ஸ்ரீருத்ர ருத்ரா என்று எவன் கூறுவனே அவன் எல்லா தேவர்களைத் துதித்துப் பாபம் நீங்கியவனுக்கு நிகராவான்.

எல்லாம் உமாருத்ராத் மகம். ப்ரபஞ்சத்தில் ஆண் ப்ராஹ்மா, ஸூர்யன், பகல், அக்னி, விருக்ஷம், அர்த்தம், லிங்கம், முதலியவை எல்லாம் ருத்ர ரூபங்கள்: பெண், ஸரஸ்வதி, சாயை, இரவு, ஸ்வாஹா, கொடி, சொல், பீடம், முதலியவை எல்லாம் உமாரூபங்கள். இவர்களைச் சேர்த்தும் வெவ்வேறாகவும் நமஸ்காரம் என்று வழிபடவேண்டும். 'எவ்விடத்தெல்லாம் துவந்துவங்கள் காணப்படுமோ அவைகள் எல்லாம் சிவசக்தி ரூபம் என்று த்யானித்து வழிபட்டால் நீங்காத பாபம் ஒன்றுமில்லை.

ஸர்வாதிஷ்டானம், துவந்துவ ரஹிதம், ஸனாதனம், மனவாக்கெட்டா ஸச்சிதானந்தம் பரப்பிரஹ்மம் இது உணரப்பட்டால் இதை விட்டு வேறில்லாது இதன்மயமாகவிருக்க அறிபடு பொருள்கள் எல்லாம் உணரப் பட்டவைகளாகும். வேதத்தில் பரம் என்றும் அபரம் என்றும் வித்தைகள் இரண்டுண்டு. வேதாதி சாஸ்திரங்கள் எல்லாம் அபரவித்தைகள். எல்லாவற்றிற்கும் ஆதாரமான ஆத்மாவை தம்ஆத்மாவிடம் காணும்படி செய்வது பரவித்யை. இந்த பரவித்தையில் தேர்ந்தவனுக்கு ப்ரபஞ்சம் எல்லாம் திருச்யமே. தன்னிடம் கயிற்றில் பாம்புபோலத்தாங்கி நிற்பவையாகும். ஸத்யமான பிரஹ்மத்தை உணர்ந்து ஜீவன் முக்திபெறுவன்.

ஸத்குரு மூலமாக ஏற்படும் ஞானத்தால் ஸம்ஸாரம் ஒயுமேயல்லது கர்மத்தாலல்ல. குருதருவது தான்பரவித்யை. அழியாப்பொருளுணர்ச்சி எவனுக்கு ஏற்படுமோ அவனுக்கு அவித்தை என்றசிக்கு அறுபட்டு சிவப்ராப்தியாகும். இந்த அமிருத நிலைதான் சிறந்த புருஷார்த்தம் பிரணவமேவில், ஆத்மாவே அம்பு, ப்ரஹ்மமேலக்ஷ்யம். குறிதவராது எய்தால் ஆத்மாப்ரஹ்ம ப்ரவேசம்செய்து ஒன்றுபடும். லக்ஷியம், அம்பு, அம்பு எய்பவன் எல்லாம் ஸர்வவ்யாபியான சிவனே. இந்தநிலையை பஞ்சபூத ப்ரகாசாதிகளும் அணுகா. இதுவே ஸ்வப்ரகாசமானது.

இந்த சரீரத்தில் ஜீவேச்வரர்கள் என்ற இரண்டு பக்ஷிகள் உண்டு. ஜீவன் பல போக்தா. ஈசன் அப்படிப்பட்டவனல்ல: கேவலம் ஸாக்ஷிரூபன். இந்த ஜீவேச்வரபேதம் மாயாகல்பிதம். கடாகாசம் மடாகாசம் எப்படி மஹாகாசமோ அப்படியேதான் இவ்விருவரும் ப்ரஹ்மமாயினும் இருவராக வேறுபட்டுக் காணப்படுவர். இருவரும் சித்தாதலால் ஒன்றே இருவரல்லர். இருவரென்பது யுக்திக்குப் பொருத்தமல்ல: ச்ருதிக்கும் பொருத்தமல்ல இந்த ஏகத்வத்தை உணர்ந்து அனுபவித்துவிட்டால் சோகமோஹமெல்லாம் நீங்கிவிடும். தோஷமற்றவர் இதைத் தமது தேஹத்துள் பார்ப்பர், மாயைக்கு இரையாகி இருப்பர் இதைப்பாரார். இந்த உணர்ச்சி இருக்கும் யோகிக்குப் போக்குவரவில்லை. ஆகாயத்தைப்போல அவன் ஸ்வஸ்தமாயும் (வேறுதாரமின்றி தன்னிலேயே நிலைபெற்று) ஸச்சிதாநந்த நிலைமாயும் உள்ள ப்ரஹ்மமேயாகிறான்.

மாணவர் பக்கங்கள்

STUDENT'S PAGES

1. ஆத்திசூடி விளக்கம்

26. இலவம் பஞ்சிற்றுயில்

இலவம் பஞ்சடைத்துச் செய்த மெத்தையில் தூங்கு என்பது இதன் பொருள். இலவம் பஞ்சு மெத்தை மிருதுவாக மெத்தென்றிருக்கும். இதில் படுத்தால் தூக்கம் சீக்கிரம் வரும். ஆனல் தூக்கம் வருவதற்கு இது அத்யாவச்யம் என்பதல்ல. ஆட்டிடையர்கள் மழை பெய்து ஒய்ந்ததும் வயல்வெளிகளிலே தண்ணீர் ஓடு மிடத்தில்கூட இரண்டு மூன்று உயர்ந்த கற்களைப் போட்டு தேஹம் நனையாமல் ஏற்படுத்திக் கொண்டு, மேல் படுத்து ஸுகமாகத் தூங்குவதாகக் கதைகளில் கேட்டிருக்கிறோம். தபால் எடுத்துச் செல்பவர்கள் ஓடிக்கொண்டே நல்ல தூக்கத்திலிருப்பர். இப்படி நல்ல நித்திரை ஸுகமறியாது. நல்ல தூக்கம் மாத்திரம் வந்து விட்டால் எங்கு படுத்தாலும் உறக்கம் வரும். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

இப்படி இருக்க, இலவம் பஞ்சில் துயில் என்று ஔவை ஸுகஸாதனத்தை ஒட்டிக் கூறுவானேன் என்ற சங்கை பிறக்கும். இதை விசாரிக்கப் புகும்பொழுது முதலில் ஒன்று கவனிக்க வேண்டும். முற்கூறியபடி எந்நிலையிலும் தூங்குபவருக்கு இலவம்பஞ்சுமெத்தை தயார்செய்து வைத்தால் வேண்டாம் என்பார்களா, தூக்கம் வாராதா இப்படிப்பட்டவர்களுக்கு ஸுக ஸாதனத்தால் தூக்கம் அதிகப்படுமே ஒழியக் குறையாது. தூக்கம் ஒருவாறு பிடிக்காது தத்தளிப்பவர்களுக்கு, இலவம் பஞ்சு மெத்தை தூக்கத்தை உண்டாக்க ஸஹாயமாகும். வ்யாதி கவலை முதலியவைகளால் வருந்துபவர்களுக்குஎன்னசெய்துந்தான் தூக்கம்வாராது. இவர்களை இங்கு கூறவரவில்லை.

தூக்கம் தேஹச்சோர்வால் ஏற்படுவது. இது எல்லோருக்கும் நன்றாக வந்தாலல்லது தேகச்சோர்வை நீக்குவதில்லை. சிலர்களை வேலைமத்தியில் வந்து தூக்கம் தொந்திரவு செய்வதும் உண்டு. குறைத் தூக்கம் ஒரு வேலையையும் செய்ய வொட்டாது. ஆகவே தூக்கம் வந்தால் நன்றாய்த் தூங்கிவிட்டே

வேலையில் முனைய வேண்டும். தூக்கம் வருங்கால் அது நன்ருக வந்துகளிந்துகொண்டுவேண்டிய அளவு தூக்கம் ஏற்படுவதற்கு ஸுகஸாதன ஸஹாயம் வேண்டியது அவசியம். அதன் பொருட்டே தூங்கும்பொழுது இலவம் பஞ்சு மெத்தை முதலியவைகளை முன்னிட்டுக்கொண்டே தூங்க வேண்டும் என்ருள் ஔவை.

இதுவுமன்றி யாதொரு புத்தி வேலையும் இன்றி வெறும் தேஹ உழைப்பால் வேலை செய்யும் கூலிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நல்ல தூக்கம் எப்படியும் வந்துவிடும். ஸாதனங்கள் ஸஹாயமன்றியே அவர் நன்ருகத் தூங்கி எழுந்து விடுவர். இந்த ஆத்திசூடி முதலியவைகள் கற்று புத்திக்கு வேலை கொடுத்து ஸூக்ஷ்ம வேலைகளை தர்மாதர்ம விவேகத்திற்கு மாறுபாடின்றி செய்து முடிக்கும் தன்மைவாய்ந்தவர்களுக்குத் தூக்கம் வருங்கால் அவ்வளவு முழுத்திக் கொண்டு வாராது. ஆனல் இவர்கள் நன்ருகத் தூங்கினல்தான் மேல்புத்தி வேலை செய்ய யோக்யர்களாக ஏற்படுவர். இப்படிப்பட்டவர்களுக்கு வரும் தூக்கம் நன்ருக வந்துகவிந்து ஸுகம் கொடுக்கும் பொருட்டு ஸுகஸாதனங்கள் உபயோகமுள்ளனவாகவிருக்கும் என்பதைக்கொண்டு ஔவை இவ்வாறு கூறினள். தூக்கம் வருங்கால் நன்ருகத் தூங்கித் தொலைத்து விட்டால்தான் நலம் என்றகருத்துடன் தான் ஔவை இலவம் பஞ்சிற்றுயில் என்று இதை ஒரு நீதிவாக்யமாக அமைத்து இங்குகூறியது.

27. வஞ்சகம் பேசேல்

கபடவார்த்தைகளைச் சொல்லாதே என்பது இதன் பொருள். மனது வாக்கு காயம் என்ற காரணங்கள் மூன்று உண்டு ஒவ்வொருவனுக்கும். இம்மூன்றும் ஒரேமாதிரியாகவிருக்கும் பெரியோருக்கு; இம்மூன்றும் மூன்றுவிதமாகவிருக்கும் சிறியோர்களுக்கு. இந்த நீதிவாக்கியத்தில் மனதும்வாக்கும்ஒன்றுபட நடக்கவேண்டும் என்பதாயிற்று. காயத்தால் ஏற்படும் தொழிலும் அதற்கேற்பவே இருத்தல் வேண்டும் என்பது இதிலிருந்து வெளிப்படும்.

மனதில்ஒன்றை எண்ணிக்கொண்டு வாயால் அதற்கு மாருனதைச் சொல்லாதே; அதாவது வாயால்வெளிப்படையாகக்கூறக்கூடியவைகளை மனதில்நினைத்துவரவேண்டுமேஒழிய வெளியிடத்தகா கெட்டவைகளை மனதில் வைத்துக் கொண்டு இராதே என்பதாயிற்று.

கசத்தமனத்தையும், தித்திப்பான வாக்கையும் மேற்கொள்ளக்கூடாது. மனதில் கெட்ட எண்ணத்தை வைத்துக்கொண்டு நல்லவன் போல நடிக்கவேகூடாது. ஆனல் மனதில் கெட்டஎண்ணம் வந்துவிட்டால் அதைவெளியிட்டு விடுவது வஞ்சகம் பேசாமை யுள்ளடங்கவேமாட்டாது. 'மனதில் தோன்றும் கெட்டவைகளை நான் வாயால் உளறிவிடுகிறேன். உள்ளேவைத்து மறைத்து சிரித்து பேசுவதில்லை. நான் நிஷ்கபடி; வஞ்சகம் பேசாதவன்' என்று சிலர் பெருமை பேசிக்கொண்டு வாயால் கூறமுடியாத பச்சை விஷயங்களை வாயோய பிதற்றுவதை நாம் காணலாம். இவர்கள் வஞ்சகம் பேசேல் என்றநீதி வாக்யத்தின் நோக்கத்தை உணராதவர்கள். இந்தவாக்கியம் கெட்டஎண்ணங்களை நல்லவாக்யங்களால் மறைத்துக் கூருதே என்று கூறுகிறது. அதனல் இதன் நோக்கம் கெட்ட எண்ணங்களை உள்ளபடி வெளியிட வேண்டுமென்று எப்படியாகும். இந்த எதிர்மறை நீதிக்குப் பொருள் கூறி இதன் கருத்தை ஆராயுங்கால் உடன்பாடாக இதைமாற்ற வேண்டிவரும். அப்பொழுதுதான் இதன் ரஹஸ்யம் வெளிப்படும். அப்படிமாற்றிப் பார்க்குங்கால் அநேகவித மாற்றங்கள் ஏற்படலாம். அவைகளுள் மற்றைய நீதிவாக்யங்களுக்கு முரணில்லாத மாற்றத்தையே கைக்கொண்டு மற்றவைகளை நீக்கவேண்டும். இந்த வாக்யத்தை உடன்பாடாக மாற்றினல் கெட்டவைகளை உள்ளபடி வெளியிடு என்றும் நேரிடக் கூறக்கூடியவைகளை நினைஎன்றும் ஏற்படும். பயனில்லாச்சொல்லை சொல்லக் கூடாது என்பதும், 'கெட்டவைகளில் எவ்விதப்பழக்கமும்இன்றி திரிகரண சுத்திபடனிருக்கவேண்டும் என்பதும் பொது நீதிகள். இவைகளுக்கு முரணகவிருக்கும் முதல் உடன்பாட்டைவிட்டு நேரிட வெளியிடக்கூடியவைகளையேதான் மனதில் கூடியவரையில் நினைக்கவேண்டும், வஞ்சகம் பேசாதிருப்பதற்கு: அப்படி மறைக்கவேண்டியவைகளை எண்ணிவிட்டால் வஞ்சகமாகப் பேசவிடம் தாராது மௌனமாகவிருந்து அதை உள்ளேயே வேரறுத்துவிடவேண்டும். அதை விட்டு அந்த எண்ணத்தை உள்ளபடி வெளி

265

விட்டுவிட்டால் வஞ்சகம்பேசாதிலையும் ஏற்படாது மனதை அடக்கத் திறனற்ற பாபியுமாகிவிடும்படி நேரிடும்.

வஞ்சகமாகப் பேசாதிருக்கவேண்டு மாயினும் இதற்கும் ஒரு எல்லையுண்டு. உள்ளக்கருத்தையே எப்பொழுதும் கூறிவிடமுடியாது. உட்கருத்து நல்லதாகவிருந்து அதைவெளியிட்டால் அந்த நன்மை உண்டாகாது என்று நன்றாக விளங்கினால் அப்பொழுது அதைமறைத்து நன்மைஉண்டாக்க முயலவேண்டும். முக்தியை மனிதர்க்கு அளிக்கவந்த வேதம் ஆடுகாட்டி வேங்கை பிடிப்பதுபோல முதலில் பலன்தரும் கர்மங்களைச் செய்யத் தூண்டிப்பின்னர் அவைகளைவிட்டு விடுவதற்கு வேண்டிய வழிகளைக் காட்டுகிறது. கசப்பு மருந்தைக் கொடுத்து குழந்தைநோயைத்தீர்க்க முயலும் தாய் அதுசர்க்கரையென்று மறைத்துக்கூறி சிற்சிலஸமயங்களில் சர்க்கரையுடன் கலந்தும் அதைக்கொடுத்துவிடுவது வழக்கம். சில காரியங்கள் முடியும் வரையில் அவைகளை வெளியிடாதிருக்க சில மறைப்புச் சொற்கள் கூறவேண்டிவரும். உண்மையைக் கூறுங்கால் வீண்மனக்கொதிப்பு வருமிடங்களில் அதை மறைத்துக் கூறவேண்டிவரும். நமக்கு இஷ்டமில்லா விடத்திற்கு நம்மை அழைத்துப் போக வருபவர்களை நோக்கி ‘வர இஷ்டமில்லை’ என்று நேரிடக் கூறமுடியாது ‘எனக்கு உடம்பு ஸரியாகவில்லை’ என்று கூறி ஒதுங்கவேண்டி வரும். மேலும் ஒருவன் குற்றங்களை அவன் முன் மறைக்காமல் சொல்லவேண்டும், போகவிட்டுப் புறஞ்சொல்ல லாகாதென்றும்: ஒருவன் நற்குணங்களை நேரிடக் கூறாது ஒருவாறு மறைத்து அவனுக்குப்பின் விஸ்தாரமாகக்கூறவேண்டும் என்பதும் நீதி. இப்படி அநேக விடங்களில் வ்யவஹாரத்தில் வஞ்சகம்பேசவேண்டியது அவசியமாகிவிடும். ஆதலால்வஞ்சகம் பேசுவதற்கு உள்ளதை மறைத்துப்பேசுவதுமாத்ரம்லக்ஷணமல்ல. இப்படிப்பேசுவதால் பொதுத்தீமை, பிறர்கஷ்டத்தால் தனக்கு நன்மை, தான்சிறந்தவன் என்று வழங்கிவரவேண்டும் என்ற துர்அபிமானம் ஆகிய இவைகளுள் ஒன்றாகிலும் இருத்தல் வேண்டும். இவைகள் ஸம்பந்தப்படாத மறைப்புச்சொற்கள் வஞ்சகச்சொற்கள் அல்ல: தந்தா அல்லதுஉபாயச்சொற்களே. ஆகவே வஞ்சகம் பேசேல் என்றால் கெட்ட எண்ணங்கொண்டு உள்ளதை மறைத்துக் கூறாதே: கெட்ட எண்ணங்கள் வந்துவிட்டால் மௌனமாக விருந்து அவைகளை வேரறுக்கப் பார் என்பதே.

வஞ்சகம் பேசுவதே நேர்மையின் சிறப்பை வெளியிடும். இவ்வாறு பேசுபவனுக்கு நாம் நேர்மையாக விருக்கிறோம் என்று எல்லோரும் மதிக்கவேண்டும் என்பதுதானே நோக்கம். ஆதலால் எவ்வித வஞ்சகமும் தன்னைத்தானே இகழ்ந்து நேர்மையையே சிறந்ததென வற்புறுத்துகின்றது. இந்தப்படி வஞ்சகத்தின் ரஹஸ்யத்தை உணர்ந்தால் நேர்மையாக விருந்து அதிகக் கஷ்டமின்றி நிலைத்த பெயரெடுப்பது, வஞ்சகமாக விருந்து நேர்மையானவன் என்று பெயரெடுத்து உண்மை வெளியாகும் வரையில் மனம் பதைத்து வாழ்ந்து பின்னர் இழிவான நிலையை அடைந்து வருந்துவதை விடச் சிறந்தது என்பது விளங்கும்.

‘நாம் பேசுவது வஞ்சகமாகி விடத்தக்கது’ என்ற ஸந்தேஹம் ஏற்பட்டுவிட்டால், அந்தவார்த்தையைப் பேசுவதும் வஞ்சகம் பேசுவதுதான் என்பதையும், வஞ்சகம் பேசுவதால் ஏற்படும் கெடுதியையும் துரோணபர்வத்தில் தர்மபுத்திரர் பொய்சொன்னகதையும் அதன் பலனும் நன்கு விளக்கும். இதை ஆர்யமத உபாக்யானம், முதற் பாகம் 54-ம் கதையிலும், பாரதவினாவிடை இரண்டாம்பாகம், துரோண பர்வ முடிவிலும் காண்க. வஞ்சகம் பேசி கஷ்டம் அடைந்தவர்கள் அநேகர். யாதவர்களுக்கு மரணம் வந்தது ரிஷிகளிடம் வஞ்சகமாகப் பேசியதால்தான். இதை ஆர்யமத உபாக்யானம், முதற் பாகம் 53ம் கதையில் காண்க.

நாம் விசுவாச யோக்கியர்களாக இருக்க வேண்டும் —இது ஆணுக்கும் பெண்ணுக்கும் அவசியம் வேண்டிய குணம். நாம் ஒருவேலையிற் புகுந்தால் நம்மிடத்தில் விசுவாசம் வைத்து நம்மை நம்பலாமா என்று அதிகாரி யோஜிப்பான். மனைவியை நம்பலாமா என்று கணவனும், கணவனை நம்பலாமா என்று மனைவியும் யோசித்து நம்புவது விசுவாச யோக்கியமானகுணம் அம்மனைவியிடத்தும் அப்புருஷனிடத்தும் இருப்பதனாலன்றோ? இக்குணம் இல்லாத ஒரே காரணத்தினால் பலபேர்கள் இவ்வுலகத்தில் முன்னுக்குவாமற் போகின்றார்களாகையால் நாமிதை முற்றிலும் சிறு வயதுமுதல் கைப்பற்றி வர வேண்டும்.

மொழிபெயர்ப்பு விளக்கம்
TRANSLATION MODELS
Why does the light seem red when we shut our eyes?

Eyelids cannot stop all light from coming through the eyes—that is to say, they are in small degree transparent, and enough so, for the sun light to wake the birds, even if their eyes be shut. Yet when you look at the window with the eyes shut, what you see—very faintly, but still you see it—is a red colour. It is because the light, that is able to pass through your eyelids, has to pass through red blood which, of course, always is in your eyelids. Now, this red blood keeps all other colours that go to make up white light, but lets the red colour to come through it, and that is why we see red with our eyes shut in the light. If our blood were green we should see green.

கண்ணை மூடிக்கொண்டு எந்த வெளிச்சத்தை நோக்கினும் சிவப்பாகத் தெரிவானேன்?

கண்களுள் வெளிச்சம் முற்றிலும் வரவொட்டாது தடுக்கக் கண்ணிமைகளால் முடியாது: அதாவது, அவைகள் ஒளியை ஒருவாறுஊடுருவிச்செல்லவிடும்தன்மையுடையன. பக்ஷிகள் கண்ணை மூடிக்கொண்டிருந்தபோதிலும் ஸூர்ய ஒளியை கண்ணுள்ளே செல்லவிட்டு அவைகளை எழுப்புவதற்கு வேண்டிய அளவு ஒளியை ஊடுருவிச் செல்லவிடும் தன்மை கண்ணிமைகளுக்கு உண்டு. இப்படி இருந்தும் நீ கண்ணைமூடிக்கொண்டு திறந்த ஜன்னலை நோக்கினால் எவ்வளவுமங்கலாகத் தோற்றிய போதிலும், உனக்குப் புலப்படுவது ஒருசிவப்புவர்ணம் தானே. கண்ணிமைகளூடுருவிச் செல்லும் ஒளி, அவைகளுள் எப்போதும் இருக்குஞ்சிவப்புரத்தத்தின் வழியாகப்பாய்ந்து போக வேண்டியிருப்பதே இத்தோற்றத்திற்குக்காரணம். வெள்ளை ஒளியின் பாகங்களான வர்ண ஒளிகளுள் சிவப்பைத்தவிர மற்றைய ஒளிகளை எல்லாம் சிவப்புரத்தம் அடக்கிவிட்டு, சிவப்பு ஒளியை மாத்திரம் உள்ளேசெலவிடுகிறது: இதனால்தான் வெளிச்சத்திற்கிடையில் கண்ணைமூடிக்கொண்டால் நமக்குச் சிவப்பாகத் தோற்றுவது. நமது ரத்தம் பச்சையாக விருந்திருந்தால் நமக்குப் பச்சைவர்ணம் தான் தோற்றியிருக்கும்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்
CHILDREN'S PAGES
நந்தன் சரித்திரம்
4. வேதியச் சருக்கம்
அல்லது
நந்தன் பக்தி வெளிப்பட்டது

இவ்வாறு ஆதனூர்ப் பறையர்கள் எல்லோரும் வந்து பிராஹ்மணரிடம் நந்தன் மாறுபாட்டைக் குறித்து முறையிட்டுக் கொண்டு அவர் வாக்குறுதியைப் பெற்றுப்போன பின்பு கொஞ்ச நாழிகைக் கெல்லாம் இதை உணராது மிகுந்தமனச்சஞ்சலத்துடன் நந்தன் சிதம்பரம் போக உத்திரவு கேட்கவந்தான். வேதியரை நோக்கி மிகவும் பயபக்தியுடனும் என்ன சொல்லி விடுவாரோ என்ற ஏக்கத்துடனும்

தில்லையம்பலஸ்தல மொன்றிருக்குதாம் கண்ட
பேர்க்கு ஜனனமரணப் பிணியைக் கருக்குதாம்

* * * * *

போய் வருக உத்தாரம்-தாருமே-பொன்னடித்
தாள் போற்றுவேன் கண்ணேலே—பாருமே

என்று மஹா விநயத்துடன் தனது உள்ளாசையை வெளியிட்டு விட்டான் நந்தன். இதென்ன இந்தப் பயல் தகாததாயும், விஷமமாயும் உள்ள விஷயத்தை எடுத்துப் பேசுகிறான் என்று எண்ணினார் வேதியர்: வந்து விட்டது அடங்காக்கோபம். 'என்னடா சொன்னாய், நீயாவது சிதம்பரம் போகவாவது பறையா! ப்ராஹ்மணனைப் பார்த்து விட்டாயோ! இந்தத் தகாத ஆசை உன்னை விட்டகல உன்னை நையப்புடைப்பேன்! திருடா!

'பறையா நீ சிதம்பர மென்று சொல்லப்
படுமோடா போகப்படுமோடா அடா. (பறை)
அறியாத்தன மினி சொன்னாலினிமே
லடிப்பேன் கூலியைப் பிடிப்பேன் பாவிப் (பறை)

என்று ஒருதரம் அதட்டிக் கூறி விட்டார். பதறி விட்டான் நந்தன்! ஸப்த நாடியும் ஒடுங்கி விட்டது: நிர்கதியாகி விட்டான்: மறுமொழி கூறமுடியாது துக்கம் வந்து அடைத்துக் கொள்ள, அழுதுகொண்டே திரும்பி விட்டான். தான் நிஷ்டை செய்து வந்த மரத்தடியில் வந்து கதறி அழத்தொடங்கி விட்டான். 'ஈசா! என்ன உன் கொடுமை! ப்ராஹ்மணனை

நொந்து கொள்ளவும் இடமில்லையே! நீயன்றி ஓரணுவும் அசையாததலால், உன் தூண்டுதல் படித்தானே அவர் நடந்திருக்க வேண்டும். நானொரு ஏழைப்பறையன். ஆதலால் உன் அருளுக்கு அருகனல்லவோ? என்ன அநாதவு உனக்கு! இந்தப்பஞ்சைப்பதரான என்னிடம் உமக்குக் கருணையே இல்லை போலும். எனக்கு என்ன இருக்கிறது இவ்வுலகில்: பணமா, ரூபமா, கீர்த்தியா, படிப்பா ஒன்றுமில்லையே நான் ஆதாரமாகக் கொள்ள. இவை போதாவென்று நான் அடிமைப் பறையனாகியும் இருக்கிறேன்! உமது அருளுக்கு நானும் ஆள்தான் என்ற நம்பிக்கை இருந்தவரையில் இவைகளை நான் ஒரு பொருட்டாக மதித்தவனல்லவே! இந்த நம்பிக்கையும் இப்பொழுது என்னை விட்டகன்று விட்டதே! நான் எப்படி இனி உயிர் வாழ்வது' என்று கதறிவிட்டான் நந்தன். தற்கொலை செய்துவிடலாம் என்றுகூட எண்ணமிடத் தொடங்கிவிட்டான்! உன் கொடுமைக்கு என் உயிரை பலியாகக் கொடுத்து விடுகிறேன்! அப்பொழுதாவது நீ ஸூகித்திரு உன்னை வருத்துவாரில்லை' என்றுபதறிச் சொன்னான். சற்றுநேரம் கழிந்தது: மறுபடியும் நம்பிக்கை தலைதூக்கிற்று அற்புதமாக. கொஞ்ச நாழிகை கரைந்து விக்கி அழுதான். மனம் புரண்டது. 'எனக்கு எது நல்லது என்பது என்னை விடக் கடவுளுக்கு நன்றாகத் தெரியாதா? எந்த விஷயத்திலும் இனிமேல் அவர்மேல் பாரத்தைப் போட்டு அவர்வசமாகி துக்கிக்காதிருந்து விடுகிறேன். இதுவரை அவருக்கு விரோதமாக கிளம்பி பழித்து விட்டேனே பாபி! இந்த அடங்காக் குழந்தையாகிய நான் அவருள் அடங்கி எனக்கு அவர் நடத்துவதை ஸந்தோஷமாக ஏற்கும் நிலைவந்தாலல்லது எனக்கு அவர் அருள் எப்படிக்கிடைக்கும்? அந்த ஈசன் கருணையால் நமது ஆண்டைப் பார்ப்பான் மனம் இளகலாம், நான் சிதம்பர தரிசனம் பண்ண அருகனாகி விட்டேனாகில் எனக்குப் போக உத்தரவு கிடைத்துவிடும்' என்று ஒருவாறு தேறியிருந்தான்.

கொஞ்சம் நாள்கழித்து மறுபடியும் ப்ராஹ்மணரை அணுகி முன்னிலும் அதிக விநயத்துடன்:—

'உத்தாரம் தாருமையே—எனக்
கொருவருமில்லை பரகதியடைய (உத்தார)

என்று நயந்து கேட்டான். வேதியர் முன்னினும் அதிகக்கோபங்கொண்டு துடித்து:—

சிதம்பரம் போகாதே—சொன்னேன்
சிதம்பரம் போகாதே

* * * * *

தடுத்துப்பேசினால் தடியாலடிப்பேன் (சிதம்பரம்)

என்று கடுகடுத்துக் கூறினார். இந்தஸமயத்தில் கோரிக்கை முடியாததனால் முன்போன்ற கையற்றநிலை நந்தனுக்கு வந்து விடவில்லை. 'இன்னும் நடராஜன் தர்சனத்துக்குநான் தகுந்தவனாக வில்லை போலும்! இன்னும் அதிகமாக பயபக்தி, பரிசுத்தம், இவைகளில் பழகவேண்டும்.

பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முத்தி பெறலாமே

* * * * *

அச்சமறந்திரு விழியிலாந்த நீர்கரைபுரள
அரனே, திரிபுரனே, கங்காதரனே, பராபரனே
என்று (பக்தி)

என்று ஆனந்தமாக பகவந் நாமஸங்கீர்த்தனம் பக்தி த்யானம்முதலியவைகளைச் செய்யத்தொடங்கி விட்டான். வரவரத்யானத்தில் அதிகமாக முனைந்து விட்டான். விழித்திருக்குங் காலத்தில் ஒரு அணு நேரமாயினும் த்யானம் செய்யாது வீண் போக்குவதில்லை; வரவர தூக்கத்தையும் குறைத்து விட்டான். ஆனந்த பரவசமாகக் காலைமாலைகளில் தாண்டவ மாடத்தொடங்கி விட்டான். மற்ற ஸமயங்களில் இன்னும் கடவுள் அருள் வரவில்லையே என்று ஏங்கித்தவிப்பான்: அல்லதுஞ் கடவுள் அகடவிபூதி வைபவங்களில் ஈடுபட்டு ஆனந்தபரவசமாவான். ஆறு, பட்சி, மரம், மனிதன், இவைகளைப்போல எங்கெங்கு அசைவு தென்படுகின்றதோ அங்கங்கு எல்லாம் நடராஜர் ஆனந்தத் தாண்டவமாடுவதாகமதித்துப் பரவசமாகி அடிக்கடி ஆறுபோல் ஓடியாடுவான், மரத்தைச் சென்றணைவான், பக்ஷிகளின் பின்னோடுவான், இதுபோன்ற அநேக முன் பின் ஸம்பந்தமற்ற செயல்களைச் செய்வான். இதனால் இவனுக்குப்பைத்யம் தான் என்ற எண்ணம் இடம்பட்டு விட்டது. பாவம்! பறையர் தம்மாலியன்ற மட்டும் மருந்துகள் கொடுத்தனர், சங்கிலிகளால் கட்டி சித்ரவதையும் செய்து பார்த்தனர். இப்படி வருந்துகையிலும் நடராஜரை மறந்து இவர்களிடம் கோபங் கொள்ளத்துணிய மாட்டான் நந்தன். தேஹ பாதை பொ

றுக்கமுடியாமல் போய்விட்டால் ‘ பாம்பொருளதே குற்றம் இவர்களதா ? எல்லாம் உன்னால் அல்லவா நடக்கிறது. நான் படும் துயரத்திற்காக அவர்களை வருத்தவேண்டாம். நான் சிபாரிசை செய்கிறேன் மன்னித்துவிடும்: அவர்கள் அறியாமையால் இப்படிச் செய்கின்றனர்: அறிந்தாற்செய்வார்களா?’ என்று அரற்றுவான். அவனுக்கு உலகம் முழுவதும் தெய்வீகமாகத் தோற்றியது. ஜீவகாருண்யம் அவனுக்கு அளவிலடங்காமல் மண்டிவிட்டது. எறும்புகளுக்குச் சக்கரையிடுவான், வழியில்கிடக்கும்புழுக்களைவெயிலில் துடித்திறக்காமலும் நடப்பவர்கள் காலில் அகப்பட்டு நசுங்காமலும் இருக்க ஒதுப்புறமான விடங்களில் கொண்டு விடுவான்; குழந்தைகளோடு கவடற்று விளையாடுவான். பக்ஷிகளாகவே தன்னைக் கருதிக் கொண்டு அவைகள் ஸங்கீதத்தில் ஈடு பட்டு பரவசமாவான். இவ்வாறெல்லாம் நந்தன் மனம்கனிந்து கொண்டு வரத்தலைப்பட்டது. இந்த ஸமயங்களில் நடராஜனை எண்ணி,

குஞ்சித பாதத்தைத் தாரும்-என்தன்
ஸஞ்சித பாபத்தைத் தீரும்

என்று பலவாறுகப்பாடி உருகிப் பரவசனுவான்.

இப்படி இருக்கையில் கார் அறுப்புக் காலம் அணுகி விட்டது. பறையர்கள் நந்தனை நல்ல வழிப்படுத்த முயன்று கொண்டிருந்தமையால் வயல் வேலை தவக்கப்பட்டுவிட்டது. பண்ணைப் பார்ப்பானுக்குக் கோபம்வர, அடிமைகளை கடுமையாக அழைத்துவரச் சொன்னார். நந்தன் தவிர மற்றெல்லோரும் வந்துசேர்ந்தார்கள். சேரியில் நந்தனால் ஏற்படும் தடைகளைத் தெரிந்து கொண்டு அவர்களை அனுப்பிவிட்டு நந்தன் தலை மயிரைப்பிடித்திழுத்து வரும்படி கடுமையான உத்தரவு செய்தார். நந்தன் அருகில் புலையர்சென்று பார்த்தார்கள். திவ்ய தேஜோமயமாகப் பிரகாசிக்கும் முகத்தைக் கண்டதும் தலைமயிரைப்பிடிக்கக் கை எழவில்லை அவர்களுக்கு. நந்தனை அழைத்து ஆண்டையிடம் கொண்டுவந்து விட்டார்கள். நந்தன்முகமலர்ச்சி, அமைதி, பணிவு இவைகளைக் கண்டு திடுக்கிட்டார் வேதியர். நந்தன் ஸாதாரணப் பறையனல்லன், பறையர்கள் பயித்தியம் என்று கருதியது அளவிலடங்காபக்தி பரவசம் என்று பட்டுவிட்டது வேதியருக்கு. சற்று திகைத்து நின்றார். நந்தன் மஹாவினயத்துடன் :—

‘தில்லைச்சிதம்பரத்தை ஒருதரமாகிலும்
தெரிசித்துவாவென்று உத்தரம்தாருமையே’

என்று பலவாருகக்கேட்டான். இவனை இப்படி இருக்க இடங்கொடுக்கக்கூடாது என்று தோன்ற கோபம்வந்துவிட்டது வேதியருக்கு

‘சிதம்பரதரிசனமாம்—நீயதைச்—சிந்திக்கலாமா
பறையா

என்று கடுகடுத்துப்பார்த்தார். நந்தன் பின்னடையவில்லை.

‘தெரிசிக்கவேணும்சிதம்பரத்தைதெரிசிக்கவேணும்’

என்று மன்ருடினர்.

‘நந்தா வுனக்கிந்தபிரமை வந்த காரணம்
நானறிந்திடச் சொல்லும்
‘பித்தனாய்ப்போனதென்ன—நந்தா
பித்தனாய்ப்போனதென்ன

என்றுகனிந்து விசாரித்தார்வேதியர். அதற்கு நந்தன்:—

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது
பேரின்பமன்றுள்ளே

என்று பலவாருக சிதம்பரத்தையும் சிதம்பரேசரையும் துதித்துப் பரவசமாகி மறுமொழிகூறினுன். இதோடு நிறுத்திவிடாமல்

‘மார்கழி மாதம் திருவாதிரை நாள்-வரப் போகுதையே மனதைப் புண்ணுகப் பண்ணுமலொருதரம்-போய் வா என்று சொல்லையே.

என்று மனமுருகிக் கெஞ்சிப்பார்த்தான். அதற்கு வேதியர்

மாடு தின்னிப்பறையாவுனக்கு மார்கழித் திருநாளா,

என்று பலவாருகத்தடுத்துப்பார்த்தார், கடுத்து கடுத்து அடித்தும் பார்த்தார். நந்தனர் அடிபொறுக்கமுடியாது!

‘அடித்தது போதுமையே-என்னை
அடித்தது போதுமையே
அடித்தாலு முங்கள் கைவலி—யாதோ
அடிமை வேலை செய்யும் என்னுடன்—வாதோ

என்று பணிவுடன் கூறி ஐயரை வணங்கி மனமுருகி

‘இலவு காத்த கிள்ளை யாச்சே
எடுத்துச் சொன்னதெல்லாம்—போச்சே

என்று கதறிக் கரைந்தழத் தொடங்கி விட்டார்,

பெரியோர் சினமடைந்தால் பெருங்கடல் தீயாதோ

* * * * * *

இன்னமும் சிதம்பரம் போவேனென்று—இங்கே
வருவேனே இம்மட்டும் போதுமையே உங்கள்
தய—விருந்தாலது போதும்

என்று கூறி ப்ராஹ்மணர் மேல் என்னகூறப் போகிருரோ, என்ற ஏக்கத்துடன் அவர் வாய்மொழியை எதிர்பார்த்துக் கொண்டு பதைபதைத்து சேரியை நோக்கித் திரும்பி விட்டார்.

வேதியர் ‘ஆஹா ! என்ன பணிவு அமைதி, தேஜஸ்’ என்று அவன் மனோ நிலையில் ஈடுபட்டார். ‘ அப்பா நந்தா !’ என்று அழைத்தார். ஆவலுடன் திரும்பினுன் நந்தன். ‘ நந்தா நீ நல்ல பயல்; என்னமோ கெட்ட வழிகளில் இறங்கி விட்டாய். அதனால் வரவர உன் வேலையைச் செய்யாது விட்டுவிட்டாய். இது காரறுப்புக் காலமல்லவா ! அறுப்பு முடிந்ததும் உன்னைச் சிதம்பரம் போக விடுகிறேன், என்று மிகுந்த கனிவுடன் திருவாய்மலர்ந்தருளினர் அந்தணர். இந்தச் சொல் வேதியர் வாயை விட்டுக் கிளம்பியதோ யில்லையோ, ஆனந்தத் தாண்டவ மாடிக்கொண்டு பரவசமாகக் கிளம்பிவிட்டான் நந்தன் வயலை நோக்கி. கொஞ்ச நாழிகைக்கெல்லாம் கொல்லைப்புறம் வந்து வேதியரைக்கூவி யழைத்தான். ‘என்னடா விசேஷம்?’ என்று கேட்டார் வேதியர். சற்று ‘ வயலுக்கு வரவேண்டும்’ என்று ஸமர்ப்பித்தான் நந்தன். வேதியர் வெளியேற அவரைக் கூட்டிக்கொண்டு வழிகாட்டிச் சென்றுன் நந்தன்.

வயலில் வந்து நோக்குவாரோ வேதியர், என்ன அற்புதம்!! தமது வயல்கள் எல்லாம் அறுக்கப்பட்டு, அறுவடையான தான்யங்கள் தங்கக்குன்றுகள்போல் குவிக்கப்பட்டிருந்தன. பறையர்கள் இதற்குள் வந்து கூடி ‘ இதென்ன அற்புதம் நந்தன் வேலை’ என்று தயங்கி விழித்துக் கொண்டிருந்தனர். ‘ நந்தா ! நீயா இவைகளை எல்லாம் அறுத்துக் குவித்தது இதற்குள் !’ என்று கேட்டு வேதியர் திறந்த வாயும் கொட்டாக்கண்ணுமாக தூண்போல் நின்றுவிட்டார். நந்தன் கடவுள் அருளை வியந்து கொண்டு பரவசமாகி நின்று விட்டான். வேதியருக்கு தம் கண் முன்னிருப்பதை நம்பவே முடியவில்லை. இதென்ன ‘ஸ்வப்நமா’ என்று வாய் விட்டுச்சொல்ல என்ன முயன்றும் ஒலி எழும்பவில்லை. இப்படிக்.கொஞ்சகால மிருந்தபின்னர் தாம் காண்பது உண்மைதான் என்றநம்பிக்கை வர மனம் ஸாதாரண நிலைக்கு வந்தது. ‘நந்தா உன்னால் எப்படி இந்தவேலையைச் செய்யமுடியும்? உன் பந்துக்கள் எல்லோரும் சேர்ந்து செய்தாலும் இது முடியாதே! கடவுள் உன் மூலமாக என்ன அற்புதத்தைச் செய்து முடித்து விட்டார். இது உன் பக்தியின் சிறப்பு. உன் சிறப்பை நம்பா மூடர்களான எங்களுக்கு ஒரு வித நிதர்சனம் இது.

ஏழைப் பார்ப்பான் செய்திடும் பிழையை
எற்றுக் கொள்ளாதே

என்றெல்லாம் பலவாருகப் பணிந்துவேண்டி,

‘நந்தா நீசிவ பக்தன் உன்னை
நம்பாமலே மோசம் போனேனே பித்தன்

என்று பலவாருக மன்னிப்புக் கேட்டுக்கொண்டான் வேதியன். அதற்கு நந்தன்:—

அய்யா சொல்லுவேனே உம
தடிமைப் பறையன் தானே
சின்னஜாதி யல்லவோசிதம்பரம்போய்வருகிறேன்

என்று தன்னைத் தாழ்த்தி பேசிக்கொண்டார். அதற்கு வேதியர் ‘அதென்ன அப்படிச் சொல்லுகிறீர் ?

ஆருக்குப் பொன்னம் பலங்கிருபை யிருக்குதோ
அவரே பெரியவராம்

என்று தடுத்துக் கூறி ;

நந்தா நீகுரு உபதேசம் நவிலிட வேணும்
நான் கடைத் தேற

என்று நயந்து கேட்டு ‘இது முதல் நான் உன் அடிமை இந்த நிலபுலங்கள் எல்லாம் உன்னதே என்னை ஆசீர்வதி, உனக்கு அடிமையாக விருக்கும் ஹரனிடம் எனக்கும் சிபார்சை செய்’ என்று வேண்டிக் கொண்டார் நந்தன் காலில் விழுந்து.

நந்தன் செய்ததை ஒரு வித சித்து விளையாட்டென்றும், அப்படியல்லாத ஸாத்யச் செயலென்றும் இருவிதமாக மதிக்கலாம். ஸாதாரணமாக என்னமோ குட்டிச்சாத்தான் வேலை என்று கூறும் மூட நம்பிக்கைப்படி இதுசித்து வித்தையல்ல. ஆனால் நமது சக்தி அறிவுக்கு அப்பாற்பட்டதாக விருப்பதால் இதை சித்து வித்தை என்று மதிக்கலாம். நமக்கு பக்தியின் சக்தியைப் பற்றி என்ன தெரியும்? அதன்

அழுத்தம், அதன் சிறப்பு, அதன் அத்புத சக்தி எல்லாம் நமது ஸாதாரண நிலையில் விளங்கக் கூடியதேயல்ல: நாம் அவைகளை வெறும் கட்டுக் கதைகள் என்று மதிப்போர். பக்தி மலையைத்தூக்கும், கடலைத்தாவும், பஞ்சபூதங்களை அழித்துவிடும், ப்ரபஞ்சத்தை ஒரு தரம் குலுக்கிவிடும்.

எல்லாமவன் செயலே என்றிருக்கும் வல்லார்க்
கில்லை காணுகாதநிறையே பராபரமே

அந்த பக்தி எதைத்தான் செய்யாது: எதைத்தான் செய்யவில்லை. அந்த பக்தி ஆத்மசக்தியாக்கும்: ஆத்மாவே. நந்தன் தனது ஆத்மாவை தன்வாழ்க்கை நோக்கம் நிறைவேறும் தொழிலில் செலுத்தவும் ஏற்பட்டகாரியம் அற்புதமாகிவிட்டது.

ப்ராஹ்மணன் நந்தன் காலில் விழுந்ததைத்தான் நோக்குவோமே! நமது ஜாதி வர்ணாச்ரம தர்மங்கள் வ்யவஹாரதிசையில் எவ்வளவு கடுமையாகவிருப்பினும் மதானுபவவிஷயத்தில் எப்பொழுதும் அவ்வளவு கடுமையாகவில்லை என்பதே அதன் சிறப்பு. நமது கோயில்களில் ஆராதிக்கப்படும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவர்களே: அவர்களுள் சிற்சிலர்கள் பஞ்சமர்களாகவும் இருக்கிறார்கள். நந்தன் காலத்தில் மதவிஷயங்களில் ஜாதிவர்ணபேதம் நோக்காது காலில்விழப் பார்ப்பான் எப்படி தயாராகவிருந்தானோ, அதுபோல இப்பவும் மதவிஷயச்சிறப்பு சற்றேனும் ஒருவனிடம்இருப்பதாகத்தோற்றிவிட்டால் போதும், ப்ராஹ்மணனும் அவனடிபணிந்து உண்மையை உணரத் தயாராகத்தானிருக்கிறான்.

உபதேசம் வேண்டுமென்று மனமுருகிக் கேட்டயஜமானர் வார்த்தையைத் தட்டமுடியாமல் போக, தன்ஜாதி உபதேசம்செய்யத்தகுந்தல்ல என்பதையும் கருதி, ஒருமூலையை

‘ஐயேமெத்தகடினம்—உனக்கடிமை
ஐயேமெத்தக்கடினம்
பொய்யாத பொன்னம்பலத்தை யாயிருக்குமிடம்
நையாதமனிதருக்கு உய்யாது கண்டுகொள்ளும்
(ஐயே)

நோக்கி, என்று பலவாறாகச் சொல்லி; தன் கையைப் பிடித்துக் கொண்டு, பிரிய மனம் வாராது தத்தளிக்கும்வேதியரைநோக்கி, ‘இவ்வளவுதான் இந்தஅடிமையால் சொல்லமுடியும் ஆண்டே! உமது என்று உள்ள பெண், பிள்ளை ஸொத்து இவைகளை எப்படி ஆவலுடன் கருதி நிற்கிறீரோ அவ்வளவு ஆவலுடன் அம்பலக் கூத்தனைக் கருதி வழிபடவேண்டும். இந்த மூட அடிமைக்கு வேறு என்ன தெரியும்?’ என்று கூறி முடித்தான். தலையைத் தூக்கி ஏறிட்டுப் பார்த்தார் நந்தன் முகத்தை வேதியர். அங்கு விளங்கிய திவ்ய தேஜஸ்ஸில் ஈடுபட்டார்

‘சிதம்பரம் போய் நீர் வாருமையா நான்
செய்ததெல்லாம் அபசாரமையா

என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு உத்தரவு கொடுக்க இருவரும் அளவளாவிப் பேசிக் கொண்டு வேண்டுகோள்கள் ஆசிர்வசனங்களுக்கிடையில் பிரிந்தனர். நந்தனார் நான்கு அடிதான் எடுத்து வைத்திருப்பார்: ப்ராஹ்மணர் மிகுந்தபரபரப்புடன் ஓடோடியும் வந்து ‘நந்தா! என்னருமை ஆனந்தா! ஹே ஸத்குரு!! உன்னை இனி நான் என்று காண்பேன்? எப்பொழுது இங்கு எழுந்தருளுவீர்? என்று அன்பெனும் ஆறு கரையதுபுரள நயந்து கேட்டார். அதற்கு நந்தனார்:—

‘தில்லை வெளியினில் கலந்து கொண்டாலவர்
திரும்பியும் வருவரோ?

என்று கூறி ‘எனக்கு இந்த பிறவித் துன்பத்துள் புக மனம் வரவில்லை’ என்று முடித்தார். ப்ராஹ்மணருக்கு இது முற்றிலும் விளங்காவிடினும் கதைத் தொடர்ச்சியிலிருந்து நமக்கு ஒருவாறுஇதன் கருத்து வெளியாகும். அன்று முதல்.

எந்தநேரமும் நந்தனைச்சிந்தித்
தானந் தமாயிருந்தனரந் தணர் (எந்த)
பந்தந்தீரவே இந்த உருவாகி
வந்ததோ வரந்தந்ததோ சிவனென்று (எந்த).

ஆணை, சத்தியம்.—நாம் எதாவதொரு சங்கத்திலிருக்கும்பொழுது சிலர் ஆணை அல்லது சத்தியம் செய்யக்கண்டிருக்கலாம். தாங்கள் சொல்வது முற்றும் வாஸ்தவமென்று ஜனங்கள் நம்பும்பொருட்டுச் சிலர் இப்படி ஆணையிடுவார்கள். இந்த ஆணையும் சத்தியமும் எந்தச் சங்கத்திலிருக்கின்றனவோ அந்தச் சங்கம் ஒருநாளும் நற்சங்கமாகமாட்டாது. அற்ப புத்தி, படிப்பின்மை, இவைகளுள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் ஒருவரும் ஆணையும் சத்தியமும் செய்யவேமாட்டார்கள்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சாந்தை அல்லது பொறுமையினிலை

3. உடன் சென்ற காதை

மனத்தால் அவரிருவரும் பேசாமலே பேசிக்கொண்டிருந்தனர். மின்சாரம்போல் ஒருசக்தி அவரிருவர்க்கும் உள்ள பாவத்தை தெரிவித்துக்கொண்டே இருந்தது. இருகண்ணும் ஒரே பொருளை நோக்குவதுபோல் அவர் ஒரே மனங்கொண்டிருந்தனர்.

மன்னன் உத்புல்லனை “உனதிஷ்டம். சாந்தையை அழைத்துக்கொண்டாவது போ. அல்லது விட்டாவது போ. அது உன் பொறுப்பு. ராஜாங்க காரியம் வெகு முக்யமானது. சீக்கிரத்தில் செய்யவேண்டியது. சீக்கிரத்தில் நீ புறப்படவேண்டியது” என்பதற்குள் சபையின் அங்கத்தினன் ஒருவன் “இன்றிரவே புறப்படவேண்டும்” என்று சொன்னான். உத்புல்லனும் “வெகு ஸந்தோஷம். என் மனப்பூர்வகமாக நான் அவ்வாறே செய்கிறேன்” என்று பதிலளித்தான்,

“உத்புல்ல! நாங்கள் மீண்டும் நாளை காலை சபை கூடுவோம். நீர் உமது நம்பிக்கையாள் ஒருவனை இங்கு இருக்கச் சொல்லிப் போம். அவனிடம் சமாசாரங்களை விவரமாகச் சொல்லியனுப்புவோம்” என்று அரசன் மேலுங் கூறினான்.

“அதற்கென்ன, அப்படியே ஆகட்டும் எனது காரியதர்சி இருக்கிறார். அவர் பொய்யென்பதறியாத புனிதன்; நம்பத் தகுந்தவன். அவரையே எனது மனைவியையும் அழைத்து வரும்படி திட்டம் செய்திருக்கிறேன். அவரிடம் தாங்கள் என்ன என்ன சொல்லவேண்டுமோ சொல்லி அனுப்பும்” என்று உத்புல்லன் விடையளித்தான்.

“அப்படியே யாகட்டும்” என்று அரசன் சொல்லி யாவரிடமும் செலவு பெற்றுக் கொண்டு வீட்டிற்குப் புறப்படலானான். பிரபுன்னதனை நோக்கி “குணமே அழகு என்பது மனஸ் ஸம்மதமானால் உன் மருமகன் தன் உடலின் நிறத்தைக் காட்டுங் கறுப்பு அங்கு கறுப்பாகவே விளங்கும்” என்று சொல்லிக்கொண்டே போனான்.

சபையில் ஒருவன் “வீர மௌர்ய! நான் போய் வருகிறேன். சாந்தையை நன்றாகப் பார்த்துக்கொள்” என்று சொல்லிக்கொண்டு போனான். பிரபுன்னதனும் “உனக்குக் கண்ணிருந்தால் நன்றாய்ப் பார்த்துக்கொள். ஒரு கண் அவள்மேலேயே இருக்கட்டும். தந்தையை ஏய்த்ததுபோல் உன்னையும் ஏமாற்றினும் ஏமாற்றலாகும்” என்று சொல்லிப் புறப்பட்டான்.

உத்புல்லன் அயோக்ய புஞ்சனை தன் மனைவியை சிபிரத்துக்கழைத்து வர ஏவிவிட்டு, சாந்தையுடன் சிறிது காலம் கொஞ்சிக்குலாவி ஆனந்தமடைந்து அவளிடம் விடைபெற்றுக்கொண்டு சிபிரஞ் சென்றான். சாந்தை மறுநாள் உதயத்தை நினைத்து நினைத்து அன்றிரவு கனவிலாழ்ந்து தனது கணவன் சிபிரத்தில் வெற்றியடைந்தாற்போல தன் மனப்போக்கிற்கேற்பக் கனவு கண்டுகொண்டிருந்தாள். அக்கனவில் அவனுடனிருந்து அவனுக்கு வலக்கைபோல் எங்கும் உதவிசெய்ததாக அவள் எண்ணம். அதுவல்லவா ஆசை? தன் கணவனிடம் கொண்ட அன்பு தனதுயிரையும் நாடாது அவனையும் பிரியாது அவனுக் கெங்கும் உதவியாகவிருந்து பெருமையடையவேண்டு மாசைக்குத் தடுமாற்றம் எங்கிருந்து வரும்?

4. சிந்தனைக் காதை.

“மேலைநாளுயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந்துடனுறைக்கடியநோயனாள்”—கம்பராமாயணம்.

தன் கணவனுடன் இருந்து அவனுக் கெவ்விதத்திலும் ஸுகத்தை உண்டாக்கவேணும் என்ற உண்மைஎண்ணத்துடன் புறப்பட்ட சாந்தையின் வைபவத்தை எண்ணுதவரில்லை. அவளுடைய குணமுங் கலந்து அவள் அழகில் மயங்கி யாவரையும் மதிக்கச் செய்துகொண்டிருந்தது. பொறுமையின் அவதாரமும் தருமத்தின் நிதியுமாகிய அவளுடைய ஸ்வபாவத்தைக்கண்டஅயோக்ய புஞ்சன் எண்ணாததெல்லாம் எண்ணினான். எவனையு மணக்க

இருந்த சிறுக்கி கரித்தடிய னொருவனை விரும்பி மணந்தது மல்லாமல் குணத்தில் சிறந்து விளங்குவதைக் கண்டால் அவனுக்குப் பொறுக்கமுடியுமா. பிறருக்கு துன்பமூட்டல் என்றால் பெரும் புகழ் என்றே எண்ணும் பெருமை கொண்டவனுக்கது தன் வேலைக்கு சாதன மல்லவா ?

அயோக்ய புஞ்சன் இவன் சாந்தையை மணக்க விரும்பியவனுமல்ல; தனக்கவள் தீங்கு செய்தவளல்ல என்பதை அறியாதவனுமல்ல. உணராதிருந்தால் அது அவன் புத்திக்கு பெருமையுண்டாக்குமா ? யார்க்காவது ஹிம்சை செய்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற சித்தாந்திகள் கட்சியில்சேர்ந்தவன். அப்பேர்ப்பட்டவர்களுக்கு யாரகப்பட்டாலும் போதும். எப்படி அவருக்கு வலையிடலாம்; அவ்வலையை எவ்வாறு விசலாம் என்பதே கவலை. இது அவர்க்கோர் ஆநந்த விளையாட்டு மாத்திரம் அல்ல; வெகு பிரயாசையுடன் முயற்சிக்கும் தர்மங்களில் ஒன்று. அவர்குணம் பொறுமை என்று சொல்லமுடியாது. பொறுமை வேலைசெய்ய அஸ்திவாரம் ஒன்றிருந்தால்தான் முடியும். ஆனால் பிறர்க்குத் துன்பஞ்செய்யும் சித்தாந்தத்திற்கு ஆதாரம்வேண்டியதேஇல்லை. அதுதானே வேலைசெய்யும். சிலந்திப் பூச்சிப்போல் தானாகி வலை நெய்து அதில் விழுந்தவரெல்லாம் மீளாது நாசஞ்செய்வதே அதன் குணம். இவ்வகை வேலை செய்வதென்றால் அயோக்யபுஞ்சனுக்கு அடங்கா ஆனந்தம். தான் வேலைசெய்யத் தகுந்த கருவி ஒன்று வேண்டி ஆலோசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுதங்கு ருத்ரகாமன் எதிரில் வந்தான். அவன் ஒரு மூடன். புத்தி என்பது அவனுக்குச் சூனியம். இவனைக்கொண்டு தன் வேலையை முடிக்க வேண்டும் என்று அயோக்யன் எண்ணினான்.

ஸந்தித்ததும் இருவரும் சாந்தையைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். வெகுகாமி ஆகிய ருத்ரகாமன் சாந்தையை மணக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டிருந்தவன். அவன் கண்ட கனவெல்லாம் பூத்துப் போய் விட்டன. இவனுடைய காமம் தானே அவிந்து நீறு பூத்துக் கொண்டிருந்தது. இது அயோக்யனுக்குத் தெரியும். மெதுவாக விசிறி அக்கனலை எரியச் செய்து தன் வினையை முடிக்கவேண்டுமென்று எண்ணினான். அதர்க்கிதமாகவே “அயோக்பா !” என்று அக்காமன் நெடுமூச்சு விட்டபோது “ஏன் என் அப்பனே” என்று தட்டிக்கொடுத்தான். “நான் என்ன செய்வேன் தெரியுமா ?” என்றதற்கு “ஏன் படுக்கையில் படுத்துத் தூங்குவாய்” என பதில் சொன்னான். “நான் கிணற்றுள் குதித்து பிராணத்தியாகம் செய்யப் போகிறேன்” என்றான். “சீ அப்படி நீ செய்தால் உன்னை நான் விரும்பேன்” என்று அயோக்யன் கூற “மன அமைதியற்று வாழ்வதைக் காட்டிலும் முட்டாள் தனம் கிடையாது. சாவே மருந்தாயிருக்க சாவதற்கும் மருந்து வாங்கிக் கொள்வாரா ? என்ன ?” என்று கேட்டான்.

இதைக் கேட்ட அயோக்யன் “என்ன போக்கிரித்தனம் ! நாலேழு வருஷ காலமாய் நானிந்த உலக அனுபவத்தை அடைந்து, நன்மை தீமை என்பவைகளை தெரிந்துக்கொண்டமையால், தன்னையே பூசிக்கக் கூடிய மனிதனைவேறெங்கும் கண்டதில்லை. ஒரு பட்டிமுண்டைமேல் ஆசைப்பட்டு அவள் கிடைக்கவில்லை; நான் கிணற்றில் விழுந்து உயிர் விடுவேன் தற்கொலை புரிந்துக் கொள்வேன் என்பதைக் காட்டினும் என்மானுஷத் தன்மையை ஹனுமந்தாவதாரங்களுக் கர்ப்பணஞ் செய்து விடுவேன்” என்று கடிந்துரைத்தான்.

“என்றால் என்ன செய்ய முடியும் ? நான்தான் சொல்லுகிறேனே ! வஜ்ரசும்பன்தான் ! அதில் என்ன வெட்கம் ? எனக்கப்பேர்க்கொத்த சக்தி இல்லை” என்றான் காமன்.

“சக்தியா ? சீச்சீ ! நம்மிடத்திலேயே எல்லாம் இருக்கின்றது ; எப்படி இருப்பதற்கும் நம்மிடமே மருந்துள்ளது. நமது சரீரங்களே உத்யானவனங்கள் ; நமது விருப்பமே தோட்டக்காரர்கள். முள் கீரையும் காஞ்சொறியையும் பயர்செய்தால் என்ன ? கள்ளியை முளையிட்டு எருக்கைக் களைபிடுங்கினாலென்ன? ஒரு விதப்பூண்டை வைத்து விளைத்தால் என்ன? பலவற்றை அழித்தாலென்ன ? சோம்பல் மேற்கொண்டதைப் பலனற்று பாழாக்கச் செய்தாலுந்தானென்ன? அல்லது முயற்சியோடதை எருவிட்டு செப்பஞ் செய்தால்தான் என்ன?—எல்லாவற்றிற்கும் நம்மிடம் தானே அந்த அடக்கமுடியா ஆளுஞ் சக்தியிருக்கிறது ?

(தொடரும்.)

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

துருக்கிக் கவர்ன்மெண்டாரால் மேடினாவில் ஒரு சர்வ கலாசாலை :—மகம்மதியார்களின் புண்ணிய பூமிகளுள் ஒன்றாகிய மேடினா பட்டணத்தில் ஒரு முஸ்லிம் சர்வகலாசாலை ஏற்படுத்த துருக்கி கவர்ன்மெண்டார் உத்திரவு கொடுத்திருக்கிறார்கள். அதில் அராபிபாஷையே முக்கிய பாஷை. துருக்கி ராஜ்ய முழுமையும் அராபிதான் ராஜபாஷை.

***

சீனராஜ்யத்தில் இந்திய அபினி:—சென்ற சில வருஷங்களாக சீனராஜ்யத்தில் அபினி பயிர் செய்வதையும் இறக்குமதி செய்வதையும் குறைத்துக் கொண்டு வந்தார்கள். இந்தியா தேசத்து அபினியே முக்கியமாக அங்கு இறக்குமதி செய்யப்பட்டபடியால் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் சீனா கவர்ன்மெண்டாருடன் சமாதானம் செய்து கொண்டபடி இந்தியாவிலிருந்து அபினி ஏற்றுவதையும் இவ்வளவுகாலத்திற்குள் நிறுத்தி விடவேண்டு மென்று ஒத்துக் கொண்டார்கள். அப்படி நிறுத்த வேண்டிய காலமும் நெருங்கிவிட்ட படியால் இப்போது சீனாதேசத்திலிருந்து ஜெனரல் சாங் என்ற தூதர் இங்கிலாந்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறார். இங்கிலாந்திலும் அபினி பழக்கத்தை நிறுத்தவேண்டு மென்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களே ஜெனரல் சாங்கை அழைத்திருக்கிறார்கள். இவர்களுடைய நோக்கம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் அபினை முற்றிலும் நிறுத்தி விடுவது தான். ஏற்கனவே சீனா கவர்ன்மெண்டார் தடை செய்துவிட்டபடியால் இந்திய அபினை விற்காமல் பிரிடிஷ் துறைமுகங்களாகிய ஹாங்காங், ஷாங்ஹாய் என்ற துறைமுகங்களில் நிறுத்தி வைத்திருந்தார்கள். அதனால் இப்போது அபினி ஏற்றுமதி முழுமையும் இந்தியாவில் நின்றிருக்கிறது. ஆகையால் அந்தத் துறைமுகங்களில் இருக்கும் அபினி பெட்டிகளை கொஞ்சங் கொஞ்சமாய் விற்க உத்திரவு கிடைத்திருக்கிறது. மெதுவாக வியாபாரம் நடந்து வருகின்றது. இதற்குள் இந்தியாவிலிருந்து இனி ஏற்றுமதியே செய்யக்கூடாது என்பதற்கு வேண்டிய யோசனை நடந்து வருகிறது. இதனால் சீனாதேசத்தில் இந்த துர்வழக்கத்தை நிறுத்தி விடத்தான் இவ்வளவு கஷ்டமும் சீனர்கள் எடுத்துக் கொள்கிறார்கள்.

***

அமெரிக்காவில் ரயில் வேலைக்காரர்களுக்கு படிப்பு:—அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் ரயில்வே போர்டு முதலிய முதலாளிகள் தங்கள் வேலைக்காரர்களுக்கு கல்வி சொல்லிவைக்க ஏற்பாடுசெய்திருக்கிறார்களென்பது அநேகருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இப்போது ஒரு நூதன வழியை பின் பற்றியிருக்கிறார்கள். சைன்மோடாகிராப் என்ற படக் காட்சி மூலமாக டிரைவர்கள், பைர்மான்கள் முதலியவர்களுக்கு அவர்களுடைய கடமைகளை செவ்வையாக செய்து காட்டுகிறார்களாம். அநேக வேலைக்காரர்கள் தினம் உபன்னியாசங்களை கேட்கிறார்களாம். இவ்வித ஏற்பாட்டால் கம்பெனிகளுக்கு லாபமென்றும் தெரிகிறது. வேலைக்காரர்கள் விறகை வீண் செலவு செய்யாமலும் குறைத்துச் செலவு செய்யவும், புகையை அதிகமாக விட்டு கட்டடங்களை கரியாக்கி விடாமல் இருக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறார்களாம்.

***

பசுக்களின் அபிவிர்த்திக்காக K. S- ஜஸ்வல்லாவின் ஏற்பாடு:—பம்பாய் மாகாண வாஸியாகிய மிஸ்டர் K. S. ஜஸ்ஸவல்லா என்பவர் சென்ற சில காலங்களாக பசுக்களின் அபிவிர்த்திக்காக உழைத்து வருகிறார். இந்திய நாடெங்கும் பசுக்கள் அருமையாக இருப்பதால் பால் விலை கிராக்கியாகி அதனால் சிசுக்களின் மரணம் அதிகப்பட்டு வருகிறது. அதற்காக பசுக்களை கொல்வதை நிறுத்தும்படி கவர்ன்மெண்டாருக்கு மனுசெய்யும்படி ஏற்பாடாயிற்று. பட்டாளத்திற்கு இந்தியாவிலுள்ள பசுக்களை கொல்லாமலிருக்கும்படி செய்யவேண்டு மென்று இந்தியா மந்திரிக்கு மகஜர் எட்டியிருக்கிறது. இங்கிலாந்திற்குச் சென்று பார்லிமெண்ட் மெம்பர்களை சிநேகம்செய்து ஒரு சங்கம் ஏற்படுத்திவிட்டார். அவர்கள் இந்தியர்களுடைய இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய உதவி புரிவதாக வாக்களித்திருக்கிறார்களாம். ஆதலால் இந்தியாவிலுள்ள பல வகுப்பினரும் சேர்ந்து சங்கங்கள் ஸ்தாபித்தும் மற்றும் பலவிதமாகவும் உதவிபுரிந்தும் தேசத்திலுள்ள சிசுக்களை காப்பாற்ற வேண்டுமென்கிறார். கிராமங்களிலுள்ள நிலங்களில் நூறு ஏகருக்கும் 5 ஏகர் மேச்சல் தரையாக விட வேண்டிய அவசிய மென்று உத்திரவு செய்ய இந்தியா கவர்ன்மெண்டாருக்கு மனு செய்திருக்கிறார். தம்முடைய எஸ்டேட்டில் 20 ஏகரா வரையில் மேச்சலுக்காக ஒதுக்கி வைப்பதாகத் தீர்மானித்து விட்டார். பசுக்களை கொல்வது மகம்மதிய மதத்திற்கு விரோதமல்ல. சில மகம்மதிய சாஸ்திர புஸ்தகங்களில் மாட்டிறைச்சி தேகத்திற்கு கெடுதி என்றுகூட சொல்லப் பட்டிருக்கிறது. ஆதலால் குழந்தைகளின் க்ஷேமத்திற்காக மகம்மதியர்களும் மற்றவர்களுடன் கூடி பசுவதை செய்யாமலிருக்க வேண்டுமென்றும் மன்றாடி கேட்டுக் கொள்கிறார். இவ்வளவு பாடுபடுகிற கனவானுக்கு நம்மில் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நமது ராஜப்பிரதிநிதியின் பிறந்தநாள் கொண்டாட்டம்.—இவர் பிறந்த நாள் இம்மாதம் 20௳ என்றும், அதை மிகவும் சிறப்பாக ஒவ்வொரு ஊரிலும் கொண்டாட வேண்டும் என்றும், பொது மீட்டிங்குகள் கூடப்படுகின்றன. இந்தியாவில் ராஜப்பிரதிநிதிகளாக வந்தவர்களுள் லார்டு ஹார்டிஞ்சைப் போல், ஜனங்களிடத்தில் அன்பும் விசுவாஸமும் காட்டி வந்தவர்கள் எவருமில்லை. கல்வி யபிவிருத்தி விஷயமாயும், சுகாதார அபிவிருத்தி விஷயமாயும் இவர் இந்தியாவுக்குப் பலவிதத்தில் சகாயஞ் செய்திருக்கிறார். இவருக்கு ஜனங்களிடத்தில் மிகுந்த பிரீதி உண்டு. சென்றவருஷ டிசம்பர் மாதம் 23௳ இவருக்கு ஒரு பெரிய விபத்து உண்டானது. அதினின்றும் அவர் தெய்வாதீனமாய்த் தப்பினார். இது ஒவ்வொருவருக்கும் அடங்கா சந்தோஷத்தை விளைத்தது. இவரிடம் ஜனங்களுக்கிருக்கும் விசுவாஸத்தினால், இவர் பிறந்த நாள் மிகவும் விமரிசையாய்க் கொண்டாடப்படும் என்பதற்கு யாதொரு சந்தேஹமுமில்லை.

***

சென்னை இஞ்சினீரிங் காலேஜ்.—சென்னை இஞ்சினீரிங் காலேஜ் இப்போது சேப்பாக்கிலிருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அதனை கிண்டிக்குக் கொண்டுபோய் விடப்போகிறார்கள். அதற்கு அங்கே கட்டடம்கட்டப் போடப்பட்டிருக்கும் மதிப்புத்திட்டமும், மாதிரிப்படமும் இப்போது இந்தியா கவர்ன்மெண்டாரால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

***

லண்டனில் ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் பிறந்த நாள் கொண்டாட்டம்.—சென்ற 3-ந்தேதி யன்று ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் பிறந்த நாள் கொண்டாட்டம் லண்டனில் வெகு விமரிசையாக நடந்ததென்று ராய்ட்டர் தந்தியால்தெரியவருகிறது. எங்கு பார்த்தாலும் மணிச்சத்தமும் ஆரவாரிப்பும் கேட்டுக் கொண்டேயிருந்தது. படைக்காட்சி ஸ்தலத்தில் கொடிகள் பறக்க விடப்படுவதைக் கண்டுகளிக்க சக்கரவர்த்தி தம்பதிகள் சென்றபோது, கானட் கோமகனும், அவருடைய புதல்வர் ப்ரின்ஸ் ஆர்தரும், லார்ட் ராபர்ட்ஸனும், ஸ்வீடன் தேசத்து இளவாசரும் உடன் சென்றார்கள். சக்கரவர்த்தியின் புதல்வி ப்ரின்ஸெஸ் மேரி சக்கரவர்த்தியுடன் சென்றார்.

***

லண்டன்நகர சிசுக்கள்—லண்டன் நகர சிசு போஷணை பட்டியில் 38,000 சிசுக்கள் வரையில் ரிஜிஸ்தர் செய்யப் பட்டிருக்கின்றனர். இதற்கு முன்னர் 45,000 சிசுக்கள் வரையில் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களது வருஷ போஷணைச் செலவு 86,000 பவுன்.

பிறந்த நாள் கௌரவப் பட்டங்கள்.—நமது ஸர்க்கில் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் ராவ் பஹதூர் மிஸ்டர் ஏ.வி. பிரணதார்த்திஹர ஐயருக்கு இம்பீரியல் சர்விஸ் ஆர்டர் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது

***

கோநகர், ஞானசம்பந்த நற்சபையின் முதல் வருட பூர்த்திக் கொண்டாட்டம்:—இது நிகழும் வைகாசி மாதம் 18, 19-ந் தேதிகளில் மிஸ்டர் சு. முரு.ஷண்முகஞ்செட்டியாருடையபங்களாவில்,புதுக்கோட்டைப் பிரபல வக்கீல்களிலொருவராகிய Mr. சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் மங்களகரமாக நடைபெற்றது. சபாமண்டபம் அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. பலவூர்களிலிருந்து வித்துவான்கள் பலரும் வந்திருந்தார்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜனங்கள் கூடியிருந்தார்கள். புதுக்கோட்டை காலேஜ் உதவி போதகரான மிஸ்டர் ஜி. சுந்தரேசய்யர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திவ்ய சரித்திரத்தைப் பற்றியும், வித்துவான் திரு. இராமசாமி ஐயங்கார் "நாகரீகம்" என்னும் விஷயத்தைப் பற்றியும், மஹிபாலன்பட்டி ம-௱-௱-ஸ்ரீ கதிரேசன் செட்டியாரவர்கள் "மூர்த்தி, தலம், தீர்த்தம்" என்னும்விஷயத்தைப்பற்றியும், மதுரைகாலேஜ்தமிழ்ப்பண்டிதர் ம. கோபாலகிருஷ்ணய்யர் "தமிழின் பெருமை" என்பதைப்பற்றியும், இன்னும் அநேக உபந்நியாஸங்களும், தக்கவர்களால் உபந்யாஸிக்கப் பட்டன. ஆகவே, இவ்வருஷோத்ஸவக் கொண்டாட்டம் செவ்வனே நடைபெற்றதெனத் தெரிகிறது.

***

பிரிட்டிஷ் ராஜ்ய முழுமைக்கும் கம்பியில்லாத தந்தித்தொடர்.—கம்பியில்லாத தந்திகளை பெற்றுக் கொள்ளவும் அடிக்கவும் பல இடங்களிலும் ஸ்டேஷன்கள் ஸ்தாபிக்க வேண்டியதற்காக யோசனைகள் நடந்து வருகின்றன. கனடா, தென் ஆபிரிகா, இந்தியா, ஆஸ்திரேலியா முதலிய பிரிடிஷ் நாடுகளில் தக்க ஸ்டேஷன்களை நியமித்து பிரிடிஷ் ராஜ்யமெங்கும் ஒரே தொடராக புனைக்கவேண்டிய எண்ணத்தோடு யோசனை செய்யப் படுகின்றனவாம். இந்தியாவில் பெங்களூரையும் ஒரு ஸ்டேஷனாகச் சேர்த்துக் கொள்வதாகத்தெரிகிறது.

Supplement to the "Viveka Bodhini"



க்ருஹஸ்த லீலை



ஈச்வர லீலை

"விவேக போதினி" அனுபந்தம்



அந்தர்யாமி லீலை

ஆசார்ய லீலை